
LB
NSS
101776

அனுபவ வைத்திய

நேத்ரகரியம்

17/
3-55

(நான்கு பாகங்கள்)

ஸ்ரீமத் தகநிஜமூர்த்தி சுவாமிகளது தொண்டராகிய

ஐ. சித்தாராம் பிரஸாத்

அவர்களால் இயற்றப்பெற்றது



வைத்திய வித்வன்மணி

கி. கண்ணுசாமிப்பிள்ளை அவர்களின் குமாரராகிய

Dr. K. ராதாகிருஷ்ணன், L.I.M.

அவர்களால் திருத்தியும், விளக்கியும், புதுப்பிக்கப்பட்டது



சென்னை:

B. இரத்தின நாயகர் சன்ஸ்

அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது

1955

பதிப்புரிமை

விலை ரு. 10-

LB
N55

TAMIL NADU ARCHIVES LIBRARY
101776

திருமகள் நிலைய அச்சக
சென்னை: 1955.

நான்முகம்

"அனுபவ வைத்திய தேவ ரகசிய
மெனுமிவ் வாகடம் மேதினி சிறக்க
சேமை செய்குவன் சிந்தை தன்னில்
ஆல மளிக்கும் அரனடி போற்றி."

'அனுபவ வைத்திய தேவரகசியம்' எனும் இப்பெரும் வைத்திய நூலானது, முதன்முதலாக வெளியிடப்படும் புதிய நூலல்ல, இஃது 1926-ம் ஆண்டிலேயே முதற் பதிப்பைப் பெற்று பல வைத்தியர்களிடம் நிலவி வந்துள்ளது. ஆனல் அதன் பிறகு சில காலமாக ஆசிரிப்புக் குறைவினலும், உலகப் பொருளாதார நெருக்கடி முதலிய பல காரணங்களினலும் இதுவரையில் மீண்டும் அச்சிட முடியாமல் இருந்துவந்தது. பதிப்பாளர்களில் சிறப்பாக வைத்திய நூல்களுக்கு போதாவு அளித்துவரும் B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ் உரிமையாளராகிய B. R. அரங்கசாமி நாயகர் அவர்கள் சமீபத்தில் இந்நூலின் பதிப்புரிமையைத் தாம் பெற்று மீண்டும் இதனைப் புதுப்பித்து வெளியிட முன்வந்துள்ளது போற்றத்தக்கதாகும்.

இந்நூலானது முதன்முதலில் ஜே. தோராம பிரசாத் அவர்களால் வடமொழியிலும் தென்மொழியிலுமுள்ள பல ஆயுள்வேத நூல்களினின்றும், சில சித்த வைத்திய நூல்களினின்றும் மொழி பெயர்த்துத் தொகுத்து இயற்றப்பட்ட நூலாகும். சாதாரணமாக வைத்தியர்கட்குத் தேவையான எல்லா விஷயங்களையும் ஒருங்கே சமைத்து ஓர் நூல் இயற்றவேண்டுமென்ற கருத்தினைக்கொண்டே இந்நூலாசிரியர் இதனைத் தொகுத்திருக்க வேண்டுமெனத் தெரிய வருகிறது. எனெனில் இந்நூலில் வைத்திய பொது லக்ஷணம், அஷ்டவித பரீக்ஷை, பொருட்களின் குணபாடம், மருந்து செய்யும் பக்குவங்கள், ரோக நிதானம், ஸ்திரீபால ரோகங்கள், சிகிச்சா க்ரமம், மருந்து முறைகள் முதலிய வைத்தியர்களுக்கு வேண்டிய சகல விஷயங்களும் காணப்படுகின்றது. ஆகவே இதனை ஓர் அரிய பெரும் வைத்திய நூலெனினும் மிகையாகாது.

நான் முகம்

இன்று பதிப்பாளரின் விருப்பத்திற்கிணங்கி யான் இதனைச் செப்பஞ்செய்யும் பணியை மேற்கொண்டு என் சிற்றறிவிற்கெட்டிய வரையில் ஆய்ந்து திருத்தியும், ஒவ்வாத சிலவற்றை நீக்கியும், அவசியமான சில பகுதிகளைப் புதியதாகச் சேர்த்தும், விளக்கியும் காலஞ்சென்ற எம் அன்பர்களுக்கு பெரிதும் பயன்படும் முறையில் ஓரளவு சிறிருத்தி அமைத்துள்ளேன். இப்புதிய பதிப்பில் மருந்துகளின் வகை, மருந்து செய்யும் விதிகள், மருந்து வழங்கும் விதி, பொருட்களின் செய்கை, சரக்குகளின் சுருக்கு முறிவு, பொருட்களின் பண்பும் பயனும் முதலிய பல பகுதிகளைப் புதியதாகச் சேர்த்துள்ளேன். மற்றும் இந்நூலில் மூன்றும் நான்காம் பாகங்களில் பல அனுபவ முறைகளையும் புதியதாகச் சேர்த்துள்ளேன்.

இந்நூலைக் கண்ணுறும் வல்ல சகோதரர்கள் இதில் குற்றங் குறைகள் இருப்பின் பொருட்படுத்தாது ஆராவளிக்குமாறு வேண்டுகின்றேன். இந்நூல் இடையூறின்றி முடிந்தமைபற்றி எல்லாம்வல்ல இறைவனை மனமார வணங்குகின்றேன்.

இங்ஙனம்:

DR K. ராதாகிருஷ்ணன், L.I.M.

(வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப் பிள்ளை அவர்களின் குமா

பொருளடக்கம்

முதல் பாகம்

விஷயம்	பக்கம்
வைத்திய பொது இலக்கணம்	1
கால ஞானம்	,,
மருத்துவனின் இலக்கணம்	3
நோயாளியின் இலக்கணம்	4
நோயில் சாத்தியக் குறிகள்	5
,, அசாத்தியக் குறிகள்	,,
மரணக் குறிகள்	,,
நோயில் நட்சத்திராதிகளின் ஆதிக்கம்	6
சகுனம்	,,
முக்குற்ற இலக்கணம்	7
அஷ்டவித பரீக்ஷை	9
நாடி	,,
ஸ்பரிசம்	14
நா	,,
நிறம்	15
மொழி	,,
விழி	,,
மலம்	,,
மூத்திரம்	,,
மருந்து	17
மருந்துகளின் வகை	,,
மருந்து செய்யும் விதிகள்	20
பாகக் கருவிகள்	30
அளவை	34
சரக்குகளின் சுத்தி முறைகள்	35
தொகுப்புச் சரக்குகள்	38
சரக்குகளின் சுருக்கு முறிவு	40
மருந்து வழங்கும் விதி	41
பத்திய விதிகள்	43
பொருட்களின் செய்கை	44
பொருட்களின் பண்பும் பயனும்	46
நீரின் குணம்	,,
அன்னம் அரிசி கஞ்சி இவைகளின் குணம்	47
தானியங்கள்	,,
கீரைகள்	48
காய்கனி கிழங்குகள்	50
மூலிகைப் பொருட்கள்	52
கடைச் சரக்குகள்	59
உலோகங்கள்	63
தங்கம்	69
வெள்ளி	71
தாம்பரம்	72
ரசகம்	74
வங்கம்	,,
லோகம்	76
மண்டூரம்	77
உப ரசங்கள்	78
இரசம்	,,
இலிங்கம்	80
இரச செந்தூரம்	81
பூரம்	,,
வீரம்	,,
கந்தகம்	82
தாளகம்	83
வெண்கார பாஷாணம்	84
அப்பிரகம்	,,
இலவணங்கள்	88
சீவப் பொருட்கள்	91
பால் வகை	96
தயிர் மோர் வகை	97
வெண்ணெய்	98

விஷயம்	பக்கம்	விஷயம்	பக்கம்
நெய்	98	கிரிச்சரம்	130
மூத்திரம்	,,	அஸ்மரீ	131
ரோக நிதானம்	99	மேக நோய்	,,
சுரம்	,,	மேகக் கட்டிகள்	135
சன்னிபாதம்	100	வித்திருதிக் கட்டி	136
இரத்தபித்த நோய்	113	குடல் இறக்கி ரோகம்	137
அதிர்க்க நோய்	114	அண்ட நோய்	138
அன்றிரவு நோய்	115	குன்ம நோய்	,,
காச நோய்	,,	ஆரக ரோகம்	140
சுவாச நோய்	116	சூலை நோய்	141
விக்கல் நோய்	117	மகோதரம்	142
க்ஷயநோய்	118	பிலீக நோய்	144
குரற்கம்மல் நோய்	119	பாண்டு	,,
அரோசகம்	120	காமாலை	146
வாந்தி நோய்	,,	சோபை	147
மார்பு நோய்	121	விசர்பி ரோகம்	149
தாக நோய்	122	மகுரிகை	150
மதாத்திய நோய்	123	வில்போட நோய்	151
தும்மிஷ விஷய ரோகம்	,,	குஷ்டரோகம்	152
மதரோகம்	,,	வெண்குஷ்டம்	155
மூர்ச்சை நோய்	124	இருமி நோய்	156
மூல நோய்	125	வாத நோய்	157
அதிசாரம்	127	பித்த நோய்	174
கிரகணி	128	சிலேஷ்ம நோய்	180
அலசரோகம் (மந்தம்)	129	உன்மாதம் (பைத்தியம்)	184
விஷூசி நோய்	,,	அபஸ்மாரம் (மூர்ச்சை)	,,
அசீரண நோய்	130	வலி (இசிவு)	186
மூத்திர நோய்	,,	சேத்திர நோய்	187

இரண்டாம் பாகம்

கர்ணரோகம்	199	தாலு ரோகம்	209
நாசி ரோகம்	202	கண்ட ரோகம்	210
முக ரோகம்	204	சர்வமுக ரோகம்	213
ஓஷ்ட ரோகம்	205	சிரோ ரோகம்	214
கண்டாலசி ரோகம்	206	கபால ரோகம்	215
தந்த ரோகம்	,,	வ்ரணம்	217
தந்தமூல ரோகம்	207	பகந்தரரோகம்	220
ஜிவ்வா ரோகம்	209	இரத்தி	221

விஷயம்	பக்கம்	விஷயம்	பக்கம்
பாதவன்மீகம்	223	சோமரோகம் (வெள்ளை)	272
கண்டமாலை	224	ஸ்தனரோகம்	273
கோடி வ்ரணம்	,,	பாலரோக நிதானமும்	
குய்யரோகம்	225	சிகிச்சையும்	276
பிரமேகம்	228	கணம்	280
விஷபாக ரோகம்	231	மாந்தம்	281
அதிதூலரோகம்	232	இரத்தி	283
அதிசட்கரோகம்	232	கப்பான்	,,
உளமார்தை	,,	மலவாதம்	284
விஷபேதம்	233	தசனேற்பவம் (பல்முளைத்தல்)	,,
கீடாதிபேதம்	245	கக்குவான் என்னும் கக்கிருமல்	,,
ஸ்திரீரோக நிதானமும் சிகிச்சையும்	251	தோஷம்	,,
மலடுரோகம்	,,	பாலகிரக தோஷம்	285
கருப்ப ரோகங்கள்	252	பகலி தோஷம்	287
யோனிரோகம்	261	பாலரோக சிகிச்சை	288
சருப்பிணிகளுக்கு ஏற்படும் பலவகைபிணிகளுக்கு சிகிச்சை முறைகள்	269	ஸ்திரீரோக சிகிச்சைகள் (வேறு)	294
பெரும்பாடு	270	பாலரோக சிகிச்சைகள் (வேறு)	301

மூன்றாம் பாகம்

சிகிச்சாசாரம்	319	கிரகணி சிகிச்சை	397
சுர சிகிச்சை	,,	வாதரோக சிகிச்சை	408
சன்னிபாத சிகிச்சை	341	இரத்தபித்த சிகிச்சை	443
க்ஷயரோக சிகிச்சை	354	பித்தரோக சிகிச்சை	452
பாண்டுரோக சிகிச்சை	369	அருசிரோக சிகிச்சை	465
காமாலைக்கு சிகிச்சை	381	சர்த்திரோக சிகிச்சை	468
சோபைரோக சிகிச்சை	385	காசரோக சிகிச்சை	472
அதிசார சிகிச்சை	387		

நான்காம் பாகம்

விஷயம்	பக்கம்
தலைவலி சிகிச்சை	495
விக்கல்நோய் சிகிச்சை	503
சூரம்மம் சிகிச்சை	507
பிரமேக சிகிச்சை	510
மூத்திரகிரிச்சர சிகிச்சை	527
சூலை சிகிச்சை	534
அரகநோய சிகிச்சை	545
குன்மநோய சிகிச்சை	547
இருத்நோய சிகிச்சை	558
மகோதர சிகிச்சை	561
அண்டநோய சிகிச்சை	565
மேதோநோய சிகிச்சை	569
வாதாத்த சிகிச்சை	571
வாருஸ்தம்பவாதசிகிச்சை	576
ஆமவாத சிகிச்சை	578
சேதித்த சிகிச்சை	583
ஆமவிர்த்த சிகிச்சை	584
அசிரண சிகிச்சை	588
மூலநோய சிகிச்சை	593
கிருமிநோய சிகிச்சை	598
தாகநோய சிகிச்சை	600
வெட்டைக்கு சிகிச்சை	602
மூர்ச்சைநோய சிகிச்சை	604
மதாத்திடநோய சிகிச்சை	,,
உன்மாதநோய சிகிச்சை	606
குஷ்டநோய சிகிச்சை	608
விசர்பத்துக்கு சிகிச்சை	616
அபஸ்மாரநோய சிகிச்சை	618
வில்போட்ட சிகிச்சை	620
மருரிநாநோய சிகிச்சை	622
கண்டகண்டநோயசிகிச்சை	625
கண்டமாலை சிகிச்சை	626
கிரந்திநோய சிகிச்சை	627
அற்புதநோய சிகிச்சை	630
ஸ்லீபத சிகிச்சை	631
அர்த விர்த்திரி சிகிச்சை	633
விரணநோய சிகிச்சை	634
நாடிவிண சிகிச்சை	637
பகந்தர சிகிச்சை	638
உபதம்ல சிகிச்சை	641
உதடுநோய சிகிச்சை	643
தந்தநோய சிகிச்சை	644
தந்தமூலநோய சிகிச்சை	,,
ஜிம்மநோய சிகிச்சை	646
நாசிநோய சிகிச்சை	651
சிரோநோய சிகிச்சை	655
நேத்திர ரோகங்கள் (வேறு)	661
நேத்திரநோய சிகிச்சை	666
விஷ சிகிச்சை	671

முதல் பாகம்

கடவுள் துணை

அனுபவ வைத்திய தேவ ரகசியம்

வைத்திய பொது இலக்கணம்

கால ஞானம்

காலமானது உலகத் தோற்றத்திற்குக் காரணமாய பஞ்ச பூதங்கள் முதல் யாவற்றையுந் தோற்றுவிக்கின்றது. இது வருங் காலம், நிகழ்காலம், சென்றகாலம் எனும் மூன்று வகையா யிழுத்துக் கின்றது. இதனையே அயன், மால், சிவன் என்றும் கூறப்படும். ஆகையால்தான் திரிமூர்த்திகள் காலரூபிகள் எனப்படுகிறார்கள். அயன், மால், சிவன் என்பது காலத்தின் ஆக்கல், இருத்தல், அழித் தல் என்னும் முத்தொழில்களின் பெயருமாம். மேலும் காலமானது வருடங்களாகவும், அயனங்களாகவும், ருதுக்களாகவும், மாதங்க ளாகவும், பட்சங்களாகவும், வாரங்களாகவும், நாட்களாகவும், காலை மாலை என்னுஞ் சிறு போதுகளாகவும், நாழிகை, விநாடிக ளாகவும் பரிணமித்து இருக்கின்றது. காலத்தின் போக்கினால்தான் விருக்ஷங்கள் காய்கனிகளைத் தருகின்றது, தானியங்கள் விளைகின் றது, மழை முதலியவைகளும் ஏற்படுகின்றது. காலத்தின் கோலத் தினால்தான பெண்கள் ருதுவாகின்றனர், திருமணங்கள் ஏற்படு கின்றது, ஜனன மரணாதிகளும் உண்டாகின்றது. சுருங்கக்கூறின் அண்டபிண்டங்களின் ஆட்சியே காலம் எனலாம். இந்தக் காலச் சக்கரத்தின் இயக்கத்தில் உழலாதவர் எவருங் கிடையாது.

காரிய வதுவாகிய இக் காலத்தை வெல்ல எவராலும் முடியாது. எனினும் அவரவர்கள் தங்கள் காலப்பிராப்தி வரையிலாவது சுக ஜீவியாய் வாழ முயற்சிக்கலாம். அவரை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுதவேண்டு மென்பதுபோல, மனிதன் தன் உடல் தன் னிலையில் உள்ளவரையில்தான் எதையுஞ் சாதிக்கமுடியும். உடலா னது தன் நிலையிலிருக்க, இதமான உணவும், மிதமான இயக்கமுமே முதற்காரணமாயுள தென்றும், அஃதின்றி இவைகளின் விகற்பமே பிணி முதலிய பெருந்துன்பங்களுக் குள்ளாக்குகின்றன வென்றும் வைத்திய நூல்களில் பன்முறையும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள தைக் காணலாம். பிணி முதலாதிகளினால் பெருந் துன்பங்கள்

எதுவும் ஏற்படாமல், காலப்பிராப்தி வரையிலான சௌக்கியமாய் வாழ, வைத்திய நூல்கள் நமக்கு ஓளவு தவிர்புரிவதால், உயிர் நூலாம் வைத்திய நூலில் காலஞானத்தைக் குறித்துக் கூறப் பட்டது.

காலமென்ற அக்கினியானது ஜடராக்கினியில் சேர்வதனால் உணவு, நீர், நித்திரை, காமம் என்ற நான்குவித வாஞ்சைகள் உண்டாகின்றது. இவைகளில் உணவின்மையால் தாது கட்டமும், நீரின்மையால் இரத்தக் குறைவும், காமத்தினால் சேத்திரேந்திரியக் கெடுதியும், நித்திரையின்மையால் சகல பிணிகளும் தொடர் கின்றன.

சுருதி, யுக்தி, அனுபவம், என்னும் மூவிதங்களினால், சரீரம் ஆன்மாவென்றும், மனம் அந்தராத்மா வென்றும், பிராணன் பரமாத்மா வென்றும், இவைகளே பஞ்ச தத்துவங்களையும் தாங்கி செய்து இருக்கின்றதென்றும் தெரியவருகிறது. ஆகையால் ஆன்மாவுக்கும் மனதுக்கும் விகற்பமுண்டாகில் மனிதன் உயிர்வாழ முடியாதென்றும், அவன் காலம் எய்கிறவனால் ஐக்கியப்படுவானென்றும் கூறப்படும்.

அகலில் சம்பூரணமாய் எண்ணெயிருந்தும், சோதியா யெரித்துக் கொண்டிருந்த விளக்கின் வத்தியானது கையால் எப்படி அணைத்து போகிறதோ, அப்படியே யாவற்றிற்கும் ஆதாரமாகிய வாயு, ஆதாரமற்றதாகிறபோது, பிராணிகளுக்கு மரணம் சம்பவிக்கின்றது. இது வைத்தியனுடைய மணிமந்திர ஒளடதாதிகளினால் தாளவு சாத்தியாகின்றது.

சாதாரணமாய் மனிதன் நாள் ஒன்றுக்கு 21600 முறை சுவாசிக்கின்றான். இதையே பிராணன் என்றும், இது விகற்பமின்றி கடைபெற்றவரின் மனிதன் 100-ஆண்டுகள் வரையில் சுகஜீவியாய் வாழலாமென்றும், நம்முடைய பண்டைய நூல்களில் கூறப்பட்டுள்ளது. இயற்கையான சுவாசமானது 12-அங்குலம் ஓடி, 4-அங்குலம் அழிந்து, 8-அங்குலம் தான் நின்ற இடத்தை சேர்க்கும். இவ்வாறு சுவாசத்தில் 4-அங்குலம் அழிவு ஏற்படுவதால்தான் மனிதனின் ஆயுட்காலம் 100-வயதாக ஏற்பட்டதென்றும், அஃதின்றி சுவாசத்தில் அழிவு ஏற்படாமல் இருப்பின் பல்லாண்டுகள் ஜீவித்திருக்கலாமென்றும் அறியக்கிடக்கின்றது. அதனால்தான் யோகப் பியோகின் சுவாசத்தைச் சிறிது சிறிதாய் பந்தனப்படுத்தி, நீண்ட ஆயுளையும், நிடமான தேகத்தையும் அடைந்து வாழ்கின்றனர். சுவாசத்தில் ஒரு அங்குலத்தை பந்தனப்படுத்தினால் பல சக்திகள் ஏற்படுமென்றும், மற்றும் 12-அங்குலம் வரையில் பந்தனம் செய்தவர்கள், அதாவது சுவாசம் உதித்தவிடத்திலேயே முழுங்கிக்கொண்டிருக்கும்படிக்குச் செய்தவர்கள் அன்னபானாதிகளை நீக்கி, அவாவற்று,

பேரின்ப நிலையை அடைந்து என்றும் சௌக்கியமாய் இருப்பார்களென்றும் அறியக்கிடக்கின்றது.

வலதுபக்கத்து நாசியில் சுவாசிப்பதற்கு சூரியகலை அல்லது பின்கலை என்ற பெயர். இது 12-கலைகளையுடையது. இடதுபக்கத்து நாசியில் சுவாசிப்பதற்கு சந்திரகலை அல்லது இடகலை என்ற பெயர். இது 16-கலைகளை யுடையது. இவைகள் இரண்டிற்கும் இடையில் இருப்பதே சுழிமுனை எனப்படும். மேற்கூறப்பட்ட நாடிகளில் முறைப்படி சுவாச அப்பியாசங்களைச் செய்துவருவதற்கே பிராணயாமம் எனப்படும். இதனைத் தக்க குரு முகாந்திரமாய்க் கற்றுப் பழகி வருதல் நன்றென்றும், இதனால் மனிதன் சுகானந்தத்தோடு நீண்டகாள் உயிர்வாழ முடியுமெனவும் நூல்களில் அறியக்கிடக்கின்றன.

மருத்துவனின் இலக்கணம்

கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் இவ்வுலகின்கண் தர்மம், அதர்மம், காமம், மோக்ஷம் என்ற நான்கு புருஷார்த்தங்களை அடைந்து ஜீவிப்பதற்கு முதற்காரணமாயுள்ள தேகாரோக்கிய மாகும். இதற்கு விரோதியாக உள்ளதுதான் வியாதிகள் எனப்படும். ஆகவே இப் பிணி முதலியப் பீடைகளினின்றும் விடுபட்டு சுகவாழ்வுபெறத் தவிர்புரியும் மருத்துவர்களைக் கடவுளுக்குச் சமமாகக் கருதப்படும்.

கூர்மையான அறிவுடையவனும், தைரியவானும், ஆசாரமுள்ளவனும், தேகம், பல், உதடு, கண், செவி இவைகள் விகாரமற்றவனும், சந்தேகமற்றவனும், ஞாபகசக்தி யுடையவனும், சகல வித்தைகளில் தேர்ச்சியுள்ளவனும், உயிர்களிடத்து அன்புள்ளவனும், கல்லொழுக்கமுள்ளவனும், எந்நோயையும் அசாத்தியமென கைவிடாமல், உயிர் உடலைவிட்டு நீங்கும்வரையில் தீவிரபுத்தியுடனும் மனதிடத்துடனும் சிகிச்சை செய்பவனும், ஆகிய இத்தியாதி குணங்களையுடையவனே சிறந்த வைத்தியனாவான்.

மருத்துவன் அறிந்துகொள்ள வேண்டியவைகள்:—சோதிடம், பஞ்சபட்சி, சாஸ்திரம், குற்றமற்ற வகாரவித்தை, அகத்திய மாமுனிவர் அருளிய நூல்கள், நீலா மந்திரங்கள், கர்மகாண்டம் முதலிய லவகைக் கசடறக் கற்றவர்களே சிறந்த வைத்தியராகக் கருதப்படும்.

இவற்றுள் சோதிடம் என்பது ரோகாதிகளின் ஆதிக்கத்தைக் குறிப்பிடும் சாத்திரமாகும். இதில் ஜன்ம லக்கனத்திற்கு ஆறும் எட்டாதிபனாகிய ரோகஸ்தானாதிபதி, இலக்கனாதிபதி ஆகிய இவர்களின் இயக்கங்களைக்கொண்டு மானிடர்களுக்கு ஏறபடக்கூடும்

சோப்களையும், அவற்றின் வண்மை மென்மைகளையும் ஒருவாறு கண்டறிய முடியும். பஞ்சபட்சி யென்பது வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் முதலிய பஞ்ச பட்சிகளின் அழகு, தயில், சாவு, ஊண், நடை முதலிய இயக்கங்களைக் கூறும் சாத்திரமாம். இதனும் சோதிடத்தைப் போலவே காலத்தின் வண்மை தீமைகளைக் கண்டறிந்து நடக்கப் பயன்படும். சரம் என்பது சூரியகதி, சந்திரகதி, சுழிமுனை முதலிய வாசக் குறிப்புகளைக் கூறுஞ் சாத்திரமாம். இதனால் நோயின் சாத்தியா சாத்தியங்களை ஒருவாறு கணிக்க முடியும். வகார வித்தை என்பது இரச வாதத்தைப்பற்றிக் கூறப்படுஞ் சாத்திரமாம். அதாவது செம்பு, ரசம் முதலிய மட்டரகங்களைத் தங்கம், வெள்ளி முதலிய உயர்ந்த உலோகங்களாகச் செய்யும் வித்தை. இது பெரும்பாலும் 'மூப்பு' முதலிய சூரு மருந்துகளைக் கொண்டு செய்யப்படும். இத்தகைய வகாரவித்தையை பற்றியவனே வாதியென்றும், அவன் ரசகெந்தி முதலிய சரக்குகளைக் கட்டி கீற்றி மருந்தாக முடித்து பிணிகட்கு வழங்க அத்தகைய பிணிகளும் விரைவில் குணப்படுமென்றும் அனுபவத்தில் கண்டுள்ளது. மற்றும் பதினென சித்தர்களில் மூதண்ணமயானவராகிய அகத்தியனர் இயற்றிய நூல்களையும், மந்திரங்களையும் கற்றறிதல்வேண்டும். கர்ம காண்டம் என்பது கர்மாதிகளினால் நோய்கள் சம்பவிக்கும் விதத்தையும், அதற்குச் சாந்தி செய்யும் வகை முதலியவைகளையும் கூறப்படுவனவாம்.

ஆகவே இதுவரையில் கூறப்பட்டவைகள் யாவற்றையுங் குற்றமறக் கற்றுணர்ந்தவர்களே சிறந்த வைத்தியர்களாகவும், கடவுளுக்குச் சமதகுவமானவர்களாகவும் கருதப்படுவர். இவற்றில் ஒரு சிலவற்றை மட்டுங் கற்றுவிட்டு வைதியம் செய்வது ஆபத்துக்கிடமாகும். சிகிச்சை முறைகளையும், நல்ல மருந்து முறைகளையும் மட்டும் தெரிந்துகொண்டால் போதாது. உடற்கூறு தத்துவங்கள், அஷ்டவிதப் பரீக்ஷை, முதலியவற்றையும், அவற்றின் வாயிலாய் நோய்களைக் கணிக்கவும பயிலவேண்டும். மற்றும் மருந்துகளின் குணதோஷ, குணம், விகண்டு, முறிவு, செய்பாக நுணுக்கங்கள் முதலியவற்றை அறிந்திருப்பதுடன் கூடுமானவரையில் தானே மருந்துகளைச் செய்யும் நிலைமையும் பெற்றிருத்தல் பெரிதும் கண்மையைப் பயக்கும்.

நோயாளியின் இலக்கணம்

நோயாளியானவன் உண்மையே பேசுபவனாகவும், வைத்தியரைக் குருவாக எண்ணி, அவர்மீதும் அவர் கொடுக்கும் மருந்தின்மீதும் பதிப்பும் நம்பிக்கையுங்கொண்டு, அதை அவர் சொன்னபடி அருந்திப் பத்தியத்தைக் காக்கக் கூடியவனாகவும், நல்லொழுக்க முடையவனாகவும் இருத்தல் வேண்டும். இன்றேல் பிணி தீராது என்பதாம்.

நோயில் சாத்தியக் குறிகள்:—உடல் இலேசாக இருத்தல், முகம் விகாரமற்றிருத்தல், கை கால்கள் இயற்கையாக நீட்ட மடக்க இயலுதல், நாசத்தமாயிருத்தல், நாசியின் வழியாக சுவாசித்தல், கண்டத்தில் கபமின்மை, நித்திரை பங்கமின்மை, பஞ்சேந்திரியங்களும் தன் சுயவுணர்வுடன் தொழில் புரிதல் என்னும் குணங்களையுடைய நோயாளி எவ்விதத்திலும் எளிதில் குணமடைத்து உயிர் வாழ்வான்.

நோயில் அசாத்தியக் குறிகள்:—உடல் கனத்தல், முகம் விகாரமாயிருத்தல், வாயின் வழியாக சுவாசித்தல், நித்திரையின்மை, பஞ்சேந்திரியங்களின் தொழில் கெடல், உணர்ச்சியற்றிருத்தல், முதலிய குணங்கள் இருப்பின் அந்நோயாளியின் பிணி தீர்வது மிக கஷ்ட சாத்தியமாம்.

மரணக் குறிகள்:—வாதமானது பித்தஸ்தானத்திலும், பித்த மரணது கபஸ்தானத்திலும், கபமானது கண்டஸ்தானத்திலும் இருக்குமாகில் மரணஞ் சம்பவிக்கும். மேலும் இரவில் அதிதாகமும், பகலில் சீதளமும், கண்டத்தில் கோழை கட்டுவதும், மிகுபேதியும், கஷ்ட சுவாசத்துடன் இருமல், சூலை, விக்கல் முதலியனவும் இருப்பின் அந்நோயாளி உயிர் வாழ்வது கடினம்.

மார்பு கை கால் முதலியன சீதளமாயும், சிரசுமட்டும் மிக உஷ்ணமாயும் இருத்தல், தேகம் பலனித சாயலாயும், மேல் மூச்சு அல்லது கஷ்ட சுவாசத்துடன் வாந்தி விக்கல் முதலியவைகளும், தேகத்தில் துர்நாற்றமும் இருத்தல், தும்மலுடன் மல மூத்திரம் இந்திரியம் முதலியன நழுகல், நாடிகதி இவைகள் கருப்புநிறமாதல், எப்போதும் இடத நாசியிலேயே சுவாசம் விடுதல், பார்வை குன்றல், நாதில் ஒருவித ஒலி எப்போதும் இருத்தல், கண்டபடி பிதற்றுதல், முதலிய குணங்களும் மரணக் குறிகளென்றறியவும். மற்றும், சிவன், எமதூதர்கள், கந்தர்வர், சர்பகீடங்கள் முதலியவற்றைக் கனவில் பார்த்தல், பல்லக்கு, படகு முதலியவற்றில் செல்லுதல், சந்தனம், புஷ்பம், மாமிசம் முதலியவற்றைப் பெருதல், இன்னும் இதுபோன்ற பயங்கரக் கனவுகள் முதலியவைகளைக் காண்டல் முதலியனவும் மரணக் குறிகளெனப்படும்.

சூரியோதய சமயத்தில் ஆந்தை அல்லது காகம் கூக்குரலிட்டுத் தன் எதிரில் வந்து தலையின்மீது குத்தினால் சந்தேகமின்றி அவன் அன்றைய மாலைக்குள் மரணமடைவான்.

எந்த ரோகியின் ஜன்ம ராசியின் எழாவது வீட்டில் சூரியன் இருக்கின்றதோ அப்போதாவது அல்லது ஜன்ம லக்கனத்தில் சந்திரன் இருக்குமபோதாவது அவன் விஷ ஜந்துக்களால் தீண்டப்பெறின் உடனே மரணமடைவான்.

நோயில் நட்சத்திராதிகளின் ஆதிக்கம்:—விருச்சிகம், மேஷம் ஆகிய இவ்வோரைகளில் சுக்கிராதிபதியிலும் மிதுனம் கன்னிகை ஓரைகளில் பத்திராதிபதியிலும், கடக ஓரையில் ஜயாதிபதியிலும், கும்ப மிம்ப ஓரைகளில் சிக்கதிபதியிலும், தனுசு ஓரையில் பத்திராதிபதியிலும், மிதுன ஓரையில் ஜயதிபதியிலும், மகர ஓரையில் பூரணதிபதியிலும், நோய்கள் உண்டாகில் நோயாளி மரணமடையான்.

மேலும் செவ்வாய்க்கிழமை, கிருத்திகை நட்சத்திரம், சுக்கிர திதி கூடிய நேரத்திலும், புதன்கிழமை ஆயில்ய நட்சத்திரம், பத்திரா திதி கூடிய நேரத்திலும், வியாழக்கிழமை மக நட்சத்திரம் ஜயா திதி கூடிய நேரத்திலும், வெள்ளிக்கிழமை தனிஷ்டை நட்சத்திரம் சிக்த திதி கூடிய நேரத்திலும், சனிக்கிழமை பரணி நட்சத்திரம் பூரண திதி கூடிய நேரத்திலும் நோய்கள் உண்டாகில் அசாத்தியமாம்.

சுவாதி, ஆயில்யம், திருவாதிரை, பூசம், கேட்டை முதலிய நட்சத்திரங்களில் நோய்கண்டால் அசாத்தியமாம். ரேவதி, அனுராதை முதலிய நட்சத்திரங்களில் நோய் கண்டால் மிகவும் கஷ்டப் படுத்தி மரணத்தை யுண்டாக்கும். உத்திரட்டாதி மிருக சீருஷம் முதலிய நட்சத்திரங்களில் நோய் கண்டால் ஒரு மாதம் வரையில் நோய் விடாது. மக நட்சத்திரத்தில் நோய் கண்டால் இருபத்தோரு நாட்களில் நோய் தீரும். அஸ்தம், அனுஷம், விசாகம் முதலிய நட்சத்திரங்களில் நோய் ஆரம்பித்தால் பதினைந்து நாள் வரையில் இருந்து பிறகு குணமாகும். மூலம், அசுவினி, கிருத்திகை முதலிய நட்சத்திரங்களில் நோய் பிறந்தால் ஒன்பது நாளில் குணமாகும்.

புரட்டாசி, தை மாதங்களில் உத்திர நட்சத்திரத்திலும், பங்குனி மாதத்தில் ரோகணி, புனர்வசு நட்சத்திரங்களிலும், நோய்கள் உண்டாகில் ஒரு வாரத்தில் குணமாகும்.

சகுனம்

மருத்துவன் நோயாளியிடம் போகும்போது பேரிகை, சங்கு, வீணை, சுபஸ்திரீ, கன்றுடன் கூடிய பசு, மங்கள ஓசை, அரசன், மூட்டையுடன் வண்ணான், குடை, இரட்டைப் பிராமணர்கள், தயிர், சந்தனம், கள், மாமிசம், தேன், குதிரை, முதலிய சுப சகுனங்களோ தனக்கு எதிரிலாவது அல்லது வலது புறமாவது காண்பாரானால் அது நல்ல சகுன மென்றறியவும்.

விறகு, நெருப்பு, பாம்பு, உப்பு, வெல்லம், எண்ணெய், மருந்து, பிகாரி ரூபிகள், அமங்கல ஒலி, எண்ணெய் தேய்த்துக்கொண்டவன், முதலியவைகள் எதிர்பட்டால் அது கெட்ட சகுன மென்றறிந்து சர்வ ஜாக்கிரதையுடன் சிகிச்சை செய்தல் வேண்டும்.

மருத்துவனை அழைக்கச் செல்லும் தூதுவன் தன்னுடன் இனிப்புப் பொருட்கள், மாமிசம், தோல், கோல், நாய், எருமை, முதலியவற்றைத் தன்னுடன் எடுத்துச் செல்லுதல், மருத்துவனுக்குப் பின்புறமாகவும், வலது புறமாகவும், மேல்புறமாகவும் நின்று பேசுதல், ஆயில்யம், மகம், மூலம், கேட்டை, பரணி முதலிய நட்சத்திரங்களில் அழைத்து வரச் செல்லுதல் முதலியவைகளும் கெட்ட சகுனங்களாம்.

வெண்மை வஸ்திரம் தரித்தவர்கள், சுபஸ்திரீகள், நல்ல சொற்களைப் பேசுபவர், நல்ல நேரங்களில் அழைத்துவரச் செல்லுதல் முதலியன நல்ல சகுனங்களாம்.

முக்குற்ற இலக்கணம்

இச் சரீரம் பிருதிவி என்னும் பூதத்தால் உருவாகி, ஆகாயம் என்னும் பூதத்தினிடமாக ஒடுங்கி, அப்பு, தேயு, வாயு என்னும் மூன்று பூதங்களால் இயக்கப்பட்டு வருகின்றது. மேற் கூறப்பட்ட அப்பு, தேயு, வாயு என்பதே கப, பித்த, வாத மென்ற முக் குற்றங்களெனவும், இவைகளின் இயக்கத்தின் விகற்பமே நோய்க்குக் காரணமெனவும் கூறப்படும்.

இக் கருத்தினைக் கொண்டே தமிழகத்துத் தனிப்பெரும் புலவராகிய திருவள்ளுவரும்,

"மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளி முதலா வெண்ணிய மூன்று."

எனக் கூறியுள்ளார்.

ஆகவே நோய்க்குக் காரணமாய முக் குற்றங்களின் இலக்கணத்தை அறிதல் மிகவும் அவசியமாகும்.

வாதம்:—இது கடினம், இலேசத்துவம், குளிர்ச்சி, வரட்சி, அசைதல், அணுத்துவம் என்னுங் குணங்களையுடையது. இது தொப்புளுக்குக் கீழ் இடுப்பு தொடை எலும்பு, தோல் முதலிய விடங்களில் பரவி மலமூத்திர விந்து வியர்வை இவைகளைக் கழிபச் செய்தல் முதலிய தொழில்களைச் செய்விக்கின்றது. இது பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிதரன், தேவதத்தன், தனஞ்செயன் எனப் பத்து வகைப்படும்.

"பிராணன் மூலாதாரத்திலுதித்து மேல்நோக்கிச் சிரசை இருப்பிடமாகக் கொண்டு சுவாசிக்கக் காரணமாயுளது. அபானன் மூலாதாரத்தினின்று கீழ் நோக்கி குதத்திற்கும் குய்யத்திற்கும் இடையிலுள்ள மல மூத்திராதிகளைக் கழிக்கும். வியானன் இருதயத்தை நின்று மல மூத்திராதிகளைக்

இருப்பிடமாகக் கொண்டு உடல் முற்றும் வியாபித்து சீட்டல் மடக்கல் ஸ்பரிசம் அன்னசாரத்தை கிரப்பல் முதலிய தொழில்களைப் புரியும். உதானன் மார்பினிடமாக நின்று உதாக்கினியை எழுப்பி அன்னத்தைச் சீரணிக்கச் செய்து நாடிகளில் செலுத்தும். சமானன் நாபிஸ்தானத்தை இருப்பிடமாகக் கொண்டு உணவாதிகளினால் ஏற்பட்டக் குற்றங்களை மீறவொட்டாமல் தடுத்து சமப்படுத்தும். ஈரதன் கனைகளை உணரல், பார்த்தல் முதலிய தொழில்களுக்குக் காரணமாயுள்ளது. கூர்மன் மனதினிடமாக நின்று கொட்டாவி, சிரித்தல், கண்ணிமைத்தல் முதலிய தொழில்களைப் புரியும். கிரிதான் ர ராகி இலைகளினின்று இருமல், தும்மல் முதலியத் தொழில்களை உண்டாக்கும். தேவதத்தன் கோபம், சோம்பல், கொட்டாவி முதலிய வற்றை உண்டாக்கும். தனஞ்செயன் வீங்கச் செய்தல் முதலியத் தொழில்களை உண்டாக்கும்.

பித்தம்:—இது வெப்பம், குரூரம், பளபளப்பு, சலரூபம், புளிப்பு, விரோசனம் முதலிய குணங்களுடையது. இது உந்திஸ்தானத்தை இருப்பிடமாகக் கொண்டு உஷ்ணம் சீரணம் பித்தரசம் சுவை பார்வை, காந்தி முதலியத் தொழில்களுக்குக் காரணமாக இருக்கின்றது. இது அனலம், இரஞ்சகம், சாதகம், ஆலோசகம், பிராசகம், என ஐந்து வகைப்படும்.

அனல பித்தமானது ஆமாசயத்திற்கும் பக்குவாசயத்திற்கும் நடுவில் நின்று, தனது இயற்கைத் தன்மையாகிய உஷ்ணத்தினால் உணவைச் சீரணிக்கச் செய்கின்றது. இரஞ்சக பித்தமானது ஆமாசயத்தில் நின்று இரச தாதுவைப் போஷிக்கும். சாதக பித்தமானது இருதயஸ்தானத்தில் நின்று, அறிவு புத்தி முதலியவற்றிற்குக் காரணமாகி எக்காரியத்தையுஞ் சாதிக்கும் தன்மை வாய்ந்தது. ஆலோசகப் பித்தமானது கண்களில் நின்று பார்வைக்கு பேதுவாயுள்ளது. பிராசக பித்தமானது சருமத்தினிடமாக நின்று அதற்குக் காந்தியை யுண்டாக்கும்.

கபம்:—இது சீதளம், கனத்துவம், மந்தம், வழுவழுப்பு, மினுமினுப்பு, ஸ்திரம் முதலியக் குணங்களையுடையது. இது மார்பு ஸ்தானத்தை இருப்பிடமாகக் கொண்டு, மார்பு சிர ர கண்டம் ஆமம் கீல்கள் உரோமம் இரசதாது மேதோதாது முதலியவற்றில் சஞ்சரித்து, அசையாமை, மழுமழுப்பு, கீல்களுக்கு உறுதி முதலியத் தொழில்களுக்குக் காரணமாயுள்ளது. இது அவலம்பகம், கிலேதகம், போதகம், தருப்பகம், சந்திகம் என ஐந்து வகைப்படும்.

அவலம்பகமானது இருதயஸ்தானத்தினிடமாக நின்று மற்ற நான்கு வகை கபங்களுக்கும் ஆதாரமாயிருக்கும். கிலேதகமானது ஆமாசயத்தினிடமாக நின்று அன்னபானாதிகளை மிருதுவாக்கும்

தொழிலைப் புரியும். போதகமானது, நாவில்நின்று சுவைகளை அறியச் செய்யும். தருப்பகமானது, சிரசில் நின்று கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சந்திகமானது, கீல்களில் நின்று கீல்களின் இயக்கத்திற்குக் காரணமாகி நிற்கும்.

வாதத்திற்கு பாதம் முதல் நாபி வரையில் இடமென்றும், பித்தத்திற்கு நாபி முதல் கண்டம் வரையில் இடமென்றும், சிலேத்துமத்திற்கு கண்டம் முதல் சிர வரையில் இடமென்றும் கூறப்படும். மற்றும் மலத்தைப் பற்றியது வாதமென்றும், மூத்திரத்தைப் பற்றியது பித்தமென்றும், விந்துவைப் பற்றியது கபமென்றும், வாதத்திற்கு நிறம் கருப்பென்றும், பித்தத்திற்கு நிறம் மஞ்சளென்றும், கபத்திற்கு நிறம் வெண்மையென்றும் கூறப்படும்.

நோய்களில் காணும் குறி குணங்களைக்கொண்டு அந்நோயில் விகற்பமுற்ற தோஷங்களை எளிதில் கண்டறிய மேற்கூறப்பட்ட முக்குற்ற இலக்கணம் பெரிதும் உதவிபுரியு மென்றுணர்க.

அஷ்டவித பரீக்ஷை

மருத்துவன் நோயாளியை பரீக்ஷை செய்யும்போது, நோக்கு, ஸ்பரிசம், கேள்வி என்னும் மூன்றுவித உபாயங்களினால் எண்வகைப் பரீக்ஷைகளைச் செய்து, அவற்றின் மூலமாய் நோய்களைக் கண்டறிந்து அதற்குத் தகுந்த சிகிச்சைகளைச் செய்தல்வேண்டும்.

அதாவது நோயாளியின் உடல் முதலியவற்றை கண்ணால் பார்த்தல், கைகளால் தொட்டு உணர்தல், கேள்விகள் கேட்டு நோயாளியுடன் சம்பாஷித்தல் முதலியவற்றால், எண்வகைப் பரீக்ஷைகளென்ற நாடி, ஸ்பரிசம், நா, நிறம், மொழி, விழி, மலம், மூத்திரம் என்னும் இவைகளைப் பரீக்ஷை செய்து அதன்மூலமாக நோய்களை நிதானிக்கவேண்டும் என்பதாம்.

1. நாடி

நாடி பரீக்ஷையானது அஷ்டவித பரீக்ஷைகளில் மிக முக்கியமும் நுட்பமும் வாய்ந்தென்றும், இதனைத் தக்க ஆசானிடத்துக் கற்பினும் பன்னூல் பயிற்சியின் பிறகே நன்குணர முடியுமென்றும் அறிதல்வேண்டும். இந்த நாடியின் நிலையைக்கொண்டு நோய்களைக் கண்டறியதுடன், அந்நோயின் வன்மை மென்மைகளையும், அசாத்திய மரண நிலைகளையும் நிச்சயித்துக் கூறமுடியுமெனவும் அறியக் கிடக்கின்றது.

நாடியின் தோற்றமும் தொகையும் :—மனித உடலில் ஸ்தூல மாகவும் சூட்சுமமாகவும் மூன்று கோடியே ஐம்பது லட்சம் நாடிகள் உள்ளன வென்றும், இந்நாடிகள் யாவும் மூலாதாரத்தினின்றே தோன்றி, மேலுங் கீழும் குறுக்குமாகப் பரவி, உடல்முழுதும் வியாபித்துள்ளன வென்றும், இவைகட்கெல்லாம் ஆதாரமாயுள்ள ஓர் சூட்சும வாயுவானது இந்நாடிகளின் மூலமாய் பிராணன் முதலிய வாயுக்களைக்கொண்டு உடல் முழுதும் வியாபித்துள்ளன வென்றும், இதனையே உடலானது உயிர்பெற்றிருப்பதற்குக் காரணமென்றும் அறியக்கிடக்கின்றது. ஆனல் மேற்கூறிய நாடிகளில் எழுபத்தீராயிரம் நாடிகளே வாயு சஞ்சரிப்பதற்குப் பொருத்தமானவை. இவற்றின் மூலமாய்த்தான் பிராணாதி வாயுக்களும், உடலின் அன்னபானாதிகளின் சத்துக்களும் உடலிற் பரவி உடலானது போஷிக்கப் பட்டு வருகின்றது.

மற்றும், இந்த எழுபத்தீராயிரம் நாடிகளில் ஆயிரத்து எழுநூற்று இரண்டு நாடிகளை ஸ்தூல நாடிகளென்றும், மற்றவை சூட்சும நாடிகளென்றும், இவற்றுள் இந்த ஸ்தூல நாடிகளே சப்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களை அறியும்படிச் செய்வதுடன், புசிக்கும் உணவின் ரசத்தை உடலில் வியாபிக்கச் செய்து போஷித்து வருகின்றதென்றும் காணக்கிடக்கின்றது.

தச நாடிகள்:—மேற்கூறிய ஸ்தூல நாடிகளில், எழுநூறு நாடிகளே முக்கியமானவை யென்றும், அவற்றுள் பத்து நாடிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவென்றும், இவையே தச நாடி யெனவும் கூறப்படும்.

தச நாடிகளாவன:—இடகலை, பிங்கலை, சுழிமுனை, சிங்குவை, புருஷை, காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குரு என்பனவாம். இடது நாசியில் இடகலையும், வலது நாசியில் பிங்கலையும், பிரம்ம மந்திரத்தில் சுழிமுனையும், இடது நேத்திரத்தில் காந்தாரியும், வலது நேத்திரத்தில் அத்தியும், வலது கையில் குருவும், இடது கையில் சிங்குவையும், காலில் அலம்புடையும், குறியில் புருடனும், சிரத்தில் சங்கினியும் வியாபித்திருக்கும்.

இவைகள் அபானன், பிராணன், சமானன், உதானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன், என்னும் தசவாயுக்களை ஆதாரமாகக் கொண்டுள்ளன. இந்த தச வாயுக்களில், அபானன், பிராணன், சமானன், உதானன், வியானன் என்ற பஞ்சவாயுக்கள் முக்கியமானது. இவற்றுள் பிராணன் என்பது மிகவும் முக்கியமானதாம்.

திரிநாடி:—மேற்கூறிய தச நாடியில் இடகலை, பிங்கலை, சுழிமுனை எனற மூன்று நாடிகளே பிரதானமானவை.

இடகலையானது வலது பாத பெருவிரலினின்று புறப்பட்டு மூலாதாரத்தின் மார்க்கமாய் இருதயஸ்தானத்திற்கு இடதுபுறமாயோடிக் கத்தரிக்கோல் மாறலென மாறி சிரசிலுள்ள சந்திரமண்டலத்தையடைந்து, இடது நாசியின் வழியாக பதினாறு அங்குலத்திற்குப் பாய்ந்து இயங்கி நிற்கும்.

பிங்கலையானது இடது பாத பெருவிரலினின்று புறப்பட்டு மூலாதாரத்தின் மார்க்கமாய் இருதயஸ்தானத்திற்கு வலதுபுறமாயோடிக் கத்தரிக்கோல் மாறலென மாறி, சிரசிலிருக்கும் அக்கினி மண்டலத்தை யடைந்து வலது நாசியின் வழியாக பன்னிரண்டு அங்குலத்திற்குப் பாய்ந்து இயங்கி நிற்கும்.

சுழிமுனையானது இவையிரண்டிற்கு மிடையே மூலாதாரத்தினின்று உச்சிவரையோடி சூரியமண்டலத்தை யடைந்து, வலது இடது நாசித் துவாரங்களுக்கிடையே இயங்கி நிற்கும். இதனையே பிராணமயமான சிவனுக்கு இருப்பிடமாயும் உள்ளது.

மேற்கண்ட திரிநாடிகளில் இடகலையை வாதநாடியென்றும், பிங்கலையை பித்தநாடி யென்றும், சுழிமுனையை கபநாடி யென்றும் கூறப்படும்.

நாடி பார்த்தல் :—குதிச்சந்து, காமியம், உந்தி, மார்பு, காது, மூக்கு, கண்டம், கரம், புருவம், உச்சி யென்னும் பத்து விடங்களிலும் நாடியைப் பார்த்தறியலாம். எனினும் கரமே எளிதில் அறியக் கூடியதாகவும், சுலபமாகவும் இருப்பதால், கரத்தையே நாடிபார்க்குமிடமாக வழக்கிலேற்படுத்தப் பட்டிருக்கின்றது.

ஆண்களுக்கு வலக்கரத்திலும், பெண்களுக்கு இடக்கரத்திலும் நாடி பார்த்தல் வேண்டும். பிணியாளருடைய மூன்கையை மேட்டி, மணிக்கட்டிற்கு ஒரு அங்குலத்தள்ளி, பெருவிரல் பக்கமாகத் தனது மூன்று விரல்களை ஒன்றிற்கொன்று செல்லிடைப் பிரமாண தூரத்திலுள்ளபடி மேலாகப் பொருத்தி, இலேசாக அழுத்தியும், தளர்த்தியும் பார்க்க, ஆள்காட்டி விரலிலுணர்வது வாதமென்றும், நடுவிரலிலுணர்வது பித்தமென்றும், பெளத்திர விரலிலுணர்வது கபமென்றும் முணர்க.

நாடிகளின் மாத்திரை:—நோயற்ற மனிதனுக்கு இயற்கையாக வாதநாடியானது ஒரு மாத்திரையாகவும், பித்தநாடியானது அரை மாத்திரையாகவும், கபநாடியானது கால் மாத்திரையாகவும் இயங்கு மென்றும், இவற்றின் நடை வேகமென்றும் மாத்திரையின் வற்றத் தாழ்வாகிய விகற்பத்தைக் கொண்டே வாதாதி முக்குற்றங்களின் நிலையை யறிந்து அதன் மூலமாய் நோயைக் கணிக்க வேண்டு மென்று முணர்க.

நாடி நடையும் விகற்பமும்:—நாடியின் நிலையை மாத்திரைக் கணக்கில் கூறுவதுடன், எளிதில் அறியும் பொருட்டு சில ஜீவஜந்துக்களின் நடைக்கு ஒப்பிட்டுங் கூறுவதுண்டு. அதாவது ஆண்களுக்கு வாதநாடி மயில், அன்னம், கோழி என்னும் இவைகளின் நடையை யொத்திருக்குமென்றும், பித்தநாடி தவளை, அட்டை முதலியவற்றின் நடையை யொத்திருக்குமென்றும, கபநாடி பாம்பு, கவுதாரி முதலியவற்றின் நடையை யொத்திருக்கு மென்றும் கூறப்படும்.

சாதாரணமாக வாதத்திற்கு ஒரு மாத்திரை யென்றும், பித்தத்திற்கு அரை மாத்திரை யென்றும், கபத்திற்குக் கால் மாத்திரை யென்றும், வாதம் இரண்டு மாத்திரையாயின், அதாவது இரட்டித்து வேகமாய் நடக்கும், அதனை வாதத்தில் வாதமெனவும், இவ்வாறே பித்தம் இரட்டித்திருப்பின் பித்தத்தில் பித்தமெனவும், கபம் இரட்டித்திருப்பின் கபத்தில் கபமெனவும், வாதம் இரண்டு மாத்திரையாகவும் பித்தம் ஒரு மாத்திரையாகவும் இருப்பின் அதை வாதபித்த மெனவும், வாதம் இரண்டு மாத்திரையுடன் கபம் ஒரு மாத்திரையாக இருப்பின் வாத கப மெனவும், பித்தம் இரட்டித்து வாதம் ஒன்றுதல் பித்த வாத மெனவும், பித்தம் இரட்டித்த கபம் ஒன்றுதல் பித்த கப மெனவும், கபம் இரட்டித்து வாதம் ஒன்றுதல் கப வாத மெனவும், கபம இரட்டித்து பித்தம் ஒன்றுதல் கப பித்த மெனவும, வாத பித்த கபங்கள் மூன்றும் இரட்டித்த அல்லது மிக அடங்கி யிருப்பின் அதனைத் திரிதோஷமெனவும் கூறப்படும.

நாடி விகற்பமும் நோய்களும்:—வாத பித்த கபங்களாகிய முக்குற்ற நாடிகளும் முறையே தனித்தோ தொந்தித்தோ விகற்பமுறறி ருக்குங்கால் ஒவ்வொன்றிலும் காணும் நோய்களைக் குறித்து இங்கு கூறப்படும். அவையாவன:

வாதநாடியிற் காணும் நோய்கள்:—மந்தம், வயிற்றுப்பொருமல், கிரகணி, மகோதரம், சீரணம, சூலை, வாய்வு, திருமிசோப், அண்டவாதம், மூலம், மூத்திரக் கிரிச்சரம, தாதுமேகம்.

பித்தநாடியிற் காணும் நோய்கள்:—வெப்பு, உஷ்ணவாயு, அதிசாரம், அன்னசூல, பைத்தியம், சோகை, உடற்காங்கை, எரிச்சல், தாகம், மயக்கம், மூர்ச்சை, தித்திரைபின்மை, கனவு, மனக்கலக்கம், மெய்யுஷ்ணவு, பெரும்பாடு, இரத்தப் பிரமேகம்.

கபநாடியிற் காணும் நோய்கள்:—சுரம், இருமல், சுரபம், சன்னி, காசம், பக்கசூலை, இருகயரோகம், வீக்கம், வாதநி, விக்கல், தெஞ் சடைப்பு, சன்னி, விஷதோஷம, தாக்கம், பாண்டு, சோகை, காமாலை, கரப்பான், வீரணம்.

வாதபித்தநாடியிற் காணும் நோய்கள்:—உஷ்ணவாயு, அஜீரணம், புளியேப்பம், வாந்தி, அரோசகம், தாகசத்தல், சீர் வெந்து

போதல், மலங்கருகல், தாதுநட்டம், உடல்வலிதல், சோம்பல், கைகால் அசதி, இளைப்பு.

வாதக்பநாடியிற் காணும் நோய்கள்:—நிமிர், உளைச்சல், இருமல், சன்னி, விஷதோஷம், சூலை, இருகயரோகம், சுகை, மந்தாகாசம், உள்வீச்சு, புறவீச்சு, வலி, மிகுசுரம்.

பித்தவாதநாடியிற் காணும் நோய்கள்:—அஜீரணம், குன்மம், சூலை, மச்சம், வயிற்றிளைச்சல், கிரகணி, தாதுநஷ்டம், ஆயாசம், மயக்கம், மூர்ச்சை, சுரம், முறைக்காய்ச்சல், விஷவீக்கம, மூல வாய்வு, இரத்தக்கெடுதி.

பித்தகபநாடியிற் காணும் நோய்கள்:—அன்னசுரம், இளைப்பு, சுகை, இரத்தவிப்புருதி, உளமார்ச்சை, பிரசம், சுரம், வயிறுபொருமல், கண்ணோய், கண் காது மலம் நீர் இவை மஞ்சளாக இருத்தல், பாண்டு, சோபை, காமாலை.

கபபித்தநாடியிற் காணும் நோய்கள்:—வீக்கம், விஷதோஷம், குளிர் காய்ச்சல், உடல் உளைச்சல், இருமல், சுகை, வாந்தி, சுவாசம், விக்கல், வெகுசுரம், சுரவறட்சி, பாண்டு, இரத்தாதிசாரம், தெஞ் சடைப்பு.

கபவாதநாடியிற் காணும் நோய்கள்:—வயிறு பொருமல், வீக்கம், வாந்தி, விக்கல், வாயுதிரட்சி, வலி, சன்னி, இளைப்பு, இருமல், சோகை, பாண்டு, விடபாகம், விஷசூலை, பக்கவாதம், சுரரோகபிடம், திரிரோய்கள்.

திரிதோஷநாடியிற் காணும் நோய்கள்:—சன்னி முதலியன.

அசாத்திய நாடி:—அசாத்திய நாடி, மரணநாடி முதலியவைகளைக் குறித்து நூல்களில் விசேடமாகக் கூறப்பட்டிருப்பதுடன், ஒரு நாழிகை முதல் ஒரு நாளில் மரணமேற்படும் நாடி முதல், ஒரு மாதம் முதல், ஓராண்டில் மரணமேற்படும் நாடி வரையிலும், மற்றும் பலவிதமாக அசாத்திய மரணநாடிகளைக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். இவற்றையெல்லாம் உணர்ந்து அனுபவிப்பது மிக மிக சிரமமான காரியமாகையாலும், அவற்றையெல்லாம் இங்குக்கூறின் பெருகுமாகையாலும் அவற்றைவிடுத்து அசாத்தியத்தைக் குறிக்கும் சில அடிப்படைக் கொள்கைகளை மட்டும் இங்கு கவனிப்போம்.

'வாதமாய்ப் படைத்து, பித்தவன்னியாய் காத்து, சிலேத்ம சித மாய்த் துடைத்து' என்பதனால் ஆக்கல் இருத்தல் அழித்தல் என்னும் மூன்றொழில்களை முறையே யுடைய வாத பித்த கப நாடிகளை பிரம்ம நாடி, விஷ்ணுநாடி, ருத்திரநாடி என்றும் கூறப்படும். இம் மூன்று நாடிகளுக்கும் முறையே அபானன், பிராணன், சமானன் என்ற மூன்று வாயுக்கள் ஆதாரமாயுள்ளது.

ஆகவே உடலில் உயிர் இருப்பதென்பதை புணர்த்தும் சூரிய னாகிய உடலின் உஷ்ணம், சுவாசம் முதலியவற்றிற்கு மூலகாரண மாயுள்ள பிராணன், வன்னியாகிய பித்தாடியி லடங்கியிருத்தலால், பித்தாடியானது வன்மைகுன்றி மிக அடங்கி இருந்தாலும்; உடலின் எத்தொழிலையும் விகற்பமின்றி சமனப்படுத்துவதற்கு மூலகாரணமா யுள்ள சமானன் கபாடியில் அடக்கியிருத்தலால், கபாடி மிக வன்மையுற்றிருந்தாலும், எவ்விதத்திலும் அசாத்தியத்தையும், உயிரின் கேட்டையும் உணர்த்து மென்பதாம்.

அதாவது உடலின் உஷ்ணத்திற்குக் காரணமாகிய வன்னி யாகிய பித்தாடி குன்றில், உடலின் உஷ்ணமும் இயற்கையாகவே குறைந்துபோவதால் அதன்காரணமாய் குளிர்ச்சியும் சீதத் தன்மை யும் அதைத்தொடர்ந்து ஏற்படுகின்றன. அதாவது சீதத்தின் கூறிய கபாடி வலுக்க இடமேற்படும் என்பதாம். அழிவிற்குக் காரண மாகிய அந்தியத்துக் கபம் வலுக்கில் அசாத்தியமெனக் கூறவும் வேண்டுமோ? ஆகையால் இக்கருத்துக்களைக் கொண்டே, வாதம் பித்தத்தைச் சார்ந்தும், பித்தம் கபத்தைச் சார்ந்தும், கபம் கண்டத் தைச் சார்ந்தும் இருப்பதும், பித்தமடங்க கபமானது இரட்டித்த வாதமுடன் சேர்ந்திருப்பதும், கபம் வலுத்த பித்தத்தை தொடர்ந்து இருப்பதும், பித்தாடி மிகவும் அடங்கியிருப்பதும், கபாடி மிகவும் வலுத்து இருப்பதும், மூன்று நாடிகளும் சேர்ந்து வலுத்தோ, மெலிந்தோ இருப்பதும் அசாத்தியக் குறிகளெனக் கூறப்படும்.

2. ஸ்பரிசம்

பிணியாளரின் தேகத்தைத் தொட்டுப் பார்க்கும்போது அதிக உஷ்ணம் அல்லது அதிக சீதமின்றி சம சிதோஷ்ணமா யிருப்பின் வாத தோஷமென்றும், அதிக உஷ்ணமாயிருப்பின் பித்த தோஷ மென்றும், குளிர்ந்திருப்பின் கபதோஷமென்றும், சிதோஷ்ணம்ன் இடத்திற்கிடம் மாறுபட்டிருப்பின் தொந்த தோஷமென்றும் அறிதல் வேண்டும்.

3. நா

வாத தோஷத்தில் நாவானது முட்போல் கறுத்து வெடித்தும், பித்த தோஷத்தில் நாவானது மஞ்சள் அல்லது சிவந்த நிறத்துடனும், கபதோஷத்தில் நாவானது வெளுத்து நடித்து வழுவழுப்பாயும் தொந்த தோஷங்களில் மேற்படி குணங்கள் கலந்தும் காணப்படும். நாக்கு நீண்டும், பலநிறமாயும், சொல்லு வடிந்துக்கொண்டும், நா பிரண்டு பேசமுடியாமலும், வாயைமறிய முடியாமலும் இருப்பின் அசாத்தியமாம்.

4. நிறம்

வாத தோஷத்தில் தேகம் கறுத்தும், பித்தத்தில் மஞ்சள் அல்லது சிவந்தும், கபத்தில் வெளுத்தும், தொந்த தோஷங்களில் இக்குணங் களின் கலப்பும், சன்னிபாதத்தில் பலநிறமாயும் காணப்படும்.

5. மொழி

வாத தோஷத்தில் சமசத்தமாகவும், பித்த தோஷத்தில் உரப் பாகவும், கப தோஷத்தில் மெலிந்தும், தொந்த தோஷங்களில் இவை களின் கலப்பும் காணப்படும்.

6. விழி

வாத தோஷத்தில் விழியானது கறுத்து நீர் ததும்பியும், பித்த தோஷத்தில் மஞ்சளுடன் சிவப்பு கலந்த நிறத்துடன் கண் கூச்ச மாயும், கப தோஷத்தில் வெண்மையாக நீர் கோர்த்துக்கொண்டு பார்வை மங்கலாயும், தொந்த தோஷங்களில் இவைகளின் கலப்பும் காணப்படும்.

7. மலம்

வாத தோஷத்தில் மலம் கறுத்தும், பித்த தோஷத்தில் மலம் மஞ்சள் அல்லது சிவந்த நிறமாயும், கப தோஷத்தில் வெளுத்தும் சீதங் கலந்த நுரையுடனும், தொந்த சன்னிபாத தோஷங்களில் பல நிறமாயும் காணப்படும்.

8. மூத்திரம்

நீரானது சிறிது சிவந்த நிறத்துடன் சிறுத்து கடுத்து விழுமா யின் வாத தோடமென்றும், மஞ்சள் நிறத்துடன் அற்பமாய் கடித்து விழின் பித்த தோஷமென்றும், வெளுத்த நிறத்துடன் சற்று அதிக அளவாய் விழுமாயின் கப தோஷமென்றும், புகை நிறமாயிருப்பின் வாத பித்தமென்றும், நுரையுடன் கூடியிருப்பின் வாத கபமென் றும், அற்ப மஞ்சள் நிறத்துடன் இருப்பின் பித்த கபமென்றும் கூறப்படும்.

நிறக் குறி:—மூத்திரமானது வெண்மையாகவும், மஞ்சளாக வும், அதிகமாயும் காணப்படின் சுரரோயென்றும், சிவப்பு நிறமா யிருந்தால் தீக்கரோகமென்றும், கறுப்பு நிறமாக இருப்பின் அசாத் திய ரோயென்றும், சவ்வீர நிறமாயிருப்பின் சாதிய ரோயென் றும், கத்த ஜலத்தைப் போலிருப்பின் அரிஷ்ட ரோயென்றும், மிக்க மஞ்சளாக இருப்பின் பித்தாதிக்கமென்றும், சிறிது கருமை நிறமாக இருப்பின் கப ரோயென்றும், ஊர்த்துவபாகத்தில் மஞ்சள் நிறமாயும், அதோபாகத்தில் சிவந்த நிறமாயும் காணப்படின் சன்னிபாதமென் றும் கூறப்படும். மற்றும் மூத்திரத்தில் ரத்தம் கலந்ததுபோல் காணப்படின் அதிசாரரோயென்றும், நெய் துளிகளைப்போல் காணப் படின் அதிசாரரோயென்றும்,

படின், மகோதர சோபென்றும், வசம்பின் மணமும் தயிரின் தன்மையுமாய் காணப்படின் ஆமவாதமென்றும், மஞ்சள் அல்லது குங்கும நிறமாயின் வாத சுரமென்றும் கூறப்படும்.

நெய்க் குறி:—சோபாளி அதிகாலையில் போதும் மூத்திரத்தில் முதல் தாரையும், அந்திய தாரையும் நீக்கி, இடையில் பிடைக்கும் தாரையை ஓர் சுத்தமான தந்திரகம் அல்லது வெள்ளை பாத்திரத்தில் சேகரித்து அசையாமல் ஒரிடத்தில் வைத்து அதன் மேலில் மேற் பாரிசத்தில் ஓர் துளி நல்லெண்ணெயை துடைப்பச் சுப்பலால் எடுத்து விட்டு, அந்த நீரில் காணும் மாறுதல்களைக்கொண்டு சோய்களைக் கண்டறிவதே நெய்க்குறி பரீக்ஷையாம்.

இவ்வாறு பார்க்கும்போது அதில் விட்டதுளி பரவினதுபோல் இருப்பின் வாதரோஷமென்றும், சுருண்டு சுருண்டாகக் கொம்பின் பித்தரோஷமென்றும், முத்துபோல் இருப்பின் அல்லது ஏதேனும் ஓர் உருவமாகத் தோன்றின் சுபரோஷமென்றும் கூறப்படும், மேலும் அந்த நெய்த்துளியானது பரவி நின்றால் சாத்திய மென்றும். மேலாக முட்டை முட்டையாய் கொப்பிளம் கஷ்டசாத்தியமென்றும், விட்ட துளி அப்படியே அழுந்தினால் அசாத்தியமென்றும் அறியவேண்டும்.

மேலும் விட்ட துளியானது ஆமை, நகத்தடி, கலப்பை, எருது, கரி, ஒட்டகம், பன்றி முதலியவற்றின் உருவங்களைப்போல் காணப் படின் அசாத்தியமாம்.

ஆயுதங்கள், கத்தி, வில், கேடயம், உலக்கை, சூலம், கதை முதலிய உருவங்களைப்போல் தோற்றுவதும் விட்ட துளியானது சிதறிடுத்த பொங்குவதும், தெற்று நெழுக்கு நிக்குகளில் பரவுவதும் மரணக் குறிகளாம்.

மருந்து

மருந்துகளின் வகை

மருந்தானது பொதுவாக, உள்மருந்து, வெளிமருந்து என இரு வகைப்படும். உள் மருந்து என்பது உள்ளுக்கு சாப்பிடும் மருந்து களையும், வெளிமருந்து என்பது வெளிப்பிரயோகமாக மேலுக்குப் பயன்படுத்தும் மருந்துகளையும் குறிக்கும் இவை ஒவ்வொன்றும் 32-வகைப்படும்.

உள் மருந்துகள்:—சாரம், சாறு, குடிநீர், கற்கம், உக்களி, அடை, சூரணம், பிட்டு, லடகம், வெண்ணெய், மணப்பாகு, நெய், இரசாயணம், இளகம், எண்ணெய், மாத்திரை, கடுகு, பக்குவம், தேனூரல், நீர், மெழுகு, குழம்பு, பதங்கம், செந்தூரம், நீறு, கட்டு, உருக்கு, களங்கு, சுண்ணம, கற்பம், சத்து, குருதுளிகை.

வெளி மருந்துகள்:—கட்டு, பற்று, ஒற்றடம், பூச்சு. வேது, பொட்டணம், தொக்கணம், புகை, மை, பொடிதிமிர்தல், களிக்கம், கியம், ஊதல், சாகிரபாணம், களிம்பு, நெய், நீர், வத்தி, சுட்டிகை, சலாகை, பலை, களி, பொடி, முறிச்சல், கீரல், காரம், அட்டை விடல், அருவை, கொம்புசட்டல். உரிஞ்சல், குருதிவாங்கல், பீச்சு.

மருந்துகளின் ஆயுள் அளவு:—சாதாரணமாக சில மருந்துகள் சில காலத்திற்குப் பிறகு கெட்டுவிடுகிறது. மற்றும் சில மருந்துகள் பார்வைக்கு நன்றாக இருப்பினும், சில காலத்திற்குப்பின் அவை களின் வீரியம் குன்றியிருக்குமாதலின் அத்தகைய மருந்துகளை வழங்குவதில் பயனில்லை. ஆகையாற்றன் ஒவ்வொரு மருந்துகளுக்கும குறிப்பிட்ட ஆயுள் அளவுகளை ஏற்படுத்தி யிருக்கின்றனர். அவற்றுள் சில முக்கியமான மருந்துகளின் ஆயுள் அளவுகளை மட்டும் இங்கு கூறப்படும்.

சாரம், சாறு, குடிநீர், கற்கம், உக்களி, அடை—இவை ஓர் ஜாமம். சூரணம், பிட்டு, லடகம், வெண்ணெய்—இவைகள் மூன்று நாள்கள். மணப்பாகு, நெய், இரசாயணம், இளகம்—இவைகள் ஆறு நாள்கள். எண்ணெய், மாத்திரை, கடுகு, பக்குவம், தேனூரல், நீர்—இவைகள் ஓர் ஆண்டு. மெழுகு, குழம்பு—இவைகள் ஐந்து ஆண்டும், பதங்கம்—பத்து ஆண்டு, செந்தூரம்—எழுபத்தைந்தாண்டு, நீறு, கட்டு, உருக்கு, களங்கு—இவைகள் நூறு ஆண்டு, சுண்ணம—ஐநூறு ஆண்டு, கற்பம், சத்து, குரு குளிகை—இவைகள் மிக்க ஆண்டுகள். மேற் கூறப்பட்ட கால அளவுக்குப் பின் அம் மருந்துகளைப் பயன்படுத்துதல் கூடாது.

இனி உள் மருந்துகள் ஒவ்வொன்றையும் கூறப்படும்.

சாறு:—இது சாப்பாசையுள்ள மூலிகைப் பொருட்களை இடித்தோ, வகுத்தோ, அல்லது இதர பொருள்களைச் சேர்த்தோ அதினின்று நிரவம்போன்ற சத்தை எடுப்பதாம்.

சுரசம்:—இது முற்கூறப்பட்டபடி எடுத்த சாற்றை சிறிது கடவைத்து எடுத்துக் கொள்வதாகும்.

குடிநீர்:—இது சில சரக்குகளைச் சதைத்து அத்துடன் நீர் சேர்த்து முறைப்படி காய்ச்சி வடித்துக்கொள்வதாம்.

சுற்கம்:—இது சில சரக்குகளை நீர் விட்டு கெட்டிபதமாக அரைத்தெடுத்த விழுதாகும்.

உக்களி:—இது அரிசிமாவு முதலியவற்றுடன் சில மூலிகைச் சாற்றைக் கூட்டி சர்க்கரை முதலியவைகளையும் சேர்த்து களிபோல் கிண்டுவதாம்.

அடை:—இது அரிசி மாவுடன் சில மூலிகைகளைச் சேர்த்து அரைத்து அடைபோல் தட்டி சுட்டு எடுப்பதாம்.

சூரணம்:—சரக்குகளை இடித்து தூள் செய்து வஸ்திரகாயம் செய்து எடுத்த தூளுக்கே சூரணம் என்ற பெயர்.

பிட்டு:—இது கார் அரிசி முதலியவற்றுடன் சில மூலிகைகளையும் சேர்த்து இடித்து பிட்டவியலாகச் செய்தல்.

வடகம்:—சூரணத்துடன் வெல்லம் சேர்த்து பிட்டவியலாகச் செய்து சுட்டிலேயே இடித்து உருண்டைகளாகச் செய்வதே வடகமாம்.

வெண்ணெய்:—வெண்ணெய், அல்லது நெய்யுடன் சில சரக்குகளைச் சேர்த்து உருக்கி நீரில்விட்டு கடைத்து வெண்ணெய்போல் செய்தல்.

மணப்பாகு:—இது சில சரக்குகளை பொழும் வைத்து அல்லது இடித்துப் பிழிந்து சாறுஎடுத்து அத்துடன் சர்க்கரை சேர்த்து தேன் பதத்திற்கு காய்ச்சி எடுப்பதாம்.

நெய்:—நெய்யுடன் சிலசரக்குகளின் தூளையோ, சாற்றையோ சேர்த்து நெய்பதத்திற்கு காய்ச்சி வடிப்பது.

இரசாயணம்:—இது சூரணத்துடன் நெய், தேன் முதலியவை களைக் காட்டிப் பிசரி வைத்துக்கொள்வது.

இளகம்:—சர்க்கரையை பாகு எடுத்த அத்துடன் சூரணங் களைச் சேர்த்து, நெய் தேன் விட்டுப் பிசைந்து எடுப்பதாம். இதனை இலேகியம் எனவும் கூறுவர்.

எண்ணெய்:—எண்ணெயுடன் சரக்குகளின் தூளையோ சாறு கற்கம் முதலியவைகளையோ சேர்த்து, நீரெல்லாம் கண்டி எண்

ணெய் பதத்தில் காய்ச்சி வடிப்பதாம். இதனைத் தைல மெனவும் கூறுவர்.

மாத்திரை:—சரக்குகளை தூள்செய்து கல்வத்திலிட்டு எதேனும் நிரவங்களை விட்டு அரைத்து மெழுகு பதத்தில் சிறு அளவு உருண்டைகளாகத்திரட்டி எடுப்பதே மாத்திரையாம்.

கடுகு:—இது சில சரக்குகளின் சூரணத்துடன் தைலப் பொருள்களைச் சேர்த்து காய்ச்சி கடுகுபோல் திரண்டு வரும் சேறு பதத்தில் எடுப்பதாகும்.

பக்குவம்:—கடுக்காய் போன்ற சில சரக்குகளை பழச்சாறு போன்ற சில நிரவங்களில் போட்டு வைத்து பக்குவப்படுத்துதல்.

தேனூறல்:—இஞ்சி போன்ற சில பொருட்களை தேனில் ஊற வைத்தல்.

தீநீர்:—இது சில பொருள்களை வாலையிலிட்டு எரித்து நிராவகம் போல் இடைக்கும் நீரைச் சேகரிப்பதாம்.

மெழுகு:—சரக்குகளை தூள்செய்து தேன் முதலியன விட்டு அரைத்து மெழுகுபதத்தில் எடுப்பதே மெழுகாம்.

குழம்பு:—சரக்குகளை அரைத்தோ, எரித்தோ குழம்பு பதத்தில் எடுப்பது.

பதங்கம்:—சில சரக்குகளை ஓர் சட்டியிலிட்டு மேல்சட்டி மூடி சீலைசெய்து எரித்து ஆறினபின்பு மேற்சட்டியில் ஒட்டியுள்ள தூளை சுரண்டி எடுத்துக்கொள்வதே பதங்கமாம்.

செந்தூரம்:—இது சில சரக்குகளை அரைத்தோ, எரித்தோ, புடமிட்டோ சிவப்புநிறத் தூளாகச் செய்வதாம்.

நீறு:—இது சில சரக்குகளை அரைத்தோ, எரித்தோ, புடமிட்டோ வெண்மைநிறத் தூளாகச் செய்வதாம். இதனை பற்பமெனவும் கூறுவர்.

கட்டு:—இது சில சரக்குகளை ஒட்டிலிட்டு அடுப்பிலேற்றி சில நிரவங்களைக்கொண்டு சுருக்கு கொடுத்து கெட்டி படுத்துவதாகும்.

உருக்கு:—இது சில சரக்குகளை மூசையிலிட்டு ஊதி உருக்கி சாய்ப்பதாகும்.

களங்கு:—இது உலோகங்களுடன் பாஷாணாதி சரக்குகளை சேர்த்து முன்போல் உருக்கி எடுப்பதாகும்.

சுண்ணம்:—இது சில சரக்குகளை காரமுடைய நீரீர் முதலியவை களால் அரைத்து புடமிட்டு அல்லது ஊதி சுண்ணம்புபோல காரமுடைய மருந்தாகச் செய்தல்.

கற்பம்:—இது சில மூலிகைப் பொருட்களையாவது அல்லது மூப்பு போன்ற சில முடிவுபெற்ற பெரும் மருந்துகளையாவது பத்திய

விதிப்படி முறையே உண்டு வருதலாம். இதனை சாயகற்பம் எனவும் கூறுவர். இது உடலை நெடுநாள் அழியாமல் இருக்கச் செய்யும்.

சத்து:—இது மூலிகைப் பொருள்கள், உலோகம், உபரசம் முதலியவற்றினின்று முறைப்படி அவற்றின் சத்தை எடுப்பதாம்.

குரு குளிகை:—இது இரசத்தை மூலிகைகள் கொண்டு அரைத்தோ, ஜெயநீர்கள் கொண்டு சருக்கிட்டோ, முப்பு முதலிய வைகளைச் சேர்த்தோ கட்டி மணியாக்கி, முறைப்படி சாதனைகளைச் செய்து தெருப்புக்கு ஓடாதபடி செய்தலாம். இது வாதம் முதல் பல சித்தகளுக்குப் பயன்படும்.

மருந்து செய்யும் விதிகள்

இதில் மருந்துகளைச் செய்யும்போது கவனிக்கவேண்டிய சில முக்கியமான விதிகளையும், செய் பாகங்களையும் கூறப்படும்.

மருந்துகளைச் செய்யும்போது சரக்குகளைக் கூடியமட்டும் நவ தானியமாகவும், விரியன் சூன்முதலாகவும் தேர்ந்தெடுத்து உபயோகிக்க வேண்டும். வாய்விளங்கம், நிப்பிலி, வெல்லம், தனியா, தேன் முதலிய பொருள்கள் சற்று பழகினதாக இருப்பின் நன்று. கூடாதோடை, சீந்தில், நிலவேம்பு, கண்ணிவேர், அகலகந்தி, கிலுப்பூசனி போன்ற சரக்குகள் பச்சையாக இருப்பின் நன்று. மூலிகைகளின் அங்கத்தைக் குறிப்பிடாத விடத்தில் அதன் வேர் அல்லது சமூலத்தை சேர்ப்பதுதான் முறை. ஏதேனும் கூறப்பட்ட சரக்குகள் கிடைக்கப் பெறுவிடில் அதே குணத்தையுடைய வேறு சரக்கை அதற்குப் பதிலாகச் சேர்த்துக்கொள்ளலாம். சரக்குகளின் அளவு கூறப்படாத விடங்களில் அவைகளைச் சமனளவாகக் கொள்ளவும். ஒவ்வொரு சரக்கையும் மருந்துகளில் சேர்க்குமுன்பு சுத்தி செய்து சேர்க்கவேண்டும்.

சுத்தி செய்தல்:—சரக்குகளையும் வழக்கு முன்பு முறைப்படிச் சுத்திசெய்து வழங்குவதே வைத்திய முறையாம். சுத்தி என்பது சுண்டு கழுவுதல், தடைத்தல், தாயதாகப் பார்த்தெடுத்தல் முதலிய செய்கைகளைமட்டுமே குறிப்பிடுவதல்ல. சரக்குகளின் பண்பையும் தானவு மாற்றி வைத்தியத்துக்குத் தன்மையாய்ச் செய்வதை கண்ணுணர வேண்டும். மருந்து முறைகளில் சரக்குகளின் சுத்தி மிக இன்றி யமையாத தென்பதையும், இதன் தவரால் கோரிய பலன் கிட்டாமல் போவதுடன் உயிருக்கும் தீங்கை விளைக்குமென்பதை அறிதல் வேண்டும்.

மருத்துவத்துறையிலே பொருட்களின் சுத்தி என்பது ஓர் சரக்கின் இதர சரக்குகளின் கலப்பை, மண் தூசு முதலிய மலினங்களை, தோல் அங்கங்களை உடலுக்கு நிலையை விளைக்கு

மனவு விரியமோ விஷக் குணங்களோ, இல்லாமல் படியும், அதே சமயத்தில் அச்சரக்குகள் செய்கை குணம் முதலியன முற்றும் சூன்றுமலும் மாறுமலும் இருப்பதுடன், அச்சரக்கின் இயற்கைப் பண்பிற் கேற்றபடி உடலில் தொழில் நடாத்தி நன்மை புரியத் தக்கதாயும் அதனைத் தாய்மைப்படுத்தி நிருத்தி யமைக்கும் முறையுமாம்.

இதைப்பற்றி விபரமாகச் சுத்தி முறைகள் என்னும் தலையங்கத்தின் கீழ் கண்டுணர்க.

சாறு எடுத்தல்:—சாப்பசையுள்ள மூலிகைப் பொருட்களினின்று நீரவம் போன்ற சத்தை எடுப்பதே சாறு எடுத்தல். தளிர் போன்ற சில மூலிகைகளை இடித்துப் பிழிந்தால் சாறு கிடைக்கும். இவ்வாறு இடித்துப் பிழிந்தால் சாறு கிடைக்கப்பெறாத சரக்குகளை பிட்டவியலாக வேகவைத்தோ, அனலில் வாட்டியோ, நீர் விட்டு அரைத்தோ, வேறு சரக்குகளை உபாயமாகச் சேர்த்தோ சாறு எடுக்கவேண்டும். உதாரணமாக, ஆடாதோடையை அவித்தும், தும்மட்டிக்காயை அனலில் வெதுப்பியும், வெள்ளைப்பூண்டை அரைத்து சீலையிலூட்டி வதக்கியும், இஞ்சியை நீர்விட்டு அரைத்தும், தேங்காய், புங்கம்வேர் முதலியவைகளைத் திருகியும், கற்றுழை போன்ற குழகுழப்பான பொருட்களில் கடுக்காய்போன்ற துவர்ப்பு சூரணங்களைச் சேர்த்தும் கசக்கிப் பிழிந்து சாறு எடுக்கப்படும்.

வஸ்திரகாயம் செய்தல்:—ஓர் பாத்திரத்தின் வாய்க்கு மெல்லிய மல் துணியைக் கட்டி, அதன்மீது சூரணம் முதலிய இடித்தெடுத்த தூள்களைத் தூவி லகையால் தேய்த்து அடியில் கிடைக்கும் மெல்லிய சன்னமான தூள்களை எடுத்துக்கொள்ளல், இதனை வடிகட்டல், சல்லித்தல் எனவும் கூறப்படும்.

அரைத்தல்:—மருந்துச் சரக்குகளைத் தூள்செய்து கல்வத்திலிட்டு அரைக்கும்போது மூலிகைச்சாறு முதலிய திரவங்களைத் தனியாக விட்டு குழம்பு பதத்திலேயே குறிப்பிட்ட மணி நேரம் வரையில் அரைக்கவேண்டும். அவ்வாறு அரைத்து வரும்போது குழியின் ஓரங்களிலும், கல்வத்தின் ஓரங்களிலும் படிந்துள்ள மருந்துகளை அவ்வப்போது சுண்டியால் சுண்டிப்போட்டு, மருந்துகள் யாவும் ஒருமிக்கக் கலந்து மைபோலாகும் வரையில் அரைக்கவும்.

சுகப்பாகவும், புள்ளிகள் விழாதும், அதிக குடலாகவும் இல்லாமல் மழமழப்பாகவும், கருப்புநிறக் கல்லினால் செய்யப்பட்ட கல்வமே மருந்தை அரைப்பதற்குச் சிறந்ததாம்.

வில்லை செய்தல்:—சரக்குகளைக் கல்வத்திலிட்டு எதேனும் திரவம்விட்டு அரைத்ததை மெழுகுபதத்தில் வழித்தெடுத்து அகலில் அடைபோல் வில்லைபோலச் செய்வதே வில்லை செய்வதாம். சரியான

மெழுகு பதத்தில் சாண்டி எடுக்காவிடில் வில்லை செய்ய வராது. வில்லைகளில் வெடிப்பு ஏற்பட்டு உடைந்துவிடும். ஆகவே முறைக் கேற்றபடி ஒரே வில்லையாகவோ, அல்லது பல சிறு வில்லைகளாகவோ வெடிப்புகள் இல்லாதபடி செய்து நன்றாய் உலர்ந்த பின்பே புடமிடவேண்டும். இன்றேல் மருந்து கருக்கும்.

உலர்த்தல்:—சரம் போகச் செய்வதே உலர்த்தல் எனப்படும். மருந்து முறைகளில் உலர்த்தவேண்டியவைகள் பலவற்றையும் கூடு மானவரையில் வெய்யிலில் வைக்காமல் நிழலில் வைத்து உலர்த்தி எடுப்பதே நன்று.

கவசஞ் செய்தல்:—மூலிகைகளையோ அல்லது மற்ற சரக்கு களையோ அரைத்து சற்ற பதத்தில் எடுத்து, குறிப்பிட்ட சரக்கு அல்லது மருந்து வில்லைக்கு மேலே சுற்றுமுழுங் சூழ்ந்திருக்கும்படி கெட்டியாக பூசி அமைக்கும் முறையே கவசஞ்செய்தல் எனப்படும். இவ்வாறு கவசஞ் செய்வதில் வெடிப்புகள் ஏற்படாவண்ணம் பார்த்தல் மிக அவசியமாகும்.

சீலைமண் செய்தல்:—நல்ல களிப்புள்ளதும், மணல் கல் முதலி யன வகைப்பற்றதமான செழிப்பான களிமண்ணைக் கொண்டுவந்து சிறிது நீர் தெளித்து கெட்டி பதமாக அரைத்து, அதன் பொருந்து வாய்க்கு சந்தில்லாமல் பூசி, பின்பு நன்கு விறற்கடை அகலமுள்ள கனச் சீலைத்துண்டுகளில் களிமண்ணைத் தடவி அதை பொருந்து வாய்க்கு சுற்றி கெட்டிப்படுத்துவதே சீலைமண் செய்தல் எனப்படும். சாதாரணமாக ஏழு சீலைமண், அதாவது ஏழு சுற்று செய்வது வழக்கம். செருப்புக்குப் புகைத்து போகுஞ் சரக்குகளைச் சீலை செய்யும்போது மிகவும் வலிவாக இருக்குமபொருட்டு உளுந்தம் மாவையோ, அல்லது சுண்ணாம்பும் வெல்லமும் சேர்ந்த கலவையை யோ கெட்டியாக சீலையில் தடவி சீலை செய்வதுண்டு.

அகலிலடக்கல்:—வாய் பொருந்தமான இரண்டு மண் அகல் களைச் சேகரித்து வாய்புறத்தை நன்றாகத் தேய்த்து சந்தில்லாமல் பொருந்தம்படி பார்த்து, அதில் ஓர் அகலில் மருந்துச்சரக்கு அல்லது மருந்துவில்லையை வைத்து மற்றொரு அகலால் பொருந்த மூடுதலையே அகலிலடக்கல் எனப்படும்.

புடமிடல்:—சாதாரணமாக சீலை செய்த மருந்தை விறட்டி களின் இடையில் வைத்து தீயிட்டு வெந்தறியபின்பு எடுப்பதே புடமிடுதல் எனப்படும். இதில் புடம்போடவேண்டிய விறட்டிகளில் பாதி பாகத்தை தரையில் சற்று பறவியபடியும் ஒன்றன்மீது ஒன்றுமே யும் அடுக்கி அதன் நடுவில் சீலைசெய்த மருந்தை வைத்து அதன்மீது மிகுதியுள்ள பாதிபாகம் விறட்டிகளையும் பிட்டு, சுற்றுமுழும் சூழ செருக்க வட்டமாக அடுக்கி சுற்றுமுழும் தீயிடவும். புடமானது வெட்ட வெளியாகவும், சுற்றுமுட்டம் அதிகமாக இல்லாததுமான

இடத்தில் போடுதல் நல்லது. பூமியில் குழிதோண்டி அதில் புட மிடுவது சிறந்த முறையாகும்.

ஒரு விரட்டியில் புடமிடுவதை காடை புடமென்றும், மூன்று விரட்டியில் புடமிடுவதை கவுதாரி புடமென்றும், பத்து விரட்டியில் புடமிடுவதை குக்குட புடம் அல்லது கோழிபுடமென்றும், ஐம்பது விரட்டியில் புடமிடுவதை வராக புடமென்றும், நூறு விரட்டியில் அல்லது ஒரு முழ சதுரமும், ஒன்னரை முழ ஆழமும் உள்ள குழி தோண்டி அதில் சிறிய அடுக்கிய விறட்டியில் வைத்து புடமிடுவதை கஜபுடமென்றும் கூறப்படும்.

மற்றும் வெய்யலில் வைத்தெடுப்பதை சூரியபுட மென்றும், உமியின் இடையில் வைத்து கொளுத்தி எடுப்பதை உமிபுடமென் றும், நானிபக் கவஞ்சியத்தின் இடையில் வைத்தெடுப்பதை நெற் புடம் அல்லது நானியப் புடமென்றும், பூமியில் புதைத்து வைத்து எடுப்பதை பூமிபுட மென்றும், மணலின் இடையில் வைத்து விறட் டியை வைத்து தீயிட்டு எடுப்பதை மணல் மறைவு புடமென்றும், பனியில் வைப்பதை பனிப்புடமென்றும் வழங்கப்படும்.

புடமானது நன்றாய் ஆறினபுன்புதான் பிரித்து மருந்தை எடுக்க வேண்டும். சூட்டுடன் எடுக்கக்கூடாது. புடத்தினின்று எடுக்கப் பட்ட மருந்தினமேல் காணும் சீலைமண் இவற்று காணுமாயின் தீயின் அளவு சரியான அளவென்றும், சீலைமண் உதிர்ந்து காணுமாயின் தீயின் அளவு அதிகமென்றும், சீலைமண் கறுத்து காணுமாயின் தீயின் அளவு குறைவு என்றும் அறிக.

ஒருமுறை புடமிட்டெடுத்த மருந்து வெண்மையாகவோ அல் லது சிவப்பாகவோ இல்லாமல் கருப்பாகவும்; மிருதுவாக இல்லாமல் கடினமாகவும் இருப்பின், முன் அரைத்த மூலிகைச் சாற்றிலேயே மீண்டும் அரைத்து, நல்ல நிறத்தையும், மிருதுத் தன்மையும் அடையும் வரையில் சில புடமிடவேண்டும்.

எரித்தல்:—விறகுகளைக் கொண்டு எரித்தல், தீயின் அளவைக் கொண்டு மூன்று வகையாகப் பிரிக்கப்படும். இரண்டு விறற்கடை கனமுள்ள ஒரு விறகைக்கொண்டு தீபத்திற்கு ஒப்பான சுடர் எழும் படி எரித்தல் தீபாக்கினி என்றும், மேற்குறிப்பட்டபடியே இரண்டு விறகுகளைக்கொண்டு, தாமரை மொட்டைப்போல் தீபறவ எரிப்பதை கமலாக்கினி யென்றும், மேற்குறிப்பிட்டபடியே மூன்று அல்லது அதிக விறகுகளைக்கொண்டு தீயானது சுற்றுமுழும் சூழ நன்கு எரிப்பது காடாக்கினி யென்றும் கூறப்படும்.

ஒன்றும் கூறுதவிடத்து சிறுதீயாக எரித்தலே முறையாம். சில மருந்துகளில் குறிப்பிட்ட சில விறகுகளைக்கொண்டு எரிப்பது முண்டு.

வறுத்தல் :—வறுக்கவேண்டிய மருந்துகளை சட்டியிலோ கடாயிலோ போட்டு அடுப்பிலேற்றி எரித்து கரண்டி அல்லது சில வேர்களைக் கொண்டு நேர்த்த பதமாகும் வரையில் வறுக்கவேண்டும். இவ்வாறு செய்யும்போது மருந்துகள் மேலே தெரிக்காமலும், மருந்தின் புகை மேலே தாக்காமலும் தாமாய் இருந்து கரண்டி கொண்டு வறுத்தலருதல் வன்று.

உலையிலிட்டு ஊதல் :—இது உலோகம் முதலிய கடினமான பொருட்களை சுண்ணம் முதலியன செய்யும்பொருட்டு மூசையிலிட்டு வாய்மூடிச் சீலைசெய்து கன்னுள் உலையில் வைத்து, கரிபோட்டு மூசையழுக மும்முறை ஊதி எடுப்பதுண்டு.

சுண்ணத்திற்கு ஒரு கருத்திகொண்டும் களங்கு உருக்கு முதலிய வைகட்கு இரு கருத்திகொண்டும், சத்து முதலியவைகட்கு நான்கு கருத்திகொண்டும் ஊதியெடுப்பது முறை. இத்தகைய காரியங்களுக்கு வஜ்ஜிர மூசையைப் பயன்படுத்தல் வன்று.

வஜ்ஜிர மூசை செய்தல் :—சாம்பல், புற்று மண், இரும்புச் சிட்டம், வெண்காக்கல் (அண்டக்கல்), இவைகளைச் சம எடையாக எடுத்து, அத்துடன் பொடியாகக் கத்தரித்த தலைமயிர் சிறிது சேர்த்து ஆட்டுப்பாலிலிட்டு வேகவைத்து உலர்ந்திப் பொடித்துக் கல்வத்திலிட்டு சுண்ணநீர் விட்டு இரண்டு ஜாமம் வன்று அரைத்து மெழுகு பதத்தில் மூசையும் மூடியும் செய்து உலர்த்தவும். இதுவே வஜ்ஜிர மூசை எனப்படும். இத்தகைய மூசைகளில் இரசம், உபரசம், பாஷாணம் முதலிய சரக்குகளை வைத்து ஊத வேண்டும்.

உருக்குதல் :—அயம், செம்பு, வெள்ளி, தங்கம் முதலியவைகளை மூசையிலிட்டு உருக்கும்போது சிறிது வெண்காரத் தண்ணீர் சேர்த்து உருக்க வன்று உருகும். ரசகம், வங்கம் முதலிய எளிதில் உருகும் சரக்குகளுக்கு வெண்காரம் சேர்க்க வேண்டியதில்லை. ஆனால் ரசகம் முதலிய சரக்குகளை சுத்திசெய்யும் பொருட்டு உருக்கி மூலிகைச்சாறு முதலியவைகளில் சாய்க்கும்போது தாமாக இருந்து சாய்க்கவேண்டும். இன்றேல் மருந்து சிறியெழுத்து உடலில்பட்டு ஆபத்தை விளைவிக்குமென்பதை கவனத்தில் வைக்கவும்.

தொந்தித்தல் :—எதேனும் இரண்டு சரக்குகளை ஒன்றறக் கலக்கச் செய்வதற்கே தொந்தித்தல் வன்று பெயர். இது பெரும்பாலும் இரசத்துடன் வங்கம் கூடுல்லது ரசகத்தைத் தொந்தித்தலைக் குறிக்கும். அவ்வாறு தொந்திப்பதில் முதலில் ரசகம் அல்லது வங்கத்தை ஓர் இரும்பு கரண்டியிலிட்டு நீயிலிட்டு உருக்கி, நிலவம் போல் ஆடுஞ் சமயத்தில் கீழிறக்கி சற்று சூடாறி உறையும் பதத்தில் ரசத்தை அதிலிட, ரசகம் அல்லது வங்கம் ரசத்தை கிரகித்துக்கொண்டு வெட்டையாகும். அதை சூடாயிருக்கும்போது இரசத்தை சேர்த்தால் இரசமானது உஷ்ணத்தினால் ஆவியாகி சிறிது விரயமென்

பதையும், வன்றை உறைத்துவிட்டால் இரசத்தைக் கிரகிக்காதென்பதையு மூணரவேண்டும்.

இரசத்துடன் கந்தகத்தை தொந்திப்பதாயின் முதலில் கந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துக்கொண்டு, பின்பு இரசத்தைச் சேர்த்து அரைக்க அவை இரண்டுஞ் சேர்ந்து கருப்பு நிறமான தாளாகும். இதில் ரசம் ஒரு தெரியாமல் மறைந்து (மடிந்து) இருக்கும்.

சுருக்கு கொடுத்தல் :—ஓர் வாயகலமான மண் சட்டியையாவது; அல்லது அச் சட்டியின் மேலே சுமார் இரண்டு அங்குலம் வட்டமுள்ள தவாரஞ்செய்து அதன்மீது பொருந்தும்படியாக ஓர் அப்பிரகத் தகட்டை வைத்து, ஓரங்களில் உளுந்தை அரைத்து சந்தில்லாமல் தடவி காயவைத்ததையாவது, அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்து, அப்பிரகத் தகட்டின்மேல் சுருக்கு கொடுக்கவேண்டிய சரக்கை வைத்து, மூலிகைகளுக்குத் தக்கபடி மூலிகைச்சாறு, ஜெயநீர் முதலிய வதேனும் ஓர் திரவத்தை ஓர் சிறு உச்சிக் கரண்டியினல் எடுத்து சரக்கின்மீது சிறிது சிறிதாகவிட்டு, அது சுண்ட சுண்ட மேலுங் கொஞ்சங் கொஞ்சமாக அவ்வப்போது விட்டுக்கொண்டே வந்து, மருந்தானது காந்தமும், அடி பிடிக்காமலும் இருக்கும் பொருட்டு, கரண்டியினல் அடிக்கடி புரட்டிக் கொண்டுவர வேண்டும். இவ்வாறு குறிப்பிட்ட மணி நேரமோ அல்லது குறிப்பிட்ட அளவு சாறு முதலியவைகள் தீரும் வரையிலோ, அல்லது அச்சரக்கு கட்டு அல்லது மெழுகாகும் வரையிலோ செய்து எடுத்துக்கொள்வதுண்டு. இதனையே சுருக்கு கொடுத்தல் என்பர். இது பெரும்பாலும் சரக்குகளை கட்டு அல்லது மெழுகு செய்யும் பாகங்களில் பயன்படும்.

கியாழ விதி :—சாதாரணமாக கியாழம் போடவேண்டிய சரக்குகளை பஞ்சுபோல் இடித்து ஓர் பாண்டத்திலிட்டு, சரக்குகளுக்குத் தக்கபடி நீர் சேர்த்து எட்டிலொன்றாய்க் காய்ச்சி வடிப்பதே கியாழ முறையாம். எளிதில் சத்து இறங்கக்கூடிய சரக்குகளின் கொஞ்சமாக நீர் சேர்த்து எரிப்பதும், கடினமான சரக்குகளாயின் அதிகமாக நீர் சேர்த்து சில மணி நேரம் ஊறவைத்து பின்பு காய்ச்சுவதும், வெந்நீரில் சரக்கின் சூரணத்தைப் போட்டு சில மணி நேரஞ் சென்றபின்பு ஊறல் கியாழமாக எடுத்துக்கொள்வதும், காய்ச்சப்பட்ட கியாழத்தில் தேவையான அளவு எடுத்துக்கொண்டு அதில் நீரைவிட்டு அடுப்பிலேயே வைத்திருந்து அடை கியாழமாகவும் பல முறைகள் செய்வதுண்டு. எத்தனைய கியாழமாகவும் செய்யினும் மருந்தின் ஆவி போகாதபடி வாயை மூடி எரிப்பதுடன் காய்ச்சும் முறைகட்கெல்லாம் மண் பாண்டத்தையே உபயோகிக்க வேண்டுமென்பதை ஞாபகத்தில் வைக்கவும்.

கியாழத்துடன் சர்க்கரை அல்லது தேன் கூட்டவேண்டு மாயின் வாததேகிக்கு காலில் ஒரு பாகமும், பித்த தேகிக்கு எட்டி லொருபாகமும், கபதேகிக்கு பதினறில் ஒரு பாகமும் சேர்த்து வழங்கலாம்.

சூரண விதி:—சூரணம் செய்ய வேண்டிய சரக்குகளை ஒவ் வொன்றையும் தனித்தனியே சுத்திசெய்து, இடித்து, எடைபோல நிறுத்தெடுத்த பிறகு ஒன்று சேர்த்து ஒருமிக்கக் கலந்து வஸ்திர காயம் செய்து லைத்துக்கொள்ளவேண்டும். எல்லா சரக்குகளையும் ஒன்றாக சேர்த்து இடித்தல் கூடாது. பொதுவாக எல்லா சூரணங் களையும் பலில் பிட்டளியலாக வேகலைத்து எடுத்தல் நன்று. சூர ணத்துடன் சர்க்கரை சேர்ப்பதாயின் சமன் எடை அல்லது இரண் டெடை சேர்க்கலாம். ஆனல் வேண்டியபோது அவ்வப்போது சர்க்கரை சேர்த்தருந்தல் சிறந்தது. சூரண முறைகளில், மிளகு, திப்பிலி, சீரகம் போன்ற சரக்குகளை பொன்வறுவலாக வருத்தும், பெருங்காயம், வெண்காரம் போன்ற சரக்குகளைப் பொரித்தும், இஞ்சி முதலிய சரக்குகளை நெய்யில் வருத்தும், மயிலிறகு, கம்பளி, பட்டு முதலியவைகளை கருக்கியும் சேர்க்கவேண்டும்.

இலேகிய விதி:—சூரணத்தின் எடைக்கு இரண்டு பங்கு சர்க்க ரையும். சர்க்கரையின் எடையில் அரைபாகம், நெய்யும், அதில் அரை பாகம் தேனும் சேர்த்து லேகியம் செய்வது முறை. சர்க்கரையுடன் நான்கு பங்கு நீர் சேர்த்து காய்ச்சவேண்டும். சில முறைகளில் நீருக்குப்பதிலாக பால் அல்லது குடிநீர்கள் சேர்ப்பதுமுண்டு.

முதலில் சர்க்கரையுடன் நீர் அல்லது பாலை நான்கு மடங்கு சேர்த்து அடுப்பிலிட்டு சிறுதீயாக காய்ச்ச பாகு பதம் வரும். அதா வது ஓர் துளி நீரில் விட அத்துளி ஜலத்தில் கரையாமல் அப்படியே நிற்கவேண்டும். அல்லது கை விரல்களில் தொட்டு எடுக்க நூல் போல் எழும். இதுவே சரியான பாகுபதமென அறிந்து கீழிறக்கி அதில் சரக்குகளின் சூரணத்தைத் தூவி நெய் சேர்த்துக் கிண்டி ஆறினபின்பு தேன் சேர்த்துப் பிசைந்து லைத்துக் கொள்ள வேண்டும்.

இலேகிய முறைகளில் பருப்பு வகைகளைச் சேர்ப்பதாயின் அவைகளை நீர்விட்டு அரைத்து பால் பிழிந்து சர்க்கரையுடன் சேர்த்து காய்ச்சுவதும், கஸ்தூரி, குங்குமப்பூ, முதலிய வாசனைத் திரவியங்களைச் சேர்ப்பதாயின் லேகியம் சூடாறிவருஞ் சமயத்தில் சேர்ப்பதும் முறையையாம்.

மாத்திரை விதி:—மாத்திரை செய்யும்போது அதில் சேரும் ஒவ் வொரு சரக்கையும் தனித்தனியே பொடித்து பிறகு முறைப்படி ஒன்றன்பின் ஒன்றாய் சேர்த்து கலக்க நன்கு அரைத்து மெழுகு பதத்தில் திரட்டி எடுத்த அளவின்படி மாத்திரைகள் செய்து நிழலி

லுலர்த்த வேண்டும். சரக்கானது கல்வத்திலும் குழவியிலும் ஒட் டாமல் திரண்டுவரும். இதுவே சரியான மெழுகு பதம் அல்லது மாத்திரை திரட்டும் பதமென அறிக.

எதேனும் ஓர் முறையில் இரசம் சேர்வதாக இருப்பின் முதலில் அதைக் கல்வத்திலிட்டு அத்துடன் அதை மடிக்கக்கூடிய கந்தி, முத லிய சரக்குகளைச் சேர்த்து அரைத்து மடித்துக்கொண்டு பிறகு மற்ற சரக்குகளைச் சேர்க்கவேண்டும். மற்றும் கடினமான சரக்குகளை முதலில் சேர்க்கவேண்டும். வாளம் சேர்ப்பதாயின் கடைசியில் சேர்த்து அரைக்கவும். மற்றும் கல்நூரி, அம்பர், பச்சைக் கற்பூரம் முதலிய வாசனைச்சரக்குகளையும் மாத்திரை பதம் வருவதற்குச் சற்று முன்பாக சேர்த்தல் முறை.

மணப்பாகு விதி:—இதனை சர்பத் எனவுங்கூறுவர். இது சாதா ரணமாக பழச்சாறுகள், மூலிகைப் பொருட்களின் சாறு அல்லது குடிநீர் முதலியவற்றுடன் சமன் அளவு சர்க்கரை சேர்த்து காய்ச்சி ஒருவித கல்ல மணத்துடன், தேன் போன்ற இளகிய பாகு பதத்தில் எடுத்துக் கொள்ளப்படும். மிக புளிப்பு, அல்லது கைப்பு பொருள் கள் சேர்வதாயின் சர்க்கரையை இரண்டு பங்காகச் சேர்த்து செய்யலாம்.

கிருத விதி:—சரக்கின் எடைக்கு இரண்டு பங்கு பசு நெய் சேர்த்து காய்ச்சி நெய்யிலுள்ள ஈரப்பசைகள் நீங்கி, தூசைகள் அடங்கி, நல்ல மணம் வீசும்பதத்தில் வேறு பாண்டத்தில் வடித்துக் கொள்ளவேண்டும்.

தைல விதி:—சாதாரணமாக தைலம் அல்லது எண்ணெய் என் பது சில சரக்குகளின் சூரணம், கற்கம், குடிநீர், மூலிகைச்சாறு முதலியவற்றுடன் பாகத்திற்கு தக்கபடி நல்லெண்ணெய் அல்லது ஆமணக்கு நெய் சேர்த்து சிறு தீயில் காய்ச்சி, வண்டல் மெழுகு பதம் வருதல், அல்லது எண்ணெயில் ஈரப்பசையின்றி சிடுசிடுப்பு இல்லாமல் இருக்கும் பதத்தில் வடித்துக்கொள்வதாம்.

மூலிகைச் சாறுகள், மென்மையான சரக்குகளின் குடிநீர் இவைகளுடன் சமன் அளவு எண்ணெயையும், கடினமான சரக்கு களின் குடிநீர்கள், பால் முதலியவைகளுடன் அரைபாகம் எண் ணெயையும், சில சமயம் சில தனிச்சரக்குகளின் தூளுடன் நான்கு அல்லது எட்டு பங்கு எண்ணெயையும் சேர்த்து காய்ச்சுவது வழக்கம்.

இவ்வாறு தைலங்காய்ச்சும்போது வண்டலானது அப்படியே நீருடன் சேருமபோல் இருப்பின் அதை மிருது பாகமென்றும், வண்டல் மெழுகுபோல் நிரண்டு, ஆனல் கையில் ஒட்டினல் அதை கிக்கு பத மென்றும், வண்டலானது மணலைப்போல் இருப்பின் கரகரப்பு பத

மென்றும், இவை முறையே வாத பித்த கப ரோகங்களுக்கு சிறந்த தென்றும் நூல்களில் கூறப்பட்டுள்ளது.

அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ முதலிய வாசனைப் பொருட்கள் தைலத்தில் சேர்க்க வேண்டுமாயின், ரூடாறி வடிகடத்தில் வடிக்கும்போது சேர்க்கவேண்டும்.

ஒரு முறை காய்ச்சி எடுக்கப்பட்ட தைலத்துடன் மீண்டும் சரக்குகளை மட்டும் சேர்த்து காய்ச்சுவது மடக்குத் தைலமெனப்படும். இவை மிகவும் விரியமுள்ளதாகும். சில சிறந்த தைலங்களை சில குறிப்பிட்ட விருஷங்களைக் கொண்டு எரிப்பதுடன் காய்ச்சப்பட்ட தைலத்தை சில நாட்கள் நெற்குவியலில் வைத்தெடுத்து வழங்கப்படும்.

மற்றும் வெய்யிலில்வைத்தல், உருக்குதல், கொளுத்தல், புடமிடுதல் முதலியவற்றாலும் சில தைலங்கள் தயாரிப்பதுண்டு. ஆகவே தைலமானது பிறப்பின் காரணமாய் சூரியபுடதைலம், உருக்குத் தைலம், கடாதைலம், கொதித்தைலம், சூழித்தைலம், மண்ணைலம், நீர் தைலம், மரத்தைலம், பொறித்தைலம், நீராம்தைலம், ஸ்நேஹதைலம, ஆவிதைலம என 12 வகைப்படும்.

ஆனால் இத்தகைய தைலங்கள் யாவையும் பயனை நோக்கி ஐந்து வகையாகப் பிரித்துள்ளனர். சிரஸிற்கிடுவதை மூடித்தைலமென்றும், உள்ளுக்கு அருந்துவதை குடித்தைல மென்றும், மேலுக்கு உடலில் தேய்த்துப் பிடிப்பதை பிடித்தைல மென்றும், கவத்துவாரங்களில் செலுத்துவதை நஸ்யத்தைலமென்றும், விரணங்களுக்குப் பயன் படுத்துவதை சேஷத்தைலமென்றும் கூறப்படும்.

இவைதன்றி சில பொருட்களைப் பொடித்து எண்ணையுடன் கலந்து வைத்துக்கொள்வதையும் தைலமென வழக்கில் கூறப்படுகின்றது.

பற்ப செந்தூர விதி:—பற்ப செந்தூரங்கள் கல்வபடி முடிய வேண்டுமானால், கன்று அரைத்தல், வில்லேஷ்டி சூரணமின்றி புலர்த்தல், பொருத்தமான அகலிலடக்கல், கவசம் செய்தல் அல்லது மண்சீலை செய்தல் முதலியவைகளை உலுவாக செய்தல், மருந்துக்கு தக்கபடி சரியான அளவு விரட்டிகளைக்கொண்டு புடமிடல், எரித்தல், வறுத்தல் முதலிய காரியங்களில் மிக்க கவனத்தைச் செலுத்தி செய்தல் வேண்டும்.

அயம், காந்தம், மண்டூரம், அப்பிரகம் முதலியவைகளைப் பற்ப செந்தூரங்கள் செய்யும்போது கல்வ அரைப்பு கொடுப்பதுடன் அதிகமான விரட்டிகளைக் கொண்டு புடமிடவேண்டும். இவைகள் கல்வ பக்குவமடைய குறைந்தது 10-புடங்களாவது போடவேண்டும். முடிவுபெற்ற மருந்தில் சிறிதெடுத்து ஜலத்தில் போட்டுப்

பார்க்க அது கீழில் அழுந்தாமல் மிதக்கவாவது கரையவாவது வேண்டும். அத்தகைய மருந்துதான் கல்வ குணத்தைத் தரும். மேலும் இத்தகைய மருந்துகள் எத்தனைக் கெத்தனை புடம் போடப்படுகின்றதோ அத்தனைக் கத்தனை கல்வ பலனைத் தரும்.

தங்கம், வெள்ளி, தாம்பரம், முதலியவற்றைப் பற்ப செந்தூரம் செய்யும்போது கல்வ அரைப்பு கொடுப்பதுடன், மருந்தில் பளபளப்பும், கடினத்துவமும் நீக்கி கல்வ நிறமாகவும், மிருதுவாகவும் ஆகும் வரையில் பல புட மிடவேண்டும். இன்றேல் மருந்தின் குணம் கெடும்.

காசம், வங்கம் முதலியவைகளை பற்ப செந்தூரங்கள் செய்தபின் அதில் சிறிதெடுத்து ஓர் கரண்டியிலிட்டு, சிறிது எண்ணெய் சேர்த்து எரிக்க, எண்ணெய் பற்றி பெரிக்கபின் கரண்டியில் பார்க்க உலோகச் சத்து இருப்பின் மணிமணியாக உருகி நிற்கும். அப்படியிருந்தால் இன்னும் ரடியளில்லையென்றுணர்ந்து மீண்டும் சில புடமிட் டெடுக்கவேண்டும். சரிவர முடியாத லோகச் சத்துள்ள மருந்தை கனல் உள்ளுக்குக் கொடுக்க தோஷங்களை விளைவிக்கும். ஆகையால் சத்தின்றி கன்கு மடியும் வரையில் வருத்தி புடமிட்டு பதமாக்க வேண்டும்.


இலாசத்து, கல்நார், மான்கொம்பு ஆமையோடு முதலியவை களை பற்பங்களாகச் செய்யும்போது முதலிலேயே சற்று பெரிய புடமாக போடுதல் நன்று. இல்லாவிடில் கருத்துவிட்டால் பிறகு நல்ல வெண்மைநிறம் வருவது கடினம். அப்படி கறுத்தால் மீண்டும் அரைத்து சில புடமிட நிறம் மாறி வரும்.

இரசு, கெந்தி, பாஷாண, உபரசங்களைப் புட மிடுவதாயிருந்தாலும், எரிப்பதாயிருந்தாலும் கவசம் செய்வதையும், சீலைமண் செய்வதையும் மிக வலுவாகச் செய்வதுடன், சிறுபுடம் அல்லது சிறு தீயாக முதலில் கொடுத்தல் நன்று. இன்றேல் மருந்துகள் புகைந்து போய்விடும்.

காரசார லவண வகைகளை பற்ப சுண்ண செந்தூரங்கள் செய்வதற்கு உருகாமலும், ஊட்டம் குறையாமலும் இருக்கும் பொருட்டு சிறு புடங்களாகப் போட்டு எடுக்கவேண்டும்.


பாகக் கருவிகள்

அவி யந்திரம்




ஓர் வாயகலமான மட் கலத்தில், கீரை யாவது, பாகியாவது, நீரும் பாலுங் கலந் ததையாவது கடத்தின் அரை பாகத்திற் குள்ளாக அடங்கும்படி விட்டு, அக்கடத் தின் வாய்க்கு ஓர் சீலையை தளர்ச்சியா கக் கட்டி, அதன்மீது அவிக்கவேண்டிய சரக்கு அல்லது மருந்தை வைத்து, அக் கடத்தின் வாய்க்குப் பொருத்தமான சட் டியை மேலே கவிழ்த்து வாய் மூடி சீலை சுற்றி, அடுப்பிலேற்றி, சிறு தீயாக எரித்து, கடத்திலுள்ள திரவம் முக்கால் பாகம் சுண்டி வரும் வரையில் எரித்து எடுக்க வேண்டும். இதுவே அவியந்திரம் எனப்படும்.

துலா யந்திரம்



ஓர் மட்கடத்தில் அரை பாகத்திற்குள் ளாக அடங்கும்படி, குடிநீர், சாறு வகைகளோ, அல்லது வேறு திரவங்களோ விட்டு அக்கடத்தின் வாயின் குறுக்கே ஓர் மூங்கிற் குச்சியை வைத்து அதன் நடுவி லிருந்து ஓர் கயிறு கட்டித் தொங்கவிட்டு அதன் இறுதியில் மருந்துச் சரக்கை ஓர் துணியில் முடிந்து கட்டி, பாகத்திற் கேற்றபடி அம்மருந்து திரவத் தில் மூழ்கும்படியோ, மூழ்காமல் ஆவிமட்டும் படும்படியோ, அமைத்து, கடத்தின் வாய்க்கு பொருத்தமான ஓர் சட்டிகொண்டு மூடி அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எடுத்து எரிக்கவேண்டும்.

வாலுகா யந்திரம்




ஓர் குப்பியில் மருந்துகளைப் போட்டு, வாய்க்குப் பொருத்த மான ஓர் பலப்பக் கல்லைச் செருகி, சீலைமண் செய்து குப்பி முழுவதும் மறையும்படி ஏழு சீலை மண் செய்து உலர்த்தி பிறகு ஓர் வாய் அகலமான மட்கடத்தில் சான்று விற் கடை மணலைக் கொட்டிப் பறப்பி, அதன்மீது குப்பியை

வைத்து, கழுத்தளவு மணல் கொட்டிப் பறப்பி, அடுப்பிலேற்றி முறைப்படி எரித்து பின்பு குப்பியிலுள்ள மருந்தை எடுத்துக் கொள் வதாம். சில முறைகளில் குப்பியின் வாயை மூடாமல் வைத்து எரிப்பது முண்டு.


மற்றும் ஓர் அடி கனத்த மட்கடத்தின் அடிபாகத்தில் குப்பி நுழையக்கூடிய ஓர் துவாரம் செய்து, மருந்து செலுத்தி சீலைமண் செய்து வைத்துள்ள குப்பியை மருந்துள்ள பாகம் வரையில் சட்டி யின் துவாரத்தில் நுழையும்படிச் செய்து, சந்தனக்கு மண்பூசி உலர்த்தி, குப்பியின் கழுத்தளவு வரையில் மண் கொட்டிப் பரப்பி, வாயை மூடியும் மூடாமலும் எரித்தெடுப்பது முண்டு.

பதங்க யந்திரம்




வாய் அகலமாகவும், பொருத்தமாகவும் உள்ள இரண்டு மட் பாகைகளைத் தயார்செய்து ஒன்றில் பதங்கிக்கவேண்டிய சரக்குகளைப் போட்டு மற் றொரு பாகையில் மூடி பொருத்து வாய்க்கு சீலை மண் செய்து உலர்த்தி அடுப்பிலேற்றி முறைப் படி எரித்து ஆறினபின்பு மேல்பாகையின் உட் பாகத்தில் பார்க்க பதங்கமானது படிந்திருக் கும். இதனை சுரண்டி எடுத்துக் கொள்ளவேண் டும். சில முறைகளில் மேல் பாகையின் உட்புறத் தில் ஏதேனும் மூலிகைச் சாற்றை மும்முறை மூடி உலர்த்தி சித்தப்படுத்தியதை மூடி எரித் தெடுப்பது முண்டு. இம்மாதிரி செய்வதனால் பதங்கம் விணாகாமல் நன்கு படிந்து இருக்கும்.

நீர் யந்திரம்



வாயகலமான ஓர் பெரிய மட்கடத் தையும், அதன் உள்ளே நுழையும்படி யான ஓர் பீங்கான் கோப்பைக் கிண் ணத்தையும் சேகரித்து வைத்துக் கொண்டு, மட்கடத்தின் உள்ளே நடு வில் ஓர் சதுரமான செங்கல்துண்டை ஆடாமல் வைத்து, அதன்மீது பீங்கான் கிண்ணத்தை வைத்து, கோப்பையைச் சுற்றி மருந்துகளை கிண்ணத்தின் மட்டத் திற்குக் கீழாகவே உள்ளபடி போட்டு, மட்கடத்தின்மீது ஓர் சிறு மட்குடத்தை கோரைவைத்த பொருத்துவாய்க்கு சீலை அல்லது மண்சீலையை சுற்றி, அடுப்பிலேற்றி, மேல் பாகையில் சலம்விட்டு எரித்து அடைபாமல்


ஆறினபின்பு மேல் பாகத்தை எடுத்துவிட்டு உள்ளே இருக்கும் பிஞ்சான் இண்ணத்தைப் பார்க்க அதில் நீர் இறங்கியிருக்கும். இதுவே நீர் யந்திரமாம்.



வாலி யந்திரம்

படத்தில் காட்டியதுபோல வாலி ஒன்று தயார்செய்து, அதன் வாய்க்குப் பொருத்தமான வாயுள்ள ஓர் மட் பாகத்தைச் சேகரித்து, அம் மட்பாகத்தில் மருந்துகளைப்போட்டு, வாய்க்கு வாலியைச் செருகி பொருத்துமிடத்தில் மண்பூசி நன்கு மண் வலுவாக செய்து வைத்துக் கொள்க. வாலியின் இரண்டு புறங்களிலும் இரண்டு குழைகள் காணப்படுகின்றன. ஒன்று வாலியின் உட்புறத்திலிருந்து காலம் அல்லது நீர் வருவதற்காகவும் மற்றொன்று மேல்புறத்திலுள்ள குளிர்ந்தநீரை வெளிப்படுத்துவதற்காகவும் உள்ளது. ஆதலே நீர் வரக்கூடிய குழாயினின்றும் நீரை சேகரிக்கும்பொருட்டு ஓர் ஈண்ட நகர அல்லது கண்ணாடி குழாயை செருகி அதன் இறுதியில் ஓர் சோலை வைத்து அதில் நீர் வந்து விழும்படியாக அமைத்தும, வாலியின் மற்றொரு குழாயில் நீர் வெளியாகாத வண்ணம் ஓர் சடை கார்க்கை அடைத்தும், வாலியின் மேல் பாகத்திலுள்ள பாகத்தில் குளிர்ந்த நீரை நிறப்பி, அசையாமல் அடுப்பிலேற்றி எரித்துவரவும். இவ்வாறு எரித்துவரும் போது வாலியின் மேல்பாகத்திலுள்ள குளிர்ந்த நீர் சூடானதாகத் தெரிந்தால் உடனே அதை வெளியாக்கிவிட்டு, மறுபடியும் குளிர்ந்த சலத்தை ஊற்றிவைக்கவும். இப்படி எரிக்கும்போது பாகியிலிட்ட மருந்தானது ஆவியாகி மேலெழும்பி குளிர்ச்சியினால் நீராகி வாலியின் மற்றொரு குழையின் வழியாய் இறங்கி சீசாவில் வந்து விழும். இவ்வாறு மருந்து கிடைக்கும் வரையில் எரித்து எடுக்கவும். இது ஓமத்தீர், மையனத்தைலம் முதலியன செய்ய உதவும்.

குழித்தைல யந்திரம்



ஓர் மட்குடுவையின் அடி பாகத்தில் ஐந்தாறு சிறு துவாரங்கள் செய்து அதில் கம்பிகளைச் செருகி, பாகியி லுள் மருந்துகளைப் போட்டு, வாய்க்கு ஓடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி வைத்துக் கொள்க. பின்னர் பூமியில் படத்தில் காட்டியது போல் பள்ளந்தோண்டி, ஓர் பழைய சிறு குடுவையை வைத்து, அதன் வாய்க்கு நேராக கம்பிகள் இருக்கும்படி மருந்திட்ட பாகியைப் பொருத்தி, பொருத்து வாய்க்கு சீலைமண் செய்து, அச்சிறு குடுவையின் வாய்மட்டத்திற்கு மண் போட்டு அழுத்தி, மேல் பாகியைச்சுற்றி விறட்டிகளை அடுக்கி புடமிட்டு ஆறினபின்பு அடியிலுள்ள சிறு குடுவையை மண் விழாதபடி ஜாக்கிரதையாக எடுத்துப் பார்க்க அதில் தைலம் இருக்கும். இதுவே குழித்தைலம் எனப்படும்.

ஜல யந்திரம்

இது மேலே ஜலம், கீழே தெருப்பு, நடுவே மருந்து என்னும் மூன்றையும் யமைத்து எரித்து எடுக்கும் முறையாம். இது தெருப்பிற்கு ஓடக்கூடிய இரசம்போன்ற சரக்குகளை கட்டி நீற்ற பயன் படுத்தப்படும். வாயலகமான ஓர் இரும்பு சட்டியும், ஒன்றினுள்ளே ஒன்று பொருந்தும்படியான சிறு மூசை அல்லது கிண்ணம்போன்ற இரண்டு இரும்புத் தகட்டினால் செய்யப்பட்ட மூடிகளையும் தயார் செய்து வைத்துக்கொண்டு, ஓர் இரும்பு மூடியில் மருந்தை வைத்து மற்றொன்றால் பொருந்த மூடி இரும்புச் சிட்டத்தை ஆட்டு ரத்தத் தால் மொழுகுபோல் அரைத்துப் பூசி உலர்த்தி, பின்பு பழைய செங் கல்தூள், வெல்லம் இவைகளை வேப்பம்பட்டைக் கியாழத்தால் நன்கு அரைத்த வலுவாக கலசம்செய்து, அதன்மேல் இரும்புச் சிட்டம், வெள்ளைமண், உப்பு இவைகளை ருமைப்பாலால் அரைத்து கலசம்செய்து நன்குலர்த்தி இதை இரும்புச் சட்டியின் நடுவில் வைத்து, அசையாமல் இருக்கும்படி முன் அரைத்த கலவைகளை சட்டிக்கும் மூசைக்கும் பொருந்தப் பூசி, நன்குலர்த்தி, சட்டி நிறைய நீர் அல்லது மூலிகைச்சாறு முதலிய திரவங்களை விட்டு அடுப்பிலேற்றி எரித்து எடுக்கப்படும. இதில் மேலே ஜலம் இருப்பதினாலும், சுற்றுப்புறங்களில் வலுவான கலவைகள் இருப்பதாலும் மருந்தானது புகைந்து போகாமல் கட்டுப்பட்டு நிற்க வேதுவாகின்றது.

அளவை

நிறுத்தல் :—

1 குன்றிஎடை	....	2 கிரான்
32 குன்றிஎடை	....	1 வராகனெடை
40 குன்றிஎடை	....	1 கழஞ்சு
10 வராகனெடை	....	1 பலம்
3¼ குன்றிஎடை	....	1 பண வெடை
8 குன்றிஎடை	....	1 மாஷா
3½ வராகனெடை	....	1 தோலா
1 தோலா	....	1 ரூபாய்எடை
3 தோலா	....	1 பலம்
8 பலம்	....	1 சேர்
5 சேர்	....	1 விசை
8 விசை	....	1 மணக்கு
1 அவுன்ஸ்	....	2½ தோலா
1 பவுண்டு	....	13 பலம்

அளத்தல் :—

60 துளி	....	1 தேக்கரண்டி (ஒருடிராம்)
8 தேக்கரண்டி	....	1 அவுன்ஸ்
16 அவுன்ஸ்	....	1 பவுண்டு
20 அவுன்ஸ்	....	1 ஐபண்ட்
24 அவுன்ஸ்	....	1 புட்டி
2 ஆழாக்கு	....	1 உழக்கு
8 ஆழாக்கு	....	1 படி

காலம் :—

1 மணி	....	2½ நாழிகை
3 மணி	....	1 ஜாமம்

நிறைகடிப் பிரமாணம் என்பது மூன்று விரல்களால் எடுக்கக் கூடியது அல்லது மூன்று சிட்டிக்கை. வெருகடிப் பிரமாணம் என்பதும் ஏறக்குறைய இதையே குறிக்கும் அல்லது சிறிது அதிகமாகக் கருதப்படும். ஒரு சங்கு அல்லது பாலடை என்பது சுமார் ½ அவுன்ஸ் அல்லது ¾ அவுன்ஸ் அளவாகும்.

சரக்குகளின் சுத்தி முறைகள்

இரசம்:—இரசத்தைக் கல்வத்திலிட்டு ஒட்டரை, மஞ்சள்தூள், செங்கல்தூள் முதலியவைகளை முறையே தனித்தனி இரசத்தின் எடைக்குச் சேர்த்து நீர் தெளித்து அரைத்து இரசம் மடிந்த பின்பு நீர் விட்டு கழுவி சீலையிலிட்டு பிழிந்து எடுக்க சுத்தியாகும்.

கந்தகம்:—ஓர் வாயகன்ற பாண்டத்தில் பசும்பாலை ஊற்றி, அதில் மருதோன்றி இலையை அரைத்துக் கலக்கி, பாண்டத்தின் வாய்க்கு ஏடு கட்டி அதன்மீது சுத்தி செய்யவேண்டிய நெல்லிக்காய் கந்தகத்தை வைத்து பொருத்தமான மேற்சட்டி மூடி சீலைமண் செய்து அடுப்பை முழுதும் பூமியில் மறையும்படி குழிதோண்டி புதைத்து, மேற் சட்டியின்மீது ஐந்தாறு விரட்டிகளை அடுக்கி நிலைத்து புடமிட்டு ஆறினபின் எடுத்துப் பார்க்க, அடி பாண்டத்தில் கந்தகம் உருகி மணி மணியாக விழுந்திருக்கும். இதை கழுவி உலர்த்திக்கொள்ள சுத்தியாகும்.

இலிங்கம், இரச செந்தூரம்:—இவைகளைத் தாய்ப்பாலில் மூன்று நாள் ஊறப்போட்டு கழுவி புலர்த்த சுத்தியாகும். தினந்தோறும் புதிய பாலில் போடவேண்டும்.

தாளகம்:—இதை ஓர் சீலையில் முடிந்து ஒரு படி கற்சுண்ணத்தின் இடையில் வைத்து பனங்கள் அல்லது காடி விட்டு நாளிக்கவும். இப்படி மூன்றுமுறை செய்து கழுவி யெடுக்க சுத்தியாகும்.

கௌரி:—இதை ஓர் அப்பிரகத் தகட்டின்மீது வைத்து அதிப்பி லேற்றி சிறுதீயாக எரித்து பிரமதண்டுப்பால் அல்லது சாறுகொண்டு ஓர் ஜாமம் சருக்கு கொடுத்து எடுக்க சுத்தியாகும்.

வெள்ளைப் பாஷாணம்:—கற்சுண்ணும்பும், அப்ராகாரமும் சமனெடையாக எடுத்து நான்கு மடங்கு நீர்விட்டுக் கரைத்து ஓர் பாண்டத்தில் விட்டு வாய்க்கு ஏடுகட்டி அதன்மீது பாஷாணக் கட்டிகளை வைத்து மேல் சட்டி மூடி, சீலை செய்து அடுப்பிலேற்றி நீர் சுண்ட எரித்து எடுக்க சுத்தியாகும்.

வீரம்:—இளநீரில் சிறிது கற்பூரத்தைப் பொடித்துக் கலந்து ஓர் பாத்திரத்திலிட்டு, அதில் வீரத்தை ஓர் துணியில் முடிந்து நீரில் படாதபடி தூலாயந்திரமாகக் கட்டித் தொங்கவிட்டு நீர்சுண்ட எரித்தெடுக்க சுத்தியாகும்.

பூரம்:—கம்மாறு வெற்றிலையும் மிளகும் வகைக்கு ½-பலம் வீதம் எடுத்து அரைத்து நீரில் கலந்து ஓர் பாண்டத்திலிட்டு, அதில் பூரத்தை துணியில் முடிந்து நீரில் படும்படி தூலாயந்திரமாகக் கட்டித் தொங்கவிட்டு நீர் சுண்ட எரித்தெடுக்க சுத்தியாகும்.

மனோசிலை:—இதைக் கல்வத்திலிட்டு இஞ்சிச் சாறு விட்டு ஒரு ஜாமம் அரைத்து உலர்த்தி வடுக்க சத்தியாகும்.

மிருதார்சிங்கி:—இதை வெள்ளாட்டு மூத்திரத்தி லிட்டுக் கொதிக்கவைத்து கழுவி யுலர்த்த சத்தியாகும்.

துருசு:—இதை இரும்புக்கடாயிலிட்டு வெளுக்க வறுத்தெடுக்க சத்தியாகும்.

துத்தம்:—இதை கோமூத்திரம் அல்லது மோரில் ஊறவைத் தெடுக்க சத்தியாகும்.

லொசத்து, கல்நார், குங்கிலியம்:—இவைகளை இளநீரிலிட்டு நீர் சுண்ட எரித்து, கழுவி யுலர்த்த சத்தியாகும்.

படிகாரம், வெண்காரம்:—இவைகளைப் பொரித்தெடுக்க சத்தி யாகும்.

பவழம், சங்கு, பலகறை:—இவைகளை பழச்சாற்றில் ஊற வைத்து கழுவி யுலர்த்த சத்தியாகும்.

ஆமையோடு, முத்துச்சிப்பி, மான்கொம்பு:—இவைகளை சிறு துண்டுகளாக நறுக்கி ஓர் பாண்டத்திலிட்டு, சுண்ணமும், பூசணம் சமனாக எடுத்து நீர் விட்டுக் கரைத்த ஜலத்தை விட்டு அடுப்பிலேற்றி நீர் சுண்ட எரித்து கழுவி யுலர்த்த சத்தியாகும்.

அன்னபேதி:—இதை கடாயிலிட்டு சிவக்க வறுத்தெடுக்க சத்தி யாகும்.

உப்பு வகைகள்:—ஒரு பங்கு உப்பிற்கு நான்கு பங்கு நீர் விட் டுக் கரைத்து, தெளிவெடுத்து அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்து குழம்பு பதத்திற்குக் காய்ச்சி, பீங்கான் தட்டுகளிலிட்டு வெய்யிலில் வைத்து உலர்த்தி எடுக்க சத்தியாகும். இம்மாதிரி 10 முறை செய் தல் உயர்தரமான சத்தியாகும்.

அப்பிரகம்:—இதை பழுக்கக் காய்ச்சி பனம்பாலில், 10 முறை தோய்த்தெடுக்க சத்தியாகும். அல்லது காடியில் ஊறவைத்து, நீர் விட்டுப் பிசைந்து கழுவி உலர்த்த சத்தியாகும்.

காந்தம்:—இதைக் காய்ச்சி, காய்ச்சி கொள்ளுக் குடிநீரில் ஏழுமுறை தோய்த்தெடுக்க சத்தியாகும்.

மண்டூரம்:—இதைக் காய்ச்சிக் காய்ச்சி கோமூத்திரத்தில் 10முறை தோய்த்தெடுக்க சத்தியாகும்.

அயம்:—இதை பழச்சாற்றில் 3 நாள் ஊறவைத்து, பின்பு தேய்த்து கழுவி யுலர்த்த சத்தியாகும்.

செம்பு:—இதைத் தகடடித்து பழுக்கக்காய்ச்சி, பழச்சாறு, காடி, புளிப்புமோர், புளியிலைச்சாறு முதலியவற்றில் ஒவ்வொன்றி லும் ஏழு முறை தோய்த்தெடுக்க சத்தியாகும்.

நாகம்:—ஓர் சட்டியில் இலுப்பை எண்ணெயை ஊற்றி அதன் இருபுறத்திலும், சட்டியின் ஓரத்தில் இரண்டு கவாச்சாரக் கட்டிகளை வைத்து, அதன் இடையில் நாகத்தை உருக்கிச் சாய்க்கவும். இப்படி 7 முதல் 21 முறை செய்தெடுக்க நல்ல சுத்தியாகும். ஒவ்வொரு முறைக்கும் புதிய எண்ணெயை பயன்படுத்தவும்.

வங்கம்:—சொச்சியிலைச் சாற்றில் மஞ்சள் தூளைக் கலந்து வைத்துக்கொண்டு அதில் சிறிது ஓர் சட்டியிலிட்டு, அதில் வங்கத்தை உருக்கி சாய்க்கவும். இப்படி 7 முதல் 21 முறை செய்ய நல்ல சுத்தி யாகும். ஒவ்வொரு முறைக்கும் புதிய சாறு ஊற்றவும்.

பொன்:—தங்கத்தை தகடடித்து, இருபுறமும் செம்மண் அல் லது பூங்காளிக்கல்லை அரைத்துத் தடவிய பூசி வெருப்பனலில் வாட்ட வும். இப்படி 7 முறை செய்தெடுக்க சுத்தியாகும்.

வெள்ளி:—வெள்ளிச் சரிகைகளையாவது அல்லது தகட்டை யாவது காய்ச்சிக் காய்ச்சி பிரமதண்டுச்சாறு, அல்லது மகுடம்பூக் கியாழத்தில் தோய்த்து எடுக்க சுத்தியாகும்.

பித்தளை, வெங்கலம்:—இவைகளை காய்ச்சி புளியிலைச்சாறு, கொள்ளுக்கியாழம் முதலியவற்றில் ஒவ்வொன்றிலும் ஏழு முறை வீதம் தோய்த்து எடுக்க சுத்தியாகும்.

நேர்வாளம்:—இதை ஓர் துணியில் முடிந்து, ஓர் பாண்டத்தி லிட்டு, பசுவின் சாணத்துடன் நீர் சேர்த்துக் கரைத்த ஜலத்தைவிட்டு அடுப்பிலேற்றி சிறு தீயில் எரித்து, நீர் சுண்டி வரும்போது எடுத்து கழுவி, மேற்தோலையும், உள்ளிருக்கும் மூலையையும் நீக்கி, பழச்சாற் றில் 1-ஜாமம் ஊறவைத்து கழுவி யுலர்த்தி ஆமணக்கு நெய்விட்டு பொன்மேனியாக வாசனையினம்ப வறுத்தெடுக்க சுத்தியாகும்.

சேராங்கொட்டை:—இதை மூக்கை வெட்டி சாணப்பாலில் போட்டு முன்போல எரித்தெடுத்து கழுவியுலர்த்த சுத்தியாகும்.

எட்டிக்கொட்டை:—இதைச் சிறு துண்டுகளாகச்சீவி வெள் ளாட்டுப்பால், அல்லது காவல்பட்டைக் குடிநீரில் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

இருவி, நாபி:—இவைகளை கோமூத்திரத்தில் தலையந்திரமாகக் கட்டித தொங்கவிட்டு அந்த ஆவியில் எரித்தெடுக்க சுத்தியாகும்.

சிவதை, நிலாவாரை, அமுக்கராங்கிழங்கு, பறங்கிச்சக்கை:— இவைகளை பாலில் வேகவைத்து எடுக்க சுத்தியாகும். சிவதைக்கு கடு நரம்பையும், நிலாவாரைக்குக் காம்புகளையும், பறங்கிச்சக்கைக்கு மேற்தோலையும் நீக்கவேண்டும்.

ஷமத்தை விரை:—இதை பழச்சாற்றில் ஊறவைத்து கழுவி உலர்த்த சுத்தியாகும்.

அபினி :—இதனை நெய் தடவி அனலில் வாட்டி எடுக்க சுத்தி யாகும். அல்லது வெள்ளை வெங்காயத்தினுள்ளே வைத்து சுட் டெடுக்கவும் சுத்தியாகும். அல்லது நீர்விட்டுக் கரைத்து வடிகட்டி தெளிவை எடுத்து காய்ச்சி உலர்த்திக் கொள்வதுமுண்டு.

கஞ்சா :—இதில் விதை, காம்பு, முதலியன இல்லாமல் நுய்த் தெடுத்து பழச்சாறு அல்லது சுத்த ஜலத்தில் சிறிது ஊறவைத்து, நீர் விட்டுப் பிசைந்து கழுவி உலர்த்தியெடுக்க சுத்தியாகும்.

சுக்கு :—இதற்கு மேற்றோலச் சீவ சுத்தியம்.

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் :—இவைகட்கு உள் ளிருக்கும் கொட்டைகளை நீக்கினிட சுத்தியம்.

கிராம்பு :—இதற்கு மொட்டை நீக்க சுத்தியம்.

மற்றும் எல்லா சரக்குகளுக்கும், அத்துடன் இந சரக்குகளின் கலப்பே, அல்லது வேறு மனிதங்களோ இல்லாதபடி பார்த்து தூயதாகத் தேர்ந்தெடுப்பதே சுத்தியம்.

தொகுப்புச் சரக்குகள்

திரிகடுகு :—சுக்கு, மிளகு, திப்பிலி.

திரிபலை :—கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்.

திரிகந்தம் :—அகில், சந்தனம், தேவதாரு.

திரிமஞ்சள் :—மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள்.

திரிசாதம் :—இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறு நாகப்பூ.

திரிசுகந்தம் :—இலவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி.

திரிதிம்பம் :—வேம்பு, கருவேம்பு, நிலவேம்பு.

திரிமூலம் :—திப்பிலிமூலம், சித்திரமூலம், சிறுதேக்குமூலம்.

திரிமதுரம் :—நெய், பால், தேன்.

திரிகாயம் :—பூண்டு, கடுகு, பெருங்காயம்.

திரிபத்திரி :—இலவங்கப்பத்திரி, சாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி

திரிலோகம் :—பொன், வெள்ளி, செம்பு.

முக்கனி :—மா, பலா, வாழை.

முக்கூட்டு நெய் :—நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய் பசுநெய்.

சதுர் சாதம் :—சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், ஏலம்.

பஞ்ச சாதம் :—சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், ஏலம், வால்மிளகு.

பஞ்ச காயம் :—பூண்டு, கடுகு, காயம், ஓமம், வெந்தயம்.

பஞ்சத் திரவியம் :—இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, விளமிச்சவேர், சண்பகப்பூ, நெல்லிவற்றல்.

பஞ்ச மூலம் :—பெருமருந்து, சிறுநறுநிஞ்சான், சுக்கு, சிறு தேக்கு, பேராத்தை.

இலகுபஞ்ச மூலம் :—சரிகைத்தாமரை, மூவிலைத்தாமரை, நெருஞ் சில், இருவகை கண்டங்கத்திரி.

மகாபஞ்ச மூலம் :—நச்சாமூலி, வில்வவேர், பாதிரிவேர், முன்னைவேர், பெருமாவேர்.

பஞ்சகௌவியம் :—ஆவின்பால், தயிர், வெண்ணெய், நீர், சாணம்.

ஐந்தெண்ணெய் :—எள், வேம்பு, ஆமணக்கு, இலுப்பை, புங்கு இவைகளின் எண்ணெய்கள்.

பஞ்ச லோகம் :—தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.

பஞ்ச லவணம் :—இந்துப்பு, வகையலுப்பு, பாறையுப்பு, வெடி யுப்பு, சவுட்டுப்பு.

பஞ்ச சூதம் :—இரசம், லிங்கம், வீரம், பூரம், இரச செந்தூரம்.

பஞ்ச பாஷாணம் :—வெள்ளை, யரிதாரம், கௌரி, லிங்கம், தொட்டிப்பாஷாணம்.

அஷ்ட காயம் :—சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், காயம், சீரகம், கருஞ்சீரகம், பெருஞ்சீரகம்.

அஷ்ட வர்கம் :—சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், காயம், இந்துப்பு.

அஷ்ட மூலம் :—ஆடாதோடை, முத்தக்காசு, பற்பாடகம், விஷ்ணுக்ரந்தி, கருந்தளசி, பேய்ப்புடல், கஞ்சாங்கோரை, சிந்தில்,

நவலோகம் :—தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், காகம், பித்தளை, வெண்கலம், தார.

நவமணி :—முத்து, பவளம், மாணிக்கம், வைரம், வைடூரியம், புட்பராகம், கோமேதகம், நீலம், மரகதம்.

தச மூலம் :—கண்டங்கத்திரி, சிறுவழுதலை, சிற்றாமல்லி, பேராமல்லி, நெருஞ்சில், கூவிளை, பெருங்குமிழ், நறுநாளை, பாதிரி, வாகை.

சரக்குகளின் நஞ்சுக்கு முறிவு

இரசம்:—இது சம்பந்தப்பட்ட மருந்துகள் விஷமித்தால் பல் வீறுகளில் வீரணம்; வாய்நோய், தொண்டை விழுங்க முடியாமல் நோதல், முதலிய குறி குணங்கள் ஏற்படும்.

இதற்கு அருகங்கட்டை 1-பலத்துடன், 25-மிளகு சேர்த்து முறைப்படி எட்டொன்றுப்குடிநீரிட்டு, அதில் பாக்களவு வெண்ணெய் சேர்த்து காலை மாலை கொடுக்கவும். அல்லது கரை ஓட்டுக் கரியை அமார் ½-வராகனெடைக்கு எதிர்த்த புளிப்பு மோரில் கலக்கி கொடுத்து வரலாம். இவ்வாறு செய்துவர இரச நஞ்சு தீரும்.

வீரம்:—இதன் நஞ்சால் மேற்கூறிய குணங்களுடன் வாந்தியும் ஏற்படும். இதற்கு கோழிமுட்டை வெண்கருவுடன் சமன் நீர் அல்லது பால் சேர்த்து அடிக்கடி கலக்கி சிறிது சிறிதாக கொடுத்து வரலாம். அவுரிவேர் கற்கம் பாலில் கலந்து கொடுக்கலாம்.

பூரம்:—இரச தோஷக் குணங்களுடன் பேதி காணும். இதற்கு படிகார பற்பம், காசிக்கட்டி சூரணம் முதலியவற்றை மோர் அல்லது பழச்சாற்றில் கொடுக்கலாம். பின்பு அவுரிவேர் கற்கம் அல்லது குடிநீர் தரலாம்.

துருசு:—இதன் நஞ்சால் வாந்தி காணும். இதற்குப் பழச்சாறுடன் தேன் சேர்த்து நீர்விட்டுக் கலந்து கொடுத்து வரலாம்.

தாளகம்:—இதன் நஞ்சால் வாந்தி, பேதி, சுரம் முதலியன காணும். இதற்கு அவுரிவேர், மிளகு சேர்ந்த குடிநீர் கொடுக்கலாம். கண்ணுமபு தெளிவு நீரும் நன்மை பயக்கும்.

வெள்ளைப் பாஷாணம்:—இதன் விஷத்தால் வாந்தியும், நீர் நீராக பேதியும் ஏற்படும். இதற்கு அபினி சம்பந்தமான பேதியை நிறுத்தும் மருந்துகளும், அவுரிவேர் மிளகு சேர்ந்த குடிநீரும் நன்மை பயக்கும்.

செம்பு:—இதன் தோஷத்திற்கு பழச்சாற்றில் சுக்குச் சூரணத்தைப் போட்டுக் கலந்து கொடுத்து வரலாம்.

வங்கம்:—இதன் தோஷத்தால் பல்லீறுகளில் கருமையிற முண்டாகும். இதற்கு கருப்பு புல்லாஞ்சி இலைச்சாறு அல்லது கருமபுச் சாறு நல்லது.

கற் கண்ணெம்பு:—இதனால் வாய், நா முதலியன வீணைப்படும்: இதற்கு தேங்காய்ப்பால், பஞ்சன் குடிநீர் நன்று.

சேர்வாளம்:—இதன் நஞ்சால் வாந்தி, பேதி, வயிற்றுவலி மயக்கம் மூர்ச்சை முதலியன ஏற்படும். இதற்கு வசம்பை சுட்டு தேனில் குழைத்து சாவில் தடவி வருதல், எலுமிச்சம்பழத்துடன் சீரகம்

சேர்த்து இயாழும் வைத்து வழங்குதல், மோர் அருந்தல் முதலியன நன்மை பயக்கும்.

கள்ளி வகைகள்:—இவைகளினாலும் வாந்தி, பேதி, வலி, வாய், நுடல்முதலியன புண்ணாதல், மயக்கம், மூர்ச்சை முதலியன காணும். இதற்கு முதலில் சிற்றாமணக்கு நெய் கொடுத்துவிட்டு, பிறகு பேதியை கட்டும் மருந்துகளையும், தேங்காய்ப்பால் முதலிய விஷத்தை ஒற்றும் பொருள்களையும் கொடுத்தல் நன்று.

அலரி:—இதன் நஞ்சால் வாந்தி, விக்கல் முதலியன ஏற்படும். இதற்கு கடுக்காய் குடிநீர் கொடுக்கலாம்.

எட்டி:—இதன் விஷத்தால் இசிவு, பேதி முதலியன காணும். இதற்கு சாவல் பட்டைக் குடிநீர் நன்று.

ஊமத்தை:—இதன் நஞ்சால், மயக்கம், சாவறட்சி, பிரமை, கண்மணி விரிதல் முதலியன காணும். இதற்கு பழச்சாறு கொடுக்கலாம்.

சேராங்கொட்டை:—இதன் நஞ்சால் உடலில் யீக்கம் ஏற்படும். இதன் பால் பட்ட விடத்தில் தடிப்புள்ள வீரணம் ஏற்படும் இதற்கு உள்ளுக்கு புளியிலைக் குடிநீரும், மேலுக்கு புங்கம்பாலைத் தடவி வருதலும் நல்லது.

சித்திரமூலம்:—இதன் நஞ்சுக்கு நெய் முறிவாம்.

அபினி:—இதன் நஞ்சால் கண்மணி சுருங்கல், மயக்கம், மூர்ச்சை, பிரமை முதலியன ஏற்படும். இதற்கு வெங்காயச்சாறு, பழச்சாறு, நெய் முதலியன முறிவாம்.

சகல விஷங்களுக்கும் பொதுவாக அவுரிவேர் கற்கம் அல்லது குடிநீர் நன்மையைப் பயக்கும்.

மருந்து வழங்கும் விதி

எம் மருந்தையும் தனியாக வழங்குவதைவிட அதை ஓர் தக்க அனுபானத்துடன் வழங்குதல் நன்று. உஷ்ண வீரிய முள்ள மருந்துகளை தேனிலும், சீத வீரிய முள்ள மருந்துகளை நெய், வெண்ணெய், பால் முதலியவற்றிலும், மற்றும் தோஷங்களுக்கும் நோய்களுக்கும் தக்கபடி பல்வேறு அனுபானங்களிலும் வழங்கப்படும். நன்மை கூறுதலிடத்து எம்மருந்தையும் தேனில் கொடுப்பதில் தவறில்லை. அனுபானமானது மருந்தின் எடைக்கு எண்மடங்கு இருத்தல் முறைமையாம்.

சூரணம், லேகியம், மாத்திரை முதலிய மருந்துகளை அருந்தின பின் சிறிது நீரை அருந்துதல் வேண்டும். மருந்தை அருந்தின

வுடன் சிலர் அம் மருந்தின் வெகுட்டல் முதலியவற்றைப் போக்க கண்ட பொருள்களை வாயிலிட்டு சுவைப்பதுண்டு. இப்படி செய்வதால் மருந்தின் குணம் கெடும். அப்படி ஏதாவது தேவையாக இருப்பின் தேன், திராட்சை, சிறுசாகப்பூ, பழைய நெற்பொரி, இலைகளில் சிறிது வாயிலிட்டு சுவைக்கலாம்.

சாதாரணமாக எல்லா மருந்துகளையும் தினம் இரு வேளை கொடுத்தல் முறை. ஆனல் சுரம், சன்னி, அதிசாரம் முதலிய நோய்களில் மூன்று அல்லது நான்கு வேளைகளும் கொடுப்பதுண்டு. வாந்தி, விக்கல், முதலியவைகட்கு அடிக்கடி பலமுறை கொடுக்கலாம். வமன மருந்தையும், விரேசன மருந்தையும் ஒரு முறைக்கு மேல் கொடுக்கப்படாது.

பேதியாகும் மருந்துகளைக் காலையிலும், கண்நோய், நெஞ்சு நோய், சிரநோய் முதலியவைகட் குரிய மருந்துகளை மாலையிலும், மலத்தை இளக்கும் மருந்துகள், கிருமியின்மைக்கு அருந்தும் மருந்துகள் முதலியவற்றை இரவு படுக்கைக்குப் போகும் போதும் அருந்தல் நன்று. பலதோஷத்தை உண்டாக்கும் மருந்தை உணவுக்கு முன்பாகவும், ஜீரண சக்தியை உண்டாக்கும் மருந்துகளை உணவிற்குப் பின்பும், அருந்தலாம். மற்றும் வாத நோய்கட்கு உணவுக்கு முன்னும், பித்த நோய்கட்கு உணவின் இடையிலும், கப நோய்கட்கு உணவிற்கு பின்னும் வழங்குதல் நன்று.

மருந்தின் அளவானது முக்கியமாக மருந்தின் வகை, ஆண் பெண் என்ற வேறுபாடு, நோயாளியின் வயது, உடற்கட்டு, வாதாதி தோஷங்களின் நிலை, நோயின் வன்மை மென்மை, காலம் முதலியவற்றைப் பொருந்தியுள்ளது. ஆகவே மருந்தின் அளவில் மிக்க கவனத்தை செலுத்தி வழங்கவேண்டும். எம் மருந்தை யாருக்கு வழங்கினும் முதலில் சற்று சிறு அளவாக ஆரம்பித்து, குணமில்லாவிடில் அதிகப்படுத்திக் கொள்வதில் குற்றமில்லை.

பெண்களுக்கும் முக்கியமாக கருப்பஸ்திரீ கட்கும், பாலர்கட்கும் மிக்க கவனத்துடன் மருந்துகளை வழங்கவேண்டும். பெண்கள் கருவுற்றிருக்கும்போது வாளம் முதலிய கொடிய விரேசன மருந்துகளையும், மூசாம்பரம்போன்ற முகலை விருத்தி செய்யும் செய்கையுடைய மருந்துகளையும் வழங்கக் கூடாது. பாலர்கட்கு இரசசம்பந்தமான மருந்துகளையும், அபினி சம்பந்தமான மருந்துகளையும் வழங்குதல் நன்கன்று.

ஆமணக்கு நெய் அல்லது அது சம்பந்தமான பேதி மருந்துகளை கோடை காலத்தில் தான் பயன்படுத்தல் வேண்டும். மழை, பனி காலங்களில் வழங்குதல் நல்லதல்ல. அப்படி குளிர் காலங்களில் விரேசன மருந்து வழங்க வேண்டுமாயின் வாளம் சேர்ந்த பேதி மருந்தை வழங்கலாம்.

அபினி, கஞ்சா, ஊமத்தை, எட்டி, சோளங்கொட்டை, நேர்வாளம், இருவி, காபி, இரசம், வீரம், பூரம், தாளகம், மனோசிலை, துருசு, தாம்பரம், பாஷாணம் முதலிய சரக்குகள் சேர்ந்துள்ள மருந்துகளை வழங்கும்போது அவைகளின் தோஷக் குறிகள் ஏற்படாதபடி அளவு, வேளை, நாள் பிரமாணம் முதலியவற்றில் கவனத்தைச் செலுத்தி வழங்கவேண்டும். அப்படி ஏதாவது விஷக் குறிகள் தென்பட்டால் உடனே மருந்தை நிறுத்திவிட்டு, அந்தந்த தோஷக் குறிய முறிவுகளை வழங்கவேண்டும்.

அதிக வீரிய முள்ள மருந்துகளை தொடர்ச்சியாக நீண்ட நாள் கொடுக்கக் கூடாது. அப்படி கொடுக்க வேண்டிய அவசிய மேற்படின் சில நாள் விட்டு வைத்து பிறகு மீண்டும் கொடுக்கலாம். இப்படி விட்டு விட்டு சில முறைகள் வழங்கலாம்.

சாதாரண அற்ப வீரியமுள்ள மருந்துகள், நீடித்து அருந்தும் மருந்துகள், உடல் பலத்துக்காக அருந்தும் மருந்துகள் முதலியவைகளை அருந்தும்போது பத்திய மிருக்கவேண்டிய அவசியமில்லை. ஆனல் வீரிய முள்ள மருந்துகள், நோய்க் குறிய நேர் மருந்துகள் முதலியவற்றை அருந்தும்போது பத்திய மிருத்தல் நன்று. பாலுண்ணும் பாலர்கட்கு மருந்து வழங்கும்போது தாய் பத்தியமாக இருத்தல் வேண்டும்.

ஞாயிறு, செவ்வாய், வியாழன் முதலிய நாட்களில் மருந்தை அருந்துதல் சிறந்ததெனக் கூறப்படுகிறது.

ஒரு வருஷத்திற்கு இருமுறை வமன மருந்தையும், மூன்றுமுறை விரேசன மருந்தையும், நான்குமுறை நசிய மருந்தையும், ஆறுமுறை அஞ்சன மருந்தையும் உபயோகித்தல் நன்று.

பத்திய விதிகள்

பத்தியத்திற்கு உதவும் பொருள்கள் :—கத்தரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, வாழைப்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, சுண்டைவற்றல், முளைக்கீரை, பொண்ணுங்காணி, புடலங்காய், பீர்க்கங்காய், அகத்தீரை, நெய், பால், மோர், வெள்ளாட்டு மாமிசம், சுதும்பு முதலிய பத்திய மீன் வகைகள்.

பத்தியத்திற்கு ஆகாத பொருள்கள் :—அகத்திக்கீரை, முருங்கைக்கீரை, பூசனிக்காய், பாகற்காய், சுரைக்காய், எள்ளு, கொள்ளு, கடுகு, நல்லெண்ணெய், தேங்காய், மாங்காய், மாப்பண்டங்கள், உருளைக்கிழங்கு முதலிய கிழங்கு வகைகள், மூட்டை, மீன், கருவாடு, மதுபானம், புகையிலை முதலிய லாகிரி வஸ்துக்கள் போகம்.

இச்சா பத்தியம் :—கடுகு, கல்லெண்ணெய், மீன், கருவாடு, மருந்தை முறிக்கும் பொருள்கள், லாகிரி வஸ்துக்கள் முதலிய வற்றை நீக்கி நெய் சீரகம் தாளிப்புடன் அன்னம் அருந்துதல்.

கடும் பத்தியம் :—மேற்கண்ட பத்தியத்துடன் உப்பு புளியையும் நீக்கி, மறுபத்தியம் இருந்து, பின்பு வறுத்த உப்பும், சுட்ட புளியும் சேர்த்து, பிறகு ஸ்நானம் செய்து பிறகு எல்லாம் சேர்த்துக் கொள்ளல்.

சிலர் இப்பத்தியத்தில் வறுத்த உப்பும் சுட்ட புளியும் சேர்த்துக் கொள்ளலாமெனவும் கூறுவர்.

மிகு கடும் பத்தியம் :—புதிய குடிலையில் சாதம் வடித்து வெந்நீர் சேர்த்து அருந்துதல். வேறு எதுவும் கூடாது என்பதாம்.

மற்றும் நோய்களுக்கு தக்கபடியும், மருந்துகளுக்குத் தக்கபடியும் பத்தியங்கள் பலவிதமாகவும் வழங்கப்படும்.

பொருட்களின் செய்கை

மருந்துச் சரக்குகளை உடலில் செய்யும் தொழில்களைக்கொண்டு பல வகைகளாகப் பிரிக்கப்படும். அவற்றுள் சில உதாரணங்களை இங்கு கூறப்படும்.

வாதத்தை சமனப்படுத்தும் பொருள்கள் :—சிற்றாமணக்கு, வாதநாராயணன், மெருகு, விழுதி, மிளகு, பிரப்பங்கிழங்கு, இரசம், கந்தகம், வீரம், வெள்ளைப்பாஷாணம்.

பித்தத்தை சமனப்படுத்தும் பொருள்கள்:—அருகெல்லி, பாகல், புளியிலைக்கொழுந்து, வில்வம், எலுமிச்சை, விளாமிச்சை, கொத்தமல்லி, இரசம், பூரம், கோரோசனை, சிலாசத்து, நவாச்சாரம்.

கபத்தை சமனப்படுத்தும் பொருள்கள் :—ஆடாதோடை, துளசி, கண்டங்கத்திரி, முசுமுசுக்கை, சுப்பைமேனி, அரத்தை, அதிமதுரம், தாளிசபத்திரி, வால்மிளகு, திப்பிலி, பவளம், தாளகம், சங்கு.

முத்தோஷத்தையும் சமனப்படுத்தும் பொருள்கள் :—உருத்திராக்கம், கண்டுபாரங்கி, இரசம், கந்தகம்.

உடலுக்கு பலத்தைதரும் பொருள்கள் :—அமுக்காராகிழங்கு, நிலப்பனை, கற்றுழை, பூசனி, ஜாதிக்காய், தான்றிக்காய், தாளிசபத்திரி, கசிசாலை, கனகரி, அயம், தங்கம், வெள்ளி, முத்து.

உடலை போஷிக்கும் பொருள்கள் :—அரிசி, கோதுமை, சோளம், உளுந்து, பச்சைப்பயறு, துவரை, கேழ்வரகு, வேர்கடலை, வாதமைப்பருப்பு, நெய்து, வாழை.

உடலை தேற்றும் பொருள்கள் :—அமுக்காராகிழங்கு, தேற்றான் கொட்டை, பறங்கிச்சக்கை, சோளங்கொட்டை, வல்லாரை, கற்றுழை, பூசனி, சிந்தில், இரசம், கந்தம், இலிங்கம், அப்பிரகம், அயம், காந்தம், சிலாசத்து.

காமத்தைப் பெருக்கும் பொருள்கள் :—பூனைக்காலி விதை, நிலப்பனங்கிழங்கு, பூமிசர்க்கரை கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, சாலாமிசிரி, அக்ரோட்டு பருப்பு, முருங்கைவிதை, நெருஞ்சில், தரிதழ்தாமரை, மதனகாமப்பூ, தங்கம், வெள்ளி, வெண்கோப் பாஷாணம், கஸ்தூரி.

உஷ்ணத்தை உண்டாக்கும் பொருள்கள் :—எள்ளு, மிளகாய், வெண்கடுகு, சாதிப்பத்திரி, குங்குமப்பூ, குங்கிலியம், சிந்திரமூலம், கஸ்தூரிமஞ்சள், இலவங்கம், கஸ்தூரி, அமபர்.

குளிர்ச்சியை யுண்டாக்கும் பொருள்கள் :— அகத்தி, பொன்னாங்காணி, வெந்தயக்கீரை, கீழ்காய்நெல்லி, சுரை, தாமரை, செம்பருத்தி, சந்தனம், அம்மான்பச்சரிசி, வெடியுப்பு, சிலாசத்து.

உள்ளழலை யாற்றும் பொருள்கள் :—அதிமதுரம், வெந்தயம், வெங்காயம், கசகசா, வாதமைப்பருப்பு, திராட்சை, தந்தி, பருத்தி, சிலாசத்து, தேன்.

வியர்வையை உண்டாக்கும் பொருள்கள்:—விஷ்ணுகிராந்தி, பற்பாடகம், துளசி, கோஷ்டம், கோரைக்கிழங்கு, வீரம், வெடியுப்பு, கஸ்தூரி.

சுரத்தை தனிக்கும் பொருள்கள்:—நிலவேம்பு, சிந்தில், பற்பாடகம், வெட்பாலை, கழற்சி, அதிவிடயம், எருக்கு, சொச்சி, இலிங்கம், தாளகம்.

முறை சுரத்தை தனிக்கும் பொருள்கள்:—மிளகு, கழற்சி, வேம்பு, சங்கன், சிந்தில், வசம்பு, கடுகுரோகணி, சோற்றுப்பு, வெள்ளைப்பாஷாணம்.

சிறு நீரைப் பெருக்கும் பொருள்கள்:—நீர்முள்ளி, நெருஞ்சில், சுரைக்கொடி, சிறுபீளை, வாழைத்தண்டு, முள்ளங்கி, மூக்கட்டை, வெடியுப்பு, நவாச்சாரம்.

மலத்தை இளக்கும் பொருள்கள்:—ஆமணக்கு நெய், சாக்கொன்றைப்புளி, அகத்தி, தந்தி, வேர்கடலை, வாழைப்பழம், முடக்கற்றான், கந்தகம், தேன்.

பேதியை உண்டாக்கும் பொருள்கள்:—சோவானம், சிவதை, சிலாவாரை, சேவல்சின்னி, கடுகுரோகணி, கரியபோளம், பூரம், இத்துப்பு.

ருதுவை உண்டாக்கும் பொருள்கள்:—எள்ளு, கருஞ்சீரகம், காயம, மூசாம்பரம், குங்குமப்பூ, பப்பாய், தங்கம், வெங்காரம், கஸ்தூரி.

துவர்ப்புச் சுவையுடைய மலத்தைக் கட்டும் பொருள்கள்:—அத்தி, இத்தி, ஆல், அரசு, ஈரல், ஒதியம்பட்டை, அசோகு, சாதிக்காய், மாதிக்காய், காசிக்கட்டி, தாளிசபத்திரி, மாதுளையோடு, இலிங்கம், ரசகம், பவளம், அன்னபேதி படிகாரம், ஆமையோடு.

குருதிப்போக்கை யடக்கும் பொருள்கள்:—ஒதியம்பட்டை, வெங்கைப்பிசின், இத்தூல், அபின், படிகாரம், காவிக்கல், மான் கொம்பு, கற்சுண்ணம்.

கிருமிகளைக் கொல்லும் பொருள்கள்:—வாய்விளங்கம், பலாசவித்து, கருஞ்சீரகம், குப்பைமேனி, வேம்பு, பூவரசு, ஆடுதீண்டாப்பாளை, சோற்றுப்பு.

இசிவை யகற்றும் பொருள்கள்:—அபினி, கஞ்சா, ஊமத்தை, ஆடாதோடை, ஓமம், இலவங்கம், கழற்சி, குங்குமப்பூ, பெருங்காயம், சடாமாஞ்சி, கஸ்தூரி, கோரோசனை.

வயிற்றிலுள்ள வாய்வை கண்டிக்கும் பொருள்கள்:—சுக்கு, மிளகு, பெருங்காயம், ஓமம், பூண்டு, ஏலம், கருஞ்சீரகம், பூரம், சங்கு, இந்துப்பு.

பசித்தீயைத் தூண்டும் பொருள்கள்:—சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம், இஞ்சி, கொத்தமல்லி, புதினா, முள்ளங்கி, சோற்றுப்பு, இந்துப்பு, பூரீ, ஓமம்.

ஜீரண சக்தியை உண்டாக்கும் பொருள்கள்:—இஞ்சி, கடுகு, வில்வம், சோற்றுப்பு, சங்கு, பலகறை, கற்சுண்ணம்.

பொருட்களின் பண்பும் பயனும்

நீரின் குணம்

மழை நீரினால் குளிர்ச்சி, கல்லறிவு முதலியன உண்டாகும். பனி நீரினால் வாதகோபம், வெகு மூத்திரம், சொறி சிரங்கு முதலியன போம். மேற் கூறியது போக மற்ற நீர்கள் அவை யிருக்கும் நிலத்தின் குணத்தைப் பெற்றிருக்கும். அதாவது ஆற்று சலம் நிரி தோஷத்தால் ஏற்பட்ட நோய்களையும், பித்தகோபத்தையும் தாகத்தையும் தணிக்கும். குளத்து நீர், வாதம், மத மூத்திரம், சனம் இவைகளை உண்டாக்கும். கிணற்று சலம் சரீர கடுப்பு, அழற்சி, விக்கம், பித்தம் சுவாசம் முதலியவைகளை நீக்கும். ஏரிநீர் வாதத்தை விருத்தி செய்யும். ஊற்று நீரானது பித்தத்தையும் தாகத்தையும் அடக்கும். சமுத்திர ஜலமானது பிலீகம், குன்மம், குஷ்டம், உதரநோய், சுரம் முதலிய நோய்களைப் போக்கும்.

குளிர்ந்த நீர் சீத விரியமுள்ளது. இதனை வாதரோகம், கண்ட நோய், மந்தம், மலபந்தம், விக்கல் முதலிய நோய்களை உடையவர்கள் அருந்துதல் கூடாது. வெந்நீரை அருந்த, அதாவது நன்றாகக் காய்ச்சி அருந்துமளவு ஆற்றி அருந்த புளியேப்பம், சீதக்கட்டு, குன்மம், காசம், மந்தாக்கினி சேத்மரப்பிணிகள் முதலியவைகளை குணமாக்கும். இது உதரநோய், பாண்டு, சோபை, மேகம், விரணம், வாதம், அதிசாரம், கபநோய் முதலிய நோய்களை உடையவர்களுக்கு நல்லது. காய்ச்சி ஆறிய நீரானது பித்தாதி திரிதோஷம், பைத்தியம், ரத்தபித்தம், சுரம், வாந்தி, மூர்ச்சை, அதிசாரம், சன்னிபாதம், முதலிய நோய்கட்குச் சிறந்தது.

உணவுக்கு முன்பு நீரை அருந்த மந்தத்தையும், உணவுக்கு பின்பு அருந்த சீரணத்தையும், உணவுக்கு இடையிடையே அருந்த பல நோய்களையும் உண்டாக்கும். மற்றும் சூரிய அஸ்தமானத்திற்கு பின்பு அதிகமாக நீரை அருந்தக் கூடாது.

அன்னம் கஞ்சி இவைகளின் குணம்

அரிசியுடன் முறைப்படி நீர் சேர்த்து கொஞ்சங்கூட கஞ்சியில்லாமல் வடித்தெடுத்த அன்னத்திற்கு ஓதனமென்று பெயர். இதுவே சாதாரண அன்னமாம். இதனால் விரணரோகம், சேத்மரோகம், துர்பலம், தைல பாணத்தால் உண்டான தோஷம் முதலியன நீங்கும். தீபன முண்டாகும்.

ஒரு பங்கு அரிசிக்கு நான்கு பங்கு நீர் விட்டு கஞ்சியை வடிக்காமல் எடுத்த அன்னத்திற்கு விலேபி என்று பெயர். இது தேகத்திற்கு ஆரோக்கியம், பஞ்சாசனம் முதலியவைகளை உண்டாக்கி, கிரகணி முதலியவைகளைப் போக்கும்.

ஒரு பங்கு அரிசியுடன் பதினைந்து பாகம் நீர் சேர்த்து சிறிது சாதம் தென்படும்படி காய்ச்சிய கஞ்சிக்கு பேயம் என்று பெயர். இது பசி, தாகம், ஆயாசம், துர்பலம், சுரம், வாதம் இவைகளைத் தணித்து பலிதீபனத்தை யுண்டாக்கும்.

ஒரு பங்கு அரிசியுடன் பதினைந்து பங்கு நீர் சேர்த்துக் கொஞ்சங்கூட அன்னம் தெரியாமல் சுத்த கஞ்சி சலம்போல் காய்ச்சிய கஞ்சிக்கு மண்டமென்று பெயர். இது தாகம், ஆயாசம், தோஷம் இவைகளை நீக்கும். தாதுவிருத்தி, தீபனம், வியர்வை இவைகளை யுண்டாக்கும். இது மிகவும் மெலிந்தவர்களுக்கும் அதிசார நோயினருக்கும பயன்படும்.

தாளியங்கள்

பச்சரிசி:—இது பலத்தைத் தரும். பித்தத்தை தணிக்கும். வாதத்தை விருத்தி செய்யும். பத்தியத்திற்குதவாது.

புழுங்கலரிசி:—இது பாலர் முதல் விருத்தர் வரை யாவருக்கும் சோளிகட்கும் பொருத்தமான உணவாகும். பத்தியத்திற்காகும்.

கோதுமை :—இது பலம், சுக்கிலம், பித்தம், இவைகளை விருத்தி செய்யும். வாதத்தையும் பிரமேகத்தையும் நீக்கும். சூலியம், மதுமேகம் முதலிய நோயினருக்கு நல்ல உணவாகும்.

சோளம் :—இதனால் தினவு, விரணம், கரப்பான் அதிகரிக்கும். நல்ல மருந்தும் கெடும் என்க.

சேம்வரகு :—இது வாதம் அல்லது பித்த வாதத்தை உண்டாக்கும். பலம் ஏற்படும். இது கப நோய்களுக்கு சிறந்த உணவாகும்.

கும்பு :—இதனால் சொறி சிரங்கு உண்டாகும். ஆனால் உடலுக்கு பலத்தைத் தரும். சரீரத்தின் வெப்பத்தைத் தணிக்கும். குளிர்ச்சி யென்பர்.

கூடலை :—இது வயிற்றுவலி, வயிற்றுப்புசம், மந்தம், இரகணி, மயக்கம், மூலவாயு முதலியவைகளை உண்டாக்கும். மருந்தின் குணத்தைக் கெடுக்கும்.

உளுந்து :—இது பித்தாதிக்கம், எலும்புருக்கி முதலியவற்றை நீக்கும். கபவாதம், இடுப்பிற்கு பலம், வீரியவிருத்தி முதலியவற்றை உண்டாக்கும்.

துவரை :—இது சாதாரணமாக உடலுக்கு பலத்தைத் தருவதுடன் சிறந்த பத்திய உணவாம். இது சுரம், சன்னி, முதலிய நோயிலும், மிக மெலிந்தவர்களுக்கும், கடும்பத்தியத்திற்கும் உதவும் என்க.

பச்சைப் பயறு :—இது பித்தத்தை நீக்கும். வாய்வை யுண்டாக்கும். சீதளமென்பர்.

பட்டாணி :—இது நுரையீரலுக்கும், இருதயத்திற்கும் வலிமையைத் தரும். ஆனால் வாய்வையும், மந்தத்தையும் உண்டாக்கும்.

மொச்சை :—திரிதோஷங்களை விருத்திசெய்யும். உஷ்ணத்தைத் தணிக்கும். மலத்தைப் பெருக்கும்.

பார்லியரிசி :—இது சிறுநீரைப் பெருக்கும். மந்த பேதியைக் கட்டும். பசியைத் தணிக்கும். சுரம் முதலிய நோயாளிகளுக்கு கஞ்சிக்கு உதவும்.

கீரைகள்

சிறுகீரை :—நீரைப் பிரிக்கும், மருந்தையும் விஷத்தையும் முறிக்கும். சிறிது உஷ்ணத்தை யுண்டாக்கும்.

அறு கீரை :—இதனால் வாதமும் கபமும் மட்டாகும், மலம் இளகும். வீரிய விருத்தியுண்டாகும்.

அரைக்கீரை :—இதனால் பித்தம் தணியும், நீரை வாட்டும்.

அகத்திக் கீரை :—இதனால் பித்தம் தணியும், மலமும் நீரும் போகும். மருந்தையும் விஷத்தையும் முறிக்குமென்க.

முருங்கைக் கீரை :—பித்தத்தை தணிக்கும், மலத்தை இளக்கும்.

புதினா :—இதனால் அரோசகம் வாந்தி பரிபின்னம் நீங்கும். சீரணசக்தி யுண்டாகும்.

கருவேப்பிலை :—இதனால் அரோசகம், பேதி, சுரம், பித்தம், பரிமந்தம் இவைகள் போம்.

கொத்தமல்லிக் கீரை :—இதனால் அரோசகம், பித்தாதிக்கம் போம். சுக்கிலம் பெருகும்.

துத்திக் கீரை :—வெட்டையைத் தணிக்கும், விரணத்தை யாற்றும்.

சுக்கான் கீரை :—உஷ்ணத்தை தணிக்கும், சீரண சக்தியையும், இரத்த சுத்தியையும் உண்டாக்கும்.

சிறுபசலைக் கீரை :—உஷ்ணத்தை தணிக்கும், கபத்தை விருத்தி செய்யும், புணர்ச்சி பிச்சையை உண்டாக்கும்.

புளிச்சக் கீரை :—பித்தம் தணியும், வீரிய விருத்தியாம்.

சோகிக் கீரை :—வாய்வையும், உதிரச் சிக்கலையும் போக்கி, சீரணசக்தியை உண்டாக்கும்.

புளியாரைக் கீரை :—இதனால் உஷ்ணமும் பித்தமும் சமனப்படும்.

பொன்னாங்காணிக் கீரை :—இதனால் உடலின் உஷ்ணம் தணியும், கண்பலுக்கு ஒளியும், உடலுக்கு பலமும் மேனிபு முண்டாகும்.

மணலிக் கீரை :—இது வாத பித்த கப நோய்களை தணிப்பதுடன் கிருமிகளை மடியச் செய்யும், பத்தியத்திற்குதவும்.

மணத்தக்காளிக் கீரை :—வெட்டையைத் தணிக்கும், வாய்ணத்தையாற்றும், மலத்தை இளக்கும், நீரைப் பிரிக்கும்.

காசினிக் கீரை :—இது இரத்தத்தை சுத்திசெய்வதுடன் இரத்த விருத்தியையும் உண்டாக்கும், மலத்தையும் நீரையும் பிரிக்கும்.

வெந்தயக் கீரை :—இது வயிற்றுவலி, பரிமந்தம், வாதகோபம், உஷ்ணத்தினால் ஏற்பட்ட இருமல் முதலியவைகளைப் போக்கும்.

பூனைக்கீரை, கீரைத்தண்டு :—இவைகள் உஷ்ணத்தை தணித்து நீரைப் பெருக்கும், சீதளமென்பர்.

முள்ளங்கிக் கீரை :—நீரைப் பெருக்கும், பரி நீபனத்தையும் சீரண சக்தியையும் உண்டாக்கும்

காய் கனி கிழங்குகள்

அத்திக்காய்:—இதனல் பிரமேகம், வெட்டை, வீரணம், சூலை முதலியன நீங்கும். மலம் கழியும்.

அவரைப் பிஞ்சு:—இது இரவு போஜனத்திற்கும், மருத்துண் பவர்களுக்கும் நிரிதோஷத்திற்கும் பத்திய உணவாகும்.

கத்தரிப்பிஞ்சு:—சுரம், பித்தம், கபம் நீங்கும். காயாக இருப் பின் சிறிது உஷ்ணத்தை செய்யும்.

கொத்தவரை:—இது அபத்திய உணவாகும். மருந்தை முறிக் கும், பித்தரிக்கம் பித்தவாயு, கபம் முதலியவைகளை உண்டாக்கும்.

சுண்டைக்காய்:—கைப்பு சுவையுள்ள காயால் மார்புசளி, இருமிரோய், வாதரிக்கம் முதலியன குணமாகும். இதன் வற்றல் தெபேதி, இரணி இவைகட்கு நன்று.

சுரைக்காய்:—இதனல் வாதபித்தம், மார்புரோய் பிளிகரோய் முதலியன உண்டாகும். பத்தியத்திற்காகாது. தினமென்பர்.

பூசனிக்காய்:—இது உஷ்ணரிக்கம், மிகு பித்தம் இவைகளை நீக்கும். கபத்தையும் பலையையும் உண்டாக்கும். உடலுக்கு வன்மை தரும்.

பாகற்காய்:—இதனல் இருமி ரோய், நிரிதோஷ ரோபம், பாத ரசதோஷம் முதலியன குணமாகும். விரேசனத்தை புண்டாக்கும்.

பீர்க்கங்காய்:—இதனல் பித்தமும் தினமும் அதிகரிக்கும்.

புடலங்காய்:—இதனல் கபம், பித்தம், சக்கிலம் இவைகள் அதி கரிக்கும்.

முருங்கைக்காய்:—இதனல் கபம் நீங்கும். வித்து கட்டும். பத்திய உணவாம்.

வாழைக்காய்:—இதனல் வாந்தி, பித்தம், பேதி இவைகள் குணமாகும். இரத்த விருத்தியும் பலமும் உண்டாகும். வாதம் மிகும்.

வெண்டைக்காய்:—இதனல் அதிசாரம் இரணி, தெபேதி முதலியன குணமாகும். வித்துவைக்கட்டும். கபவாத முண்டாகும்.

கலியாணபூசனிக்காய்:—உட்காய்ச்சல், பித்தம், மூத்திர கிரிச் சரம், அல்லி தாதுகதசரம், இடுமருந்து தோஷம் முதலியன போம். வாதம் மிகும்.

வாழைப்பழம்:—இதனல் பாண்டு, பித்தப்பிணிகள் முதலியன நீரும். அதிகமாக உண்ணில் மந்தத்தை புண்டாக்கும். மலத்தைப் போக்கும்.

பலாப்பழம்:—இதனல் வாதபித்த கபப் பிணிகள் யாவும் உண் டாகும். மிக்க உஷ்ணத்தையும் கரப்பானையும் உண்டாக்கும்.

மாம்பழம்:—இதனல் சொறி சிரங்கு, கரப்பான், வயிற்றுவலி, தெபேதி முதலியன உண்டாகும். பரிதாபனம் மட்டாகும்.

மாதுளம்பழம்:—இதனல் வாந்தி, தாகம், கபம், விக்கல், மார் தம், சுரம், உஷ்ணரிக்கம், பித்தாதிக்கம், இரத்தக் குறைவு முதலி யன நீங்கும். மலத்தைக் கட்டும்.

உலர்ந்த திராட்சைப்பழம்:—இது மேக அழலையை தணிக்கும். மலத்தை இளக்கும். உதிரப் பெருக்கை புண்டாக்கும்.

ஆள்வள்ளிக் கிழங்கு:—இதனல் வாதாதிக்கம், நிரிதோஷ தொந் தம், குன்மம் அக்கினி மந்தம் முதலியன உண்டாகும்.

உருளைக்கிழங்கு:—இது பலத்தை தரும், வாய்வை கண்டிக் கும், மந்தத்தை புண்டாக்கும்.

சாராக்கருணைக் கிழங்கு:—இதனல் வாதரோய், இரத்த மூலம், அக்கினி மந்தம் முதலியன குணமாகும். பத்திய உணவாம்.

சேப்பங் கிழங்கு:—இது கபத்தை விருத்தி செய்யும். மருந்தின் குணத்தை கெடுக்கும்.

இஞ்சி:—இதனல் சந்நிசுரம், வாந்தி, பேதி, சூலை, வாதாதிக் கம், காசம் போம். பரிதாபனத்தையும் சோண சக்தியையும் உண்டாக் கும்.

மஞ்சள்:—இதனல் தலைவலி, சலதோஷம், வலி, விக்கம், வி ரணம், வாந்தி முதலியன போம். பரிதாபனமும் புருஷவசியமும் உண் டாகும்.

முள்ளங்கி:—இதனல் குன்மம், சூலை, குடல்வாதம், வாய்வு, கரப்பான் மூலக் கடுப்பு, கபம் முதலியன குணமாகும். பரிதாப னத்தையும் சிறுநீரையும் அதிகரிக்கும்.

வாழைக் கிழங்கு அல்லது தண்டு:—இது சிறுநீரை பெருக்கும். கல்லடைப்பு, மகோதரம், மூத்திரக்கிரிச்சரம். சோபை முதலிய நோய்கட்குச் சிறந்தது.

வெங்காயம்:—இதனல் தேக உஷ்ணம், மூலம், ரத்த பித்த நோய், சிரங்கு முதலியன குணமாகும்.

ஆல்பகோராப்பழம்:—இது உஷ்ணத்தையும், பித்தத்தையும், அரோசகத்தையும் நீக்கும். மலத்தை இளக்கும்.

இளநீர்:—இது சூட்டைத் தணிக்கும், நீரைப்பெருக்கும், பித்த தோபத்தையும் கபாதிகத்தையும் அடக்கும்.

எலுமிச்சம்பழம்:—இதனல் பித்தாதிக்கம். பைத்தியம், கண் நோய், வாந்தி தாகம், பரியின்மை, அஜீரணம், பேதி முதலியன குணமாகும்.

பழம்புளி:—பழைய புளியினால் நிரிதோஷம், வாதரோய், சூலை, வாந்தி, உஷ்ணதிக்கம் முதலியன குணமாகும்.

பிரண்டை:—இதனால் பசிமந்தம், அஜீரணம், குன்மம், அதிசாரம், கபதோஷம், ரத்தமூலம் முதலியன குணமாகும்.

பச்சைமிளகாய்:—இதனால் வாதாதிக்கம், தத்திரோகம், இடுப்பு வலி சீதள சுரசந்நிபாதம் முதலியன குணமாகும்.

விளாம்பழம்:—விளாம்பழத்தினால் சுவாசம், காசம், கபாதிக்கம், பித்தாதிசாரம், முதலியன குணமாகும். பல நோய்களை முண்டாகும்.

வெள்ளைப்பூண்டு:—இதனால் வாதம், சன்னிபாதம், கபாதிக்கம், சீதபேதி, நீரேற்றம், முதலியன குணமாகும்.

கரும்பு:—கரும்பின் சாற்றால் வாய்குமட்டல், வாந்தி, விக்கல் பித்த நோய்கள் முதலியன குணமாகும்.

சர்க்கரை:—இதனால் பித்த தோஷம், வமனம், அரோசகம் குணமாகும். கபத்தை இளக்கும். மருந்துகளுக்கு சிறந்த அனுபானமாகும்.

கற்கண்டு:—இதனால் கபதோஷம், வாந்தி, காசம், வெப்பம் முதலியன குணமாகும்.

பனங்கற்கண்டு:—இதனால் வெப்பம், மூத்திர நிரிச்சாரம், உஷ்ணதாகம் முதலியன குணமாகும்.

பனைவெல்லம்:—இதனால் குன்மம், வாந்தி, அரோசகம், நிரிதோஷ தொந்தம் முதலியன குணமாகும்.

மூலிகைப் பொருட்கள்

ஆடாதோடை:—இதற்கு கோழையை அகற்றுஞ் செய்கையும், இலையை யகற்றுஞ் செய்கையு முண்டு. இதனால் இருமல், இரைப்பு, இரத்தபித்தம் முதலியன குணமாகும். இதன் இலைச்சாரம் ½-தேக்கரண்டி வீதம் தேனை கூட்டிக் கொடுக்க இருமல் கபக்கட்டு முதலியன குணமாகும். ஆடாதோடை இலையுடன் சிறிது நிப்பிலி, அதிமதுரம், சிற்றரத்தை முதலியவைகளைச்சேர்த்து முறைப்படி குடிநீரிட்டும் வழங்க முற்கூறிய நோய்கள் குணமாகும்.

ஆமணக்கு இலை:—இதற்கு வாதத்தை அடக்குஞ் செய்கையும், பாலைப் பெருகுஞ் செய்கையும் உண்டு. இந்த இலையை குறைத்து ஆமணக்கு நெய் விட்டு வதக்கி கீல்வாயு, வாதாந்த வீக்கம் இவைகட்கு ஒற்றிட மிட்டுவர குணமாகும். ஆமணக்கிலையை ஆமணக்கு நெய் விட்டு வதக்கி ஸ்தனங்களில் வைத்துக்கட்ட பால் சுரப்பு புண்டாகும்.

துளசி:—இதற்கு கோழையகற்றுஞ் செய்கையுண்டு. இதனால் இருமல், இரைப்பு, சளிதோஷம், மார்புசளி முதலியன குணமாகும்

இதன் இலைச்சாரம் செய்து குழந்தைகட்கு 10-துளி வீதமும், பெரியவர்கட்கு ½-தேக்கரண்டி வீதமும் தேன் சேர்த்துக் கொடுத்துவர முற்கூறிய பிணிகள் குணமாகும். மற்றும் இது கோரோசனை மாத்திரை கஸ்தூரி மாத்திரை முதலிய கபப் பிணிகட்கு வழங்கும் மருந்துகளுக்கு சிறந்த அனுபானமாகும்.

கண்டங்கத்திரி:—இதற்கு கோழையகற்றுஞ் செய்கையும், சிறுநீரைப் பெருக்குஞ் செய்கையுமுண்டு. இதனால் சுரம், காசம், சுவாசம் முதலியன குணமாகும். இதன் இலைச்சாறு ½-முதல் 1-தேக்கரண்டி வீதம் கொடுத்துவர சுவாசம், காசம், கபக்கட்டு முதலியன குணமாகும். இதன் சமூலத்தை குடிநீரிட்டுக் கொடுக்க சுரசுவாசம், காசம் குணமாகும்.

கரிசாலை:—இது உடலைத் தேற்றும். இதில் இரும்பு சத்து உள்ளது. இதனால் பாண்டு, சோபை, காமாலை, காசம் முதலியன குணமாகும். கரிசாலை இலையுடன் சமன் மிளகு சேர்த்து அரைத்து 1-2 கண்டக்காய் அளவு மோரில் கொடுத்துவர பாண்டு, சோபை, காமாலை முதலியன குணமாகும். கரிசாலைச்சாற்றுடன் சமன் நல்லெண்ணெய் கூட்டிப் பதமுறக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு ஒரு தேக்கரண்டி வீதம் உண்டுவர காசம் குணமாகும். இதன் இலைச்சாற்றுடன் சமன் நெல்லிக்காய் சாறும், நல்லெண்ணெயும் சேர்த்து பதமுறக் காய்ச்சி வடித்து முடித்தலைமாக வழங்கிவர உடல் காய்கை, கண்ணெரிச்சல், கண்காசம், செவிநோய் முதலியன குணமாகும். இதன் இலை கற்கத்தை கற்பமாகவும் உண்பதுண்டு.

கீழ்காய் நெல்லி:—இதற்கு துவர்ப்பு, குளிர்ச்சி செய்கைகள் உண்டு. இதனால் தாதுவெப்பம், பிரமேகம், காமாலை முதலியன குணமாகும். இதன் சமூலத்தை அரைத்து கற்கமாக்கி கொட்டைப் பாக்களவு நிணம் இருவேளை மூன்று நாள் மோரில் உப்பில்லா பத்தியத்துடன் கொடுத்துவர காமாலை குணமாகும். மற்றும் இதனால் வெண்கோ, வெட்டை, பெரும்பாடு, முதலியவைகளும் குணமாகும். இதன் கற்கத்தை நல்லெண்ணெயிலிட்டு தைலமாக காய்ச்சி முடித்தைலமாக வழங்க பித்தாதிக்கம், விழிநோய்கள் முதலியன குணமாகும்.

குப்பைமேனி:—இதற்கு வமனத்தை உண்டாக்கி கோழையை வெளிப்படுத்தும் செய்கையும், குடலிலுள்ள கிருமிகளைக் கொல்லும் செய்கையும் உண்டு. இதனால் கபாதிக்கம், சர்வவிஷம், புண், முதலியன குணமாகும். இதன் இலைச்சாற்றில் குழந்தைகட்கு ஒரு தேக்கரண்டி வீதமும், பெரியவர்கட்கு ½-அவுன்ஸ வீதமும் கொடுக்க பேதியாகும். மலக்கிருமிகளை வெளிப்படுத்தும். கபத்தையும் வெளிப்படுத்தி இருமலைத் தணிக்கும். இலையை உலர்த்திச் சூரணித்து

10-குன்றி எடை வீதம் தேனில் கொடுத்துவர இருமல், இரைப்பு, கபரோகம் முதலியன குணமாகும். இதன் இலையுடன் சிறிது மஞ்சள் சேர்த்தரைத்து, சொறி, சிரங்கு, புண், விஷக்கடிகள் முதலிய வைகட்கு மேலுக்கு பூச குணமாகும்.

உத்தாமணி:—இதற்கும் வமனத்தை உண்டாக்கி கோழையை வெளிப்படுத்தும் செய்கையுண்டு. இதனல் கபக்கட்டு, சுவாசம், மார்தம், மலக்கிருமி, குன்மம் முதலியன குணமாகும். இதன் சாற்றில் 1-2 தேக்கரண்டியாவது, அல்லது இதன் குடிநீரில் சங்களவாவது குழந்தைகட்கு கொடுக்க வாந்தியாகி கோழை வெளிப்படும். இருமல், சுவாசகாசம் முதலியன குணமாகும். இன்னும் இது வயிற்றிலுள்ள மலக்கிருமிகளை வெளியாக்கி, மந்தத்தை நீக்கி, தீபனத்தை யுண்டாக்கும். இதன் சாற்றுடன் சிறிது உப்பும், வசம்புசுட்ட சாம்பலும் சேர்த்து கருக்குக் கியாழமாகச்செய்து குழந்தைகட்குக் காணும் அள்ளுமாந்தம், அசீரணபேதி முதலியவைகட்கு வழங்குவதுண்டு.

ஊமத்தை:—இதற்கு இலைகற்றி வேதனசாந்தினி செய்கைகளுண்டு. இதனல் கட்டி, வீரணம், நஞ்சுகளில் விஷம் முதலியன குணமாகும். இதன் இலைச் சாற்றுடன் சமன் தேங்காயெண்ணெய் சேர்த்து காய்ச்சி இரண்டொரு துளி வீதம் காதில் துளித்துவர காதுவலி குணமாகும். இன்னும் இத் தைலத்தை வீரணங்களுக்கும் மேற்பூசிவர விரைவில் ஆறும். இலையை ஆமணக்கெண்ணெயிட்டு வதக்கி பாவது அல்லது அரிசிமாவுடன் சேர்த்து களிபோல் கிளரியாவது வித்திரிகட்டிகள், வாதவீக்கம் இவைகளுக்கு வைத்துக்கட்ட, அல்லது ஒற்றிடமிட குணமாகும். இதன் இலை அல்லது பூவைப் பொடித்து புகைபிடிக்க சுவாசகாசம் குணமாகும்.

எருக்கு:—இதற்கு சுரமகற்றி, கபஹாரகரி, புழுக்கொல்லி முதலிய செய்கைகள் உண்டு. இதனல் முறைசுரம், கபரோகம், கிருமிரோய், வாதரோய், பாம்புவிஷம், எலிவிஷம் முதலியன குணமாகும். இலையை வதக்கி கட்டிகளுக்கு வைத்துக் கட்ட பழுத்துடையும். வாதரோய், வலி, விகசம் இவைகட்கும் ஒற்றிடமிடலாம். இதன் பூவுடன் சமன் எடை மிளகு சேர்த்தரைத்து மிளகளவு மாத்திரையாகச் செய்து கொடுக்க சுவாசகாசம் முறைசுரம் முதலியன குணமாகும். மேற்பட்டையை குடிநீரிட்டுக் கொடுக்க முறைசுரம் குணமாகும். எருக்கம்பாலுடன சமன் எண்ணெய் சேர்த்து தைலமாக காய்ச்சி வாதக்குடைச்சல், இசிவு முதலியவைகட்கு பூசிப்பிடிக்க குணமாகும்.

சீந்தில்:—இதற்கு முறைசுரமகற்றி, பித்தமகற்றி, உடல்தேற்றி முதலிய செய்கைகள் உண்டு. இதனல் சுரம், பித்தரோய், இரத்தபித்தம், மேகம் முதலியன குணமாகும். இதனைத் தனியாகவாவது அல்லது பேய்புடல், பற்பாடகம், சோளக்கிழங்கு முதலியவற்றுடன் சேர்த்தாவது குடிநீரிட்டுக் கொடுக்க முறைசுரம், பித்த

சுரம் முதலியன குணமாகும். இதன் முற்றின கொடியினின்று 'சிந்திற்சர்க்கரை' என்ற சத்து தயாரிப்பதுண்டு. இதில் வேளைக்கு 2-முதல் 5-குன்றி வீதம் பாலில் கொடுத்துவர சுரம், உட்சுரம், பித்தரோகம், காமாலை, மதுமேகம், மூத்திரப் பிணிகள், சுரங்களுக்குப்பின் காணும் உடற்சோர்வு முதலியன குணமாகும்.

சித்திரமூலம்:—இதனல் மேகரோய்கள், வாதரோய்கள், குன்மம் முதலியன குணமாகும். இதன் வேர்ப்பட்டையை பால் விட்டரைத்த கற்கம் சிறு இலந்தைவிதைப் பிரமாணம் தினம் ஒரு வேளை வெள்ளாட்டுப் பாலில் கலந்த 5 அல்லது 7 நாள் பத்தியத்துடன் அருந்திவர மூலம், இரத்தி, அரையாப்பு, புரையோடும் வீரணம், மேகசூலை முதலியன குணமாகும். சித்திரமூலவேர்ப்பட்டை பச்சையாக எடுத்து அரைத்து எண்ணெயிலிட்டுக் காய்ச்சி முடித்தலமாக உபயோகிக்க தலைபாரம், சீர்சீரசம், வாதப்பிணிகள் முதலியன குணமாகும்.

நாயுருவி:—இதனல் மந்தம், அதிசாரம், கபரோய், உதிரச்சிக்கல், குன்மம் முதலியன குணமாகும். இதன் இலைச்சாறு அல்லது குடிநீர் வயிற்றுவலி, குன்மம் இவைகட்கு வழங்கப்படும். இதன் வேர் சூரணத்துடன் மிளகுச் சூரணம் அல்லது திப்பிலிச் சூரணம் சேர்த்து தேனில் அருந்த இருமல் தீரும். விதை கற்கத்தை அரிசி கழுவிய நீரில் கரைத்து அருந்திவர இரத்தமூலம், அதிசாரம் முதலியன குணமாகும். இதன் சமூலத்தைச் சுட்டு சாம்பலாக்கி 5 குன்றி எடை வீதம் வெல்லத்தில் கொடுக்க உதிரச் சிக்கலை நீக்கும்.

துத்தி:—இதற்கு மலத்தை இளக்கல், உள்ளழலை ஆற்றல் முதலிய செய்கைகள் உண்டு. இதனல் மூலம், கட்டி, வீரணம் முதலியன குணமாகும். இதன் இலையை சமைத்தாவது அல்லது குடிநீரிட்டாவது அருந்த மூலச்சூடு, மலச்சிக்கல் முதலியன தீரும். இலையை ஆமணக்கு எண்ணெய்விட்டு வதக்கி மூலத்திற்கு ஒற்றடமிட்டு, அவ்விடத்திலேயே வைத்து கட்டிவர வேதனையணியும். இதன் இலைச் சாற்றுடன் பச்சரிசிமா சேர்த்து களிக்களரி கட்டிகளுக்கு வைத்துக்கட்ட பழுத்துடையும்.

வல்லாரை:—இதற்கு உடலைத் தேற்றல், உடலுக்கு பலந்தருதல், மேகப் பிணிகளை விலக்கல் முதலிய செய்கைகள் உண்டு. இதனல் பித்தம், மேகரோய், குட்டம், மூலரோப்பு பலவீனம், ஞாபகசக்தி குறைவு முதலியன குணமாகும். இதன் இலைச்சூரணம் 2-முதல் 5-குன்றி எடை வீதம் ஒரு மண்டலம் அருந்த சர்ம வியாதிகள், மேகரோய்கள், வைதியம், ஆரம்ப குட்டம் முதலியன குணமாகும். இதன் இலைச்சாற்றுடன் நெய் சேர்த்து கிருதமாக காய்ச்சி அருந்திவர ரோப்பு பலவீனம், ஞாபகசக்திக் குறைவு, கண்ம், மார்தம் இசிப்பு முதலியன குணமாகும்.

காக்கட்டான்:—இதற்கு மலத்தைப் போக்கல், நெறிகளைப் பெருக்கல் முதலிய செய்கைகள் உண்டு. இதனல் மலக்கட்டு, மலச் மிருமி, பிரமேகம், பாகைக்கள்வாதம் முதலியன குணமாகும். இதன் விதையை இளவறுப்பாய் வறுத்திடித்துச் சூரணம்செய்து 15-20 குன்றியளவு கொடுக்க வல்ல பேதியாகும். இதன் வேர் கற்கம் சிறு கழற்சியளவு அல்லது வேளை வறல் குடிநீராக செய்தும் வழங்கலாம். இதனல் பேதியாவதுடன் சுரம், பாகைக்கள் வாதம், வாதரக்தம், மலக்கிருமி முதலிய நோய்கள் குணமாகும்.

புங்கு:—இதனல் இரத்தி, புண், கப்பான், சொறி சிரங்கு முதலிய சர்ம வியாதிகளும், மேகநோய்களும் குணமாகும். புங்கம் பூவை வறுத்திடித்துச் சூரணித்து நிசுகடி பிரமாணம் தினம் இரு வேளையாக ஒரு மண்டலம் அருந்த மேற்கூறிய நோய்கள் குணமாகும். புங்கம்பாலுடன் நெய்கரப்பான் சேர்த்து வதனமாக காய்ச்சி வடித்து விரணங்களின்மேல் தடவிவர விரைவில் ஆறும்.

ஆவாரை:—இதற்கு சர்தோசனகாரி, பலகாரி செய்கைகள் உண்டு. இதனல் வெண்மை, வெட்டை, உட்சூடு, நீரிழிவு, இரணி முதலியன குணமாகும். இதன் உலர்ந்த பூ அல்லது பட்டையை நூபலம் எடுத்து முறைப்படி குடிநீரிட்டுக் கொடுக்க நீர்ச்சுருக்கு, பிரமேகம், நீரிழிவு, ரக்தம், நேகரணை, இரணி பெரும்பாடு முதலியன குணமாகும்.

ஆவாரை இலை, வேர், பட்டை, பூ காய் என்ற பஞ்சாங்கங்களையும் சமனெடையாக சூரணித்துக் கலந்து வேளைக்கு ½-முதல் 1-வராகனெடை வீதம் தினம் இருவேளையாக அருந்திவர மதுமேகம் நீரிழிவு முதலியன குணமாகும்.

அவுரி:—இதற்கு கிருமிநாசினி, வெப்பகற்றி, தஞ்சகற்றி செய்கைகள் உண்டு. இதனல் சுரம், சன்னி, விஷக்கடி, நாவாக்தமூல வியாதி முதலியன குணமாகும். அவுரி இலை அல்லது வேளைக் குடிநீரிட்டுக் கொடுக்க எல்லா விஷங்களையும் முறிக்கும். அவுரிவேருடன் சமன் மிளகு சேர்த்து குடிநீரிட்டுக் கொடுக்க வாதசுரம், சன்னிபாதசுரம், விஷக்கடிகள், அதனலுண்டான சுரம்முதலியன குணமாகும்.

இலக்கள்ளி:—இதற்கு கபஹரகாரி விரேசனகாரி செய்கைகள் உண்டு. இதனல் குழந்தைகட்கு உண்டாகும் கருங்கிரந்தி, செங்கிரந்தி கபரோகம், மாந்தம், மலக்கட்டு முதலியன குணமாகும். இதன் இலையை வதக்கிப் பிழிந்தச் சாறு 2-3 துளி காதில்விட காதுவலி குணமாகும். இதன் இலைச் சாற்றை குழந்தைகட்கு அரை தேக்கரண்டி வீதம் தாய்ப்பாலில் கொடுக்க இருமல், இரைப்பு, கபக்கட்டு, கரப்பான்முதலியன குணமாகும். மலம் கழியும்.

கொடிக்கள்ளி:—இதன் பாலுடன் வேப்பெண்ணெய் சேர்த்து காய்ச்சி வாத நோய்களுக்கு மேலுக்கு பூசிப்பிடிக்க குணமாகும்.

நொச்சி:—இதன் வேர் குடிநீர் அல்லது வேர் சூரணம் 5-10 குன்றி எடை தேனில் கொடுக்க சுரம், வாதநோய், இசிவு, வாத சுரம் முதலியன குணமாகும். இதன் இலைச்சாற்றுடன் எண்ணெய் சேர்த்துக் காய்ச்சி முழுத்தலமாக வழங்க சிரோபாரம், தீர் சோலை, பிரசம் குணமாகும்.

பொடுதலை:—இதன் இலையை வதக்கி, வறுத்த ஓமத்துடன் சேர்த்தரைத்து, தீர் சேர்த்த குடிநீரிட்டு சங்களவு வீதம் குழந்தைகட்கு வழங்க அஜீரணபேதி, மாந்தம், முதலியன குணமாகும். இதன் இலை கற்கத்தை நல்லெண்ணெயிலிட்டு சூரியபுடமாக வைத்தெடுத்த மேலுக்கு தடவிவர தலையில் உண்டாகும் பொடி, புழுவெட்டு, மயிர் உதிர்தல் முதலியன குணமாகும்.

அம்மாம் பச்சரிசி:—இதன் சமூலத்தை அரைத்த கொட்டைப் பாக்களவு பால் அல்லது மோரில் தினம் ஒரு வேளை வீதம் ஏழு நாள் கொடுக்க வெள்ளை, வெட்டை குணமாகும்.

சிறு பீளை:—இதன் இலைச்சாறு ஒரு அவுன்சு வீதம் கொடுக்க நீடைப்பு கல்லடைப்பு, பெரும்பாடு முதலியன குணமாகும்.

நல்வேளை:—இதன் இலைகற்கம் அல்லது குடிநீர் கொடுக்க வாதநோய்கள் குணமாகும். இதன் இலைச்சாற்றுடன் எண்ணெய் சேர்த்த காய்ச்சி மேலுக்கு தேய்த்துப் பிடிக்க வாதப் பிடிப்பு, கூடைச்சல் முதலியன குணமாகும்.

வாத நாராயணன்:—இதற்கு இலகு மலகாரி, வாதஹரகாரி செய்கைகள் உண்டு. இதனல் வாத நோய்கள் குணமாகும். இதன் இலையை வாத நோய்களுக்கு ஒற்றிடமிட பயன்படும். மற்றும் இதனைச் சேர்த்து தைலமாகக் காய்ச்சி வாத நோய்கட்கு உள்ளுக்கும் வழங்குவதுண்டு.

தழுதாழை:—இதன் இலையை நீரிலிட்டுக் காய்ச்சி வாத வலியுள்ள பாகங்களில் தாரையாக விட்டு வர நோய் குணமாகும். இதன் இலை அல்லது வேரை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி வாதப் பிடிப்புளுக்கு தடவுவதுண்டு.

விழுதியிலை:—இதன் இலையைக் குடிநீரிட்டு அத்துடன் சிறிது ஆமணக்கு நெய் சேர்த்து கொடுக்க பேதியாகி, வாதநீரை வெளிப்படுத்தி, வாதப் பிணிகளை குணமாக்கும். இதன் இலையை நீரிலிட்டுக் காய்ச்சி வாதவலியுள்ள பாகங்களில் விட்டுவர வலி குணமாகும்.

முட்சங்கன்:—இதன் இலைச்சாறு கோழையை வெளிப்படுத்தி இருமலை தணிக்கும். இதன் வேரைக் குடிநீரிட்டுக் கொடுக்க முறை சுரம், வாதநோய், சூன்மம், சோபை, குழந்தைகட்கு காணும் மாந்தம், சுரம், இருமல் முதலியன குணமாகும்.

சங்கங் குப்பி:—இதன் இலைக் குடிநீர் முறை காதைக் குணமாக்கும். மற்றும் இதனால் இரத்தம் எடுப்பட்டு, மேக நோய்கள் குணமாகும்.

அசோகு:—இதன் மரப்பட்டையை இடித்து சாறு எடுத்தாவது அல்லது குடிநீரிட்டாவது கொடுத்தால் சொத்தபேதி, பெரும்பாடு முதலியன குணமாகும். இது கருப்பப்பைக்கு உரத்தைத் தரும்.

அத்தி:—அத்திப் பிஞ்சை சமனத்துண்ண மூலச்சூடு, வயிற்றுக் கடுப்பு முதலியன தீரும். அத்திப்பட்டையைக் குடிநீரிட்டு வழங்க சொத்தபேதி, பெரும்பாடு, பிரமேகம், முதலியன குணமாகும். அத்திப்பழம் மனத்தை இனக்கும்.

இஞ்சி:—இதற்கு வயிற்றிலுள்ள வாய்வை கண்டித்து, பசி தீயையும், ஜீரணத்தையும் உண்டாக்கும் செய்கைகள் உண்டு. இதனால் சுரம், சன்னி, வாத கோபம், பித்தாதிக்கம், வாந்தி, மயக்கம், அஜீரணம், பேதி, கபம் முதலியன குணமாகும். இஞ்சிச் சாறு அல்லது இஞ்சி கற்கத்தில் நிப்பிலிச் சூரணத்தைச் சேர்த்துக் கொடுக்க இருமல், இரைப்பு, குன்மம், அஜீரணபேதி முதலியன குணமாகும். இஞ்சிச் சாறுடன் சமன் பாலும் சர்க்கரையும் சேர்த்து மணப்பாகு செய்து அருந்திவர பித்தாதிக்கம், வாந்தி, அரோசகம், அஜீரணம் முதலியன குணமாகும். இஞ்சிச் சாறுடன் சமன் பாலும், நல்லெண்ணெயும் சேர்த்து தைலமாக காய்ச்சி முடித்தைலமாக உபயோகிக்க சீர் பிளசம், தலிவலி, முதலியன குணமாகும்.

எலுமிச்சை:—இதற்கு பித்தாதிவி, குளிர்ச்சியுண்டாக்கி செய்கைகளுண்டு. இதனால் பித்த மயக்கம், வாந்தி, தாகம், முதலியன குணமாகும், எலுமிச்சம்பழச் சாற்றுடன் சர்க்கரை சேர்த்து சீருடன் கலந்து குடிக்க பித்த மயக்கம், வாந்தி, தாகம் முதலியன குணமாகும். சீரகத்தை தேன் விட்டு வறுத்து, அத்துடன் பழச்சாறு சேர்த்து நீர்விட்டு குடிநீரிட்டு வழங்க சோர்வாளம் முதலிய பேதி மருந்துகளினால் ஏற்பட்ட அடங்காத வாந்தியும் பேதியும் குணமாகும்

தாயிலை:—இதனால் விரணம் இரத்தி முதலியன குணமாகும். பெண்களுக்குண்டாகும் உதிரச் சிக்கல் தீர்க்கும். இந்த இலையை அரைத்து இரத்தி வினைவு கட்டி முதலியவைகட்கு மேலுக்கும் போட்டுவர விரைவில் ஆறும். உலர்ந்த தாயிலையுடன் சமனெடை காட்டுச் சீரகஞ் சேர்த்து இடித்துக் கல்வத்திலிட்டு வெள்ளாட்டுப் பிச்சி நீர் விட்டு மணிக்காட்கள் அரைத்து நெற்முன் கொட்டைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வேளைக்கு 1-மாத்திரை வீதம் தினம் 2-வேளையாக ஒரு மண்டலம் அருந்திவர வெண் குட்டம் குணமாகும்.

பிரமதண்டு:—இதனால் சொறி சிரங்கு, புண், மேகப்பிணிகள் முதலியன தீரும். இதன் இலைச்சாறு 2-முதல் 4, தேக்கரண்டி வீதம் தினம் ஒரு வேளையாக காலையில் அருந்திவர மேற்கண்ட நோய்கள் தீரும். இதன் பால் கண்ணோய்கட்கும், விந்து மேக நோய்கட்கும் உதவும்.

இம்பூரல்:—இதனால் இருமல், இரத்தகாசம், பித்த கோபம், இரத்தவாந்தி முதலியன குணமாகும். இதன் வேரை உலர்த்தி இடித்துச் சூரணித்து நிசுகடி பிரமாணம் கற்கண்டு தூள் சேர்த்து தினம் இருவேளையாக பாலில் அருந்திவர மேற்கண்ட நோய்கள் குணமாகும்.

நாவலி:—இதன் பட்டையை சூரணித்தாவது குடிநீரிலிட்டாவது அருந்திவர சீதபேதி, இரத்தபேதி, பெரும்பாடு முதலியன குணமாகும். இதன் கொட்டையைத் தூள்செய்து கல்வத்திலிட்டு ஆடுதின்னுப்பாளை சாறுவிட்டு இரண்டு மூன்று தரம் அரைத்து குன்றிமணிவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வேளைக்கு 1-மாத்திரை வீதம் தினம் 2-வேளையாக ஒரு மண்டலம் அருந்திவர நீரிழிவு மதுமேகம் குணமாகும்.

நெருஞ்சில்:—இதற்கு சிறுநீரைப் பெருக்குஞ் செய்கையுண்டு. இதனைத் தனியாகவாவது அல்லது சீர்முள்ளி, சுரைக்கொடி, சிறுபீளை, போன்ற சக்குகளுடனாவது சேர்த்து முறைப்படி குடிநீரிட்டுக் கொடுப்பதுண்டு. இதனால் நீர்கன்ருக போவதுடன் நீர்சுருக்கு, நீரடைப்பு, கல்லடைப்பு, சோபை, மகோதரம் முதலியன குணமாகும்.

உடைச் சக்குகள்

சுக்கு:—இதற்கு வயிற்றிலுள்ள வாய்வை அகற்றுஞ் செய்கையும், பசிதீயைத் தூண்டுஞ் செய்கையும் உண்டு இதனால் வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், அசீரணம், பேதி, குன்மம், சூலை, வாய்வு முதலியன குணமாகும். சுக்குத்தூளில் நிசுகடிப் பிரமாணம் எடுத்து சமன் கற்கண்டு சேர்த்துப் பாலில் அருந்திவர வாய்வு தீரும். சுக்கிற்கு உப்பை அரைத்து கலசஞ்செய்து நெருப்பணலில் வாட்டவும். இப்படி 10-முறை செய்து இடித்துச் சூரணித்து வைத்துக்கொண்டு இதில் வேளைக்கு ½-முதல் ½-வராகனெடை வீதம் வெய்யில் அருந்திவர வயிற்றுவலி, வயிற்றுப்பிசம், அசீரணம், உஷ்ணபேதி, குன்மம், சூலை முதலியன குணமாகும்.

மிளகு:—இதற்கு முறைசுரமகற்றி, வாதமகற்றி செய்கைகள் உண்டு. இதனால் குளிர்சுரம், வாய்வு, கபம், அசீரணம் முதலியன குணமாகும். மிளகை இலவறுப்பாக வறுத்திடித்துச் சூரணத்தில் சமனுக்கு குன்றிமணி வீதம் சமன் கற்கண்டு தூள் கூட்டிப் பாலில் கொடுத்துவர இருமல், தொண்டை ரணம், வாய்வு, வயிற்றுவலி

முதலியன குணமாகும். மிளகைத் தனியாகவாவது அல்லது தும்பைப்பூவுடன் சேர்த்தாவது முறைப்படிக் குடிநீரிட்டுக் கொடுத்து வர குளிர்சுரம், முறைச்சுரம் முதலியன குணமாகும்.

நிப்பிலி:—இதற்கு வயிற்றிலுள்ள வாய்வை அகற்றல், பசித்தீயைத் தூண்டல், சிரசைசுத்தியை உண்டாக்கல் முதலிய செய்கைகள் உண்டு. இதனால் இருமல், இளைப்பு, கபக்கட்டு, தொண்டைநோய், அசீரணம், பேதி முதலியன குணமாகும். நிப்பிலியை இளவறுப்பாய் வறுத்திடித்த சூரணத்தில் நிசுகடி பிரமாணம் தேனுடன் சேர்த்து அருந்திவர இருமல், தொண்டைக்கட்டு, கபம் முதலியன குணமாகும். நிப்பிலியுடன் இரண்டு பங்கு சீரகம் சேர்த்து இளவறுப்பாய் வறுத்திடித்துச் சூரணித்து தேனில் கொடுத்துவர விக்கல், வாந்தி, அரோசகம், அசீரணபேதி, பசியின்மை முதலியன குணமாகும்.

கடுக்காய்:—இது துவர்ப்புச் சுவையை புடையதாக இருப்பினும் மலத்தைப் போக்கும் செய்கை புடையது. இதனால் வாதகபரோய்கள், காமாலை, பெருவயிறு, குன்மம், விரணம் முதலியன குணமாகும். கடுக்காய்த் தோலைக் குடிநீரிட்டு விரணம், இரத்தமூலம், பெரும்பாடு, வாய் ரணம் முதலிய நோய்களின் அவ்வவ் விடங்களிலைக் கழுவிவர நல்ல பலனைத் தரும். கடுக்காய்ச் சூரணம் ½-வராகனெடை அருந்த மலம் கழியும். கடுக்காய்ச் சூரணத்தில் வேளைக்கு 5-முதல் 10-குன்றி வீதம் காலைதோறும் நிலம 1-வேளை சாப்பிட்டுவர உக்கிரணம், வயிற்றுவலி, மூலம், குன்மம், வாதகப நோய்கள் முதலியன குணமாகும். கற்பமாகவும் பயன்படும்.

நெல்லிக்காய்:—பச்சை நெல்லிக்காய்க்குக் குளிர்ச்சியுண்டாக்கிச் செய்கையும், உலர்ந்த வற்றலுக்கு துவர்ப்புச் செய்கையும் உண்டு. இதுவும் மலத்தைப் போக்கும். பச்சை நெல்லிக்காய்ச் சாறுடன் சமன் சர்க்கரை சேர்த்து மணப்பாகு செய்து 2-முதல் 4-தேக்கரண்டி வீதம் அருந்திவர, வாந்தி, அரோசகம், இரத்தபித்தம், நீர்ச்சுருக்கு முதலியன குணமாகும். ஒரு தோலா நெல்லிவற்றை ஓர் இரவு வெந்நீரில் ஊறவைத்து மருநாள் சிறிது காய்ச்சி வடித்து பால் சர்க்கரை சேர்த்து சாப்பிட்டுவர பித்தாதிக்கம், உட்சூடு, முதலியன குணமாகும்.

தான்றிக்காய்:—இதற்கு துவர்ப்புச் செய்கையும், கோழையை அகற்றுஞ் செய்கையும் உண்டு. இதுவும் மலத்தைப் போக்கும். இதனால் சுவாசம், காசம், இரத்தபித்தம், சிலேஷ்மம் முதலியன குணமாகும். தான்றிக்காய்த் தோல் ½-பலம் எடுத்துச் சூரணித்துச் சமன் சர்க்கரை சேர்த்து நீரிலாவது அல்லது தேனுடனாவது அருந்திவர உஷ்ண இருமல், கபக்கட்டு, தொண்டை ரணம், நீர்ச்சுருக்கு, சிலேஷ்மம் முதலியன குணமாகும். தான்றிக்காய்த் தோலைக் குடிநீ

ரிட்டு வாய் கொப்பளித்துவர வாய் ரணம், பல்வலி முதலியன குணமாகும் விரணங்களைக் கழுவிவர விரைவில் ஆறும்.

சீரகம்:—இதற்கு வயிற்றிலுள்ள வாய்வை அகற்றல், பசித்தீயைத் தூண்டல், சிரசைசுத்தியை உண்டாக்கல், மலத்தைக் கட்டல் முதலியச் செய்கைகள் உண்டு. இதனால் அசீரணம், அதிசாரம், கிரகணி, பித்தாதிக்கம் முதலியன குணமாகும். சீரகத்தைத் தனியாகவாவது, அல்லது சிறிது மிளகு சேர்த்தாவது வறுத்து இடித்துச் சூரணித்து ½ அல்லது ½-வராகனெடை வீதம் நெய்யில் கொள்ள மந்தம், அசீரணம், பேதி முதலியன குணமாகும். சீரகத்தை இஞ்சிச் சாற்றிலும், பழச்சாற்றிலும் ஊறவைத்து உலர்த்தி இடித்துச் சூரணித்து சமன் சர்க்கரை சேர்த்துக் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு ½ முதல் 1-வராகனெடை வீதம் தினம் இருவேளையாக அருந்திவர பித்தாதிக்கம், வாந்தி, அரோசகம், அசீரணம் முதலியன குணமாகும். சீரகத்தை நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவர பித்தமயக்கம், சேத்மரோகம், தலைபாரம் முதலியன குணமாகும்.

கருஞ்சீரகம்:—இதற்கு வயிற்றிலுள்ள வாய்வை அகற்றல், சுரசுரப்பிக்கியை அகற்றல், கிருமிகளை நாசம் செய்தல் முதலிய செய்கைகள் உண்டு. இதனால் கரப்பான், விரணம், வயிற்றுப்பொருமல், குன்மம், கிருமிநோய், சுரசுரப்பிக்கல் முதலியன குணமாகும். இதனுடன் சமன் சக்கரை சேர்த்திடித்துச் சூரணித்து ½-வராகனெடை வீதம் நீரில் கொடுத்துவர வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, மார்புவலி, குன்மசூலை முதலியன குணமாகும். இதன் தனிச் சூரணம் ½-¼-வராகனெடை வீதம் தேனில் கொடுத்துவர சுரசுரப்பு, சுரசுரப்பு சூலை முதலியன குணமாகும். இதைக் காடிவிட்டரைத்து கரப்பான், சொறி சிரங்கு, சர்மப் படைகள் முதலியவற்றிற்குப் பூச குணமாகும்.

பெருஞ்சீரகம்:—இதுவே சோம்பு எனப்படும். இதனால் வெட்டை, நீர்சுருக்கு, அசீரணம், வயிற்றுப்புசம், குன்மம், இருமல், சுவாசம் முதலியன குணமாகும். இதனை இளவறுப்பாய் வறுத்திடித்துச் சூரணித்து ½-வராகனெடை வீதம் சமன் சர்க்கரை கலந்து அருந்திவரலாம். இதனை குடிநீர் அல்லது நீர் செய்தும் வழங்குவதுண்டு.

இலவங்கம்:—இதற்கு இசிவகற்றல், வயிற்றிலுள்ள வாய்வை அகற்றல், பசித்தீயைத் தூண்டல் முதலிய செய்கைகள் உண்டு. இதனால் பேதி, வாந்தி, கண்நோய், பல்வலி முதலியன குணமாகும். இதை நீர்விட்டரைத்து நெற்றியில் தடவ சலதோஷம், நீரேற்றம், தலைபாரம் முதலியன குணமாகும். இதன் ஊறல் குடிநீர் வாந்தி, பேதி முதலியவற்றிற்கு வழங்குவதுண்டு. இதன் தைலம் பல்வலிக்

குத் தடவ குணத்தைத் தரும். இன்னும் இதனை இருமல், இரைப்பு, முதலிய நோய்கட்கும் வழங்குவதுண்டு.

இலவங்கப்பட்டை :—இதற்குத் துவர்ப்பிச் செய்கையுண்டு. இதனால் பேதி, சீதபேதி, தாதுஸ்ட்டம் முதலியன குணமாகும். இதனைத் தனியாகவாவது அல்லது காய்க்கைக்கட்டியுடன் சேர்த்தாவது சூரணஞ் செய்து கொடுத்தவர பேதி, சீதபேதி, கிரகணி முதலியன குணமாகும்.

ஏலக்காய்:—இதற்கு பசித்தீயைத் தூண்டல், வயிற்றிலுள்ள வாய்வை அகற்றல் முதலியச் செய்கைகள் உண்டு. இதனால் வாந்தி, தாகம், பித்தாதிக்கம், உஷ்ணபேதி முதலியன குணமாகும். ஏலக் காயைச் சுடைதத்து நீரிலிட்டுக் காய்ச்சி அருந்த தாகம், வாந்தி, பித்தம் முதலியன குணமாகும்.

சிறுநாகப்பூ:—இதற்கு வயிற்றிலுள்ள வாய்வை அகற்றல், பசித்தீயைத் தூண்டல், மலத்தைக் கட்டல் முதலிய செய்கைகள் உண்டு. இதனால் பேதி, சீதபேதி, வாய்வு, இருமல் சிரணம் முதலியன குணமாகும். இதனை செய்விட்டு இலவறப்பாய் வறுத்திடித்துச் சூரணித்து வைத்துக்கொண்டு வேளைக்கு ½-1-வராகனெடை வீதம் அருந்திவர அசிரணம், பேதி, சீதபேதி, இரத்தமூலம், பெரும்பாடு, கபதோடு கூடிய இருமல் முதலியன குணமாகும்.

வெந்தயம் :—இதற்கு மலத்தைக்கட்டல், உள் அழலை ஆற்றல், உடலை உரமாக்கல் முதலிய செய்கைகள் உண்டு. இதனால் பேதி, சீதபேதி, பிரமேகம், இரத்தபித்தம், கணச்சூடு, அஜீரணம், தாதுஸ்ட்டம் முதலியன குணமாகும். வெந்தயத்தை நீரிலிட்டு வேகவைத்து தேன்விட்டுக் கலக்கி அருந்திவரலாம். இதனால் மேற்கூறப்பட்ட பலன்கள் உண்டாகும்.

கடுகு:—இதற்கு மேலுக்கு வெப்ப முண்டாக்கி, சுறுசுறுப்புண்டாக்கிச் செய்கைகளும்; உள்ளுக்கு வாந்தியுண்டாக்கல், சிரண்தை உண்டாக்கல் முதலியச் செய்கைகளும் உண்டு. இதனால் பசிமந்தம், வாதரோஷம், விக்கல் முதலியன குணமாகும். 1 முதல் 4 வராகனெடைக் கடுகை அரைத்து தண்ணீரில் கலக்கிக் குடிக்க வாந்தியாகும். இது வயன சிகிச்சைக்குப் பயன்படும். கடுகுத் தூள் 1-2 வராகனெடையை ஆழாக்கு வெந்நீரில் ஊறல் குடிநீராகச் செய்து வடித்துக் கொடுக்க விக்கல் குணமாகும். வாதரோகங்கட்கு கடுகை அரைத்துப் பற்றிடுவது முண்டு.

ஓமம்:—இதற்கு வயிற்றிலுள்ள வாய்வை அகற்றல், பசித்தீயைத் தூண்டல், இசிவை யகற்றல், மலத்தைக் கட்டல் முதலிய செய்கைகள் உண்டு. இதனால் மந்தம், அசிரணபேதி, வயிற்றுப் பொருமல், முதலியன குணமாகும். ஓமத்துடன் சமன் மிளகு

சேர்த்து இலவறுப்பாய் வறுத்திடித்துச் சூரணித்த திரிகடிப் பிரமாணம் வெல்லத்துடன் சேர்த்து அருந்திவர மந்தம், அசிரணபேதி, வயிற்றுவலி, முதலியன குணமாகும். ஓமத்துடன் பொடுதலை சேர்த்துக் குடிநீர்செய்து குழந்தைகட்குக் காணும் மாந்தக் கழிச்சலுக்கு வழங்குவதுண்டு. ஓமத் தீநீர் செய்தும் வழங்குவதுண்டு.

பெருங்காயம்:—இதற்கு வயிற்றிலுள்ள வாய்வை அகற்றல், இசிவை யகற்றல், சுறுசுறுப்பை யுண்டாக்கல் முதலியச் செய்கைகளுண்டு. இதனால் வயிற்றுப்புசம், அசிரணம், குன்மம், வாதாதிக்கம், சூதகச்சிக்கல், செரியாநோய் முதலியன குணமாகும். பெருங்காயத்தை நீர் விட்டரைத்து சீதள சம்பந்திய வீக்கங்களுக்கு மேலுக்கு பற்றிட குணமாகும். காயத்தை நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி காதில்விட காதுவலி குணமாகும். காயத்தைச் சிறிது நெய்விட்டு பொரித்துப் பொடிக்க 2-3 குன்றிஎடை வீதம் வெல்லத்துடன் சேர்த்த அருந்திவர வயிற்றுவலி, வயிற்றுப்புசம், அசிரணம் முதலியன குணமாகும். பொரித்த காயத்துடன் வெள்ளைப் பூண்டும் வெல்லமும் சேர்த்து அரைத்துக் கொடுத்தவர மாதர்களுக்கு பிரசவத்திற்குப் பின் காணும் உதிரச்சிக்கலை நன்கு வெளிப்படுத்தும்.

கடுகுரோகணி:—இதற்கு மலத்தைப் போக்கல், முறைசுர மகற்றல் முதலிய செய்கைகள் உண்டு. இதைத் தனியாகவாவது அல்லது இதர சரக்குகளுடன் சேர்த்தாவது மலக்கட்டுடன் கூடிய சுரத்திற்குக் குடிநீரிட்டு வழங்குவதுண்டு.

சாதிக்காய்:—இதற்கு முக்கியமாக வயிற்றிலுள்ள வாய்வை யகற்றல், மலத்தைக் கட்டல் முதலிய செய்கைகள் உண்டு. மற்றும் காமத்தைப் பெருக்கல், உடலுக்கு உரம்தரல் முதலிய செய்கைகளும், அதிக அளவில் மயக்கத்தை உண்டாக்கும் செய்கையும் உண்டு. இதனால் பேதி, கிரகணி, தாதுஸ்ட்டம் முதலியன குணமாகும். ஒரு பங்கு சாதிக்காயுடன் இரண்டு பங்கு சீரகம் சேர்த்திடித்துச் சூரணம் செய்து வேளைக்கு திரிகடி பிரமாணம் சமன் சர்க்கரை சேர்த்து அருந்துவர முற்கூறப்பட்ட பிணிகள் குணமாகும். சாதிக்காயின் மேலே மூடியுள்ள தோலுக்கு சாதிபத்திரி யென்றும் பெயர். இதற்கும் சாதிக்காயின் செய்கையே உண்டு. இதையும் சாதிக்காயைப்போலவே பேதி கிரகணிமுதலியவை கட்டு வழங்கும் மருந்துகளிலும், தாது விருத்திக் குறிய லேகியங்களிலும் சேர்ப்பதுண்டு.

தாளிசபத்திரி:—இதற்கு கோழையகற்றல், பசித்தீயைத் தூண்டல், மலத்தைக் கட்டல், உடலுக்கு உரம்தரல் முதலியச் செய்கைகள் உண்டு. இதனால் அசிரணபேதி, காட்பட்ட அசிசாரம், கிரகணி, சுரப்பலம், காட்பட்ட இருமல், இரைப்பு, அஜீரணம் முதலியன குணமாகும். இதன் சூரணத்தில் ½, ¾ வராகனெடை வீதம்

ஆடாதோடை சாரத்துடன் சேர்த்து தேன் கூட்டிக் கொடுத்தவர இருமல், இரைப்பு, கபக்கட்டு முதலியன குணமாகும். நாளிசபத்திரி சூரணத்துடன் சமன் திரிகடுகு சூரணம் சேர்த்த அருந்திவர பிரமேகம், அசீரணம், பேதி முதலியன குணமாகும்.

மாசிக்காய்:—இதற்கு மலத்தைக் கட்டச் செய்தல், விரணத்தை ஆற்றல், உதிரப்போக்கைத் தடுத்தல், உடலுக்கு உரங்தல் முதலியச் செய்கைகள் உண்டு. இதனல் அக்கரம், விரணம், அதிசாரம், உட்சூடு, கணைச்சூடு, சீதபேதி, முதலியன குணமாகும். உடலுக்கு பலந்தரும் இதனை நீர் விட்டிழைத்து வாய் ரணம், நாசி விரணம், ஆசனவெடிப்பு, மூலவிரணம், தீச்சுட்ட புண் முதலியவைகட்கு மேலுக்குத் தடவிவர விரைவில் குணமாகும். இதன் சூரணத்தில் 5 முதல் 10 குன்றி வீதம் தினம் இருவேளையாகக் கொடுத்தவர இரத்தகாசம், இரத்த வாந்தி இரத்த மூத்திரம், பேதி, சொரத்தபேதி, பெரும்பாடு முதலியன குணமாகும்.

அரத்தை:—இதில் சிற்றரத்தை பேரரத்தை என இருவகை உண்டு. இவைகளின் குணம் வாத்தாழு ஒன்றேயாகும். இதற்கு முக்கியமாக கோழையை அகற்றுஞ் செய்கையும், வெப்பத்தைத் தணிக்குஞ் செய்கையும் உண்டு. இதனல் இருமல், சுவாசகாசம், வாயு முதலியன குணமாகும். இதன் தனிச் சூரணம் ½-வராகனெடை வீதம் சமன் கற்கண்டு சேர்த்து நெய் அல்லது தேனில் அருந்திவர இருமல், கபக்கட்டு முதலியன குணமாகும். வாதகப சாக் குடிநீர்களிலும் இதனைச் சேர்த்து வழங்குவதுண்டு.

அதிமதுரம்:—இதற்கு கோழையகற்றல், உள் அழலைத் தணித்தல் முதலிய செய்கைகள் உண்டு. இதனல் இருமல், தாகம், தொண்டைரணம், உடல் காங்கை முதலியன குணமாகும். தனி அதிமதுரச் சூரணம் 5-முதல் 10-குன்றி எடை வீதம் சமன் கற்கண்டு சேர்த்து சிறிது காய்ச்சிய பாலில் அருந்திவர உஷ்ணத்தினல் ஏற்பட்ட இருமல், தொண்டைரணம், கபக்கட்டு முதலியன குணமாகும்.

அக்கராகாரம்:—இதற்கு உமிழ் நீரைப் பெருக்கல், வெப்ப மூண்டாக்கல் முதலிய செய்கைகள் உண்டு. இதனல் வாதநோய், தாகசுரம், சன்னிதோஷம் முதலியன குணமாகும். இதில் ஓர் துண்டை வாயிலிட்டு மென்று சுவைத்து வரலாம். அல்லது வேறல் குடிநீரிட்டும் வழங்கலாம். இதனல் மேற்கண்ட குணங்கள் ஏற்படும்.

கோஷ்டம்:—இதற்கு வயிற்றிலுள்ள வாய்வை பகற்றல், விபரிவையைப் பெருக்கல் முதலிய செய்கைகள் உண்டு. இதனல் வாதம், சுரம், இருமல், சுவாசம், தோஷசுரம், விக்கம் முதலியன குணமாகும். இதனைப் பெரும்பாலும் சாக் குடிநீர்களில் சேர்த்து வழங்குவதுண்டு.

வசம்பு:—இதற்கு வயிற்றிலுள்ள வாய்வை பகற்றல், பனித் நீரைத் தூண்டல், முறை சுரத்தை தடுத்தல், சிறுமிகளை சாசஞ் செய்தல் முதலிய செய்கைகள் உண்டு. இதனல் சர்ப விஷ தாவர விஷங்கள், சுர சன்னிதோஷம், மார்க்க கழிச்சல், மலக்கிருமி முதலியன குணமாகும். வசம்பை வேறல் குடிநீரிட்டுக் கொடுக்க குழந்தைகட்குக் காணும் மார்க்க கழிச்சல், முறை சுரம் முதலியன குணமாகும். இதைச் சுட்டுக் கரியாக்கி ஆமணக்கு செய்யில் குழைத்து குழந்தைகளின் அடிவயிற்றில் பூச வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி முதலியன குணமாகும். வசம்பிற்கு மஞ்சளை அரைத்துக் கவசமிட்டு கருஞ்சுடி சுட்டுக் கரியாக்கித் தேனில் கொடுத்து வர சேர்வாளத்தினல் ஏற்பட்ட நிற்காதபேதி, வாந்தி, வயிற்றுவலி முதலியன குணமாகும்.

அதிவிடயம்:—இதற்கு மலத்தைக் கட்டல், முறைசுரமகற்றல் முதலிய செய்கைகள் உண்டு. இதனல் சுரம், முறைசுரம், பேதி முதலியன குணமாகும் இதன் தனிச் சூரணம் ½-1-வராகனெடை வீதம் தேனில் வழங்கலாம். அல்லது இதனைத் தனியாகவாவது அல்லது மற்றச் சரக்குகளுடன் சேர்த்தாவது குடிநீரிட்டு வழங்குவதுண்டு. இது பேதியுடன்கூடிய சுரத்திற்குச் சிறந்தது.

அமுக்குராக்கிழங்கு:—இதற்கு காமத்தைப் பெருக்கல், உடலைத் தேற்றல், பலந்தரல் முதலியச் செய்கைகள் உண்டு. இதனல் வாத நோய்கள், விக்கம், தாதுவிட்டம், பலவீனம் முதலியன குணமாகும். இதைப் பாலில் வேகவைத்து இடித்துச் சூரணித்துச் சமன் சர்க்கரை சேர்த்து ½-1-வராகனெடை நெய்யில் அருந்திவர மேற்கூறப்பட்ட குணங்கள் உண்டாகும்.

அபினி:—இதற்கு மலத்தைக் கட்டல், வேதனைகளைத் தணித்தல், இசிவகற்றல், நித்திரையை உண்டாக்கல் முதலிய செய்கைகள் உண்டு. இதனல் வயிற்றுவலி, பேதி, வாந்தி, இரைப்பு, இருமல், காதகோய், இசிவு, நித்திரையின்மை முதலியன குணமாகும். ஒரு உச்சிக்காணடி நல்லெண்ணெயில் பயறளவு அபினியைக் கரித்து 2-துளி காதில் விட காதவலி குணமாகும். ஒரு ஜாதிக்காயைத் தீயில் சுட்டு அதனுள் ஒரு குன்றி அபினியைச் செலுத்தி, தேங்காய்க்குள் அதனுள் ஒரு குன்றி அபினியைச் செலுத்தி, தேங்காய்க்கு சாதிக்காய் தேங்காயே போட்டு அடைத்து, செவ்வினக்கின் சுடரில், காய் வேகுமட்டும் சுட்டெடுத்து அரைத்து சிறு உருந்தளவு மாத்திரைகள் செய்து கொடுத்தவர அசீரணபேதி, அதிசாரம், இரகணி முதலியன குணமாகும்.

கஞ்சா:—இதற்கு இசிவகற்றல், வேதனையைத் தணித்தல், நித்திரையுண்டாக்கல், காமத்தைப் பெருக்கல் முதலிய செய்கைகள் உண்டு. இதைத் தனியாக வழங்குவதில்லை. பெரும்பாலும் தாது விருத்திக்குரிய லேகியங்களிலும், இரகணி, பெரும்பாடு போன்ற நோய்கட்குரிய மருந்துகளிலும் சேர்த்து வழங்குவதுண்டு.

வெட்பாலை:—இதற்கு துவர்ப்பிச் செய்கையுண்டு. இதனல் பேதி, சீதபேதி முதலியன குணமாகும். வெட்பாலைப்பசிசி அல்லது பட்டையைக் குடிநீரிட்டாவது அல்லது இடித்துச் சூரணமாகவாவது வழங்க பேதி, சீதபேதி முதலியன குணமாவதுடன், சுரத்திற் குப்பின் காணும் உடல் இளைப்பு முதலியன நீங்கி உடலுக்கு உரத்தையுந் தரும்.

நேர்வாளம்:—இதற்கு பேதியை உண்டுபண்ணுஞ் செய்கையுண்டு. இதனல் மலக்கட்டு, வாதரோகம், விஷம், சூன்மம், சூலை முதலியன குணமாகும். இது கர்பவதியுள்ளவர், வயது முதிர்ந்தவர், கருப்பிணிகள், பித்த நோயுள்ளவர் முதலியவர்கட்குச் சிறந்ததல்ல. இதனைத் தனியாக வழங்குவதில்லை. பேதியாகும் மருந்துகளில் சேர்த்து வழங்கப்படும். இதை மருந்துகளில் சேர்க்கும் முன் முறைப்படி நன்கு சுத்திசெய்து சேர்க்கவேண்டும். இன்றேல் விபரீதங்களுண்டாக்கும்.

நிலாவாரை:—இதற்கு பேதியை உண்டாக்குஞ் செய்கையுண்டு. இதனல் சாட்பட்ட மலச்சிக்கல், மூலவாயு, சூன்மம், சுரம் முதலியன குணமாகும். இது சிறு குழந்தைகள், மெலிந்தவர், முதிர்ந்தவர், கருப்பிணிகள் முதலியவர்கட்கும் வழங்கப் பயன்படும். இதன் சூரணத்தை பாலில் பிட்டவியலாக அவித்தெடுத்து வழங்க சூடு செய்யாமல் மலத்தைக் கழிக்கும். இதன் சூரணத்தில் ½-முதல் 1-வராகனெடை வீதம் தனியாகவாவது அல்லது ஒரு தோலா சுல் கர்துடனாவது சேர்த்து இரவு படுக்கைக்குப் போகும்போது அருந்திவர, மலச்சிக்கல் குணமாகும். இன்னும் இத்துடன் சுக்கு, மிளகு, ஓமம், வாய்விளங்கம், இந்துப்பு இவைகளைச் சமனெடையாகச் சேர்த்திடித்துச் சூரணித்து வேளைக்கு 1-உவராகனெடை வீதம் கொடுத்துவரலாம். அல்லது 1-பலம் நிலாவாரையுடன், 1-வராகனெடை சுக்குத்தூள் சேர்த்து ஆழாக்கு வெந்நீரில் ஊறல் குடிநீராகச் செய்து ½, ½-ஆழாக்கு வீதம் சிறிது இந்துப்புச் சேர்த்து வழங்கிவரலாம். இதனல் வயிற்றுப்புசம், வயிற்றுவலி, மலபந்தம், வாய்வு, கைகால் கீல்களின் பிடிப்பு முதலியன குணமாகும்.

சிவதைவேர்:—இதற்கு பேதியை உண்டாக்குஞ் செய்கையுண்டு. இதனல் பழையமலம், மேல்நோக்கும் வாய்வு, பித்தவாத தொந்தம், பாலகிரக தோஷம் முதலியன குணமாகும். இதை வழங்குவதற்கு முன்பு சுத்திசெய்துக்கொள்ளவேண்டும். அதாவது இதன் கடுரசமபை நீக்கிப் பாலில் பிட்டவியலாகச் செய்தெடுத்துக் கொள்வதாம். இது பாலர்கட்குக் காணும் மாந்தம், தோஷம், மலச்சிக்கல் முதலிய பிணிகட்கு வழங்கச் சிறந்தச் சரக்காகும்.

இதன் தனிச் சூரணம் ½-½-வராகனெடை வீதம், தனியாகவாவது அல்லது அத்துடன் சமன் இந்துப்பு சேர்த்தாவது வழங்க

நன்கு பேதியாகும். அல்லது சுத்தி செய்த சிவதைவேர்ச் சூரணம் 4-தோலாவுடன், திப்பிலிச்சூரணம் 1-தோலா சேர்த்து, இவைகட்குச் சமனெடை சர்க்கரை கலந்து வைத்துக்கொண்டு, இதில் வேளைக்கு 10-20 குன்றி எடை வீதம் கொடுத்துவர மலச்சிக்கல் நீங்கும். வயிற்றுவலி, மலாசயக் கிருமி முதலியவைகளும் குணமாகும்.

கரியபோளம்:—இதன் மூசாம்பரம் எனவும் கூறுவர். இதற்கு பேதியை உண்டாக்கல், முதலை யுண்டாக்கல், பசித்தீயைத் தூண்டல் முதலியச் செய்கைகள் உண்டு. இதனல் மேகசூலை, வீக்கம், வயிற்றுவலி, சூன்மம், சூலைச்சிக்கல் முதலியன குணமாகும். இதில் 1-முதல் 3-குன்றி எடை கொடுக்க மலத்தைப் போக்கும். இத்துடன் சமன் காயம் சேர்த்து நேன் விட்டரைத்து வேளைக்கு 2-குன்றி வீதம் தினம் இருவேளையாகக் கொடுத்துவர சூலைகிக்கல், சூலை வயிற்றுவலி முதலியன குணமாகும். இதை முட்டை வெண் கருவிட்டரைத்து கீல்வாயு, வாதவீக்கம், மேகக்கட்டி முதலியவைகட்கு மேலுக்குப் பற்றிட்டுவர குணமாகும்.

கழற்சி:—இதன் விதை, வேர்ப்பட்டை இலைகட்கு, இளைவயகற்றல், முறை சுரத்தைத் தடுத்தல் முதலிய செய்கைகள் உண்டு. இதனல் அண்டவாதம், வயிற்றுவலி, சூலை, சுரம் முதலியன குணமாகும். இதன் வேர்ப்பட்டைச் சூரணம் 5-முதல் 7½-குன்றி எடை வீதம் கொடுத்துவர முறை சுரம் முதலியன குணமாகும். இதன் விதைச் சூரணத்துடன் சமன் மிளகுச் சூரணம் சேர்த்துக் கலந்து வைத்துக்கொண்டு, இதில் வேளைக்கு 10-15-குன்றி எடை வீதம் தினம் இருவேளையாகக் கொடுத்துவர, அண்டவாய்வு, சுரம், வயிற்றுவலி முதலியன குணமாகும். கழற்சி பருப்பை முட்டை வெண்கருவிட்டரைத்து அண்ட வீக்கத்திற்கு மேலுக்குப் பற்றிட்டுவர அண்ட வீக்கம் குணமாகும்.

சடாமாஞ்சி:—இதற்கு இளைவயகற்றல், கோழையகற்றல் முதலியச் செய்கைகள் உண்டு. இதனல், காசம், இரைப்பு, இரத்தபித்தம், வாய்வு, சுரம் முதலியன குணமாகும். இதன் சூரணம் 2-வராகனெடை எடுத்து ஆழாக்கு வெந்நீரில் 1-மணிநேரம் ஊறல் குடிநீராகச் செய்து வடித்து, வேளைக்கு ½-ஆழாக்கு வீதம் தினம் 2-அல்லது 3-வேளையாகக் கொடுத்துவர சூலைசன்னி, வலி, மூர்ச்சை, சுரம் முதலியன குணமாகும்.

சேராங்கொட்டை:—இதற்கு மேக நோய்களைப் போக்குஞ் செய்கையும், உடலைத் தேற்றுஞ் செய்கையுமுண்டு. இதனல் சொறி, சிரங்கு, மேக விரணம், கிரந்தி, குட்டம், காணக் கடிவிஷம், வாதரோகம், சூன்மம் முதலியன குணமாகும். இதனைத் தனியாக வழங்குவதில்லை. பெரும்பாலும் இதரச் சரக்குகளுடன் சேர்த்து, 'வல்

வாதகி லேகியம்' முதலியனச் செய்து வழங்குவதுண்டு. இதனால் மேற் கூறப்பட்ட பிணிகள் குணமாகும். இரசத்தினால் தீரக்கூடிய நோய்கள் யாவும் இதனால் குணமாகும். ஆனால் இதனை முறைப்படி தன்னு சுத்திசெய்து மருந்துகளில் சேர்க்கவேண்டும்.

பறங்கிச்சக்கை:—இதற்கு மேக நோய்களைப் போக்குஞ் செய்கையும், உடலைத் தேற்றுஞ் செய்கையும் உண்டு. இதனால் சொறி சிரங்கு, சர்மவியாதிகள், மேகவிரணம், குட்டம், கடிவிஷம், வாதப் பிணிகள், கீரிழிவு, தாகம் முதலியன குணமாகும். பறங்கிச் சக்கைகளின் மேல் தோலை நீக்கிச் சிறு துண்டுகளாக நறுக்கி ஓர் கோப் பையிலிட்டு மூழ்க வல்லாரைச்சாறு விட்டு 10-நாள் இரவில் வைத்து, மற்று முலர்ந்தபின்பு இடித்துச் சூரணித்து, இதில் வேளைக்குத் நிரிகடிப் பிரமாணம் தினம் இருவேளையாக அருந்திவர மேற் கூறப்பட்டப் பிணிகள் குணமாகும்.

நன்னரிவேர்:—இதற்கு நிறமைப் பெருக்கல், உள் அழலை ஆற்றல், உடலைத் தேற்றல், இரத்தத்தைச் சுத்திசெய்தல் முதலியச் செய்கைகள் உண்டு. இதனால் பித்தாதிக்கம், உட்சூடு, மதுமேகம், தாகம், சொறி சிரங்கு, கிரந்தி முதலிய மேகப்பிணிகள், நீர்ச்சுருக்கு முதலியன குணமாகும். நன்னரி வேர்ப்பட்டையை உலர்த்தி இடித்துச் சூரணித்து வேளைக்கு ½-1 விராகனெடை வீதம் சமன் சர்க்கரை அல்லது கற்கண்டு சேர்த்துக் காய்ச்சிய பசும்பாலில் அருந்தி வர மேற்கூறிய பிணிகள் குணமாகும். இன்னும் இதனைக் குடிநீராய்ச் செய்து பால் சேர்த்து அருந்தி வரலாம். மணப்பாகு செய்தும் வழங்குவதுண்டு.

உலோகங்கள்

தங்கம்:—இதனால் கபம், காசம், சூலம், தேகவெப்பு, தாது கட்டம், தாவர விஷங்கள், விழிநோய் முதலியன குணமாகும்.

வெள்ளி:—இதனால், வெள்ளை, வெட்டை, காசம், சூலம், இரத்தபேதி, காட்பட்ட சுரம், மேகவாய்வு பிடிப்பு, விழிநோய் குன்மம் முதலியன குணமாகும். தாது விருத்தியு முண்டென்பர்.

செம்பு:—இதனால் இரத்தபித்தம், குன்மம், பிலீகநோய் குட்டம் வெண்குட்டம், சுவாசகாசம், கபாதிக்கம் சன்னிபாதம் முதலியன குணமாகும்.

நாகம்:—இதனால் அதிசாரம், இரணி, மூலம், பௌத்திரம், உட்சூடு, வெள்ளை, வெட்டை, பெரும்பாடு முதலியன குணமாகும்.

வங்கம்:—இதில் கருவங்கம் வெள்ளங்கமென இருவகையுண்டு, இவ்விரண்டின் குணங்களும் ஏறக்குறைய ஒத்திருக்கும். இவற் றால் மேகப்பிணிகள், குட்டம், பகந்தரம், கிரந்தி, புண், மதுமேகம் முதலியன குணமாகும்.

அயம்:—இதனால் பாண்டு, சோபை, காமாலை, தாதுஷட்டம், வெண்குட்டம், அதிஸ்தூல ரோகம் முதலியன குணமாகும். மற்றும் இதனால் மன விருத்தியும் தீபனமும் உண்டாகும்.

வெண்கலம்:—இதனால் விழிநோய், இரத்தபித்தம், வெகுமூத்திரம், பெருவயிறு, குன்மம், சூலை, இளைப்பு முதலியன குணமாகும்.

பித்தளை:—இதனால் சுரம், வாதம், பித்த குன்மம், முதலியப் பிணிகள் தீரும். சுக்கிலப் பெருக்கும், உடலுக்கு குளிர்ச்சியும் உண்டாகும்.

தரா:—இதனால் கீல் பிடிப்பு, வெள்ளை வீழ்தல், கபவாததொந்தம் ஆகிய இவைகள் போகும். இது தாம்பரமும் ரசமும் சேர்ந்த கூட்டுறவான லோகமெனப்படும்.

மேற்கூறப்பட்ட உலோகங்களை பற்பங்களாகவோ செந்தூரங்களாகவோ செய்தலான் பெரும்பாலும் வழங்கப்படும். அத்தகைய மருந்துகளுக்கே மேற் கூறப்பட்ட குணங்களென்றறிய வேண்டும்.

இவைகளில் வெங்கலம், பித்தளை, தரா முதலிய உலோகங்களை தனியாக பற்ப செந்தூரங்கள் செய்து வழங்குவது வழக்கில் இல்லை. மற்ற உலோகங்களைக் கொண்டுச் செய்யும் மருந்து முறைகளில் இவற்றை இந்நூலில் காணலாம். மற்றும் இவைகளைக் குறித்து விசேஷமாக பொருட் பண்பு விளக்க நூல்களில் கண்டுணர்க.

தங்கம்

சுவர்ண பரீக்ஷை:—பொன்னை செருப்பிலிட்டுக் காய்ச்சினால் அது சிகப்பு நிறத்துடன் கலந்ததாகயிருந்தால் நிறந்தென்றும் அது சிகப்பு நிறமாகயிருந்தால் மட்டமென்றும் மறியவும்.

சுவர்ணமாரணம் அல்லது பொன் பற்பம்:—சுத்தி செய்த பொன்னை இராவி பொடித்துக் கல்வத்திலிட்டு அதற்குச் சமமாக சுத்திசெய்த பாத இரசத்தையிட்டு அரைத்து உருண்டையாக்கி, இந்த உருண்டைக்குச் சமமாக சுத்திசெய்த கெந்தியை அரைத்து அந்த உருண்டையினமேல் கவசஞ்செய்து, அகலில்லவத்தை மேலுக்கு ஒரு அகலை வைத்து மூடி, சீலைமண்செய்து மூப்பது காட்டுவிட்டியில் புடம்வைக்க வேண்டியது. இப்படி பதினறு புடம்போட பொன்பற்பமாகும்.

வேறு:—சுத்தி செய்தபொன்னை மூசையிலிட்டு அது உருகும் போது அதில் சமபாகம் சுபத்தை கலந்து கன்றுப் உருகினபிறகு ஆறவைத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு அரைத்து உருண்டையாக்கி அதற்குச் சம எடை சுத்திசெய்த கெந்தியைப் பொடித்து அதில் பாதிபாகம் அகலில்லவத்து அதன்மேல் உருண்

டையவைத்து அதன்மீது மற்ற கொல்லை போட்டு மேலாக்மூடிச் சீலைமண்செய்து மூப்பது காட்டெருவில் புடம் போடவும். இப்படி ஏழு புடமிட பொன்னானது தோஷமற்ற பற்பமாகும்.

வேறு:—சுத்திசெய்த பொன்னை மெல்லிய ரேக்குகளாக்கி கரி சாலிச்சாற்றில் சவ்வீரத்தை அரைத்து அந்த ரேக்குகளின்மீது தடவி அகலில்வைத்து சீலைசெய்து ஒருகஜபுடமிட கல்ல பற்பமாகும்.

சுவர்ண பற்பத்தின் குணம்:—பொன் பற்பமானது சர்தியையும், வலியையும், தீபனத்தையும், உண்டாக்கும். வாதம், பித்தம், பிரமேகம், காசம், சுவாசம், சூலம், குட்டம், விஷம் ஆகிய ரோகங்களை குணப்படுத்தும். வாலிபத்தையும் காமத்தையும், பலத்தையும், சுக்கிலத்தையும், விருத்தி செய்யும். ருசியை உண்டாக்கும்.

அபக்குவ தங்கபற்ப தோஷம்:—இதை அருந்துவதால் பலத்தையும், வீரியத்தையும் கெடுக்கும். ரோகவிருத்தி, அசௌக்கியம், மரணம் இவைகளை உண்டாக்கும். ஆகையால் சுத்தமான பற்பத்தை அருந்தல்வேண்டும்.

அபக்குவ சுவர்ணபற்ப தோஷசாந்தி:—கடுக்காய்ச் சூரணம், கற்கண்டு இவைகளை சம எடையாக சேர்த்து மூன்றுவேளை சாப்பிட்டால் அபக்குவத்தால் வாய்ந்த ரோகங்கள் சகலமும் நீங்கிவிடும்.

சுவர்ணபற்ப அனுபானங்கள்:—சுவர்ணபற்பத்தை கரிசாலைச் சாற்றிலருந்த புனர்ச்சியில் வலியும், பாலில் அருந்த உடல் வலியும் உண்டாகும்.

வெள்ளைச்சாரணை சாற்றில் கொடுத்தால் சேத்ரி ரோகம்போம். பசுவின் செய்யில் சலந்து கொடுத்தால் கிழத்தனம் போம்.

வசம்புகியாழத்தில், கொடுத்தால் அதிக ஞாபகசக்தியுண்டாகும். கடுகுரோகணி, கியாழத்தில் கொடுத்தால் தாபத்தைப் போக்கும்.

குங்குமப்பூவுடன் கலக்கி கொடுத்தால் சரீரத்தில் காந்தி யுண்டாகும். இத்துடன் கர்பரும் சேர்த்துக்கொடுத்தால் கடினமான சுவரோகம் நீங்கும்.

இலவங்கம், சுக்கு, மிளகு, இவைகளின் சூரணத்துடன் கலந்துக் கொடுத்தால், உளமார்தை, பைத்தியம், நரம்போஷ பிரகோபம் முதலியன நீங்கும்.

தேன், செல்லிக்காய் இவைகள் இரண்டையும் கலந்து சுவர்ண பஸ்பம் சேர்த்துகொடுத்தால் ஜுரணி நீங்கும். தேனில் கலந்து கொடுத்தால் விஷ உபத்திரவங்கள் விர்த்தியாகும்.

நாயுரைத்தண்டு, இரசத்துடன் கலந்துகொடுத்தால் ஆயுள்விருத்தியும் மிகப் பூனிக்கிழங்கு கியாழத்துடன் கலந்து கொடுத்தால் புத்திரோற்பத்தியும் உண்டாகும்.

வெள்ளி

வெள்ளியின் பேதங்கள்:—ரஜிதமென்ற வெள்ளியானது, கனி ஜம்-வேதஜம்-வங்கஜம் என மூன்று வகைப்படும்.

மேற்கூறிய மூன்றுவித வெள்ளியில் வங்கஜம்-வேதஜம் என்கிற இருவகை வெள்ளி மிருதுவாயும் வெண்ணிறமாயும் பிரகாசமாயும் இவைகள் சிரேஷ்டமானவைகள். ஆகையால், இவைகள் பஸ்மாதி இவைகள் சிரேஷ்டமானவை. கனிஜமானது வெண்மையாயிருந்தாலும் மிருதுத்வமில்லாமையால் ஔடதங்களுக்கு உபயோகிக்கக் கூடாதென்று கூறப்பட்டுள்ளது.

ரஜிதமாரண விதம்:—சுத்திசெய்த வெள்ளியை சிறியரேக்குகளாக அடித்து இதற்குச் சமனெடையாக இரசத்தையும் கொல்லையையும் நன்றாக அடித்து இதற்குச் சமனெடையாக இரசத்தையும் கொல்லையையும் ஜலம்விட்டு அரைத்து அந்த வெள்ளி ரேக்குகளின் மீது தடவி நிழலிலுலர்த்தி ஒரு பாண்டத்தில் வைத்தும் மேல்மூடி ஒரு சாள் முழுதும் காடாக்கினியில் எரித்தால் சுத்தமான பற்பமாகும்.

வேறு:—சுத்திசெய்த வெள்ளிரேக்குகளுக்கு நான்குபாகம் சுத்திசெய்த தாளகத்தைப் பழச்சாற்றில் அரைத்து ரேக்குகள்மீது தடவி உலரவைத்து அகலில்வைத்து மேல் அகல் மூடிச் சீலைமண் செய்து, 30 காட்டு எருவில் புடமிடவும். இம்மாதிரி மூன்று புடமிட்டால் சுத்தமான வெள்ளி பற்பமாகும்.

வேறு:—சுத்திசெய்த வெள்ளியை மிருது ரேக்குகளாக்கி அதற்கு நான்குபாகம் மாகாயிலை, முள்ளங்கியிலை இவைகளின் கற்கத்தில் வெள்ளிரேக்குகளைப் போட்டு இரண்டுசாள் ஊறவைத்து அதை ஒரு அகலில் வைத்து மேலுக்கு மற்றொரு அகலால்மூடி சீலைமண் செய்து வராகபுடமிடவும் இப்படி மூன்று புடமிட வெள்ளி சுத்தமான பற்பமாகும்.

ரஜிதபற்ப குணம்:—வெள்ளிபற்பம் சாதாரணமாய் சகலமான ரோகங்களையும் போக்கடிக்கும். பித்தம், வாதம், கபம், குன்மம், பிரமேகம், சுவாசம், காசம், பீனசம் சூலம், இருகய பலியீனம் விஷம், சுரை, தாதுகட்டம், சோபை, இவைகளைப் போக்கும். காந்தி, புஷ்டி, ஆயுள் இவைகளை விருத்திச் செய்யும். அக்கினி தீபனத்தை யுண்டாக்கும்.

அபக்குவ ரஜிதபற்ப தோஷம்:—அபக்குவமான வெள்ளிபற்பம் சாப்பிடுவதால் சரீரத்தில் தாபம், மலபந்தம், சுக்கிலநாசம், பலஹீனம் ஆயாசம், கோரமான வியாதிகள், உண்டாகும்.

சாந்தி:—சர்க்கரை தேன் இந்த இரண்டையும் கலந்து மூன்றுகால் இருவேளை சாப்பிட்டால் அபக்குவ ரஜிதபற்பத்தால் உண்டான ரோகங்கள் நீங்கும்.

ரஜித பற்ப அனுபானங்கள்:—வெள்ளி பற்பத்தை தாப ரோகத்திற்கு சர்க்கரையுடனும், வாதபித்த ரோகத்தில், திரி

பலி சூரணத்துடனும், பிரமேகத்தில் நிரிசுகந்தம் சூரணத்துடனும், குன்மத்தில் சத்தி சூரணத்தோடும், காசம், கபம், இந்த ரோகங்களுக்கு நிரிசடுகு சூரணத்துடனும், கூடாதோடை இரசத்துடனும், சுவாசரோகத்தில் நிறுதேக்கு சக்கு இலைகள் சூரணத்தோடும், கூபரோகத்திற்கு வெள்ளரசத்து பற்பத்தோடும், தாதுஷ்டம், பலயீனம் முதலியவைகட்கு. பசுவின் பாலோடும், யகிருத்து பிலீகரோகம் இலைகளுக்கு நிரிபலி நிப்பலி சூரணத்தோடும், சோபைக்கு வெள்ளைச்சாரிணி இரசத்தோடும், பாண்டுரோகத்திற்கு மண்டூரத்துடனும் புஜித்தால் மேற்கூறிய ரோகங்கள் சூரியனைக் கண்ட பனிப்போல் நீங்கிவிடும். இந்த பற்பத்தை நெய்யில் சாப்பிட்டால் கணம், பித்தரை இலைகள் நீங்கும்.

தாம்பரம்

தாம்பர பேதங்கள்:—தாம்பரமென்ற செம்பானது மிலேச்சம், நேபாளமும் என இருவகைப்படும். இவற்றுள் மிலேச்சம் என்பது கழுனைலும் சிறிது கருஞ்சாயலாக இருக்கும். நேபாளம் என்பது சிவந்த நிறமாகத் தோற்றும். ஆகையால் மருந்து முறைகட்கு இந்த நேபாளத்தையே உபயோகிக்கவேண்டும்.

தாம்பர தோஷம்:—வாந்தி, பிராந்தி, விரேசனம், இளைத்தல், தாபம், விரியநாசம், சுமைச்சல், சூலை என்கிற எட்டுவித தோஷங்கள் செம்புக்கு உடைத்தானது.

நல்லெண்ணெய், மோர், கோமூத்திரம் இவைகள் வாந்தியையும், புளித்த காடி, கொள்ளு இவைகள் பிராந்தியையும், கள்ளிப்பால், பசும்பால் இவைகள் இளைப்பையும், புளியின் இரசம், பழச்சாறு இவைகள் தாபத்தையும், காட்டுவாழை, கற்றுழை இவைகளின் இரசம் சூலைரோகத்தையும், பசும்பால், நெய் இவைகள் சுமைச்சலையும், தேன் விரியநாச தோஷத்தையும், தயிரின் ஏடு, காட்டுகருணைக் கிழங்குரசம இவைகள் பேதியையும் போக்கும்.

ஆகையால் தாம்பரத்தை சிறிய துண்டுகளாக்கி தகடடித்து நெருப்பில் சிவக்கக் காய்ச்சி மேற்கூறிய ஒவ்வொரு சாற்றிலும் ஏழு முறை தோய்த்து எடுக்க தாம்பரம் நல்ல சுத்தியாகும்.

தாம்பர மாரணம்:—சுத்திசெய்த தாம்பரதுண்டுகளைக் கல்வத்திலிட்டு அதற்கு பாதி பாகம் சுத்திசெய்த பரதரசத்தைச் சேர்த்து தாம்பரதுண்டுகள் வெள்ளையாகும் வரையிலும் பழச்சாற்றில் ஆட்ட வேண்டியது. பிறகு அந்தத் துண்டுகளுக்கு இரண்டுபாகம் சுத்தி செய்த கெந்தியை காடிநீரில் அரைத்து அந்த தாம்பர துண்டுகளுக்குத் தடவி உலர்த்தி அகலிலடக்கிச் சீலைமண்செய்து, அதை மணலும் சாம்பலும் போட்ட பெரிய பாத்திரத்தின் மத்தியில்வைத்து மந்தாக்கினியாக ஏழுஜாமங்கள் எரித்தால் தாம்பரம் பற்பமாகும்.

பிறகு அந்த பற்பத்தையும் அதற்கு பாதிபாகம் சுத்திசெய்த கந்தகத்தையும் அத்துடன் கலத்து காட்டுகருணைக்கிழங்கு இரசத்தால் 2-ஜாமம் அரைத்து அகலில் வைத்து சீலைமண்செய்து முன்போல் கஜபுடமிடவும். பிறகு அந்த தாம்பர பற்பத்தையும் அதற்கு கால் பாகம் சுத்திசெய்த கெந்தியையும் சேர்த்து, பசுவின்பால், மோர், நெய், கோமயம் இவைகளில் தனித்தனியே அரைத்து புடமிடவும்.

சுத்தமான தாம்பர பற்பம் மயிலின்கண்ட நிறத்திற்கு சமான நிறத்தை பெற்றிருக்கும். அந்த தாம்பர பற்பத்தைச் சாப்பிடுமானால் வாந்திபாகுமாகில் மறுபடியும் அதை பசுவின் பாலில் அரைத்து சில புடமிட்டு பிறகு உபயோகிக்க வேண்டும்.

வேறு:—தாம்பர துண்டுகளுக்கு சமனடையாய் சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த கெந்தி இவை இரண்டையும் கல்வத்திலிட்டு புளியின் இரசத்தால் அரைத்து அதை செம்பு துண்டுகளுக்கு தடவி புளியின் இரசத்தால் அரைத்து அதை செம்பு துண்டுகளுக்கு தடவி அகலில் வைத்து அதின்மேல் மறு அகலினால் மூடி சீலைசெய்து, அகலில் வைத்து அதின்மேல் மறு அகலினால் மூடி சீலைசெய்து, கஜபுடமிடவும். இந்தமாதிரி மூன்றுபுடமிட செம்பானது தோஷ மற்ற பற்பமாகும்.

வேறு:—சுத்திசெய்த செம்புரேக்குகளுக்கு, கால்பாகம் சுத்தி செய்த பாதரசம் தடவி, பிறகு புளி இரசத்தால் சுத்திசெய்த கெந்தி செய்த பாதரசம் தடவி, பிறகு புளி இரசத்தால் சுத்திசெய்த கெந்தி தூளை அரைத்து செம்புரேக்குகளுக்கு தளமாய் தடவி உலர்த்தி, தூளை அரைத்து செம்புரேக்குகளுக்கு தளமாய் தடவி உலர்த்தி, பாகையில் புளிகரைத்த சலத்தை வார்த்து அதற்கு நடுவில் தாம்பிர பாகையில் புளிகரைத்த சலத்தை வார்த்து அதற்கு நடுவில் தாம்பிரரேக்குகளை வைத்து ஒருஜாமம் எரித்தால், தாம்பிரம் பற்பமாகும். ரேக்குகளை வைத்து ஒருஜாமம் எரித்தால், தாம்பிரம் பற்பமாகும். இந்த பற்பம் சகல ரோகங்களையும் குணப்படுத்தும்.

தாம்பர பற்ப குணம்:—தாம்பர பற்பத்தால் காசம், சுவாசம், கபம், வாதரோகம், பிலீகம், உதரரோகம், கிருமிரோகம், குட்டம், சூலைகள், சுரங்கள், சுமைச்சல், வாந்தி, சோபை, பாண்டுரோகம், மூர்ச்சை, மூலரோகம், அதிசாரம், கூபம், குன்மம், தலைவலி, விக்கல், பிரமேகம், பிரமை முதலிய ரோகங்கள் நீங்கும், தீபனம் உண்டாகும்.

அபக்குவ தாம்பர பற்ப தோஷம்:—அபக்குவ பற்பத்தால் வாந்தி, பேதி, தாபம், பிரமை, மூர்ச்சை, பிரமேகம், பலநாசம் முதலிய ரோகங்கள் உண்டாகும்.

சாந்தி:—கற்கண்டு, காட்டுதானிய அரிசி அல்லது கொத்த மல்லி இலை இரண்டையும் சமபாகமாய் எடுத்து ஜலத்தில் விட்டு அரைத்து மூன்றுநாள் காலை மாலை குடித்து வந்தால் அவ்விஷத்தினால் உண்டாகும் ரோகங்கள் குணமாகும்.

தாம்பர பற்ப அனுபானம்:—தாம்பர பற்பத்தை, நிப்பிலி, தேன் முதலிய அனுபானத்தில் சகல ரோகங்களுக்கு கொடுக்கலாம். மற்றும் இதனைத் தக்க அனுபானங்களில் கொடுத்துவர பல பிணிகள் போம்.

நாகம்

நாக சுத்தி:—ரசத்தை செருப்பில் வைத்து உருக்கி கற்முழி சாற்றிலும் நிரிபலி குடிநீரிலும் தனித்தனியே ஒவ்வொன்றிலும் ஏழு முறை வீதம் சாய்த்து கழுவியெடுக்க நல்ல சுத்தியாகும்.

நாக மாரணம்:—சுத்திசெய்த ரசத்தை சட்டியிலிட்டு அடுப்பில் ஏற்றி எரித்து கெட்டியான அருக்கன்வேரால் மூன்று ஜாமங்கள் தேய்த்து வர்தால் பற்பமாகும்.

வேறு:—ரசம், அதற்கு சமபாகம் சுத்தி செய்த மனோசிலை இவைகளை கல்வத்திலிட்டு ஆடாதோடை சாற்றால் அரைத்து மூன்று குக்குட புடங்கள் இட பற்பமாகும்.

வேறு:—சுத்திசெய்த ரசம், அதற்கு கால்பாகம் அபினி, இவை இரண்டையும் ஒருபாண்டத்தில் வைத்து அடுப்பேற்றி எலுமிச்சங் கொம்பினால் ஆட்டிக்கொண்டு போக்கினியால் எரித்துக் கொண்டிருந்தால் அது வெண்ணிறமான பற்பமாகும்.

நாகபற்ப குணம்:—ரசபற்பத்தால் வாதரோகம், க்ஷயம், குன்மம், பாண்டு, சூலை, பிரமை, கபம், அக்கினிமந்தம், காசம், சுக்கிலதோஷம், மூலவியாதி, கிரகணி, கிருமிரோகம், முதலியவைகள் நிவர்த்தியாகும். நூறு பாகையின் பலமும் ஆயுள் விருத்தியும் உண்டாகும்.

அபக்குவ நாக பற்ப தோஷம்:—அபக்குவ ரச பற்பத்தால் ரத்ததோஷம், கபம், பாண்டு, குட்டம், குன்மம், அருசி, க்ஷயம், சுரம், அஸ்மரீரோகம், மூத்திரகிருச்சிரம், சூலைகள், பகந்தரம் முதலிய நோய்கள் உண்டாகும்.

நாகதோஷ சாந்தி:—வசம்பு, கடுக்காய், இவைகளின் சூரணத்தை சர்க்கரையுடன் கலந்து மூன்றுநாள் சாப்பிட்டால் அபக்குவ ரசபற்பத்தால் உண்டான ரோகங்கள் தீரும்.

நாக பற்ப அனுபானம்:—ரசபற்பத்தை, கற்கண்டுடன் சாப்பிட்டால், வாதம், பித்தம், நீலிநோய், சேத்திரரோகம், சுக்கிலதோஷம், தாபம், பிதற்றல் இவை தீரும். காமவிருத்தியாகும். மற்றும் இதனை நோய்க்கு தக்க அனுபானங்களில் வழங்குவது வைத்தியர்கள் கடமையாம்.

வங்கம்

வங்க பரீக்ஷை:—வெண்மையாயும் கடினமாயும் பிரகாசமாயும் இருக்கும் வங்கமே மருந்துகள் செய்வதற்குச் சிறந்தது. இதரலோகத்துடன் மிசிரமான வங்கத்தை உபயோகிக்கக்கூடாது. சுத்திசெய்த வங்கத்தை ஓர் சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி எரித்து உருகி வரும்போது வங்கத்தின் எடைக்கு இரண்டு எடையுள்ள நிரிபலிச் சூரணத்தைச் சிறிது சிறிதாக தூவி வேப்பங்கட்டைகொண்டு தேய்த்துவரத்துவர வங்கமானது மடிந்து பூர்த்து பற்பமாகும்.

வேறு:—சுத்திசெய்த வங்கத்தை சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி எரித்து உருகி வரும்போது காயுருவியுப்பு வங்கத்தின் எடையில் ரண்டிலொன்றை ரசசங் கொடுத்து இரும்பு கரண்டி கொண்டு தேய்த்துவர மடிந்து பற்பமாகும். பிறகு இதை காயுருவிச்சாறு விட்டரைத்து வில்லைதட்டி கஜபுடமிட பற்பமாகும்.

வங்கபற்ப குணம்:—வங்கபற்பம், சுவாசம், பிரமேகம், வாதம், பெரும்பாடு, சூலை, கபம், பாண்டு, பிரமை, வாந்தி, க்ஷயம் முதலிய சகல ரோகங்களையும் நிவர்த்திச் செய்யும் பலவீரியத்தை உண்டாக்கும்.

அபக்குவ வங்க தோஷம்:—இதன் உபயோகத்தால் குன்மம் குட்டம், பிரமேகம், வாதம், ரத்ததோஷம், அக்கினிமந்தம், பாண்டு பலரோகம் முதலிய நோய்கள் உண்டாகும்.

சாந்தி:—கற்கண்டு, ஒதியன்பட்டை இவைகளை சமமாக சூரணித்து மூன்று வாட்கள் சாப்பிட்டால் வங்கதோஷத்தால் உண்டான ரோகங்கள் எல்லாம் நீங்கும்.

வங்க பற்ப அனுபானங்கள்:—வங்கபற்பத்தை, பசுவின் பாலுடன் அல்லது சர்க்கரை சூரணத்துடன் சாப்பிட்டால் புஷ்டியுண்டாகும். பிரமேக ரோகத்திற்கு துளசி சாற்றிலும், குன்மத்திற்கு இஞ்சிச் சாற்றிலும் பாண்டு ரோகத்திற்கு பசுவின் நெய்யிலும், மேற்சுவாசம், ரத்தபித்தம், இவைகளுக்கு மஞ்சள் சூரணத்தோடும், பித்தத்திற்கு சர்க்கரையோடும், உட்கொள்ள குணமாகும். இன்னும் வங்கபற்பத்தை பலத்திற்கு தேனிலும் வீரிய தம்பனத்திற்கு கஸ்தூரி அல்லது வெற்றிலையுடனும், அக்கினிமந்தத்திற்கு திப்பிலி சூரணம், கஸ்தூரி இவைகளுடனும் அஜீரணத்திற்கு, செல்லிவற்றல், சூரணத்துடன் அல்லது, கொட்டைப்பாக்கு சூரணத்துடனும், அஸ்திக ரத்திற்கு வங்காயத்துடனும், குட்டத்திற்கு, தொச்சிலி ரசத்துடனும் அருந்த குணமாகும்.

லோகம்

இதற்கு இரும்பு, அயம் என்ற வேறு பெயர்களுமுண்டு.

லோகபேதம்:—காந்தம், தீக்ஷணம், முண்டம் என லோகமானது மூவகைப்படுமெனவும், அவைகளில் காந்தம், உத்தமம் தீக்ஷணம், மதநிமம், முண்டம் அதமம், என்றும், வைத்திய சாஸ்திரம் முறையிடுகின்றது. ரோமகம் பிராஜிதம், சம்பகம், நிராவகம், என காந்தமானது நான்கு விதப்படும் அவைகள் ஒன்றைவிட மற்றொன்று மிகவும் சிறந்தது.

லோகசுத்தி:—லோகத்திற்கு தாம்பிரத்திற்கு சொல்லிய பிரகாரம் சுத்திகள் செய்யவேண்டும். ஆனால் நிரிபலி கியாழத்தால்

விசேஷமாய் சுத்திசெய்யவேண்டும். சுத்திசெய்யும் லோகமானது சுமார் பதின்மூன்று பலத்திற்கு மேற்படாமலும் ஐந்து பலத்திற்கு குறையாமலும் இருக்கவேண்டியது.

லோகமாரணம்:—லோகத்தை சிறிய சேக்குகளாக்கி சுத்தி செய்த கற்கத்தை சலத்தால் அரைத்து சேக்குகளுக்கு தடவி தெருப்பில் காய்ச்சி, பொன்னுக்கண்ணி இரசத்தில் தோய்க்கவேண்டியது. அந்த சேக்குகள் பொடியாகிற வரையிலும் பலதடவை தெருப்பில் காய்ச்சி பொன்னுக்கண்ணி இலைரசத்தில் தோய்த்துக்கொண்டிருக்க வேண்டியது. பிறகு அந்த துண்டுகளுக்கு சமனெடை சுத்தி செய்த பாதரசம், சுத்திசெய்த கற்கம் இவைகளை சேர்த்து பொன்னுக்கண்ணிஇலை, ஆடாதோடைஇலை, சொச்சிஇலை, இவைகளின் சாற்றில் தனித்தனியே அரைத்து வெவ்வேறாக கஜபுடம் போட்டால் லோகம் பற்பமாகும்.

வேறு:—சுத்திசெய்த லோக சூரணத்தை நிரிபலி கியாழத்தால் அரைத்து உருண்டை செய்து உலர்த்தி சாலசம் புடத்தில் வைத்து சீலைசெய்து காற்று இல்லாத இடத்தில் பதினைந்து அங்குலம் ஆழமான பள்ளத்தை தோண்டி அதில் புடமிடவேண்டியது. இந்த மாதிரி அறுபதினாலு புடம்போட்டால் புஷ்பாகத்திற்கு ஒப்பான நிறமுள்ள லோகபற்பமாகும்.

வேறு:—சுத்திசெய்த பாதரசம் (1) பாகம், சுத்திசெய்த கற்கம் (2) பாகம் லோக சூரணம் 3) பாகம் இவைகளை கல்வத்தில்போட்டு கற்றுழைசாற்றால் அரைத்து அதை செம்பு பாத்திரத்தில் வைத்து அந்த பாத்திரத்தின் முகத்தை ஆமணக்கு இலையால் செவ்வையாக மூடி இரண்டு ஜாமங்கள் வரையிலும் கடுமையான வெய்யிலில்வைத்து பாத்திரத்திற்கு உஷ்ணம் உண்டான உடனே அதைஎடுத்து தெற் குவியலினிடையே மூன்றாள் வரையிலும் மூடிவைத்து பிறகு அதை எடுத்து அரைத்தால் பற்பமாகும்.

லோக பற்ப குணம்:—லோக பற்பத்தால் கிருமிரோகம், வாத ரோகம், பாண்டு, விஷம, சுரம், பிரமை, வாந்தி, சுவாசம், இரணி, கபம், கிழத்தனம், காசம, சூலம், காமாலை, அருசி, பிசாசம், பித்தம், பிரமேகம், குன்மம், ஆமவாதம், பிலீகம் என்கிற ரோகங்கள் நிவர்த்தி யாகும்.

அபக்குவ அய பற்ப தோஷம்:—அபக்குவமான அய பற்பத்தால் விஷம நிலேத்தமம் இவைகள் புண்டாகும். வீரியம் காந்தி இவைகளை நாசப்படுத்தும்.

சாந்தி:—கற்கண்டு, தேன் இவைகளில் வல்லாரி சூரணத்தை கலந்து மூன்று வேள அருந்தினால் அபக்குவ பற்பத்தால் ஏற்பட்ட சூல வியாதிகளும் நிவர்த்தியாகும்.

லோஹயோனி ரக்ஷாமந்திரம்:—(ஓம் அமிருதோத்பவாய்யபட்) இந்த மந்திரத்தை ஜபித்துக்கொண்டு புடமிடவேண்டியது.

லோகமரத்தன மந்திரம்:—(ஓம் அமிருதோத்பவாய்யவாஹா) இந்த மந்திரத்தை சபித்துக்கொண்டே லோகத்தை அரைக்கவேண்டி யது. இடிக்கவேண்டியது.

பலிதான மந்திரம்:—(ஓம் நமச்சண்ட வஜ்ரபாணயே மஹாயக்ஷ சேனாதிபதியே குருகுரு மஹாவித்யா விலாயவாஹா) இந்த மந்தி ரத்தை சபித்துக்கொண்டு பலி கொடுக்கவேண்டியது.

பக்ஷண மந்திரம்:—(ஓம் அமிருதம் பக்ஷயாமி சுவாஹா) இந்த மந்திரத்தை ஜபித்துக்கொண்டு, லோக பற்பத்தை சாப்பிட வேண்டியது.

லோகபற்ப அனுபானம்:—கண்டுபாரங்கி, நிரிகடுகு, தேன் இந்த அனுபானங்களுடன் சாப்பிட்டால் தாதுவிகாரங்கள் நீங்கும். இலவங்கம், இலவங்கப்பத்திரி, ஏலரிசி, சிறுநாகப்பூ இவைகளின் சூரணமும் சர்க்கரையும் சேர்த்த அனுபானத்துடன் அயபற்பம் கூட்டிக் கொடுத்தவர பித்தரோகம் நிவர்த்தியாகும். வெள்ளைச் சுக்கு சூரணம் பசுவின்பால் அனுபானத்தில் சாப்பிட்டால் சர்வ சூரணம் பசுவின்பால் அனுபானத்தில் சாப்பிட்டால் விசேஷபலம் உண்டாகும். வெள்ளைச்சர்வ கியாழத்தில் அனுபா னித்து சாப்பிட்டால் பாண்டுரோகம் நீங்கும். மஞ்சள் சூரணம், தேன் இவைகளுடனாவது, நிப்பிலி சூரணம் தேன் இவைகளுட னாவது சாப்பிட்டால் அரோசித பிரமேகங்கள் நீங்கும். சிலா சத்து பற்பத்துடன் அனுபானித்து சாப்பிட மூத்திர கிருச்சிர ரோகங்கள் நிவர்த்தியாகும். ஆடாதோடை, லோகபற்பம், நிப் பிலிசூரணம், நிராவரசி, தேன் இவைகளை யொன்றாய் கலந்து புசிதால் ஐக்கியமான காசங்கள் நிவர்த்தியாகும். இந்த லோக பற்பத்தை வெற்றிலையுடன் சாப்பிட்டால் தாதுபுஷ்டி, சரீரகாந்தி, பலி பீனம் இவைகளுண்டாகும்.

மண்டூரம்

லோகத்திற்கு சொல்லியிருக்கும் சகல குணங்களும் இரும்பு கிட்டமென்ற மண்டூரத்திற்கும உண்டாயிருக்கும். இதை தெருப் பில் காய்ச்சி கோமூத்திரத்தில் எழுமுறை தோய்த் தெடுக்க சுத்தியாகும். இம்மாதிரி சுத்திசெய்த மண்டூரத்தை இடித் துச் சூரணித்து கோமூத்திரத்தால் அரைத்து பில்லைசெய்து உலர்த்தி அகலிலடக்கிச் சீலைமண்செய்து ஒரு கஜபுடமிட்டால் சுத்தமான மண்டூர செந்தூரமாகும். இதை லோகபற்பத்தைப் போலவே உப யோகிக்கவும். அயசமபத்தமான பற்ப செந்தூரங்களைப் புசிக்கின்ற வர்கள் கடுது, கள்ளு, உளுந்திலைசெய்த சகலவித பண்டங்கள், புளிப்பு, கல்லெண்ணெய், கீரைகள், பூசினிக்காய், வாழைத்தண்டு முதலிய பதார்த்தங்களை நீக்கவேண்டும்.

உபரசங்கள்

இரசம் :—இதனல் இரத்தி முதலிய மேகப் பிணிகள், குன்மம், சூலை, வாயு, பாசிவாதம், வீரணம், குட்டம் முதலியன குணமாகும்.

கந்தகம் :—இதனல் சொறி சிரங்கு முதலிய சர்ம வியாதிகள் குட்டம், குன்மம், பிளீகம், விஷக்கடி, சுரம், பேதி, இரகணி முதலியன குணமாகும்.

இலிங்கம் :—இதனல் சுரம், சன்னி, அதிசாரம், இரத்தி, வீரணம், கப்பான முதலிய பிணிகள் குணமாகும்.

இரச செந்தூரம் :—இதனல் சுரம், சன்னி, தோஷம், தலைவலி, கீல்வாயு, இரகணி முதலிய பிணிகள் குணமாகும்.

வீரம் :—இதனல் வாதம், கீல்பிடிப்பு, குன்மம், சூலை, வீரணம், புண், புரை, இரத்தி, முதலியன குணமாகும்.

பூரம் :—இதனல் வாதசூலை, சுரோணித வாதம், குன்மம், சூலை, பிரமேகம் முதலிய பிணிகள் குணமாகும்.

தாளகம் :—இதனல் காசம், சுவாசம், சூபம், குளிர் சுரம், கடிவிஷம், துஷ்ட வீரணம் முதலிய பிணிகள் குணமாகும்.

மனோசிலை :—இதனல் குட்டம், கொடியாணம், நிமிர்பாடை, இரத்தி, சுரம், இரைப்பு, கடிவிஷம் முதலியன குணமாகும்.

வெள்ளைப் பாஷாணம் :—சுரம், முறைசுரம், சன்னி, புண், இரத்தி, விஷக்கடி, முதலியன குணமாகும்.

கௌரி பாஷாணம் :—இதனல் சுரம், வாதரோய் முதலியன குணமாகும்.

துருசு :—இதனல் புண், மேகாணம், சுவாசகாசம், கண்நோய் முதலியன குணமாகும். வமனம், விரேசனம் இவைகளை உண்டாக்கும்.

அப்பிரகம் :—இதனல் சுரம், சிரிழிவு, மதமேகம், பிரமியம், வாதரோய், குடலண்டம், பெருவயிறு, தாவர ஜீவ விஷங்கள் முதலியன குணமாகும். விரிய விருத்தியை புண்டாக்கும்.

மிருதார் சிங்கி :—இதனல் பித்த வீரணம், கப்பான், இரத்தி முதலியன குணமாகும்.

காந்தம் :—இதனல் பாண்டு, சோபை, காமாலை, மகோதரம், வெட்டை, பிரமேகம், வாதரோய், வெப்பு முதலியன குணமாகும்.

மண்டூரம் :—இதனல் பாண்டு, சோபை, காமாலை, மகோதரம், நல்கட்டி, சுரம், இருமல், இரைப்பு முதலியன குணமாகும்.

இரசம்

இது பல பிரதேசங்களில் இருந்திலிருந்து எடுக்கப்படுகிறது. இதில் வெண்மை, செம்மை, மஞ்சள், நீலம் முதலிய

நான்கு நிறங்களையுடைய நான்கு வகைகள் உண்டு. இவற்றில் வெண்மை நிறமுள்ள ரசமே மருந்துகள் செய்வதற்குச் சிறந்தது. இதனைப் பாதரசமெனவும் கூறுவர். லிங்கத்தினின்றும் இரசம் எடுக்கப்படும். இதனை வாலை ரச மென்பர்.

இரச தோஷம்:—ரசகம், வங்கம், செருப்பில் விட்டால் கிற் காரம, அசப்பாக்கினி, விஷம், மலம், கிரி என்கிற ஏழு தோஷங்கள் சுத்தியில்லாத பாதரசத்திற்கு இயற்கையாக உண்டு. இவற்றுள் ரசதோஷத்தால் ஜடத்துவம், வங்கதோஷத்தால் குஷ்டரோகம், அக்கினி சாஞ்சல்யத்தால் விசேஷதாபம், அஸாத்யாக்கினி பால் விரியரசம், விஷத்தால் மூர்ச்சை, மலத்தால் வில்போடகம், பர்வதத்தால் மரணம், முதலியவைகள் உண்டாகும்.

இரச சுத்தி:—லிங்கத்தை பழச்சாற்றில் ஒருநாள் அரைத்து ஊர்த்துவ பாதனயத்திரத்தில் விட்டு மூன்று ஜாமங்கள் எரித்து சங்க தீதனத்தில் இறக்கி மேல் பாத்திரத்தில் ஒட்டியிருக்கும் பாதரசத்தை யெடுத்துக்கொண்டு பழச்சாற்றிலாவது கோவைபழச் சாற்றிலாவது ஒருஜாமம் அரைத்து கழுவி எடுக்க ரசகவங்காதி தோஷங்கள் நீங்கி சுத்தமாகும்.

சட்குண கந்தக சாரணபலம்:—பாதரசத்திற்கு சமமாக சுத்தி செய்த கந்தகம் ரசத்தில் சேருமானல் அந்தரசம் சுத்திசெய்த இரசத்தைவிட 100-பாகம் அதிகமான குணங்களுடையதா யிருக்கும். இரசத்தைவிட இரண்டுபாகம் அதிகமாய் கந்தகம், ரசத்தில் சேருமானல் சகல குட்டரோகங்களைப் போக்கும். இம்மாதிரியே இரசத்தில் எடைக்கு ஆறுபாகம் கந்தகம் அத்தடன் ஐக்கியப்பட்டு இரண்டும் சேர்ந்த செருப்புக்கு ஓடாமல் சாரணை செய்துவிட்டால் இதைக் கொண்டு அநேக சித்தகள் செய்யலாம். சூரியோதயத்தால் வெளிச்சம் உண்டாவதுபோல் இந்த ரசஞானத்தால் மனிதர்களுக்கு முத்தி ஞானம் உண்டாகும்.

இரச பற்பம்:—பிரம அத்திபாலால் பாதரசத்தை அரைத்து உருண்டைசெய்து பிரம அத்திப்பாலில் பெருங்காயத்தை அரைத்து இரண்டு மூசைசெய்து ஒரு மூசையில் மேல் உருண்டையை வைத்து மற்றொரு மூசையால் மூடி அந்த மூசையை மண்மூசையில் வைத்து ஏழு சீலைமண்செய்து தீக்ஷணமான வெய்யிலில் உலர்த்தி மிருதபுடம் இட இரசம் பற்பமாகும்.

வேறு:—சுத்திசெய்த பாதரசத்தை வெற்றிலைசாற்றில் அரைத்து கர்கோடி என்னும் தெலுங்கில் எராவடவேர்களை அரைத்து உருண்டைசெய்து இதின்மத்தியில் மேல்கூறிய பாதரச உருண்டையை வைத்து மண்மூசையில் வைத்து புடமிட்டால் இரசம் பற்பமாகும்.

பாதரச குணங்கள்:—பாதரசமானது ஆறுரசங்களுடன் கூடியிருக்கும். அதை சுத்திசெய்து பற்பித்தால் நிரிதோஷங்களை நிவர்த்தி

செய்யும். காமத்தை விருத்திச்செய்யும், சகல ரோகங்களை குணப் படுத்தும். தேக்திரங்களுக்கு பலத்தை புண்டாக்கும். அறிவு, சவுக்கரி யம் இவைகளை விருத்திச்செய்யும். இருமிரோகம், குட்டரோகம், சுரம், மேகரோய்கள், விரணம், வாதம் இவைகளைப் போக்கும்.

ரசதோட சாந்தி:—பசளின் பாலில் சுத்தி செய்த கந்தகத்தை சேர்த்து ஏழுநாள் அருந்த பாதரச தோஷத்தால் உண்டான ரோகங் கள் நீங்கிவிடும்.

இரச பற்ப அனுபானம்:—அந்தந்த ரோகங்களுக்கு தகுந்த அனுபானங்களுடன் இரசபற்பத்தை கால் முதல் அரை குன்றி எடை வரையிலும் தேக பலத்தையும் ரோகத்தின் பலாபலத்தையும் அறிந்து கொடுக்கவேண்டும் மினகு சூரணம் செய் இலைகளுடனிலும் தேன் திப்பிலிச்சூரணம் இலைகளுடனிலும் தேன், பசுநெய் இலைகளுடனிலும் சர்வ ரோகங்களுக்கும் கொடுக்கலாம். பித்தரோகத்திற்கு பசும்பால் சர்க்கரையுடனும், வாதரோகத்திற்கு, திப்பிலி சூரணத்துடனும், கபரோகத்திற்கு இஞ்சி சுரசத்துடனும், சுரத்திற்கு பழச்சாற்றுடனும், ரத்த விகாரங்களுக்கு தேனுட னும், அதிசாரரோகங்களுக்கு தயிருடனும், கொடுக்கவேண்டும். மேலும் அதிசாரரோகத்திற்கு மாதளம் பசும்பால், அத்தசலம் இலைகளை சம எடையாய் கலந்து கற்கண்டு போட்டு பத்தியத் துடன் பானம் செய்விக்கவேண்டியது. ரக்தாதிசாரத்தில் நிறகீரை ரசத்தோடும், பீனசம், கபரோகம் இவைகளுக்கு வெல்லம், நெய், மிளகுசூரணம், இலைகளுடனும் கொடுத்த தயிர் சாதத்தை பத்திய மாய் கொடுக்கவேண்டியது. வீரியவிருத்தி, வீரியதம்பனம் இலைக ளுக்கு உளுந்து, கலியாணபூசனி, அமுமதாம், இலைகளின் சூரணத் துடன் கொடுத்து பசும்பாலுடன் சர்க்கரையை கலந்து அருந்தச் செய்விக்கவேண்டியது. மாதர்களுக்கு, ரஜோரோகம், ரத்தசூன்மம், சூலரோகம் ஆகிய இந்த ரோகங்களுக்கு கண்டுபாரங்கி, நிரிகடுகு, பெருங்காயம், வெல்லம் இலைகளின் சூரணத்தில் பற்பத்தை கலந்து கொடுத்து கருப்பு எள்ளின் கியாத்தை குடிக்கும்படிச் சேய்யவேண்டியது.

இலிங்கம்

இது இயற்கையாகவே சில பூமிகளில் கிடைக்கின்றது. ஆனல் பெருமபாலும் நமக்குக் கிடைக்குஞ் சரக்கு வைப்பு முறையில் செய் கையில் செய்யப்படுவதேயாம். இது ரசம கந்தகம் வெடியுப்பு முத லிய சரக்குகளை முறைப்படிக் கூட்டிச் செய்யப்படுவதாகத் தெரிய வருகின்றது.

இத்தகு சுரமகற்றி, தவர்ப்பி, உடல்தேற்றி செய்கைகள் உண்டு. இதனல் சுரம், சன்னி, இரத்தி, முதலிய மேக ரோய்கள், வாதரோய், அதிமூத்திரம் முதலியன குணமாகும். இதைக்கொண்டு

இலிங்கக் கட்டு, இலிங்கச் சென்தூரம், இலிங்க மாத்திரை, படிக இலிங்கச் செந்தூரம், சாதி கற்பிக் குழம்பு முதலிய மருந்துகள் தயா ரிப்பதுண்டு இவைகளை சிகிச்சா சாரத்தில் காண்க.

இலிங்கத்தினின்று இரசம் எடுக்கும் விதம்:—ஒரு பங்கு இலிங்கத் திற்கு சமன்கு பங்கு சித்திரமூல வேர்ப்பட்டையை எடுத்துத் தூள் செய்து ஓர் பாத்திரத்தில் பாதி பாகத்தைப்போட்டு நடுவில் இலிங்கத்தை வைத்து மேலும் மிகுதியுள்ள பாதி பாகத்தைப்போட்டு, பொருத்த மான மேல்பாகை மூடி சீலைமண் செய்து அடுப்பிலேற்றி முறைப்படி எரித்து ஆறின பின்பு மேற் பாகையின் உட்புறத்திலுள்ள பதங்கத் தைச் சுரண்டி எடுத்த தூளில் வைத்து பிறிய இரசம் இடைக்கும். இதுவே இலிங்க ரசம் அல்லது வாகரசம் எனப்படும், இது மிகவும் சுத்தமான ரசமாகக் கருதப்படும்.

இரச செந்தூரம்

இதுவும் இலிங்கத்தைப்போலவே இரசம் கந்தகம் முதலிய வைகளைச் சேர்த்து செயற்கையில் செய்யப்பட்டு தைகளில் விற்கப்படும். இது இயற்கையில் கிடைப்பதில்லை. இது பார்க் யோட்டுத் தூண்டுகள்போல காணப்படும். ஆகவே இதனை வில்லை ரசச் செந்தூரம் என்றும் கூறப்படும். இதன் செய்கை, குணம் பயன் முதலியவரவும் லிங்கத்திற்குக் கூறியதேயாகும்.

ரஸம்

இதனை இரச கர்ப்பூரம் என்றும் கூறப்படும். இது இரசத் டன் சில உப்புகளைக் கூட்டிச் செய்யப்படுவதாகக் கருதப்படுகின் றது. இதற்கு மலமிளக்கி, பித்தநீர் பெருக்கி, புழுக்கொல்லி முதலிய செய்கைகள் உண்டு. இதனல் குன்மம், சூலை, வாதரோய், சொறி சிரங்கு, விரணம் முதலியன குணமாகும். இதைக்கொண்டு பூர சிரங்கு, விரணம் முதலியன குணமாகும். இதைக்கொண்டு பூர பற்பம, பூர எண்ணெய், பூர மாத்திரை முதலிய உள் மருந்துகளும், பூரப்பொடி, பூரக்களிம்பு முதலிய வெளி மருந்துகளுஞ் செய்ய தண்டு.

விரம்

இதுவும் இரசம் அல்லது இரச சம்பந்தமான பொருள்களுடன் சில உப்பு வகைகளைக் கூட்டிச் செயற்கையில் செய்யப்படுவதாகும். ஆனல் பஞ்ச சூரங்களுக்குள் இது மிகவும் கொடிய நஞ்சுச் சரக்கா கும். இது சாமத்தின் மீது பட்டாலும் விரணத்தை புண்டாக்கும். இதை உள்ளுக்கு மருந்தாக முடித்து வழங்கும்போது மிக்க ஜாக் கிரதையுடன வழங்கவேண்டும். இது ஒரு குன்றி எடையில் மூப் பத்திரண்டில் ஒரு பாகத்திற்கு மேல் வழங்கினலும் நஞ்சாகும். இதற்கு மேலுக்கு புண்ணுண்டாக்கி, புழுக்கொல்லி, அழுகு ஸகற்றி முதலிய செய்கைகளும் உள்ளுக்கு உடல் தேற்றிச் செய்கை

யும் உண்டு. இதனால் குன்மம், குட்டம், மேக நோய்கள், வ்ரணம், மகா வாதரோகங்கள், சூலை முதலியன குணமாகும். இதைக் கொண்டு வீர நீர், வீர வெண்ணெய், வீரக்களிம்பு, மூதலிய புற மருந்துகளும், வீர மாத்திரை, வீர மெழுகு, அபரீரச் சென்னாம் முதலிய அக மருந்துகளும் தயாரிப்பதுண்டு.

கந்தகம்

இதில் நான்கு வகையுண்டு அவைகளில் சுவேதகந்தகம், வ்ரணங்களுக்கு லேபனம் போடுவதிலும் ரக்தகந்தகம் சுவர்ணி தாதுமாரணங்களிலும், பீதவர்ணகந்தகம் ரசாயனங்களிலும், கிருஷ்ணவர்ணகந்தகம் சகல கிரியைகளிலும் உபயோகிக்க தகுந்த வைகளென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த கிருஷ்ண கந்தகம் அகப்படுகிறது மிகவும் கஷ்டம்.

கந்தக சுத்தி:—இரும்பு பாத்திரத்தில் கந்தகத்தையெத்த அதற்கு சமமாய் பசும் நெய் வார்த்து அடுப்பின் மீதேற்றி கந்தகம் கறைந்த உடன் பசும்பாலில் விட்டால் சுத்தியாகும்.

கந்தக அனுபானங்கள்:—மாழுபிமாணத்தில் பத்தில் ஒரு பாகம் கந்தகத்தை உபயோகிக்க வேண்டியது. பவதானியத்தின் கஞ்சியில் சுத்திசெய்த கந்தகத்தை அரைத்து லேபனஞ் செய்தால் தலையின் வ்ரணங்கள் நீங்கும். காசரோகத்திற்கு மினகு சூரணம் பசு நெய் இவைகளுடனாகிலும் திப்பிலி சூரணம் பசுநெய் இவைகளுடனாகிலும் உபயோகிக்கவும். சுவாசரோகத்திற்கு திப்பிலி சூரணம் தேன் இவைகளுடனும், பார்சுவசூலைக்கு வெற்றிலைச் சாறிலும், விஷூசிகாரோகத்திற்கு பழச்சாற்றிலும், பிரமேகங்களுக்கு வெல்லத்திலும், அரோசகரோகத்திற்கு வெள்ளி வற்றல் சூரணத்திலும் குஷ்டரோகத்திற்கு நிம்ப பஞ்சாங்கத்திலும், வாதரோகத்திற்கு தனசிரசம்நெய் இவைகளுடனும், பித்தரோகத்திற்கு பசு நெய்யுடனும், கபரோகத்திற்கு சுக்கு வெல்லம் இவைகளுடனும் கலந்து சாப்பிட்டால் ரோகங்கள் நீங்கும். கரிசாலைச்சூரணம், நிரிபலிசூரணம் இவைகளுடன் சுத்திசெய்த கந்தகத்தைக் கூட்டி ஒரு வருஷம் கொடுத்தால் நிழந்தன மில்லாமலிருக்கும். சுத்தி செய்த கந்தகம், பத்து பலம், ஐந்துபலம் காசனிக்கணி சாற்றில்அரைத்து வெய்யலில் உலர்த்தி அதற்கு பாதிபாகம் கடுக்காய் சூரணத்தை சேர்த்து தேன் பசும் நெய் இவைகளுடன் இண்டுமாதம் சாப்பிட்டால் நிழத்தனம் நீங்கி விசேஷ பலமும் வீரிய விருத்தியும் உண்டாகும்.

அபக்குவ கந்தகவிகார சாந்தி:—பசும்பாலில், நெய்யை கலந்து பானஞ்செய்தால் அபக்குவ கந்தகசேவையால் உண்டான விகாரங்கள் யாவையும் போக்கி சவுக்கியப்படுத்தும்.

தாளகம்

தாளகத்தை நிரிபலி கியாழம், புளித்த கழுநீர், பூனிச்சாறு, எள் எண்ணெய், சண்ணும்புநீர் முதலியவைகளில் ஒவ்வொரு ஜாமம் டோலாயந்திரத்தில் வேகவைத்தால் சுத்தியாகும்.

தாளக மாரணம்:—சுத்திசெய்த தாளகத்தை அரசன்பட்டை சாற்றில் இருபதாள் ஊறவைத்து கல்வத்திலிட்டு அரைத்து பில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி ஓர் மண்பாத்தியில் அரசம்பட்டை சாம்பலை பாதிவரையிலும்போட்டு தாளக பில்லையை வைத்து அதின்மீது அரசம்பட்டை சாம்பலை நிறப்பி பாத்திரவாயை மூடி சீலைமன்செய்து உலர்த்தி அதை அடுப்பேற்றி காலுஜாமம் எரித்து சாங்கசீதளத்தில் இருக்கிக்கொண்டு பார்த்தால் சுத்தமான பற்பமாகும்.

வேறு:—சுத்திசெய்த தாளகத்தை வெள்ளைச் சாரணை இலைசாறில் ஒருநாள் வரையிலும் ஊறவைத்து கல்வத்தில் அரைத்து பில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி ஒரு பாத்தியில் பாதிபாகம் வரையிலும் வெள்ளைச்சாரணை சாம்பலை கொட்டி அதன்மீது தாளக்கையவைத்து மறுபடியும் சாம்பலால் நிறப்பி மேல்மூடியால் மூடி சீலைமன்செய்து வெய்யிலில் உலர்த்தி அடுப்பேற்றி காற்பது ஜாமங்கள் எரித்து எடுக்க மேலான பற்பமாகும்.

தாளக பற்ப குணம்:—தாளக பற்பத்தால் எண்பதுவித வாத ரோகங்கள், பித்தரோகங்கள், கபரோகங்கள், க்ஷயகாசம், குதரோகம், குட்டம், பிரமேகம் சாதிரோகங்கள் முதலியன குணமாகும்.

அபக்குவ தாளக தோஷம்:—அபக்குவ தாளக பற்பமானது மஞ்சள் நிறமும் நெருப்பில் போட்டால் புகை உண்டுபண்ணுவதுமாயிருக்கும். இதனால் வாதரோகம், பித்தரோகம், குட்டம், மரணம் இவைகள் சம்பவிக்கும்.

சாந்தி:—கலியாணபூசனிக்காய் சாசமாகிலும், நெருஞ்சி சொறி சாசமாகிலும் சர்க்கரையுடன் கலந்து குடித்தாலும் அல்லது சிகம் சர்க்கரை சமபாகமாய் கலந்து எழுசான் சாப்பிட்டாலும் தோஷ பற்பத்தினால் உண்டான ரோகங்கள் நீங்கும்.

தாளக பற்பானுபானங்கள்:—நிந்தில்கொடி சூரணத்துடனாவது அல்லது கியாழத்தோடாவது சாப்பிட்டால் வாதரத்தம், குட்டம் இவைகளை குணமாக்கும். மஞ்சள் சூரணத்துடன் சுத்த தோஷத்தை நிற்கும், வெற்றிலைச்சாற்றில் க்ஷயரோகத்திற்கும், பூனி இரசத்தில் கணமச்சல், உபதம்சம், பகந்தரம், விசர்ப்பம், மண்டலகுஷ்டம், வாத ரத்தம், விஸ்போடகம் ஆகிய இந்த ரோகங்களுக்கும், சர்க்கரையில் பாண்டு, க்ஷயம், சுரம் ஆகிய ரோகங்களுக்கும சாப்பிட்டால் குணமாகும். இந்த பற்பதனை சாப்பிடும்போது சர்க்கரை பசும் பால் கலந்த அன்னத்தை மாத்திரமே பத்தியமாக சாப்பிட்டுவர வேண்டியது.

வெள்ளோப் பாஷாணம்

இதுவும் கொடிய ஞ்ஞ சக்காகும். இதில் ஒரு குன்றி எடையில் பதினறில் ஒரு பாகத்திற்கு மேல் பயன்படுத்துதல் கூடாதல்ல. ஆனல் இதை மிகச் சிறிய அளவில் முறைப்படி மருந்தன் முடித்தி வழங்கிவர அரோக நோய்களைப் போக்கும். இதற்கு சுரம், முறை சுரம் முதலியவைகளைப் போக்கல், பசித்தீயை தூண்டல், சுரம்பு களுக்கு பலந்தால், உடலிற்றேற்றல், தாதுவிருத்தி யுண்டாக்கல் முதலிய செய்கைகள் உண்டு. இதனல் சாட்பட்ட சுரம், முறைசுரம் மேகப்பிணிகள், சுரம்பு சம்பந்தமான வியாதிகள், வாதரோய் முதலி யன குணமாகும். இதைக்கொண்டு பாஷாண பற்பம், பாஷாணக் கட்டி, பாஷாண மாத்திரை முதலிய மருந்துகள் தயாரிப்பதுண்டு.

அப்பிரகம்

அப்பிரகமானது வெண்மை, கருமை, மஞ்சள், புகை முதலிய நிறங்களைத் தனித்தனியே யுடைய சான்கு வகைகளாக கிடைக்கப் படுகிறது. இவற்றுள் கறுப்பு நிறமுள்ள அப்பிரகத்தைக் கிருஷ் ணாப்பிரகம் என வழங்கப்படும். இதுவே நிறத்தும் மருந்தன் செய்வதற்கு பெரும்பாலும் உபயோகப்படுவதாகும். அபி ரேக்தை நெருப்பில் காய்ச்சி பசும்பாலில் தோய்த்து ரேக்கு ரேக்காக செய்து அந்த ரேக்குகளை புளித்த கழுநீர், புளி இலைகளின் தனித்தனியே இரண்டுநாள் வரையிலும் ஊறவைக்க வேண்டியதாகும். இவ்வாறு சுத்திசெய்த அபிரேக்தை புளித்த கழுநீர் அல்லது காடி விட்டரைத்து அதற்கு கால்பாகம் செல்லை சோத்து கம்பளியில் கிழி கட்டி ஓர் பாத்திரத்தில் கழுநீர் வார்த்து அதில் இந்த கிழியைப்போட்டு கையால் சன்றாய் பிசைந்து தேய்க்கவேண்டியது. பிறகு அந்த பாத்திரத்தில் இருக்கும் கழுநீரை கொட்டிவிட்டு அடியில் இருக்கும் அப்பிரகத்தை யெடுத்துக்கொள்ள வேண்டியது. இதை தானிபாப் பிரகமென்று சொல்லுவார்கள். சுத்தமான அப்பிரகத்தை நெருப் பில் காய்ச்சி இலுப்பைப்பழ கஷாயத்தில் தணியத்து, அரைத்து பில்லை கட்டி வெய்யிலில் உலர்த்தினல் அது தானிபாப்பிரகத்தைவிட மிகவும் சிரேஷ்டமானது.

அப்பிரகமாரணம்:—சுத்திசெய்த அப்பிரகத்தை எருக்கன் பாலால் அரைத்து பில்லைசெய்து அந்த பில்லையை எருக்கன் இலை களால் சுவசமசெய்து சீலைமண்செய்து கஜபுடமிட வேண்டியது. இப்படி ஏழுமுறை செய்தபிறகு துளசிழுது கஷாயத்தால் அரைத்து கஜபுடமிட வேண்டியது. இம்மாதிரி மூன்று தடவை கஜபுடமிட் டால் அந்த அப்பிரகம் சுத்த பற்பமாகும்.

அப்பிரக பற்ப குணம்:—அப்பிரக பற்பத்தால் வாதம், பித்தம், கபம், பிரமேகம், சீழிவு, மதுமேகம், சூட்டம், சுவாசம், விஷம், பிரமை, குன்மம், சுசம், சுக்கம், சிரகணி, பாண்டு, காமாலை, பகர்

தாம் முதலிய சோய்கள் குணமாகும். வீரியவிருத்தி, பலம் இவை களை விருத்தி செய்யும்.

அபக்குவ பற்ப தோஷம்:—அபக்குவ அபிரேக்து பற்பமானது தருக்குகளை பெற்றிருக்கும். இதை உட்கொள்வதினல் சானுவித வியாதிகள் உண்டாகி மரணமும் சம்பவிக்கும்.

சாந்தி:—செல்லிப்பழத்தை ஜலத்தில் அரைத்து மூன்றாள் காலை மாலை சாப்பிட்டால் தோஷத்தினல் உண்டாகும் ரோகங்கள் எல்லாம் நீங்கிவிடும்.

அபிரேக்து பற்பானுபானங்கள்:—அபிரேக்து பற்பத்தை திப் பிலிசூரணம் தேன் இவைகளுடன் அனுபானித்துக் கொடுத்தால் காசம, சுவாசம், விஷம், பிரமை, காமாலை, குன்மம், பாண்டு, சிரகணிரோகம், கபம், சுசியம், பிரமேகம், வாதம், பித்தம், கபம், சூட்டம், சிரணசுரம், அரோசகம் இந்த ரோகங்கள் நிவர்த்தியாகும். இலாசத்து பற்பம், திப்பிலிசூரணம, தேன் இவைகளுடன் அபிரேக பற்பத்தை கலந்துக்கொடுத்தால் பிரமேகம் நிவர்த்தியாகும். சுவர்ண பற்பத்துடன் கொடுத்தால் சுசியரோகங்கள் நிவர்த்தியாகும். தாது புஷ்டியும் உண்டாகும். எலக்காய், சர்க்கரை இவைகளுடன் சாப் பிட்டால் ரத்தபித்தம் போகும். கீழாநெல்லி, சர்க்கரை, நெரிஞ்சல், எலக்காய் இவைகளின் சூரணத்தை பசும்பாலில் கலந்து அப்பிரக பற்பத்தையும் சேர்த்து சாப்பிட்டால் மூத்திர கிருச்சரம், பிரமேகம் நீங்கும். சந்தல்சர்க்கரை, கற்கண்டு இவைகளின் சூரணத்துடன் உட்கொண்டால் சகலவித பிரமேகங்களும் நீங்கிவிடும். நிரிபலை சூரணம், தேன் பசுநெய் இவைகளுடன் சாப்பிட்டால் விரியவிருத்தி யுண்டாகும். சேத்திரரோகம் குணமாகும். சிறுதேக்கு சூரணம், திப்பிலிசூரணம், தேன் இந்த அனுபானங்களுடன் கொடுத்தால் கபரோகங்கள் சகலமும் நிவர்த்தியாகும். இலவங்கம், தேன் இவை களுடன் கொடுத்தால் சுக்கில விருத்தியுண்டாகும். பசும்பால் களுடன் கொடுத்தால் சுக்கில விருத்தியுண்டாகும். பசும்பால் சர்க்கரை இதுகளுடன் கொடுத்தால் பித்த ரோகங்களெல்லாம் தீரும்.

காவிக்கல்:—இதனல் உட்சூடு, இரத்தப்போக்கு, நேத்திரபேதி, பெரும்பாடு, அக்கிப்புண், கண்ணேறு முதலியன குணமாகும். இத னுடன் சமனெடை பொரித்த படிகாரத்தைச் சேர்த்தரைத்து லவத் தக்கொண்டு இதில் வேளைக்கு 4-5 குன்றி எடை வீதம் தினம் 2-3 வேளை கொடுத்துவர எக்கலைய நேத்திரபேதி, பெரும்பாடு, இரத்த மூலம் முதலியனவும் குணமாகும்.

கற்சுண்ணம்:—இதனல் அசீரணம், பேதி, இரத்தப்போக்கு, விரணம், நீர் சுருக்கு, கடிவிஷம், நேச்சுட்டபுண், சமன சிரங்கு, கபரோய் முதலியன குணமாகும். பனி நீபனம், எலும்பு, சுக்கிலம் இவைகளுக்கு பலம் முதலியவைகளை உண்டாக்கும். கற்சுண்ணத்

துடன் சிறிது வசம்பைச் சுட்டு சிலேபிலுட்டி முகரச்செய்ய மூர்ச்சை, மயக்கம், தலைவலி, காசியடைப்பு முதலியன குணமாகும். இதை தேள் கொட்டின விடத்தில் மேற்றேய்க்க விஷம் சற்று இறங்கும். கற்கண்டத்துடன் வெல்லம் சேர்த்து மத்தித்து வெட்டு காயம், அடிபட்ட காயங்களில் வைத்துக் கட்ட இரத்தப் போக்கை நிறுத்தும். இதனுடன் சிறிது சுப்பைமேனி இலைச்சாறு விட்டுக் குழைத்து வண்டு, குளவி முதலிய பூச்சுக் கடிகளுக்கு தடவ குணமாகும். கற்கண்டத் தெளிவு நீருடன் சர்க்கரை சேர்த்து 1-2 அவுன்சு வீதம் அருந்த நீர்ச்சுருக்கு, நீரெரிச்சல், உஷ்ண இருமல் முதலியன குணமாகும். சற்கண்டத் தெளிவு நீருடன் சமன் தேங்காயெண்ணெய் சேர்த்து மத்தித்து தெருப்பு பட்ட விரணம் முதலியவை கட்டு பூசிவர விரைவில் குணமாகும்.

கற்பூரசிலாசத்து:—இதனல் நீர்ச்சுருக்கு, பிரமேகம், உஷ்ணு நிக்கம், விந்துஷ்டம் முதலியன குணமாகும்.

கோமூத்திர சிலாசத்து:—இதனல் மூத்திரக் கிரிச்சரம், உள் விரணம், பிரமேகம், உட்சூடு, இரத்தக் கொதிப்பு முதலியன குணமாகும்.

காடிக்காரம்:—இதனல் பேதி, வலி, கண்ணேய், விஷக்கடிகள், காப்பான் முதலியன குணமாகும்.

அஞ்சனக்கல்:—இதனல் சுரம், சன்னி, மேகம், கண் சிகப்பு, கண் கூச்சம், கண்களில் உண்டாகும். விரணம், பார்வை மந்தம் முதலிய பல நேத்திர நோய்கள் குணமாகும்.

அடுப்புக்கரி:—இதனல் தர்சாற்றமுடன் கூடிய ஏப்பம், வயிற்றப்புசம், அசீரண விஷ பேதிகள், சிக்கு, புண் முதலியன குணமாகும். அடுப்புக்கரியை சன்னரை அரைத்து வைத்துக்கொண்டு 1 வராகனெடை வீதம் தேனில் கொடுக்க அசீரணபேதி, விஷபேதி, வயிற்றுப்புசம், தர்சாற்றத்துடன் கூடி வருகின்ற ஏப்பம், அபான வாயு பரிதல் முதலியன குணமாகும். இதை புண் சிக்குகளுக்கு தூவிவர ஆறும்.

கற்பூரம்:—இதனல் சலதோஷம், இசிவு, சன்னி, வாந்தி, சுரம், மந்தம், தீப்புண், சிலேத்தும வாதப்பிணிகள், கிருமிநோய், செவி நோய், முகநோய் முதலியன குணமாகும். இதைச் சிலேயில் முடிந்து முகர்ந்துவர சலதோஷம், தலைவலி, சுரதோஷம் முதலியன குணமாகும். விஷபேதிகட்கு வழங்கும் மருந்துகளுடன் இதையும் குன்றியெடை சேர்த்துக் கொடுக்க விரைவில் குணப்படும். கற்பூரத்துடன் மஞ்சள்தூள் சேர்த்து சிதளம் மிகுந்துள்ள பாரிசங்களில் தேய்க்க உஷ்ணம் பிறக்கும்.

பச்சைக் கருப்பூரம்:—இதனல் குன்மம், சூலை, வாதம், கபம், மேகப்பிணிகள் முதலியன குணமாகும்.

சாம்பிராணி:—இதனல் சிரநோய், சீர்ப்சாசம், விழிநோய், பல் நோய், விக்கல், வாதகபம் முதலியன குணமாகும். இதன் புகை தர்சாற்றத்தையும் கிருமிநோயும் போக்கும். இதன் தூளை தேங்காய் செய்புடன் குழைத்து விரணங்களுக்கு பூச விரைவில் குணமாகும். இதை வெந்நீர் விட்டாரைத்து சிதளசைதன்ய வீக்கங்களுக்கு பற்றிடலாம். இதன் புகையை நாசனத்தில் தாக்க மூலவிரணமும், காதில் தாக்க காதுவிரணம் சிழ்வடிதல் வலி முதலியவைகளும், தொண்டையில் படும்படி வாயில் தாகீக சுவாசகாசம், சலதோஷம் தொண்டை ரணம், இருமல் முதலியவைகளும் குணமாகும். சாம்பிராணியை கல்லெண்ணெயி லிட்டுக் காய்ச்சி முடித்தலமாக வழங்க தலைவலி, நீர்ப்சாசம் முதலியன குணமாகும். சாம்பிராணியை சுத்தி செய்து இத்துடன் சமன் வெல்லம் சேர்த்து அரைத்து குன்றியளவு கொடுக்க விக்கல் நீரும்.

கல்நார்:—இதனல் நீர்சுருக்கு, விந்து கஷ்டம், தந்தநோய், வயிற்றுவலி, பித்தகாசம் முதலியன குணமாகும். இதில் ஜீவமைக் கல்நார், நாட்டுக்கல்நார் என இருவகையுண்டு. இவற்றுள் ஜீவமைக் கல்நாரையே பற்பமாக்கி உள்ளுக்கு வழங்குவதுண்டு. நாட்டுக் கல்நாரை சுத்திசெய்து வெளுக்க வறுத்து இடித்து தூள்செய்து பல்தேய்த்துவர தந்த ரோகங்கள் யாவும் குணமாவதுடன் பற்கள் இருகும்.

நண்டுக்கல்:—இதனல் நீர்சுருக்கு, நீரடைப்பு, கல்லடைப்பு, பிரமேகம், வெள்ளை முதலியன குணமாகும். இதனைச் சுத்தி செய்து தப் பொடித்துக் கல்வத்திலிட்டு முள்ளங்கிச்சாறு விட்டு 5-நாளும், சிறுபீளைச் சாறுவிட்டு 5-நாளும் நன்கு அரைத்து உலர்த்தி வைத்துக் கொண்டு வேளைக்கு 2-முதல் 4-குன்றி எடை தினம் இருவேளை சோம்புக்குடிநீர், நீர்முள்ளி குடிநீர் முதலியவற்றுடன் சேர்த்துக் கொடுத்துவர நீரடைப்பு, கல்லடைப்பு, மகோதரம் முதலியன குணமாகும்.

கெம்புக்கல்:—இதனல் காக்கைவலி, மனத்துயரம், கபப்பிணிகள் முதலியன குணமாகும். இருதயத்திற்கு பலம் தரும்.

கோமேதகம்:—இது வாத பித்தகோபம், சுரவிகாரம் முதலிய வைகளைப் போக்கும்.

புட்பராகம்:—இதனல் மேக நோய்கள் விலகும். சுக்கில விருத்தி யுண்டாகும்.

மரகதம்:—இதனல் பூதவைசாசங்களின் தோஷம், பலவிஷம், மதுமேகம் முதலியன குணமாகும். விந்துவை பெருக்கும்.

மாணிக்கம்:—இதனல் சுரம், சன்னி, திரிதோஷம், கண்ணேய் முதலியன போம். வசிகரமுண்டாகும்.

வச்சிரம்:—இதனால் சேத்திரரோகம் முதல் பல ரோகங்கள் குணமாகும். சரீர அழகுண்டாகும்.

வைடூரியம்:—இதனால் விசேஷத்தமவாத தோஷம், கபம், தோஷங்கள் பயித்தியம் முதலியன குணமாகும்.

நஞ்சுமுரிச்சான் கல்:—இதனால் தாவரவிஷம், மார்பு துடிப்பு, உள்ளுறுப்புகளின் விரணம் முதலியன குணமாகும்.

பால் துத்தம்:—இதனால் கப்பான் கொருக்குப்புண், விழி சோய்கள் முதலியன குணமாகும்.

சகஸ்திரவேதி:—இதனால் அஸ்திசுரம், தாகசுரம், ரத்தபித்த, வமனம், சன்னி, கபாதிக்கம், கண்ணோய், பிரமேகம் முதலியன குணமாகும்.

எஃகு:—இதனால் தந்தரோய், தந்துமூலரோய், அரினக்கிரகம், லீக்கம், சேத்திரரோய், பாண்டு, சோபை, அர்பலம் மூல ரோகம் முதலியன குணமாகும்.

கல்மதம்:—இதனால் பிரமேகம், கல்லடைப்பு, நீரடைப்பு, சுரை யடைப்பு, மூத்திரக் கிரிச்சரம், நாத சஷ்டம் முதலியன குண மாகும்.

நீலக்கல்:—இதனால் மேகநீர், அதிபித்தம், பாண்டு மனச் சோர்வு முதலியன குணமாகும். சக்கில விருத்தியுண்டாகும்.

மடல் துத்தம்:—இதனால் சுரம, சன்னி, கண்ணோய், மேகப் படைகள் முதலியன குணமாகும்.

இலவணங்கள்

கறியுப்பு:—இதற்கு வமனத்தை உண்டாக்கல், விரேசனத்தை யுண்டாக்கல், லீக்கத்தைக் கரைத்தல், கிருமிகளைக் கொல்லுதல் முதலிய செய்கைகள் உண்டு. இதனை முறைப்படி மருந்தாகச்செய்த அருந்திவர பசியின்மை, அசீரணம், குன்மம் முதலிய பிணிகள் குண மாகும். இதில் 4-5 வராகனெடை நீரில் கலைத்து குடிக்க பேதி யாகும். சுமார் ஒரு பலம் உப்பைத் தூள் செய்து சுமார் இரண்டு முன்ன ஒரு டம்ளர் ஜலத்தில் கலைத்து குடிக்க வாந்தியாகும். இத் தலைய வமனகிரிச்சைகள் இல கஞ்சப்பொருட்களைத் தின்றவர் களுக்கு வழங்க உதவும். உப்பைக் கலைத்த ஜலத்தை ஆசன வழியில் பீச்ச கிருமிகள்செத்து வெளிப்படும். இச்சலத்தைக்கொண்டு சொறி சிரங்கு விரணங்களையும் கழுவிவர விரைவில் குணம். உப்புத் தூளைக் கொண்டு பல் தேய்த்துவர பல், ஈறு இவைகளின் சோய்கள் குண மாகும். உப்பை நீர் விட்டலைத்து அடிபட்ட லீக்களுக்கு பற்றிட லீக்கங்கள் கரையும்.

கல்லுப்பு:—இதற்கும் லீக்கத்தை கரைத்தல், கிருமிகளைக் கொல்லுதல், மலதோஷப் போக்கல் முதலிய செய்கைகள் உண்டு.

இதை முறைப்படி மருந்தாக செய்து அருந்த பித்தம், குன்மம் முதலி யன குணமாகும். இதனுடைய குணமும் ஏறக்குறைய கறியுப்பை பொத்திருக்கும். இதை தனியாக வழங்குவதில்லை. பெரும்பாலும் பற்ப செந்தூரமாகவோ அல்லது இதர மருந்துகளுடன் கூட்டியோ வழங்கப்படும்.

இந்துப்பு:—இதற்கு பேதியாக்கும் செய்கையுண்டு. இதனால் மலபந்தம், குன்மம் முதலிய பிணிகள் தீரும். இதனைப் பெரும் பாலும் விரேசனத்திற்காகப் பயன்படுத்தப்படும். இதில் சுமார் 2-முதல் 4-வராகனெடை நீரில் கலந்து கொடுக்க இரண்டு மூன்று முறை பேதியாகும். சூரத்து மிளாவாசை, சுக்கு, கடுக்காய் பிஞ்ச, இவைகள் சேர்ந்த சோறுமொக்கு, சோம்பு, கொட்டை நீரோட்டை இலைகள் சேர்ந்த குடிநீரில் இத்துப்பைச் சேர்த்துக் கொடுக்க நன்கு பேதியாகும். இதனால் மலக்கட்டி, சுரம், வயற்றுவலி, பித்தத்தலைவலி, நீர்க்கோவை, பித்தாதிக்கம் முதலியன குணமாகும்.

வெடியுப்பு:—இதற்கு முக்கியமாக இறைச்சி பெருக்கல், விபர்வை யுண்டாக்கல் முதலிய செய்கைகள் உண்டு. இதனால் நீர் வீக்கம், சோபை, மகோதரம், குன்மம் முதலியன குணமாகும். கூட்டு, சோபை, மகோதரம், குன்மம் முதலியன குணமாகும். எழுமிச்சம்பழச்சல் வெடியுப்பு அல்லது முறைப்படி சுத்திசெய்த வெடி யுப்பைப் பொடித்து வேளைக்கு 4-5 குன்றி எடை வீதம் தினம் 2-3 வேளையாக நீரகாரம் (கழுநீர்), சோம்புக் குடிநீர் முதலியவற்றில் போட்டுக் கொடுத்துவர வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, சோபை, சுக்கொதிப்பு முதலியன சாந்தப்படும். வெடியுப்பு பலம்-4, சுவர்ச் சாரம் பலம் 4, இவைகளை நன்கு பொடித்து 2½-ஆழாக்கு ஜலத்தில் கலைத்து வைத்துக்கொண்டு இதில் ஓர் துணித்துண்டை நனைத்து, வீக்கம், அண்ட சோயுடன் கூடிய கீல்களின் வீக்கம், அடிபட்ட வீக்கம், தலைவலி, முதலியவைகளுக்கு முறையே அவ்வவ்விடங்க ளில் மேலுக்கு போட்டு, மிகை உலர உலர நிரவத்தை விட்டுவரவிரை வில் அவ்விடங்களிலுள்ள விரணம், வலி, வீக்கம் முதலியன பாவுங் குணமாகும்.

சுவர்ச்சாரம்:—இதற்கு இறைச்சி பெருக்குஞ் செய்கையுண்டு. இதனால் கல்லடைப்பு, பெருவயிறு, வயிற்றுவலி, வாதரோய் முதலி யன குணமாகும். சுவர்ச்சாரத்தைப் பொடித்து ஓர் மண்ணோட்டி லிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயில் சிறிது நேரம வறுத்து சுரம் உலர்ந்த பதத்தில் எடுத்து அரைத்து வைத்துக்கொண்டு இதில் வேளைக்கு 3-அல்லது 4 குன்றி எடை வீதம் தினம் இரு வேளையாக நீர் முள்ளி, நெருஞ்சில், சுரைக்கொடி, மூக்கரட்டை, சோம்பு முதலியன சேர்ந்த குடி நீருடன் சேர்த்துக் கொடுத்துவர நீர டைப்பு, கல்லடைப்பு, சோபை, மகோதரம் முதலியன குணமாகும். மற்றும் இதனை வாதத்தை சமனப்படுத்தும் குடிநீருடன் சேர்த்துக் கொடுத்துவர வாதரோகங்கள் குணமாகும்.

பூநீறு:—இதற்கு சிறுகீரை பெருக்கல், விரேசனமாக்கல் முதலிய செய்கைகளுண்டு. இதனல் சூன்மம், சூலை, வயிற்றுவலி முதலியன குணமாகும். தனல் இதை தனியாக வழங்குவதில்லை. சூன்ம சூடோரி முதலிய மருந்துகளில் சேர்த்து வழங்குவதுண்டு.

வமனயலுப்பு:—இதற்கு அற்பமாக சிறுகீரைப் பெருக்குஞ் செய்கையும், வயிற்றிலுள்ள வாய்வை கண்டிக்கும் செய்கையும் உண்டு, இதனல் பித்தவாய்வு, வயிற்றுவலி, சூன்மம், பிளிகசோய் முதலியன குணமாகும். இதையும் தனியாக வழங்குவதில்லை. சூன்மம் முதலிய சோய்கட்கு வழங்கப்படும் சூரணம் மெழுகு முதலியவைகளில் சேர்த்து வழங்குவதுண்டு.

அன்னபேதி:—இதற்கு தவர்ப்புச் சுவையினல் மலத்தைக் கட்டல், விரணத்தை ஆற்றல், பலத்தை தருதல் முதலிய செய்கைகளும், சிறுமி சாகினி செய்கையும், இரத்த விருத்தி செய்கையும் உண்டு. இதனல் பேதி, பாண்டு, சோபை, நாள் கட்டி முதலியன குணமாகும். இதைச் சென்னரித்து உள்ளுக்குக் கொடுத்துவர முற் கூறிய சோய்கள் குணமாகும். இதை நீர் விட்டரைத்து தூனம் வெளிதன்னல் முதலியவைகட்கு மேலுக்குப்போட சருங்கி உள்ளுக்குப் போவதுடன் அவ்விடத்தில் விரணம் இருப்பினும் ஆறும்.

அப்ளாகாரம்:—இதற்கு வயிற்றிலுள்ள வாய்வை கண்டிக்குஞ் செய்கையுண்டு. இதனல் வயிற்றுவலி, சூன்மம், சூலை, சூடல் விருத்தி, வாதசோய் முதலியன குணமாகும். இதை சுத்தி செய்து நிசுகடி பிரமாணம் பழச்சாற்றுடன் தினம் 1 வேளையாக காலையில் மூன்று நாள் மாதாந்திர சமயத்தில் கொடுத்துவர பெண்களுக்கு காணும் சூதக வயிற்றுவலி குணமாகும்.

கந்தியுப்பு:—இதற்கு வயிற்றிலுள்ள வாய்வைக் கண்டிக்குஞ் செய்கையுண்டு. இதனல் சூன்மம், சூலை, பிளிகசோய் முதலியன குணமாகும். கந்தியுப்புடன் இரண்டு பங்கு சோம்பு சேர்த்து சூரணஞ் செய்து வேளைக்கு ½ தோலா வீதம் தினம் இருவேளை நீரிலாவது சோம்புக் குடி நீரிலாவது கொடுத்துவர குணமம், சூலை, நாள் கட்டி, விக்கம் முதலியன கையும்.

கடல்நுரை:—இதனல் சேத்திசோய், செவிசோய், சிறுகு முதலியன குணமாகும். இதை பன்னீர் விட்டரைத்து சோடைக் கொப்புளம், சிறுகு முதலியவை கட்கு மேலுக்கு பூச குணமாகும். இதைப் பற்பொடிகளில் கூட்ட பற்கள் சுத்தமாவதுடன இருகும். கடல் நுரையை கல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி காதில்விட காதுவலி, சீழ்வடிதல் முதலியன குணமாகும்.

படிகாரம்:—இதற்கு தவர்ப்புச் சுவையினல் மலத்தைக் கட்டல், இரத்தப்போக்கை தடுத்தல், விரணத்தை ஆற்றல் முதலிய செய்கைகள் உண்டு. இதனல் பேதி, தேபேதி, ரத்தபேதி, உட்புண், விரணம் முதலியன குணமாகும். படிகாரத்தைப் பொடித்து சுடிய மிட காலியினின்று ரத்தம் வடிதல் நிற்கும். இதைப் பற்பொடிகளில் சேர்த்து வழங்க பல்லில் ரத்தம் சிந்து வடிதல் முதலியன குணமாகும். வேலம்பட்டைக் குடிநீருடன் சிறிது படிகாரத் தூளைச் சேர்த்துக் கரைத்து வாய் கொப்பளிக்க வாய் ரணம், ரசதோஷம் முதலியவற்றல் ஏற்பட்ட வாய் ரணம் முதலியன குணமாகும். இதைப் பொரித்து அரைத்து வைத்துக்கொண்டு இதில் வேளைக்கு 5-குன்றி எடை வீதம் தனியாகவாவது அல்லது சமன் காசிக்கட்டிச் சூரணத்துடன் சேர்த்தாவது தினம் 2-3 வேளை வீதம் கொடுத்துவர சேபேதி, ரத்தபேதி, பெரும்பாடு முதலியன குணமாகும். பொரித்த படிகாரத்தை வேளைக்கு 2-3 குன்றி வீதம் தினம் இருவேளை வெண்ணெயில் கொடுத்துவர வெள்ளை, வெட்டைச்சூடு, நீர்சுருக்கு, உஷ்ண வயிற்றுவலி முதலியன குணமாகும்.

வெங்காரம்:—இதற்கு அற்ப மூத்திரப் பெருக்கி செய்கையும், சுதலை யுண்டாக்குஞ் செய்கையும் உண்டு. இதனல் சொறி சிரங்கு, புண், சூன்மம், மூத்திர கிரிச்சரம், கபரோகம், ரத்தமூலம், வாதம் முதலியன குணமாகும். இதைப் பொடித்து ஓர் புதுசட்டியில்விட்டு அடுப்பிலேற்றி எரித்துவர பூக்குவரும். சன்ன பூத்தபின்பு கீழிறக்கி ஆறவைத்து கல்வத்திலிட்டு சன்னு அரைத்து வைத்துக் கொள்க. இதில் வேளைக்கு 2-3 குன்றி எடை வீதம் தினம் இருவேளையாக வெண்ணெயில் கொடுத்துவர நீர்சுருக்கு, வயிற்றுவலி, உஷ்ண இருமல் முதலியன குணமாகும். இதில் 5 முதல் 10 குன்றி எடை இளநீர், சோம்புக்குடிநீர் முதலியவற்றில் கொடுக்க நீர்கட்டு குணமாகும். பொரித்த வெங்காரத்தை தேன்விட்டுக் குழைத்து சர, உதடு, தொண்டை முதலிய விடங்களில் காணும் விரணங்களுக்கு பூசிவர விரைவில் ஆறும். பொரித்த வெங்காரத்தை தேன் காவெண்ணெய் விட்டுக் குழைத்து சொறி சிரங்கு விரணங்கட்கு பூசிவர விரைவில் ஆறும்.

சீவப் பொருட்கள்

அம்பர்:—இதனல் சுக்கிலவிருத்தி, தேஜசு, உற்சாகம் உண்டாகும். புண் கரப்பான் இவைகள் ஆறும். இதனைப் பெரும்பாலும் தாதுவிருத்திக்குறிய மாதனை லேகியம் முதலியவைகளில் சேர்த்து வழங்குவதுண்டு.

அரக்கு:—இதனல் சூட்டம், சூன்மம், ரத்தபித்தம், எலும்புருக்கி, விரணம், வாதம் சன்னிபாதம், கபரோகம் முதலியன குணமாகும். கொம்பரக்கை முறைப்படி சுத்திசெய்து பொடித்துவைத்துக்கொண்டு வேளைக்கு ¼-முதல் 5-குன்றி எடை தக்க அனுபானங்களில் கொடுத்துவர ரத்தபித்தம், பெரும்பாடு, சாட்பட்ட அதிசாரம், அதிஸ்துல ரோகம் முதலியன குணமாகும்.

ஆமையோடு:—இதனால் குழந்தைகட்குக் காணும் மாந்தம், சுரம், பேதி, மூலம், தேகவெப்பம, கட்டி முதலியன குணமாகும். ஆமை ஓட்டை சுத்திசெய்து சிறு துண்டுகளாக உடைத்து ஆட்டா தோடை அல்லது உத்தாமணி இலைச் சற்கத்தினிடையே வைத்து அலை லடக்கிச் சீலைமண் செய்த 50-60 வாட்டியில் புடமிட ஓடுகள் வெந்து வெளுத்திருக்கும். இதைப் பொடித்துக் கல்வத்திலிட்டு முன் கூறிய அதே மூலிகைச் சாற்றில் அரைத்து வில்லைசெய்து உலர்த்தி அகலிலடக்கி மீண்டும் ஓர் புடமிட்டெடுக்க நல்ல பற்பமாகும். இதை அரைத்து வைத்துகொண்டு வேளைக்கு 1-2 குன்றி எடை நெய், வெண்ணெய் அல்லது தக்க அனுபானங்களுடன் கொடுத்துவர பேதபேதி, ரத்தபேதி, ரத்தமூலம், இரத்த பித்த நோய்கள், உஷ்ண இருமல், அரோசக பேதி முதலியன குணமாகும். குழந்தைகட்கு ½-1 குன்றி எடை தக்க அனுபானங்களில் கொடுத்துவர மாந்தம், சுரம், பேதி, கபம் முதலியன குணமாகும்.

மான்கொம்பு:—இதனால் மார்புவலி, கண்நோய், அஜீரணம், வெட்டை முதலியன குணமாகும். இதை சந்தனக்கல்லில் உரைத்து மார்பின் மேற்புறத்தில் பூச மார்புவலி குணமாகும். மான்கொம்பு சிறு துண்டுகளாக உடைத்து சுத்திசெய்து அகத்தியிலை சற்கத்தினிடையே வைத்து சீலைமண்செய்து புடமிட பற்பமாகும். சரியான பற்பமாகாவிடில் குமரிச்சாறு விட்டரைத்து வில்லைசெய்து அகலிலடக்கி மீண்டும் ஓர் புடமிட நல்ல பற்பமாகும். இதில் வேளைக்கு 1-2 குன்றி எடை தினம இருவேளையாக நெய், வெண்ணெய் அல்லது தக்க அனுபானங்களில் கொடுத்துவர வெள்ளை, வெட்டை, பித்த எரிச்சல், உஷ்ண இருமல், மார்புவலி, இடுப்புவலி முதலியன குணமாகும். 1-2 குன்றி எடை மான்கொம்பு பற்பத்துடன், 1-2 குன்றி எடை பொரித்த வெங்காரமும் சேர்த்து, நிசிகடி பிரமாணம் நாலுமடங்குச் சூரணத்தில் கலந்து தினம இருவேளைவீதம் அருந்திவர இருமல், கஷ்டசுவாசம், மார்புவலி, மைகால் அசதி, உடல்சுரங்கை முதலியன குணமாகும்.

கஸ்தூரி:—இது சுரம், ஜன்னி, தலைநோய், கபம், இசிவு இவைகளைப் போக்கும் சரீரத்தை, வன்மை, உற்சாகம், தேஜஸ, வசியம் இவைகளை உண்டாக்கும். இதில் ½, ¼ குன்றி எடை ஆட்டா தோடை சுரசத்துடன் சேர்த்து கொடுக்க கபக்கட்டு, சுவாசகாசம், சீதளம் முதலியன குணமாகும். இன்னும் இதனை பிரசவித்த ஸ்திரீகட்கு அழுக்கு சுவர வெளியாகும் பொருட்டும், சீதளம் வராமல் இருக்கும் பொருட்டும், மற்றும், சுரம், கப நோய்கள், விஷபேதி முதலிய வற்றில் காணும் நாடி தளர்ச்சிக்கும், இருமல சோர்வுக்கும் மூலப்பால் தேன் முதலிய அனுபானங்களில் ¼ குன்றி எடை வீதம் வழங்குவதுண்டு. இரண்டு வாகனெடை கஸ்தூரியுடன், குங்குமப்பூ, கோரோசனம், பச்சைக் கருப்பூரம், ஜாதிக்காய், சாதிபத்திரி, மிளகு, திப்பிலி வகைக்கு ஒரு வாகனெடை வீதம் சேர்த்து இரும்பு குடிநீர் விட்டு ஒரு ஜாமம் அரைத்து மெழுகு பதத்தில் பயறளவு மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு குழந்தை கட்கு ஒரு மாத்திரையாகவும், பெரியவர்களுக்கு 2-3 மாத்திரைகளாகவும் தினம இருவேளை வீதம் தாய்பால், தேன் அல்லது தக்க அனுபானங்களில் கொடுத்துவர சுரம், ஜன்னி, ஜலதோஷம், கபக்கட்டு, தலைவலி, முதலியன குணமாகும்:

கோரோசனை:—இதனால் பித்தகோபம், உன்மத்தம், மேக வெட்டை, குழந்தைகட்கு காணும் மாந்தம், ஒலேஷ்மாதிக்கம், மகுரிகைப் புண முதலியன குணமாகும். இதில் ½ குன்றி எடை முசிப்பால், தேன், ஆடாதோடை தளிர் சுரசம், வெற்றிலைச்சாறு, முதலிய அனுபானங்களில் குழந்தைகட்குக் கொடுக்க கபக்கட்டு, கக்கிருமல், மாந்தபேதி கபமாந்தம், பித்தசுரம் முதலியவைகள் குணமாக்கும். இதை இரண்டொரு துளி அண்டத்தைலத்துடன் சேர்த்து வழுக்க மாந்தம், இசிவு, வலி, வாய்வு முதலியன குணமாகும். கோரோசனை, சண்பகப்பூ, அதிமதுரம், கோஷ்டம், எலம், சகஸ்ரபேதி, மாசிப்பத்திரி, வெட்டிவேர், விலாமிச்சவேர் வகைக்கு வராகனெடை 1 இவைகளைக் கல்வத்திலிட்டு மாசிப்பத்திரி சாறுவிட்டு ஒரு ஜாமம அரைத்து உளுந்தளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி குழந்தைகட்கு வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம 2-3 வேளை முசிப்பால், இஞ்சிச்சாறு, துளசிச்சாறு, மாசிப்பத்திரிச் சாறு முதலிய அனுபானங்களில் கொடுத்துவர சுரம், இழுப்பு, கபம், இருமல், மாந்தம், பேதி, பலநிறமாகக் கழிதல் தோஷம் முதலியன குணமாகும்.

நண்டுக்குழிநீர்:—இதனால் வாந்தி, விக்கல், தேக வெப்பம், எரிவு முதலியன குணமாகும். வயல்களில் நண்டுகள் இருக்கும் குழியில் உள்ள சலத்தை வடிகட்டி வேளைக்கு 1-2 அவுன்ஸ வீதம் கொடுத்துவர வாந்தி, விக்கல் தீரும்,

கோழிமுட்டை:—இது வாததோஷம், கபப்பிணி, விரணம் இவைகளை நீக்கும். சுக்கிலத்தையும், பலத்தையும் பெருக்கும். இதை அரை வேளைகாட்டுடன் சமமத்து சிறிது மிளகுத்தூள் சேர்த்து சாப்பிட்டுவர உடலுக்கு பலத்தையும் இந்திரிய புஷ்டியையும் உண்டாக்கும். முட்டை வெண்கருவை ஜலத்தில் கலந்து கொடுக்க இரசம, பித்த, பூரம், கிருஷ, பாஷாணம் முதலிய கொடிய சரக்குகளின் கஞ்சக்குணம முறிவதுடன் அதனல் ஏற்பட்ட விரணம் முதலியவைகளும் தீரும். முட்டை வெண்கருவுடன் சமன் எருக்கம்பால் சேர்த்து அதில் சிறிது வீரமும் சேர்க்க அண்ட எருக்கு ஜெயநீராகும். இது மருந்தாகவே நீற்ற பயன்படும். தேவையான அளவு முட்டைகளை அவித்து, அதனிலுள்ள மஞ்சட் கருவைமட்டும்

எடுத்து ஓர் கடாயிலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து கரண்டி கொண்டு நெய்த்து வருத்தவும், கருவானது நீர்த்து கருத்த புகையுடன் நுரையும் சுக்கும். அத்தருணம் கீழிறக்கி அழுத்திப் பிழிய நல்ல நெய் கிடைக்கும். இதுவே அண்டத்தை யெனப்படும். இதில் 2-3 துளி வீதம் குழந்தைட்கு தனியாகவாவது அல்லது சோற்றுடன் மாத்திரை கூட்டியாவது தாய்ப்பாலில் கொடுக்க மாந்தம், வலி, இசிவு, வாய்வு, கபக்கட்டு முதலியன குணமாகும். பெரியவர்கட்கு 5-6 துளி வீதம் காலில் தடவி வர காலைப்பற்றிய வாதம் முதலிய குணமாகும்.

தேன்:—கல்ல தேனினுல் பித்தம், வாந்தி, கபரோய்கள், வாதம், இரத்தத்திலுள்ள குற்றங்கள் முதலியன குணமாகும். இதற்கு முக்குற்றத்தையும் போக்கும் குணமுடையதால் இது மருந்துகளுக்கு முக்கிய அனுபானமாக ஏற்பட்டுள்ளது. இதில் 1-2 தேக்கரண்டி வீதம் நீருடன் கலந்து அருந்திவர மல மூத்திரங்களைச் சரிவர வெளிப்படுத்தி பசி தீபனத்தை உண்டாக்குவதுடன் இரத்தத்திலுள்ள குற்றங்களையும் நீக்கும்.

தேன் மெழுகு:—இதனுல் பரிசவாதம், விக்கம், வாதோகபம், கபரோய், சுக்கில கஷ்டம், தேள் விஷம், மலசாசம், குட்டம், ஆகஸ்துரவிரணம், துஷ்டவிரணம்முதலியன குணமாகும். இதை விசேஷமாக புறசிகிச்சைகளுக்கே பெரிதும் பயன்படுத்தப்படும். ஒருபலம் தேங்காயெண்ணெயுடன் அரை பலம் தேன் மெழுகைச் சேர்த்து ஓர் கரண்டியிலிட்டு கொப்புணலில் உருக்கி, அதில் வெள்ளைக்குங்கிலியம் வராகனெடை-4, பொடித்துப் போட்டுக் கிளரி அரைத்த களிம்புபோல் செய்து வைத்துக்கொண்டு இதைச் சிரங்கில் தடவி, புண், விரணம் முதலியவைகளுக்கு மேலுக்குப் போட்டுவர விரைவில் குணமாகும். இன்னும் இம் மெழுகைக்கொண்டு மெழுகுத் தைலம செய்வதுண்டு, இது பரிசவாதம் முதல் சகல வாத ரோய்களையும் மேற் பிறயோகமாக வழங்கப்படும் ஓர் சிறந்த மருந்தாகும்.

சங்கு:—இதனுல் ரத்தபித்தம், வாதோஷம், இசிவு, கபம், மூலக்கட்டி, விழிரோய் முதலியன குணமாகும். தீபனமுண்டாகும். இதை உரைத்து கண்கட்டி முதலியவைகட்கு பூசுவதுண்டு. இதைச் சுத்திசெய்து சிறு கண்டுகளாக தொங்கி கீழ்காய்ச்செல்லி கற்கத்தினிடையில் வைத்து சீலைமண்செய்து புடமிட பற்பமாகும். சரிவர ஆராயிடில் கீழ்காய்ச்செல்லி சாறுவிட்டரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலடக்கி மீண்டும் ஓர் புடமிட்டெடுக்க பற்பமாகும். இதில் 2-3 குன்றிஎடை கீழ்காய்ச்செல்லி கற்கத்துடன் அனுபானித்து 3-நாள் உப்பில்லா பத்தியத்துடன் வழங்க காமாலை நீரும். இன்னும் இப் பற்பத்தில் 1-3 குன்றி எடை வீதம் ஆடாதோடை சாறுடன் கொடுக்க கபக்கட்டு, இரும்பல், இரைப்பு முதலியவைகளும், நிரிகடுரோ

ரணத்துடன் கொடுக்க சுன்னம், சூலை, வாய்வு, முதலியவைகளும் குணமாகும்.

முத்து:—இதனுல் அஸ்திசாரம், விஷக்ஷயம், விழிரோய், விரியாசம், பலவீனம், இசிப்பு, அக்கினிகேட விஷம் முதலியன குணமாகும். இதை முறைப்படி பற்பமசெய்து வழங்க மேற்கண்ட பிணிகள் தீரும். இருதயத்திற்கு பலத்தையும், சுக்கில விருத்தியையும், தைரியத்தையும் தரும்.

முத்துச் சிப்பி:—இதனுல் இருமல், சூலை, காசம், சுவாசம், மேகக்கட்டி முதலியன குணமாகும். இதனைச் சுத்திசெய்து பொடித்துக் கல்வத்திலிட்டு ஆடாதோடை, துளசி, கண்டங்கத்திரி இம்மூன்றின் சாறுஞ் சமனெடையாகக் கலந்து விட்டு இரண்டு ஜாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலடக்கிச் சீலைமண்செய்து 10-50 வரட்டியில் புடமிட பற்பமாகும். இதில் சுன்றி எடை வீதம் தினம் இருவேளையாக அருந்திவர மேற்கூறிய பிணிகள் தீரும். இதை ஆடாதோடை மணப்பாகு, கண்டங்கத்திரி லேகியம், தாளிசாதிச்சூரணம் முதலிய ஏதேனும் ஓர் அனுபானத்துடன் அருந்திவர விசேஷ பலனைத் தரும்.

பவளம்:—இதனுல் சுரதோஷம், சூலை, காசம், கபக்கட்டு, தாகம், அழலை, நீர்சுருக்கு, பேதி, ரத்தாட்டம் முதலியன குணமாகும். எலுமிச்சம்பழச்சாற்றில் மூறவைத்து கழுவி சுத்தம்செய்த பவளத்தை குப்பைமேனி இலைக் கற்கத்தினிடையே வைத்து அகலிலடக்கிச் சீலைமண்செய்து 50-60 வரட்டியில் புடமிட பற்பமாகும். நிறம் சரிவர இல்லாவிடில் மீண்டும் மேனிச்சாறு விட்டரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலடக்கி சீலைமண்செய்து முன்போல் புடமிட பற்பமாகும். அரைத்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு சுன்றி எடைவீதம் தினம் இருவேளை நெய், பால் அல்லது தக்க அனுபானங்களுடன் கொடுத்துவர இருமல், சூலை, கபக்கட்டு, கபசுரம் பேதி முதலியன குணமாகும்.

நத்தை:—இதனுல் மூலரோய், மலாசயப் பிணிகள் முதலியன நீரும். தேவையான அளவு நத்தைகளை ஓர் சிறு குடுவையிலிட்டு வாய்மூடிச் சீலைசெய்து புடமிட பற்பமாகும். இதில் 1-2 சுன்றி எடை வெண்ணெயில் அருந்திவர சீதபேதி, இரத்த மூலம், மூலச்சூடு முதலியன குணமாகும் நத்தை சதையை சமைத்துண்ண மூலம் குணமாகும்.

பூரகம்:—இதனுல் தாகம், சன்னிபாதம், மாருத்தம்பவாதம், வலி, இசிவு, கபரோய் முதலியன குணமாகும். பூரகமென்ற காக்குப் பூச்சியை மோரிலிட்டு கழுவி எடுக்க சுத்தியாகும். இத்துடன் சிறிது எலரிசி சேர்த்து அரைத்தெடுத்த கற்கம் பாக்களவு வீதம் கொடுத்துவர வலி, இசிவு முதலியன குணமாகும். பூரகத்

தடன் சொச்சியிலே சேர்த்தரைத்த நல்லெண்ணெயில் கலந்து நாளை பதமாக காய்ச்சி முடித்தளவாக வழங்க மண்டை குடைச்சல் கழுத்து நரம்பு இவை, தொளத்தினால் ஏற்பட்ட தலிவலி, தலிபாரம் முதலியன குணமாகும்.

புற்றுஞ்சோறு:—இதனால் சிரிழிவு, மதமேகம், தாகம், இரகணி முதலியன குணமாகும். தாது பலப்படும். இதனை நன்கு உலர்த்தி சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு 5 குன்றி எடை வீதம் எடுத்து இத்துடன் ஆவாரைப் பஞ்சாங்க சூரணம் 10 குன்றி எடை வீதம் சேர்த்துக் கலந்து தினம் இரு வேளை வீதம் பால் அல்லது மோரில் அருந்திவர சீரிழிவு, மதமேகம், தாகம், இரகணி முதலியன குணமாகும்.

பலகறை:—இதனால் விஷதாகம், தாகம், மந்தம், இரகணி, விழி நோய், கபவாதப் பிணிகள், சூலை, கபம், குன்மம், முதலியன குணமாகும். தேவையான அளவு பலகறையை பழச்சாற்றில் ஊறவைத்து எழுனி உலர்த்த சந்தியாகும். பிறகு இதைப் பொடித்துக் கல்வத்திலிட்டு பழச்சாறுவிட்டு அரைத்து வில்லைசெய்துலர்த்தி அதனை லடக்கிச் சீலைமண் செய்து புடமிட பற்பமாகும். இதில் வேளைக்கு குன்றி எடை வீதம் தேனில் அருந்த சுரம், பித்தாதிக்கம், சன்னிவீக்கம், தாகம், பேதி முதலியன குணமாகும். இதைத் திரிகடுகு சூரணத்துடன் அருந்த சூதகவாயு, வயிற்றுவலி, குன்மம், சூலை, இருமல், கபம் முதலியன குணமாகும். இத்துடன் பொரித்த வெங்காரம் சிறிது சேர்த்து வெண்ணெயில் அருந்திவர சீர்கருக்கு, உடல் காங்கை, பித்த எரிச்சல் முதலியன குணமாகும்.

பால் வகை

முலைப்பால்:—இது திரிதோஷம், சுரசந்நி தோஷம், வெப்பம் ஆகிய இவைகளைப் போக்கும். அஞ்சனத்திற்கும், மருந்தின் அனுபானத்திற்கும் உதவும். இதைச் சிலபிள் கலந்து நெற்றியில் போட்டுவைக்க சரசன்னி தோஷங்கள் குணமாகும். இத்துடன் சமன் இஞ்சிச்சாறும், நல்லெண்ணெயும் சேர்த்து நாளபதமாக காய்ச்சி வடிகட்டி ஸ்நானம் செய்ய தென சரசந்நியத்தினால் உண்டான தலிவலி, கழுத்து நரம்பு இவை, சீர் பினசம் முதலியன குணமாகும். இன்னும் இது லிங்கம், இரசசெந்தூரம் முதலிய மருந்துகளைச் சுத்தி செய்வதற்கும், சண்டமாருதம் போன்ற மருந்துகளை தோஷம் செய்யாமலிருக்கும் பொருட்டு அரைத்த பதமாக்கவும், கலக்கமிடுவதற்கும், குழந்தைகட்கு வழங்கப்படும் மருந்துகளுக்கு அனுபானமாகவும் உபயோகப்படும்.

பசுவின் பால்:—இது பாலர், முதியர், சரம் சூலை மேகம் முதலிய நோயுள்ளவர்கள், பலவீனர், மெலிந்தவர் முதலியவர்கட்கு நிறைந்தது. இதனால் உடலுக்கு பலம் ஏற்படும். மற்றும் இது இரத்த

பித்தம், சூலம், மதுமேகம் முதலிய நோயாளர்கட்கு நிறைந்த உணவாகும். இதுவும் மருந்துகளுக்கு அனுபானமாக வழங்கப்படுவதுடன், கற்கம், லேகியம், நிருதம், தைலம் முதலியவைகளில் விசேஷமாக சேர்க்கப்படும்.

எருமைப் பால்:—இதனால் பலம் ஏற்படும். ஆனால் நிமிர்வாயு மந்தம் முதலியவைகளை உண்டாக்கும். மருந்தின குணத்தைக் கெடுக்கும்.

வெள்ளாட்டுப் பால்:—இதனால் வாதபித்த தொந்தம், சுவாச ரோகம், சிதபேதி, கபதோஷம், சிரணம், வாதவிக்கம், சோபை முதலியன குணமாகும். நல்ல பசியையும் பலத்தையும் தரும். இது பொதுவாக கபரோகிகட்கும், சிறப்பாக சூல நோயினருக்கும் நிறைந்தது.

தயிர் மோர் வகை

கடைந்து வெண்ணெய் எடுக்காத தயிருக்கு தோலம் அல்லது ஏட்டுதயிர் என்று பெயர். இது பித்தத்தையும் வாதத்தையும் தணிக்கும். ஜலம் விடாமல் கடைந்த வெண்ணெய் எடுத்த மோருக்கு மதிதமென்று பெயர். இது வாதத்தையும் கபத்தையும் தணிக்கும். தயிருக்கு சமன் சலம் சேர்த்துக் கடைந்து வெண்ணெய் எடுத்த மோருக்கு தன்னிதமென்று பெயர். இது கபத்தை தணிக்கும். தயிருடன் சலில் ஒரு பாகம் நீர்சேர்த்து கடைந்தெடுத்த மோருக்கு தக்கிறமென்று பெயர். இதுவே மிகவும் உத்தமமானது. இதனால் திரிதோஷமும் சமனப்படும். மற்றும் மந்தாக்கினி, அரோசகம், அசீரணம் முதலிய நோய்களைப் போக்கி தேகாரோக்கியத்தைத் தரும். புளிப்பு மோரில் சிறிது இந்துப்பு சேர்த்து அருந்த வாத நோய்கள் குணமாகும். மோரில் சர்க்கரை கலந்து குடிக்க பித்த சம்பந்தமான பிணிகள் குணமாகும். மோரில் திரிகடுகு சூரணத்துடன சிறிது இந்துப்பும் சேர்த்து வழங்க கபநோய்கள் குணமாகும்.

சாதாரணமாக தயிரைவிட மோரே சிறந்த உணவாகும். தினசரி உணவின் இருதியில் மோரைச் சேர்த்துவர உடலின் சூட்டைத் தணிப்பதுடன் மலசலக்கட்டை நீக்கி உடலை ஆரோக்கிய நிலையில் வைக்கும். இன்னும் இது வயிற்றுவலி, குன்மம், சோகை, காமாலை, பேதி, தாகம், அசீரணம், பித்தாதிக்கம், பாண்டு முதலிய ரோகங்களை உடையவர்களுக்கு சிறந்த பத்திய உணவாகும். பசுவின் மோர் நீபனத்தையும், புத்தியையும் உண்டக்கும். திரிதோஷங்களையும் போக்கும். எருமையின் மோர் கபம், சோபை, இவைகளை உண்டாக்கும். கடினமானது. ஆகையால் இது பத்தியத்திற்குத் வாது. வெள்ளாட்டு மோர் திரிதோஷங்களைப் போக்கும். மற்றும் குன்மம், சூலம், பாண்டு, சோபை, இரகணி முதலிய நோய்கட்கும் நிறைந்தது.

வெண்ணெய்

இதில் பசுவின் வெண்ணெயே சிறந்தது. இதனுல் கண்ணேய், பிரமேகரோகம், உட்சூடு முதலியன குணமாகும். தேகக்கினியும் பலமும் உண்டாகும். இது சொசத்து கஸ்தூரி முதலிய உஷ்ணத்தை தணிக்கும் மருந்துகளை வழங்க சிறந்த அனுபானமாகக் கையாளப் படும். இத்துடன் சர்க்கரை சேர்த்து அருந்தினால் உடலுக்கு பலத் தை தருவதுடன் உடலின் வெட்டைச் சூட்டையும் பித்தத்தையும் தணிக்கும். இது சுத்த சரகெட்டு சிறந்த உணவாகும். இன் னும் இது கண்சோர்க்கட்டு செய்யப்படும் அஞ்சனங்களில் சேரும்.

நெய்

பசுவின் நெய்யே சிறந்தது. இதனை பத்தியங்கட்டும் விசேஷ மாக வழங்கப்படும். இதனுல் அதிசட்ட சரகம், வாந்தி, பித்த நிக்கம், பிரமேகம், இருமல், எரும்புருக்கி, மூல சோய் முதலியன குணமாகும். இதனைச் சாதாரணமாக நிலசரி அன்னத்துடன் சேர்த்தருந்தினால் உடலின் உஷ்ணத்தை தணிப்பதுடன், சொழுப்பை விருத்திசெய்து உடலுக்கு பலத்தை தரும். சுரபம் முதலிய சோய் களை வரவொட்டாமல் தடுக்கும். மற்றும் இதனை முக்கூட்டு நெய் யில் சேர்த்து வழங்கப்படும். இன்னும் இது மருத்துவருக்கு அனு பானமாகவும், லேகியம், கிருதம் முதலிய மருந்துகள் செய்வதற்கும் பயன்படும்.

மூத்திரம்

பொதுவாக பசு, எருமை, வெள்ளாடு இவைகளின் மூத்திரத் தால் பாண்டு, சோபை, காமாலை, விக்கம், மகோதரம், குன்மம் முதலிய பிணிகள் போம். தனி இவற்றன் சோமூத்திரம் விசேஷ மாக பயன்படுத்தப்படும். சோமூத்திரத்தை தனியாகவாவது அல் லது ஏலாதி முதலிய சரக்குகளுடனாவது சேர்த்து வழங்க மேற்கூறிய பிணி கள் குணமாகும். இன்னும் இது மண்டோம, காரி முதலிய சரக்கு களைச் சித்திசெய்ய பயன்படும். சமூகை மூத்திரத்தால் உஷ்ணம் கிருமிரோய், விரணம், இரத்தி, மேகம், சூட்டம், சுரபம், சிலேஷ்மம், அபஸ்மாரம், பாலரோகம் முதலியன குணமாகும். இதனை விசேஷ மாக மேகரோய்க்கு வழங்கப்படும் தைலம் முதலியவைகளில் சேர்த்து செய்வதுண்டு.

ரோக நிதானம்

சுரம்

சுரங்கள் உண்டாவதற்குக் காரணம்:—உண்ணும் உணவின் அளவு, காலம், பக்குவம் முதலியவற்றின் பேதத்தாலும், சீரின் சூற் றத்தாலும், பருவகால வேறுபாட்டாலும், மழையில் நனைதல், வெய் யலில் காய்தல், பகலில் தூங்குதல், இரவில் கண் விழித்திருத் தல், பதினன்கு வேகங்களை அடக்கல், மலச்சிக்கல், மிகுபோகம், சோபம், தாபம், பயம் முதலியவற்றாலும், அடிபடுதல், விஷம் தின் டல் முதலிய புறக்காரணங்களினாலும் பழைய வினையினாலும் சுரம் வருமெனக் கூறப்பட்டுள்ளது.

சுரத்தின் இலக்கணம்:—முன்கூறிய உணவாதிபேதம், தகாத டத்தை முதலிய காரணங்களினால் வாதாதி தோஷங்கள் தன்னிலை மாறி, முதலில் ஆமாசயத்தைப் பற்றி, அக்கினியை மந்தப்படுத்தி, பின்னர் இரத தாதுவில் பரவி உடலில் வெப்பத்தை புண்டாக்கி சுரம் என்னும் இச்சோலையைப் பிறப்பிக்கின்றது. இது எப்பொருளினும் விருப்பமின்மை, தேகபரிப்பு, நிறம் மாறல், உடல் சிலிர்ப்பு, தேக சங்கை, சாவறட்சி, மந்தம், அரோசகம், மலச்சிக்கல், தலை, இடுப்பு, கைகால் முதலிய இடங்களில் வலி, அசதி முதலிய குணங்களைத் தன் பொது இயல்பாகப் பெற்றிருக்கும்.

சுர வகை:—சுரமானது வாதசுரம், பித்தசுரம், சுலசுரம், வாத பித்தசுரம், வாதசுலசுரம், பித்தசுலசுரம், சன்னிபாதசுரம் என ஏழு வகைப்படும் எனச் சிலரும்; தோஷங்களின் செயலின்றி அடிபடுதல் முதலிய புறக்காரணங்களினுல் ஏற்படும் ஆகந்துகசுரம் என்ற ஓர் வகையையும் இத்துடன் சேர்த்து சுரம் எண் வகைப்படும் எனச் சிலரும் கூறுவதுண்டு. இதிற்க சுரம் 64-வகைப்படும் எனவும், இன்னும் சில நூல்களில் 276 வகைகள் என்றும் கூறப்பட்டுள்ளது. இவைகள் யாவும் விண் பெருக்கமும் அத்யாவசியமானதன்றென்ப தும் சிலரின் துணிபு. எனினும் மேற்கூறிய எண்வகைகளையும் அவை களின் பிரிவுகளையும் முதலில் கூறிவிட்டுப் பின்பு மற்ற வகைகளைக் கவனிப்போம்.

வாத சுரம்:—உருப்புகளில் குத்தல், கண்களிலிருந்து சலம்வடி தல், மார்பு துடித்தல், உடலின் வெப்பம், சிலசமயம் குளிர், மலச் சிக்கல், மூத்திரம் உஷ்ணமாய் மறண்டு இருத்தல், கீல்களில் வலி, வயிற்றுப்புசம், முகம் மிதமிதுத்தல் காணல், வாந்தி, இடுப்பில் வலியின்மை, கைகால் அசதி, வாயினித்தல், புளிப்புச் சுவையுள்ளப் பொருள்களில் இச்சை முதலிய குணங்கள் உண்டாகும்.

பித்த சுரம்:—பிதற்றல், மேல்மூச்சு, தலைசோய், அதிசாரம், வயிற்றுவலி, கோழை, அருசி, வாய்கசப்பு, தேகம் மிகச் சூடாயிருத்தல், மூத்திரம் செம்பிறமாய் கடுத்து வீழல், மயக்கம், விடுக்கம், கண் சிவந்து காணல், உடலில் எரிச்சல், வாந்தி முதலிய குணங்கள் உண்டாகும்.

சிலேத்தும சுரம்:—கண்களில் நீர்வடிதல், கண்டத்தில் கோழை கட்டல், பெருமூச்சு, இருமல், விக்கல், தாகம், அரோசகம், விடுக்கல், வாயில் உப்புச்சுவை தோன்றல், மூத்திரம் அதிகமாய் போதல், தலைசோய், இளைப்பு, சரீர சந்திகளில் சோய், உணவில் விருப்பமின்மை, முகம், கர, உடல் வெளுத்துக் காணல், அற்பவியர்வை முதலியன உண்டாகும்.

வாத பித்த சுரம்:—கண், மார்பு, கண்டம் இவைகளில் எரிச்சல், தலைவலி, வாந்தி, பெருமூச்சு, தாகம், சுவாசல், அருசி, வியர்வை, வாய் கசப்பாயும் அல்லது புளிப்பாயுமிருத்தல், மூத்திரம் நீலநிறம் அல்லது சாம்பல் நிறமாயிருத்தல், வயிற்றுப்பொருமல், உடல் உளைச்சல் முதலிய குணங்கள் உண்டாகும்.

வாத சிலேத்தும சுரம்:—உடலில் நிகழிப்பு, வாயில் உப்புச்சுவை, தலைவலி, தேகமுழுவதும் குத்தல் நுடைச்சல், கண்களில் நீர் வடிதல், வாந்தி, வாயில் சலம்வடிதல், பெருமூச்சு, அதிசாரம், தூக்கமின்மை, பசியின்மை, மூத்திரம் நுரையுடன் வீழல், இருமல், கீல்களில் வேதனை, சயித்தியம் முதலிய குணங்கள் உண்டாகும்.

பித்த சிலேத்தும சுரம்:—உடலானது ஸ்பரிசித்த மாத்தல், மார்பிலும் பிடரியிலும் வலி, தலைபாரம், அற்ப இருமல், விடுக்கல், வாய் கசப்பாயும் உப்புச்சுவையாயும் அருசியாயுமிருத்தல், பிதற்றல், கால்களில் எரிச்சல், கண்டத்தில் கோழை கட்டுதல், நித்திரையின்மை, வாந்தி, மூத்திரம் வெண்மையாகவும் சிகப்பாகவும் வீழல் முதலிய குணங்கள் உண்டாகும்.

சன்னிபாத சுரம்:—தேகமானது ஒருசமயம் வெப்பமாயும் மறுசமயம் சீதளமாயுமிருத்தல், கீல்களிலும் விரலிலும் அதிக சோயுண்டாதல், கண்களின் இமையொட்டிக்கொள்ளல், கண்ணில் நீர் வடிந்துக்கொண்டு சிகப்பாயிருத்தல், காதுகளில் விபரீதமான சத்தத்துடன் குத்தல், நாவில் நீரின்றி முட்கள் உண்டாதல், கண்செறிதல், அருசி, மலமூதிரங்கள் பந்தத்து கொஞ்சமாக வெளிவருதல், நாளுக்குநாள் தேகம் மெலிதல், கண்டத்தில் கோழைகட்டலுடன் சதா குறகுறப்பு, இருமல், தேகத்தின்மீது கறப்பு அல்லது சிகப்பு நிறந்தோன்றல், அல்லது கருப்பு சிகப்பு மச்சங்களுண்டாதல், மனமயக்கம்போல் பேசாமலிருத்தல், உருப்புகளில் வலியின்மை, நித்திரையின்மை, பசியின்மை, விக்கல், வியர்வை, பிதற்றல், நித்தப்பிரமை முதலியன உண்டாகும். இதனைச் சன்னிபாதம் அல்ல சன்னி எனவும் கூறுவர்.

N55 10776

சந்நிபாத சுரவகைகள்:—சன்னிபாதமென்ற சன்னி நோயைப் பதின்மூன்று வகைகளாக வகுக்கப்பட்டுள்ளது. அவையாவன:—

1. கண்டகுப்ச சன்னி:—கண்டத்தை குறுக்கி பிடிப்பதுபோலிருத்தல், பிதற்றல், தாகம், வாய்வு அதிகரித்தல், பிரமை, தேகம் கனத்தல், அலரிவெழுத்து ஓடிவிழுதல், விடுக்கல், மூர்ச்சை, இளைப்பு, தலைசோய், காதில் நோயுடனிரைச்சல் என்னும் இக்குணங்களையுடையது. இது கடினசாத்தியம்.

2. சந்திக சன்னி:—கீல்களில் நோய், வாயில் நீர்க்காதபம், இருமல், வயிற்றுவலி, சுவாசம், தேகத்தில் எரிச்சல், தாகம் அற்பபிரமை யென்னும் குணங்களையுடையது. இது சுகசாத்தியம்.

3. தாந்திரிக சன்னி:—அதிக அசதி, பெருமூச்சுவிடுதல், சரீர மெரிச்சல், பேதி, சுவாசம், தொண்டைக்குள் கால், காதுமந்திபம், சக்கு முன்னுபோலிருத்தலோடு கறுத்தல், தேகத்தில் அதிக

10. சித்தவிப்பிரம சந்நி:—பிரமை, சோர்வு, மதம், உடம்பெரிச்சல், பரிபாசம் பண்ணுதல், பாடல் ஆடல், சிரிசோய், பிதற்றல், திக்கெல்லாம் முறிவதுபோலிருத்தல், இரண்டு பக்க இடுப்பை அடிக்கடிப்பார்த்தல், பயத்துடன் திரும்பி திரும்பி விழுதல் என்னும் இக்குணங்களுடையது. இது கடின சந்நியம்.

11. சீதாங்க சந்நி:—சரீரமுழுவதும் மிகுதனத்தோடு சோய், குரற்கம்மல், அடிக்கடி ஒக்காளம், பேதி, விக்கல், இளைப்பு, பல வினம் என்னும் குணங்களையுடையது. இது அசாத்தியம்.

12. கர்ன்னிக சந்நி:—சரீரமுழுதும் விக்கத்துடன் சத்தம் கேளாமை, வாய்திறக்கக்கூடாமல் கண்டத்தை பிறாண்டிப் பிடித்தல் போலிருத்தல், உடம்பெரிச்சலுடன் விக்கல், வயிறுகொதித்தல், பிதற்றல், மாறு இடித்தல், இளைப்பு, இருமல் என்னும் குணங்களையுடையது. இது மிகு கடின சாத்தியம்.

13 அபிநியாச சந்நி:—பலீக்குதல் முகத்தில் பளபளப்பு, பேச்சில்லாமை, தர்பலம், பஞ்சேந்திரியத்தன்மை குறைவு. மயக்கெடித்தினை, அறிகின்மை, சுய உணர்கின்மை என்னும் குணங்களையுடையது. இது அசாத்தியம்.

மேற்கூறிய பதின்மூன்று சன்னிபாதசுர வகைகள் மார்களுக்கு சூதகாலத்தில் கண்டால் சூதகசன்னியென்றும், கருப்பகாலத்தில் கண்டால் கருப்பசன்னியென்றும், பிரசவித்தபிறகுகண்டால் பிரசவ சன்னியென்றும், விரணத்தினால் கண்டால் விரணசன்னி என்றும் பெயர் பெரும். சன்னியின் பொதுக்குணங்களுடன் முகத்தில் விகாரம் உண்டானால் முகசன்னியென்றும், கைகால்களில் உதறல் உண்டானால் உதறசன்னியென்றும், நிரிதோஷங்களினால் உண்டானால் அந்த தோஷசன்னியென்றும், அவைகளின் தொந்தத்தினாலுண்டானால் தொந்தசன்னியென்றும், நிரிதோஷத்தால் உண்டானால் நிரிதோஷ சன்னியென்றும், அரி அரி விழுவதால் அறை சன்னியென்றும் சில விடங்களில் வழங்கப்படுகின்றன.

சந்நிபாத சுரங்களின் பலது:—சன்னிபாதத்துக்கு (சுரன்-7) அந்தகத்துக்கு (சுரன்-10) ருத்ராகத்துக்கு (சுரன்-20) சித்தவிப்பிரமத்துக்கு (சுரன்-18) தோன்கத்துக்கு (சுரன்-15) தர்ந்திரிகத்துக்கு (சுரன்-25) கண்டுருப்சகத்துக்கு சுரன்-13) கர்ணிகத்துக்கு (சுரன்-30) புன்ன நேத்திரத்திற்கு (சுரன்-8) ரக்தஷ்டீவிக்கு (சுரன் - 10) பிரலாபத்துக்கு (சுரன்-14) ஜிம்மகத்துக்கு (சுரன் - 16) அபஸ்மாரத்திற்கு சுரன்-15) இவை சன்னிபாதங்கள் உண்டானவுடனே கொல்லும். இவை கடைசியில் கொல்லும்.

முன்பு கூறிய சன்னிபாத சுரங்கள் அல்லாமல் தாதுபூவ சன்னிபாத சுரம், தோஷபூவ சன்னிபாதசுரம் என இருவகை சன்னிகள் உண்

டென்றுஞ் சொல் கூறுவர். சுகசன்னி என்ற ஓர் வகையும் வழக்கில் காணப்படுகிறது.

ஆகந்துக சுரம்:—சரம் உண்ணும் அன்னபானாதிகளாலன்றி வேறுபுறக் காரணங்களினால் உண்டாகும் சுரங்களுக்குப் பொது வாய் ஆகந்துக சுரமெனப் பெயர். இது சன்று வகைப்படும். அவையாவன:—

1. அபிகாத சுரம்:—காயங்களினாலும் இரணங்களினாலும் நெருப்பினிடத்தே சுடுதலும் தொழில்களினாலும், அதிக சுடை, அதிக உழைப்பு இவைகளினாலும் உண்டாகும் சுரத்திற்கு அபிகாதசுரமென பெயர். முதலில் வாயுவானது உடலில் சீக்கமற நிறைந்து அதிகரித்து ரத்தத்தைக்கெடுத்து சர்வாங்க சோலை உண்டாக்கும். உணவு முதலிய சாந்த சிகிச்சையால் சீங்கும்.

2. சாபசுரம்:—இது பெரியவர்களின் சாபத்தினால் உண்டாவதால் அதிக உக்கிரமாகவும் சன்னிபாதகுணங்களையு முண்டாக்கும். தேவ ஆராதனை, பூசை, அன்னதானம், பெரியவர்களின் ஆசி முதலியவைகளால் சீங்கும்.

3. அபிசார சுரம்:—இது உச்சாடன மாரண மோகனங்களினால் அதிசயமான சொப்புனங்கள் தோழுமுதும் தோணும். சன்னிபாத குச்சரியமான சொப்புனங்கள் தோழுமுதும் தோணும். சன்னிபாத சுர குணங்களிருக்கும். இதுவும் சாபசுரமும் மிகவும் கொடியது. இதை மணிமந்திர ஔஷதங்களால் விலக்கிக்கலாம்.

4. அபிஷங்க சுரம்:—இது சேர்க்கையால்வரும் சுரம். இது ஏழு வகைப்படும். அவைகளாவன:—

1. பூதாவேச சுரம்:—அதிகோபம், காரணமின்றி மனக்கவலை அழுதல், கண்ணீயுருட்டி விழித்தல், தேகங்கறுத்தல், பிரலாபம், அதிநிண்டி, சகல பதார்த்தங்கள்மீது விருப்பம், ஆடல்பாடல், உரோமச்சிலிர்ப்பு, மித்திரை, எரிச்சல், களிர், தலைசோய், கண்விழித்தல், வாந்தி, விக்கல், சுவாசம், பலவீனம், ஏப்பம், கொட்டாவி, பிரமை, மனோவேதனை, தொடைமுதல் பாதம் வரையிலும் வியர்வை, சர்வாங்க தாகம், மனத்தொனி, நிரிதோஷங்களின் விருத்தி என்னும் குணங்களையுடையது. இது பூசைமுதலிய சிகிச்சைகளினால் சாந்தப்படும்.

2. அவுஷத சுரம்:—இரசம், கந்தகம், பாஷாணம், சேங்கொட்டை முதலிய மருந்துகளின் புகை அல்லது நஞ்சினால் சுரம் உண்டாகி மூர்ச்சை, தலைசோய், தேகவிக்கம், தாமல், அதிகதாகம் என்னும் குணங்களையுண்டாக்கும். இதற்கு விஷப்பிரதிவிஷசிகிச்சை சிறந்தது.

3. விஷசுரம்:—இது விடங்களினால் ஏற்பட்டு மூர்ச்சை, பேதி, எரிச்சல், முகங்கறுத்தல், மார்புசோய், அதிகோபம் நிரிதோஷக்கோபம் என்னும் குணங்களையுடையது.

4. கோபச்சுரம்:—இது தலைநோய், உடம்புவலைத்தல், அதிசாரம், பித்தகோபம் என்னும் குணங்களையுடையது. இதற்குப் பித்தசுரபத்தைச் சமனப்படுத்தும் மருந்துகளை நீதல் வேண்டும்.

5. பயச்சுரம்:—சுரம், அடிக்கடி பயப்படல், புலம்பல், வியர்வை, மிகு எரிச்சல், கண்கள் வெதுப்பல், பலவீனம், சிரிலும் கண்ணிலும் நோய், நித்திரைபங்கம், தலை சுழலல், சுவாசம், சூலை, உரோமச் சிலிர்ப்பு, சயித்தியம், மார்பிலும், இருப்பிலும் தடிப்பு, பற்கடித்தல் என்னும் குணங்களையுடையது.

6. துக்கசுரம்:—வாயில்வந்த படியெல்லாம் பிதற்றல், அதிசாரம், அழுதல் என்னும் குணங்களையுடையது.

7. காமசுரம்:—மிகுசுரம், புத்தி, வெட்கம், நித்திரை இவைகளின் கெடுதி, மோகம், தூண்குறி, தொப்புளின் கீழ்ச்சூலை, தலைகளின் கீழ்ச்சூலை, புருவம், நெற்றி ஆகிய இவ்விடங்களில் எரிச்சல், மைதுனாதிச்சை, புன்சிரிப்பு அதிகாரம், கண்சிவத்தல், என்னும் குணங்களையுடையது.

இந்த ஏழுவகைச் சுரமும் சரீரசுரம், மானசிகசுரம் என இருவகையுள் அடங்கும். மற்றும் சாஸ்திரச் சரீராதி சுரபேதங்கள் என சாஸ்திரம் 13 வகையாகக் கூறப்பட்டுள்ளது. அவை பாவன.

சரீராதிசுர பேதங்கள்:—1. சரீரத்தில் தோஷமுண்டாகி பிறகு சுரம்வரும். இதற்கு சரீரசுரம் என்றுபெயர்.

2. முதலில் மனதை தாக்கச்செய்து பிறகு சுரங்காணும். இதற்கு மானஸிகசுரம் என்றுபெயர்.

3. இது முதலில் மிகவுஞ் சாதாரணமாகப் பிறந்த பிறகு சுரத்தின் குறி குணங்களை யெல்லாம் உண்டாக்கும். இதற்கு சௌமியசுரம் என்றுபெயர்.

4. இது ஆரம்பத்திலேயே அதி உக்கிரமாகக்கண்டு எளிர் கார்த்துக்குண்டான குணங்களைப் பெற்றிருக்கும் இதற்கு நிசாஞ்சரசுரமென்றுபெயர்.

5. இது முதலில் வயிற்றில் அதிக சங்கடம் மலபந்தம் முதலிய உள் வேதனைகளை யுண்டாக்கிப் பிறகு சுரக்குணங்களை உண்டாக்கும். இதற்கு உட்சுர மென்றுபெயர்.

6. சப்தாதுக்களைப் பாதிக்காமல் சர்மத்தின்மேல் நிதானமாக கண்டு வெளுத்தில் தோஷமொன்றும் இல்லாமற்போய்விடும். இதற்கு வெளிச்சுரம என்றுபெயர்.

7. வருஷ ருதுசாலமாகிய ஆவணி புரட்டாசி மாதங்களில், வாதசுரம்போலும், ஐப்பசி கார்த்திகை மாதங்களில் பித்தசுரம்

போலும், மித்திரை வைகாசி மாதங்களில் கபசுரம்போலுங்காணும். இதற்கு பிராகிருதசுர மென்றுபெயர்.

8. மாசி பங்கு மாதங்களில் வாதசுரம்போலும், ஆனி ஆடி மாதங்களில் பித்தசுரம்போலும், மார்கழி தை மாதத்தில் ஒலைத்தும சுரம்போலுங்காணும். இதற்கு வைகிருதசுர மென்றுபெயர்.

9. மேற்கூறிய பிராகிருதசுரங்கள், வைகிருதசுரங்கள் உண்டானபோது அவைகளின் குணங்களும், மிகுதாகமும், மிகுநித்திரையும், சன்னிபாத லக்ஷணங்களும் இல்லாமலிருந்தால் அதற்கு சாத்தியசுரமென்றுபெயர்.

10. சப்தாதுக்களில் பிரவேசித்து தெளராக நீங்காமல் சன்னிபாத லக்ஷணமுழுதும் உண்டாகிய சுரமும், காலை மாலை சன்னிபாத லக்ஷணமுழுதும் உண்டாகிய சுரமும், தோஷபலத்தையும் மாமிசத்தையும் கடுகையுடன் உண்டாகிய சுரமும், தோஷபலத்தையும் மாமிசத்தையும் சுறைத்து கோழை விழும்படி உண்டாகிய சுரமும் அசாத்திய சுரமாம்.

11. சுரங்களுக்கிருக்கிற இளைப்பு, மூர்ச்சை, பிரமை, ஓக்காளம், தாகம், பேதி, கொட்டாவி, விக்கல், சரீரவேதனை, மலபந்தம் என்னும் இப்பத்து அவஸ்தைகளுடன் இளைப்பு, அடிக்கடி சீறிறங்கல், மலபந்தம், அக்கினிமந்தம், அசீரணபேதி, அதிகநித்திரை விழுதல், வயிற்றுநோய், சுடுக்கம், தாகம், கைகால் குளிர்ச்சி, கபாதிக்கம், நித்திரை பங்கம், கண்களில் ஜலம்வடிதல் என்னும் இக்குணங்களையுடையது. இதற்கு சாமசுரம் என்றுபெயர்.

12. ஆமாசயக் கெடுதியால் புசிக்கும் அன்னம் சீணபாகமில்லாதிருப்பதால் ஏற்பட்டு சுவாசம், இருமல், அசீரணம் வாதகபங்கள் கூடிய சுரம், தற்பலம், சிரோபாரம், தேகஞ் சுருங்கல், கண்டத்திலும் நெற்றியிலும் வியர்வை, கண்சிவத்தல், நாவளல் என்னுங் குணங்களையுடையது, இதற்கு ஆம சுரமென்றுபெயர்.

13. வாதாதி தோஷமானது சப்தாதுக்களை பற்றி உண்டாகி சுரம்விடுகிற தருணத்தில் மீண்டும் முன்போல் சுரக்குணங்களெல்லாம் பிறக்கும். இதற்கு முக்கியமானசுரம் என்றுபெயர்.

இனி விஷமசுரம், சன்னிபாத சுரம் என்ற இருவகைகளையும் அவற்றின் பிரிவுகளையும் கூறப்படும்.

விஷம சுரம்:—தெளராக சுரமானது உள்ளுக்குள்ளே விஷமித்தால் முன்மூன்று நாட்களுக் கொவ்வொரு தாதுக்களைப்பற்றி விஷமலக்ஷணங்களை உண்டாகும். இதனைத் தாதுகதசுரம் எனவுங் கூறுவர். இது எண்வகைப்படும். அவைகளாவன.—

1. ரசதாதுகத சுரம்:—அரோசியம், அரோசகம், வாந்தி, வாயில் சலஸ்ரவம், சரீரமெல்லாம் நோயுடன் கனத்தல், பொருங்கொட்டாவி, முகசோகம், பலவீனம், தோஷச்சிலிர்ப்பு என்னுங் குணங்களை

யுடையது, இந்த சுரம் ஏழு ராத்திரிக்குப் பிறகு சுத்தராதலில் அனுசரிக்கும்.

2. ரக்தகாதுகத சுரம்:—மேற்கூறிய குணங்களுடன் உமிழ்நீரில் இரத்தம் விழுதல், தாகம், உடம்பெல்லாம் வெய்யடிப்பு, தேகமெலிவு, இரண்டு நெற்றியும் இடித்தல், கீல்களெல்லாம்சேரதல் சக்குவழு வழுப்புடன் மஞ்சள்நிறமா யிருத்தல், நெஞ்சில் பாரிக்கம், திகிலை, மலபந்தம், பேதியுடன் தெகழிச்சல் என்னும் குணங்களையுடையது. இந்தசுரம் 21-ராட்களுக்குமேல் மாமிசாதுகையைப் பற்றும்.

3. மாமிசதாதுகத சுரம்:—கண்களில் இருள்கம்மலுடன் தீர்கம்மல், வாந்தி, வாய்சுற்றம், அதிபரல் வாரல்லை தூக்கிப் போடுதல், தேகத்தில் எதுவோ பூனைப்போல் வலைப்பாயிருத்தல், மிதுமிதுப்பு, வயிற்றில் உப்பிசத்துடன் சோய், மற்றுஞ் சுரங்களுக்குறிய குணங்கள் என்பவைகளையுடையது. இந்த சுரம் இரண்டு மாதம்வரையிலும் போராடி பின்பு மேதோதாதுகதசுரமாய் மாறும்.

4. மேதோதாதுகத சுரம்:—மேற்கூறிய காரணங்களுடன், பரிமளவாசனையில் இஷ்டமில்லாமை, திரேவேதனை, தலைபாட்டல், மடுக்கல், கண்ணெரிபுடன் சலம்வடிதல், அக்கினிமந்தம், சலமருந்தினும் சிணமாகாமை என்னும் குணங்களையுடையது. இந்தசுரம் ஐம்மாதத்திற்குமேல் அஸ்திதாதுகதசுரமாக மாறும்.

5. அஸ்திதாதுகத சுரம்:—இரத்தசம்பு, சன்னசம்பு, எலும்பு, கீல் இவைகளின்சோய், தேகம் வெளுத்து பஞ்சைபோல் மெலிந்திருத்தல், ஒருவேளை தினம், அடிவயிற்றில், சோய், முதலியவற்றுடன் சாந்தின்குணங்களையும் உடையது. இந்தசுரம இரண்டு வருடஞ் சென்ற பிறகு மச்சதாதுகதசுரமாய் மாறும்.

6. மச்சதாதுகதசுரம்:—தோஷாதிக்கம், மேல்மூச்சு, கீழ்மூச்சு, கண்டத்தில் குறுகுறுவென்ற சத்தம், உள்ளே எரிச்சல், வெளியிற் குளிர்ச்சி, தேகஞ்சுட்டித்தலுடன் பாதை, தொடை முழங்கால் இவைகளின்கீழ் வேதனை, பிராணவாயுவும் அபானவாயுவும் தம்பித்தல் என்னுங் குணங்களையுடையது. இந்த சுரம் மூன்றுவருடத்திற்குப் பிறகு சுக்கிலதாதுகதசுரமாய் மாறும்.

7. சுக்கிலதாதுகத சுரம்:—கண்களிலிருள்கம்மல், புருவம், உச்சி, கண்டம், மார்பு, உந்தி, உதடு, நீஜம், முழங்கால், கணுக்கால், இடுப்பு, காலின் பெருவிரல், சுற்றிலும், தோள் என்னும் பதினைந்து ஸ்தானங்களின்வேதனை, ஆணுறுப்பு சருங்கல், இந்திரியபட்டம, அதிகநித்திரை, ஞாபகமறதி மற்றும் சாதுவின் அறிகுறிகள் முதலியவைகளையுடையது.

மேற்கூறிய ரசம், ரத்தம், மாமிசம், மேதை, அஸ்தி என்னும் ஐந்து தாதுக்களைப்பற்றிய தாதுகத சுரங்கள் கஷ்ட சாத்தியம்.

மச்சையையும் சுக்கிலத்தையும்பற்றிய தாதுகதசுரங்கள் மிகவும் அசாத்தியம் என்றறிக.

8. சருமதாதுகத சுரம்:—சரீரத்தின்மேல்காய்தல், தாடி மச்சம் மாகடத்தல், தலைசோய், சலத்தில்லிருப்புடன்தாகம், தேகம்வெளிறல், எரிச்சல், பிரமையாகபேசல், வாய்நீருறல், மயக்கம் என்னும் குணங்களையுடையது.

சந்ததாதி சுரம்:—இது திரிதோஷ பேதங்களிரண்டிலும், ஆறு கால மாறுபாட்டினாலும் பிறப்பதாகும். இதனைச் சிதசுரம், குளிர்சுரம், முறைக்காய்ச்சல் எனவும் கூறுவர். இது ஆறு வகைப்படும். அவையாவன:—

1. சந்தத சுரம்:—இது இரசதாதுவைப்பற்றி நின்று இரவும் பகலும் விடாது தொடர்ந்து சுரம் காய்தல் என்னுங் குணங்களையுடையது.

2. ஏகாஹிக சுரம்:—இது இரத்தாதுவைப்பற்றி நின்று பகலில் ஒருமுறையும், இரவில் ஒருமுறையும் சுரம் காய்தல் என்னுங் குணங்களையுடையது.

3. துவியாஹிக சுரம்:—இது மாமிச தாதுவைப்பற்றி நின்று இரண்டு ராட்களுக்கு ஓர் முறை சுரம் வருதல் என்னுங் குணங்களையுடையது.

4. திரியாஹிக சுரம்:—இது மேதோதாதுவைப் பற்றிநின்று மூன்று ராட்களுக்கு ஓர் முறை சுரம் வருதல் என்னும் குணங்களையுடையது.

5. சாதூர்த்திக சுரம்:—இது மச்சதாதுவைப் பற்றிநின்று நான்காம் நாள் அல்லது நான்குராட்களுக்கு ஓர் முறை சுரம் வருதல் எனனுங் குணங்களையுடையது.

6. பஞ்சாஹிக சுரம்:—இது அஸ்தி தாதுவைப்பற்றி நின்று ஐந்தாம்நாள் அல்லது ஐந்துராட்களுக்கு ஓர் முறை சுரம் வருதல் என்னுங் குணங்களையுடையது.

64-வகைச் சுரங்களாவன:—வாதசுரம், பித்தசுரம், கபசுரம், வாதபித்தசுரம், வாதகபசுரம், பித்தகபசுரம், சன்னிபாதசுரம், பூதசுரம், கோபசுரம், பயசுரம், காமசுரம், அபிசாரசுரம், அபிகாதசுரம், விஷமசுரம், சாமச்சுரம், நிராமச்சுரம், சதாதுகதசுரம், இரத்தாதுகதசுரம், மாமிசாதுகதசுரம், மேதோதாதுகதசுரம், அஸ்திதாதுகதசுரம், மச்சைதாதுகதசுரம், சுக்கிலதாதுகதசுரம், ஏகாஹிகசுரம், துவியாஹிகசுரம், திரியாஹிகசுரம், சாதுர்த்திகசுரம், பஞ்சாஹிகசுரம், தெய்வப்பிரகோபசுரம், கார்வசுரம், தர்ஷிகசுரம, மூர்ச்சைசுரம், பிரலாபசுரம், சோகசுரம், விப்பலைசுரம், பிருமிசுரம், அரித்திசுரம், உதயசுரம், மத்தியானசுரம், மாலைசுரம், நிசிசுரம், சோலைசுரம், தாபச்சுரம், வினைசுரம், ஆபச்சுரம், ரணத்தொனிசுரம்,

அக்கினிமந்தகரம், ஏப்பகரம், வாந்திகரம், கொட்டாவிகரம், விக்கல்கரம், அரித்திரைகரம், காசகரம், சுட்டகரம், புராணகரம், பசுரசந்நிகரம், மாதகரம், வருஷகரம், கட்டிகரம், அம்மைகரம், நடுக்கல்கரம், வியர்வைகரம், சூரைகரம், நிரிகாலகரம் என்பவைகளாம்.

இவற்றன் வாதகரம் முதலாய் பஞ்சாதிகரை மீறுள்ள 28-வகைகளும் இதுவரையில் கூறியுள்ளவற்றினே அடங்கி இருத்தலால் அவைகளைத்தவிர்த்து, எஞ்சின்ற எஞ்சிய 38-வகைகளே மட்டுஞ் சுருக்கமாக இனி யிங்கு கூறப்படும்.

தெய்வபிரகோபகரம்:—தெய்வங்களின் குற்றத்தினாலுண்டாகி சிரோபாரம், வியர்வை, சர்வாங்கதாகம், ஏப்பம், விக்கல், சடத்தி வம், சூலை என்னும் குணங்களையுடையது.

காந்தருவ சுரம்:—சர்வாங்கமும் கருங்கல், கண்களில் மஞ்சள் நிறத்துடன் சலம்வடிதல், பலவீனம், அற்பசூலை, இக்கள் அசைய கூடாமை, பிரமை, தோபம், பலியில்லாமை, பெருமூச்சு, சபித்தியம், அடிக்கடி மூர்ச்சை, சர்வாங்கவீக்கம், கனவில் விந்து கஷ்டம், ஏப்பம், விக்கல், அடிக்கடி சீறிறங்கல் என்னும் இக்குணங்களையுடையது.

தாந்திரிக சுரம்:—தேகம் முன்புறமாகவுதுபோன்ற உணர்ச்சியுடன் வலி, பலவீனம், நெற்றியிலும் மூக்கிலும் வியர்வை, சாடி மெதுவாக அல்லது அதிவேகமாக நடத்தல் என்னும் குணங்களையுடையது.

மூர்ச்சை சுரம்:—மூர்ச்சை, பலவீனம், நெஞ்புபட்டல், மிகு வார்த்தை, ஒருவேளை பேசாமலிருத்தல், வாதாதிக்கம், கனத்தொனி, வாயிற் கசப்பு, ஈகைல் குளிர்ச்சி, இரத்தமூத்திரம் என்னும் குணங்களையுடையது.

பிலாப சுரம்:—பிலாபம், சர்வாங்கவெளிறல், வாழைத்தண்டைப்போல் தேகம், கண்களில் உதிமில்லாமை, சாகு மஞ்சள் நிறத்துடன் முட்போலிருத்தல், தெஞ்சோய், மூத்திரம் தெற்றியிலும் வியர்வை என்னும் குணங்களையுடையது.

சீத சுரம்:—சுபாதிக்கம், வாந்தி, விக்கல், வியர்வை, பலவீனம், இருமல், இரைப்பு, மாப்புசோய், நெஞ்சுற்றல், சாடியுள்ளடங்கல், சாகு சிவப்போடு மூட்போலிருத்தல் என்னும் குணங்களையுடையது.

வியர்வை சுரம்:—மிகுவியர்வை, சர்வாங்கம், நெஞ்சிலும் வாதிலும் சோய், சோர்வு, கைகால்களில் மஞ்சள்நிறம், நெஞ்சில் சாதவேதனை, சாடியானது சூட்சுமத்திலும் வேகமான நடை, ஒருவேளை நாமதாடை என்னும் குணங்களையுடையது.

கிருமிச் சுரம்:—வயிற்றில் மிகுநோவு, உப்பிசம், ஏப்பம், வாந்தி, சாகுறிகள், வாயிலுமும் அபானத்திலுமும் அளவற்ற பூச்சிகள்

விழுதல், அக்கினிமந்தம், நித்திரைபங்கம், மனோதக்கம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

அரித்திர சுரம்:—சர்வாங்கத்திலும் மஞ்சள் நிறத்துடன் நடிப்பு, முகத்தில் எண்ணெய் நடவினதுபோல் பிசுபிசுப்பு, இக்களில்லிக்கம், நெஞ்ச உளர்தல், சன்னிபாதசுர குறிகள் என்னும் குணங்களையுண்டாக்கும்.

உதய சுரம்:—சுரமானது உதயகாலத்தில் உண்டாவதுடன் உடல் இல்லிட்டிருத்தல் சன்னிபாதசுர குணங்கள் முதலியவற்றைப் பெற்றிருக்கும்.

மத்தியான சுரம்:—சுரமானது மத்தியானத்தில் உண்டாகி வாத பித்தசுர குணங்களுடன் தினவு, அதிவார்த்தை, அதிமூத்திரம், நடுக்கல், அதிதாகம் என்னும் குணங்களையுடையது.

மாலை சுரம்:—சுரமானது மாலைகாலத்தில் பிறந்து சன்னிபாதசுர குணங்களையுடையது.

நிசி சுரம்:—சுரமானது நடு இரவில் உண்டாகி கலசுரங்களின் குணங்களையும் உடையது.

சோஷை சுரம்:—சோஷை, தபித்தல், மூர்ச்சை, அதிவேதனை, கண்களில் புகைகம்மலுடன் சலம்வடிதல், தேகஞ்சில்லிடல், வயிற்றில் பொருமலுடன் சோய், சுட்டெடுத்தல், அடிக்கடி மிகமூத்திரம், உரோமச்சிலிர்ப்பு, அக்கினிமந்தம், சுவாசம், படுக்கை பொருத்தாமை, வர்ச்சி, வாயும் சாவும் உலர்ந்து சிவத்தல் என்னும் குணங்களையுடையது.

தாபச் சுரம்:—அதிகளிர்ச்சல், மிகுதாகம், சலம் அருந்தினும் சாவுலர், மிகுதாகம், மார்பெரிச்சல், நித்திரைபங்கம், பிலாபம், பலவீனம், சுவாசம், அதிவேதனை என்னும் குணங்களையுடையது.

விரண சுரம்:—விரணங்களினுல் பிறந்த அதிகூடியுடன் சர்வாங்க சோலையும், சாகுணங்களையுமுடையது.

ஆதபச் சுரம்:—நித்திரை-வைகரி-ஆனி-ஆடி இந்த நான்கு மாதங்களில் காலை இரண்டு சமம்வரைக்கும் நிற்காமல் வழிடைப்பதினல் பிறந்த சாதாரண சாகுணங்களையுடையது.

கனத்தொனி சுரம்:—இது கனத்தொனியுடன் சன்னிபாத சுர குணங்களைப் பெற்றிருக்கும்.

அக்கினிமந்த சுரம்:—எழுசாள் பத்தியம் பிசகுதலினால், கற்பனம், தேகத்தில் நிறக்குறைவுடன் எரிச்சல், சுட்டல், மலபந்தம், ஸ்லேஷ்மாதிசாரம், நெஞ்சளி, இருமல், இரைப்பு, அன்னத்தில் வெறுப்பு, அரோசகம், ஏப்பம், வாந்தி, விக்கல், வாய்கசத்தல், இந்திரியதஷ்டம், முகம்வாடல், கைகால்வலி, அன்றியும் சிலசாலுக்குள் சாதுவிதசுரம்,

விஷமசுரபாதம், மகுரிசம்பந்தமானவியாதி, பேதி, வாந்தி, அழுகை என்னுங் குணங்களையுடையது.

ஏப்ப சுரம்:—ஏப்பம், வாந்தி, மார்பெரிச்சல், தலைவலி, தாகம், சென்னீர்தல், தேகத்தை நிருப்பல்போலிருத்தல், பிரமை, தலைமசக்கலுடன் எடுக்கல், மலபந்தம் என்னுங் குணங்களையுடையது.

வாந்தி சுரம்:—புளித்த ரத்தவாந்தி, எரிச்சல், மார்பில் நீபட்டதுபோலெரிச்சல், கண்டத்திலும் நெற்றியிலும் வியர்வை, பேதியில் தேகம் விழுதல், மிகுதாகம், தற்பலம், கைகால்குளிர்ச்சி, உடம்பெல்லாந் தலைவைத்ததுபோலிருத்தல், பிறகுறைவு, இந்திரியகஷ்டம் என்னுங் குணங்களையுடையது.

கொட்டாவி சுரம்:—மிகுகொட்டாவி, கைப்பு புளிப்பான வாந்தி, தலையிலும் காதிலும் சோயுடன் இரைச்சல், இருந்திருந்து தேகம் எடுக்கல், நெஞ்சிற் படபடிக்கம் என்னுங் குணங்களையுடையது.

விக்கல் சுரம்:—அதிக விக்கலுடன் சாகுணங்களையுடையது.

அந்திரைசுரம்:—இந்திரியின்மை, மிகுகூச்சல், அடித்தொடை சதையும் முழங்கால்சதையும் வலித்தல், நனதொனியானவார்த்தை, சதா இருமல், மூர்ச்சை என்னுங் குணங்களையுடையது.

காச சுரம்:—சதா இருமல், இளைத்தும், துரும்பாத்தும், வெளுத்தும் சாணிதமாகிய கோழைவிழுதல், வியர்வை, மூர்ச்சை, தாகம், பிரமை, ஏப்பம், வாந்தி, எடுக்கல், தலையிலும் கண்ணிலும் எரிச்சல், பேதி, வயிற்றுவலி, கொட்டாவி, விக்கல் என்னுங் குணங்களையுடையது.

சுட்க சுரம்:—அதிகவெப்பம், தேகமுஷ்ணம், சிரசிலும் கண்ணிலும் சோய், வியர்வை, பல்சோய், சலம்போல் விடத்தல், உரோமச்சிலிர்ப்பு, அதிநித்திரை, கோபம் என்னுங் குணங்களையுடையது.

புராண சுரம்:—இது சாகுணங்களுண்டாகி நெடுநாளாக விடாமல் இருக்கும்.

பகூர்ந்திர சுரம்:—பகூர்த்தக் கொருதாம் பிறந்து தொந்தடன் வெப்பம், தாகம், புத்தியில் ஒன்றும் தோன்றுமை, அரோசகம், இருமல், தற்பலம், சரீரவெளிர், என்னுங்குணங்களையுடையது.

மாத சுரம்:—இது மாதத்திற் கொருமுறை பிறந்து சகல சாகுணங்களெல்லாமுடையது.

வருஷ சுரம்:—இது வருடத்திற்கொருமுறை பிறந்து சகல சாகுணங்களுமுண்டாயிருக்கும்.

கட்டிசுரம்:—சர்வாங்கத்திலும், கடுகைப்போல் சிறியதாகவும் பெரியதாகவும் கட்டிகள் எழும்புதல், எரிச்சல், தாகம், உடற்சோர்வு

வியர்வை, சுர உஷ்ணத்து முன்னேப்போலிருத்தல், நித்திரைபங்கம், வாந்தி என்னுங் குணங்களையுடையது.

அம்மை சுரம்:—சிறுபயறு பிரமாணம் தேகமுழுவதும் அம்மை அல்லது கொப்புளங்கள் எழும்பல், தாகம், அதிவேதனை, தேகம் எரிச்சலுடன் பதால், சிலவேளை மார்பெரிச்சல், எழுந்திருக்கக்கூடாமை, பலவீனம், படுக்கை பொருத்தாமை, சுவாசம், வயிறுசோய் பேதி, பிறகுறைவு, நித்திரைபங்கம், கண்விழித்தல், நாடி சூட்சுமமாக நடத்தல் என்னுங் குணங்களையுடையது.

நடுக்கல் சுரம்:—நடுக்கல், கூச்சல், வாயிலும் நாவிலும் கொப்புள மெழும்புதல், சாங்களின் குணங்கள் முதலியன உண்டாயிருக்கும்.

விக்கச் சுரம்:—நீல்களில் விக்கம், நகால் கொதிப்பு, மார் படைப்பு, வயிற்றிலுப்பிசத்துடன் சோய், மலபந்தம் சாகுணங்கள் என்னும் இலக்கணமுடையது.

சூலாக சுரம்:—மலத்துவாரத்தில் சூலை, மலபந்தம், சிரோபாரம், சோளம், அக்கினிமந்தம், தாகம், நெஞ்சுவரல், தர்ப்பலம், தேகம் கனத்துவெளிறல், கண்விழித்தல், உரோமச்சிலிர்ப்பு, அடிக்கடிசீறன்கல், நாடியிடத்தைவிட்டு அசைந்து மிருதுவாகவும் வேகமாகவும் நடத்தல் என்னுங் குணங்களையுடையது.

திரிகால சுரம்:—காலை பகல் மாலையென்னும் முக்காலத்திலும் பிறந்து பிதற்றல் பற்படித்தல், நடுல்பாடல், விகாரகுணம், உடம்பு பதறல், அற்பனித்திரை, நாக்கு முன்னேபோலிருத்தல், முகம் சிவத்தல் காதடைப்பு, அசீரணம், காசம், ஓக்காளம், பேதி, கொட்டாவி என்னுங் குணங்களையுண்டாகும்.

1. சுரத்தின் தசாவஸ்தை:—அற்ப ஞாபகம். 2 இறந்தவர்களை கண்ணிற்கண்டு பேசுதல்போலிருத்தல். 3 சித்தப்பிரமை. 4 மேல் கண்ணிற்கண்டு பேசுதல்போலிருத்தல். 5 விழி விழித்தபடியே இருத்தல். 6 குரல் மாறல். 7 சரீர மூர்ச்சை. 8 தன கையினால் முகத்தைத் தடவிக் முழுவதும் அதிகளரிச்சல். 9 சரீரமுழுவதுஞ் சீதனவியர்வை தாணல். 10 தேகத் கொள்ளுதல். இப்பத்து அவஸ்தைக்குள் முதல்முன்று தைவிட்டு ஆவிசிங்குதல். அவஸ்தை வரையிலும் வைத்தியஞ் செய்பலனமென்று சில நூல் அவஸ்தை வரையிலும் வைத்தியஞ் செய்பலனமென்று அதாவது பிராணன் களிலும், ஒன்பதாவது அவஸ்தைவரையிலும் அதாவது பிராணன் கீங்குகிற வரையிலும் வைத்தியஞ் செய்பலனமென்று சில நூல்களி லும் கூறப்பட்டின்னது.

அசாத்தியசுர இலக்கணம்:—சுரரோகிகட்கு உடலில் நடுக்க முடன் மிக்க சோய், மேல்மூச்சு, மூர்ச்சை, அடிக்கடி கணப்பு, இளைப்பு, மார்புசோய், கண்ணில் சோயுடன் குத்தல், முகம் குங்குமம் போல் வெத்தல், கழுத்துகுறுகுதல், அல்லதுநீளுதல், இரவில் எரிச்சல், பலவீனகுளிர்ச்சி, சாகறுத்தல் அல்லது வெத்தல், ஜனனம்

வெளிப்படல், மனத்தொனி, நிலேஷ்ம ரோடி அதிவேகமாய் ஓடத்தல், வைசம் சென்னிடல், மார்பு, உந்தி, மூக்கு, உள்ளங்கைகள் ஆகிய இவ்வைந்து இடங்களில் மிகுகுளிர்ச்சி, பிரமாதிக்கம் அக்கினிபோல் சுடல், தேகமுழுதுங்குளிர்ச்சி, அபத்திய வஸ்துகளின்மீது இச்சை, தன் படுக்கையை விட்டு நீடுதல், அடிக்கடி முகத்தை வைபரல் தடவுதல், தன் படுக்கையை காலினால் அடிக்கடி தட்டுதல், முதலிய சன்னிபாத அகோர குணங்களிருக்குமாயின் அசாத்தியம்.

சாத்திய சுர இலக்கணம்:—சரீரகெட்டு, கண்பார்வை, தேகம், பஞ்சேந்திரியங்கள் இவைகள் வைபவமாயிருத்தல் மனச் சாந்தி, இளைப்பின்மை, உள்ளங்கை உள்ளங்கால்கள் சூடாயிருத்தல், அற்பதாகமுடன் காலில் சலமிருத்தல், இரவில் அயர்ந்த நித்திரை, எழுந்திருந்தாலும் உட்கார்ந்தாலும் சிரம கனத்தலின்றி இயற்கை யாக இருத்தல் என்னும் குணங்களிருக்குமாயின் சாத்தியமா மென்றறியவேண்டும்.

விட்டசுர இலக்கணம்:—உடல் கனமின்ற இலேசத்துவமாக வும் இயற்கை நிலையிலு மிருத்தல், பஞ்சேந்திரியங்களின் வைப வ இயக்கம், மனசாந்தி, சிரசில் லகுச்சம், தும்மல், வியர்வை, அன் னத்தில் இச்சை, பசி என்னும் குணங்கள் இருக்குமாயின் சரீரகம் விட்டதென்றறிக.

சப்ததோஷ பேதம்:—சாம்பிறந்த ஒன்பதாவது வரையிலும் தருண சுரமெனப்படும் அச்சமயத்தில் பரிமளபோஜனம், குளிர்ந்த சலம், புளிப்பு, கசப்பு, காரம், துவர்ப்பு, நெய், நல்லெண்ணெய், வெல்லம், சமித்தியபண்டம், தாம்பூலம், புதுவஸ்திரம், சிவந்த வஸ் திரம், சுகந்த புஷ்பம், சந்தனம், பச்சைகற்பூரம், கஸ்தூரி முதலிய பரமனந்தவிஷயங்கள், காற்றுவீடு, பஞ்சமி, சந்திரன், தினஉபசா ரம், மாதர்களின் விருப்புடன் பார்த்தல், அவர்களால் பரிசிக்கப்படுதல் சையோகம், புத்தகம் வாசித்தல், பாகீரதிநீரைபேறுதல், அதிதா கடை, கோபம், அழுதல், தேகம் அதிர்ச்சி என்பவைகள் அணுகில் வாதாதிகள் சாமிலைப்பற்றி சுடியைதூடிலப்படுத்தி முகம், கண்டம், நாசி, ஈரல் என்னும் பிலைகளை சருக்கி வெறித்த பார்வையை உண் டாக்க தோஷம் பிரபலப்படும். அது எழுவகைப்படும்.

1. அபத்தியதோஷம்:—சோம்பல், மூர்ச்சை, பிரமை, தாகம், அதிகபிரலாபம், மார்புசோர்ச் என்பவைகள் உண்டாகும்.

2. சங்கதோஷம்:—சர்வாங்கசோர்ச், பிக்கல், மார்பெரிச்சல், பொய்பேசல், அடிக்கடி பெருமூச்சிருக்குதல், பிரமை, உள்ளங்கால் உள்ளங்கை குளிர்ச்சி, என்னும் குணங்களை உண்டாக்கும்.

3. விஷமதோஷம்:—சுரம், எரிச்சல், அதிதாகம், நாடிதுடித் தோடு நிதானமாக நடைதூதல், வயிறெரிச்சல், வியர்வை அழுகலென் னும் குணங்களையுண்டாக்கும்.

4. விஷமசிததோஷம்:—ஒரு தினத்திலேயே இரண்டுதரம், மூன்று தாலுதரங்கள், குளிரோடு சுரத்தை யுண்டாக்குவதன்றி தாகம், புறண்டல், தலைசோர்ச், சர்க்கு நடித்த முட்போலிருத்தல், பிரலாபம், சித்தபிரமை, புரள்ளன இக்குணங்களை யுண்டாக்கும்.

5. பீதஸ்லிம்மகதோஷம்:—சர்க்கு மஞ்சள் நிறமாக வெடித்து சாமில்லாமல் முட்போலிருத்தல், தாகம், பிரமை, வியர்வை, மூர்ச்சை தொண்டைகமமல், வெருட்சி, விடுக்கல் என்னும் குணங்களை யுண் டாக்கும்.

6. ரக்தஸ்லிம்மகதோஷம்:—சர்க்கு சிவந்த முட்போன்ற கொஞ்சம் நீண்டிருக்குதல், தாகம், எரிச்சல் என்னும் குணங் களை யுண்டாக்கும்.

7. திருஷ்ணஸ்லிம்மகதோஷம்:—சர்க்குக் கறுத்த வறண்டி முட் போலிருத்தல், அடிக்கடி எழுந்திருத்தல், சித்தபிரமை, வயிறுப்புசம், தினவு, வியர்வை, தாகம், சோபம், அழுகை, குடிப்பு, கைகால் அசதி, சரீரம் கறுத்தல் என்னும் குணங்களை யுண்டாக்கும்.

மேற்கூறிய சப்ததோஷங்கள் எழுசார் அல்லது பதினேந்துசார் சென்றால் சாத்தியப்படும். ஆனால் சிகிச்சை செய்துகொண்டு வெகு ஜாக்கிரதையாக பார்க்கவேண்டியது. அப்படி குறித்தசாட் களில் சாத்தியப்படாவிட்டால் அசாத்தியம்.

ரத்தபித்த நோய்

இந்த நோய் ரத்தஸ்தானமாகிய இருதயத்திலிருந்தாவது, இருதயத்திற்கு அலது இடபுறங்களிலுள்ள மாமிசகண்டங்களாகிய கல்லீரல் மண்ணீரல்களிலிருந்தாவது பிறக்கின்றது. இதனால் ரத்தத்தினாலும், அல்லது இரத்தக் கெடுதியினாலும் வாதாதிகளின் செய் கையினால் வெளிப்பட்டு தூரம்றத்தடைவது, இயற்கை நாற்றத் தையினும் வெளிப்பட்டு தூரம்றத்தடைவது, இயற்கை நாற்றத் தடைவது இருப்பதுடன் சில சமயம் அற்பமாகவும் சில சமயம் அபத்தை விளைக்கக் கூடியதாகவும் காணப்படும்.

இரத்தபித்த நோயின் பேதம்:—மேற்கூறிய இரத்தபித்த நோய் நிதோஷங்களினாலும், அவைகளின் இணைப்புகளினாலும், சன்னிபாதத் தினாலும் ஏழுவகைப்படும். இந்நோய் ஊர்த்துவமுகம், அதோமுகம், உபயமுகம் என்ற மேல்நோக்கு கீழ்நோக்கு, இருநோக்கு என் னும் மூவகையாகவும் கண்டு கண், காது, நாசி, வாய், உரோமம், சலத்துவாரம், மலத்துவாரம் என்னும் ஏழுவாசல் வழிகளாகவும் வெளிப்படும். கண்கள், காதுகள், மூக்கு, வாய் என்னு நான்கு வழிகளாக இரத்தம் வெளிப்படுதல், ஊர்த்துவமுக இரத்தபித்த நோயென்றும், சலத்துவாரம், மலத்துவாரம், உரோமத்துவாரம் வழியாக இரத்தம் வெளிப்படுதல், அதோமுக இரத்தபித்த நோயென் மம், ஒரோவழித்தில் ஏழுதுவாரங்களின் வாயிலாய் இரத்தம் வெளி

படுதல் உபயமுக இரத்தபித்த சோப்பென்று மறிக. இவற்றுள் ஊர்த்துவமுகம் சாத்தியம், அதோமுகம் கடின சாத்தியம். உபய முகம் அசாத்தியம்.

வாத ரத்தபித்தம்:—துறையுடன் சென்ற ரத்தம் வெளியாகும். இந்நோயில் அதிக பித்தமும், அற்பவாதமும் இருப்பதால் இது அசாத்தியம்.

பித்தாரத்தபித்தம்:—பசளின் மூத்திரநிறமாகவும், கஷாயத்தின் நிறமாகவும், குழம்பாகவும் இரத்தம் வெளிப்படும்.

சிலேத்துமரத்தபித்தம்:—வெண்மையாகவும், இளைப்பத்துக் கழிசனல் வழுவழுத்திருப்பதாகவும் இருக்கின்ற ரத்தத்தை வெளிப் படுத்தும். இம் மூன்று தவிர எஞ்சியுள்ள சன்னி வகைகளாகிய வாதபித்த, வாதகப, பித்தகப திரிதோட இரத்த பித்தங்களில் மேற் கூறிய குறிகுணங்களின் தொந்தம் காணப்படும். இவைகள் யாவும் அசாத்தியமாகும்.

அரிர்க்கர நோய்

மாதர்கட்கு மாதாந்திர ருதுகாலத்தில் காணும் இரத்தம் சரிவர வாராமல் தப்பினல் அதனல் அரிர்க்கரோயுண்டாகும். இதனைப் பெரும்பாடு, பிரமியம், பிரமேகம் என வழங்கப்படும். இந்நோயில் பெண்களுக்கு அல்குல் வழியாக வெளிப்படுவதுடன் வாயினலும் இரத்தம் விழுமென்று அறிதல் வேண்டும். இந்த அரிர்க்கர நோயா னது வாதாரிர்க்கரம், பித்தாரிர்க்கரம், சிலேத்துமாரிர்க்கரம், சன்னி பாதாரிர்க்கரம் என சன்னி வகைப்படும்.

வாதாரிர்க்கரம்:—வயிற்றில் வலியை யுண்டாக்கி கறுத்தநிற ரத்தத்தை அல்குல்வழியாக வெளிப்படுத்தும். வாதத்துடன் பித்தஞ் சேர்ந்தால் இரத்தமானது கண்டவுடன் மறைந்துவிடும்.

பித்தாரிர்க்கரம்:—சாரத்தோடு சிவநிறமான இரத்தத்தை அல்குல் மார்க்கமாய் வெளிப்படுத்தும். பித்தத்துடன் சிலேத்துமமும் கூடி னல் இரத்தமானது உருண்டை உருண்டையாக விழும்.

சிலேத்துமாரிர்க்கரம்:—மாதர்கட்கு இரத்தமானது பிணத்தின் சாற்றத்துடன் வெண்மையாக அல்குல்வழியாக வெளியாகும். சிலேத்துமத்துடன் வாதமுங்கூடினல் மீனைப்போல் வெளியாகும்.

சந்நிபாதாரிர்க்கரம்:—மேற்கூறிய மூன்று தோஷங்களின் நிறமாகவும், மலமூத்திரநிறமாகவும் சாற்றமுமுடையதாகி அல்குல் வழியாக வெளியாகும். இந்நோயில் சுரமும் மூர்ச்சையும் உண்டா கும். தொந்தமும் இதுவும் அசாத்தியம்.

அஸ்திசிராவ நோய்

ரசதாதுகொதிப்பினல் ரத்தத்தின் சுபாவ நிறங்கெட்டு அல்குல் மார்க்கமாக இரத்தமானது வெளுத்த அல்லது மிகவுஞ் சிவந்த நிறத்துடன் வெளிப்பட்டால் ரத்தசிராவ நோயெனவும், எலும்புகளின் மத்தியிலிருக்கிற மச்சையை யுருகி சூலையுடன் வெளிப் பட்டால் அஸ்திசிராவநோய் அல்லது எலும்புருகி நோயென்றும் கூறப்படும். இவைகள் அசாத்தியம்.

காச நோய்

இதனை இருமல் நோய் எனவுங் கூறுவர். இந்நோயில் மேல் நோக்கும் வாய்வானது மார்பில் சேர்ந்து, முதுகு, மார்பு, விலா பக்கம், தொண்டை முதலிய விடங்களில் வலியை உண்டாக்கி, ஒட் டை வெண்கல ஒலியைப் போன்ற ஒலியை கண்டத்தில் பிறப்பித்து இருமலை உண்டாக்கி கோழையை வெளிப்படுத்தும். இது ஐந்து வகைப்படும்.

1. வாதகாசம்:—வாதாதிக்கவஸ்துக்களின் உபயோகத்தினல் வாதமானது அதிகரித்து மார்பு, கண்டம், முகம் இவைகளை யுற்றப் பண்ணி, சிரை, விலாபக்கம், குண்டிக்காய், மார்பு இவைகளில் சூத்தலையுண்டாக்கி சோருதல், மனக்கலக்கம், சனத்தொனி, அதிக வேதனை, பொடி இருமல், வேற்றுக்குரல், ரோமச்சிலிர்ப்பு முதலிய வைகளை உண்டாக்கும். மேலும் நெஞ்சில் இளகிய கோழையை கெட்டிப்படுத்தி கொஞ்சங் கொஞ்சமாக வெளிப்படுத்தும்.

2. பித்தகாசம்:—கண்களும், நகங்களும் மஞ்சள்நிறம், வாய் கசப்பு, மஞ்சள்நிற கோழைவிழல், ரத்தவாந்தி, பிறலம, தாகம், கம்மியபேச்சு, புளியேப்பம், எப்போதும் பொடிஇருமல் கண்களில் இருட்கம்மல் என்னுங் குணங்களையுடையது.

3. சிலேத்துமகாசம்:—மார்பிலும், தலையிலும்நோய், இறுக்கிப் பிடித்ததுபோல் குண்டிக்காயில்நோய், தேகபாரிப்பு, நெஞ்சுக்குள் அறவருப்பு, மூக்கில்சதா சலம்வடிதல், அரோசகம், சரீரமினு மிளப்பு, வெளுப்பான கோழை, வாந்தி என்னுங் குணங்க ளையுடையது.

4. ரத்தகாசம்:—கடின வேலைகள் செய்வதால் தேகம் மெலிந்த வர்கட்கு சுபாவபலம் ஒடுங்கியதால் வாயுவானது மார்புக்குள் சேர்ந்து பித்தத்துடன் கலந்து கண்டத்தில் வேதனையை யுண்டாக்கி ரத்தத்துடன் மஞ்சள்நிறமாகவும், உலர்ந்ததுபோலவும், உண்டை உண்டையாக கபத்தை வாந்தியாக்கும். ஒருவேளை மார்பை பிளு வாக்கி சத்தாரத்தையே வாந்திசெய்யும். ஒருவேளை ஊசிகளால் குத்துதல்போல் மார்பில் குத்தலை உண்டாக்கி ரத்தத்தை வெளிப் படுத்தும். அப்போது கீல்களில் வேதனை, சுரம், சுவாசம், சனத்

தொனி, விடுக்கல், நெஞ்சில் புரட்சத்தம், பக்கசோவு, இந்திரியம், பசி, பலம், தேகவன்மை இவைகள் குறைந்த ரத்தமூத்திரம், முதுகு சோய், இடுப்புசோய் உண்டாகும்.

5. சுவாசகாசம்:—இந்த சுவாசரோகமானது முதலில் இரு மலைப் பிறப்பித்து, பின்னர் கபசுரற்றத்துடன் மஞ்சள், பச்சியோசம், ரத்தம் இவைகளின் நிறமாக புளிப்பு வாசனையாக வாயினால் கோழையை கக்கப்பண்ணும். அப்போது பக்கங்களிலும், மார்பிலும் சோயுண்டாகும். உஷ்ண சீத வஸ்துக்களின்மீது இச்சை, அன்னத்தின் மீது அபேட்சை, தர்பனம், முகத்தில்சோஜை, கண்களில் வல்லகாந்தி முதலிய சுவாசரோகுணங்களும் உண்டாயிருக்கும். இந்தரோகம், தர்ப்பலமுடையவர்களுக்கும், வயது சென்றவர்களுக்கும், பின்னோர்களுக்கும் வந்தால் தீராது. சரீர பலமுள்ளவர்களுக்கு வந்தால் ஒருவேளை சாத்தியமாகும். மேற்கூறிய வாத, பித்த, ஸ்லேத்துமரோகங்கள் சாத்தியம். தொந்தரோகங்கள் கஷ்டத்தின் மீது சாத்தியம். மற்ற இரண்டும் அசாத்தியம். சுவாசரோகத்தின் பேதங்கள் முதலியது சுவாசரோகத்தில் காண்க.

இருமல், இளைப்பு, சுரம், வாந்தி, தாகம், பேதி என்னும் குணங்களையுடைய காசரோகம் அசாத்தியமாம்.

சுவாச நோய்

இதை இளைப்பு நோய் எனவும் கூறுவர். இது வாத கபங்களின் விருத்தி, அசீரணபேதி, வாந்தி விஷப்பாண்டு, விடாச்சுரம், புகை, கற்பூர, தானியச்சுவை, அதிசீதளதபம், மர்மஸ்தானங்களில் அடிபடுதல் முதலிய காரணங்களினால் உண்டாகும். இந்நோயில் மார்பிலும், விலாப்பக்கங்களிலும் குத்தல், நினறி நினறி மூச்சுவாங்குதல், வயிற்றுப்புசம், இரண்டு தெரியிலும் நோய் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும். இந்த சுவாசரோகமானது ஐந்து வகைப்படும். அவையாவன:—

1. அற்ப சுவாசம்:—ஆபாசத்தினாலும், அபத்தியத்தினாலும் வாயுவானது அதிகரித்த சுவாசகுணத்தோடிருக்கிற பித்தஸ்லேத்தமங்களுக்கு பலத்தைக்கொடுத்து அற்பசுவாசம் உண்டாகும்.

2. தமாக சுவாசம்:—மார்பிலும் இருபக்கவிலாவிலும் சோயை யுண்டாக்கி, கண்டத்தில் குறுகுறுவென்ற சத்தத்துடன் இருமல், சோருதல், பீனசம், அருசி, தாகம் என்னும் குணங்களை அதிகரிக்கச்செய்து சகிக்கக்கூடாத சுவாசத்தை உண்டாக்கும். இளைப்பினால் தேகமெல்லாம் அதிர்ந்து குலுங்கல், கண்டத்தில் அடைத்த கோழையிழுத்துவிட்டால் சிறிது சௌக்கியமாகக் காணல், பிரபாசத்துடன் சளித்தல், சளித்தால் பெருமூச்சுவிடுதல், உட்காரத்தால் சிறிது சௌக்கியம், மேல் பார்வை, தெற்றியில் வியர்வை

போடு சோய், அடிக்கடி வாயுவால், தேகம் விடுக்கல், உஷ்ணதியத்தில், இச்சை முதலிய குறிகுணங்களைப் பெற்றிருக்கும். இது பஞ்சேந்திரியங்களுக்கு மயக்கம உண்டாக்குவதால் தமாகசுவாசம் எனப்படும். மேலும் பனிகாலம், குளிர்ந்தஜலம், சீதள பதார்த்தம், கீழ்க்காற்று இவைகளால் சுவாசம் அதிகரிப்பதினால் மந்தாகசுவாச மென்றும், மந்தாரோகசமென்றும் கூறப்படும். இச்சோய் தனித்து இருப்பின் சாத்தியமென்றும், இத்துடன் சுரமும் மூர்ச்சையும் உண்டானால் அசாத்திய மென்றும் கூறுவர்.

3. விச்சின்ன சுவாசம்:—சாதாரண சுவாசமானது உள்ளில் மறிபட்டு மறிபட்டுப் பெருஞ்சுவாசமாக வருதல், மர்மஸ்தானங்களில் சோய், வியர்வை, மூர்ச்சை, மேல்வயிற்றுப்பிசம், அடிவயிறு, தேகம் எரிச்சல், மலமூத்திர சிக்கல், கண்ணில் கெப்பு, வாயுவால், பிரபாபம், தேகநிறமாறல், அசதியம், ஞாபகமறதி என்னும் குணங்களுடையது. இந்த ரோகி மயக்கத்துடன் சோர்ந்திருப்பான்.

4. மகா சுவாசம்:—கண்டத்தில் கலகலவென்ற சத்தத்துடன் பெருஞ்சுவாசம், வயிற்றுப்பிசம், முகத்திலும் கண்களிலும் காந்தியின்மை, கையினால் மார்பில் அறைந்துக்கொள்ளல், மலமூத்திரச் சிக்கல், மெல்லியவார்த்தை, நெஞ்சுவலி, சோருதல், காதிலும் நெற்றியிலும் சிலிலும் சோய் என்னும் குணங்களுடையது.

5. ஊர்த்துவ சுவாசம்:—சுவாசம் மேல்நோக்கி வருவதால் தலைகுனியக்கூடாமை, முகத்தாம்புகள் உப்புதல், மேல்பார்வை, மயக்கம், சுற்றிசுற்றிபார்த்து விழித்தல், மர்மஸ்தானங்களின் சோயினால் அழுதல், பேசக்கூடாமை என்னும் குணங்களுடையது. சிகிச்சை செய்யும்போது குணங்கள் குறைந்தால் சாத்தியம். குறையாவிட்டால் அசாத்தியம.

காசரோகத்துக்கும், சுவாசரோகத்துக்கும், சுரம், வாந்தி, தாகம், பேதி, விக்கம் காணுமானால் அசாத்தியம.

விக்கல் நோய்

விக்கல் ஐவகைப்படும். அவையாவன:—

1. அன்னதோஷ விக்கல்:—காரவஸ்து, மிகதடுமைபதார்த்தம், சீரணமாகாதவஸ்து கடினபதார்த்தம், அன்னபானாதி விதியாசம் இவைகளினால் பிறந்து கண்டத்தில் அற்பதொனி, அற்பஇருமல் என்னுங்குணங்களை யுடையது. இதுவே அசனேற்பவ விக்கல்.

2. அற்ப விக்கல்:—சாப்பிடும்போது அதிகரித்த வாயுவினால் அற்பவிக்கல் உண்டாகும். இந்த ரோகிக்கு, பசி கோயினால் உண்டாகும் ஆபாசத்தினால் நெஞ்சுகுழியிலிருந்து விக்கலானது அதி

கரிக்கும். கொஞ்சம் போசனம் பண்ணினால் சாந்தமாகும். இதுவே கூந்திர விக்கல்.

3. அடுக்கு விக்கல்:—ஆகாரம் ஜீரணிக்குஞ் சமயத்தில் சற்ற நேரம் பொறுத்து பொறுத்து இரண்டிரண்டாக பிறந்து மிகுதாகம், வயறப்பிசம், பிளாபம், வாந்தி, பேதி, கண்களல்கள், மிகுதொட்டாவி என்னுங்குணங்களுடையது. இதுவே யமள விக்கல்.

4. மகாவிக்கல்:— அதிகவிக்கலினால், இரண்டு கண்புருவங்கள், நெற்றி நெறித்துமிழுவதுப்போலிருத்தல், சலம்வடிதலுடன் கண்களல்கல், சர்வாங்கமும் மரத்தல், மிகுவுமாரல், அன்னமிறங்கும் வழிதறிபடுதல், கால்களில்சோய், முதுகுவலிதல், சென்னக்குழி உலருதல் என்னுங்குணங்களுடையது. இது மிகவும் கொடியது.

5. நீடொலிவிக்கல் :—காயின்ஸ்தானத்திலாவது பக்குவாசயன் ஸ்தானத்திலாவது பிறந்து மேற்கூறிய குணங்களுடையதால், கொட்டாவி, தேகமுறக்குதல், அதிக சத்தத்துடன் கீண்டுவருகின்ற விக்கல் என்னுங் குணங்களுடையது. இதுவே கம்பீர விக்கல்.

அன்னதோஷ விக்கல், அற்ப விக்கல் சாத்தியம். அடுக்கு விக்கல் கஷ்டசாத்தியம். மற்ற இரண்டு அசாத்தியம். இந்த விக்கல் ரோகமானது சகல ரோகங்களினிட அதிகக்கிரத்தில் கொல்லும். ஆகையால் இது கண்டபொழுதே சிகிச்சை செய்துகொள்வது நலம்.

கஷய நோய்

இந்த கஷயரோகத்தையே யக்ஷ்மரோகம், ராஜயக்ஷ்மரோகம், ரோகராஜம், கபரோகம், க்ஷீணரோகம் என்றும் கூறுவர். பினிசம், அதிக இருமல், மந்தாக்கினி, தேகம் வற்றல், மார்பு அதிர்ச்சி, வாந்தி, அரோசகம், விக்கம் முதலிய அதே கோரமான குணங்களையுடையது. இந்நோயில் பதினொரு குணங்களையுடைய ஐவகை தோஷங்களுண்டு. அவையாவன:—

1. மேல்நோக்கு தோஷம்:—பித்தகப ஸ்தானத்திற்கு மேலாக வாயுவை சஞ்சரிக்கச்செய்து, பினிசம், இருமல், இரைப்பு, தோளில் சோய், க்ஷீணசோய், குரற்கம்மல், அரோசகம் என்னும் ஆறு குணங்களையுண்டாக்கும்.

2. கீழ்நோக்கு தோஷம்:—காயின்ஸ்தானத்திற்கீழ் வாயுவை சஞ்சரிக்கச் செய்து அடிக்கடி மலம் சுழலல், வாயுவால் என்னும் இரண்டு குணங்களையுண்டாக்கும்.

3. அகட்டு தோஷம்:—வயிற்றுக்குள் வாயுவை சஞ்சரிக்கச் செய்து வாந்தியாகிய ஒரு குணத்தை மாத்திரம் உண்டாக்கும்.

4. சூலை தோஷம்:—இருபக்க விலாக்களிலும் குறுக்கே வாயுவை சஞ்சரிக்கச்செய்து அவ்விடங்களில் சூலைசோய் என்னும் குணத்தை மாத்திரம் உண்டாக்கும்.

5. கிருதோஷம்:—சகல தோஷங்களிலும் வாயுவை சஞ்சரிக்கச் செய்து சுமாகிய ஒரு குணத்தை மாத்திரம் உண்டாக்கும்.

க்ஷயரோகிகளுக்கு ஐவகைதோஷத்தினால் பதினொரு குணங்கள் அதிகரிக்கும்போது கண்டத்திலும் மார்பிலும் சோய், தோளவேதனை, கொட்டாவி, கோழைவிழுதல், மந்தாக்கினி, வாயில் துர்க்கந்தம் விசகல் என்னும் குணங்களுண்டாகும். இது ரண்டு வகைப்படும்.

வாதக்ஷயரோகம்:—ரௌசு, தோள், கண்டம் இவைகளில் சோய், விலாபக்கங்களில் குத்தல், குரற்கம்மல், கருப்பு வெண்மை நிறங்களுடைய கோழைவிழுதல் என்னுங் குணங்களுடையது.

பித்தக்ஷயரோகம்:—கை, கால், முகம் எரிச்சல், ரத்தவாந்தி, பேதி, வயிற்றினின்று துர்க்கந்தம் வீசுதல், மஞ்சள் அல்லது சிகப்பு கோழை விழுதல் என்னுங் குணங்களுடையது.

சிலேஷ்மக்ஷயரோகம்:—சிரசும் தேகமும் பாரித்தல், அரோசகம், வாந்தி, இருமல், வாயிற் சலமூறல், பினிசம், நன்தொனி, இரைப்பு, மந்தாக்கினி, வெண்மை நிறமாகிய கோழைவிழுதல் என்னுங் குணங்களுடையது.

திரிதோஷ க்ஷயரோகம்:—முற்கூறிய வாத பித்த கப க்ஷய ரோகங்களில் கூறிய குணங்கள் யாவும் கலந்து காணும்.

க்ஷயரோக சாத்தியா சாத்திய லக்ஷணம்:—க்ஷயரோகிக்கு பக்க சோய், வயிறப்பிசம், ரத்தவாந்தி, சிமானவாந்தி, இரண்டு புஜங்களிலும் உபாதை, சிமானமும் சிகப்பாகவும் கருப்பாகவும் கோழைவிழுதல், சுரம், இருமல், இரைப்பு இவைகள் அதிகரித்தல், தேக காந்தி, பலம், தொனி இவைகள் குறைவுபடுதல், சரீரம் சுட்டல், பீசத்திலும், வயிற்றிலும் விக்கம் என்னும் குணங்களுண்டானால் அசாத்தியம். மேற்கூறியவைகள் இல்லாதிருந்தால் சாத்தியம். சிலநூல்களில் வாத க்ஷயம், பித்தக்ஷயம், சிலேஷ்மக்ஷயம், திரிதோஷக்ஷயம், வாதபித்த க்ஷயம், சிலேஷ்மவாதக்ஷயம், சிலேஷ்மபித்தக்ஷயம், சுட்டக்ஷயம், சூலைக்ஷயம், ராஜயக்ஷ்மக்ஷயம், விவர்ணக்ஷயம், மந்தாக்கினிக்ஷயம், வாந்திக்ஷயம், ஏப்பக்ஷயம், சோலைக்ஷயம், மூர்ச்சைக்ஷயம், எரிச்சல்க்ஷயம், விக்கல்க்ஷயம், அரோசகக்ஷயம், பாண்டுக்ஷயம் என்று இருபது விதங்களாக எழுதப்பட்டிருக்கின்றது.

குரற்கம்மல் நோய்

இது இரு வகைப்படும். அவையாவன :—

1. வாதக் குரற்கம்மல்:—தொண்டையில் உள்ளீரம் வரண்டு சுட்டு முட்சொருகுதல்போல் சோய், வழுவழுத்த பதார்த்தத்திலும், உஷ்ண பதார்த்தத்திலும் விருப்பம், கடுக்கலான தொனி என்னும் குணங்களுடையது.

2. பித்தக் குரற்கம்மல்:—குரல்வளையிலும் நாழ்வாய்த்தாளிலும் எரிச்சலுடன் வாட்டல், பேசமுடியாமை, கம்மியபேச்சு என்னும் குணங்களுடையது.

3. சிலேத்துமக் குரற்கம்மல்:—குரல்வளைக்குள் கோழை பூசினதுபோல் இருத்தல், குறுகுறுவென்ற அற்பசத்தம், கம்மலான வார்த்தை எனனும் குணங்களுடையது.

4. திரிதோஷக் குரற்கம்மல்:—குரல்வளையை இறுக்கிப் பிடிப்பதுபோலிருத்தல், மூன்றுதோஷ குரற்கம்மல்களுக் குண்டான குணங்கள், கீச்சுக்குரல், தொனியை மறிப்பதுப்போல் தோற்றல் என்னும் குணங்களுடையது.

5. க்ஷயக் குரற்கம்மல்:—குரல்வளையில் புகை கம்மிக்கொண்டதுபோலிருத்தல், குரற்கம்மல் என்னும் குணங்களுடையது.

6. மேதோக் குரற்கம்மல்:—குரல்வளையில் வழுவழுப்புடன் சிலேத்தும குரற்கம்மல் குணங்களுடையது.

குரற்கம்மல்நோய் சாத்தியா சாத்தியங்கள்:—வாத, பித்த, சிலேஷ்ம, க்ஷயரோக குரற்கம்மல்கள் சாத்தியம். திரிதோஷ, மேதோகுரற்கம்மல்கள் அசாத்தியம்.

அரோசகம்

அரோசகமானது ஐவகைப்படும். அவையாவன:—வாத அரோசகமானது வாயைத் துவர்ப்பாக்கி ஓக்காளம் உண்டுபண்ணும். பித்த அரோசகம் எட்டிக்கொட்டையைப்போல் கசப்பாக்கி கசப்பான ஓக்காளம் வருவதுபோல் செய்யும். சிலேத்தும அரோசகமானது வாயில் இனிப்பையுண்டாக்கி இனிப்பான ஓக்காளம் வரும்படி செய்யும். சன்னிபாத அரோசகமானது வாயையும், வாயில் ஊறும் சலத்தையும் எனைய ருசிகளாகவும், ஒருவேளை ருசிகள் ஒன்றும் தெரியாமலும், அவ்வாறே ஓக்காளம் வருவதுபோலுமிருக்கும் தக்க அரோசகம், வாயில் கோழையான சலத்தை மாறுமல் வெளியில் தள்ளும்.

வாந்தி நோய்

வாயில் நீர் ஊறல், அரோசகம், தக்கம், வாயிலுப்புக்கரித்தல் என்னும் குணங்களை பெற்றிருக்கும். இதற்கு சர்த்திரோகமென்றும் வமனரோகமென்றும் பெயர். இது ஆறவகைப்படும். அவையாவன:—

1. வாத வாந்தி:—வாய்வானல், மார்புநோய், தலைநோய், குரற்கம்மல், இருமல், இளைப்பு, கண்டத்தில் வேதனையுடன் சத்தம், கறுத்த சலமாகவும், கல்லைலமாகவும், வாந்தி என்னும் குணங்களுடையது.

2. பித்த வாந்தி:—உப்புநீராகவும், புகையிற சலமாகவும், பச்சைநிறமாகவும் மஞ்சள் ரத்தத்தோடு புளிப்பாகவும், காரமாகவும், சுடுகையாகவும் வாந்தி, தாகம், தேக எரிச்சல், தலைசுழல், மூர்ச்சை என்னும் குணங்களுடையது.

3. சிலேத்தும வாந்தி:—வழுவழுப்பாகவும், தடிப்பாகவும், கோழையாகவும், தூலிப்போல் கொடிகொடியாகவும் வாந்தி, ரோமச் சிலிர்ப்பு, முகத்தில் கொஞ்சம் அதப்பு, சோர்வு, வாயில் இனிப்பு, மார்பு தடிக்கல், இருமல் என்னும் குணங்களுடையது.

4. திரிதோஷ வாந்தி:—மார்பிலும், கண்டத்திலும், தலையிலும் சோய், இருப்பக்கத்திலும், இவை, கண் பிதுங்குவதுபோலிருத்தல் சர்வாங்கத்திலும் எரிச்சல், அதிக தாகம், பிரமை, மூர்ச்சை, நடுக்கல் என்னும் குணங்களுடையது. இது அசாத்தியம்.

5. திருஷ்டி வாந்தி:—இந்த வாந்தியில் அதிக, அற்சாற்றம் இருக்கும். இதற்கு கண்ணேறு வாந்தியென்று பெயர்.

6. கிருமி வாந்தி:—வாந்தியில் கிருமிகள் விழும். வயிறுநோய், தேகம் நடுக்கல், மார்புநோய் என்னும் குணங்களுடையது.

வாந்தி நோயில் சாத்தியா சாத்தியம்:—பலமாகவும், ரத்தமாகவும், சீழாகவும் மலமூத்திர சாற்றமாகவும், ரத்தபுள்ளிகளிறுப்பதாகவும் வாந்தியாகுதல், இருமல், இளைப்பு, திரிதோஷவாந்தியின் குணங்கள் காணல் என்னும் குணங்களுடையது அசாத்தியம் மற்றவைகள் சாத்தியம்.

மார்பு நோய்

இந்த நோயானது ஐவகைப்படும். இதற்கு இருதயரோகமென்றும் நமர்வாதமென்றும் பெயர்கள் உண்டு. இதை ருதயிவாதமென்றும் கூறுவர்.

1. வாத மார்புநோய்:—மார்பில் குத்தல், அதிர்தல், மார்பின் உட்புறம் வறட்சியாகவும் காரியாகவும் இருப்பது போன்ற உணர்ச்சி, அதைரியம், தர்பலம், பயம், புளல், பேச்சில் அசங்கி தம், சரீரம் நடுக்கல், மூச்சுபிடிப்பு, நிறைலான மூச்சு, அற்பநித்திரை என்னும் குணங்களுடையது.

பித்த மார்பு நோய்:—மார்பெரிச்சல், தாகம், மனதிற் பிரமை, மூர்ச்சை, வியர்வை, புளி யேப்பம், வாந்தி, சுரம், எந்தபதார்த்தத்தை யும் புசிக்கவேண்டு மென்கிற இச்சை என்னும் குணங்களுடையது.

3. சிலேஷ்ம மார்புநோய்:—மார்பை கெட்டியாக மூச்சுபிடித்ததுபோல் ஸ்தம்பமாக்கி பிடித்தல், பாராங்கல்லை வைத்ததுப்போலிருத்தல், இருமல், மந்தாக்கினி, வாயிற் கோழைபெருகல், நித்திரை, சோம்பல், அரோசகம், சுரம் என்னும் குணங்களுடையது.

திரிதோஷ மார்பு நோய்:—மார்பில் கட்டியால் குத்துதல்போல் ஓடி ஓடி குத்தல், பிளப்பதுப்போலிருத்தல், எரிச்சல், கனத்தல், அழுகை, பிரமை, தாகம், சுரம், முதலியவற்றுடன் வாதாதி மூன்று மார்பு நோய்களின் தர்குணங்களையும் ஒரேகாலத்தில் உண்டாக்கும். இது கஷ்டசாத்தியம்.

5. கிருமி மார்பு நோய்:—கிருமிகள் இருதயஸ்தானத்திற்கு மேல் எதிர்த்தேறுவதினால் மார்பில் துடிதுடித்தலுடன் அதால், விக்கம், அதிகவேமச்சல், தெரித்து விழுவதுபோலும், வாளா மறுப்பது போலும் இருத்தல், கண்கள் கறுப்பாக தோற்றல், இருட்டிக்கொள்ளல், கோழைவிழுதல் என்னும் குணங்களுடையது. இந்த ரோகமானது சுவாசம் வரும் மார்க்கத்தையுடைத்து அகாலமரணத்தையும் உண்டாக்கும். அதிகினைவில் கிருமிகள் விழும்படியாக சுப்புள்ள விரேசனங்கள் கொடுக்கவேண்டும்.

சாத்தியா சாத்தியங்கள்:—வாத பித்த லேஷ்மத மார்புநோய்கள் சாத்தியம் திரிதோஷமார்புநோய் கஷ்டசாத்தியம். கிருமி மார்பு நோய் அசாத்தியம்.

தாக நோய்

தாகநோயின் இலக்கணம்:—இந்த ரோகமானது மனதுக்கு பிரமையுண்டாக்குதல், நடுக்கல், தேகத்தில் எரிச்சலோடு கர்வை, சோர்வு, தாகம, காண்மூலத்திலும் கண்டத்துக்குள்ளிலும், நாடையிலும், இருக்கின்ற ரோம்புகள் உலர்ல், எவ்வளவு சலம அருந்தினலும் பூர்த்தியடையாமை, அன்னத்துவேஷம், குரற்கம்மல், இளைப்பு, பிரலாபம், மனக்கெடுதி, மலம்மூகல் என்னும் குணங்களை பெற்றிருக்கும்.

1. வாததாகம்:—அதரியம், இளைப்பு, தலைநோய், அரோசகம், காதமந்தம், நித்திரையும் பலமுக்குன்றல், தாகமதிகரித்தல், என்னும் குணங்களுடையது.

2. பித்ததாகம்:—மூர்ச்சை, வாய்கசப்பு, கண்கள்வெப்பு, மிகவும் தாவறனல், வாயில் புகைனழல் என்னுங்குணங்களுடையது.

3. லேஷ்மதாகம்:—நெஞ்சில் முட்சொருகுதல், நித்திரை, வாயினிப்பு, வயிறுப்பிசம். தலை, தேகம் மரத்தல், வாந்தி, அரோசகம், சோம்பல், அரோசகாதி என்னுங்குணங்களுடையது.

4. திரிதோஷதாகம்:—வாதாதி தாகரோக குணங்களெல்லாமுடையது.

5. ரஸக்ஷயதாகம்:—சர்குடலால், மதிபிரமை, தேகநடுக்கல், இளைப்பு, எந்த காரத்திலும அசக்திம என்னுங் குணங்களுடையது.

6. உபசர்க்கதாகம்:—இளைப்பு, உப்பு முதலிய வஸ்துக்களை பிரமாணத்தப்பி சாப்பிடுங் காலத்திலும், கனத்த காலத்திலும், சோர்வு அடையுங்காலத்திலும், தாபச்சுர காலத்திலும், தொந்தரவாக பற்றிய ரோகங்களின் விஷமகாலத்திலும் இத்தாகரோகம் பிறக்கும்.

தாகநோயில் சாத்தியாசாத்தியம்:—அறிவழிந்த காலத்திலும், சுவாசனது பயன்படாமல் ரோகத்தால் வெளியில் தீண்டிவிட்ட காலத்திலும், வாய்க்குள் உண்டான ரோகத்தால் தொண்டைக்குள் சலமிறங்காத காலத்திலும் தாகரோக முண்டானல் அசாத்தியம்.

மதாத்திய நோய்

சுக்கிலம், காமசலம், பலம், தொழுப்பு, முதலியவைகளுக்கு மதம் என்ற பெயர். இதனை ரசம் பண்ணுங்கால் மதாத்தியரோகமுண்டாகும். அப்பொழுது சோருதல், சாணிதமான மலம் மூழுதல், இடைவிடாததாகம், உஷ்ணசுரம், சிதாரம், அரோசகம், மார்பிலும், சிரசிலும், தோட்களிலும், விலாப்பக்கங்களிலும், மர்மஸ்தானங்களிலும், தொண்டையிலும் அதிக நோய், நடுக்கல், கல் அடைத்துக் கொண்டதுப்போல் மார்பில் அடைப்பு, கண்களில் இருட்கம்மல், இருமல், இளைப்பு, நித்திரை பங்கம், விபரீவை, ஒருவேளை மலபந்தம், விக்கம், சித்தப்பிரமை, பிரலாபம், வாந்தி, மார்பிற் சங்கடம், மயக்கம், தர்ச்சோர்ப்பனம் என்னுங் குணங்களுடையது.

இந்த ரோகமானது வாதாதிதோஷங்களை அநுசரித்து தான்கு பேதங்களாய் பிருக்கிறது. மேற்கூறிய குணங்களை தோஷத்திற்கு தக்கவாறு அடைந்திருக்கும்.

தும்மிசகவிக்ஷய ரோகம்

தான்தோறுஞ் சாதாரண பழக்கமாய் புகிப்பவைகளைவிட்டு சாரபத்தை, இடைவிடாத அதிகமாய் அருந்துபவர்களுக்கு தும்மிசகம், விக்ஷயமென்னும் இரண்டு வகையியாதிகள் உண்டாகும்.

1. தும்மிசக ரோகம்:—வாயினல் கோழை கோழையாக கக்கல், வார்த்தை கேட்க அசங்கிதப்படுதல், நெஞ்சலால், அதிக நித்திரை, சோம்பல் என்னுங் குணங்களையுடையது. இது தேகத்தை சிக்கிரம் நாசப்படுத்துவதனல் தும்மிசரோகம் எனப் பெயர் பெற்றது.

2. விக்ஷய ரோகம்:—தேகம், சிரசு, மார்பு ஆகிய விடங்களில் அதிகநோய், கண்டத்தை நெருக்கிப்பிடித்ததுப் போலிருத்தல், சோர்வு, இருமல், தாகம், வாந்தி, சுரம் என்னுங் குணங்களையுடையது.

மதரோகம்

மதத்தையுண்டாக்குவது மதரோகம் எனப்படும். இது எழு வகைப்படும். அவையாவன:—

1. வாதமதம்:—சனத்தொனி, இடைவிடாத வார்த்தை, ஒன்றிருக்க வொன்று செய்கின்ற கெட்ட சுபாவத்தை, தேகத்தில் கறுத்த நிறம் அல்லது வெளுத்தநிறம் என்னும் குணங்களுடையது.

2. பித்தமதம்:—தேகமானது மஞ்சள் அல்லது சிகப்புநிறமாக பேதிக்குதல், கோபம், கலகப்பிரியம் என்னும் குணங்களுடையது

3. சிலேஷ்மமதம்:—நியானம் செய்பவர்போலிருத்தல், ஒன்றுக்கொன்று சம்மதமின்றி அதிகவினாவாக பேசுகின்ற வார்த்தை, தேகம் வெளுத்தல் என்னும் குணங்களுடையது.

4. சந்நிபாதமதம்:—வாதாதி முதலான மூன்றுமத ரோகங்களின் குணங்கள் ஏககாலத்தில் உண்டாகும். இது அசாத்தியம்.

5. ரத்தமதம்:—தேகமும் கண்ணும் மாத்திரமுடன் பித்தமத ரோககுணங்களே யுண்டாயிருக்கும்.

6. மத்தியபானமதம்:—சரீரத்தில் பலவிதமெடுத்தி, முகத்தில் ஒளி வீசுதல், தொனி கெடல், எவர்களிடத்திலும் பிரசை என்னும் குணங்களையுடையது.

7. விஷமதம்:—மேற்கூறிய மதகுணங்களைவிட அதிகமான தற்குணங்களையுடையது. கடுக்கல், மிருதுத்தினையுடையது.

இவ்வேழு மதரோகங்களிலும் ரத்தபித்த ரோகங்களின் குணங்கள் எல்லாம் உண்டாயிருக்கும்.

மூர்ச்சை நோய்

மூர்ச்சைரோகமானது ஐவகைப்படும். அவையாவன:—

1. வாதமூர்ச்சை:—ஆகாயத்தைப்பார்த்தால் கருப்புவர்ணம், சிகப்புவர்ணம், நீலவர்ணம்போல் தோற்றி மூர்ச்சை யுண்டாகி உடனே தெளியும், இதனால் மார்புநோய், கடுக்கல், பிரமை என்னும் குணங்களுண்டாகி தேகம் இளைக்கும். அப்போது சரீரம் கறுத்த அல்லது சிவந்து இருக்கும்.

2. பித்தமூர்ச்சை:—ஆகாயத்தைப்பார்த்தால் மஞ்சள் வர்ணமாயும், சிகப்புவர்ணமாயும தோற்றப்பட்டு மூர்ச்சையையுண்டாகி உடனே தெளியும். பின்பு இதனால் தேக எரிச்சல், காய்கை, தாகம், வியர்வை, தண்டுதண்டாக மலம் கழுதல், தேகம் மஞ்சள் வர்ணம் அல்லது கறுப்புவர்ணம், இரண்டு கண்களும் கலங்கி மஞ்சள் அல்லது சிகப்புவர்ணம் என்னும் குணங்களுடையது.

3. சிலேஷ்ம மூர்ச்சை:—ஆகாயத்தைப் பார்த்தால் மேகங்கள் கம்மினற்போல் தோற்றப்பட்டு மூர்ச்சையுண்டாகி நெடுநேரம் பொறுத்து தெளியும். இதனால் மார்பதில், வாயில் சலம் வடிதல், அவயவங்களெல்லாம் அசைக்கக்கூடாமையாக ஸ்தம்பித்து நடுத்த சரு

மத்தைப் போர்த்திக்கொண்டதுபோல் சரீரம் கனத்திருக்குதல் என்னும் குணங்களுடையது.

4. திரிதோஷமூர்ச்சை:—மேற்கூறிய வாதாதிமூர்ச்சா ரோக குணங்களெல்லாமுடையதும், கோரசேட்டையுண்டாகி அபஸ்மார ரோகத்தைப்போல் உணர்ச்சி யிழந்து மூர்ச்சை யுண்டாகும்.

5. சந்நிபாதி மூர்ச்சை:—திரிதோஷங்கள் பிராணஸ்தானங்களில் அதிகரித்து சந்நிபாதமாகி மனம் வாக்கு காயம் என்கிற திரிகரணங்களின் செய்கைகளை அடக்கிவிட்டு தானும் அடங்கி சந்நிபாதி ரோகத்தை உண்டாக்கும். அப்போது இந்த ரோகி வெட்டிமுறித்த மரத்தைப்போல் விழுவான். உயிரிருந்தாலும் உயிரில்லாததுபோல் சவத்தைப்போல் கிடந்து இறந்துவிடுவான்.

மூல நோய்

ஆசனவாயில்களில் கிழங்கு முளைகளைப்போலும், வேர்களைப்போலும், மாமிசமுளைகளைப் பெற்றிருக்கும் காரணத்தினால் மூல ரோகமென பெயர் பெற்றது. இந்த ரோகம் தாய் தந்தையர் வழியாகவும், காய்கை வஸ்துக்கள் கடின வஸ்துக்கள் பித்தவாதப் பொருட்கள் முதலியவைகளாலும் உண்டாகும். இந்த ரோகம் அக்கினி மந்தம், மலபந்தம், அடிக்கடி சலதியிலும், கனங்கால் கண்டபோ சலதியிலும், அதிக சோய், சூயாசம், உடம்பினைத்தல், கண்அதப்பு, பேதி அல்லது மலக்கட்டு, ஆசனத்தில் சோய், அபானவாயு பரிதல், எப்பம், சிலவேளை புளியேப்பம், சீறிறங்கல், சொற்ப மலம் கழுவல், எந்தகாரியத்திலும் புத்தி செல்லாமை, சிரை, முதுகு, மார்பு என்னும் இடங்களில் குத்தல், சோம்பல், கோபம் என்னும் குணங்களுடையது.

1. வாத மூலம்:—முளைகள் உலர்ந்தும், வாடியும், சிவந்தும், கறுத்தும், மேடுபள்ளமாகவும், கடினமாகவும், சொருங்கியும், கூர்மையாகவும் இருக்கும்.

2. பித்த மூலம்:—முளைகள் சிவந்த நிறமாகவும், மஞ்சள் நிறமாகவும், கரும்பாகவும், வெண்மையாகவும், கறுத்தமெல்லியதாகவும், கொஞ்சம் ரத்தத்துடன் கூர்க்கமாகவும், கொஞ்சம் மிருதுவாகவும், அசையப்படுவதாகவு மிருக்கும். அம்முளைகள் மாமிசகண்டம் அட்டைமுகம் இவைகளையொத்திருக்கும். தாகம், சிரணம், சுரம், வியர்வை, உதடுலர்தல், மூர்ச்சை, அரோசகம், என்னும் குணங்களுடையது.

3. சிலேஷ்ம மூலம்:—முளைகள் பெருத்து ஆழ்ந்தவேறள்ளதாகவும், மினுமினுப்பாகவும், வட்டமாகவும், கனத்ததாகவும், எண்ணிக்கையாகவும், நீங்காத வழுவழுப்புள்ளதாகவும், அற்பசோய், சீலைச்சில், சொறி, அம்முளைகள் மூங்கில்முளை, பலாபிஞ்சு,

னலும்பு, நிராகூப்பழம், இலைகளை பொத்திருக்கும். இந்த ரோகிக்கு இரண்டு கவுட்டியிலும், உப்பன், குதல்தானத்திலும், அடிவயிற்றிலும், தொப்புளிலும், அறப்பதுபோல்நோய், இருமல், இளைப்பு, தலைநோய், குளிர்சுரம், விக்குஷ்டம், பினிசம், சோர்வு, ஒழுக்குமூத்திரம், அஜீரணம், வாந்தி முதலிய குணங்களும் எற்படும்.

4. தொந்த மூலம்:—முன்னதும், வாத, பித்த சிலேத்தும மூல குணங்களின் தொந்தமும் காணும்.

5. திரிதோஷ மூலம்:—மேற்கூறிய திரிதோஷமூல குணங்கள் யாவையும் பெற்றிருக்கும்.

6. இரத்த மூலம்:—இரத்தம்கெடுவதால் ரத்தமூலமெனப்படும்

இதனில், வாதபித்த, வாதசிலேத்தும, பித்தசிலேத்தும மூலங்கள் திரிதோஷ தொந்தத்தால் உண்டாயிருக்கின்றன.

மேலும் முளைகள் இருக்கும் இடங்களை அனுசரித்து பலவாரான பெயர்களால் வழங்கிவருகின்றன. அவைகளாவன:—

மூலரோகமுளைகள் உள்ளிருந்தால் உள்மூலமென்றபெயர்.

முளைகள்வெளிப்பட்டிருந்தால் வெளிமூலமென்றபெயர்.

முளைகள் சென்டுபோலிருந்தால் சென்டுமூலமென்றபெயர்.

முளைகளோடு சிழ்வடிந்தால் சிழ்மூலமென்றபெயர்.

முளைகளோடு ரத்தங்கசிந்தால் ரத்தமூலமென்றபெயர்.

முளைகளோடு சலம்கசிந்தால் சலமூலமென்றபெயர்.

முளைகள் ஞிப்போல்கடினமாகயிருந்தால் ஞிமூலமென்றபெயர்.

முளைகள் கிரந்தியுடனிருந்தால் கிரந்திமூலமென்றபெயர்.

மூல நோயின் சாத்தியாசாத்தியங்கள்:—குதல்தானத்துக்குள் அடிவயிறம், நடுவயிறம், மேல்வயிறம், என மூன்று வயிறங்கள் இருக்கின்றன. அடிவயிறத்தில் திரிதோஷங்களால் முளைகள் உண்டானால் அசாத்தியம். நடுவயிறத்தில் தொந்த தோஷத்தினால் முளைகள் உண்டாகில் சாத்தியமாவதற்பாலாகி வருடந்தோறும் கண்டு மறைவதாயிருக்கும். மேல்வயிறத்தில் ஒவ்வொரு தோஷத்தினால் உண்டான முளைகளும் அதிசிக்கிரத்தில் சாத்தியமாகும்.

அசாத்திய மூலரோகம்:—எந்த மூலரோகமும், கை, கால், காபி, ஆசனம், பிறம், முகம் என்னும் இடங்களில் விக்கம் உண்டானால் மரணம் வாய்க்கும, என்று அறியவும்.

அதிசாரம்

சோயால் இளைத்த மிருகமாமிசம், கெட்டுலர்ந்த மாமிசம், கன்முக வேகாத பதார்த்தங்கள், புண்ணாக்கு முதலிய மத்த வஸ்துக்கள், கள்ளு சாராயம் குடித்தல், காலஸ்தி, வயிற்றில் இருமி இளைவு, அபானவாயு, தும்மல், மலம், மூத்திரம், கொட்டாவி, பசி, தாகம், இருமல், நித்திரை, கண்ணீர், சுக்கிலம், சுவாசம், வாந்தி, இளைப்பு என்னும் பதினாலு வேகங்களை படக்குதல், இவைகளால் வாய்வு அதிகரித்த சப்தாதாக்கினியையும் உதராக்கினியையும் கெடுத்த மலப்பையிற் சேர்ந்துக்கொண்டு கெட்டியாயிருக்கிற மலத்தை சலமாகக்கறைத்து அபான வாயுவின் வழியாய் ஒழுகப் பண்ணும். இது மார்பு, குதம், வயிறு இவ்விடங்களில் சோதல், உடம்பு இளைத்தல், அசீரணம் எனனும் குணங்களுடையது.

1. வாதாதிசாரம்:—இளைச்சலையும் சோலையும் உண்டாக்கி பேதியாகி துறையோடு கண்டுகண்டாக மலம்விழுதல், பசையற்றி ஆசனம் காய்ந்ததுப்போல் தோற்றல், கத்தியால் அறுபட்டது போல் நோய், கொஞ்சஞ் சீதம்சுற்றிக் கொண்டதாய் மலம்விழுதல், வயிற்றில் பொருமலுடன் நோய், சூலை, அடிவயிற்றில் பிடுங்கல், சிலவேளை மஞ்சளாயும் கறப்பாயும் வெளுப்பாயும் தர்க்கந்தடன் பேதியாகுதல், புளியேப்பம், வாந்தி என்னும் குணங்களுடையது.

2. பித்தாதிசாரம்:—மலமானது பல நிறத்துடன் தர்க்கந்தடன் வயிற்றிலும் ஆசனத்திலும் சோலையுண்டாக்கி அசீரணத்துடன் இளகி பேதியாகுதல், தாகம், மூர்ச்சை, விபர்வை, எரிச்சல் என்னுங்குணங்களை யுண்டாக்கும்.

3. சிலேத்துமாதிசாரம்:—மலமானது தடித்ததாகவும், எண்ணெலத்ததாகவும், நூல்போல் கொடிகொடியாகவும், அதிக வெண்மையாகவும், மினுமினுப்பாகவும், அசீரணப்பட்டதாகவும், பொறுத்து பொறுத்து வருவதாகவும், தர்க்கந்தமாகவும், ஆசனத்தில் மிகுந்த பிசுபிசுப்புண்டாக்கி பேதியாகுதல், அதிக நித்திரை, சோம்பல், பலஹீனமுண்டாக்கி பேதியாகுதல், அதிக நித்திரை, சோம்பல், அன்னத்துவேஷம், ஆசனத்திலும், அடிவயிற்றிலும் மேல்வயிற்றிலும் கனத்தல், கபாதிக்கம், தும்மல், நீரடைத்தல் என்னுங் குணங்களுடையது.

4. திரிதோஷ அதிசாரம்:—வாதாதி மூன்று தோஷங்களில் உண்டாகிற உபத்திரவங்கள் உண்டாகுதல். சன்னிபாத சுரலக்ஷணம் அடைந்திருக்கும்.

5. பயாதிசாரம்:—சலஞ்சலமாக பேதியுண்டாகும். திரிதோஷ குணங்களைப் பெற்றிருக்கும். இது பயத்தினால் எற்படுவதாம்.

6. துக்காதிசாரம்:—துக்கத்தினால் உண்டாகும் பேதிக்கு துக்காதிசாரம் என்ற பெயர். இதுவும் மேற்கூறிய குணங்களையே பெற்றிருக்கும்.

7. மந்தாதிசாரம்:—செரியாமல் பேதியாவது மந்தாதிசாரம். இச்சோய் மந்தத்துடன் தர்க்கரமாக பேதியாதல், வயிற்றில்சோய், வாயில் சோறல் என்னும் குணங்களையுடையது. இதை அசீரண பேதி என்றும் கூறுவர்.

8. ரத்தாதிசாரம்:—ரத்தத்துடன் கலந்து பேதியாதல் ரத்தாதிசாரமெனப்படும். இது தாகம், வயிற்றுசோய், சூசனம் வெளிப்படுதல், சீர் எரிச்சல் என்னும் குணங்களுடையது.

கிரகணி

அதிசார சோகத்தைபோலவே ஜீரணஜீரண காலங்களிலும், சுபாவ மலமாகவும், சேஷ்மலந்த மலமாகவும், செரித்தாகவும், செரியாதாகவும், சரணமில்லாமல் கட்டுப்பட்டதாகவும், சளுனித நிற மாகவும், அடிக்கடி விசேஷ மலமாகவும் பேதியாகும். இதற்கு கிரானி அல்லது கிரகணியென்ற பெயர். மலமாக பேதியாகில் கழிச்சலென்றும், சேமமாக பேதியாகில் சேஷகழிச்சலென்றும், ரத்த மாக பேதியாகில் ரத்தகழிச்சலென்றும், சலமாக பேதியாகில் சல கழிச்சலென்றும் பெயர். மேலும் இந்த சோகத்தில் உடம்பு இளைத்தல், தொண்டையில் புகை கம்மியதுபோலிருத்தல், மயக்கம், சுரம், மூர்ச்சை, தலைசோய், மலபந்தம், கைகால்வீக்கம் என்னும் குணங் களைய் காணும். இந்த கிரகணிசோகம், வாதகிரகணி, பித்தகிரகணி, சிலேத்தமகிரகணி, திரிதோஷகிரகணி என சான்கு வகைப்படும். இதனைய செ வகுத்திய நூல்களில் உஷ்ணவாயுகிரகணி, அந்தரவாயு கிரகணி, மூலவாயுகிரகணி, குன்மகிரகணி, கருப்பகிரகணி, ஒட்டு கிரகணி, சங்கரகிரகணி என எழுவகை கிரானிகள் காணப்படு கிறது. அவையாவன :—

1. உஷ்ணவாயு கிரகணி:—வயிற்றில் கனத்துடன் உப்பிசம், இரைச்சல், கைகால் அசதி, தேகங்கருகி மெலிதல், பேதி என்னும் குணங்களுடையது.

2. அந்தரவாயு கிரகணி:—புசித்தவுடன் பேதியாதல், இரைச் சல், அசதி, தாகம், தளர்ச்சி, விலாவில் இசிவு, சீர் வெளிதல், விக் கல் என்னும் குணங்களுடையது.

3. மூலவாயு கிரகணி:—இரைச்சலுடன் வயிற்றைப் புரட்டல், அடிவயிறு பொருமல், மலம் வாளல், மந்தம், அடித்தடையில் குத் தல், சீர்ம தளர்தல், குதத்திலும் கண்ணிலும் முள்போல் காணல் என்னும் குணங்களுடையது.

4. குன்ம கிரகணி:—வயிற்றில்குத்தல், அதிக உறக்கம், விபர் லை, தலைசுக்கல், தேகளரிச்சல், உழலை, வயிறுபொருமி இளைத்து பேதியாதல், ஒருபக்கத்தில் இரைச்சல் என்னும் குணங்களுடையது.

5. கருப்பக்கிரகணி:—பேதி, கடுப்பு, கைகால்வலற்றல், ஓச்சல், கண்ணில் மஞ்சள்நிறம், பலவித கழிச்சல், அதிக தாகம், சாப்பிட் டால் வாந்தியாதல் என்னும் குணங்களுடையது.

6. ஒட்டுக் கிரகணி:— படுக்கையே இலவாகத் தோற்றல், இளைப்பு, வயிற்றில் அதிசோய், மார்பிலும், விலாவிலும் முதுகிலும் வலித்தல், மலமானது ஒரேதடவையில் இறங்காமல் தட்டிதட்டி யாக இறங்கல். தொப்புள் வலியம்போல் சுருங்கல் என்னும் குணங்களுடையது.

7. சங்கர கிரகணி:—வயிறு பொருமல், செரியாத கழிச்சல், அபானத்தில் கடுகையுடன் எரிசோமும் சேர்தல், சிறுநீர்வலி, உக் கிரமான சுரம், மனக்கெடுதி, நெஞ்சிற் கபதிக்கம், இரு கண்களும் சரிதல் என்னும் குணங்களுடையது

கிரகணியில் சாத்தியா சாத்தியம்:—வாதகிரகணி, பித்தகிரகணி, உஷ்ணவாயுகிரகணி, அந்தரவாயுகிரகணி, மூலவாயு கிரகணி, கருப்ப கிரகணி, ஒட்டுகிரகணி இவைகள் சாத்தியம். மற்றவைகள் அசாத் தியம்.

அலசரோகம் (மந்தம்)

இது மூன்று வகைப்படும். அவையாவன:—

1. ஆமாலசகரோக லக்ஷணம்:—பிரமாணம் தப்பி மென் மேலும் புசிக்கும் மனிதனுக்கு புசித்த அன்னமானது வாந்தியாகாம லும், பேதியாகாமலும், ஜீரணிக்காமலும் ஆமமாகிய விஷேஷத்தில் பிசறிக்கொண்டு மிகுவேதனையை யுண்டாக்கும்.

2. தண்டாலசகரோக லக்ஷணம்:—திரிதோஷமானது மிகவும் அதிகரித்து ஜீரணபாகமிருக்கும் அன்னத்தைக்கொண்டு சரம்பு களுக்கு பிகுவேற்றி சமபுகளை குறுக்காக பற்றி தண்டகளை சுற்றி இறுக்குவதுப்போல் இறுகி சரீரத்தை தண்டத்தைப் போலவே நீக்கிவிடும். இது அதிசீக்கிரத்தில் கொல்லும்.

3. விஷாலசகரோக லக்ஷணம்:—அபக்குவமான அன்னத்தை புசிப்பதால் அஜீரணப்பட்டு மந்தமேற்படும். இதில் விஷகுணங் களோப்போல் மகா கோரங்களுண்டாகி முடிவில் மரணத்தை யுண்டாக்கும்.

விஷூசிகா நோய்

வயிற்றில் இரைச்சல், மடைதிறந்ததுபோல் சுத்தலமானபேதி, தொண்டையறலல், அதிதாகம், பிசுபிசுப்பான வியர்வை, கடுக்கல், கண்ணுழிவிழுதல், சரீரநிறமாறல், நாடிதொனி என்னும் குணங்க

ருடையது. விஷ-மெ என்ருல்-பேதி. இது மூன்றவிதப்படும். அவை பாவன:—

1. வாதவிஷ-மெ:—வயிற்றப்பொருமல், பேதி, பிரமை, நடுக்கல், தேகம் மறத்தல், ஊசியினல் குத்துவதுப்போல் குத்தல், வயிற்றிரைச்சல், தேகங்கறத்தல், விழித்திருந்தபடியே இருத்தல், குடல்குமுறலுடன் புரட்டல் என்னும் குணங்களுடையது.

2. பித்தவிஷ-மெ:—சுரம், பேதி, வயிற்றிரைச்சல், தாகம், கால்கைமரத்தல், சோம்பல், மூர்ச்சை, விக்கல், பிதற்றல், வாந்தி, மயக்கம், பிரலாபம் என்னும் குணங்களுடையது.

3. சிலேஷ்மவிஷ-மெ:—வாந்தி, சலம் சலமாகபேதி, தேகங்கனத்தல், தான்பிடிப்பு, உமிழ்நீர் உமிழ்தல், கையில் காடிகள் விரைவில் அடங்குதல், வலிப்பு, கடைகெடல், புரளல், மேல் சோக்கிய பார்வை என்னும் குணங்களுடையது.

அரிசல நோய்

இச்சோயானது முக்கியமாக உண்ணப்படும் உணவின் அளவு, பக்குவம், காலம் முதலிய வேறுபாட்டால் ஏற்படும். இது மூன்று வகைப்படும். அவைபாவன:—

1. வாதா சீரணம்:—மலபந்தம், வாந்தி, பிரமை, முகத்திலும் மார்பிலும் தர்க்கம் வீசுதல், தாகம், பிடை, என்னும் குணங்களுடையது.

2. பித்தா சீரணம்:—பேதி, வயிற்றில்சோய், அடிக்கடி வாந்திபாதல், கால்கைகளில் அயர்வு என்னும் குணங்களுடையது.

3. சிலேஷ்மா சீரணம்:—வாந்தி, பிரமை, முகத்தில்வியர்வை, சோளம், தேகம் மரம்போலிருத்தல் என்னுங்குணங்களுடையது.

மூத்திர நோய்

மூத்திர சோயானது முக்கியமாக கிரிச்சரம், அஸ்மரி என இருவகைப்படும்.

கிரிச்சரம்

கிரிச்சரோகம் என்பது வருத்தத்துடன் கொஞ்சங் கொஞ்சமாக மூத்திரத்தை விழச்செய்வது. இதனைச் சொட்டி மூத்திரமெனவும் வழங்கப்படும். இது மூன்று வகைப்படும்.

வாதகிரிச்சரம்:—கீழ் வயிற்றிலும், தொடைக்கவட்டிலும், ஆண்குறியிலும் சோலை புண்டாக்கி கொஞ்சங் கொஞ்சமாக நீரிறங்கச் செய்தல் என்னும் குணங்களுடையது.

பித்தகிரிச்சரம்:—நீர்தவாரத்தில் சோலையும் எரிச்சலையும் உண்டாக்கி மஞ்சள் நெய்பு நிறங்களாக சீல இறங்கச்செய்தல் என்னும் குணங்களுடையது.

சிலேத்துமகிரிச்சரம்:—அடிவயிற்றிலும், ஆண்குறியிலும் விக்கை புண்டாக்கி பிசினைப்போல வழவழத்த கட்டுப்பட்டதான நீர் இறங்கல் என்னும் குணங்களுடையது.

திரிதோஷகிரிச்சரம்:—மேற்கூறிய மூன்றவித தோஷங்களின் குணத்தை எகாலத்தில் உடையது. இது அசாத்தியம்.

அஸ்மரி

உள்புறமாக மூத்திரம் உலறுகிறதால் அஸ்மரிசோகம் உண்டாகும். கீழ்வயிற்றப்பிசம், நாபியின் சாலுபக்கங்களிலும் சோய், சீரானது கூட்டுமூத்திர வாசனையுடன் வருத்தத்துடன் இறங்கல், சுரம், அரோசகம் என்னும் குணங்களையுடையது. இதனை சீலைப்பு என்றும் கூறுவர். இது மூன்று வகைப்படும்.

வாதாஸ்மரி:—நீர் இறங்கும்போது வருத்தத்துடன் பற்கடித்தல், நடுக்கல், ஆண்குறியை கையால் தேய்த்தல், தொப்பூழ் பிசைதல், சதா அழுதல், சத்தத்துடன் மலம் சழுதல், மூத்திரம் தளிதளியாக கறுத்த நிறத்துடன் விழுதல் என்னும் குணங்களுடையது.

பித்தாஸ்மரி:—அடிவயிற்றில் இரைச்சல், வெப்பம், காங்கையுடன் ஆண்குறியின் முனையானது சோங்கொட்டை தோலைப்போலிருத்தல், நெய்பு மஞ்சள் வெண்மை நிறமான நீரிறங்கல் என்னும் குணங்களுடையது.

சிலேத்துமாஸ்மரி:—கீழ்வயிற்றில் அதிகசோய், கனத்தல், தேன் நிறமாகவும், வெண்மையாகவும் நீரிறங்குதல் என்னுங் குணங்களையுடையது.

சுக்கிலாஸ்மரி:—மூத்தில் விக்கம், கீழ்வயிற்றில் சோய், நீரானது வெகுசோம் பொறுத்த இறங்கல் என்னும் குணங்களுடையது. சுக்கிலாஸ்மரி சோகத்தில் உற்பத்தியாகியிருந்த விந்துவானது வாயுவினல், மணல், சிறுபயறு, கடலை, கண்டக்கரய், எனது வாயுவினல், மணல், சிறுபயறு, கடலை, கண்டக்கரய், பேரிச்சங்காய் பிரமாணங்களையொத்த கல்லுகளாக திரட்டப்பட்டு நீரோடு சேர்ந்து மூத்திரவழியாய் வெளியே தள்ளப்படும். வாய்வு சுபாவ வழியில் நடந்தால் நீருடன் கற்கள் விழுந்துக் கொண்டேயிருக்கும். வாய்வு தப்பிநடந்தால் பக்கசோய் உண்டாகி ஒரு துளிகூட நீரிறங்காமல் அதிக உபத்திரவங்களுண்டாகும். இதனை கல்லடைப்புசோகம் அல்லது சர்க்கராஸ்மரி சோகமென்றுங்கூறுவர்.

மேக நோய்

மதுமேகம், மச்சமேகம், வசாமேகம், அந்திமேகம் எனசான்கும் வாதத்தினல் உண்டாகும். மஞ்சிஷ்டிமேகம், சாரமேகம், அரித்திரமேகம், கீலமேகம், ரத்தமேகம், காளமேகம் என்னும் இவ்வாறும் பித்தத்தினல் பிறக்கும், பிஷ்டமேகம், இட்சுமேகம், சாந்திரமேகம், சௌரமேகம், வாளமேகம், சிதமேகம, சனிர்மேகம், சார

மேகம், சுக்கிலமேகம், சலமேகம் என்னும் பத்தும் கபத்தினல் உண்டாகும். இவைகளில் தோஷப்போல் பிறக்கப்பெற்று எமன் புசன் மொய்க்கிற மேகமூத்திரரோகங்களுக்கு தகுந்த சிகிச்சை உடனே செய்தல் வேண்டும். இது சரீரத்தில் வியர்வை, தர்க்கந்தம், தளர்ச்சி, சனத்தல், மார்பு, கண், காவு, காது இவ்விடங்களில் எரிச்சல், நமையிரும், சுரமும் விடாவில் வளர்தல், கண்ணும் நெஞ்சம் உலர்தல், தாகம், வாயினிப்பு, கைகால் எரிச்சல், ஆண்குறிநரம்பு, சுக்கிலசாரம் என்னும் குணங்களுடையது. இது இருபது வகைப்படும்.

1. வசாமேகம்:—மூத்திரமானது கொழுப்பை கலந்தது போலும், சுத்த கொழுப்புப் போலும், மிளகாசனியுடனும், வேளைக்கொருதரம் அளவு இறங்கும். காய்ச்சினலும் அவ்வாசனையே வீசும். இது நிறத்திலும், சுற்றத்திலும், வசம்பைப்போலிருப்பதால் வசாமேக மெனப்பட்டது.

2. மச்சாமேகம்:—மூத்திரமானது மாமிசநிறமாகவும், கோர் வலர்ந்ததுபோலவும், அடிக்கடி இறங்குவதுடன், அது உறைந்த இடத்தில் பழம் பிழிந்ததுபோலும், மோரை ஊற்றினதுபோலும் நிறம் தோற்றப்படும். மச்சை என்பது - எலும்புக்குள் இருக்கும் மூளை.

3. அத்திமேகம்:—மூத்திரமானது பாலைமூத்திரத்தை ஒத்துத் தடைபடாமலும், ஒருவேளை தடைப்பட்டும் கலங்கியதுமாக இறங்கும். அத்தி என்பது-பாலை.

4. மதுமேகரோகம்:—மூத்திரமானது தடித்து ஈ, எறும்பு மொய்ப்பதாய் தேனுக்குள்ளநிறம, வாசனை, ருசி, கனம் என்னும் இவைகளைப்பெற்று காய்ச்சினல் பாகாகுவதாய் பசைமிறமாயும், மஞ்சள் நிறமாயும், நிறத்திலும், கோசத்திலும் தடுத்தலுடன் அடிக்கடி நீர் இறங்கும். அதை பிடித்துப்பார்த்தால் அடியில் வெண்மை பற்றும், இது தேகத்தில் சப்த தாதுக்களையும் உருக்கி மதுரத்தை உண்டாக்கி வருதலால் மதுமேகம் என்று பேர்பெற்றது.

மேற்கூறிய ஈரும் வாயுவினல் உண்டானது.

1. சாரமேகம்:—மூத்திரமானது அதிக உப்பாக இறங்கும். கையால் தொட்டுப்பார்க்கில் உப்புக்குள்ள கனவு இருப்பதுமன்றி இது உறைந்த இடங்களில் உவர்மண் எண்ணெய்பு இலைகளின் நிறமாகத் தோன்றும். சாரம் என்பது-உப்பு.

2. நீலமேகம்:—மூத்திரமானது நீலநிறமாய் இறங்கும்.

3. காளமேகம்:—மூத்திரமானது கறுப்பாய் இறங்கும். காளம் என்பது-கறுப்பு.

4. அரித்ராமேகம்:—மூத்திரமானது மஞ்சள்நிறமாயும், நீர் சுறுக்குடனும், காரமாயும் இறங்கும். அரித்ரா என்பது-மஞ்சள்.

5 மஞ்சிட்டிமேகம்:—மூத்திரமானது மஞ்சிட்டியென்னும் சாயவேர் நிறமாயும், துர்க்கந்தமாயும் எப்போது ஒழுக்காகவும் இறங்கும்.

6. ரத்தமேகம்:—மூத்திரமானது சிகப்பு நிறத்தையும், உவர்ப்பையும், துர்க்கந்தத்தையும் பெற்று அதிக காங்கையுடன் இறங்கும். முயல் இரத்தத்தையொற்ற இண்டுபடியளவு இறங்குதல், அதை காய்ச்சினல் புலால்வாசனை, பிசுதல் கோசமும், பிஜமும் கடுக்குதல் என்னும் குணங்களையுடையது.

மேற்கூறிய ஆறும் பித்தத்தினல் உண்டானது.

1. சலமேகம்:—மூத்திரமானது சுத்தசலம்போலத் தெளிர்த்தும் வெளுத்தும், மிக குளிர்ச்சியுடன் துர்க்கந்தமில்லாமல் மினுமினுத்து இறங்கும். கழிசாரப்போல் சிக்கலுடன் இறங்கல், காய்ச்சினல் கண்ணுப்பு சங்கு இலைகளைப்போல் வண்டல்படிதல், தேகத்தில் ஒருவித சுற்றம்வீசல் என்னுங்குணங்களையுடையது. இதை சங்கு மேகமென்றும் கூறுவர்.

2. இட்சுமேகம்:—மூத்திரமானது கரும்புச்சாறைப்போலும், தென்னங்கள்ளைப்போலும், மிகவும் மதுரமாக விசேஷித்து நுரை களுடன் இறங்கும், இக்ஷு என்பது-கரும்பு.

3. சாந்திரமேகம்:—மூத்திரமானது கட்டுபட்டு களங்களாயும், வழவழத்து குழம்பாகவும இறங்கும். இது ஒருநாள் முழுதும் வயிற்றில்தங்கி மறுநாள் இறங்குகிறதால் சாந்திரமேகமெனப் பட்டது.

4. சுராமேகம்:—மூத்திரமானது தென்னங்கள்ளைப்போலும், முன்பு தெளிவாகவும, பிறகு குழம்பாகவும், நுரைத்தும், வெளுத்தும், வேளைக்கு சாழியளவு இறங்கும். காய்ச்சினல் கள்ளைப்போல் மணக்கும். மாபோல்வண்டல்படிதல், மயக்கம் என்னுங் குணங்களுடையது. சுரா என்பது-கள்.

5. பிஷ்டமேகம்:—மூத்திரமானது அரிசிமாவு கரைத்ததுபோல் வெண்மையாக இறங்கும. அப்போது சோமச்சினிர்ப்பும் உண்டாகும், பிஷ்டம் என்பது-அரிசிமின்மாவு.

6. சுக்கிலமேகம்:—மூத்திரமானது சுக்கிலத்தைப்போல் வெண்மையாகவும், அதில் சுக்கிலம சிறுதண்டுகளாகவும் இறங்கும். மேலும் தாழஞ்சாற்றைப்போல் இறங்கி பிறகு நாரைப்போல் தோயும் காய்ச்சினல் கட்டியாகும்.

7. சிகதாமேகம்:—மூத்திரமானது வெண்மணல் கலந்த சலம் போல் ஒவ்வொரு முகூர்த்தத்திற்கு ஒருமுறை இறங்கும். சிகதா என்பது-மணல்.

8. சீதமேகம்:—மூத்திரமானது குளிர்ச்சியுடன் மதுரமாகவும், விசேஷமாகவும் இறங்கும். சீதம் என்பது-குளிர்ச்சி.

9. சனீர்மேகம்:—மூத்திரமானது பொறுத்தபொறுத்தகொஞ்சம் கொஞ்சமாக மிருதுவைப்பெற்று இறங்கும். சனீர் என்பது காரஸாமம்.

10. லாலாமேகம்:—மூத்திரமானது கோட்டுவாய் சளத்தைப் போலும், மினுமினுப்பாயும், நூலிழைப்போல் தாரைதாரையாகவும் இறங்கும். லாலா என்பது-கோட்டு வாய்சளம்.

மேற்கூறிய மேகங்கள் சிலேத்துமத்தினாலுண்டானது

வாதமேகரோக இலக்கணம்:—தடுக்கல், மார்புநோய், மனசஞ்சலம், குத்தல், அரைதலிளர, வாயுலாள், இருமல், இளைப்பு முதலிய குணங்களுண்டாகும். பல், ர, தொண்டை, உதடுகருத்தல், படுக்கைபொருந்தாமை, புரளல், காடிகுடலாயும், குணபேதமாயும் அடக்குதல், ஒருதித மனம்லீசல்என்னும் குணங்களுடையது.

பித்தமேகரோக இலக்கணம்:—கீழ்வயிறு, தண்குறி, இலைகளில் வியர்வை, பிறம்புருக்குதல், சரீரத்தில் காய்கையுடன்எரிச்சல், அதிகதாகம், புளி ஏப்பம், மூர்ச்சை, பேதி, தேகவாட்டம், சரீரத்திலும், கோசத்திலும் புளல்சாற்றம் வீசுதல், கற்முழுஜலம், தேன் இலைகளைப்போல் நீர் இறங்கல், பிறத்திலும், கோசத்திலும் குத்தல், நாளிலும் காயிலும் ஒருதினமானசோய் விரணத்துடன் சாற்றம், சரம்என்னும் குணங்களுடையது.

சிலேஷ்ம மேகரோக இலக்கணம்:—மந்தாக்கினி, அரோசகம், வாந்தி, மயக்கத்துடன் சோம்பலான நித்திரை, இருமல், மூக்கடைப்பு, தோழை, உழலை முதலியவைகளை உண்டாக்கும்.

மேகரோக தசாவஸ்தைகள்:—

1. கீழ்வயிற்றில் சங்கடம் தோற்றல், 2. நீர் இறங்கிலுண்டாசம் காணுதல், 3. வாயு பிரபலப்படுதல், 4. நரிதோஷம் கோபித்தல், 5. சக்கிலம் கெடுதல், 6. அதிக தாகமும் நீரில் மேகமும் உண்டாதல், 7. அரோசகமும் தேஜோட்டியமும் பிறக்குதல், 8. கட்டிகள் எழும்புதல், 9. பேதி அதிகரிக்குதல், 10. ஞாபகம் மாறி உயிர் நீங்குதல். இப் பத்து அவஸ்தைகளும் மேகரோகத்துக்கு உபபலமாக விருப்பதால் இவைகளை காணுதற்கு முன்பாகவே சிகிச்சை செய்தல்வேண்டும்.

வேறு:—1. சரீரம் கனத்தல், 2. தேஜஸ்குறைத்து மழுங்குதல், 3. தாக்குசாரம் அற்று வறளல், 4. தேக எரிச்சல், 5. மூத்திரம் அதிகமாதல், 6. படுக்கை பொருந்தாமையுடன் மூர்ச்சையுண்டாதல், 7. வாசம் அதிகரித்தல், 8. விரணம் பிறத்தல், 9. இருமிச்சேருதல், 10. சுயஸ்கண்டு உயிர்நீங்குதல்.

மேகரோக அசாத்தியக் குறிகள்:—எந்த மேகரோகியிலும் தகுந்த பரிகாரஞ் செய்தும் தணியாத தேக எரிச்சல், அளவிடக்கூடாத மூத்திரம், எவ்வளவு தண்ணீர் அருந்தினும் அடங்காத தாகம், மென்மேலும் சக்குவறளல், அரோசகம், சுரம், துட்பமான இடங்களில் கட்டிகள் எழும்புதல், மிகுந்தபேதி என்னும் குணங்களுண்டானில் அசாத்தியம்.

மேககட்டிகள்

மேற்கூறிய மேகங்களை தகுந்த சிகிச்சைகள் செய்யாவிடில் அடியில் கூறும் கட்டிகள் உண்டாகும். இதற்கு மேகக் கட்டிகள் என்ற பெயர். இது 10 வகைப்படும். அவையாவன:—

1. சாலிகை-மடக்கு கட்டி. 2. கச்சபிகை-ஆமையோடுக்கட்டி. 3. ஜாலினி-வலைகண் கட்டி. 4. விருதை-அதோமுக கட்டி, 5. அலசை-பேய்ச்சுரக்காய் கட்டி. 6. மகுரிகை-கடலைக் கட்டி. 7. சரஷபிகை-கடுகுக்கட்டி. 8. புத்திரிணி-புத்தாரிக்கட்டி. 9. பிதாரிகை-கிலோயினிக்கிழங்கு கட்டி. 10. விந்திரதி-விந்துகி கட்டி.

1. சராவிகை என்னும் மடக்கு கட்டி:—கீல்களிலும், மாமிசஸ்தானங்களிலும் உண்டாகி, கறுத்து அடியகன்று முனையுயர்ந்து, மேலில் பள்ளம்விழுந்து, வியர்வையுடன் சோயுள்ளதாய் மடக்குகவிழ்த்ததுபோலவே யிருக்கும்.

கச்சபிகை என்கிற ஆமையோடு கட்டி:—குழிகள் விழுந்தும் மினுமினுத்தும், சோலைக் தருவதும், ஒருவேளை தாரதமாய் அசேவிதசிகிச்சைகளுக்கு வசப்படாமல் ஆமையோட்டை மூடினதுப் போல் இருக்கும்.

3. ஜாலினி என்கிற வலைக்கண் கட்டி:—நடிப்பாக எழும்பி மரத்தின் வேர்களைப்போல் வெகுசம்புகள் சூழப்பட்டிருப்பதும், சூழும்பான ஜலத்தை சொரிவதும், சரஞ்சுரான் மறைத்துவிடுவதும், வலையைப்போல் கண்கள்விடுவதும், சிலவேளை உபத்திரவத்தைச் செய்வதும் சிலவேளை செய்யாததுமாக இருக்கும்.

4. விருதை என்கிற அதோமுககட்டி:—வயிற்றிலேனும், இடுப்பிலேனும் கறுப்பு நிறத்துடன் பருமனாக எழும்பி அதிக உபத்திரவத்தையும், வியர்வையும் தருவதாயிருக்கும். இதுரோகியை கொஞ்சமேனும் மிரறவொட்டாமல் குணியப்பண்ணுகின்ற காரணத்தால் அதோமுகக் கட்டி என பெயர்பெற்றது.

5. அலசை என்கிற பேய்ச்சுரக்காய் கட்டி:—முதல்முதல் எவ்விடத்தில் இது உண்டாகின்றதோ அவ்விடத்து சருமத்தின்மேல் ஒருப்பால் கட்டதுபோல் எரிச்சல் உண்டாகி எழும்பி பின்பு கறுப்பு நிறமுடைய சொப்புளங்களாக சரீரமெங்கும்

விபரித்து பார்வைந்து பேய்ச்சுரைப்பிஞ்சைப்போல் இருக்கும். இதனால் அதிசேதி, தாகம், சோர்வு, ஜ்வரம், மிகுந்த சோயுடன் வேதனை என்னும் குணங்களுண்டாகும்.

6. மகரிகை என்கிற கடலிக் கட்டி:—நிறைடலே பிரமாணத்தையும், அன்ரூபத்தையும்பெற்று சரீரமுழுவதும் சொப்புளம் சொப்புளமாக எழும்பி உபத்திரவத்தை செய்யும்.

7. சரஷபிகை என்கிற கடுகுக் கட்டி:—தேகமுழுதும் நெருக்கமாக கடுகுபிரமாணத்தைபொத்த சிலரிதத்தில் உண்டாகி உடனே யுடைத்து அதிக உபத்திரவத்தைத்தரும்.

8. புத்திரினி என்கிற புத்திராதிக் கட்டி:—விலாசித்து வரிசை வரிசையாக ஏற்பட்டு பருத்தம் சிறுத்தம் ஒன்றை பொன்றைச் சுற்றி அதிக சொப்புளங்கள் சூழ்வராகப்பிறந்து அதில் எரிச்சலையும் மிக சங்கடத்தையுந்தரும். இது ஒன்றன்பின் ஒன்றுபிறந்து கூட்டமாக இருப்பதால் புத்திராதிக்கட்டி என பெயர் பெற்றது.

9. பிதாரிகை என்கிற நிலப்பூசினிக்கிழங்கு கட்டி:—நிலப்பூசினி கிழங்கைப்போல் வட்டமாக நடித்த அதேகிதமான உபத்திரவம் கூட உண்டாக்கும்.

10. விந்திராதி என்கிற விந்ருதி கட்டி:—இந்த கட்டிலைக் குறித்த விந்ருதி கட்டியின்கீழ் கூறியிருப்பதைக்காண்க.

சாத்தியாசாத்திய மேக கட்டிகள்:—மேற்கூறிய கட்டிகளில் முதல்மூன்றும் ரக்தாதிமுதல் மாம்சாதி வரையிலும் ஒட்டிபிறப் பதால் சாத்தியம். புத்திராதிக்கட்டி, நிலப்பூசினி கிழங்குகட்டி, மேதோதாதுவைப்பற்றி பிறப்பதால் கஷ்டசாத்தியம். மற்றகட்டி கள் பித்தத்தால் பிறந்து மேதோதாதுவை ஒட்டியும் ஒட்டாமலும் இருப்பதால் கஷ்டத்திலும் கஷ்டசாத்தியம். ஆயினும் மேகரோல் வெளிச சோகிக்கு மார்பு, அடிமுதுகு, முகம், தோள், ரூதம், சிரை, குய்யம், கீல், கால், ஸ்திரிஸ்தன், அக்குள், புருவமத்தி, கழுத்து, இருதயம், நடுநெற்றிப்புள், உதடு, அண்டம், முழங்கால், கண்டச் சதை, தொடைச்சதை, என்னும் இடங்களில் எவ்விதகட்டிகள் பிறந் தாலும் அசாத்தியமென்றே நிதானிக்கவும்.

விந்திராதிக் கட்டி

இந்தக் கட்டியானது தோல், ரத்தம், மாம்சம், மேதை, எலும்பு, சன்ன சம்பு, கெட்டிசம்பு, என்னும் இடங்களில் சொஞ்சம் சொஞ்சமாக உருவாகிப்பின்பு நடித்து எழும்புகின்ற விக்கத்தை பழய ரூபமாகச்சொண்டு குத்தியுண்டாகும். இதுவெளியிலே வந்து உட்புறமாவது நிலம்பி அதிக வேதனையுடன் வட்டமாகவும், நீண்டும் கட்டியாய்ச்சாறும். இது உண்டான இடத்தில் இருந்தால் விந்திராதி என்றும், சம்புகளின்வழியாக ஓடிஓடி நிரிந்தால் ஓடு

விந்திராதி என்றும் பெயர். இந்த விந்திராதிகட்டி வாதம் பித்தம், சிலேத்துமம், நிரிதோஷம், ரத்தம், மாம்சம் என ஆறுவிதப்படும். இந்த விந்திராதிகட்டி, சாபி, வன்னி, பகிருதி, பிலிகம், குலோமம், இருதயம், குதி, வம்ஷணம், முஷ்கம், அபானம் என்னும் பத்து இடங்களில் முக்கியமாய் உண்டாகும். அப்பொழுது அந்த இடங்களின் பெயர்கொண்டு வழங்கப்படும். இது தவிர ஸ்தன விந்திராதி என்று ஒன்றும் உண்டு.

1. வாதவிந்திராதி கட்டி:—கறுத்த நெல்ல அதிக சோ யுடன் நாமதமாக விருத்தி யடைந்து பழுத்த உடையும். இரைப்பு, இருமல், வியர்வை, பிரமை, வயிற்றுப் பொரு மல், புரளல், சரீரத்தில் சொஞ்சம்மிக்கம், முதலிய குணங்க ளுடையது.

2. பித்தவிந்திராதிகட்டி:—நெல்ல வெளுத்த தாம்பிர நிறத்துட னும், எரிச்சலுடனும் விரைவில் விருத்தியடைந்து உடையும். தாகம், சோர்வு, அதிசாரம், உள்ளெரிச்சல் என்னும் குணங்களுடையது.

3. சிலேஷ்மவிந்திராதிகட்டி:—வெளுத்த அசைவற்று, நினவு, வியர்வை, குளிர்ச்சியுடன், நாமதமாய் விருத்தியடைந்து பழுத்த உடையும். அசையக்கூடாமை, கொட்டாவி, அருசி, நேகம் பாரித் தல் என்னும் குணங்களுடையது.

4. நிரிதோஷவிந்திராதிகட்டி:—மேற்கூறிய மூன்று தோஷங் களின் குணங்கள் உண்டாகி மிகவும் உபத்திரவத்தை கொடுக்கும்.

5. ரத்தவிந்திராதிகட்டி:—கறுத்தும் வெளுத்தும் சிறுசிறு கொப் புளங்களுடன் உண்டாகும். அப்பொழுது அதிதாகமும், பித்த விந்திராதிகட்டியின் குணங்களுமுண்டாகும். இது புருஷர்களுக்கு வெளிப்புறத்திலும், மாதர்களுக்கு உட்புறத்திலும் உண்டாகும்.

6. சுக்ராவிந்திராதிகட்டி:—கத்தி முதலிய ஆயுதங்களால் வெட்டு காயம் உள்ளவனுக்கு அபத்தியத்தால் சம்புகள் கெட்டு கட்டி உண்டாகும். இது உபத்திரவம் கொடுக்கும்.

குடல் விருத்தி ரோகம்

வாயுவானது அதோமுக மார்க்கமாக அண்டங்களுக்குள் சஞ் சரித்து அவ்விடத்தில் விக்கத்தையும், சூலையையும் உண்டுபண்ணி, பின்பு சாபியின் சம்புகளின் வழியாகச்சென்று ஆண்குறியில் அது சரித்து அதின் சம்புகளுக்கும், அண்டத்தின் சம்புகளுக்கும் உபத்திரவத்தை உண்டாகவி குடல்விருத்தி ரோகத்தை உண்டாக் கும். இந்த ரோகமானது வாதகுடல் விருத்தி, பித்தகுடல் விருத்தி, சிலேஷ்மகுடல்விருத்தி, ரத்தக்குடல் விருத்தி, மேதோகுடல்விருத்தி, மூத்திரகுடல் விருத்தி, குடல் அண்டவிருத்தி என எழுவிதப்படும்.

அண்ட நோய்

அண்டரோபானது குடல் அண்டம், குமுறல் அண்டம், நீர் அண்டம், தசை அண்டம் என நான்கு விதப்படும். நீர் அண்டத்தில் ரத்த அண்டம் என ஓர் பிரிவும், தசை அண்டத்தில் வாதாதிகளால் மூன்று பிரிவுகளும் உண்டு. இவைகளே விரைவாதம், பிரவாதம், அண்டவாதம் என்றுஞ் சொல்லுவார்கள்.

1. குடல் அண்டம்:—வீக்கமில்லாமல் பருத்து ஒவ்வொருவேளை மிகுந்த உபத்திரவத்தை கொடுக்கும்.

2. குமுறல் அண்டம்:—கைதருத்திவைப்போல் பருப்பதும், மேலேயிறும் கீழிறங்கினும் சம்மாவிருக்கினும் இடைவிடாது இறைவதும், சிலவேளை யில்லாததுமாக இருக்கும். படக்கும்போது அவ்விடத்தில் பிருத்தலும், கொஞ்சம் உஷ்ணத்தினால் வேதனையும் உண்டாகும். இதனை ஏறண்டம், இறங்கண்டம் எனவுஞ் சொல்லுவார்கள்.

3. நீர் அண்டம்:—தர்சிலால் பருத்து கெட்டிப்பட்டு சிலவேளை ரத்தையும் வேதனையையும் உண்டாக்கும்.

4. தசை அண்டம்:—ஒரு அண்டத்திலாவது இரண்டு அண்டத்திலாவது தசையானது விருத்தியாகி மிகவும் உபத்திரவத்தை உண்டாக்கும். இது மிகவும் பெரியதாய் வளரும்.

குன்ம நோய்

அதிக ஏப்பம், மலபந்தம், வயிறு நிறைந்தைப்போலிருத்தல், தர்பனம், குடலிரைச்சல், வயிற்றில் கூச்சலோடு உப்பிசம, வயிறு சோதல், அசீரணம் என்னும் இக்குணங்களைப் பெற்றிருக்கும். குன்மரோகமானது, வாதம், பித்தம், சிலேஷ்மம், வாதபித்தம், வாதசிலேஷ்மம், பித்தசிலேஷ்மம், திரிதோஷம், ரத்தகுன்மம் என எட்டு வகைப்படும். ரத்தகுன்மரோகம் மாதர்கட்கு உண்டாகும்.

1. வாதகுன்மம்:—கழுத்து சென்னாம்புளிப்போதல், சலம், குடலில் இரைச்சல், வயிற்றில் ஊசியால் குத்துதல்போல் குத்தல், மலபந்தம், மூச்சுதிணால், தேகமிளத்தல், சருமம் சத்தாதுக்கள் உலாவுடன் கறுத்தல், சொல்லக்கூடாத பயங்கம், வயிற்றில் அதிக வலி, என்னுங் குணங்களுடையது.

2. பித்தகுன்மம்:—தாகம், புளிவப்பம், மூர்ச்சை, பலநிறமான பேதி, வியர்வை, சீர எரிச்சல், தேகம் மஞ்சள்நிறம், வயிற்றை பிசைந்தால் பச்சைப்புண்போல் சோதல், வாந்தி மயக்கம், சோழை, கைகால் ஓச்சல், வெந்தமூத்திரம், மந்தம், மூக்கலுடன் மலம்சாரல், வாசம் என்னும் குணங்களுடையது.

3. சிலேஷ்மகுன்மம்:— அசையக்கூடாமை, குளிர்சுரம், அரோசகம், எரியில் சலம்வடிதல், சோம்பல், மார்புதடித்தல், இருமல், கேகவெளுப்பு பலமின்மை என்னுங் குணங்களுடையது.

4. வாதபித்தகுன்மம்:—வாத, பித்த குன்மங்களின் குணங்கள் கலந்துகாணும்.

5. வாதசிலேத்துமகுன்மம்:—வாத, சிலேத்தும குன்மங்களின் குணங்கள் கலந்துகாணும்.

6. பித்தசிலேத்துமகுன்மம்:—பித்த, சிலேத்தும குன்மங்களின் குணங்கள் கலந்துகாணும்.

7. திரிதோஷகுன்மம்:—வாத பித்த சிலேத்தும குன்மங்களின் குணங்களைக்கொண்டு, அதிக வலியும் மிகுதாகமும் உண்டாகும். அன்றியும் வயிறுப்பல், பேதி, வாய் துவர்த்தல், என்னுங் குணங்களு முண்டாம். இது அசாத்தியம்.

8. ரத்தகுன்மம்:—இது ரத்தவாதம், ரத்தபித்தம் என இரு வகைப்படும். இதில் ரத்தவாதரோகமானது பெண்களுக்கு ருது காலத்திலும், முதற் பிரசவகாலத்திலும் அல்குல் ஸ்தானத்தில் மேக முதலிய ரோகங்கள் காணுஞ் சமயத்தில் உண்டாகும். அப்போது மார்பு அதில், மசக்கை, ஸ்தனத்தில் கொஞ்சம்பால், ஆயாசம் முதலிய குணங்களுண்டாகும். வயிற்றில் கர்ப்பத்தைப்போல் கெட்டாத்தமானது கட்டிக்கொண்டு இருக்கும். ரத்தபித்த குன்மத்தில் உக்கிரமான வலி, சரீரம் மரத்தல், எரிச்சல், பேதி, தாகம், சுரம், ரத்த மிருக்கும் இடத்தில் குத்தல், அல்குலில் மேகக்கிலி, தர்க்கம், எப்போதும் வேதனை என்னுங் குணங்களுடையது. இதையே சூதக வாய்வு, மாதர்குன்மம், தூரச்சூல எனவும் சொல்லுவார்கள்.

மேற்கூறிய எட்டுவித குன்மங்கள் தவிர இன்னும் எரிகுன்மம், வலிகுன்மம், சத்திகுன்மம், சூல குன்மம் என வேறு விதங்கள் உண்டென்றும் சில நூல்களில் கூறப்பட்டுள்ளது. அவையாவன:—

1. சூலகுன்மம்:—உண்டபதார்த்தங்கள் செரியாமை, அன்னஞ் செல்லாமை, தருத்திவைப்போல் வயிறுப்பல், அவயவங்கள் கடுக்குதல், சரீரம் உலல், கடைகுறைதல், ஓச்சல், வியர்வை, வயிற்றில் பந்து உருளல்போல் கட்டிவுருளல், வயிறு வில்லைப்போல் பிதித்துக்கொள்ளல், என்னுங் குணங்களுண்டாக்கும்.

2. எரிகுன்மம்:—அடிவயிற்றில் எரிச்சல், குடல் புரட்டல், வாய்நீருறல், தலைழுலல், வயிற்றுவலி, வயிறுப்பல், இரைச்சல், புளியேப்பம், சரமதுவாய்களில் வியர்வை பெருகல், பேதி, சரீரம் இளைத்தல், இருமல், அன்னம்செல்லாமை என்னுங் குணங்களுடையது.

3. வாந்திகுன்மம்:—வாந்தி, அரோசகம், நரலுக்குள் எரிதல், எக்கம், தலக்கம், மயக்கம், வயிறப்பல், அற்பவலி, பலவீனம், மலபந்தம், மந்தாக்கினி, கடைகுறைதல், சிறாம்புள் உப்பல், தேகத்தில் நிமிர் என்னுங் குணங்களுடையது.

4. வலிகுன்மம்:—வயிற்றில் முன்னொருகுதல்போலிருத்தல், உப்பிசம், குடைச்சல் நோய், சரீரம் உலர்ந்து கறுத்தல், அற்ப உண்டி, விரைசொருகல், முதுகுதண்டில்வலி, இடுப்புநோய், சரீரமெங்குங் கடுத்தல், அதிக சரம், பொப்பளி என்னுங்குணங்களுடையது.

ஆநாக ரோகம்

குதஸ்தானத்தின் அபானவாயுவும், இருதயஸ்தானத்தின் உதான வாயுவும், தங்கள் தொழிக்கூலிவிட்டு இரண்டும் ஒன்றுசேர்ந்து வயிற்றை பிருத்தலுடன் இழுத்துக்கொள்ளும். அப்போது வயிற்றில் இரைச்சல், மலஜிக்கல், சரம், சுவாசம் முதலிய உபத்திரவங்களுண்டாகும். இது வயிற்றை இழுத்துப்பிடிப்பதால் ஆநாக ரோகமென பெயர்பெற்றது.

ஆநாகரோக பேதங்கள்:—ஆநாகரோக விகற்பத்தால் அஷ்டிலாரோகமும், பிரத்தியஷ்டிலாரோகமும், தனிரோகமும், பிரிதனிரோகமும் பிறக்கும். இன்னும் ஜலகூர்மரோகமென்பது ஒன்று உண்டு.

அஷ்டிலாரோகம்:—வயிற்றுக்குள் நிரட்டியுள்ளதாகவும், கெட்டிப்பட்டதாகவும் ஒரு விக்கம் உண்டாகும். அதுபற்றுபோல், எழும்புவதும் தோற்றப்படுவதுமாயிருக்கும்.

பிரத்தியஷ்டிலா ரோகம்:—ஆநாகரோக குணத்துடன் ஊர்த்துவமுகமாகவே எழும்புகின்ற கட்டியானது குறுக்காகவளர்ந்து இருபக்கவிலாக்களிலும் குறுக்கே நெடுநெடு பாய்ந்துகொண்டேயிருக்கும்.

தனி ரோகம்:— வயிறுதுத்தல், விக்கம்முதலிய குணங்களைக்கொண்டு பக்குவாசயஸ்தானத்தில் நின்ற ஆசனம் அல்குல் என்னும் ஸ்தானங்களின் சமீபம் வரையிலும் அதிக உபத்திரவத்தை உண்டாக்கிக்கொண்டு அதோமுகமாக கீழ் இரங்கிக் கொண்டேயிருக்கும்.

பிரதிதனி ரோகம்:—மேற்கூறியதுப்போல் ஆசனஸ்தானத்திலிருந்து பக்குவாசயஸ்தானம் வரையிலும் உபத்திரவத்தை உண்டாக்கிக்கொண்டு ஊர்த்துமுகமாக மேல் சேர்ந்துகொண்டேயிருக்கும்.

ஜலகூர்ம ரோகம்:—ஆமைப்போல் கட்டியாயி சோபிலாமலும், சிகிச்சைக்கு இடங்கொடாமலும், வலது அல்லது இடது

பக்கத்திலாகிலும் அசைந்தும் அசையாமலுமாகவுமிருக்கும். இதனால் தொடைகளுக்கு தர்ப்பலமும், சரீரம் வெளுப்பும் உண்டாம். இதுசேர்ந்துகூடி இருப்பதால் சீரணமையென்றும், ஊருவதால் ஊரணை என்றும், மற்றும் இதனை கெண்டைக்கட்டி என்றும், வல்லிக்கட்டி என்றும் சொல்லுவார்கள்.

சூலை நோய்

இது வாதசூலை, பித்தசூலை, சிலேஷ்மசூலை, திரிதோஷசூலை, ரணசூலை, சர்க்காரசூலை, குன்மசூலை, என ஏழுவிதப்படும். சூலத்தால்குத்துவதுப்போல் நோவதாதலுவதால், சூலைநோய் என்ற பெயர் பெற்றது.

1. வாதசூலை:—இடுப்பு, தொடை, முதுகு, ஆசனம், குண்குறி, அல்குல், கீழ்வயிறு இதுகளில் பிருத்தலுடன் வேதனை, கைகால் குடைச்சல், நடுக்கம், நிமிர், தாகம், அதிர்வு, கண், முழங்கால், விரல இணைகளில் கனத்தல், சிறுநீர் கடுத்து, சிவந்துவிழல், சரீரமுழுதும் வெப்பம், பளபளப்பு குடைச்சல்என்னுங் குணங்களுடையது.

2. பித்தசூலை:—நெஞ்சுகாங்கை, சரம், விபர்வை, மூர்த்தல், மூர்ச்சை, சரீரவாட்டத்துடன் வேதனை, கைகால் உளைப்பு, பார்வைமந்தம், நாடி மெலிந்து நடத்தல், நிறம்மாறல், மயக்கம், தூர்பலம், என்னுங் குணங்களுடையது.

3. சிலேஷ்மசூலை:—சரீரம் மரத்தல், மூர்ச்சை, வாந்தவஸ்துவிலும் அசங்கிதம், குத்தல், தொண்டையில் வேதனையுடன் கபதிக்கம், அடிவயிற்றில் வலி, விபர்வை, நகக்கண்களில் ரத்தமில்லாமை, தேகம்வெளுத்துப் புண்போல் எரிதல், வாயில் சீறுதல் என்னுங் குணங்களையுடையது.

4. திரிதோஷசூலை:—இதில் முற்கூறிய வாத பித்த சிலேத்துமச் சூலைகளின் குணங்கள் பரவுங் கலந்து காணப்படும்.

5. ரணசூலை:—மார்பு, விலாபக்கம், வயிறு இதுகளில் கட்டியால் குத்துவதுபோல் குத்தல்என்னுங் குணங்களுடையது. இது சிதக்கட்டு விருத்தியினல் உண்டானதால் இதனை ரணசூலை எனப்பட்டது.

6. சர்க்காராசூலை:—இடுப்பு, முதுகு, விலாப்பக்கம், அடித்தொப்புள், குதஸ்தானம், கீழ்வயிறு இவ்விடங்களில் குத்தல், மூத்திரம் ரத்தத்துடன்கூடி சீர்த்துவாரத்தில் சுறுக்கு சுறுக்கென்ற வேதனையுடன் மணல்கலந்து தள்ளிக்கொண்டே துளிதுளியாக இறங்கல். முதுகு, விலாப்பக்கம், நெஞ்சு, அல்கு, வாயி, குதஸ்தானம் என்னும இடங்களில் மாமிசம் வளர்தல், சலத்துவாரத்தில் மணல் அடைத்துக்கொள்ளல், சரீரத்தில் வேதனை, மணக்கலக்கம், மயக்கம் என்னுங் குணங்களுடையது.

7. குன்மசூலை:—மலபந்தம், வாந்தி, விக்கல், தாகம், ஏப்பம், மூர்ச்சை, வயிறு பொருமல், இரைச்சல், குத்தல், வாய்நீரூறல், மாமிச ரசதுவெதும்பல், சரீரமுஷ்டல், அரோசகம் என்னும் குணங்களுடையது.

8 மேகசூலை:—ஸ்தானம் கடுப்புடன் நுடைச்சல், விக்கல், மலபந்தம், வெந்நமூத்திரம், சோனம், எரிச்சல், சுரம், மந்தம், பிரமை, மயக்கம் என்னும் குணங்களுடையது. இதனால், உள்ளுச்சூலை நிதம்பச்சூலை, கறைச்சூலை, சாரச்சூலை, பக்கச்சூலை, கருப்பச்சூலை னாச்சூலை முறிச்சூலை என்பவைகளும் உண்டெனக் கூறப்படுகிறது.

ரகோதரம்

இதை உதாரோகம், பெருவயிறு, தண்டிரோகம் என்றுஞ் சொல்லுவார்கள். கண்ணமும் கீழ்வாய்தாளின் அடியும் உதிம வற்றி சருங்குதல், ஸ்தானம் வயிறு இவ்விடங்களில் விக்கம், நடை, பலம், பசி இவைகள் குறைதல், சரீரம் உலர்தல், வயிறுமாத்திரம் பெரியதாகுதல் என்னும் குணங்களுடையது.

1. வாதோதரம்:—வயிருனது பருத்தும், வெவேலை வாடியும், வெவேலை சொத்தும் சோகமமும், மேலில் கறுத்த சின்ன சம்புகளால் சுற்றப்பட்டும், உள்ளில் ஆச்சரியமான சத்தமும், வயிறு, விலா இடுப்பு, முதுகுகீல்களில் சோதல், வறட்டிருமல், கீழ்வயிறு னைத்தல், மலபந்தம், சருமமானது கறுத்தாலது வெளுத்தாலது சோற்றல் என்னும் குணங்களுடையது.

2. பித்தோதரம்:—வயிரானது பருத்து புகைகிறத்தையும், பச்சை நிறத்தையும் பெற்று மேலில் சுடுகையும், விலையும், கடினத்தலமும், அழுத்தினல் உபத்திரவம், சம்புகள் வெந்து அல்லது மஞ்சள் நிறத்துடன் சுற்றப்பட்டும், அருந்தும் போஜனம் சீக்கிரம் ஜீரணித்தல், சுரம், மூர்ச்சை, தாகம், பேதி, பிரமை, என்னும் குணங்களுடையது.

3. சிலேஷ்மோதரம்:—வயிரானது கனத்த பருத்து கடினத்துடன் அழுத்தமாய் அசைவற்று வெளுத்த மினுமினுத்த குளிர்ச்சியை அடைந்திருக்குதல், தேகத்தில் கனத்தல், நித்திரை அல்லது உறங்கிவிழுதல், கிடந்த இடத்திலேயே கிடப்பதற்கு பிரியப்பு, விக்கம், சருமமும பஞ்சேந்திரியங்களும் வெளிறல், அரோசகம், இருமல், இரைப்பு என்னும் குணங்களுடையது.

திரிதோஷோதரம்:—திரிதோஷ ரோகங்களுக்குறிய குணங்களைப் பெற்று பார்ப்பதற்கு பயங்கரூபமாயும், விக்கம், மூர்ச்சை, சுரம் முதலிய கற்குணங்களும், விரலில் ஜீரணசக்தியும், வெளுத்த கண்ணீரும், கால்கை இளைத்தல், வயிற்றில் மாத்திரம் விக்கம், நில சுழலல், தயக்கம் என்னும் குணங்களுடையது.

5. பிலீதோதரம்:—அதிகநிண்டி, யானைமுதலிய வாகனங்களி லேறி வேகத்துடன் நடத்தல் தகாத காரியங்களை செய்தல், குடல் குலுங்கும்படி அதிக மைதுனஞ்செய்தல், அதிபாரம் எடுத்தல், நீயாணம் அடக்குதல், நெடுந்தூரம் ஓடுதல் என்னுஞ் செய்கைகளினலும், தேகம் இளைத்தலினலும், இருதயத்திற்கு இடப்பக்கத்திலிருக்கும் மாமிசகண்டமான பிலீகம் தனது இடத்தைவிட்டு நழுவ அதிகரித்து வருகின்ற ரத்தம் அப்பிலீகத்தை அனுசரித்து அன்னாசாதிகளால் விருத்தியடைந்து ஆமைமுதுகைப்போல் கடினத்தையும், உயர்வையும்பெற்று சாளுக்குரான் வயிற்றுக்குள் அப்பக்கத்திலேயே நிறைந்து பருக்கும். வயிரானது பருத்து வெந்த நிறத்துடன் மஞ்சள் கறுப்பு புடைகள் புள்ளதாகி கெட்டிப்பட்டு இருக்கும். தேகம் வெளிறல், இருமல், இரைப்பு, தாகம், வயிறுப்பல், சுரம், மூர்ச்சை, வாந்தி, உள்ளெரிச்சல், மேலெரிச்சல், சோர்வு முதலியகுணங்களுண்டாகும். இது அசாத்தியம்.

6. யகிர்தோதரம்:—முற்கூறிய காரணங்களினல் இருதயத்திற்கு வலப்பக்கத்திலிருக்கிற கறுத்த மாமிசகண்டமான யகிர்தானது ஸ்தானத்தைவிட்டு நழுவி வயிறு பருக்கும். அப்போது இரைப்பு இருமல் முதலிய குணங்களுண்டாகும்.

7. பந்தோதரம்:—உணவாதி பேதங்களினல் மலபந்தம் உண்டாகி மூலரோகம், உதாவர்த்தரோகம், குதரோகம், குடலிலொட்டிக்கொள்ளும் அன்னம் இலைகளினை லதிகரித்து மலத்தை வெளிப்படுத்தாமல் வயிற்றுக்குள் பந்தித்து கீழ் வயிற்றிற்கும் குதல் தானத்திற்கும் நடுவில் விக்கத்தை உண்டாக்கும். கீழ் வயிரானது பருத்து வாயுவை வெளியிடாமல் நிறைத்துக்கொண்டு அசைவற்றிருப்பதும், மேலில் சம்புகளும் புடைகளும் கறுத்தாலது சிவந்தாலது மோதிரவடிவம்போல் சுற்றிக்கொண்டிருப்பதுமாக பருத்திருக்கும், அபானன், தொண்ட, மார்பு, சிரை ஆகிய இவ்விடங்களில் சோதல், தாகம், தும்மல், எரிச்சல், சுரம், இருமல், இரைப்பு, மலபந்தம், அரோசகம், வாந்தி என்னும் குணங்களுண்டாகும்.

8. க்ஷதோதரம்:—கூர்மையான சன்ன எலும்பு, பாணத்தின் முனை, ஊசி, உவாமுள்ளு, முள்ளு, வால்செல்லு முதலியவைகள் கிடந்த போசனத்தினலும, அதிநிண்டியினலும், குடலுக்குள் தவராம் உண்டாகும். அல்லது அவ்விடங்கள் வைத்திருக்கும். அப்பொழுது உண்ணுகின்ற உணவு அம்மாக்கங்களினின்று, சென்றும் செரியாமலும அஜீரணசம் குடலுக்கு வெளிப்புரத்தில் கசியும். அதனல் குடலுக்கு உள்ளும் வெளிப்புரமும் இருக்கின்றமையால் அது மலத்துடனுடை பிரிக சாற்றத்துடன் சிவந்தாலது மஞ்சள் நிறமாயாலது ஆசனவழியாய் கழியும். மற்ற ரசம் உள்புரமாகவேயிருந்து வயிற்றை மிகவும் பருக்கப்பண்ணும். கீழ்வயிறு பருத்து தண்ணீர் பானையை ஒத்திருக்கும். மேல் சுவாசம், தாகம், பிரமை என்னும்

குணங்களுண்டாகும். இதையே தெந்திரோகமென்று சொல்லுவார்கள்.

9. சகோதரம்:—செம்பையாவது எண்ணெயையாவது மிதமில்லாமல் குடித்த உடனே தென ஜலத்தை குடிப்பதனல் தாகம் உண்டாகி மென்மேலும் சலபானம் பண்ணுவதினல் சமாக்கினி மந்தப்பட்டு வயிற்றிலிருக்கும் சல ரசம்புகளின் தலாரஸ்தி யடைத்த முன்பு குடித்த சலத்தையே திருந்திபாக்குவதால் வியாதனது பருத்த மிதுமிதுத்து தண்ணீர் பாகையை பொத்த அசை வற்ற நட்டினல் சத்தம் உண்டாவதாய் மேலிய பலவித ரசம்புகளால் சுற்றப்பட்டு சரீரம் நருக்கித் தலைத்ததுபோலிருத்தல், ஆகனத்தில் விபரீவப்போல் சலங்கிதம், சோதல், தடுக்கல், தாகம், அரோசகம், இருமல், இரைப்பு என்னும் குணங்களுடையது.

10. சலஸ்தம்போதரம்:—மேற்கூறிய உதரோகங்களுக்கு சிகிச்சைகள் செய்யாவிடில், திரிதோஷங்கள் அதனது இடத்தை விட்டு பிலீகஸ்தானத்தைச் சேர்ந்த கிலேஷ்மத்துக்கும், ரசம்புகளுக்கும் வெப்பத்தைக்கொடுத்து அவ்விடத்தை சிலேஷ்ம பசையை விபரீவ சலம்போல் பெருக்கிக்கொண்டு, வயிற்று புறத்துள் நிறைந்து வயிற்றை பருக்கச்செய்யும், வயிரானது கனத்து, வட்டமாயும், சத்தமில்லாமலும் மெல்லிதுடைகளும், ரசம்புகளும் இல்லாமல் ரசி முதல் முதுகுபரியந்தம் ஏற்றமும், இறக்கமும் உண்டாகும். மரண கால உபத்திரவங்களைப் பெற்றிருக்கும்.

பிலீகநோய்

மேடுபள்ளம் வாய்க்கால் முதலியவைகளை தாண்டல், அவஸ்தத்தினல் மிகுபேதியான காலத்தில் அதிகடை, பூர்த்தியாய் புசித்த தாகபானமுஞ் செய்து வேகமாக நடுதல் ஆதிய இச்செய்கைகளில் உபத்திரவம் ஒன்றுமில்லாமல் இருதயத்திற்கு இருப்பக்கத்தில் இருக்கும் பிலீகமென்னும் மாமிசத்துண்டு குறுகி, தனது ஸ்தானத்தை விட்டு சரித்து வயிற்றில் பலவித உபத்திரவத்தைசெய்து கட்டிப்போல் தோற்றப்படும். இது வாதபிலீகம், பித்தபிலீகம், சிலேஷ்மபிலீகம், திரிதோஷபிலீகம் என நான்கு வகையாகும். இவைகளில் வாதபிலீகம் அசாத்தியம். மற்றவை சாத்தியமென்றறிக.

பாண்டு

பாண்டுரோகமானது அரோசகம், சரீரம் சுறைறத்தல், மார்பு அதிர்தல், மஞ்சள்நிறமான மூத்திரம், விபரீவ, மந்தாக்கினி, தேகம் இளைத்தல், சுவாசம் என்னும் குணங்களை முற்குறிப்பாய்ப் பெற்றிருக்கும். பாண்டுரோபானது வாதபாண்டு, பித்தபாண்டு, சிலேஷ்ம பாண்டு, திரிதோஷபாண்டு, மண்பாண்டு என ஐந்து வகைப்படும்.

1. வாதபாண்டு:—சரம்பு, நகம், மலம், மூத்திரம், கண் இவைகள் கறுத்தும் வெளுத்தும் சோற்றதல், சடுக்கல், உடம்பு நருங்கித் தலைத்ததுபோல் இருப்பதுடன் சோதல், வயிறுப்பல், தேகவீக்கம், முகக்கோணல், மலர்தியல், பக்க வியாதியும், விசிலும் சோய், மூக்கடைப்பு, மலர்தியல், பக்க வியாதியும், விசிலும் சோய், மூடல் புரட்டலுடன் அடிவயிற்றை வலித்தல், பசியுள்ளதாகமும் கிடுதல் என்னும் குணங்களுடையது.

2. பித்தபாண்டு:—சரம்பு, மலம், மூத்திரம் மஞ்சள் நிறமாயும், பச்சிலைரச நிறமாயும் இருத்தல், கண்களில் இருட்டம்மல், தாகம், விபரீவ, மூர்ச்சை, தினவல்துக்களில் இச்சை, வாயில் துர்க்கந்தத்துடன் காரமாக இருத்தல், மலபந்தம், புளி ஏப்பம், சரீரம் மஞ்சளித்தல் அல்லது வெளுத்தல், வயிறு முன்னுப்போலிருத்தல், நெஞ்சுவலி, சுவாசபந்தம், கிறுகிறுப்பு என்னும் குணங்களுடையது.

3. சிலேஷ்ம பாண்டு:—சரம்பு முதலியவைகள் வெளுத்தல், சோம்பல், வாயில் உவர்ப்புச்சுவை, உரோமச்சிலிர்ப்பு, கண்டத்தில் கமல், இருமல், வாந்தி, அதிக தம்மல், கோழை, மயக்கம், இடுப்பு அசதி, இந்திரிய கஷ்டம், உடற்சோர்வு, எரிச்சல் என்னும் குணங்களுடையது.

4. திரிதோஷ பாண்டு:—மேற்கூறிய திரிதோஷங்களில் உண்டான உபத்திரவங்களெல்லாம் ஏககாலத்தில் உண்டாகும். இரைப்பு, மார்புவலி, நயக்கம், தேகம் ஊதல், அசதி என்னும் குணங்களையும் உண்டாக்கும்.

5. மண்பாண்டு:—மண் சாம்பல் முதலியவைகளை சாப்பிடுவதினல் சரீரத்திலுள்ள அன்னரச ரம்புகள் உலர்ந்து, ரசாதுக்களை சித்து, அதன் காரணமாய் ரத்தாதுவும் கெட்டு இச்சோய் உண்டாகிறது. இதில் ரசி, பாதம், முகம், அல்குல், ஆண்குறி என்னும் இடங்களில் வீக்கமும், கண்டுகண்டாக இருபிச் சேர்ந்த மலமும், ரத்தங்கலந்த கோழைவாந்தியும் உண்டாகும்.

மேற்கூறிய ஐவகை பாண்டுரோகங்களுக்கு சரியான சிகிச்சைகள் செய்யாவிடில் விஷபாண்டுரோகம் உண்டாகும்.

விஷபாண்டு:— அரோசகம், காங்கை, தாகம், இருமல், வாந்தி விக்கல், அதிகவாசம், வயிறுவரச்சல், அதிசாரம், மார்பு கனத்தல், மிகுசுரம், தேகம் வெளுத்து அல்லது மஞ்சளித்து ஊதல், பஞ்சேந்திரியத் தன்மை குன்றல் என்னும் குணங்களுடையது. இது கடினசாத்தியம்.

பாண்டுநோயில் சாத்தியா சாத்தியம்:— பாண்டுரோகிகட்கு விக்கம், சோம்பல், தாகம், அரோசகம், வாந்தி, விக்கல், இருமல் பேதியென்னும் குணங்களுண்டாகி என்ற வஸ்துவை பார்த்தாலும் மஞ்சள்நிறமாக தோற்றதல், கண்களிலும், நகங்களிலும், மஞ்சள்

நிறமும் உண்டாகில் அசாத்தியம். இக்குறிகள் ஒன்றும் இல்லாம லிருந்தால் சுகசாத்தியம்.

காமாலை

பாண்டு நோயில் பித்தாதி உணவுகளை அருந்தி, பித்தம் அதிகரித்தல் ரக்த மாம்ச தாதுக்களைத் தாக்கி, பித்தாதிக்க குணங்களைப் புண்டாக்கி இந்நோயைப் பிறப்பிக்கும். இது ஸாதகாமாலை, வாட்காமாலை, வாதகாமாலை, பித்தகாமாலை, சிலேஷ்மகாமாலை, வாத சிலேஷ்மகாமாலை, சிலேஷ்மபித்தகாமாலை, தொந்தகாமாலை, மஞ்சட் காமாலை, அழுகுகாமாலை, செங்கமலக்காமாலை, கும்பகாமாலை, குன்ம காமாலை என பதின்மூன்று விதங்களாம்.

1. ஸாதகாமாலை:—சரீரம் விக்கத்துடன் கனத்தல், நிமிர், எரிச்சல், உள்ளங்கை, கால், கண், சரீரம் இவைகளில் வெளுப்பு, கால் கை ஓச்சல், மிக்கல், இளைப்பு, மலபந்தம், முகத்தில் மஞ்சள்நிறம், காதமந்தம், சிரோபாரம், நகசுழலல், நயக்கம், மஞ்சள் மூத்திரம் என்னும் குணங்களுடையது.

2. வாட்காமாலை:—கால்களவற்றல், அசதி, மூத்திரமானது கடுகையுடன் கறத்தலது வெந்தலது இறங்கல், சரீரத்தில் குத்தல், அருசி, பார்வைமந்தம் என்னும் குணங்களுடையது.

3. வாத காமாலை:—பயிறபொருமல், விக்கம், மலபந்தம், புறங்காலும் முகமும் அறைத்தல், சோம்பல், கண்பருத்தல், தாக்கம் என்னும் குணங்களுடையது.

4. பித்த காமாலை:—மயக்கம், நயக்கம், நித்திரைபங்கம், சரீர சுட்கம், படுக்கையாக கிடத்தல், அரிணம், அதிஸ்வாசம் சோறு சோறுகேறி, பயிறிரைச்சல், அசதி என்னும் குணங்களுடையது.

5. சிலேஷ்ம காமாலை:—நகமிலும் மூத்திரமிலும் விபர்வை, ஸ்வாசம், இருமல், நேரடைத்தல், மாரியுனைத்தல், ஸடைதளர், கண் வெக்குதல் என்னும் குணங்களுடையது.

6. வாதசிலேஷ்ம காமாலை:—வாத, சிலேஷ்ம காமாலைகளின் குணங்களின் ஏகாலத்தில் உடையது.

7. சிலேஷ்மபித்த காமாலை:—சிலேஷ்ம, பித்த காமாலைகளின் குணங்களின் ஏகாலத்தில் உடையது.

8. பித்தவாத காமாலை:—வாத, பித்த காமாலைகளின் குணங்களின் ஏகாலத்தில் உடையது.

9. மஞ்சட் காமாலை:—முகம், கால், கை, உண்ணாக்கு, மூத்திரம் முதலியவைகளில் மஞ்சள நிறம், முகத்தில் மினுமினுப்பு, சரீர முழுதும் ஊதல், அன்னத்வேஷம், அழுகை, ஸ்வாசத்தில் மஞ்சள் நாற்றம் வீசுதல், நாதஸ்தம், மலபந்தம், என்னும் குணங்களுடையது.

10. அழுகு காமாலை:—சரீரவாட்டமில்லாமல் வெப்பத்துடன் மினுமினுத்தல், நககர்ணாதி, புருவம், கண், மூத்திரம், இவைகளில் மஞ்சள்நிறம், தூண்குறியில் எரிச்சல் அரிணம், வயிற்றுப்பிசம் என்னுங்குணங்களுடையது.

11. செங்கமலக் காமாலை:—தாமதகுணம், தேகம் தளர்தல், சோம்பல், மூத்திரம் சிவந்தலது மஞ்சள் நிறத்தடனலது அருசி சோம்பல், மூத்திரம் சிவந்தலது மஞ்சள் நிறத்தடனலது அருசி இறங்கல், உடலும் நகமும் வெளிறலுடன் கட்டித்தல், சுரம், அருசி இறங்கல், உடலும் நகமும் வெளிறலுடன் கட்டித்தல், சுரம், உண்ணாக்கு, நாவு, உமிழ்நீர் இவைகளில் மஞ்சள் நிறம் என்னும் குணங்களுடையது.

12. கும்ப காமாலை:—தேகம் கண்டுகண்டாக வீங்குதல், அடிக்கடி கனை, தேகமும், சிறுநீரும் மஞ்சள் நிறம், மாலைகாலத்தில் விபர்வை, கண்வெந்தல், சரீரச்சோர்வு என்னுங்குணங்களுடையது.

13. குன்ம காமாலை:—அன்ன ஜீரணகாலத்தில் அடிவயிறு வலித்தல், வாந்தி, கண்களில் மஞ்சள்நிறம், மஞ்சள்நிறத்துடன் குழம்பியமூத்திரம், வாய்வெளிர்தல், மனதிற்கு ஒன்றுந்தோன்றுமை, இருமல், இளைப்பு என்னும் குணங்களுடையது.

காமாலை நோயில் சாத்தியாசாத்தியம்:—பித்தகாமாலை, மஞ்சட் காமாலை சிலேஷ்மகாமாலை, ஸாதகாமாலை, வாட்காமாலை, வாத காமாலை சிலேஷ்மகாமாலை, பித்தசிலேஷ்மகாமாலை என்னும் இவ்வேழும் சாத்தியம். மற்ற ஆறும் அசாத்தியம்.

சோபை

சன்னிபாதம் முதலிய காய்களின் விஷங்கள் தேகத்தில் ஊறுதல், நிறையிலிருத்தல், அடிபடுதல், நெடுந்தூரம் நடத்தல், மலைவாசம், நீர்கலைவாசம, சாம்பல்மண் இவைகளை தின்னுதல், ரத்தம் முறிதல் என்னும் இச்செய்கைகளினால் சோபை உண்டாகும். இந்த விதம் சிலசிலமாகவும், முடிச்சுமுடிச்சாகவும், பருமனாகவும், சர்வாங்கத்திலும் ஒரே காலத்தில் வியாபித்தால் நிசசோபை யென்றும் இது முதலில் ஒரு அவயவத்தில் உண்டாகி பின்பு மற்ற அவயவங்களில் பறவுமாகில் ஆகந்துக சோபையென்றும் பெயர்.

இது வாதசோபை, பித்தசோபை, சிலேஷ்மசோபை, வாதபித்தம், வாதசிலேஷ்மம், பித்தசிலேஷ்மம், திரிதோஷசோபை, அபிகாத சோபை, விஷசோபை என ஒன்பது வகைப்படும்.

வாதாதி திரிதோஷங்களின் பிரகோபத்தினால் உண்டாகும் விக்மானது அந்தந்த தோஷங்களின் பிரகோபத்தினால் அந்தந்த குணங்களை அடைந்திருக்கும்.

ஆயுதங்கள் முதலிய காயங்களினால் உண்டாகும் சோபைக்கு அபிகாத சோபை என்றும் விஷமருந்துகள், அபக்குவ ரச பாஷாண-

மருந்து முதலியவைகளை அருந்துவதினால் உண்டாகும் சோலைக்கு விஷசோலை என்றும் பெயர்.

உபத்திரவமில்லாமல் வீக்கம்மாத்திரம் கண்டால் சுகசாத்தியம்.

சரீரமுழுவதும் பூசினாற்போல் வியாபித்த வீக்கமானது செடு ரளாகியும் போகாமல் அதிக சோலைத் தருவதாயிருந்தாலும், புரு ஷர்களுக்கு முதலில் பாதத்தில் கண்டு பின்னர் உபத்திரவத்துடன் மேலேறினாலும், மாதர்களுக்கு முதலில் முகத்தில் கண்டு பின்னர் அதோமுகமாக இழிறங்கினாலும், புருஷர்களுக்காவது மாதருக்காவது யோனி, குதம், அல்குல், அண்குறி என்னும் இடங்களில் வீக்கம் கண்டு அக்காலத்தில் வாந்தி, சுரம், சுவாசம், பேதி, குதம் வெளிப் பட்டு அதில் புழுவூருதல்போல் இருத்தல் என்னும் குணங்களுண் டானாலும், வீக்கங்கண்டு வடிந்தவுடன் பேதியுஞ் சுரமும் கண்டு இவை நீங்கியபின்பு வீக்கம் ஏறினாலும் அசாத்தியம். தர்ப்ப காலத் தில் முகம் கைகால் என்னும் இடங்களில் வீக்கம் ஏறினாலும் அல்லது தேகம் சுட்டித்து முன்சொன்ன அவயவங்களில் வீக்கம் ஏறினாலும் ஒரு மாதத்திற்குள் மரணத்தை யுண்டாக்கும்.

விசர்ப்பி ரோகம்

சோலை ரோக குணங்களுடன் பலவிற கொப்புளங்களையும் சுரரோக குணங்களையும் அடைத்து தேகத்தில் உட்புறம் வெளிப்புறங் களில் ஒவ்வொரு காலத்திலாவது அல்லது எகாலத்திலாவது இரு புறத்திலும் பிறக்கும். இது புருவம், உச்சி, கண்டம், மார்பு, மார் புக்குக்கீழ், உந்தி, உதடு, பீஜம், முழங்கால், கணுக்கால், இடுப்பு, காலின்பெருவிரல், சட்டுவிரல், தோள் என்கிற பதினைந்து மர்ம ஸ்தானங்களிற்பற்றி சிக்கிரத்தில் பாவுதலால் விசர்ப்பிரோகம் என பெயர்பெற்றது. விசர்பியானது தோஷபேதங்களினால் 7-விதமும், சந்திவிசர்பி என ஒன்றும் உண்டு. இவைகள் வயிற்றில் சுமில்லாத காலத்தில் மட்டுப்படும்.

1. வாதவிசர்பி:—உடம்பெங்கும் எகாலத்தில் தளதளப்பான வீக்கம், அவ்வீக்கத்தின்மேல் கறுத்த கொப்புளங்கள் எழும்புதல், மிகுதோய், சரீரம் அடித்து கலைத்ததுபோ லிருத்தல், ஜுரசம், இளைப்பு, தாகம், வாதரத்தக்குள்ள குறிகள் என்னும் குணங் களுடையது.

2. பித்தவிசர்பி:—சரீர முழுதும் விரைவில் வியாபித்தல், அவ்வீக் கத்தின்மேல் மஞ்சள் அல்லது சிவந்நிற கொப்புளங்கள், மிகுஜ்வ ரம், பித்தரோகுணம் என்னும் குணங்களுடையது.

3. சிலேஷ்மவிசர்பி:—தேகமுழுதும் மிருமிருப்பான வீக்கம், அவ்வீக்கத்தின்மேல் வெளுத்த கொப்புளங்கள், தினவு, சிலேஷ்மரோ குணங்கள் என்னும் குணங்களுடையது.

4. வாதபித்தவிசர்பி:—சோலை, சுரம், பேதி, தாகம், மூர்ச்சை, வாந்தி, பிரமை, எலும்பு தொறுங்கினதுபோல் சோதல், அக்கினி மந்தம், அரோசகம், அபத்திய வஸ்துக்களிலிச்சை, சரீரத்தில் எரிச் சல், இவ்வெரிச்ச லுண்டாகும் இடங்களறுத்தல், எரிச்சலில்லாத விடம் சீலநிறம் அல்லது ரத்த நிறம், கொப்பு கொப்புளங்கள்போல சர்வாங்கத்திலும் கொப்புளங்கள் எழும்புதல், நித்திரை கெடுதல், சிலவேளை மேல்வாசம், வீக்கல், புளல், முதலியன காணும். கொப்பு கொப்பளங்கள்போல் எரிச்சல் தருவதால், இதனை அக் கினி விசர்பி என்றுஞ் சொல்லப்படும். இது மனதையும் சரீரத்தை யும் பற்றியதால் ரோகிக்கு கிலேசமும், அறிவு குறைதலும் அதி நிலையுந்தரும்.

5 வாதசிலேஷ்ம விசர்பி:—ரத்தசாது சிருங்கியடைந்தவனது சருமம், சரம்பு, சன்ன சரம்பு, மாமிசமென்னு மிவைகளில் தங்கிய இந்தபாவனை தடிக்கச்செய்து அதை நீண்டவடிவும், வட்டவடி வும், பருத்தவடிவும், சிறுத்த கொப்புளவடிவும், புடைபோல் தடித்த வடிவுமாகத் திரட்டிவிடும். பின்பு அவைகள் ரத்த நிறத்துடன் மேலெங்கும் பலாலையப்போல் வரிசைவரிசையாக அதேக உபத்திர வங்களைத் தருமபடியான கிரந்திகளாக எழும்பும், அப்போது சரு மம் சிவத்தல், சுரம், இளைப்பு, இருமல், பேதி, சரீரநோய், வாயு லால், வீக்கல், வாந்தி, உள்ளெரிச்சல், சோருதல், மாறுநிறம், மூர்ச்சை, அக்கினிமந்தம் முதலிய குணங்களுண்டாகும். கிரந்திகளை உண்டாக்குதலால் இதனை கிரந்திவிசர்பி எனறுஞ் சொல்லப்படும்.

6. பித்தசிலேஷ்மவிசர்பி:—மாந்தல், சுரம், நித்திரை, சோம்பல், நிமிர், முறுக்கல், பிதற்றல், அரோசகம், பிரமை, மூர்ச்சை, அக்கினிமந்தம், அல்சிகளிற்சோய், தாகம், பஞ்சேந்திரியகனத்தல், சிதபேதி, தேகமூதல், வீக்கத்தால் சரீரத்தின்மேல் கறுத்தும், மிரு மிருத்தும் வெளுத்தும் அழுக்குநிறமான அதேக கட்டிகளுண்டா கும். அவைகள் அதிக பிரசாசையாய் பழுத்து உடையும், மாமி சத்தை சேறுபோல அழுகச்செய்து சன்ன சரம்பையும், ரத்த சரம்பையும் கைப்பற்பண்ணி மேலில் பிரேதசாற்றத்துடன் சேற்ற நிறம் கொடுத்திருக்கும். இதனை பங்கவிசர்பி என்றுஞ்சொல்லுவார் கள். துணுக்காய் கிரந்தி எனறுஞ் சொல்லுவார்கள்.

7. திரிதோஷ விசர்பி:—மேற்கூறிய திரிதோஷங்களின் குணங்கள் எகாலத்தில் உண்டாகி விரைவில் சப்தசாதுக்களி லும் பரவும். இதற்கு சர்வவிசர்பி என்றும் பெயர்.

சுத்த விசர்பி:—ஆபத்து முதலியவற்றால் காயப்பட்டு அக்காயங் களை சரியான சிகிச்சை செய்யாவிடில் உதிரங்கெட்டு தேகமுழு தும் கொள்ளுப்பிரமாணம் கருநிறஞ் செம்நிறம் உள்ள கொப்புளங் கள் உண்டாகும். இதனால் தேகத்தில், வீக்கம், சுரம், நோய், தாகம் முதலியது உண்டாகும்.

சாத்தியாசாத்திய விசர்பிகள்:—நிரோஷிசர்பிகள் சாத்தியம். தொந்தங்கள் அசாத்தியம்.

மசூரிகை

முதலில் சாதாரண கடலைப் பிரமாணம் கொப்புளங்களுண்டாகி முத்துகள்போல் எழும்பும். அப்போது வாயுவால், சீர உஷ்ணம், கீல்களில் தளர்ச்சி, அரோசகம், உரோமச்சிலிர்ப்பு, தலை நோய், கண்நோய், மூக்கடைப்பு என்னுங்குணங்களுண்டாகும். கொப்புளங்கள் ஒன்பதாள் இருக்கும். இதற்கு வைசூரி நோய் அல்லது அம்மை நோய் என்ற பெயர். கொப்புள பேதங்களால், பெரியம்மை, சின்னம்மை, பனிவரி, தட்டை, பயறி, ரமக்கம் எனவும் வழங்குகிறார்கள். இது குழந்தைப் பருவமுதல் கிழவயது வரையிலுங்காணும். இந்த நோய் எழும்பப்பற்றி பிறக்கும்.

இது ஒன்பது வகைப்படும். அவை: தோடவிதற்பம் முதலிய அகக்காரணங்களினால், வாத, பித்த, சிலேத்துமை, வாதபித்த, பித்த சிலேத்துமை, வாதசிலேத்துமை, நிரோஷ மசூரிகைகள் என ஏழுவகையும், இரத்த மசூரிகை என ஓர் வகையும், அடிபடுதல் முதலிய புறகாரணங்களினால் எற்படும் ஆகந்துக மசூரிகை என ஓர் வகையும் ஆம்.

இவற்றுள் முதலில் கூறிய வாதாதி தோஷங்களினால் எற்படும் ஏழு வகை மசூரிகைகள் பொதுவாக மசூரிகை நோய்க் குறிய கொப்புளம் முதலிய குணங்களுடன் அந்தந்த தோஷத்தின் இயற்குணங்களையும் பெற்றிருக்கும்.

இரத்த விதமான கொப்புளங்கள் உண்டாவதை இரத்த மசூரிகை யென்றும், முதலில் ஓர் இடத்தில் அல்லது ஓர் உருப்பில் தோன்றிப் பின்னர் உடற் முழுவதும் வியாபிப்பதை ஆகந்துக மசூரிகை எனவும் வழங்கப்படும்.

சில நூல்களில் கொப்புளங்களின் அளவு அல்லது உருவத்தைக் கொண்டு இந்த மசூரிகைரோகத்தை எட்டுவிதங்களாகச் சொல்லப் பட்டிருக்கின்றது. அவைவன:—மசூரிகை, சதமூரிகை, அசுரை, சோத்திரம், கங்கு, விஸ்போடம், அபாகி, விசர்பை என்பனவாம்.

1. மசூரிகை:—தோலத்தில் கடலையைப்போல் சிறுத்தும், சிவந்தும், அடுக்கடுக்காக கொப்புளங்கள் எழும்பும். இதனால் வீக்கம் நினைவு உண்டாகும்.

2. சதமூரிகை:—கடுகைப்போல் நிறமும் உருவமும் உள்ள கொப்புளங்கள் எழும்பும். இதனால் உடலில் எரிச்சல், நோய், ரத்தமூத்திரம் உண்டாகும். இது கஷ்ட

3. அசுரை:—பருத்தும் நடித்தும் இரணத்தைத் தருவதாய் அதிக கொப்புளங்கள் எழும்பும். இதனால் கீல்களிலும் முகத்திலும், வீக்கம், தாகம் பிரமிப்பான சகல சிமும் உண்டாகும்.

4. சோத்திரவம்:—சர்வாங்கத்தில் வாதுபோல் கொப்புளங்கள் எழும்பும் இதனால் உபத்திரவங்களுண்டாகும்.

5. கங்கு:—சீர முழுதும் சாமை என்னும் தானியத்தைப் போல் கொப்புளங்க ளெழும்பும்.

6. விஸ்போடகம்:—பாதம்முதல் சிரபரியந்தம் நெருப்புக் கொப்புளத்தைப்போலவே பெரிய பெரிதாக கொப்புளங்கள் எழும்பும். இது அசாத்தியம்.

7. அபாகி:—தேகத்தில் தூர தூரமாக உள்ளதுபோலும் கருகினதுபோலும் கொப்புளங்க ளெழும்பும். இவைகள் பெரிதாக இரங்காமல் உபத்திரவத்தை தரும். இது அசாத்தியம்.

8. விசர்பை:—மயிலிறகின் கண்ணைப்போல் பலநிறமாக கொப்புளங்கள். எழும்பும். இதனால் சீரம் ஊறல், வீக்கம், தாகம் என்னும் குணங்கள் உண்டாகும். இது உபத்திரவத்தை உண்டாக்கும்.

சகல மசூரிகை ரோகங்களிலும் முத்துகள் என்கிற கொப்புளங்கள் சிக்கிரத்திற் பிறந்து மறைந்தாலும், முதல் முதல் சிறு கடலைப்பருப்பைப்போல் தோன்றி கண்டம் வரையிலும் பிரமல் பலமுகுண்டுகளைப்போல் பருத்து குழிகள் விழுந்தாலும் மச்சங்களைப்போல் கருகி கறுத்தாலும் அசாத்தியமாம்.

விஸ்போட நோய்

பித்தாதிக்கத்தினால் இரத்தம் கொதிப்புற்று சுரம், எரிச்சல், உதடுலால், சீர உஷ்ண என்னுங் குணங்களுடன் சர்வாங்கமும் மறையும்படி சிறிதும் பெரிதுமாக தேகமுழுதும் அதிக கொப்புளங்களெழும்பும். (விஸ்போடமென்பது அதிக கொப்புளம்.) இது சீதபித்தம், ஆமபித்தம், ஆமலபித்தம், கூர்த்திரம் என நான்கு வகையாம்.

சீதபித்த விஸ்போடம்:—அகன்ற பாவுதாரும் வஸ்திரமாயும் சந்த நிறந்தோய்ந்துடிய புடைகள் தேகமுழுதிலும் எழும்பும். அவைகளில் சதா சமைச்சல் உண்டாகும்.

ஆமபித்த விஸ்போடம்:—தேகம்தறுத்துப் பலநிறமான புடைகள் எழும்புதல், விபர்வை, மூர்ச்சை, தாகம், சோளை, வாந்தி, தலைவலி, சுரம், வயிறுமார்பு கண்டம் இவைகளில் எரிச்சல், சதாதுவற்றதல் என்னுங் குணங்களுடையது.

ஆமலபித்த விஸ்போடம்:—சரீரத்தில் வஸ்திரகாரமான புடைகள். பலநித நிறங்களைப் பெற்ற கொப்புளங்கள் அவைகளில்

மாருதினவும், புளிப்பும் காரமான வாந்தி, மார்பில் எரிச்சல், மார்பு அதில், தேகம் பரிப்புடன் சுடுகை, அரோசகம், மூர்ச்சை, சோர்வு பிதற்றல், பிரமை, இளைப்பு, இளைப்பு, தாகம், கண்ணில் இருட்டம் மல் என்னும் குணங்களை யுடையது.

கஷ்திர விஸ்போடம்:—சர்வாங்கத்திலும் எரிச்சலோடு கியர்க்குறப்போல சிறிது சிறிதாக அதே சொப்புளங்கள் எழும்பி, ஆதியில் சாமும் அந்தத்தில் பேதியும் உண்டாகும்.

குஷ்டரோகம்

குஷ்டரோகமானது சரீரம் பளபளப்பு, மாறுநிறம் கடினத் தடன் தடித்த சருமம், அச்சருமத்தில் கொட்டளிடத்தில் நின்வு, கியர்வை, எரிச்சல், உரோமச் சிலிர்ப்பு, சொந்தம் காயம் பட்டிடு னும் பெரிய விரணமாதல், அதில் கறுத்த உதிரம் வடிதல், அதிதி தினை, மிகுவிரணம், குழிவிரணம் முதலிய குணங்களைப் பெற்றிருக் கும். இதற்குக் குறைசோய், தொழுசோய், பெரும்கியாதி என வேறு பெயர்களுமுண்டு.

வாதாதி தோஷத் தொக்கபேதத்தினால் குஷ்டரோயானது பதி னெட்டு வகைப்படும். அதாவது, வாதத்தால் கபாலகுஷ்டமும், பித்தத்தால் அருணபாகுஷ்டமும், சிலேஷ்மத்தால் மண்டலகுஷ்ட மும், விசர்ச்சிகாகுஷ்டமும், வாதபித்தத்தால் ருஷ்யஜிஹ்மிககுஷ்டமும் சிலேஷ்மபித்தத்தால் சருமகுஷ்டமும், எககுஷ்டமும், கிடிபகுஷ்ட மும், சித்மகுஷ்டமும், அலசகுஷ்டமும், சிலேஷ்ம வாதத்தால் விபா தகாகுஷ்டமும், திரிதோஷத்தால் சத்குருகுஷ்டமும், புண்டரீக குஷ்டமும், சதாருகுஷ்டமும், விஸ்போடகுஷ்டமும், பரமகுஷ்ட மும், சர்மதளகுஷ்டமும், காகணகுஷ்டமும், பிறக்கும். இவற்றுள் அருணபாம், மண்டலம், ருஷ்யஜிமிகம், புண்டரீகம், கபாலம், காகணம் என்னும் ஆறு குஷ்டங்களே மகாகுஷ்டங்களென்று கூறப் பட்டுள்ளது.

1. கபால குஷ்டம்:—கபாலத்தைப்போல் வெளுத்த சொப்பு எங்களும் விரணங்களும் உண்டாகி பின்னர் குழிவிழுந்த சிறுத் தண்ணீர் ஒழுகுவதாகவும் இருக்கும்.

2. அருணபாப குஷ்டம்:—அந்திப்பழத்தை போன்ற சொப்பு எங்களையும் விரணங்களையும் யுடையது. விரணத்தில் இரத்தம் வடிதலும், புழுக்கள் ஊருவதும், நினவும், உடல் உளைவும், மயக்கமும் உண்டாகும்.

3. மண்டல குஷ்டம்:—இதில் சொப்புளங்கள் பலவித நிறத் தையுடையதாயும் மினுமினுத்தும் சுன்பட உடைத்து ஒன்ய்சேர்ந்த மண்டலாகாரமான விரணத்தை யுண்டாகும். அவைகளில் புழுக் களும் சீழும் ஒழுகிக் கொண்டிருக்கும். விரணத்தை சுற்றிலும் மஞ் சள் நிறமான சருமம் உண்டாகும். சிலதும் சர்வாங்கத்திலும் ரணங்கள் தடித்து கறுத்தல் அதில் ரத்தம் வடிதல் என்னும் குணங்க ளுடையது.

4. விசர்ச்சிகா குஷ்டம்:—இதில் சொப்புளங்கள் கறுப்பு நிற மாயும் பின்பு உடைத்து விரணமாகி அவைகளில் சிலசீர் ஒழுகு தலும், அதிகவாய், எண்ணெயை தடவினதுப்போலிருத்தல், வெளி றல், எரிச்சல், வேதனை, வெந்த தடிப்பு, என்னும் குணங்க ளுடையது.

5. ருஷ்ய ஜிம்மிக குஷ்டம்:—சொப்புளங்கள் முன்னேப்போல் மெல்லியதாய் சீண்டும் பிசபிசத்தும் சுறசுறத்தும் உள்ளில் கறுத் தும் முனையில் வெந்தும் சொருக்கமாக எழும்பி விரணங்களாகி அவை களில் புழுக்களும் எரிச்சலும் உண்டாகும்.

6. சர்மகுஷ்டம்:—தோலானது மஞ்சள் நிறமாயும் வெந்த நிறமாயும் மீன்களின் சிதையொத்து சுறசுறத்து தடித்து கின்னெனும் உபத்திரவமில்லாமல் காயம்பட்டால் தெரியாமலும் இருக்கும். சருமம் தடித்தல், அதில் சீழ்வடிதல் சொறி யுண்டாதல், எரிச்சல், கண்டு கண்டானதடிப்பு என்னும் குணங்களுடையது. இதனை மேகப்படை நிமிர்படை என்றும் கூறுவர்.

7. ஏகசர்மகுஷ்டம்:—சரீரத்து தோல்முழுதும் யானையின் தகிக்கைப்போல் தடித்த பார்வைக்கு விகாரமாயிருக்கும். தேக முழுதும் தோல் உரித்து கிலத்தல், வறவறப்பு, சொறி, தினவு, நிமிர், கால் விரல்கள் கனத்தல் சர்வாங்கத்தில் வீக்கம் என்னும் குணங்களுடையது. இதனை சடை குஷ்டம், யானை குஷ்டம், எனவும் கூறுவர்.

8. கிடிப குஷ்டம்:—சொப்புளங்கள் சுடுகையுடன் எழும்பி விரணமாகி அவைகளில் அதிக ஸைச்சல் சொறிந்த இடத்தில் காய்ப்பேரினதுபோல் பிருத்தல், தடித்தல், சர்வாங்கமும் கனத்தல், யானைதோலைப்போலிருத்தல், அடிக்கடி சீர் இறங்கல், தேகத்தில் சினசீர் வடிதல், தாகாற்றம் என்னும் குணங்களுடையது.

9. சித்மா குஷ்டம்:—இதில் மிகவும் புடைகல், பெரும்பான் மையும் ஊர்த்துவ தேகமான சரிக்குமேல் வெளுத்த சொப்பு நிறத் தடன் உண்டாகி அவைகளின்மேல் மினுமினுப்பும் சொறிதல் சருமத்தின் விழுவதும், அவ்விடங்களில் வழுவழுப்பதும், சரீரமுழு தும நிமிருடன தடித்தல், மஞ்சள் நிறம், அதில் ரத்தம் கசிதல், சங்க வொண்ணாத நிமிர், மறதி என்னும் குணங்களுடையது.

10. அலசகுஷ்டம்:—இதில் ரத்தநிறமான சிறுகுழாய்க்களைப் போல் சொப்புளங்கள் விஸ்தாரமாக யுண்டாகி உடைத்து விரணங்க ளாகி அவைகளில் அதிக ஸைச்சல் உண்டாகும்.

11. விபாதிகா குஷ்டம்:—கால்களிலும் கைகளிலும் வெகு கடினமான கொப்புளங்களுண்டாகி விரணங்களாகும். தேகத்தில் வெடித்தலுடன் சகிக்கக்கூடாத அருவருப்பு, கை கால் கண் காது கண்டம் இவைகளில் வெடிப்புடன் வீக்கம் சர்ப்பத்தையொத்த தேககாந்தி ஆன்னும் குணங்களுடையது.

12. தத்தரு குஷ்டம்:—முதலில் மண்டலாகாரமான கொப்புளங்கள் பெழும்பி பிறகு கரும்பி கறுப்பு அகத்திப்பூ நிறத்தைப் போன்ற விரணங்களாகும். தேகத்தில் வெகு தடிப்பு, வெளிறல், ஊதலுடன் நிமிர் என்னும் குணங்களுடையது.

13. சதாரு குஷ்டம்:—வெகுமம் கறுத்தும் அடியகன்றும் அனேக கொப்புளங்கள் உண்டாகி சர்வாங்கத்திலும் பரவப்பட்ட விரணங்களாகி அவைகளில் எரிச்சலும் வலியும் விருமியும் அதிகரித்தல் நாசி, கண், காது, சன்னம் இவைகளில் தடிப்பு என்னும் குணங்களுடையது.

14. புண்டரீக குஷ்டம்:—கொப்புளங்கள் மிக உயர்ந்து முகில் ரத்தநிறம், நடுவில் வெண்மைநிறம் உள்ளதாக ஏற்பட்டு பின்னர் தாமரைப்பூ நிறத்தையொத்த விரணங்களாகி சோய், எரிச்சல், ஸ்மச்சல் குழம்பான சிலேஷ்மவடிதல், ரத்தஞ் சேரிதல் என்னும் குணங்களுடையது.

15. விஸ்போட குஷ்டம்:—கொப்புளங்கள் வெகுமும் வெளுத்தும் விரைந்து எழும்பி விரணங்களாகி அதில் நினவு எரிச்சல் உண்டாதல், சருமம் மிருதுவாக பிருத்தல், விஷ எரிச்சலையொத்த எரிச்சல், வெளிறல் என்னும் குணங்களுடையது.

16. பாமா குஷ்டம்:—கொப்புளங்கள் கறுத்தும் சிவந்தும் நெருத்தம பெருக்கமாக இரண்டு முன்னையிலும் முழங்காலிலும் தொடைகளிலும் எழும்பி விரணங்களாகி அவைகளில் சோயும் வறவறப்பும் மிகு நினவும் சிலேத்தண்ணீர் சிவுவம், சருமம் விரிதலுடன் வீக்கம் கால் கை குறைதல் என்னும் குணங்களுடையது.

17. சர்மதல குஷ்டம்:—கொப்புளங்கள் பிறக்கும் இடங்களில் சிவந்த நிறம் அதிக நினவு தொடக்கூடாத சோய் உண்டாகி கொப்புளங்கள் எழும்பி விரணங்களாகும். குத்தல் எரிச்சல் உண்டாகும். தேகத்தில் கீற்று கீற்றாக வெடித்தல் வேதனை தொடக்கூடாமை, அதில் ரத்தம் வடிதல், வயிற்றவலி என்னும் குணங்களுடையது.

18. சாகச குஷ்டம்:—கொப்புளங்கள் சிவந்த நிறத்துடன் உண்டாகி பிறகு கறுத்து விரும்பு மொக்கின் உருவத்தைப்பெற்று உடைத்து விரணங்களாகி அவைகளில் அதிக எரிச்சல் சோய் முதலிய குணங்களும் உண்டாகும்.

மேற்கூறிய பதினேட்டு குஷ்டங்களே தவிற கர்ணகுஷ்டம், கிருஷ்ணகுஷ்டம், அபரிசகுஷ்டம எனவேறு மூன்று குஷ்டரோகங்கள் உண்டென்றும் சில வைத்திய நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

கர்ண குஷ்டம்:—சர்மத்தில் பச்சைவண்ணத்துடன் பொரி பொரியாக வெடித்தல், தேகம் பரிந்து நிறுடன் காக்கட்டான் பூநிறமாக தோற்றுதல், தடிப்பு வீக்கம் என்னும் குணங்களுண்டாம்.

கிருஷ்ண குஷ்டம்:—சர்வாங்கம் கறுத்தல், சர்மத்தில் நிறுடன் சாற்றம் வீசுதல், சோதல், சப்தாதாதுக்களும் உஷ்ணமாயிருத்தல், அரையிலும் புறங்களிலும் கொஞ்சமாயும் ரகில் அதிகமாகவும் விரணங்களாதல், புத்தி சஞ்சலமுறுதல் என்னும் குணங்களுண்டாகும்.

அபரிச குஷ்டம்:—சர்வாங்கத்திலும் கறுத்த ரத்தம் வடிதல், சோய், தொடக்கூடாமை, வீக்கம், வெடிப்பு என்னும் குணங்களுடையது.

வெண்குஷ்டம்

இச்சோயைக் குஷ்டமெனக் கூறினும், இதுகுஷ்ட வகைகளினின்று வேறுபட்ட தென்பதையும் குஷ்டத்தைப்போல அவ்வளவு கொடுமையான வியாதி அல்லவென்றும் உணர வேண்டும். இச்சோயால் திட்டு திட்டாக வெண்மை நிறமான படைகள் உண்டாகி பிறகு தேகம் முழுதும் பரவி உடலே விகாரப்படுத்துதல் முதலிய குணங்களையுடையது. இது வாத வெண் குஷ்டம், பித்த வெண் குஷ்டம், சிலேத்மவெண் குஷ்டம் என மூன்றவகைப்படும்.

வாதவெண் குஷ்டம்:—இது கறகறத்து சிவந்து கொஞ்சம் கருமைச் சாயலுடன் வெளுத்திருக்கும். வெளுக்காத இடங்களில் அழுக்கு நிறமுண்டாகும்.

பித்த வெண் குஷ்டம்:—இது செந்தாமரைப் பூவிதழ்போல் சிவந்த வெளுப்பாக பரவுவதும் அவ்விடத்தில் எரிவதும உரோமங்கள் உதிருவதுமாக பிருக்கும்.

சிலேஷ்ம வெண் குஷ்டம்:—இது கும்பை மலரைப்போல் வெண்மையாக வெளுத்து கொஞ்சம் தடித்த பரவும். இது பரவுமிடங்களில் ஸ்மச்சல் உண்டாகும். இக்குஷ்டம் ரத்தாதுமாமிசாதுமேதோ தாதுவையும் பற்றும்போது கண்ணுக்கு அசம்பிமான நிறமும் தேகத்தில் வெடிப்பும் வீக்கமும் உண்டாகும்.

வெண்குஷ்டத்தில் சாத்தியா சாத்தியம்:— உரோமங்களெல்லாம் வெளுக்கப்பண்ணுமலும் கையால் தடவில் மேடுபள்ளம் இல்லாமலும சடை பின்னல் போலும் அக்கினியால் சுட்டாரிய வடுப்போலும் வெளுக்காமல் பிருக்கிற வெண்குஷ்டம் சாத்தியம். மேற்

கூறிய சாந்தியகுறிகள் மாராக பிருந்தாலும், முதலில் குதம் குய்யம், உள்வங்கை, உதடு, என்னும் இடங்களில் உண்டாகி கோரமாக சேஷித்தில் பாதினும் அசாத்தியம்.

கிருமி நோய்

இது கிருமிகளால் ஏற்படும் ஓர் நோய். இந்தக் கிருமிகள் இருபது வகைப்படும் இக்கிருமிகள் உண்டாகும் இடங்களைப் பொருத்து இந்நோயை ரண்டு வகையாகப் பிரித்துள்ளனர்.

புறமலக் கிருமி:—சரீரத்தின் மேற்புறத்தில் சேருகின்ற அழுக்கினால் யிட்சா பூசரன இருவித பூச்சிகள் புண்டாகும். இவைகளில் பூசர என்னும் பூச்சி உரோம ஸ்தானத்தில் என்றுபோல் உருவமும கறுத்த நிறமும மிகுந்த கால்களு முடையதாய்ப் பிறந்து சஞ்சரிக்கும். இது கடிப்பதினால் சிறு சிறு மச்சங்களும் யிலர்க்குருப்போல் அணு கொப்புளங்களும் உண்டாகும். யிட்சா என்னும பூச்சி அழுக்கு வஸ்திரங்களில் வெள்ளை என்றுரூப வண்ணங்களுடையதாய பிறந்து சஞ்சரிக்கும் இது கடிப்பதினால் சிறுகடிப்புகளும நினவும் உண்டாகும. இதுவே பாக்கிய மலக்கிருமியாம.

சிலேத்தும மலக்கிருமி:—இது சிலேத்தமத்தால் ஆமாசய ஸ்தானத்தில் பிறந்து உள்ளில் சஞ்சரிக்கின்ற கிருமிகள். இது ஏழு வகைப்படும். பெரும்பூசாக கிருமி, சீப்பருப்புக் கிருமி, செம்புகைக் கிருமி, சன்னசிலைக்கிருமி, அணுக்கிருமி, வெண்கிருமி, செங்கிருமி எனபவைகளாம. இவைகள் கால்களில்லாமல் வட்டமாக சுற்றிய தூலிப்போலும பார்வைக்கு தோணுமல் அணுப்போலவும தருப்பைப்பூ வாசனை பெற்ற குடலில் சுற்றிக்கொண்டு மாரிபமட்டும் ஏறி அதிக உபத்திரவங்களையுண்டாக்கும். அப்போது மார்பு அதில், வாய்நீரூல், அசினம், அரோசகம், வாந்தி, மூர்ச்சை, சுரம் எனலும் குணங்களுண்டாகும். இது பித்தத்தால் பிறக்கும்.

இரத்த மலக்கிருமி:—இது உதிரம் ஓடுகின்ற ரம்புஸ்தானங்களில் பிறந்து சஞ்சரிக்கின்ற கிருமிகள். இது ஆறு வகைப்படும். அணுக்கிருமி, வட்டக்கிருமி, கல்லைரக்கிருமி, மிகு சூட்சமக் கிருமி, செங்கிருமி, தோற்குக்கிருமி என்பவைகளாம். இவைகள் பெருங்கூட்டங்களாகி சப்த தாதுக்களிலும் பரி உரோமங்களிலும் உதிரப் பண்ணுவதுடன் உரோம கால்களில் அந்திப்பழ புழுக்களைப் போல் சஞ்சரித்துக் கொண்டு சுவாசமென்னும கிருமிபேதங்களுக்குத் தாயாயு மிருக்கும். இவைகளால் குஷ்டங்களைப்போலவே தேகத்தில் மாறுதிற முண்டாகும்.

அக மலக்கிருமி:—இது அதிகமலச் சேர்க்கையினலும் பச்சை தானியம் இலைகறி, கருணை சேமை முதலிய கிழங்குகள் முதலிய வகைகளைப் புசிப்பதினலும பக்குவாசய ஸ்தானத்தில் பிறந்து குளர்ந்து மலாசயத்தில் சஞ்சரிக்கின்ற கிருமிகள். இது ஐந்து

வகைப்படும். கபேருகம், மகேருகம், சவுரசம், சலூனம், வேலிகம் என்பவையாம். இவைகள் பெருங்கூட்டங்களாகி, மெத்த பருத்தும், சக்கரவடிவாயும், உரோமத்தைப்போல் மெல்லியதாயும், கறுப்பு நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும், கறுப்பு வெள்ளை கலந்த நிறத்தையும் பெற்று மலப்பையில் சஞ்சரிக்கும் இதனல் பேதி, சூலை, மலச்சிக்கல், உடம்பு இளைத்தல் தேகத்தில் சுறசுறப்புடன் வெண்மைநிறம், உரோமச்சிலிர்ப்பு, அக்கினிமந்தம், குத்தல், ரமைச்சல், எரிவு, என்னும் குணங்களுண்டாகும். ஒருவேளை அக்கிருமிகள் ஆமாசய ஸ்தானத்தைப்பற்றி எதிர்த்து ஏறும்போது வாயில் கசப்பு, தர்க்கம் இளைப்பு என்னும் குணங்களுமுண்டாகும்.

இவற்றுள் இறுதியில் கூறப்பட்ட சிலேத்தும மலக்கிருமி, இரத்த மலக்கிருமி, அக மலக்கிருமி, ஆகிய மூன்று வகைகளும் மதுரமான பொருட்கள், மாவுபண்டங்கள் முதலியவற்றை அதிக மாக அருத்தல் முதலிய காரணங்களினல் ஏற்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. இவைகளை அந்தர் மலக்கிருமி என்றும் வழங்கப்படும்.

வாத நோய்

சகல உயிர்களுக்கு ஆதாரமாயும் படைப்பிற்குக் காரணமாயு முள்ள வாயுவானது உண்ணுகின்ற உணவாதி பேதங்களினுலும், தகாத சடத்தைகளினுலும், தன்னிலை மாறி நோய்முகமாகத் திரும்பி எண்பதனிற வாதரோக்கள் உண்டாக்குகின்றது. அவைகளாவன:—

1. பாதாகேஷபக வாதரோகம்:—தினபொருள்களிலே புசித்து வருதல் முதலிய காரணங்களினல் வாதமானது இருபாதங்களிலிருக்கின்ற சப்த தாதுக்களை அநுசரித்து அப்பாதங்களை சடக்கும்போது ஒன்றுடொன்ற அடித்துக்கொள்ளச் செய்யும். எழுந்திரும் போதும் சடந்தாலும் சுற்றி விழுவதுபோலிருத்தல், கால்கள் உதறுதல் முதலிய சடந்தாலும் சுற்றி விழுவதுபோலிருத்தல், கால்கள் உதறுதல் தொடைகளில் வேதனை முதலிய குணங்கள் உண்டாகும். (பாதம் என்பது கால். ஆகேஷபகம் என்பது நடை.)

2. பாதலக வாதம்:—அதிக தின பிரதேசத்தில் இருப்பதினலும், தினசாற்றினலும் இந்நோய் உண்டாகி, வாதமானது உள்ளங்காலில் சேர்ந்துக்கொண்டு பாதத்தை தூக்கும்போதும் வைக்கும் போதும் களிமண் அப்பியதுப்போலும், செத்தை முதலியன ஒட்டிக் கொண்டதுப்போலும் தோற்றும். அப்போது கால்களில் மரத்தலும், கனத்தலும், சோதலும் ஒன்றுடொன்ற அடித்துக்கொள்ளுதலும் அதிக உறக்கமும் உண்டாகும். இது தெடுநாள் நீங்காது. இத்துடன் பித்தமாவது சிலேத்தமமாவது சேர்ந்தால் சாத்தியம். இரண்டும் சேர்ந்தால் அசாத்தியம். (லகம் என்பது பற்றுதல்.)

3. பாதஜானு வாதம்:—பாதத்தில் அநுசரித்த தினத்திற்கு மூடான ஒற்றடம் போடுவதினலும், அக்கினியில் காய்ச்சுவதினலும,

உள்ளங்காலில்லின்ற தினத்தினால் இச்சோய் பிறந்து அதிகரித்து, கால்களின் உரோமமெல்லாம் சிலிர்த்தல், மரத்தல், கனத்தல், நடுக்கல், குத்தல், அசைதலில் சீட்டலில் முடக்கலில் சோய் தெரியாமை, மந்தவடை என்னும் குணங்களுண்டாகும்.

4. அபிகாத வாதரோகம்:—அதிகவடை, வாகனங்களில் ஏறி விரைவில் செல்லல், மல்யுத்தம் செய்தல், தினவல்லுக்களோ புணர்தல் என்னும் செய்கைகளினால் உண்டாகி சர்வாங்கத்திலும் வியாபிக்கும் அப்போது உடம்பில் அசதி, சோய், பக்க இசிவு, நிமிர், முடக்குதல், கழலல், சர்வாங்கமும் அடித்து யலைந்ததுபோலிருத்தல், உள்ளில் வெட்டுவதுபோலிருத்தல், சுபாசம், சீட்டலில் முடக்கலில் மிகுந்த சோய் என்னும் குணங்களுண்டாகும். (அபிகாதம் என்பது அடிப்படல்.)

5. புச்சாவர்த்த வாதரோகம்:—பாதத்தில் தினம் அநுசரித்து இருக்கும்போது மீளவும் தினவல்லுக்களோ புணர்தல் தினத்தினை செய்வதினால் இந்த ரோகம் பிறந்து கைகால் விரல்களே அநுசரிக்கும். அப்போது விரல்களில் வெந்த நிறமும், சோயும், மரத்தலும் உண்டாகும். இது விருத்தியடைய விரல்கள் சீட்ட மடக்கக் கூடாமை ஏற்படும். (புச்சம என்பது விரல்கள். ஆவர்த்தம் என்பது சூழல்.)

6. சீதகண்டு வாதரோகம்:—பாதாரம்பில் மிகுசீதளம் சேருவதினால் இச்சோய் பிறந்து உள்ளங்காலில் அடிக்கடி தினத்தடன் மைச்சலே பிறப்பிக்கும். அப்போது பாதங்களில் கனப்பு, சோய், குத்தல், மிகுந்த தினவு உண்டாகும். இது சாத்திபம். (சீதம் என்பது குளிர்ச்சி. கண்டு என்பது தினவு.)

7. கப்தி வாதரோகம்:—தின காலத்தில் தின வண்டுக்கள் மிகுதியாய் சாப்பிடுதல், பகல் நித்திரை, ஆழ்ந்த பள்ளத்தில் உட்கார்தல் ஆகிய இவைகளினால் ஏற்பட்டு குதிக்கால், பாதம், விரல்கள், முழங்காலுக்கு கீழ் மேல், இடுதொடைகளுட்டி என்னும் இடங்களில் எதிலாவது நிலைத்துவிடும். அப்போது அதி உறக்கம், தேகத்தில் மரத்தல், கனத்தல், விக்கம், குத்தல் உண்டாகும். இது அதிகரித்தால் சர்வாங்கமும் சீட்டல் மடக்கலில் நடுக்கல் அதிகரிக்கும். இதற்கு உடனே சிகிச்சைசெய்யில் கஷ்டசாத்திபம். இல்லாவிடில் அசாதிபம். (கப்தி என்பது உறக்கம்)

8. பாதகண்டகவாதரோகம்:—உள்ளங்காலில் தினம் அநுசரிக்கும்போது உஷ்ண ஒற்றடம் போடுவதினாலும், காய்ச்சுவதினாலும் உண்டாகி கணுக்கால்களில் தங்கி கால்விரல்களின் சந்துக்களில் பரவும். காலைத்தாக்கும்போதும் வைக்கும்போதும் முள்ளு, சோய், ஊசிமுனை, கல், நகம் இவைகளால் குத்துவதுபோல் வேதனை, வலி உண்டாகும். இது அசாதிபம். (கண்டகம் என்பது முள்ளு)

9. களாயகஞ்ச வாதரோகம்:—தினகாலத்தில் தின பூமியில் சஞ்சரிப்பதினாலும் சதா உட்கார்ந்திருப்பதினாலும் மிகு நித்திரையாலும் பிறந்து சகல கீல்களிலும் தங்கி பிரகாசம் அப்போது தேகத்தில் சோய், விக்கம், எழுந்திருத்தல் நடுக்கல், சொண்டுதல், கீல்கள் தளர்தல், மரத்தல் கனத்தல் என்னும் குணங்களுண்டாகும். (களாயம் என்பது கீல். கஞ்சம் என்பது ஜனம்)

10. சம்பூசரிதை வாதரோகம்:—தினகாலத்தில் சிலேத்தும வஸ்துக்கள், பிண்ணாக்கு, வாயுவுள்ளவற்றல் முதலியவைகளோப் புணர்தல், அதிக வடை, பகல் நித்திரை, மிகுசையோகம் இவைகளால் பிறந்து முழங்கால்களில் கீல்களில் தங்கியிடும் அப்பொழுது முழங்காலில் விக்கம், நடிதல், மரத்தல், சோய், குத்தல், மலபத்தம், நித்திரை என்னும் குணங்களுண்டாகும். இதுவே சரித்தலே வாதம். (சம்பூசம் என்பது சரி. சிஷணம் என்பது தலை)

11. பாதோபகாத வாதரோகம்:—அதிகசீதள மந்த சிலேத்தும பொருள்களோப் புணர்தல், உட்கார்ந்து உறங்கல், மிகுசஞ்சாரம், புல், கல், சட்டை காலில்பட்டவேதனை, ஆகிய இவைகளினால் உண்டாகி தொடைகளில் பாளி தங்கி பிருக்கும். அப்போது சீட்டினகாலை முடக்கில் நிமிர், மரத்தல், கனத்தல், விரல்களில்சோய், காலில் எதுவோ பூசினதுப்போலிருத்தல் என்னும் குணங்கள் உண்டாகும். (உபகாதம் என்பது அரை உண்டல்)

12. கிருத்திரிவாதரோகம்:—சதாகாலம் கடையன்றியிருத்தல், பகல் நித்திரை, பதினைந்து வேகத்தை படக்கல், மாமிசம், இனிப்பு, உப்புப் பொருள்கள், எண்ணெய்ப் பொருள்கள், மந்தத்தையும் சீதளத்தையும் உண்டாக்கும் பொருள்கள் இவைகளே மிதமின்றி புணர்தலினாலும், உண்டாகி தொடைகளின் ரம்புகளே அநுசரித்து பாதவிரல் முதல் அடிமுதுகுவரையிலு மிருக்கின்ற ரம்புகளின் தவாரத்தில் சேர்ந்துகொள்ளும். அப்போது தேகத்தில் குத்தல், கனத்தல், சோய், வேதனை எனனும் குணங்களுண்டாகும். (கிருத்திரி என்பது தொடை ரம்பு)

6. விசேஷோன் மாதம்:—இது இடமருந்து முதலியவைகளால் உண்டாகி முகங்குறுகுதல், தேகம், பலம், பஞ்சேந்திரியங்கள் கெடுதல், நினைத்துநினைத்து திரிதல், முன் அருந்தின மருந்தின் விஷம் தேகத்தில் ஊறஊறக் கண்கள் வெருகுதல் என்னும் குணங்க ளுண்டாகும். இது அசாதியம்.

அபஸ்மாரம் (மூர்ச்சை)

சிந்திப்பினாலும், துக்கத்தினாலும், பயத்தினாலும் மனது மிகவும் பதைத்து தடிகளும் சலத்தில் வாதித்தவர்கள் மிகவும் அதிகரித்த மனநிறைவு தெளிவைத்தருகின்ற சம்புகளை புசித்து அம்மரக்கள் கனி அடைத்து புதியன தெளிவைக்கெடுத்த சத்துவகுணத்தை

நீக்கி தாரத சுபாவத்தை சுபாவித்த உன்மாதரோகத்தைப் போலவே இந்த அபஸ்மார ரோகத்தைப் பிறப்பிக்கும். இது வாத அபஸ்மாரம், பித்தஅபஸ்மாரம், சிலேஷ்மஅபஸ்மாரம், திரிதோஷ அபஸ்மாரம் என நான்கு வகைப்படும்.

அபஸ்மார நோயின் முற்குறிகள்:—அபஸ்மாரரோகம், மார்பு துடித்தல், புத்திக்கு தெளிவினமையால் ஒன்றைத் தோன்றுதிருத்தல், பிரமை, கண்களில் இருட்டம்மல், கிடந்த இடத்திலேயே கிடத்தல், கண்ணிமையோதல், விசாரப்பார்வை, காதுகேளாமை, ஜாமைப் போலிருத்தல், சர்வாங்க விபர்வை, சொன்னவடியுஞ் சலத்தை சப் புதல், சரியில் சலம்வடிதல், அதிரணம், அரோசகம், மூர்ச்சை, வயிற்றில் இரைச்சல், தர்பலம், சரீரவலி, தாகம், அதிக்கினை, லெசம பம் அற்பதிக்கினை, அற்பதிக்கினையில் தான் தூடினதைப்போலும், பாடி னதைப்போலும், சாராயம் கள்ளு, எண்ணெய் இவைகளை குடித்ததுப் போலும்தோற்றல், பின்பு அவைகளில் இச்சைப்படல் என்னும் குணங்களை தனக்குற்ற முதற் குறிகளாகப் பெற்றிருக்கும்.

அபஸ்மார நோயின் இலக்கணம்:—பல்லைக்கடித்தல், நுரைநுரை யாக கக்குதல், கைகால் உதறுதல், பார்க்கும் உருவமெல்லாம் கண் ணுக்குதோற்றுமை, நடக்கும்போதுகால்கள் பின்னிக்கொள்ளுதல், கக்கு, மூக்கு, கண் இவைகள் விசாரப்படுதல் என்னும் பொதுக் குணங்களையுடையது. இந்த ரோகத்தில் வாதசஞ்சாரம் மட்டாகில் அறிவு சிறிது தெளிவடையும். அது அதிகரிக்கில் தெளிவின்மையாம்.

1. வாத அபஸ்மாரம்:—இது இரு தொடையும் ஒடிந்து விழு வதுபோலிருந்ததுடன் அதிர்தல், அறிவு நீங்குதல், ஞாபகமறந்து, அழுகை, கண்ணை விழித்தபடியே நித்திரை செய்தல், நுரைநுரை யாக கக்குதல், தடுக்கல், சிரசில் அடித்துக்கொள்ளுதல், பற்களை கடித்தல், நகத்தொங்கவிடல், நிமிர், முறுக்குதல், நாறவென்ற கடித்தல், தலைதொங்கவிடல், கண் முகம் நகம் குரக்குவலிபோல் விர்ங்கெல்லாம் வலிதல், கண் முகம் நகம் சருமம் ஆகிய இவைகள் தேஜஸ் நீங்கி கறுத்தல், லெவேலை லெவத் தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

2. பித்த அபஸ்மாரம்:—இது தேக மறந்து, உடனே தெளிதல், கண், சருமம், முகம் ஆகிய இவைகள் மஞ்சள் நிறமாகுதல், ஒரு வேளை கண்கள் வெளுத்தல், அல்லது சினங்கொண்டவன் கண் போல் லெவத்தல், வெறித்த பார்வை, பூமியை கையால் அறைதல், என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

3. சிலேஷ்ம அபஸ்மாரம்:—இது சகலகாரியத்திலும் மறந்து, வெகுநேரம் பொருத்து தெளிதல், வெறிச்சேஷ்டை அதிகரித்தல், ஒருவேளை குறைதல், சதாசொன்ன சலம்வடிதல், கண் முகம் நகம் ஆகிய இவைகள் வெளிறல், தேகம் பழுத்ததுப்போல் ஒருவித வெளுப்பு, என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

4. திரிதோஷ அபஸ்மாரம்:—இது வாதம் முதலிய மூன்று அபஸ்மாரரோகங்கட்குள்ள குணங்களே எல்லாம் ஒரோகாலத்தில் உண்டாக்கும். இது அசாத்தியம்.

வலி (இரிவு)

இது அமரகண்டவலி, குமரகண்டவலி, பிரமகண்டவலி, காக்கைவலி, முயல்வலி என ஐந்து வகைப்படும். அவையாவன:—

1. அமரகண்ட வலி:—இது வரும்போது தேகத்தில் சோபுண்டாகி மூர்ச்சை காணுதல், கையும் காலும் அடித்தல் தலைத்தல் போல் அசைவற்று கிடக்குதல், மூடைச்சல், பக்கம் இளித்து மூடல், கழுத்திலும் சிரசிலும் மிகுவியர்வை, நெஞ்சிலும் தோளிலும் முதுகிலும் உதிரத்தைப்பற்றிய உபத்திரவம் என்னும் குணங்களே உண்டாக்கும். இதுவே குதிரை வலியாம்.

2. குமரகண்ட வலி:—இது வாதாதி தொத்தமத்தால் பிறந்து முன் கழுத்தையும் முகத்தையும் முறுக்கி தோள் பக்கத்தில் வைத்தல், நாடை, உதடு, செவி, கண் இவைகள் கோணுதல், அப்பக்கத்தில் அதிக உபத்திரவம், சன்னிபாத குறிகள் எனனும் இக்குணங்களே உண்டாக்கும். இது மாதர்களுக்குக் கண்டால் வயிற்றில் உதிரத்தை கட்டிக்கொண்டு கர்ப்பாசயத்தில் அடங்கியிருந்த சிசுவின் பொருத்த சன்னிபாதம்போலவே காணும். இது திரிதோஷத்தால் பிறக்கும்.

3. பிரமகண்ட வலி:—இது கைகால் கீட்டியபடியே இருத்தி கடித்தல், ஆகாயத்தை சிமிட்டாமல் பார்க்குதல், தேகத்தில் அதிக உபத்திரவம் என்னும் குணங்களே உண்டாக்கும். இது சுத்த சிலேத்தமத்தினால் பிறக்கும். இதை சங்கு வலியெனச் சிலர் சொல்லுகிறார்கள்.

4. காக்கை வலி:—இது கண்களே மலர மலர விழித்தல், அவ்வேளையில் மலசலம் எழுதல், இரண்டு காள்களும் முறைத்துக் கொள்ளுதல், தொண்டையும் நாவும் உலர்தல், சிலேத்தமத்தினால் வாயிலிருந்து கோழை விழுதல் என்னும் இக்குணங்களே உண்டாக்கும். இது வாதசிலேதமத்தால் பிறக்கும்.

5. முயல் வலி:—உடலில் வாய்வு மிகுந்த காலத்தில் எழும்புதல் வயிறதிர்தோய், வாயால் நுரைதள்ளுதல், கை, கால், கண் இவைகள் முறைக்குதல், என்னும் குணங்களையுடையது. இந்த ரோகம் தண்ணீரைக்கண்டாலும், தண்ணீரை சிலில் தெளித்தாலும், அல்லது அக்கினியை கண்டாலும், அக்கினி எடுக்கப்பட்டாலும், ஜனபெருக்கத்தைக் கண்டாலும் அடிக்கடி உண்டாகும்.

நேத்திர நோய்

நேத்திர நோய்களுக்குக் காரணம்:—கண்களுக்கு ஆகாதப் பொருட்களை அருந்துதல், பாஷாணம்முதலிய புகைபடுதல், சிரசிலும் கண்ணிலும் அடிபடுதல், மிகுசலம எடுத்தல் பாதஞ் சுடும்படியாக கடுவெய்யலில் அலைதல், அப்பியங்க ஸ்நானம் தவறுதல், அல்லது அந்த ஸ்நானத்தில் எண்ணெய் இக்குவிடாமை, உள்ளங்காலில் உஷ்ண ஒத்திடப், அல்லித லேபனம், முதலியவைகளை செய்தல் என்னும் இச்செய்கைகளினால் அதிகரித்த வாத பித்த சிலேஷ்ம தோஷங்கள் சரப்புளின் தவாரவழியால் சிரசில் வியாபித்து கண் களைப்பற்றி 96-வகை கண்நோய்களை பிறப்பிக்கும்.

நேத்திரரோக வகை:—நேத்திர நோயானது கருவிழி, வெள்விழி, இமை, கடைக்கண் என்னும் நான்கு ஸ்தானங்களைப்பற்றி 96-வகை நோய்களைப் பிறப்பிக்குமென்றும் அவைகளில் கருவிழியில் காசம், படலம், குழுதம், விழியுர்தல், தெரிசல், வரி, சூர்தம், திமிரம், சுக்கிரன், பூ என்னும் 10-வகைப் பிரிவினால் (15-வித ரோகமும்) வெள்விழியில் எழுச்சி, படர்தி, தெரிசல், புற்பு, குமிளம், வரி என்னும் ஆறவகை பிரிவினால் (20-வித ரோகமும்) இமைகளில் பில்லம், தடிப்பு, கழலை, நீர்பாய்ச்சல், பற்பம் என்னும் 5-வகை பிரிவினால் (16-வித ரோகமும்) கடைக்கண்களில் கண்ணெடுப்பு, பூசாந்தரம், படர்தி, நீர்ச்சுலை, விழிவாதம், விரணப்பரு, விக்கிரதி, இமைக்குரு, குமின், கூகைத்திராயு, கண்ணேவு என்னும் 11-வகைப் பிரிவினால் (15-வித ரோகமும்) உண்டாகுமெனவும் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் வாதத்தால் 45-நோய்களும், பித்தத்தால் 31-நோய்களும், கபத்தால் 20 நோயும் உண்டாகுமென அறியக்கிடக்கின்றது.

கருவிழி நோய்:—

கருவிழியில் ஏற்படக்கூடிய நோய்கள், காசம், படலம், குழுதம், விழியுர்தல், தெரிசல், வரி, சூர்தம், திமிரம், சுக்கிரன், பூ என பத்து வகைப்படும். அவைகளாவன:—

காசம்:—காசரோகமானது, வாதகாசம், பித்தகாசம், சிலேஷ்ம காசம், வாலகாசம், நீலகாசம், மந்தாரகாசம், விரணகாசம், கருப்ப காசம் என எட்டு வகைப்படும்.

1. வாதகாசம்:—இது கண்மணியில் வண்டைப்போல் கருமை, நிறத்தை உண்டாக்கி அதினின்று கருத்த சலத்தை ஒழுகுவிக்கும்.

2. பித்த காசம்:—இதில் மஞ்சள் நிறமான சலம் ஒழுகும்.

3. சிலேஷ்ம காசம்:—இது சுத்த வெண்மைநிற சலத்தைப் பெருக்கும்.

4. வால காசம்:—இது கருவிழியில் புகை கம்மியதுபோல் இருக்கும்.

5. நீல காசம்:—இது கருவிழியில் கருவிளம்பூ நிறத்தை உண்டாக்கும்.

6. மந்தார காசம்:—இது கருவிழியில் செம்பஞ்சு அல்லது மேக மிலவளின நிறத்தைப் பிறப்பிக்கும்.

7. வீண காசம்:—இது கருவிழியில் முத்தைப்போல் தளதளப் பான நிறத்தை உண்டாக்கும்.

8 கருப்ப காசம்:—இது கருவிழியில் சுத்தக்கருமை நிறத்தைக் காண்பிக்கும்.

இவற்றன் பித்தகாசம், சிலேகாசம், மந்தாரகாசம் ஆகிய 3-ம் சிகிச்சையினல் கிவர்த்தியாகும். மற்ற ஐந்தும் அசாத்தியம.

படலம்:—படலரோகமானது சதைப்படலம், ரத்தப்படலம், நீர்ப்படலம், வரிப்படலம், கருகாப்படலம், மாமிசப்படலம், பசவிழிப்படலம் என 7-விதப்படும்.

1. சதைப் படலம்:—இது கருவிழியில் குத்தலுடன் சோலை புண்டாக்கி மேலில் கிவர்த்த சதையை வளர்ப்பிக்கும.

2. ரத்தப் படலம்:—இது கண்மணியில் உறுத்தல், குமுறல், கர்த்தல், பிசுபிசுத்தல், எரிதல், ரத்தங்கட்டுதல், புருவம், நெற்றி பிடரி உச்சி ஆகிய இடங்களில் குத்தல் என்னுமிலைகளை உண்டாக்கும்.

3. நீர்ப் படலம்.—கருவிழியின்மீது மேகம் கம்மியதுபோல் இருத்தல், கனத்தல், மிகுந்த சலமவடிதல், கண்மயக்கம், எரிசல் குத்தலுடன் சலகோலை என்னுமிலைகளை புண்டாக்கும்.

4. வரிப் படலம்:—கருவிழியின்மீது கயிறபோல் வரிகளும், கர்த்தலும, குத்தலும், அகண்டசோயுடன் உறுத்தலும் புகைச்சலும் உண்டாகும.

5. கருகாப் படலம்:—கருவிழியில் இந்திர தனுவைப்போல் பலநிறமும் குத்தலும், சோயும், உறுத்தலும், சலபெருக்கமும் உண்டாகும்.

6. மாமிசப் படலம்:—விழிமணியின் முனியில் சதைவளர்ந்து அதின் ஊன், கூசுதல், இடிதல், சலவடிதல், பிடரியில் சோப் என்பலைகளை உண்டாக்கும.

7. பசவிழிப் படலம்:—கருவிழியில் பலமநிறச் சதையை வளர்ப்பித்து அதில் குத்தல், நீரிருக்குமிடம்போல் கர்த்தல், பார்வையந்தம் என்னும் குணங்களை புண்டாக்கும்.

இவற்றன் சதைப்படலம், ரத்தப்படலம், நீர்ப்படலம், வரிப் படலம இவைகன் 4-ம் சாத்தியமாம். மற்ற 3-ம் அசாத்தியம்.

குமுதம்:—குமுதரோகமானது செங்குமுதம், கருங்குமுதம், வெண்குமுதம் என மூன்று வகைப்படும்.

1. செங்குமுதம்:—கருவிழியில் செங்கழுநீர்ப் பூவைப்போல் கிவந்த சதையை வளர்பித்து அதில் நீரினல் சுட்ட புண்போல் எரிச் சலையும் குத்தலையும் உண்டாக்கும்.

2. கருங்குமுதம்:—கருவிழியில் கருங்குவளைப் பூவைப்போல் விரணத்தை எழுப்பி பார்வையில் இருள் கம்மியதுபோல் உண்டாக்கும்.

3. வெண்குமுதம்:—கண்களில் பஞ்சுபோல் வெளுத்தபுள்ளி விழுந்து பரவுதல், குத்தல், பார்வை மழுங்கல் என்னுமிலைகளை உண்டாக்கும்.

இவற்றன் செங்குமுதம் சாத்தியம். மற்றவைகள் அசாத்தியம்.

விழியுந்தல்:—இது செஞ்சதை விழியுந்தல், வெண்சதை விழியுந்தல், சருவசேந்திர விழியுந்தல் என 3 வகைப்படும்.

1. செஞ்சதை விழியுந்தல்:—இது குமுதரோகத்தினாலும் மற்றும் சேத்திர ரோகங்களினாலும் கருவிழியில் கிவந்த சதையைப் படரச்செய்து அதிக உறுத்தலை உண்டாக்கும்.

2. வெண்சதை விழியுந்தல்:—இது வெண்மைச் சதையைப் படரச்செய்து அதில் சோலைமாதிரம் உண்டாக்கும்.

3. சருவசேத்திர விழியுந்தல்:—கண் முழுமையும் தற்றிக்கொள்ளும்படிக்குச் சதையைப் படரச்செய்யும்.

இம்மூன்றும் அசாத்தியம்.

நெரிசல்:—இது உஷ்ண நெரிசல், சோணித நெரிசல், நீர் நெரிசல் என மூவகைபாம். இந்த ரோகமானது உஷ்ணம், வெகுவாடை, அவுஷதவேகம், மிகுசலம எடுத்தல், கண்சிவத்தல், நீர் ஒதுங்கல் என்னும் இச் செய்கைகளினல் பிறக்கும்.

1. உஷ்ண நெரிசல்:—கருவிழியில் விருத்தமான வெளுப்பை உண்டாக்கும்.

2. சோணித நெரிசல்:—விழிமேலில் ரத்தநிறத்தையும் உஷ்ணத்தையும் உண்டாக்கும்.

3. நீர் நெரிசல்:—விழிமேலில் மாந்தளிர் நிறத்தையும் குளிர்ச்சியுடன் நீர்க்கோலையையும் உண்டாக்கும்.

வரி:—இது கருவிழியில் வரிபோன்ற கோடுகளை உண்டாக்கி கண்ணில் நீர்வடிதல், கிவத்தல், நோய் முதலியவைகளைப் பெற்றிருக்கும். வரிரோகமானது நீர்வரி, இலைவரி, சோரிவரி என மூன்று வகைப்படும்.

1. நீர்வரி:—இது வெளுத்த கோடிருக்கும்.

2. இலைவரி:—இது பிறையைப்போல் வளைந்திருக்கும்.

3. சோரிவரி:—இது இரண்டு கண்களையும் ரத்த நிறத்துடன் படர்ந்திருக்கும்.

குற்றம்:—குற்றரோகமானது சிலேற்பனம், ரத்தகுற்றம், மேர்க்குற்றம், என மூன்று வகைப்படும். இவற்றுள் ரத்தக்குற்றம் அசாத்தியம். மற்ற இரண்டும் சாத்தியமாம்.

திமிரம்:—திமிரரோகமானது வெள்ளெழுத்து, மாலைக்கண், மந்தாரதிமிரம், வறட்சிதிமிரம், சீர்த்திமிரம், சிலேஷ்மதிமிரம், மேக திமிரம் என ஏழு வகைப்படும்.

1. வெள்ளெழுத்து:—இது அரளத்தினாலும் காலத்தினாலும் இருளிதப்படும். இவற்றுள் அரளவெள்ளெழுத்து, என்பது சூரிய சுகபித்தத்தின் விருத்தியினால் சிறுவர்களுக்கு உண்டாகும். இதனால் எழுத்தாணி சிறிய வஸ்துக்கள் கண்ணுக்குப் புலப்படுவதுபோல் இருந்து காரணமில்லாமலே மயங்கி மறைப்படும். காலவெள்ளெழுத்தென்பது 37-வயதிற்குமேல் ஏற்படும். பித்தரோகத்தினால் பிறந்தவெள்ளெழுத்தானது கொஞ்சம் வயிற்றாரோகத்தாலுண்டான கருவிழியின் அற்பப்புகை மேகம் கம்பியதுபோல்செய்து நுட்பப் பொருட்களை தெரிவரவொட்டாமல் மறைக்கும் இந்நோயானது பார்வை முதல் திருத்தர் பரியந்தம் முண்டாகும்.

2. மாலைக்கண்:—இது மாலைக்காலத்தில் பார்வை இருளடையும்படிச் செய்வதும், உதயகாலத்தில் அவ்விருள் நீங்கும்படிச் செய்வதுமாகயிருக்கும்.

3 மந்தார திமிரம்:—இது கருமணியின் பஞ்சுபோல் புகையை வெளுப்பி அந்தி சோதித்தில் இருளையுண்டாக்குவதும், பின்பு ஒரு சாமத்திற்குள் தெளிவைத் தருவதுமாகயிருக்கும்.

4. வரட்சி திமிரம்:—இது கருவிழியில் மர்மம், ஸ்தோபம்போல் சூத்தல், பீனையுடன் சலப்பெருக்கு முதலியவற்றை உண்டாக்கும் இது பரல மூலவை பித்தம் வறட்டுமபோது பிறக்கும்.

5. சீர்த்த திமிரம்:—இதனால், செவி, கண் முதல இவ்விடங்களில் விரணத்தை உண்டாக்குவதும் கருவிழி பக்கங்களில் சூத்தலையும், சதையில் புகைச்சலையும் உண்டாக்கும்.

6. சிலேஷ்ம திமிரம்:—இது கருவிழியை வெளுப்பாக்கி பார்வைக்குள்ளும் அப்படியே தோற்றுவிக்கும்.

7. மேக திமிரம்:—இது கருவிழியில் மேகம் கம்பியதுபோல் இருளை யடையச்செய்யும்.

வெள்ளெழுத்து, மந்தார திமிரம், மாலைக்கண் ஆக இம்மூன்றும் சாத்தியம். மற்றது அசாத்தியம்.

சுக்கிரன்:—சுக்கிர ரோகமானது விரணசுக்கிரன், கருஞ்சுக்கிரன், விழிவிழுங்கிச்சுக்கிரன், வெண்சுக்கிரன், கண்சுக்கிரன என ஐந்து வகைப்படும்.

1. விரண சுக்கிரன்:—இது கருமணியின்மீது மிகுந்த விரணத்தை உண்டாக்கும்.

2. கருஞ் சுக்கிரன்:—இது விழியைச்சுற்றிலும் உழுந்துப் போல் தவாரங்களை உண்டாக்கும்.

3. விழிவிழுங்கிச் சுக்கிரன்:—இது கருவிழியின் கீழ்ச்சந்தி யின்று வெள்ளெழுச்சிபோல் படர்ந்து விழியை மறைக்கும். இதனால் அதிக வேதனையும் எரிச்சலும் உண்டாகும்.

4. வெண்சுக்கிரன்:—இது குழந்தைகளின் கருவிழியைவிட்டுச் சுற்றிலும் அக்கினி நிறத்தைபுண்டாக்கும்.

5. கண்சுக்கிரன்:—இதனிதியில் சோலையும் உள்ளில் அனல் போல் காந்தலையும் உண்டாக்கும்.

இவற்றுள் விரணசுக்கிரன், கருஞ்சுக்கிரன், விழிவிழுங்கிச் சுக்கிரன் ஆக இம்மூன்றும் அசாத்தியம். மற்ற இரண்டும் சாத்தியமாம்.

பூ:—மசூரிகைரோகத்தினாலும், உஷ்ணரோகத்தினாலும், மிகுநீர் கோலையினாலும், கருவிழியில் ஆணி, உற்சல், புகை என்னும் மூன்று விதப்பு உண்டாகும். இவற்றுள் புகை சாத்தியம். மற்ற இரண்டும் அசாத்தியம்.

வெள்ளிழி நோய்:—

வெள்ளிழியில் ஏற்படக்கூடிய நோய்கள் எழுச்சி, படாத்தி, செரிசல், புற்று, குமிழம், வரி என்னும் ஆறு வகைப்படும். அவை பாவன:—

எழுச்சி:—எழுச்சிரோகமானது வரிஎழுச்சி, விரணஎழுச்சி, குவையழுச்சி, நீர்எழுச்சி, உற்றெழுச்சி என 5-வகைப்படும்.

1. வரிஎழுச்சி:—இதுவெள்விழியில் தேமல்போல் வட்டமாகத் தலையைப் பரவச்செய்யும்.

2. விரணஎழுச்சி:—இதுவெள்விழியில் கருங் குன்றியைப் போல் மாமிசத்தை வளர்ப்பிக்கும். அதில் விரணமுண்டாகும்.

3. குவைஎழுச்சி:—இது உளுந்தினது பிரமாணமான சதையைப் பிறப்பிக்கும்.

4. நீர்எழுச்சி:—இது நீர்த்துளியைப்போல் தளதளப்பான சதையை உண்டாக்கும்.

5 உற்றெழுச்சி:—இது பருத்திக்காயைப்போல் தர்மாமிசத்தை வளர்ப்பனனும்.

இவற்றுள் வரிஎழுச்சி, நீர்எழுச்சி, குவைஎழுச்சி ஆகிய மூன்றும் சாத்தியம். மற்ற இரண்டும் அசாத்தியமாம்.

படாத்தி:—படாத்திரோகமானது சதைபடாத்தி, வரிபடாத்தி, சோரிப்படாத்தி என மூன்று வகைப்படும்.

1. சதைபடாத்தி:—இதுவெள்ளிழியில் மிருதுவான சதையைத் தடிக்கும்படிச் செய்யும.

2. வரிபடாத்தி:—இதுவெள்ளிழியில் வெங்கண்ணெய்போல் மாமிசத்தை வளர்ப்பிக்கும்.

3. சோரிபடாத்தி:—இதுவெள்ளிழியில் ரத்தம் குழம்பும்படி பாலை செம்பிறச்சதையை வளர்ப்பிக்கும்.

இவற்றுள் வரிபட்டாத்திரோகம் சாத்தியம். மற்ற 2-ம் அசாத்தியமாம்.

நெரிசல்:—நெரிசல்ரோகமானது தளிநெரிசல், உந்துநெரிசல், விரணநெரிசல் என மூன்று வகைப்படும்.

1. தளிநெரிசல்:—இதுவெள்ளிழியில் விந்தினைத் தளிலைப் போல் மாமிசத்தை உண்டாக்கும்.

2. உந்துநெரிசல்:—இது தசைமாமிசத்தை எழுப்பும்.

3. விரணநெரிசல்:—இது விரணத்தை உண்டாக்கும்.

இம்மூன்றும் சாத்தியமாம்.

புற்று:—புற்றுரோகமானது சதைப்புற்று, நீர்ப்புற்று, அழற் புற்று என 3-வகைப்படும்.

1. சதைப் புற்று:—இது வெள்ளிழியில் ரத்தத்தினுல் வெந்த சதையை வளர்ப்பிக்கும்.

2. நீர்ப் புற்று:—இது வெள்ளிழியில் நீர்குமிழிபோல் சதையை எழுப்பும்.

3. அழற் புற்று:—இது வெள்ளிழியில் கார்தனுடன் விம்மின சதையை உண்டாக்கும்.

இவற்றுள் அழற்புற்று அசாத்தியம். மற்றவை சாத்தியம்.

குமிளம்:—குமிளரோகமானது சதைக்குமிளம், ரத்தக்குமிளம், நீர்க்குமிளம், என மூன்றவகைப்படும்.

1. சதைக் குமிளம்:—இது வெள்ளிழியில் கறுத்த கொப்புளத்தை உண்டாக்கும.

2. ரத்தக் குமிளம்:—இது வெள்ளிழியில் செங்குன்றிபோல் வெந்த கொப்புளத்தை உண்டாக்கும.

3. நீர் குமிளம்:—இது வெள்ளிழியில் சம்பம்பழம்போல் கொப்புளத்தை உண்டாக்கும். இவற்றுள் சதைக்குமிளம், அசாத்தியம். மற்ற 2-ம் சாத்தியம.

வரி:—வரிரோகமானது வெள்வரி, நீலவரி, ரத்தவரி என 3-வகைப்படும்.

1. வெள்வரி:—இது வெள்ளிழியில் மீனின் செதிலைபோல் வடிவை உண்டாக்கும.

2. நீல வரி:—இது மிகுந்த பசுமையுள்ள தூரிகினது நிறத்தை ஒத்த வடிவை உண்டாக்கும.

ரத்த வரி:—இது செந்நிற வடிவைப் பிறப்பிக்கும.

இவற்றுள் நீலவரி சாத்தியம். மற்ற 2-ம் அசாத்தியமாம்.

இமை நோய்:—

இமைகளில் வரக்கூடிய நோய்கள் பில்லம், தடிப்பு, பதுமம், கழலை, நீர்ப்பாய்ச்சல் என்னும் 5-வகைப்படும். அவைகளாவன:—

பில்லம் :—பில்லரோகமானது நீர்ப்பில்லம், அமர்பில்லம், இடர்ப்பில்லம், என மூன்று வகைப்படும்.

1. நீர்ப் பில்லம்:—இதில் இமைமுறத்துடன் கனத்தல், கண்ணில் மிகுந்த சலம்வடிதல், அக்கண்ணைச் சுற்றிலும் புருவத்திலும் உச்சியிலும் நிமிருடன் கில்லிட்டு நோதல், என்னும் குணங்கள் உண்டாகும்.

2. அமர பில்லம்:—இமையில் இரத்தம்போல் சிவந்த நரை தடித்தல், கீழ்இமை ஒட்டிக்கொள்ளுதல், கண்ணொளி மயங்குதல், அதிக சலம்வடிதல் என்னும் குணங்களை உண்டாக்கும்

3. இடர் பில்லம்:—இது இமையின் அடியிலும், புருவமத்தியிலும் இருக்கின்ற சம்புகளை மஞ்சள்நிறமாக்கி தடிக்கப்பண்ணும்.

இவற்றுள் நீர்பில்லரோகம் அசாத்தியம் மற்றவை சாத்தியம்.

தடித்தல்:—தடித்தல் ரோகமானது, இமைதடித்தல், இளிச்சக்கண், மூடமயிர் என 3-வகைப்படும்.

1. இமைதடிப்பு :—இது கண்ணில் பரபரப்பானதினவு, தும்மல் இமையில் விருவிருப்புடன் நிமிர், விம்மல், ஓமெல்லாம கனத்தல், என்னும் குணங்களை உண்டாக்கும்.

2. இளிச்சக்கண்:—இது இமைவிளிம்பில் தடித்தல், விரணம், மிகுந்தசலக்கோலை, கண்கூசுதல், என்னும் குணங்களை உண்டாக்கும. இதனைப் புளிச்சக்கண் என்றும் சொல்வர்.

3. மூடமயிர்.—இது இரண்டு இமைகளும் சரிந்து ஒட்டிக்கொண்டு நீர்பெருக்கினல் அவ்விடத்தில் விரணம் பிறக்கும்போது பிறக்கும். இதனல் இமைமயிர் உள்ளில் வைத்துக்கொள்ளல், இமை கனத்தல், வேதனை, கருமணி வெளிறல் அதில் நிமிர் என்னும் குணங்களுண்டாகும்.

இவற்றுள் மூடமயிர் அசாத்தியம். மற்றவையசாத்தியம்.

கழலை:—கழலை ரோகமானது நீர்க்கழலை, ரத்தக்கழலை, சதைக் கழலை என 3-வகைப்படும்.

1. நீர்க்கழலை:—இது இமைக்கு மேல்புறத்தில் கல்மழையாகிய ஆலங்கட்டியைப்போல் கட்டியை உண்டாக்கும்.

2. ரத்தக்கழலை:—இது முன்புசொல்லிய இடத்திலேயே ரத்த நிறக் கட்டியை உண்டாக்கும்.

3. சதைக்கழலை:—இது இமைக்கு உள்ளில் சதையை வளர்க்கும்.

இவற்றுள் ரத்தக்கழலை அசாத்தியம். மற்ற 2-ம் சாத்தியம்.

நீர்ப்பாய்ச்சல்:—நீர்ப்பாய்ச்சல் ரோகமானது, இமைநீர்ப் பாய்ச்சல், சுற்றுக்குலைவு, புழுவெட்டு, இமையிறைச்சி என 4-வகைப்படும்.

1. இமைநீர்ப்பாய்ச்சல்:—இது சிலின்னீரை இமை யாம்பி லிங்கும்படிச் செய்யும். இதனால் இமை கனத்தல், மதத்தல், நிமிர், விக்கம் என்னும் குணங்கள் உண்டாகும்.

2. சுற்றுக்குலைவு:—இது இமையினது ரோமம் உதிரலுடன் அந்த இடத்தில் வீரணம், நீர்வடிதல் விக்கம், நோய், குத்தல், கண் டீயேக்கம், மிகுந்த பீனிசசாரல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

3. புழுவெட்டு:—இது இமைமயிர் உதிரலுடன் அந்த இமை யில் வீரணம், அனல்போல் காந்தல், ரத்தம்வடிதல், விக்கம், தடிப்பு என்னும் குணங்களை உண்டாக்கும்.

4, இமையிறைச்சி:—இமையைச் சருமம் இல்லாத இறச்சிப் போல் செய்வதுடன், அதிலிருந்து சலப்பெருக்கை உண்டாக்கும். இது வாததோஷம், மகூரிகை உஷ்ணவியாதி என்னும் ரோகங்களி னால் உண்டாகும்,

இந்த ஈன்கு நோய்களும் சாத்தியமாம்.

பதுமம்:—பதமரோகமானது நீர்பதுமம், ரத்தப்பதுமம், சதைப் பதுமம், என 3-வகைப்படும்.

1. நீர்ப்பதுமம்:—இது இமையில் தடிப்பையும் அதிக நீர்ச்சுரப் பையும் உண்டாக்கும்.

2. ரத்தப்பதுமம்:—இது அடியில் செவ்த நிறத்தையும் ரத்த நீரையும் உண்டாக்கும்.

3. சதைப்பதுமம்:—இது இமைக்குள் தர்மாமிசத்தை வளர்ப் பிக்கும்.

இவற்றுள் சதைப்பதுமரோகம் அசாத்தியம். மற்ற இரண்டும் சாத்தியம்.

கடைக்கண் நோய்:—

கடைக்கண்களில் வரக்கூடிய நோய்கள் கண்ணெடுப்பு, பூசாத் தாம், படாத்தி, குலை, விழிவாதம், வீரணப்பரு, வித்திரதி, இமைக் குரு, குமிழ், சஷ்டிஜிவாயு, கண்ணோய் எனப் 11 வகைப்படும். அவையாவன :—

கண்ணெடுப்பு:—இது கடைக்கண்ணில் உப்பலை உண்டாக் கிக்கொண்டே இருக்கும்.

பூசாந்திரம்:—இது கடைக்கண்ணில் பீனிசமும் இடத்திற்கு சிறிது இடம்விட்டு பருத்தி விதையைப்போல் உப்பலை உண்டாக்கும்.

படாத்தி:—படாத்தி ரோகமானது நீர்ப் படாத்தி, சதைப் படாத்தி, ரத்தப் படாத்தி என 3-வகைப்படும்.

1. நீர்ப் படாத்தி:—இது கடைக்கண்ணில் சலத்தை ஒழுகு விக்கும்.

2. சதைப் படாத்தி:—இது கடைக்கண்ணில் தர்ச்சதையை வளர்ப்பிக்கும்.

3. ரத்தப் படாத்தி:—இது கடைக்கண்ணில் வெப்பத்துடன் ரத்தத்தை வடியப்பண்ணும்.

இவை மூன்றும் சாத்தியமாம்.

குலை:—குலை ரோகமானது நீர்க்குலை, சதைக் குலை, ரத் தக் குலை என மூன்று வகைப்படும்.

1. நீர்க்குலை:—இது கடைக்கண்ணில் சிலேஷ்ம மொத்தை யைப்போலவே தர்மாமிசத்தை வளர்ப்பிக்கும்.

2. சதைக் குலை:—இது கடைக்கண்ணில் கருங்குன்றியைப் போல் தசையைப் புடைப்பிக்கும்.

3. ரத்தக் குலை:—இது கடைக்கண்ணில் ரத்த நிறத்துடன் கடினத்துவமான சதையை உண்டாக்கும்.

இம் மூன்றும் சாத்தியமாம்.

விழி வாதம்:—இது வாயுவைக்கொண்டு இமைகளை ஆட்டுவித் தல் கண்களைச் சுருக்கும்.

வீரணப் பரு:—இது கடைக்கண் விளிம்பில் கற்கண்டுருவ மூள்ள வீரணத்தை யுண்டாக்கும்.

வித்திரதி:—இது கடைக்கண்ணில் சலப்பின்வழியாகத் தடித் தலை உண்டாக்கும்.

இமைக் குரு:—இது கடைவிழியில் சிறிய கட்டிகளை எழுப்பும். இதனைக் கண்கட்டி என்பர்.

குமிழம் :—இது கடைக்கண்ணில் குமிழ்போல் சவ்வைப் புடைப்பிக்கும்.

நகஷத்திரவாயு:—இது கண்ணிலும் புருவத்திலும் குத்தலுடன் வீரணத்தை எழுப்பி சாயியில் சலப்பெருக்கை உண்டாக்கிக்கொண் டேயிருக்கும்.

கண்ணேவு:—இது கண்கள் முற்றிலும் வெத்தல், உறுத்தல், நீர்முட்டல், வெளிச்சத்தைப் பார்க்கக்கூடாமை, மாதர்மேல் விருப்பு வன்னும் குணக்கேடு உண்டாக்கும்.

முதல் பாகம் முற்றிற்று.

இரண்டாம் பாகம்

கடவுள் துணை

அனுபவ வைத்திய தேவ ரகசியம்

ரோக நிதானம்

கர்ண ரோகம்

காதில் கர்ணசூலை என்ற நோயும், மற்றும் 20-வகை நோய்களும் உண்டாகும். அவைகளாவன:—

கர்ணசூலை:—இது வாத கர்ணசூலை, பித்த கர்ணசூலை, சிலேத்தும கர்ணசூலை, திரிதோஷ கர்ணசூலை, இரத்த கர்ணசூலை என ஐவகைப்படும்.

1. வாத கர்ணசூலை:—பீனிசம், கீர்வியோயாடல், தினவினால் செவியைக் குடைந்து சொறிதல் ஆகிய இவைகளினால் பிறந்து திரிதோஷங்களினால் சென்னரம்புகளை வியாபித்து அம்மார்க்கத்தில் வேதனையைச் செய்யும். இதனால் காதடைத்தல், அந்த இடத்தில் மரத்தல், குளிர்ச்சியாகிய வஸ்துக்களை பிழிந்தால் ஸ்பரிசஞானம் தெரியாமை, காட்சென்று பக்குவப்படல், நோய்கிற்கில் கொஞ்சம்சலம் கம்முதல் சத்தங்கேளாமை, உள்ளில் பூச்சிகள் பறப்பதுபோல் தோற்றுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

2. பித்தகர்ணசூலை:—காதுகளில் எரிச்சல், விக்கம், சிதல வஸ்துவைப் பிழிந்தால் இசவு, சுடுகை, குளிர்ச்சியாகிய சலம்வடிதல், அது வடியாமல் உள்ளில் கம்மிய காலத்தில் நோய் தணிதல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

3. சிலேஷ்ம கர்ணசூலை:—ரோம, தாடை, கழுத்து, பிடரி ஆகிய இடங்களில், கனத்தல், உஷ்ணவஸ்துவில் இச்சை, காதுகளில் அற்பநோய், கமைச்சல், விக்கம் என்னும் குணங்களை உண்டாக்கும். இதுபக்குவப்பட்டு உடையுங்காலத்தில் குழம்பாயும், வெண்மையாயும் சலம்வடியும்.

4 திரிதோஷகர்ணசூலை:—சுரம், உஷ்ணவஸ்துவில் இச்சை, காதுவிக்கம், அதிகநோய் சத்தங்கேளாமை என்னும் குணங்களை உண்டாக்கும்.

5. ரத்த கர்ணசூலை:—பித்த கர்ணசூலை உபத்திரவத்தையும், வாதகர்ணசூலைக்குறிய குணங்களையும் உண்டாக்கும். அன்றியும் செவியானது கல் முதலியவைகளால் அடியுண்ட காலத்தில் உள்ளில் சிற்சஞ்சு சேர்ந்த குத்தல் பிறந்தால் அதிகத சூலை எனப்படும். அதற்கும் இக் குணங்களெல்லாம் உண்டு.

காதில் ஏற்படக்கூடிய மற்ற நோய்களாவன:—

1, கர்ணநாதம்:—காதுகளில் சத்தத்தை உண்டாக்குகின்ற நரம்புகளில் வாய்வு சேரும் காலத்தில் பிறக்கும். இதனல் காரண மில்லாமலே காதுக்குள் நானுத சத்தமான நாதங்கள் உண்டாகும்.

2. பாதிரியம்:—வாய்வு ஐலேஷ்மத்துடன்கூடி சத்த நரம்புகளை வியாபிக்கும்போது பிறக்கும். இதனல் காதுக்குள் சகல சத்தத்தையும் தெளிவிக்கின்ற நரம்பானது கெடுதி அடையாதிருந்தாலும் அதற்கு வெளிதட்டம் இல்லாமையால் அதிக கூச்சலிட்டு உறக்கக் கூறினலும் நெற்றுக்குள் பேசுவதுபோல் பிரயாசத்தின்மேல் கொஞ்சம் சத்தங்கேட்கும்.

3. பிரதி நாதம்:—வாயுவினல் ஐலேஷ்மம் உலர்ந்து சத்த நரம்பை சுற்றிக்கொள்ளும் காலத்தில் பிறக்கும். இதனல் காதுகளில் அதிகநோயும் சத்தக்கெடுதியும் உண்டாகும். இது சத்தத்தை மிகவும் வெளிவிடாமல் கட்டுதலால் பிரதி நாதரோகமென பெயர்பெற்றது.

4. கர்ண கண்டு:—இது காதுக்குள் அதிக பித்தினல் கமைச்சலை உண்டாக்கும்.

5. கர்ண சோஷ:—இது காதுக்குள் அதிகவிக்கத்தை மாத்திரம் உண்டாக்கும்.

6. கர்ண பூதிகம்:—பித்தத்தினல் கபமானது கெடுதியை அடையுங் காலத்தில் பிறக்கும். இதனல் காதுக்குள் இருக்கும் நரம்பியின் சருமத்தில் நோய், ஒருவேளை நோயின்மை, மிகுந்த துர்கந்தம், வியர்வைபோல் ஓயாது சலம் வடிதல், என்னும் குணங்களை உண்டாக்கும்.

7. கர்ணவித்ரதி:—செவிக்குளுண்டாகின்ற கமைச்சலால் செவிகருவியைக்கொண்டு குடைவதால் புண்ணுகின்ற காலத்தில் பிறக்கும். இதனல் வித்ரதி கட்டிகளின் குணங்களெல்லாம் உண்டாகும்.

8. கர்ணார்சோர்புதம்:—காதுக்களின் மூலத்தில் மூலரோக உபத்திரவமபோல் உபத்திரவமும் துர்கந்தமும செவிழும் உண்டாகும்.

9. கர்ணற்புதம்:—இது காதுகளில் முன்புசொன்ன கர்ணசோர்புத ரோகலுணங்களுடன் செவிபிரதேசமெல்லாம் ஏகவிக்கத்தையும் உண்டாகும்.

10. கர்ணகிருமி:—காதுகளில் நிரிதோஷ சேர்க்கையால் பிறக்கும். இதனல் கிருமிகள் சனித்து அவ்விடத்திலுள்ளசிற் ரத்தம், மாமிசம் இவைகளை புசித்துக்கொண்டு அதிக ஊசலையும் நோயும் உண்டாக்கும்.

11. கர்ணகூஜிதம்:—காதுக்குள் வாய்வு தங்கும் காலத்தில் பிறக்கும். இதனல் செவியினது உட்கருவியாகிய குறுமபி முடங்கிக் கொண்டு மிகுந்த உபத்திரவத்தை உண்டாக்கும்.

12. கர்ணபிப்பலி:—இது மாமிசத்தைப்பற்றி பிறக்கும். அப்போதுகாதுக்குள் தர்மாமிசமானது நிப்பிலிக்காயைப்போல் ஒன்றேயேனும் பலவாயேனும்உண்டாகிக்கொண்டே யிருக்கும்.

13. கர்ண பிதாரிகம்:—நிரிதோஷத்தினல் காதுக்குள் நெறிய னெப்பூசினிக்கிழங்கைப்போல் மாமிசத்தை உண்டாக்கும். இதனல் அந்த இடத்தில் நோய், மரத்தல், விக்கம், கடுகு தைலம்போல் ஜலம் வடிதல், விட்டு விட்டு வலிகாணல், குறும்பி முடங்குதல் என்னும் குணங்கள் உண்டாகும்.

14. கர்ண பாலதோஷம்:—காதுக்குள் இருக்கும் நரம்புகளில் வாய்வு தங்கி சஞ்சரிக்கும்போது பிறக்கும். இதனல் நெற்றியானது மிகவும் உலர்ந்து சுட்கத்தை அடையும்.

15 கர்ண தந்திரிகம்:—காதுக்குள் பிரிஞ்சைப்போல் இளகளையும் இழுத்தால் அறுமல் தந்தியைப்போல் நீளுவதாயும் இருக்கின்ற சிழை உண்டாக்கும்.

16 கர்ண பரிபோடகம்:—வாயுவினல் காதுக்குள் அற்ப விக்கத்தையுடைய கொப்புளத்தைப் பிறப்பிக்கும். அது நெடுநாள் அப்படியே இருக்கும். பின்பு விருத்தியடைய ஊம்பித்தால் சிக்கிரத்தில் விருத்தியடையும். இதனல் அம்மார்க்கத்தில் மிகு சிவப்பு நிறமும் நோயும் உண்டாகும்.

17. கர்ணேபாதம்:—ரத்த பித்த ரோகத்தினலும், மிக கனத்த காதணிகளினலும, காதுகளில் வியர்க்குருப்போல் சிறிய கொப்பு ளத்தை உண்டாக்கும். அது பழுத்து உடைகையில் விக்கம், அத்துடன் பருங்கொப்புளங்கள் பரவி எழும்புதல், அவைகளில் வியர்வையும், ரத்தமும் சுடுகையும் பிறத்தல், அதிக நோய், எரிச்சல் என்னும் குணங்கள் உண்டாகும்.

18. கர்ணேன்மாதம்:—இது வாத ஐலேஷ்மங்களினல் பிறக்கும். இதனல் செவி மார்க்கத்தில் நிலைபெற்ற விக்கம், அதில் நோயின்மை, அதிக கமைச்சல், சிக்கிரத்தில் வசப்படாமை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

19. கர்ணதுக்க வர்த்தனம்:—இது காதகுத்தும்போது ஈரை தவறி ரம்பின்மார்க்கங்களில் குத்துவதனல் பிறந்த வேதனையைச் செய்யும். அப்போது ரமைச்சல், எரிவு, விக்கம, சோய், என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

20. கர்ண லிகியம்:—சிலேஷ்மத்துடன் கூடிய ரத்தத்தினல் காதுக்குள் சிருமிகளைப் பிறப்பிக்கும். அக்சிருமிகள் சிறுசிறு கொப்புளங்களை உண்டாக்கும். இதனல் காதுகளிலே தினவு வியர்வை வேதனை அம்மார்க்கத்தில் எப்போழும் ஒரு கருவியைக் கொண்டு குடைதற்கேயினவு, என்னும் இக்குணங்கள்உண்டாகும்.

கர்ணரோக சாத்தியாசாத்தியம்:—கர்ணரோகம் 25-ல், கர்ண பிப்பலி, கர்ணபிதாரிகை, கர்ணகூகை இம்மூன்றும் அசாத்தியம். கர்ணதந்திரிமுதல் கர்ணலிகியம் ஈருக 6-ம் கஷ்டசாத்தியம். மற்ற 16-ம் சாத்தியமாம்.

நாசி ரோகம்

நாசி நோயின் இலக்கணம்:—பனிக்காற்று, ரசியில் தூசி அடைதல், உரத்தவார்த்தை, மிகுபித்தினை, பித்தினைபங்கம், அல்லது தினமும் தெனஜலத்தில் மூழ்குதல், கண்ணீரை அடக்குதல், மேடு பள்ள ஸ்தானத்தில் படுத்தல், தேசபேதசலபானம், வெகுதாக பானம், அதிக ஸ்திரீசையோகம், வாந்தியை அடக்குதல், ஆகிய இச்செய்கைகளினல் திரிதோஷங்கள் அதிகரித்து நாசியிற்சோந்த பிரசநோய், முதலிய நாசிநோய்களைப் பிறப்பிக்கும். சகலபீன ரோகங்களிலும் பிரயாசத்தின் மேல் சுவாசம் வருதல் அறிதும்மல், நாசியால் பேசுவதுபோல் பேசுதல், மூக்கில் தர்க்கந்தம் வீசுதல், கீநோய் என்னும் குணங்கள் உண்டாகும். இதனை சலதோஷம், சளி, நீரேற்றம், நீர்க்கோவை யெனவும் கூறுவர். இந்த நோயில் உண்டாகின்ற கோழையானது உமிழும்படிக்கு வெளிப்படின் முன்னீர்க்கோவை என்றும், அதுவே உண்ணுக்கு வழியால் விழுந் தால் பின்னீர்க் கோவையென்றும் சொல்லப்படும்.

நாசியில் பதினெட்டுவித ரோகங்கள் உண்டாகும். அவை களாவன:—

1. வாத பீநசம்:—வாயுவால், தும்மல், நாசி அடைப்புடன் அவ்விடத்திலும், பல்லிலும் காதிலும் சிரசிலும், நோய், புருவங் களில் பூச்சி ஊருவதுபோல் இருத்தல், சூரற்கம்மல் எனலுங் குணங்களுண்டாகும். இக் குணங்கள் வெகுநாள் பொருத்த முதிர்ந்து நாசி துவாரத்தின் வழியாய் சளிர்த்தும் கறத்தும் சலம் வடிவதாக யிருக்கும்.

2. பித்த பீநசம்:—தாகம், சுரம், பிரமை, நாசியிற் கொப்புளம், நாசி அடைப்பு, நாசியினின்று கடுகையுடன் மஞ்சள் நிறத்தையம்

நாம்பிற நிறத்தையும் பெற்றுச் சளிவிழுதல், என்னுங் குணங்களை உண்டாக்கும்.

3. சிலேஷ்ம பீநசம்:—இருமல், அரோசகம், இரைப்பு, வாந்தி தேககனதி, வாயினிப்பு, ரமைச்சல், அடைப்புடன் அத்துவாரவழி யாக வெண்ணையான சளிவிழுதல், என்னுங் குணங்களை உண் டாக்கும்.

4. திரிதோஷ பீநசம்:—வாதபித்த கப பீநசங்களின் குணங்கள் ஏக காலத்தில் உண்டாகும். இக் குணங்கள் காரணமின்றி அதிக ரிப்பதும் குறைவதுமாக யிருக்கும்.

5. ரத்த பீநசம்:—நாசிக்குள் ரமைச்சலுடன் நிமிர், சிவந்த சளியும் ரத்தமும் ஒழுகுதல், கண்ணிலும் காதிலும் தினவு, சருமம் கண் முதலியவைகள் சிவக்குதல், உருசி தெரியாமை என்னுங் குணங்களை உண்டாக்கும்.

6, துஷ்ட பீநசம்:—மேற்கூறிய ஐவகை பீநசரோகங்களை நிவர்த்தி செய்யாவிடில் இந்நோய் உண்டாகி அவைகளைவிட அதிக உபத்திரவத்தையும், இந்திரியங்களுக்கு அயர்ச்சியையும், உண்டாக் கும். அப்போது அகனி மந்தம், சுரம், இருமல், இரைப்பு, மார் பிலும், பக்கங்களிலும் நோய், வாய் வறளலுடன் தர்க்கந்தம், நாசி யில் வியர்வை, அதன் உடமபுரம்வரளல், வீக்கம், அம்மார்க்கத்தி னின்று சிழைப்போல் வெளுத்தும் சிவந்தும் உண்டை உண்டையாக சளிவிழுதல், அந்த இடத்தில் வெளுத்தும் மினுமினுத்தும் நீண்டு முள்ளைச் சிறுசிறு சிருமிகள் பிறத்தல் என்னும் இக்குணங்கள் உண் டாகும்.

7. அதிதும்மல் பீசம்:—தீஷ்ண ஆக்கிராணம், சுவாசத்தை நிறுத்தல் சூரியனை சிமிட்டாது பார்த்தல், வாதவஸ்துவைப் புசித்தல், ஆகிய இவைகளினலும் நாசித்தண்டாகிய எலும்பில் அடிப்படுவதி னலும் வாயுவானது அதிகரித்து நாசி, வாய், கண், செவி ஆகிய இடத்து ரம்பின் துவாரங்களை அடைக்குங் காலத்தில் பிறந்து எந் நோழும் தும்மலை உண்டாக்கும்.

8. நாசிகா சோஷம்:—இது வாய்வு அதிகரித்து நாசியில்சேரும் காலத்தில் பிறந்த நாசிதுவாரங்கள் வரளல், அத்துவாரத்தின் பக் கத்து தண்டுகளில் முள்ளால் குத்துவதுப்போலிருத்தல், கபநிக்கம், பிரயாசத்தின்மேல் மூச்சுவருதல் என்னும் இக் குணங்களை உண் டாக்கும்.

9. நாசிகா நாகம்:—இது சிலேஷ்மமானது அதிகரித்து வாயுவை எழுப்பி நாசித்துவாரங்களை அடைப்பிக்குங் காலத்தில் பிறந்து மூக் கடைப்பு, மூச்சுதினரல் முதலிய குணங்களை உண்டாக்கும்.

10. நிராண பாகம்:—பித்தத்தைக்கொண்டு நுனிமூக்கு பக்கங்களின் உட்புறத்தை வெந்ததுபோல் செய்விக்கும். இதனால் அச்சரு மத்திலும், மாமிசத்திலும், எரிச்சலுடன் மிகு நோய் உண்டாகும்.

11. நாசிகா சிராவம்:—இது பித்தமத்தைக்கொண்டு நாசி வழியாக வெங்கலிப்பாத தெளிவையுடைய சுத்தஜலத்தை மிதமும் வடியப்பண்ணும்.

12. அபீநசம்:—இது பித்தமத்தைக்கொண்டு மூக்கின் நாம்புகளை அடைப்பிக்கும். இதனால் முன்புசொன்ன பீநசங்களைப் பார்க்கிலும் அதி உபத்திரவம் பிறக்குதல், சுவாசம் விடும் போது குருகுருவென்னும் சத்தம், நாசியில் எந்நேரமும் வியர்வை என்னுங் குணங்களுண்டாகும். இது பழுத்தால் நாசியில் பிசபிசத்து குமும்பிய மஞ்சள் நிறமான சளிவிழும்.

13. நாசிகா தீபிகை:—இது நாசியை அக்கினி சுவாலையில்பட்ட வண்ணமைப்போலவும், ரத்தங்குழம்பியதுப்போலவும் செய்யும். இதனால் அந்தயிடம் சிவக்குதல், உள்ளிலும் வெளியிலும் தொடக் கூடாத வேதனை, மூச்சானது புகையைப்போல் வெப்பமாய் வருதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

14. பூதிநாசிகம்:—வாதபித்த கபங்களானவை நாடியின் மூலத்தைப் பற்றுங்காலத்தில் இந்நோய் பிறக்கும். இதனால் நாசியில் சலம் வடிதலும் துர்க்கந்தமு முண்டாகும்.

15. பூயாசிர நாசிகம்:—இது நிரிதோஷத்தினாலும் அபிகாதத்தினாலும் பிறக்கும். இதனால் நாசியில் சீழானது ரத்த நிறமாகவிழுதலும், சிரசில் நோயுடன் எரிச்சலும் உண்டாகும்.

16. நாசிகா புடகம்:—பித்த பித்தமங்களினால் நாசித் துவாரம் அடைப்படுங்காலத்தில் இது பிறக்கின்றது. இதனால் சளி வரண்டு கட்டியாக விழுவதுமன்றி அவ்விடத்தில் கொப்புளமும் உண்டாகும்.

17. நாசா ரசம்:—நாசியின் மூலத்தில் முளைபோல் தர்மாமி சத்தை வளர்ப்பிப்பதுடன் வாத கப பினிசக் குணங்களையும் உண்டாக்கும்.

18. நாசிகார்புதம்:—நாசியில் வீக்கத்துடன் பித்தகப பினிசக் குறிகளையும் உண்டாக்கும்.

முக ரோகம்

மீன், எருமைமாமிசம், பன்றிமாமிசம், சைத்தியவஸ்து, முள்ளங்கி கிழங்கு, உளுத்தம்பருப்பு, தயிர், பால், காடி, இவைகளை வஸ்து, கரும்புரசம், காந்திய அன்னம் இவைகளை இடைவிடாது விசேஷமாக அகாலத்தில் புசித்தலினாலும், ஒருக்களித்துப் படுத்தல், பல் விளக்காதிருத்தல், சலத்தை கொப்பளித்து கொப்பளித்து விரை

வாக உமிழல், புகைப் பிடித்தல், வாந்திசெய்தல், விடாத தலைநோய் ஆகிய இவைகளினாலும் வாத பித்த கபங்கள் அதிகரித்து முகத்தில் இருக்கின்ற சப்த தாதுக்களில் பரவி அந்தந்த இடங்களில் நோய்களைப் பிறப்பிக்கும்.

இது முகத்திலுள்ள எட்டு ஸ்தானங்களைப்பற்றி 75-வகை நோய்களைப் பிறப்பிக்கும். உதட்டில்-11, நாடைக்கு கடுவில்-1, பற்களில்-10, பற்களின் வேரில்-13, நாவில்-6, நாடைகளில்-8, தொண்டையில்-18, முகமுற்றிலும்-8 ஆக 75 வகைகளாம்.

ஓஷ்டரோகம்

உதட்டில் வரும் வியாதிகட்கு ஓஷ்டரோகம் எனப் பெயர். இது 11 வகைப்படும்.

1. கண்டோஷ்டம்:—இது வாய்வு உதட்டில் சேரும்போது பிறந்து அவ்வுதடுகளில் வெடிப்பை உண்டாக்கும்.

2. வாதோஷ்டம்:—இதில் உதடுகளில் கத்தியின் வாயைப் போல் கூர்மையான வெடிப்புகளும், மறத்தலும் அதிக நோயும் உண்டாகும்.

3. பித்தோஷ்டம்:—உதடுகளில் அதிக காங்கையுடன் கடுகைப் போல் மஞ்சள்நிறமான கொப்புளங்களை நிறைப்பிக்கும். அப்போது அவைகளினின்று வியர்வை கசிவு உண்டாகும். அக் கொப்புளங்கள் சிவந்திரத்தில் உடைவதாயிருக்கும்.

4. சிலேஷ்மோஷ்டம்:— உதடுகளில் அதிக தினவத்தைக் கொண்டு சகிக்கக்கூடாத நோவையும், வீக்கத்தையும் வெளுப்பான சிறிய கொப்புளங்களையும் உண்டாக்கும். அவைகளினின்று வியர்வைப் பெருகும்.

5. சந்நிபாதோஷ்டம்:—உதடுகளில் வெடிப்பு, அதிக நோய், மாத்தல், சலமுள்ள கொப்புளங்கள் எழும்புதல், அதில் மாறுத சலம் வடிதல், தர்க்கந்தம், ஒருவேளை வாடுதல், ஒருவேளை உப்புதல், வறளல் என்னுமிக் குணங்களை உண்டாக்கும்.

6. ரத்தோஷ்டம்:—உதடுகள் ரத்தநிறமாகவும் இரத்தத்தைக் கக்குவதுப்போலவே யிருக்கும்.

7. அற்புதோஷ்டம்:—உதடுகளில் சிறிய பேரீச்சங்காயை யொத்த விகசத்தை உண்டாக்குவதுடன் அவைகளின்மேல் சிவந்த நிறத்தையும் உண்டாக்கும்.

8. மாமிசாதோஷ்டம்:—உதடுகளில் சிவந்த மாமிசத்தை ஒத்த விரணத்தை உண்டாக்கும். அப்போது அதிலிருந்து அந்த நிறத்தைப் பெற்ற இருமிகள் கிளைவதும் நமைச்சலும் நோயும் உண்டாகும்.

9. மேதோஷ்டம்:—உதடுகளில் என்னெய் தடவினதுபோல் மினுமினுத்த லீக்கம், அதில் கொழுப்பைப்போல் கல்ல மிருது, வியர்வை, மிகுந்தினவு என்னு மிக்குணங்களே புண்டாக்கும்.

10. சுஷ்கோஷ்டம்:—உதடுகளில் காயங்கள் படுங்காலத்தில் பிறந்து அந்த இடங்களில் கட்டிகளைப் பிறப்பித்து அவைகளே புடையும்படிச்செய்து விரணத்தையாவது அல்லது வெடிப்பையாவது உண்டாக்கும். அவைகளில் நினவும் அற்ப வலியும் இருக்கும்.

11. சலாற்பு தோஷ்டம்:—உதடுகளில் வர்த லெலேஷ்மங்களினுல் நீர்க்குமிழியைப்போல் மாமிசத்தை வளாச்செய்யும், இதில் சலமும் சீழும் கலந்தாகிலும் கலியும்.

கண்டாலஜி ரோகம்

இது எந்தபக்கத்து நாடையிலாவது நீக்காத லீக்கத்தைப் பிறப்பிக்கும். இதனுல் சுரமும் நாகமும் உண்டாகும்.

தந்த ரோகம்

தந்தம் என்னும் பற்களில் ஏற்படும் நோய்கட்கு தந்த நோய் எனப் பெயர். இது 10-வகைப்படும்.

1. தந்த தாளனம்:—உண்ணுகின்ற ரசாதி வஸ்துக்களின் பேதத்தால், வாயினிடத்தில் நீளவாயு வியாபிப்பதால் பிறந்து பல்லில் உஷ்ணவஸ்துக்கள் அல்லது நீளவஸ்துக்கள் பட்டால் வேதனை, குத்தலினுல் அப்பற்கள் பிளந்துபோவதுபோல் இருத்தல் என்னும் குணங்களே உண்டாக்கும்.

2. தந்த ஹரிஷம்:—பற்களில் புளிப்புவஸ்துவாவது நீளவஸ்துவாவது காற்றுவது பட்டால், சகிக்கக்கூடாத கூச்சம், லெலேஷ அவ்வஸ்துக்களே புசிக்கில் மிகுந்த உபத்திரவம், அப்பற்கள் அசைவதுபோ லிருத்தல், என்னும் குணங்களே உண்டாக்கும்

3. தந்த பேதம்:—பற்களில் குத்தலும் நோயும் உண்டாகும் படிச் செய்யும். இதனுல் தந்தங்கள் விழுந்து போவதுபோலவே யிருக்கும்.

4. தந்த சலனம்:—வாயுவைக்கொண்டு தந்தங்களே அசையும் படிச்செய்வதுடன் எவ்விதமான மிருது வஸ்துக்களைப் புசித்தபோதிலும் அதிக நோவை யுண்டாக்கும். (சலனம் என்பது அசைதல்)

5. தந்தக ராளம்:—நாகளே தேயும்படிக்குச்செய்து தந்தங்களே வெளிபுரத்தில் சாய்த்துவிடும்.

6. அதிதந்தம்:—பற்களில் உபத்திரவத்தை உண்டாக்கி அப் பற்களின் சந்தில் ஒரு சிறிய பல்லை முளைப்பிக்கும். அது எங்கு

முளைத்து வெளியில் வந்தால் முன்பு இருக்கும் உபத்திரவம் நீங்குவதாயும் மற்றைப் பற்களுக்கெல்லாம் வன்மை வருவதாயும் இருக்கும்.

7. தந்த சருக்காரம்:—தந்தங்களே கலக்கமுற விளக்காமையால் அச்சந்துளில் துர்க்கந்தத்தோடு லெலேஷமத்தைச் சேர்ப்பிக்கும். அம்மலமானது வாயுவால் உலரப்பட்டு மணற்போல் உதிர்த்துக்கொண்டே யிருக்கும்.

8. தந்த கூவிதம்:—பற்களின் மூலைகளைத் தேயப்பண்ணுவதுவிர அவைகள் வெடித்து பொடிப்பொடியாக உதிரும்படிச் செய்யும் இது பற்களின் ரசை கெடுப்பதால் தந்தபரிகாரரோகம் எனப் பேர்பெற்றது.

9. தந்த சியாவம்:—இரத்த பித்தரோகத்தைக் கொண்டும் வாத தோஷத்தைக் கொண்டும், சிற்சில தந்தங்களே நீலநிறத்தைப்போலவும், கரிநிறத்தைப்போலவுஞ் செய்விக்கும்.

10. தந்தபிரலூனம்:—வாதாதிகள் அதிகரித்து தந்தங்களிலும் அவைகளின் வேர்களிலும் வியாபித்து அங்குள்ள தசையை கட்டித்து உலர்த்தும்போது பிறக்கும். அப்போது அச்சந்துகளில் அன்னரசம் அடைத்து கெடுவதால் துர்க்கந்தம் வீசுதல், சிறு சிறு கொப்புளங்கள் எழும்புதல், காரணமின்றி நோய் அதிகரித்தல், இருமிகள் தெளிதல், அக்கிருமிகள் தெளியாத காலத்தில் நோய், தினவுண்டாதல், நாறிவிழுதல், பற்கள் அசைதல் என்னும் குணங்கள் உண்டாகும். பற்கள் விழாமல் நிறுத்தி உபத்திரவத்தையும் இருமிகளையும் பிறப்பித்து நாகளில் சீழும் ரத்தமும் வடியச்செய்யும்.

தந்தமூல ரோகம்

தந்தமூலமென்ற பற்களின் வேரினின்றுப் பிறக்கும் நோய்கட்குத் தந்தமூல நோய்கள் எனப் பெயர். இது 13 வகைப்படும்.

1. நிதாதம்:—இது லெலேஷமமும் ரத்தமும் பல்லின்வேரில் சேரும்போது பிறந்து அவ்வேர் வழியாகத் துர்க்கந்தத்தை ஒழுகச் செய்யும். இதனுல் அங்குள்ள மாமிசம் கரைவதன்றி அவ்வேர்கள் வெளுத்து வெளியில் பிரகாசமாகத் தெரியும்.

2. உபகிருசம்:—ரத்தபித்தங்கள் பல்லின்வேரில் சேர்ந்து அங்குள்ள மாமிசத்தை சடுகையாக்கும்போது பிறக்கும். இதனுல் அவ்விடத்தில் கமையுடன் ரத்தங்ஙிதல், அந்த ரத்தம் வெளியில்வராமல் உள்ளிடத்தில் நின்றுல் நாறிவிழுதல், பற்கள் அசைதல், வாயில் துர்க்கந்தம் வீசுதல் என்னும் குணங்களே யுண்டாக்கும்.

3. தந்தபுப்புடம்:—இரண்டு பல்லின் கடுவிலாவது, மூன்று பல்லின் கடுவிலாவது இலந்தைக்கொட்டை பிரமாணமாக நாறை

வளர்ப்பித்து, அதை வென்ற மாமிசத்தைப்போற்செய்து சோலையு முண்டாக்கும்.

4. தந்தவித்திரதி:—ரத்தத்தினலும் திரிதோஷத்தினலும் பிறந்த தந்தங்களின உட்புறச் சதையிலாவது வெளிப்புறச் சதையிலாவது வீக்கமான கட்டிகள் பிறக்கும். அவைகள் சோலதும், எரிவதும், பழுத்த உடைவதும் சிற்சத்தம் ஒழுகுவதுமாயிருக்கும்.

5. தந்தசுஷீரம்:—ரத்தபித்தத்தினல் பிறந்து ஈறுகளை வீக்கச் செய்து அவைகளில் சிறு சிறு துவாரங்களை உண்டாக்கும். அப் போது அந்த இடத்தில் சொள்ளு சலம்போல் சலம்வடிதலும் அம் மாமிசத்தில் கெடுநியும் உண்டாகும்.

6. தந்தமகாகஷீரம்:—மேற்கூறிய ரோககுணங்கள் உண்டாவ தும் தவிர உடம்பில், சுரம், பல்லின் மாமிசம் சோதல், அவ்விடத்தி னின்று மேலும் ரத்தமும் வடிதல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

7. அதிமாமிசம்:—பல்லின்வேர் சந்துகளில் ஆணியைபொத்த கட்டிகளைப் பிறப்பிக்கும். இதனல் காதிலும், தாடைகளிலும் சோயுண்டாகும். பின்பு சுரமும் பிறக்கும். அது உடைத்தால் மரணமே.

8. தந்தவிதர்ப்பம்:—தந்தமூலச் சதையை வரையச் செய்யும். இதனல் பற்கள் அசைவதும் சோவதுமா யிருக்கும்.

9. வாத தந்தமூலம்:—பல்லின் வேர்களையும் அங்குள்ள தசை ரத்தங்களை கறக்கச் செய்யும். இதனல் அந்த இடத்தில் காற்றுப் பட்டால் கூச்சம் எற்படும்.

10. பித்த தந்தமூலம்:—பித்தமானது தந்தங்களின்வேரில் பி வேகிக்கும்போது பிறந்து அவ்வேர்களையும் அதில் உள்ள ரத்தத்தை யும் மஞ்சள் நிறமாக்குவதுர் தவிர எரிச்சலையும் உண்டாக்கும்.

11. சிலேஷ்ம தந்தமூலம்:—பல்லின் வேர்களை வெளுப்பாக்கி அவ்விடத்தில் மாருது சிற்வடியச் செய்யும். இதனல் சிலிசிலிர்ப்பும் வேதனையும் உண்டாகும்.

12. திரிதோஷ தந்த மூலம்:—இது வாதமுதலிய மூன்று தந்த மூல நோய்களின் குணங்களையும் அவைகளால் பிறக்கும் உபத்தி வங்களையும் உண்டாக்கும்.

13. சுஷ்க தந்த மூலம்:—பற்களை பிடுங்குதல் அவைகள் வேற முகாந்தரமாக அடியுண்டு முறிதல், முதலியவற்றினல் அவ்வேர்களை பட்டு காயம் உண்டாகுமபோது பிறக்கும். அப்போது ஈறிலும் தாடையிலும் நோயுடன் வீக்கம், ரமபுகளின் வழிகளில் சிலே யோடல், முதலிய குணங்கள் உண்டாகும்.

தந்தமூல நோயின் சாத்தியா சாத்தியம்:—எவ்வித தந்தமூல நோயிலாவது வேரின் நுனிகளில் விரணம் உண்டானதும், சீழ் வடிந்தாலும், சிலேபோடினதும், சர்மமும், மாமிசமும் அழுகிவிழுந் தாலும் அசாத்தியம். இக்குணங்கள் இல்லாதது சாத்தியமாம்.

ஜிக்வா ரோகம்

ஜிக்வா என்னும் நாவில் எற்படும் பிணிகட்கு ஜிக்வாரோகம் என்று பெயர். இது ஆறு வகைப்படும்.

1. வாத ஜிக்வா கண்டகம்:—நாக்கு முழுதும் வெடித்தல், அவ்வெடிப்புகளில் முள் தைத்ததுப்போல் அருகுதல், மரத்தல், பழுத்த இலையைப்போலிருத்தல், என்னும் இக்குணங்களை உண் டாக்கும்.

2. பித்த ஜிக்வா கண்டகம்:—நாக்கு முற்றிலும் கங்கையை கொண்டு சிவப்பாகி அதில் மாமிச நிறமான சிறுசிறு கொப்புளங் களை உண்டாக்கும். இப்போது நாவில் மழுங்கிய முட்கள் நிறைந்த துப்போலிருக்கும். இது மூலாதாரம், நாபி, இருதயம், கண்டம் நாக்கு ஆகிய ஐந்து ஸ்தானங்களைப்பற்றி பிறக்கின்றதென்றும் அவ் விடங்களைப்பற்றி இது ஐந்துவித பெயர் பெருமென்றும் சொல் லப்பட்டிருக்கின்றது. இதனை அட்சரம் என்றும் கூறுவர்.

3. சிலேஷ்ம ஜிக்வா கண்டகம்:—நாவெல்லாம் இலவமுட் களைப்போல் தடித்தும் வெளுத்தும் சொருங்கியும் சோலைத்தருகின்ற கொப்புளங்களை உண்டாக்கும்.

4. ஜிக்வா வஜ்ரகம்:—சிலேஷ்ம பித்தங்களைக்கொண்டு நாவின் கீழ் வீக்கத்தை யுண்டாக்கும். இதனல் நாமாத்து தடித்து உயரும். அவ்வீக்கம் பழுத்தால் புலால்நாற்றம் வீசுவதும் மாமிசம் கரைவது மாக யிருக்கும்.

5. அதிஜிக்வம்:—அடிநாவின்கீழ் நுனிநாவைப்போல் தடித்த வீக்கத்தை யுண்டாக்கும். இதனல் மரத்தல், அந்த இடத்தில் சிறு முளைகளைப்போல் கொப்புளம் எழும்புதல், நினவும் சோயும் அதிகரித்தல், வாயில் கங்கையான சொள்ளு சலம்வடிதல், புளிக் கக்கூடாமை என்னும் குணங்கள் உண்டாகும்.

6. உபஜிக்வம்:—உண்ணாக்கில் வீக்கத்தை உண்டாக்கும். அப் போது முன்புசொல்லிய அதிஜிக்வா ரோககுணங்களும், இருமலும், அருசுதலும் உண்டாகும். இதனை உண்ணாக்கென்பர்.

தாலு ரோகம்

இது தாள் அல்லது தாடையைப்பற்றிய சோயைக் குறிக்கும். இது எண் வகைப்படும்.

1. தாளரோகம்:—வாதாதிக்கத்தைக்கொண்டு தாலைக்கு உட்புற மாமிசத்தில் சுறசுறப்பான நடிப்பையும், வெளியில் கடினத்தன்மான் வீக்கத்தையும் உண்டாக்கும். இதனல் வாயில் சொள்ளு சலம் வடிதலும், அவ்விடத்தில் சொப்புளம் எழும்புதலும் தாளின் அடியில் சோதலும் உண்டாயிருக்கும்.

2. தாளுதள சுண்டிகம்:—தாலையில் உட்புரமூலத்தில் உண்ணுக்கைப்போல் நடித்தலே உண்டாக்கி புவல் சுற்றக் சோழையை விழச்செய்யும். இதனல் தாலைமீது மினுமினுப்புடன் மிருதுவான வீக்கம் எழும்பித் தொங்குதல், புளித்த அன்னபாலுகிகள் சாயொல் விழுதல், கண்டத்தின் மார்க்கம் அடைபடல், தாகம், வாந்தி, இருமல் என்னும் இக் குணங்களுண்டாகும்.

3. தாளுசம்ஹதி:—தாலையினது உட்புரடுவில் சோயில்லாமல் தர்மாமிசம் வளரும். இது தாலையில் உட்புரத்தையெல்லாம் தர்மாமிசத்தைக்கொண்டு நிறைப்பும்.

4. தாளார்புதம்:—தாலைக்கு உட்புரத்தில், விரித்த தாமரைப் பூவைப்போல் வட்டவடிவான சிவந்த வீக்கத்தை உண்டாக்கும்.

5. தாளுகச்சபம்:—சிலேஷ்மத்தைக்கொண்டு தாலையின் நடுவில் ஆமையினது உருவத்தைப்போல் நடிப்பை உண்டாக்கும். அது காலுக்கு நான் பதத்தினல் அதிகரிப்பதும் சோவதுமாகயிருக்கும்.

6. தாளுபுப்புடம்:—தாலையின் உட்புரடுவில் சிலேஷ்மத்தினலும் மேதோதாதுவினலும் இலந்தைப்பழ பிரமாண ரூபங்கொ ஒத்தநாய் சோவின்மையான வீக்கத்தை உண்டாக்கி நிலைக்கச் செய்யும்.

7. தாளுடாகம்:—இது பித்தத்தைக்கொண்டு தாலையின் உட்புறத்தை விரணமாக்கி அதில் சிழும் சோயும் உண்டாகும்.

8. தாளுசோஷம்:—வாதத்தினலும், பித்தத்தினலும், சுரத்தினலும் தேகம் மிகவும் மெலிந்த காலத்தில் பிறந்து ஒரு தாலையை யாவது இரண்டு தாலையையுமாவது உலர்த்தி ஒடுக்குவிழுந்ததுப் போல் செய்யும்.

கண்ட ரோகம்

இது கழுத்து என்னும் கண்டத்தைப் பற்றிய சோய்களாம். இது 13-வகைப்படும்.

1. கண்டவாதம்:—கழுத்திற்கு உட்புறத்தில், தற்மாமிச முனி கனி முனைப்பித்து அம்மார்க்கத்தை அடைத்து காலை அசைக்கவொட்டாமற்செய்யும். இதனல் செஞ்சம் வாயும் உலர்ந்து, கண்டத்திலும் செவியிலும் சோய் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

2. கண்டபித்தம்:—கழுத்திற்கு உட்புறத்தில் மூங்கில்பத்தைப்போல் தர்மாமிசத்தைப் பிறப்பிக்கும். இதனல் அந்த இடத்தில் அதிக சோயுடன் புகை கம்மியதுபோலிருத்தல், மேலில் தொடக்கூடாத உபத்திரவம், சுரம், காங்கை, தாகம், சோர்வு என்னும் குணங்களே உண்டாக்கும்.

3. கண்டசிலேஷ்மம்:—கண்டத்திற்கு உட்புறத்தில் நடித்த தர்மாமிசத்தைப் பிறப்பிக்கும். இதனல் ஆமணக்கின் செய்யைப் போல் வாயில் மாறுத சலம் வடிதலும் தேக வெளுப்பும் உண்டாகும்.

4. கண்டரத்தம்:—கண்டத்திற்கு உட்புறத்தில் தர்மாமிசத்தைப் பிறப்பித்து அதில் கரிநெருப்பை ஒத்த கொப்புளங்களை நிறைப்பிக்கும். இதனல் காதுக்குள் சோயும் கண்டபித்த ரோக குணங்களும் உண்டாகும்.

5. கண்டத் திரிதோஷம்:—திரிதோஷகண்ட சோய்களின் குணங்களெல்லாம் உண்டாகும். இது காட்சென்று பழுத்து உடையும்.

6. கண்டசாலிகம்:—இது சிலேஷ்மகனியை அடைத்த வாதபித்தத்தைக்கொண்டு கழுத்திற்கு உட்புறத்தில் சாதிக்காயைப்போல் நிரட்சியான வீக்கத்தை உண்டாக்கி அதன்மேல் செல்வாலே ஒத்த முட்களே முளைப்பித்து கழுத்தை நிருப்பக்கூடாமையாகச் செய்யும்.

7. களபிருந்தம்:—கழுத்திலிரண்டு பக்கங்களிலும் சமூகமாயும் வட்டவடிவாயும் உயர்ந்ததாயும் உள்ள தர்மாமிசத்தை வளர்ப்பிக்கும். இதனல் கண்டத் துவாரம் அடைப்படுதல், தாகம், சுரம் என்னும் குணங்கள் உண்டாகும்.

8. துண்டகோரிகம்:—கண்டத்திற் குட்புறத்தில் பருத்திக் காலைப்போல் கெட்டியாய் மினுமினுத்த வீக்கத்தை உண்டாக்கும். இதனல் அற்ப உபத்திரவம் உண்டாகும்.

9. களகம்:—கண்டத்திற்கு உள்ளிலும் வெளியிலும் பார்ப்பதற்கு பயங்கரமான வீக்கத்தை உண்டாக்கும். இதனல் அம்மார்க்கத்தில் ஆப்பு அடித்ததுப்போல் இருத்தல், சிரோபாரம், சோம்பல், சொள்ளுசலம் வடிதல், சுரம் என்னும் குணங்களே உண்டாக்கும். இன்னும் சீமாக உயர்ந்து அதிக சோவில்லாமல் கழுத்தைச்சுற்றிலும் வீங்கினல் வலியரோகமென்று பெயர்.

10. அலாபுகம்:—கழுத்திற் குட்புறத்தில் திரிதோஷத்தால் புடைகள் உண்டாவதுப்போல் அடியகன்ற சிறிய சுலைப்பிஞ்சை ஒத்த மாமிசகண்டத்தை, ஒன்றுபேனும் பலவாபேனும் பிறப்பிக்கும். இதனல் அதிசோயும், பிராணசின்மேல் சுவாசமும், உண்டாகும்.

11. சதக்கினி:—கண்டத்திற்கு உட்புறத்தில் விருத்தி யடைந்து துர்மாமிசத்தைகொண்டு பலாமுட்களோ ஒத்த முட்கள் நிறையப்பட்ட பெரிய இருப்புத்தண்டத்தைப்போல் கழுத்தையிழுக்கச்செய்யும். இதனால் மிகுந்த நோயும், தாகம், சுரம், தலைநோய் முதலியவைகளும் ஏற்படும.

12. களவித்திரதி:—கழுத்து முற்றிலும் விரைவில் விக்கத்தை உண்டாக்கும். இதனால் அதிகநோயும் பழுத்தால் தற்க்கத்தியும் உண்டாகும்.

13. களாற்புதம்:—நாளின்முடிச்சிலும் அடிகழுத்திலும்நோயில்லாத விக்கங்களோ உண்டாக்கும். அவை நிரிதோஷத்தால் பழுக்காமலே யிருக்கும். ஒருவேளை பழுத்து உடைத்தால் அதிலிருந்து குழம்பான ரத்தம ஒழுகும்.

14. வாத களகண்டம்:—வாதகபத்தினாலும் மேதோதாதுவினாலும் கழுத்திறகும் தாடைக்கும் இடைவெளியிற் வளியைப்போல் நோயில்லாத மாமிசமொத்தையை தொங்கச்செய்யும். இது ஒத்த பக்கத்திலாவது பிறக்கும். இதனைப் புரைக்குழை என்பர். (கண்டமென்பது தாடை)

15. பித்த களகண்டம்:—கண்டத்திற்கு உள்ளிலும் தாடைக்கு உள்ளிலும் விரணமான புடைகளைப் பிறப்பிக்கும. அப்படைகள் கருமையாயும் செம்மையாயும் படரும். இதனல் நோய் அதிகரிப்பதும் உருகி கெடுவதுமாக இருக்கும.

16. சிலேஷ்ம களகண்டம்:—முற்கூறிய ஸ்தானங்களில் மிகு விரணமான புடைகளைப் பிறப்பிகும. ஆனல் அப்படைகள் வெளுத்து இல்லிட்டு நிறைத்து சமைச்சலுடன் விருத்தி அடைவதும் வாயில் இனிப்புண்டாவதுமாக யிருக்கும்.

17. மேதோ களகண்டம். மேற்கூறிய ஸ்தானங்களில் விரணப் புடைகளைப் பிறப்பிக்கும். அப்புடைகளோ அதிகரிப்பதும் சாந்தியை அடைவதுமாக யிருக்கும். இதனல் தேகம் ஸ்துலித்தல், வாயால் கோழைவிழுதல், கண்டததில் ஒருசத்தம், ரனதொனி, என்னும் குணங்கள் உண்டாகும்.

18. சுரக்கினி:—கண்டத்திற் குள்ளிலும் தாடைக்குள்ளிலும் படருகின்ற விரணப்புடைகளைப் பிறப்பித்து தொனியை அடக்கும். அப்புடைகள் அதிகரிப்பதும் சாந்தியை அடைவதுமாகயிருக்கும். இதனல் நோய்கின்று நிதானபிடிக்கில் பெருமூச்சுவிடுதல், கபம் கக்கல், நெஞ்சலால், ரனத்தொனி என்னும் குணங்கள் உண்

சர்வமுக ரோகம்

இத வாயிலும் மற்றும் முகத்தில் சர்வவிடங்களிலும் ஏற்படும் நோய்களைக் குறிக்கும். இவை எண்வகைப்படும்.

1. வாத முகபாகம்:—இது வியானவாயுவைக்கொண்டு வாய்க்குள் சிவப்பான விரணத்தைப் பிறப்பிக்கும். அவ்விரணத்தால் உதடுகள் சுறசுறத்து கனத்தும், ரா கனத்து வெளுத்து வெடிப்பதும், இதனல் காரம்படக்கூடாமல் வாயானது முட்கள் பொத்துக்கொண்டதுபோல் அருகுவதுமாக யிருக்கும்.

2. பித்தமுக பாகம்:—பித்தத்தைக்கொண்டு வாய்க்குள் ஒரு வித ஆவியைப்போல் புகையை எழுப்பும். இதனல் வாயில் அடிப்பட்டகாயம்போல் சகிக்கக்கூடாத நோயும் நாவில் கசப்பும் ஒரு வேகோ உப்புகரிப்பும் உண்டாகும்.

3. சிலேஷ்மமுக பாகம்:—இது கபத்தைக்கொண்டு நாவில் வழுவழுப்பான விரணத்தை பிறப்பிக்கும் இதனல் நாவில் நினவும் புண்ணும் வாயில் இனிப்பும் உண்டாகும்.

4. திரிதோஷ முகபாகம்:—மூன்றுதோஷ முஙபாக ரோக குணங்களோ எல்லாம் வாயில் உண்டாகும்.

5. ரத்த முகபாகம்:—இது பித்த முகபாக ரோகத்தை ஒத்திருக்கும். ஆனல் வாய்க்குள் ரத்தம்போல் சிவந்த நிறம்மாத்திரம் ஒன்று அதிகமாக உண்டாகும்

6. பூத்தியாசியம்:—நெஞ்சில் தர்க்கத்தத்தை யுண்டாக்குவதுடன் பற்களைக் கறுக்கச்செய்து குச்சியினல் பல்விளக்கக்கூடாத நோயையும் அருவருப்பையும் உண்டாக்கும்.

7. கண்டாற் புதம்:—இது கண்டத்திற் பிறந்த விரணவேகம், கபாலத்தில் அடிபடுதல் முதலிய வற்றால் பிறக்கும். இதனல் அங்கிருக்கும் கபமாகிய கோழைசலம் கறுத்தாவது வெளுத்தாவது நாசிவழியாவது தொண்டை வழியாவது மாறாது விழுந்துக் கொண்டே யிருக்கும்.

8. ஊர்த்துவ குதம்:—இது தொப்புளின் கீழிருக்கும் அபான வாயு மூலரோகத்தினலாவது, சுண்மரோகத்தினலாவது சிலேஷ்ம ரோகத்தினலாவது மேல்நோக்கி எறும்போது பிறக்கும். அவ்வாய்வு மலசலாதிகளில் தோய்ந்து மேல் நோக்கலால் வாயில் தர்க்கத்தம் உண்டாகிக்கொண்டே யிருக்கும் இது வாயிக்கு ஊதத்தொழிலைப் புரிவிப்பதால் ஊர்த்துவகுதரோகம் என்றபெயர் பெற்றது.

முகரோக சாத்தியா சாத்தியம்:—முகரோகம் 75-ல், ரத்தோஷ்டம், அற்புதோஷ்டம், மாமிசோஷ்டம், சலாற்பு தோஷ்டம், தந்தகாளம், தந்தபெலம், தந்தகூர்மம், தந்தமகாதம்

கூரம், வாததந்தமூலம், பித்ததந்தமூலம், சிலேஷ்ம தந்தமூலம், தோஷதந்தமூலம், சுத்ததந்தமூலம், ஜிக்வலஜகம், உபஜிக்வாரோகம், தாளுபிடகம், தாளுவற்புதம், தாளுகச்சபரோகம், கண்டாத்த ரோகணி, களபிருந்தம், களகரோகம், வலயரோகம், சதக்ஞினி: களாற்புதம், களகண்டம், சாக்ஞினி, ஊர்த்துவகுதம், ஆக 27-கஷ் டத்தின்மேல் ஒரு வருஷத்திற்கு பின்பு சாத்தியமாம் மற்ற 48-ம் ஆயுதசிகிச்சையால் சாத்தியமாம்.

சிரோ ரோகம்

இந்த ரோகமானது புகை வெய்யில், பனி, நித்தியசையோகம், அநித்தநிரை, நித்நிரைபங்கம், சதாசலத்தில் சயனம், கீழ்காற்று, கண்ணீரை யடக்குதல், ஓபாத அழுகை, மிகுந்த சலபானம, நிருமி சேருதல், பதினைகுவேகத்தை யடக்கல், சகிக்கூடாத உஷ்ண வாசனையை முகருதல், வெகுவார்த்தை ஆகிய இச் செய்கைகளினல் வாதபித்த கபங்கள் அதிகரித்து சிரசில் வியாபித்து சிரோரோகத்தை உண்டாக்கும்.

இந்த ரோகமானது பத்து வகைப்படும்.

1. வாதசிரஸ் தாபம்:—வாதரூபிக்கத்தினல் நெற்றிகளில் கட வாத்தியம் வாசிப்பதுப்போல் அதிர்வு, கண் புருவம் நெற்றி இவை கள் தெரித்து விழுவதுப்போல் நோதல், வெளிச்சத்தைப் பார்க்கக் கூடாமை, தலை சுழற்றலுடன் நோதல், காதிரைச்சல், கீல்கள் தளர்வு, ரோமகூபங்கள் புடைத்து உப்புதல், காயில் சலம் வடிதல், என்னும் குணங்களோ உண்டாக்கும். இக்குணங்கள் காரணமில்லா மலே அதிகரிப்பதும் குறைவதுமாக பிருக்கும். இதுவே வாதத் தலை வலியாம்.

2. பித்த சிரஸ்தாபம்:—தலையில் புகைகம்மியதுப் போலிருத்தல், சுரம், வியர்வை, கண்ணெரிச்சல், மூர்ச்சை முதலிய குணங்கள் நடு யிரவில் உண்டாகும்.

3. சிலேஷ்ம சிரஸ்தாபம்:—சிரோபாரம், குத்தல், சரீரம் முழு வதும் கடுத்தல், மூர்ச்சை, அரோசகம், வாந்தி, கண்கள் உப்ப லோடு நோதல், காதுக்குள் நமைச்சல் என்னும் குணங்களோ உண் டாக்கும்.

4. திரிதோஷ சிரஸ்தாபம்:—வாதம் முதலிய மூன்று சிரஸ்தாப ரோக குணங்களோ எல்லாம் ஒரேகாலத்தில் உண்டாக்கும்.

5. ரத்த சிரஸ்தாபம்:—இது பித்த சிரஸ்தாபரோக குணங் களைப் பார்க்கிலும் அதி தர்குணங்களோ உண்டாக்கி வேதனையைச் செய்யும்.

6. அர்த்தபேதம்:—இது ஒரு பக்கத்திலுண்டாகி வாதசிரஸ்தாப ரோக குணங்களைப்போல் வேதனையைச் செய்வதல்லாமல், பதினைந்து

நாளுக்கொருதரம் அல்லது மாதத்திற் கொருதரம் அதிகரிப்பதும் தானே சாந்தி அடைவதுமா யிருக்கும். இந்த ரோகம் எப்பக்கத் தில் அதிகரிக்கின்றதோ அப்பக்கத்து நேத்திரம் கெடுதல் அல்லது அப்பக்கத்துக் காதாவது செவிடாதல் என்னும் குணங்களையுண்டாக் கும். இதை ஒற்றைத் தலைநோவென்றும் சொல்லுவார்கள்.

7. கிருமிச்சிரம்:—இதில் திரிதோஷம் அதிகரித்து சிரசில் இருக் கும் ரத்த மாமிசங் களைந்து கிருமிகள் உண்டாகும். அக் கிருமிகள் உதிரத்தை பானம்பண்ணும்போது சிரசில் கோரமான வேதனையுண் டாகும். இதனல் மண்டை வறளல், மரத்தல், வீக்கம், பிளந்த போவதுபோல் இருத்தல், மிகுந்த எரிச்சல், தர்கர்தம், காயில் சலம் வடிதல், தாடையில் சிவந்த நிறத்துடன் நமைச்சல் உண்டாகி பின்பு அது வெளுத்த வீக்கமாக எழும்புதல், காதிரைச்சல், சுரம், இருமல், தர்ப்பலம், மனக்கலக்கம் என்னும் இக்குணங்கள் உண் டாகும்.

8. சிரக்கம்பம்:—புசிக்கின்ற ரசாதி வஸ்துக்களால் திரிதோ ஷங்கள் சிரசிலிருக்கும் நரம்பு முதலியவைகளை அநுசரிக்கும்போது பிறக்கும். இதனல் தலைநடுக்கம் உண்டாகும்.

9. சிரசங்கம்:—பித்தத்தில் கூடிய வாத சிலேத்துமங்களினல் இரண்டு நெற்றிகளிலும் சிவந்த வீக்கத்தைப் பிறப்பிக்கும். அப்போது அதில் எரிச்சல், நோய், சுரம், தாகம், சோர்வு, பிரமை, பிரலாபம், முகத்தில் மஞ்சள் நிறம், வாய்கசத்தல் என்னும் குணங்களுண்டா கும். இது பழுத்து உடைந்தால் மூன்று தினத்திற்குள் மரணத் தைத் தரும்.

10. சூரியாவர்த்தம்:—வாயுவானது பித்தத்தில்கூடி இரண்டு நெற்றி, புருவம், நெற்றி ஆகிய இடங்களில் வியாபிக்கும்போது பிறக் கும். இதனல் சூரிய உதயகாலத்தில் சிரசில் மிகுந்த உபத்திரவம் உண்டாகும். அது வெய்யில் ஏறஏற பிரபலப்படுவதும், சூரியன் அஸ்தமிக்கச் சாந்தம் அடைவதுமாயிருக்கும். இது தினந்தினமும் போராடும். இவ்வண்ணம் உண்டாவது எழுநாயிறு என்றும், இதில் சஞ்சரிக்கின்ற வாயு கபத்துடன் சேர்ந்து மாலை காலத்தில் உபத்திரமுண்டாகி பாதி இரவுக்குப் பின்பு சாந்தி அடைவது படுநாயிறு என்றும் கூறுவர். இந்த படுநாயிறே சந்திராவர்த்தம் எனப்படும்.

கபால ரோகம்

இது ஒன்பது வகைப்படும். அவையாவன:—

1. உபசிரிஷம்:—இந்நோயில் கபாலத்தில் வாயு சேர்வதால் கருப்ப ஸ்திரீக்கு சிரசில் வீக்கமும் அவ்வாறே அவள் வயிற்றிலிருக் கும் சிசுவுக்கும் உண்டாகும். தாய்க்கு சிகிச்சை செய்ய சிசுவுக்கும் குணமாகும்.

2. மூர்தபிடகம்:—வாதத்தினால் உச்சந்தலையில் கட்டிப்போல் விக்கத்தை யுண்டாக்கும்.

3. சிரோற்புதம்:—பித்தத்தால் கபாலத்தில் ஆச்சரியமான விக்கத்தை யுண்டாக்கும்.

4. சிரோவித்ரதி:—கபத்தால் கபாலத்தில் வித்ரதியைப் போல் விக்கத்தை உண்டாக்கும்.

5. அரும்ஷிகை:—பித்தத்தினால் கபாலமூலை கரையும்போது பிறக்கும். இதனால் கபாலத்தின்மீது ரத்தத்தினாலாவது கபத்தினாலாவது கிருமிகளினாலாவது நிணையப்போலும் கடுகைப்போலு அதேக கொப்புளங்கள் உண்டாகும்.

6. தாருணம்:—இது சிலேஷ்மவாதங்களினால் பிறந்து கபாலத்தில் நினவு, மயிர் உதிரல், சுறசுறப்பு, சருமப்பொட்டுகள் உதிரல், மிகு நித்திரைமுதலிய குணங்களை உண்டாக்கும்.

7. இந்திராவுத்தம்:—பித்தமானது உரோமதுவாரத்தில் வியாபித்து வாதத்துடன் கூடுங்காலத்தில் பிறக்கும். இதனால் கபாலத்திலிருக்கும் உரோமமெல்லாம் உதிரும். இவ்வண்ணமாக பித்தமுதலியவைகள் உரோமத் துவாரங்களை அடைவதனால் உதிர்ந்தரோமம் முளையமாட்டாது. எப்படி இந்திராவுத்தமென்னும் ஒரு எரிப்பூச்சியானது பயிர் முதலிய பச்சிலைகளை ஒன்றுமில்லாமல் செய்துவிடுமோ அவ்விதம் இதுவும் உரோமக் கால்களைக் கெடுத்துவிடும்.

8. கலதி:—முற்கூறிய இந்திராவுத்தரோக குணத்துடன் ரோமங்களைச் உதிரச்செய்வதுடன் கபாலத்தை மூடிய சருமத்தின் மேல் வழுவழுப்பான ஒரு மழுங்கலை உண்டாக்கும். இது வாதத்தால் பிறந்தால் அச் சருமம் அக்கினியால் சுட்டாறிய வடுப்போல் மச்சத்தைப்பெற்றிருக்கும். பித்தத்தால் பிறந்தால் முற்கூறிய குணத்துடன் அவ்விடத்தில் வியர்வை நீர் கசியும். சிலேத்துமத்தால் பிறந்தால் அச் சருமமானது மிகவும் கடினமாகயிருக்கும். நிரிதோஷத்தால் பிறந்தால் அச் சருமமெல்லாம் ரகத்தினது நிறம்போல் தோற்றுவதுந்தவிர அதில் மாறுதல எரிச்சலை உண்டாக்கும்.

9. பலிதரோகம்:—அதிதுக்கம், கனகோபம், மிகுபயம், தடி முதலியவற்றால் அடிபடல், சதாசிந்தனை, பலித கடினவுழைப்பு, மனசஞ்சலம், தேகசங்கை ஆகிய இவைகளினால் உண்டான வெப்பமானது தேகமுற்றிலும் வியாபித்து சிரசைப் பற்றி அங்குள்ள கபாலரோமங்களின் வேர்களை யெல்லாம் வேருமபடிச் செய்து நரையை உண்டாக்கும் அப்போது அம்மயிர்கள் வாதத்தால் நரைத்தால் முனைபிளந்து கொஞ்சங் கருமைநிறத்தையும், கபங்களின் நிறத்தையும் பெற்று தொட்டால் வெப்பத்தைத் தருவதாயிருக்கும். பித்தத்தால் நரைத்தால் செம்மை பீதம் என்னும் நிறங்களைப்பெற்றிருப்பதன்றியும், அந்த ரோமக்கால்கள் தோறும் எரிச்சலை உண்டாக்கும். சிலேத்துமத்தால் நரைத்தால் அம்மயிர்கள் வெள்ளிக்காசைப்போல் வெளுத்தும் மினுமினுத்தும் நரை அதிகரித்தும் இருக்கும். ஆனால் நரைக்கு மிடங்களில் சமைச்சல் உண்டாகும். நிரிதோஷதத்தால் நரைத்தால் வாதமுதலிய மூன்று ரோகங்களுக்குள்ள குணங்களெல்லாம் இதில் உண்டாயிருக்கும்.

கபால ரோகத்தின் சாத்தியாசாத்தியம்:—கபாலரோகம் 9-ல் கபால சருமமும், புரைபுரையாக உதிர்ந்து அந்த இடத்தில் உபத்திரவங்கள் உண்டாயிருக்கின்ற ரோகமும், சரீரம் பழுத்ததினால் பிறந்த நரைரோகமும் அசாத்தியம். மற்றவை சாத்தியமாம்.

விரணம்

தேகத்திலுண்டாகிற விரணமானது நிசவிரணமென்றும் ஆகந்துகவிரணமென்றும் இருவகைப்படும். வாத பித்த சிலேத்ம தோஷங்களால் உண்டாகும் விரணம் நிசவிரணம். காயங்களினால் உண்டாகின்றது ஆகந்துகவிரணம். இவ்விருவகை விரணங்களும் குணங்களினால் துஷ்டவிரணமென்றும், அதுஷ்டவிரணமென்றும் இருவகைப்படும். என்றைக்கும் ஆறுதிருப்பது துஷ்டவிரணம். சீழ், ரத்தம், சிலேத்தண்ணீர் முதலியவைகள் வடிந்துக்கொண்டிருந்தாலும் சிலநாள் பொறுத்து ஆறுபடுமானால் அது அதுஷ்டவிரணமாம். இந்த விரணங்கள் யாவும் அறுபத்தைந்து வகைப்படும். இவற்றுள் துஷ்டவிரணம் பதினைந்து, அதுஷ்டவிரணம் நாற்பத்தொன்பது. சுத்த ரத்தத்தால் உண்டாகும் விரணம் ஒன்று.

துஷ்டவிரணம்:—

இது ஒவ்வொருவேளை வாய்மூடியும் திறந்தும், கெட்டிப்பட்டும் மிருதுவாயும், உலர்ந்தும் உலராமலும், எரிச்சலைத் தருவதும், குளிர்ச்சியைத் தருவதும், சிவப்பதும் கருப்பதும் வெளுப்பதும், துர்க்கந்தமிழ வடிப்பதும், சிலவேளை ரத்தம், சீழ், சரம்பு என்னும் இவைகளில் துர்வாசனை வீசுவதும், வியர்வையைத் தருவதும், நெடுநாள் சென்றும் ஆறுதலும், ஒருவேளை நோய், விக்கம், சமைச்சல் முதலிய குணங்களைப் பிறப்பிப்பதுமாக இருக்கும். இது பதினைந்து வகைப்படும்.

1. வாத துஷ்டவிரணம்:—இது சாம்பல், கருமை, வெண்மை ஆகிய இந்நிறம உள்ளதாயிருக்கும். இதில் வருகிற சலமானது ஆகிய இந்நிறம உள்ளதாயிருக்கும். இதில் வருகிற சலமானது புஞ்சை தானியத்தையும், மாமிசத்தையும் கழுவிய சலம்போலவும், தெளிந்த மோர்சலம்போலவும், கொஞ்சம் கொஞ்சமாக வடியும். இதனால் அவ்விடத்தில் மாமிசம் கரைதல், சோதல், குத்தல், வறளல், உள்ளில் இடுக்கிப்பாகிய ஒரு சத்தம் என்னும் குணங்களுண்டாகும்.

2. பித்த துஷ்டவிரணம்:—இது சிக்கிரத்தில் பிறந்து, மஞ்சள் கருமை செம்மை இவைகள் கலந்த நிறங்கள் உள்ளதாகயிருக்கும். இதில் வருஞ்சலம் கோமூத்திரம்போலவும், முருக்கம்பூசாம்பல் கழு வியசலம் போலவும், எண்ணெயைப்போலவும் சுடலையுடன் அதிக மாக ஒழுகும். ஆனல் அவ்விடத்தில் உப்புசலத்தை தெளித்ததுப் போல் எரிச்சல், காயம்பட்டதுபோல் நோதல், அனலில் வெந்த மாமிசம்போல் சிவத்தல் என்னுங் குணங்களோ உண்டாக்கும்.

3. சிலேத்ம துஷ்டவிரணம்:—ரமைச்சலுடன் வெளுத்தும் கெட்டியாக உயர்ந்தும், உஷ்ணத்தைப்பெற்ற ரம்புகளில் சிலை யோடுவதாயும் இருக்கும். இதில் வருகிற சலமானது வெளுத்த பிசினைப்போல் குழம்பாக மிகவும் வடியும். அப்போது கொஞ்சம் குத்தலோடுகூடிய நோயும் உண்டாகும்.

4. வாதபித்த துஷ்டவிரணம்:—வாததுஷ்ட விரணம், பித்த துஷ்ட விரணம் இவைகளின் குணங்களோ உண்டாக்கும்.

5. வாதசிலேஷ்ம துஷ்டவிரணம்:—வாத துஷ்ட விரணம், சிலேத்தும துஷ்டவிரணம் இவைகளின் குணங்களோ உண்டாக்கும்.

6. சிலேஷ்மபித்த துஷ்டவிரணம்:—சிலேத்தமதுஷ்டவிரணம், பித்த துஷ்டவிரணம் இவைகளின் குணங்களோ உண்டாக்கும்.

7. திரிதோஷ துஷ்டவிரணம்:—வாதம் பித்தம் சிலேஷ்மம் என்கிற மூன்றுவித துஷ்டவிரணங்களின் குணங்களோ எல்லாம் உண் டாக்கும்.

8. ரத்த துஷ்டவிரணம்:—இது பவளத்தைப் போலவும், இரத் தத்தைப்போலவும் நிறத்தைப்பெற்று பித்த துஷ்டவிரணக் குறிகளோ எல்லாம் பெற்றிருப்பதுடன் அதில் குதிரை லாயத்தில் உண்டாகிய வாசனையும் வீசும்.

9. ரத்தவாத துஷ்டவிரணம்:—இது சிகப்பு கறுப்பு நிறமுள்ள தாயும் ரத்தம்போலும் மோர் சலம் போலும் சிலேத்தண்ணீர் ஒழுகுவ தடன் குத்தலும் வாந்தியும் உண்டாகும்.

10. ரத்தபித்த துஷ்டவிரணம்:—இது சிகப்பு, மஞ்சள் நிறமா யிருக்கும். இதில் கோமூத்திரம் போலும் ரத்தம்போலும் சலம் ஒழுகும். எரிச்சலும் விறுவிறுப்பும் உண்டாகும்.

11. ரத்தசிலேஷ்ம துஷ்டவிரணம்:—இது வெளுத்தும் சிவந் தும் பிருக்கும். இதினிருந்து சீழும் ரத்தமும் ஒழுகும். விக்கமும் வாந்தியும் உண்டாகும்.

12. ரத்தவாதபித்த துஷ்டவிரணம்:—இது ரத்தவாதம், ரத்த பித்தம் ஆகிய இவ்விரண்டு துஷ்ட விரணங்களின் குணங்களோ உண் டாக்கும்.

13. ரத்தவாத சிலேஷ்ம துஷ்டவிரணம்:—இது ரத்த வாதம், ரத்த கபம் இவைகளின் துஷ்ட விரணக் குணங்களோ உண்டாக்கும்.

14. ரத்தசிலேஷ்ம பித்த துஷ்ட விரணம்:—இதில் ரத்த கப பித்த துஷ்ட விரணக் குணங்கள் உண்டாயிருக்கும்.

15. ரத்த திரிதோஷ துஷ்ட விரணம்:—இது ரத்தவாதம், ரத்த பித்தம், ரத்தகபம் என்கிற மூன்றுவித துஷ்டவிரணக் குணங்களோ உண்டாயிருக்கும்.

அதுஷ்ட விரணம்:—

அதுஷ்ட விரணமானது சப்த தாதுக்களையும்பற்றி ஒவ்வொரு தாதுவுக்கு எவ்வேழு விதமாகப் பிறந்து நாற்பத்தொன்பது விதப் படும். எப்படி எனில்: ஒவ்வொரு தாதுவுக்கும் வாத, பித்த, கப, வாதபித்த, வாதசிலேஷ்ம, கபபித்த, திரிதோஷமென்னும் எழுவகை யாக ஏழு தாதுவுக்கும் நாற்பத்தொன்பது விதங்களாம். இவைகள் யாவும் அந்தந்த தோஷங்களுக்கேற்பக் குறிகுணங்களோப் பெற் றிருக்கும்.

சுத்தரத்த விரணம்:—இது கொப்புளம்போல் எடுவில் உயர்ந்து, உபத்திரவம் இல்லாமல் மிருதுவுடன் வழுவழுத்து, தொட்டால் சுடலை உள்ளதாய், காவினது நிறத்தையும் கரிநிறத்தையும் பெற் றிருக்கும்.

இவைகளோ விரணபேத நிறத்தினலும் பின்னும் பற்பல பரீட்சை யாலும் அதிநுட்பத்துடன் நிதானித்து சிகிச்சை செய்ய வேண் டியது. சருமம், மாமிசம், பெருரம்பு, சிறுரம்பு, எலும்பு, வயிறு, மர்மஸ்தானம் என்னும் எட்டுவித விரணஸ்தானங்களோப்பற்றி வி ரணம் பிறக்கில் முறையே ஒன்றுக்கொன்று கஷ்டசாத்தியங்களாகு மென்றறியவும்.

சத்தயோ விரணம்:—இது கல், முள், தடி முதலியவைகளினல் அடிப்படுதல், விழுதல் என்னும் இவைகளினல் பிறக்கும். இது எட்டு வகைப்படும்.

1. சிருஷ்டவிரணம்:—இது முள், கட்டை, குச்சு, கொம்பு, கடி, முதலியவைகளினல், காயப்படுவதினலும் உராயப்படுவதினல் உண்டாகி கொஞ்சம் ரத்தக் கசிவுடன் கூடினதாய் ஆரு திருக்கும்.

2. அவகர்த்த விரணம்:—இது மேற்கூறிய விரண விருத்தி யினல் பிறக்கும். இதனல் விரணத்தில் குழி விழும். இதுவே குழிப்புண்ணும்.

3. விச்சின்ன விரணம்:—இதுவும் முற்கூறப்பட்டதுபோலவே உண்டாகி அவ்விரணம் துண்டுதுண்டாய் அறுப்பட்டதுபோல் இருக்கும்.

4. பிரவிளம்பி விரணம்:—இது லிச்சின்ன விரணம் அதிகரிப்பினல் பிறக்கும். இதில் எலும்புகள் வெளியில் தோற்றப்படும்.

5. நிபாதித விரணம்:—இது பிரவிளம்பி விரண விபரீதத்தால் பிறக்கும். அப்போது கடுவில் கொஞ்சம் எலும்பை தெறிவிக்கும் படிக்கு வைத்து மற்றைய பிடத்தை எல்லாம் தர்மாமிசம் விழுந்து மறைக்கும்.

6. வித்த விரணம்:—முள்ளு முதலியவைகள் தவிர கல் முதலிய வைகளால் அடியுண்ட காலத்தில் பிறந்து விஷமிக்கும்.

7. பின்ன விரணம்:—இது யுத்தகாலத்தில் அல்லது சுபாவ காலத்தில் ஆயுதங்களினல் பிறந்து உபத்திரவத்தை யுண்டாக்கும்.

8. விதளித விரணம்:—இது ரத்தம் ஒழுகிக்கொண்டிருக்கின்ற விரணத்தை பிடித்து அழுத்தப்படுதலினலும், கல் முதலியவைகளினல் அடிபடுதலினலும் பிறந்து உபத்திரவத்தைச் செய்யும். இதனல் எலும்புகள் சோதலும், விரணம் பருத்தலுமாக யிருக்கும்.

பகந்தர ரோகம்

யானை ஏற்றம், குதிரை ஏற்றம், எக்காலமும் குந்திக்கொண்டிருக்குதல், சதாகடின ஆசனத்தில் உட்காரல், மூல வியாதிக்கு காரணமான வஸ்துவையும், இந்த வியாதி பிறப்பதற் கேதுவான வஸ்துவையும், விருப்பமில்லாத வஸ்துவையும் புசித்தல், ஆகிய இச்செய்கைகளினல் வாதாதிகள் அதிகரித்து அடியபிற்குக்கும் மூதநிரப்பைக்கும் சமீபத்தில் இருக்கின்ற கெட்ட உதிரமாமிசங்களை ஒட்டி, உள்ளிலாவது வெளியிலாவது ஒரு அங்குலம் இரண்டு அங்குலம் அளவுள்ள கட்டிகளைச் சேரசேர உண்டாக்கும். அப்போ தவ்விடத்தில் வியர்வையும் விரணமும் பிறக்கும். இந்த நிதானத்தை அறிந்து உடனே வைத்தியம் செய்யாவிடில் அல்குல், கீழ்வயிறு, குதம் ஆகிய விடங்களில் விரைவில் துவாரங்களை உண்டாக்கி அத்துவாரங்களின் வழியால் காற்றும், மலமும், மூத்திரமும், சுக்கிலமும் வெளிப்படும்படிச் செய்யும். இதுவே பகந்திரம் எனப்படும்:

இப்பகந்தரங்களினல் உண்டாகின்ற கட்டியானது உடையாமல் அப்படியே குணமானல் அதனைப் பகந்திரக் கட்டி என்றும், உடைந்து வேரானது தூரத்தில் ஓடி உட்புரத்திலேயே விஸ்தரித்து வெளிபுரத்திலும் தோன்றி நோய் முதலியவைகளை அதிகரிக்குமாகில் அதனைப் பகந்திரவிரணம் எனவும் கூறப்படும் இந்நோய் எண்வகைப்படும்.

1. வாதபகந்தரம்:—குதஸ்தானங்களில் கறுத்தும் சிவந்தும் எழும்பி அந்த இடத்தில் விரித்துபோலதுபோல் இருத்தல், குத்தல் அதிர்தல் நோதல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

2. பித்த பகந்தரம்:—இது புகைநிறத்துடன் சிவந்தும் நீண்ட உருவத்தில் மெலிந்தும், ஒட்டைக் கழுத்தைப்போல் உயர்ந்தும், தொட்டால் சுடிகையாயும் பிறக்கும். இதனல் தாபகரம் உண்டாகும்.

3. சிலேஷ்ம பகந்தரம்:—இது நிலைபெற்றவேருடன் வெளுத்தும் கணத்தும் வழுவழுத்தும் பிறக்கும். இதனல் அதிக கமைச்சல் உண்டாகும்.

4. வாத பித்த பகந்தரம்:—கருமை செம்மை கலந்த முகத்துடன் பிறக்கும். இதனல் அந்த இடத்தில் சிழ்வடியும்போது ஒரு சத்தம் உண்டாகும்,

5. வாத சிலேஷ்ம பகந்தரம்:—இது வெளுத்த நிறமும் கொஞ்சம் கறுத்த நிறமும் உடையதாகப் பிறந்து கஷ்டத்தின்மேல் பழுத்து உடைவதா யிருக்கும்.

6. சிலேஷ்ம பித்த பகந்தரம்:—இது சிலேஷ்ம பித்த பகந்தர குறிகளை உடையதா யிருக்கும்.

7. திரிதோஷ பகந்தரம்:—காலில் பெருவிரற் பிரமாணத்தையும் பற்பல நிறத்தையும் உடையதாகப் பிறந்து அவ்விரணத்தில் எரிச்சலுடன் குத்தலையும் உண்டாக்கும். அப்போது சுரமும் அரோசகமும் தாகமும் வாந்தியும் காணும்.

8. ஆகந்துகபகந்தரம்:—அடிபடுதல் முதலிய காரணங்களினல் குதத்தில் பகந்தர, கட்டிகள் போன்றக் கட்டிகள் எழும்பி பழுத்து உடைந்து சிறுசிறு துவாரங்களை உள்ள விரணங்கள் விருந்தியாகும். இதிலிருந்து தூர்கந்த சிழ்நீரம் வடிவது மன்றி சிலவேளை நுரையுடன் சுத்த சலம் வடிவதாயுமிருக்கும்.

கிரந்தி

உணவாதிபேதம், தகாதாடத்தை முதலிய காரணங்களினல் வாதாதி தோஷங்கள் கெட்டு அதனல், விரைஸ்தானங்களிலாவது மற்றைய ஸ்தானங்களிலாவது, சரம்புகளில் முடிச்சி உண்டாகும். இதனை கிரந்திரோக மென்பர்.

இது ஒன்பது வகைப்படும்.

1. வாதகிரந்தி:—இது கறுத்தும் காரணமில்லாமலே விருத்தி யடைந்தும் அப்படியே குறைந்தும், குத்தலையும் அதிர்லையும் உடையதாகவும் இருக்கும். இது பழுத்து உடைந்தால் மிகு சிவப்புள்ள சுத்த ரத்தம் ஒழுகுவதும் அவ்விரணம் மிருதுவை அடைவதுமாக இருக்கும்.

2. பித்தஜுரந்தி:—இது மஞ்சள்நிறத்தையும் சிகப்புநிறத்தையும் பெற்று சதா எரிச்சலுடன் இருக்கும். பழுத்துடைந்தால் சுடுகை யான ரத்தமுஞ் சீழுஞ் ஒழுகும்.

3. சிலேஷ்மஜுரந்தி:—இது வெளுத்தும் கனத்தும் ரமைச்ச லுடன் அதிக சோவில்லாமல் வீக்கத்தைத் தருவதாய் இருக்கும். பழுத்து உடைந்தால் இதினின்று குழம்பான சீழ் ஒழுகிக்கொண்டே யிருக்கும்.

4. ரத்தஜுரந்தி:—திரிதோஷங்களினுல் ரத்ததாதுவானது கெடு நிலை அடைந்து மிகவும் பொங்கி கொதிக்கும்போது அதில் உண் டாகின்ற நுரைகளினுல் சனித்த கிருமிகளினுல் பிறக்கும். இக்ஜுரந்தி மாமிசத்தையும் ரம்பையும் அநுசரித்து பித்தஜுரந்திக்குள்ள குணங் களுடன் உஜுரத்தை வடியச்செய்யும்.

5. மாமிச ஜுரந்தி:—இது மாமிசத்தை விருத்திபண்ணுகின்ற இறைச்சிமுதலிய நண்டிகளினுல் பிறந்து மினுமினுத்தும் பருத்தும் கெட்டியாய் ரம்புகளால் சுற்றப்பட்டும் இருக்கும். இது பழுத்த உடைந்தால் கபஜுரந்தி குணங்களைத்தரும.

6. மேதோ ஜுரந்தி:—இது மேதோதாதுவை அதிகரிக்கச் செய் கின்ற ரசாதிவஸ்துக்களை மிகவும் புசித்தலால் விருத்தியடைந்து வாயு வின் கோபத்தினுல் மாமிசத்திலாவது, சருமத்திலாவது பிறந்து வெளுப்பதும் வழுவழுப்பதும் மினுமினுப்பதும் குலுங்குவதுமா யிருக்கும். இது பழுத்து உடைந்தால் சோனை பிடிப்பதுபோல் குழம்பாகக் கறுத்தும சிவந்தும் வெளுத்தும் ஒழுகும். இக்ஜுரந்தி விருத்தியினுல் தேகம இளைக்கும்.

7. அஸ்தி ஜுரந்தி:—இது எலும்புகள் தொறுங்கலாலும், அபி காதத்தினுலும் உண்டாகி பருத்து உருவதும் கொஞ்சம் அமுங்கு வதுமாக இருக்கும்.

8. ரம்பு ஜுரந்தி:—ரம்புகள் வெகு சஞ்சாரத்தினுல் உப்பி உட்புறத்தில் தடிக்க ரத்ததாது ஓட்டமில்லாமல் தேங்கும்போது பிறக்கும். தேங்கிய ரத்தத்தோடுகூடிய ரம்புகளை வாயு உலர்த்தி வக்ரமாக முடங்கச்செய்து கெட்டிப்பட்ட சோவில்லாத ரம்புகளை வெளியில் வரப்பண்ணும்.

9. விரண ஜுரந்தி:—ஆறாசவர்க்கங்கள் அதிகமாய் புசித்தலி னுல் பிறக்கும். தேகத்தில் அற்பவிரணம் உண்டாயிருந்தாலும் அதைப்பிரபலப்படுத்தும். அல்லது இல்லாதிருந்தாலும் சிலராணுக்குள் மாமிசஸ்தானங்களில் அம்மாமிசத்தை கண்டுகண்டாக எழுப்பும். அப்போது வாயுவானது நிரோதவாக கறுத்த ரத்தத்தை வெளிப்படுத் தாமல் அவ்விடத்தில் சேர்ந்து உலர்த்துதலால் விரணங்கள் உண்டா கும். இதனுல் எரிச்சலும் நினவும் அதிகரிக்கும். இது மிகவும் பருத்து உயர்ந்தால் அற்புத ஜுரந்தி என சொல்லப்படும்.

ஜுரந்தி நோயில் சாத்தியா சாத்தியம்:—வாதம், பித்தம், சிலேத் தமம், ரத்தம், மேதோ இவைகளினுல் உண்டாகும் ஜுரந்திகள் சாத் தியம். பருத்து கெட்டிப்பட்டு அதிர்ந்து குலுங்குகின்ற ஜுரந்தி கள் அசாத்தியமாம்.

பாதவன்மீகம்

செய்தல் நிலவாசம், மலசலம் ஊறிய பதார்த்தம், சிலேத்மபி தானவஸ்து இவைகளை புசித்தலினுலும், அதிகசையோகத்தினுலும் அதோகாயமான இரண்டு தொடைகளி லிருக்கின்ற ரம்புகளில் சிலேத்தமதீரானது நிறையப்படும். அக்காலத்தில் வாதமும் பித்த மும் பாதத்தில் வியாபித்து அவ்விடத்தில் கொஞ்சங் கொஞ்சமாக கர்மாமிசத்தை சேர்ப்பித்து அதைப் புற்றுப்போல் பருக்கப்பண் ணும். அம்மாமிசம் அதிகரிக்க அதிகரிக்க அரோசகமுதலிய குறி குணங்கள் அடிக்கடி பிறக்கும். இதுவே பாதவன்மீகம். இதனை சிலீபதரோகமென்றும், யானைக்கால் என்றுஞ் சொல்லுவார்கள். இது மூன்று வகைப்படும்.

1. வாதபாதவன்மீகம்:—இது ஒரு பாதத்திலாவது இரண்டிலா வது காலுக்குரான் விருத்தியடைகின்ற வீக்கத்தை உண்டாகும். அப்போது அதிலுள்ள கர்மாமிசம் கறுத்த உண்டையும் உருளையு மாக கருணைக்கிழங்கு முளைகளைப்போல் எழும்பி கெட்டிப்பட்டு சொறசொறத்த மினுமினுப்பில்லாமல் சிலவேளை நோவைத் தருவதா யிருக்கும்.

2. பித்தபாதவன்மீகம்:—இது தொடைரம்புகளில் பித்தநீர் கலந்து இறங்கலால் உண்டாகும். அப்போது அரையில் நெறிகட்டு தல், பாதத்தில் மஞ்சள் நிறமான வீக்கம், மேலில் எரிச்சல், சுரம், பிதற்றல், கண்ணீர்பீதவர்ணம், வாந்தி, சிலவேளை பேதி அல்லது மலக்கட்டு என்னுங் குணங்களை யுடையது.

3. சிலேஷ்ம பாதவன்மீகம்:—பாதத்தில் மினுமினுப்புடன் குளிர்ச்சியும் வெளுவெளுப்புமுள்ள வீக்கத்தை உண்டாக்கும். ஆனல் அவ்வீக்கத்தின்மீது புக்கெழும்புவதுபோல் சிறிதும் பெரிது மாக கர்மாமிசம் வளர்ந்து முழங்காலுக்கு மேலும் உயர்ந்து நோயில் லாமல் தனதனப்பாகயிருக்கும.

பாதவன்மீக நோயில் சாத்தியா சாத்தியம்:—எந்த யானைக்காலா வது தானமாக பிறந்து ஒரு வருடத்திற்குள் குணிராமல் அற்பமா யிருக்கில் சாத்தியமாம். பாதப்பிரமாணத்திற்கு மீறி இரண்டு பக் கங்களிலும் அதிகமாகப் பிதுங்கி ஆள்வள்ளிக்கிழங்கு, புற்று, தூண், யானைக்கால் முதலிய பிரமாணங்களைப் பெற்று விருத்தி அடைந்த வீக்கம் அசாத்தியமாம்.

தேசபேதங்களினால் கை, உதடு, செவி, மூக்கு முதலிய அவயவங்களில் பாதவண்மீசம்போல் வீங்குமாயின், அவைகளே அவ்வவ்விடப் பெயர்பெற்ற புற்றுகளென்று வழங்கப்படும்.

கண்டமாலை

திரிதோஷங்கள் மேதோதாதுவை அனுசரிப்பதினாலும், மாமிசதாது விருத்தியினாலும், கழுத்தின் ரசபுகளிலும், அக்குள்களிலும், அரைகளிலும் தேகநிறத்தைப் பெற்று கெட்டிப்பட்டு மிணுமிணுத்து நெல்லிக்காய், இறுகத்திரிக்காய் பிரமாணத்தை ஒத்து சிறிதும்பெரிதுமான கட்டிகள் உண்டாகும். அவைகள் சாட்சென்று பழுத்து உடைந்து நடுவில் குழிவிழுந்து பலபேதங்களாயிருக்கும். இவற்றுள் சிலது அற்ப நோயுடன் உடைந்து சீழைச் சொறிவதும், சிலது சமைச்சலுடன் உஷ்ணத்தைத் தருவதும், சிலது கிளைத்துக்கொண்டேயிருப்பதும், சிலது நெடுநாள் சென்றும் கரையாது வலுப்பதுமாகயிருக்கும். இந்நோகம் கண்டத்தைச் சுற்றிலும் மாலைபோல் பிறப்பதால் கண்டமாலை எனப் பெயர்பெற்றது. இதுவே தொடைகவுட்டில் கண்டால் அதனை அரையாப்புக் கட்டி என்பர்.

எந்த கண்டமாலைக் கட்டியாவது அறுகன்வேரைப்போல் கிளைப்பதும், அடங்குவதுமாயிருந்து இதனால் சுரம், இருமல், வாந்தி, பீனிசம், பக்கநோய், தேகசுட்கம் என்னும் இக்குணங்கள் உண்டாகில் அசாத்தியம். இக்குணங்கள் இல்லாவிடில் சாத்தியம்.

நாடி விரணம்

ரசம்புகளில் பிறக்கின்ற கட்டியானது பழுத்து உடைந்து விஷமித்தால் அந்த ரசம்பைபற்றி, மாமிசதாதுமுதல் அஸ்திதாதுவரையிலும் சிலேயோடும். அது ஒரு ரசம்பைப்பற்றினாலும் அதற்கு சகல ரசம்புகளும் சம்மந்தப்பட்டு உலைப்பின்னலைப்போல் பிரிப்பதால் சிலே ஓடுதற்கும்,சீழ்கொள்ளுதற்கும் பலவழிகளுண்டு. ஆதலால் இதை சிலேயோட வொட்டாமல் வசப்படுத்தல்வேண்டும். இதுவே நாடி விரணம். இதனால் நுரைத்த சலம்வடிதல், கருஞ்சிவப்பு ரத்தம்வடிதல், அதிகசமைச்சல், மிகுந்தவேதனை என்னும் குணங்களுண்டாம். இது வாதநாடி விரணம், பித்தநாடிவிரணம, சிலேஷ்மநாடி விரணம், திரிதோஷநாடி விரணம், அஸ்திநாடி விரணம் என ஐந்து வகைப்படும்.

1. வாதநாடி விரணம்:—இது சூட்சும முகத்துடன் நிறபேதமாகப் பிறந்து அதிக நோவைத் தரும. இக்கட்டியானது பழுத்து உடைந்தால், அதில் நுரைத்த சலம் வடிவதும் இரவில் கருஞ்சிவப்பு ரத்தம் ஒழுகுவதுமாக இருக்கும்.

2. பித்தநாடி விரணம்:—இது சுரம், தாகம், எரிச்சல் இவைகளை உண்டாக்கிக்கொண்டே பிறக்கும். இக்கட்டி பழுத்து உடைந்தால்

மஞ்சள் நிறத்துடன் சுடலையுள்ள கூர்கந்த சீழும் ரத்தமும் பகற்காலத்தில் ஒழுகுவதாயிருக்கும்.

3. சிலேஷ்ம நாடி விரணம்:—இது தடித்து கெட்டிப்பட்டு மிணுமிணுப்புடன் பிறக்கும். இக்கட்டி பழுத்து உடைந்தால் எந்நோழுஞ் சீழ்வடிவதாயிருந்தாலும் இரவு காலத்தில் மிதம் இல்லாமல் வடிதலும் அதிசமைச்சலும் உண்டாகும்.

4. திரிதோஷ நாடி விரணம்:—இது வாதபித்த கப நாடி விரணங்களுக்குள்ளகுணங்களே எல்லாம் உண்டாக்கும். இது அசாத்தியமாம்.

5. அஸ்தி நாடி விரணம்:—இது எலும்பின்மார்க்கத்தில்பிறந்து அந்த எலும்பின் ரசம்புகளுக்கு உபத்திரவத்தைத் தருவதுமன்றி அந்த எலும்பின் ரசம்புகளுக்கு உபத்திரவத்தைத் தருவதுமன்றி மிருதுவாயிருக்கும். இக்கட்டி பழுத்து உடைந்தால் இதிலிருந்து நுரைத்த சுடலையுடன் ரத்தமுஞ்சீழும் வடியும் இதனால் மிகுந்த வேதனையுண்டாகும். இவ்விரணம் பிறந்த எலும்பை அறுத்துவாங்கி சிகிச்சைசெய்யாவிடில் வசப்படாது. இதனைச் சல்லியநாடி விரணம் என்றுங்கூறுவர்.

குய்ய ரோகம்

தகாத கடத்தை, மிகுபோகம், நோயுள்ள மாதர்களின் சேர்க்கை முதலிய காரணங்களினால் வாதாதிதோஷங்கள் விகற்பமுற்று ஆண்குறியில் நின்று பலவித நோய்களைப் பிறப்பிக்கும். இதற்கு குய்ய நோய் அல்லது ஆண்குறி நோய் எனப்பெயர். இந்நோய்கள் யாவும் பெரும்பாலும் அல்குலினின்றுத் தொடர்வதனால் இதனைக் குய்யரோகமென்றனர். இது 23-வகைப்படும்.

1. உபதம்ஸம்:—இது ஆண் குறியில் விஷக்கடியால் உண்டாகும் குறி குணங்களைப்போன்ற சகல குணங்களையும் உண்டாக்குவால் இதனை உபதம்ஸம் எனப்பட்டது. இது வாத, பித்த, கப, திரிதோஷ, ரத்த உபதம்ஸங்களென ஐவகைப்படும்.

வாத உபதம்ஸம்:—இது ஆண்குறியின் துவாரத்தை அடைத்து உலர்த்தல், அவ்விடத்தில் மரத்தல், பலவித நோய், சருமத்தின்மீது குருகுருவாக எழும்புதல், என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

பித்த உபதம்ஸம்:—இது முன்கூறிய உபதம்ஸ ரோக குணத்துடன் ஆண்குறியில் வெந்த விக்கத்தை உண்டாக்கும்.

சிலேஷ்ம உபதம்ஸம்:—இது ஆண்குறியை தடித்து கனத்து மிணுமிணுத்து வீங்கச்செய்யும். இதனால் சேதனமும் அவ்விடத்தில் தினவும் உண்டாகும்.

திரிதோஷ உபதம்ஸம்:—இது ஆண்குறியில் வாத முதலிய மூன்றுவித உபதம்ஸரோக குணங்களோ உண்டாக்கும். இதனால் இரண்டி அண்டங்களும் வீங்கும்.

ரத்த உபதம்ஸம்:—இது ஆண்குறியை கறுப்பாக்கி எரிச்சலும் சுரத்தை உண்டாக்கும்.

இவற்றில் வாதமுதல் மூன்று உபதம்ஸ ரோகம் சாத்தியம். ரத்த உபதம்ஸ ரோகம் கஷ்ட சாத்தியம். திரிதோஷ உபதம்ஸ ரோகம் அசாத்தியம்.

2. அரிசோ ரோகம்:—இது வாதபித்த கபங்கள் ரத்த மாமிசங்களோ அநுசரிக்கும்போது பிறக்கும். அப்போது ஆண்குறியின் உள்ளிலாவது வெளியிலாவது நமைச்சல், அவ்விடங்களில் மூல ரோக முளைகளைப்போலும், சிறு சிறு காளான் முளைகளைப்போலும் மாமிசம் எழும்புதல், அவைகளில் மிகவும் வியர்வை கசிதல், ரத்தம் வடிதல் என்னும் குணங்கள் உண்டாகும். இதற்கு உடனே சிகிச்சை செய்யாவிடில் இது சுக்கிலத்தைக் கெடுக்கும். ஸ்திரீகளுக்கு சோணிதத்தைக் கெடுக்கும்.

3. சரஷபிகம்:—இது சிலேஷ்ம ரத்தத்தினால் ஆண்குறியின் உள்ளிலாவது வெளியிலாவது கடுகைப்போல் அநேக கொப்புளங்களோ உண்டாக்கும்.

4. அவமந்தம்:—இது ஆண்குறியில் சீலவடிவாயநேக கொப்புளங்களோ உண்டாக்கும். அப்போது அவைகளின் நடுவில் கீறல் உண்டாக்கி சிழ்ரத்தம் ஒழுகுவதும், வேதனையும் உரோமச் சிலிர்ப்பும் உண்டாகும்.

5. கும்பிகம்:—இது பித்தத்தினாலாவது ரத்தத்தினாலாவது ஆண்குறியில் இலந்தைக் கொட்டையைப்போல் மாமிசக்கட்டியை உண்டாக்கும்.

6. அலசிகம்:—இது ஆண்குறியில் நின்று மேகத்தை விழச் செய்து விரணத்தை உண்டாக்கும்.

7. உத்தடாகம்:—இது ஆண்குறியில் ரத்தபித்தத்தினால் சிறிதும் பெரிதுமான விரணங்களோ எரிச்சலுடன் பிறப்பிக்கும்.

8. பிடகம்:—இது ஆண்குறியில் உழுந்து பயறு பிரமாணம் கொப்புளங்களைப் பிறப்பித்து அவைகளைச் சுற்றிலும் விஸ்தாரமாக சிறுசிறு கொப்புளங்கள் உண்டாகும்படிக்குச் செய்யும்.

9. புஷ்கரிகம்:—இது ஆண்குறியில் தாமரைக்காயைப்போல் தழும்பை எழுப்பி அதில் கொப்புளங்களோ உண்டாக்கும்.

10. சம்வியூடகம்:—இது ஆண்குறியின்மீது புள்ளாங்குழலைப் பிடிக்கும் விரல்களைப்போல் குறுக்காகத் தடித்த விரணத்தை உண்டாக்கும்.

11. மிருதித விரணம்:—இது ஆண்குறியில் கையால் பிசைந்த வாழைப்பழத்தைப்போல் குழைந்த விரணத்தைப் பிறப்பிக்கும்.

12. அஷ்டீலிகம்:—இது ஆண்குறியில் விரணத்தைப் பிறப்பிக்கும். அது குழிவிழுந்து கல்லைப்போல் கெட்டியாயிருக்கும்.

13. அவிபாடிதம்:—இது வாதபித்த சிலேஷ்மங்களினால் ஆண்குறியினது சருமத்தை எல்லாம் மிகவும் தடிக்கச்செய்து பின்பு அத்தடிப்பைப் பிளக்கும்.

14. நிருத்தமணி:—இது வாயுவினால் ஆண்குறியின் முனைச்சருமத்தை நையப்பண்ணி அதை அம்மலரில் ஒட்டிக்கொள்ளச்செய்யும். இதனால் அத்துவாரம் அடைப்பட்டாலும் வேதனையில்லாமல் சன்னமாக மூத்திரம் இறங்கும். ஆனால் மலரைவிட்டு அச்சருமத்தை மலர்த்தக்கூடாதமையா பிருக்கும்.

15. கிரதிதம்:—இது கபத்தினால் கோசத்தைச் சுற்றிலும் முன்னே நிரைத்ததுபோல் சிறுசிறு கொப்புளங்களோ நெருங்க உண்டாக்கும்.

16. பரிச ஆனி:—இது ஆண்குறியின் மலரில் சிவந்த நிறத்தை உண்டாக்கி தொடக்கூடாத உபத்திரவத்தைப் பிறப்பிக்கும். இதனால் சுக்கிலம் வெளிப்படமாட்டாது.

17. சதபோனகம்:—இது ஆண்குறிமுற்றிலும் சிறுசிறு தவாரங்களோ உண்டாக்கும். இதனால் மூத்திரம் வரும்போதெல்லாம் எரிச்சல் அதிகரிக்கும்.

18. தொக்குப்பாகம்.—இது பித்தாதிக்கத்தினால் ஆண்குறியின் சருமத்தை பழுத்து நையும்படிச்செய்யும். இதனால் சுரமும் வேதனையும் உண்டாகும்.

19. மாமிசபாகம்:—இது ஆண்குறியின் முனைமலரை நையச் செய்து பற்பல வேதனையை மென்மேலும் உண்டாக்கும்.

20. ரத்தார்புதம்:—இது ஆண்குறி முற்றிலும் ரத்தத்தினால் கருமை செம்மை நிறம் உள்ள கொப்புளங்களைப் பிறப்பிக்கும். இதனால் மிக்க வேதனை யுண்டாகும்.

21, மாமிசார்புதம்:—இது ஆண்குறி மலரில் மாமிசநிறமுள்ள கட்டிகளோ யுண்டாக்கும்.

22. வித்திரதி:—இது நிரிதோஷத்தினால் ஆண்குறியின் நரம்புகளில் விக்கத்தை எழுப்பும். அது கட்டியாகி நான்கு பக்கங்

களிலும் பாவி விரணமாகும். இதனால் சகிக்கக்கூடாத சூத்தல் உண்டாகும்.

23. நிலகாலகம்:—இது நிரிதோஷத்தினால் ஆண்குறிமுற்றிலும் எள்ளு மிளகு பிரமாணங்களாய் கறுத்தநிறத்துடன் மாமிசத்தை மறக்கள்போல நிரட்டித் தொங்கும்படிச்செய்யும். அது உடைந்து விரணமாகும்.

குய்ய நோயில் சாத்தியா சாத்தியம்:—மாமிசாற்புதம், மாமிச பாகம், வித்திரதி, நிலகாலகம் ஆக இந்தான்கும் அசாத்தியம். மற்றது சாத்தியம்.

பிரமேகம்

எக்காலமும் மாதரின்புணர்ச்சி, மோகத்துடன் பட்டினியாயிருத்தல், தம்பனச்சூடு, காரம், உப்பு, துவர்ப்பு இவைகளை அதிகமாகப் புசித்தல், மனக்கிலேசம் என்னும் இச் செய்கைகளினால் பிரமேகம் பிறந்து முதல்முதல் முதுகுத் தண்டெலும்புகளை விசையாகப் பற்றி அதன்பின் நாபியைச் சுற்றிக்கொண்டு குய்யஸ்தானமாகிய மூலாதாரத்தைபற்றி நரம்பையும் எலும்பையும் சூழ்ந்து சோணிதத்தில் கலந்து அடிவயிற்றில் இசிவை உண்டாகவி வேதனையைக் கொடுக்கும்.

இது 21-வகைப்படும்.

1. வாதப்பிரமேகம்:—இது கோமூத்திரம்போல் நீறங்கள்' கோசத்தின் அடியில் வலித்தல், வெளுத்து கட்டியாக சிழ்வடிதல், பீசத்தில் கனத்தலுடன்நோய், அடிவயிற்றின் பக்கத்தில் பரபரத்த வேதனை, கனகனப்பு, வயிற்றில் இசிவு, சரீரவாட்டம் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

2. பித்த பிரமேகம்:—சரீரவாட்டம், தயக்கம், சகல இல்களிலும் கால்களிலும்நோய், தேகத்தில் கருமைநிறம், எரிச்சல், சூதத்திலும் சூய்யத்திலும் கடுப்பு, மஞ்சள்நிறமான சிழ்வடிதல், அருசி, கைகால் ஒய்ச்சல், கோசத்தில் விம்மலோடுநோய் என்னும் குணங்களை உண்டாக்கும்.

3. சிலேஷ்ம பிரமேகம்:—கோசத்தில் நோயுடன் கடுப்பு, அடிக்கடி வெண்மையான நீர் இறங்கல், தேகத்தில் வெளுத்தநிறம், உஷ்ணம், வாய், கண், நகம் இவைகளில் ரத்தம் இன்மை என்னும் குணங்களை உண்டாக்கும்.

4. வாதபித்த பிரமேகம்:—சர்வாங்கத்திலும் நோய், கோசத்தில் சலாக்கை சொருகினதுபோல் இருத்தல், அதிலிருந்து மாவைக் கரைத்ததுப்போல் சருக்குடன் நீறிறங்கல், வயிற்றில் கட்டி எழும்புவதுப்போல் இருத்தல், மலமிறுகல் என்னும் குணங்களை உண்டாக்கும்..

5. பித்தசிலேஷ்மப் பிரமேகம்:—வாய்கசத்தல், அடிவயிற்றில் பொருமலுடன் இசிவு, கோசம் சருங்குதல், மஞ்சளாயும் வெண்மையாயும் நீரிறங்கல், கீல்களிலே வலி, பகல் நித்திரை, பசி இன்மை, சரீரம் ஊதல் என்னும் குணங்களுண்டாக்கும்.

6. தொந்தப் பிரமேகம்:—சரீரத்தில் நினவு, புழுக்கள் ஊருதல் போல் ஊருதல், அடிவயிறு சாத்தல், கோசத்தில் கருமைநிறம், அடிக்கடி கடுத்து நீரிறங்கல், அதைப் பிடித்துப் பார்க்கில் அடியில் பலநிறமாகத் தோய்ந்திருத்தல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

7. கட்டிப் பிரமேகம்:—சரீர முழுதும் சகிக்கக்கூடாத நோயுடன் கட்டிகள் எழும்புதல், கோசத்தில் சொறியுடன் நினவு, பருக்கைப்போல் சிழ்வடிதல், பீசத்தில் நீர்கசிதல், தேகவாட்டம் என்னும் குணங்களை உண்டாக்கும்.

8. சலப் பிரமேகம்:—சர்வாங்கவேதனை, வாய்கசத்தல், வாந்தி, மயக்கம், மூத்திரக்கசிவிலும் வெளுத்த நீரிறங்குதல், அடிவயிற்றில் வலி, மலத்தில் சீதம்விழுதல், அரோப்புக்கட்டி என்னும் குணங்களை உண்டாக்கும்.

9. தந்திப் பிரமேகம்:—அடிவயிற்றில் புண்போல் நோதல், விரைத்தண்டினது அடியில் விருவிருப்பு, விம்மல், நீர் இறங்கியவுடன் தந்திபோல் மேகத்தொங்குதல், வெள்ளைக்காணல், இதனால் அடிக்கடி சீலை கனைதல், கைகால் எரிவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

10. ரத்தப் பிரமேகம்:—சரீரம் பஞ்சைப்போல் மெதுவுறல், முயல்ரத்தமெனச் சிவந்து சுறுக்குடன் அடிக்கடி வேதனையைத் தருவதாய் நீர் இறங்கல், பேய்ப்போல் அலைதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

11. சீழ்ப் பிரமேகம்:—கோசத்தின் துவாரத்தில் கடுப்புடன் சிழைப்போல் வெள்ளைகாணல், அரையாப்பு, பகந்தரம், நாபியில் விரணம், கணுக்காலில் குடைச்சல், அடிக்கடி நீரிறங்குதல், அதிக சூளிரோடு சுரம், மயக்கம், வேதனை, சர்வாங்க நோய் என்னும் குணங்களை உண்டாக்கும்.

12. ஒழுக்குப் பிரமேகம்:—இது கோசத்தினது துவார வழியிலிருந்து சீழ் ரத்தம் சலம் ஆகிய இவைகளைப்போல் மேகம் ஒழுகுதல், சரீரமுழுதும் கருமையுள்ள முளைக்கட்டிகள் எழும்பல், கனத்த விரணம், குடைச்சல், எரிச்சல், வெகுநோயோடு புரளல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

13 அரித்நிராப் பிரமேகம்:—மஞ்சள்நிறமான வெள்ளைகாணல், சூடாக நீரிறங்கல், அந்த இடத்தில் நெருப்பைக் கொளுத்தினதுப்போல் எரிச்சலுடன் கூடியகடுப்பு, விருவிருப்பு, அதிக உஷ்ணம்,

முகத்தில் மஞ்சள்நிறம், நாவில்கசப்பு, மனது திடுக்கிடல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

14. மூத்திரக் கிரிச்சரப் பிரமேகம்:—சூத்துடன் மஞ்சள் நிறமான நீர் இறங்கல், தர்ப்பலம், நீர்க்கட்டு, நித்திரைப்பங்கம், அன்னத்துவேஷம், மதுரைசஞ்சலம், சர்வாங்கத்திலும் உஷ்ணம் என்னும் குணங்களை உண்டாக்கும்.

15. கரப்பான் பிரமேகம்:—வயிற்றில் உஷ்ணம், நிதம் விழல், நீரானது உஷ்ணமாகவும், கடுப்பாகவும இறங்குதல், ஒருவேளை அத்துவாரத்தைப் புண்ணாக்கிச் சண்ணுபுக்கல்லைக் கரைத்த சலம்போல் சூத்துடன் இறங்கல், அழலையாய் வாட்டத்துடன் கைகால் ஓய்தல், உடம்பெல்லாம் நெருங்கிய பெருஞ்சொறி என்னும் குணங்களை உண்டாக்கும்.

16. கல்லுப் பிரமேகம்:—கோசத்தில் கல்லைப்போல் மேகநீர் கசிதல், தேகத்தில் கற்றழைசாற்றம் வீசுதல், வயிற்றில் கல்லைப் போல் மூத்திரஞ் சிக்கிக்கொண்டு விம்மி விருவிருப்புடன் நாபியைப் பற்றி உப்பிசமாகி பசியை அடக்கி கனத்தல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

17. நந்துப் பிரமேகம்:—கோசத்தில் நோயுடன் செங்கிருமிப் போலத் தொங்குதல், வெளுத்த உதிரம் காணல், அக்கோசம் விம்மும்போது வலித்தல், மடிப்பில் இருமிசேருதல், விலாவில் குத்தல், மூத்திரந் தளித்தளியாக விழ்தல், என்னுங் குணங்களை உண்டாக்கும்.

18. நீச்சுப் பிரமேகம்:—கன்னை ஒத்த நீர் இறங்குதல், வெளுத்த சிற்வடிதல், கோசம் விம்மும்போது நோய், சூத்தல், விருவிருப்பு, நாபு சுருங்குதல், அடிவயிற்றிற் சூலை, குளிர் என்னும் குணங்களை உண்டாக்கும்.

19. மலினப் பிரமேகம்:—குய்யவ்தானம் குதவ்தானம் ஆகிய இவ்விடத்து அடிநரம்புகளில் சூத்துடன் அடிக்கடிநோய், மயக்கம், நாவு வைத்தல், புறங்காலில் நிமிர், வெள்ளை காணுதல், விரைத் தண்டின்மூலியில் துர்மாமிசம் சுருண்டிருத்தல் என்னுங் குணங்களை யுண்டாக்கும்.

20. மதுப் பிரமேகம்:—ஆண் குறியில் நோயுடன் தேன்போல் நீரிறங்கல் அந்நீரில் எறும்பு மொய்க்குதல், நாளத்திற்குள் வீணம், உடம்பில் ஒருவித காற்றம், அருசி, நாக்கு வறட்சி, மயக்கம் என்னுங் குணங்களை யுண்டாக்கும்.

21, விரணப் பிரமேகம்:—சர்வாங்கத்திலும் மிகுந்த நோயுடன் விரணம், ஆண்குறி கனத்தல், அதினின்று சீழும் ரத்தமும் கசிதல்,

அக்கணுவில் கறடு கட்டி நோதல், கடுத்தல், விருவிருத்தல், சரீரம் வெதும்பல் என்னுங் குணங்களை யுண்டாக்கும்.

விஷபாக ரோகம்

செம்பின்களிம்பு, மீன் முள், முதலியவைகள் சேர்ந்த உணவை பருந்தல், காந்தியன்னம், மலைசலம், காடித்தண்ணீர், நோய்மாதர் சேர்க்கை, முதன்நாளில் சமைத்த பதார்த்தம், அழுகிய மாமிசம் என்னும் இவைகளால் எண்வகை விஷபாக ரோகம் உண்டாகும். அவைகளை அடியிற்காண்க.

1. வாத விஷபாகம்:—ஒருபக்கத்தில் வீக்கம், சரீரம் வாட்டத்துடனும் வெளிறல், கணத்தி, உறக்கம், பலியின்மை, மலச்சிக்கல் என்னுங் குணங்களை யுண்டாக்கும்.

2. பித்த விஷபாகம்:—சர்வாங்கத்தினவு, வெடிப்பு, சொந்தி, பாரிப்பு, எரிவு, சுரம், ஊறல், அசதி, நித்திரையின்மை,, மேல்மூச்சு என்னுங் குணங்களை உண்டாக்கும்.

3. சிலேஷ்ம விஷபாகம்:—தேகமுற்றிலும் மிகுரணமச்சல், வெளிறல், வீக்கத்துடன் வெடித்தல், வறவறப்பு, தாபச்சுரம், குளிர், அற்ப இருமல், கோழை, சுடுகையுடன் சிறுநீரிறங்கல், மேல்மூச்சு என்னுங் குணங்களுண்டாகும்.

4. தொந்த விஷபாகம்:—மூர்ச்சை, மிகுத்தாகம், அடிக்கடி நீரிறங்கல், விக்கல், மயக்கம், தேகம் வெளுத்து கண்ணுரதுடன் வீக்கம், அருசி, பிரமை, பேதி. வாய்நீரூறல் என்னுங் குணங்களுடையது.

5. சந்நிபாத விஷபாகம்:—சோறுபோல் பேதி, குதத்தில் இரணத்துடன் ரத்தம்கசிதல், சுவாசம், சுரம், மயக்கம், காந்திய கொள்ளின்மனம்போல் சரீரவாசனை, முகவீக்கம், வியர்வை, அசதி, பிதற்றல், என்னுங் குணங்களுண்டாகும்.

6. அக்கினி விஷபாகம்:—வாதபித்தாதிக்கம், தேகமிளைத்தல், வீக்கம், புரளல், கோழை, இருமல், வாந்தி, மூர்ச்சை, வாய்நீரூறல், வயிறூதல், மலசலச்சிக்கல், பக்கசோய் என்னுங் குணங்களையுண்டாக்கும்.

7. எரிச்சல் விஷபாகம்:—வாயினுல் ரத்தம்வீழ்தல், எரிச்சல், கோழை, சுவாசம், ம்ர்ம்பில் அடைப்பு, இரணம், அதில் மாமிசம் வளரல், குத்தல், கட்டிபோல் தெரிற்காணல், பேதி, வீக்கம் என்னுங் குணங்களுண்டாகும்.

8. சந்த விஷபாகம்:—உடம்பில் வீணாசற்றம், வீசுதல், சுரம், மயக்கம், சோம்பல், சர்வாங்கமும் கனத்தி, மூர்ச்சை, தலைவலி,

சிலேஷ்மாதிக்கம், தாகம், குளிர், வயிற்றுவலி, இரகணி, என்னுங் குணங்களை யுண்டாக்கும்.

வாத பித்த சிலேஷ்மதொந்த விஷபாகரோகங்கள் சாத்தியம். மற்ற நான்கும் அசாத்தியம்.

அதிதூல ரோகம்

இந்நோயின் உடலில் இயற்கையாயுள்ள மாமிச அணுக்கள் அதிகரித்து வளருங் காரணத்தினால் உடல் பருப்பதுடன், மார்பு, வயிறு, தொடை, பிருஷ்டம் இவைகள் அளவுக்கு மிஞ்சி பருத்து அசைவற்றுக் கடினமாகவும் இருக்கும். இதனால் உடலை விருப்பப்படி இயக்க முடியாமை, சந்தோஷக் குறைவு, அறிவுமங்கல், நடந்தால் அவ்வவ்விடத்து சதைகளெல்லாம் குலுங்குதல், ஆயாசம், இளைப்பு, சுவாசிக்கம், அற்ப இருமல், மெல்லுவாசம் முதலிய துர்க்குணங்கள் உண்டாகும். இது சுக்கிலசோணித தோஷத்தை உண்டாக்கில் கருப்பாசாத்தைச் செய்யும்.

அதிசுட்க ரோகம்

இந்நோயில் சாமாக்கினியின் குறைவால் செழித்து வளர்ந்த மாமிசங்களானவை சுட்டித்து உடலை இளைக்கச் செய்யும். சரம்புகளும், கீல்களும், கழுத்தும், வயறும், தொடைகளும், தாடைகளும், புயங்களும் உலர்ந்து மெலியும். அப்போது ஆயாசமும், துர்பலமும், தேவாங்கு என்னும் ஒருவித மிருகத்தையொத்த உருவமும் உண்டாகும்.

உளமாந்தை

க்ஷயரோகத்தின் பிரிவாகிய இத்தரோகம் அக்கினிமந்தம் உள்ளபோது போஜனம்செய்தல், இரவில் விழித்தல், பகலில் உறங்குதல், புளிகியே மிகுதியாய் புசித்தல், அதிக மைதுனம், இளைக்கும்படியோடுதல் முதலியவைகளால் உண்டாகும். இது வாத உளமாந்தை, பித்த உளமாந்தை, சிலேஷ்ம உளமாந்தை, தொந்த உளமாந்தை என நான்கு வகைப்படும்.

1. வாத உளமாந்தை:—இது நெஞ்சு பழுவெலும்பு, பக்கம் இவை விம்மல், நீரோவழிதல், தொனியோடு கொந்து இருமல், அற்ப சுரம், உள்ளில் கட்டிகள் உண்டாகி பழுத்து உடைத்து சீழ் முதலியது வாயால் விழுதல், கைகால் எரிவு என்னும் குணங்களை உண்டாக்கும்.

2. பித்த உள்மாந்தை:—இது மிக நிரண்டு கீழ்வயிற்றில் கட்டிகளுடன் மிகப்பொருமி, புண்போல் கொந்து சர்வாங்கமும உஷ்ணத்தோடு தலைவலி, சுரம், இருமல், இளைப்பு, மிடறு விரணமாதல், மயக்கம், புரட்டல், வாயால் சீழ்விழுதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

3. சிலேஷ்ம உளமாந்தை:—இது உடல் உருகி தேகமெல்லாம் புண்போல் நோதல், வாயால் சீழ் விழுதல், மனக்கலக்கம், வாந்தி, மயக்கம், சிலேஷ்மாதிக்கம், நடுக்கல், பஞ்சுபோல் தேகம் வெளிறல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

4. தொந்த உளமாந்தை:—இது தலைவலி, சுரம், இருமல், கோழை, அசதி, மிகு உறக்கம், துர்வாசனையுடன் வாயால் சீழ்விழுதல், சர்வாங்கமும் தினவு, பரிமந்தம் என்னும் குணங்களை உண்டாக்கும்.

உளமாந்தைரோக சாத்தியா சாத்தியம்:—பித்த உளமாந்தை பலவித சிகிச்சைகளினால் சாத்தியம். வாத, சிலேஷ்ம உளமாந்தைகள் சிகிச்சைகளுக்கு வசப்படாவிட்டால் அசாத்தியம். தொந்த உளமாந்தை அசாத்தியம்.

விஷபேதம்

இப்பூமியின்கண் விஷமானது இருத்திரமவிஷம், அகிருத்திரம விஷம், என இருவகையாம்.

இருத்திரம விஷம்:—சர்பி முதலிய தாவரவிஷங்களையாவது, பாம்பு முதலிய ஜெந்துக்களின் விஷங்களையாவது, மற்றொரு வஸ்துவில் கலந்து கொடுக்கில் இருத்திரம விஷமாம். இதற்கு இடுமருந்து என்றும் பெயர்.

ஸ்திரீகள் புருஷர்களையும், புருஷர்கள் ஸ்திரீகளையும் தொழிலாளிகள் தங்கள் யசமானனையும் வசப்படுத்தும்பொருட்டு அன்னம் முதலிய தின்பண்டங்களிலாவது நீர்முதலிய பானங்களிலாவது தாம்பூலாதிகளிலாவது, சேர்த்துக் கொடுக்கப்படுகின்ற பற்பல சொந்துக்களின் கபாலபஸ்பம், அற்பவீரியவிஷம், மலமூத்திர அவுஷதம், பச்சிலை மூலிகைகள் என்னும் இவைகளாம்.

இடுமருந்தின் இலக்கணம்:—முற்கூறிய மருந்தை அன்னபானாதிகளில் ஒருவர் கொடுக்க அதை இன்னதென்று தெரியாமல் புசித்தவருக்கு முகம் வெளிறல், சரீரமிளைத்தல் மந்தாக்கினி, இருமல், இளைப்பு, வாதாதிக்கம், மகோதரம், குண்டிக்காயாகிய யகூர்த்தபிலத்தில் நோய், துர்பலம், சனத்தொனி, மனோதிக்கம், வயிறுப்பல், தித்திரையில்லாமை, அசீரணம், காசியமுங்கல், கண்சுழிவிழுதல், தன் உடம்பு தனக்குத்தானே பலநிறமாகத்தோற்றல், என்னும் குணங்களுண்டாவதன்றியும், சரி, பூனை, கீறிப்பிள்ளை, பாம்பு, குரங்கு, தேரில்லா குளம், எரிந்து கருகிய மரம், என்னும் இவைகளை காணுகின்ற கனவும், உண்டாகும். இக்குணங்கள் ஆரம்பிக்கும் போதே சிகிச்சை செய்யவேண்டியது.

விஷான்ன லக்ஷணம்:—விஷங்கலந்த அன்னத்தை உற்றுப் பார்க்கில், சோர்வு, மூர்ச்சை, வாய்நீர்சுரக்குதல், முதலிய

துர்குணம் உண்டாவதன்றியும், அந்த அன்னத்தின் வாசனையும் உரு வமும் வேறுவிகாரமாகிச் சுபாவவிறம்மேறி, ஒவ்வொரு அன்னம் பிளப்புள்ளதாகவும், சில அன்னம் ஒன்றோடொன்று சேர்ந்து உண்டை உண்டையாகவும் பார்வைக்கு நிலவைப்போல் தளதளப் பானதாகவும், புசித்தால் பழையதின் வாசனையைத் தருவதாகவும் வெகுநேரஞ்சென்று சீரணிப்பதாகவும் யிருக்கும்.

விஷாயஞ்சன லக்ஷணம்:—விஷங்கலந்த கறிப் பதார்த்தங்களை உற்றுப்பார்த்தால் உலர்ந்ததுப்போலவும், கறுத்த கஷாயவன்ன மாயும், சுபாவ ருசிமேறி வேறுவிகார ருசி உள்ளதாகவும் இருக்கும். அக்கறிகளின்மீது அற்பநுரையும், சிமந்த ரேகையும், சீர்குமிழிப் போல் சிறிய குமிழியும் எழும்பும்.

விஷம் வைப்பவனுக்கு உண்டாகின்ற லக்ஷணம்:—விஷம் வைக் கிற காதகனுக்கு வாயுலால், சுற்றுமுற்றும் பார்க்குதல், வியர்வை யோடு நடுக்கல், தேகமாதல், பயம், நடக்கும்போது கால் தத்தளித் தல், கொட்டாவி என்னும் குணங்களுண்டாகும்.

விஷான்ன பரீக்ஷை:—விஷம் கலந்த அன்னத்தை அக்கினியி லிட்டால் சுவாலை எழும்புதலுடன் மயில்கண்டத்தின் நிறத்தை யொத்த புகையும், அதில் துர்கந்தவாசனையும் உண்டாகும்.

விஷான்ன சீரண லக்ஷணம்:—விஷம் கலந்த அன்னம் வயிற்றில் சீரணித்தால், வமைச்சல், தேகம் எரிச்சல், அக்கினியிலும் புகையிலும் சிக்கினதுபோல் வருத்தம் சுரம், இளைப்பு கொப்புளம் எழும்புதல் என்னும் குணங்களுண்டாகும்.

ஆசிய சுதசுரான்ன லக்ஷணம்:—விஷம்கலந்த அன்னத்தை வாயிற் போட்டுமிழ்ந்தவருக்கு உடனே வாயில் சொள்ளுவடிதல், உதட்டி லும் நாவிலும் நிமிர், விருவிருப்பு, தந்தங்களில் கோய் முதலியது உண்டாகும்.

ஆமாசயகத சுரான்னலக்ஷணம்:—விஷங்கலந்த அன்னத்தைப் புசித்த அவ்விஷமானது ஆமாசயஸ்தானத்தில் ஊறினால் தேகத்தில் புடைகள் எழும்புதல், வியர்வை, மூர்ச்சை, வயிறுப்பல், மதம், பிரமை, உரோமச்சிலிர்ப்பு, வாந்தி, தாகம், கண்ணோய், மார்புநோய் என்னும் குணங்களே உண்டாக்கும்.

பக்குவாசயகத சுரான்னலக்ஷணம்:—விஷ அன்னம் வாதஸ்தா னத்தில் ஊறினால், பற்பல வாந்தி, அதிமூத்திரம், அதிசாரம், சோம் பல், சரீரம் இளைத்தல், வயிறுவெளிறல், துர்ப்பலம் என்னும் குணங் களுண்டாகும்.

அதிருத்நிரம விஷ லக்ஷணம்:—அதிருத்நிரம விஷம் என்பது தாவர விஷம், சங்கம விஷம் என இரு வகைப்படும். இவற்றுள் தாவர விஷத்தை முதலிற் கூறுவாம்.

தாவரவிஷ பேதம்:—விருக்ஷம், பூண்டு, செடி, கொடி, புல் ஆகிய இவற்றின் கிழங்கு, வேர், பட்டை, பால், பிசின், இலை, புஷ் பம், காய், கனி முதலியவைகளிலும் பாஷாணம் முதலிய தாதுக்களி லும் இருக்கிறவிஷம் தாவரவிஷமாம்.

விஷக் கிழங்குகள்:—அலரி, சங்கோசகம், கலப்பைக்கிழங்கு, ஈதலகம், கர்க்கடகம், குசபுஷ்பம், கேதுபுஷ்பம், ரோமஹரிஷம் முதலிய கிழங்குகளுக்கு கந்தவிஷம் என்று பெயர். இவைகளைத் தின்றால் மரணம் சம்பவிக்கும். ஒருவேளை தப்பினால் தேகத்தில் சுரம், விக்கல், தாள்பிடிப்பு, பல் கூசுதல், இரைப்பு, இருமல், மூர்ச்சை, அரோசகம், தொண்டை அடைப்பு என்னும் குணங்க ளுண்டாகும்.

விஷவேரின் பேதம்:—பாரமரம், குஞ்சனம், ஹரிதகம், சந்திர கம், மருதோன்றி, தர்க்கரகம், பெருங்காயமரமூலம் ஆக இவைக ளுக்கு மூலவிஷம் என்று பெயர். இவைகளினால் சோருதல், பிதற் றல், புரளல், பிரமை என்னும் குணங்களுண்டாகும்.

விஷப்பாலின் பேதம்:—வெள்ளெலாத்தி, புஷ்கரம், நாபி, சோங்கொட்டை, எட்டி, சாஷ்ப முதலிய பால்களுக்கு க்ஷீரவிஷ மெனப் பெயர். இவைகளினால் நுரைத்த வாந்தியும், நாவு தடித்து கனத்தலும், மலபந்தமும் உண்டாகும்.

விஷப்பிசின் பேதம்:—மருவு, நாராசகம், தொடரிப்பட்டை, ஆயில்பட்டை, பிசின் முதலியவைகளின் பிசினிகளுக்கு தொக்கார ஆயில்பட்டை, பிசின் முதலியவைகளின் பிசினிகளுக்கு அரோசகம், கோணழி, கிரியாச விஷமென்று பெயர். இவைகளினால் அரோசகம், கோணழி, வாந்தி, நாவுதடித்தல், வாயில் துர்க்கந்தம் வயிறுப்பலுடன் வேதனை என்னும் குணங்களுண்டாகும்.

விஷ இலையின் பேதம்:—பதரம், கரம்பம், எட்டி இலை, பெரு மர இலை முதலிய இலைகளுக்கு பத்திரவிஷமென்று பெயர். இவை களின்பதினால் கொட்டாவியும், புரளலும், பிரமையும் உண்டாகும்.

விஷ புஷ்பத்தின் பேதம்:—மஹாகரம்பகம், புங்கின்பூ, தொட் டாற்சுருங்கிப்பூ, காட்டுமிளகு புஷ்பம் முதலியவைகளுக்கு விஷ புஷ்பமென பெயர். இவைகளினால் வயிறுப்புதல், வாந்தி, சோருதல், மூர்ச்சை என்னும் குணங்களுண்டாகும்.

விஷக்கனியின் பேதம்:—சோரை, கர்ப்பூரவழுதலைப்பழம், விஷ செருந்தி, நாயுருவி, மலைவன்னிமரம், வைராடகம், சணப்கம், ஷால கம் முதலிய கனிகளுக்கு பலவிஷம் என்பப் பெயர். இவைகளினால் அன்னதுவேஷம், தாகம், இரண்டு பிசங்களில் வீக்கம் முதலிய குணங்கள் உண்டாகும்.

விஷதாதுவின் பேதம்:—தேராமம், பஸ்மம், நிலகம், ரத்தம், முதலிய தாதுக்களுக்கு தாதுவிஷம் எனப் பெயராம். இவைகளினால்

இரண்டு தாடைகளின் உட்புறங்களில் அனல் வீசுதலும் மூர்ச்சை யும் மார்புநோயும் உண்டாகும்.

1. காலவிஷ நிதானம்:—மேற்கூறிய கந்தமூலாதி விஷங்களை வாதகாலத்தில் தின்றால் வாதத்தை அனுசரித்த நோய்களும், பித்த காலத்தில் தின்றால் பித்தாதிக்க நோய்களும், கபகாலத்தில் தின்றால் கபாதிக்க நோய்களும் உண்டாகும். வாதகாலத்தில் தின்பதினால் மார்புநோய், ரத்தம்புளிகுத்தல், எலும்புகளிலும் கீல்களிலும் நோய், நடுக்கல், புரளல், தேகங்கறுக்குதல், உரோமச்சிலிர்ப்பு, வாயில் புளிப்பு என்னும் குணங்களும், பித்தகாலத்தில் தின்பதினால் சரீர வீக்கம், மாமிசம்வறளல், மார்புளரிதல், வாயில் காரம், அக்கினி போல் சுவாசம் வருதல், அறிவுதீங்குதல் என்னும் குணங்களும், சிலேஷ்மகாலத்தில் தின்பதினால் சரீரம் பாரித்துச் சில்லிடல், மார்பு அதிரல், வாயில் இனிப்புடன் சொப்பும் நுரையும்வீழல், அரோசகம் வாந்தி என்னும் குணங்களும் உண்டாகும்.

ஸ்தானபேத விஷநிதானம்:— மேற்கூறிய விஷங்கள் தேகத் தில் சிலேஷ்ம ஸ்தானத்தைப் பற்றினால் சாத்தியம். பித்த ஸ்தா னத்தைப் பற்றினால் கஷ்டசாத்தியம், வாத ஸ்தானத்தைப் பற்றினால் அசாத்தியம்.

தாவர விஷத்தின் சப்தவேக நிதானம்:—

1. நாவில் கறுப்புடன் மாத்தல், வாந்தி, பிரமை, ஆயாசம்.

2. நடுக்கல், வியர்வை, தாகம், தொண்டைக்குள் வேதனை, மார்புநோய், தாடை உலறல்.

3. கண்களில் கருமைநிறம், மஞ்சள்நிறம் தோற்றல், வயிற்றி லும் குதத்திலும் நோய், இரைச்சல், பொருமல், விக்கல்.

4. தலைநோய், வாயில் நுரை தள்ளல், மாறுமுகம் தோற்றுதல்.

5. சகல கீல்களில் உபத்திரவம்.

6. தோள், இடுப்பு, முதுகு இவ்விடங்களில் நோயுண்டாகி ஞாபகம் நீங்குதல்.

7. விஷம் சக்கில தாதுவைப்பற்றி ஏறுதல், முதலியனவாம்.

இந்த ஏழில் ஐந்து வேகம்வரைக்கும் சாத்தியம், மற்ற இரண் டும் அசாத்தியம்.

சங்கம விஷபேதம்:—சர்ப்பசாதி விஷங்களுக்கும், கேடகம், தேள், சிலந்தி, நாய் நரி முதலியவற்றால் வருகிற விஷங்களுக்கும் சங்கமவிஷம் எனப் பெயராம்.

சர்ப்பசாதி பேதம்:—சர்ப்பம் என்பது திவ்வியசாதி சர்ப்பம், பௌமசாதிசர்ப்பம் என இருவகைப்படும். இவற்றுடன் திவ்விய சாதியை முதலிற் சொல்லுவாம்.

திவ்வியசாதி சர்ப்பபேதம்:—அண்டகோடிகளுக்குள் இரா கின்ற சர்ப்பங்களில் தலைமையும் உத்தமசாதியும் கடவுட்பாம்புமாகிச் சிறப்புற்று அஷ்டதிக்குகளில் வாசஞ்செய்வதே திவ்வியசாதிசர்ப்ப மாம். அது வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடன் என எண்வகைப்படும்.

பௌமசர்ப்ப ஜாதிபேதம்:—இவை பூமியில் வசிக்கும் சர்ப்பங் களாகும். இவை எண்பத்திரண்டு வகைப்படும். பௌமசர்ப்ப சாதி தருவீகரம் இருபத்தாறு விதங்கள், மண்டலி மூப்பத்தாறு விதம், ராஜமந்தம் பதின்மூன்று விதம், நிர்விஷம் நாலுவிதம், வைக ரஞ்சம மூன்றுவிதம் ஆக எண்பத்திரண்டு பேதங்கள் உடையது.

ஆண் சர்ப்பம்:—இது அகலமுள்ள படத்தையும், அதிக நிடத் தையும், அதிக சிறகையும் பெற்றிருக்கும். இவ்விஷம் தலைக்கேறினால் மேல் நோக்கிய பார்வை, வலதுக்கால் பூமியில் பாயாதிருத்தல், ஊர்த்துவகாயத்தில் மிகுந்த பலவீனம், என்னும் குணங்கள் உண் டாகும்.

பெண் சர்ப்பம்:—இது குறுகிய படத்தையும், அற்ப சிறகையும் பெற்றிருக்கும். இவ் விஷத்தினால் கீழ் பார்வையும், இடதுகால் பூமியில் பாயாதிருத்தலும், அதோ காயத்தில் பலவீனமும் உண் டாகும்.

அலிச் சர்ப்பம்:—இது மிருதுவுடன் கூடின உருவத்தையும், வெளுத்த படத்தையும், மந்த நடையையும், குறைந்த தொனியையும். அற்ப கோபத்தையும் உடையதா யிருக்கும். இவ் விஷத்தினால், ஈனத்தொனி, பேதி, நடுக்கல், பயம், சுரம் சரீரம் காற்றில் பறப் பதுபோல் இருத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

மலட்டுச் சர்ப்பம்:—இது தீக்ஷ்ணத்தில் அனந்தம் வேதனையை பிறப்பித்தாலும் முக்கியமாய் வியர்வையை மிகவும் ஒழுகப்பண்ணும்.

பால்ய சர்ப்பம்:—இது இடது கண்ணை கோவைப்பழம்போல் சிவக்கச்செய்யும். இதில் பெண் சர்ப்பம் விஷம் கொஞ்சம பேதிக் கும்.

யௌவன சர்ப்பம்:—இது வலப்பாகத்தில் கடிக்கும். இவ் விஷத்தால் அப்பக்கத்த கண் ரத்தம்போல் சிவக்கும். பெண் சர்ப் பம் இடப்பக்கத்தில் கடிக்கும். இவ் விஷத்தினால் தடிப்பு தடிப்பாகி சில ரோகங்கள் பிறக்கும்.

விருத்த சர்ப்பம்:—இது கடிவாயில் லீக்கம், அற்பநோய், பிதற் றல் இவைகளைத் தரும்.

கருப்பச் சர்ப்பம்:—இது சிரசு, உதடு, வயிறு தொடை ஆகிய இடங்களில் சோதல், ரத்தம் கறத்தல், உள்ளாக்கு வளருதல் என்னு மிக் குணங்களை உண்டாக்கும்.

சூதிகாசர்ப்ப விஷம்:—இது முட்டையிட்ட சர்ப்பம். இதின் விஷத்தால் வயிறு உளைதல், வாயில் ரத்தம் கம்முதல், மார்பில் அடைப்பு, கண்ணில் நோயுடன் சிவத்தல், சர்வாங்கமும் குத்தல் என்னும் குணங்களே உண்டாகும்.

வழிச் சர்ப்பம்:—இது எப்போதும் கடிப்பதற்கே வழிதட்டிக் கொண்டிருக்கும். இது கடித்தால் சீக்கிரம் மரணக்குறி உண்டாகும்.

சங்கை விஷம்:—சர்ப்பத்தை சடுதியில் கண்டு வாய்குளறி நடுங்கி மூர்ச்சித்து விழுந்தாலும், பழுதையெனக் கையால் தொட்டு பின்பு பாம்பு எனக்கண்டு நிதில் அடைந்தாலும், தனக்குப் பக்கத்தில் சர்ப்பம் நெளிக்கக்கண்டு பயந்து சோபம் அடைந்தாலும், கயிறு முதலியவைகளைப் பாம்பென்று மேலில் ஒருவன் போடப் பதறி வியர்த்து விழுந்தாலும் அவர்களுக்கு வாதம் அதிகரிக்கும். இதனல் பொறிகலங்கி, நாவறளல், மூர்ச்சை, சரீரம் நரிக்கித் துவைத்ததுப்போலிருத்தல், இளைப்பு, தாகம், சுரம், பேதி வாந்தி, சோருதல் என்னும் குணங்களுண்டாகும்.

மித்தை விஷம்:—எந்த சர்ப்பமாவது ஒருவனே வாயால் கவ்விப் பிடித்த நிலையில் பக்கத்தில் நின்ற ஒருவன் அது பாம்பல்ல பாம்பல்ல என உறுதியாகச் சொல்லுவானுகில் விஷம் ஏறுது.

மகாவிஷ சர்ப்பம்:—மயானம், சாவடி, பாழும்வீடு, கோயில் நாற்சந்தி கூடிய இடம், தண்ணீர் வரப்பு, பாழுந்தோட்டம், பாலி விருக்ஷம், வேப்பமரம், மரப்பொந்து, கான்யாறு, மலைக்குகை, என்னும் இவ்விடங்களில் இருக்கும் சர்ப்பங்களும், படத்தில் குடை, சடை, நிரிசூலம் கும்பம், மச்சரேகை ஆகிய இந்த குறிகளையுடைய சர்ப்பங்களும், சிவந்த நேத்திரமும், சிவந்த மூக்கும் உள்ள சர்ப்பங்களும், மகாவிஷ சர்ப்பங்களாம். இவை கடிக்கில் விஷம் ஏறுதற்கு ஒரு நிறமும், அதைத் திருப்புவதற்கு ஒரு அவுஷதமும், அத்தேகி இறப்பதற்கு ஒரு கெடுவும் நிடையாது. ஆனல் பூசை செபதப அவுஷதம் இவைகள் ஒரே காலத்தில் நேரிட்டு விஷந்தீர்த்தாலும் அவர்களுக்கு மாறுவமாவது அங்கத்தில் யாதேனும் ஒரு ஊன மாவது உண்டாகும். எளிதில் இறங்காமையால் மஹாவிஷம் யெனப் பெயராம்.

அற்பவிஷ சர்ப்பநிதானம்:—பனி, தாகம், வியாதி, நோளம், அக்கினி, காற்று, நோலிதல், விஷங்கக்குதல் ஆகிய இவைகளால் அடிப்பட்ட சர்ப்பங்களுக்கும், சலம் நிறைந்த தடாகம், நருப்பை புள்ளவனம், முள்ளுப்புதை, மந்திரவாதிகள் இருக்கின்ற ஊர், பாதேசம் இவ்விடங்களிலுள்ள சர்ப்பங்களுக்கும், வலிவுகுறைய சர்ப்பங்களுக்கும், அற்பவிஷம். இது எளிதில் நீங்கும்.

விஷக்கடி நிதானம்:—கடிவாயைப்பற்றி விஷம் ஏறினல் அவ்விடத்தில் நோயும், நினவும், மிக்கமும் எறிச்சலும் உண்டாகும். இக் குணங்களில் ஒன்றேனும் இல்லாதிருக்கில் விஷம் ஏறவில்லை யென்றே நிதானிக்கவும்.

விஷபரீக்ஷை நிதானம்:—சர்ப்பம் கடித்தவுடன் கசப்பு வஸ்துக் களைத் தினமுல் அச்சுவை மாறுபடுதல், விரல்களில் நகங்களில் நிள்ளி னலும் தலைமயிரைப்பற்றி இழுத்தாலும் நோய் தெரியாமை, காதை மூடில் தொனி இல்லாதிருத்தல், சோமசூரிய அக்கினியும் விளக்கும் நேத்திரத்திற்கு நேற்முரண்மை என்னும் குணங்களிருந்தால் விஷந் தலைக்கேறியதென்றே நிதானித்து சிகிச்சை செய்யவும்.

பல்லின்விஷ நிதானம்:—விஷப்பை படாமல் பல்லுமாத்திரம் நேகத்தில் படுமாகில் கோட்டுவாய்ச் சலம்போல் வாயினின்றும் சலம்வடியும். விஷமே ஏறினல் நொப்பும் நுறையும் விழும், இவ் விஷமானது கொஞ்சம் வியாபித்தாலும் அது சப்த தாதுமுற்றிலும் விரைவில் பரவும், இதனல் ஞாபகமறதியும் இரைப்பும், சரீரத்தில் கருவளையலே ஒத்த நிறமும் உண்டாகும்.

விஷப்பல் அழுந்தும் நிதானம்:—சர்ப்பம் கடித்து ஒருபல் அழுந்தினல் விஷம் இல்லே. மற்ற மூன்று பற்களும் அழுந்தினல் விஷம் உண்டு. அவற்றுள் இரண்டுப் பல் அழுந்தினல் அவ்விஷம் மந்திரத்தினல் சாத்தியமாம். நான்குப் பல்லும் அழுந்தினல் அசாத்தியமாம். அன்றியும் ஒருதந்தமாவது அழுந்தி அவ்விடத்தில் நிருகி யதுப்போல் சக்கிராகாரமாகத் தோற்றப்பட்டு அதினின்றும் ரத்தம் வடிந்தாலும், அந்த இடம் ஆமை ஓட்டைப்போல் தடித்து விங்கினலும் அசாத்தியம்.

விஷப்பல்லின் லக்ஷம்:—சர்ப்பங்களுக்கு, காளி, காளராத்திரி, எமன், எமதூதன் என நான்கு பற்கள் முளைத்திருக்கும். இவற்றுள் முதலாவது காளி என்னும் பற்பட்டால் அவ்விடத்தில் புள்ளடிப் போல் காயமுண்டாகி அதினின்றும் பனிநீர்போல் சலம்வடியும். அப்போது விஷமானது தோலிப்பற்றி ஏறும். இதனே கால்கடி என்றறிந்து நியானத்தால் உபசரிக்க விஷந்நிரும்பும். அதனுடன் காளராத்திரி என்னும பல்லும்பட்டால் அவ்விடத்தில் முக்கோணம் போல் காயம் உண்டாகி அதினின்றும் மஞ்சள்நிறமான சலம்வடி யும். அப்போது விஷமானது மாமிசத்தைப் பற்றியதென்று அறிய வும். இதனே அரைக்கடி என்று அறிந்து மணிமந்திரத்தால் உபசரிக்க விஷந்நிரும்பும். அவ்விரண்டுடன் எமன் என்னும் பற்பட்டால் அஞ்சு தொட்டிப்போல் காயம் உண்டாகி அதினின்றஞ் செம்நீர் வடியும் அப்போது விஷமானது எலுமபைப்பற்றியதென்றும் இதனே மூக்கால் கடினன்றும் அறிந்து மூலிகை, நசியம், கலிக்கம், ஆக்ரா ணம் முதலியவைகள் உபசரிக்க விஷந்நிரும்பும். அம்மூன்றுடன்

எமனுதன் என்னும் பல்லும்பட்டால் அவ்விடத்தில் வில்லேப்போலும், பிறையைப்போலும் காயம் உண்டாகி அதினின்றும் கழுநீர் ஒத்த சலம்வடியும். அப்போது விஷமானது மூளையைப்பற்றி ஏறும். இதனே முழுக்கடி என்றறிந்து மணிமந்திர அவுஷதங்களாலும் தெய்வ வலி யாலும் உபசரிக்க விஷந்திரும்பும்.

கடி நிதானம்:—சில சர்ப்பங்களுக்கு தாடைக்குள் முள்போல் ஒவ்வொரு கோரைப்பற்க ளிருக்கும் அதுபட்டு விஷம் ஏறி னாலும் உடனே அபாயமாம்.

சர்ப்பங்கடிக்கப்பட்ட இடத்தில் கறுப்புநிறமாகவும், கனிந்த நாவல்பழம் நிறமாகவும் இருந்தால் அவ்விஷம் மிகவுங் கொடிய தென்று அறியவும்.

சர்ப்பங் கடித்த பல் அழுந்திய இடத்தில் முகர்ந்தால் தாழை மலர் மணம்வீசினால் நல்லப்பாம்பு, பாதிரிப்பூ, மணம்வீசினால் வழ லைப்பாம்பு, புளியம்பூ மணம்வீசினால் விரியன்பாம்பு, மல்லிகைப்பூ மணம்வீசினால் மண்டலிபாம்பு, மிளகு, சுக்கு இவைகளின் மணம வீசினால் சிறியபாம்பு என நிதானிக்கவும். இம்மணங்கள் ஒன்றும் விசாரமல் சர்ப்பத்திற்குப் பகையான மணம்வீசினால் சர்ப்பக்கடி அல்லவென்றும் அறிந்து கீடக சிகிச்சைகளே உடனே செய்ய வேண்டியது.

எந்த சர்ப்பமாவது புருவமையம், பஞ்சேந்திரியம், தலை, நெற்றி, நெறி, தாடை, உதடு, தாழ்வாய்க்கட்டை, நெஞ்சு, தோள், உள் ளங்கை, அக்குள், ஸ்தனம், மார்பு, அடிமார்பு, தொப்புள், வயிறு, ஆண்குறி, குதம, உள்ளங்கால், கீல் என்னும் இவ்விடங்களில் கடிக் கில் தப்பாமல் மரணஞ் சம்பவிக்கும்.

பாழுங்கோயில், பாழும்வீடு, பாழூர், ஆலமரம், அரசமரம், புன்னைமரம், முருங்கைமரம், சந்தைகூடும் இடத்துமரம், மூங்கிற் புதர், கத்தவனம், நாணல்படுக்கை, பிரம்புபுதர், மயானம், எரிக் கரை, நதிக்கரை, சுடுகாட்டுக்கரை, கீரில்லாத தாமரைக்குளம், முகத்துவா ரம், ஐயனர்கோயில், நாற்சந்திவீதி, முச்சந்திகூடியவீதி, என்னும் இவ்விடங்களில் இருக்கின்ற எந்தசாதி சர்ப்பமாவது அந்திசந்தி வேளையில் கடிக்குமாயின் அவ்விஷம் அசாத்தியம்.

எந்தசர்ப்பமாவது அனந்தம்பேர்கூடுகின்ற பொதுவிருக்ஷம், மயானம் என்னும் இவ்விடங்களிலும், பருவம், அமாவாசை, பஞ் சமி, பிரதமை அஷ்டமி, நவமி ஆகிய இந்த திதிகளிலும் சூரியோதய காலம், மாலைமயங்கும் காலம், அபர்த்த நித்திரை செய்கின்றகாலம், பாதிராத்திரிகாலம், ஆகிய இக்காலங்களில் கடிக்கில் மரணமேயாம்.

சர்பமானது பரணி, கார்த்திகை, ஆயிலியம், விசாகம், பூரம், பூராட்டாதி, சதயம் ஆகிய இந்த நக்ஷத்திரங்களோடுகூடிய பருவ

காலத்திலும், திருதிமூலையிலும், சந்தியான காலத்திலும், கடிக்கில் அசாத்தியமாம். அன்றியும், மகம், திருவோணம், மூலம், சித்திரை ஆகிய நக்ஷத்திரங்களிலும், ஜன்மகால் அநுஜன்மகால், திரிஜன்ம நாள், இதுகள் சேர்ந்த அவிட்டநக்ஷத்திரத்திலும், நவமியிலும் கடிக்கில் அசாத்தியம்.

அசாத்திய விஷக்குறி:—எறினவிஷம் மந்திர நியான அவுஷதங் களில் திரும்பாதிருக்கையில் நகம், உதடு, உள்ளங்கை, கரியைப் போல் கறுக்குமாயின் அசாத்தியம். மேலும் எந்த சர்ப்பவிஷத்தினு லாவது தலையில் இருக்கின்ற ரோமம் உதிர்ல், மூர்ச்சை, மேற்சுவா சம், விக்கல், இருமல், வாந்தி, மார்புநனத்தல், நடுக்கல், விகார வேதனை, மூடிசோருதல், கண்சிவக்குதல், தொண்டை அடைப்பு, நாவல்பழம்போல் பற்கறுத்தல், ஆமையோட்டைப்போல் முகஞ் உயருதல் சுவத்துவாரத்திலும் ரத்தம் ஒழுகுதல், என்னும் இக்குணங்க ளுண்டாயின் அசாத்தியமாம். அன்றியும் கடிக்கப்பட்ட இடத்தில் விக்கமுண்டாகி ரத்தங்கம்மல், நாசிமெலிந்து சிறுத்து அழுந்தி சில் லிடுதல், முகஞ்சும், ஆண்குறியும், முகமும் சில்லிட்டு கறுத்து தோணு தலுடன் உரோமமும் சில்லிடுதல், கீல்கள் தளர்ல், காலும் கையும் கறுக்குதல், வாயில் நுரைவிழுதல், தேகம் சோயோடு நறுக்கித் துவைத்ததுப்போல் இருத்தல், மலம் சழுதல் என்னுங் குணங்கள் உண்டாகும்.

சாமானிய விஷக்குறி:—சர்ப்பம் கடியுண்டவனுக்கு மலமூத் திரம்சழுகுதல், மார்பில் கனத்தலுடன் குத்தல், உரோமச்சிலிர்ப்பு, வாந்தி, தாகம், நாசியால்பேசுதல், கீல்களில் நோய், கண்சிவத்தல் அல்லது கறுத்தல் என்னும் இக்குணங்கள் உண்டானலும், சந்தி சூரிய நக்ஷத்திர நிறங்கள் கண்ணுக்குத் தோன்றுவிட்டாலும், கண் ணுடி நெய் தைலாதிகளில் முகம் தெரியாவிட்டாலும், அசாத்தியம். ஆனல் இப்போது சொல்லிய குணங்கள் எல்லாம் சகல சர்ப்ப விஷத்திற்கும் பொதுவாயிருக்கும்.

எந்த சர்ப்பமாவது கடித்தவுடன் படத்தைவிரித்து ஆடினலும் தரையிற்புரண்டாலும், கடித்தஇடத்தில் ஆடிப்பின்பு அசைவற்றுக் கிடந்தாலும், கடியுண்டவனுக்கு விஷம் மீளாதென் றறியவும்.

கருநாகம்:—இதை கிருஷ்ணசர்ப்பம் என்பார்கள். இது அவுஷதாதிகளால் இறங்கினலும் இரண்டு காதகளே செவிடாக்கும்.

சிறுநாகம்:—இது தருப்பை அகலமுள்ள படத்தையும், சர்க்கை யொத்த பருத்த உடலையும்பெற்று தாழமலர்க்குள் வாசமா யிருக் கும். இதனே பூ நாகன், புல்நாகன் என்பார்கள். இதன் விஷம் மிகவுங்கொடியது.

விரியன்:—இது பெருவிரியன், ரத்தவிரியன், செவ்விரியன், நீர் விரியன், பொறிவிரியன், புல்விரியன் என ஆறுவகையாம்.

பெருவிரியன் விஷத்தால் மயக்கம், தயக்கம், உறக்கம், வெப்பம் கடித்தவாயில் ரத்தமும் வீக்கமும் எரிச்சலும் உண்டாகும்.

ரத்தவிரியன் விஷமானது வயிற்றில் வியாபித்தால் வயிறுவலியை உண்டாக்கிக் கொல்லும். கடித்தவாயில் உதிரமும், மேலில் தடிப்பும் பிறக்கும்.

இதுதவிர மற்ற நான்குவித விரியன் விஷத்தினால் கடிவாயில் மாமிச மிகுதியும் தடிப்பும் தேக எரிச்சலும், வலியும், சோர்வும், நித்திரை மயக்கமும் உண்டாகுமென்றறிக.

வழலைச்சர்ப்பம்:—இது கடித்த இடத்தில் ரத்தமும் வாயில் அனற்றலும் உண்டாகும்.

கருவழலைசர்ப்பம்:—இது சரீரத்தில் காங்கையுடன் அதிக வியர்வை, உள்ளங்கால் உள்ளங்கையில் கிலப்பும், கோழையால் மார்பில் அடைப்பு, முதலிய அதேக வேதனையும் உண்டாகும்.

மூர்க்கன்:—இதகடித்த இடத்திலும் முதுகிலும் வேதனை பிறப்பதுதவிர அவ்விஷத்தினால் வாயும் கழுத்தும் மூறுக்கிக் கொள்ளுதல், குரல் தெறிதல், தேகம்பதற்றல், தலைசுழல், என்னும் குணங்களை உண்டாக்கும்.

மயக்குச்சர்ப்பம்:—கண்ணில் விஷத்தையுடையது. இப்பார்வை சற்றுநேரம்படியினும் உடனே அவர்களுக்கு மயக்கமும் கண்களின் சுழற்சியும் உண்டாகும்.

மூறுக்குசர்ப்பம்:—இது சரீரமெல்லாம் திருகுகள்ளியைப் போல் மூறுக்கிக் கொள்ளுதலும் பதறலையும் உண்டாக்கும்.

சாரைப்பாம்பு:—இது நீண்ட உடலையும் வேகநடையையும் பெற்று மனிதரை வாலால் அடிப்பதும், பாதமுதற் மார்ப்புவரைக்கும் சுற்றி இடுப்பை ஒடிப்பதுமசெய்யும்.

புடையன்:—இது நீண்ட உருவத்தையும், அழுக்குநிறத்தையும் பெற்று வாலின் முனையால் குத்தி தேகத்தில் புடைகள் மிக உண்டாக்கும்.

மண்ணுளிப் பாம்பு:—இது பாக்கு, ரத்தம் ஆகிய இலைகளின் நிறத்தைப்பெற்று நீண்ட பயற்றங்காய் பிரமாணமுளைதாயிருக்கும். செவியில் நுழையில் அபாயமாம். இவ்விஷத்தினால் பருவகாலந்தோறும் சிறுசிறு தடிப்பும் சமைச்சலும் உண்டாகும. இதனைச் சிறுபாம்புகடி என்பர்.

காலியாங்குட்டி:—இது ஒருசாண் இரண்டுசாண் நீளத்துடன் தேஜஸ் குறைந்திருக்கும். இதற்கு கடிக்கத் தெரியாது. கடிக்கில் பெருஞ்சிகிச்சை செய்யவேண்டும.

கண்குத்திப் பாம்பு:—இது பச்சைநிறத்துடன் நீண்ட உருவத்தைப்பெற்று விருக்ஷங்களில் வாசஞ்செய்யும். நேரிட்டவர் கண்களைக் குத்தும். இதுவே பச்சைப்பாம்பு.

வெண்ணந்தைப்பாம்பு:—இது பருத்த செக்கு பிரமாணம், தூண் முதலிய பிரமாணங்களையும், உடலெல்லாம் வழுவழுப்பையும் உள்ளதாய், வாலும் தலையும் ஒரே தடிமனுப் மேலில் வெளுத்த வரிகளைப் பெற்று, கோழி, ஆடுமாடு முதலியவைகளை விழுங்குவதாயிருக்கும். இதை மலைப்பாம்பு, தாசரிபாம்பு என்று வழங்குகிறார்கள். சிலர் யானையையும் மனிதர்களையும்கூட விழுங்குமென்று சொல்லுகிறார்கள்.

சர்ப்பவிஷ வேகபேதம்:—சகல சர்ப்ப விஷத்திற்கும் வாயு வேகம், தேயுவேகம், வருணவேகம் என மூன்றுவித வேகங்களும் உட்பிரிவும் உண்டு.

வாயுவிஷ வேகநிதானம்:—வாயுவைப்பற்றி விஷம் ஏறும்போது எட்டுவித வேகம் உண்டாகும். அவையாவன:—

1-வது மூர்ச்சையும் மிகுந்த வியர்வையையும் உண்டாதல், 2-வது சரீரம் வெதும்புதல், 3-வது கண் சொருகுதல், 4-வது செவியை அடைக்குதல், 5-வது நெஞ்சில் கபங்கட்டுதல், 6-வது அறிவு மாறுதல், 7-வது மேல்மூச்சு அதிகமாய் வாங்குதல், 8-வது உயிர் நீங்குதல் என்பனவாம. இவ்வேகம் பிறக்குமுன் விஷமானது 50-மாத்திரைகாலம் நின்று பிறகு தேகத்தில் வியாபித்துச் சிரசில் ஏறும்.

2. தேயுவிஷ வேகநிதானம்:—தேயு என்னும் பித்தத்தைப்பற்றி விஷம் ஏறும்போது பத்துவிதவேகம் உண்டாகும். அவையாவன:—

1-முகங் கறுத்து கண்சிவக்குதல், 2-ரோமங்களின் முனைகள் பிளந்து சிறுசீக்கறத்திரங்கி முகம் வெளுத்தல், 3-வேதனையுடன் சரீரம் நீண்டு சிந்தை மயங்கி வாய் குளறுதல், 4-சோபம் பிறந்து குடலில் எரிச்சல்கண்டு தேஜசுமாறி காசியால் சலம்வடிகுதல், 5-தேகமும் கண்ணும் விடவிடத்து ஆடுதல், 6-வது அங்கம் பதைத்து இளைத்து காசியால் சலமபெருகி மொழிமாறிப் பல்லைகடிக்குதல், 7-வதும் 8-வதும் கபங்கட்டி சுவாசம் எழும்பி மேல்பார்வை பார்க்குதல், 9-வது உயிர் அடங்கியிருக்குதல், 10-உடலைவிட்டு ஆவிநீங்குதல் என்பனவாம். வேகங்கள் பிறக்குமுன் விஷமானது கடிவாயில் 150-மாத்திரைகாலம் நின்று பின்பு ஏறும்.

3. வருணவிஷ வேகநிதானம்:—வருணன் என்னும் சிலேஷ்மத்தைப் பற்றி விஷம் ஏறுமபோது பத்துவித வேகம் உண்டாகும். அவையாவன:—

1-தேகஞ் சிவந்து ரோமஞ் சிலிர்க்குதல், 2-வாயுலர்ந்து தேகங் கறுத்து வெதும்புதல், 3-தேகத்தில் உட்புறத்தில் உஷ்க்குதல், 4-கபம் அதிகரித்து மனங்கலங்கித் தத்தளிக்குதல், 5-நடுங்குதலும் அறிவழி தலும் உண்டாதல், 6-கண்கள் மலரவிழித்து மேல்நோக்குதல், 7-அவ யவம் முறைக்குதல், 8-சரீர வியாபாரம் அடங்குதல், 9-சுக்கிலம் நசிக்குதல், 10-உயிர் நீங்குதல் என்பனவாம். இவ்வேகம் பிறப் பதற்குமுன் விஷமானது கடிவாயில் 150-மாத்திரை காலம் நின்று பின்பு ஏறும்.

உயிர்நிலை விழிக்குறி:—விஷத்தினால் உயிர் அடங்கியகாலத்தில் கண்கள் மேல்நோக்கி நிலைக்கண் பட்டிருக்கில் உயிரானது ஊர்த்துவ காயமான மேற்புறத்தில் அடங்கியிருக்கும். கீழ்நோக்கியிருக்கில் உயிர் கீழ்தங்கியிருக்கும். பக்கங்களில் நோக்கியிருக்கில் உயிர் பக் கங்களில் அடங்கியிருக்கும். விழித்தபடியே சமபார்வையாகயிருக் கில் உடலைவிட்டு உயிர்நீங்கினதென்றறிக.

உயிர்பரீக்ஷா நிதானம்:—விஷத்தால் இறந்தவனது தேகத்தில் பிறம்புகொண்டு அடிக்கில் தடித்தாலும் அல்லது வெதும்பலோடு சிவந்தாலும் சவத்தை குளத்தில் போடில் அழுந்தினாலும், சுத்த சலத்தை மேலேசொறியில் குளிர்கண்டு ரோமஞ் சிலிர்த்தாலும் கையில் கால்விரல்களில் நெட்டம் முறிந்தாலும் தலைமயிரைப் பற்றி இழுக்கில் சொற்ப வலியுடன் அசைவு இருந்தாலும், நாடோரியிடில் அதன் வழியாக சிவந்த ரத்தம் ஒழுகினாலும், நாடி களில் ஒன்றுவது சொற்ப நடையாக நடந்தாலும், உயிர் அடங்கி யிருக்கின்றதென்று நிதானித்து சிகிச்சைகளை செய்தல் வேண்டும். ஆகையால் விஷத்தால் உயிர் அடங்கிய சவத்தை 90-நாழிகை வரை யிலும் தகனம் செய்யப்படாதென்பது சிலர் சம்மதி. சர்ப்பம் தீண்டி விஷத்தால் அடங்கியிருக்கும், சவத்தை மூன்று மாதகாலம் வரைக்கும் பிராணன் நீங்காததால் சிகிச்சைகள் செய்து பிழைப்பிக் கலாமென்றும் சிலர் சம்மதம். சாதாரணமாய் மேற்கூறிய கா ரணங்களால் உயிரானது கபாலத்தில் அடங்கி யிருப்பதால் தங்க ளால் கூடிய அளவில் மகாவிஷ சிகிச்சைகள் செய்து ஒருவாரம் அல்லது 10-நாள் வரையிலும் பார்த்து பிறகு தகனமோ அல்லது அடைக்கலமோ செய்தல் நலமென்று அகஸ்த்ய முனிசிரேஷ்டர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.

சர்ப்ப வர்க்கச் சத்துருவகை:—பாம்புகளுக்கு இருதலைமணி யன், செந்நாய், மயில், கோழி, கருடன் எருதினகுளம்பு, மின்னல், இடி, கீரி, கரடி, பன்றி, செம்போத்து, முதலை, ஓந்தை, கூகை, மான், புகைவெள்ளம், புகைமூடிய அல்லி முதலியவைகளும் மனித ரும் சத்துருக்களாம்.

விஷ விருத்தி லக்ஷணம்:—பாம்பின் கடியில் அற்ப விஷம் ஏறியிருந்தாலும் அது பித்தாகம், தாக்கம், பயம், கோபம், மிகுந்த

வேர்ப்பு, அக்கினித் தொழிலில் இருக்குதல், சுடுவைகயான நிலத்தில் படுக்குதல், கீழ்காற்றில் திரிதல், இரட்டை அலரிப்பூவை முகருதல், சீதசுட்சம், பேதி அசீரணம், தூர்பலம் பித்தவாய்வு முதலிய ரோகத்தினல் மெலிதல், பானை, மேகம், எலி, மேளம் முதலிய தொனிகளை யுற்றுக் கேட்குதல் என்னும் இவைகளினல் மகா விஷ மாகும்.

விஷத்திற்த ஆகும் பத்தியம்:—விஷம் கடித்தவர்களுக்கு, பழைய அரிசி, சாமையரிசி, தினையரிசி, பயறு, கறுப்பு பயறு, துவரை, சிறுகீரை, பாலக்கீரை, இலுப்பை கொழுந்து, புளியாரை, சிறுதேக்கிரிக்காய், மாதளங்காய், செல்லிக்காய், விளாம்பழம், காவற் பழம், இத்துப்பு முதலிய வஸ்துக்களும். காரமில்லாத அன்னபானாதி களும் ஆகும்.

விஷத்திற்கு ஆகாத பத்தியம்:—விஷம் தீண்டப்பெற்றவர்க ளுக்கு பகல் நித்திரை, மைதுனம், அதிக நடை, தீக்ஷண வெய்யில், ஸ்நானம் முதலிய செய்கைகளும், கள்ளு, எள்ளு, கொள்ளு, சைத்தியபண்டம், காரமாகிய அன்னபானாதிகள் ஆகிய இவைகள் ஆகாதென்றறிக.

ஆருட நிதானம்:—பாம்புகடி உண்டானவன் இடத்திலிருந்து வந்ததாகன் ஊர்த்துவமுக நிருஷ்டியால் பார்த்துக்கொண்டு இன்ன விஷம் தீண்டியதென்று சொல்லி அழைப்பானதில் அவ்விஷம் மீளாதென்று அறியவும். தூதன் சொன்னசொல்லில் யிருக்கும் அக்ஷரங்களை இரட்டித்து அத்தொகையை மூன்றுபேருக்கு கொடுக் கில் மிகுதியில்லாவிடில் அவ்விஷம் மீளாதென்றும் ஒன்று இரண்டு மிகுதியானல் மீளுமென்றும் அறியவும்.

மற்றும் வைத்தியன் யாகஞ் செய்யுங்காலம், நித்திரை செய்யுங்காலம் எண்ணெய் இட்டுக்கொள்ளுங்காலம், மூலிகை முதலியவைகளை கத்தியால் நறுக்குகின்றகாலம், மனசஞ்சலமாக யிருக்கும்காலம், ஆகிய யிக்காலத்தில் தூதன் வந்து சொல்வானே யாகில் அவ்விஷம் மீளாதென்றறிக.

கீடாதி பேதம்

உலகத்தில் கீடம் என்பது காலபேதங்களினலும், தேசபேதங் களினலும், உருவபேதங்களினலும், குணபேதங்களினலும் அனந்த கோடி வகையாகயிருக்காலும் அவைகள் வாயுகீடம், அக்கினிகீடம், சோமகீடம், சங்கீரணகீடம் என நான்கு வகைக்குள் அடங்கி 67 வகைப்படும். அவையாவன:—வாயுகீடம் 18-வகை, அக்கினிகீடம் 24-வகை, சோமகீடம் 13-வகை, சங்கீரணகீடம 12-வகை என் பவையாம். இந்த 67-ம் சுத்த கீடங்களாம். தொற்றுகீடங்களுக்கு கணக்கில்லை. இவற்றுள் மகாவிஷகீடம் 4-வகைப்படும். (கீடம் என்பது புழு.)

1. வாயு கீடம்:—இது 18-வகைப்படும். இவைகள் வாதபிரகோபமாயிருக்கும். இவ்விஷத்தினால் அவ்விடத்தில் அதிகரோயும் சரீரமுழுதும் குத்தப்பட்டதுபோல வேதனையும் உண்டாகும்.

2. அக்கினி கீடம்:—இது 24-வகைப்படும். இவைகள் பித்த பிரகோபமாயிருக்கும். இவ்விஷத்தினால் கடிவாயில் ரத்தங்கம்மி இலுப்பைப்பூ, பேரீச்சங்காய் இவைகளைபோல் கொப்புளம் எழும்புதலும், எரிச்சலும் பேதியும் உண்டாகும்.

3. சோமகீடம்:—இது பதின்மூன்று வகைப்படும். இவைகள் சிலேஷ்மபிரகோபம். இவ்விஷத்தினால் கடிவாயில் அத்திப்பழம்போல் கொப்புளமும் அதில் அற்பரோயும் உண்டாகும்.

4. சங்கரேண கீடம்:—இது 12-வகைப்படும். இவைகள் திரிதோஷ பிரகோபம். இது பிராணகாரத்தையும் செய்யும். இவ்விஷத்தினால் வாதகீடம் ஆகியாக சோமகீடம் ஈருகச் சொல்லிய மூன்றுவிதகீடக விஷகுணங்கள் கொப்புளங்களும் வேதனைகளும் மிகரமமாக ஒரே காலததில் உண்டாகி அவ்விடத்தில் வீங்குவதும் கமைச்சலோடு துர்கந்த ரத்தம் ஒழுகுவதுமா யிருக்கும். அன்றியும் சிரசும் கண்களும் கனத்தல், மூர்ச்சை, பிரமை, இரைப்பு, இருமல், சுரம், அரோசகம், அதிகவேதனை என்னும் குணங்களுண்டாகும். இவைகள் சாமானிய கீடக விஷங்கள். இவைகள் வாதாதி மூன்றுதோஷ சனனங்களாகவும் திரிதோஷசனனங்களாகவும் இருக்கும்.

மகாவிஷ கீடம்:—சர்ப்பங்களின் மலமூத்திரங்களிலும், சுக்கிலத்திலும், முட்டைகள் உடைத்து கனைந்த இடங்களிலும் அச்சர்ப்பங்கள் இறந்து அழிந்த உடலிலும் பிறக்கின்ற கீடம் சாலுபேதமாம்.

அஷ்டகீடம்:—இது ஓந்தி, தவளை, அடவி ஈ, வீட்டுப்பல்லி, காட்டுகொசு, குளவி, மலையெறும்பு, இலந்தி முதலிய எண்வகைக் கீடங்களாம்.

1. ஓணன்:—இது கடித்தால் அங்கு பிறையைப்போல் காயம் உண்டாகும. அப்போது வீக்கம், கமைச்சல், குத்தல், நோய், சோருதல், மலத்தில் பலநிறம் என்னும் குணங்கள் உண்டாகும்.

2. தவளை:—இது கடிக்கில் அதிக சோம்பலான நித்திரை, மூர்ச்சை, கறுத்துப் பறவுகின்ற சொறி உண்டாகும்.

3. அடவி ஈ:—இது கடிக்கில் அதிக நித்திரையும், மிகு மூர்ச்சையும் உண்டாகும்.

4. வீட்டுப் பல்லி:—இது கடிக்கில் நோய், வியர்வை, வீக்கம், எரிச்சல், மார்பு வேதனை, பொடிச்சிரங்கு என்னும் குணங்கள் உண்டாகும்.

5. காட்டு மசகம்:—இது கடிக்கில் அவ்விடத்தில் கமைச்சல், அற்பவீக்கம், வேதனை யுண்டாகும். இது அசாத்தியம். (மசகம் என்பது கொசு.)

6. மக்ஷிகா:—இது கடித்தாலும் கொட்டினாலும், அவ்விடத்தில் வீக்கம், கமைச்சல், எரிச்சல் முதலிய குணங்கள் உடனே உண்டாகி அடங்கி பின்பு தடித்த உபத்திரவம் உண்டாவதுடன் அத்தடிப்பில் மாறாது சிலேத்தண்ணீரும் வடியும். (மக்ஷிகா என்பது ஈ.)

7. மலைப் பிபீலிகா:—இது கடிக்கில் அவ்விடத்தில் நீர்த்துளியைப்போல் தடித்தல், அதிகரோய் நெருப்பால் சுட்டதுப்போல் எரிச்சல், கமைச்சல், தேகத்தில் அழலை என்னுங் குணங்களுண்டாகும். (பிபீலிகா என்பது எறும்பு.)

8. சிலந்திப்பூச்சி:—சிலந்திப்பூச்சி 28-வகைப்படும். வாதத்தில்-7, பித்தத்தில்-7, சிலேஷ்மத்தில்-7, சங்கிரணத்தில்-7 ஆக இருபத்தெட்டாம். அன்றியும் பிரத்தியேக சிலந்தி என்பதும் ஒன்று உண்டு.

சிலந்திப்பூச்சி பெரும்பாலும் சுக்கிலபக்ஷநிதிகளில் சாயங்கால வேளையிற் கடிக்கும். இவ்விஷங்களினால் கடித்தவாயில் வெளுப்பு, கறுப்பு, சிவப்பு, மஞ்சள் என்னும் நிறமாகவும் பலவித நிறமாகவும் பிருப்பதன்றி அவ்விடத்தில் மிருதுவாக உயர்ந்து தடித்து அத்தடிப்பைச் சுற்றிலும் சிறுசிறு கொப்புளங்கள் உண்டாகும். அக்கொப்புளச் சலம்பட்ட இடமெல்லாம் கொப்பளிக்கும், இதனால் விசர்ப்பி ரோகத்திலும் சோபை ரோகத்திலும் உண்டாகின்ற வருத்தமும், சுரமும் வியர்வையும் உண்டாகும்.

சிலந்தியின் சப்தவேகவிஷ நிதானம்:—விஷமானது தேகத்தில் வியாபித்த முதல் நாளில் அவ்விடத்தில் நிறம் கோற்றுமல் கொஞ்சம் கினவு, 2-வது நாளில் இயற்கை நிறத்துடன் தடித்து கினவோடு கூடிய சிறிய கட்டிகள் பெரும்புதல் 3-வது நாளில் அகல் கவிழ்த்தது போல் தடித்துச் சிவந்து அவ்விடத்து உள்ள உரோமங்கள் சிலிர்ப்பதுமன்றி அந்தமயிர்க்கால்களில் இரத்தம்கம்மி சுரமுண்டாகுதல், 4-வது நாளில் அங்கு வீக்கம் எரிச்சல், இரைப்பு, பிரமை இவை உண்டாகுதல், 5-வது நாளில் விஷதர் குணங்களெல்லாம் அதிகரிக்குதல், 6-வது நாளில் அவ்விஷம் மர்மஸ்தானங்களில் வியாபிக்குதல், 7-வது நாளில் உயிருக்கு அபாயம் வருதல், முதலியனவாம்.

சர்வசிலந்திகளின் சாமானியவிஷ லக்ஷணம்:—சிலந்திப்பூச்சிகளின் விஷம் எறினால் அவ்விடத்தில் எழுமபுகின்ற விரணங்களில் சிலது கொப்புளங்களாயும் சிலது மண்டலாகாரமாகியும் சிலது

சுவேத நிறமாயும், செந்த செவ்வந்த நிறமாயும், செந்த மஞ்சள் நிறமாயும், செந்த நீல நிறமாயும், செந்த மிருதுவாயும், செந்த கடினமாயும் இருக்கும். எட்டுக்கால் பூச்சியும் பிற்ற செவ்வந்த பூச்சிகளின் பேதமேயாம்.

செவ்வந்தியின் அஷ்டவிஷ பேதம்:—

செவ்வந்தி பூச்சிகளின், சுவாசம், பல், மலம், மூத்திரம், சுக்கிலம், வாய், வாய்நீர், ஸ்பரிசம் என்னும் எட்டு ஸ்தானங்களில் விஷங்கள் பிறக்கும். அவைகள் மனிதர்மீது பட சகலதுர்குணங்களை முண்டாகும்.

1. செவ்வந்தியின் சுவாசம்:—இது சாத்தையும், தாகத்தையும் உண்டாக்கும்.

2. செவ்வந்தியின் பல்:—இது அழுந்திய இடத்தில் பிறக்கின்ற விரணம் நிறபேதமும் கடினமும் ஸ்திரமும் உள்ளதாயிருக்கும். இதனால் சரீரத்தில் வீக்கம் எரிச்சல் வேதனை, வியர்வை, தாகம் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

3. செவ்வந்தியின் மலம்:—இதுபட்ட இடத்தில் இலுப்பைப் பழம் போல் வெளுக்க விரணம் பிறந்து அதில் தர்க்கந்தமும், எரிவும் தினவும் உண்டாகும்.

4. செவ்வந்தியின் மூத்திரம்:—இதுபட்ட இடத்தில் நடுவில் கறுத்தும் உயர்ந்தும் சுற்றிலும் வாடியும் புஷ்பம்போல் மலர்ந்தும் இருக்கின்ற விரணம் பிறக்கும். அதில் தர்க்கந்தமும் எரிச்சலும் மாறுதல் உண்டாகும்.

5. செவ்வந்தியின் சுக்கிலம்:—இதுபட்ட இடத்தில் கடினமான கொப்புளமும் நோயும் உண்டாகும்.

6. செவ்வந்தியின் வாய்:—இதுபட்ட இடத்தில் முருக்கம் பூவைப் போல் நிறமுள்ள விரணம் பிறந்து அதில் குத்தலும் ஊசலும் உண்டாகும்.

7. செவ்வந்தியின் வாய்நீர்:—இதுபட்ட இடத்தில் புங்கன்பூவைப் போல் நிறம் உள்ள விரணம் பிறக்கும். அவ்விரணத்தின் பக்கங்களிற் பூச்சி ஊருவதுபோல் பரபரத்தலும், குத்தலும், எரிச்சலும் உண்டாகும்.

8. செவ்வந்தியின் ஸ்பரிசம்:—இது தேகத்தில்பட்டாலும் இப்பரிசத்தைப்பெற்ற வஸ்திரம் பட்டாலும் முற்கூறிய குணங்களெல்லாம் விரைவில் உண்டாகும்.

மீன்:—செவ்வ மீன்கள் கடித்தால் நோயும் எரிச்சலும் உண்டாகும். நீர் வண்டு, சுழல்வண்டு, பாசிவண்டு, எரிவண்டு முதலிய செவ்வ விஷமுள்ளவைகள் கடிக்கில் அவ்விடத்தில் வீக்கம், நமைச்சல், நோய் நுரைத்த பேதி, சரீரத்தில் நடிப்பு என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

நாட்டுமரவட்டை:—இது கடிக்கில் வியர்வை, நோய், சரீரம் நடித்தல், வீக்கம், கறுப்பகத்திப்பூநிறம்போல் பொடி செவ்வங்குகள் எழும்புதல், பிரமை என்னும் குணங்கள் உண்டாகும்.

விருசுகிகம் (தேள்):—இது சர்பங்கள் செத்தழிந்த இடத்திலும் சாணம், தோணிப்பட்டை முதலியவை மக்கிய இடத்திலும், மயானத்தின் சாம்பலிலும் பிறக்கும். இது முறையே வெளுத்தும் கறுத்தும் செவ்வந்தும் இருக்கும். இவற்றின் விஷம் எறினல், நா நடித்தல், தேகம் மாதல், அதிகநோய், நாசியால் ரத்தம் விழுதல், சர்வாங்கத்திலும் வியர்வை, மூர்ச்சை, வாயுலால் என்னும் குணங்களுண்டாகும். (விருசுகிகம் என்பது தேள்.)

தேள்கள் நான்குவகைப்படும். அன்றியும் நண்டுவாய்க்காலி என்று ஒன்றும் உண்டு.

1. உச்சிலிங்கத் தேள்:—இது பகல்காலத்தில் கொட்டும், இவ் விஷத்தினல் அவ்விடத்தில் வீக்கம், நரம்புகளில் மிகுவேதனை, உரோமச்சிலிர்ப்பு, அதிக தாகம் என்னும் குணங்களுண்டாகும். இது மந்திரத்தால் வசப்படும்.

2. வாதத் தேள்:—இது மார்புநோய், மேல்சுவாசம், எலும்பு, நரம்பு, கீல் இவைகளில் நோய், தேகங்கறுத்தல், கூச்சல், புரளல் முதலிய குணங்களை யுண்டாக்கும்.

3. பித்தத் தேள்:—இது அறிவு நீங்குதல், சுடுகையான மேல் மூச்சு, வாயானது காரமாயிருத்தல், முகத்தில் எண்ணெய் தடவினதுப்போல் பளபளப்பு, மாமிசங் கறைதல், கோழை என்னும் குணங்களை உண்டாக்கும்.

4. சிலேஷ்மத் தேள்:—இது வாந்தி அரோசகம், மார்பு அதிரல், வாயில் சலம்வடிதல், பீசம், சரீரம்முற்றிலும் வாழைத்தண்டை ஒத்த நிறம், வாயினிப்பு என்னும் குணங்களை யுண்டாக்கும்.

கறுத்தேள் செந்தேள் சிறியதேள், இராஜத்தேள் என பலவகை தேள்கள்உண்டு. அவைகளின் விஷகுணங்கள் மேற்கூறிய நான்கு வகைகளின் குணங்களையே பெரும்பாலும் ஒத்திருக்கும்.

நண்டுவாய்க்காலி:—இது கொட்டினல், வியர்வையும், நெரிகட்டுதலும், வீக்கமும், கடுப்பும், குடைச்சலும், எரிச்சலும், குமுறலும், வாயில் நுரையும் உண்டாகும்.

மூஷிகம் எலி :—மூஷிகம் என்பது 18-வகைப்படும்—லாலஜம், சபலம், புண்டரம், ஹரிதம், சிகுரம், அசிதம், கஷாயதந்தம், குங்கும், கோகிலம், கபிலம், கிருஷ்ணம், அருணம், சபலம், சுவேதம், கபோதம், உந்துரு, பலினி, ரசாலம், என்பவையாம். அன்றியும் சுகந்தி என்பது ஒன்றுண்டு. இதுவே மூஞ்சுறு.

எலிகள் கடிக்கில் அந்த இடத்தில் இரத்தம் வடிதல், கிரந்தி, விக்கம், மச்சங்கள் எழும்புதல், பிரமை, அரோசகம், குளுர்காய்ச்சல், கீல்நோய், நடுக்கல், உரோமச் சிலிர்ப்பு, மூர்ச்சை, சிலேஷ்மாதிக்கம், இருமல், இரைப்பு, வாந்தி, தாகம் முதலிய குணங்கள் உண்டாகும்.

எந்த எலியின் கடியினலாவது மூர்ச்சை, தேகவிக்கம், மாற்றுருவம், வியர்வை, காதுமந்தம், சுரம், தலைநோய், வாய்நீர் ஊறல், ரத்தவாந்தி என்னும் இக்குணங்கள் உண்டாகில் அசாத்தியம்.

பேய்நாய்:—இது கடித்தால் அவ்விடத்தில் விரணம் பிறக்கும். இதனல் தாதுநஷ்டம், வாய்நீர் ஊறல், கண்மயக்கம், காதுமந்தம், தேஜஸ் குன்றல், தான்பிடிப்பு, சிரோபாரம், தூங்கும்போது அவ்விரணத்தில் கறுத்த ரத்தம் வடிதல், மார்புநோய், சுரம், தேகம் மாத்தல், தாகம், மூர்ச்சை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

சகல மிருக செந்துக்களின் விஷநிதானம் :—குதிரை, புலி, கரடி, காட்டுப்பன்றி, கோலுப், கரி, பூனை, மாயப்பூனை, குரங்கு, கீரி, முதலை முதலிய செந்துக்கள் கடிக்கில் அந்த கோரை தந்தங்களில் இருக்கின்ற விஷத்தினல் தினவு, உருவபேதம், சோய், நித்திரையில் வியர்வை ஒழுகுதல், சுரம், பிரமை, தாகம், விக்கம், கிரந்தி, மூர்ச்சை கடிவாயில் மச்சமும் அதன்மேல் கொப்புளமும் எழும்பிப் புடைத்தல் அதேக ரோகமும பிறக்குதல் என்னும் இக்குணங்களுண்டாகும்.

தந்த நக விஷ நிதானம்:—பசு முதலிய மாடுகளுக்கும், மனிதர்களுக்கும், பல், நகம் இவைகளில் விஷமுண்டு. அவைகள் பட்டு விரணம் பிறந்தால் அதில் விக்கத்துடன் ரத்தம் வடியும். இதனல் சுரமுண்டாகும். இது சாத்தியம்.

சகல விஷ உபத்திரவ நிதானம்:—சகல விஷங்களுக்கும் சுரம், இருமல், இரைப்பு, வாந்தி, விக்கல், மூர்ச்சை, தாகம், சரீரத்தில் கடினத்துவம், வயிறுப்புசம், அடிவயிறும் தலையும் சோதல், விக்கம், தூக்கத்த ரத்தம் வடிகின்ற விரணம், வாதாதிக்கம் என்னும் 14-வித தூக்குணங்கள் பிறக்கும். இதுவே விஷ உபத்திரவமாம். இந்த குணங்கள் உண்டாவதற்கு முன்னமே தகுந்த சிகிச்சைகளைச் செய்யில் சாத்தியமாம். மீடிக்கில் கஷ்டசாத்தியம்.

ஸ்திரீரோக நிதானமும் சிகிச்சையும்

மலடு ரோகம்.

சுக்கில சுரோணிதங்களில் வாதாதிகளின் தோஷத்தினலும் ஜன்மாந்தர பாவத்தாலும் மலட்டுரோகம் உண்டாகும், அது ஆண் மலடு பெண் மலடு என இருவகைப்படும். இவற்றில் பெண் மலட்டில், ஆதிமலடு, காகமலடு, கதலிமலடு, கருப்பமலடு என நான்கு பிரிவுகள் உண்டு. இது பெரும்பாலும் ஸ்திரீகட்கே விசேஷமாக காணப்படுதலால் இந்நோயை ஸ்திரீ ரோகத்தின் கீழ் கூறப்பட்டது.

ஆண் மலடு:—ஆண்களின் விந்துவானது இனிப்பு இல்லாததும் சலத்தில் விட்டால் கலந்து மிதப்படும், உயிர்ப்பற்றதும், மூத்திரத்தில் நுரைகட்டுவதுமாயிருக்குமாயின் அதனல் கர்ப்பந் தரிக்கமாட்டாது.

பெண் மலடு:—பெண்களுக்கு மாதாந்த ருதுகாலத்தில் வெளிப்படும் ரத்தமானது கிவந்தும், கருத்தும்வீழ்ந்து தேகத்தில் வாதகுணத்தை உண்டாக்கில் அது வாததோஷமென்றும், மஞ்சள்நிறமாயும் நீலநிறமாயும் தேகத்தில் பித்த குணத்தையுண்டாக்கில் அது பித்ததோஷமென்றும், சிழைப்போல் வெளுப்பாக வீழ்ந்து மந்தாக்கினி முதலிய சிலேத்தும குணத்தை உண்டாக்கில் அது சிலேத்ம தோஷமென்றும், பிரேத ரத்தத்தைப்போல் உருண்டையுருண்டையாய் வீழின் அது ரத்தபித்த தோஷமென்றும், உதிரமானது கண்டு உடனே மறைந்தால் வாதபித்த தோஷமென்றும், மலமூத்திர நிறமாக வீழின் சன்னிபாத தோஷமென்றும் அறியவும். இவற்றுள் வாதபித்த கப தோஷங்கள் சாத்தியம். தொந்த தோஷங்கள் கஷ்ட சாத்தியம். சன்னிபாத தோஷம் அசாத்தியமாம்.

புருஷன் புணரும்போது அந்த ஸ்திரீக்கு தலைநோய் காணுமாகில் கருக்குழியில் பாரம் அல்லது பாஷபற்றி விளக்க மற்றிருக்குமென்றும். அக்காலத்தில் அந்த ஸ்திரீக்கு சர்வாங்கத்திலும் நோய் காணுமாகில் கருக்குழியில் வாயுவு வியாபித்திருக்குமென்றும், நெஞ்சுவலி காணுமாகில் யோனிசுருங்கி தசை வளர்ந்திருக்கும் என்றும், மூதுகுநோயுண்டாகில் யோனியில் கிருமி நிறைந்திருக்குமென்றும், கண்டசதை வலிக்குமாகில் யோனியில் ரத்தங் கட்டியிருக்குமென்றும், எப்பங்காணுமாகில் யோனிமதத்த கொழுப்படைந்திருக்குமென்றும், விந்து சோராமல் நஷ்டப்படுமாகில் பேயினலும், பயத்தினலும், யோனிக்குள் வியாதிகள் புண்டாயிருக்குமென்றும், இவைகள் மலட்டு நோயைக் குறிக்குமெனவும் சில நூல்களில் கூறப்பட்டுள்ளன.

1. ஆதி மலடு:—யோனியில் மூன்றுமடிப்பு விழுந்து இடுப்பு பருத்து சரீரம் ஸ்துலித்தால் கர்ப்பம் உண்டாகாது. இதுவே ஆதி மலடி எனப்படும்.

2. காக மலடு:—முதலில் இரண்டு பிள்ளைகளை பெற்றபின்பு இல்லாதிருப்பது காக மலடாம்.

3. கதலி மலடு:—வாழை மரத்தில் உண்டாகுந் தாறுபோல் ஒருபிள்ளையைப் பெற்று மறுபடியும் கருப்பம் இல்லாதிருந்தலுக்கு கதலி மலடாம்.

4. கருப்பமலடு:—யோனியிலே செத்து செத்து விழும்பிள்ளையை சாதாரணமாய் வருஷந்தோறும் பெறுவது கருப்ப மலடாம்.

கருப்ப ரோகங்கள்.

அழி கருப்ப லக்ஷணம்:—யோனியில் உருவம் ஏற்படாத இளங் கருவா யிருக்கும்போது சிலர் கீழ்வயிறு மேல்வயிறு பிட்டம் ஆகிய இவ்விடங்களில் அதிக உக்கிரமான வேதனையும் மார்பு நோயும், முகவெளுப்பும் காயின் கீழ் உபத்திரவமும், ஆயாசமும், வயிற்றில் வாளால் அறுப்பதுபோல் யிருத்தலும் உண்டானால் கருப்பம் கலைந்துவிழு மென்றறியவும்.

கருப்பபேதம்:—கருப்பமானது உபவிஷ்ட கருப்பம், நாகோதர கருப்பம் லீனக்கிய கருப்பம் என மூன்று விதப்படும்.

1. உபவிஷ்டகருப்ப லக்ஷணம்:—சில ஸ்திரீகளுக்கு கருப்பம் தரித்தும், மாதம் மாதம் ருது காலத்தில் சோணிதம் வெளிப்பட்டுக் கொண்டே யிருக்கும். அப்படி வெளிப்படுவதால் அச்சரீரத்துக்கு கெடுதியொன்றாது. ஆனால் சில நிடகாதங்களில் யிரண்டு இரண்டு மாதங்களுக்கு ஒருதரம் ருதுவாகி வருவதுபோல் யிருக்கும். இதனை உபவிஷ்டகம், தங்குபிண்டம், எனவும் சொல்லுவர்.

2. நாகோதர கருப்ப லக்ஷணம்:—தாகம், உபவாசம், உஷ்ண நிரவிய போஜனம், அல்குலில் மாருமல் ரத்தம் வடிதல், வாதாதிக்கம் ஆகிய இவைகளினால் கருப்பமானது விருத்தி யடையாமல் யிருப்பது மின்றி, வயிற்றில் ஒவ்வொருவேளை கொஞ்சம் அதிகமே யுண்டாக்கும். அந்த மாதருக்கு சிலகால் வயிறு பருத்தது போலிருந்தாலும் பின்பு வாடும். (நாகம என்பது பாம்பு. உதரம என்பது வயிறு)

3 லீனக்கிய கருப்ப லக்ஷணம்:—இது முற்கூறிய கருப்பத்தைப்போலவே இருந்தாலும் அசைவுமாதிரம இல்லாமல் மூன்று வருஷத்துக்குமேல், பிரயாசத்தோடு சில பிறக்கும். அல்லது மறைந்தாலும் மறையும். இது வயிற்றிற்குள் அந்தரங்கமாக யிருக்கும் காரணத்தால் லீனக்கிய கருப்பம் எனப் பேர்பெற்றது. இதனை மும் மாங்காய் எனவும் வழங்கிவருகிறார்கள்.

கருப்பகாலத்தில் ஆகாதவஸ்துக்களைப் புசித்தலினாலும், சிற்சில ரோகங்களினாலும் காரணம் யில்லாமல் ருதுவாவது, சூலையாவது உதாவர்த்தவாயுவானது காணுவதுண்டு இதற்கு உடனே சிகிச்சை செய்யவேண்டும். அப்படிக்கு செய்யாவிடில் கருப்பம் சிதைவதுடன் தாய்க்கும் அபாயம் சேரிடுமென்றும் அறிக.

கருப்பம் மரிக்கும் லக்ஷணம்:—கருப்ப ஸ்திரிகளுக்கு மலமூத்ர பந்தம், உதாயல் ஓட்டைப்போல் தேகங்கறுத்தல், வாயில் அதிக துர்க்கந்தம் வீசுதல், கையும் காலும் மிகவும் கறுத்தல், தலையிலும் முகத்திலும் விக்கம், அடிக்கடி செட்டியிர்ப்பு என்னும் குணங்களே யுண்டாகில் சிசு மரிக்குமென்றறிக. இதனைக் கருப்ப வியாபத்தி என்றுஞ் சொல்லுவர்.

அகமரித்த கருப்ப லக்ஷணம்:—தெய்வச்செயல், நிரிதோஷங்களால் பம், அபத்தியம் ஆகிய இவைகளால் யோனிமுகத்துக்குள் சிசு இறக்கும். இதனால் தொட்டுணர்ச் சுற்றிலுமாவது யோனி முற்றிலுமாவது தேங்கி முற்றிலுமாவது சீதளம், யோனிகெட்டியாக உப்புதல், அதிசங்கடம், பிண்டம் அசையாதிருத்தல், மிகுந்த தாகம், ஸ்தனம் தளர்ல், ரோயாசனத்தின் மேல்வாசம் வருதல். இவ்வுப்பு, சர்வஸ்துவிலும் அருவருப்பு, தர்க்கத்துடன் சூழம்பாக மூத்திரம் இறங்குதல், கண் வட்டமிட்டுச்சுழலல், சர்வபக்கந் திரும்பினாலும் அந்தபக்கம் பிண்டம் கனமாகத்தோற்றல், பிரமை, மரத்தல், வெந்நீர் ஆவிபிடித்தகையை யோனிமேல் வைக்கில் அதில் இல்லாதிருத்தல், என்னும் குணங்களுண்டாயின் சிசு மறித்ததென்றறியவும். அப்போது தாயாருக்குச் சேதமில்லாமல் அந்த சிசுவைக் கைப்பழக்கத்தினாலாவது ஆயுதப் பிரயோகத்தினாலாவது மருந்தினாலாவது சஞ்சக்கொடியுடன் ஜெகிரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும்.

தருணப் பிரசவ லக்ஷணம்:—யோனியில் கருப்பம் நிறைந்து இன்றைக்கோ நாளைக்கோ பிரசவம் என்றிருக்கும் காலத்தில் ஆயாசம், யோனி தளர்ல், கண்கள் குழிவிழுதல், பலவித இளைப்பு, கீழ்வயிறு கனத்தல், அரோசகம், வாய்நீரூறல், அடிக்கடி கீறிரங்கல், தொடையோனி இடுப்பு மூதுகு மார்பு கீழ்வயிறு இரு கவுட்டி, அபானம் என்னும் இவ்விடங்களில் நோய், அல்குல் கிரிதல், அதிசல், வேதனை, ஒருவேளை ஊசியால் குத்துவதுப்போல் குத்தல், சலம் பெருகுதல், யோனியில் மிகுநோய் மூதலிய குணங்கள் கண்டு சிலோதயமும உண்டாகும். இதுவே தருணப்பிரசவமாம்.

மல்கலாக்கிய சூலை லக்ஷணம்:—பிரசவித்தவுடனே ஸ்திரீகளுக்கு அழுக்கின் குற்றத்தால் மார்பிலாவது, சிலிலாவது, கீழ்வயிற்றி

லாவது சகிக்கக்கூடாத குத்தலும் நோயும் உண்டாகும். இதனை மண்குத்துநோயென்றும் கூறுவர்.

அசாத்திய சருப்பக் குறிகள்:—சில வெளிப்படாதிருத்தல், அல்குல் தடித்துக்கொண்டு கொஞ்சம் வெளியில் நோய்ப்போலிருத்தல், மேல்சுவாசம், துர்க்கந்த ஏப்பம், தேகஞ்சில்லிடல் என்னுங் குணங்களுண்டாயின் சிகிச்சைசெய்வதில் பயனில்லை என்றறிக. வஸ்திஸ்தானத்தில் சிக்கிக்கொண்ட கருப்பத்தினால் தாயிறந்தும் வயிறு மாத்திரம் வெந்நீர் ஆவிக்கு அதிருமானில் அவ்வயிற்றை உபாயகமாகக் கீறி அச்சிசுவை யெடுத்துக்கொண்டு வளர்க்கவும்.

மூட விஷ்டம்ப கருப்பங்களின் லக்ஷணம்:—மேடுபள்ள ஸ்தான படுக்கை முதலிய துர்க்குணங்களினாலும், அபானவாயுவின் விகு ணத்தினாலும், பிரசவகாலத்தில் தாறுமாறாக புரண்ட விதற்பத்தினா லும், வயிற்றிலிருக்கும் சிசுவினது சிரசும், கையும், காலும் ஸ்தானம் தப்பி ஸ்தானத்தில் சிக்கிக்கொள்ளும். இதுவே மூடகருப்பம். யோனி ஸ்தானத்தில் ஒருகாலும் குதஸ்தானத்தில் ஒருகாலும் மாட் டிக்கொண்டு ஸ்தம்பித்து பிரசவமுகம் காணுதிருக்கும். இதுவே விஷ்டம்ப கருப்பம். இவற்றுள் எந்தக் கருப்பமானது பிராணவாயுவி னால் முறுக்குண்டு அடிப்படும்போது தாய்க்கு அதிக கருப்பவேதனை யுண்டாகி, அச்சிசுவானது அவ் ஆபாசத்தினால் ஸ்தம்பித்து மயங்கி கிடக்கும்போது அவ்வேதனை நிமலென்று நின்றுவிடும். இதனால் அந்த ஸ்திரீக்கு இரண்டு மூன்றுநாள் பிரசவவேதனை காண்பதும் சிசுவு வெளிப்படாமல் பிருக்க அவ்வேதனை நின்றுப்போவதுமுண்டு. அத்தருணத்தில் உயிர்த்திருக்கின்ற சிசுவைக் கைப்பழக்கத்தினாலும் ஆயுதங்களினாலும் உபாயமாக வெளிப்படுத்தல் வேண்டும். அதை விட்டு மரித்ததென நினைத்து அச்சிசுவை சோதிப்பார்களாயின், அத் தடன் தாய்க்கும் சேதமுண்டாகும். இக்கருப்பங்கள் உள்ளில் உபத்திரவம் செய்வதும் ஸ்தம்பிப்பதுமாக பிருக்கும்:

பிரசவித்த மூன்றுமாதமான ஸ்திரீகளுக்கு ஆமாசய ஸ்தானத் தில் ரூட்சை காணுவதுண்டு.

எந்த ஸ்திரீகளுக்கும் கருப்பமடைந்த மாதமுதல் ஏழுமாதம் வரையிலும் இளநீர் வழுக்கையின் தன்மையையொத்து வளருகின்ற இளங்கருவானது வாதாதி தோஷங்களினாலும் தகாத சேஷ்டைகளி னாலும் ஒருவேளை கரைந்தும் கரையாமலும் விழும். அப்படி விழ ஒட்டாமல் மாதந்தோறும் தகுந்த சிகிச்சைகள் செய்தல் வேண்டும்.

சில ஸ்திரீகளுக்கு கருப்ப ஸ்தானத்தில் வாதாதிக்கத்தால் கட் டுப்பட்ட இரத்தமானது காரசார உஷ்ணமுள்ள வஸ்துக்களினால் கரைந்து விழுவதுண்டு. அதை சில் பிண்டமென நினைத்து ஐசாதி அரைத்தனினால் கரைந்து விழுந்ததென விண்ணறு செய்வார்கள்.

வஷ்டிரோக லக்ஷணம்:—பிரசவித்த சரீரமுழுதும் பச்சைப் புண்போலிருக்கின்ற ஸ்திரீகளுக்கு எந்நேரமும் உடம்பு அதிரும்படி யான மிகுபோகத்தினாலும், பதினொரு வேகத்தை படக்கலினாலும், கருப்பகால அபத்தியத்தினாலும், கருப்பஸ்தானத்தில் பிருக்கிற வாயு வானது அதிகரித்து, இடுப்பு, பிட்டம், நிரிகஸ்தானம், கவுட்டி, யோனி, கீழ்வயிறு தொப்புள், முலைக்காம்புக்குக் கீழ்பாகம் ஆகிய இவ்விடங்களில் சகிக்கக்கூடாத, பிரசவ நோயைப் பார்க்கிலும் அதிக நோயை யுண்டாக்கும். இதை சிற்சிலர் ரத்தகுன்மகட்டி அஷ்டிலிகா வாதகட்டியென்று சொல்லுவார்கள். அது இவ்விரண் டும் அல்ல. சையோகத்தினால் உண்டான வாதகட்டி யென்று சொல்லவேண்டியது. எனெனில் இது பக்கங்களில் குத்தலையும், நோவையும் தபித்தலையும் உண்டாக்கச் செய்வதுமன்றி, தான் அது சரித்த பக்கத்தில் மிகுந்த வேதனையைக் கொடுத்துச் சமுத்திர தனலை யைப்போல் கருப்பமுகத்தை அடைத்துக்கொள்ளும். முற்கூறிய கட்டிகளையாயின், அவைகட்கு எளிதில் கரைந்துவிழுகின்ற தன்மை இராது. இதுவோவென்றால் மாதாந்த ருதுகாலத்தில் அதிகரித்த வாயுவின் வேகத்தால் அடிபட்டு அல்குல்வழிபாகப் பட்டை கஷா யத்தைப்போலும், மாமிசங்கலந்த சலத்தைப்போலும் கரைந்து ஒழுகுவதுமன்றி தெளிக்கும், குழம்பியும், கறுத்தும், குறைத்தும், அதிகரித்தும் உதிரமாகப் பெருகும்.

கருப்ப சலனம்:—கருப்ப சலனம் என்பது கருப்பத்தின் அசை வைக் குறிக்கும். இது பெரும்பாலும் கருப்பையின் பலவீனம் முத லிய காரணங்களினால் ஏற்படும். சாதாரணமாக கருப்ப ஸ்திரீகட்கு முதல் மாதம் முதல் ஒன்பதாம் மாதம் வரையில் இச்சலனம் ஏற்பட லாம். முதல் மூன்று அல்லது ஆறு மாதங்கள் வரையில் இந்த கருப்ப சலனத்திற்கு தகுந்த சிகிச்சை செய்யாவிடில் இது கரு அழி விற்கு ஏதுவாகுமாகையால் அப்போதைக்கப்போது தகுந்த சிகிச்சை களைச் செய்துவருவது நன்று.

முதல்மாத கருப்ப சலன சிகிச்சை:—முதல் மாதத்தில் கருப்ப சலனமுண்டானால் நிராட்சை, அதிமதுரம், சந்தனம், ரத்த சந்தனம் இவைகளை அரைத்து பசும்பாலில் கலந்து குடித்தால் கருப்ப சலனம் நீங்கி கருப்பம் பலப்பட்டு நிலைத்திருக்கும்.

இரண்டாவது மாத சலன சிகிச்சை:—இரண்டாவது மாதம் கர்ப்பம அசைந்தால் தாமரைதண்டு, நாககேசரங்கள் இவைகளை சலத்தினால் அரைத்துப் பாலில் கலந்து கொடுத்துவர கர்ப்பம் நிலைக்கும்.

மூன்றும் மாத சலன சிகிச்சை:—மூன்றுவது மாதத்தில் சலன முண்டானால் நாககேசரங்கள் பாலில் அரைத்து பாலில் கலந்து குடித் தால் கர்ப்பம் நிலைத்திருக்கும். அல்லது தாமரைதண்டு, சந்தனம்,

வெட்டிவேர், தாமரைப்பூ இவைகளை சலம்விட்டு அரைத்து பசும் பாலில் கலந்து குடித்தால் கர்ப்ப சலனமுண்டாகாமல் நிலைத்திருக் கும். கர்ப்பசூலையும் நீங்கும்.

நாலாவது மாத சலன சிகிச்சை:—நாலாவது மாதம் கர்ப்ப சல னத்தினல் தாகம், சூலை, தாபம், காய்ச்சல், இவைகள் உண்டானல், வாளழக்கிழங்கு, கரும் அல்லி, வெட்டிவேர் இவைகளைச் சமனடை யாக பால்விட்டு அரைத்து குடித்தால் கர்ப்பம் நிலைக்கும். சுரம் முதலியது நீங்கும்.

ஐந்தாவது மாத சலன சிகிச்சை:—ஐந்தாவது மாதத்தில் கர்ப்ப சலனமும், சூலையும் உண்டானல் மாதளம் கொழுந்து, சந்தனம் இவைகளை அரைத்து தயிரில்கலந்து தேன்விட்டு குடித்தால், கர்ப்ப சலனம் சூலை இவைகள் நீங்கும்.

ஆறுவது மாத சலன சிகிச்சை:—ஆறுவது மாதத்தில் கர்ப்பம் சலனமாகில் காளிக்கல், பசும்சாணிபற்பம், கறுப்புமணல் இவை களை கியாழம்வைத்து தூயபிறகு பால், சந்தனம், சர்க்கரை இவை கள் கலந்து குடித்தால் கர்ப்பசலனம் நிற்கும்.

ஏழாவது மாத சலன சிகிச்சை:—ஏழாவது மாதத்தில் கர்ப்ப சலனம் உண்டாகில் வெட்டிவேர், ஆலம்கொழுந்து, கோரைக் கிழங்கு, மஞ்சிஷ்டி, நாககேசரங்கள், தாமரைக்கிழங்கு இவைகளை கியாழம்வைத்து சர்க்கரை கலந்து குடிக்கச் செய்தால் கர்ப்பம் நிலைபெறும்.

எட்டாவது மாத சலன சிகிச்சை:—எட்டாவது மாதத்தில் கர்ப்பசலனம் உண்டாகில், லோத்திரப்பட்டை, திப்பிலி இவைகளை சூரணித்து தேன்விட்டு கலந்துகொடுக்க கர்ப்பம் நிலைபெறும்.

முதல்மாதம் முதல் கர்ப்பசலனங்களில் மேற்கூறிய சிகிச்சைகள் செய்தால் ஒன்பதாவது மாதத்தில் சுகமாக பிரசவமாகும். இந்தப் பிரகாரம் கர்ப்பபோஷணை செய்யவேண்டியது.

சர்ப்ப பதனம் (கரு அழிவு):—அடிபடுதல், பயம், மிகுபேதி, உஷ்ண வீரிய உணவு முதலிய காரணங்களினலும் கருப்பப்பையின் பலவீனத்தினலும் சடினமான வேலை முதலியவைகளினலும் கருவா னது நைந்து வெளியாகும். இதையே கரு அழிவு அல்லது கருப்ப பதனம் என்பர். இது முதல் மாதத்திலிருந்து ஆறு மாதம் வரையில் ஏற்படும்.

முதல் மாதம் முதல் நாலுமாதம் வரையிலும் கரு அழிவு ஏற்படு மாகில் அது திரவரூபமாகயிருப்பதால் அதனைக் கருப்பச் ரோவம் என்றும், ஐந்து ஆறுவது மாதங்களில் உண்டாகும் கரு அழிவில் பிண்டப்பொருட்கள் காணப்படுவதால் அதனைக் கருப்ப பாதமென் றும் கூறப்படும்.

அச்சமயத்தில் எரிச்சல், அடிவயிறு, பிட்டம், இடுப்பு, இவை களில் சூலை, இரத்தப்போக்கு, வாய்வு, மூத்திரபந்தம் இவைகள் உண்டாயிருக்கும்.

பரிகாரம்:—அதிமதுரம், நன்னரிவேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, தாமரைப்பூ, நிலப்பூசனி கிழங்கு, நெருஞ்சில், கிராட்சை, கோரைக்கிழங்கு இவைகளை வகைக்குக் கால்பலம் வீதம் சூரணித் தோ அல்லது குடிநீரிட்டோ சர்க்கரையும் பாலும் சேர்த்து அருந்தி வர கருப்பகாலத்தில் ஏற்படும் சூலை முதலியன நீங்கி கருப்பம் நிலைக்கும்.

வெட்டிவேர், அதிவிடயம், கோரைக் கிழங்கு, இலவம் பட்டை, வெட்பாலை விதை இவைகளை முறைப்படி கியாழமிட்டு கொடுக்க கருப்பிணிகட்கு காணும் கர்ப்பசலனம், பெரும்பாடு, கருப்பசூலை முதலியன குணமாகும்.

அந்தரத்தாமரை, காட்டாத்திப்பூ கருவல்லி, அதிமதுரம், லோத்திரப்பட்டை இவைகளைக் கியாழமிட்டு, ஸ்திரீயை மாளவு ஜலத்தில் உட்காரவைத்து மேற்படி கியாழத்தை அருந்தச் செய்ய கெர்ப்ப பாதம் நிவர்த்தியாகும்.

மூடகர்ப்பம்:—கர்ப்பிணிகளுக்கு கருப்பாசயத்திலுள்ள சிசு வாதாதி தோஷத்தால் இடக்குமுற்று அசேதவிதங்களாக யோனி துவாரத்தை அடைக்கும். இதுவே மூடகர்ப்ப மெனப்படும். இது முக்கியமாய் எட்டுவகைப்படும். அவையாவன:—

அவைகளில் ஒன்று தலையினல் யோனித்துவாரத்தைத் தடுக்கும். மற்றொன்று வயிற்றினல் யோனித்துவாரத்தை நிமிக்கும். சரீரத்தை சேர்க்கையினல் உண்டானதேகத்தையுடையதாய் யோனித்துவா ரத்தை தடுக்கும். மற்றொன்று ஒருபுஜத்தினல் அல்லது இருபுஜத்தி னல் குறுக்கேகின்று யோனித்துவாரத்தை தடுக்கும். கீழ்முகமாக மற்றொன்று யோனித்துவாரத்தை தடுக்கும். மற்றொன்று இட வலது பாரிசங்களினல் குருக்காக யோனித்துவாரத்தை தடுக்கும்.

கர்ப்பஸ்தானமான சிசு யோனியை தடுக்கும்விதங்கள்; சங் கீலகமென்றும், பிரதிசூலமென்றும், வரிகமென்றும், பீஜமென்றும் நான்கு விதங்களாகயிருக்கும். மேல்புரமாக கைகள் பாதங்கள் சிரசு இவைகளை ஆணியைப்போல் யோனிதுவாரத்தை தடுப்பது சங்கீலகமென்றும், குதிரை முதலியவைகளின் குளம்புகளைப்போல் தடுப்பது பிரதிசூலமென்றும், கதவு தாழ்ப்பாளைப் போல் தடுப்பது வரிக மென்றும், இரண்டு புஜங்கள் தலை இவைகளினல் தடுப்பது பீஜ மென்றும் பெயர்.

அசாத்திய மூடகர்ப்பம்:—எந்த கர்ப்பிணிக்கு கழுத்து நிற்காம லும் தேகம் இல்லிட்டும், அறிவில்லாமலும், பக்கங்களில் கரம்புகள் நீலநிறமாகயிருந்தால், அந்த கருப்பமும் கர்ப்பிணியும் இறப்பார்கள்.

பரிகரிப்ப லக்ஷணம்:—பிரசவகாலத்தில் கர்ப்பம் கோபுரத் துவாரத்தின் கதவு தாழ்ப்பாளைபோல் பின்டம் குருக்காக திரும்பி யிருந்தால் அதை பரிகருப்பமென்று சொல்லுவார்கள். இது அசாத்தியம்.

சுகப்பிரசவ சிகிச்சை:—கர்ப்பிணி பிரசவிக்கிறதற்கு காலதாமம் ஆனல் யோனித்துவாரத்தில் கிரந்தி நகாத்தை தூபம் போட்டாலும், அல்லது பொடுதலை வேரைபாவது அல்லது ஆற்றுதமட்டி வேராவது நூலினல் கைகளுக்கும் கால்களுக்கும் ரக்ஷை பந்தனஞ் செய்தாலும் சுகமாக பிரசவமாகும்.

வேறு:—நிப்பிலி, வசம்பு, இலைகளை ஜலத்தில் அரைத்து அத்துடன் ஆமணக்கெண்ணை கலந்து கர்ப்பிணியின் நாபியில்தட வினல் எந்த உபத்திரவத்தினல் தாமதம் உண்டானலும் அவைகள் நீங்கி சுகப்பிரசவம் ஆகும்.

வேறு:—கொடிமாதளம்வேர், அதிமதரம், இலைகளை சூரணித்து நெய்யுடன் கலந்து சாப்பிட்டால் சுகமாக பிரசவமாகும்.

கர்போத்தாரணை:—கர்ப்பத்தில் சிசு மரணமடைந்திருந்தால், அப்பொழுது சன்னிசரன்னிபாதங்களை அறிந்து வைத்தியன் தனது அன் நங்களுக்கு நெய்யை தடவிக்கொண்டு கர்ப்பிணியின் யோனிதுவார மாக சன்னிரத்தை பிரவேசிக்கச்செய்து, (கர்ப்பத்திலிருக்கும் சிசு உயிருடனிருந்தால் சன்னிபாதங்களினல் சேதிக்கக்கூடாது அப்படி சேதித்தால் சிசுமரணமடைவதுடன் தாயாருக்கும் ஆபத்து உண் டாகும்.) வெகுஜாக்கிரதையாய் இருவருக்கும் ஆபத்து உண்டாகாத வண்ணமாய் சிசுவை வெளிப்படுத்த முயலவேண்டும். ஒருவேளை சிசுமரணமடைந்திருந்தால் யோசிக்காமல் சன்னிரத்தினல் சிசுவை சேதித்து எடுக்கவேண்டியது. அப்படி செய்யாமல் கொஞ்சநேரம் சும்மாயிருந்தால் மரணமடைந்த சிசு தாயாரையும் கொன்றுவிடும்.

மரணமடைந்த சிசுவின் எல்லைந்த அங்கங்கள் யோனித்துவா ரத்தை தடங்கல் செய்திருக்கின்றதோ அந்த அங்கத்தைசேதித்து வெளிக்கு எடுத்து கர்பிணியை காப்பாற்றவேண்டியது.

பிரசவித்தவளுக்கு மாய்கை விழாமல்போனல் அதனல் ஆகும் உபத்திரவங்கள்:—கற்பிணி பிரசவிக்குங் காலத்தில் வயிற்றிலிருந்து மாய்கை வெளியாகாமல்போனல், அது வயிற்றில் சூலை, அக்கினி மாந்தம், இலைகளை உண்டாக்கும்.

மாய்கை வெளியாக:—பரம்புத்தோல், பேய்ச்சுரை, கோரைக் கிழங்கு, வெள்ளை கடுகு இலைகளை சூரணித்து, கடுகு எண்ணெயில் கலந்து யோனிக்கு தூபம்போட்டால் மாய்கை வெளியாகும்.

வேறு:—பொடுதலைவேரை, சலத்தில் அரைத்து கற்கஞ்செய்து கர்பிணியின் பாதத்திற்கும் கைகளுக்கும் தடவினல் அந்த மாய்கை வெளியில்வரும்.

வேறு:—கை விரல்களில் நகங்களை எடுத்துவிட்டு சுத்தமாக கழுவித் தலைமயிரை தடவிக்கொண்டு பிரசவித்த மாதுவின் யோனி யில் மெள்ள நுழைப்பித்து அந்த மாய்கையை வெடுத்துவிட வேண் டியது.

யோனிகாயத்திற்கு சிகிச்சை:—கடுக்காய், லோத்திரப்பட்டை, இலைகளை, நீர்விட்டரைத்து யோனிக்கு லேபனம்செய்தால் பிரசவ காலத்தில் உண்டானகாயம் நீங்கும்.

யோனிசங்குசித சிகிச்சை:—முருக்கன்விலை, அந்திப்பழம் இலை களை அரைத்து கல்லெண்ணையில் கலந்து யோனிக்கு லேபனஞ்செய் தால் பிரசவித்த மாதுவின் யோனி சுருங்கும்.

மக்கல்ல நிதானம்:—மாது பிரசவித்தகூணமே யோனியை செவ்வையாக பிசைந்து அந்த யோனியில் வெளிகாற்று பிரவேசிக் காமலிருக்கும்படி துணியால் இறுக்கிகட்டி பாதுகாக்கவேண்டி யது. அப்படிச் செய்யாமற்போனல் யோனியில் வாயுவானது குபிதமாகி, ஒழுகும், ரத்தத்தை பிரோதித்து கர்ப்பினியின் ஹிரு தயம், தலை, அடிவயறு இவைகளில் மக்கல்லமென்ற சூலையை உண் டாக்கும்.

மக்கல்ல சிகிச்சை:—மக்கலவாயு உண்டானல் பலகூரத்தை சூரணித்து வெந்நீருடனவது நெய்யுடனவது பானஞ்செய்தால் அது நிவர்த்தியாகும்.

வேறு:—நிப்பிலி, மோடி, மிளகு, ஆனைநிப்பிலி, சுக்கு, சித் திரமூலம், செவ்வியம், காட்டுமிளகு, இலவங்கப்பட்டை, ஓமம், நிரமூலம், செவ்வியம், காட்டுமிளகு, இலவங்கப்பட்டை, ஓமம், கடுகு, சுட்ட பெருங்காயம், கண்டுபாரங்கி, சுக்கு, வெட்பாலைவிரை, சேகம், மலைவேப்பிலை, பெருங்குறும்பை, அதிவிடயம், கடுகு ரோகணி, வாய்விளங்கம் இலைகளை நியாழம்லவத்து உப்புகலந்து சாப்பிட்டால், கபரோகம், வாதரோகம், குன்மம், சூலை, சுரம், மக்கல்லசூலை, இலைகளை நிவர்த்திப்பதுடன் அக்கினி தீபனம், சுரணம் இலைகளை உண்டுபண்ணும்.

வேறு:—சுக்கு, நிப்பிலி, மிளகு, தால்சின்னி, இலவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, ஏலக்காய், கொத்தமல்லி இலைகளை சூரணித்து பழய வெல்லத்துடன் கலந்து சாப்பிட்டால் மக்கல்லசூலை நிவர்த்தி யாகும்.

வேறு:—சுட்ட பெருங்காயத்தை நெய்யுடன் கலந்து சாப்பிட் டால் மக்கல்லசூலை நிவர்த்தியாகும்.

கருப்ப உற்பத்தி விதி:—மாதவின் இடது பக்கத்தில் சென்ன மாஞல் அந்த சே பெண் என்றும், வலது பக்கத்தில் சனமாஞல் அது ஆண் என்றும், கருப்போற்பத்தி காலத்தில் சுக்கில சோணி தங்கள் சோணிதத்திலேக்கியம் உண்டாயின் பெண் சென்றும், சுக்கிலத்திலேக்கியமானுல் ஆண் சென்றும், சமபாகமாக பிரந் தால் நபுமசக சென்றும் அறியவேண்டியது.

கருப்பம் தரிக்க:—கர்ப்பமுண்டாகாத மாது, கொடிமாதளம் பழவிரை, ஆமணக்குவிரை, இவைகளே அரைத்து நெய்யில் கலந்து சாப்பிட்டால் கர்ப்பத்தை புண்டாவாள். கர்பிணி எள்ளுண்டை, பசும்பால், சர்க்கரை, தயிர், நெய், இவைகளே ஒரு பாண்டத்தில் ஒன்றுப் கலந்து கையினல் ஒன்றுக சேரும்படிசெய்து அத்துடன் நிப்பிலி சூரணமபோட்டு சாப்பிட்டால் புருஷப்பிரஜை யுண்டாகும். மாத ருதுஸ்நானம் செய்த நாளில் ஒருகொடி மாதளம்பழத்தின் விதைகள் முழுதும் சபூரணமாக பாலால் அரைத்துக் குடித்தால் ஆண் சென பிறக்கும். ருது ஸ்நானம் செய்தநாளில் அமுக்கிரங் கிழங்கை நெய்பழமவைத்து அத்துடன் பால்கலந்து சாப்பிட்டால் கரு தரிக்கும்.

கருப்ப நிவாரணம்:—ருது காலத்தில், நிப்பிலி, வாய்விளங்கம், வெங்காரம் இவைகளே சமமாக சூரணித்து பாலில் கலந்து சாப்பிட் டால் வெண்மைக்கும கருப்பம் தரிக்கமாட்டாள்.

வேறு:—ருது காலத்தில் சப்பாத்திப்பூவை நீச்ச சலத்தில் அரைத்து மூன்று நாள் குடித்தால் அல்லது ஒருபிடி பழயவெல்லம் சாப்பிட்டாலும் கருப்பம தரிக்காள்.

வேறு:—கருப்ப இச்சை இல்லாத மாது இத்துப்பு தண்டுகளே எண்ணெயில் தேய்த்து, யோனிமத்தியில் வைத்துக்கொண்டு புருஷ சம்போகம் செய்தால் கரு தரிக்காது.

வேறு:—ருதுஸ்நானம் செய்த முதல் மூன்று நாள் வரையிலும் நிறகீரைவேரை அரிசிகழுநீரில் அரைத்து குடித்து வந்தால் மலடி யாவாள்.

சூதிகா ரோகம்:—தேகநோய், காய்ச்சல், நடுக்கல், தாகம் தேகம் பலுவாயிருத்தல், விக்கம், சூலை, இவைகள் உண்டானுல் இது சூதிகாரோகமென்று அறியவேண்டியது.

பிரசவித்த ஸ்திரீகளுக்கு செய்யக்கூடிய உபசாரங்கள் வேற விதமாக செய்தல், விசனம், அசௌசபோசனம், இவைகளினுல் வாயுவானது பிரகோபித்து ரத்த ஒழுக்கை நடுத்து ஹிருதயம், நபி, அடிவயிறு இவைகளில் சூலையை உண்டாக்குவதுடன் அதிசாரம், விக்கம், சூலை, அருசி, வியர்வை, இவைகள் உண்டாகி அதனல்,

உடல் இளைத்தல், பலஹீனம், பரிமந்தம் முதலியவைகளே உண்டாக் கும். இதுதான் சூதிகாரோகம் என்று சொல்லப்படும்.

பரிகாரம்:—மேல்கூறிய சூதிகாரோகத்தை சமனம்செய்ய, சாமானிய வாதாரச சிகிச்சைகளேச் செய்யவேண்டியது.

தசமூலத்தின் கியாழம், கொஞ்சம் சூடாயிருக்கும்போதே பசு நெய்யில் கலந்து சாப்பிட்டால் சூதிகாரோகம் நிவர்த்தியாகும்.

சூதிகா ரோகத்திற்கு நாகராதி லேகியம்:—பசும் நெய் 80-துலாம், பசும்பால் துலாம்-256, கற்கண்டு துலாம்-200, சுக்குச் சூரணம் 32-துலாம், தண்ணீர்விட்டான்கிழங்கு, சிரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி, ஓமம், பெரியசோம்பு, செவ்வியம், சித்திரமூலம், கோரைக்கிழங்கு இவைகள் வகைக்கு 4-துலாம் இவைகளே முறைப்படி லேகிய பக் குவமாக இளறி நெல்லிக்காய் அளவு தினம் இருவேளையாக பிரசவித்த ஸ்திரீகட்கு கொடுத்துவர சூதிகாவாயு, மந்தம் முதலியன நீங்கி, நல்ல பசி தினமும், தேகபுஷ்டியும் உண்டாகும்.

யோனி ரோகம்

சரீரத்திற்கு பொருந்தாத உணவு, மேடுபள்ள ஸ்தானத்தில் படுத்தல், வெகுபுருஷ சஞ்சாரம், மாதாந்தர் ருதுதோஷம், ஆண்குறி தோஷம், அனலாதி வெப்பம், தகாதாடத்தை, தேவதா பிரயோகம் ஆகிய இச்செய்கைகளே உடைய ஸ்திரீகளுக்கு இந்த ரோகம் பிறக் கும். இதனல் அவ்விடத்தில் கிருமிகள் நெளிவதுப்போலிருத்தல், சருமஞ் சுறசுறத்தல், ரணமித நிறத்துடன் நுரையுடன் இரத்தம் வடிதல், தாகம், சுரம், நினவு, வேதனை, சகிக்கக்கூடாத உபத்திர வம், வயிற்றில் ஏழுமாதத்து கருப்பமிருந்தாலும் விழுந்துவிடுதல், சிவந்தநிறத்துடன் அல்குல் சுட்டித்தல், எரிச்சல், நோயோடு கனப்பு, பேதி, அரோசகம், கவுட்டியிலும் பிட்டத்திலும் குத்தல், இரண்டு ஸ்தனமும் ஒட்டி உலர்தல், அல்குல் விக்கம் முதலிய குணங்கள் உண்டாகும். இது இருபத்தொன்று வகைப்படும். அவையாவன:—

1. வாதயோனி:—இது வாயுவானது அல்குலில் நிறையுங்காலத் தில் பிறக்கும். இதனல் அவ்விடத்தில் கிருமிநெளிவதுபோல் இருத் தல், அச்சருமஞ் சொறசொறத்தல், அமமார்க்கத்தில் கறத்தும் சிவந்தும் நுரைத்தும் சுடுகையுடன் கொஞ்சம் ரத்தம் வடிதல், இரண்டு கவுட்டிலும் நோதல், அடிவயிறு கனத்தல் என்னுங் குணங் களே உண்டாக்கும்.

2. பித்தயோனி:—இது பித்த தோஷமானது அல்குலில் பரவுங் காலத்தில் பிறக்கும். இதனல் அவ்வழியால் மஞ்சள் கறுப்பு நிறத்

தடன் சுடுகையாய்ப் பிணரற்றுக் கழன்ற உதிரம் வடிதல், தாகம், சுரம், சரீரத்தில் அக்கினிச்சுவாலை வீசுதல், துர்க்கந்தம் பிறக்குதல் என்னும் குணங்களுண்டாகும்.

3. சிலேஷ்ம யோனி:—இது சிலேஷ்மமானது அல்குலில் தங்கும் காலத்தில் பிறர்து அவ்விடத்தில் சேனம், நினவு, வேதனையன்றி வெளுத்த ரத்தம் ஒழுகுதல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

4. உதாவர்த்த யோனி:—அல்குல் ஸ்தானத்தில் மிகுந்த உபத்திரவத்தையும் அமமார்க்கத்தில் நுரைத்த ரத்த ஒழுக்கையும் உண்டாக்கும்.

5. உப்புலுத யோனி:—அல்குல் ஸ்தானத்தை வெண்மையாக்கி அச்சருமத்தை ஸ்யப்பண்ணும். இதனல் அவ்விடம் சுட்டித்துப் பஞ்சடித்த களம்போல் நிறர்திருக்கும்.

6. ரத்த யோனி:—இது நிதம்பஸ்தானத்தில் சஞ்சக்கூடாத உபத்திரவத்தையும், மிகுந்த ரத்த ஒழுக்கையும் உண்டாக்கும்.

7. சாதக்கினி யோனி:—இது அல்குல்வாயில் வெடிபெழும்பிய பிரங்கிவாயின் சுடுகையைப்போல் சுடுகையை உண்டாக்குவதுமன்றி அவ்விடத்து உதிரத்தையும் கொதிப்பிக்கும். இதனல் வயிற்றில் ஏழு மாதத்திற்கு உட்பட்ட சிசுவாயிருந்தாலும் மரித்து விழும்.

8. அந்தர்முகி யோனி:—எந்த ஸ்திரீயாவது வயிறுநிரம்பப் புசித்து உடனே மேடுபள்ள ஸ்தானத்தில் படுத்து, கடினசையோகத்திற்கு இடம் கொடுக்குங்காலத்தில் பிறக்கும். அம்மாதருக்கு வாயு அதிகரித்து அந்தர்முகமாக எழும்பி யோனிஸ்தானத்தில் உபத்திரவத்தையும், அதை விசிக்கக்கூடாமையும் பூ ஒதுங்குவதால் அங்குள்ள எலும்பு மாமிசாதிகளில் வேதனையையும் அடிவயிற்றில் சூலையையும் உண்டாக்கும்.

9. சுட்கயோனி:—இது மாதர்தாருதுகாலத்தில் புணர்ச்சியை விரும்பிய மாதர்கட்குப் பிறக்கும். எப்படியெனில் சுபாவமாக விழுகின்ற ரத்தமானது சையோகத்தினல் உள்ளுக்குள்ளே தடைபட்டு மலமூத்திரச்சிக்கலே தான்தோறும் பிறப்பித்துக்கொண்டேயிருந்து அதன்பின் கடிதடத்தில் மெலிவையும் உபத்திரவத்தையும் உண்டாகும்படிக்குச் செய்யும்.

10. வாமினி யோனி:—இது வாயுவைக்கொண்டு பிரசவித்த ஆறாளிலாவது ஏழாளிலாவது கருப்பாசயத்தில் இருக்கின்ற கோளமுக்பத்தை ஒழுகச்செய்யும். இதனல் உபத்திரவமிருக்கும்.

11. லோகிதசுட்கு யோனி:—இது வாதபித்தகபங்களினல் யோனிக்குள் இருக்கும் உதிரமானது உலர்ப்படுங்காலத்தில் பிறக்கும்.

இதனல் அந்த இடத்தில் சிவர்தலிறமும் சுட்டமும் எரிச்சலும் உண்டாகும்.

12. பரிப்புலுத யோனி:—இது சையோகாலத்தில் தும்மலும், எப்பத்தையும் அடக்குவதால் பிறக்கும். இதனல் யோனிஸ்தானம் உப்பல், அதைத் தொடக்கூடாதவேதனை, கறுப்பும் மஞ்சளுங்கலர்தலிறமான ரத்தம் ஒழுகுதல், சோபோடு கனப்பு, ஒருவேளை பேதி, அரோசகம், கவுட்டியிலும் புட்டத்திலும் குத்தல், சுரம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

13. மகாயோனி:—வாயுவானது யோனிஸ்தானத்திலும், வயிற்றிலும், கருப்பஸ்தானத்திலும், சஞ்சரித்துப் பூரிக்கும்போது பிறக்கும். இதனல் அல்குலானது சாளுக்குரான் தர்மாசிசத்தினல் மென்மேலும் வளர்ந்து விசாலமாகப் பருப்பதமன்றி சிலவேளை மிகுந்த சோலையுர்தரும்.

14. ஷண்டயோனி:—இது கருப்பகாலப் புணர்ச்சியால் பிறக்கும். எப்படியெனில் புருஷனுடைய விர்துவின் சுடுகையினல் அல்குல் ஸ்தானம் வெந்த மாமிசம்போலாகுவது மன்றி சிலநாட் சென்று இரண்டு ஸ்தனமும் ஒட்டி உலர்ந்துவிடும். பின்பு இந்த ஸ்திரீயானவள் புருஷனைச் சேர்ப்பணத்திலும் விரும்பாள்.

15. அதிசாணயோனி:—இது பருத்த ஆண்குறியுடைய புருஷ சையோக மிகுதியினல் பிறக்கும். இதனல் அல்குலில் விக்கமும் கன உபத்திரவமும் உண்டாகும்.

16, சுரோமுகயோனி:—இது வாதாதிக்கவஸ்துக்களை மிதமின்றி பித்தியமும் புசித்து உடனுடனே புணருவதால், வாயு கருப்பாசய ஸ்தானத்தில் நிலைக்கப்படுங்காலத்தில் பிறக்கும். எப்படியெனில் அவ்வாயுவினல் மாமிசம்தூளித்து அல்குலின் துவாரத்தை ரோமமுழையும் துவாரமபோலாக்கி சையோகத்திற்கு இடம் இல்லாமல் செய்துவிடும். ஒருவேளை வலுவில் பத்தனித்தால் அதிக உபாதியும் ரத்தப்பிரவாகமும் உண்டாகும்.

17. பராக்சாணயோனி:—இது ருதுவாகா கன்னிபர்கள் புருஷனைப்புணருவதால் கருப்பாசய ஸ்தானத்தில் சேருகின்ற இளம் உதிரமானது கெடுதியை யடையுங்காலத்தில் பிறக்கும். அப்போது அல்குல்ஸ்தானம் அவ்வுதிரத்தால் கலங்கி நிறமாறுவதுமன்றி கடுமுதலில் குத்தலும், கவுட்டி தொடை என்னும் இடங்களில் சோயும் உண்டாக்கும். இதனல் பலரோக சம்பவம் நீடித்து வருத்தும்.

18. சண்டுலயோனி:—இது மிகுந்த சையோகத்தினல் அல்குல் ஸ்தானத்திலிருக்கின்ற உதிரம் கெடுதியை யடைந்து அதில் கிருமிகள் சனிக்கும்போது பிறக்கும். இதனல் அங்கு அதிக நமைச்சலும்

அந்த ஸமைச்சலினல் எப்போதும் ஸரியோகத்தில் மிகுந்த விருப்பமும் அதனல் இதயம் உண்டாகும்.

19. கர்ணிகாயோனி:—இது அதல ஸரியோகத்தால் வாயு அதிகரித்து ரத்தத்தைக் கெடுக்கும்போது பிறக்கும். இதனல் அல்குலின் துவாரத்தில் அவ்வாயுவினல் நிரண்ட உதிரமானது தர்மமிசிறத்தை யொத்துத் தாமரைக்காலைப்போலும், விழுது விட்டதுபோலும் தொங்கும். இதனைச் சில் தஸ ஸண்டம் என்பர்.

20. விப்புலுதயோனி:—இது, அதிமோகங்கொண்டு மிகுந்த போதெல்லாம் பலவகைப் பந்தத்துடன் புருஷனைப் புணர்வதன்றி அப்புருஷனை இடைவிடாது தன்பார்வைக்குள் வைத்திருக்கும் காரணத்தால் பிறக்கும். இதனல் அல்குல்ஸ்தான முற்றும் கலங்குவதும் அதில் மாருத மதனம் வடிதலும் நேரம் காளுக்குகான் தர்ப்பலப் படுவதுமாக இருக்கும்.

21. சந்நிபாதயோனி:—இது அல்குல் ஸ்தானத்திலும், கருப்பஸ்தானத்திலும் திரிதோஷத்தையும் சஞ்சரிக்கச்செய்து, அவ்விடங்களில் அநேக ரோகங்களையும் மகாவிணைகளையும் பிறப்பிக்கும். இந்த ரோகத்தை அநுபவிக்கின்ற மாதர்கட்கு ரத்தஸ்ராவம், மூலம், ரத்த குன்மம், அதிஸலம் என்னும் இவ்வாறு ரோகங்களும் ஒருமித்தாவது தனித்தாவது உண்டாகாநிற்கில் நிடகாத்திரமும் கல்ல கருப்பமும் உண்டாகும, இன்றேல் உடல் வலியும் கருப்பமும் கெடும்.

யோனி ரோகங்கள் (வேறு மதாந்திரம்):—

யோனி ரோகமானது வாதம், பித்தம், சிலேஷ்மம், சன்னிபாதம் என நான்கு வகைப்பட்டு, ஒவ்வொன்றிலும் ஐந்து பிரிவுகளைப் பெற்றிருக்கும். அவையாவன:—

உதாவர்த்தம், வக்கிலை, விப்புலுதை, பரிப்புலுதை, வாதினி, என இவ்வைந்தும் வாததோஷத்தாற் பிறந்த யோனிரோகங்கள்.

லோஹிதக்ஷயம், பிரஸ்ரம்சினி, யாமினி, புத்திரக்கினி, பித்தினி என இவ்வைந்தும் பித்ததோஷத்தாற் பிறந்த யோனிரோகங்கள்.

அல்பானந்தம் கர்ணினி, அதிசாரணை, அதியானந்தம் சிலேஷ்மலம் என இவ்வைந்து சிலேத்துமதோஷத்தாற் பிறந்த யோனி ரோகங்கள்.

ஷண்டினி, அண்டினி, மஹதி, சூசிவக்த்திரை, திரிதோஷஜை என இவ்வைந்தும் சன்னிபாதமென்ற திரிதோஷக் கூட்டாற் பிறந்த யோனிரோகங்கள். இவ்விதமாக மாதர்கட்கு 20-வகைப்பட்ட யோனிநோய்கள் உண்டாகுமென அறியக்கிடக்கின்றது.

வாதயோனிரோகங்கள்:—வாததோஷத்தினல் பிறந்த ஐந்துவித யோனி ரோகங்களின் லக்ஷணங்களாவன

1. உதாவர்த்த யோனி—இதில் சோணிதமானது நுரையுடனும், கஷ்டமாயும், வெளிப்படும்.

2. வக்கிலை யோனி—இதில் சோணிதமானது மிகவும் கெடுதியாய் வெளிப்படும்.

3. விப்புலுதை யோனி—இதில் சோணிதமானது சதா வேதனையுடையதாய் வெளியாகும்.

4. பரிப்புலுதை யோனி—இதில் சோணிதமானது, அதிகரித்த புணர்ச்சியினல் மிகவும் கருக்கென்ற குத்தலுடையதாய் வெளியாகும்.

5. வாதின யோனி—இதில் சோணிதமானது கடோரமாயும், இருக்கியும், குத்தல், பாரை இவைகள் உடையதாயும் வெளியாகும்.

மேற்கூறிய ஐந்த யோனி ரோகங்களிலும் வாத தோஷத்தின் குறி குணங்களும் உண்டாகும்.

பித்தயோனி ரோகங்கள்:—

1. லோஹிதக்ஷயம்—இதில் பிதிமாதமும் வெளியாகும் சோணிதமானது குத்தலுடன் குறைவாகவும் வெளிப்படும்.

2. யாமினி-இதில் பிதிமாதம் வெளியாகும் சோணிதம் வாதத்துடன் கலந்து கருப்ப உற்பத்திக்கு காரணமாகிய சுக்கிலத்தை வெளியாக்கும்.

3. பிரஸ்ரம்சினி-இதில் மாதமிவிடையில் விக்கமுண்டாகி மாமிசம் வெளியில் வருவதுபோல காணப்படும்.

4. புத்திரக்கினி-இதில் பிதிமாதம் உண்டாகும் ரத்தம் குறைந்து வருவதனல் கருப்பம் எற்படுவதும் அற்பமாம்.

5. பித்தினி-இதில் மிகவும் எரிச்சல், யோனியில் வீணம், காய்ச்சல் இவைகளுடன் கலந்து மாதமாதம் பிரவிடையாகும்.

மேற்கூறிய ஐந்துவகை யோனி ரோகங்களிலும் பித்ததோஷத்தின் குறி அதிகமாய் காணும்.

சிலேஷ்ம யோனி ரோகங்கள்:—

1. அல்பானந்தம்-இதில் புருஷ சம்போகத்தினல் பிறக்கும் ஆனந்தம் மாதருக்கு உண்டாகாது.

2. கர்ணினி-இதில் சிலேஷ்மம் பித்தம், இவைகளின் சேர்க்கையினல் யோனிகமலத்தில் தாமரை வித்துபோன்ற நிரட்சி எற்படும்.

3. அதிசரணம்-இதில் புருஷ புணர்ச்சியில்லாமலே யோனியில் நிரவக் கசிவு எற்படும்.

4. அதிபரனத்தம்-இதில் அடிக்கடி மாதருக்கு புருஷசம்போகத் தில் விருப்பம் ஏற்படும்.

மேற்கூறிய இரண்டிலும் மாதருக்கு சந்தான விருத்தி கிடை யாது.

5. சிலேஷ்மலம்-இதில் யோனியில் களிப்போதும், பிணிப் போதும் ஒட்டிக்கொள்ளுதல், கமை, அதிசினம், இவைகள் உண் டாகும்.

மேற்கூறிய ஐந்துவகை யோனி ரோகத்திலும் சிலேஷ்ம பி கோப குறிகள் அதிகமாய்த் தென்படும்.

சன்னிபாத யோனி ரோகங்கள்:—

1. சண்டினி-இதில் காமஜலம், இச்சாமல் போவதன்றி புருஷ சம்போக காலத்தில் காம வெம்றசத்த மூடையதா யிருக்கும்.

2. அண்டினி-இதில் சம்போககாலத்தில் யோனியானது அண் டத்தைப்போல் அதவது முட்டையைப்போல் தென்படும்.

3. மகதி-இதில் புணர்ச்சி காலத்தில் யோனித்துவாரம் அதி விரிவாக இருக்கும்.

4. சூசிவக்த்ரம்-இதில் யோனித்துவாரம் குறுகியிருக்கும்.

5. நிரிதோஷஜ-இதில் சர்வயோனி தோஷங்களும் ஏற்பட் டிருக்கும்.

மேற்கூறிய ஐந்து யோனி தோஷங்களிலும் நிரிதோஷங்களின் குறிகள் அதிகமாயிருக்கும்.

இவ்வைந்தும் அசாத்திய ரோகங்கள்.

யோனிரோக சிகிச்சை:—வசம்பு கருஞ்சீரகம், சீரகம், நிப்பிலி, ஆடாதோடை, இந்துப்பு, ஓமம், பலாசுகாரம், சித்திரமூலம், இவை களை செய்யில் வருத்து பிறகு இவைகளை சூரணித்து சர்க்கரை கலந்து கள்ளு அல்லது சாராயத்துடன் சாப்பிட்டால், யோனி ரோகம், பரிசரோகம், இருகயரோகம், சுண்டரோகம், மூல வியாதி இவைகள் நீங்கும்.

சித்தாத்தை, அமுக்கிருவிழுக்கு, ஆடாதோடை, இவைகளை பாலில்போட்டு காய்ச்சி சாப்பிட்டால், யோனிசூலைகள் நீங்கும்.

சிந்தூரம், கண்டங்கத்திரி, கோஷ்டம், இந்துப்பு, தேவ தாரு, இவைகளை யெழுமிச்சைவத்த அதில் போதுமான கல்லெண் ணெய் வார்த்து லவணக்குவமாகக் காய்ச்சி, அந்த தயிலத்தில் பருத்தியை நனைத்து எப்பொழுதும் யோனியில் வைத்துக்கொண் டிருந்தால் விப்புலுதை என்கிற யோனிரோகம் நிவர்த்தியாகும்.

வாததோஷத்தினால் யோனி கடினமாயும், பிருவாயும், அற்ப ஸ்பரிசமுள்ளதாயும் இருந்தால் எள்ளெண்ணெயில் பருத்தியை

நனைத்து யோனியில் செலுத்தி வைத்தல், வேது பிடித்தல் முதலிய வைகளையும் பித்த பிரகோபமான யோனியில் நெய்யில் பருத்தியை நனைத்துப்போட்டு சந்தன ஜலத்தை மேல் தெளித்தலும், எரிச்சல், பாதை, விரணங்கள் இவைகளை சாந்தியாக்கும்.

சாராயத்தால் பருத்தியை நனைத்து யோனியின் பக்கங்களில் தரித்துக் கொண்டிருந்தால் சிலேஷ்மயோனி ரோகங்கள், கமைச் சல், பசபசப்பு, ஒழுக்கல், துர்பலம் இவைகள் நீங்கும்.

யோனி துர்க்கந்தத்திற்கு சிகிச்சை:—சுகந்த திரவியங்களின் கல்கமாவது அல்லது சூரணமாவது, யோனியில் தாரணை செய்தால் யோனி துர்க்கந்தம், ரத்த ஒழுக்கல், பசபசப்பு முதலியவைகள் நீங்கும்.

யோனி தினவுக்கு சிகிச்சை:—சித்தல்கொடி, கடுக்காய், தான் றிக்காய், செல்லி வற்றல் இவைகளை சமனெடையாக கியாழம் றிக்காய், செல்லி வற்றல் இவைகளை சமனெடையாக கியாழம் வைத்து அந்த கியாழத்தை யோனிமீது தாரைபோல் விட்டு கழுவி னால் கமைச்சல் நீங்கும்.

சந்நிபாத யோனி ரோக சிகிச்சை:—நச மூலங்கள், வில்வ பழம், காட்டரத்திப்பூ இவைகளின் கியாழத்தில் பருத்தியை நனைத்து யோனியில்வைத்து வருவதால் சந்நிபாதத்தினால் உண்டான யோனிரோகம் நிவர்த்தியாகும்.

சுதக சிக்கலுக்கு சிகிச்சை:—மாதர்களுக்கு மாதாமாதம் பி விடையாகும் இரத்தமானது சரிவர வெளிவராமல் போனால் மச்ச மாமிசத்தை சாப்பிட்டால் வெளியாகும்.

வேறு:—கரும் எள்ளு கலந்த கியாழம்வைத்து ஆறிய பிறகு வெல்லத்தைப் போட்டு மாதர்கள் குடித்தால் சுதகம் வெளியாகும்.

வேறு:—எள்ளு, கருவிளைப்பட்டை, பெரியசோம்பு இவைகளை கியாழம்வைத்து ஆறியபிறகு வெல்லத்தை கலந்து மூன்றாள் சாப்பிட்டால் சோணிதம் வெளியாகும்.

யோனி கந்த நிதானம்:—பகல் நித்திரை, அதிக கோபம், மிக வும் அலுப்பு, அதிக புணர்ச்சி, அசுசி, ஸ்கந்தங்கள் இவைகளி னால் வாதாதிதோஷங்கள் குபிதமாகி பூயம், இரத்தம், சமனிறமாகி எலுமிச்சம்பழ உருவத்துடன் யோனியில் ஒருமுகை ஜனிக்கும். இதற்கு யோனிகந்த மென்றும் பெயர்.

இது வாத பித்த கப சன்னிபாதமென மூன்று வகைப்படும்.

வாத யோனி கந்த லக்ஷணம்:—இது பெரியதாயும், சாணித நிறங்களுடனும், விகசித்ததுபோல் இருந்தால் அதனை வாதயோனி கந்தமென்று சொல்லுவார்கள்.

வாத யோனி கந்த சிகிச்சை:—காவிக்கல், மாம்பருப்பு, மஞ் சள், கருமாகல், காயபலம் இவைகளைச் சூரணித்து தேன்விட்டி

அரைத்து யோனியில் வைத்து அதின்மீது நிரிபலி யெழுத்துடன் தேன் கலந்து அதன்மீது ஒத்தடம் கொடுத்தால் வாதஜயோனி கந்தம் நீங்கும்.

வேறு:—எலி மாமிசத்தை சிறிய துண்டுகளாக்கி போதுமளவு எள்ளெண்ணெயை ஒரு சட்டியில் வார்த்து அடுப்பேற்றி இந்த மாமிச துண்டுகளை எண்ணெயில் போட்டு அது கரையும்படிக்கு காய்ச்சி ஆறியபிறகு தைலத்தில் ஒரு பஞ்சை நனைத்து கந்தத்தின்மீது போட்டால் வாதயோனிகந்தம் நீங்கும்.

பித்த யோனி கந்த நிதானம்:—தாபம், சிகப்புநிறம், காய்ச்சல், இவைகளுடன் கலந்திருந்தால் அதுபித்தத்தினால் உண்டான யோனி கந்தமென்று அறியவேண்டியது.

சுய யோனி கந்த நிதானம்:—கருப்புபுஷ்ப நிறத்துடன் நமைச்சலுண்டாகியிருந்தால், சிலேஷ்மத்தினால் புண்டாகும் யோனிகந்தமென்று அறியவேண்டியது.

சந்நிபாதாத் மகயோனி கந்த நிதானம்:—மேல்கூறிய வாதாதி முதலிய யோனிகந்த லக்ஷணங்கள் யாவையும் ஒருங்கே உடையதாயிருந்தால் சந்நிபாததோஷத்தினால் உண்டான யோனிகந்தமென்று அறியவேண்டியது.

யோனி கந்தத்திற்கு குடுச்சாதி வர்த்தி:—சிந்தில்கொடி, கடுக்காய், தாளறிக்காய், செல்லிவற்றல், சோவாளவேர், இவைகளின் யெழுத்தையிட்டு நிப்பிலி, மிளகு, உலுந்து, தண்ணீர்விட்டான் கிழங்கு, கோஷ்டம், இந்துப்பு, இவைகளை சமனடையாக எடுத்துக் கொண்டு அறைத்து துணிக்குதடவி ஆள்காட்டி விரல்பிரமாணம் வர்த்திசெய்து யோனியில், தாரணை செய்துக்கொண்டால் யோனி கந்தம் நிவர்த்தியாகும்.

வேறு:—மஞ்சாட்டி சூர்ணியம், புளியம்பழம், இவைகளை அரைத்த வேகவைத்த கந்தத்தின்மீது தடவினால் யோனிகந்தம் நீங்கும்.

யோனிசூலைக்கு சிகிச்சை:—வேப்பன்இலை சாற்றினால் வேப்பன்கொட்டை, ஆமணக்குவிரை இவைகளை அரைத்து மாத்திரைகள் செய்து யோனியில் வைத்துக்கொண்டால் யோனிசூலைகள் நீங்கும்.

ஆற்று தும்மட்டிவேரை, ஆட்டுசெய்யில் பக்குவமாக சமைத்து யோனிமீது லேபனஞ்செய்தால் யோனிசூலைகள் நீங்கும்.

யோனி திடமாவதற்கு லேபம்:—முருக்கன்காய், அத்திக்காய், இவைகளை அரைத்து எள்ளெண்ணெயுடன் கலந்து அத்துடன் கொஞ்சமாக தேன்கலந்து சோளமான யோனிக்கு லேபனஞ் செய்தால் அது கடினமாகும்.

சீர்ர துர்க்கந்த ஹரலேபம்:—வெற்றிலை சாற்றில், கோஷ்டம், கடுக்காய் இவைகளை சூரணித்து, சாற்றுடன்கலந்து சரீரத்திற்கு தடவினால் தேகதுர்கந்தம் நீங்கும்.

வேறு:—வறுத்த கொள்ளுமாவு, கோஷ்டம், ஜடமாஞ்சி, வெள்ளை சந்தனத்தூள், வறுத்த கடலைமாவு இவைகள் யாவையும் சூரணித்து சரீரத்திற்கு தடவினால் வியர்வையினால் உண்டான துர்நாற்றம் நீங்கும்.

கருப்பிணிகளுக்கு ஏற்படும் பலவகைப் பிணிகளுக்கு சிகிச்சை முறைகள்

சூர சிகிச்சை:—இலுப்பைபட்டை, சந்தனம், வெட்டிவேர், நன்னரி, அதிமதுரம், தாமரைதண்டு இவைகளைக் யெழும்வைத்து சர்க்கரையும் தேனும் கலந்து குடித்தால் கர்ப்பிணிகளுக்குடைய சூரம் நீங்கும்.

வேறு:—நன்னரி, சிந்தில், வெட்டிவேர், கோரைக்கிழங்கு, சுக்கு இவைகளை யெழும்வைத்து குடித்தால் கர்ப்பிணிகாய்ச்சல் நீங்கும்.

வேறு:—நிராலை, தாமரைதண்டு, வெட்டிவேர், பூசினிவேர், சந்தனம், அதிமதுரம், நன்னரி, செல்லிவற்றல் இவைகளை யெழும்வைத்து பால்சேர்த்து குடித்தால் கர்ப்பிணிகளுக்குண்டாகும் பித்தசுரம் நீங்கும்.

சர்த்தியதிசார சிகிச்சை:—சுக்கு, வில்வபழச் சதை இவைகளை யெழும்வைத்து அதில் நெற்பொறிமாவைக் கலந்து சாப்பிட்டால் கர்ப்பிணிகளுக்குண்டாகும் சர்த்தி, அதிசாரம் நீங்கும்.

வாந்திக்கு சிகிச்சை:—கொத்தமல்லியை அரிசிகழுநீரில் அரைத்துக் கற்கம்செய்து அத்துடன் சர்க்கரை கலந்து கர்ப்பிணிகளுக்குக் கொடுத்துவர வாந்திரோகம் நிவர்த்தியாகும்.

சுவாசகாச சிகிச்சை:—வில்வப்பழத்தின் கண்டச்சதை, நெற்பொறி தண்ணீரில்போட்டு பிசைந்து சாப்பிட்டால் கர்ப்பிணிகளுக்கு உண்டாகும் சுவாசகாசங்கள் நிவர்த்தியாகும்.

வேறு:—கண்டுபாரங்கி, சுக்கு, நிப்பிலி இவைகளை சூரணித்து வெல்லத்தை கலந்து பிசைந்து சாப்பிட்டாலும் கர்ப்பிணிகளுக்குண்டாகும் காசசுவாசங்கள் நிவர்த்தியாகும்.

பரி நீபனத்திற்கு சிகிச்சை:—ஓமம், சுக்கு, நிப்பிலி, ரேகம் இவைகள் சமனடை சூரணித்து தேன், வெல்லம் கலந்து சாப்பிட்டால் அக்னிநீபனம் உண்டாகும்.

கர்ப்பசூலை சிகிச்சை:—குசதர்ப்பை, காசதர்ப்பை, ஆமணக்குவேர், பெரியநொச்சி இவைகளின் வேர்களை பாலில்போட்டுக்

காய்ச்சி அதில் சர்க்கரை கலந்து சாப்பிட்டால் கர்ப்பிணிகளுக்கு வரும் வாந்தி நீங்கும்.

கர்ப்பவேதனை சிகிச்சை:—பெரிய நெருஞ்சில், அதிமதுரம், நிராஞ்சி இவைகளை பாலிலரைத்து சர்க்கரை தேன் கலந்து சாப்பிட்டால் கர்ப்பவேதனை நீங்கும்.

அதிகவாயு சிகிச்சை:—வசம்பு, வெள்ளைப்பூண்டு இவைகளை பாலில்போட்டு காய்ச்சி அதில் சுட்ட பெருங்காயம், சவ்வர்ச்சலவணம் இவைகளை சூரணித்துக் கலந்து சாப்பிட்டால் கர்ப்பிணிகளுக்குண்டாகும் அதிகவாதம் நீங்கும்.

மூத்திராவரோத சிகிச்சை:—நிரணபஞ்சமூலத்தை அரைத்து கல்கம்செய்து பாலில்போட்டு காய்ச்சி கர்ப்பிணி பானஞ்செய்தால் இரத்தபித்தம், மூத்திரபர்தம், மூத்திராவரோதனம் முதலியன நீங்கி சுகமுண்டாகும். நிரணபஞ்சமூலமென்பது காணல்வேர், தர்ப்பை வேர், கரும்புவேர், நெல்பயிர்வேர், வெள்ளை அருகம்வேர் முதலிய வைகளாம்.

அதிசார சிகிச்சை:— நெல்லிக்கிழங்கு, நெல்காக்கிழங்கு, தாமரைதண்டு, கரும் அல்லி, தண்ணீர்விட்டான்கிழங்கு, அதிமதுரம் இவைகளை யொழுங்குவைத்து அதில் பால், சர்க்கரை கலந்து சாப்பிட்டால் சூலை, அதிசாரம் நீங்கும். பத்தியம் பால்சாதம்.

சூலைக்கு சிகிச்சை:—கரும் அல்லிப்பூ, வெட்டிவேர், நெல்காக்கிழங்கு, நெல்லிக்கிழங்கு இவைகளை பச்சை ஜலத்தில் அரைத்து பாலில் கலந்து சாப்பிட்டால் மாதர்களுக்கு கர்ப்பம் நிலைத்து கர்ப்ப சூலை நிவர்த்திக்கும்.

முதல் மாத கர்ப்ப சலன சிகிச்சை:—மாதர்களுக்கு கருப்ப காலத்தில் கர்ப்பசலனம் உண்டானால் நிராஞ்சி, அதிமதுரம், சந்தனம், ரக்தசந்தனம் இவைகளை அரைத்து பசும்பாலில் கலந்து குடித்தால் கர்ப்பம் நிலைத்திருக்கும்.

பெரும்பாடு

அதிக உஷ்ண வீரியப் பொருள்கள் அதிதின்டி, அதிரணம் கருப்ப அழற்சி, அதிசையோகம், மலை முதலியவை ஏறுதல், அதிநடை, அதிதிக்கம், உபவாசம் பிருக்குதல், தேகம் மெலிதல், அதிபாரம் பெடுத்தல், நடி முதலியவைகளால் அடிப்படல், பகல் நித்திரை என்பவைகளினால் இந்த பிரதரோகம் என்னும் பெரும்பாடு நோய் ஏற்படும்.

இது வாதபெரும்பாடு பித்தபெரும்பாடு சிலேஷ்ம பெரும்பாடு சன்னிபாத பெரும்பாடு என நான்கு வகைப்படும்.

பெரும்பாட்டின் இலக்கணம்:—ஸ்திரீகட்கு மாதந்த ருதுகாலத்தில் வெளியாகும் உதிரமானது இயற்கைக்கு மாறுக அதிக மாகவும், நிறம் மாறியும் காணுதல், தீடித்த இருத்தல், வயிற்றில் அற்பவலி, தர்பலம் முதலிய குணங்களைப் பெற்றிருக்கும். மேலும் இந்நோய் அதிகரிக்கின்; தர்பலம், சங்கடம், மூர்ச்சை, தாகம், தாபம், மந்தம், பிரலாபம், தேகம் வெளிறல், நமைச்சல், வாந்தி என்னும் இக்குணங்கள் உண்டாவதுடன் சில வாதரோகங்களும் சனிக்கும்.

1. வாதப்பெரும்பாடு:—இதில் வெளியாகும் உதிரமானது அற்பமாயும் சிவப்பாயும் இருத்தல், நுரையுண்டாகுதல், வாதரோக உபத்திரவும், புலால்கழுவிய சலத்தைப்போல் கொஞ்சம் கொஞ்சமாக வெளியாகுதல் என்னும் குணங்கள் உண்டாகும்.

பரிகாரம்:—இதற்கு சவ்வர்ச்சலவணம், சீரகம், அதிமதுரம் கரும்அல்லிப்பூ, இவைகளை தயிர்விட்டு அரைத்து கற்கமாகச் செய்து தேன்விட்டுக் கொடுக்கவும்.

சுக்கு, அதிமதுரம், இவைகளை சமனடையாகச் சூரணித்து அதில் கல்லெண்ணை, சர்க்கரை, இவைகளை சமனடையாகக் கலந்து பாலையும் ஒன்றுகும்படிக் கலந்து கொடுத்து வரலாம்.

ஏலக்காய், தனியா நிராஞ்சி, வெட்டிவேர், கடுகுரோகணி, சந்தனம், கருப்புப்பு, தண்ணீர்விட்டான்கிழங்கு, லோத்திரப்பட்டை, இவைகளைச் சமனடையாக அரைத்து தயிர் விட்டு கலக்கிக் கொடுக்கலாம்.

2. பித்தப் பெரும்பாடு:—இதில் மஞ்சள், கருப்பு, சிவப்பு நிறங்களாகவும் அதி உஷ்ணமாகவும் பித்தவேதனையுடன் அதிவேகமாக இரத்தம் வெளியாகுதல், என்னும் குணங்களுண்டாகும்.

பரிகாரம்:—ஆடாதோடாயிலை ரசமாவது, சிந்தில் கொடிரசமாவது, தண்ணீர்விட்டான்கிழங்கு ரசமாவது, தேனுடன் கலந்து கொடுத்தால் பித்தத்தினால் உண்டான பெரும்பாடு நிவர்த்தியாகும்.

அதிமதுரம், கால் பலம் எடுத்து கழுநீரால் அரைத்து கற்கம் செய்து அத்துடன் சர்க்கரை 1பலம் போட்டு சாப்பிடலாம்.

3. சிலேஷ்ம பெரும்பாடு:—ஆமத்தைப்போலும், சித்தைப் போலும், கொஞ்சம் வெண்ணிறமாகிலும், சாதம் வடித்த நீர்போல் உதிரம் வெளியானால் அது சிலேஷ்ம பெரும்பாடென்று அறிய வேண்டியது.

பரிகாரம்:—இதற்கு கரும் அத்திப்பழ ரசத்தை குடித்தல் அல்லது காசிஜெங்காரசத்தில் சோத்திரபட்டைச் சூரணம், தேன் இவைகள் கலந்து கொடுத்தல் நன்று.

4. நிரிதோஷ பெரும்பாடு:—தேன், நெய், அரிதளம், இலை களின் நிறத்தைப் பெற்றதும், கொழுப்பைப்போல் கர்த்தியுடையதா யும், துர்க்கந்தமாகியும், இரத்தம் வெளியானல் அதை நிரிதோஷ பெரும்பாடு என்று சொல்லுவார்கள்.

பரிகாரம்:—தருப்பைவேரை அரிகெழுநீரில் அரைத்து கற்கம் செய்து மூன்று நாள் கொடுக்கவும்.

கருப்பு அத்திப்பழ ரசத்தில் தேன்கலந்து 7-நாள் கொடுக்கவும்' பத்தியம்—பசும்பால், சர்க்கரை, அன்னம். மற்றது கூடாது.

கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், சுக்கு, மாமஞ்சள் இலை களைக் கியாழம்வைத்து அதில் சோத்திரப்பட்டைச் சூரணம், தேன் கலந்து சாப்பிடலாம்.

ஆடாதோடையிலை சாறுவது, செந்நில்கொடி ரசமாவது, முள் முருக்கன்வேர் ரசமாவது பானஞ்செய்தால் வெள்ளை, பெரும்பாடு முதலியன குணமாகும்.

நிரிபலை, தேவதாரு, வசம்பு, ஆடாதோடை, நெற்பொரி, அரு கன்வேர், நெற்முமுட்டி இலைகளை கியாழம் வைத்து தேன் கலந்து குடித்தால் மாதர்களுக்குண்டாகும் சகல பெரும்பாடு நோயும் சாந்தி யாகும்.

அசோக விருஷத்தின் பட்டையை பாலில்போட்டு கொஞ்சம் ஜலம்விட்டு பால்மீறும்படியாக கியாழம் காய்ச்சி ஆறியபிறகு அதை குடித்துவர கொடுங்கோரமான ரத்தபெரும்பாடு நீங்கும்.

சோம ரோகம் (வெள்ளை)

அதிக சையோகம், சோகம், பிரமை, அதிசாரம், விஷதோஷம் இவைகளினால் மாதர்களின் தேகமுழுதும் வியாபித்த நீரானது மிக வுங்கெட்டு யோனித்துவாரத்தில் சேர்ந்து ஒழுகிக்கொண்டிருக்கும். இதற்கு சோமரோகம் என்று பெயர்.

சோமரோக லக்ஷணம்:—சோமரோகம் உண்டானதில் ஸ்திரீ யானவள் அதன், உபத்திரவத்தைச் சகிக்கமுடியாமல், தலைவலி, முகம் தாடைவாடல், கொட்டாவி, மூர்ச்சை, பிரலாபம், சரும வறண்டு உஷ்ணமாயிருத்தல், சாப்பாட்டில் அதிருப்தி, இந்த லக்ஷ ணங்கள் உடையவளாயிருப்பாள். சரீரத்தில் வியாபித்திருக்கும் சலம் சரீரத்தை நாசஞ்செய்வதினால் சோமரோகமென்று சொல்லப் பட்டது. இந்த நீர் அதிபுணர்ச்சிகளினால் விஷமத்தைப்பெற்று சுஷியிப்பதினால் சோமரோகமென்று பெயர்.

இப்படி தேகமுழுதும் வியாபித்து சோமக்குறியை படைத்த ரத்தமானது க்ஷீணித்ததினால் தேகமானது ஜடம்போல் ஆகும். அந்த சோமரோகம் குத்தலுடன் மூத்திரத்தோடுகலந்து பலதடவை ஒழு

கிக்கொண்டிருக்கும். இந்த சோமரோகம் சிலகாள் கழிந்தபிறகு கஞ்சிபோல் ஆகி அடிக்கடி மூத்திரத்துடன் கலந்து ஒழுகிக்கொண் டிருந்தால் அதை மிகவும் துர்லபமான மூத்திராதிசாரமென்று சொல்லுவார்கள்.

மேற்கூறிய மூத்திராதிசாரம் விஸ்தாரமாயும், தீனமாயும், வாசனையற்றும், உபத்திரவமில்லாமலும், வெண்மைநிறமுடையதாய் மிகவும் ஒழுகிக்கொண்டு மாதர்களுக்கு அதிதுர்பலத்தை உண் டாக்கும்.

பரிகாரம்:—மேற்கூறிய சோமரோகம் வேதனையுடன் அடிக்கடி மூத்திரத்துடன் கலந்து ஒழுகிக்கொண்டிருந்தால் எலக்காய், இல வங்கப்பத்திரி, இவ்விரண்டையும் சூரணித்து கள்ளுடன் கலந்து கொடுத்தால் சோமரோகம் விலர்த்தியாகும்.

நிலப்பனக்கிழங்கு, கர்ஜூரம், யஷ்டிமதுகம் நிலப்பூனெி இலை களை சமனெடை சூரணித்து, அத்துடன் தேன், சர்க்கரைகலந்து சாப்பிட்டால் மூத்திராதிசாரம் குணமாகும்.

தகரம்வேர், அரிகெழுநீரில் அரைத்து கல்கம்செய்து காலையில் குடித்து வந்தால் ஜலபிரதாம் விலர்த்தியாகும்.

கதளீக்கந்தகிருதம்:—வாழைக்கிழங்குரசம் 256-பலம், முதிர்ந்த வாழைப்பூ இதழ்கள் 100-பலம் போட்டு அடுப்பேற்றி காலில் ஒரு பாகமாகச் சுண்டக்காய்ச்சியபிறகும், நெய் 1-படி, பால் 1-படி, இலைகளை ஒன்றுசேர்த்த தைலபாண்டத்திலிட்டு அதில் நிப்பிலி, ஏலக்காய், இலவங்கம், விலாம்பழம், ஜடாமாஞ்சி, வாழைக்கிழங்கு, சந்தனம் ஆல், மா, இத்தி, அரசு, அத்தி இலைகளின் பட்டைகள் தாமரைக்கிழங்கு இவைகளை வகைக்கு ½-பலம் வீதம் கற்கமாகச் செய்துக் கூட்டிக் கலந்து அடுப்பேற்றி கிருதபக்குவமாக காய்ச்சி, ஆறபிறகு வடித்த பிரதினம் காலையில் கால்பலம் விதம் சாப் பிட்டுவந்தால் மாதர்கட்குண்டாகும் சோமரோகம் நீங்கும். மேலும் எரிச்சல், மூத்திரக்கிருச்சிரம், நீர் அடைப்பு, வெள்ளை, வெட்டை, பெரும்பாடு, பிரமேகங்கள் மூத்திராதிசாரம் முதலியன நீங்கும்.

ஸ்தன ரோகம்

பாலுடன் சேர்ந்தும் அல்லது பாலுடன் சேராமலும், ஸ்திரீ யின் ஸ்தனத்தில் வாதாதிதோஷங்கள் பிரகோபித்து மாமிசரசத்தை சேர்த்து வாதபித்த சிலேத்தும ஆகந்துக சன்னிபாதாத்துமக ரோகங் களை உண்டாக்கும். அவைகளின் லக்ஷணங்கள் ரத்தவித்திராதி தனிர மற்ற வெளிவித்திராதிகளில் சொல்லிய லக்ஷணங்களையே ஒத்திருக்கு மென்றறியவும்.

ஸ்தன ரோக சிகிச்சை:—ஆற்றுதும்மட்டிவேரை அரைத்து லேபனஞ்செய்தாலும், காட்டுபருத்தி, சப்புசுரைவேர் இலைகளை

கோதுமை கஞ்சித்தில் அரைத்து லேபனம் செய்தாலும் ஸ்தனங்களில் உண்டான பிடைகள் தீரும்.

ஸ்தன்னிய வாதரோக சிகிச்சை:—வாத விபரிதியில் ஸ்தனங்கள் துஷ்டமானால் தசமூலியொழும் மூன்றாள் குடித்தாலும் அல்லது வாதஹரமான கிருதத்தை குடித்தாலும் அல்லது இலுவான விரேசனம் அருந்தினாலும் வாதன்ன ரோகம் தீர்த்தியாகும்.

ஸ்தனங்களில் உண்டாகும் விக்கங்களுக்கு சிகிச்சை:—வாத பித்த சிலேத்துமாதிகளினால் ஸ்திரீக்கு ஸ்தனங்களில் விக்கமுண்டாகி அது பழுக்காமல் எரிவுத்துடன் இரணத்தை புண்டாக்கினால் வித்ரதியில் சொல்லிய ரானுள்ள சிகிச்சைகள் செய்யவேண்டியது.

ஸ்தனங்கள் கெட்டியாவதற்கு சிகிச்சை:—அருகெல்லி, கற்கத்தில் எள் எண்ணெய்விட்டு தைலபக்குவமாக காய்ச்சி அதில் பருத்தியாலேத்து ஸ்தனங்கள்மீது வைத்துக்கட்டினால் அதுகெட்டிப்படும்.

சிற்றமுட்டியை ஜலத்துடன் அரைத்து ஸ்தனங்களுக்கு லேபனஞ்செய்து தேய்த்தால் புஷ்டியாகி கடினமாகும்.

தாமரைக்காயைப் பாலிலரைத்து சர்க்கரை கலந்து ஒரு மாதகாலம் சாப்பிட்டுவந்தால் ஸ்தனங்கள் கெட்டிப்படும்.

வாதாதிகளினால் தூஷிதமான முலைப்பாலின் லக்ஷணம்:—முலைப்பால் தவர்ப்பாயும், ஜலத்தில்விட்டால் மிதந்துகொண்டிருக்கும்படியானதாயு மிருந்தால் அது வாததோஷமென்றும், காரமாயும் புளிப்பாயும் உப்பாயும் அதன்மீது மஞ்சள்சாயல் உண்டானால் அது பித்த தோஷமென்றும், பருவாயும் பிசினியைப்போல் பிசபிசப்பாயும் ஜலத்தில்போட்டால் அது முழுகினால் கபதோஷ மென்றும், முற்கூறிய லக்ஷணங்கள் கலந்து உண்டானால் அது தொந்தோஷ மென்றும், நிரிதோஷங்களின் லக்ஷணங்களும் தென்பட்டால் அது சன்னிபாததோஷ மென்றும் அறியவேண்டியது.

நீர்துஷ்டமான முலைப்பாலின் லக்ஷணம்:—முலைப்பாலை ஜலத்தில் போட்டால் அது ஜலத்துடன் கலந்து வேறுநிறமாகயிராமல் வெண்மைநிறமாக யிருந்தால் அது நிர்த்தோஷமென்று அறியவேண்டியது.

பித்ததோஷ முலைப்பாலுக்கு சிகிச்சை:—முலைப்பால் பித்த துஷ்டமானால், சிற்றில்கொடி, தண்ணீர்விட்டான்கிழங்கு, பேய்ப்புடல், வேப்பன், சந்தனம் இவைகள் யிழம்போட்டு சர்க்கரை கலந்து கை, நாயர் இவர்கள் இருவரும் பானஞ்செய்தால் அது தீர்த்தியாகும்.

கபதோஷ முலைப்பாலுக்கு சிகிச்சை:—முலைப்பால் கபதுஷ்டமானால் அதிமதுரம், இந்துப்பு இவைகளை சூரணித்து தேன் கலந்து

சாப்பிட்டாலும் அல்லது அசோக புஷ்பங்களை அரைத்து ஸ்தனங்களுக்கும் கொவின் பற்கள் உதடு இவைகளுக்கு லேபனஞ் செய்தால் இலக்ஷணமாக வாந்தியாகி ஸ்தனதோஷத்தினால் உண்டாகிய வியாதிகளும் தீர்த்தியாகும்.

தொந்தோஷ முலைப்பாலுக்கு சிகிச்சை:—இரண்டு தோஷங்களினால் முலைப்பால் துஷ்டமானால் மேற்கூறிய சிகிச்சைகளையே தொந்தித்துச் செய்யவேண்டியது.

நிரிதோஷ முலைப்பாலுக்கு சிகிச்சை:— நிரிதோஷங்களினால் முலைப்பால் துஷ்டமாகி அப்பாலை சொகுடித்தால் ஜலத்தைப்போல் ஆமத்துடன் கலந்த அனேக வர்ணத்துடன் கொஞ்சம் கெட்டியாயும் அதாவது குழம்புபோலும் வயிறு சொத்த சொத்த மலம் போகும். இதற்கு முற்கூறிய சிகிச்சைகளையே செய்யவேண்டும்.

சகல ஸ்தன தோஷங்களுக்கும் சிகிச்சை:—பெருங்கடம்பை, சீமைலவேம்பு, தேவதாரு, சுக்கு, வெட்பாலைசிரை, சன்னிரிவேர், சிறந்திதகரம், கடுகுரோகணி இவைகளை முறைப்படி யிழம்வைத்து குடித்தால் சகல ஸ்தன தோஷங்களும் தீர்த்தியாகும்.

முலைப்பாலைப் பெருக்க சிகிச்சை:—நிலப்பூசினிவேரை பால்விட்டு அரைத்து பாலில் கலந்து அதில் சர்க்கரைசேர்த்து சாப்பிட்டால் பால் விருத்தியாகும்.

தண்ணீர்விட்டான்கிழங்கை பால்விட்டு அரைத்து குடித்தாலும் அல்லது கொஞ்சம் உஷ்ணமான பாலில் நிப்பிலி சூரணத்தைப் போட்டு குடித்தாலும் பால் விருத்தியாகும்.

காட்டுபருத்திவேர், கரும்புவேர் இவைகளை காஞ்சிதத்தில் அரைத்து குடித்தாலும் அல்லது நிலப்பூசினி சூரணத்தை கள்ளில் அரைத்து சாப்பிட்டாலும் முலைப்பால் விருத்தியாகும்.

காட்டுப்பருத்திவேர், கரும்புவேர் அல்லது பற்பாடகம், நிலப்பூசினிவேர் இவைகளை கள்விட்டு அரைத்து குடித்தால் பால்விருத்தியாகும்.

கோதுமை மாவுடன் அக்ரோட்டுபருப்பு அல்லது இலை சேர்த்து அடைசுட்டு சாப்பிட பால் பெருகும்.

ஆமணக்கு இலையை ஆமணக்கு நெய்விட்டு வதக்கி ஸ்தனங்களின்மேல் வைத்துக்கட்ட பால் சுறப்புண்டாகும்.

பாலரோக நிதானமும் சிகிச்சையும்

பாலர்கட்கு நோய் உண்டாவதற்குக் காரணம்:—பொதுவாக பாலர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அதாவது தாய்பாலை மட்டுமருந்தும் குழந்தைகள், தாய்பாலையும் அன்னத்தையு மருந்தும் குழந்தைகள், அன்னத்தைமட்டு மருந்தும் குழந்தைகள் என்பதாம். இவற்றள் மூலப்பாலும் அன்னமும் தோஷமற்றிருந்தால் சிசுக்களுக்கு நோய் வராது. ஆகவே உணவாகி பேதம் தாதாடத்தை முதலிய காரணங்களினால் தோஷமுற்ற நோய்வாய்ப்பட்ட மாதர்கள், கருப்பமுள்ள மாதர்கள் முதலியவர்களின் மூலப்பாலை அருந்துதலால் பாலர்கட்கு அநேக வியாதிகள் ஏற்படுகின்றது. முக்கியமாக கருப்பஸ்திரீகளின் பாலை அருந்தும் குழந்தைகட்கு கருப்பஸ்திரீயின் வயிற்றைப்போலவே வயிறு பெறுத்து பலவித நோய்களை உண்டாக்கும்.

க்ஷீராலஜக ரோகம்:—இது தோஷமுள்ள தாய்ப்பாலை அருந்துவதால் குழந்தைகட்கு ஏற்படும் நோயாம். இதனால் சிசுக்களுக்கு மலமானது தர்க்கத்துடன் அரைணப்பட்டு சீராகவும், குழம்பாகவும் சிறிது கட்டுப்பட்டதுபோலவும் சிறி சிறி சளவிதமாக பேதியாகும். மூத்திரமானது மஞ்சள் வண்ணம் நிறத்துடன் குழம்பாக இறங்கும். மற்றும் சுரம், அரோசகம், வாந்தி, தாகம், கொட்டாவி, வயிற்றுப்புசம், வயிற்றிரைச்சல், சுரசி, வாய் முதலியன தர்க்கத்துடன் காணல் முதலியன ஏற்படும்.

வாததோஷமுள்ள மாதரின் மூலப்பாலை அருந்தும் குழந்தைகட்கு வாயு அதிகரித்து வாதரோகங்கள் உண்டாவதுடன், மலமூத்திர சிக்கல், சுரம், இளைப்பு, முதலியவைகளும் காணும்.

பித்ததோஷமுள்ள மாதரின் மூலப்பாலை அருந்தும் குழந்தைகட்கு பேதி, தாகம், காமாலை, சரீர உஷ்ணம், பித்தாதிக்கம, சுரம் முதலியன உண்டாகும்.

கபதோஷமுள்ள மாதரின் மூலப்பாலை அருந்துகுழந்தைகட்கு கபம் அதிகரித்து கபரோகங்கள், வாந்தி, சொள்ளுவடிதல், தெளம், விக்கம், கண்கள் வெளுத்த ரூபமாயிருத்தல் முதலியன உண்டாகும்.

மற்றும் பாலுண்ணும் குழந்தைகட்கு பாலின் தோஷமானது ஆமாசயத்தைப்பற்றி பத்தவகை நோய்களை உண்டாக்குமென அறிவுக்கிடக்கின்றது. அவைபாவன:—

1. வாதகுண்டாலக்கட்டி:—இதில் கறுத்தநிறத்துடன் கட்டிகள் எழும்பி அதிக குத்தலும் தேகத்தில் சுரமும் உண்டாகும். இதற்கு வாதசெவ்வாப்பு கட்டியென்றப் பெயர்.

2. பித்தகுண்டாலக்கட்டி:—இதில் மஞ்சள்நிறத்துடன் கட்டிகள் தீங்காதளரிச்சலைகொடுத்து சிக்கிரத்தில் பழுத்துடைந்து அவற்றினின்று சுத்தரத்தம் மாத்திரம் வடியும். இதுவே பித்தசெவ்வாப்பு கட்டியாம்.

3. சிலேஷ்மகுண்டாலக்கட்டி:—இதில் கட்டிகள் கனத்து வெளுத்து சமைச்சலுடன் அசைவற்ற புடைகள் உள்ளதாய் வெகு கோரமாக எழும்பும். இது சிலேஷ்மசெவ்வாப்புக் கட்டியாம். இது கஷ்டசாத்தியம்.

4. தாலுக்குண்டகரோகம்:—கபதோஷம் அதிகரித்து தாலுகளில் இருக்கும் மாமிசத்தைப்பற்றி அவ்விடத்திலும் தலையிலும் குழி விழும்படிக்குச்செய்து சிசுக்களுக்கு மூலப்பாலில் அசங்கியம் பிரியாசத்தின்மேல் பாலுண்ணல், தாகம், வாயில் சமைச்சல், கண்ணோய், கழுத்துவிருத்தல், வாந்தி, பச்சைநிறத்துடன் பேதி என்னும் குணங்களை உண்டாகும்.

5. நிருளிகாவிரணரோகம்:—இது பித்தத்தினால் சமைச்சலுடன் பிறந்து உடம்பெங்கும் சிறுசிறு கொப்புளங்கள் சுழும்பி அடங்கும். மறுபடியும் இரவிலாவது பகலிலாவது முன்பு உண்டானதுபோல் மிக சொருக்கமாகப் பரவும். இது சரீரமுற்றிலும் வியர்க்குருக்கொப்புளங்களினால் சட்டைப்போட்டதுப்போல் மறைப்பதால் நிருளிகாவிரணமெனப் பெயர் பெற்றது.

6. பாலசோஷரோகம்:—குளிர்ந்தநீர் கபதோஷப்பால், முதலியவைகளைக் குடித்து பகலில் நித்திரைசெய்து பிறகு மூலப்பாலைக் குடிக்கின்ற சிசுக்களுக்கு இந்நோய் உண்டாகும். இதனால் உடல் இளைத்தல், முகத்திலும் கண்ணிலும் காந்திகுன்றுதல், பினிசம், இருமல் என்னும் குணங்களுண்டாகும். இதற்கு உள்ளுருக்கி உடலுருக்கி என்னும பெயர்.

7. துந்தரோகம்:—இது குழந்தைகட்கு வாய்வினால் ஏற்பட்டு, அரைணம், வயிற்றுப்புசம், காயில் வலி, காவில்மாவு படிந்திருத்தல் முதலிய குணங்களைப் பெற்றிருக்கும். இதனைத் தந்திநோய் எனவும் கூறுவர்.

7. குதக்கூடரோகம்:—இது பாலர்களுக்கு புளித்தமலம் சேருவதினாலும அஜீரணரோகத்தினாலும் பிறந்து குதஸ்தானத்தில் சிவந்த நிற விரணமும், உள்ளில் அதிக சமைச்சலும, மிக உபத்திரவமும் உண்டாகும்.

9. விஷமசிராரோகம்:—இது அரிணத்தினால் சிசுக்களுக்கு ரத்தசம்புகளில் எச்சோமும் காங்கையும் அதிக ரணமச்சலும் உண்டாகி மிகுந்த உபத்திரவத்தைச் செய்யும்.

10. முகதூஷிக்ரோகம்:—இது, சுவரத விருத்தியினால் பிறந்த சிசுக்களுக்கு வாயில் இலவமுட்களைப்போன்ற முட்களை புண்டாக்கும். இதற்கு ஸாய்முள் என்ற பெயர்.

இனி பாலர்கட்குக் காணும் இதரோய்களைக் கூறப்படும்.

குழந்தைகளின் நோய்களைக் கண்டறியும் உபாயம்:—வைத்தியன் சிசுக்களுக்கு ரோகங்கள் இருக்கிறதும் இல்லாததும், சிசு அழுகிற சுறமைக்கண்டு கவனிக்கவேண்டியது. குழந்தை பெற்ற இடத்தை பலதடவை தொடுகின்றதோ, எந்த இடத்தை தொட்ட மாத்திரத்தில் வீறிட்டு அழுகிறதோ அந்த இடத்தில் குழந்தைக்கு நோய் உண்டென்றும், கண்கள் பலதடவை மூடிக்கொண்டால் சிரஸில் நோய் உண்டென்றும், மலமூத்திரபந்தம், கக்கல், ஸ்தனத்தை கடித்தல், குடலில்கூச்சல், வயிறுப்பல், முதுகைவளைத்தல், பலதடவைக்கங்கள் எடுத்துப்போடுதல், இச்சலக்ஷணங்களினால் வயிற்றில் நோய் உண்டென்றும், பயப்படும்படி பலதடவை நிசைகள் பார்ப்பதினால், அடிவயிறு குய்யம் இவைகளில் நோய் உண்டென்றும் அறியவேண்டியது.

பிள்ளைகளின் பத்திய கிரமம்:—சிசுவுக்கு நோய் உண்டானால் தாயானவள் சகல அபத்திய பதார்த்தங்களை விடவேண்டியது. சாதம் சாப்பிடும் சிசுவுக்கும், முலைப்பாலும் அன்னமும் சாப்பிடும் சிசுவுக்கும் அபத்திய அன்னம் ஊட்டக்கூடாது ஆனால் முலைப்பாலை மாதநிரம் நிவர்த்திக்கக்கூடாது. லங்கனம் செய்யவேண்டுமானால் தாயர் அல்லது பால்கொடுப்பவளை லங்கனம் செய்விக்கவேண்டியது. இப்படிசெய்வது சிசுவுக்கு லங்கனமென்று அறியவேண்டியது.

சிசுக்களுக்கு அவிடத கிரமம்:—காய்ச்சல் முதலிய நோய்களுக்கு பெரியவர்களுக்கு எந்த அவிடதங்கள் கொடுக்கும்படியாக வைத்தியநூல்களில் சொல்லப்பட்டிருக்கிறதோ அவைகளை தான் சிசுக்களுக்கும் உபயோகப்படுத்தவேண்டியது. ஆனால் விரல்வை பிடித்தல், நீலிக்குப்பத்துபோடல், விரேசனம் முதலியது செய்யக்கூடாது. அதிக கஷ்டசாத்திய ரோகங்களில் விரேசனவமனங்கள் மாத்திரம் உபயோகிக்கவேண்டியது.

பிள்ளைகளுக்கு மாத்திரை பிரமாணம்:—குழந்தைகள் பிறந்தவுடன் வாயுவினைப்பிரமாணம் கொடுக்கவேண்டியது. இந்த பிரமாணமாக பிறதினமாதத்திலும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்க வேண்டியது.

குகூணக பால ரோக நிதானம்:—குழந்தைக்கு பால்தோஷத்தினால் குகூணகமென்கிற ரோகம் உண்டாகும். அப்போது கண்களில் ரணமச்சல், நீர்வடிதல், கண்கள், தலை, மூக்கு இவைகளை நோய்த்துக் கொள்ளுதல், கண்கள்திறக்கமுடியாமை, சூரியகாந்தியை பார்க்கக் கூடாமை என்னும் குணங்களுண்டாகும்.

குகூணக பால ரோக சிகிச்சை:—கடுக்காய், தானிக்காய், செல்லிவற்றல், சோத்திரச்சக்கை, வெள்ளைச்சாரணை, இஞ்சி, சிறிய முள்ளங்கத்திரி, பெரியமுள்ளங்கத்திரி இவைகளை அரைத்து வேகவைத்து கொஞ்சம் வெப்பமாக தேகத்திற்கு லேபனஞ் செய்தால் அது சிலேத்துமத்தை தணிக்கச்செய்து குகூணகரோகத்தை நிவர்த்திச்செய்யும்.

பாரிகர்ப்பிக நிதானம்:—சர்ப்பிணியாயிருக்கும் தாயாரின் தன்னியத்தை குழந்தை பானஞ்செய்வதினால் இருமல், அக்கினிமாந்தம், வாந்தி, ரணமச்சல், காசம், அருசி, பிரமை இவைகளுண்டாகி பின்னியின் வயிறும் சூலைவயிறாகும். இதற்கு பாரிகர்ப்பம் என்று பெயர்.. இதை நிவர்த்திசெய்ய அக்னிதீபன மருந்துகள் கொடுக்க வேண்டியது.

தாலுபாக நிதானம்:—குழந்தைகளுக்கு சிலேஷ்ம பிரகோபத்தினால் தாடையிலுள்ள மாமிசத்தில் தாலுண்டகமென்கிற ரோகம் உண்டாகும். அப்போது தாடைகளில் பள்ளங்கூடவிழும். அதினால் தாடையில் சிறியகட்டிகள், பால்குடியாமை, இவைகளுண்டாகி மிககஷ்டத்துடன் தன்னியபானஞ்செய்யும். மேலும் எரிச்சலுண்டாகி கண்கள், கழுத்து, முகம் இவைகளில் உண்டாகும் நோயினால் கழுத்துநிற்காமல் போவதுடன் குடித்தபாலும் கக்கும். இதற்கு தாலுபாகரோக மென்றுபெயர்.

தாலுபாக சிகிச்சை:—கடுக்காய், வசம்பு, கோஷ்டம், இவைகளை கல்கம்செய்து அதில் தேன் முலைப்பாலும் விட்டுக்கலக்கி பானஞ் செய்வித்தால் தாலுண்டகரோகம் நிவர்த்தியாகும்.

விசர்ப்ப ரோக நிதானம்:—சிறிய குழந்தைகளுக்கு நிரிதோஷத்தினால் தலை அல்லது அடிவயிறு இவைகளில் சிறுபரமாணு கொழுப்பைப்போல் விசர்ப்பமென்கிற ரோகம் உண்டாகி முடிச்சுகளிலும், ஹிருதயஸ்தானத்திலும், அடிவயிற்றிலும் குதபிரதேசத்திலும் கிரமமாக பிரவேசிக்கும். இதனால் சிசு மரணமடையும். இது மஹாபத்மக ரோகமென்று அறியவேண்டியது.

உலீபக ரோகம்:—பிரசவித்த மருமாத முதல் காலத்திலேயே புருஷனைச்சேர்ந்து மறு கர்ப்பத்தைக்கொண்ட வாலிந்தி என்ற ஸ்திரீகளுக்கு கருப்பாசயத்தில் பிண்டோற்பத்திக்குக் காணமான ஸ்திரீகளுக்கு கருப்பசலனத்தினால் கண்டகமென்கிற சிலேஷ்மம் இருக்கின்ற வயானது விருத்தியடையும். போது அன்னரசமானது சிசு போஷ

கண்ணான காடிமார்க்கங்களில் விருத்தியடையும். இதனால் முன்பு பிறந்திருக்கிற சிவனானது மயக்கத்துடன் ஆகாயே முஷ்டிபந்தமாக மூடிக்கொள்ளும். அன்றியும் மார்புநோய், கால் ஆகாயே சொறிதல், இருமல், இளைப்பு, வாந்தி, சுரம் முதலிய குணங்களுடன் எருக்கு கால் இளைக்கும் இது காரினை சுப்பிரமணத்தின் மூலி மார்க்கமாக கால் ஏற்பட்டு சிவனை மூடினால் உன்மாதரோகம் எனப் பெயர் பெற்றது. இதற்கு வேறு மூலிப்பால் வாட்டுவது தனி, அப்பிரயோகம் ஆகும்வரையில் சிவனை பாதுகாக்கவேண்டும்.

பாலவிசர்ப்பிரோகம்:—பாலர்களுக்கு கொப்புளமாவது கீழ் வயிற்றிலும், தலையிலும், விபரிதமான மரணத்தைக் கொடுக்கும் நிரி தோஷத்தினால் உண்டான விசர்ப்பிகொப்புளங்கள் செந்தாமரை இணழுபோற்றிருப்பதால் இதை மாபதுமவிசர்ப்பி என்ற பெயர். இது முதன்முதல் சம்பின் வழியாக தெற்றியில் வந்து மார்பிலேறல் கும். பின்பு மார்பினிறங்கு குஹ்தானத்திலிறங்கும். இப்படியே அதோமுகமாக இந்நோகம் இறங்கி இறங்கிச் சுற்றுவதால் அசாத் தியமரம்.

மிருத்திகாபக்ஷணரோகம்:—தினந்தினமும் மண்ணைத் தின்னு கின்ற சிலக்களுக்கு தேகம் வெளிறலுடன் விக்கம், இருமல், இளைப்பு, பேதி, வயிற்றிற்கிருமி சேருதல், வாந்தி, மூர்ச்சை, மர் தாக்கினி, முலிப்பாலில் விருப்பமின்மை, சரீரநோய், பிரமை முதலிய குணங்கள் உண்டாகும்.

பாரிகர்த்திரோகம்:—கருப்பஸ்திரீகளின் பாலை குடிக்கும் சிலக் களுக்கு இருமல், மர்தாக்கினி, அரோசகம், வாந்தி, சோம்பல், இளைத் தல், பிரமை என்னும் குணங்கள் உண்டாகி வயிறும் பெரு கும். இன்னும் சர்வாங்கத்திலும் சகிக்கக்கூடாத உபத்திரவத்தைச் செய்யும்.

கணம்

இது மாதர பிதாக்களின் காதவித்துக்களில் அடங்கிய வாதாதி தோஷங்களினின்று உற்பத்தியாகி கருப்பாசயத்தில் சிவனைப் பற்றி அச்சிவனை சப்தாதுக்களும் வண்ணமய மடையும் காலத் தில் விருத்தியடைவதால் கணரோகம் எனப் பெயர்பெற்றது.

இந்நோயில் தேகவாட்டம் வாய்சாற்றம், தலைற்றம், உட் சுரம், வெளிச்சுரம், வயிற்றின்மேல் சுருட்டை, மயக்கம், வறண்ட மலம் என்னும் குணங்கள் எற்படும். இது 12-வயது வரையிலும் தொடரும். கணம் எண்வகைப்படும் அவையாவன:—

சூலிகணம், முக்குகணம், ஆமகணம், தேரைக்கணம், மகா கணம், கழிகணம், சுழிகணம், வறள்கணம் என்பதாம்.

1. சூலிகணம்:—மேல்மூச்சு, இருமல், நெஞ்சு, காவு, காபி புண்போலிருத்தல், பாலுண்ணுமை, முகாரற்றம் என்னும் குணங் கள் உண்டாக்கும்.

2. முக்குகணம்:—வயிற்றுக்கடுப்பு, காலில் வெடிப்புடன் வெ தப்போலிருத்தல், வறளல், சுரம், தலைவலி, எரிச்சல், ஆசனம் வெளிப்பட்டு முக்குடன் ரத்தமும் சீதமும் ஒழுகுதல், தேகவாட்டத் தினும் கறுத்தநிறம், முடிசோருதல், தாகம் என்னும் குணங்களை உண்டாக்கும். இதுவே மூலகணமாம்.

3. ஆமக்கணம்:—நெஞ்சில் குடிதல், சிறுநீர் மஞ்சளாக இறங் குதல், தேகத்தில் புகைகப்பினதுப்போல் மாறுநிறம், ஒருவேளை சர்வாங்கத்திலும் வெதும்பல், இருமல், வயிறிளைச்சல், புகைந்த புகைந்து மேல்மூச்சு என்னும் குணங்களை உண்டாக்கும்.

4. தேரைக்கணம்:—வாதரோடி மற்ற காடிகளில் பின்னிக் கொண்டு கடத்தல், புளிப்பு துவர்ப்பு வஸ்துக்களில் வெறுப்பு, அன் னத் துவேஷம், நிரிதோஷரூபிக்கம், காபியில் புண்போலிருத்தல், உட் காய்ச்சல், தேகவாட்டம், எரிஞ்ம குணம், பித்தவெட்டை, தாது கஷ்டம் என்னும் குணங்களுண்டாகும். இது ஆறு வயதுக்குள் சீக்காவிடில் மூப்பத்திரண்டு வயதுவரைக்கும் இருக்கும்.

5. மகாகணம்:—முகம் புறங்கால் புறங்கை இவ்விடங்களில் மினுமினுப்பு, சுகமும் விழியும் வெளிறல், மயக்கம், மிகுவெப்பம், உதடுபுண்போல் வெடித்திருத்தல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

6. கழிகணம்:—சீதஞ்சீதமாயும் மலமாயும் பாலிப்போலவும் சலஞ்சலமாயும் பேதியாதல், உள்ளங்கை உள்ளங்கால்களில் சீதளம் சிலசமயம் கால்கை என்னும் குணங்களை உண்டாக்கும்.

7. சுழிகணம்:—கண்சொருகல், மார்புநோய், வயிறு, கால், நெஞ்சுரம்பு இவைகள் வெந்ததுபோலிருத்தல், பாலுண்ணுமை, அலருதல், இருமல், மேல்மூச்சு, கைகால்களில் சீதளம், வயிற்றுப் பொருமலுடன் வலி, சுரம், காக்குவறளல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

8. வறள்கணம்:—மேனிவறளல், நெஞ்சு குடிதல், புகை இரு மல், மாறுநிறம், விட்டுவிட்டு வயிற்றில் இளைச்சல் என்னும் குணங் களை உண்டாக்கும்.

பாந்தம்

வெல்லம், தேங்காய், மாங்காய், கண்டற்கறி, வழுக்கைகீரை, வாலைமீன், வரால்மீன், கெட்டுலர்ந்த பன்னிமூட்டின் இறைச்சி, புளிப்புமோர், பாகற்காய், முதிர்ந்தவாழைக்காய், கிழங்குவகை, மாவல்லு, எருமைப்பால், தினை சோளம், சாதுஜாதிய சலம்,

சலதோஷம், பசி, துயரம் என்பவைகளை அநுசரிக்கும் ஸ்திரீகளின் முலைப்பாலைக் குடிக்கும் சிசுக்களுக்கு மந்தரோகம் உண்டாகும்.

இந்நோயில் பசியில்லாமை, தெளிவுள்ள சலநிற நிறத்துடன் பால்போலவும், தெளிந்த சலம்போலவும், தர்க்கத்தைபோலவும் பேதியாதல், சரம், மயக்கம், கையுங்காலும் சில்லிடல், கண்களில் வெப்பம், ஸ்வாசமயம் குளிர்ச்சி, உடற்சோர்வு, முகத்தில் பல நிறத்துடன் பளபளப்பு முதலிய குணங்கள் உண்டாகும். இது சரியாமாந்தம், பீர்மாந்தம், சுரமாந்தம், விஷமாந்தம், கழிமாந்தம், ஊதுமாந்தம், நீர்மாந்தம், தலைமாந்தம் என 8-வகைப்படும்.

1. சரியாமாந்தம்:—வயிறு உப்பலோடு மாலைக் கரைத்ததுப் போல் கண்டலும் கரைதலுமான பேதி, விக்கல், சரம், தலைவலி, அரைக்கண் மூடியபார்வை, தர்ப்பலம், துயரம், சோர்வு என்னுங் குணங்களை உண்டாக்கும்.

2. பீர்மாந்தம்:—வயிறு பொருமலுடன் பால்நிறமான பேதி, புகைந்திருமல், பால் உண்ணுமை, வாந்தி, கண்களில் குழிகிழுதல், தாகம், அதிக வெப்பம், மார்புநோய், தலைநடுக்கல், வயிற்றுவலி, சிறிச்சிறி அழுதல், பெருமூச்சு என்னுங் குணங்களை உண்டாக்கும்.

3. சுரமாந்தம்:—சரம், அற்பமாக பாலுண்ணுதல், அடிக்கடி அழுகை, பொடிஇருமல், மலசலக்கட்டு, பசியில்லாமை, மயக்கம் என்னுங் குணங்களை உண்டாக்கும்.

4. விஷ மாந்தம்:—அரைக்குக் கீழ் தேனம், வயிறிரைச்சல், பயந்தபார்வை, தாய்கையில் தங்காமை, சோர்வு, மயக்கம் என்னுங் குணங்களை உண்டாக்கும்.

5. கழி மாந்தம்:—நாளிதமான கழிச்சல், வாந்தி, மயக்கம், சுவாசம், வாயுங்குறலும் சில்லிட்டதுபோல் தோன்றுவதுமன்றி வயிறு, கைகால் இவ்விடங்களில் தேனத்துடன் வியர்வை என்னுங் குணங்களை உண்டாக்கும்.

6. ஊதுமாந்தம்:—கால்கை விக்கம், சோர்வு, சுரம், அன்பர்களிகள் இறங்காமை, நாவில்புண்போலிருத்தல், மிகுந்த சுவாசம் எழும்புதல் என்னுங் குணங்களுண்டாகும்.

7. நீர் மாந்தம்:—சர்வாங்கவியர்வை, தேனம், குளிர், முகத்தின் பளபளப்பு, தேகத்திலாவது, கைகால்களிலாவது நினவுடன் விக்கம், தலைநோய், முக்கலுடன் நீர் இறங்குதல், இரைந்திரைத்து வயிறுகழிதல், வாய்நீருறல், ஓக்காளம், மெலிந்தவார்த்தை, உறக்கம், நகைப்பு என்னுங் குணங்களை உண்டாக்கும்.

8. தலை மாந்தம்:—தலையிலும் கழுத்திலும் ஊதல், கைகால்களில் குளிர்ச்சி, சர்வாங்கநோய் ஸ்வாசமயம் குலையில்வலி, அதனால்

தன்னிதுள்ளிவிழுதல், குளிர்சுரம், முகத்தில் வியர்வை, புருவவேதனை, பலவிதநிறமானபேதி, வயிறுப்பொருமலுடன் வலி, விழித்தபார்வை, எப்பம், நாசியில்புண்போல் நோயுடன் நீர்வடிதல், மார்புவலி, பற்கிட்டலுடன் நெறுநெறுவென்று கடித்தல், கைகால்களில் இசிவு, எழுந்திருக்கக்கூடாமை, அன்னபானாதிகளில் வெறுப்பு, அசதி, கொட்டாவி, இளைப்பு என்னுங்குணங்களை உண்டாக்கும்.

மேலும் சில நூல்களில் உள்ளில் வெப்பம் இருந்தால் கணமாந்தம், கண்சொருகுதல் சொருகுமாந்தம், உச்சியில் குழிவிழுந்தால் குழிமாந்தம், கைகளை இழுத்தால் இழுப்புமாந்தம், வயிறு உப்பினல் உப்பு மாந்தம், விலாவை தூக்கினல் அள்ளுமாந்தம், விக்கலிருந்தால் விக்கல் மாந்தம், வாதபித்த சிலேத்மங்களின் சேஷ்டைகள் அதிகரித்தால் அவைகளின் பெயர்கொண்டமாந்தம், சன்னிபாதகுறிகள் இருந்தால் சன்னிமாந்தம் என மாந்த நோயை 21-வகையாக வகுத்துக் கூறப்பட்டுள்ளது.

கிரந்தி

சிசுக்களுக்கு கிரந்திரோகமானது இருவகைப்படும்.

1. செங்கிரந்தி:—முழங்கால் முழங்கையளவுக்குமாவது, தேகமுழுவதுமாவது சிவந்தநிறமான வீக்கமும், அவ்வீக்கம ஓடியோடிக் கட்டுதல், வாய்கடித்தல், மலமூத்திரபந்தம், பூனை குரலோசையை யொத்து விம்மிவிம்மி அழுதல், பிரேதம்போல் கிடக்குதல் என்னுங் குணங்களை உண்டாக்கும.

2. கருங்கிரந்தி:—தேகமுழுவதுமாவது முழங்கால் முழங்கை வரைக்குமாவது நீலம்போல் கறுத்தல், வெளிறல், முகியுண்ணுமை, அல்லது வலதுமுகியுண்ணுமை, நா வறளல், உடலிலாவது தோளிலாவது கடுகை, விழித்து விழித்து பார்த்தல், குணம்மாறல், அல்சர், மேல்மூச்சு, இருமல், குரற்கம்மல், வயிற்றில் வேதனை என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

கரப்பான்

சர்வாங்கத்திலும் பரபரப்பான ஊரல், பல நிறத்துடன் சாரைப்பாம்பின் தோலியொத்த சொறி, அதில் சிவந்த நீர் கசிதல், கண்டத்தில் விஷக்கடி ரோகம்போல் வெடித்து நீர் கசிதல், விகாரரூபம், இளைப்பு என்னுங் குணங்களுண்டாகும். அன்றியும் கறத்ததால் கருங்கரப்பான், சிவந்தால் செங்கரப்பான், வரியாகயிருக்கில் வரிகரப்பான், சொறி எழும்பினல் சொறி கரப்பான், தினவு உண்டானல் ஆனந்தக்கரப்பான், தலையில் காணில் மண்டைக்கரப்பான் எனக் கரப்பான் நோயை பல வகையாகவும் சில நூல்களில் கூறப்பட்டுள்ளது.

மலவாதம்

மலபந்தம் வயிறமுற்றிலும் சோய், வையும் காலும் காவுந்தடித்தல், புருவத்தில் கரப்பான படரல், பாலுண்ணமை என்னுங் குணங்களோ உண்டாகும். இது மனத்தில் வாய்வு சேர்வதால் பிறக்கும்.

தசனேற்பவம் (பல் முளைத்தல்)

சிசுக்களுக்கு பல் முளைக்கும்போது மிகுந்தபேதியும், சீர இளைப்பும், அற்பசாரமும், மயக்கமும், தாகமும் உண்டாகும். இதற்குத் தடங்கற்பட்டிருக்கின்ற பல்லின் நிரைகள் சிக்கிரத்தில் வெளிப்படும்படி செல்லின் முனையைக்கொண்டி அவ்விடத்திலுள்ள பல்லீறுகளில் கொஞ்சம் கீறிவிடலாம்.

கக்குவான் என்னும் கக்கிருமல்

இது பாலின் தோஷத்தினாலும், சனிதோஷத்தினாலும் வாயு அதிகரித்த மார்பில் இருக்கின்ற சிலேஷ்மத்தை இளகுற்றருணத்தில் பிறக்கும். அப்போது மிக்க ஒலியுடன் பிரபலமான இருமல், அதில் ரத்தம் விழல், நிறைவான மூச்சு, விழி பிதுங்குவதுபோலிருத்தல், ஆயாசம, விபர்வை, அருந்திய பாலும அன்னமும் சக்குதல், மல மூத்திரம் கழுகுதல் என்னுங் குணங்களுண்டாகும். இது 90-நாள் வரையிலும் பேய்பிடித்த ஆட்டுவதுப்போல் கைக்களை ஆட்டுவிக்கும்.

தோஷம்

இது ஒன்பது வகைப்படும். அவையாவன:—

1. நாய்முள் தோஷம்:—வாயிலும் தொண்டையிலும் முள்போல் தர்மமிசம் எழுமபுதல், முகியுண்ணமை, சுரம், மேல்மூச்சு, கண்ணில் சலம் வடிதல், கால்வலி, அள்ளெடுக்குதல், கபத்தால் அழக்கூடாமை, தலைநடுக்கல் என்னுங் குணங்களுண்டாகும்.

2, எச்சில் தோஷம்:—தலைபெடுக்கக்கூடாத மயக்கம், சீர வாட்டம், அதில் பலநிறத்துடன் சாறுதல், அற்பபேதி, முகியுண்ணமை, இமையொட்டிக்கொள்வதால், கண்களோ மிமிண்டிக்கொண்டு மண்ணிற்புரண்டு அழுதல், சுரம், நாலைக்கண்டு சிறி அழுதல் என்னுங் குணங்களுண்டாகும்.

3. குளிசதோஷம்:—கருப்பம் வேண்டின ஸ்திரீகள் குளிசம் கட்டிக்கொள்ளுமபோது அவ்விடத்தில் எதிர்ப்பட்ட சிசுக்களுக்கு தோஷங்கண்டு உச்சியில் பள்ளம், கண்ணில் குழி விழுதலுடன சலம் வடிதல், தேகமிளைத்தல், அதிசாரம், குப்பதின் விரணம், அடிக்கடி தாகம், நெஞ்சலல், வெருட்டியபோல அழுதல், கால்களில் நீக்கம், வாந்தி என்னும் குணங்கள் உண்டாகும்.

3. தூரஸ்திரீ பரிசதோஷம்:—தேகம் இளைத்து பலநிறமாகத் தோற்றல், தர்க்கந்தம், பால் குடித்தாலும் அடிக்கடி கக்குதல், தாய் மீதில் இச்சையில்லாமை, பேதி, சுரம், உச்சந்தலையில் சிதளம், கண் மூடல், பீசுச்சாரல் என்னுங் குணங்களோ உண்டாக்கும். தூரஸ்திரீகள் இது தொடுவதால் ஏற்படுவதாம்.

4. சையோக புருஷபரிசதோஷம்:—கண்ணிலும் உச்சியிலும் சூழிவிழுதல், தேகத்தில் பச்சைநிறம, அல்லது வயிரநிறம் தோற்றல், சிறுசிறி அழுதல், அழுகையின் சத்தம் பகியின் ஓசையொத்திருத்தல், குடித்தபாலை எடுக்குதல் என்னுங் குணங்களுண்டாகும். இது சையோகஞ்செய்த புருஷர்கள் தீண்டுவதால் ஏற்படுவதாம்.

6. சையோகஸ்திரீ பரிசதோஷம்:—நெஞ்சலறுதல், கண்குழி விழுதல் வெளிறல், பெருமூச்சு, பால்குடியாமை, இரவிலும் பகலிலும அதிந்தினை, விபர்வை, மயக்கம் என்னுங் குணங்களோ உண்டாகும். இது சையோகஞ்செய்த ஸ்திரீகள் அந்த சையுடன் சிசுவைத் தொடுதலினால் ஏற்படும்.

7. அளிதோஷம்:—குடித்தபால் தங்காமை, தலையில் ரோமக்காலெல்லாம் சோதல், நெஞ்சில் புகை எழும்பி அடைத்தல்போலிருத்தல், தேகத்தில் சாற்றம், கைகால்களில் நோய் என்னுங் குணங்களோ உண்டாக்கும்

8. குளித்தவள் எடுத்த தோஷம்:—சீர வாட்டம், பால் தங்காமை, உச்சியில் சூழிவிழுதல், வாந்தி, கண்ணில் நீர்க்கம்மலுடன் சூழிவிழுதல், வாயுலறல் என்னுங் குணங்க ளுண்டாகும். தூரஸ்திரீ ஸ்நானஞ் செய்தவுடன் எதையும் அருத்தாமல் சிசுக்களோ எடுப்பதால் இந்த தோஷம் பிறக்கும்.

மேற்கூறிய எட்டுவித தோஷமும் மாந்திரிக சிகிச்சைகளால் விலகுமெனினும் ஔஷத சிகிச்சைகளும் அத்யாவசியமென்று அறிவும்.

9. தேரை தோஷம்:—காலுங்கையும் மெலிதலுடன் கட்டிப் போட்டதுப்போல கிடத்தல், சீரவாட்டம், வெளிறல், நிறம்மாறல் குரல்தெறித்தல், பால்குடியாமை என்னும் குணங்களோ உண்டாக்கும். இது தேரைகள் குழந்தையின்மேல் விழுந்து பீச்சுவதினால் உண்டாகுமெனவும் கூறப்படுகிறது.

பாலரோக தோஷம்

முற்கூறிய தோஷங்கள் தவிர சில தனிப்பட்ட ரோகங்களும் பாலகனைப் பிடித்து தோஷகுணங்களோ உண்டாக்கும். இதற்கு பாலரோகதோஷம் என்பர்.

வேதாகமங்களிற் கூறியவண்ணம் தித்தியகர்ம ஒழுக்கங்களைத் தவிர்த்து, அசாரமாகவும், அசுபாகவுமுள்ள மார்க்களின் பாவ பருத்தஞ் செய்களின் ஆரோக்கியத்தை அபகரிக்கும்பொருட்டி 12-வகைக் கிரகங்களால் பிடிக்கப்பட்டு தோஷகுணங்கள் எற்படும், இது 12-வகைப்படும். அவையாவன:—

1. ஸந்தனு கிரகம்:—இது குழந்தை பிறந்த முதல் காளிலாவது, முதல் மாதத்திலாவது முதல் வருஷத்திலாவது, சளை அல்லது நாயைப்பிடிக்கும். ஆரம்பத்தில் சுரம், தேகம் இளைத்தல், விக்கம, சானிதபேதி என்னும் குணங்களுண்டாகும்.

2. சுஸந்தனுகிரகம்:—இரண்டாவதுகாள், இரண்டாவதுமாதம், இரண்டாவது வருஷம் சளை அல்லது நாயைப் பிடிக்கும், சுரம், பல்லிக்கடித்தல், வயிறுப்பல், அன்னத்துவேஷம், கண்மூடல், எப் போதும் அழுகை என்னும் குணங்களை உண்டாக்கும்.

3. புதனு கிரகம்:—மூன்றுவதுகாள், மாதம், வருஷத்தில், சளை அல்லது நாயைப் பிடிக்கும. அப்போது சுரம், உரோமச் சிலிர்ப்பு, உடல்வலி, அன்னத்துவேஷம், கண்களை மூடிக்கொள்ளுதல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

4. முகமண்டலிகா கிரகம்:—நாலாவது காள், மாதம், வருஷத்தில் சளை அல்லது நாயைப் பிடிக்கும். அப்போது சுரம், சரீரசோய், தலை சுழற்றலோடு தலை இறங்கக்கூடாமை, கண்களை மூடிக்கொள்ளுதல் என்னும் குணங்களுண்டாகும்.

5. பிடாலிகா கிரகம்:—ஐந்தாம் காள், மாதம், வருஷத்தில், சளை அல்லது நாயைப் பிடிக்கும். அப்போது பூனைபோல் கத்தல், சுரம், இளைத்தல், வாசம், இருமல், சூலை, விக்கல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

6. சகுனி கிரகம்:—ஆறுவதுகாள், மாதம், வருஷத்தில் சளை அல்லது நாயைப் பிடிக்கும. அப்போது சுரமும் சரீரமெலிவும் வலியும் உண்டாகும்,

7. சுஷ்கரேவதி கிரகம்:—ஏழாவது காள், மாதம், வருஷத்தில் சளை அல்லது நாயைப் பிடிக்கும். அன்னத்துவேஷமும கொட்டாவியும் சரீரசோயும் உண்டாகும.

8. அந்தியவோடாலிகா கிரகம்:—எட்டாம் காளில், மாதத்தில் வருஷத்தில் நாயை அல்லது சளையப் பிடிக்கும். அப்போது அன்னத்துவேஷம், அடிக்கடி காலைநீட்டுதல், இளைத்தல், வலி, சதா அழுகை, கண்மூடல் என்னும் குணங்களுண்டாகும்.

9. மதபேதனு கிரகம்:—ஒன்பதாம் காளில், மாதத்தில், வருஷத்தில் நாயை அல்லது சளையப் பிடிக்கும். அப்போது சுரம், வாந்தி,

சரீரசோய், வயிறுப்பல், இருமல், அன்னத்துவேஷம், காதுவலி என்னும் குணங்களுண்டாகும்.

10. ரேவதி கிரகம்:—பத்தாம் காளில், மாதத்தில், வருஷத்தில் நாயை அல்லது சளையப் பிடிக்கும். அப்போது சுரம், வாந்தி, அன்னத்துவேஷம், இருமல், இளைப்பு, வயிறுப்பலோடு சகிக்கக் கூடாத சூலை என்னும் குணங்களுண்டாகும்.

11. அச்சுதா கிரகம்:—பதினோராவது காளில், மாதத்தில், வருஷத்தில் சளைவ அல்லது நாயைப் பிடிக்கும். அப்போது தேகம் இளைத்தல், சுரம், சர்வாங்கத்திலும் மிகுசோய், அன்னத்துவேஷம், விழித்தவிழி விழித்ததுப்போலிருத்தல் என்னும் குணங்கள் உண்டாகும்.

12. அற்புதாகிரகம்:—பனிரெண்டாம்காள், மாதம், வருஷத்தில் நாயை அல்லது சளையப் பிடிக்கும். அப்போது அறிவின்மை, பல்லிக்கடித்தல், அழுகை, கண்ணோய் உரோமச் சிலிர்ப்பு என்னும் குணங்களை உண்டாக்கும்.

பகஷி தோஷம்

சிலவகைப் பட்சிகளாலும் குழந்தைக்கு தோஷம் எற்படுவ துண்டு. இதனைப் பட்சிதோஷ மெனபர். இது அந்தி சந்தி, நடுப் பகல், பாதிராத்திரி ஆகிய காலங்களில் சுடுகாடு தெருக்களில் எடுத் துக்கொண்டு போவதினால் எற்படும்.

இச்சோய் வாந்தி, பேதி, தாகம், சுரம், அவயவங்கள் இளைத் தல், பலவீனம், பால் குடியாமை, கடுக்கல், அதிநித்திரை, தோன், இடிப்பு, கடுநெற்றி ஆகிய இடங்களில் குழிவிழுதல் என்னும் குணங்களுண்டாகும். இன்னும குடித்தபால் எதிர்த்தல், மயக்கம் சிறிதி அழுதல், தலைசோய், வயிற்றில் கடுப்புடன் காந்தல், கபாதிக் கம, உச்சியிலும் முகமார்பிலும் சுடுகை, காக்குவறளல், முகத்தில் பச்சையும் மஞ்சளுங்கலந்த நிறம்போல் தோற்றல் என்னும் குணங் களும் உண்டாகும்.

இது நான்குவகைப்படும் அவையாவன:—

1. ஆண்பகஷி தோஷம்:—தாகம், பேதி, சரீரம் உலர்தல், கண் கள் குழிவிழுதல், காக்கைபோட்டுதல் என்னும் குணங்களையுண்டாக்கும்.

2. பெண்பகஷி தோஷம்:—சர்வாங்க கடுக்கல், காங்கை, தாகம், பேதி, பால்குடியாமை, கண்சொருகுதல், சீதபேதி, கடுப்பு, ஆசனம் பிதுங்கல், சிறியழுதல், தேகங்குறுகல், கண்ணோய், விக்கம், வாய்வீ றுதல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

3. மலட்டுப்பகுதி தோஷம்:—ஆபாசத்துடன் இளைப்பு, உச்சியில் குழிவிழுதல், வாந்திபேதி, தாகம், தேகதாபங்கள் என்னும் குணங்களை உண்டாகும்.

4. அலிப்பகுதி தோஷம்:—தோல், முதுகு, கண்டம், முழங்கை ஆகிய இடங்களில் குழிவிழுதல், வாந்தி, பேதி, தாகம் என்னும் குணங்களை உண்டாகும்.

பாலக்ரகபீடை உண்டாக காரணம்:—குழந்தைகளுக்கு தாய் தந்தையர்கள் மிகவும் அசாரமுடையவர்களாயும், குழந்தைகளை தேகத்தையும் தலை முதலியதை சுத்தப்படுத்தாமலும் தேகத்தின்மீது தர்க்கத்தமுண்டாகும்படியாக தேகத்தை கழுவாமலும் வைத்திருப்பதனால் பாலக்ரஹங்கள் பிடிக்கின்றன. ஆகையால் அப்பேர்ப்பட்ட க்ரஹங்கள் அணுகாமலிருக்க அப்போதைக்கப்போது குழந்தை வாந்தியெடுத்தாலும், மலஜலம் கழிந்தாலும், சுத்திசெய்து பரிசுத்தமாய் வைத்திருக்க வேண்டியது. கைவப்பெற்ற தாயார் அல்லது பால்கொடுக்கும் தாதி இந்நியம் கூடவேண்டியது. அனிந்த தலை முதலியதுகளை தோய்த்த தரித்துக்கொள்ள வேண்டியது. எப்பொழுதும் பரிசுத்தமாயும் தர்சாற்றமுள்ள எதுவும் குழந்தைமீதும் தன்மீதுமில்லாமலிருக்க ப்ரயத்தனிக்க வேண்டியது. சுசியாய் இருப்பதால் துஷ்டக்ரஹங்கள் அருகில் வெருண்டு பயப்பட்டு விலகிற்கும். ஆகையால் பரிசுத்தமாயிருத்தல், பால க்ரஹங்கள் அணுகாமலிருப்பதை ஓர் முக்கிய மருந்தாகும்.

பாலரோக சிகிச்சை

காய்ச்சல்களுக்கு அஷ்டமங்கள கிருதம்—வசம்பு, கோஷ்டம், வல்லாரை, கடுகு, கண்ணரி, இக்கப்பு, திப்பிலி இவைகளை அரைத்து கற்கஞ்செய்து அத்துடன் செய்யில்கலந்து கிருதபக்குவமாக காய்ச்சி வைத்துக்கொண்டால் இதற்கு அஷ்டமங்கள கிருதமென்றுப் பெயர். இந்த கிருதத்தை பிள்ளைகளுக்கு பானஞ்செய்வித்தால் கல்ல அறிவு, தீர்க்காயுளை, சுகஷ்டபுஷ்டி இவைகள் உண்டாகும். பிசாசுகள், ராக்ஷசபாதகன், பூதங்கள், மாந்ரீகள் இவைகள் பிடிக்காது. மேலும் க்ரஹங்கள் விலகிப்போக சாந்தி கருமங்கள் இவைகள் முதலியவைகளை செய்யவேண்டியது.

வாதசுர கியாழம்:—பஞ்சமூலங்களை பொழம்வைத்து குடித்தாலும் அல்லது சிற்றில்கொடி ராஸ்னை, வெட்பாலைபரிசி, சிற்றாமுட்டி கோரைக்கிழங்கு இவைகளை பொழம்வைத்து சிலவுக்கு குடிப்பித்தாலும் வாதசுரம் நீங்கும்.

பித்தசுர கியாழம்:—கண்ணரி, அல்லி, பூனை, சிற்றில்கொடி, தாமரைதண்டு, பற்பாடகம் இவைகளை பொழம்வைத்து பிள்ளைகளுக்கு வேட்டிலைல் பித்தசுரம் நீங்கும்.

வேறு:—கோரைக்கிழங்கு, பற்பாடகம், வெட்டிவேர், அதிமதுரம், தாமரைதண்டு இவைகளை பொழம் வைத்து பிள்ளைகளுக்கு குடிக்கவைத்தால் எரிச்சல், வாந்தி, சுரம் இவைகள் நீங்கும்.

சந்ததசுர சிகிச்சை:—வேப்பிலை, சிற்றில்கொடி, பேயாவரை' பேய்ப்புடல், வெட்பாலைபரிசி இவைகளை பொழம்வைத்து பிள்ளைகளுக்கு கொடுத்தால சந்ததசுரம் விலர்த்திக்கும்.

வாதபித்தசுர கியாழம்:—கோரைக்கிழங்கு, பற்பாடகம், சிற்றில்கொடி, சிலைமிலவேம்பு, சக்கு இவைகளை முறைப்படி பொழம் வைத்து சிலவுக்கு தக்கபடி அளவாய் கொடுத்தால வாதபித்தசுரம் நீங்கும்.

பித்தகபசுர கியாழம்:—கொத்தமல்லி, சந்தனம், தாமரைதண்டு, கோரைக்கிழங்கு, வெட்பாலைபரிசி, செல்லிவற்றல், பேய்ப்புடல் இவைகளை முறைப்படி குடிநீரிட்டு பிள்ளைக்குக் கொடுத்தால பித்தகபசுரம் விலர்த்தியாகும்.

வாதகபசுர கியாழம்:—சிலைமிலவேம்பு, கோரைக்கிழங்கு, சிற்றில்கொடி, சக்கு இவைகளை பொழம்வைத்து பிள்ளைக்குக் கொடுத்தால வாதசிலேஷ்மசுரம் விலர்த்திக்கும்.

கபசுர கியாழம்:—கடுக்காய், செல்லிவற்றல், திப்பிலி, சித்திரமூலம் இவைகளை பொழம்வைத்து பிள்ளைக்கு குடிப்பித்தால சிலேஷ்மசுரம் விலர்த்தியாகும் அக்னிதீபனம் உண்டாகும்.

சந்நிபாதசுர சிகிச்சை:—தசமூல பொழத்தில் திப்பிலிச்சூரணத்தைக் கலர்த்து பிள்ளைகளுக்கு கொடுத்தால சுரம், மயக்கம் இவைகளுடன்கூடிய சந்நிபாதசுரம் நீங்கும்.

சுரக் கியாழம்:—அதிமதுரம், ஆடாதோடை, பற்பாடகம், வெட்டிவேர், வேப்பங்கொழுந்து, சிலைமிலவேம்பு இவைகளை பொழம்வைத்து பிள்ளைக்குக் கொடுத்தால, இருமல், பித்தம், சுரம், சுவாசம் இவைகள் நீங்கும்.

முறைசுர கியாழம்:—திராக்ஷை, பேய்ப்புடல் திரிபலை, வேம்பு, ஆடாதோடை இவைகளை பொழம்வைத்து கொடுத்து வந்தால் முறைக்காய்ச்சல் நீங்கும்.

வேறு:—சிற்றில்கொடி, சந்தனம், வெட்டிவேர், கொத்தமல்லி, சக்கு இவைகளை பொழம்வைத்து அதில், தேன், சர்க்கரை கலர்த்து குழந்தைகளுக்கு கொடுத்தால முறைக்காய்ச்சல் நீங்கும்.

சர்வசுர கியாழம்:—கோரைக்கிழங்கு, கடுக்காய்த் தோல், வேம்பு, பேய்ப்புடல், அதிமதுரம் இவைகளை பொழம் வைத்து கொஞ்சம உஷ்ணமாக குடிக்கும்படி செய்தால சகல சுரங்களும் நீங்கும்.

பால்குடிக்க சிகிச்சை:—பிள்ளைகள் பிறந்தபிறகு பால் உண்ணு மல்போனால் இஞ்சுப்பு, கடுக்காய், வெல்லவற்றல் இவைகளை சற்கம் செய்து தேன்கலந்து சுவைக்கு ஈக்கில் தடவினால் பால் உண்ணும்.

அதிசார சிகிச்சை:—தேன்கொடுக்குசெடி, ஆனைநிப்பிலி, வோத் திரப்பட்டை இவைகள் சமனடை யெழுமனவைத்து சுவைக்கு பான்ஞ் செய்தித்தால் அதிசாரம் நீங்கும்.

வேறு:—வெல்பொறி, இஞ்சுப்பு, மாம்பட்டை, இவைகள் சம னடை சூரணித்து தேன்கலந்து சுவைக்கு ஈளில் தடவினால், வாந்தி, அதிசாரம் இவைகள் நீங்கும்.

வேறு:—மாங்கொட்டைபருப்பு, வோத்திரப்பட்டை, வெல்லச் சாறு, இவைகள் சமனடை, எருமைமோரில் கலந்து பிள்ளைக்கு பானஞ்செய்வித்தால் அதிசாரம் நீங்கும்.

வேறு:—புங்கன், ரசாஞ்சனம், கோரைக்கிழங்கு இவைகளை சூரணித்து தேன்விட்டுக்கலந்து சுக்கில் தடவினால் ரகம், வாந்தி, அதிசாரம் இவைகள் நீங்கும்.

வேறு:—நிப்பிலி, ரசாஞ்சனம், மாம்பருப்பு இவைகள் சம னடை சூரணித்து தேன்விட்டுகலந்து பிள்ளைகளுக்கு ஊட்டினால் அதிசாரம் நீங்கும்.

வேறு:—காட்டாத்திப்பூ, வில்வப்பழம், கொத்தமல்லி, வோத் திரப்பட்டை, வெட்பாலிலை, வெட்டிவேர் இவைகளை லேகியம் செய்து தேன்கலந்து குழந்தைக்கு கொடுத்தால் சுரம் அதிசாரம் நீங்கும்.

வேறு:—வோத்திரச்சக்கை, நிப்பிலி, வெட்டிவேர் இவைகளை சூரணித்து தேன்விட்டி குழந்தைக்கு ஊட்டினால் அதிசாரம் நீங்கும்.

காட்டு அத்திப்பூ ஊபமிட்டாலும் அதிசாரம் நீங்கும்.

வேறு:—வாய்விளங்கம் ஓமம், நிப்பிலி, வெட்பாலை அரிசி, இவைகளை சூரணித்து வெல்லில் கலந்து பிள்ளைக்கு கொடுத்தால் அதிசாரம் நீங்கும்.

கிராணிக்கு சிகிச்சை:—ஓமம், சீரகம், மிளகு, நிப்பிலி, வெட் பாலிலை, சுக்கு இவைகளை சூரணித்து தேன்கலந்து குழந்தைக்கு கொடுத்தால் கிராணிரோகம் நீங்கும்.

வேறு:—நிப்பிலி, அதிவிடயம், வில்வபழம், சுக்கு, ஓமம், இவை களை சூரணித்த தேன்நெய் இவைகளைகலந்து பிள்ளைகளுக்கு கொடுத் தால் கிருணி நீங்கும்.

வேறு:—சுக்கு, வில்வபழம் இவைகளை சூரணித்து வெல்லத் துடன்கலந்து பிள்ளைக்குக் கொடுத்தால் நிரிதோஷத்தினால் உண் டான கிருணி நிவர்த்தியாகும்.

ரத்தாதிசார சிகிச்சை:—இலவன்பிசின், மேல்மல்லி, காட் டாத்திப்பூ, தாமரைப்பூ இவைகளை சூரணித்து தண்ணீர்விட்டுக் காய்ச்சி பிள்ளைக்கு கொடுத்தால் ரத்தாதிசாரம் நீங்கும்.

சர்வாதிசார சிகிச்சை:—சுக்கு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், வெட்பாலிலை இவைகளை யெழுமனவைத்து பிள்ளைக ளுக்கு கொடுத்தால் சகல அதிசாரரோகங்கள் நீங்கும்.

அரிணை சூலைக்கு சிகிச்சை:—கொத்தமல்லி, சுக்கு இவைகளை யெழும் வைத்து சாப்பிட்டாலும், அல்லது மிளகு, நிப்பிலி, சித்திர மூலம், சீரகம் இவைகள் சூரணத்தை மேற்கூறிய யெழுதில் கலந்து சாப்பிட்டாலும் சூலை, ஆமம், அரிணம் முதலிய ரோகங்கள் நிவர்த்தியாகும்.

அரிணபேதி சிகிச்சை:—இலவங்கப்பட்டை, இலவங்கப்பத் திரி, நிறறாத்தை, சுக்கு, முருக்கன்பட்டை, கோஷ்டம், சிற்ரு முட்டி, இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றினால் அரைத்து சர்க்கரைக் கலந்து பிள்ளைகளுக்கு கொடுத்தால், அரிணம், பேதி முதலியன நிவர்த்தியாகும்.

இருமல் காச சிகிச்சை:—பூனைகாஞ்சொரிவேர், நிப்பிலி, திரா ஷை, கடுக்காய்பிஞ்சு, இவைகளை சூரணித்து தேனில்கலந்து மூன்றுநாள் பிள்ளைகளுக்கு ஊட்டச்செய்தால் இரைப்பு, இருமல் இவை நீங்கும்.

காச சுவாசாதி சிகிச்சை:—நிப்பிலி, பூனைகாஞ்சொரிவேர், திரா ஷை, கடுக்காய்பூ, ஆனைநிப்பிலி, இவைகளை சூரணித்து தேன் அல் லது நெய் கலந்து பிள்ளைகட்கு கொடுக்க இரைப்பு, இருமல், சுரம் இவைகளை குணமாக்கும்.

காச சிகிச்சை:—வெல்லம் பாகுபிடித்து சுக்கு, மிளகு, நிப்பிலி, இந்துப்பு, இலவங்கம் சூரணித்து அதில்போட்டு இளகமாக்கி பிள்ளை களுக்கு கொடுத்துவர காசரோகம் நீங்கும்.

கிருமிக்கு சிகிச்சை:—வாய்விளங்கத்தைச் சூரணித்து தேனுட னாவது, அல்லது முருக்கன் விரையைச் சூரணித்து தேனுடனாவது கொடுத்துவர அல்லது எளிக்காது இலேசம கொடுத்துவர குழந்தை களின் வயிற்றிலிருக்கும் கிருமிகள் நாசமாகும்.

காச சிகிச்சை:—கோஷ்டம், அதிவிடயம், கடுக்காய்பூ, நிப் பிலி, பூனைகாஞ்சொறிவேர், இவைகளை சூரணித்து தேனில்கலந்து பிள்ளைகளுக்கு கொடுத்தால் ஐந்துவித இருமல்கள் நீங்கும்.

வேறு:—கண்டங்கத்திரி, இலவங்கம், சிறுகாப்பூ இவைகளை சூரணித்து தேனில்கலந்து பிள்ளைகளுக்கு கொடுத்தால் வெகுகாலமாக பிருக்கும் இருமல் நீங்கும்.

விக்கல் சிகிச்சை:—பொன்னிறமான காவிக்கல்லை சூரணித்து தேனில்கலந்து பிள்ளைகளுக்கு காக்கில் நடவினல் அந்தக்ஷணமே விக்கல் நீங்கும்.

வேறு:—நிப்பிலி காட்டுமிளகு, இலவங்கம் இவைகளை பொழம்வைத்து அத்துடன் சுட்ட பெருங்காய சூரணத்தையும் தேனையும் விட்டு கலந்து பிள்ளைகளுக்கு கொடுத்தால் சானிபாதங்களான விக்கல்கள் நீங்கும். இது தன்வந்தரி மதம்.

வேறு:—கடுகுரோகணி சூரணத்தை தேனில்கலந்து பிள்ளைகள் காக்கில் நடவினல், சீக்கிரமாக விக்கல் நீங்குவதுடன் வெகு காளாக பிருக்கும் கக்குதலும் நீங்கும்.

வாந்திக்கு சிகிச்சை:—கடுக்காய் சூரணத்தை தேனில்கலந்து பிள்ளை காக்கில் நடவினல் அந்தக்ஷணமே வாந்தி நிற்கும்.

வேறு:—அரசன்பட்டையை உலர்த்தி அதை சுட்டு, சாம்பலாக்கி தண்ணீரில் கலந்து பிள்ளைகளுக்கு கொடுத்தால் வாந்திகள் நிற்கும்.

வேறு:—மாம்பருப்பு, நெற்பொரி, இந்துப்பு, இலவங்கம் சூரணித்து நெனில் கலந்து பிள்ளைகள் காக்கில் நடவினல், வாந்திகள் நிற்கும்.

விக்கலுக்கு சிகிச்சை:—நிப்பிலி, அதிமதுரம் இலவங்கம் சூரணித்து நெனும் சர்க்கரையும் கலந்து கொடிமாதளம்பழச் சாற்றில் சிலவுக்கு கொடுத்தால் விக்கல், வாந்தி இலவகள் நீங்கும்.

ரோதன நிவாரக சிகிச்சை:—நிப்பிலி, நிரிபலி இலவங்கம் சூரணித்த தேன், நெய்விட்டு கலந்து சிலவுகளுக் கொடுத்தால் அழுகையை விட்டு சுகமாக பிருக்கும்.

விரேசனத்திற்கு லேபனம்:—ஆமணக்குவிதைபருப்பு, எலுமிச்சுழுக்கை, இவ்விரண்டையும் வேப்பிலை சாற்றினல் அரைத்து சிலின குதத்திலும், நொப்புளிலும் நடவினல் சுகமாக பேதியாகும்.

தேக புஷ்டிக்கு அசுவகந்திகிருதம்:—அமுக்கிருக்கிழங்கு கற்கம் ஒருபாகம், பால் எட்டுபாகம், பசெய் இரண்டு பாகம் இவைகளை வொன்றுசேர்த்து நூல பாண்டத்திலிட்டு நெய்பதமாக காய்ச்சி குழந்தைகளுக்கு கொடுத்துவர தேகபுஷ்டி, பலம் இவைகளுண்டாகும்.

முகசிராவ சிகிச்சை:—சன்னரி, நிலவேம்பு, லோத்திரப்பட்டை, அதிமதுரம் இவைகளை பொழம் வைத்து அக்கிபொழத்தினல் குழந்தையின் வாலை கழுவினல் வாயிலிருந்து வடியும் சொள்ளுநிவர்த்தி பாகும்.

மூத்திர கிருச்சர சிகிச்சை:—வெட்டிவேர், சிற்றில்கொடி, சுக்கு, அமுக்கிருங்கிழங்கு, நெல்லித்தோல், நெரிஞ்சல் இவைகளை பொழம் வைத்து தேன்கலந்து குழந்தைக்கு ஊட்டினல் மூத்திர கிருச்சிரோகம் நிவர்த்தியாகும்.

வாதரோக சிகிச்சை:—ஆமணக்கு எண்ணெயில் பசும்பால் அல்லது கோமூத்திரமாவது கலந்து அதில் குங்கிலிய சூரணம் சேர்த்து குழந்தைகளுக்கு கொடுத்துவந்தால் வாதரோகம் நிவர்த்தியாகும்.

ரத்த பித்தத்திற்கு சிகிச்சை—ஆடாதோடை யிலைச்சாற்றில் தேன்சர்க்கரை கலந்தாவது, அல்லது, தூலந்துளிர் கற்கத்தில் தேன் சர்க்கரை கலந்தாவது, குழந்தைகளுக்கு கொடுத்துவர ரத்தபித்தம் நீங்கும்.

மூக்கிலிருந்து ரத்தம் ஒழுகலுக்கு சிகிச்சை:—மாதளம்பழம் அல்லது பூச்சாறு, அருகம்புல் சாறு இவைகளை நெய்யுஞ்செய் விட்டால் நெகிழுகளுக்கு மூக்கிலுருந்து ஒழுகும் ரத்தமானது நின்று விடும்.

வாதகுன்ம சிகிச்சை:—சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், இந்துப்பு, சீரகம், கருஞ்சீரகம், வருத்த பெருங்காயம், இவைகளை சம எடையாக சூரணித்து முதல் சாதப்பிடியில் இந்த சூரணங்கலந்து நெய்யுடன் சாப்பிட்டால் குழந்தைகளுக்கு அக்கினி புஷ்டியுண்டாவதுடன் வாதகுன்மரோயும் நிவர்த்தியாகும்.

அபஸ்மார சிகிச்சை:—களியாண பூனிக்காய் சாற்றில் அதிமதுரத்தை சூரணித்துபோட்டு எழுநாள் குழந்தைக்கு கொடுத்துவர அபஸ்மாரரோகம் நீங்கும்.

மூர்ச்சை சிகிச்சை:—இலந்தைவிரை, தாமரை கிழங்கு, வெட்டிவேர், சந்தனம், சிறுகாப்பூ இவைகளை சூரணித்து தேன் கலந்து குழந்தைக்கு கொடுத்தால் மூர்ச்சைரோகம் நிவர்த்தியாகும்.

பாண்டுரோக சிகிச்சை:—பவளசூரம், வாய்விளங்கம், திப்பிலி இவைகளை சூரணித்து தேன்கலந்து குழந்தைக்கு கொடுத்தால் பாண்டுரோகம், பக்கசூலை இவைகள் நிவர்த்தியாகும்.

வேறு:—லோதரபற்பம், நிரிபலி இவைகளை கோமூத்திரத்தினல் அரைத்த தேன் அனுபானத்தில் கொடுத்த மோர்சாதம் பத்தியம் வைத்தால் குழந்தைக்கு உண்டாகும் பாண்டுரோகம், இருமல், சூலை, இவைகளை நிவர்த்திக்கும்.

காசசுவாச சிகிச்சை:—ஆடாதோடை, சுக்கு, கண்டங்கத்திரி, சித்தரத்தை, இவைகளை யெழும் வைத்து குழந்தைக்கு கொடுத்து வர இருமல் இளைப்பு இவைகள் நீங்கும்.

சரீரபுஷ்டிக்கு சிகிச்சை:—வெண்ணெய், சர்க்கரை, தேன், இவைகளை யொன்றாகக் கூட்டிவைத்த வுடனே பால்சாதம் கூட்டி னால் குழந்தைக்கு சரீரம் புஷ்டியாகும்.

ஸ்திரீரோக சிகிச்சைகள் (வேறு)

கருஞ்சீரகக் கியாழம்:—கருஞ்சீரகம், ஓமம், சதகுப்பை, மூங்கிலிலை, மாவிலிங்கப்பட்டை, பரங்கிச்சக்கை, சுக்கு, திப்பிலி, சித்திரமூலவேர்ப்பட்டை வகைக்கு வராகனெடை 1, இவைகளை யிறக்கி ஓர் பழைய மட்பாண்டியிலிட்டு, ½-படி சுத்தஜலம் விட்டு ஆழாக்காகச் சண்டக் காய்ச்சி வடித்து தினம் ஒருவேளையாக காலையில் மூன்று நாட்கள் கொடுக்க பிரசவித்த ஸ்திரீகட்குண்டான உதிரச்சிக்கல் நீங்கும். மற்றும் இதனைச் சாதாரணமாக மாதவிலக்கு காலங்களில் சூதகஞ் சரிவர வெளிப்படாத ஸ்திரீகட்கும் அச்சமயங்களில் கொடுத்துவர சூதகத்தை ஒழுங்குபடுத்தும்.

சாமந்திக் கியாழம்:—சீமை சாமந்திப்பூ, சன்னவலவங்கப் பட்டை வகைக்குப் பலம்-½, இவைகளை யிறக்கி அரைபடி ஜலத்தில் போட்டு ஆழாக்காகச் சண்டக் காய்ச்சி வடித்து வேளைக்கு அரை ஆழாக்குவீதம் தினம் இருவேளையாகத் தனியாகவாவது அல்லது அத்துடன் 5-துளி எடை ராயருசி சாம்பலைச் சேர்த்தாவது கொடுத்துவர சூதகச்சிக்கல் நீங்கும். அழுக்கு கன்று வெளிப்படும்.

மூங்கிலிலைக் கியாழம்:—மூங்கிலிலை, வாழைபிலைச்சாறு, முள்ளுக்கீரைத்தண்டு, ராயருசிஇலை வகைக்குப் பலம்-½ வீதஞ் சேர்த்து ஓர் பழைய புதுச் சட்டியிலிட்டு ½-படி தண்ணீர்விட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து ஆழாக்காகக் குடிநீரிட்டு வடித்து இருவேளையாகப் பங்கிட்டு காலை மாலை கொடுத்துவரவும். இப்படி மூன்றாள் கொடுக்க பிரசவித்தவர்கட்கு காணும் உதிரச்சிக்கல் நீங்கும்.

தும்மட்டிக்காய் மெழுகு:—ஆற்ற தும்மட்டிக்காய் சாறு படி-2, பொரித்த பெருங்காயம் பலம்-2, பொரித்த வெள்ளாரம் பலம்-½, இந்துப்பு, கடுகுரோகணி, கருஞ்சீரகம், வால்மிளகு வகைக்குப் பலம்-½, இவற்றின் தும்மட்டிக்காய்சாறு நீங்கலாக மற்ற சரக்குகளை இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொள்க. பிறகு

தும்மட்டிக்காய் சாற்றை ஓர் பழைய புதுச் சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி சிறுதீயாக எரித்து பாதிபாகத்திற்குமேல் கண்டி குழம்பு பதமாக வருஞ்சமயத்தில் வஸ்திரகாயஞ் செய்து வைத்துள்ள சூரணத்தைச் சேர்த்துக் கலக்கி மெழுகுபதத்திற்கு கிண்டி இறக்கவும். இதில் வேளைக்கு குன்றி அளவு வீதம் பனைவெல்லத்தில் வைத்து தினம் ஒருவேளையாக காலையில் 3-நாள் கொடுக்க சூதகச்சிக்கல், சூதக வயற்றுவலி, சூதகவாயு முதலியன குணமாகும்.

பெருங்காய லேகியம்:—பொரித்த காயம், கிராம்பு, வால்மிளகு, சித்தரத்தை, கோஷ்டம், அதிமதுரம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம், செவ்வியம், கண்டுபாரங்கி, சடாமாஞ்சில், வாய்விளங்கம், கருஞ்சீரகம், சோம்பு, சதகுப்பை வகைக்குப் பலம்-½, சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், தாளிசபத்திரி, கசகசா வகைக்குப் பலம் ½, பரங்கிச்சக்கை பலம்-1, ஓமம் பலம்-2½, ஜாதிக்காய் பலம் ½, இவைகளை இளவறுப்பாய் வறுத்திடித்துச் சூர்ணித்து வைத்துக்கொள்க. பின்பு 20-பலம் பனைவெல்லத்தை ஜலம் விட்டுக் கரைத்து வடிகட்டி ஓர் கடாயிலிட்டு அடுப்பிலேற்றி எரித்து பாகுபதத்தில் முன் தயார்செய்து வைத்துள்ள சூரணத்தைக் கொட்டிக் கிளரி, 5-பலம் நெய் சேர்த்துக் கிண்டி இறக்குக.

இதில் வேளைக்கு அரை தோலா வீதம் தினம் இருவேளையாக கொடுத்துவர பிரசவித்த ஸ்திரீகளுக்கு காணும் உதிரச்சிக்கலை நீக்கி சூதகத் தடையினால் ஏற்படக்கூடிய நோய்கள் யாவும் வராதபடி தடுக்கும்.

மூசாம்பர மெழுகு:—சீமை மூசாம்பரம் பலம்-7, வாலேந்திர போலம் பலம்-4, பழைய வெல்லம் பலம்-4, குங்குமப்பூ பலம்-2, பெருங்காயம் பலம் 2, கருப்பூரம் பலம்-1, இவைகளை முறைப்படிக் கல்வத்திலிட்டுத் தனித்தனியாகத் தேன்விட்டு மெழுகுபதத்திற்கு அரைத்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு தேற்றாங்கொட்டைப் பிரமாணம் தினம் இருவேளையாக பனைவெல்லத்தில் கொடுத்து, உடனே சோம்புத்தீநீர் அல்லது சோம்புச்குடிநீர் ½-முதல் 1-அவுன்ஸ் கொடுக்கவும். இப்படி மூன்றாட்கள் அருந்த பிரசவித்த ஸ்திரீ கட்கு காணும் சூதகச் சிக்கலை நீக்கி கிரமமாக வெளிப்படுத்தும். மற்றும் இது சூதகசிக்கல், சூதக வயிற்றுவலி, சூதகவாயு, சூதகக்கட்டி முதலியவைகளையும் குணப்படுத்தும்.

சதாப்பிலைச் சூரணம்:—நிழலிலுலர்த்திய சதாப்பிலை சேகரம், அதிமதுரம் கருஞ்சீரகம், சதகுப்பை, சன்னவலவங்கப்பட்டை, வகைக்குப் பலம்-1, தனியா பலம்-6, இவைகளை இடித்துச் சூர்ணித்து வைத்துக்கொண்டு வேளைக்குத் திரிகடிப்பிரமாணம் சமன் கலந்துகொண்டு சேர்த்த தினம் இரண்டு அல்லது மூன்றுவேளை

வீதம் கொடுத்துவர பெண்களுக்குக் காணும் சூதகசிக்கல், சூதக வயிற்றுவலி முதலியன குணமாகும்.

பட்டுக்கறுப்பு :—வெள்ளைப் பாஷாணம் பலம்-½, இலிங்கம் பலம்-1, இரசம பலம்-1, கந்தகம் பலம்-½, பூரம் பலம்-½, வீரம் பலம்-½, காந்தம் பலம்-½, காபி பலம்-½, கிராம்பு பலம்-½.

இவைகளை முறைப்படி சுத்திசெய்து கல்வத்திலிட்டுப் பொடித்துச் சிற்றுமணக்கெண்ணெயைத் தளிதளிபாக விட்டு அரைத்து மெழுகு பதத்தில் உருட்டி எடுத்து, அரைப் பட்டுத்துணியைச் சுற்றி, பட்டுநூலால் கட்டி, அதன்மீது சித்திரமூலவேர்ப்பட்டையை நீர்விட்டு கெட்டிபதமாக அரைத்தெடுத்த கற்கத்தைக் கவித்து சற்று ஈரம் வர உலர்த்தி ஓர் சட்டியில் பரிமணல் கொட்டி நடுவில் மருந்தைவைத்து மேலும் மணல்கொட்டி மேலகன்முடிச் சீலை மண்செய்து 50-60 விரட்டியில் புடமிட்டு ஆறினபின்பு கவசத்தை நீக்கி மருந்தைமட்டும் பொடித்துக்கொள்க. இதில் வேளைக்கு ½-முதல் 1-குன்றி எடைவீதம் தினம் இருவேளையாக தேன் அல்லது தக்க அனுபானங்களில் கொடுத்துவர சூதகவாய்வு, சூதக வலி, சூதகசன்னி, வாதரோகங்கள் முதலியன குணமாகும்.

கழற்சி மாத்திரை:—கழற்சிவிதைச் சூரணம் பலம்-1, தானித்த கற்கண்டுத்தூள் பலம்-1 இவையிரண்டையும் கல்வத்திலிட்டு சிறிது வெந்நீர் தெளித்து அரைத்து சிறு தேற்றாங்கொட்டையளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தவும். இதில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் இருவேளையாக கொடுத்துவர பெண்களுக்கு மாதந்த ருதுகாலத்தில் காணும் சூதகவயிற்றுவலி குணமாகும். மற்றும் இது ஆண்களுக்குக் காணும் அண்டவாயு, அண்டவீக்கம் முதலியவைகட்கும் பயன்தரும்.

அப்ளாகார பற்பம் :—அப்ராகாரத்தை நீர்விட்டுக் கரைத்து வடிகட்டி அடுப்பிலேற்றி எரித்து குழம்பு பதமாக காய்ச்சி வெப்பலில் வைத்து உலர்ந்ததும் பொடித்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு 1-2 கிட்டிக்கை பிரமாணம் எடுத்து, ஓர் எலுமிச்சம்பழத்தைப் பாதியாக அரிந்து ஓர் பாதியில் வைத்து மெல்ல தின்னும் படிச் செய்யவும். இப்படி தினம் ஒரு வேளைவீதம் காலையில் மூன்று நாள் மாதவிலக்கு வருஞ்சமயத்தில் கொடுத்துவர பெண்களுக்குக் காணும் சூதகவயிற்றுவலி குணமாகும். இப்படி மும்முறை அதாவது மூன்று மாதவிலக்கு காலங்களில் கொடுத்துவர சூதக வாய்வினால் ஏற்பட்ட வயிற்றுவலி முதலியவைகள் நீங்கி சந்தானவிருத்தியும் ஏற்படும்.

மூசாம்பர மாத்திரை :—மூசாம்பரம், பொரித்த வெங்காரம் பொரித்த காயம், அன்னபேதிச் செந்தூரம் வகைக்கு சமன் எடுத்துக் கல்வத்திலிட்டு கற்றுழைச்சாறுவிட்டு அரைத்து

குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தவும். 1 இதில் வேளைக்கு ஒரு மாத்திரைவீதம் தினம் இருவேளை கொடுத்துவர சூதக வயிற்றுவலி குணமாகும்.

ஜீரகாதி யரிஷ்டம் :—சீரகம் பலம்-8, கருஞ்சீரகம் பலம்-8, இவைகளை சன்குபடி நீர்விட்டு ஒருபடியாக சண்டக் கியாழம் காய்ச்சிவடித்து ஆறினபின்பு அதில் 24-பலம் வெல்லத்தைக் கரைத்து அதில் காட்டாத்திப்பூ பலம்-1½, சுக்கு வராகனெடை-1½, ஜாதிக்காய், சோளைக்கிழங்கு, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம், சிறாகப்பூ, ஓமம், இலவங்கம் வகைக்கு வராகனெடை-½ வீதம் இடித்த சூரணத்தைப்போட்டுக் கலக்கி ஓர் மட்பாண்டத்திலிட்டு வாய்மூடி சீலைசெய்து ஓர்மாதம் அப்படியே வைத்துவிடுக. பின்பு அதை வடித்து வைத்துக்கொண்டு வேளைக்கு ½-முதல் ½-அவுன்சு வீதம் தினம் 2 அல்லது 3-வேளை சிறிது நீருடன் கலந்து உணவிற்குப் பின்பு அருந்தவைச் செய்யவும். இதை பிரசவித்த ஸ்திரீகட்கு வழங்கிவர பிரசவத்திற்குப்பின் காணும் சூதகத்தடை, வயிற்றுவலி, சுரம், முதலிய வராமல் தடுப்பதுடன் சூதகத்தை கிரமப்படுத்திக் கெற்பப் பைக்கு வலிவையும் தரும்.

கலிங்காதி எண்ணெய் :—வரிக்கும்மட்டிக்காய் சாறு படி-1, வெள்ளை வெங்காயச்சாறு படி-1, எலுமிச்சம்பழச்சாறு படி-1, மகிழவேப்பிலைச்சாறு படி-1, ஆமணக்கெண்ணெய் படி-1 இவைகளை ஓர் தாலபாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து வண்டல் மெழுகுபதம் வருஞ்சமயத்தில் வடித்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு ½-முதல் ½-அவுன்சுவீதம் தேகதிடத்திற்கு தக்கபடி தினம் ஒருவேளை காலையில் நீராகாரத்தில் கலந்து மாதந்த ருதுகாலமாகிய மூன்று நாட்கள் கொடுத்துவரவும். இதனால் பேதியாகும். ஒருகால் பேதி அதிகமாயின் அளவை சிறிது குறைத்துக்கொள்க. பேதியாகாவிடில் அளவைச் சிறிது அதிகப்படுத்திக் கொள்ளலாம். மருந்து சாப்பிடும்போது மூன்று நாட்களும் உப்பில்லா பத்தியமாய் இருந்து நான்காம் நாள் இச்சாபத்தியமாய் இருந்து பிறகு ஸ்நானஞ் செய்வித்து எல்லாம் கூட்டவும். இப்படி 2-3 மாதந்த ருதுகாலங்களுக்கு சாப்பிட்டுவரும்படிச் செய்ய ருதுகாலத்தில் காணும் வயிற்றுவலி, சூதகக்கட்டி, சந்தகுன்மம், மலட்டுப் புழுவினால் ஏற்பட்ட உபத்திரவம் முதலியன யாவும் நீங்குவதுடன் மலடுரோகமும் குணமாகும். இதுமலடு நீங்கலாக மற்ற மலடுகள் யாவும் நீரும்.

பெரும்பாட்டிற்குச் சிகிச்சை:—அத்திப்பட்டையை சிறு துண்டாக நறுக்கி மோர் தெளித்து இடித்துப் பிழிந்தெடுத்த சாற்றில் வேளைக்கு 2-3 அவுன்சு வீதம் தினம் 2 அல்லது 3-வேளையாக கொடுத்துவர பெரும்பாடு நீங்கும்.

சாவல்பட்டையை இடித்துச் சூரணித்து ½-சோளா எடை எடுத்து, அரை ஆழாக்கு கருங்குறுவை யரிசி மாவுடன் கூட்டிச் சலம் தெளித்துப் பிசைந்து பிட்டவியலாகச் செய்து சர்க்கரை, நெய் கூட்டிக் கலந்து அருந்திவர பெரும்பாடு தேமேகி முதலியன குணமாகும்.

ஒரு பலம் ஓதியம்பட்டையைச் சுத்தத்து ஓர் பாண்டத்திலிட்டு அரைபடி ஜலம் சேர்த்து அடுப்பிலேற்றி எரித்து ஆழாக்காகச் சண்டக் காய்ச்சி வடித்து வேளைக்கு 1-அவுன்ஸ் வீதம் தினம் மூன்று வேளையாகக் கொடுத்தவர பெரும்பாடு குணமாகும்.

வாழைப்பூவை இடித்துச் சாறு பிழிந்தாவது அல்லது வாழைப் பூவைச் சுத்தத்து சிரிலிட்டுக் குடிநீர் செய்தாவது எடுத்து அத்துடன் பசுமோர் கூட்டிக் கொடுத்தவர பெண்களுக்கு காணும் பெரும்பாடு, வயிற்றவலி முதலியன குணமாகும்.

கற்முழைச் சோற்றுடன் பசுவெண்ணெய் கூட்டி அளந்து சிறு எலுமிச்சம்பழ அளவு எடுத்து அதில் 5-குன்றி எடை பொரித்த படிகாரத் தூளைக் கூட்டித் தினமிரு வேளையாகக் கொடுத்தவர பெரும்பாடு, வயிற்றவலி முதலியன குணமாகும்.

பூங்காவிச் செந்தூரம்:—சுத்தி செய்த பூங்காவி பலம்-1, பொரித்த படிகாரம் பலம்-1 இவைகளிரண்டையும் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு 5-குன்றி எடைவீதம் தினம் இரண்டு அல்லது மூன்று வேளை வீதம் வெண்ணெயில் கொடுத்தவர பெரும்பாடு, இரத்தபேதி, இரத்தமூத்திரம் முதலியன குணமாகும்.

அயக்கறுப்பு:—கருவேலம் பிஞ்சுகளை இடித்துச் சாறு பிழிந்து அதில் சுத்திசெய்த அயப்பொடியைப் போட்டுப் பிசரி அப்படியே ஐந்தாறு மாதங்கள் விட்டு வைத்த பின்பு கல்வத்திலிட்டு நன்கு அரைத்து மெல்லிய வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்க. இது கறுப்பாக இருக்கும். இதில் வேளைக்கு குன்றி எடை வீதம் தினம் இருவேளையாக நெய்யில் கொடுத்தவர பெரும்பாடு குணமாகும்.

கொம்பரக்காதிக் குடிநீர்:—கொம்பரக்குத்தூள் பலம்-1, சோதிரப்பட்டை வராகனெடை-½ இவைகளை ஓர் மெல்லிய நெய்யில் முடிந்து ஓர் பாண்டத்திலிட்டு ஆழாக்கு நீர்சேர்த்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து காலிலொன்றாகக் குடிநீரிட்டு கீழிறக்கி ஆறினபின்பு அரக்கு முடிச்சினைப் பிசைந்து பிழிந்தெரித்துவிட்டுக் குடிநீரை வடித்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு ½-அவுன்ஸ் வீதம் எடுத்து அத்துடன் இரண்டு வராகனெடை கற்கண்டுதூள் கூட்டித் தினம் இருவேளையாகக் கொடுத்தவர பெரும்பாடு குணமாகும்.

நாவல் கிருதம்:— அத்திப்பட்டை, சாவல்பட்டை, ஓதியம் பட்டை வகைக்குப் பலம்-10, செவ்வெற்றல் பலம்-5 இவைகளை நறுக்கி ஓர் பாண்டத்திலிட்டு 6-படி ஜலமிட்டு ½-படியாகச் சண்டக்காய்ச்சி வடித்து, அதில் கரும்புச்சாறு ஆழாக்கு, எலுமிச்சம் பழச்சாறு ஆழாக்கு, கல்லெண்ணெய் படி-¼, பசுநெய் படி-¼ விட்டுக் கலக்கி தாளிசபத்திரி, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், அதிமதுரம், சிறாகப்பூ, நிலப்பனங்கிழங்கு வகைக்கு வராகனெடை-½, பால் விட்டரைத்து சுற்றமாக்கி முன் திரவத்தில் சேர்த்துக் கரைத்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வண்டல் மெழுகுபதம் வந்து நெய் பிரியுஞ் சமயத்தில் இறக்கி ஆறினபின்பு வடித்து வைத்துக் கொள்க. இதில் வேளைக்கு 2 தேக்கரண்டி வீதம் தினம் இருவேளை கற்கண்டுதூள் சேர்த்து அருந்தும்படிச் செய்தவர பெரும்பாடு, வெள்ளை, வெட்டை முதலியன குணமாகும்.

பருத்திக் கிருதம்:—ஒரு படி பருத்திக்கொட்டையை ஓர் இரவு நீரில் ஊறப்போட்டு மறுநாள் உரலிலிட்டு இடித்துக் கல்லுரலிலிட்டு ஆட்டிப் பிருக்தெடுத்து வடிகட்டிய பருத்திப்பால் படி-1, செவ்விளநீர் படி-1, பசுவின்பால் படி-1, பசுவின்நெய் படி-1 இவைகளை ஓர் தைலபாண்டத்திலிட்டு, அதில் அதிமதுரம், சண்பகமொட்டு, சிறாகப்பூ, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, கிராம்பு, கோஷ்டம், செவ்வெற்றல், செங்கழுநீர்கிழங்கு வகைக்கு கழஞ்சு இரண்டு வீதம் இடித்துச் சூரணித்து பால்விட்டரைத்துக் கலகை அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வண்டல் மெழுகுபதம் வருஞ் சமயத்தில் கீழிறக்கி ஆறினபின்பு வடித்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு இரண்டு தேக்கரண்டி வீதம் தினம் இருவேளையாகச் சிறிது கற்கண்டு தூள் சேர்த்துக் கொடுத்தவர வெள்ளை, வெட்டை, பெரும்பாடு முதலிய உஷ்ணத்தினால் பிறந்த நோய்கள் யாவும் தீருவதுடன் உடலுக்கு பலத்தையும் தரும்.

பாவன பஞ்சாங்குலத் தைலம்:—சிற்றாமணக்கு கொட்டைகளை மூன்றாள் வடிதக்க நீராகாரத்தில் ஓர்நாள் ஊறவைத்து மறுநாள் கழுவியுலர்த்தி, கற்முழைச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்து மறுநாள் அப்படியே கொதிக்கவைத்து வெந்தபின்பு கழுவியுலர்த்தி இடித்து ஓர் தைலபாண்டத்திலிட்டு, இதற்கு நான்கு பங்கு ஓடி முதிர்ந்த செவ்வினநீரை விட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து பெரும் கொதியடங்கி தைலம் மேலே மிதக்கும் பக்குவத்தில் தைலத்தை வடித்து வைத்துக்கொள்க.

இதில் வேளைக்கு ½-முதல் ½-அவுன்ஸ் வீதம் தினம் ஒரு வேளையாக காலையில் மட்டும் அருந்திவர, சப்த தாதுக்களைப் பற்றிய வெட்டை, கனச்சூடு, கருப்பச்சூடு, நீரெரிச்சல், சரீர உலர்வு, மலாவர்த்த வாதம், மருந்துகளின் உஷ்ணம், மலச்சிக்கல் முதலியன குணமாகும். மேலும் இதை கர்ப்பம் தரித்த முதல் மாதந்தொடங்கி

ஒன்பது மாதம் வரையில் (வெப்பில் காலத்தில்) கருப்பஸ்திரீகள் அதிகாலையில் ½-பலம் வீதமும், இரவு படுக்கைக்குப் போகும் போது ½-பலம் வீதமும் அருந்திவர எத்தனை சோயும் வாயில் தடுத்த கல்ல அழகும் அறிவுமுள்ள குழந்தைகளைப் பெற்றெடுக்கச் செய்யும்.

கருப்ப விருத்தி யெண்ணெய்:— சிற்றாமணக் கெண்ணெய் விரை-1, கிலப்பனங்கிழங்கு, அமுக்கராங்கிழங்கு, சதாவரிக் கிழங்கு, பெருகன்கிழங்கு வகைக்குப் பலம்-1, வெள்ளாபம் பலம்-5, தேங்காய்க் கழுவிய குழம்சோறு பலம்-5, முடக்கத்தானிலை பலம்-5.

இவற்றுள் முதலில் குழம்சோற்றையும், கிழங்கு வர்க்கங்களையும் சிறு துண்டுகளாக நறுக்கி எண்ணெயிலிட்டுச் சிறு நீயாவெரித்து, அவை வெந்து வரும்போது வெள்ளாபத்தையும் முடக்கத்தானிலையையும் அரித்துப்போட்டு வெள்ளாபஞ் வெந்துவந்த பதத்தில் கீழிறக்கி ஆறினபின்பு வடித்து வைத்துக்கொள்க.

இந்த எண்ணெயில் வேளைக்கு 2 அல்லது 3 தோலா எடை வீதம் நேகநிடத்திற்கு ஏற்றவாறு தினம் ஒருவேளை காலையில்மட்டும் அருந்திவர கருப்பஸ்திரீகட்கு காணும் மலச்சிக்கல், சீரருக்கு, வாயு உபத்திரவம், வைகாலசதி, மேகத்தினால் சிறு சிறுதால் முதலிய குற்றங்கள் நீங்கி, கல்ல அழகுள்ள குழந்தைகள் பிணிபொன்றுமின்றி பிறக்கும். இதை கருப்பஸ்திரீகள் முதல் மாதம் முதல் ஏழு மாதம் வரையில் ஒவ்வொரு மாதமும் முழுமூன்று நாட்கள் அருந்தி வருதல் வேண்டும். மருந்துகொள்ளும தினத்தில்மட்டும் புளிநீக்கி இச்சாபத்தியமாக இருந்துவருதல் வேண்டும்.

குமரி லேகியம்:—மேல்தோல் சீவி நன்கு கழுவியெடுத்த சோற்றுக்கற்றாழை விரை-1, சீனாகற்கண்டு விரை-1, பனங்பால் படி-½, 8-பலம் நன்னாரிவேர் ஒருபடி ஜலத்தில் போட்டு அரைக்கால் காய்ச்சி வடித்த கியாழம், 8-பலம் சதகாலை ஜலவிட்டலரைத்து பிழிந்த பால் இவைகளை ஓர் இரும்புக் டாயிலிட்டு அடுப்பிலேற்றிச் சிறு நீயாக எரித்து கற்றாழை நீர்கண்டி பொன்நிறமாகியும் சர்க்கரை பானது பாகுபதமாகியும் வருஞ்சமயத்தில், சீமை நீர்முள்ளிவிதை சப்ஜாவிதை, சன்னலவங்கப்பட்டை, சீரகம், வால்மிளகு, ஜாதிக்காய் வகைக்கு பலம் 1-வீதம் இடித்துச் சூணித்துப் போட்டு, 4-பலம் பேரீச்சங்காலை சிறு துண்டுகளாக நறுக்கிப் போட்டுக் கிளறி 10-பலம செய். விட்டுக்கிண்டி கீழிறக்கி ஆறினபின்பு கல்லாலிலிட்டு சிறிது செய் சேர்த்திடித்து வைத்துக்கொள்க.

இதில் வேளைக்கு ½-தோலா வீதம் தினம் இருவேளையாக இரு பதுகள் அருந்த வெட்டைச்சூடும அதனாலுண்டான சோய்களும் நீரும். இதனைப் பெண்கள் அருந்திவர கருப்பாசயம் பலப்பட்டு

மாதவிடாயிலுண்டான பற்பல பிணிகள் நீங்கி சந்தான பாக்கியம் உண்டாகும்.

சுகுமார கிருதம்:—சதாவரிச்சாட்டாணி 12½-பலம், அமுக்கராக் கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, முடியார்கூந்தல், ஆமணக்கு வேர், சருபுவேர், பேய்க்கரும்புவேர், நாணல்வேர், குசதர்பை, வகைக்கு பலம் 10, பேராமல்லி, சிற்றாமல்லி, கறிமுள்ளி, கண்டங் கத்திரி, நெருஞ்சில், வில்வம், முன்னை, வாகை, நிலக்குமிழ், பாதரி இலைகளின் மூலம் வகைக்குப் பலம்-1, இலைகளைத் தட்டிப் போட்டு 256-சேர் நீரிலிட்டு 32-படியாகக் குடிநீரிட்டு வடித்து அதில் சிற்றாமணக்கு நெய் 4-சேர், பசுநெய் 8-சேர், பசும் பால் 8-சேர், நிப்பிலி, நிப்பிலிமூலம், அதிமதுரம், இந்துப்பு, நாட்டரை, ஓமம், சுக்கு வகைக்கு இரண்டு பலம் வீதம் சூணித்து பால்விட்டரைத்த கற்கம் முதலியவைகளைச் சேர்த்து முறைப்படி அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து கிருதபதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு 1-2 தேக்கரண்டி வீதம் தினம் இருவேளையாக பெண்கள் அருந்திவர கருப்பையைப்பற்றிய பல நோய்களையும் குணப்படுத்தி சந்தான விருத்தியை உண்டாக்கும். மற்றும் கருப்பையின் பலவீனம், அதனால் ஏற்படும் கரு அழிவு முதலியவைகளையும் தடுக்கும்.

பாலரோக சிகிச்சைகள் (வேறு)

கஸ்தூரி மாத்திரை:—கஸ்தூரி குன்றி எடை-4, கோரோசனை குன்றி எடை-8, குங்குமப்பூ குன்றி எடை-16, பச்சைக்கர்ப்பூரம் குன்றி எடை-16, பொரித்த வெங்காரம் குன்றி எடை-16, சுத்தி செய்தலிங்கம் குன்றி எடை-32, அதிமதுரச் சூரணம் குன்றி எடை-16, திப்பிலிச் சூரணம் குன்றி எடை-16, கோஷ்டச் சூரணம் குன்றி எடை-16, அக்காரச் சூரணம் குன்றி எடை-16, கோம்புச் சூரணம் குன்றி எடை-16.

முதலில் லிங்கத்தைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து மிருது வானபின்பு கஸ்தூரி கோரோசனை குங்குமப்பூ பச்சைக் கருப்பூரம் நீங்கலாக மற்றச் சரக்குகளைச் சேர்த்து இஞ்சி சாரம் விட்டு இரண்டுஜாமம் அரைத்து, இறுதியில் கஸ்தூரி முதலானவரைனச் சரக்குகளைச் சேர்த்து ஒருமணிநேரம் அரைத்து நன்கு உறவாகி மெழுகுபதம் வரும்போது பயறளவு மாத்திரைகளாகத்தட்டி நிழலி லுலர்த்தவும். இதில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் இரு வேளை தாய்ப்பால் தேன் அல்லது தக்க அனுபானங்களில் குழந்தை களுக்கு கொடுத்துவர எத்தனை சூலங்களும் குணமாகும். பாலுண்

ணும் குழந்தைகட்குக் கொடுக்கும்போது தாய் இச்சா பத்தியமாக இருத்தல் வேண்டும்.

கோரோசன மாத்திரை:—கோரோசனம், சகஸ்ரபேதி, சண்பகப்பூ, அதிமதுரம், கோஷ்டம், ஏலம், மாசிக்காய், இலவங்கம் வகைக்கு கழஞ்சு-1, இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டு வெட்டிவேர், விலாமிச்சவேர், மாசிப்பத்திரி, கருந்துளசி இவைகள் ஒவ்வொன்றின் சாற்றிலும் தனித்தனியே ஒவ்வொரு மணிசோம் அரைத்து மெழுகுபதத்தில் குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலி லுலர்த்தவும். இதில் குழந்தைகட்கு வேளைக்கு ஒரு மாத்திரைவீதம் தினம் இருவேளை தாய்ப்பால் அல்லது தக்க அனுபானங்களில் கொடுத்துவர சுரம், இருமல், பேதி, மாந்தம் முதலியன குண மாகும். இது மாந்தக் கழிச்சலுக்குச் சிறந்தது.

குங்குமப்பூ மாத்திரை:—குங்குமப்பூ, சாம்பிராணிப் பதங்கம், கோரோசனம், சுத்திசெய்த லிங்கம், பொரித்த வெங்காரம், கோஷ்டம், சுக்கு, வெண்மிளகு, வால்மிளகு, திப்பிலி, ஓமம், ஏலம், இரம்பு வகைக்கு வராகனெடை-1, இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டு முறைப்படி குங்குமப்பூ நீயாழும் விட்டு ஒரு ஜாமம் கன்கு அரைத்து மெழுகுபதத்தில் பயறளவு உருண்டளவு மாத்திரைக ளாகச் செய்து நிழலி லுலர்த்தவும். இதில் குழந்தைகட்கு வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தின மிருவேளை தேன் அல்லது தாய்ப்பாலில் கொடுத்துவர ஜலதோஷம், தொண்டைக்கட்டு, இருமல், கபசுரம், சுவாசம் முதலியன குணமாகும்.

மாந்த மாத்திரை:—சுத்திசெய்த பூரம் பலம் ½, ஏலம், சீரகம், இரம்பு, அதிவிடயம், வசம்புசுட்டகரி, மாசிக்காய் வகைக்குப் பலம்-¼, இவைகளை முறைப்படி பொடித்துக் கல்வத்திலிட்டு விஷ்ணு கரந்தைச்சாறு விட்டு ஒருஜாமமும், மாசிபத்திரிசாறு விட்டு ஒருஜாம மும் அரைத்து மெழுகுபதத்தில் கொத்தமல்லி விதையளவு மாத்திரை களைசெய்து நிழலிலுலர்த்தவும்.

குழந்தைகட்கு இதில் வேளைக்கு ஒரு மாத்திரைவீதம் தினம் இருவேளையாக தாய்ப்பால், தேன் அல்லது சந்தர்ப்பத்திற்குத் தக்க படி தல்ல அனுபானங்களில் கொடுத்துவர மாந்த வகைகள் யாவும் குணமாகும். பாலுண்ணும் குழந்தைகட்கு வழங்கும்போது தாய் இச்சாபத்தியமாக இருத்தல் அவசியமாகும்.

சாந்த சந்திரோதய மாத்திரை:—மஞ்சள்தூள் வராகனெடை-3, பொரித்த வெங்காரம் வராகனெடை-½, சுத்திசெய்த பூரம் வராக னெடை-1 இவைகளை முறைப்படிக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு ஒரு ஜாமம் கன்கு அரைத்து மிளகளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தவும். இதில் குழந்தைகட்கு வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினமிரு வேளையாக தாய்ப்பால், தேன் அல்லது

தக்க அனுபானங்களில் கொடுத்துவர மலச்சிக்கலுடன் கூடிய சுரம், பித்தசுரம், மாந்தசுரம், அழல்நோய்கள் முதலியன குண மாகும்.

பாலசஞ்சீவி மாத்திரை:—சுத்திசெய்த லிங்கம், பொரித்த வெங் காரம், சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளை வகைக்குச் சமனெடை யாகப் பொடித்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு ஒரு ஜாமம் கன்கு அரைத்து மெழுகுபதத்தில் பயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தவும். குழந்தைகட்கு இதில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் இருவேளை தாய்ப்பால் தேன் அல்லது தக்க அனுபானங்களில் கொடுத்துவர சுரம், தோஷம், இருமல், சுவாசம், வாய்வு முதலியன குணமாகும்.

விரேசன பூபதி மாத்திரை:—சுத்திசெய்த இரசம் பலம்-1, சுத்திசெய்த கற்பூரம் பலம்-1, சுத்திசெய்த வாளம் பலம்-4, பொரித்த வெங்காரம் பலம்-1, சுக்குத்தூள் பலம்-1. இவைகளை முறைப்படிக் கல்வத்திலிட்டு நீர் அல்லது பழச்சாறுவிட்டு ஒரு ஜாமம் கன்கு அரைத்து மெழுகுபதத்தில் பயறளவு மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தவும். குழந்தைகட்கு இதில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் ஒருவேளை காலையில்மட்டும் நீர் அல்லது தாய்ப்பாலில் புகட்ட இரண்டுமுறை பேதியாகும். இதனால் வயிற்றுப்பொருமல், வாய்வு, வலி, மந்தமாந்தம் முதலியன குணமாகும். இதைச் சாதா ரணமாகக் குழந்தைகட்கு மலச்சிக்கல் உள்ளபோது சுகபேதி மாத் திரையாக வழங்கலாம். மற்றும் சுரத்துடன் மலச்சிக்கலிருப்பி னும் இம்மாத்திரையி லொன்றை முதலில் கொடுத்துவிட்டு பின்பு கஸ்தூரி மாத்திரை, பாலசஞ்சீவி மாத்திரைபோன்ற மாத்திரைகளை வழங்கலாம்.

முருக்கன்விந்து மாத்திரை:—தோலுரித்த முருக்கன்விந்து ஸன் னம் பலசுளித்து, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கடுகுரோகணி வகைக்கு பலம்-1, சுத்திசெய்த நேர்வாள பருப்பு பலம்-6. இவை களைப் பொடித்துக் கல்வத்திலிட்டு சுத்த ஜலம்விட்டு ஒரு ஜாமம் அரைத்து குன்றியளவு மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தவும். குழந்தைகளின் வயதிற்குத் தக்கபடி வேளைக்கு 1-2 மாத்திரை பாலில் தினம் ஒருவேளை வீதம் இரண்டு மூன்று காட்கள் கொடுத்து விட்டு நான்காவது நாள் சிற்றாமணக்கெண்ணெய் கொடுக்க வயிற்றிலுள்ள கிருமிகள் செத்து மலத்துடன் வெளிப்படும். இத னால் கிருமி ரோகமும், அதனாலுண்டான வயிற்றுவலியும் குண மாகும்.

ஓமத் தீநீர்:—ஒரு வீசை ஓமத்தை ஒன்றிரண்டாய்ச் சிறிது சுடைதது ஓர் பாண்டத்திலிட்டு, நான்குபடி சுத்த சலம் விட்டு இரண்டு நாள் மறவிட்டு மூன்றாவது நாள் பாதி பாகத்திலடங்கும் படியானதோர் மட்பாண்டத்தில் விட்டு வாய்க்குப் பொருத்தமான

மண் வாலையைச் செருகி சீலைமண்செய்து உலர்த்தி அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து கிடைக்கு மட்டும் தீசீலை வாங்கவும். இதில் சிறு குழந்தைகட்கு வேளைக்கு 1-2 தேக்கரண்டி யளவும், சற்று பெரிய குழந்தைகட்கு 2-4 தேக்கரண்டி யளவும் கொடுத்துவர குழந்தைகட் குண்டாகும் வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, மர்தம், அசீரணம் முதலியன குணமாகும்.

வெடியன்னபேதிச் செந்தூரம்:—சுத்தி செய்த வெடியுப்பு பலம் 1, அன்னபேதி பலம் 2, இலைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒரு ஜாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலடக்கி சீலைமண்செய்து 30-40 விரட்டியில் புடமிடச் செந்தூரமாகும். அரைத்து வைத்துக்கொள்க. குழந்தைகட்கு இதில் வேளைக்கு ¼ முதல் ½ குன்றி எடை வீதம் தினம் இருவேளை தேனில் கொடுக்குவர சுரம், பேதி, பாண்டு, சோபை, காமாலை, கல்லீரல் மண்ணீரல் விக்கம் முதலியன குணமாகும்.

சுரக்கட்டிச் சூரணம்:—தோல்வியை முதலியவைகளை நீக்கி யுலர்த்திய ஆற்றுக்கும்மட்டிக்காய் சதை, கொட்டை நீக்கிய கடுக்காய்தோல், சுத்தி செய்த கரியுப்பு, கரிமஞ்சள், மிளகு இவைகளைச் சமனெடையாக எடுத்து முறைப்படி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்க. சிறுபிள்ளைகட்கு காலும் சால் வீக்கம், சால் கட்டி முதலியவைகட்கு இதில் வேளைக்கு தகிரிகடிப் பிரமாணம் தினமிரு வேளையாக 20 நாள் சாப்பிட சுரத்தின் வேகத்தாலுண்டான சால்களின் விக்கம் குணமாகும். இத்துடன் முன்கூறிய வெடியன்னபேதிச் செந்தூரமுஞ் சேர்த்து வழங்க மிக்க பயனைத்தரும்.

கட்டுவாதி சூரணம்:—கடுக்காய்தூ வராகனெடை-3, காசிக்கட்டி வராகனெடை-2, சீரகம் வராகனெடை-1, ஜாதிக்காய் வராகனெடை-1, செல்லிவற்றல் வராகனெடை-1, வெங்காயம் வராகனெடை-4, இவற்றுள் சீரகம், வெங்காயம் ஆகிய இவ்விரண்டையும் பொன்வறலாய் வறுத்தும், கடுக்காய்தூலை தெருப்பனலில் சுட்டும் எடுத்துக்கொண்டு மற்றவைகளுடன் சேர்த்திடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 1-2 சிட்டிக்கைவீதம் தேனில் தினம், 2-3 வேளையாக கொடுத்துவர குழந்தைகட்குகாணும் அசீரணபேதி அதிசாரபேதி முதலியன குணமாகும்.

சுகபேதி சூரணம்:—பாலில் வேகப்போட்டு நடு கரம்பு நீக்கி உலர்த்தி இடிதெடுத்த சிவதை வேர் சூரணம் தோலா-1, சுத்தி செய்த இந்துப்புத்தூள் தோலா-1, செவ்வியம் என்னும் மிளகுக் கொடியின் சூரணம் தோலா-1, இவைகளை ஒன்று கூட்டி மிருது வாகும்படி நன்கு அரைத்து வைத்துக்கொள்க, இதில் குழந்தைகட்கு வேளைக்கு 1-2 சிட்டிக்கை வீதம் அரை பாலடை நெய்தீரில் கலந்துகொடுக்க இரண்டுமுறை சுகமாக பேதியாகும்.

கக்குவானுக்கு கண்டங்கத்திரி லேகியம்:— கண்டங்கத்திரி சாறு பலம்-1¼, கருந்துளசி சாறு பலம்-2½, ஆடாதோடைச் சாறு பலம்-3¾, சுத்தமான தேன் பலம்-7½. இவைகளை ஒன்றுகூட்டி ஓர் மட்சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், செல்லிக்காய், நான்றிக்காய், இலவங்கம், இலவங்கப்பட்டை, ஏலம், சிற்றரத்தை, பேரரத்தை, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, அதிமதுரம், தானிசபத்திரி வகைக்கு வராகனெடை-½ வீதம் பொன்மேனியாக வறுத்திடித்துச் சூரணித்துப் போட்டுக் கலந்து சிறுதீயில் எரித்து விரலூர்தும் இளகிய பதத்தில் கீழிறக்கி ஆறவிட்டு சீசாவில் பத்திரப்படுத்துக. இதில் ஒரு விரல்முனையைத் தோய்த்தெடுத்த அளவிழ்தத்தை குழந்தைகளின் நாவில் தினம் மூன்று வேளை வீதம் கடவிவர குழந்தைகட்கு காணும் இருமல், கபக்கட்டு, கஷ்டசுவாசம் முதலியன குணமாகும். இது குழந்தைகட்கு காணும் கக்குவான் என்னும் நோய்க்கு மிக்கச் சிறந்த மருந்தாகும். இதை தொடர்ந்து 15-நாள் முதல் 30-நாள் வரையில் கொடுக்க பூரண குணம் ஏற்படும்.

கக்குவான் மாத்திரை:— அக்காரம் பலம்-¼, அதிமதுரம் பலம்-½, பொரித்த வெங்காரம் பலம்-¼, குரோசானியோமம் பலம்-½. இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டு முசுமுசுக்கை சாறுவிட்டு இரண்டு ஜாமம் அரைத்து சிறு குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தவும். குழந்தைகட்கு வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம 2-3 வேளை தேனில் கொடுத்துவர கக்குவான் இருமல் குணமாகும்.

தாளக மாத்திரை:—சுத்திசெய்த ¼-பலம் ரேக் தாளகத்தை ஓர் மண்சேட்டியில் வைத்து அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துவரும் போது இஞ்சிச்சாறு, முலைப்பால், தும்பையிலைச்சாறு இவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மணி நேரம் சுறுக்குக் கொடுத்து ஆறின பின்பு கல்வத்திலிட்டு நன்கு அரைத்து பின்பு அத்துடன் மொட்டு நீக்கிய கிராம்பு பலம்-½, உயர்ந்த பால்பெருங்காயம் பலம்-½ கூட்டி இஞ்சிச்சாறு விட்டு ஒரு ஜாமம் அரைத்து பயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தவும். குழந்தைகட்கு இதில் வேளைக்கு ஒரு மாத்திரைவீதம் தினமிரு வேளை கம்மாறு வெற்றிலைச் சாற்றில் அரை பானித்துக் கொடுத்துவர இருமல், கபக்கட்டு, கபமார்தம், கஷ்டசுவாசம், அள்ளுமார்தம் முதலியன குணமாகும்.

அண்டத் தைலம்:—தேவையான அளவு கோழிமுட்டைகளை வேகவைத்து மஞ்சட் கருவைமட்டும் எடுத்து உதிர்த்து ஓர் கடாயிலிட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து வறுத்துவர, மஞ்சட் கருவானது மஞ்சள்நிறம் மாறி, சிவந்து பின்பு கருகி, புகைந்து தைலம் கக்கும் பதம் வரும். அத்தருணம் ஐஸ்லிக்கரண்டிகொண்டு அழுத்திப் பிழிய தைலம் வரும். இதை வடித்து சீசாவில் பத்திரப்

படுத்துக. இதுவே அண்டத்தைல மெனப்படும். இதில் இரண்டி மூன்று துளி வீதம் தனியாகவாவது அல்லது அத்துடன் கோரோ ஜன மாத்திரை முதலியவைகளைக் கூட்டியாவது கொடுத்துவர குழந் தைகட்கு காணும் அன்னமார்தம், முக்குமார்தம், சன்னி, இசிவு, வலி, வாய்வு முதலியன குணமாகும்.

மாந்தக் குடிநீர்:—ஆமையோடு சுட்ட கரி, வசம்பு சுட்ட கரி, ஓமம், குரோசானி ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கருஞ் சீரகம், மூண்டு வகைக்கு வராகனெடை-½ இவைகளைப் பொடித்துச் சட்டியிலிட்டு ½-படி தண்ணீர்விட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து காலிலொன்றுகக் குலுக்கி வடித்து வைத்துக்கொண்டு குழந்தைகட்கு வேளைக்கு 1-2 தேக்கரண்டி வீதம் தினம் இரண்டு மூன்று வேளையாகக் கொடுத்துவர மாந்தம் குணமாகும்.

வேறு முறை:—சொச்சியிரக்கு, நுணையிரக்கு, முருங்கையிர் க்கு வகைக்கு ஒரு பிடி, உத்தாமணியிலை, பொடுதலையிலை வகைக்கு ஒரு பிடி இவைகளை சட்டியிலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வதக்கி, அதில் ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு சுட்ட கரி வகைக்கு ½-வராகனெடை வீதம் தூக்கி ஓர் இலையில் தனர்ச்சி யாக முடித்துப் போட்டு, கால்படி சலம்விட்டு காய்ச்சி காலிலொன் றுகக் குலுக்கி வடித்து குழந்தைகட்கு வேளைக்கு 1-2 தேக்கரண்டி வீதம் தினம் 3 அல்லது 4 வேளை வீதம் கொடுத்துவர மாந்தம் குணமாகும்.

மாந்த எண்ணெய்:—சிற்றாமணக்கு செய் படி-½, இண்டங் தண்டுச்சாறு படி-1 இவை யிரண்டையும் ஓர் தைல பாண்டத்தி லிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து சாறு சுண்டி வரும் போது ½-பலம் கருஞ்சீரகத்தை இடித்துச் சூரணித்து வஸ்திர காயஞ் செய்துப் போட்டுக் கலக்கிப் பதமுற காய்ச்சி, வடிகடத் தில் ½-வராகனெடை உயர்ந்த கோரோசனையை சன்னமாக அரைத் துப் போட்டு வாய்க்கு மெல்லிய சீலைகட்டி, அதில் எண்ணெயை வடித்து சூடாறியபின்பு சன்னுப் கலக்கி சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டுமபோது இந்த எண்ணெயை சன்னு குலுக்கி வேளைக்கு ½-முதல் 1-தேக்கரண்டியளவு தினம் ஒரு வேளையாக காலையில் குழந்தைகட்கு 2, 3 நாட்கள் கொடுத்துவர பேதியாகும். இதனல் மாந்தரோகம் குணமாகும்.

சிவப்பு எண்ணெய்:—சுத்தி செய்த பூரம் வராகனெடை-1, சுத்தி செய்த இரச செந்தூரம் வராகனெடை-1 இவைகளைக் கல்வத் திலிட்டு சன்னு அரைத்து பின்பு 10-பலம் சிற்றாமணக்கெண்ணெயில் சிறிது துளி துளியாக விட்டு 1-ஜாமம் அரைத்து மிகுதியுள்ள எண் ணெயில் கலக்கி வைத்துக்கொள்க. இதில் குழந்தைகளின் வயதிற் கும், தேகநிடத்திற்கும் தக்கபடி 10-முதல் 30-துளிவீதம் தாய்ப்

பாலில் கலந்து தினம் ஒரு வேளையாக காலையில் மூன்றாள் கொடுக் கவும். இதனல் குழந்தைகட்கு ஓடி ஓடி விக்கமுற்று வருகின்ற விப்புருதிக்கட்டி, கருவாப்பு, செவ்வாப்புக் கட்டிகள் என்னும் கிரந்திரோகங்கள், வாய்வு முதலியன குணமாகும். குழந்தைகட்கு பால்தவிர வேறு ஒன்றும் கொடுக்கக் கூடாது. தாய்ப்பாலருந்தும் குழந்தைகட்குக் கொடுக்கும்போது தாய் கடும்பத்தியமாக இருத்தல் அவசியமாகும்.

கணத்திற்கு குமரி எண்ணெய்:—கற்றுழைச்சாறு படி-½, சிற் மணக்கெண்ணெய் படி-1, இவைகளை ஓர் தைல பாண்டத்திலிட்டு அதில் வெங்காயம் பலம்-1, வெந்தயம் பலம் ½, அதிமதுரம் பலம்-½, இவைகளை அரைத்து கற்கமாக்கிக் கலந்து அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து பதமுறக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு சிறு பிள்ளைகட்கு வயதிற்குத் தக்கபடி 2-முதல் 4-தேக்கரண்டி யளவு தினம் ஒரு வேளையாக கொடுத்துவர கணரோகம், கருப்பச்சூடு, உடலின் வெட்டை முதலியன குணமாகும்.

சதாவரிக் கிருதம்:—தண்ணீர்விட்டான்கிழங்கு சாறு ஆழாக்கு, அப்பட்டமான தேங்காய்பால் ஆழாக்கு, பசுவின்பால் ஆழாக்கு, வெள்ளாட்டுப்பால் ஆழாக்கு, பசுவின் நெய் ஆழாக்கு, பறங்கிச் சக்கைச் சூரணம் பலம்-1, எலரிசிச் சூரணம் பலம்-½, இவைகளை ஒன்று சேர்த்து ஓர் பழைய மட்பாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வண்டல் மெழுகுபதம் வரும் பக்குவத்தில்காய்ச்சி வடித்து வைத்துக்கொள்க.

இதில் வேளைக்கு உச்சிக்கரண்டிவீதம் தினம் இருவேளையாக சிறு கற்கண்டுத்தூள் கூட்டி அரைமுதல் ஒரு மண்டலம் அருந்த சிறுபிள்ளைகளுக்கு காணும் கணம், லெட்டைச்சூடு முதலியன நீங்கி தேக புஷ்டியும் வலுவும் உண்டாகும்.

மாதந்தக் குடிநீர்:—சொச்சியிலை ஒரு பிடி, நுணையிலை ஒருபிடி, பொடுதலை ஒரு பிடி, உத்தாமணியிலை ஒருபிடி, முட்சங்கனிலை ஒரு பிடி இவைகளை சட்டியிலிட்டு சிறிது தேன்விட்டு வதக்கி இடித்துச் சாறுவாங்கி குழந்தைகட்கு வேளைக்கு 1-2 தேக்கரண்டி வீதம் தினம் 2-3 வேளையாகக் கொடுத்துவர மாந்தம் குணமாகும்.

வேறு முறை:—சொச்சியிலை ஒரு பிடி, நுணையிலை ஒருபிடி, உத்தாமணியிலை ஒருபிடி, இவைகளை ஓர் சட்டியிலிட்டு வதக்கி அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், வெள்ளைப்பூண்டு, பொடுதலைகாய்ந் வசம்புசுட்டகரி, பொரித்தகாயம், இந்துப்பு, சீரகம் வகைக்கு ½-வராகனெடைவீதம் இளவறுப்பாய் வறுத்திடித்துச்சேர்த்து ½-படி தண்ணீர்விட்டு எட்டொன்றுகக் குடிநீர் விட்டு வடிகட்டி வைத்துக் கொண்டு இதில் வேளைக்கு ½-முதல் 1-அவுன்சுவீதம் தினம் இரு வேளையாக கொடுத்துவரவேண்டும். இத்துடன் ஆமையோடு பற்பம்

½-½ குன்றி எடை தாய்ப்பாலில் தினம் இருவேளை கொடுத்து வருதல் நன்று. இதனால் மாந்தரோகங்கள் யாவும் குணமாகும.

வேறு முறை:—உத்தாமணி இலைச்சாறு, முட்சங்கஞ்சிலைச் சாறு, பேய்மிரட்சி இலைச்சாறு, குப்பைமேனியிலைச்சாறு வகைக்கு ஒரு அவுன்சுவீதம் தயாரித்து ஒன்றுகூட்டி அதில் வசம்பு சுட்டகரி, திப்பிலி, ஓமம், சதகுப்பை வகைக்கு ½-தோலாவீதம் இடித்து வஸ்திரகாயஞ்செய்து சேர்த்துக் கலந்து இதில் வேளைக்கு 1-2 தேக்கரண்டிவீதம் தினம் இருவேளையாக குழந்தைகட்கு புகட்டிவர மாந்த ரோகங்கள் குணமாகும்.

கஸ்தூரியாதி மாத்திரை:—கஸ்தூரி வராகனெடை-½, குங்குமப்பூ வராகனெடை-½, கோரோசனம் வராகனெடை-½ இவைகளைக் கல்வத்திலிட்டு தாய்ப்பால் விட்டு ஒரு ஜாமம் அரைத்து சிறு பயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தவும். இதில் குழந்தைகட்கு வயதிற்கு தக்கபடி 1-2 மாத்திரை வீதம் தினமிருவேளை தேன், தாய்ப்பால் அல்லது தக்க அனுபானங்களில் கொடுத்துவர கபக்கட்டு, சன்னிதோஷம், பித்தம், வாயு முதலியன குணமாகும்.

வேறுமுறை:—கஸ்தூரி குன்றியெடை-2, கோரோஜனம் குன்றி எடை-4, குங்குமப்பூ குன்றி எடை-8, பச்சைக்கருப்பூரம் குன்றி எடை-8, சாம்பிராணிப்பதங்கம் குன்றி எடை-4, தாளிசபத்திரி சூரணம் குன்றி எடை-4, திப்பிலிச் சூரணம் குன்றி எடை-4, அக்காரசூரணம் குன்றி எடை-4, இலவங்கப்பத்திரிச் சூரணம் குன்றி எடை-4, ஜடாமாஞ்சிச் சூரணம் குன்றி எடை-4, ஜாதிக்காய் சூரணம் குன்றி எடை-4, ஜாண்ணு குன்றி எடை-2, சுத்தி செய்த இசை செந்தூரம் குன்றி எடை-4.

இவைகளைக் கல்வத்திலிட்டு முறைப்படி கருந்துளசிச்சாறு அல்லது சம்மாறு வெற்றிலைச்சாறு விட்டு ஒரு ஜாமம் அரைத்து மெழுகுபதத்தில் உருத்தளவு மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தவும. இதில் வேளைக்கு 1-அல்லது 2-மாத்திரை வீதம தேன், தாய்ப்பால், துளசிச்சாறுமுதலிய அனுபானங்களில் தினம் 2-3 வேளையாக கொடுத்துவர குழந்தைகட்குக் காணும் சுரம், சன்னி, தோஷம், சலதோஷம், இருமல், கபக்கட்டு, மாந்தம், பேதி, சீதளம முதலிய பலபிணிகளையும குணமாக்கும்.

கோரோசன மாத்திரை:—கோரோசனை சுத்திசெய்த சேர்வாளபருப்பு வகைக்கு வராகனெடை-1, சுக்கு, மிளகு, திப்பிலி, குங்குமப்பூ வகைக்கு வராகனெடை-½, இவைகளைக் கல்வத்திலிட்டு முறைப்படி சந்தனக் கியாழம் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து உருத்தளவு மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தவும். இதில் வேளைக்கு 1-2 மாத்திரை வீதம் தினம் ஒருவேளை காலையில் தாய்ப்பால், வெந்நீர், சுக்குக் குடிநீர் முதலிய அனுபானங்களில் கொடுக்க

இரண்டு முறை மலங்கழியும். இதனால் கபசுரம், கபக்கட்டு, மந்தம், வயிற்றுப் பொருமல் மாந்தம் முதலியன குணமாகும்.

வேறு முறை:—கோரோசனை, குங்குமப்பூ, ஜாதிக்காய், இலவங்கம், ஏலம், கோஷ்டம், அகராகாரம், பச்சைக் கருப்பூரம், சுத்தி செய்த பூரம், சுத்திசெய்த இரச செந்தூரம், அப்பிரக பற்பம் வகைக்கு வராகனெடை-1, இவைகளை முறைப்படிக் கல்வத்திலிட்டு சந்தனக் கியாழத்தால் 4-ஜாமமும், சண்பகப்பூ கியாழத்தால் 3-ஜாமமும், குங்குமப்பூ கியாழத்தால் 2-ஜாமமும் அரைத்து சிறு குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தவும்.

குழந்தைகட்கு இதில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினமிருவேளை தேன், தாய்ப்பால் அல்லது தக்க அனுபானங்களில் கொடுத்துவர சலதோஷம், சுரம், வரய்வு, தொண்டைக்கட்டு, கபரோகங்கள் முதலியன குணமாகும். இம் மாத்திரையை 2-3 துளி அண்டத்தைலத்துடன் அனுபானித்து தாய்ப்பாலுடன் கலந்து கொடுத்துவர குழந்தைகட்கு காணும் வலி, இசிவு, மூக்கு மாந்தம், அள்ளு மாந்தம முதலியன குணமாகும்.

பைரவி மாத்திரை:—சுத்திசெய்த லிங்கம், கந்தகம், ரசபஸ்பம், பொரித்தவெங்காரம் வகைக்கு வராகனெடை-1, இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு இரண்டு ஜாமம் அரைத்து மெழுகு பதத்தில் பயறு அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தவும. குழந்தைகட்கு இதில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் இருவேளை தாய்ப்பாலில் அனுபானித்து கொடுக்க எத்தகைய சுரம், சன்னி முதலியவைகளும் குணமாகும்.

சுரத்துடன் மலச்சிக்கல் இருப்பின் இம் மாத்திரையிலொன்றை கொடுத்துவிட்டு அதன் பிறகு 1 அல்லது 2 விராகனெடை கடுகு ரோகணியை நன்றாய் சலித்து ½-ஆழாக்கு நீரிலிட்டு ஒரு பாலாடை அளவுக்கு சண்டக்காய்ச்சி ½ அல்லது 1 பாலாடை கியாழத்தைக் கொடுக்கவும். இதனால் மலங்கழிவதுடன் சுரமும் தீரும். மலச்சிக்கல் அதிகமாக இருப்பின் காலையில் விரேசன பூபதி மாத்திரையில் ஒன்றைக்கொடுத்து மலங்கழித்த பின்பு மாலையில் பைரவி மாத்திரையை வழங்கலாம்.

சுரத்துடன் பேதி இருந்தால் மேற்படி பைரவி மாத்திரையைத் தாய்ப்பாலில் கொடுத்துவிட்டு அதன் பிறகு அதிவிடயம் 1 அல்லது 2 வராகனெடை எடுத்து சலித்து ஊறல் குடிநீராகச் செய்து ஒரு பாலாடை வழங்கலாம். இதிலடங்காவிடில் பாலர்கட்குறிய கட்டுவாதி மாத்திரையை வழங்கவேண்டும்.

சுரத்துடன் கபக்கட்டு, இருமல், சுவாசம் முதலியன இருப்பின் இரண்டு வராகனெடை சிற்றரத்தையைச் சலித்து ஓர் சட்டியி

விட்டுச் சிறிது தேன்விட்டு வதக்கி அதில் தூதுவளை இலைச்சாறு ½ ஆழாக்கு விட்டு பொங்கினவுடன் கீழிறக்கி ஆற்விட்டு அதில் 2 கேக்கரண்டி வீதம் மேற்படி லாவி மாத்திரையை வழங்கின பின்பு கொடுத்து வரவும்.

கரப்பான் எண்ணெய் (உள்ளுக்கு):—பூவரசம்பட்டை, செங் கத்தாரிப்பட்டை, பூகரப்பான், கண்டங்கத்திரி, இலவாதை வகைக் குப் பலம்-10 இலைகளைச் சதைத்து தூணி நீரில் போட்டு அடுப்பி லேற்றிச் சிறுதீயாக எரித்து எட்டிலொன்றாகக் குலுக்கிக் குடி நீரிட்டு வடித்து அதில் வெள்ளாட்டுப்பால், சிற்றாமணக்கெண் ணெய் வகைக்குப்படி-1 சேர்த்து, மிளகு, கருஞ்சீரகம், கார்கோ லம், வெள்ளைப்பூண்டு, வசம்பு, சதகுப்பை, வலம்புரிக்காய், பறங் கிச்சக்கை வகைக்கு வராகனெடை 2½-வீதம் பாலில் அரைத்துக் கலக்கி, பதமுறக் காய்ச்சி வடித்து லைத்துக்கொண்டு சிறுவர்கட்கு வேளைக்கு 1, 2-தேக்கரண்டி வீதம் தினம் ஒரு வேளையாக காலையில் கொடுத்துவர சகல . கரப்பான் ரோகங்களும் சர்மவியாதிகளும் விரணமும் குணமாகும். இதையே மேலுக்கும் பூசி வரலாம்.

கரப்பான் தைலம் (மேலுக்கு):—இரசம், கந்தகம், பூரம், தத் தம், தாருசு, கருப்பூரம், மிருதார்சிங்கி, சீரடிமுத்து பருப்பு, காட்டுச் சீரகம், கார்போகயரிசி, கஸ்தூரி மஞ்சள், ஏலம் வகைக்கு வராக னெடை-½, அப்பட்டமான தேங்காய்ப்பால் படி-1, சரக்குகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்து நன்கு அரைத்து சிறிது தேங்காய்ப்பால் விட்டு அரைத்து கற்கமாக்கி மிகுதியுள்ள தேங்காய்ப்பாலில் கரைத்து ஓர் தைல பாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து பதமுறக் காய்ச்சி வடித்து லைத்துக்கொள்க. இத் தைலத் தைக் கோழியிறகினால் தொட்டு கரப்பான் விரணங்களுக்கு தடவி வர சகல கரப்பான் ரோகங்களும், விரணமும் விரைவில் குண மாகும்.

மாந்த எண்ணெய்:—சிற்றாமணக்கு நெய் படி-½, நயக்கொழு ந்து சாறு படி-1. இலைகளிரண்டையும் ஓர் தைலபாண்டத்தில் விட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து, கொதித்து சாறு சுண்டி வரும்போது அதில் ½-பலம் கருஞ்சீரகத்தை இடித்து வஸ்திரகாயம் செய்து தூவித் தழாவிக் காய்ச்சி வண்டல் மெழுகுபதம் வருஞ் சமயத்தில் ½-வராகனெடை கல்ல கோரோசனத்தை மிருதுவாகத் தூள் செய்து வடிகடத்திலிட்டு வாய்க்கு சீலைகட்டி, அதில் காய்ச் சிய தைலத்தை வடித்து ஆறின பின்பு நன்கு கலக்கி சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இதை நன்கு கலக்கி தினம் ஒரு வேளையாக காலையில் மட்டும் பாலர்கட்கு வேளைக்கு 1-2 தேக் கரண்டி வீதம் 5, 10-நாள் கொடுக்கவும். தேவையானால் சில நாள் விட்டுலைத்து மீண்டும் முன்போல் கொடுக்கலாம். இப்படி விட்டு விட்டு சில முறைகள் கொடுத்துவர குழந்தைகட்கு காணும் மாந்த

ரோகங்களும், கபரோகங்களும் குணமாகும். குழந்தைகட்கு மருந்து கொடுத்துவரும்போது தாய் பத்தியமாக இருக்கவேண்டி யது அவசியமாகும்.

வேறு முறை:—சிற்றாமணக்கு நெய், வேலிப்பருத்திச்சாறு வகைக்குப்படி-1, இலைகளை ஓர் தைல பாண்டத்திலிட்டு அதில் கருஞ்சீரகம், வெட்பாலையரிசி, கடுகுரோகணி, சீரடிமுத்துபருப்பு, கோஷ்டம், கார்போகயரிசி, சண்பகப்பூ, அக்காகாரம், வகைக்கு ஒரு கழஞ்சு, சேர்வாளபருப்பு பலம்-1, இலைகளை பால்விட் டரைத்து கற்கமாக்கிக் கலந்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து தைல பக்குவத்தில் வடித்து லைத்துக்கொள்க. இதில் வேளைக்கு 1, 2-தேக்கரண்டி வீதம் தினம் ஒரு வேளை காலையில் தாய்பாலுடன் கலந்து குழந்தைகட்கு புகட்டிவர அஷ்டவித மாந்தங்களுந் தீரும். தாய் இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

கண எண்ணெய்:—கரிசாலைச் சாறு, பொன்னாங்காணிச் சாறு, சோற்றுக்கற்றாழைச் சாறு, கருப்பூரவல்லி இலைச்சாறு, புளியா ரைக்கீரைச் சாறு, கோவையிலைச்சாறு, வெள்ளை வெங்காயச்சாறு வகைக்குப் படி-½, பசும்பால் படி-1, சிற்றாமணக்கெண்ணெய் படி-1 இலைகளை ஒன்றுகூட்டி ஓர் தைல பாண்டத்திலிட்டு அதில் சீரகம், கருஞ்சீரகம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, மாசிக்காய், வெற்றயம், வெள்ளைப்பூண்டு, அக்காகாரம், கோஷ்டம், கர்கடகசிங்கி வகைக்கு வராகனெடை ஒன்று வீதம் சூரணித்து பால்விட்டரைத்துக் கலக்கி அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து பதமுறக் காய்ச்சி வடிகடத்தில் கோரோசனை, குங்குமப்பூ வகைக்கு வராகனெடை ஒன்று வீதம் நன்கு மிருதுவாக அரைத்துப் போட்டு வாய்க்கு மெல்லிய சீலைகட்டி அதில் காய்ச்சிய தைலத்தை வடித்து, ஆறினபின்பு நன்கு கலக்கி லைத்துக்கொள்க. இதில் வேளைக்கு 2-3 தேக்கரண்டி வீதம் பாலர்கட்கு தினம் ஒரு வேளை யாக காலையில் கொடுத்துவர பதினென்வித கணரோகங்களும், உட் சூடு, தேக எரிவு முதலிய உஷ்ண சம்பந்தமான பல பிணிகளும் குணமாகும்.

வேறு முறை:—சிற்றாமணக்கெண்ணெய், கரிசலாங்கண்ணிச் சாறு, புளியாரைக்கீரைச் சாறு, வல்லாரைக்கீரைச்சாறு, எலுமிச் சம்பழச்சாறு வகைக்கு படி-1 இலைகளை தைலபாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து பதமுறக் காய்ச்சி, வடிக்கும் போது ½-வராகனெடை கோரோசனைத்தூளை வடிகடத்திலிட்டு வடித்து ஆறினபின்பு வடுத்து சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும் போது இதை நன்கு கலக்கி வேளைக்கு 1-2 தேக்கரண்டி வீதம் தினம் இரு வேளையாக பாலர்கட்கு கொடுத்துவர கணச்சூடு, மூலச்சூடு, உடல்காங்கை முதலிய வெட்டை நோய்கள் யாவும் தீரும்.

குப்பைமேனித் தைலம்:—குப்பைமேனி கொழுந்திலைகளை 2½-பலம் எடைக்குச் சேகரித்து 10-பலம் சிற்சுமணக்கெண்ணெயில் போட்டு அடுப்பிலேற்றிச் சிறிதாக எரித்து இலைகளிலுள்ள ரசம் வற்றி மேலே மிதந்த பொடியாகும் பதத்திற்கு காய்ச்சி வடித்து, இலைகளை ஓர் சட்டியிலிட்டு, காய்ச்சி வடித்த தைலத்தில் சிறிதளவிட்டு மத்திட்டுக் கடைந்து மிகுதியுள்ள தைலத்துடன் கலக்கி வைத்துக் கொள்க. இதில் வேளைக்கு ½-முதல் 1-தேக்கரண்டியளவு தினம் ஒரு வேளை காலையில் குழந்தைகட்கு புகட்டிவர வயிற்றிலுள்ள இருமிகள் மடிந்து மலத்துடன் வெளிப்படும்.

பொன்னுங்காணி கிருதம்:—பொன்னுங்காணிச்சாறு படி-1, பொற்றிலைக் கையாந்தகரை என்னும் மஞ்சட் கரிசலாங்கண்ணிச் சாறு படி-1, எலுமிச்சம்பழச்சாறு படி-½, பசும்பால் படி-1, பசு நெய் படி-1 இவைகளை ஒன்றுசேர்த்து ஓர் தைலபாண்டத்திலிட்டு அதில் 2-பலம் அமுமதாத்தைப் பால்விட்டரைத்து கற்கமாக்கிக் கலந்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வண்டல் மெழுகுபதம் வரும் பதத்தில் கீழிறக்கி வடிக்குழுவு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கோரோசனம், சிறுகற்கண்டு வகைக்கு ஓர் கழஞ்சு வீதம் சன்ன மாகப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து வடிகட்டத்தில் போட்டு வாய்க்கு மெல்லிய சீலையை கட்டி அதில் காய்ச்சிய கிருதத்தை வடித்து நன்கு கலக்கி சீசாவில் பத்திரப்படுத்துக. இதில் வேளைக்கு ஒரு உச்சிக்கிரண்டி வீதம் பாலர்கட்கு தினம் இருவேளையாக அரை அல்லது ஒரு மண்டலம் கொடுத்துவர அதிக வெட்டைச் சூட்டினால் ஏற்பட்ட உடல்சங்கை, உடலெரிவு, கணச்சூடு முதலியன நீங்கி உடல் பலப்படும்.

சிசுக்கள் சிறிசிறி யழுதல், பாலுண்ணுமை, விக்கல் வாந்தி யாதல் முதலியவைகட்கு சிகிச்சை:—கண்டுபாரங்கி, திப்பிலி, கடுகு ரோகணி இவைகளை காய்பால் விட்டு இழைத்த ஸ்தனங்களில் தடவி பிறகு குழந்தையை பாலுண்ணும்படிச் செய்யவேண்டும்.

வயிற்றுப்புசம், செறியாமை, வயிற்றுவலி, வாந்தியாதல், முத லியவைகட்கு சிகிச்சை:—தேனுரித்த வெண்பூசணி நீரியுடன் சிறிது ஓமம் சேர்த்த நீர்விட்டுக் காய்ச்சி 1-2 தேக்கரண்டி புகட்ட மேற்படி நோய்கள் குணமாகும்.

அதிமதுரத்தை பால்விட்டரைத்து காலில் தடவிவர தோஷத்தி னால் பாலுண்ணுமை, அப்படி உண்டாலும் உடனே எதிரெடுத்தல் முதலியன குணமாகும். இதையே பாலுண்ணும்போது முலைக்காம் பிலும் சிறிது தடவி பிறகு பாலருந்தச் செய்யலாம்.

குழந்தைகட்கு மலங்கட்டி வயிறுகொந்து அழுதால் சிகிச்சை:—புன்னை, நிறுதேக்கு, கோஷ்டம், சாக்கொன்றைப்புளி இலைகளின்

சீர்விட்டரைத்து குழந்தைகளின் அடிவயிற்றில் பற்றிட மலங்கழிவ துடன் வயிற்றுவலியும் குணமாகும்.

வெற்றிலையில் சுமணக்கு செய்யைக் தடவி கொடுப்பினில் வெதுப்பி தொப்புளைச் சுற்றிலும் அடிவயிற்றிலும் போட்டுவர உஷ் ணத்தினால் உண்டான வயிற்றுவலி, வயிற்றுப்புசம் முதலியன நீங்கும்.

பிள்ளைகளுக்கு சிறுநீர் இறங்காவிட்டால் சிகிச்சை:—ஓர் தினையை வெந்நீரில் ஊறவைத்துப் பிழிந்தவிட்டு தாளக்கூடிய சூட்டில் அடிவயிற்றுக்குக் கீழே ஒற்றிடமிட்டுவர நீர் இறங்கும், அல்லது அடிவயிற்றுக்குக் கீழே ஒற்றிடமிட்டுவர நீர் இறங்கும், அல்லது எலிப்புழுக்கையுடன் சமன் வெள்ளரி விதையும் சிறிது வெடியுப்பும் கூட்டி நீர்விட்டரைத்து அடிவயிற்றில் பற்றிட நீர்கட்டு நீங்கும்.

கருங்குரந்தி செங்குரந்திக்கு சிகிச்சை:—கழுதைப்பால் கழுதை மூத்திரம் இவைகளைச் சிறுபாலை பலவு புகட்டிவர குணமாகும். வசம்பு, வெள்ளைப்பூண்டு இவைகளை குழைத்து வழங்கலாம். இத னால் கருங்குரந்தி குணமாகும்.

½-முதல் ½-குன்றி எடை கோரோசனையை கற்பூரவள்ளி இலைச் சாறத்தில் கொடுத்துவர செங்குரந்தி குணமாகும்.

சங்கன் இலைச்சாற்றை சிறிது வெதுப்பி வேளைக்கு 1-2 தேக் கரண்டி வீதம் குழந்தைகட்கு புகட்டிவர கரப்பான், குரந்தி, கட்டி முதலியன குணமாகும்.

குங்குமப்பூ மாத்திரை:—குங்குமப்பூ பலம்-1, சுக்கு, மிளகு, திப்பிலி, ஜாதிக்காய், கிராம்பு, ஏலம், கடுக்காய், செவ்விக்காய், தான் றிக்காய், சந்தனத்தூள், தேவதாரு, கடுகுரோகணி வகைக்குப் பலம-½, கோரோசனம் பலம்-½ இவைகளை முறைப்படிச் சூரணித் துக் கல்வத்திலிட்டு, இஞ்சிச்சாறு, துளசிச்சாறு, குங்குமப்பூ தவிர மற்ற இவைகள் ஒவ்வொன்றிலும் தனித்தனியே ஒவ்வொரு ஜாமம் அரைத்து உலர்த்தினவு மாத்திரைகளாகச் செய்து நிழலி லுலர்த்தவும்.

இதில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் இருவேளை குழந் தைகட்கு, தாய்பால், இஞ்சிச்சாறு, துளசிச்சாறு முதலிய அனு பானங்களில் கொடுத்துவர சலதோஷம், சுரம், கபக்கட்டு, இருமல் முதலியன குணமாகும்.

மாந்த எண்ணெய்:—நற்சங்கனிலைச்சாறு, கெங்கத்தாரி இலைச் சாறு, ஆடாதோடை இலைச்சாறு, குப்பைமேனி இலைச்சாறு, சீக் காய் சாறு, ஊடாதோடை இலைச்சாறு, குப்பைமேனி இலைச்சாறு வகைக்கு பலம்-1, இவை நில் கொடிச்சாறு, உத்தாமணி இலைச்சாறு வகைக்கு பலம்-1, இவை களில் மொத்த எடைக்கு சிற்சுமணக்கு நெய் கூட்டி அதில் வசம்பு ஓமம், வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், திப்பிலி, சாதிக்காய்,

கோரோசனம் வகைக்கு ¼-வராகனெடை வீதம் பால் விட்டரைத்து கற்கமாக்கிக் கரைத்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாகளரித்த பதமுறக் காய்ச்சி வடித்து வைத்துக்கொள்க.

இதில் குழந்தைகட்கு வயதிற்கு தக்கபடி தினம் ஒரு வேளையாக காலையில் 1, 2 தேக்கரண்டி வீதம் கொடுத்துவர சுரம், இரைப்பு, கஷ்ட சுவாசம், மாந்தம் முதலியன குணமாகும்.

ஆமையோடு பற்பம்:—ஆமையோடு துண்டுகளை கற்சுண்ணும்பும் அப்ளாகாரமுஞ் சமனெடையாகக் கலந்து தான்கு பங்கு நீர் விட்டுக் கரைத்த திரவத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து நீர்சுண்டி வரும்போது எடுத்து நீர்விட்டுக் கழுவி யுலர்த்த நல்ல சுத்தியாகும். இவ்வாறு சுத்தி செய்யப்பட்ட ஆமையோட்டுத் துண்டுகளை குப்பைமேனி இலைக் கற்கத்தினிடையில் வைத்து அகலிலடக்கிச் சீலைமண்செய்து பெரிய புடமாக சுமார் 50-60 விரட்டியில் போட்டு ஆறினபின்பு பார்க்க ஆமையோடு துண்டுகள் வெளுத்து இருக்கும். இதை மட்டும் எடுத்து மீண்டும் கல்வத்திலிட்டுப் பொடித்துக் குப்பைமேனி இலைச்சாறுவிட்டு ஒரு ஜாமம் அரைத்து மெழுகு பதத்தில் வில்லைகள் செய்துலர்த்தி அகலிலடக்கி சீலைமண் செய்து உலர்த்தி முன்போல் புடமிட நல்ல பற்பமாகும். அரைத்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு 2-3 அரிசி எடை தினம் இரு வேளையாக தாய்ப்பால் அல்லது கம்மாறு வெற்றிலைச்சாறு, ஓம வள்ளி இலைச்சாறு முதலிய அனுபானங்களில் குழந்தைகட்கு கொடுத்துவர கபமாந்தம், கபசுரம், கபக்கட்டு, மந்தம், அசீரணம், பேதி முதலியன குணமாகும்.

ஓமம், திப்பிலி வகைக்கு வரானெடை-1, வசம்பு சுட்டகரி வராகனெடை-½, இவைகளை பொன்மேனியாக வறுத்திடித்து வஸ்திரகாயஞ் செய்து இதில் வேளைக்கு 1-2 குன்றி எடைவீதம் எடுத்து இதில் முன் முடித்த ஆமையோடு ¼-½ குன்றி எடை வீதம் கூட்டி தாய்ப்பால் அல்லது தக்க அனுபானங்களில் கொடுத்துவர கபமாந்தம் முதலியன குணமாகும். இத்துடன் மாந்தக் குடிநீர்களில் ஏதேனுமொன்றைக் கொடுத்துவரின் மிக்க நன்மையைப் பயக்கும்.

பவழ பற்பம்:—நல்ல கொடிப் பவழமாக எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் ஓர்நாள் ஊறவைத்து கழுவி யுலர்த்த நல்ல சுத்தியாகும். பின்பு இதை இலந்தை இலைக் கற்கத்தினிடையே வைத்து அகலிலடக்கிச் சீலைமண்செய்து 50-60 வரட்டியில் புடமிட பற்பமாகும். ஒருவேளை சரிவர பற்பமாகாவிடில் மீண்டும் கல்வத்திலிட்டு பழச்சாறு விட்டரைத்து வில்லைசெய்து அகலிலடக்கிச் சீலைமண் செய்து முன்போல் புடமிட்டெடுக்க பற்பமாகும். பொடித்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு ¼-½ குன்றி எடை தாய்ப்பால் அல்லது தக்க அனுபானங்களில் குழந்தைகட்கு கொடுத்துவர இருமல், கபக்கட்டு, கபசுரம் முதலியன குணமாகும்.

அன்னபேதி செந்தூரம்:—அன்னபேதியை ஓர் பீங்கான் கோப்பையில் வைத்து மூழ்க இஞ்சிச்சாறும், பழச்சாறும் கலந்து விட்டு இரவியில் வைத்து சாறுகள் சுண்டிவரும்போது வழித்தெடுத்து அகலில் அல்லது சிறு மட்குடுவையில்விட்டு வாய்மூடிச் சீலைமண்செய்து 30-40 விரட்டியில் புடமிட செந்தூரமாகும். அரைத்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு ¼-½, குன்றி எடை வீதம் தாய்ப்பால் அல்லது தக்க அனுபானங்களில் குழந்தைகட்கு கொடுத்துவர சுரம், பேதி, இரத்தக் குறைவு முதலியன குணமாகும்.

—ஆம் பாகம் முற்றிற்று.

மூன்றாம் பாகம்

கடவுள் துணை

அனுபவ வைத்திய தேவ. ரகசியம்

சிகிச்சா சாரம்

சுர சிகிச்சை

வாதசுர நியாழம் :—சந்தனத்தூள், சிந்தில்கொடி, கோரைக் கிழங்கு, சுக்கு, வெதை, பூனைக்காலிவேர் இவைகள் சம எடையாக இடித்து அரைபடி ஜலம் சேர்த்து அதை ஆழாக்காகச் சுண்டக் காய்ச்சி கொடுத்துவர வாதசுரம் நீங்கும்.

ஆமணக்குவேர், சிற்றாமல்லிவேர், சுக்கு, தக்கோலவேர், செருப் படைவேர் இவை சம எடையாக நியாழம்வைத்து கொடுத்தால் வாதசுரம் நீங்கும்.

சிந்தில்கொடி, மோடி, சுக்கு இவைகளை நியாழம்வைத்து வாத சுர பிரகோபத்தில் எழுசாள் கொடுத்தால் வாதசுரம் குணமாகும்.

சிந்தில்கொடி, நன்னரிவேர்பட்டை, நிராசுஷி, சதாப்பிலை, வெள்ளைச்சாரணைவேர் இவைகளைச் சமனெடையாகக் நியாழம் வைத்து அதில் வெல்லம்போட்டு கொடுத்தால் வாதசுரம் குண மாகும்.

நிராசுஷி, சிந்தில்கொடி, பூனை, கொத்துபுங்கன், செவ்வியம் இவைகளைச் சமனாகக் நியாழம்வைத்துக் கொடுக்கலாம்.

சிந்தில்கொடி, சுக்கு, கொத்தமல்லி, வில்வவேர் இவை சம எடை நியாழம் வைத்து வெல்லம் கலந்து அருந்தினால் வாதசுரம் நீங்கும்.

நிப்பிலி, நன்னரிவேர்பட்டை, நிராசுஷி, சதாப்பிலை, மிளகு இவைகளை நியாழம்வைத்து வெல்லத்துடன் குடித்தால் வாதசுரம் நீங்கும்.

காட்டுகஞ்சா இலை, சிற்றாமுட்டி, நிராசுஷி, சிந்தில்கொடி, நன்னரிவேர்பட்டை இவைகளை சமனாகக் நியாழம் வைத்து சாப்பிட் டால் அதிதீவிரமான வாதசுரம் போகும்.

நிலப்பனைகிழங்கு, கன்னிரிவேர்ப்பட்டை, நிராகஷி, கொத்த புங்கன், சிந்தில்கொடி இவைகளை யெழுமிவைத்த வெல்லத்துடன் சாப்பிட்டால் வாதசுரம் நீங்கும்.

கண்டங்கத்திரிவேர், சிற்றமுட்டி, சுக்கு, கடுக்காய்தோல் இவைகளை சமனெடையாகத் தூக்கி முறைப்படி யெழுமிவைத்துக் கொடுத்தால் வாதசுரம் நீங்கும்.

நிலவேம்பு, திரிபலை, உத்தாமணிவேர், விஷ்ணுகிரந்தி, சுக்கு இவைகளைச் சம எடையாகக் யெழுமிவைத்த அதில் நிப்பிலிசூரணம் கலந்து கொடுத்தால் வாதசுரம் நீங்கும்.

ஆலம்விழுது, குருவேர், அவுரிவேர், தக்காளிவேர், மஞ்சள், சுக்கு, தானிக்காய் இவைகளை சம் எடையாகக் யெழுமிவைத்து சாப்பிட்டால் வாதசுரம் போகும்.

போரத்தை, கொன்றைப்பட்டை, தேவதாரு, அதிமதரம், நிராகஷி, நிப்பிலி, காட்டுமிளகு, கன்னிரிவேர், வெள்ளைச்சாரணை, வசம்பு, ஜடாமாஞ்சி, சதாப்பிலை, கோரைக்கிழங்கு, நிலப்பனைகிழங்கு கோஷ்டம், இலவம்பிசின், கொத்தமல்லி, ஆலம்விழுது, அவுரிவேர், சுக்கு இவைகளை யெழுமிவைத்து அதில் தேன் சர்க்கரை கலந்து சாப்பிட்டால் வாதசுரம் நீங்கும்.

பித்தசுர யெழுமம்:—காட்டுபச்சை பயிறு, கோரைக்கிழங்கு, குருவேர், சிந்தில்கொடி, சுக்கு, சிற்றமுட்டி, பேரமுட்டி, சிரகம் இவைகளை சம எடையாக யெழுமிட்டு சாப்பிட்டால் பித்தசுரம் போகும்.

பற்பாடகம், ஆடாதோடை, கடுகுரோகணி, சிமைநிலவேம்பு, பூனைக்காஞ்சொறிவேர் இவைகள் சம எடை யெழுமிவைத்த அதில் சர்க்கரைபோட்டு சாப்பிட்டால் தாகம், தாபம், பித்தரத்தம் இவை களுடன் கலந்த பித்தசுரம் நீங்கும்.

பற்பாடகம், பேய்ப்புடல், சந்தனத்தூள், வேப்பன்னர்க்கு, குருவேர், சுக்கு இவைகள் யாவற்றையுஞ் சேர்த்து யெழுமிட்டு சாப்பிட்டால் பித்தசுரம் நீங்கும்.

நிலவேம்பு, சிந்தில், பற்பாடகம், செல்விவற்றல் இவைகளைச் சம எடையாகக் யெழுங் காய்ச்சி அத்துடன் தேனும் சர்க்கரையும் கலந்து சாப்பிட்டால் பித்தசுரம் சூரியனைக் கண்ட பனிப்போல் நீங்கும்.

பேரீச்சம்பழம், சந்தனத்தூள், நிராகஷி, செல்விவற்றல், சிந்தில் கொடி சம எடையாகக் யெழுமிவைத்து சாப்பிட்டால் தாகம் அன வுடன்கூடிய பித்தசுரம் நீங்கும்.

சிந்தில்கொடி, யெழுமிவைத்த அதில் அதிமதுரசூரணம் சர்க் கரை இவைகளை கலந்து சாப்பிட்டால் பித்தசுரம் நீங்கும்.

சிந்தில்கொடி, வெட்டிவேர், கோரைக்கிழங்கு, கோஷ்டம், சந் தனத்தூள், சுக்கு இவைகளை சம எடை யெழுமிவைத்து சாப்பிட் டால் பித்தசுரம் நீங்கும்.

உத்தாமணி, பேராமுட்டி, வெட்டிவேர், கோரைக்கிழங்கு, சுக்கு, செல்விவற்றல், கொத்தமல்லி இவைகள் சமஎடை யெழுமி மிட்டு கொடுத்தால் பித்தசுரம் நீங்கும்.

தண்ணீர்விட்டான்கிழங்கு, கொத்தமல்லி, அதிமதரம், தும்ப ராஷ்டகம், கோரைக்கிழங்கு, சதாப்புவிரை, முசுமுசுக்கை, சுக்கு, குருவேர், இவைகளை சம எடை யெழுமிவைத்து கொடுத்தால் பித்தசுரம் நீங்கும்.

முசுமுசுக்கை, பனிப்பயிறு, சிந்தில்கொடி, ஜடாமாஞ்சி, கோரைக்கிழங்கு, சுக்கு, சிற்றமுட்டி, அதிமதரம் இவை சம எடை யெழுமிவைத்து கொடுத்தால் பித்தசுரம் நீங்கும்.

சிறுகாஞ்சொரி, பற்பாடகம், நிலவேம்பு, ஆடாதோடை, கடுகு ரோகணி இவைகள் சம எடை யெழுமிவைத்து சர்க்கரையுடன் கலந்து சாப்பிட்டால் பித்தசுரம் நீங்கும்.

கோரைக்கிழங்கு, சந்தனத்தூள், குருவேர், சிந்தில்கொடி, கன் னிரிவேர், சுக்கு, கோஷ்டம், நிலவேம்பு இவைகள் சம எடையாகக் யெழுமிவைத்துக் கொடுத்தால் பித்தசுரம் போகும்.

சந்தனத்தூள், கன்னிரிவேர், வெட்டிவேர், கரும்பு, பூசனிக் கிழங்கு, பச்சைப்பயிறு, எலக்காய் இவைகள் சம எடை யெழுமி வைத்துக் கொடுத்தால் பித்தசுரம் நீங்கும்.

நிராகஷி, பற்பாடகம், கொன்றைபட்டை, கடுகுரோகணி, கோரைக்கிழங்கு, கடுக்காய்பிஞ்சு இவைகள் சம எடை யெழுமி வைத்து கொடுத்தால் மூர்ச்சை, சோஷை, சரீரஅனல், தாகம், பிதற் றல், சித்தப்பிரமை முதலியது கூடிய பித்தசுரம் நீங்கும்.

காஞ்சொரிவேர், அதிவிடயம், சிமைநிலவேம்பு, கடுகுரோகணி ஆடாதோடை, பற்பாடகம் இவைகளை சமஎடையாகக் யெழுமி வைத்து அதில் சர்க்கரை கலந்து சாப்பிட்டால் சந்தபித்தசுரம் போகும்.

சிலேத்துமசுர யெழுமம்:—ஆடாதோடைவேர்க்கு, வசம்பு, பிரண் டை, கண்டங்கத்திரிவேர், சுக்கு, கடுகுரோகணி இவைகள் சம எடையாகக் யெழுமிவைத்த நிப்பிலிசூரணம்போட்டு தேனைகலந்து சாப்பிட்டால் கோழையுடன்கூடிய கபசுரம் போம்.

கண்டங்கத்திரிவேர், ஆடாதோடைவேர்க்கு, வெற்றிலைவேர், பஞ்சகோலங்கள் இவைகளை யெழுமவைத்து தேன்கலந்து கொடுத்தால் சூலையுடன்கூடிய சிலேஷ்மசுரம் நீங்கும்.

கண்டங்கத்திரிவேர், சுக்கு, சிற்றில்கொடி இவைகளை யெழும் வைத்து நிப்பிலிசூரணம்போட்டு சாப்பிட்டால் ஜீரணசுரம், அருசி, காசம், சூலை, சுவாசம், அக்கினிமந்தம், பிரசம் இவைகளைப் போக்கும்.

கோஷ்டம், வெட்பாலை, பெருங்குரும்பை, பேய்ப்புடல் இவைகளை சமவடையாகக் கியாழம்வைத்து மிளகுசூரணம் கலந்து சாப்பிட்டால் சிலேஷ்மசுரம் நீங்கும்.

நெல்லிவற்றல், சிற்றில்கொடி, கொன்றைவேர்ப்பட்டை, வேப்பன்னார்க்கு, பேய்ப்புடல், பெருங்குரும்பை, கடுகுரோகணி, கடுக்காய், கண்டங்கத்திரிவேர், மாமஞ்சள், மஞ்சள், ஆடாதோடை இவைகள் சமவடை கியாழம்வைத்து நிப்பிலிசூரணம் தேன்கலந்து சாப்பிட்டால் காசசுவாச சிலேஷ்மசுரம் நீங்கும்.

கண்டங்கத்திரி, கரசனங்கண்ணி, வெள்ளுள்ளி, பூனினி, வசம்பு, சுக்கு, ஓமம் இவை சம எடை கியாழம்போட்டு கொடுத்தால் சிலேஷ்மசுரம் நீங்கும்.

சீமைநிலவேம்பு, வேப்பம்பட்டை, நிப்பிலி, கிச்சிலிக்கிழங்கு, சுக்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, சிற்றில்கொடி, சிறியகண்டங்கத்திரி இவைகளைக் கியாழம்வைத்து கொடுத்தால் சிலேஷ்மசுரம் நீங்கும்.

கொடிமாதளைவேர், கடுக்காய்பிஞ்சு, சுக்கு, மோடி, இவைகள் சமவடை கியாழம் வைத்து அதில் யவாசுரம் கலந்து சுரங்கண்ட பன்னிரண்டு நாட்களுக்கு கொடுத்தால் சிலேத்துமசுரம் நீங்கும்.

பேய்ப்புடல், கடுக்காய், தானிக்காய், நெல்லி வற்றல், கடுகுரோகணி, கிச்சிலிக்கிழங்கு, ஆடாதோடை, சிற்றில்கொடி, இவைகளை கியாழம்வைத்து அதில் தேன் கலந்து சாப்பிட்டால் சிலேத்துமசுரம் நீங்கும்.

கண்டங்கத்திரி வேர், கொள்ளுக்காய்வேளை வேர், ஆடாதோடை வேர்க்கு, விஷ்ணுகிரந்தி, சுக்கு, இவைகளை சமவடையாகக் கியாழம் வைத்து நிப்பிலி சூரணம் கலந்து கொடுத்தால் சிலேத்துமசுரம் நீக்கும்.

வாதபித்த சுரகியாழம்:—கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், இலவம்பிசின், வெற்றிலைவேர், கொண்டைப்பட்டை, ஆடாதோடை, இவைகளை கியாழம்வைத்து கொடுத்தால் வாதபித்தசுரம் நீங்கும்.

அதிவிடயம், கடுக்காய்பிஞ்சு, சிற்றில்கொடி, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, இவைகளை சமவடை கியாழம்வைத்து உட்கொண்டால் வாதபித்தசுரம் நீங்கும்.

பற்பாடகம், கோரைக்கிழங்கு, சிற்றில்கொடி, அதிவிடயம், நிலவேம்பு, இவைகளை கியாழம்வைத்து கொடுத்தால் வாதபித்தசுரம் நீங்கும். இதற்கு பஞ்சபத்திரகியாழமென்றும் பெயர்.

வாதசிலேத்தும சுரகியாழம்:—கொன்றைமரப்பட்டை, மோடி, கோரைக்கிழங்கு, கடுகுரோகணி, கடுக்காய்பிஞ்சு, இவைகளை கியாழம்வைத்து கொடுத்தால் வாதசிலேத்தமசுரம் நீங்கும். இது ஆமசூலையைபோக்கி பேதி, தீபனம், ஜீரணம் இவைகளை யுண்டு பண்ணும்.

சிற்றரமூட்டிவேர், குரட்டைவேர், சிறிய கண்டங்கத்திரிவேர், பெரிய மூள்ளங்கத்திரிவேர், நெருஞ்சிவேர், வில்வவேர், முன்னைவேர், பெருவாலைவேர், நிலப்பனங்கிழங்குவேர், பாதரிவேர், இவைகள் சமவடை கியாழம்வைத்து நிப்பிலிசூரணம்கலந்து சாப்பிட்டால் வாதசிலேத்தம சுரம் நீங்கும்.

பித்தசிலேத்தும சுரகியாழம்:—வெட்டிவேர், கொத்தமல்லி, நெல்லிப்பட்டை, நிலவிளா, சுக்குமூலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், சுக்கு, இவைகள் சமவடைகியாழம் சாப்பிட்டால் பித்தசிலேத்தும சுரம் நீங்கும்.

சிகப்பு சந்தனம், தாமரைதண்டு, கொத்தமல்லி, சிற்றில்கொடி, வேப்பன்னார்க்கு, இவைகளைக் கியாழம்செய்து உண்டால் பித்தசிலேத்தும சுரம், அனல், தாகம் வாந்தி இவைகளை போக்குவதுடன் பசியையும் உண்டாக்கும்.

பேய்ப்புடல் சிகப்புசந்தனம், பெருங்குரும்பை, கடுகுரோகணி, சிற்றில்கொடி, இவைகள் சமவடையாகக் கியாழமிட்டுச் சாப்பிட்டால் பித்தசிலேத்தும சுரம்போம்.

தொந்தசுர கியாழம்:—சிற்றில்கொடி, சுக்கு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, பேராமூட்டி, சிற்றமல்லி, அதிமதுரம், கடுக்காய், தானிக்காய், இவைகளை கியாழம்வைத்து கொடுத்தால் தொந்தசுரம் நீங்கும்,

அஜீரணசுர கியாழம்:—கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், சுக்கு, நிப்பிலி, மிளகு, மோடி, ஓமம், வசம்பு, சித்திரமூலம், இவைகளை சமவடையாகக் கியாழமிட்டு சாப்பிட்டால் அஜீரணசுரம் நீங்கும்.

முறைகாச்சல் கியாழம்:—போராமுட்டி, நிலவேம்பு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், இருவித பாலிவேர், சுக்கு, இவை சம எடைகியாழம் வைத்தருந்த முறைசுரம் போம்.

துவாஹிக சுரகியாழம் :—பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, சுக்கு, தும்மட்டி, சிந்தில்கொடி, பற்பாடகம், இவைகள் சமஎடை கியாழம்போட்டு, அதில் திப்பிலி சூரணம்கூட்டிச் சாப்பிட்டால் இரண்டு நாளுக்கொருதரம் வரும் சுரம் நீங்கும்.

திரியாஹிக சுரக் கியாழம்:—காட்டுத் துளசி, நிராஞ்சி, சுக்கு, கண்டுபாரங்கி, தும்மட்டிவேர், நெய்ச்சட்டி, சிற்றமுட்டி, இவைகள் சம எடை கியாழமிட்டு சாப்பிட போம்.

சாதுர்த்திக சுர கியாழம்:—பேய்ப்புடல், செவ்வியம், சுக்கு, துளசி, போராமுட்டி, விஷ்ணுகிரந்தி, வெட்பாலை இவை சம எடை கியாழமிட் டருந்த போம்.

பஞ்சாகிக சுரக் கியாழம்:—போராமுட்டி, சிற்றமுட்டி, நாக முட்டி, சுக்கு, நிலப்பனங்கிழங்கு, பாலை, சிந்தில்கொடி, கடுகு ரோகணி, மரமஞ்சள் இவை சம எடை கியாழமிட்டருந்த போம்,

சகல முறை சுரங்கட்டும் கியாழம்:—சிற்றமுட்டி, போரா முட்டி, சிந்தில், நிலவேம்பு, வேம்பன்னார்க்கு, சித்திரமூலம், நிலப் பனங்கிழங்கு, சுக்கு இவைகளை சம எடையாகக் கியாழம் வைத்து சாப்பிட்டால் சகல முறைக்காய்ச்சலும் நீங்கும்.

பேய்ப்புடல், வெட்பாலைபட்டை, தேவதாரு, திரிபலை, கோரைக்கிழங்கு, நிராஞ்சி, அதிமதரம், சிந்தில்கொடி, ஆடா தோடை இவைகளை சம எடையாகக் கியாழம்வைத்து தேன்கலந்து சாப்பிட்டால் ஒருநாள் விட்டுவருதல், இரண்டுநாள் விட்டுவருதல், மூன்றுநாள் விட்டுவருதல், நான்குநாள் விட்டுவருதல் முதலிய விட்டு விட்டு வருகின்ற காய்ச்சல்கள் விஷசுரங்கள் முதலியன யாவும் நீரும்.

அந்தர்க்கத சுரகியாழம்:—பேய்ப்புடல், கடுகுரோகணி, கோரைக் கிழங்கு, நிலவேம்பு, சுக்கு, தும்மட்டிவேர், பற்பாடகம் இவை கியாழமவைத்து கொடித்தால் அந்தர்க்கதசுரம் நீங்கும்.

புராணசுர கியாழம்:—நிராஞ்சி, சிந்தில்கொடி, நிலவேம்பு, நெய்ச்சட்டி போராமுட்டி, திப்பிலி இவை கியாழம்வைத்து உட் கொண்டால் புராணசுரமென்ற நாட்பட்ட பழைய சுரம நீங்கும்.

வெலுமசந்தி, சிற்றமுட்டி, கண்டங்கத்திரிசமூலம், வசம்பு, சுக்கு, மரமஞ்சள், மஞ்சள் இவை சம எடை கியாழம் வைத்து கொடுத்தால் புராணசுரம் நீங்கும்.

ரக்த கதசுர கியாழம்:—தாமரை, நிலநீர்முள்ளி, அமுக்கிரு கிழங்கு, சித்திரமூலம், போராமுட்டி, சுக்கு, வசம்பு இவை சமஎடை கியாழம் வைத்து உட்கொண்டால் ரக்த கதசுரம் நீங்கும்.

விஷமசுர கியாழம்:—கோரைக்கிழங்கு, சிறிய கண்டங்கத்திரி வேர், சிந்தில்கொடி, சுக்கு, நெல்லிக்காய்த்தோல் இவைகளை கியா ழம்வைத்து திப்பிலிச்சூரணம் கலந்துட்கொண்டால் விஷமசுரம் நீங்கும்.

சித்திரமூலம், வெள்ளைப்பூண்டு, வட்டத்திருப்பி, பேய்ப்புடல், வேப்பன் நார்க்கு, பற்பாடகம், செவ்வியம், சுக்கு இவைகளைச் சம எடையாகக் கியாழம் வைத்தருந்த விஷமசுரம் நீங்கும்.

நிலவேம்பு, சந்தனத்தூள், சுக்கு, அதிமதரம் இவை சம எடை கியாழம்வைத்து சாப்பிட விஷமசுரம் நீரும்.

அறுகன்வேர், சித்திரமூலவேர்ப்பட்டை, ஆடாதோடை நார்க்கு, கொச்சிவேர், கண்டங்கத்திரிவேர், சிறுகாஞ்சொறிவேர், சுக்கு, செவ்வியம் இவைகளைச் சமனெடையாகக் கியாழமிட்டருந்த விஷம சுரம் போம்.

சீதசுர கியாழம்:—அரசன்பட்டை, சுக்கு, வசம்பு, வேப்பன் நார்க்கு, போராமுட்டி இவை சமஎடை கியாழமிட் டருந்த சீதசுரம் போம்.

விஷ்ணுகிரந்தி, சகதேவி, சுக்கு, நிலவேம்பு, பாலிபட்டை இவைகளைக் கியாழம்வைத்து தேன் திப்பிலிச்சூரணம் கலந்து சாப் பிட்டால் சீதசுரம் நீங்கும்.

இலந்தைஇலை, போராமுட்டி சிற்றமுட்டி, நாகமுட்டி, சுக்கு, பாலிபட்டை, கோரைக்கிழங்கு, பற்பாடகம், சகதேவி இவைகள் சமஎடை கியாழமிட் டருந்த சீதசுரம் போம்.

காட்டுத்துளசி, சுக்கு, விஷ்ணுகிரந்தி, தாமரைத்தண்டு, போரா முட்டி, இவைகளைச் சம எடையாகக் கியாழம் வைத்து திப்பிலிச்சூர ணம் கலந்து சாப்பிட்டால் சீதசுரம் நீங்கும்.

தோஷஹேது சுர கியாழம்:—சித்திரமூலம், வில்வவேர், வெள்ளை உப்பிலாங்கொடிவேர், கொச்சி இலை. சிற்றமல்லி, நில மல்லி, சுக்கு, இவைசமஎடை கியாழமிட்டருந்த தோஷசுரம் போம்.

அந்தர்தாஹ சுர கியாழம்:—அதிமதரம், சீரகம், குறிவேர், வெட்டிவேர், கோஷ்டம், கொத்தமல்லி, சதாப்பிலை, சுக்கு இவை சமஎடைகியாழம்.

பாதிரிப்பூ, அதிமதரம், தாமரைத்தண்டு, வெட்டிவேர், சந் தனத்தூள், நெல்லிப்பருப்பு, கோஷ்டம், இவை சமஎடை கியாழம்.

மர, அரசு, ஆல், இரளி, நாவல், இலைகளின்பட்டை, கொழுந்து முதலியவைகளுடன் அதிமதுரம், சீரகம், இலை சமனளவு கியாழம்.

விஷம சீதசுர கியாழம்:—சித்திரமூலம், போரமுட்டி, சிற்றரமுட்டி வட்டத்திருப்பி, சுரமூலி, சுக்கு, பாலைவேர், துளசிவேர், இலைசமனளவு கியாழம்.

தும்பராஷ்டம், அவுரிவேர், கொச்சி இலை, சிற்றரமுட்டி, நிலமல்லி, வசம்பு, சுக்கு, இலைகள் சமனளவு கியாழம்.

தோஷ சுர கியாழம்:—திப்பிலி, மோடி, செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, இலைகளைச் சமனளவு கியாழமிட்டுக் கொடுக்க தோஷசுரம் நீரும்—இதுதான் பஞ்சகோல கியாழம்.

மூன்றுவிதமுட்டிகள், நிலமல்லி, வில்வம், பெரிய கண்டங்கத்திரிவேர், சிறிய கண்டங்கத்திரிவேர், சுக்கு இலை சமனளவு கியாழம். இதுதான் அஷ்டமூல கியாழம்.

அஷ்டாதசமூல கியாழம்:—சிறிய கண்டங்கத்திரி, பெரிய கண்டங்கத்திரி, முன்னை, சிற்றரமுட்டி, பாதிரி, வில்வம், பெரியபூசினி, சிற்றரமல்லி, நிலமல்லி, சித்திரமூலம், பாலை, அருக்கன், நொச்சி, முருங்கன், கருப்பு உப்பிலாங்கொடி, வெள்ளை உப்பிலாங்கொடி, இந்த மூலிகைகளை சமனளவு சேர்த்து கியாழம் லைத்து சாப்பிட்டால் தோஷசுரம் நீங்கும்.

சகல சுரக் கியாழம்:—நிலவேம்பு, பற்பாடகம், செவ்வியம், பிரியங்கணப்பூ, சித்திரமூலம், கடுக்காய்பிஞ்சு, முன்னைவேர், இஞ்சி, சுக்கு இலை சமனளவு கியாழமிட்டருந்த சகல சுரமும் போம்.

பேய்ப்புடல், வெள்ளை உப்பிலாங்கொடி, கண்டங்கத்திரி, பூசினி, செருப்படை, அருக்கன்வேர், பாலைவேர், சுக்கு, இலை சமனளவு கியாழமிட்டருந்த சகல சுரமும் போம்.

கோரைக்கிழங்கு, பற்பாடகம், ஆமணக்குவேர், பிரியங்கணப்பூ, சிறுகீரைவேர், வசம்பு, சித்திரமூலம், சுக்கு இலை சமனளவு கியாழமிட்டருந்த சகல சுரமும் போம்.

கொன்றைபழம், சுக்கு, பேயாவரைவேர், ஆடாதோடைவேர்க்கு, பேய்ப்புடல், கொத்தமல்லி, கோரைக்கிழங்கு இலை சமனளவு கியாழமிட்டருந்த சகல சுரமும் போம்.

நிலவேம்பு, சித்திரமூலம், செவ்வியம், முள்வேலன், சிற்றில் கொடி, விஷ்ணுகிராந்தி, சுக்கு இலைகளைச் சமனளவாகக் கியாழமிட்டருந்த சகல சுரமும் போம்.

சந்தியாசுர கியாழம்:—நிலவேம்பு, திப்பிலி, கடுகுரோகணி, கண்டங்கத்திரிவேர், செவ்வியப்பருப்பு, பேய்ப்புடல், தும்மட்டிவேர், சுக்கு சமனளவு கியாழமிட்டருந்தவும்.

இராத்திரி சுர கியாழம்:—விஷ்ணுகிராந்தி, பாலைவேர், சுக்கு, போரமுட்டி, சிற்றரமுட்டி, நாகமுட்டி, கடுகுரோகணி இலை சமனளவு கியாழமிட்டருந்தவும்.

தும்மட்டிவேர், நிலப்பாலைவேர், சுக்கு, சகதேவிவேர், பாலைவேர், போரமுட்டி, மிளகு, சமனளவு கியாழமிட்டருந்தவும்.

சரபேசுர ரசம்:—சுத்திசெய்த ரசம், கெந்தி, நாபி, லிங்கம், வெண்காரம் இலைகளை சம எடையாக கல்வத்திலிட்டு சித்திரமூல கியாழத்தால் அரைத்து வஜ்ரமூசையில் லைத்து வாலுகாயந்திரத்தில் இரண்டு ஜாமங்கள் எரித்து ஆறியபின் சூரணித்து குன்றி எடை பிரமாணம் திரிகடுகுச் சூரணத்தில் கொடுக்க வாத பித்த கப சன்னிபாத சுரங்கள் குணமாகும்.

நரசிம்ம ரசம்:—சுத்திசெய்த பாதரசம், நாபி, கெந்தி, சோவாளம் இலைகள் சம எடையாக கல்வத்திலிட்டு அருக்கன்வேர் கியாழத்தால் மூன்று ஜாமங்கள் அரைத்து டோலாயந்திரத்தில் ஒரு ஜாமம் எரித்து ஆறியபிறகு எடுத்து மறுபடியும் சூரணித்து குன்றி எடை அனுபானத்துடன் கொடுத்தால் சகல சுரங்களும் நிவர்த்தியாகும்.

கருடதுவஜ ரசம்:—சுத்திசெய்த நாபி, சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த அப்பிரகம், சுத்திசெய்த கெந்தி, சுக்கு, திப்பிலி, மிளகு, லிங்கம், சந்தனவணம், இலவங்கம், திப்பிலிமூலம் இலை சமஎடை கல்வத்திலிட்டு செருப்படைஇலை சாற்றினால் ஒருநாள் முழுதும் அரைத்து அகலிலடக்கி சீலைமண்செய்து சுக்குடபுடமிட்டு சாங்க சீதளத்தில் எடுத்துப் பொடித்து இரண்டு குன்றிஎடை அனுபானத்தில் எடுத்துப் பொடித்த இரண்டு குன்றிஎடை அனுபானயுக்தமாக கொடுத்தால் சுரம் நிவர்த்தியாகும்.

நாராயண ரசம்:—சுத்திசெய்த இரசம், கெந்தி, சுக்கு, திப்பிலி, மிளகு, சுத்திசெய்த தாளகம், சுத்திசெய்த அப்பிரகம், கடுகுரோகணி, சுத்திசெய்த தாளகம் இலை சமனளவு கல்வத்திலிட்டு பஞ்சகோல கியாழத்தில் இரண்டு நாள் அரைத்து காசிக்குப்பியில் லைத்து சீலைசெய்து பூபுடமிட்டு சாங்க சீதளத்தில் எடுத்து மறுபடியும் நரி, மீன் இலைகள் பித்தத்தால் இரண்டு நாள் அரைத்த குன்றிஎடை பிரமாணம் வெற்றிலை சாற்றில் கொடுத்தால் சகல சுரங்கள், சன்னிபாத சுரங்கள், தோஷ சுரங்கள் இலைகள் எல்லாம் நிவர்த்தியாகும்.

வைஷ்ணவீ ரசம்:—சுத்திசெய்த லிங்கம், நாபி, கடுகுரோகணி, சுக்கு, திப்பிலி, மிளகு இலை சமனளவு கல்வத்திலிட்டு சித்திரமூல கியாழத்தால் ஒரு ஜாமம் அரைத்து பிறகு அந்த கியாழத்தில் துலா

யந்திரத்தில் ஒரு ஜாமம் எரித்து சாங்கசிதளத்தில் இறக்கி இரண்டு குன்றி பிரமாணம் இஞ்சிரசத்தில் கொடுத்தால் தொந்தசுரங்கள், சன்னிபாதங்கள், புராணசுரங்கள், விஷசுரங்கள் இவைகளெல்லாம் நிவர்த்தியாகும்.

சகல சுரங்களுக்கும் லக்ஷ்மீநாராயண ரசம்:—கெந்தி, மயில் துத்தம், வெண்காரம், தாளகம் இவைகள் சுத்திசெய்தது சமனடையாக எடுத்துக்கொண்டு கல்வத்திலிட்டு வெள்ளைச்சாரணைவேர் ரசத்தினால் மூன்று ஜாமங்கள் அரைத்து இந்த ரசத்திலேயே தோலாயந்திரத்தில் ஒரு ஜாமம் எரித்து ஆறியபிறகு எடுத்து இரண்டு அரிசிஎடை அனுபானத்துடன் அருந்த சகல சுரங்கள், தோஷ சுரங்கள் இவை நிவர்த்தியாகும்.

சகல சுரங்களுக்கும் பூதேசுர ரசம்:—சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த நாபி, சுத்திசெய்த கெந்தி, சுத்திசெய்த சேர்வாளம், சுத்திசெய்த லிங்கம் இவைகளை சமனடையாக எடுத்துக்கொண்டு கல்வத்திலிட்டு ஐந்திரமூலஇயாழத்தால் அரைத்து அந்த இயாழத்தில் தலையந்திரத்தில் ஒருஜாமம் எரித்து ஆறியபிறகு எடுத்துக்கொண்டு பிறகு மீன்பிச்சி நீரினால் ஒருஜாமம் அரைத்து பிறகு சதுரகள்ளிபாலினால் இரண்டு ஜாமங்கள் அரைத்து அரை முதல் ஒரு குன்றிஎடை இஞ்சி ரசத்தில் கொடுத்தால் சகல சுரங்களும் அருக்கன்வேர் இயாழத்தால் கொடுத்தால் சன்னிபாதங்களும் நீங்கிவிடும். பத்தியம் தயிர்சாதம், தாகத்திற்கு மோர் கொடுக்கவேண்டியது.

சகல சுரங்களுக்கு திருபுராந்தக ரசம்:—சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த கெந்தி, சுத்திசெய்த அப்பிரகம், இம்மூன்றையும் சமஎடையாக கல்வத்திலிட்டு கரிசலாங்கண்ணி சாற்றினால் ஒருநாள் முழுதும் அரைத்து மாத்திரைகள் செய்து ஆலைவத்து காசிகுப்பியில் வைத்து குக்குடபுடமிட்டு ஆறியபிறகு எடுத்து மீன், ஆடு, காட்டுபன்றி இவைகளின் பித்தங்களினால் மூன்று ஜாமங்கள் அரைத்து குன்றிஎடை இஞ்சி ரசத்தில் கொடுத்தால் வாத, பித்த, கப, சுரங்கள் நீங்கும். மேலும் திரிதோஷசுரம், தொந்தசுரம், இவைகளும் அனுபான பேதங்களினால் நீங்கும். பத்தியம் தயிர்சாதம் தாகத்திற்கு பானகம் கொடுக்கவேண்டியது.

காலகண்ட ரசம்:—சுத்திசெய்தநாபி, சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த கெந்தி, சுத்திசெய்த வெண்காரம், திப்பிலி, ஊமத்தன்விரை, இவைகள் சமனடையாக கல்வத்திலிட்டு செருப்படை இரசத்தால் அரைத்து பில்லைதட்டி அகலிலடக்கி சீலைமண்செய்து தூறுகாட்டு எருவில் புடமிட்டு ஆறிய பிறகு எடுத்து சதுரகள்ளி பாலினால் ஒரு ஜாமம் அரைத்த பிறகு மீன்பித்தத்தினால் அரைத்தலர்த்தி குன்றிஎடை அனுபான பேதங்களினால் கொடுத்தால் சகல சுரங்களும்நீங்கும். பத்தியம், பச்சைபயறு, வாகுசாதம், தாகத்திற்கு குளிர்ந்தசலம், கரும்புசாறு கொடுக்கவேண்டியது.

சாம்பவி ரசம்:—சுத்திசெய்தரசம், கெந்தி, வெங்காரம், சுக்கு, கடுக்காய், ஆமணக்குவிரை சேர்வாளம், கொளரிபாஷாணம் இவைகள் சமனடை கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றினால் மூன்றுகள் சமனடை கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றினால் மூன்றுநாள் அரைத்து பில்லைதட்டி அகலில்வைத்து மேலகல்மூடி சீலைமண்செய்து குக்கிடபுடமிட்டு, ஆறிய பிறகு எடுத்து ஆமணக்கெண்ணெயால் அரைத்து மருந்துக்கு பத்தாவது பாகம் மிளகு அதில் பாதிபாகம் காபியைச் சேர்த்து, மறுபடியும் அரைத்து குன்றிஎடை அனுபானங்களுடன் கொடுத்தால் சகல சுரங்கள் நிவர்த்தியாகும். தயிர்சாதம் பத்தியம், இளநீர் தாகத்திற்கு கொடுக்கவேண்டியது.

சுரங்களுக்கு பத்திரகாளிரசம்:—ரசம், நாபி, அப்பிரகம், சுக்கு, திப்பிலி, மிளகு, கெந்தி, வெண்காரம், கருஞ்சீரகம்வகை, சந்தவலவணம், இவைகள் சமனடை எடுத்து, சூரணித்து வஜ்ரமூசையில்வைத்து வாலுகாயந்திரத்தில் இரண்டு ஜாமங்கள் எரித்து ஆறிய பிறகு எடுத்து மீன்பித்தத்தில் அரைத்து குன்றிஎடை அனுபானங்களினால் கொடுத்தால் தோஷசுரம் சகல சுரங்கள் நீங்கும்.

புவனேசுவர ரசம்:—கொளரிபாஷாணம், அப்பிரகம், வசாபி, மனோசிலை, பாதரசம், கெந்தி சேர்வாளம், இவைகள் சுத்திசெய்தது சமனடையாக கல்வத்திலிட்டு பாகலிலை சாற்றினால் மூன்றுநாள் அரைத்து பில்லைசெய்து அகலில்வைத்து மேலகல்மூடி சீலைமண் செய்து குக்குடபுடமிட்டு ஆறிய பிறகு எடுத்து மறுபடியும் கல்வத்திலிட்டு இரண்டு ஜாமங்கள் அரைத்து குன்றிஎடை இஞ்சிரசத்தில் ஒருவாரமது அல்லது நிராகடுகு இயாழத்திலாவது கொடுத்தால் சகல சுரங்களும் நீங்கும்.

உமாமஹேசுர ரசம்:—பாதரசம், அப்பிரகம், சுத்திசெய்த சமஎடையாகக் கல்வத்திலிட்டு ஒரு நாள் வெண்மசாந்தி இயாழத்தில் அரைத்து தோலாயந்திரத்தில் இரண்டு ஜாமங்கள் காடாக்கினியாய் எரித்து ஆறிய பிறகு எடுத்து மயில், கோழி இவைகளின் பித்தத்தினால் இரண்டு ஜாமங்கள் அரைத்து ஒரு குன்றிஎடை இஞ்சிரசத்தில் கொடுத்தால் சகலசுரங்கள் நீங்கும். பத்தியம் கத்திரிக்காய் தயிர்சாத மிடவும்.

உக்கிரசுரங்களுக்கு பிதாமஹாரசம்:—பாதரசம், நாபி, லிங்கம், இவைகள் சுத்திசெய்தது, கடுகுரோகணி, லோகபஸ்பம், தாம்பிரபஸ்பம், எழுகுபஸ்பம், தாளகம் இவைகள் சமனடை கல்வத்திலிட்டு அறக்கன்வேர் இயாழத்தில் மிருதுவாகும்படி அரைத்து குளிகைகள்செய்து காசிகுப்பியில்வைத்து சீலைசெய்து வாலுகாயந்திரத்தில் மிருதுவாக்கினியால் மூன்று ஜாமங்கள் எரித்து ஆறிய பிறகு எடுத்து குன்றிஎடை அனுபான விசேஷமாய் கொடுத்தால் சகல சுரங்கள் போகும்.

சகலசுரங்களுக்கும் பாரதீரசம்:—வசம்பு, பாதரசம், சந்தனம், அப்பிரகம், நாபி, இவைசமனடை கல்வத்திலிட்டு சிவகரக்கை இவை ரசத்தில் ஒருநாள் அரைத்து வஜ்ர மூசையில்வைத்த பூபுடமிட்டு ஊர்க்குருவி பித்தத்தில் இரண்டு நாள் அரைத்து குன்றினடை அனுபானத்துடன் கொடுத்தால் சகல சுரங்கள் நீங்கும்.

கல்யாண ரசம்:—தாளகம், கெந்தி, சங்குசுன்னம் இவை சமனடை கல்லவத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றினல் அரைத்த தோலையந்திரத்தில் ஒருநாள் எரித்து ஆறிய பிறகு எடுத்து சூரணித்து ஒரு குன்றி எடை அனுபானங்களுடன் கொடுத்தால் சகல சுரங்கள் நீங்கும்.

விஷமசுரங்களுக்கு பார்க்கவீ ரசம்:—சுத்திசெய்த பாதரசம் கெந்தி, நேர்வாளம் இவைகள் சமனடை கல்வத்திலிட்டு அரசம் பட்டை கியாழத்தால் அரைத்த அந்த கியாழத்தில் தலையந்திரமாக ஒருஜாமம் எரித்து ஆறியபிறகு எடுத்து குன்றி எடை மாத்திரை னாகச் செய்து சர்க்கரை, திப்பிலிசூரணம் முதலிய அனுபானங்களில் கொடுத்தால் விஷமசுரங்கள், சகல சுரங்கள் க்ஷணத்திற்குள் நாசமாகும்.

தோஷ சுரங்களுக்கு ரசேந்திரரசம்:—பாதரசம், அப்பிரகம், தாம்பிரபஸ்பம், வசநாபி, கெந்தி இவைகள் சுத்திசெய்தது சமனடை னருக்கன்வேர் கியாழத்தில் அரைத்த மூசையில் வைத்து வாலுகா யந்திரத்தில் ஒருநாள் மந்தாக்கினியில் எரித்து ஆறியபிறகு மிருதுவாக சூரணித்து ஒரு குன்றி எடை அனுபானபேதங்களால் கொடுத்தால் தோஷசுரங்கள் சந்நிபாதங்கள் நீங்கும்.

தோஷசுரங்களுக்கு விஸ்வம்பரரசம்:—சுத்திசெய்த (ரசம்—அப்பிரகம், லிங்கம், நாபி, தாளகம்) இவைகளை சமனடை கல்வத்திலிட்டு செருப்படைஇலை கியாழத்தால் இரண்டுநாள் அரைத்து ஒரு குக்குட புடமிட்டு ஆறியபிறகு எடுத்து அரைத்து மறுபடியும் குக்குடபுட மிட்டு ஆறியபிறகு எடுத்து, ஆமை, பன்றி, மீன் இவைகள் பித்தத்தினல் மூன்றுநாள் அரைத்து குன்றி எடை அனுபானங்களுடன் கொடுத்தால் தோஷசுரங்கள், சந்நிபாதசுரங்கள், நீரிசுரங்கள் நிவர்த்திக்கும். பத்தியம் இச்சாபத்தியம்.

அர்த்தநாரீசுர ரசம்:—சுத்திசெய்தரசம், நாபி, வங்கபஸ்பம் இவை சமனடை கல்வத்திலிட்டு வெள்ளை அருக்கன்வேர் கியாழத்தால் மூன்றுநாழிகை அரைத்த அந்த கியாழத்திலேயே தோலையந்திரத்தில் ஒருநாள் எரித்து தோலாயந்திரத்தில் மீந்த சாற்றினல் மேற்படி மருந்தை அரைத்து ஒருதுளி காதில்விட பாரிசுரம் நீங்கும்.

அஜீரணசுரங்களுக்கு ஹரதர்சனரசம்:—சுத்திசெய்த கோஷ்டம், கெந்தி, நாபி, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், செல்லி வற்றல் இவைகளை சமனடை கல்வத்திலிட்டு கரிசாலைச்சாற்றினல்

அரைத்து உலர்ந்த அளவு மாத்திரை செய்து கொடுத்தால் அஜீரணசுரம், சுவாசகாசம் முதலியன குணமாக்கும். அக்கினிதீபனம் ருசி இவைகளை யுண்டுபண்ணும்.

சீதசுரத்திற்கு ராமபாணரசம்:—சுத்திசெய்தலிங்கம், ரசம், தத்தம் இவை சமனடை கல்வத்திலிட்டு ஊமத்தை இலை சாற்றினல் இரண்டு ஜாமங்கள் அரைத்து உலர்ந்த அளவு மாத்திரைசெய்து பசும் பாலில் மூன்றுநாள் சாப்பிட்டால் சீதசுரம் நிவர்த்தியாகும்.

திரிமூர்த்தி ரசம்:—சுத்திசெய்த துருசு, பால்துத்தம், எலிபாஷாணம் இவைகளை சமனடை தேனில் ஒருஜாமம் சுருக்கு கொடுத்து மறுபடியும் பாவக்காய் இலைசாற்றினல் அரைத்து தோலாயந்திரத்தில் ஒருஜாமம் எரித்து ஆறியபிறகு எடுத்து ஊமத்தன் இலை சாற்றில் அரைத்த 1-2 அரிசி எடை பசும்பாலில் கொடுத்தால் சீதசுரம் நீங்கும்.

சீதசுரங்களுக்கு சண்டபானு ரசம்:—சுத்திசெய்த பால்துத்தம் (1) பாகம், சுத்திசெய்த தாளகம் (2) பாகம், ஸைலசூரம் (4) பாகம் இவைகளை கல்வத்திலிட்டு கற்றுழை சாற்றினல் அரைத்து வஜ்ர மூசையில் வைத்து குக்குடபுடமிட்டு ஆறியபிறகு எடுத்து வைத்துக்கொண்டு குன்றிஎடை சிறகம் அனுபானத்தில் கலந்து கொடுக்க சீதசுரம் நீங்கும். பத்தியம் பச்சைபயறு கஞ்சிகொடுக்க வேண்டியது.

சூரியபாவசு ரசம்:—சுத்திசெய்த எலிபாஷாணம், கௌரி பாஷாணம், தொட்டிபாஷாணம், துருசு, பால்துத்தம், நேர்வாளம், தாளகம், இவை சமனடை கல்வத்திலிட்டு ஊமத்தன் இலைசாற்றினல் அரைத்து குக்குடபுடமிட்டு ஆறியபிறகு எடுத்து காட்டுபன்றி பித்தத்தினல் அரைத்து ஒரு குன்றிஎடை அனுபானத்துடன் கொடுத்தால் சீதசுரம் நீங்கும்.

சீத கஜாங்குஷம்:—சுத்திசெய்த ரசம் 1-பாகம், சுத்திசெய்த நாபி 2-பாகம், சுத்திசெய்த துருசு 3-பாகம், பலகறை 4-பாகம் இவைகளை கல்வத்திலிட்டு ஊமத்தன் இலைசாற்றில் அரைத்து தோலையந்திரத்தில் எரித்து ஆறியபிறகு எடுத்து சூரணித்து குன்றிஎடை அனுபானத்துடன் கொடுத்தால் சீதசுரம் நீங்கும்.

சீதப்பஞ்சன ரசம்:—சுத்திசெய்த துருசு, பால்துத்தம், மிளகு, பாதரசம் எலிபாஷாணம், சுக்கு இவைகளை சமனடை கல்வத்திலிட்டு பாவலிலை சாற்றினல் அரைத்து குக்குட புடமிட்டு ஆறியபிறகு எடுத்து மறுபடியும் மீன்பிச்சியினல் அரைத்து குன்றி எடை சர்க்கரை அனுபானத்தில் கொடுத்தால் சீதசுரம் நிவர்த்தியாகும்.

ஆஹிக அஸ்திகத சீதசுரங்களுக்கு பஞ்சமூர்த்தி ரசம்:—சுத்தி செய்த சேர்வாளம், எலிபாஷாணம், குருசு, பால்துத்தம், தாளகம் இவை சமனடை கல்வத்திலிட்டு கற்றுழை சாற்றில் இரண்டு ஜாமங்கள் அரைத்து தோலாயந்திரத்தில் ஒரு ஜாமம் எரித்து ஆறியபிறகு எடுத்து மீன் பிச்சியால் அரைத்து குன்றியளவு பசும்பாலில் கொடுத்தால் மேல்கூறிய சுரங்கள் நீங்கும்.

முறைகாய்ச்சல்களுக்கு மஹாசுராங்குச ரசம்:—பாதரசம் 1-பாகம், நிர்விஷம் 1-பாகம், கெந்தி 1-பாகம், ஜமத்கினி 3-பாகம், சுக்கு, திப்பிலி, மிளகு இவைகள் மூன்றும் 12-பாகம், இவைகளைச் சுத்திசெய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றினாலும் இஞ்சி ரசத்தாலும் அரைத்து ஒன்றிரண்டு குன்றிஎடை உட்கொண்டால் சகலமுறைக்காய்ச்சல்கள், விஷமசுரங்கள், நிரிதோஷ சுரங்கள் நீங்கும்.

ஆஹிக அஸ்திகத சுரங்களுக்கு நவநாத ரசம்:—சுத்திசெய்த காபி, எலிபாஷாணம் மயில்துத்தம், பால்துத்தம், ரசம், தொட்டி பாஷாணம், வசம்பு, தாளகம், கெந்தி இவைகள் சுத்திசெய்தது சமஎடை யெடுத்து வெள்ளைப்பூண்டு இரசத்தால் அரைத்து தோலாயந்திரத்தில் ஒருநாள் எரித்து ஆறியபிறகு எடுத்து காபிச்சியினால் அரைத்து குன்றிஎடை ஆட்டுப்பாலில் கொடுத்தால் மேற்கூறிய சுரங்கள் நீங்கும். பத்தியம், சர்க்கரை, பால் நெய் கலந்த அன்னத்தை சாப்பிடவேண்டியது நாகத்திற்கு குளிர்ந்தசலம் இளநீர் சாப்பிடவேண்டியது.

அஷ்டசுரங்களுக்கு சந்திரஹாச ரசம்:—பாதரசம் 2-பாகம், சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தி 6-பாகம், லிங்கம் 2-பாகம், வெண்காரம் 4-பாகம், காபி 2-பாகம், மஞ்சிகை 2-பாகம், சாரகாரம் 4-பாகம், ஏலக்காய் 3-பாகம் ஜாதிக்காய் 2-பாகம், சேர்வாளம் 2-பாகம், இவைகளை சுத்திசெய்து கல்வத்திலிட்டு பழச்சாற்றினாலும் காசனிக்கண்ணி, நொச்சி, வெற்றிலை, இஞ்சி இவைகளின் சாற்றினாலும் நிரிபலிக் குடிநீராலும் ஒவ்வொன்றிலும் தனித்தனியே மூன்று காழிகை வீதம் அரைத்து சிறுகடலை அளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி அனுபானங்களுடன் கொடுத்தால் எட்டு சுரங்கள் பதின்மூன்று சன்னிபாதங்கள் முதலியவாவும் நீங்கும்.

சகல சுரங்களுக்கு பேதிசுராங்குசம்:—இரசம், லிங்கம், காபி இவைகள் தனித்தனியே 40-குன்றிஎடை அல்லது ஒரு கிழ்க்கம், கெந்தி 2-கிழ்க்கங்கள், வெங்காரம 2-கிழ்க்கங்கள், மிளகு 5-கிழ்க்கங்கள், சேர்வாளம் 6-கிழ்க்கங்கள் அல்லது ½-பலம் இவைகள் சுத்திசெய்து கல்வத்திலிட்டு கண்டங்கத்திரி பழச்சாற்றில் இரண்டு ஜாமங்கள் அரைத்து 2-குன்றி எடை மாத்திரைசெய்து நிழலுலர்த்தி இஞ்சிரசத்தில் கொடுத்தால் அதிஉஷ்ணசுரம் இன்னும் சகல சுரங்கள் நீங்கும்.

நவசுரங்களுக்கு தூமகேது ரசம் :—இரசம், கெந்தி, லிங்கம், கடல்நுரை இவைகள் சுத்திசெய்து சமனடை கல்வத்திலிட்டு இஞ்சி ரசத்தால் ஒரு ஜாமம் அரைத்து ஒரு குன்றிஎடை இஞ்சி ரசத்தில் கொடுத்தால் நவசுரங்கள் நீங்கும்.

நவசுரே பாங்குச ரசம்:—கெந்தி, வெங்காரம், பாதரசம், மிளகு இவைகள் சுத்திசெய்து கல்வத்திலிட்டு மீன்பிச்சியால் மூன்றாட்கள் அரைத்து தக்க அனுபானங்களில் குன்றிஎடை கொடுத்தால் சுரத்தைப்போக்கி வியர்வையை யுண்டாக்கும். பத்தியம் கத்திரிக்காயுடன் மோர்கலந்த சாதத்தை இடவேண்டியது.

வாதசுரத்திற்கு பிப்பிலாதி சூரணம்:—திப்பிலி, லிங்கம், காபி இவைகள் சமனடை கல்வத்திலிட்டு அரைத்து இரண்டு குன்றிஎடை தேனில் கொடித்தால் வாதசுரம் நிவர்த்தியாகும்.

வாதசுர சூரணம்:—நிராகஷி, பூனைக்காஞ்சொரி, கடுக்காய் பிஞ்சு, கொட்டைப்பாக்கு இவைகள் சமனடை சூரணித்து வெல்லத்தைச்சேர்த்துக் கொடுத்தால் வாதசுரம் நிவர்த்தியாகும்.

கபசுர சூரணம் :—வெட்பாலையரிசி, கடுகுரோகணி, மாமஞ்சள், சித்திரமூலம், நிரிகடுகு, சிறுநாகப்பூ இவைகள் சமனடை சூரணித்து நிரிகடி பிரமாணம் வெந்நீரில் கொடுத்தால் கபசுரம் நீங்கும்.

கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், திப்பிலி இவைகளைச் சமனடை சூரணித்து தேனுடன் கலந்து சாப்பிட்டால் கபசுரம் நீங்கும்.

கபசுரங்களுக்கு பிப்பலாதி சூரணம் :—திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல் இவைகள் சமனடை சூரணித்து அந்தச் சூரணத்துடன் தேன் கலந்து கொடுத்தால் கபசுரமும் நெய்யுடன் கொடுத்தால் காச சுவாசங்களும் நீங்கும்.

பித்தசுர சூரணம்:—ஒரு சிட்டிக்கை கடுகுரோகணி சூரணத்தில் சிறிது சர்க்கரை கலந்து வெந்நீரில் கொடுத்தால் பித்தசுரம் நீங்கும்.

விஷமசுரத்திற்கு நிம்பாதி சூரணம்:—நிலவேம்பு, கடுக்காய் பிஞ்சு, கோரைக்கிழங்கு, கண்டங்கத்திரி, கொத்துபுங்கன், சுக்கு, பூனைகாஞ்சொரி, கடுகுரோகணி, சிறுஆமணக்குவேர், இச்சிலிக்கிழங்கு, திப்பிலி, பேய்ப்புடல், முள்ளங்கத்திரிவேர், குறுவேர், திப்பிலிமூலம், பற்பாடகம், இவை சமனடை சூரணித்துக்கொடுத்தால் சகல விஷமசுரங்கள் நிவர்த்தியாகும்.

விஷசுரத்திற்கு சூரணம்:—துளசி இலைசாற்றில் மிளகு சூரணத்தையாகிலும் அல்லது தும்பைப்பூ ரசத்தில் மிளகு சூரணத்தையாகிலும் கலந்து கொடுத்தால் விஷமசுரம் நீங்கும்.

சீரகப்பொடியை, வெல்லத்துடன் கலந்து கொடுத்தால் விஷம சுரம், அக்கினிமந்தம், வாதரோகம் சேதம் இவைகள் நீங்கும்.

திப்பிலியாதி சூரணம்:—ஓமம், கடுக்காய், பெருங்காயம், சித்திரமூலம், சுக்கு, யவக்ஷாரம், சர்ஜக்ஷாரம், கருஞ்சீரகம், சீரகம், திப்பிலி, திரிபலை, பிடாலலவணம், சைந்தவலவணம், இவைகளை சம எடை சூரணித்து கொடுத்தால் விஷமசுரம் நீங்கும்.

முறைசுரத்திற்கு நிம்பாதி சூரணம்:—வேப்பன் பட்டை (10) பலம், நிரிகடுகு (3) பலம், திரிபலங்கள் (3) பலம், திரிலவணங்கள் (3) பலம், இருகாரங்கள் (2) பலம், ஓமம் (5) பலம், இவைகளைச் சூரணித்து வெருகடிபிரமாணம் காலையில் சாப்பிட்டு வந்தால் முறை காச்சல்கள் யாவும் நீங்கும்.

அஸ்திசுரத்திற்கு பிருங்கராஜ சூரணம்:—கரசனங்கணி செடியை சமூலமாக பிடுங்கி நிழலில் உலர்த்தி சூரணித்து அதற்கு சமமாக திரிபலைசூரணத்தை சேர்த்து இந்த சூரணத்திற்கு சமமாக சர்க்கரை கலந்து அனுபானயுக்தமாக வேளைக்கு ½ பலம் வீதம் தினம் இருமுறையாக கொடுத்தவர அக்கினிமந்தம், மலசிக்கல் பாண்டுரோகம் அஸ்திசுரம் இவைகள் நீங்கும்.

சீதசுரத்திற்கு சூரணம்:—பாதிரிவேர், முன்னைவேர், இவைகளை அரிசிகழுவியநீரால் அரைத்து கொடுத்தாலும், அல்லது சுக்கு கியாழத்தில் மிளகு சூரணத்தைக் கலந்துக் கொடுத்தாலும், சீதசுரம் நிவர்த்தியாகும்.

ஜீரகாதி சூரணம்:—சீரகம், வெள்ளைப்பூண்டு, சுக்கு, திப்பிலி, மிளகு, சுக்கு, இவை சமனளவு வெந்நீரில் அரைத்து சுரத்திற்கு முன்பாகவே சர்க்கரையுடன் கொடுத்தால், சீதசுரம் நிவர்த்தியாகும்.

பத்தியாதி சூரணம்:—கடுக்காய், வெப்பாலை, இவைகளை சம எடை சூரணித்து, வெல்லத்துடன் கொடுத்தால் விஷமசீதசுரம் நிவர்த்தியாகும்.

தாளிசாதி சூரணம்:—தாளிசபத்திரி (1) பாகம், மிளகு (2) பாகம், சுக்கு (3) பாகம், திப்பிலி (4) பாகம் மூங்கிலுப்பு (5) பாகம், ஏலக்காய் (½)பாகம் இலவங்கப்பட்டை (½) பாகம், சர்க்கரை (32) பாகம் இவைகளை சூரணித்து திரிடிபிரமாணம் கொடுத்தால், ருசி, அக்கினிதீபனம், இவைகளை யுண்டாக்கி, காசசுவாச சுரம் வாந்தி, அதிசாரம், சோபை, வயிறுப்பல், பிலீகோதரணி, பாண்டு ரோகம் இவைகளை நிவர்த்திக்கும்.

திரிபலாதி சூரணம்:—திப்பிலி, திரிபலை, இவைகளை சமனளவு சூரணித்து தேனுடன் கலந்து கொடுத்தால், பேதி, அக்கினிதீபனம், இவைகள் உண்டாகும். காசசுவாசம் சுரம் முதலியன குணமாகும்

லவங்காதி சூரணம்:—இலவங்கம், ஜாதிக்காய், திப்பிலி, இவைகள் வகைக்கு அரைக்கால் பலம் எடையாக சூரணித்து மிளகு சூரணம (2) பலம, சுக்கு சூரணம் (4) பலம் கூட்டி மொத்த எடைக்கு சமமாக சர்க்கரை கலந்து கொடுத்தால் பிரபலமான ரோகங்கள் கபசுரம், அருசி, மேகம், குன்மம், சுவாசங்கள், அக்கினிமந்தம், சிறுணிதோஷங்கள் முதலியன நிவர்த்தியாகும்.

தருணசுரங்களுக்கு தனியாதி சூரணம்:—கொத்தமல்லி, இலவங்கம், சுக்கு இவைகளை சமஎடையாக சூரணித்து அந்த சூரணத்தை வெந்நீரில் கலந்துகொடுத்தால் தருணசுரம் நிவர்த்தியாகும்.

கோரோசனாதி சூரணம்:—கோரோசனம், மிளகு, சிற்றரத்தை, கோஷ்டம், திப்பிலி இவைகளைச் சம எடை சூரணித்து வெந்நீரில் கொடுத்தால் சகல சுரங்கள் நிவர்த்தியாகும்.

சகல சுரங்களுக்கு சிதோபலாதி சூரணம்:—கர்க்கண்டு 4-பலம் மூங்கில் உப்பு 2-பலம், திப்பிலி 1-பலம், ஏலக்காய் ½-பலம், இலவங்கப்பட்டை ½-பலம் இவைகளை சூரணித்து தேன், நெய் இவைகளுடன் கொடுத்தால் காச சுவாசங்கள், கால் எரிச்சல், கை எரிச்சல், உடல் எரிச்சல், அக்கினிமந்தம், நாவறட்சி, பாரிசசூலை, அருசி, சுரம், ஊர்த்துவகத ரக்தவிகாரம், பித்தம் இவைகளை நாசஞ் செய்யும்.

அஷ்டவித சுரங்களுக்கு பாரங்கியாதி சூரணம்:—கண்டுபாரங்கி, கர்கடகசிங்கி, செவ்வியம், தாளிசபத்திரி, மிளகு, மோடிசிங்கி இவைகள் நிறுசு 1-க்கு 2-பலம், சுக்கு 6-பலம், திப்பிலி, ஆனைதிப்பிலி 2-பலம், இலவங்கப்பூ, இலவங்கப்பட்டை, நாககேசரம், ஏலம், வெட்டிவேர் இவைகள் நிறுசு 1-க்கு 1-பலம், இவைகளை சூரணித்து 4-பலம் சர்க்கரை கலந்து வைத்துக்கொண்டு முறைப்படி அருந்திவர எட்டுவித சுரங்கள், காசசுவாசங்கள், விக்கம், சூலை, உதரரோகம் தோஷத்திரயங்கள் இவைகள் எல்லாம் நீங்கும்.

விஷமசுரங்களுக்கு பஞ்சதிக்த கிருதம்:—ஆடாதோடை, வேப்பன், சிந்தில்கொடி, கண்டங்கத்திரி, பேய்புடல், இவைகளின் கற்கத்தை எடுத்து அத்துடன் நெய்யைகலந்து அனலில் வைத்துக் காய்ச்சி லேபனஞ் செய்தால் விஷம சுரங்கள், பாண்டுரோகங்கள் குஷ்டரோகங்கள் விசர்ப்பி இவைகள் நீங்கும். மூலரோகத்தையும் போக்கும்.

அமிருதாத்திய கிருதம்:—சிந்தில்கொடி, திரிபலை, பேய்ப்புடல், பூனைகாஞ்சொரி இவைகளின் கியாழத்தில் சமன் நெய்யை கலந்து காய்ச்சிஎல் அமிருதத்திய கிருதமெனப்படும். இதை உட்கொண்டால் விஷமசுரம், சூலரோகம், அருசி, குன்மம், காமாலை இவைகளைப் போக்கும்.

சுண்டியாதி கிருதம்:—சுக்கு, திப்பிலி, மோடி, செவ்வியம், சித்திரமூலம், யவாக்ஷாரம் இவைகளை தனித்தனி 1-பலம் சேர்த்து கியாழம்வைத்து அத்துடன் 12-பலம் நெய், 12-பலம் இஞ்சி ரசம், நீர்மோர் 12-பலம் கலந்து கிருதபக்குவமாக காய்ச்சி அருந்த விஷம சுரங்கள், ஜீரணசுரங்கள், வருஷத்திய சுரங்கள் இவைகள் சகலமும் நீங்கும்.

முறைக் காய்ச்சல்களுக்கு அமிருதஷட்பல கிருதம்:—சுக்கு, செவ்வியம், யவாக்ஷாரம், திப்பிலிமூலம், சித்திரமூலம், திப்பிலி இவைகளை வகைக்கு 1-பலமாக இடித்து கற்கம்செய்து அதில் நெய் 12-பலம், இஞ்சிரசம் 12-பலம், தேன் 12-பலம் சேர்த்து முறைப்படி காய்ச்சவும். இதை சாப்பிட்டால் முறைகாய்ச்சல்கள் சகலமும் குணமாகும். தேகபுஷ்டி பலம், அக்கினிதீபனம் இவைகளை உண்டாக்கும்.

ஜீரணசுரங்களுக்கு வாசாதிகிருதம்:—ஆடாதோடை, சிற்றில் கொடி, நிரிபலை, கொத்துபுங்கன், பூனைகாஞ்சோரி இவைகள் சமனடை கியாழம் வைத்து அந்த கியாழத்திற்கு சமன் பசு நெய்யும் இரண்டுபாகம் பசும்பாலைச்சேர்த்து திப்பிலி, கோரைக்கிழங்கு, திராக்ஷை, சிகப்பு சந்தனம், தாமரைத்தண்டு, சுக்கு இவைகளை கல்கம் செய்து மேற்படி திரவத்துடன் சேர்த்து காய்ச்சினால் வாசாதி கிருதமெனப்படும் இதை சாப்பிட்டு வந்தால் ஜீரணசுரங்கள் நிவர்த்தியாகும்.

பிப்பலியாதி கிருதம்:—திப்பிலி, ரக்தசந்தனம், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், கடுகுரோகணி, வெப்பாலை, செல்லிபட்டை, நன்னாரி வேர், அதிவிடயம், சித்தாமல்லி, திராக்ஷை, செல்லி விதைகள், கொத்துபுங்கன், கண்டங்கத்திரி இவைகள் சமனடை கற்கம் செய்த அதில் பசுநெய் சேர்த்து காய்ச்ச அது பிப்லாயதி கிருதம் என்ற பெயர். இதை சாப்பிட்டால் ஜீரணசுரம் அப்பொழுதே நிவர்த்தியாகும். க்ஷயம், காசம், தலைவலி, பாரிசூலை, அருசி, தேக எரிச்சல், விஷமாக்கினி இவைகளை நாசஞ்செய்யும்.

இலிங்கச் செந்தூரம்:—ஒரு பலம் எடையுள்ள லிங்கம் ஒரே கட்டியாக எடுத்து முலைப்பாலில் மூன்றுநாட்கள் ஊறவைத்து கழுவியுலர்த்தி சுத்திசெய்து, ஒருபலம் கற்பூரம், ஒருபலம் சாம்பிராணி இவை இரண்டையும் அரைத்து எட்டு பாகங்களாகப் பங்கிட்டு ஒவ்வொரு பங்கையும் இலிங்கக் கட்டிக்கு வசம்செய்து கொளுத்தவும். இப்படியே எட்டு பாகங்களையும் செய்தபின்பு, 10-பலம் குரோசாணி யோமத்தைக் கொண்டுவந்து, ஒரு சட்டியில் ஒருபிடி ஓமத்தைப் போட்டு அதன்மீது லிங்கக்கட்டியை வைத்து மேலும் ஒருபிடி ஓமத்தைப்போட்டு அடுப்பிலேற்றி எரிக்கவும். ஓமம் தீர்ந்து வரும் சமயம் மீண்டும் ஒரு பிடி ஓமத்தைப் போட்டு வறுக்கவும். இப்படியே

10-பலம் ஓமமும் தீரும் வரையில், லிங்கக் கட்டியானது ஓமத்தினிடையிலேயே வறுபடும்படிச்செய்து, ஆறினபின் லிங்கக்கட்டியை மட்டும் எடுத்து அரைத்து வைத்துக்கொள்க.

இதில் வேளைக்கு ½-½-குன்றி வீதம் தினம் 2-வேளை இஞ்சிச்சாறு, தேன் முதலியவற்றுடன் கொடுக்க சுரம், சன்னிகளும், நிரிகடுகு சூரணத்துடன் தேன்கூட்டிக் கொடுக்க வாதரோகங்களும், திப்பிலிச் சூரணத்துடன் தேன் கூட்டிக் கொடுக்க அஜீரண அதிசார பேதிகளும் குணமாகும்.

இலிங்க மாத்திரை:—சுத்திசெய்த லிங்கம் பலம்-1, மொட்டு நீக்கிய நிராம்பு பலம்-1, பொரித்த பெருங்காயம் பலம்-1, இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டு * வெள்ளைப்பூண்டு சாறுவிட்டு ஒரு ஜாமம் நன்கு அரைத்து உலர்த்து, மிளகு அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்துக.

இதில் சிறுவர்கட்கு உளுந்தளவு மாத்திரையும், பெரியவர்கட்கு மிளகளவு மாத்திரையுமாக, வேளைக்கு 1-மாத்திரை வீதம் தினம் இரு வேளை தேன் அல்லது தக்க அனுபானங்களில் கொடுத்து வர சுரம், ஜலுப்பு, தலைவலி, காசசுவாசம், வாதசூலை முதலியன குணமாகும்.

பாஷாண பற்பம்:—கற்சுண்ணமும், அப்ளாகாரமும் சமனடை யாக எடுத்து நான்குபங்கு நீர்விட்டுக் கரைத்து ஓர் பாலியில் பாதி பாகத்தில் அடங்கும்படி விட்டு வாய்க்கு துணிகட்டி அதன்மீது சங்குபாஷாணக் கட்டியை வைத்து, பொருத்தமான மேல்சட்டி மூடி பொருந்த வாய்க்கு சீலைமண் செய்து அடுப்பிலேற்றி, மூக்கால் பாகம் நீர்சுண்ட எரித்து, ஆறினபின்பு பாஷாணக்கட்டியை கழுவி உலர்த்த சுத்தியாகும்.

இவ்வாறு சுத்திசெய்த பாஷாணக்கட்டியை ஓர் அகலில் வைத்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து பிரண்டைச்சாறு கொண்டு 4-ஜாமம் சுருக்கு கொடுத்து எடுக்கவும். பின்பு இதைப் பொடித்துக் கல்வத்திலிட்டு பிரண்டைச்சாறு விட்டு இரண்டு ஜாமம் அரைத்து உலர்த்தவும். நன்றாய் உலர்ந்தபின்பு மீண்டும் பிரண்டைச் சாறு விட்டரைத்து உலர்த்தவும். இப்படி ஒன்பதுமுறை செய்து கடைசியில் ஒரே வில்லையாகச் செய்து நன்குலர்த்தி அகலிலடக்கிச் சீலைமண் செய்து உலர்த்தி 10-15 விரட்டியால் புடமிட பற்மாகும். ஆறினபின் அரைத்து பத்திரப்படுத்துக.

இதில் வேளைக்கு ½-1 அரிசி பிரமாணம் வெடுத்து அத்துடன் குன்றி எடை அன்னபேதிச் சென்தூரமும், ஒரு சிட்டிக்கை வெள்ளை மிளகுச் சூரணமும் சேர்த்து தேனில் மத்தித்து தினம் 2-வேளையாக

* வெள்ளைப்பூண்டை தோல் நீக்கி அம்மிக்கல்லிலிட்டு அரைத்து மெல்லிய சீலையில் கடவி நெருப்பனலில் வாட்டிப் பிழிய சாறு கிடைக்கும்.

மூன்றாள் கொடுக்க குளிர்சுரம், முறைசுரம், காட்பட்ட சுரம் முதலியன குணமாகும்.

இந்த பற்பத்துடன் சுன்றியெடை பவழபற்பமும், ஒரு கிட்டிக்கை திப்பிலிச்சூரணமும்சேர்த்து தேனில் அருந்த சுவாசம், காசம், எலிக்கடி விஷம் முதலியவைகளும், சுரசந்தூரமும், நிரகடுகு சூரணமும் கூட்டித் தேனில் அருந்த பாரிசவாதம் முதலிய வாத ரோகங்களும் குணமாகும். மருந்து சாப்பிடும்போது புளிதள்ளி இச்சாபத்தியமாக இருத்தல் நன்று.

வஜ்ஜிரகண்டி மாத்திரை:—சுத்தி செய்த இலிங்கம் 8-வராகனெடை சுத்திசெய்த இரசசெந்தூரம் 2-வராகனெடை சுத்திசெய்த பூரம் 1-வராகனெடை சுத்திசெய்த வீரம் 4-குன்றி எடை இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு இரண்டு ஜாமமும், இஞ்சிச்சாறு விட்டு இரண்டு ஜாமமும், மிளகுக் குடிநீர் விட்டு இரண்டு ஜாமமும் கன்கு அரைத்து பயறளவு மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்துக.

இதில் வேளைக்கு 1-மாத்திரை வீதம் தினம் 2-அல்லது 3-வேளை நிரகடுகும் சூரணத்துடன் கூட்டித் தேனில் கொடுத்துவர சுரம், சன்னி, வாதரோகங்கள் முதலியன குணமாகும்.

பூதசுரத்திற்கு மதூகநியமம்:—இலுப்பை பிசின், மிளகு, சைந்தலவணம், திப்பிலி, வசம்பு, இவைகள் சமனடை சூரணித்து நெய்செய்தால் பூதசுரம் நீங்கும்.

சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளை சூரணித்து எட்டு தளதளத்தடன்சேர்த்து நெய்செய்தால் பூதசுரம் நீங்கும்.

தோஷசுரத்திற்கு நெய்யம்:—ஆமக்கெண்ணெய், ஆமணக்கு விதைகள், மிளகு இவைகளை சேர்த்து நெய்செய்தாலும் அல்லது தேன் மிளகு சூரணம் இவைகளை சேர்த்து நெய் செய்தாலும் தோஷசுரம் நிவர்த்தியாகும்.

சைந்தலவணம், சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளை சூரணித்து அகத்திஇலை சாற்றிலாவது அல்லது முசுமப்பாலிலாவது நெய்செய்தால் தோஷசுரம் நிவர்த்தியாகும்.

சீதசுர நெய்யம்:—மஞ்சாகினிவேர்பட்டை மிளகு, வெள்ளைப் பூண்டு இவைகளை சமனடை அரைத்து நெய்செய்தால் சீதசுரமும் முறைகாய்ச்சல்களும் நீங்கும்.

முறைக்காய்ச்சல் நெய்யம்:—நருக்கன் இலைபாலில் ஓமம், சைந்தலவணம், மிளகு, வெள்ளைப்பூண்டு இவைகளை சமனடை அரைத்து நெய்செய்தால் முறைகாய்ச்சல்கள் நீங்கும்.

சாதுர்திக சுரங்களுக்கு ஹிங்கூ நெய்யம்:—பழைய நெய்யுடன் பெருங்காயத்தை அரைத்து நெய்செய்தால் சாதுர்திக சுரம் நீங்கும்.

அகத்திசாரைசாற்றை நெய்செய்தால் சாதுர்திக முறைகாய்ச்சல் நீங்கும்.

மூர்ச்சாசுரத்திற்கு அர்திதிரிகாதி நெய்யம்:—இஞ்சிரசத்தை நெய்செய்தால் மூர்ச்சைசுரம் நீங்கும்.

சுரஹர தூபங்கள்:—காட்டுதளசி, வில்வபிசின், வெலுமசந்தி, தர்ப்பை, மஞ்சள், கழுதைபுட்டை, காக்கை இரகு இவைகளை சேர்த்து தூபமிட்டால் சுரங்கள் நீங்கும்.

வெள்ளுள்ளி பொட்டு, ஓமம், பெருங்காயம், காய்மலம் இவைகளைசேர்த்து தூபமிட்டால் சீதசுரம் நீங்கும்.

மைசாகூி, வெள்ளைகடுகு, திப்பிலி, சீரகம், வெலுமசந்தி, எறக்கன்பூ, தர்ப்பை, பெருங்காயம், ஓமம், கடுக்காய் இவைகளை சூரணித்து விளக்கெண்ணெய்யுடன்கலந்து தூபம்போட்டால் தோஷங்கள் நீங்கும்.

சுரங்களுக்கு அஜாதிதூபம்:—ஆட்டுமயிர், வசம்பு, கோஷ்டம், நொரிஞ்சள், வேப்பனஇலை, தேன், இவைகளை சேர்த்து தூபமிட சுரங்கள் நீங்கும்.

விஷமசுரத்திர்க்கு வசாதிதூபம்:—வசம்பு, கடுக்காய், இவைகளை சூரணித்து நெய்யுடன் தூபமிட்டால் விஷமசுரம் நீங்கும்.

சகல சுரங்களுக்கு மகுராதூபம்:—நிருகடலிபொட்டை தூபமிட்டால் சகல சுரங்கள் நீங்கும்.

குக்கிலாதி தூபம்:—குங்கிலியம், வாசனைப்புல், வசம்பு, சர்ஜரசம், வேப்பஇலை, எறக்கன்இலை, ரத்த சந்தனம், தேவதாரு, இவைகளை சூரணித்து தூபமிட்டால் சகல சுரங்கள் நீரும்.

சாதுர்திகசுரத்திற்கு உலூகபக்ஷிதூபம்:—கருப்புநிலை குங்கிலியம் ஆந்தை இரகு சேர்த்து தூபமிட்டால் சாதுர்திக சுரம் நிவர்த்திக்கும்.

சுர அனுபானங்கள்:—சீரகம், சுக்கு, திப்பிலி, மிளகு, நொச்சி கரிசாலை ஆடாதோடை, சிந்தில்கொடி, முருங்கைபட்டை, வெற்றிலைச்சாறு, சர்க்கரை, துளசி, இலவங்கம், வெள்ளைப்பூண்டு, கோரைக்கிழங்கு, இவைகள் சுர அனுபானங்களாகும்.

சுர சிகிச்சை விதிகள்:—தருணசுரத்தில் வாந்தி, லங்கனம், அதிகாலையில், வியர்வை உண்டாக்கல், காரம், கைப்பு, பதார்த்தத்தை

கொடுத்தல் முதலியன செய்தல் வேண்டும். சந்நிபாத சுரத்திற்கும் மேற்கூறியவைகளே செய்யவேண்டியது.

ஆமசுரத்தில், கபநாசனகிருத்தியங்கள், அஞ்சனம், நசியங்கள், கண்டெளடதம், வியர்வை யுண்டாக்கல் கஷாயம், இவைகள் செய்யவேண்டியது.

மேலும் அன்தம் தனங்கள் பாதங்கள். கண்டம் இவைகளிடத்திலும் தலையிலும் வியர்வையுண்டானால் கொள்ளுவருத்தி சூரணித்து வியர்வையுண்டாகும் இடங்களில் தேய்க்கவேண்டியது.

சுர பத்தியங்கள்:—60-நாள் பயிராகும் பழய் அரிசி சாதம், கத்திரிக்காய், முருங்கைப்பிஞ்சு, பாவக்காய், மூங்கில் முளைகள், மொச்சைக்காய், துவரக்காய், கீரைக்காய், முள்ளங்கி, இவைகளின் கறிகள், பச்சைபயறு, சிருகடலை, கடலை, கொள்ளு, காட்டுபயறு, இவைகளதுதட்டு, சுக்கு, சிந்தில்கொடி, சிறுகீரை, நிராலசுடி, விலா மாதுளை இலுகுவான மருந்து முதலியவைகளைக்கொடுக்கலாம்.

சிறுகீரை, இளமுள்ளங்கி, புடலங்காய், சிந்தில்கொடி, இலைகள், அரைக்கீரை, சுக்கங்கீரை, ஆட்டுப்பால், உலர்ந்த பதார்த்தங்கள், இவைகளே காய்கரிகளின்மீது பிஷ்டமுடைய சுர நோயாளிக்கு கொடுக்கலாம்.

மேலும், பயறு, சிறுகடலை, கொள்ளு, காட்டுபயறு, இவைகளது தட்டுகள், இவைகளின் குழம்புமேல் இஷ்டமுடையவனுக்கு கொடுக்க வேண்டியது.

ஊகுருவி, புரா, காடை, கவுதாரி, மான், வெள்ளாடு, முயல், இந்த இரைச்சிகளை, மாமிசம் தின்கிற சுரநோயாளிக்கு கொடுக்கலாம்.

கோழி, மயில், இந்த இரைச்சியும் கொடுக்கலாம்.

கத்தரிக்காய், தோசக்காய், புடலங்காய், பாவற்காய், பிர்க்கங்காய் இவைகளை நெய்யில் தாளித்துக் கொடுக்கலாம்.

ஒரு வருஷத்திற்கு அதிகமாய் பழகிய அரிசி அன்னத்தைக் கொடுக்க வேண்டியது.

ரொட்டிகொடுக்க வேண்டுமானாலும் மேற்படி அரிசிமாவில் தானே செய்துகொடுக்கலாம். கோதுமை மாவுரொட்டி கொஞ்சமாய் கொடுக்கவேண்டியது.

ஜீரணசுர பத்தியங்கள்:—பேதி, வாந்தி, அஞ்சனம், நசியம், தூபம், வியர்வை எடுத்தல், மலத்தை வெளிப்படுத்தல், மான், கவுதாரி, மயில், முயல், காடை, கோழி இவைகளது மாமிசம், பசும் பால் அல்லது ஆட்டுப்பால், நெய், கடுக்காய் வற்றல்நீர், ஜாதிக்காய், சந்தனம் இவைகள் ஜீரணசுர பீடிதனுக்கு சுகமான தென்று அறியவும்.

ஆகந்துகசுரத்தில் லங்கணம் கூடாது. அதிகாதசுரத்தில் நெய் குடித்தல், அப்பியங்கம், ரத்தத்தை யெடுத்தல், மதுபானம், மாமிச யுக்தமான போஜனம் முதலிய பத்தியங்கள் செய்யலாம்.

சுஷ்தசுரம், விரணசுரம் முதலிய ஆகந்துக சுரங்களில் விரணங்களே அருப்பதுடன் சிகிச்சையும் செய்தல் நன்று. கோபசுரத்தில் பித்தத்தை சமனம்செய்யும் கிரியைகளேசெய்து மிருதுவான இதவார்த்தைகளைக் கூறவேண்டும்.

கோபசுரத்தில் பித்தசமன சிகிச்சையும், காமம், சோகம், பயம் இவைகளினால் உண்டான சுரங்களுக்கு வாதத்தை ஹரிக்கும் கிரியையுகளையும் செய்யவேண்டியது.

மனோசிந்தையால் உண்டான சுரத்திற்கு மனதை சாந்திசெய்யும்படியான சிகிச்சைகளே செய்வேண்டியது.

விஷமசுரத்தில் வமனசிகிச்சையும், விரேசனசிகிச்சையும் செய்தல் நன்று.

தருணசுரங்களுக்கு அபத்தியங்கள்:—நீராடுதல், விரேசனம், மைதுனம், கஷாயம், நிரிதல், எண்ணெயிட்டுக்கொண்டு குளித்தல், பகல் நித்திரை, பால், நெய், பருப்பு, இரைச்சி, மோர், கள்ளு, இனிப்பு பதார்த்தங்கள், நிரவபதார்த்தங்கள், அன்னம், விசேஷ காற்று, நிரிதல், கோபம் இவைகளே தருணசுரோகி விட்டுவிடவேண்டியது.

சகலசுரங்களுக்கு அபத்தியங்கள்:—வாந்தி செய்தல், குச்சினல் பற்களே சுத்திசெய்தல், விரோதமான பதார்த்தங்கள் சாப்பிடுதல், மிகவும் தாகத்தையுண்டாக்கும் பதார்த்தங்கள், கெட்டஜலம், காரம், புளிப்பு, கீரைகறிகள், பாசிபிடித்த ஜலம், தாம்பூலம், தருபூசனி பழம், பலா, அபத்திய மீன்கள், இலுப்பைகட்டி, புதியதானியங்கள் மாவால்செய்த பக்ஷணங்கள், புஷ்டியை உண்டாக்கும் பதார்த்தங்கள் இவைகளே சுரோகபீடிதன் விடவேண்டியது.

அதிக சிரமத்தையுண்டாக்கும் தொழில்கள், மாதர்புணர்ச்சி நீராடுதல், கிரீடைகள் முதலியது செய்யக்கூடாது.

சந்நிபாத சிகிச்சை

சந்நிபாத தினப் பிரமாணங்கள்:—சந்திகசந்நிக்கு 7-நாள், அந்தக சந்நிக்கு 10-நாள், ருக்தாஹ சந்நிக்கு 20-நாள், சித்த விப்ரம சந்நிக்கு 21-நாட்கள், சீதகாத்திர சந்நிக்கு 15-நாட்கள், தாந்திரிக சந்நிக்கு 25-நாட்கள் அல்லது 7-நாட்கள், கண்டகுப்ஜ சந்நிக்கு 13-நாட்கள், கர்ணிகசந்நிக்கு 90-நாட்கள், புக்ணகேந்திர சந்நிக்கு

8-நாட்கள், ரக்தோஷ்ட சன்னிக்கு 10-நாட்கள், பிரலாப சன்னிக்கு 14-நாட்கள், ஜிம்மிகசன்னிக்கு 16-நாட்கள், அபிஞ்ஞாச சன்னிக்கு 15-நாட்கள் இந்தப்பிரகாரம் சன்னிபாதங்களின் பிரமாணங்களை தெரிந்துக்கொள்ள வேண்டியது.

தற்காலத்தில் 3, 5, 7, 10, 12, 21, இந்த நாட்கள் கடந்தால் சன்னிபாதங்கள் சாத்தியமென்று அறியவேண்டியது.

சன்னிபாதத்தில் 7, 14, 9, 18, 11, 22 இந்த நாட்களில் வைத்தியன் சன்னிபாதங்கள் விடுகிறதற்கும் அல்லது கொன்றுவிடுகிறதற்கும் பிரமாண நாட்களென்று அறியவேண்டியது.

சன்னிபாதசுரத்தால் வாதம் பிரகோபித்து தாதுபாகமடைந்து யிருந்தால் 10-நாட்கள் என்றும், பித்தபிரகோபத்தில் தாதுபாகமடைந்து யிருந்தால் 12-நாட்கள் என்றும, கபபிரகோபத்தில் தாதுபாகமடைந்திருந்தால் 7-நாட்கள் என்றும் இவைகள்தான் மரண பிரமாண நாட்கள் என்று அறியவேண்டியது.

இப்படியே வாதபித்த கபபிரகோபத்தில் மலபாகமடைந்து மேற்கூறியபடி முறையே வாதத்தில்-10, பித்தத்தில்-12, கபத்தில்-7 நாட்கள் கடந்தால் ஜீவிப்பானென்று அறியவேண்டியது.

தாதுபாக லக்ஷணம்:—தூக்கப்பிடியாமை, மாரடைப்பு, மலமூத்திரபந்தம், சரீரஜடத்துவம், அருசி, எதிலும் இச்சையில்லாமை, பலஹீனம் இந்த லக்ஷணங்கள் உடையது தாதுபாகமென்று அறியவேண்டியது.

மலபாக லக்ஷணம்:—மேற்கூறிய பாககுணங்களுக்கு மாறுகபிருக்குதல் அதாவது அன்னகூலத்திற்கு வருதல், சுரம், தேகம் இலைகள் இலேசாபிருக்குதல், இந்திரியங்கள் சுகமாயிருக்குதல், இந்த இலக்ஷணங்கள் உடையது மலபாகமென்று அறியவேண்டியது.

சந்திகசன்னிக்கு கியாழம்:—பேராமுட்டி, நிப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், சித்தரத்தை பெருங்குமிழி இலைகள் சமனடை கியாழம்வைத்து கொடுத்தால் சந்திகசன்னி நீங்கும்.

அந்தகசன்னிபாத கியாழம்:—சித்திரமூலம், நெரிஞ்சல், சொச்சி, பேய்ப்புடல், செவ்வியம், நிப்பிலிமூலம், நிரிகடுகு, கடுகு இதை சமனடை கியாழம் காய்ச்சி கொடுத்தால் அந்தகசன்னி நீங்கும்.

ருக்தாஹரசன்னிபாத கியாழம்:—கடுவிருவம், வெள்ளை உப்பிலாங்கொடி, கருப்பு உப்பிலாங்கொடி, நிப்பிலிமூலம், சித்திரமூலம், பர்ப்பாடகம், சுக்கு இலை சமனடை கியாழம்கொடுத்தால் ருக்தாஹரசன்னி பாதம் நீரும்.

சித்தபிப்பிரமசந்நி கியாழம்:—சொச்சி, முள்ளங்கத்திரிபழ வேர், மிளகு, வெங்காயம், திப்பிலி, காசனுங்கணி, சுக்கு இலை சமனடை கியாழம்காய்ச்சி கொடுத்தால் சித்தபிப்பிரமசன்னி நீங்கும்.

சோதாங்கசந்நிக்கு கியாழம்:—பஞ்சகோலங்கள், நிரிகடுகு, கற்றாழை, பேய்ப்புடல், பற்பாடகம் இலை சமனடை கியாழம்வைத்து கொடுத்தால் சோதாங்கசன்னி நீங்கும்.

தாந்திரிகசன்னி கியாழம்:—பஞ்சகோலங்கள், அமுக்கிரகிழங்கு, தங்கிலியம் இலைகளை சமனடையாக கியாழம் காய்ச்சி துபம் போட்டு கொடுத்தால் தாந்திரிகசன்னி நீங்கும்.

கண்டகுப்ஜசன்னி கியாழம்:—வில்வவேர், பெருங்குமிழ், முள்ளை பேய்ப்புடல், செவ்வியம், பர்ப்பாடகம், கண்டங்கத்திரி, சுக்கு இலை சமனடை கியாழம் வைத்துக் கொடுத்தால் கண்டகுப்ஜசன்னி நீங்கும்.

கர்ணிகசன்னி கியாழம்:—சிற்றமுட்டி, பேராமுட்டி, காகமுட்டி, நிரிகடுகு, கண்டங்கத்திரி, சித்திரமூலம், நிப்பிலிமூலம், பாலை, எருக்கன்வேர், இலைகள் சமனடை கியாழம் வைத்து கொடுத்தால் கர்ணிகசன்னி நீங்கும்.

புக்ஞநேத்திர சந்நிகியாழம்:—நெரிஞ்சில், சொச்சி, நிப்பிலிமூலம், கோரைக்கிழங்கு, பர்ப்பாடகம் சுக்கு, எருக்கன்வேர், இலைகள் சமனடை கியாழம்வைத்து கொடுத்தால் புக்ஞநேத்திர சன்னி நீங்கும்.

ரக்தோஷ்ட சன்னிகியாழம்:—நிரிபலை, பர்ப்பாடகம், பேய்ப்புடல், சித்திரமூலம், பாதிரி, சுக்கு, எருக்கு இலைகளைச் சமனடை கியாழம்வைத்து கொடுத்தால் ரக்தோஷ்ட சன்னிபாதம் நீங்கும்.

பிரலாப சன்னிகியாழம்:—அன்னகோலம், சித்திரமூலம், மரமஞ்சள், பேய்ப்புடல், சுக்கு, சித்தில்கொடி, நிப்பிலிமூலம், இலைகளை சமனடை கியாழம்வைத்து கொடுத்தால் பிரலாப சன்னி நீங்கும்.

ஜிம்மிக சன்னிகியாழம்:—வெள்ளை உப்பிலாங்கிழங்கு, நிப்பிலி, நிப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, பேராமுட்டி, சிற்றமுட்டி, காகமுட்டி, இலைகளை சமனடைகியாழம்வைத்து அந்த கியாழத்தில் நிப்பிலி சூரணமபோட்டுக் கொடுத்தால் ஜிம்மிக சன்னி நிவர்த்திக்கும்.

அபிஞ்ஞாச சந்நிகியாழம்:—வெள்ளை உப்பிலாங்கொடி கரும் உப்பிலாங்கொடி கண்டங்கத்திரி, முள்ளங்கத்திரி, பேராமுட்டி, சிற்றமுட்டி, காகமுட்டி, கடுக்காய், தானிக்காய், செல்லிவற்றல், வசம்பு, நிப்பிலி, நிப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, இலை

கள் சமனடை கியாழம்போட்டுக் கொடுத்தால் அபிந்நியாச சன்னி பாதம் நிவர்த்தியாகும்.

பதின்மூன்று சன்னிகளுக்கு கியாழம்:—நிப்பிலி, முன்னேவேர், நிலவேமபு, வசம்பு, ஓமம், சுகது, பேய்ப்புடல், பற்பாடகம், இவைகளை சமனடையாகக் கியாழம் வைத்துக்கொடுத்தால் (13) வித சன்னிகளும் நீங்கும்.

தசமூல கியாழம்:—பேராமுட்டிவேர், முன்னேவேர், கண்டங் கத்திரிவேர், முள்ளங்கத்திரிவேர், பெருங்குமிழிவேர், வில்வவேர், பாதிரிவேர், பெரும்வாகைவேர், சிற்றாமல்லிவேர், நிலக்கடம்பு, சுக்கு, இவைகளை சமனடையாகக் கியாழம் வைத்துக்கொடுத்தால் சகல சன்னிகளும் நீங்கும்.

சந்திகசந்நிக்கு பூதபைரவ ரசம்:—பாதரசம், கெந்தி, தாம்பிரபஸ்பம், இவைகள் சமனடை கல்வத்திலிட்டு சித்திரமூல கியாழத்தால் இரண்டு ஜாமம் அரைத்து வஜ்ஜிர மூசையில் வைத்து வாலுகாயந்திரத்தில் ஒருநாள் எரித்து பூனை, நரி, இவைகளது பிச்சினல் இரண்டு சாமங்கள் அரைத்து அரை முதல் ஒரு குன்றினடை அனுபான விசேஷத்தில் கொடுக்க சந்திக சன்னி நீங்கும்.

பத்தியம், தயிர்சாதம் சாப்பிட்டு தாகத்திற்கு இளநீர் குடிக்க வேண்டியது,

அந்தகசந்நிக்கு விஜயபைரவ ரசம்:—சுத்திசெய்த ரசம், நாபி, வங்கபஸ்பம், நாகபஸ்பம், அப்பிரக பஸ்பம் இவைகள் சமனடை கல்வத்திலிட்டு நிரிகடுகு கியாழத்தால் ஒருநாள் அரைத்து வஜ்ஜிர மூசையில்வைத்து வாலுகாயந்திரத்தில் இரண்டு ஜாமங்கள் எரித்து ஆறிய பிறகு எடுத்து பெண்காய் பித்தத்தால் அரைத்து குன்றி பிரமாணம் இளநீரில் உட்கொண்டால் அந்தக சன்னி நீரும். இச்சாபத்தியம்.

ருத்தாஹசந்நிக்கு சங்கரபைரவ் ரசம்:—தாம்பிரபஸ்பம், லோஹபஸ்பம், சத்திக்ஷாரம், யவாக்ஷாரம், சர்ஜக்ஷாரம், பாதரசம், இவைகளைச் சுத்திசெய்த சமனடை கல்வத்திலிட்டு பஞ்சகோல கியாழத்தால் ஒருநாள் அரைத்து இந்த கியாழத்திலேயே தோலாயந்திரத்தில் ஒரு சாமம் எரித்து கோழிமிச்சியில் அரைத்து குன்றி எடை நிப்பிலி சூரணம் தேன், இந்த அனுபானத்தால் கொடுத்தால் ருத்தாஹ சன்னி நீங்கும்.

சித்தவிப்ரம சந்நிக்கு மதன பைரவ ரசம்:—சுத்திசெய்த ரசம், மனோசிலை, கெந்தி, சந்தனவணம், தாம்பிரபஸ்பம், இவை சமனடை கல்வத்திலிட்டு முள்ளங்கத்திரி பழச்சாற்றில் அரைத்து குளிகை செய்து வஜ்ரமூசையில் வைத்து பூபுடமிட்டு ஆறியபிறகு எடுத்து பசுவின் பித்தத்தால் அரைத்து குன்றி பிரமாணம் இளநீரிலாவது

அல்லது நிரிகடுகு கியாழத்திலாவது கொடுத்தால் சித்த விப்ரம சன்னி நீங்கும். பத்தியம் தயிர்ச்சாதம் கொடுத்தல்வேண்டும்.

சீதாங்க சந்நிக்கு ஆனந்த பைரவ ரசம்:—சுத்திசெய்த வெங்காரம், லிங்கம், கெந்தி, பாதரசம், தாளகம், லோஹபஸ்பம், வங்கபஸ்பம் தாம்பிரபஸ்பம், நாகபஸ்பம், இவைகள் சமனடை கல்வத்திலிட்டு நிரிபலி கியாழத்தால் அரைத்து பர்பாடக கியாழத்தால் தோலாயந்திரத்தில் ஒருநாள் எரித்து கிருஷ்ணசர்ப்பத்தின் பித்தத்தில் ஒரு நாள் அரைத்து குன்றி எடை அனுபான விசேஷமாய் கொடுத்தால் அந்தக்ஷணமே சீதாங்கசன்னி நீங்கும். இதற்குபத்தியம் மோர்சாதம் கொடுக்க வேண்டியது.

தாந்திரிக சந்நிக்கு மனோபைரவ ரசம்:—சத்திக்ஷாரம், யவாக்ஷாரம், சர்ஜக்ஷாரம், பஞ்சலவணங்கள், தாம்பிரபஸ்பம், பாதரசம், இவைகள் சமனடை எடுத்து கல்வத்திலிட்டு எருக்கன் வேர் கியாழத்தால் மூன்றுநாள் அரைத்து வஜ்ரமூசையில்வைத்து வாலுகாயந்திரத்தில் ஒருநாள் எரித்து ஆறியபிறகு எடுத்து கழுதை பித்தத்தில் அரைத்து குன்றினடை தேனில் கொடுத்தால் தாந்திரிக சன்னி நீங்கும்.

சுண்டதுப்ஜ சன்னிக்கு சுவச்சந்த பைரவ ரசம்:—பாதரசம், கெந்தி, வெண்காரம், நாபி, வங்கபஸ்பம், இவைகளை சமனடையாக கல்வத்திலிட்டு நிரிபலி கியாழத்தில் மூன்றுநாள் அரைத்து நிரிபலி கியாழத்திலேயே தோலாயந்திரமாக ஒரு ஜாமம் மந்தாக்கினியால் எரித்து ஆறியபிறகு பன்றி பித்தத்தில் அரைத்து குன்றினடை இஞ்சி சுரசத்தில் கொடுத்தால் கண்டகுப்ஜசன்னி நீங்கும்.

கர்ணிக சந்நிக்கு கல்யாணபைரவ ரசம்:—பாதரசம், நாபி, கெந்தி, நாகபஸ்பம், வங்கபஸ்பம், நிப்பிலி, இவைகளை சமனடை ஒருநாள் சித்திரமூலகியாழத்தில் அரைத்து குளிகைசெய்து வஜ்ரமூசையில் வைத்து வாலுகாயந்திரத்தில் ஒருநாள் எரித்து ஆறியபிறகு எடுத்து மீன்பித்தத்தில் அரைத்து கடலைபிரமாணம் அனுபானத்துடன் சர்க்கரையுடன் சாப்பிட்டு கரும்பு துண்டுகளை சாப்பிடவேண்டியது.

புக்ணநேத்திர சந்நிக்கு விதாரணபைரவ ரசம்:—பாதரசம், தாம்பிரபஸ்பம், வங்கபஸ்பம், இவைகள் சமனடை கல்வத்திலிட்டு எருக்கன் பாலினல் அரைத்து தோலாயந்திரத்தில் அந்தபாலிலேயே ஒருஜாமம் எரித்து மான்பித்தத்தில் அரைத்து நிரிகடுகு அனுபானத்தில் குன்றினடை சாப்பிட்டால் புக்ணநேத்திர சன்னிநீங்கும்.

ரக்தோஷ்ட சந்நிக்கு சந்நிபாத பைரவம்:—பாதரசம், நாபி, அப்பிரகபற்பம், கெந்தி, நாகபற்பம், வெண்காரம், இவைகள் சம

எடை கல்வத்திலிட்டு ஆலம் பாலினல் ஒருநாள் அரைத்து தோலா யந்திரத்தில் ஒருநாள் எரித்து ஆறியபிறகு எடுத்து மீன், எருமை, மயில் இவைகளது பிச்சியினல் மூன்றுநாள் அரைத்து ஒரு குன்றி எடை நிப்பிலி கஷாயத்தில் கொடுத்தால் ரக்தோஷ்ட சன்னி நிவர்த்தி யாகும்.

பிரலாப சந்நிக்கு காருணிய பைரவ ரசம்:—சுத்திசெய்த பாத ரசம், அப்பிரகபஸ்பம் இவைகள் சமஎடை கல்வத்திலிட்டு கரிசலாங் கண்ணி சாற்றினல் அரைத்து வஜ்ரமூசையில் வைத்து வாலுகாயந் திரத்தில் ஒருஜாமம் எரித்து ஆறியபிறகு எடுத்து காட்டு பன்றி, மயில், இவைகள் பித்தத்தினல் அரைத்து அனுபான யுக்தமாய் ½-1, குன்றிஎடை கொடுத்தால் பிரலாப சன்னிமுதல் சகல ரோகங்களும் நீங்கும். இதற்குப்பத்தியம் மோர்ச்சாதம் சாப்பிட்டு இளநீர் குடிக்கவேண்டியது.

ஜிம்மிக சந்நிக்கு சித்தபைரவ ரசம்:—பாதரசம், தாளகம், இவைகள் சமஎடை கல்வத்திலிட்டு கற்றுழை சாற்றினல் அரைத்து கற்றுழைச்சாற்றில் தோலாயந்திரமாய் ஒருஜாமம் எரித்து ஆறிய பிறகு எடுத்து மீன் பித்தத்தில் அரைத்த குன்றி பிரமாணம் நிப்பிலி சூரணம், தேன், இந்த அனுபானத்தில் கொடுத்தால் ஜிம்மிகசன்னி நீங்கும்.

அபிந்நியாச சந்நிக்கு கரவாளபைரவரசம்:—ரசம், பெருங்கா யம், சத்திக்ஷாரம், யவாக்ஷாரம், சர்ஜகாரம், நிரிகடுகு, கெந்தகம், பஞ்சலவணம், சித்திர மூலவேர், எருக்கன்வேர், குழிப்பூசனி, நிரி பலி, செல்லிவற்றல், நாபி இவை சமஎடை கல்வத்திலிட்டு எருக்கன் வேர் இயாழுத்தில் இரண்டுநாள் அரைத்து மூசையில் வைத்து வாலுகாயந்திரத்தில் இரண்டுஜாமங்கள் எரித்து ஆறியபிறகு எடுத்து பெண்நாய் பித்தத்தால் அரைத்து குன்றி எடை இளநீரில் கொடுத் தால் அபிந்நியாச சன்னி நீங்கும். இதற்கு பத்தியம் தயிர்ச்சாதம்.

சந்நிபாதங்களுக்கு வீரவிக்கிரமரசம்:—ரசம், வெண்காரம், கெந்தி, பூநினிலை, சைந்தவலவணம், நிப்பிலிமூலம், சுட்டபெருங் காயம் இவைகள் சமஎடை சூரணித்து தோலாயந்திரத்தில் ஒரு ஜாமம் எரித்து பிறகு பன்றிபித்தத்தினல் அரைத்து அனுபானயுக்த மாக கொடுத்தால் சகல சன்னிபாதங்கள் அந்த க்ஷணமே நீங்கும்.

சந்நிபாதங்களுக்கு திரிவிக்கிரமரசம்:—பாதரசம், நாபி, தாள கம் இவைகளை சமஎடை கல்வத்திலிட்டு இரண்டு ஜாமங்கள், கரச னுங்கண்ணி சாற்றினல் அரைத்து வஜ்ரமூசையில் வைத்து வாலுகா யந்திரத்தில் 2-ஜாமங்கள் எரித்து ஆறியபிறகு எடுத்து சூரணித்து இரண்டு அரிசி எடை சொச்சிஇலை சாற்றில் கொடுத்தால் சகல சன்னி பாதங்கள் தீரும்.

சந்நிபாதங்களுக்கு ஜயவிக்கிரமரசம்:—நாபி, மனோசிலை, தாள கம், கெந்தி, வெங்காரம் இவைகள் சமஎடை கல்வத்திலிட்டு எலு மிச்சம் பழச்சாற்றினல் மூன்றுநாள் அரைத்து இந்த ரசத்தில்தானே தோலாயந்திரத்தில் ஒருஜாமம் எரித்து ஆறியபிறகு எடுத்து மீன்பித் தத்தால் ஒருநாள் அரைத்த குன்றிபிரமாணம் அனுபான விசேஷத்து டன் கொடுத்தால் சகலமான சன்னிபாதங்களும் நீங்கும்.

சந்நிபாதங்களுக்கு மஹேந்திர ரசம்:—சுத்திசெய்த நாபி, ரசம், தாளகம், மனோசிலை, தொட்டிபாஷாணம், இவைகள் சம எடை கல் வத்திலிட்டு ஊமத்தன் இலைசாற்றில் அரைத்து அந்த சாற்றிலேயே தோலாயந்திரத்தில் மந்தாக்கினியாக ஒருநாள் எரித்து ஆறிய பிறகு எடுத்து சூரணித்து குன்றிஎடை அனுபான விசேஷமாய் கொடுத் தால் சன்னிபாதங்கள் நீங்கும்.

சந்நிபாதங்களுக்கு லோகேஸ்வர ரசம்:—தாளகம், லிங்கம், ரசம், நாபி இவைகள் சமஎடை கல்வத்திலிட்டு நிலவேம்பு ரசத்தால் அரைத்து உருண்டைசெய்து வஜ்ரமூசையில் வைத்து சீலைமண் செய்து வாலுகாயந்திரத்தில் இரண்டு ஜாமங்கள் மந்தாக்கினியாக எரித்து ஆறியபிறகு எடுத்து ஆட்டுபிச்சியால் அரைத்த குன்றிஎடை அனுபான விசேஷமாய் கொடுத்தால் சன்னிபாதங்கள் தீரும்.

சகல சந்நிபாதங்களுக்கு மஹாபைரவ ரசம்:—இரசபஸ்பம், தாம்பிரபஸ்பம, லோஹபஸ்பம, அப்பிரகபஸ்பம், கார்தபஸ்பம் இவை களை சமஎடை கல்வத்திலிட்டு செருப்படை சாற்றினல் அரைத்து கரி குப்பியில்வைத்து சீலைமண்செய்து வாலுகாயந்திரத்தில் ஒரு நாள் எரித்து ஆறியபிறகு எடுத்து பன்றி பித்தத்தில் அரைத்த குன்றி எடை அனுபானவிசேஷத்துடன் கொடுத்தால் சகல சன்னிபாதங்கள் நாசமாகும்.

சகல சந்நிகளுக்கு மிருத்யுஞ்ஜய ரசம்:—அப்பிரகபஸ்பம், தாம்பிரபஸ்பம், தாளகம், ரசம், கெந்தி, கடல்நுரை இவைகள் சம எடை கல்வத்திலிட்டு கலப்பைக்கிழங்கு ரசத்தில் அரைத்து மூசை யில் வைத்த ஒரு கஜபுடமிட்டு ஆறியபிறகு எடுத்து மயில், ஆடு, பாம்பு, மீன் இவைகளின் பிச்சியினல் நாலுஜாமம் அரைத்து அரிசி எடை தக்க அனுபானத்துடன் கொடுத்தால் பதின்மூன்று சன்னிக ளும் நீங்கும்.

சந்நிகளுக்கு பிரளயாநல ரசம்:—ரசம், நாபி, லிங்கம், வெங்கா ரம், சத்திக்ஷாரம, யவாக்ஷாரம், சர்ஜக்ஷாரம், பஞ்சலவணங்கள், ஓமம், கருஞ்சீரகம, உருக்குபஸ்பம், தாமபிரபஸ்பம், இவைகள் சம எடை கல்வத்திலிட்டு நிரிகடுகு இயாழுத்தில் அரைத்து மூசையில் வைத்து வாலுகாயந்திரத்தில் ஆறுஜாமங்கள் எரித்து ஆறியபிறகு எடுத்து பாம்புபிச்சினல் அரைத்த குன்றிஎடை அனுபானத்துடன கொடுத்தால் பதின்மூன்று சன்னிகளும் நாசமாகும்.

பதின்மூன்று சந்நிகளுக்கு ரோகவிதாரண ரசம்:—ரசம், காபி, வெண்காரம், ஹேமமாக்ஷிகம், நிப்பிலி, தாளகம், கெந்தி, அப்பிரகம், உல்லிபாஷாணம், கௌரி பாஷாணம், சொட்டிபாஷாணம், சைந்தவலவணம் இவைகள் சமனடை கல்வத்திலிட்டு கரசனுங்கண்ணி சாற்றினால் மூன்று ஜாமங்கள் அரைத்து குன்றிஎடை அனுபான விசேஷமாய் கொடுத்தால் பதின்மூன்று சன்னிகள் நீங்கும். இதற்கு பத்தியம் தயிர்சாதமும் தாகத்திற்கு குளிர்ந்த ஜலமுமாம்.

பதின்மூன்று சன்னிக்கு இராஜராஜேஸ்வரி ரசம்:—ரசம், கெந்தி, தாளகம், ஹேமமாக்ஷிகம், நிரிசூரங்கள், ஓமம், பெருங்காயம் இவைகளை சமனடை கல்வத்திலிட்டு சித்திரமூல இயாழத்தில் இரண்டுநாள் அரைத்த அந்த இயாழத்திலேயே தோலா பஞ்சாத்தில் இரண்டு ஜாமங்கள் எரித்த மின்பிச்சியினால் அரைத்த குன்றிஎடை அனுபான விசேஷமாய்க் கொடுத்தால் பதின்மூன்று சன்னிகள் நீங்கும்.

சந்நிகளுக்கு காலாக்கினி ருத்ர ரசம்:—மூன்று சூரங்கள், பஞ்சலவணங்கள், சுத்திசெய்த ரசம், காபி, இவைகளை சமனடை கல்வத்திலிட்டு நிரிபலி இயாழத்தால் மூன்றுநாள் அரைத்து மூசையில் வைத்த வாலுகாயந்திரத்தில் ஒருநாள் எரித்து சாங்கதேனத்தில் இறக்கி மீன், எருமை, மயில், ஆடு இவைகளின் பித்தத்தினால் அரைத்த குன்றி பிரமாணம் அனுபான விசேஷமாய் கொடுத்தால் சகல சன்னிபாதங்கள் நாசமாகும். இதற்கு பத்தியம் தயிர்சாதமிட்டு தாகத்திற்கு இளநீர் கொடுக்கவேண்டியது. பிறகு மெல்ல கருமுதண்டுகளையும் கொடுக்கவேண்டியது.

சந்நிகளுக்கு மிருதசஞ்சீவினி ரசம்:—ரசம், காபி, கெந்தி, லிங்கம், கடுகுரோகணி இவைகள் சமனடை கல்வத்திலிட்டு கரசனுங்கண்ணி சாற்றினால் மூன்றுநாள் அரைத்து குன்றிஎடை மாத்திரைகள் செய்த அதில் ஒரு மாத்திரை இஞ்சிரசத்தில் கொடுத்தால் சன்னிகள் நீங்கும்.

சந்நிகளுக்கு தன்வந்தரி ரசம்:—ரசம், காபி, அப்பிரகபஸ்பம், சுவர்ணபஸ்பம, லோஹபஸ்பம், முத்தபஸ்பம், நிரிசூரங்கள், பொன்னிமினி, வங்கபஸ்பம, லிங்கம், நிப்பிலி, நிப்பிலிமூலம் இவைகளை சமனடை கல்வத்திலிட்டு சித்திரமூலஇயாழம், செருப்படைஇலை சாறு, எருக்கன்வேர் இயாழம், கரசனுங்கண்ணிஇரசம, பஞ்சகோல இயாழம், இந்த இயாழங்களொவ்வொன்றிலும் மூமூனறு நாள் அரைத்த காஞ்சிருப்பியில்வைத்த வாலுகாயந்திரத்தில் மூன்று ஜாமங்கள் எரித்த ஆறியபிறகு எடுத்த மீன், எருமைகடா, மயில், ஆடு, காட்டுபன்றி இவைகளது பித்தத்தினால் அரைத்த உளுத்துபிரமாணம் அனுபான யுக்தமாக கொடுக்க சன்னிபாதங்கள் நீங்கும.

சகல சந்நிகளுக்கு பணிபூஷண ரசம்:—தாளகம், லிங்கம், வங்கபஸ்பம், நயபஸ்பம, அப்பிரகபஸ்பம் இவைகளுக்கு சமனடை சுத்தி

செய்த ரசம் இவைகளை கல்வத்திலிட்டு கொச்சிஇலை சாற்றினால் அரைத்து மூசையில்வைத்த வாலுகாயந்திரத்தில் மந்தாக்கினியாக இரண்டு ஜாமங்கள் எரித்த ஆறியபிறகு எடுத்த பிறகு மீன், எருமை கடா, ஆமை, காட்டுப்பன்றி, மயில் இவைகளது பித்தத்தினால் அரைத்த பயறளவு அனுபான விசேஷமாய் கொடுத்தால் பதின்மூன்று சன்னிகள் நீங்கும். இதற்கு இச்சாபத்தியம்.

சந்நிகளுக்கு சன்னிபாத தாவாநல ரசம்:—தாளகம், நயபஸ்பம், வங்கபஸ்பம், இரசம், வெண்காரம், மூன்றுசூரங்கள், பஞ்சலவணங்கள், கௌரிபாஷாணம், காபி இவைகளை சமனடை கல்வத்திலிட்டு வேப்பிலைரசத்தில் அரைத்து மூசையில்வைத்து வாலுகாயந்திரத்தில் காடாக்கினியாக ஒருநாள் எரித்து ஆறியபிறகு எடுத்து மயில், பாம்பு, ஆடு இவைகளின் பித்தத்தால் அரைத்த குன்றிஎடை அனுபான யுக்தமாக கொடுத்தால் சன்னிகள் தோஷங்கள் நீங்கும். பத்தியம் தயிர்சாதம்.

சந்நிகளுக்கு ரோகபஞ்சன ரசம்:—ரசபஸ்பம், அப்பிரகபஸ்பம், தாமபிரபஸ்பம், காபி இவைகளை சமனடை கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றினால் மூனறு ஜாமங்கள் அரைத்து பழச்சாற்றில் தோலாயந்திரமாக ஒருநாள் எரித்து ஆறியபிறகு எடுத்து மயில்பிச்சி பினால் அரைத்த குன்றிஎடை அனுபானத்துடன் கொடுத்தால் சன்னிபாதங்கள் நாசமாவதுடன் சகலரோகங்களும் நிவர்த்தியாகும்.

சந்நிகளுக்கு தோஷசுரத்திற்கு காலபைரவ ரசம்:—தாளகம், கெந்தி, தாமபிரபஸ்பம், ரசம், வெண்காரம், மூன்று சூரங்கள், சைந்தவலவணம், வாலேந்திர போளம், மிளகு இவைகளை சமனடை கல்வத்திலிட்டு சூரணித்து கலாயந்திரத்தில் ஒருநாள் எரித்து ஆறிய பிறகு எடுத்து பன்றி, எருமைகடா, ஆமை இவைகளின் பித்தத்தால் ஒருநாள் அரைத்த குன்றிஎடை இஞ்சிரசத்தில் கொடுத்தால் சன்னிபாதங்கள் நீங்குவதுடன் அனுபான விசேஷங்களால் கொடுத்தால் தோஷசுரங்கள் முதல் சகல ரோகங்களும் நீங்கும். இதற்கு பத்தியம் தயிர்சாதம் அல்லது மோர்ச் சாதங்கொடுத்து தாகத்திற்கு இளநீர் அல்லது பானகம் கொடுக்கவேண்டும்.

சகல சன்னிகளுக்கு பிராணக்கினி குமார ரசம்:—சுத்தி செய்த ரசம், காபி, கெந்தி, அப்பிரகபஸ்பம், இவைகளை சமனடையாகக் கல்வத்திலிட்டு பற்பாடக இயாழத்தால் அரைத்து வஜ்ர மூசையில் வைத்து மணல் மறைவில் சிறுபுடமிட்டு ஆறிய பிறகு எடுத்து மறுபடியும் கல்வத்திலிட்டு மீன்பிச்சி, ஆட்டுபிச்சி, மயில்பிச்சி, இவைகளால் தனித்தனியாக அரைத்த குன்றிஎடை அனுபானயுக்தமாக கொடுத்தால் சகல சன்னிகளும் நீங்கும்.

சகல சன்னிகளுக்கு சுதிவ்வியாக்கினி குமார ரசம்:—சுத்திசெய்த ரசம், கெந்தி, இவைகள் சமனடை கல்வத்திலிட்டு சித்திரமூல இயா

முத்தில் அரைத்து வஜ்ர மூசையில்வைத்து வாலுகாயந்திரத்தில் வைத்து ஒருநாள் எரித்து ஆறிய பிறகு எடுத்து மறுநாள் நிரிகடுகு நியாழத்தால் அரைத்து அதில் காலில் ஒருபாகம் சுத்திசெய்த ரசபி சேர்த்து அமரி இலை ரசத்தில் அரைத்து குன்றிஎடை அனுபானயுக்த மாக கொடுத்தால் சகல சன்னிகளும் நீங்கும்.

சகல சன்னிகளுக்கு உத்தமாக்கினி குமார ரசம்:—சுத்திசெய்த ரசம், அப்பிரகபஸ்பம், காந்தபஸ்பம், லோஹபஸ்பம், தாம்பிரபஸ்பம், ரசபி, இவைகள் சமஎடை கல்வத்திலிட்டு செருப்படை சாற்றினால் அரைத்து காசிகுப்பியில்வைத்து சிலமண்கொடுத்து வாலுகாயந்திரத்தில் ஆறு ஜாமங்கள் எரித்து ஆறிய பிற்கு எடுத்து கன்கு அரைத்து சூரணித்து உரைந்த அளவு அனுபான விசேஷங்களினால் கொடுத்தால் சகல சன்னிபாதங்களும் நாசமாகும். இச்சாபத்தியம் கரும்பை மெல்லச் செய்து தாகத்திற்கு இளநீர்பானம், கொடுக்க வேண்டியது.

சன்னி சுரதோஷங்களுக்கு விஸ்வம்பர ரசம்:—சுத்திசெய்தரசம், ரசபி, அப்பிரகபஸ்பம், லிங்கம், தாளகம், இவைகளை சமஎடை கல்வத்திலிட்டு செருப்படை சாற்றில் மூன்றுநாள் அரைத்து குக்குடபுடமிட்டு ஆமை, பண்ணி, மீன், இவைகளின் பித்தத்தினால் பிரத்தியேகமாய் மூன்றுநாள் அரைத்து குன்றிஎடை அனுபானத்துடன் கொடுத்தால் தோஷசன்னிகள் சன்னிபாதங்கள் நிதிரசன்னிகள் இவைகள் நீங்கும் இச்சாபத்தியமிட்டு கரும்புதண்டுகளை கொடுக்கவேண்டியது. தாகத்திற்கு இளநீர், பானகம் கொடுக்கவேண்டியது.

அசாத்திய சன்னிகளுக்கு மஹாருத்திர ரசம்:—லிங்கம், தாளகம், வெங்காரம், மனோசிலை, ரசம், கெந்தி, இவைகளை சமஎடையாக எடுத்து இவைகளுக்கு சமமாக கன்று சுத்திசெய்த ரசபி சேர்த்து பொடித்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றினால் கான்கு சாமங்கள் அரைத்து கடுகு பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி அனுபான யுக்தமாக கொடுத்தால் அசாத்தியமான சன்னிபாதங்கள் நிவர்த்தியாகும்.

இதற்கு பத்தியம், தயிர்சாதம், தாகத்திற்கு இளநீர், கரும்பு துண்டுகள் நிராகரை, கர்ஜூரம், மாதளம்பழம் கொடுக்கவேண்டியது. குங்குமப்பூ, அகரு, பச்சைகர்ப்பூரம், சந்தனம் இவைகளை தேகத்திற்கு லேபனஞ் செய்யவேண்டியது.

தோஷிக்குஹிதமான உபசாரங்களை செய்ய வேண்டியது. இம்மருந்தைக் கொடுத்த வரும்போது இத்துடன் ஜன்னிபாதங்களுக்காகக் கூறப்பட்ட குடிநீர்களில் ஏதேனு மொன்றையும் கொடுத்து வரலாம்.

சன்னிகளுக்கு யோகநாத ரசம்:—ரசம், கெந்தி, பால்முத்தம், மனோசிலை, ரசபி, ஹேமமாக்ஷிகம், விஷம், லிங்கம், அப்பிரகம்,

லோஹபஸ்பம், தாம்பிரபஸ்பம், இவைகள் சமஎடை கல்வத்திலிட்டு, புங்கன், கொச்சி, கரசலாங்கண்ணி, இவைகளின் சாற்றினால் மூன்று நாள் அரைத்து உருத்து பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி அனுபான யுக்தமாக கொடுத்தால் சகல சன்னிபாதங்களும் நாசமாகும்.

சன்னிகளுக்கு விஷமகூசிகா ரசம்:—ரசம், கெந்தி, ரசபி, இவைகள் சமஎடை கல்வத்திலிட்டு ஊமத்தன் இலைசாற்றினால் அரைத்து ஊசியால் எடுத்தால் எவ்வளவு வருமோ அந்த அளவு கொடுத்தால் சகல சன்னிகள் நீங்கும்.

சன்னிகளுக்கு சன்னிபாத குலாந்தக ரசம்:—ரசம், கெந்தி, ரசபி, நிரிகடுகு இவைகள் ஒரு பாகம், சங்குபஸ்பம் இரண்டு பாகங்கள் இவைகளை கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றினால் அரைத்து உரைந்தளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி தக்க அனுபானங்களில் கொடுத்தால் பதின்மூன்று சன்னிகள் நிவர்த்தியாகும்.

சன்னிகளுக்கு பஞ்சவக்திர ரசம்:—ரசம், ரசபி, கெந்தி, மிளகு, நிப்பிலி, வெங்காரம் இவைகள் சமஎடை கல்வத்திலிட்டு ஊமத்தன் இலைசாற்றினால் ஒருநாள் அரைத்து குன்றிஎடை மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி எருக்கன்வேர் நியாழத்தில், சுக்கு, நிப்பிலி மிளகு சூரணம்போட்டு ஒரு மாத்திரையை கொடுத்தால் சகல சன்னிகள் நீங்கும்.

பைரவாஞ்சனம்:—பெருங்காயம், சைந்தவலவணம், நிப்பிலி இவைகள் சமஎடை பசுநெய்யினால் அரைத்து கண்களுக்கு களிக்கமிட்டால் சன்னிபாதங்கள் நீங்கும்.

திரிமூர்த்திச் செந்தூரம்:—சுத்திசெய்த லிங்கம் வராகனெடை-8, சுத்திசெய்த வீரம் சுத்திசெய்த இரச செந்தூரம் வராகனெடை-4, சுத்திசெய்த பூரம் வராகனெடை-2 இவற்றைப் பொடித்துக் கல்வத்திலிட்டு முலைப்பால்விட்டு ஒரு ஜாமம் அரைத்து உலர்த்தவும். மருநாள் மீண்டும் முலைப்பால்விட்டு ஒருஜாமம் அரைத்து உலர்த்தவும். இப்படி 5-நாள் அரைத்து உலர்த்தி பத்திரப்படுத்துக.

இதில் வேளைக்கு ½-குன்றிஎடை நினம் 2-வேளை தேனில் கொடுக்க எத்தகைய கடினசுரம் சன்னிகளும் விரைவில் குணமாகும். மற்றும் வாதரோய்கள், சீதள சைத்தியத்தினால் ஏற்பட்ட பிணிகள் முதலியவைகளும் தீரும். இம்மருந்தை தொடர்ந்து மூன்று நாட்களுக்குமேல் கொடுக்கக்கூடாது.

சண்முகச் செந்தூரம்:—சுத்திசெய்த லிங்கம் வராகனெடை-1, சுத்திசெய்த வீரம் வராகனெடை-1, சுத்திசெய்த பூரம் வராகனெடை-1, சுத்திசெய்த தாளகம் வராகனெடை-2, சுத்திசெய்த கௌரி வராகனெடை-1, சுத்திசெய்த வெடியுப்பு வராகனெடை-1

இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டு முட்டை வெண்கருவிட்டு இரண்டு ஜாமம் நன்கு அரைத்து உலர்த்தி பொடித்து காலியான ஓர் முட்டைக்குள் செலுத்தி, மேலே ஒரு முட்டை ஓட்டை மூடிச் சீலைமண் செய்யவும். அவ்வாறுச் சீலைமண் செய்யும்போது முட்டையின் மேல்பாகத்தில் ஒரு தம்படி அளவுக்கு முட்டை ஓடு தெரியும்படி விட்டு, மற்ற பாகங்களெல்லாம மறையும்படி சீலைமண் செய்ய வேண்டும். இது உலர்ந்தபின்பு ஓர் வாயகலமான சட்டியில் இரண்டு விரற்கடை உயரத்திற்கு மணல்கொட்டிப் பறப்பி, அதன் மேலில் சீலைசெய்து வைத்துள்ள முட்டையை வைத்து, முட்டையின் முக்கால் பாகம் மறையும்படி மணலைக் கொட்டி, அசையாமல் அடுப்பி லேற்றி சிறுதீயாக எரித்துவரவும். மேலே தெரியும் முட்டை ஓடானது வெந்த கம்பியால் தொட்டுப் பார்க்க துவாரம் விழுவதாக இருப்பின் அதுவே தக்க பதமென, ஓர் இரும்பு கம்பியை முட்டையின் உள்ளே செலுத்தி கழுவிப்பார்க்க மருந்துகள் உருகி கட்டியிருக்கும். அச்சமயம் கீழிறக்கி ஆறவிட்டு முட்டைப்பின் உள்ளேயுள்ள மருந்தைமட்டும் அரைத்து பத்திரப்படுத்துக. இதில் வேளைக்கு 2-அரிசிப் பிரமாணம் நிணம் 2-வேளை தேனில் கொடுக்க சுரம், சன்னி, கபசுரம், சுவாசகாசம் முதலியன குணமாகும்.

அக்கினி குமார மாத்திரை:—வாலைரசம், சுத்திசெய்த கந்தகம், பொரித்த வெங்காரம், சங்கு பற்பம், பலகறைபற்பம் வகைக்கு வராகனெடை-1, சுத்திசெய்த காபி வராகனெடை-3, வெள்ளிமிளகு வராகனெடை-8 இவைகளை கல்வத்திலிட்டு பழச்சாறுவிட்டரைத்து மிளகளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்துக. இதில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் நிணம் இருவேளையாகத் தக்க அனுபானங்களில் கொடுக்க சுரம், சன்னி, குணமம், சூலை, வாத ரோகங்கள் முதலியன குணமாகும். இது சன்னிபாத சுரத்திற்குச் சிறந்தது.

இராஜராஜேஸ்வரம்:—இரசம், பால்துத்தம், இலிங்கம், கந்தகம், காபி, மனோசிலை இந்த ஆறு சரக்குகளையும் முறைப்படி நன்கு சுத்திசெய்து வகைக்கு 1-வராகனெடையாக எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து வேப்பிலையிர்க்குக் குடிநீர்விட்டு 2-ஜாமம் அரைத்து உருட்டி உலர்த்தி அகலிலிட்டு சீலைமண்செய்து, மணல் மறையில் வைத்து குக்கிடபுடமிட்டு ஆறினபின்பு மருந்தைச் சுண்டிக் கல்வத்திலிட்டு ஆட்டுக்கடாபிச்சி நீரிலும், எருமைக்கடாபிச்சி நீரிலும் தனித்தனியே இரண்டிரண்டு நாள்வீதம் அரைத்து சிறுகுன்றி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்துக. இதில் ஒரு மாத்திரை வீதம் நிரிகடுகு நியாழத்தில் கொடுக்க பதின்மூன்று சன்னிகளும் குணமாகும்.

விஷ்ணுசக்கர மாத்திரை:—இரசம், கந்தகம், இலிங்கம், தாளகம், காந்தம், தத்தம், பலகறை பற்பம், காபி, மனோசிலை முதலிய

ஒன்பது சரக்குகளையும் முறைப்படி சுத்திசெய்து சமனளவாகத் தூக்கிப் பொடித்துக் கல்வத்திலிட்டு, வேப்பம்பட்டைச்சாறு அல்லது பழச்சாறுவிட்டு இரண்டு ஜாமம் நன்கு அரைத்து சிறு குன்றி யளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்துக. இதில் ஒரு மாத்திரை நிரிகடுகுச் சூரணத்துடன் சேர்த்து தேனும் இஞ்சிச்சாறும் கூட்டிக் கொடுக்கவும். இதனால் சுரம், பக்கவாதம், சூலை, பதின்மூன்றுவகை சன்னிகள், மூர்ச்சை முதலியன குணமாகும்.

பிரமாநந்த வயிரவம்:—வெங்காரம், கந்தகம், மனோசிலை, அரிதாரம், காபி, சுக்கு, லிங்கம் இவைகளை சுத்திசெய்து சமனளவாகக் கல்வத்திலிட்டு இஞ்சிச்சாறு விட்டு இரண்டு ஜாமம் நன்கு அரைத்து உளுத்தளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்துக. இதில் ஒரு மாத்திரைவீதம் நிணம் இரண்டு வேளை தேன் இஞ்சிச்சாறு முதலியவற்றுடன் கொடுத்துவர சன்னிசுரங்கள் குணமாகும்.

தூபங்கள்:—சாம்பிராணி, குங்கிலியம், மயிலிறகு, தர்ப்பை, ஓமம், வேப்பிலை, காட்டுத்துளசி, சந்தனம் இவைகளைப் பொடித்து கரி செருப்பிலிட்டு தூபமிட சன்னிகள் சாந்தமடையும்.

நசியங்கள்:—அகத்திகீரைசாற்றில், வெல்லம், சுக்கு, திப்பிலி இவைகளை சூரணித்து கலந்து நசியமிட்டால் சித்தவிப்ரம சன்னி நீங்கும்.

திப்பிலியை காயுருவி இலைரசத்தில் சேர்த்து நசியமிட்டாலும் அல்லது நிரிகடுகு, பேய்ச்சுரை இலைகளை அரைத்து அந்த ஜலத்தை நசியஞ் செய்தாலும் கண்டகுப்ச சன்னி நசிக்கும்.

மிளகு, திப்பிலி, இந்துப்பு இவைகளது சூரணத்தை வெந்நீரில் அரைத்து நசியஞ்செய்தால் கர்ணிகசன்னி நீங்கும்.

மிளகு, அழுக்கிரு கிழங்கு, திப்பிலி, இந்துப்பு, வெள்ளைப் பூண்டு, இலுப்பைபிசின், முருங்கன்வேர், இஞ்சி இவைகளை ஒன்றாகக் கலந்து கீர்விட்டு அரைத்து நசியமிட்டால் புக்கினசேத்ர சன்னி நீங்கும்.

மாதுளம்புஷ்ப இரசத்தையாவது அல்லது அருகம்புல் ரசத்தில் நிரிபலி சூரணத்தை சேர்த்தையாவது நசியமிட்டால் ரக்த ஸ்டீவி சன்னிபாதம் நிவர்த்தியாகும்.

காபி 1-பாகம், மிளகு 3-பாகம், காட்டு எருசாம்பல் 16-பாகம் இவைகளை சூரணித்து சிறிது நசியஞ்செய்தால் சன்னிகள் நீங்கும்.

காட்டு எருசாம்பல் 1-பாகம், எருக்கன் பாலிலிட்டு அரைத்து இதற்கு காலிலொன்று மிளகு சூரணம் கலந்து அரைத்து நசியமிட்டால் சன்னிபாதங்கள் நிவர்த்தியாகும்.

சுக்காமூலிவேர், சுக்காமூலி விதை இவை இரண்டையுஞ் சூரணித்து இதில் பாதி மிளகு சூரணஞ் சேர்த்துக் கலந்து சகிபமிட சன்னிபாதங்கள் நிவர்த்தியாகும்.

க்ஷயரோக சிகிச்சை

க்ஷயமிருகாங்க ரசம்:—ரச பஸ்பம் 2-பாகம், சுவர்ண பஸ்பம் 1-பாகம், தாம்பிரபஸ்பம் 1-பாகம், மண்டூர பஸ்பம் 2-பாகம், கெந்தி 2-பாகம், தாளகபஸ்பம் 2-பாகம் இவைகள் யாவையும் பொடித்துப் பலகரையில் வைத்து மேல்பலகரையால் மூடி வெள்ளாரத்தை ஆட்டுபாலில் அரைத்து சீலைசெய்த அந்த பலகறையை பாண்டத்தில் வைத்து மேல்மூடி சீலைமண் செய்து காட்டு விறட்டியால் கஜபுடமிட்டு ஆறியபிறகு எடுத்து பலகரையில் உள்ள மருந்தை மறுபடியும் அரைத்து சிமிழியில் வைத்து குன்றிஎடை மருந்தை, 10-திப்பிலி, 10-மிளகு இவைகளை சூரணித்து, தேன் கலந்து இந்த அனுபானத்திலாவது அல்லது பசும் நெய்யுடனாவது சாப்பிட்டால் க்ஷய ரோகம் நிவர்த்தியாகும். இதற்கு ராஜயோக்கியமாய் பத்தியஞ் செய்யவேண்டியது.

சுவர்ணபூபதி ரசம்:—பாதரசம் 1-பாகம், கெந்தி 1-பாகம், தாம்பிர பஸ்பம் 2-பாகம், அப்பிரக பஸ்பம் 1-பாகம், லோகபஸ்பம் 1-பாகம், காந்தபஸ்பம் 1-பாகம், சுவர்ணபஸ்பம் 1-பாகம், வெள்ளி பஸ்பம் 1-பாகம், வசநாபி, 1-பாகம்: இவைகளை யொன்றுகச் சேர்த்து கல்வத்திலிட்டு செருப்படை இலைச்சாற்றினால் ஒருநாள் அரைத்து மாத்திரைகள் செய்து காசி சுப்பியில் வைத்து சுற்றி சீலைமண்செய்து உலர்த்தி வாலுகாயந்திரத்தில் மந்தாக்கினியால் மிருதுவாக எரித்து ஆறியபிறகு எடுத்து குன்றிஎடை இஞ்சிரசத்தில் திப்பிலிசூரணம் கலந்து இந்த அனுபானத்தில் கொடுத்தால் மூன்று வித க்ஷயரோகங்கள், பதின்மூன்றுசன்னிகள், ஆமவாதம், தனுர்வாதம், பங்குவாதம், கபவாதம், அக்கினிமந்தம், கடிவாதம், சகல சூலைகள் குன்மசூலை, உதாவர்த்தம், மிகவும் கொடிய இராணிகள், பிரமேகங்கள், உதர ரோகம், அஸ்மரீரோகம், மூத்திரகிருச்சிரம், மலபந்தம், பகந்தரம், சகலகுஷ்டங்கள், கட்டிகள், சுவாசங்கள், காசங்கள், அஜீரணங்கள், எட்டுவித சுரங்கள், காமாலை, பாண்டு ரோகங்கள், சிரோரோகங்கள், இவைகள் யாவும் குணமாகும். அனுபான பேதயுக்தமாய் கொடுத்தால் இன்னும் பல ரோகங்கள் போம்.

ஹேமாபிரகாச சிந்தூரம்:—அப்பிரக பஸ்பம், இரசசிந்தூரம், சுவர்ண பஸ்பம் இவைகள் சமனடையாக எடுத்து ஒன்றுப் அரைத்து குன்றி எடை இஞ்சிரசத்தில் ஒருமண்டலம் கொடுத்தால் க்ஷய பாண்டு க்ஷயகாசரோகம், கும்பகாமாலை இவைகள் குணமாகும்.

ராஜமிருகாங்க ரசம்:—பாதரசம், (1) பாகம், சுவர்ணபஸ்பம், (1) பாகம், முத்துபஸ்பம் (2) பாகம், கெந்தி, (1) பாகம், வெண்

காரம் (3) பாகம் இவைகளை ஒன்றுசேர்த்து கல்வத்திலிட்டு தானிக்காய் நியாழத்தில் அரைத்த மாத்திரைசெய்து தணியில் சுருட்டி உப்புபாண்ட மத்தியில் வைத்து எரித்தெடுக்க இதை இராஜ மிருகாங்க ரசமென்பார்கள். இதை குன்றிஎடை மிளகு, திப்பிலி இவைகள் சூரணத்துடன் தேன், அல்லது நெய் இந்த அனுபானத்துடன் கொடுத்தால் க்ஷயரோகம், அக்கினிமந்தம், கிருணி, இவைகளைப் போக்கும்.

தேளமான பதார்த்தங்கள் கொடுக்கவேண்டியது, பித்தாதிக்கத்தை யுண்டுபண்ணுமாகையினால் உஷ்ணபதார்த்தங்கள் கொடுக்கக்கூடாது.

பஞ்சாமிருத ரசம்:—இரசபஸ்பம், அப்பிரகபஸ்பம், லோஹபஸ்பம், வைசாத்த பஸ்பம், தாபி, குங்கிலியபஸ்பம், சுத்திசெய்த சோர்வாளம், தாமபிரபஸ்பம் இவைகளை சமனடை எடுத்து சீந்தில் கொடி, நிரிபலை இவைகளின் நியாழத்தில் அரைத்து சிமிழியில் வைத்து ஒரு குன்றிஎடை இராஜமிருகாங்கத்திற்குச் சொன்ன அனுபானத்தில் கொடுத்தால் ராஜயக்ஷ்மரோகம் நிவர்த்திக்கும். இது தான் பஞ்சாமிருத ரசமெனப்படும்.

வசந்தகுசுமாகரம்:—பவழபஸ்பம் (4) பாகம், ரசபஸ்பம், (4) பாகம், முத்து பஸ்பம் 4) பாகம், அப்பிரகபஸ்பம் (4) பாகம், வெள்ளிபஸ்பம் (2) பாகம், சுவர்ணபஸ்பம் (2) பாகம், லோஹபஸ்பம் (3) பாகம், வங்கபஸ்பம் (3) பாகம், நாகபஸ்பம் (3) பாகம், இவைகளை யொன்றுக கல்வத்திலிட்டு ஆடாதோடை, மாமஞ்சள், கரும்பு, நாமரைப்புஷ்பம், ஜாதிப்பூ, வாழைக்கிழங்கு, துளசி, சந்தனம் இவைகளின் ரசங்களினாலாவது அல்லது கஷாயத்தினாலாவது தனித் தனியாக ஒவ்வொரு நியாழத்தினால் ஏழுநாள் அரைத்து சிமிழியில் வைத்துக்கொண்டு குன்றிஎடை அனுபானவிசேஷத்தினால் கொடுத்தால் க்ஷயம் முதல் சகலரோகங்களும் நிவர்த்தியாகும்.

மேலும் மிளகு சூரணம், தேன், இவைகளுடன் கலந்துகொடுத்தால் க்ஷயரோகங்கள் நீங்கும்.

மாமஞ்சள்சூரணம், தேன், சர்க்கரை இவைகளுடன் கலந்து கொடுத்தால் சகலமேகங்கள் பிரமேகங்கள் நீங்கும்.

சந்தனத்தூள் நியாழம், சர்க்கரை இவைகளுடன் கலந்து கொடுத்தால் ரத்தபித்தம் நீங்கும்.

சர்க்கரை, தேன், ஆடாதோடை இலைச்சாறு, அல்லது எலக்காய், அகரு, சந்தனம் இவைகளின் சூரணத்தில் கொடுத்தால் புஷ்டி, நாதவிருத்தி இவைகளை யுண்டாக்கும.

சங்கபுஷ்பிரசத்தில் கொடுத்தால் வாந்திகள் நிற்கும். தண்ணீர்விட்டான்கிழங்குரசம், சர்க்கரை தேன் கலந்துகொடுத்தால் ஆமல

பித்தம் நிவர்த்தியாகும் இன்னம் அனுபான விசேஷங்களால் கொடுத்தால் சகலரோகங்களும் நீங்கும்.

ஹரருத்ர ரசம்:—எழுநூபஸ்பம் (1) பாகம், தாம்பிரபஸ்பம் (2) பாகம், நாகபஸ்பம், (3) பாகம், வெள்ளிபஸ்பம் (4) பாகம், சுவர்ணபஸ்பம் (5) பாகம், சுத்திசெய்த ரசம் (6) பாகம் இவைகளை சேர்த்து கல்வத்திலிட்டு, புளிஇலை ரசத்தில் 1-நாள் அரைத்து புடமிட்டு மிருகாங்கரசத்தில் சொல்லியப்பிரகாரம் வாலுகாயந்திரத்தில் எரித்த ஆறியபிறகு எடுத்து சூரணஞ்செய்து பிழிபியில் வைத்துக் கொண்டு மிருகாங்கரசத்தில் சொல்லியிருக்கும் பிரமாணம் அனுபான யுத்தமாககொடுத்தால் சூடுயரோகம் நிவர்த்தியாகும்.

ஹேமகர்ப்ப ரசம்:—ரசபஸ்பம் இரண்டரை விராகனெடை சுவர்ணபஸ்பம் ஒண்ணேகால் விராகனெடை, சுத்திசெய்தகெந்தி இரண்டரை விராகனெடை இவைகளை சித்திரமூல ரசத்தில் இரண்டு சாமங்கள் அரைத்த பிறகு அதை புளர்த்தி பலகரையில் வைத்து மூடி, வெங்காரத்தை பசும்பாலில் அரைத்து சீலைசெய்து பாண்டத்தில் வைத்து மூடியால்மூடி சீலைசெய்து கஜபுடமிட்டு ஆறிய பிறகு எடுத்து இதில் குன்றிஎடை பிரமாணம் அனுபான யுக்தராக கொடுத்தால் சகல சூடுயரோகங்கள் சூரியகிரக்கண்ட பனிப்போல் நீங்கும்.

குமுதேஸ்வர ரசம்:—சுத்திசெய்த ரசம், கந்தகம் அப்பிரகபஸ்பம், இவை மூன்றையும் சம எடையாகச்சேர்த்து இவைகளுக்குப் பேர்பாதி சுத்திசெய்த லிங்கம் இதற்குப் பேர்பாதி சுத்திசெய்த மனோசிலை, எல்லாஞ் சேர்ந்த மொத்த எடையில் பேர்பாதி லோஹபஸ்பம் இவைகள் யாவையும் கல்வத்திலிட்டு தண்ணீர்விட்டான் கிழங்குச் சாற்றினால் பதினோராள் அரைத்தால் சித்தியாகும். இதில் ஒரு குன்றிஎடை சர்க்கரையுடனாவது அல்லது மிளகு சூரணத்துடனாவது, இஷ்ட தேவதா பூஜைசெய்து பிறகு அவிடதத்தை சாப்பிட்டால்கோறமான சூடுயரோகம், வாதரோகம், பித்தரோகம், கபரோகம், சலசுரங்கள், இவைகள் யாவும் நீங்கும்.

சுயமக்கினி குமார ரசம்:—சுத்திசெய்த ரசம் 1 பாகம், கெந்தி 2 பாகம், இந்த இரண்டு நிலுகளை கல்வத்திலிட்டு நன்கு அரைத்து மடிந்த பின்பு இவைகளுக்கு சமஎடை லோஹபஸ்பம் சேர்த்து கற்றுழை இரசத்தில் இரண்டு ஜாமம் அரைத்து உருண்டையாக்கி செம்பு பாத்திரத்தில் வைத்து அதற்குமேல் ஆமணக்கு இலைகள் மூடி ஒரு ஜாமம் வரையிலும் வெய்யிலில் உலர்த்தி பிறகு தானியராசியில் ஒரு இரவும் பகலும் வைத்து பிறகு சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து கற்றுழைச்சாறு காசனிக்கண்ணிச்சாறு, மணத்தக்காளி இலைரசம், மூள்ளு அழவனை இலைரசம், ஸிவகாந்தை இலைரசம், வெண்சீச்சாரனை இலைரசம், சகதேவிரசம், செந்நில்கொடிரசம்,

அவரி இலைரசம், நொச்சி இலைரசம், சித்திரமூலவேர்ரசம் இந்த ரசங்களினால் தனித்தனி ஏழுநாள் அரைத்து வெய்யலில் உலர்த்தி அரைத்து வைத்துக்கொள்க.

பிறகு சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், எலக்காய், சாதிக்காய், இலவங்கம், இவைகளை சமஎடைசூரணித்து சூரணத்தின் எடையில் அரைபாகம் முன் மூடித்த மருந்தைச் சேர்த்து மறுபடியும் அரைத்து அதில் இரண்டு மூன்று குன்றிஎடை அனுபான விசேஷத்தினால் கொடுத்தால் சூடுயரோகம் காசரோகம் இவைகள் நிவர்த்தியாகும்.

ஹேமகர்ப்ப போடலீ ரசம்:—சுவர்ண பஸ்பம் 1 பாகம், சுத்திசெய்த இரசம் 1 பாகம், சுத்திசெய்த கந்தகம் 2½-பாகம், இவைகளை ஒன்றுச்சேர்த்து மர்தாரப்பட்டை இரசத்தால் அரைத்து மாத்திரை செய்து மூசையில்வைத்து மேல்மூடி சீலைசெய்து வாலுகாயந்திரத்தில் மூன்றாள் எரித்த ஆறிய பிறகு எடுத்து அதற்கு சமஎடை சுத்திசெய்த கெந்தியைச்சேர்த்து தனித்தனியாக இஞ்சிசாற்றிலும் சித்திரமூல சாற்றிலும் அரைத்த பிறகு இந்த மருந்தின் எடையில் எட்டிலொன்று வெங்காரமும் அதில்பாதி நாபியும் சேர்த்து கள்ளிப்பாலினால் அரைத்த அதிலிடக்கி சீலைமண்செய்து ஓர் சட்டியில் மணல் கொட்டி நடுவில் இதைவைத்து மேலும் மணல்கொட்டி வாய்மூடிச் சீலைசெய்து கஜபுடம் இட்டு ஆறிய பிறகு எடுத்து ½-1 குன்றி விதம் அனுபான யுக்தமாக கொடுக்கவேண்டியது.

இது காசம், சூடுயம், சுவாசம், கிருணி, அருசி, கபம், வாந்தி, இவைகளை நிவர்த்திசெய்யும். அக்கினிதீபத்தை யுண்டாக்கும்.

சகல சூடுயரோகத்திற்கு காந்தவல்லப ரசம்:—காந்தச் செந்தூரம் 16 பாகம், எஃகுச் செந்தூரம் 14 பாகம், மண்டூரச் செந்தூரம் 12 பாகம், பொரித்த வெங்காரம் 10 பாகம், மனோசிலை 8 பாகம், கற்பூர இலாசத்து 6 பாகம், வராசரசம் 66 பாகம், சுத்திசெய்த கந்தகம் 66 பாகம், இவைகள் யாவையும் கல்வத்திலிட்டு பழச்சாற்றினால் அரைத்து காசிக்குப்பியில்வைத்து வாலுகாயந்திரத்தில் ஏழு இராத்திரி எரித்து ஆறிய பிறகு எடுத்து அரைத்து வைத்துக்கொண்டு குன்றிஎடை தேனுடன் காலை மாலை கொடுத்தால் பாண்டுரோகம், சூடுயம், குன்மம், கிருணி, காசங்கள், சுவாசங்கள், சாங்கள், வாந்திகள், பிலீஹோதரம், அருசி, அக்கினிமந்தம், குஷ்டம், மூலவியாதி, பகந்தரம், வாதசூலை, இவைகளை நிவர்த்திக்கும். விரியம், அக்கினிதீபனம், மனதுக்கு சந்தோஷம், தேகபுஷ்டி, தேககாந்தி, பலம், இவைகளை யுண்டாக்கும்.

பூரண சந்திரோதயம்:—சுத்திசெய்த தங்கரேக்கு 1-பலம், சுத்திசெய்த ரசம 8-பலம், சுத்திசெய்த கெந்தி 16-பலம் இவைகளை கல்வத்திலிட்டு செம்பருத்தி புஷ்பசாற்றினால் ஒருநாள் அரைத்து,

கற்றுழை சாற்றினுல் ஒருநாள் அரைத்து அரசன்கொழுந்து இரசத்தால் ஒருநாள் அரைத்து காஞ்சுப்பியில்வைத்து மேல்மூடி காஞ்சுப்பிக்கு செவ்வையாய் வன்நிரத்தை சுற்றி அதின்மீது சீலைசெய்து உலர்த்தி கல்ல சுபமூகூர்த்தத்தில் , வாலுகாயந்திரத்தில் வைத்து நீபாக்கினியாக ஒருநாள் கமலாக்கினியாக ஒருநாள் காடாக்கினியாக ஒருநாள் ஆக மூன்றுநாள் எரித்து ஆறியபிறகு எடுத்துப்பார்த்தால் கொழுந்துப்போல் செப்பாயிருக்கும். அதை யெடுத்துக் கொண்டு பச்சை கற்பூரம் 4-பலம் அத்துடன் சேர்த்து பிறகு ஜாதிக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, இலவங்கம், கஸ்தூரி இந்த நிறுசுகள் தனித்தனி ஒரு வராகனெடையாகச் சேர்த்து சூரணித்து இலைகளின் மருந்துடன் கலந்து செவ்வையாக அரைத்து சிமிழியில் வைத்துக் கொண்டு 2-குன்றி எடை வெற்றிலை அனுபானத்தில் கொடுத்தால் சகலரோகங்களும் நீங்கும்.

பிப்பலியாதி ரசாயனம்:—திப்பிலி 16-பலம், மிளகு 4-பலம், கண்டுபாரங்கி 4-பலம், வாய்விளங்கம் 4-பலம், சுக்கு 4-பலம், சீரகம் 4-பலம், சித்திரமூலம் 2-பலம், கரிசாலைச்சூரணம் 2-பலம், மரமஞ்சள் 2-பலம், செவ்வியம் 2-பலம், மோடி 2-பலம், அயச்செந்தூரம 2-பலம், திப்பிலிமூலம் 2-பலம், சர்க்கரை 8-பலம், தேன் 32-பலம் இலைகள் யாவையும் ரசாயனபாகமாய்ச் சமைத்து தானிய புடமிட்டு உட்கொண்டால் காசங்கள், சுவாசங்கள், அக்கினிமந்தம், சூலயங்கள், பாண்டுரோகம், அருசி, உடற் சோர்வு, விஷங்கள் இவைகள் நிவர்த்தியாகும்.

அஸ்வகெந்தி ரசாயனம்:—அமுக்கிரங்கிழங்கு 20-பலம் மிருதுவாக சூரணித்து பசும்பால் 4-படி, பசெய் 16-பலம் இலைகளை ஒரு பாத்திரத்தில் வைத்து அதில் சூரணத்தைப்போட்டு சிறு தீயில் சுண்டக்காய்ச்சி அதில் 10-பலம் சர்க்கரையைப் போட்டு இலவங்கப்பட்டை, இலவங்கபத்திரி, சிறுநாகப்பூ, ஏலக்காய், கொத்தமல்லி, நிராசுஷி, கர்சூரக்காய், சந்தனம், ஜாதிக்காய், இச்சிலிக்கிழங்கு, மூங்கிலுப்பு, நிர்கடுகு, குறவேர், இலவங்கம், மோடி, செவ்வியம், சித்திரமூலம் இவைகளை நிறுசுக்கு கால்பலம் விதம் சூரணமாக எடுத்துக்கொண்டு மேற்சொல்லிய ரசாயனத்தில் கலக்கி லேகிய பக்குவமாக கிளரி 8-பலம் தேன்சேர்த்துப் பிசைந்து ஆறியபிறகு எடுத்த 15-நாட்கள் தானியபுடமிட்டு காலை மாலை செல்லிக்காய் அளவு அருந்திவர சகல சூலயங்கள், ரக்தபித்தங்கள், ஆமலபித்தம், காமாலை, பாண்டு, அஸ்திகதசுரம், புராணசுரங்கள் இவைகளை நாசஞ் செய்யும். அக்கினிதீபனம், தேஜசு, பலம், (கர்பிணிஸ்திரீ, கிழவர், பாலர்கள் இவர்களுக்கு) சுகுமாரத்துவம், அக்கினிபுஷ்டி, கூடிணித்த விரிய விருத்தி இவைகளை உண்டாக்கும்.

சூலயங்களுக்கு தாளகசிந்தூரம்:—சுத்திசெய்த தாளகசூரணம், சிலாசத்துசூரணம இவைகளை சமனடை கல்வத்திலிட்டு செம்பருத்தி

இலை சாற்றினுல் மூன்றுநாள் அரைத்து மூசையில்வைத்து மூடி சீலை மண்செய்து புடமிடவும். இப்படி 7-முறை புடமிட்டால் தாளகமானது ரத்தம்போல் செப்பான சிந்தூரமாகும்.

ஆடாதோடை இலை ரசத்தில் கொடுத்தால் சிலேஷ்ம சூலயங்கள் போம். நெரிஞ்சல்வேர் இரசத்தில் கொடுத்தால் ரத்தசூலயங்கள் நீங்கும். இளநீரில் கொடுத்தால் வாதசிலேஷ்ம சூலயங்கள் நீங்கும்.

கடுக்காய் சூரணத்தில் கொடுத்தால் சுவாசசூலயங்கள் போம். திப்பிலிச்சூரணத்தில் கொடுத்தால் காசசூலயங்கள், சர்க்கரை, தேன் இவைகளுடன் கொடுத்தால் பித்தசூலயங்கள், நொச்சியிலைச் சூரணத்தில் கொடுத்தால் கபத்தினுல் உண்டாகிய சுவாசம் நாசமாகும். வெண்ணெயுடன் சாப்பிட்டால் விக்கல் வாந்தி நீங்கும். மிளகு சூரணத்துடன் சாப்பிட்டால் முறைகாய்ச்சல்கள் போம். மருதம் பட்டை சூரணத்துடன் கொடுத்தால் சுக்கிலமேகம் நீங்கும்.

பருத்திவிதை சூரணத்துடன் கொடுத்தால் வெகு மூத்திர ரோகங்கள் நீங்கும். சங்கு பற்பத்துடன் கொடுத்தால் சிருமி, மூட்டம் நீங்கும், காயுரிவியிலைச்சாற்றில் கொடுத்தால் குதரோகம் நீங்கும். மாதுளம்பூச்சாற்றில் கொடுத்தால் விக்கல், கிரஹணி இவைகள் நீங்கும்.

சூலயங்களுக்கு வராளாதி லேகியம்:—இலவங்கம் (20) பலம், பஞ்சகோலங்கள் (20) பலம், மிளகு (20) பலம், வாலுலுவை அரிசி (4) பலம், இவைகளை ஒன்றிரண்டாக இடித்துக்கொண்டு (8) படி ஜலம்விட்டு அதில் இரண்டுபடியாகக் கியாழம் காய்ச்சி வடிகட்டி அதில் (25) பலம் பழைய வெல்லம் கலந்து மறுபடியும் வடிகட்டி அடுப்பிலேற்றி சிறுதீயாக எரித்து பாகுபதம் வரும்போது 12½-பலம் அஸ்வகந்திக் கிழங்கை பாலில் வேகவைத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணத்தைப் போட்டுக் கிளரி ஆறியபிறகு தேன் (16) பலம் கலந்து தானியபுடமிட்டு செல்லிக்காயளவு காலைமாலை கொடுத்துவந்தால் காசங்கள் சுவாசங்கள், சூலயங்கள், இருமல் வியாதிகள், சுரங்கள், பூதகிரஹங்கள் நீங்கும். (15) நாள் கொடுத்தால் ராஜயக்ஷமரோகம், உதாரோகம், அக்கினிமந்தம் இவைகள் நீங்கும். விரியம் பலம் ஆயுசு முதலியது விருத்தியாகும்.

சூலயங்களுக்கு க்ஷேத்திரா ஹரீதகி லேகியம்:—கண்டங்கத்திரிவேர், சிந்திலகொடி, ஆடாதோடை, தசமூலங்கள், சித்திரமூலம், பேயாவரைவேர், ஆமணக்குவேர், சிற்றாமுட்டி, நொச்சிவேர், முன்னைவேர், கண்டுபாரங்கி, செவ்வியம் சுக்கு இவைகள் நிறுசு 1-க்கு (25) பலமாகச் சேர்த்து இடித்து அதில் (5) படி ஜலம்விட்டு 8-ல் ஒருபாகமாகச் சுண்டக்காய்ச்சி பழையவெல்லம் ஒண்ணேகால் விசை கலந்து வடிகட்டி வைத்துக்கொள்க. பிறகு நூறு கடுக்காயை

சோமூத்திரத்தில் வேகவைத்த அதில் உள் இருக்கும் பருப்பை எடுத்துவிட்டு அந்த தோல்களை யொழுத்தில் போட்டு சொச்சி இலை, காசனிக்கண்ணி இலை, மஞ்சள், ஆடாதோடை, இஞ்சி, செவ்வித்காய், பிரமி இலை, சித்தில்கொடி, ஊதக்கள், கண்டங்கத்திரி, சாரணை இலை இவைகளின் சாறுகள் ஒவ்வொன்றும் 2 படிச்சேர்த்து வேறு பாண்டத்தில் போட்டு காய்ச்சி அந்த யொழுத்திலிருக்கும் நிப்பிலை எடுத்த விட்டு இலைகளை எல்லாம் ஒன்றுசேர்த்த அதில் ஏலக்காய், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, இலவங்கம், மிளகு, கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், ஓமம், சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, சித்திரமூலம், பெருங்காயம், கோஷ்டம், நிரிபலி, இந்துப்பு, சவ்வர்ச்சலவணம், பிடாலவணம், செவ்வியம், கர்க்கடசிங்கி, கண்டுபாரங்கி, தேவதாரு, வசம்பு இலைகள் நிறைக்கு (2) பலம் விதஞ் சூரணித்ததையும், ஒருபடி செய்யையுஞ்சேர்த்து லேகியபாகமாகச் செய்து ஆறியபிறகு பூபதிரசம் 2 பலமும்தேவையான அளவு தேனும்கலந்த பாண்டத்தில் வைத்த தானியபுடமிட்டு ஒருமாதமாகிலும் அல்லது ஒருபக்ஷமாவது கொடுத்தால் ஊத்துவலைவாசரோகங்கள், இருதயரோகங்கள், பலக்ஷயம், சுவையங்கள் பன்னிரண்டு விதங்களாகிய நிமோநிமோகரோகங்கள், குன்மங்கள், பிலீஹம், மகோதரங்கள், பாண்டு, கிருமிரோகங்கள், வாந்தி, விக்கல், சுரங்கள், அக்னிமந்தம், வாதநிமிர்கள், சனவிறசூலை பகந்தரம், அருசி இவைகள் நீங்கும்.

சுவையங்களுக்கு பர்பூராதி லேகியம் :—கருவேலன் பட்டை, ஆடாதோடைவேர், முள்ளங்கத்திரிவேர், முள்ளு அழவணம்வேர், சொச்சிவேர், முன்னைவேர், தண்ணீர்விட்டான்கிழங்கு இவைகள் நிறைக்கு 20-பலஞ்சேர்த்து இடித்து 4-படி ஜலம்விட்டு எட்டில் ஒருபாகமாகச் சண்டக்காய்ச்சி வடிகட்டி அந்த யொழுத்தில் 1-மிசை பழையவெல்லம் கலந்த அடுப்பேற்றி அதில் வேலங் கொழுந்துசாறு, ஆடாதோடை இலைசாறு, முள்ளங்கத்தி இலைசாறு, அழவணை இலைசாறு, முன்னைஇலைசாறு, தண்ணீர்விட்டான் சாறு, காசனிக்கண்ணிச்சாறு, வல்லாரை இலைச்சாறு, சாரணைஇலைசாறு, பாவல் இலைச்சாறு, இந்த இலைச்சாறுகள் பிரத்தியேகம் 2-படி விதந்தஞ்சேர்த்து க்காய்ச்சி அதில் சந்தனசூரம், பாலசூரம், வெண்காரம், நிரிதடுகு, நிரிசாரங்கள், சிறாசகப்பூ, கும்பாஷ்டம், நிரிபலி தேவதாருவேர், அல்லது ஆமணக்குவேர், சித்திரமூலம், மஞ்சள், கண்டுபாரங்கி, வசம்பு, கடுகு, காசனிக்கண்ணிவேர், மாமஞ்சள், அதிவிடயம், நிப்பிலிமூலம், மாதளம்பழம், பஞ்சலவணங்கள் இவைகள் எல்லாம் தனித்தனி கால்பலம் எடை சூரணம் கலந்த லேகிய பதமாகக் கிளறி ஆறியபிறகு ஒருபடி தேன் கலந்த தானியபுடமிட்டு கழற்சியளவு சாப்பிட்டுவந்தால் மகாசுவையங்கள், பஞ்ச விதங்களான காசங்கள், சுவாசங்கள், கபங்கள், தாகம், விக்கல், சொள்ளு

வடிதல், வாந்தி, பாண்டு, மேகம், மகோதரம், பித்தம், ரத்தபித்த சோய், மூர்ச்சை, அடக்கல் இவைகள் யாவும் நிவர்த்தியாகும்.

சுவையங்களுக்கு வாசாதி லேகியம்:—ஆடாதோடை சமூலம், உத்தாமணி சமூலம், கோரை சமூலம், முள்ளங்கத்திரி வேர், நெருஞ்சி வேர், கண்டங்கத்திரி வேர் இவைகள் நிறைக்கு 20-பலம் சேர்த்து 4-படி ஜலத்தில்போட்டு 8-ல் ஒரு பாகமாகக் காய்ச்சி வடிகட்டி அதில் 50-பலம் பழபவெல்லம் கலந்து மீண்டும் வடிகட்டி அதில் ஆடாதோடைச்சாறு, உழுக்கு உத்தாமணி இலைரசம் உழுக்கு எருக்கன் சமூலம் இரசம் உழுக்கு சித்தில் கொடிச்சாறு உழுக்கு, பேயாவரை இலைரசம் உழுக்கு, தூதுவளை இலைரசம் உழுக்கு, காசனிக்கண்ணி இலைரசம் உழுக்கு, சொச்சி இலைரசம் உழுக்கு, பசும்நெய் உழுக்கு, எண்ணெய் உழுக்கு, இலைகள் யாவையுஞ் சேர்த்து லேகியபாகமாக கிண்டி கர்க்கடசிங்கி, கண்டுபாரங்கி, இலவங்கள் இரண்டும் 2-பலம் கள் நிப்பிலி, நிப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, வசம்பு, இந்துப்பு, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறாசகப்பூ, தானிசப்பத்திரி, மிளகு, தேவதாரு, நிரிபலி, இவைகள் நிறைக்கு 1-க்கு, 1-பலம் விதம் சூரணத்தை இந்தலேகியத்தில் போட்டு தேன் 16-பலஞ் சேர்த்த கலந்த எண்ணெபாண்டத்தில் வைத்த தானியபுடமிட்டு தான்றிக்காய் அளவு சாப்பிட்டால் மகாசுவையங்கள், சுவாசங்கள், சுவாசங்கள், ஹிருத்துரோகம், குன்மம், விக்கல், மூலரோகம், பிலீஹம், இவைகள் நீங்கும்.

சுவையங்களுக்கு கூம்மாண்ட கிருதம்:—கலியாண பூசினிக்காய் ரசம் 16-பலம், ஆடாதோடை ரசம் 16-பலம், பழுத்தசெவ்விக்காய் ரசம் 16-பலம், நிலப் இலைரசம் 16-பலம், தண்ணீர்விட்டான் கிழங்குரசம் 16-பலம், பூசனிக் கிழங்குரசம் 16-பலம், கரும்புரசம் 16-பலம், பால் 16-பலம், நெய் 16-பலம் இவைகளைக்கலந்த அதில் நிரிகடுகு, ஜாதிக்காய், மரங்கிலுப்பு, அதிமதுரம், கருஞ்சீரகம், ஏலக்காய், இலவங்கம், இலவங்கப்பத்திரி, ஜடாமாஞ்சி, கோஷ்டம், கோரைக் கிழங்கு, சிகப்புசந்தனம், சந்தனத்தூள், வெட்டிவேர் சித்தரத்தை, சதாப்பு, சித்தாமுட்டி, பேராமுட்டி, சாகமுட்டி, இவைகளை வகைக்கு நிதானை எடை சூரணித்து அந்த சூரணத்தை மேல்சொல்லிய நெய்தோலை எடை சூரணித்து அந்த சூரணத்தை மேல்சொல்லிய திருதத்தில் கலந்து நிபாக்கினியால் திருதபாகமாக சமைத்து ஆறிய பிறகு 8-பலம் தேன்கலந்து நன்கு கால்பலஞ்சாப்பிட்டால் சுவையங்கள், இருமல்கள், சுரங்கள், மூர்ச்சைகள், ரத்தபித்தம், மூத்திரக்கள், இருதய ரோகங்கள், ரத்தகுன்மம், காதங்கள், வெகுமூத்திரம், இருதய ரோகங்கள், ரத்தகுன்மம், யோனிதோஷம், ரஜோதோஷம் இவைகள் நிவர்த்தியாகும்.

தேகபுஷ்டி பலம், காந்தி, வீரியவிருத்தி, முதலியவைகள் விருத்தியாகும். மேலும், மலடு நீங்கி பிள்ளைப்பேறு உண்டாகும்.

க்ஷயங்களுக்குச் சுவாசா கிருதம்:—ஆடாதோடைரசம், சிற்றில் கொடி ரசம், காசனங்கண்ணி ரசம், பேயாவாரை ரசம், கண்டங் கத்திரி இலைரசம், இவைகள் ஒவ்வொன்றும் 16-பலம் எடையாகச் சேர்த்து அதில் 32-பலம் நெய்கலந்து இவைகளுடன் கண்டுபாரங்கி, வாய்விளங்கம், நிரிபலி, சன்னராஷ்டம், நிரிகடுகு, யவாக்ஷாரம், கர்க்கடகசிங்கி, இவைகள் யாவும் சமஎடையாகச் சூரணித்த 4-பலஞ் சூரணஞ்சேர்த்து, பக்குவமாக நெய் பதமாகக்காய்ச்சி அருந்த சுவாசங்கள், க்ஷயரோகங்கள், ரத்தபித்தரோகம். ஹிநத்து ரோகங்கள் விஷகாங்கள், பஞ்சகாசங்கள் இவைகள் நிவர்த்தி யாகும்.

அசுவகந்தாதி கிருதம்:—அமுக்கிராக்கிழங்கு 100-பலம், சிற்றாமுட்டி, நெறிஞ்சல், வெள்ளைச்சாரணைவேர், இவைகள் தனித்தனி 10-பலம், தண்ணீர்விட்டான் கிழங்கு, வெள்ளை நிலப்பூசினி, சிற்றில்கொடி, யவாதானியம், மொச்சை, இவைகள் தனித்தனி 6-பலம் இவைகளை யாவையும் சேர்த்து 7½-படி ஜலம்விட்டு ஆறிலொன்றாகக் கியாழம் சண்டங்காய்ச்சி வடிகட்டி அதில் 24-பலம் நெய், 48-பலம் பால் சேர்த்து கிருதபக்குவமாகக் காய்ச்சி அதில் நிரிசாதம், நிரிகடுகு, சிற்றாத்தை, அதிமதுரம், கருங்காலி, வெட்டிவேர், வெள்ளை நிலப்பூசினி, ஓமம், நிராக்ஷா, மஞ்சிஷ்டி வருத்தபெருங்காயம், இவைகளை அரைபலம் பிரமாணம் சூரணித்துச் சேர்த்து மிருது அக்கினியால் சமைத்து அந்த நெய்யின் எடைக்கு பேர்பாதி வெல்லத்தைச் சேர்த்தால் சித்தமாகும். பிறகு தானியபுடத்தில் ஒருமாதம் வைத்துக் கொடுத்தால் மஹாவியாதிகள், 11-விதக்ஷயங்கள், ஊருஸ்தம்பவாதம், ரத்தபித்தம், புராணசுரம், தாஹம் முதலிவைகள் நிவர்த்தியாகும்.

க்ஷயங்களுக்கு ஆர்த்திரக கிருதம்:—64 பலம் இஞ்சிரசம்: 64 பலம் பால், 64 பலம் நெய், ஓமம், இந்துப்பு, கருஞ்சீரகம், சீரகம், பெருங்காயம் இவைகளை வகைக்கு 1-பலம் வீதம் சூரணித்து அதில் போட்டு கிருதபக்குவமாகச் சமைத்து கொடுத்தால் க்ஷயங்கள், வீக்கம் மூலம் கிருணி இவைகள் நிவர்த்தியாகும்.

பராசர கிருதம்:—அதிமதுரம், சிற்றாமுட்டி, சிற்றில்கொடி, பஞ்சமூலம் இவைகள் வகைக்கு பலம் 10 வீதம் 2 படி நீர்விட்டு எட்டொன்றாய் குடிநீரிட்டு, அதில் செல்லிச்சாறு, கரும்புரசம், நிலப்பணங்கிழங்கு ரசம், நெய், பால், வெண்ணெய், இவைகள் தனித்தனி கியாழத்திற்கு சமமாகச் சேர்த்து நிராக்ஷா தாளிசப் பத்திரி கடுக்காய் இவைகளை வகைக்கு 1 பலம் வீதம் சூரணித்துச் சேர்த்து கிருதப்பக்குவமாக சமைத்து இதை நஸ்யம், பானம், வஸ்திகர்மம், இவைகள் செய்தால் ராஜயக்ஷுமம், பாண்டு ரோகம் குல்மகம், ரத்த பித்தம் இவைகள் நீங்கும். லேபனம் செய்வதால் கஷ்ட விஷங்கள் எரியும் படியான விரணங்கள் இவை நிவர்த்தி யாகும்.

ஜாலாத்திய கிருதம்:—1024-தோலா ஜலத்தில் நிப்பிலி, சிகப்பு சந்தனம் ஒதியன்பட்டை குறுவேர், வெட்டிவேர், பற்பாடகம் சக்கு நிலவேம்பு, அதிமதுரம், கொத்துபுங்கன், நீலோத்பலம் கோரைகிழங்கு, வெட்பாலை, சுக்கு, கடுகுரோகணி, தாராக்கொடி, தால்சிற்றி ஆடாதோடைவேர், இவைகளை தனித்தனி 2-தோலா இடித்துப்போட்டு ஜலத்தில் 4-ல் ஒன்றாகக் கியாழமிட்டு அந்த கியாழத்திற்கு சமமாக ஆட்டுப்பால், 16 பலம் நெய் சேர்த்து கிருதபக்குவமாக காய்ச்சி கொடுத்தால் க்ஷயங்கள் நிரிதோஷ ஜ்வித ரக்தபித்தம், சுவாசகாசங்கள், க்ஷதக்ஷயங்கள், தாகம், சோகம், இவைகளை நாசஞ் செய்யும்.

க்ஷயங்களுக்கு பிப்பல்யாசவம்:—நிப்பிலி, மிளகு, செவ்வியம், மஞ்சள், சித்திரமூலம், கோரைக்கிழங்கு வாய்விளங்கம், கொட்டம், சிற்றாமுட்டி, நெறிஞ்சல், வெள்ளைச்சாரணைவேர், முசுமுசுக்கை, மடப்பாக்கு, லோத்திரம், சுக்கு, செல்லிதோல், முசுமுசுக்கை, வெட்டிவேர், சந்தனம், கோஷ்டம், இலவங்கம், ஜடாமாஞ்சி, இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி, கொண்கணவேர், சிறுநாகப்பூ, இவைகள் தனித்தனி அரைபலம் எடைவிதஞ் சேர்த்து மிருதுவாகச் சூரணித்து 512 பலம் சலத்தில்போட்டு அதில் 300 பலம் வெல்லம்போட்டு காட்டாத்திப்பூ 10 பலம், நிராக்ஷா 60 பலம் சேர்த்து மண்பாண்டத்தில் வைத்து அந்த பாகை வாயைமூடி ஒரு மாதமாகிலும் அல்லது ஒரு பக்ஷமாகிலும் வைத்து பிறகு தேகபலத்தைக் கண்டு அருந்திவர க்ஷயங்கள், குன்மோதரம், காசம், பாண்டு. மூலவியாதி, இவைகளை சிக்கிரமாய் நாசஞ்செய்யும்.

திராக்ஷா சவம்:—நிராக்ஷா 50 பலம், 512 பலம் சலத்தில் போட்டு, நாலிலொன்றாய் கியாழம்வைத்து சண்டக்காய்ச்சி வடிகட்டி அதில் 200 பலம் பழயவெல்லம், 20 பலம், காட்டாத்திப்பூ, சூரணம்போட்டு, செப்பில் ஊரிய பழய மண்பாண்டத்தில் வைத்து அதில் வாய் விளங்கம், புங்கன், நிப்பிலி, இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, மிளகு, இவைகள் தனித்தனி ஒருபலம் சூரணம்போட்டு ஒருநாள் சூரியபுடம்மிட்டு பிறகுதேக பலத்தை அறிந்து கொடுத்தால், காசசுவாசங்கள், களரோகங்கள், ராஜயக்ஷுமம், உரக்ஷதம், இவைகளை நாசமாக்கும்.

க்ஷயங்களுக்கு சூரியபிரபாவ மாத்திரைகள்:— மரமஞ்சள், சுக்கு, நிப்பிலி, மிளகு, வாய்விளங்கம், சித்திரமூலம், வசம்பு, மஞ்சள், மருதோன்றி, புங்கன், சிற்றில்கொடி, தேவதாரு, அதிவிடயம், வெண்விதை, கடுகுரோகணி, கொத்தமல்லி, ஓமம், யவக்ஷாரம், வெண்காரம், இந்துப்பு, பிடாலவணம், காசலவணம், ஆனைநிப்பிலி, செவ்

வியம், தாளிசப்பத்திரி, திப்பிலிமூலம், ஜடாமாஞ்சி, நிலவேம்பு, கண்டுபாரங்கி, தாமரைதண்டு, சேகம், சாதிக்காய், வெட்பாலை பட்டை இவைகள் தனித்தனி ஒரு தோலா, திரிபலை 20-தோலா, சிலாஜித்து 20-தோலா, குங்கிலியம் 8-தோலா, உலோகச் சேந்தூரம் 28-தோலா, சுவர்ணமாக்ஷிகம் 8-தோலா, சர்க்கரை 20-தோலா, இலவங்கப்பட்டை, மூங்கிலுப்பு, இலவங்கப்பத்திரி, ஏலக்காய் இவைகள் தனித்தனி 4-பலம் இவைகளை சன்னமாக சூரணித்து, அதில் தேன், நெய் கலந்த லேகியபாகம் செய்து அதில் தோலா எடை உருண்டைகள் செய்யவும். இதை புட்கொண்டால் சூலியங்கள், காசங்கள், உரசுதரோகம், சுவாசரோகம், பாண்டுரோகம், காமாலை, குன்மரோகம், கட்டிகள், சூலைகள், உதிரரோகங்கள், பெண்களின் சூலியரோகங்கள், கிருமிரோகங்கள், குட்டரோகங்கள், மூலங்கள், விஷகரங்கள், கிராணிகள், மூத்திரபந்தம் இவைகளைப் போக்கும்.

லகுசிவ மாத்திரைகள்:—சுத்திசெய்த சிலாஜித்து 8-பலம், வெட்பாலைபட்டை, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், வேப்பன்பட்டை, பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, சுக்கு இவைகளின் கியாழத்தில் சிலாஜித்தை 10-நாள் அரைத்து அதில் கற்கண்டு பலம் 8, திப்பிலி, நெல்லிதோல், மூங்கிலுப்பு, கர்கடகசிங்கி இவைகள்தனித்தனி 1-பலம், கண்டங்கத்திரிசமூலம 1-பலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய் இவைகள் தனித்தனி 3-பலம் இவைகளை சேர்த்து சூரணித்து தேன் கலந்து நெடுக்காபளவு மாத்திரைகள் செய்து அதில் 1-மாத்திரை கொடுத்து பிறகு பால் அருந்தவும். இதனால் சூலியம், பாண்டு, குட்டம், பிளீஹம், தமாகம், மூலம், பகந்தரம், மூத்திரகிருச்சிரம் இவைகள் நீங்கும்.

திராக்ஷாதி சூரணம்,—திராக்ஷை, வெள்ளை அல்லிக்கிழங்கு, அமுதரம், பேரீச்சம்பழம், மூங்கிலுப்பு, நெல்லிவற்றல், கோரைக்கிழங்கு, சகதேவி, திப்பிலி, ஏலக்காய், இலவங்கம், சிறுநாகப்பூ, இலவங்கப்பத்திரி, வாய்விளங்கம், கொத்தமல்லி, நெரிஞ்சல்காய்கள், சுக்கு, அதிவிடயம், கர்ப்பூரம், தாளிசபத்திரி இவைகள் சமஎடையாக யெடுத்து சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து இதற்கு சமமாக சர்க்கரை கலந்து காய்ச்சியநெய்யில் கொடுத்தால் சூலிய ரோகங்கள் நீங்கும்.

ஏலாதி சூரணம்:—ஏலக்காய், இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, இலவங்கம இவைகள் தனித்தனி 1-பாகம், கர்ச்சூரக்காய் 2-பாகம், திராக்ஷை, அமுதரம், திப்பிலிஇவைகள் தனித்தனி 4-பாகம். இவைகள் யாவையும் சூரணித்து 4-பாகம் சர்க்கரை சேர்த்து தேனுடன் கலந்து அருந்திவர சகலவித சூலியரோகங்களும் நீங்கும்.

அசுவகந்தி சூரணம்:—அமுக்கிராகிழங்கு 10-பலம், சுக்கு 5-பலம், திப்பிலி 2½-பலம், மிளகு 1½-பலம், ஏலக்காய், இலவங்கம், இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, கண்டுபாரங்கி, தாளிசப்பத்திரி, இச்சிலிக்கிழங்கு, சாதிக்காய், ஜடாமாஞ்சி, கோரைக்கிழங்கு சிற்றரத்தை, கடுகுரோகணி, கோஷ்டம் இவைகளை ½-பலம் சூரணித்து சேர்த்த சூரணங்கள் யாவைக்கும் சமமாக சர்க்கரை கலந்து காலையில் வெந்நீரில் சாப்பிடவேண்டியது. வாதபித்தசூலியங்களில் ஆட்டுநெய் அல்லது பசும்நெய்யில் சாப்பிடவேண்டியது. சிலேஷ்மம் சூலியத்தில் தேனுடன் சாப்பிடவேண்டியது. மேக ரோகத்தில் வெண்ணெய்யுடன் சாப்பிட வேண்டியது. மற்றும் இது மேதோரோகம், அக்னிமந்தம், சூலை, உதரரோகங்கள் இவைகளையும் நசிக்கும்.

கர்ப்பூராதி சூரணம்:—பச்சைகர்ப்பூரம், தால்சின்னி, சாதிக்காய், சாதிபத்திரி இவைகள் தனித்தனி ஒருபாகம் லவங்கம் 1-பாகம் ஜடாமாஞ்சி, 2-பாகம் மிளகு 3-பாகம், திப்பிலி 4-பாகம், சுக்கு 5-பாகம் இவைகளை யொன்றுசேர்த்து சூரணித்த சூரணத்திற்கு சமமாக சர்க்கரைகலந்து கொடுத்தால் தாகம, சூலியங்கள், காசங்கள், பீநசம், வாந்தி, கண்டரோகம் முதலியவைகளும், மற்றும் அனுபான பேதங்களால் கொடுத்தால் சகல ரோகங்களும் நிவர்த்தியாகும்.

திரிகடுகு சூரணம்:—சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், ஏலக்காய், ஜாதிக்காய், இலவங்கம் இவைகள் சமஎடையாக சூரணித்து, அந்த சூரணத்திற்கு சமமாக ஸஂஞ்சு பஸ்பத்தைகலந்து தேனுடன் கொடுத்தால் காசங்கள், சுவாசங்கள், சூலியங்கள், மேகங்கள், பாண்டு, சுரங்கள், மந்தாக்கினி, வீக்கம், சிருணி, இவைகள் யாவையும் நாசம் செய்யும்.

ராஸ்நாதி சூரணம்:—சிற்றரத்தை, பச்சைகர்ப்பூரம், தாளிசப்பத்திரி, மஞ்சிஷ்டி, சிலாஜித்து, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெற்றிவற்றல், கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், சித்திரமூலம் இவைகள் சமஎடையாக சூரணித்து வஸ்திரகாயம்செய்த சூரணத்திற்கு சமமாக லோகபஸ்பம கலந்து தேன், நெய் இவைகளுடன் கொடுத்தால் இருமல், சுரம், உப்பிசம், ராஜயக்ஷ்மம், தோஷங்கள் இவைகளை நாசமாக்கும். பலம் காந்தி அக்னி தீபனம் இவைகளை யுண்டாக்கும்.

ஜாதீப்லாதி சூரணம்:—ஜாதிக்காய், வாய்விளங்கம், சித்திரமூலம, வங்கபஸ்பம, எள்ளு, தாளிசப்பத்திரி, சந்தனத்தூள், சுக்கு, இலவங்கம், ஏலரிசி, பச்சை கர்ப்பூரம், கடுக்காய், நெல்லிதோல், மிளகு, திப்பிலி, மூங்கிலுப்பு இவைகள் வகைக்கு கால் பலம் ஏலக்காய், இலவங்கம, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ இவைகளை நிலுசுக்கு 1-பலம். இவைகள் யாவையும் சேர்த்து சூரணித்து சூரணத்திற்கு சமஎடை சர்க்கரைகலந்து விராகனெடை பிரமாணம் கெர்டுத்தால் சூலியங்கள், இருமல், உப்பிசம், கிரகணி அருசி, பீனிசம்,

அக்கினிமந்தம் இலவகமே இடியானது பெரிமரங்களை ராசஞ்செய்வதப்போல் இந்த நிவ்விய ஔடதம் ராசஞ்செய்யும்.

லாக்ஷாதி தைலம்:—அரக்கு 17 பலம் இடித்து 40 சேர் சலத்தில் போட்டு காலிலொன்முகக் காய்ச்சிய கியாழத்துடன் தயிர் தேட்டை 16 சேர், எண்ணெய் 4 சேர் கூட்டி காட்டுமிளகு, கோஷ்டம், மஞ்சள், தேவதாரு, அழக்கிருகிழங்கு, கோரைக் கிழங்கு, சந்தனத்தூள், சிற்றரத்தை கடுகுரோகணி பெருங் குரும்பை, முள்ளங்கிவேர், தண்ணீர்விட்டான்கிழங்கு, பேரா முட்டிவேர், அதிமதரம், இலவகமே இடித்து வல்திராகபஞ்செய்த 1 சேர், சூரணம் சேர்த்து அடுப்பிலேற்றி தைலபக்குவமாக காய்ச்சி அப்பியங்கனம் செய்துவந்தால் சூலரோகங்களில் நல்ல பலனைத் தரும்.

நில தைலம்:—512 தோலபால், 128 தோலா எள்ளெண்ணெய், 4 தோலா அதிமதரம் இலவகமே சேர்த்து தயிலபக்குவமாக காய்ச்ச நிலதைல மென்றபெயர். இதை குடித்தாலும் நசியஞ் செய்தாலும் தலைக்கு இட்டுக்கொண்டு குளித்தாலும ராஜயக்ஷ்மா பாண்டுரோகம், ஊர்த்துவஜ ரோகங்கள் உன்மாதரோகம், ரக்தபித்தரோகம், விசர்ப்பி இலவகமேப்போக்கும்.

சந்தனாதி தைலம்:—ரக்த சந்தனம், குறுவேர், கமெண்கிற கந்திரவியம், சந்தன சூரணம் அதிமதரம், விளாத்து, தாமரை தண்டுகள், மஞ்சிஷ்ட்டி சால தேவதாரு, வெட்டிவேர், சவ்வரத, மஞ்சள், கன்னிரிவேர், கடுகுரோகணி, இலவங்கம், அகரு, குங்குமப்பூ. தால்சினி, காட்டுமிளகு, அவுரிவேர், வகைக்குப் பலம் 1. இலவகமே இடித்து சூரணித்து 4 படி எள்ளெண்ணெய், 16 படி தயிர் தேட்டை, சேர்த்து தயிலபக்குவமாய் காய்ச்சி ஸ்நானம் செய்து வரவும். இதனல் கிரகபீடை, அபஸ்மாரம், சலங்கள், உன்மாதங்கள், சூலயங்கள், ரக்தபித்தம் இவைகள் நீங்கும். பலம், ஆயுள் விருத்தி, தேகபுஷ்டி, இலவகமே யுண்டாக்கும்.

ரசதாதுவிருத்தி சிகிச்சை:—சிந்தில்கொடி, இஞ்சி, கவதானியம், இவைகமே கியாழமலவத்து சாப்பிட்டாலும். அல்லது பசும் பாலைக் காய்ச்சி அதில் மிளகு சூரணம் போட்டு இரவில் சாப்பிட்டாலும் சிக்கிரம் சூலரோகம் கிவர்த்தியாவதன்றி இரசதாதுவும் விருத்தியாகும்.

சூல நிவாரண மாத்திரை:—சுத்த முறிச்சான் கல் தோலா ¾ காருபா தோலா 1, முத்துசிப்பி தோலா ¾, சற்பவளம் தோலா ¾, மூங்கிலுப்பு தோலா 1½, அசல் சிந்தில் சர்க்கரை தோலா 1½, இவைகமைக் கல்வத்திலிட்டு 10 பலம் அப்பட்டமான பன்னீரைச் சிறிது சிறிதாக விட்டு சுன்கு அரைத்து மெழுகு பதத்தில் கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்துக.

வேண்டும்போது வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் இரு வேளையாகப் பொடித்து காய்ச்சிய பசுவின் பாலில்போட்டு அருந்திவர சூல நோயில் காணும் சுரம், இருமல் முதலியன குணமாகும்.

சிலாசத்து மாத்திரை:—கற்பூர சிலாசத்தை சிறு துண்டுகளாக உடைத்து கோவையிலைச் சாற்றில் ஊறவைக்கவும். இப்படி மூன்று நாள் தினந்தோறும் புதிய சாற்றில் ஊறவைத்து, பிறகு கோவை யிலையை அரைத்து விளாங்காய் பிரமாணம் கற்கஞ்செய்து, அதில் சிலாசத்து துண்டுகளைப் பிசரி நிலையில் சுற்றி, அதன்மீது மண்சிலை செய்து 50 விரட்டியில் புடமிடவும். ஆறினபின் சிலையை உடைத்துப் பார்க்க சிலாசத்து துண்டுகள் வெளுத்து நீறியிருக்கும். இதைக் கல்வத்திலிட்டுப் பொடித்து, இதன் எடைக்குச் சமன் திரிகடுகுச் சூரணம் சேர்த்து கோவையிலைச் சாறுவிட்டு 2 ஜாமம் அரைத்து பட்டாணி அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி பத்திரப் படுத்துக.

இதில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் 2 வேளை பொடித்து சிறிது பாலிலிட்டு அருந்திவர உடல் வெட்டை, சூலயத்தில் காணும் காங்கை, பித்தசூரம், முதலியன குணமாகும்.

தாளக சிப்பி பற்பம்:—சுத்திசெய்த தாளகம் பலம் 1, சுத்தி செய்த முத்துச் சிப்பி பலம் 1, சுத்திசெய்த கோழிமுட்டை ஓடு பலம் 1. இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டு குப்பைமேனி இலைச்சாறு விட்டு 4 ஜாமம் நன்கு அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலடக்கிச் சீலைமண் செய்து 30 விரட்டியில் புடமிட பற்பமாகும். சரிவர பற்பமாகாவிடில் மீண்டும் குப்பைமேனிச்சாறு விட்டரைத்து இரண்டொரு புடமிட நல்ல பற்பமாகும் அரைத்து பத்திரப் படுத்துக.

இதில் வேளைக்கு ½ முதல் 1 குன்றி எடை தினம் இருவேளை தனியாகவாவது அல்லது பவளபற்பம் கூட்டியாவது நெய்யாக வெண்ணெய், பால் முதலிய அனுபானங்களில் கொடுத்துவர இருமல், சுரம், காசம், சூலயம் முதலியவைகள் குணமாகும்.

சுவர்ண அயச்செந்தூரம்:—சுத்திசெய்த அயத்தூள் பலம்-5, தங்க சருன்ரேக் வராகனெடை-1, சுத்திசெய்த சங்குபாஷாணம் வராகனெடை-6, சுத்தி வராகனெடை-½, சுத்திசெய்த வாலரசம் வராகனெடை-10 இவைகளை முறைப் செய்த செல்லிக்காய் கெந்தகம் வராகனெடை-10 இவைகளை படி பொடித்துக் கல்வத்திலிட்டு பழச்சாறுவிட்டு எழுநாள் அரைத்து மெழுகுபதத்தில் பட்டாணியளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி குப்பியில் போட்டு சீலைமண்செய்து வாலுகா யந்திரத்தில் வைத்து 4-ஜாமம் எரித்தெடுக்க செந்தூரமாகும். அரைத்து பத்திரப் படுத்துக. இதில் வேளைக்கு ½-1 குன்றி பிரமாணம் தினம் 2-வேளை வீதம் தேன் அல்லது அஸ்வகந்தாதி லேகியம், சாலாமிசிரி லேகியம்

முதலியவற்றுடன் ½ அல்லது 1 மண்டலம் அருந்த பாண்டு, சோபை சூலியம், மதுமேகம் முதலிய நோய்கள் குணமாவதுடன், ரத்தவிருத்தி, நாதவிருத்தி, நரம்பு பலம் முதலியன ஏற்படும்.

வெள்ளி பற்பம்:—சுத்திசெய்த ரசம் பலம்-1, சுத்திசெய்த வெள்வங்கம் பலம்-1 இவையிரண்டையுஞ் சேர்த்தரை. இத்துடன் 2-பலம் குஞ்சுபொரித்த கோழிமுட்டை யோட்டைக் கூட்டிக் கல்வத்திலிட்டு * படிகாரத் நிராவகம்விட்டு 4-ஜாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி மூசையிலிட்டு ஊதியாகிலும் அல்லது அகலிலடக்கி பெரும்புடமாகிலும் போட்டெடுக்க வெண்ணமாகும். இச்சுன்னத்திற்குச் சமனடை சுத்திசெய்த வெள்ளிச் சரிகையைச் சிறு துண்டுகளாகக் கத்தரித்துப் போட்டுக் கலந்து கல்வத்திலிட்டு படிகாரத் நிராவகம் விட்டு 4-ஜாமம் கன்று அரைத்து வில்லைசெய்து உலர்த்தி அகலிலடக்கிச் சீலைமண்செய்து உலர்ந்தபின் 50-60 வரட்டியில் புடமிடவும். இப்படி படிகார நிராவகம்விட்டு அரைத்து அரைத்து 3-புடமிட வல்ல பற்பமாகும். இதில் வேளைக்கு ½-குன்றி எடை தினம் 2-வேளை நெய்யிலாவது அல்லது சாலாமிசிரி வேலைத் தடனாவது ஒரு மண்டலம் சாப்பிட சுகதேஷ்டம், இந்திரியம் தீர்த்திப்போதல், கைகால் அசதி, பலவீனம், எலும்புருக்கி, சூலியம், பெரும்பாடு, வெள்ளை, வெட்டை முதலியன தீர்ந்து வல்ல பலம் ஏற்படும்.

சூலியகுலாந்தக பற்பம்:—சுத்திசெய்த பொடியாகக் கத்தரித்த தங்கசருள்ளைக் வராகனெடை-1½, சுத்திசெய்த பூரம் தோலை-½, கெட்டிமுத்து வராகனெடை-1, பவளம் வராகனெடை-1, அப்பிரகச் சென்தூரம் வராகனெடை-1½ இவையை வரிசைக்கிரமமாக ஒன்றன் பின் ஒன்றுகச் சேர்த்து கன்று அரைத்து பின்பு நெந்திரமூல இலைச் சாறுவிட்டு 4-ஜாமம் அரைத்து வில்லைசெய்து உலர்த்தி அகலிலடக்கி சீலைமண்செய்து 40-வரட்டியில் புடமிட பற்பமாகும். இதில் வேளைக்கு 1-2 அரிசிப் பிரமாணம் தினம் 2-வேளை தேன், நெய் அல்லது தக்க அனுபானங்களில் கொடுத்துவர எலும்புருக்கி, சூலியம், மதுமேகம், காசம், சூலியத்தில் காணும் சுரம் முதலியவைகள் குணமாகும்.

பாண்டுரோக சிகிச்சை

பாண்டுரோகத்தைத் புணர்ணவாதி கியாழம்:—வெள்ளைச்சாரணவேர், வேப்பன் சர்க்கு, பேய்புடல், சுக்கு, கடுகுரோகணி, சிற்றிலைகொடி, மரமஞ்சள், கடுக்காய் இவைகள் சமனடையாகக் கியாழமிட்டுக் கொடுத்தால் சர்வாங்கசோபைகள், உதிரரோகம், காசரோகம், சூலைரோகம், சுவாசரோகம், பாண்டுரோகம் இவை

* படிகாரத் நிராவகம் என்பது தேவையான அளவு படிகாரத்தை நீர் கருவிலிட்டு முறைப்படி நிராவகம் வார்க்கப்பெற்றதாகும்.

கலை நிவர்த்திச்செய்யும். அல்லது பழயசிட்டம், புளிஇலை இவைகளை கியாழம்வைத்து கொடுத்தாலும் பாண்டு, விக்கம், காமாலை இவைகள் நிவர்த்தியாகும்.

சாரணவேர், வெள்ளை உப்பிலாங்கொடிஇலை, நெந்திரமூலம், சுக்கு, கடுக்காய், கள்ளிவேர் இவைகளை சமனடை கோமூத்திரத்தில் போட்டு கியாழமிட்டு கொடுத்தால் விக்கத்துடன் கலந்த பாண்டு ரோகம் நிவர்த்தியாகும்.

அரசம்பட்டை, சுக்கு, பழயசிட்டம், வெள்ளை சாரணவேர் இவைகள் சமனடை ஆட்டுமூத்திரத்தில் கியாழம் காய்ச்சி கொடுத்தால் விக்கத்துடன் கலந்த பாண்டு நிவர்த்தியாகும்.

சுப பாண்டுரோகத்திற்கு தசமூலாதி கியாழம்:—தசமூலங்கள், சுக்கு இவைகளை கியாழம்வைத்து குடித்தால் சுப பாண்டுரோகம், சுக்கு இவைகளை கியாழம்வைத்து குடித்தால் சுப பாண்டுரோகம், சுக்கு சங்கள், அதிசாரங்கள், விக்கம், நிரமணி, இருமல், அருசி, கண்ட ரோகம், இருதயரோகம் இவைகளைப் போக்கும்.

நிரிபலாதி கியாழம்:—நிரிபலி, சிற்றில்கொடி, ஆடாதோடை, கடுகுரோகணி, நிலவேம்பு, வேப்பன் சர்க்கு இவைகள் சம எடை கஷாயமாகக் கியாழம் வைத்து தேன் கலந்து குடித்தால் காமாலையுடன் கூடிய பாண்டுரோகம் நிவர்த்தியாகும்.

வாசாதி கியாழம்:—ஆடாதோடை, சிற்றில்கொடி, வேப்பன் சர்க்கு, நிலவேம்பு, கடுகுரோகணி, இவைகளை கியாழம்வைத்து சாப்பிட்டால் காமாலை பாண்டுரோகம் ரத்தபித்தம், சுபரோகங்கள் முதலியது நிவர்த்தியாகும்.

பாண்டுமதேப சிம்மசூதம்:—பாதரசம், கெந்தி, நிரிபலி, தாம் பிரபஸ்பம், சங்குபஸ்பம், சாதி, வங்கபஸ்பம், அப்பிரகபஸ்பம், காந்த செந்தூரம், லஹரச் செந்தூரம், அயச் செந்தூரம், லிங்கம், வெங்காரம், இவைகள் சமனடை. இவைகளின் மொத்த எடையில் 3 பாகம் அதிகமாக மண்டூர செந்தூரம் சேர்த்து நிரிபலி காசனங் கண்ணி இஞ்சி இவைகளின் இரசத்தால் தனித்தனியாக அரைத்து வெய்யலில் உலர்த்தி பிறகு நிரிபலி சிற்றில்கொடி, முள்ளுசாமந்தி இவைகளின் சாற்றில் அரைத்து பிறகு வெள்ளைச்சாரணை சாற்றில் கட்டியாகும்படிக்கு அரைத்து குன்றிஎடை மாத்திரை செய்து அனுபானங்களின் விசேஷங்களால் கொடுத்தால் பாண்டு, சுரம், தாகம், இரத்த பித்தம், சூலம், சூலியங்கள், காசங்கள், சுவாபேதங்கள், அக்கினிமாந்தம், மூர்ச்சை, வாதங்கள் பித்தவியாதி இவைகளை சாசப்படுத்தும்.

நிரிலோக்கிய சுந்தர ரசம்:—ரசம், கெந்தி, லோகபஸ்பம், அப்பிரகபஸ்பம், சிற்றில் சர்க்கரை, நிலப்பனங்கிழங்கு, நிரிபலி, முருங்கைவேர்பட்டை இவைகள் சமனடை கல்வத்திலிட்டு காசனங்

கண்ணி சாற்றினால் நான்கு சாமம் அரைத்து குன்றிஎடை வீதம் தினம் இருவேளை சர்க்கரை நெய் தேன் இந்த அனுபானத்துடன் சாப்பிட்டால் பாண்டுரோகம் நிவர்த்தியாகும்.

திரிமூர்த்தி சித்த ரசம்:—இரசம், கெந்தி, தாம்பிரபஸ்பம், சேர்வாளம், இவைகளை சமனடைசேர்த்து இரண்டு சாமங்கள் அரைத்து கோமூத்திரத்தில் கொடுத்தால் சகல வாயுகள் வீக்கங்கள் பாண்டு ரோகம் ஜலோதரம் இவைகளை நாசஞ்செய்யும்.

திரிலோக ரசம்:—சுத்திசெய்த ரசம் 4 பலம், கெந்தி 5 பலம், சந்தல் சர்க்கரை, சுக்கு, மிளகு, திப்பிலி, நிலப்பனங்கிழங்கு, இலவம்பிசின், இவைகள் தனித்தனி 3 பலம், அப்பிரகபஸ்பம் 6 பலம், லோகபஸ்பம், 8 பலம், இவைகள் யாவையும் கிரிபலை கியாழத்தால் அரைத்த 64 ஜாமம் இஞ்சி சாற்றிலும் 32 ஜாமம் முருக்கன்பட்டை ரசத்தாலும் 16 ஜாமம் சித்திரமூல ரசத்திலும் 8 ஜாமம் கற்றாழை ரசத்தாலும் 8 ஜாமம் மறுபடியும் இஞ்சி ரசத்தாலும் அரைத்து உலர்த்தி சிமிழியில் வைத்த தேன் சர்க்கரை, நெய், இந்த அனுபானங்களினால் 2 குன்றி வீதம் கொடுத்துவர பாண்டுரோகம், சூலரோகம், சுவாசகாசம், இவைகளை நிவர்த்திச் செய்யும்.

உதயபாஸ்கர ரசம்:—சுத்திசெய்த ரசம் 1-பாகம், கெந்தி 2-பாகம், தாம்பிரபஸ்பம் 8-பாகம், லவங்கத்துபஸ்பம் 3-பாகம், தாளகபஸ்பம் 2-பாகம், சுக்கு, திப்பிலி, மிளகு, வகைக்கு 4-பாகம், காபி, இரண்டு பாகம் இவைகள் யாவையும் கல்வத்திலிட்டு கொச்சி இலை, இஞ்சி, காசனிவகண்ணி, முன்னை இலை, இவைகளின் இரசத்தால் தனித்தனி 7-நாள் அரைத்து வெய்யிலில் உலர்த்தவும். சுக்கு, திப்பிலி மிளகு இவைகளை சூரணித்து இஞ்சிரசத்தில் போட்டு இந்த அனுபானத்தில் குன்றிஎடை மருந்தைக் கூட்டிக் கொடுத்துவர பாண்டு, காமாலை, வீக்கம், அக்கினிமந்தம், திரிதோஷரோகம், மேகங்கள், பிளீகரங்கள், ஜலோதரம், சங்கிறஹணி, குஷ்டரோகம், தனுர் வாதம் இவைகள் நீங்கும். பத்தியம் 60-நாள் பயிரான தானிய அன்னம், மோர், வரகு அரிசி இவைகளை கொடுக்க வேண்டியது.

காமேஸ்வர ரசம்:—சுத்திசெய்தரசம் 1-பலம், கெந்தி 1-பலம் சித்திரமூலம் 3-பலம் கடுக்காய்தோல் 3-பலம், கோரைக்கிழங்கு, ஏலக்காய், இலவங்கப்பத்திரி இவைகள் தனித்தனி ½-பலம், சுக்கு, திப்பிலி, மிளகு வகைக்கு 1-பலம், திப்பிலிமூலம் 1-பலம், காபி 1-பலம், நிறாசப்பூ (கால்பலம்) காட்டுமிளகு ½-பலம் இவைகளை யொன்றுசேர்த்து சூரணித்து 5-பலம் பழைபவெல்லத்தை பாகு பிடித்து மேற்கூறிய சூரணத்தைப்போட்டு பிறகு இஞ்சிரசத்தினால் 1-ஜாமம் அரைத்து பசம் செய்யினால் ஒருஜாமம் அரைத்து இலந்தை

அளவுமாத்திரைகள் செய்து கொடுத்தால் சோபை, பாண்டு இவைகள் குணமாகும்.

பாண்டுவரி ரசம்:—சுத்திசெய்தரசம், சுத்திசெய்தகெந்தி, லோகபஸ்பம் இவைகளை சமனடை கல்வத்திலிட்டு கற்றுழைசாற்றினால் 3-முறை அறைத்து மூன்று புடங்கள் போட்டால் கல்ல செந்தூரமாகும். இதை 1, அல்லது 2-குன்றிபிரமாணம் கொடுத்தால் பாண்டு ரோகம், காமாலை, சோபை இவைகள் நாசமாகும்.

பாண்டுசூதன ரசம்:—சுத்திசெய்த ரசம், கெந்தி, தாம்பிரபஸ்பம், சேர்வாளம், குங்கிலியம் இவைகளைச் சமனடையாகச் சூரணித்து நெய்விட்டு கன்று அரைத்து குன்றிபிரமாணம் மாத்திரைசெய்து அதில் அனுபானத்துடன் ஒவ்வொரு மாத்திரை கொடுத்தால் வீக்கம், பாண்டு இவைகள் நாசமாகும். இதற்கு குளிர்ந்தஜலம் புளிப்பு இவைகளை நீக்கல் வேண்டும்.

வங்கேஸ்வர ரசம்:—வங்கம், ரசம் இவைகளை சமனடையாக யெடுத்து தொந்தப்பொடித்துக் கல்வத்திலிட்டு கற்றுழை ரசத்தினால் அரைத்து மாத்திரைகள்செய்து காஜிகுப்பியில் வைத்து சீலை செய்து எரித்து வெண்மையாக பஸ்பமானபிறகு எடுத்து பொடித்து ½-1 குன்றிஎடை அனுபான விசேஷமாய்க் கொடுத்தால், பாண்டு, பிரமேகம், தூர்பலம், காமாலை இவைகளை நாசமாக்கும்.

பாண்டுநிக்கிரஹ ரசம்:—அப்பிரகபஸ்பம், இரசபஸ்பம், கெந்தி, லோகபஸ்பம், நிலப்பனக்கிழங்குசூரணம் இவைகளை சமனடையாக இலவன்பட்டை இரசத்தாலும் சித்திரமூல கியாழத்தாலும் தனித்தனி ஒவ்வொருநாள் அரைத்து நிரிபலகியாழம், இஞ்சிரசம், கற்றுழைரசம், சித்திரமூலரசம், முருங்கப்பட்டைரசம் இவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருநாள் அரைத்து உலர்த்தவும். இதை 2-குன்றிஎடை நெய் அனுபானத்தினாலாவது, யவதானியம், புளியம்ஒடி இவைகளின் கியாழத்தினாலாவது சுக்கு, சித்திரமூலம் இவைகளின கியாழத்தினாலாவது கொடுத்தால், வீக்கம், பாண்டுரோகம நிவர்த்தியாகும். புதிய அரிசி போஜனம் கடினமான போஜனம் இவைகள் கூடாது. மோர்ச்சாதம் கொடுக்கவேண்டும்.

அநில ரசம்:—தாம்பிரபஸ்பம், இரசபஸ்பம், கெந்தி, வசநாபி இவைகள் சமனடை கல்வத்திலிட்டு சித்திரமூலகியாழத்தினால் அரைத்து குப்பியிலிட்டு வாலுகாயந்திரத்தில் மந்தாக்கினியால் இரண்டு காழிகை எரித்து ஆறியபிறகு எடுத்து ஒருகுன்றி எடை அனுபானத்துடன் கொடுத்தால் பாண்டு, வீக்கம இவைகள் நீங்கும்.

லோஹசுந்தர ரசம்:—இரசபற்பம் 1-பாகம், லோஹபஸ்பம் 2-பாகம், கெந்தி 3-பாகம் இவைகளை யொன்றுசேர்த்து காஜி குப்பியில் வைத்த சீலைமண்செய்து வாலுகாயந்திரத்தில் வைத்து

அந்தக் குப்பியில் இலவஞ்சாறு, நிரிபலைபியாழும், வெள்ளாவசம்பு, சிந்தில்கொடிச்சாறு இவைகளைச்சேர்த்து மந்தாக்கினியால் ஒருநாள் எரித்து ஆறியபிறகு எடுத்து நிரிகடுகுபியாழும், இஞ்சிச்சாறு இவைகளில் பாவனைசெய்து வைத்துக்கொண்டு அனுபானத்துடன் கொடுத்தால் பாண்டுரோகங்கள் நீங்கும்.

மிருத்பாண்டுரோகத்திற்கு பஞ்சசோல மண்டூரம்:—12-பலம் மண்டூரத்தை 96-பலம் கோமூத்திரத்தில் காய்ச்சி காய்ச்சி 12-முறை தோய்த்து எடுத்துவைத்து அதில் பஞ்சசோலம், தேவதாரு, கோரைக் கிழங்கு, சுக்கு, திப்பிலி, மிளகு, நிரிபலை, வாய்விளங்கம் இவைகள் வகைகளு ஒரு பலம் சூரணம்செய்து கலந்த கோமூத்திரத்தில் அரைத்து பிறகு மறுபடியும் சூரணித்து இரண்டு குன்றிஎடை வீதம் பசுமோரில் சாப்பிட்டு மோர்சாதம் சாப்பிட்டால் பாண்டு, மந்தாக்கினி, இருமல், வீக்கம், மூலரோகம், பிலீகம், ஊருஸ்தம்பவாதம், இருமிரோகம், கணரோகம் இவைகள் குணமாகும்.

மஹாமண்டூரம்:—சித்திரமூலம், வெள்ளெருப்பிலைங்கொடிவேர், வெள்ளைச்சாரிணிவேர், வெள்ளைஎருக்கன்வேர், நிரிபலை, லோஹ பிட்டம் இவைகள் தனித்தனி 10-பலம் இவைகளை 256-பலம் எடை யுள்ள கோமூத்திரத்திலிட்டு காலிலொன்றுகச் சுண்டக் காய்ச்சி அதில் கரசனுங்கண்ணிசாறு 16-பலம், பெருங்குருமபோசம் 16-பலம் மஞ்சள்தூசம், இஞ்சிசம, கோமூத்திரம் இவைகளை தனிதனி 16-பலம் சேர்த்து நிரிகடுகு, வாய்விளங்கம், நிரிபலை, சித்திரமூலம், தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், நிப்பிலிமூலம், பெருங்காயம், செவ்வியம், வசம்பு, வட்டத்திருப்பி, காணல், சீரகம் இவைகள் தனித்தனி ½-பலம் சேர்த்து சூரணித்து இதற்கு இரண்டு பங்கு மண்டூரஞ் சேர்த்த இவைகளை யாவும் மேற்கூறிய கோமூத்திரத்தில் கொட்டி சிறுதியில் எரித்த பிறகு கல்வத்திலிட்டு நன்கு அரைத்து குன்றியளவு மாத்திரைகள் செய்து வேளைக்கு 1-2 மாத்திரை காலையில் மோரில் கொடுத்தால் பாண்டுரோகம், பகந்தரம், பஞ்சகாச ரோகங்கள், முகரோகங்கள், மூலவியாதி, காமாலை, வீக்கம், உதிர ரோகம் இவைகளைப் போக்கிவிடும்.

நாராயண மண்டூரம்:—நிரிகடுகு, செவ்வியம், மோடி, பெருங் காயம், கண்டுபாரங்கி, ஆனைத்திப்பிலி, ஓமம், சுரோசாணிஓமம், கரும்வசம்பு, நிரிபலை, மஞ்சள், கடுகுரோகணி, பிரண்டை, வெள் ளைப்பூண்டு, மிளகு, வட்டத்திருப்பி, முக்காவேலை, சாதிலை, சோ வானம, பேய்ப்புடல், பெருங்குரும்பை, லிவேம்பு இவைகளை சம எடையாகச் சேர்த்து சூரணித்து இதற்கு சமஎடை சுத்திசெய்த மண்டூரத்தை சேர்த்து கரசனுங்கண்ணி, கொடிமாதளம், மஞ்சள், இஞ்சி, செருப்படை இலை, தளிர், பிஞ்சுதளிர், மா, செவ்விப்பருப்பு இவைகளின் ரசங்கள் கோமூத்திரம் இவைகளால் தனித்தனியே ஒவ்வொருநாள் அரைத்து உலர்த்தவும்.

அதில் 2-3 குன்றி எடை மோரிலாவது அல்லது வெந்நீரிலாவது கொடுத்தால் சகல பாண்டுரோகங்கள், காமாலை, வீக்கம், அருசி, அக்கினிமாந்தம், குன்மம், ஹிருத்ரோகம், மலபந்தம், சுரங்கள், சுவாசங்கள், காசங்கள், நிரிதோஷங்கள் இவைகளை நிவர்த்தி செய்யும்.

மது மண்டூரம்:—மண்டூரத்தை 64-தோலா, நிரிபலை யாழத் தில் ஒருநாமம் அரைத்து புடம்வைக்க வேண்டியது. இந்தப்பிரகாரம் 21-புடமிட்டு பிறகு கோமூத்திரம், கற்றுழைசாறு, கரிசாலைச்சாறு இவைகளில் பிரத்தியேகமாக அரைத்து 21-புடமிட வேண்டியது. இந்தப்பிரகாரம் 84-புடமிட்டால் மிகவும் சிறந்த மருந்தாகி சகலமான வியாதிகளுக்கு அனுகூலமாயிருக்கும். திப்பிலிசூரணம், தேன் இந்த அனுபானத்தில் 2-குன்றிஎடை கொடுத்தால் வெகுசாரகமாயிருக்கும் பாண்டுரோகம் நாசமாகும். தேகத்தில் ரக்தவிருத்தியை யுண்டுப் பண்ணும். அனுபான பேதங்களால் சகல ரோகங்களையும், நிவர்த் திக்கும்.

மண்டூ லவணம்:—இரும்பு சிட்டத்தை சிகப்பாக காய்ச்சி, கோமூத்திரத்தில் தோய்க்கவும். இந்தப் பிரகாரம் பலதடவை செய்து பிறகு அந்த சிட்டத்திற்கு சமஎடை இந்துப்பு சேர்த்து கோமூத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி தானிக்காய் விறகுகளினால் அடுப்பிலேற்றி தானிக்காய் விறகுகளினால் புகையாமல் எரித்தால் பிரீதலவணம் என்று பெயர். அதை மோரி லாவது அல்லது தேனிலாவது கொடுத்தால் பாண்டுரோகம் நிவர்த்தி யாகும்.

இதைவிட பாண்டுரோகத்தை நாசப்படுத்தும்படியான ஔஷ தம் வேறு யொன்று யுலகத்தில் கிடையாதென்று கூறப்படுகின் றது.

ஏராதாதி மண்டூரம்:—நிலவேம்பு, தேவதாரு, மரமஞ்சள், கோரைக்கிழங்கு, சிந்தில்கொடி, கடுகுரோகணி, பேய்ப்புடல், தூனைக்காஞ்சொரி, பற்பாடகம், வேப்பம்பட்டை சுக்கு, திப்பிலி, மிளகு, சித்திரமூலம், நிரிபலை, வாய்விளங்கம், இவைகள் சம எடை சூரணித்து இந்த சூரணத்திற்கு சமமாக மண்டூரச் செந்தூரத் தைக் கலந்து நெய், தேன், கூட்டி அரைத்து மாத்திரை செய்து அனுபான யுக்தமாக கொடுத்தால் பாண்டுரோகம், வீக்கம், பி மேகம், சிருணி, சுவாசங்கள், காசங்கள், இரத்தபித்தம், மூல வியாதி, ஊருஸ்தம்பவாதம், ஆமவாதம், விரணம், குன்மங்கள், கபம், இவைகள் நீங்கும்.

ஹம்ச மண்டூரம்:—மண்டூரத்தை மிருதுவாகச் சூரணித்து எட்டுப்பங்கு அதிகமாக கோமூத்திரம்விட்டு வேகவைத்து உலர்த்தி அத்துடன் அதில் நிப்பிலி, நிப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, தேவதாரு, கோரைக்கிழங்கு, சுக்கு, நிப்பிலி, மிளகு,

திரிபலை, வாய்விளங்கம், இலைகள் தனித்தனி 1 பலம். சூரணித்து அத்துடன் கலந்து கன்று அரைத்து 2 குன்றிஎடை மாத்திரைசெய்து மோரில் கலந்து உட்கொண்டால் பாண்டு, வீக்கம், பிலீகம், ஊருஸ்தம்பவாதம், காமாலை மூலவியாதி இவைகள் நிவர்த்தியாகும். பத்தியம் மோர்ச்சாதம் வைக்கவேண்டியது.

சித்த மண்டூரம்:—மண்டூரம் 8 பலம், பொடித்து 64 பலம், கோமூத்திரத்தில் வேகவைத்து உலர்த்தி அதில் வெள்ளோச்சாரிணை, சிவதை, சுக்கு, திப்பிலி, மிளகு, வாய்விளங்கம், தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், புஷ்கரமூலம், சித்திரமூலம், சுத்திசெய்த சேர்வாளபரு ப்பு செவ்வியம், கடுக்காய், தானிக்காய், கெல்லிவற்றல், வெட்பாலை விரை, கடுகுரோகணி, திப்பிலிமூலம், கோரைக்கிழங்கு, அதிவிட யம், இலைகள் யாவையும் ½ பலம் எடை சூரணித்து இந்த சூர ணத்தை மண்டூரபாக அதில் சேர்த்து கன்று அரைத்து 2 குன்றி எடை மாத்திரைகள்செய்து உபயோகித்தல், பாண்டு, உதிரம், வீக்கம், சூலை, கிருமி, குன்மம் முதலிய ரோகங்கள் நிவர்த்தி யாகும்.

மண்டூர வடுகங்கள்:—தேவதாரு, கோரைக்கிழங்கு, மரமஞ் சள், திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், மிளகு, சுக்கு, சுவர்ணமாக்ஷிகபஸ்பம், வாய்விளங்கம், திரிபலை வகைக்கு 1 பாகம், மண்டூரம் இரண்டு பாகம் இலைகளைச் சூரணித்து பசு, ஆடு, வெள்ளாடு, ஒட்டகம், எருமை, கழுதை, ஆனை, குதிரை, இலைகளின் மூத்திரத்தில் ஒவ்வொன்றிலும ஒவ்வொரு நாள் அரைத்து குன்றிஎடை மாத்திரைகள் செய்து வேளைக்கு 1, 2 மாத் திரை விதம பசுவின் மோரில் கொடுத்தால், காமாலை, பாண்டு ரோகம், மேகங்கள், மூலவியாதி, சோபை, குஷ்டரோகம், கப ரோகம், ஊருஸ்தம்பவாதம், அஜீரணம், பிலீஹம இலைகள் குண மாகும்.

புனர்னவாதி வடுகங்கள்;—வெள்ளோச்சாரிணை, சிவதை, சுக்கு, திப்பிலி, மிளகு, வாய்விளங்கம், தேவதாரு, சித்திரமூலம், கோஷ் டம், மரமஞ்சள், திரிபலை, செவ்வியம், வெட்பாலை, கடுகு ரோகணி, மோடி, கோரைக்கிழங்கு, கர்கடசிங்கி, கருஞ் சீரகம், ஓமம், பொரித்த பெருங்காயம் இலைகள் வகைக்கு ஒரு பலம் விதம் சூரணித்து அத்துடன் இரண்டுபங்கு மண்டூரசூரணஞ் சேர்த்து இதற்கு 8-பங்கு அதிகமாக கோமூத்திரத்தில் போட்டு தீர் சுண்ட எரித்து கல்வத்திலிட்டு கன்று அரைத்து குன்றிஎவு மாத் திரைகள் செய்து வேளைக்கு 1-2, மாத்திரை விதம் மோருடன் சாப் பிட்டால் பாண்டுரோகம், காமாலை, பிலீகம், சுவாசரோகம், காச ரோகம், க்ஷயரோகம், சுரம், வீக்கம், உதரம், சூலை, பிலீஹம், மூல வியாதி, கிராணி, கிருமி, வாதரத்தம், குஷ்டரோகம் இவைகளை சுவந்தப்படுத்தும்.

மண்டூரவஜ்ஜிர வடுகங்கள்:—திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வி யம், சித்திரமூலம, சுக்கு, மிளகு, தேவதாரு, திரிபலை, வாய்விளங் கம், கோரைக்கிழங்கு, இலைகள் 3-பலம, மண்டூரம் 6 பலம் சேர்த்து இலைகளின் எடைக்கு 8-பாகம் அதிகமாக கோமூத்திரம் வார்த்து அதை சுண்டக் காய்ச்சி 2-குன்றி எடை மாத்திரை செய்து மோரில் சாப்பிட்டு மோர் சாதம் சாப்பிடவும், பாண்டு ரோகம், மந்தாக்கினி அருசி, மூலவியாதி, கிராணி, வீக்கம், ஊருஸ்தம்ப வாதம், ஹலீமகம், கிருமிரோகம், பிலீஹம், உதரம், கனரோகங்கள் இலைகள் யாவும் நிவர்த்தியாகுமென்று அறியவேண்டியது.

பாண்டுரோகத்திற்கு சூரணம்:—சித்திரமூலம், திரிபலை, கோ ரைக்கிழங்கு, வாய்விளங்கம, திரிகடுகு இலைகளை சமஎடையாகச் சூரணித்து, இந்த சூரணத்திற்கு சமமாக மண்டூரச் செந்தூரத்தைக் கலந்து இரண்டு குன்றி எடை தேன், நெய் இலைகளுடன் கலந்து உட்கொண்டாலும் அல்லது கோமூத்திரம், மோர் இலைகளுடன் கொடுத்தாலும் பாண்டுரோகம், நிரிதோஷங்கள், பகந்தரம், வீக்கம், குஷ்டம், மூலவியாதி, மந்தாக்கினி, அருசி, கிருமி இலைகள் நீங்கும்.

ரவாயச் சூரணம்:—சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக் காய், கெல்லிவற்றல், கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், சித்திர மூலம இலைகள் சமஎடை சூரணித்து இதற்கு சமமாக லோஹ செந்தூரத்தைச் சேர்த்து இரண்டு மூன்று குன்றி எடைவீதம் தேன் நெய்யுடன் கொடுத்தால், பாண்டு, ஹிருத்ரோகம், குஷ்டம், மூலம், காமாலை இலைகளைப் போக்கும்.

கோமூத்திரத்தில் கொடுத்தால் வாதபாண்டு, வீக்கம், ஹிருத் ரோகம், உதிரம், கிருமி, குஷ்டம், பகந்தரம், அக்கினிமந்தம், தூர் காமம், அருசி, இலைகள் நீங்கும். இஞ்சிரசத்தில் கொடுத்தால் கபம் நீங்கும்.

ஒரு குன்றி எடைமுதல் 9-குன்றி எடை வரையிலும் ரோகத் தின் பலாபலத்தை அறிந்து சாப்பிடலாம்.

ஏலாதி சூரணம்:—ஏலக்காய், ஜடாமாஞ்சி, கிராம்பு, சுக்கு, திப்பிலி, கோரைக்கிழங்கு, பச்சைக்கர்ப்பூரம், கொத்தமல்லி, பேரீச் சம்பழம், இலவங்கப்பத்திரி, அதிமதுரம், வெட்டிவேர், குறுவேர், காமரைக்கிழங்கு, நிராமுத்து, சந்தனத்தூள், கோஷ்டம், நாககேச ரம், தவசுரி, கூதிக்காய், நெருஞ்சல்வேர், வெள்ளோச்சாரிணிவேர், நிலப்பனைக்கிழங்கு, கருநண்ணிவேர், அமுக்கிரங்கிழங்கு, சீந்தில் கொடி இலைகள் சமஎடையாக சூரணித்து இந்த சூரணத்திற்கு சமமாக சர்க்கரை கலந்து இதில் ஒருவராகனெடை வீதம் எடுத்து அதனுடன் 1-2, குன்றிஎடை மண்டூரச்செந்தூரம் கூட்டித் தினம் இரு வேளையாக பசும்நெய்யில் கொடுத்தால், பாண்டுரோகம், பல

ஹீனம், கூஷயங்கள், லபத்தியரோகங்கள், விக்கல், காமாலை, மூத்திர ரோகம் சோமரோகம், தாகம், உன்மாதம், இவைகள் பாவையும் நிவர்த்திக்கும்.

பாண்டுகளுக்கு திரிபலாதி லேகியம்:—கடுக்காய், தான்றிக்காய் செல்லிவற்றல், சுக்கு, திப்பிலி, மிளகு, சித்திரமூலம், வாய்விளங்கம், இவைகள் தனித்தனி 1-பாகம், சிலாசத்துபற்பம், வெள்ளிபற்பம், மண்டூரச் செந்தூரம் இவைகள் தனித்தனி 5-பாகம், சுத்தமான அயச்செந்தூரம், கர்ந்தச்செந்தூரம் இவைகள் தனித்தனி 8-பாகம் இவைகள் பாவையும் கல்வத்திலிட்டு கன்கு அரைத்து தேன்கலந்து இரும்புபாண்டத்தில் வைத்து ஆலம்பழ அளவு மாத்திரை செய்து தேகபலானுசாரமாக கொடுத்தால், பாண்டுரோகம், விஷம், காசங்கள், கூஷயரோகங்கள், விஷமசுரங்கள், குஷ்டவியாதி, ஜடரம், மேஹங்கள், சுவாசங்கள், விக்கங்கள், அருசி, அபஸ்மாரம், காமாலை, மூலவியாதி இவைகளைப் போக்கும். பத்தியம் ஜீரணமாகும் அன்னத்தை கொடுக்கவேண்டியது.

பாண்டுகளுக்குச் சின்சாதி லேகியம்:—புளிஇலை 100-பலம், இரும்புசிட்டம் 50-பலம், சித்திரமூலம் 25-பலம், இஞ்சி 12½-பலம், வெள்ளைச்சாரணைவேர் 6¼-பலம், தேவதாரு 6¼-பலம், செவ்வியம் 4-பலம், திப்பிலிமூலம் 4-பலம், தசமூலங்கள் தனித்தனி விராகனெடை இரண்டு. இவைகளை ஒன்று சேர்த்து சதைத்து ஓர் பாண்டத்திலிட்டு 512-பலம் ஜலத்தைவிட்டு அதில் காலிலொன்றாக குடிநீர் சிட்டு அதில் 100-பலம் பழய வெல்லத்தைக் கலைத்து வடிகட்டி மாதளம்பழரசம் 16-பலம், அதில் கலந்து அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து பாகுபதம் வரும்போது கொத்தமல்லி, இரண்டுவித ஜீரகங்கள், பெரியவலக்காய், திரிகடுகு, திரிசாதங்கள், வாய்விளங்கம் இவைகள் வகைக்கு ஒருபலம், சூரணித்து, அயச்செந்தூரம் 3-பலம், மண்டூரச் செந்தூரம், 2-பலம், சேர்த்துத்தூளி, லேகியமாகக் கிண்டி ஆறியபிறகு, 32-பலம் தேன்கலந்து வேளைக்கு கால்பலம் விதம் கொடுத்தால் விக்கம், பாண்டு, மேல்மூச்சு, சுவாசரோகம், காச ரோகம், கூஷயரோகம், பிசாசரோகம், பரிசகுஷ்டி, பிரமேஹங்கள், குன்மங்கள், ஹிருத்ரோகங்கள், இவைகளை நாசஞ்செய்யும்.

லகுசின்சாதி லேகியம்:—புளிஇலை 100-பலம், இரும்புதூள் 50-பலம், இவைகளை 512-பலம், ஜலத்தில்கொட்டி, எட்டிலொன்றாகச் சுண்டக்காச்சி 25-பலம், வெல்லத்தை கலக்கி வெள்ளைச்சாரணை வேர் ரசம் 16-பலம் கலந்து, அதில் 16-பலம் இஞ்சிதண்டுகள் சேர்த்து அடுப்பிலேற்றி காய்ச்சி பாகுபதத்தில் சுக்கு, திப்பிலி, மிளகு, ஜீரகம் இவைகள் சூரணம் தனித்தனி 4-பலம் வாதஹரபஸ்பம் 4-பலம் கலந்து லேகிய பதமாகக் கிண்டி 15-நாள் தானியபுடமிட்டு ½-1, தோலாவிதம் கொடுத்தால், பாண்டு, விக்கம், ஸ்ராணி, மேகம், பிலீஹம், இவைகள் நீங்கும்.

பாண்டுரோகத்திற்கு பஞ்சகோல கிருதம்:—திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, கண்டுபாரங்கி, கோஷ்டம், சித்திரமூலம் இவைகள் தனித்தனி ஒரு பலமாகச் சூரணித்து 300 புஷ்பாமூலம் இவைகள் தனித்தனி ஒரு பலமாகச் சூரணித்து 300 கதிக்காலை அதன் எடைக்கு நாலுபங்கு அதிகமான ஜலத்தில் கொட்டி காலிலொன்றாகச் சுண்டக்காய்ச்சி அதில் பால், தயிர், நெய் சமஎடையாகச் சேர்த்து முன்செய்த சூரணத்தையும் சேர்த்து மந்தாக்கினியால் கிருதபக்குவமாக காய்ச்சி முறைப்படி அருந்திவர பாண்டுரோகம், பிலீகம், கூஷயங்கள் இவையாவும் நாசமாகும்.

சகல பாண்டுகளுக்கு வியோஷாதி கிருதம்:—சுக்கு, திப்பிலி, மிளகு, வில்வவேர், மாமஞ்சள், மஞ்சள், திரிபலை, வெள்ளைச்சாரணைவேர், சிறுப்புசாரணைவேர், கோரைக்கிழங்கு, லோஹரஸ்பம், வட்டிவேர், திரிகடுகு இவைகள் தனித்தனி 1-பாகம், தேவதாரு, கண்டுபாரங்கி இவைகளை சமஎடையாகச் சூரணித்து பால் நெய் இவைகளைச் சேர்த்து கிருதபக்குவமாக காய்ச்சி கொடுத்தால் சகல பாண்டுரோகங்களை நிவர்த்திச் செய்யும்.

சந்தனாதி தைலம்:—சந்தனம், சரள தேவதாரு, மாமஞ்சள், அகிலதாரு, எலக்காய், வெட்டிவேர், கிச்சிலிக்கிழங்கு, நகம், சிலாரசம், தாமரைத்தண்டு, கோரைக்கிழங்கு, நாககேசரம், கங்கோலம், கடுக்காய்பிஞ்சி, இலவங்கப்பட்டை, ஜடாமாஞ்சி, ரோஜாமொக்கு, கடுக்காய்பிஞ்சி, இலவங்கப்பட்டை, காட்டுமிளகு, சிலாரசவேமபு, கன்னிவேர், கடுகுரோகணி, கிருஷ்ணதகரு, நாயுருவி, குறுவேர், நிராகஷ இவைகளைச் சமஎடையாகச் சூரணித்து 16-பங்கு நீர்விட்டு எட்டிலொன்றாக குடிநீர்விட்டு அதற்குச் சமன் கொண்டைவேர்ப்பட்டை நிபாழமூம, தயிர் தேட்டையும், கல்லெண்ணெயும் சேர்த்து, தைலபாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து பதமுற காய்ச்சி வடித்து வைத்துக் கொள்க. இதை தலைக்கு தேய்த்துக்கொள்ளல், நசியம் வஸ்திகர்மம், சரீரத்திற்கு லேபனஞ் செய்தல் முதலியது செய்தால் பாண்டு, சூஷரோகம், இருமல், சிரோபாதை, மந்தசுரம், அபஸ்மாரம், குஷ்டரோகம், சிங்கு இவைகளை போக்கும். தேகத்திற்கு பலம், காந்தி, புஷ்டி, தேஜஸ, புகழ், ரூபம், சவுபாக்கியம் இவைகளையுண்டாக்கும். சகலபூதவசீகரமாகும்.

புர்னவாதி தயிலம்:—வெள்ளைச்சாரணைவேர், சித்திரமூலம், சுமணக்குவேர், திரிபலை, சிறுப்புமுருங்கன்வேர், புங்கம்வேர், தவசுமணக்குவேர், முள்ளிவேர், சொச்சிவேர், குருவேர் இவைகளில் முருங்கைவேர், முள்ளிவேர், சொச்சிவேர், குருவேர் இவைகளில் சமம் தனித்தனி 100-பலம் சேர்த்து 1024-பலம சலம்விட்டு காலிலொன்றாகச் சுண்டக்காய்ச்சி அதில் பால் 64-பலம், எண்ணெய் 24-பலம போட்டு அடுப்பிலேற்றி காய்ச்சி அதில் திப்பிலி, சித்திரமூலம், ஓமம், அதிமதரம், சாரணைவேர், சதாப்புளிவேர், அமுகிரகிழங்கு, சுடசப்பாலை, கருங்காலி, வசம்பு, சுக்கு, இந்துப்பு, இரும்பு, எலக்காய், கல்தூரிமஞ்சள், இவைகளை சமஎடையாகச்

சூரணித்த எண்ணெய் எடைக்கு ஆறில் ஒரு பாகஞ் சேர்த்து தைல பக்குவமாக காய்ச்சி ஒருபகுதம் அப்பியங்கன ஸ்நானஞ்செய்தால், வாதபித்த பாண்டுரோகங்கள், சூலம்பமான சுவபரோகங்கள், சோலைகள் சூரியகிரக்கண்ட பனிப்போல் நீங்கிவிடும்.

பாண்டுரோகங்களுக்கு அமிருதவடீதி:—தண்ணீர்விட்டான் கிழங்கு, காசனிவேர்கண்ணி, வெள்ளைசாரணை, மருதோன்றி இலைகள் வகைக்கு 7-பலம் வீதம் இடித்து 112-பலம் ஜலம்விட்டு காலில் ஒரு பாகமாக கியாழமிட்டு வடிகட்டி அதில் 360 கடுக்காய்களை போட்டு 30-பலம் பால் சேர்த்து காய்ச்சி வெந்தபிறகு கடுக்காயின் விதை களை கத்தியால் காய்கள் உடையாமல்படி எடுத்துவிட்டு சுத்திசெய்த ரசம், கந்தகம் வகைக்கு பலம்-6 வீதம் எடுத்து கல்வத்திலிட்டு கண்ணு அரைத்து ஓர் அகலிலிட்டு ஒரு நிமிஷம் நெருப்பணலில் லவத்து எடுத்து அரைத்த அத்துடன் சேர்த்துச்சக்கரை 7-பலம் சேர்த்து தேன்விட்டு அரைத்து 360-மாத்திரைகளாகச் செய்து மேல்கூடிய கடுக்காய்களில் ஒவ்வொன்றில் லவத்து நூலால்கட்டி ஓர் பாண்டத் திலிட்டு மூழ்தேன்விட்டுலவத்து தினம் ஒரு கடுக்காய்வீதம் அருந்தி வர பாண்டுரோகங்கள் குணமாகும்.

சதாவரீ தைலம்:—தண்ணீர்விட்டான்கிழங்கு, சிற்றமுட்டி, பேராமுட்டி, சித்தாமல்லி, நிலகடம்பு, ஆமணக்குவேர், அழுக்கிராக்கிழங்கு, நெரிஞ்சல், வில்வம், சாணல், அழலை இவைகள் வகைக்கு 1½-பலம், இவைகளை அரைத்த சுற்றம்செய்த அரற்று சாலுபாகங்கள் அதிகமாக ஜலத்தைவிட்டு காய்ச்சி நாலில் ஒருபாகம் மீறும்படி பாகக் குடிநீரிட்டு வடிகட்டி அதில் எண்ணெய் 20-பலம், பசும் பால் 20-பலம், தண்ணீர்விட்டான்கிழங்கு ரசம் 20-பலம், ஜலம் 20-பலம்விட்டு அதில் தண்ணீர்விட்டான்கிழங்கு, தேவதாரு, ஜடாமாஞ்சி, கிரந்திதகரம், சந்தனதூள், பெரியசோம்பு, சிற்றமுட்டி, கோஷ்டம், ஏலக்காய், கல்லுப்பு, கருஅல்லி, நிலப்பனை, அதிமதுரம், இலுப்பைமரப்பட்டை, அழுக்கிராக்கிழங்கு, பூனைக்காலிக்கிழங்கு இந்த நிறுசுகள் வகைக்கு ½-பலம் பிரமாணம் அரைத்து கற்கமசெய்து அத்துடன் சேர்த்து கோமலத்தால் செய்த எருமுட்டைகளால் எரித்து தைலபக்குவமாக காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டியது. இந்த தைலத்தை புருஷர்கள் தேகத்திற்கு தேய்த்துக் கொண்டால் காமம் அதிகரித்து பிரதினமம மாதரின் புணர்ச்சியை விடார்கள். மாதர்கள் சரீரத்திற்கு லேபனஞ் செய்தால் யோனி சூலைகள் நீங்கி புத்திரபாக்கியம் பெறுவார்கள். அங்கசூலைகள் சிரோசூலைகள், காமாலை, பாண்டு, விழுபாதை, குருதிவாதம், பிலீகவாயு, சோலைஷ, மேகங்கள், தாபத்துடன்கூடிய வாதரக்தம், பித்தத்தினால் உண்டாகிய மாதரின் பெரும்பாடு நோய், பிரமேகம், ரக்தபித்தம் இவைகள் நீங்கும்.

மாஷ தைலம்:—உளுந்து 64-தோலா, 256-தோலா எடையுள்ள ஜலத்தில்போட்டு நாலிலொன்றாகக் கியாழம்வைத்து அந்த கியாழத்திற்கு சாலுபங்கு பசும்பாலும 64-தோலா எடை நல்லெண்ணெயும் சேர்த்து ஜீவநீயகணத்தில் சொல்லிய 8-சரக்குகள், அதாவது பெரியசோம்பு, இந்துப்பு, சிற்றரத்தை, அதிமதுரம, சிற்றமுட்டி, சுக்கு, மிளகு, நிப்பிலி, நெரிஞ்சல் இவைகள் வகைக்கு 1-தோலா வீதம் கற்கம்செய்து அதில்விட்டு தைலபக்குவமாகக் காய்ச்சவும். இந்த தைலத்தை உள்ளுக்கு குடித்தாலும அல்லது மேலுக்கு நடவினாலும் அல்லது வஸ்திகர்மஞ் செய்தாலும, பக்ஷகாதம், அர்தவாதம, கர்ணசூலை, செவிடு, நிமிர்ரோகம, சன்னிபாத ரோகம், கைகடுக்கல், கைகள்சுழ்ந்தல், கழுத்துவலி, இழுப்பு முதலிய கழுத்துரோகங்கள் முதலியவைகள் குணமாகும்.

சதாவரீ நராயணதைலம்:—சதாவரி, சிற்றமல்லி, நிலக்கடம்பு, கிச்சிலிக்கிழங்கு, சிற்றமுட்டி, ஆமணக்குவேர், முள்ளங்கத்திரி, கண்டங்கத்திரி, முடியார்கூந்தல், புங்கன், முள் அழலை இலைகள்

வகைக்கு 40-தோலா, 5024-தோலாஎடை ஜலத்தில்போட்டு கியாழம் நாலில் ஒருபங்கு மீறும்படிக் காய்ச்சி வடிகட்டி அதில் வெள்ளாட்டுப்பால் 1-சேர், எண்ணெய் 1-சேர் இவைகளை சேர்த்து கற்கஞ்செய்து மந்தாக்கினியால் தயிலபதமாகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டியது. இந்த தயிலத்தை வாதரோகத்தால் பீடிக்கப்படும் குதிரைகளுக்கு ஆனைகளுக்கு மனிதர்களுக்கு தடவினால் சகல வாதங்கள் நாசமாகும. மனிதர்கள் அதை உட்கொண்டால் தீர்க்காயுசு பலம் நிச்சயமாய் உண்டாகும். ஹிருதயசூலை, பாரிசசூலை, ஒற்றை தலைநோய், கண்டமாலை, வாதரக்தம், காமாலை, அம்மரீ, பாண்டு, உன்மாதம் இவைகளை நீக்கும்.

பிரசாரிணீ தைலம்:—முடியார்கூந்தல் சமூலம் 300-தோலா, தண்ணீர்விட்டான்கிழங்கு 400-தோலா, அழுக்கிராக்கிழங்கு 400-தோலா, தாழம்பூ இதழ்கள் 400-தோலா, தசமூலம் பிரத்தியேகம் 400-தோலா, ஜலம் 102400-தோலா இவைகளை 1024-தோலா கியாழத்திற்கு இரண்டு பாகம் அதிகமாக புளித்தசலம், தயிர்மீதுதேட்டை, பால், வெள்ளாட்டுப்பால் கரும்புரசம் ஆட்டுக்கரிரசம் இவைகள் பிரத்தியேகம் 1024-தோலா எள் எண்ணெய் 1024-தோலா இவைகள் யாவையும் ஒன்றாகக் கலந்து பிறகு சோளங்கொட்டை, கிரந்திதகரம், சுக்கு, சித்திரமூலம், நிப்பிலி, கிச்சிலிக்கிழங்கு, வசம்பு, முடியார்கூந்தல், மோடி, தேவதாரு, தண்ணீர்விட்டான்கிழங்கு, ஏலக்காய், இலவங்கப்பட்டை, வெட்டிவேர், குங்குமப்பூ, மஞ்சிஷ்டி, கருப்புசோளங்கொட்டை, நகமென்கிற வாசனைதிரவியம், அகரு, பச்சைகர்ப்பூரம், மஞ்சள், கிராம்பு, காமாகஸ்தூரி, சந்தனம், தக்கோலம், நாயுருவி, கோரைக்கிழங்கு, மரமஞ்சள், கோஷ்டம், கிச்சிலிக்கிழங்கு, காட்டுமிளகு, சிலாரசம், நெருஞ்சுரு, தாழம்பூ, நிரிபலி, கற்பூரகிச்சிலிக்கிழங்கு, புஷ்கரமூலம், சாலதேவதாரு, தாமரைஇதழ்கள், வெட்டிவேர், காகோளி, க்ஷீரகாகோளி, காட்டுபச்சைப்பயறு, காட்டுஉளுந்து, வெண்கோத் தண்ணீர்விட்டான்கிழங்கு, நிலப்பனை, சாரணை, தசமூலங்கள், போளம், ரக்தபோளம், நாககேசரம், ரசாஞ்சனம், கடுகுரோகணி, பின்னக்காய் இலைகள் வகைக்கு 12-தோலா விகிதம் சேர்த்து கற்கஞ்செய்து மந்தாக்கினியால் தயிலபதமாகக் காய்ச்சி

அப்பியங்கனஞ் செய்தால் சருமரோகம் நீங்கும். பானம் செய்வ தால் கோஷ்டகதவாதமும் அன்னத்துடன் கலந்து சாப்பிட்டால் சூக்ஷ்மகோஷ்டகதவாதமும், நசியம் செய்தால் ஊர்த்துவகதவாதமும் வஸ்திகர்மம் செய்தால் பக்ஷாகிரிதவாயுவும், சிரோவஸ்தியை செய் தால் சர்வாங்கவாதமும் போம். வாதம், பித்தம், கபம், துவந்தம், சன்னிபாத சம்பந்தமான வியாதிகள் சுலபமாகும்.

விஷகரீப்ப தைலம்:—கொச்சி, காசனிக்கண்ணி, ஊமத்தன் இலைகளின் ரசங்கள், கோமூத்திரம் இந்த நிறுசுகள் வகைக்கு 64-தோலா, வசம்பு, கோஷ்டம், ஊமத்தன்விரை, காயபலம் இவை கள் வகைக்கு 2-தோலா இலைகள் யாவையும் கற்கம்செய்து கலந்த கல்கநிரவியங்களுக்கு சமம வசாபியும் எள் எண்ணெய் 64-தோலா எடையுஞ்சேர்த்து தைலபக்குவமாகக் காய்ச்சி மேலுக்கு தேய்த்து பிடிக்கச்செய்தால் வாதவியாதி நிவர்த்தியாகும்.

இத்தைலத்தில் நாபி, ஊமத்தை முதலிய கொடிய நஞ்சுச் சரக்குகள் சேர்ந்திருப்பதால் இத்தைலம் வாயில்படாதபடி கவ னிக்கவும்.

மஹாபலாதி தைலம்:—நிற்குமுட்டிவேர், தசமூலங்கள், யவ தானியம், இலந்தை, கொள்ளு, இலைகளுச் சமனெடையாகக் கொண்டு முறைப்படி யிட்டிலொன்றுக் காய்ச்சி நியாழம், பசும்பால், இலைகள் வகைக்கு 8 பாகங்கள், எண்ணெய் 1-பாகம், இந்துப்பு, அகரு குங்கிலியம், சாலதேவதாரு, தேவதாரு மஞ்சிஷ்டி, சந்தனம், கோஷ்டம், எலக்காய், இலந்தை, கரும்முருங்கன், நிரிபலி, ஜடாமாஞ்சி, கிலாசம், இலவங்கப்பத்திரி, கிராந்தகரம், நன்னரி, வசம்பு, தண்ணீர்விட்டானகிழங்கு, பன்னீர்கிழங்கு, பெரியசதாப் பிலி, சாரிணை, இலைகளை சம எடையாகக் கற்கஞ்செய்து நியா முதற்நின் எடையில் எட்டிலொன்று சேர்த்து, தயிலபதமாகக்காய்ச்சி, பொன்பாத்திரத்திலாவது, அல்லது வெள்ளி பாத்திரத்திலாவது, அல் லது மண் பாத்திரத்திலாவது வைத்து உபயோகித்தால், சகலவாத ரோகங்கள் நாசமாகும்.

சுகவைப் பெற்றவளுக்கு தேகப்பக்குவத்தை யறிந்துகொடுத் தால் பிரசவத்தினுண்டான ரோகங்கள் நீங்கும்.

மலடிக்கு கொடுத்தால் கர்ப்பிணியாவாள். புருஷனுக்கு கொடுத்தால் நஷ்ட வீரியம் விருத்தியாகும். தேகத்துவத்தை அறிந் தக் கொடுத்தால் க்ஷீணவாதம், மர்மகாதம், நண்டாகாதம், பீடை, அஸ்திபங்கம். ஆகேஷபகாதவாதங்கள் இலைகள் யாவும் நிவர்த்தி யாகும்.

சந்தனாதித் தைலம்:—சந்தனம், தாமரைத் தண்டுகள், கோஷ் டம், வெட்டிவேர், தேவதாரு, நெருசுகப்பூ, இலவங்கப்பத்திரி,

எலக்காய், இலவங்கப்பட்டை, ஜடாமாஞ்சி, கிராந்தகரம், வெட்டி வேர், ஜாதிக்காய், கழற்சிக்காய், குங்குமப்பூ, ஜாபத்திரி, நகமென் நிற வாசனைத்திரவியம், குங்கிலியம், கஸ்தூரி, ஓமம், இஞ்சிரசம், புஷ்க்கரமூலம், கோலாக்கிழங்கு, ரக்த சந்தனம், நன்னரிவேர், கிச்சிலிக்கிழங்கு, பச்சை கர்ப்பூரம், மஞ்சிஷ்டி, அரக்கு, அதிமத ரம், கடுகுரோகணி, பெரியசோம்பு, தண்ணீர்விட்டான்கிழங்கு, பெருங்குரும்பை, அமுக்கிரக்கிழங்கு, சுக்கு, தாமரைப்பூ, கிருஷ்ணகரு, காட்டுமிளகு, கிரும்பு தக்கோலம், இவைகள் வகைக்கு 2-தோலா சேர்த்து நியாழம் வைத்தது 1-பாகம், தசமூல நியாழம் 3-பாகம், பால் 6-பாகம், தவதானியம், இலந்தை, கொள்ளு, சிற்ற முட்டி, இலைகளின் நியாழம் தனித்தனி 1-பாகம், இலைகளை பாவும் ஒன்றுகச் சேர்த்து இதில் பதினாலொருபாகம் எண்ணெயை விட்டு, தைலபதமாகக் காய்ச்சி, பாண்டத்திற்கு தூபாதிவாசனை கொடுத்து அதில் தைலத்தை வார்த்து வைக்கவும். இதை முடித் தலமாகவும் பிடித்தலமாகவும் உபயோகப்படுத்திவர 80-வாதங் கள், கருப்பிணிரோகம், பாலரோகம், க்ஷீணவாதம், தாபயுக்தமான ஜீரணசுரம், சிதசுரம், விஷமசுரம், சோலை, அபஸ்மாரம், குஷ்ட ரோகம், நமைச்சல், அதிஸ்வேதம், வெள்ளைகுஷ்டம், இவைகள் நீங்கும். மலடிக்கு சந்தான முண்டாகும். இன்னும் இதனல் தேஜஸ, புஷ்டி இவைகள் உண்டாகும்.

ராஸ்னாதிக தைலம்:—தசமூலங்கள், நிற்குமுட்டி, மரமஞ் சள், அமுக்கிரக்கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, ஆமணக்கு வேர், நொச்சிவேர், முருங்கை வேர்ப்பட்டை, கரும்புவேர், அழு வனை, சித்திரமூலம், புங்கன், முள்ளங்கி, சாரிணை, நிலகாளான், எருக்கன், பேயாவரை, சிந்தில்தொடி, எட்டிக்கொட்டை, நிகப்பு ஆமணக்குவேர், ஜடாமாஞ்சி, செம்பருத்தி, தவதானியம், இலந்தை, கொள்ளு, இவைகளுக்கு சமனடை சித்தரத்தை இவைகள் யாவை க்கு சமனடை புங்கம்பட்டை இவைகளை நியாழம் காய்ச்சி எட்டில் ஒருபாகமாக இரக்கிக்கொண்டு கஷாயத்திற்கு நாலில் ஒருபாகம் எண்ணெய், இதற்கு சமனடை ஆட்டுப் பால், சேர்த்து குங்கிலியம், கிராந்தகரம், ஜடாமாஞ்சி, நிரிகடுகு, நிரிபலி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய், நாககேசரங்கள், நிச்சிலிக்கிழங்கு, வாய்விளங்கம், தேவதாரு, பெருங்காயம், சித்தரத்தை, வசம்பு, கடுகுரோகணி, சுக்கு, அதிமதுரம், சித்திரமூலம், ஞாழல், மோடி, சந்தனம், செவ்வியம், ஓமம், கிருமபு, சம்பங்கி மொக்கு, கோஷ் டம், மஞ்சிஷ்டி, பெரிய சோம்பு, வெள்ளை கடுகு, ஜாதிக்காய், வாசனைப்புல், வெட்டிவேர், இவைகள் யாவையுஞ் சூரணித்து எண்ணைக்கு ஆறிலொருபாகமாக கற்கஞ் செய்துச் சேர்த்து மந்தாக் கினியால் தைலபக்குவமாகக் காய்ச்சி வடிக்கவும். இதை பானம், நஸ்யம் சிரோவஸ்தி, முதலியவைகளாகப்பயன்படுத்த தனுர்வாதம், அர்தாயாமவாதம், குதவாதம், அவபாஹுகவாதம், ஆகேஷபகவாதம்,

பிராணயாமவாதம், விசுவாசிவாதம், அபதந்திரிவாதம், ஆடிய வாதம், தூணுன்தம்பவாதம், சிரவாதம், அபதானகவாதம், தூம் ரமவாதம், சங்கவாதம், கர்ணவாதம், ராசவாதம், அதிவாதம், ஜிம்மஸ்தம்பம், களாயகஞ்சவாதம், பங்குவாதம், சர்வாங்கவாதம், ஏகாங்கவாதம், அர்தவாதம், பாதகுறிஷவாதம், பக்ஷாகாதவாதம், ஊருஸ்தம்பவாதம், சுப்தவாதம், இவைகள் யாவையும் நீக்கும்.

பலா தைலம்:—சிற்றமுட்டி 8-பாகம், தசமூலங்கள் 8-பாகம், கொள்ளு, சுவதானியம், இலந்தை விரைபருப்பு, இவைகள் வகைக்கு 8-பாகம், மேற்கூறியவைகளை 32-பாகங்கள் ஜலத்தில்விட்டு எட்டில் ஒருபாகமாக கியாழமிட்டு, வடிகட்டிக்கொண்டு அந்த கியாழத்துடன் பால் 8-பாகம், எள் எண்ணெய் 1-பாகம், இவைகள் யாவையுஞ் சேர்த்து அதில் தண்ணீர்விட்டான் கிழங்கு, மஞ்சிஷ்டி, கோஷ்டம், தேவதாரு, அகரு, இந்துப்பு, வசம்பு, வெண்சீச் சாரணை, சடாமாஞ்சி, வெள்ளை கன்னிவேர், கரும் கன்னிவேர், இலவங்கப்பத்திரி, பெரியசோம்பு, அழுக்கிருக்கிழங்கு, எலக்காய், இவைகள் யாவும் எண்ணெய்க்கு காலில் ஒருபாகமாக கல்கஞ் செய்து அத்துடன் கலந்து தைலபக்குவமாகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டியது.

இதை உபயோகித்தால் சகல வாதரோகங்கள் நிவர்த்தியாகும். மலடிகள் இதைச் சாப்பிட்டால் புத்திரவதியாவார்கள், தாதுகூண மான புருஷன்சாப்பிட்டால் தாதுவிருத்தியுண்டாகும். மிகவும் ஆயாசத்தை யுடையவர் தடவினால் ஆயாசம் நிவாரணமாகும். பாலிந்தர் கள்சேவித்தால் பாலிந்தரோகம் நீங்கும்.

கிரீஸ்வதம்பாதி வாதத்திற்கு மாஷாதி தைலம்:—உளுந்து, பல தானியம், அகத்திவிரை, முள்ளங்கத்திரி, தூணைகாஞ்சொரி விரை, அழவுனை, நெரிஞ்சல், புனற்றண்டு இவைகள் வகைக்கு 7-பலம் இவைகளை 224-பலஞ் சலத்தில் போட்டு சதுர்தாம்சமாக கியாழம் காய்ச்சி வடிகட்டி, பருத்திவிரையிலுள்ள பருப்பு, இலந்தைவிரை பருப்பு, கொள்ளு இவைகள் வகைக்கு 14-பலங்கள் விதம் முன் போல் ஜலத்தில் கொட்டி, காலில் ஒருபாகமாக கியாழம் காய்ச்சி வடிகட்டி, ஆட்டுமாமிசம், 20-பலம், 64-பலம் ஜலத்தில்போட்டு சதுர்தாமிசமாக கியாழம் காய்ச்சி, வடிகட்டி பிறகு 20-பலம் எண்ணெய் இவைகள் யாவையும் பொன்முகச் சேர்த்த அதில் சேர்த்தில்கொடி, கோஷ்டம், சுக்கு, சிற்றரத்தை, வெண்சீச்சாரணை, ஆமணக்குவேர், நிப்பிலி, பெரிய சோம்பு, சிற்றமுட்டிவேர், முதிர்பார்கூந்தல், ஜடாமாஞ்சி, கடுகுரோகணி இவைகள் வகைக்கு ½-பலம் வீதம் கல்கஞ்செய்து அதில் கலந்து நெறநீயில் எரித்து தைல பதமாகக் காய்ச்சவும். இதை தடவினால் முழுத்தலம்ப வாதம், அப பாதவாதம், அர்தாங்க வாதம், ஆக்ஷேபக வாதம், ஊருஸ்தம்ப வாதம், அபதானக வாதம், தூஸ்தபாதாதி சாகா கம்பம், சிரோகம்

பம், விசுவாசிவாய்வு, அர்தவாதம் இவைகள் யாவும் குணமாவ தடன் சகல வாதங்களும் நாசமாகும்.

மாஷ தயிலம்:—உளுந்து 4-சேர், பாண்டத்தில் போட்டு 32-சேர் ஜலமிட்டு, காலில் ஒரு பாகமாகக் காய்ச்சி, பால்கீறை, சிறிய சதாப்பிலை, நிரிகடுகு, தும்பராஷ்டகம், அதிமதரம், இந்துப்பு, தூணை காஞ்சொரி விரை இவைகள் ½-சேர் சூரணஞ் செய்து சேர்த்து நல்லெண்ணெய் 4-சேர், பால் 16-சேர் இவைகள் யாவையும் ஒன் முகச் சேர்த்து தைல பதமாகக் காய்ச்சி சரீரத்திற்கு தடவிப் பிடிக்க அஸ்திவாதம், நடுக்குவாதம், கம்பவாதம், பாதிரிய ரோகம் இவை கள் நீங்கும்.

ஆம்லாதி வாதத்திற்கு விஷநிண்டுக தயிலம்:—எட்டிக்கொட்டை 4-சேர், கழுதீர் 32-சேர் வார்த்து காலில் ஒன்முக கண்டக்காய்ச்சி, புதிய வஸ்திரத்தினால் வடிகட்டி அதில் எலுமிச்சம்பழச் சாறு 8-சேர், எட்டிக்கொட்டை சூரணம் 4-சேர், நல்லெண்ணெய் 8-சேர் இவைகளை யாவும் ஒன்முகக் கலந்த தைல பக்குவமாகக் காய்ச்சி சரீரத்திற்கு தடவிக் கொண்டிருந்தால் சர்வாங்க வாதம், சர்விவாதம், அஸ்திவாதம், அமிலவாதம், கபவாதம், கோமான வாத சூலைகள், ஊருஸ்தம்பவாதம், தனுர்வாதம் இவைகள் நீங்கும்.

கர்ண வாதத்திற்கு தசமூலாதி தயிலம்:—வில்வம், பூனை, பாதிரி, பெருவாகை, சிற்றமல்லி, நிலதம்பை, பெரிய முள்ளங்கத்திரி, நெரிஞ்சில் இவைகள் சமனடையாகச் சேர்த்து கியாழம் போட்டு கியாழத்திற்கு சமனடை ஆட்டுப்பால் சேர்த்து இந்த இரண்டுக்கு சமம் எண்ணெய் வார்த்து, தைலபதமாகச் சமைத்து காதில்விட்டால் செவிடு, சத்தமுண்டாகுதல், இவை கள் நீங்கும்.

சகலவாதத்திற்கு அர்க்காதி தைலம்:—எருக்கன்பால், ஆட்டுப் பால், நொச்சி இலைரசம், புளிஇலைரசம், எண்ணெய் இவைகள் சம சமடையாக பாண்டத்தில்போட்டு தைல பக்குவமாகக் காய்ச்சி சரீரத்திற்கு லேபனஞ்செய்தால் 80-வாதங்கள் நீங்கும்.

ஏரண்டபுட பாகம்:—ஆமணக்கு விரையிலுள்ள பருப்பை எடுத்துக்கொண்டு அதற்கு எட்டுபாகம் அதிகமாக பாலைவார்த்து அந்தப்பால் வண்டுகிற வரையிலும் வேகவைத்து எடுத்து உலர்த்தி மாவைபோல் அரைத்து சிறிது செய்விட்டு சிறுநீயால் வதக்கி ஆறிய பிறகு அதில் நிரிகடுகு, இலவங்கம், எலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறாகப்பூ, அழுக்கிருக்கிழங்கு, ஜடாமாஞ்சி, சிற்றரத்தை, கருவசம்பு, காட்டுமினகு விதைகள், தண்ணீர் விட்டான்கிழங்கு, லோஹபஸ்பம், சாரணை, கடுக்காய், வெட்டிவேர், ஜாதிக்காய், ஜாபத்திரி, அப்பிரகபஸ்பம் இவைகளை சமனடையாகச் சேர்த்துச் சூரணித்த இவைகள் யாவும் ஒன்முகக் கலந்து

மேற்கூறிய சகல சரக்குகளுக்கும் சமனடையாக சர்க்கரையைப் பாகுபிடித்து அதில் சரக்குகளைப்போட்டு சகலமும் ஒன்றுசேரும் படியாகத் துவட்டி இறக்கவும். இம்மருந்தை காலையில் சாப்பிட்டு வந்தால் 80-விதவாதரோகங்கள், 40-விதபித்தரோகங்கள், 8-வித உதரரோகங்கள், 21-விதமேகசாட்டியங்கள் 60-விதங்களான காடி விரணங்கள், 18-விதகுஷ்டவியாதிகள், 7-விதமான க்ஷயரோகங்கள், 5-வித பாண்டுரோகங்கள், 5-வித சுவாசரோகங்கள், 4-வித சங்கிற ஹணிகள், திருஷ்டிரோகங்கள், சகலவாத ரோகங்கள், இவைகள் யாவும் நாசமாகும். இதனை சாப்பிடும்போது பத்தியமாகச் சாப்பிட வேண்டியது. இது அனுபவமானது.

ரசோனபாகம்:—வெள்ளைப்பூண்டு மேல்தோல் நீக்கினது 64-தோலா இதை மோரில் ஊறவைத்து மறுநாள் அரைத்து 246-தோலா பாலில் கரைத்து அடுப்பிலேற்றி காய்ச்சி கோவா ஆகும்படி இளக்கொண்டு அதில் 16-தோலா செய்விட்டு சிற்றாத்தை, தண்ணீர்விட்டான்கிழங்கு, ஆடாதோடை, சிந்தில்கொடி, கிச்சிலிக்கிழங்கு, சுக்கு, தேவதாரு, ஓமம், சித்திரமூலம், பெரியசோம்பு, சாதிக்காய், நிரிபலி, திப்பிலி, வாய்விளங்கம் இவைகள் வகைக்கு 1-தோலா வீதம் சூரணித்துப்போட்டு இறக்கி ஆறியபிறகு 16-தோலா தேன்கலந்து வைத்துக்கொள்ளவும். அதைச் சர்க்கரை அனுபானத்துடன் சாப்பிட்டால் ஆடியவாதம், ஹநுக்கிரஹவாதம், ஆக்ஷேபகவாதம், கடிவாதம், ஊருஸ்தம்பவாதம், ஹிருத்ரோகம், சர்வாங்கவாதம், சந்திபங்கவாதம் முதலிய வாதங்கள் யாவும் நீங்கும். சரீரகாந்தி, ஆயுவிருத்தி, தேகபுஷ்டி இவைகள் உண்டாகும்.

குபேரபாகம்:—சுமார் 50-தோலா எடையுள்ள கழற்சிக்காயை ஒருமுடா ஜலத்தில் ஒருநாள் பகலும் இரவும் ஊறவைத்த மறுநாள் காலையில் எடுத்து அதின் மேல்ஓட்டை எடுத்துவிட்டு பருப்பை அரைத்து அதற்கு சரிபங்கு அதிகமாய்ப் பாலும், நெய்யும் கலந்து அடுப்பிலேற்றிச் சிறு தீயில் எரித்து பாலெல்லாஞ் சுண்டி நறமில்லாமல் இருக்கும் பதத்தில் இறக்கி ஆறியபிறகு அதில் இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய், சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, இலவங்கம், வாய்விளங்கம், பெரிய சோம்பு, சீரகம், கோரைக்கிழங்கு, சிற்றமுட்டிவேர், மஞ்சள், மரமஞ்சள் இவைகளின் சூரணங்கள் வகைக்கு 2-தோலா, லோத்ர பல்பம், தாமபரபல்பம், வங்கபல்பம் இவைகளும் வகைக்கு 2-தோலா. இவைகள் யாவையும் ஒன்றுசேர்த்து போதிய அளவு தேன்விட்டுக் கலந்து இரசாயனம்போல் செய்து வைத்துக்கொண்டு தேகத்தின் பலாபலத்தை யறிந்து ½-முதல் 1-தோலாவீதம் கொடுத்து வர சம்பூரணவாய்வு, அக்கினிமாந்தம், பலக்ஷயம், பிரமேகம், மூத்திரகிருச்சிரம், அஸ்மரீ, குன்மம். பாண்டு, பினசம், சிரஞ்சி, அதிசாரம்,

அருசி இவைகளை நிவர்த்திக்கும். காமவிருத்தி, தாதுவிருத்தி காந்தி புஷ்டி பலம் இவைகளை உண்டாக்கும்.

லசுனபாகம்:—1024-தோலா பாலில், மேல்தோல் போக்கிய வெள்ளைப்பூண்டு 64-தோலா போட்டு வேகவைத்து அதில் 16-தோலா செய்விட்டு தேன்நிறம் ஆகிறவரையிலும் காய்ச்சி 128-தோலா சர்க்கரையையும் சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலரிசி, சிறுநாகப்பூ, மோடி, செவ்வியம், சித்திரமூலம், வாய்விளங்கம், மஞ்சள், மரமஞ்சள், சிவக்காந்தை, புஷ்கரமூலம், ஓமம், இலவங்கம், தேவதாரு, சாதிக்காய், செரிஞ்சல், வேப்பன், சிற்றாத்தை, சோம்பு, தண்ணீர்விட்டான்கிழங்கு, கிச்சிலிக்கிழங்கு, அமுக்கிரக்கிழங்கு, பேயாவாரைவிரை இவைகள் வகைக்கு 1-தோலா சூரணித்துப்போட்டு கலக்கி இரசாயணம்போலச் செய்து வைத்துக்கொண்டு தோஷின் பலாபலத்தை அறிந்து வழங்கிவர சகல வாதரோகங்கள், சூலைகள், அபஸ்மாரங்கள், உதிரதோஷம், குன்மம், உதரம், வாந்தி, பிலீகை, அண்டவிருத்தி, சிரமிகள், மலபந்தம், அரோசகவாதம், லிக்கம், அக்கினிமாந்தம், பலக்ஷயம், விக்கல், இளைப்பு, இருமல், அபதந்திரகதவாதம், தனுர்வாதம், அன்தராயாமவாதம், பக்ஷவாதம், அபதானகவாதம், அர்திதவாதம், ஆக்ஷேபகவாதம், குப்ஜவாதம், ஹநுக்கிரஹவாதம், சிரோகிரஹவாதம், விசுவாசிவாதம், சிருத்தசிவாதம், கல்லிவாதம், பங்குவாதம், சந்திவாதம், பதிரத்துவம், சகலசூலைகள், கபம் முதலிய வியாதிகளை வெகுசீக்கிரமாக நிவர்த்திக்கும். இந்தவெள்ளைப்பூண்டு லேகியமானது வாதரோகமென்கிற யானைக்கு சிங்கத்தைப்போல் இருக்கும். வலிவு புஷ்டி இவைகளையுமுண்டாக்கும்.

ஆட்யவாதத்திற்கு பிரபாவதி வடுகங்கள்:—சுத்திசெய்த இரசகற்பூரம் 1-பாகம், சுத்திசெய்த கெந்தி ½-பாகம், வாய்விளங்கம் ½-பாகம், சிறும்பு 1-பாகம், ஜாதிபத்திரி 1-பாகம், ஜாதிக்காய் ½-பாகம், ஏலக்காய் 1-பாகம், சுக்கு 1-பாகம், திப்பிலி 1-பாகம், மிளகு 1-பாகம் இந்த நிறுசுகள் யாவையுஞ் சூரணித்து கல்வத்திலிட்டு தேன்விட்டு ஒரு ஜாமம் அரைத்து உளுந்தவு மாத்திரைகள் செய்து வேளைக்கொரு மாத்திரை விதஞ் சாப்பிட்டால் ஆட்யவாதம் நீங்கும்.

பங்குவாதத்திற்கு பிரபாவதி வடுகங்கள்:—மஞ்சள், வேப்பன் இலை, திப்பிலி, மிளகு, வாய்விளங்கம், கோரைகிழங்கு, சீரகம், சுக்கு, சித்திரமூலம், இந்துப்பு, கோஷ்டம், அதிவிடயம், வட்டத்திருப்பி, கடுக்காய்த்தோல் இவைகளை யாவையுஞ் சமனடையாகச் சூரணித்து கல்வத்திலிட்டு வெள்ளாட்டு மூத்திரத்திலை நான்கு ஜாமங்கள் அரைத்து கடலையளவு மாத்திரைகள் செய்து உலர்த்தி வேளைக்கொரு மாத்திரையாக வெந்நீரில் கொடுத்துவர பங்குவாதம் குணமாகும். மற்றும் இதனை வெல்லத்துடன் கொடுக்க வாதரோய்

களும், கரிசாலைசாற்றில் கொடுக்க சிரோவாதமும், கோமூத்திரத்தில் கொடுக்க பிலீஹ நோய்களும், ஆட்டுப்பால், அமுக்கிராக்கிழங்கு சூரணத்துடன் கொடுக்க க்ஷயகாசங்களும் குணமாகும். இம்மாத்திரையை கோமூத்திரத்தில் அரைத்து மேலுக்குப்பூச வில்போடக ரணங்களும், எருக்கன்பாலில் அரைத்து மேலுக்கு கடிவாயில்பூச தேள்கடி விஷமும் நீரும்.

தசமூலத் தைலம்:—தசமூலமெனப்படும் கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிற்றாமல்லி, பேராமல்லி, நெருஞ்சில், கூவிளை, பெருங்குமிழ், தழுதாழை, பாதரி, வாகை என்னும் பத்து மூலிகைகளின் வேர்கள் வகையொன்றுக்கு பலம்-10 வீதம் நன்கு சதைத்து ஓர் பாண்டத்திலிட்டு இரண்டு தூணி ஜலமவிட்டு ஒரு மரக்கால் அளவிற்கு சண்டக் காய்ச்சி வடித்து, அத்துடன், உளுந்து கியாழம் ½-படியும், நல்லெண்ணெய் 1 மரக்காலும் சேர்த்து எட்டிலை, மிளகு, மிச்சவேர், ஏலம், கோலைக்கிழங்கு, சந்தனம், செஞ்சந்தனம், தேவதாரு, சாலதேவதாரு, கோஷ்டம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், அதிமதரம், வெட்பாலைவேர்ப்பட்டை, சதகுப்பை, சீர்முள்ளிவிதை, மஞ்சிஷ்டிவேர், மரமஞ்சள், கூகைநீறு, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், பெருங்காயம் வகைக்குப் பலம்-½ வீதம் பொடித்து பால்விட்டரைத்து சற்கமாக்கி, முன்திரவத்துடன் கலந்து அடுப்பிலேற்றிப் பதமுறதைலம் காய்ச்சி வடித்து வைத்துக்கொள்க.

இதில் வேளைக்கு ½-முதல் 1 தேக்கரண்டி வீதம் தினம் ஒரு வேளையாக உள்ளுக்கு அருந்திவருவதுடன், தலைக்கு தேய்த்தல், உடலில் பூசிப்பிடித்தல் முதலியவைகளும் செய்துவர வாதரோய்கள் யாவும் வெகு சீக்கிரத்தில் குணமாகும்.

வாதகேசரித் தைலம்:—சொச்சி, தழுதாழை, சதாக்கள்ளி இலைகளின் சாறு, வெள்ளாட்டு பால், எருக்கம்பால், எண்ணெய், ஆமணக்கு நெய் வகைக்கு படி-1 வீதம் ஓர் தைலபாண்டத்திலிட்டு அதில் கடுக்காய், காட்டுமிளகு, வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், நெல்லிக்காய் கந்தகம், கோஷ்டம், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு 3-காசெடையாய் எடுத்து பால்விட்டரைத்து கலந்து அடுப்பிலேற்றிச் சிறுதியாயெரித்து பதமுறத் தைலமாய்க் காய்ச்சி வடித்து வைத்துக்கொள்க. இதை மேலுக்கு தேய்த்துப் பிடிக்க சர்வ வாதரோகங்களும் குணமாகும்.

எருக்கம்பால் தைலம்:—எருக்கம்பால், எருக்கிலைச்சாறு, சதாக்கள்ளிசாறு, பிரண்டைச்சாறு, பற்பாடகச்சாறு, பெருகன்கிழங்குசாறு வகைக்குப் பலம்-5 இத்துடன் 10-பலம் நல்லெண்ணெயைச் சேர்த்து அடுப்பிலேற்றிப் பதமுறக் காய்ச்சி வடித்து வைத்துக்கொள்க. இதைச் சிறு அளவில் சோரை மேலுக்குத் தேய்த்துவர மகாவாதரோகக் கூட்டங்கள் நீங்கும். இதில் ஒரு துளி காதிலிட கடுர கர்ணரோகமும் குணமாகும். இன்னும் இதில் ½-முதல் 1-தேக்கரண்டியளவு வீதம் கருங்குருவையரிசிமாவில் விட்டுப் பிசரி தினம் ஒரு வேளையாக 10-20 நாள் அருந்த குன்மம், சோபை, பாண்டு, சூலை, வாய்வு முதலியன குணமாகும். இச்சாபத்தியமாயிருத்தல்வேண்டும்.

வாதநாசத் தைலம்:—சொச்சி, முடக்கற்றான், வீழி, வெண்சாரணை, உத்தாமணி, பாவட்டை, பொடுதலை இலைகளின் சாறுகள், தேங்காய்ப்பால், சிற்றாமணக்கு நெய் வகைக்குப் படி-½. இதில் சுக்கு, வசம்பு, சீரகம், தேவதாரு, கப்புமஞ்சள், கல்லுரிமஞ்சள், வெள்ளைப்பூண்டு, உத்தாமணிவேர், பெருங்காயம், மிளகு, சுட்டஆமையோடு வகைக்கு வராகனெடை-1 வீதம் தேங்காய் பால்விட்டரைத்துக் கலக்கி அடுப்பிலேற்றிச் சிறுதியாக எரித்த பதமுறத் தைலங்காய்ச்சி வடித்துவைத்துக்கொள்க.

இதில் வேளைக்கு ½-முதல் 1-பலம் வீதம் தேக பலத்தையும், தோஷ வன்மையையும் கவனித்து தினம் 1-வேளையாக காலையில் கொடுக்க காலஞ்சுமுறை நன்கு பேதியாகும். இப்படி 1-முதல் 3-நாள்வரையில் கொடுக்கலாம். பத்தியமாக இருத்தல் வேண்டும். இதனால் வாதரோய்கள், கைகால் பிடிப்பு, சூடைச்சல், இடுப்புவலி, கீல்வாயு, உடலில் ஓடி ஓடி வீங்கி தன்பத்தை தாரின்ற ஓடு வாய்வு, விப்புருதிக் கட்டிகள் முதலியன யாவும் குணமாகும். இதில் வேளைக்கு ½-முதல் 1-தேக்கரண்டி வீதம் தினம் 1-வேளையாக காலையில் பாலர்கட்கு 1-2 நாள் புகட்டி பின்பு ஆமையோடு பற்பம், மாந்தக்குடிநீர் முதலியவைகளை கொடுத்துவர மாந்தரோகம் குணமாகும்.

இலகு விஷமுட்டித் தைலம்:—நல்லெண்ணெய் படி-1, வெள்ளாட்டுப்பாலில் ஓர் இரவு ஊறவைத்து மருநாள் சிறு துண்டுகளாக நறுக்கிய எட்டிக்கொட்டை வெல் பலம்-1¼, தோலுரித்த வெள்ளைப்பூண்டு பலம் 1¼, முருங்கைப்பட்டை தூள் பலம்-¾ இவைகளை ஒன்றுகூட்டி ஓர் தைலபாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதியாக எரித்து சாக்குகள் சிவந்து மிதக்குமபதத்தில் வடித்துவைத்துக் கொள்க. இத்தைலத்தை வாதரோகங்களில் பிடித்தலமாக பயன்படுத்திவர மிக நல்ல பலனைத் தரும்.

மாஷ தைலம்:—ஒரு படி உளுந்தை ஓர் பாண்டத்திலிட்டு 4-படி ஜலமவிட்டு அடுப்பிலேற்றி காய்ச்சி ஒரு படியாக குடிநீரிட்டு, அத்துடன் வெள்ளாட்டுப் பால் படி-1, நல்லெண்ணெய் படி-1, கூட்டி, பூனைக்காலி பருப்பு, சதபுட்பி, அரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி, வெட்பாலைமரப்பட்டை, அதிமதரம், இந்துப்பு, வசம்பு இலைகள் வகைக்கு வராகனெடை-1 வீதம் எடுத்து வெள்ளாட்டுப்

பால்விட்டரைத்து முன் நிரவங்களுடன் கரைத்து தைலபாண்டத்தி லிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து தைலபக்குவத்தில் வடித்து வைத்துக்கொள்க.

இத்தைலத்தைப் பிடித்தைலமாகப் உடலுருப்புகளில் தேய்த்துப் பிடித்துவர கைநடுக்கம், கால்நடுக்கம், தலைசுற்றல் முதலிய நடுக்கல் வாதங்களை நன்கு குணப்படுத்தும். மேலும் இத்தைலத்தை முடித் தைலமாக சிரசில் தேய்த்து ஸ்நானஞ்செய்துவர பாதிரியரோகமென் னும் செவிட்டுரோகம், உபஜிவ்வரோகம் முதலியவைகளும் குண மாகும்.

வாதஹர தைலம்:—சிற்றமுட்டி, எருக்கு, ஆமணக்கு, சொச்சி, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிற்றாமல்லி, பேராமல்லி, நொச்சி, வில்வம், செம்முள்ளி, பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி, வாதை இவைகளின் வேர்கள் வகைக்கு பலம்-10 வீதம் சதைத்து ஓர் பாண் டத்திலிட்டு இரண்டு தூணி நீர்விட்டு எட்டிலொன்றாகக் குடிநீரிட்டு வடித்து ஆமணக்குநெய், தேங்காயெண்ணெய், நல்லெண்ணெய் வகைக்கு படி-1, வெள்ளாட்டுப்பால் படி-3 சேர்த்துக்கலக்கி அழுக் கிருக்கிழங்கு, கோஷ்டக்கிழங்கு, சதகுப்பை, மஞ்சள், இந்துப்பு, ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சுக்கு, வசம்பு, அகில், தேவதாரு, சிற்றரத்தை வகைக்குப் பலம்-½ வீதம் சன்னமாய்ப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்த மேற்படி நிரவங்களுடன் கலந்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாயெரித்து பதமுற காய்ச்சி வடித்து ஆறின பின்பு நெற்புடத்தில் ஒரு வாரம் வைத்தெடுக்கவும். இதை மேலுக்கு தேய்த்துப்பிடித்துவர சகல வாதரோகங்களும் எளிதில் குணமாகும்.

வேம்புச்சுடர் தைலம்:—வேப்பெண்ணெய், நல்லெண்ணெய் வகைக்குப் பலம்-5 இவைகளைக் கலந்துவைத்துக்கொள்க. நெல்லிக் காய் கற்கம், பெருங்காயம் இவையிரண்டும் வகைக்கு பலம்-4 வீதம் பொடித்துக் கல்வத்திலிட்டு தோலுரித்த வெள்ளைப்பூண்டு பலம்-8 கூட்டி அரைத்து ஒரு அடிச் சதுரமுள்ள ஓர் சுத்தமான சீலையில் தடவி சிறிது உலர்த்தி பிறகு வேலைச்செடியின் வேர்கள் காலெந்த துண்டுகளை கத்தையாகக் கட்டி, அதன்மீது மருத்துரிய சீலையைச் சுற்றி இரும்புக் கம்பியால் சுற்றி கட்டித் தொங்கவிட்டு, முன்பு வேப்பெண்ணெயும், நல்லெண்ணெயும் கலந்து வைத்துள்ள தில் தோய்த்து கொளுத்தவும். இது பற்றி எரிந்து கடருடன் தைல மானது சொட்டும். இதைச் சேகரிக்க அடியில் ஓர் பழைய மண் சட்டி அல்லது கோப்பைக் கிண்ணத்தை வைக்கவும். இப்படியே எண்ணெய்ச் சிறிது சிறிதாய் கரண்டியால் மொண்டு எரியுஞ் சுடரில் விட்டுக்கொண்டே வரவும். எண்ணெய் எல்லாம் முடிந்த பின்பு சேகரஞ்செய்த சுடர்தைலத்தை முன்மாதிரியே சிறிது சிறி தாய் விட்டுக் கொளுத்தி சுடர்தைலம் வாங்கவும். (இதற்கு மடக் குத் தைலம் என்று பெயர். அதாவது ஒருமுறை கிடைக்கப்பெற்ற

தைலத்தைக்கொண்டே மீண்டும் மடக்கித் தைலம் வாங்குவதால் இதனை மடக்குத் தைலம் எனப்பட்டது) இப்படி மூன்று முறை மடக்கிக் கடைசியில் வரும் தைலத்தை எடுத்து வைத்துக்கொள்க. வேண்டியபோது இதில் சிறிதளவு எடுத்து அனலில் வெதுப்பி தாளக்கூடிய சூட்டில் உடலில் தேய்த்துப்பிடிக்க வாதரோய்கள் குணமாகும். சிறப்பாக இசிவு ரோகத்திற்கு மிக்க நன்மையைப் பயக்கும்.

சம்பீராதித் தைலம்:—நன்கு பழுத்த பெரிய எலுமிச்சங்கனிகள் பத்து சேகரித்து ஒவ்வொன்றையும் நான்கு பிளப்பாய்க் கீறி ஓர் பாண்டத்திலிட்டு அதில் ஆமணக்கெண்ணெய் படி-½, கோமூத்திரம் படி-½, இலுப்பைப்பட்டைச் சூரணம் பலம்-10 சேர்த்துக் கலக்கி அப்பாத்திரத்தின் வாய்க்கு ஒடு மூடிச் சீலைமண்செய்து பூமியில் குழி தோண்டி புதைத்து ஒரு மண்டலம் (அதாவது 40-நாள்) சென்ற பின்பு எடுத்து தினந்தோறும் காலையில் ஒரு பழத்தில் காலில் ஒரு பாகமும் ½-பலம் தைலமும் அருந்திவரவும். இப்படியே அரை முதல் ஒரு மண்டலம் அருந்தி இச்சாபத்தியமாய் இருந்துவர வாதரோக கூட்டங்கள் யாவும அணுகாது.

மெருகுள்ளித் தைலம்:—தோலெச்சிலி மெல்லிய துண்டுகளாக நறுக்கிய மெருகன்கிழங்கு பலம்-10, தோலுரித்த வெள்ளைப்பூண்டு நிரி பலம்-10 இவைகளிரண்டையும் ஓர் பாண்டத்திலிட்டு அதில் சிற்றாமணக்கு நெய் படி-½ சேர்த்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து சரக்குகள் வெந்து மிதக்குஞ் சமயத்தில் கீழிறக்கி ஆறின பின்பு வடித்துவைத்துக்கொள்க.

இதில் வேளைக்கு ½-பலம் முதல் 2-பலம் வரையில் தேகதிடத் திற்கும், நோயின் வன்மை மென்மைக்குத் தக்கபடி தினம் ஒரு வேளையாக காலையில்மட்டும் கொடுத்துவரவும். இப்படி 3-முதல் 5-நாள் வரையில் கொடுக்கலாம். தேவையாயின் 10-15 நாள் விட்டுவைத்து மீண்டும் முன்போல் ஒருமுறை கொடுக்கலாம். இப் படி விட்டு விட்டு 2-3 முறை கொடுப்பதற்குள் அவசியம் குண மாகும். இதனால் கீல்வாதம் என்னும் சன்னிகஜிலேஷ்ம ரோகம், உடலில் ஓடி ஓடி வரும் வாத வீக்கங்கள், வீரணம், மேகசூலை, பிடிப்பு முதலியன யாவும் குணமாகும். மருந்து சாப்பிட்டு வரும் போது உப்பு, புளி நீக்கி பத்தியமிருந்து வருதல் நன்று.

மெழுகுத் தைலம்:—தேன் மெழுகு வீசை-1, சக்கிமுக்கிக்கல் வீசை-1, சோற்றுப்பு வீசை-1, ஆற்றுமணல் வீசை-½, ஓமம், பலம்-5, கப்புமஞ்சள் பலம்-5, சடாமாஞ்சி பலம்-2½, இவற்றில் தேன் மெழுகையும, சக்கிமுக்கிக் கல்லையும் சிறுதுண்டுகளாக நறுக்கி, ஓமம், கப்புமஞ்சள் இவைகளை ஒன்றிரண்டாக சிறிது இடித்துத் தூள்செய்து, சடாமாஞ்சியை சிறுதுண்டுகளாக கத்தரித்து பிறகு யாவையும் ஒன்று சேர்த்துக் கலந்து வைத்துக்கொள்க.

மேற்கூறிய சரக்குகள் யாவும் அரைபாகத்தில் அடங்கும்படியான ஓர் கழுத்தகீண்ட மட்பாண்டையும், அதில் மூன்றிலொரு பங்குள்ள மற்றொரு சிறிய பாண்டையும் சேகரித்து, பெரிய பாண்டின் பக்கவாட்டில் இரண்டங்குலவட்டமுள்ள ஓர் துவாரத்தையும், சிறு பாண்டின் பக்கவாட்டில் தடைப்பச் சப்பல் நுழையும்படியான சாண்ஜ சிறு துவாரங்களையுஞ் செய்து, பெரியபாண்டில் சரக்குகளைக் கொட்டி பெரிய பாண்டிலுள்ள துவாரம் மேல் சேர்க்கியும், சிறிய பாண்டிலுள்ள துவாரங்கள் கீழ் சேர்க்கியும் இருக்கும்படி இரண்டு பாண்டங்களையும் பொருத்தி, பொருத்து வாய்க்கு வலுவாக சீலைமண் செய்துலர்ந்தி அடுப்பிலேற்றி எரிக்கவும். பெரிய பாண்டிலுள்ள துவாரத்தின்மீது ஓர் மண்ணோட்டை வைத்து அதன்மீது பசும் சாணத்தை அப்பி வைக்கவும். சிறு பாண்டிலுள்ள துவாரங்களில் குச்சிகளைச் செருகி அதன் கீழே சொட்டும் தைலத்தை சேகரிக்க ஓர் கிண்ணத்தை வைக்கவும். சிறுபாண்டின்மேல் பாதத்தில் சாத்தணியைப் போட்டு வைத்த அது உலர உலர அடிக்கடி நீர் தெளித்து எப்போதும் குளிர்ந்து இருக்கும்படிப் பார்க்கவும். பாண்டை முதலில் நேராகவைத்த ½ மணிநேரம் எரித்து அதன் பிறகு சரிவாகவைத்து எரித்து வரவேண்டும், இவ்வாறு எரித்துவர பெரிய பாண்டிலுள்ள சரக்குகள் வெந்து அதினின்று சத்துகள் புகையாக எழும்பி சிறுபாண்டுக்கு வந்து அங்கு குளிர்ச்சியினால் தைலமாக மாறி அங்குள்ள துவாரத்தின் மார்க்கமாய் சொட்டும். சுமார் சாண்ஜ மணி நேரம் அல்லது தைலம் இடைக்கும் வரையில் எரித்து தைலம் வாங்கவும்.

இத் தைலத்தை மேலுக்குத் தேய்த்துப் பிடித்துவர கை கால் குடைச்சல், வலி, பிடிப்பு, இசிவு, அர்தாங்வாதம் என்னும் பாரிசவாதம் முதலியன குணமாகும். இன்னும் இதனை வெட்டுக் காயம், அடிபட்ட காயம், எலுக்கு பிக்கம், கீல்வாயு, எரித்தலைவாதம், சோயுடன்கூடிய பிஜத்தின் பிக்கம், பெண்குறித் தளர்ச்சி, ஆண்குறித்துவளல், கீல் எலும்பு, மாமிசம், சதைப்பு இவைகளைப் பற்றிய வாய்வு, முதலியன குணமாகும்.

வாதநாராயண எண்ணெய்:—வாத நாராயண இலைச்சாறு படி-1, சிற்றாமணக் கெண்ணெய் படி-1, இவை இரண்டையும் ஒருமிக்கக் கலந்து ஓர் தைலபாண்டத்திலிட்டு, அதில் தோலுரித்த 10-பலம் வெங்காயத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கிப்போட்டு, அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வண்டல் மெழுகுபதம் வரும் போது வடிகட்டி எடுத்துக்கொள்க. பிறகு சுத்திசெய்த பூரம் ½-பலம், கல்வத்திலிட்டு பொடித்த ஒரு மணி நேரம் கலந்து அரைத்து பிறகு காய்ச்சிய தைலத்தில் சிறிது தெளிதளியாக விட்டு இரண்டு மணி நேரம் அரைத்து இதை வழித்து முன் தெரிவுபடுத்திய தைலத்துடன் சேர்த்து நன்றாக கலக்கி வைத்துக்கொள்க. தேக திடத்திற்

கும் நோயின் வன்மைக்கும் தக்கபடி. இந்த எண்ணெயில் வேளைக்கு ½ அல்லது ¾ அவுன்ஸ வீதம் தினம் 1 வேளை காலையில் வெறும் வயிற்றில் கொடுக்கவும். இதனால் காலைத்து முறை பேதியாகும். கொடுத்த அளவில் சரியாக பேதியாகாவிடில் மறுமுறை சிறிது அளவை அதிகப்படுத்திக்கொள்க. ஒருக்கால் பேதி அதிகமாயின் அளவைச் சற்று குறைத்துக்கொள்க. இப்படி வாரத்திற்கு ஓர் முறைவீதம் மூன்று முறைகள் கொடுக்க ஓடு வாய்வு, குத்தல், குடைச்சல், கீல்வாயு, பிக்கம், சர்வாங்க பிடிப்பு முதலியன குணமாகும். மருந்து சாப்பிடும்போது மட்டும் புளிதள்ளி இச்சாபத்தியமாக இருத்தல் நன்று.

கொடிவேலி எண்ணெய்:—பச்சை சித்திரமூல வேர்பட்டை பலம்-1, பசுவெல்லம் வாகனெடை-2, நல்லெண்ணெய் படி-½ சித்திரமூல வேர்பட்டையை அம்மிக் கல்லிலிட்டு நீர்விட்டு அரைத்து கற்கமாக்கி ஓர் தைல பாண்டத்திலிட்டு, அதனில் பசுவெல்லத்தையும், நல்லெண்ணெயையும் சேர்த்துக் கரைத்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வண்டல் மெழுகுபதமாக வரும்போது கீழிறக்கி ஆறினபின்பு வடித்து வைத்துக்கொள்க.

இதில் வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் தினம் இருவேளையாக ஐந்து நாள் கொடுக்கவும். பேதியாகாது. இதனால் கை கால் பிடிப்பு குடைச்சல், மேலவாய்வு முதலியன குணமாகும். இச்சாபத்தியம்.

இலகுவாதகேசரித் தைலம்:—நல்லெண்ணெய் பலம்-10, நல்வேளைச்சாறு பலம்-10, தோலுரித்த வெள்ளைப்பூண்டு பலம்-2½, பெருங்காயம் பலம்-½, மூசாம்பரம் பலம்-½, இவற்றுள் பெருங்காயத்தையும், மூசாம்பரத்தையும் பொடித்து, வெள்ளைப்பூண்டையும் அரைத்து, மூலிகைச் சாற்றில் கரைத்து, நல்லெண்ணெய் சேர்த்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வண்டல் மெழுகுபதம் வரும் போது வடித்து வைத்துக்கொண்டு மேலுக்கு தேய்த்து பிடித்துவர கை கால் குடைச்சல், வலி, பிக்கம், கீல்வாயு, மேகரூமை முதலியன குணமாகும்.

மூசாம்பர மாத்திரை:—மூசாம்பரம் தோலா-1, சுக்குத்தூள் தோலா-1, கசகசா தோலா-1, சுத்திசெய்த வாளம் தோலா-½, இலவங்கம் தோலா-½, இவைகளைக் கல்வத்திலிட்டு, நெல்லீர்விட்டு அரைத்து பெழுகு பதத்தில் குன்றிமணி மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

இது இருவான ஆகாரம் உண்டு, சுமார் 10 மணிக்குமேல் படுக்கைக்குப் போகுமுன்பு இந்த மாத்திரையில் 1, 2 மாத்திரைகளை விழுங்கி சிறிது ஜலம் அருந்தவும். அதிகாலையில் காலைத்து முறை பேதியாகும். பத்தியம் சுப்சாதம் சாப்பிடவும். இதனால் கை கால்

குடைச்சல், இடுப்புவலி, மார்புவலி, சூதகவாய்வு, வாதரசம், நெறிகட்டி சரம் முதலியன குணமாகும்.

வாதராஜ சூரணம்:—சுத்தி செய்த ரசம், சுத்தி செய்த கெந்தி வகைக்குப் பலம்-1, சுக்கு, மிளகு, திப்பிலி, மோடி, இலவங்கம், இலவங்கப்பட்டை, சீரகம், கருஞ்சீரகம், சிற்றரத்தை, அதிமதுரம், கோஷ்டம், அக்காரகாரம், கண்டுபாரங்கி, தாளிசபத்திரி வகைக்குப் பலம்-1, இவற்றுள் முதலில் இரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு ஒரு மணிநேரம் நன்றாய் அரைத்து வைத்துக்கொள்க. மற்ற சரக்குகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்த கல்வத்திலிட்டு அத்துடன் முன் அரைத்து வைத்துள்ள இரச கெந்தித் தூளைச் சிறிது சிறிதாகக் கூட்டிக் கலக்க அரைக்கவும். இப்படி இரண்டு அல்லது மூன்று ஜாமம் நன்கு அரைத்து எடுத்து வைத்துக்கொள்க.

இதில் வேளைக்கு பணவெடை வீதம் தினம் இருவேளை, தேன், இஞ்சிச்சாறு முதலியன அனுபானங்களில் கொடுத்துவர சரம், சன்னி, கபரோய்கள், சூலை, வாய்வு, முதலியன குணமாகும். குழந்தைகட்கு 2, 3 அரிசிஎடை தினம் இருவேளை தாய்ப்பாலில் கொடுத்துவர வாதம், கபம், சரம் குணமாகும்.

பட்டுக் கருப்பு:—சுத்திசெய்த ரசம் பலம்-2, சுத்திசெய்த கந்தகம் பலம்-2, இவை இரண்டையும் கல்வத்திலிட்டு ஒரு ஜாமம் நன்கு அரைத்து, பிறகு சிற்றாமணக்கெண்ணெயைத் தளிதளியாக விட்டு மெழுகுபதம் வரும்வரையில் அரைத்து உருட்டி அதன்மீது பட்டுத் துணியை இரண்டு மூன்று சுற்று சுற்றி, அதன்மீது 8-பலம் நித்திர மூலி வேர்ப்பட்டையை அரைத்து கவசம் செய்து அதன்மீது சில மண் வலுவாக செய்து உலர்த்தி மணல் மறைவில் வைத்து 20 விரட்டியில் புடமிட்டு ஆறினபின் மருந்தை மட்டும் அரைத்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு ½, ½ குன்றிஎடை தினம் இருவேளை நிரிகடுகுச் சூரணத்துடன் தேன் சேர்த்து அருந்திவர சரம், வாத நோய்கள், கப நோய்கள் முதலியன குணமாகும்.

மூர்ச்சாவாதத்திற்கு மதூகாதி நசியம்:—இலுப்பை வேர், கற்கண்டு, இலைகளை மூலிப்பாலில் அரைத்து நசியஞ்செய்தாலும் அல்லது மூலிப்பால், சந்தனம், கரும்புரசம் இவைகளை யொன்றுகக் கலந்து நசியஞ்செய்தாலும் மூர்ச்சாரோகம் நீங்கும்.

மூர்ச்சைகளுக்கு குங்குமாதி நசியம்:—குங்குமப்பூவை நெய்யில் கலக்கி நசியஞ்செய்தால் மூர்ச்சை, பைத்தியகாரம் தலைநோய் இவைகள் நீங்கும்.

சகலவாதங்களுக்கு நிரிகடுகாதி நசியம்:—சுக்கு, திப்பிலி, மிளகு, நித்திரமூலம், கார்த்திகைகிழங்கு, வசம்பு, இலுப்பைவிளை, சிறுவட்டத்திருப்பிவேர், சமுத்திர பாலிவிளை, சுத்திசெய்தரசகம், சுத்திசெய்தவசாபி, அழிஞ்சல், சர்ஜகூரம், யவகூரம், இவைகள் யாவையும் சமனடையாக எடுத்து மைப்போல் அரைத்து கொச்சி, புளிஇலை, இஞ்சி இவைகள் ரசத்திலில் ஒருநாள் அரைத்த கடலை அளவு மாத்திரைகள்செய்து உலர்த்தி வேளைக்கொரு மாத்திரை விதம் எருக்கன்வேர் ரசத்தில் அரைத்து நசியஞ்செய்தால் அபஸ்மாரம், வாதரோகத்தால் அறிவுஹீனமாக விழுதல், தனுர் வாதம், ப்ரமணவாதம், உன்மாதம், சன்னிபாதம், இவைகள் யாவும் நாசமாகும்.

வாதரோக பத்தியங்கள்:—அட்டைவிடல், வியர்வை வாங்கல், குளித்தல், தேகத்தைப் பிடித்தல், வாதத்திற்கு செய்யவேண்டிய கிரியைகள், விரேசனம், காற்று இல்லாத இடதனில் வசித்தல், சூடுப் போடுதல், கட்டுகட்டுகிறது, நிலத்தின்மீது படுக்கை, ஸ்நானஞ் செய்தல், ஆசனம் போடுதல், நசியங்கள், ஒத்தடம் கொடுக்குதல், நித்திப்பு, புளிப்பு, உப்பு இந்த ரசபதார்த்தங்கள், புதிய எள்ளு, கோதுமை, பழைய உளுந்து 60-நாள் பயிராகும் நெல் அரிசி, கொள்ளு, நண்டு, ஊக்குருவி, கோழி, மயில், கவுதாரி, காடை இவைகளின் இறைச்சிகள், புடலங்காய், முருங்கைக்காய், கத்திரிக்காய், வெங்காயம், எலுமிச்சம்பழம், இலந்தைப்பழம், நிராசைஷப்பழம், நெல்லிப்பழம், விளக்கெண்ணெய், கோமூத்திரம், வெண்சீரகம் கரை, தாமபூலம், உஷ்ணமாக, சாப்பிடுதல், விரேசனம் இவைகள் வாதரோகிகளுக்கு பத்தியங்களென்று அறியவேண்டியது.

அபத்தியங்கள்:—சதாசிந்தை செய்தல், விழித்திருக்குதல், மலமூத்திரத்தை யடக்கல், வமன சிகிச்சை செய்தல், மிக உழைப்பு, உபவாச மிருக்குதல், கடலை, வேர்கடலை, காராமணி, மொச்சை, பட்டாணி முதலிய வாய்வுப் பொருள்கள், குளிர்ந்த ஜலம், சுகாரங்கள், உலர்ந்த இறைச்சிகள், இரத்தம் வாங்குதல், துவர்ப்பு பதார்த்தங்கள், மிகவும் காரபதார்த்தம், கசப்பு பதார்த்தங்கள், புணர்ச்சி, யானை, குதிரை இவைகளின்மீது ஏறுதல், மிகவும் நிரிதல், கட்டில்மீது சயனித்தல், வயிறுப்பி யிருக்கும்போது சாப்பிடுதல், கெட்ட ஜலத்தில் குளித்தல், பல்களின் சந்துகளின் குத்துதல் இவைகள் யாவும் சகல வைதிய சாஸ்திரங்களில் வாதரோகிகளுக்கு ஆகாதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ரத்த பித்த சிகிச்சை

ரத்த பித்த உபசாரங்கள்:—ரத்த பித்த ரோகம் உண்டான மனிதனுக்கு வாதபித்த சிலேஷ்மமானது பிரகோபித்தாலும் பலம், மாமிசம இவைகள் மாத்திரம் கொடாமல் இருந்தால் உபசாரங்கள் மாத்திரம் செய்தல் நலம். ரத்தபித்தமானது வாயினல் வந்தால் விரேசனத்தைக் கொடுக்கவேண்டும். கீழ்முகமாயிய குதல்தானத்தினிருந்து விழுந்தால் வாந்திக்கு கொடுக்கவேண்டியது.

வலிவுடன் கூடியமனிதன் இந்தரோகம் ஜனித்தபொழுதே தகுதியான சிகிச்சை செய்யாமல் போவானேயாகில் அவனுக்கு இருதயநோய், கிரகணி, பாண்டு, பிலீகை, குன்மம், உதரரோகம் முதலிய ரோகங்களை யுண்டாக்கும்.

மாமிசம், பலம், கூணிதமனிதர்களுக்கும், பிள்ளைகளுக்கும், கிழவர்களுக்கும், தேகபலயீனமுடையவர்களுக்கும், ரத்தபித்தரோகத்தில் வாந்தியாவதற்கும் பேதியாகிறதற்கும் ஔஷதங்களை கொடுக்கக் கூடாது. உபசாரம் மாத்திரஞ் செய்யவேண்டியது.

ரத்தபித்தம் அதோ முகமாக வெளியாகும் ரோகிக்கு கஞ்சி முதலியது கொடுத்து, ரக்தாநிசார கிரியை உபசாரங்களை செய்ய வேண்டியது. அதாவது ஆறியபால், மாமிசரசங்கள், கஞ்சி, அரிசி மாவுசொட்டி, பித்தசமன பதார்த்தங்கள், சிறுகடலை, பச்சைப்பயிறு, கடலை, தண்ணீர்விட்டான்கிழங்கு, துவரை, இவைகளின் ரசங்கள், கட்டுகள் முதலியவைகளை கொடுக்கலாம்.

இரத்தபித்தத்திற்கு நிரிபலாதி கியாழம்:—கடுக்காய், தானிக்காய், கெல்லிவற்றல், கொண்டைவேர், இவைகள் சமனடையாக கியாழம வைத்து தேன் சர்க்கரை கலந்துச் சாப்பிடவும். இதனல் ரானுவிதங்களான ரத்தபித்தங்கள் அதிக அனலுடன் கூடிய பித்த சூல இவைகள் கிவர்த்தியாகும.

சந்தனாதி கியாழம்:—குருவேர், அல்லிதண்டு, கொத்தமல்லி, சந்தனதூள, அதிமதுரம, செந்தில்கொடி, வெட்டிவேர், ஆடாதோடை, இவைகள் சமபாகம கியாழம் வைத்து சர்க்கரை, தேன் கலந்துக்கொடுததால் கோரமான ரதபித்தம, தாகம, சுரம இவைகளை கிவர்த்திக்கும.

இக்ஷ்வாதி கியாழம்:—மேல்தோல் சிவிய கரும்புதண்டுகள், கரும்அலகி சமூலம, வெள்ளைத்தாமரை புஷ்பஇதழ்கள், அதிமதுரம, தாமரைத்தண்டு, ஆலமவிழுது முனைகள், நிரட்சி, கிஜ்ரம், இவைகளை சமனடை கியாழமவைதது தேன சர்க்கரையுடன் கலந்தி சாப்பிட்டால் பிரமேகத்துடன் கூடிய ரத்தபித்தம் கீங்கும்.

சந்தனாதி கியாழம்:—சந்தனம், வெட்பாலை, வட்டத்திருப்பி, கடுகுரோகணி, பூலைகாஞ்சொரி, செந்தில்கொடி, குருவேர், ரோத்திரம இலைகள் சமனடை கியாழம வைத்து இத்துடன் நிப்பிலி சூரணமபோட்டு தேன்கலந்து கொடுத்தால் கபயுக்தமான ரத்தபித்தம், தாகம், இருமல், சுரம இவைகளைப் போக்கும.

உசிராதி கியாழம்:—வெட்டிவேர், சந்தனம், சக்கு, நிரட்சி, அதிமதுரம, இவைகள் சமனடை கியாழமவைத்து நிபபிலிசூரணம தேன்கலந்து சாப்பிட்டால் ரத்தபித்தம் கீங்கும.

அமிருதாதி கியாழம்:—சிந்தில்கொடி, அதிமதுரம், கிஜ்ரம், ஆனைத்திப்பிலி இவைகள் சமனடை கியாழம் வைத்துச் சாப்பிட்டால் ரத்தபித்தம் கீங்கும்.

முத்காதி கியாழம்:—பச்சைப்பயிறு, கெல்பொரி, பவதானியம், நிப்பிலி, வெட்டிவேர், கோரைக்கிழங்கு, சந்தனம், கிற்ரு மூட்டி, இலைகள் சமனடை எடுத்த இடித்த முன்னளில் ஜலம வார்த்து ஊரவைத்த மறுநாள் கியாழங் காய்ச்சி சாப்பிட கஷ்டமான ரத்தபித்தம் கீங்கும்.

அதிமதுரக் கியாழம்:—அதிமதுரத்தை பாலில்போட்டு காய்ச்சி ஊரவைத்து சர்க்கரை தேன் கலந்துக்கொடித்தால் ரத்தபித்தம் கிவர்த்தியாகும்.

ஆடருஷாதி கியாழம்:—ஆடாதோடைரசம், நிலஅரிசி, ரசாஞ்சனம, லோத்திர சக்கை இவைகள் சமனடையாக கியாழம் வைத்து தேன் சர்க்கரை கலந்துச் சாப்பிட்டால் ரத்தபித்தம் கீங்கும்.

வாசாதி கியாழம்:—ஆடாதோடை, கருஅல்லித்தண்டு, நிலஅரிசி, லோத்திர சக்கை, அதிமதுரம், தாமரைப்பூ, இவைகள் சமனடை கியாழம், வைத்து சர்க்கரை தேன் கலந்து சாப்பிட்டால், அதிவேகத்துடனிருக்கும் ரத்தபித்தம் கீங்கும்.

ரத்தபித்தகுடார ரசம்:—சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த கந்தகம், பவழபற்பம, சுவர்ணமாக்ஷிபற்பம், ரசகபற்பம, சிங்கிபற்பம் இவைகள் சமனடை கல்வத்திலிட்டு, சந்தனம், தாமரை, சண்பகமொக்கு, ஆடாதோடைஇலை, கொத்தமல்லி, ஆனைத்திப்பிலி, தண்ணீர்விட்டான்கிழங்கு, இலவன்இலை, ஆலம்விழுது, செந்தில்கொடி, இவைகளின் ரசங்களினல் தனித்தனி மூன்றுமுறை அரைத்து சிமிழில் வைத்துக்கொண்டு வேளைக்கு 2 குன்றிஎடை வீதம் ஆடாதோடை இலைரசம், தேன் இவைகளுடன் கலந்து சாப்பிட்டால் ரத்தபித்தம் கீங்கும். ரத்தபித்த ரோகிகளுக்கு இதற்கு சமமான ஔஷதம் வேறு கிடையாதென்று அறியவேண்டியது.

சதாநிதி ரசம்:—சுத்திசெய்த கெந்தி, பாதரசம், சுவர்ணமாக்ஷிபற்பம், லோஹபற்பம், இவைகள் சமனடை, நிரிபலை கியாழத்தினல் அரைத்து இரும்பு பாத்திரத்தில் வைத்து மாத்திரை செய்து இரவில் கொடுத்தால் ரத்தபித்தம் கீங்கும்.

ரத்தபித்தத்திற்கு கிஜ்ராதி ரசாயனம்:—கிஜ்ரபழம் 40-பலம், ஒரு மரகால ஜலத்தல்விட்டு கியாழம் காய்ச்சி அதில் 40-பலம், சாகரை கலந்து பாயபால் 40-பலம், விட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து பாகுபதம வரும்போது அதில் கனைரிவேர், குடசப்பாலிவேர், நிரிவடுகு, நிரிசாதங்கள், ஜடாமாஞ்சி, நிரிபலை, கொத்தமல்லி, சதாப்பிலை, கிச்சிலிக்கிழங்கு, காட்டுமிளகு, கோரைக்

கிழங்கு, சந்தனம், கிருஷ்ணகரு, கண்டுபாரங்கி, தக்கோலம், வெட் பாலை, கிராம்பு, கருஞ்சீரகம், வெட்டிவேர், கூறவேர், கோஷ்டம், விலாம்பழம், நிராசை, குங்குமப்பூ, பருத்திவிரைபருப்பு, ஜாதிக் காய், ஜாபத்திரி, இவைகள் வகைக்கு 2-பலம், சூரணம் செய்துப் போட்டு பசுநெய் 20-பலம், விட்டுக் கிண்டி கீழிறக்கி ஆறினபின்பு 40-பலம், தேன் கலந்து லேகியபாகமாக கிளரி ஆறியபிறகு ஜாடியி லிட்டு அதை தானிய புடமிட்டு வைத்துக்கொள்ளவேண்டியது.

இதில் வேளைக்கு நெல்லிக்காய் அளவு வீதம் தினம் இரு வேளையாக ஒருமாதம் அல்லது மூன்று மாதகாலம் வரையிலும் சாப் பிட்டு வந்தால் ரத்தபித்தம், ஆமிலபித்தம், சிரோ ப்ரமணபித்தம், பீடகபித்தம், ஸ்போடகபித்தம், இரண்டுவித லைத்தியங்கள், இரு பது பித்தரோகங்கள், ரானவித சுரங்கள், க்ஷயரோகங்கள், உன் மாதம், அக்னிமாந்தம், உன்மாதசூலை, தாபம், அசீரணம், அருசி, தாகம், அனல், கண்டசோஷை, இவைகளை நீக்கும்.

ரக்தபித்தத்திற்கு உசிராதிசூரணம்:—சன்னிரிவேர்பட்டை, மர மஞ்சள், லோதரப்பட்டை, ஞாழல், ஜாதிக்காய், தாமரைத்தண்டு, சந்தனம், இவைகள் சமனடையாகச் சூரணித்து சர்க்கரை கலந்து கழுநீரில் சாப்பிட்டால், ரத்தபித்தம், தாபம், தாகம் இவைகளை நீக்கும்.

மிருத்விகாதி சூரணம்:—நிராசை, சந்தனம், லோத்திரப் பட்டை, சன்னிரிவேர்பட்டை, ஞாழல்பூ இவைகள் சமனடையாகச் சூரணித்து, தேன், ஆடாதோடை இரசம் இவைகளுடன் கலந்து சாப்பிட்டால் முகம், குதம், யோனி, லிங்கம் இவைகளிலிருந்து வேகமாக வெளியாகும் ரத்தபித்தம் நீங்கும்.

மேலும், உடலில் ஆயுதங்களினால் உண்டாகும் ரத்தபிரவாகத் திற்கு இம்மருந்தை மேலுக்குத் தடவினால் உடனே இரத்தம் நின்று விடும். லிங்கத்திலிருந்து ரத்தம அதிகமாகவந்தால் இம்மருந்தை வஸ்தி கர்மஞ் செய்யவேண்டியது.

சந்தனாதி சூரணம்:—சந்தனம், ஜடாமாஞ்சி, லோத்திரம், வெட்டிவேர், தாமரைபுஷ்ப இதழ்கள், சிறாகப்பூ, வில்வபழம், கோரைக்கிழங்கு, சர்க்கரை, கூறவேர், வட்டத்திருப்பி, வெட்பாலை விரை, அல்லித்தண்டு, சுக்கு, அதிவிடயம், காட்டாத்திப்பூ, மாங் கொட்டைபருப்பு, சாலல்பருப்பு, அதிமதுரம், சிந்தில்சக்கரை, கரும்அல்லித்தண்டு, மஞ்சிஷ்டி, ஏலக்காய், மாதளம்பழத்தோல் இந்த 24-சரக்குகளை சமனடையாய்ச் சூரணித்து கழுநீர், தேன் இவைகளுடன் சாப்பிட்டால் அதிசாரம், வாந்தி, மாதர்களுக்கு அதிரத்தம வடிதல், கருப்பசிராவம், ரத்தபித்தம் இவைகள் நீங்கும்.

பத்ரகாதி சூரணம்:—தாளிசபத்திரி 2-பலம், தான்சின்னி 4-பலம், ஏலக்காய் 6-பலம், கிறந்தகரம் 8-பலம், சந்தனம் 10-பலம்

கருஞ்வெதை 12-பலம், சுக்கு 14-பலம், அதிமதுரம் 16-பலம், அல் லித்தண்டு 18-பலம், நெல்லித்தோல் 20-பலம், ஆடாதோடை 22-பலம் இவைகள் யாவையும் சூரணித்து சர்க்கரை தேன் கலந்து சாப்பிட்டால், சுரம், ரத்தபித்தம், காசம், க்ஷயம், ரத்தமூத்திரிருச் சிரம், ரத்தவாந்தி, தேகஇளைப்பு, தாபம், பிரமை, ஊர்த்துவவாதம், இளைப்பு, விக்கல், இருதய ரோகம், மனதாபம், சரீரதாபம், யோனிரோகம், பெரும்பாடு, மேல்புறம் கீழ்புறம் வெளியாகும் ரத்தம், குதம், மூக்கு, ஆண்குறி, பெண்குறி இவைகளால் மிகவும் ரத்தத்தை வெளியில் தள்ளும் ரத்தபித்தம் இவைகள் யாவும் நிவர்த்தி யாகும்.

சர்ப்பூராதி சூரணம்:—பச்சைகர்ப்பூரம் 1-பலம், கங்கோலம் 2-பலம், ஜாதிக்காய் 3-பலம், ஜாதிபத்திரி 4-பலம், கிராம்பு 5-பலம், மிளகு 6-பலம், திப்பிலி 7-பலம், சுக்கு 8-பலம் இவைகளை சமபோல் சூரணித்து இவைகளுக்கு சமம் சர்க்கரை கலந்து கொடுத்துவர ரத்தபித்தம், தீனசம், சுவாசம், இருமல், அருசி, ஹிரு தயரோகம் இவைகளை நிவர்த்திக்கும். அக்னிதீபனத்தை உண் டாக்கும்.

கூஷ்மாண்டாதி லேகியம்:—பழுத்த பெரிய கலியாணபூசினிக் காயைகொண்டுவந்து அதன்மேல் உள்ள தோல் விரை இவைகளை எடுத்துவிட்டு கண்டசதையை சிறிய துண்டுகளாக்கிக் கொள்ளவும். இந்தத் துண்டுகள் 200-பலம் ஜலத்தில்போட்டு பேர்பாதி ஜலம் மீரும்படியாக வேகவைத்து அது ஆறியபிறகு அந்தத் துண்டுகளை எடுத்து வஸ்திரத்தில் மூட்டைகட்டி செவ்வையாய் பிழிந்து அந்த நியாழத்தை அப்படியே வைத்துக்கொண்டு அந்தத் துண்டுகளை தாம்பிர பாத்திரத்தில் வைத்து உலர்த்தி 16-பலம் நெய் கலந்து தேன் வர்ணம் வருகிறவரையிலும் கிளக்க வருக்க அந்த நியாழத்தை அதில் வார்த்து 100-பலம சர்க்கரை சேர்த்து பாகுபிடித்து அதில் நிப்பிலி, சுக்கு, சீரகம் இவைகளின் சூரணம் தனித்தனி 2-பலம், கொத்தமல்லி, ஜாதிபத்திரி, மிளகு, தாளிசின்னி இவைகள் வகைக்கு ½-பலம் சூரணமும், தேன் 8-பலம, சர்க்கரை தேன் எடைக்கு அதிக மாகவாவது அல்லது பேர்பாதி எடையாவது சேர்த்துக்கொள்ள லாம், நிராசை 4-பலம், இலவங்கச்சூரணம் 2-பலம், பச்சைகர்ப் பூரம் ½-பலம் இவைகள் யாவும் சேர்த்து லேகியபக்குவமாக கிளரி வைத்துக்கொள்ளவும். இந்த லேகியத்தை அக்னி பலாபலத்தை அறிந்து சாப்பிடவும். இது ரத்தபித்தம், க்ஷயம், காசங்கள், சுவா சங்கள், வாந்திரோகம், தாகரோகம், சுரங்கள் இவைகளை நிவர்த் திக்கும்.

விரியவிருத்தி, தைரியம், பலம், மேனி, புஷ்டி முதலியது உண்டு பண்ணும்.

கண்டகூஷ்மாண்ட லேகியம்:—கலியாண பூசனிரசம் 100-பலம், பசும்பால் 100-பலம், செல்லிக்காய்நேர் சூரணம் 8-பலம், இவைகள் யாவுஞ் சேர்த்த மந்தாக்கினியால் களிப்போல் ஆகிற வரையிலும், வேகவைத்து சர்க்கரை 8-பலம் கலந்து லேகியபதமாக கிளரி எடுத்துக்கொண்டு ½-பலம் விகிதம் சாப்பிட்டால் ரத்தபித்தம், ஆமிலபித்தம், எரிவு தாகம், காமாலை இவைகள் நீங்கும்.

வாசாகண்டாதி லேகியம்:—ஆடாதோடை 100-பலம், 800-பலம் ஜலத்தில்போட்டு 200-பலம ஜலம் மீறும்படியாகச் சண்டக் காய்ச்சி, 256-பலம் கடுக்காய் சூரணம், கற்கண்டு 100-பலஞ் சேர்த்து, லேகிய பக்குவமாக கிளறி ஆறியபிறகு, தேன் 8-பலம, மூங்கிலுப்பு 4-பலம், திப்பிலிசூரணம் 2-பலம், சாதிர்சாதசூரணம் 1-பலம, இவைகள் யாவையும் கலந்த ½-பலம், விகிதம் சாப்பிட்டால், ரக்தபித்தம், காசங்கள், சுவாசங்கள், க்ஷயங்கள், விக்ரதி, குன்மம், தாகம், இருத்ரோகம், இவைகள் நீங்கும். இதற்கு இச்சா பத்தியம்.

கண்டகாவ லேகியம்:—தண்ணீர்விட்டான் கிழங்கு, சிவ கரந்தை, சிற்றமுட்டி, சித்தில்கொடி, இவைகள் வகைக்கு 1-பலம் தான்னின்னி, புஷ்கரமூலம், கண்டுபாரங்கி, ஆடாதோடை, கண்டங் கத்திரி, முள்ளங்கத்திரி, கருங்காலிவேர், இவைகள் வகைக்கு 5-பலம் வீதம் சதைத்து, 256-பலம் ஜலத்தில் போட்டு எட்டில் ஒரு பாகம் மீரும்படியாகசண்டக்காய்ச்சி வடிகட்டி, அதில் சுவர்ண மாக்ஷிகபஸ்பம், 12-பலம், சுவர்ணபஸ்பம், 12-பலம், லோஹபஸ்பம் 12-பலம், கற்கண்டு 16-பலம், நெய் 16-பலம், இவைகள் யாவை யுஞ் சேர்த்து கலந்து லோஹபாத்திரத்தில் லேகிய பக்குவமாகச் சமைத்து பிறகு தவகூரி, வாய்விளங்கம், திப்பிலி, சுக்கு, கருஞ் சீரகம், சீரகம், கடுக்காய்ப்பூ, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற் றல், கொத்தமல்லி, மிளகு, திப்பிலி, சிறுநாகப்பூ, இவைகள் வகைக்கு 1-பலம், சூரணித்து மேல்கூறிய லேகியத்தில் கலந்து நெய் யில் ஊறிய பாண்டததில்வைத்து தானியபுடமிட்டு காலையில் ½-பலம், விகிதம் சாப்பிட்டு உடனே பசும்பால் குடித்து சாப்பாடு சாப்பிட் டால், ரக்தபித்தம் ரக்தபிரவாஹிகம், ரக்தசூலை, ரக்தாதிசாரம், ரக்த பிரமேஹம், பகந்தரம், மூலவியாதி, விக்ரம், ஆமிலபித்தம, பித்தம், க்ஷயம, குஷ்டம், குன்மம், வாதரக்தம், பிரமேஹம, பீதபித்தம், வாந்தி, கிருமி, பாண்டுரோகம், பிளீஹை, உதரம், அசாத்ய மூத்திர இருச்சிரம், இவைகள் யாவையும் நிவர்தநிக்கும.

நேத்திரங்களுக்கு ஹிதம், புஷ்டி, சந்தோஷம், ஆரோக்கியம், புத்திரோத்பத்தி, காமம், அக்கினிபலம், சம்பத்துவம், லேசத்துவம், இவைகளை யுண்டாகும். ஆடு, புரா, மான், இவைகளின் மாமிசங்கள் கொடுக்கலாம்.

காமதேவ கிருதம்:—அமுக்கிரங்கிழங்கு கொரிஞ்சில், சிற்ற முட்டிவேர், சித்தில்கொடி, நிலகடம்பவேர், வெள்ளை நிலப்பூசனி வேர், தண்ணீர்விட்டான் கிழங்குவேர், வெள்ளைச்சாரணை, அரசன் வேர், பூசனிப்பழம், தாமரைவிரை, உளுந்து இவைகள் வகைக்கு 10-பலம் சேர்த்த 1024-பலம் ஜலத்தில்போட்டு நாலிலொன்றாக சண்டக்காய்ச்சி அதில் ஜீவநீயகணம், கோஷ்டம், தாமரைத்தண்டு, ரக்தசந்தனம், இலவங்கப்பத்திரி திப்பிலி திராக்ஷை, பூனைக்காஞ் சொரிவிதை, கரும்அல்லி, சிறுநாகப்பூ, நன்னரி, குடசப்பாலை, பேரா முட்டி, சிற்றமுட்டி, இவைகள் வகைக்கு ½-தோலா, விகிதம் ஒன்றுச்சேர்த்து கல்கஞ்செய்து அதில்போட்டு சர்க்கரை 2-பலம், கரும்புரசம் 80-பலம், நெய் 80-பலம் சேர்த்து அடுப்பிலேற்றி மிருது அக்கினியால் கிருதபக்குவமாக காய்ச்சவும். இதை கொடுத்தால், ரக்தபித்தம், உரக்ஷதம், பாண்டுரோகம், வர்ணபேதம், சுரக்ஷயம், வாத ரக்தபித்தம், மூத்திர கிருச்சிரம், பாரிசசூலை, காமாலை, மார்பில் எரிவு, ரக்தம், இவைகளை நிவர்த்திக்கும். மாதர்களுக்கு கர்ப்பமும் புருஷர்களுக்கு விரிய விருத்தியும் உண்டாகும்.

தூர்வா கிருதம்:—அருகம்புல்வேர், தாமரைபுஷ்ப இதழ்கள், மஞ்சிஷ்டி, குறுவேர், கடுக்காய்பிஞ்சு, லோத்திரவேர், வெட்டி வேர், கோரைக்கிழங்கு, சந்தனம், தாமரைத்தண்டு இவைகள் தனித் தனி ஒரு தோலா சூரணித்து கல்கஞ்செய்து 16-பலம் நெய்யில் போட்டு தண்டுலோதகம் ஆட்டுப்பால் இவைகள் நெய்க்கு சரி பங்கு அதிகமாய்ச் சேர்த்து மந்தாக்கினியால் கிருதபக்குவமாய்க் காய்ச்சி இறக்கிவைத்துக் கொள்ளவும்.

இது கொடுத்தால் ரத்தவாந்தி நிவர்த்தியாகும். இதை நசியஞ் செய்தால் நாசிகையிலிருந்து ரத்தம் வருதலை நிவர்த்திக்கும்.

செவிகளில்விட்டால் செவிகளிலிருந்து வடியும் ரத்தத்தை நிவர்த் திக்கும்.

நேத்திரத்திற்குவிட்டால் நேத்திர ரோவர்த்தம் நிவர்த்தியாகும்.

வஸ்திகர்மஞ் செய்தால் லிங்கம், குதம் இவைகளிலிருந்து வடியும் ரத்தத்தை நிவர்த்திக்கும். சகல ரத்தபித்தங்கள் நீங்கும்.

தூர்வா தைலம்:—அருகம்புல்வேர், அதிமதுரம், மஞ்சிஷ்டி, திராக்ஷை, கரும்புரசம், சந்தனத்தூள், நன்னரிவேர், கோரைக் கிழங்கு, மரமஞ்சள் இவைகள் வகைக்குப் பலம்-½, நல்லெண்ணெய் 20-பலம், தைலத்திற்கு நான்கு பங்கு அதிகமாக பால் இவைகள் யாவையுஞ் சேர்த்து தைலபாகமாய் காய்ச்சி அப்பியங்கனம் செய் தால் ரத்தபித்தம், வாதம் இவைகளை நிவர்த்திக்கும். பலத்தையும் காந்தியையும் உண்டாக்கும்.

ஆடாதோடை சுரசம்:—ஆடாதோடை சுரசம், தேன், சர்க்கரை கலந்து சாப்பிட்டால் கடோமான ரத்தபித்தம் நிவாரணமாகும்.

மத்வாதி பேயம்:—தேன், ஆடாதோடை இலைரசம் சமபாகமாய்ச்சேர்த்து காலையில் சாப்பிட்டால் அதிகடோமான ரத்தபித்தம், சலத்தினால் அக்னி எப்படி அழிகிறதோ அப்படி மேற்கூறிய ரோகங்கள் நாசமாகும்.

சதாவர்யாதி பேயம்:—தண்ணீர்விட்டான் கிழங்கு, சிற்றாமுட்டி, சிற்றரத்தை, பூனினி, நச்சு இலைகளை யெழுமிச்சைவத்து சாப்பிட்டால் ரத்தபித்தம், சூலை இவைகள் நாசமாகும்.

ஹரீதக்யாதி நசியம்:—கடுக்காய்தோல், மாதளம்பூக்கள், நிப்பிலி இலைகளை சலத்தினால் அரைத்து நசியஞ்செய்தாலும் சர்க்கரை பால், கோதுமைமாவை சேர்த்த நசியஞ்செய்தாலும் நாசியினின்று காணும் இரத்தப்போக்கை நிவர்த்திக்கும்.

தாடிமீபுஷ்பாதி நசியம்:—மாதளம்பூரசம் அல்லது அறகம்புல் ரசம் அல்லது மாங்கொட்டைபருப்பு ரசம் அல்லது வன்னிய ரசம் இவைகளை நசியஞ்செய்தால் மூக்கிலிருந்து வெளியாகும் ரத்தம் சமனப்படும்.

அர்தரகாதி நசியம்:—இஞ்சி, காவிக்கல், காட்டரத்திப்பூ, கடுக்காய்தோல், அதிமதுரம் இவைகளை முலைப்பால் விட்டரைத்து நசியஞ் செய்தால் மூக்கிலிருந்து வடியும் ரத்தம் நிவர்த்தியாகும்.

ரத்தபித்தஹர வமனங்கள்:—கோரைக்கிழங்கு, வெட்பாலை, அதிமதுரம், பால், தேன் இவைகளை அரைத்து சாப்பிட்டால் வர்த்தியாகிற ரத்தபித்தங்கள் சமனமாகும்.

ஆர்க்வதாதி ரேசனம்:—ரக்தபித்தத்திற்கு விரேசனத்திற்காக முன்னைசடை, செல்லிவற்றல் வெதை, கடுக்காய்பிஞ்சு, இவைகளில் ஏதாவது ஒன்றை யெழுமிச்சைவத்து அதில் தேன் சர்க்கரை கலந்து கொடுக்கவேண்டியது.

இரத்தபித்தத்திற்கு மருந்து:—சந்திரதண்டு, அதிமதுரம், ரேகம் ஏலம், செல்லிவற்றல், சிறாகப்பூ வகைக்குப் பலம்-½, சீனகற்கண்டு பலம்-½, இவைகளைப் பொடித்து பால் விட்டரைத்து ஒருபடி ஆவின் நெய்யில் கலந்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வண்டல் மெழுகுபதம் வரும்போது இருபதத்தில் இறக்கி ஆறினபின்பு வடித்து வைத்துக்கொள்க.

இதில் வேளைக்கு 1, 2 தேக்கரண்டி வீதம் தினம் இருவேளையாகத் தனியாகவாவது அல்லது எலுமிச்சம்பழம், சித்தில் சர்க்கரை, பொரித்த வெங்காரம் இவைகளை சமனடையாகக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து வைத்துள்ளதில் வேளைக்கு பணவெடை வீதம்

சேர்த்தாவது அருந்திவர ரக்தபித்த ரோகங்கள் குணமாகும். சிறப்பாக வாயினின்று ரக்தம் வருதல் குணமாகும்.

வெள்ளெருக்குக் கிருதம்:—பசும்பால் படி-2, பசுநெய் படி-1, வெள்ளருகுச்சாறு படி-1, இவைகளை ஒன்றுகூட்டி ஓர் தைல பாண்டத்திலிட்டு அதில் ஏலம், விளாமிச்சவேர், மஞ்சிஷ்டி, செவ்வியம், தேசெங்கழுநீர் கிழங்கு, தர்மரைவேர்யம், பேரிச்சை, முத்தக்காசு, குமிழம்பழம், சினி, கோஷ்டம், மதாரம், இலவங்கம், இலவங்கப்பட்டை, கன்னரிவேர் வகைக்குக் கழஞ்சு, ஒன்று வீதம் இளநீர், விட்டரைத்துக் கலக்கி அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து கிருதப்பக்குவமாய்க் காய்ச்சி வடிக்கவும்.

இதில் வேளைக்கு ஒரு தேண்டிவீதம் தினமிருவேளையாக உண்டு வர வாயால் ரக்தம் விழுதல் நீரும். இதை மூக்கில் நசியமிட மூக்கிலிருந்து ரக்தம் வடிதலும், காதில் துளிக்க காதிலிருந்து ரக்தம் வடிதலும் குணமாகும். ரக்தபித்தரோகத்தைப் போக்கும்.

ரக்தபித்தத்திற்கு பத்தியங்கள்:—ரக்தபித்தம், கீழ்முகமாக வெளியாகிறவனுக்கு, வாந்திக்கும், மேல்முகமாக வெளியாகிறவனுக்கு பேதிக்கும் கொடுக்கவேண்டியது. மற்றும் மிதமான உணவும் இதமான ஓய்வும், குளிர்ந்தநீர் அதிக உஷ்ணமில்லாத உணவு முதலியவைகளைக் கொடுத்தல்வேண்டும்.

இரண்டிலும் அதாவது வாயினலும் குதஸ்தானத்தினலும் ரக்தம் ஒழுகும் ரோகிக்கு, லங்கணம், 60 நாள் பயிராகிற பழையஅரிசி, தினை, பவதானியம், பச்சைப்பயறு, சிறுகடலை, துவரை, காட்டுப்பயறு, பெரியமீன்கள், மூயல்கறி, ஊக்குருவி மாமிசம், மான்இறைச்சி, கினிமான்கறி, புராக்கறி, கொக்குகறி, செம்மறியாட்டுக்கறி, கஷாயவர்க்கங்கள், பசு, ஆடு, இவைகளின் பால், நெய், வெள்ளாட்டு நெய், பலாப்பழம், சாரப்பருப்பு, வாழைப்பழம், சிறுகீரை, புடலங்காய், இஞ்சி, கலியாணப் பூசினிகாய், பனம்பழம், நுங்குகள், அதின் ஜலம், ஆடாதோடை, மாதளம்பழம், காஜாரபழம், செல்லிப்பழம், சதாப்பிலை, தேங்காய், கோரைக்கிழங்கு, விளாம்பழம், சாதிக்காய், வேப்பன்பூ, வெட்பாலை, பொரிமாவு, நிராலைஷ, சர்க்கரை, தேன், கரும்பு, குளிர்ந்தசலம், ஊற்றநீர் நீராடுதல், நூறுதரஞ் சுத்திசெய்த நெய்புட்ன் குளிக்குதல், குளிர்ந்த இடத்தில் சஞ்சரித்தல் குளிர்ந்த காற்று, சந்தனம், பிலா, விசித்திரமான கதைகளை கேட்க்குதல், குளிர்ந்த வீடு, வைடூரியம், முத்து, முதலியமணிகள் தரித்தல், சிகப்பு நீலோத்பலம், தாமரை, இலைகளது இலைகள்மீது படுக்கை, வெண்மை வஸ்திரம், குளிர்ந்திருகும் உத்தியானவனங்கள், சந்தனம், பூசிக்கொண்ட மாதரை ஆலிங்கனஞ் செய்தல், ஏறிகள், நதிகள், சந்திரோதயம், பனிதாரைகள், இவை

களில் நிரிதல், செடியின்மீத நின்றஜலம், பச்சை கற்பூரம், இவை கள் ரக்தபித்தரோகிகளுக்கு பத்தியங்களென்ற அறியவேண்டியது.

ரக்தபித்தரோகத்திற்கு அபத்தியங்கள்:—அதிகமாக சஞ்சரித், தல், வேகநடை, வெய்யிலில் நிரிதல் சூரிய கிரணங்கள், மலமூத்திரம் பர்ந்திதல், சூதிரைகள், ஆசைகள், இவைகள் யிருப்பிடத்திற்கு வேகு தல், வியர்வை, புகைபிடித்தல், புணர்ச்சி, கோபம், வெல்லம், கத்திரிக் காய், எள்ளு, உளுந்து, கடுகு, தயிர், பால், கிணற்றசலம், தாம் பூலம், ஊற்றுசலம், கள்ளு, வங்காயம், விருத்த அன்னம், காரம், புளிப்பு, உப்பு, ஊஷ்ணபதார்த்தங்கள் இவைகள்யாவும் ரக்தபித்த ரோகத்திற்கு அபத்தியமென்ற அறியவேண்டியது.

பித்தரோக சிகிச்சை

இருபத்தினலு பித்தவியாதிகளுக்கு ஏலாதிசூரணம்:—எலக்காய் 1-தோலா, இலவங்கம 2-தோலா, கோரைகிழங்கு 3-தோலா, அதிமதுரம் 4-தோலா, சிறபீனிவேர் 5-தோலா, கற்பூரிலாசத்தி 6-தோலா, தக்கோலம் 7-தோலா, சந்தனதுள் 8-தோலா, சிகம் 9-தோலா, மஞ்சள் 10-தோலா, செல்லிபருப்பு 11-தோலா, தண் ணீர்விட்டான் கிழங்குவேர் 12-தோலா, ஆவாரைவிரை 13-தோலா இவைகள் யாவையும சூரணித்து சூரணத்திற்கு சமனடை சித்தில் சர்க்கரை கலந்து இவைகள் யாவைகளும சமனடைசர்க்கரை கலந்து இரண்டுவேளையிலும மூன்றுவிறற்கடை பிரமாணம் சாப்பிட்டுவர சகல பிரமேகங்கள், கிருணிகள், அதிசாரங்கள், சோமரோகங்கள், வெகுமூத்திரம், ரத்தம்விழல், சகல பித்தரோகங்கள் நிவர்த்தியாகும். சுக்கிலவிருத்தி புத்திரோற்பத்தி இவைகளை உண்டுபண்ணும்.

ஆமகாசத்திற்கு சந்திராமிருத ரசம்:—ரசம், நாபி, கெந்தி, நேர்வாளம், இவைகளை சுத்திசெய்து சமஎடையாக கல்வத்திலிட்டு எருக்கன்வேர் கியாழத்தினால், 3 சாமங்கள் அரைத்து பிறகு தலா யந்திரத்தில் ஒருசாமம் எரித்து குன்றிஎடை மாத்திரைசெய்து உலர்த்தி ஒவ்வொரு மாத்திரை விதம் கொடுத்தால் ஆமகாசம் நிவர்த்தியாகும்.

பாண்டுகாசங்களுக்கு காசசம்ஹார பைரவரசம்:—ரசபஸ்பம், அப்பிரகபஸ்பம், சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த நாபி, சுத்தி செய்த தாளகம், இவைகளை சமஎடையாக கல்வத்திலிட்டு செறுப் படை கியாழத்தால் இரண்டு நாள் அரைத்து குக்குடபுடமிட்டு ஆறியபிறகு எடுத்துச் சூரணித்து உளுந்து அளவு நிப்பிலி சூரணம் தேன் கலந்து சாப்பிட்டால் பாண்டு காசங்கள், சகலமான இருமல் கள் நிவர்த்தியாகும்.

சிலேஷ்ம ஜீம்மகாசங்களுக்கு சிலாதாளரசம்:—சுத்தாளகம் சுத்த மனோசிலை, இவைகளை சமஎடை கல்வத்திலிட்டு ஆடாதோடை ரசத்தால் ஒருநாள் அரைத்து நெரிஞ்சல்வேர் கியாழத்தால் ஒருநாள் அரைத்து காகிருப்பியில்வைத்து வாலுகா யந்திரத்தில் இரண்டு ஜாமங்கள் எரித்து ஆறியபிறகு எடுத்து சூரணித்து இதற்கு சமம் நிரிகடுகு சூரணம் கொச்சிவேர்பட்டை சூரணம் கலந்து அரைத்து 2-குன்றிஎடை ஔஷதத்தை மூன்று, கடுகாய், இவைகளின் கியா முதலில் தேன்போட்டு சாப்பிட்டாலும் அல்லது நெரிஞ்சல் வேர் கியாழத்தில் நிரிகடுகு சூரணத்தைப்போட்டு இந்த அனுபானத்

துடன் சாப்பிட்டாலும் சிலேஷ்ம ஸ்ம்மகரசரோகம் நிவர்த்தி யாகும்.

சித்திரகாதி லேகியம்:—சித்திரமூலம், மோடி, திப்பிலி, சுக்கு, மிளகு, கோரைக்கிழங்கு, பூனைகாஞ்சொரிவேர், இச்சிலிக்கிழங்கு, புஷ்கரமூலம், கடுக்காய், தனெி, வசம்பு, கண்டுபாரங்கி, சிந்தில் கொடி, சித்தரத்தை, கடுக்காய்ப்பூ, இவைகள்வகைக்கு ½-பலம், விதம் சேர்த்து அரைத்து கல்கஞ்செய்த 200-பலம், ஜலத்தில் கலக்கி 20-பலம் மீறும்படி கியாழங்காய்ச்சி வடிகட்டி அதில் வெல்லம் 10-பலம், நெய் 4-பலம், சேர்த்து லேகியபாகமாக கினறி ஆறியபிறகு தேன் 4-பலம், திப்பிலி சூரணம், 4-பலம், மூங்கில் உப்பு சூரணம் 4-பலம் போட்டு கலந்த வைத்துக்கொண்டு சாப்பிட்டால் காசங் கள், மார்புநோய், சுவாசங்கள், குன்மங்கள், இவைகள்யாவும் நிவர்த்தியாகும்.

க்ஷுத்திராவ லேகியம்:—கண்டங்கத்திரி 100-பலம், கடுக்காய் 100-பலம் இவைகளை இடித்து 256-பலம், ஜலத்தில் போட்டு 4-ாலில் ஒருபங்கு கியாழம் மீறும்படி கண்டக்காய்ச்சி அதில் பழய வெல்லம் 100-பலம் கலந்து அடுப்பிலேற்றி எரித்து பாகுபதம் வரும் போது நிரிகடுகு சூரணம் 3-பலம், இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி, அகரு, ாககேசரம், இவைகள் யாவையும், பிரத்தியேகமாக சூரணித்து ஒருபலம் விதஞ் சேர்த்து லேகிய பக்குவமாக கினறி ஆறினபின்பு நெய் தேன் கூட்டிப் பிசைந்து வைத்துக்கொண்டு கொடுத்தால் சிலேஷ்மரோகங்கள், கோழை, ஐந்துவித இருமல், விக்கல், மார்நோய், அபஸ்மாரம், இவைகளை நிவர்த்திசெய்து அக்கினி தீபனத்தை உண்டாக்கும்.

மஹாக்ஷுத்திராதி லேகியம்:—கண்டங்கத்திரிவேர் 100-பலம், பஞ்ச கோலங்கள் 50-பலம், மோடி 25-பலம், கண்டு பாரங்கி, சித்தரத்தை, இவைகள் தனித்தனி 1-பலம், கடுக்காய்தோல் 100-பலம், இலைகள் யாவையும் 512-பலம், ஜலம்விட்டு நாலில் ஒரு பாகம் மீறும்படியாக கண்டக்காய்ச்சி அதில் ஆடாதோடை, காச ணங்கண்ணி, கொச்சி, மருதோன்றி, கண்டங்கத்திரிவேர், இவை களின் ரசம், வகைக்கு 16-பலம், கோமூத்திரம் 80-பலம், ஆட்டு மூத்திரம் 30-பலம், பழயவெல்லம் 100-பலம் போட்டு, அடுப்பி லேற்றி காய்ச்சி பாகுபதம் வரும்போது அதில் நிரிகடுகு, நிரிபலை மோடி, சாதுர்சாதங்கள், இந்துப்பு, யவக்ஷாரம், சதுர்யவக்ஷாரம்பஞ்ச லவணங்கள், பொரித்த வெங்காரம், பொரித்த பெருங்காயம், இவை கள் வகைக்கு 1-பலம், சூரணித்து அதில்போட்டு லேகியபக்குவமாக கினறி வைத்துக்கொள்ளவும். இதை சாப்பிட்டால் இருபதவித இரு மல்கள் நீரும்.

கண்டகாரி சூரணம்:—கண்டங்கத்திரி சமூலம், திப்பிலி, மோடி, காயுருவிவிரை, சேகம், இந்துப்பு, இவைகள் சமனளவாகச் சூரணித்து தேன் கலந்து சாப்பிட்டால், காசங்கள், சுவாசங் கள், க்ஷயரோகம், நீவரமான பரத்தவாந்திகள் நீங்கும்.

க்ஷுத்தகாசங்களுக்கு இக்ஷுவாதி லேகியம்:—தாமரைப்பூ, தாம ரைத்தண்டு, நீலோற்பலம், சந்தனம், அதிமதுரம், திப்பிலி, நிராக்ஷி, அரக்கு, கடுக்காய்பூ, தண்ணீர்விட்டான்கிழங்கு இவைகளை சம எடையாய்ச் சூரணித்து, சூரணத்திற்கு இரண்டுபாகம் தவக்ஷீரி கலந்துவைத்துக்கொள்க. பிறகு இதற்கு நான்கு பங்கு சர்க்கரை லயைக் கரும்புரசத்தில் கரைத்து அடுப்பிலேற்றி பாகுபதம் வரும் போது சூரணத்தைக் கொட்டி தேவையான அளவு நெய் கூட்டி லேகியமாய்க் கினறி ஆறினபின்பு தேன் கூட்டிக் கலந்து வைத்துக் கொள்க. இதை முறைப்படி அருந்திவர காசரோகங்கள் நீரும்.

வாசாகூஷ்மாண்ட லேகியம்:—கலியாணபூசினிக்காய் கிறிய துண்டு 50-பலம், 16-பலம் நெய்யில் பக்குவமாக வறுத்து அதில் கற்கண்டு 100-பலம்போட்டு 64-பலம் ஆடாதோடை கியாழத்தைச் சேர்த்து அடுப்பிலேற்றி எரித்து பாகுபதம் வரும்போது அதில் தவக்ஷீரி, நெல்லிவற்றல், கோரைக்கிழங்கு, கண்டுபாரங்கி, இலவங் கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி இவைகள் வகைக்கு ½-பலம், ஏலக்காய், அதிவிடயம், கொத்தமல்லி, மிளகு இவைகள் வகைக்கு 1-பலம், திப்பிலி 4-பலம் இவைகளைச் சூரணித்து அதில் போட்டு 8-பலம் தேன்விட்டுக் கலந்து லேகியபதமாய்க் கினறிச் சாப்பட்டால் காசங்கள், சுவாசங்கள், க்ஷயங்கள், விக்கல், ரத்த பித்தம், பிலீகம், ஹிருதயரோகம், ஆமிலபித்தம், பினசம் இவைகள் நிவர்த்தியாகும்.

பிப்பில்யாதி லேகியம்:—திப்பிலி, அதிமதுரம் இவைகளை இடித் துப்போட்டு கியாழம் காய்ச்சி அதில் சர்க்கரை, பசும்பால், நெய், கரும்புரசம் இவைகள் வகைக்கு 16-பலம், யவமாவு, கோதுமை மாவு, நிராக்ஷி, நெல்லிக்காய்ரசம், நல்லெண்ணெய் இவைகள் வகைக்கு பலம்-1 சேர்த்து மந்தாக்கினியால் லேகிய பக்குவமாய்க் கினறி பிறகு நெய் தேன் சேர்த்து சாப்பிட்டால் சுவாசங்கள், காசங்கள், க்ஷயரோகங்கள், ஹிருதயரோகம் இவைகள் நிவர்த்தி யாகும்.

கண்டகாரியாதி லேகியம்:— கண்டங்கத்திரி 100 - பலம், 256-பலம் ஜலத்தில்போட்டு நாலிலொன்றுய் கியாழமிட்டு 20-பலம் சர்க்கரை சேர்த்து பாகுபதமாய்க் காய்ச்சி அதில் சிந்தில்கொடி, செவ்வியம், சித்திரமூலம், கோரைக்கிழங்கு, கடுக்காப்பூ, நிரிகடுகு, பூனைக்காஞ்சொரி, கண்டுபாரங்கி, சிற்றரத்தை, இச்சிலிக்கிழங்கு இவைகள் வகைக்கு 1-பலம் சூரணித்து கலந்து நெய், சோகபல்

பம் இலைகள் வகைக்கு 8-பலம் சேர்த்து பக்குவமாக லேகியபத மாய் இளரி ஆறியபிறகு 8-பலம் தேன், மூங்கிலுப்புசூரணம் 4-பலம் திப்பிலிசூரணம் 4-பலம் கலந்த கெட்டியான மண்பாண்டத்தில் வைத்து இலைகள் தானியபுடத்தில் வைத்து கொடுத்தவர காசங்கள், விக்கல், சுவாசங்கள் இலைகள் நிவர்த்தியாகும்.

அகஸ்தியஹரீதக்யாதி லேகியம்:—தசமூலம், பூனைகாஞ்சொரி, சங்கபுஷ்பி, கிச்சிலிக்கிழங்கு, சிற்றரூட்டி, ஆனைநிப்பிலி, காயுருவி, மோடி, சித்திரமூலம், கண்டுபரங்கி, புஷ்கரமூலம் இலைகள் வகைக்கு 2-பலம், பவதானியம் 25-பலம், கடுக்காய் 100-பலம் இலைகள் யாவையும் 1280-பலம் சலத்திலிட்டு எட்டொன்றுப்க் கியாழம் காய்ச்சி, பவதானியம் வெந்தபிறகு வடிகட்டி கியாழத்தி லிருக்கும் கடுக்காயின் விதையை நீக்கியும் வெல்லம் 100-பலம், நெய் 4-பலம், கல்லெண்ணெய் 4-பலம், திப்பிலிசூரணம் 4-பலம் இலைகள் யாவையுங் கலந்து லேகியமாகமாய்க் இளரி ஆறியபிறகு 4-பலம் தேன் கலந்து பழைய பானையில்வைத்த தானியபுட்மிட்டு தினம் இரண்டு கடுக்காய் பிரமாணம் சாப்பிட்டுவர்தால் ஐந்துவித காசங்கள், க்ஷயங்கள், சுவாசங்கள், விக்கல், விஷமசுரம், சன்னிற ஹரணி, மூலவியாதி, அருசி, இருப்பு இலைகளை நிவர்த்திக்கும். மேனி ஆயுசுவிருத்தி, பலம் இலைகளை யுண்டாக்கும்.

ஆர்திரகாதி லேகியம்:—இஞ்சி 50-பலம், வெல்லம் 50-பலம், கொத்தமல்லி, ஓமம், லோஹபஸ்பம், சீரகம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய், கடுகுரோகணி இலைகள் வகைக்கு ½-பலம் விகிதஞ் சூரணித்து சேர்த்து லேகியபதமாய்க் இளரிச் சாப் பிட்டால், காசம், மூலம், சுரம், பினசம், விக்கம், குன்மம், க்ஷயம் இலைகளை நாசமாக்கும்.

வியாக்ரி ஹரீதக்யாதி லேகியம்:—கண்டங்கத்திரி சமூலம் 100-பலம், கடுக்காய் 100-பலம், 512-பலம் சலத்தில்போட்டு நான வதுபாகம் மீறும்படி கியாழத்தை கண்டக் காய்ச்சி அதில் வெல்லம் 100-பலம் கலந்து பாகுபதத்தில் காய்ச்சி பிறகு சுக்கு, திப்பிலி, மிளகு, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய், சிறு நாகப்பூ இலைகள் வகைக்கு 1-பலஞ் சூரணம், தேன் 8-பலம் கலந்து லேகியமாய்ச்செய்த பலத்தை அறிது கொடுத்தால் பித்தம், கபம், தொந்த சன்னிபாத காசம், க்ஷதகாசங்கள், க்ஷயரோகம், பினசம், சுவாசரோகம், உரக்ஷதரோகம், 11-வித க்ஷயங்கள் நிவர்த்தியாகும்.

கண்டாமலக லேகியம்:—நெல்லிவற்றல் 1½-சேர், 64-பலம் ஜலத்தில்போட்டு அடுப்பிலேற்றி கியாழம்காய்ச்சி எட்டொன்றுக்கி வடிகட்டி, அதில் கற்கண்டு 10-பலஞ் சேர்த்து பாகுபதமாக சமைத்து அதில் கர்ஜூரபழம் 2-பலம், நிராக்ஷ 2-பலம், சுக்கு

1-பலம், திப்பிலி 1-பலம், மிளகு 1½-பலம், ஜாதிக்காய், ஜாபத்திரி, ஓமம், சீரகம், கருஞ்சீரகம், தாளிசபத்திரி, இலைகள் ஒவ்வொன் றும் 1½-தோலா விகிதஞ் சூரணித்துப் போட்டு லேகிய பக்குவமாக சமைத்து அதில் 10-பலம் தேன்கலந்து காலை மாலை 40-நாள் சாப் பிட்டால் சகல காசங்கள், சுவாசங்கள், பித்தாதிக்கம் இலைகள் நிவர்த்தியாகும்.

காசங்களுக்கு சுண்டியாதி சூரணம்:—சுக்கு, பூனைக்காஞ் சொரி, ஆமணக்குவேர், கடுக்காய்பூ, தேவதாரு இலைகளை சம எடையாகச் சூரணித்து வெந்நீரில் கொடுத்தாலும் அல்லது ஆமணக்கு நெய்யிலாவது. தேனிலாவது கொடுத்தாலும் வாதகாசங் கள், நிலேஷ்ம காசங்கள் இலைகள் நிவர்த்தியாகும்.

பத்திர முஸ்தாதி சூரணம்:—கோரைக்கிழங்கு, திப்பிலி இலை களைச் சமஎடையாகச் சூரணித்து தேனுடன் சாப்பிட்டால் நிலேத் தும காசங்கள் நிவர்த்தியாகும்.

கடுதிரியாதி சூரணம்:—சுக்கு, திப்பிலி, மிளகு, சித்திரமூலம், தேவதாரு, நிற்றரத்தை, வாய்விளங்கம், கடுக்காய், தானிக்காய், நெல்லிப்பருப்பு, சிந்தில் சர்க்கரை, இலைகளைச் சமஎடையாகச் சூரணித்து சூரணத்திற்கு சமம் சர்க்கரை கலந்து சாப்பிட்டால் காசங்கள் நிவர்த்தியாகும்.

காசச் சூரணம்:—கண்டுபரங்கி, சுக்கு, திப்பிலி, இலைகள் சமஎடையாகச் சூரணித்து வெல்லங்கலந்து சாப்பிட்டாலும் அல் லது நிரிகடுகு இலைகளை சூரணித்து அதில் தேன் நெய் கலந்துச் சாப்பிட்டாலுங் காசசுவாசங்கள் நிவர்த்தியாகும்.

இலவங்காதி சூரணம்:—இலவங்கம், சாதிக்காய், திப்பிலி, இலைகள் வகைக்கு 1-தோலா, தானிக்காய் 3-தோலா, மிளகு 2-தோலா, சுக்கு 4-தோலா. இலைகள் யாவையுஞ் சூரணித்து, இதற்கு சமஎடை சர்க்கரைக்கலந்து சாப்பிட்டால், காசசுரம், அருசி, மேகம், குன்மம், சுவாசங்கள், அக்கினிமந்தம், சிறுநி இலைகள் யாவும் நிவர்த்தியாகும்.

பிப்பல்யாதி சூரணம்:—திப்பிலி மோடி சுக்கு, தானிக்காய் இலைகளைச் சமஎடையாகச் சூரணித்து தேன்கலந்து சாப்பிட்டால் நிரிதோஷ காசங்கள் நிவர்த்தியாகும்.

கர்ப்பூராதி சூரணம்:—பச்சைகற்பூரம், வெட்டிவேர், வால் மிளகு, ஜாதிக்காய, ஜாபத்திரி, இலைகள் சமஎடை, இலவங்கம், சிறுநாகப்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு, இலைகள் 1, 2, 3, 4, 5, பாகங்களாகச் சேர்த்து இலைகள் யாவையுஞ் சூரணித்து சமமாக சர்க்கரைக்கலந்து, சாப்பிட்டால், க்ஷயம், காசம், சுவாசகாசம், வாந்தி இலைகளை நிவர்த்திக்கும். ருசியை உண்டாக்கும்.

தீரிகடுகாதி சூரணம்:—சுக்கு, நிப்பிலி, மிளகு, சித்தில்கொடி, சித்திரமூலம், கடுக்காய், தானிக்காய், செல்லிவற்றல், வால்மிளகு, சிற்றரத்தை இலைகள் சமனடையாக யாலையுஞ் சூரணித்து அதற்கு சமமாக சர்க்கரைக் கலந்து சாப்பிட்டால் காசங்கள் நிவர்த்தியாகும்.

திவிக்ஷாராதி சூரணம்:—சர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், பஞ்சமூலம், பஞ்சலவணம், கிச்சிலிக்கிழங்கு, சுக்கு, குறுவேர் இலைகளைச் சம எடையாகச் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து நெய் கலந்து சாப்பிட்டால் சகல காசங்கள் நிவர்த்தியாகும்.

கணிதி குடிகைகள்:—கோரைக்கிழங்கு, சுக்கு, கடுக்காய்த் தோல் இலைகள் சமனடையாக சூரணித்து அத்துடன் வெல்லத்தை கலந்து சண்டையளவு மாத்திரை செய்து 3-நாள் சாப்பிட்டால் சுவாசகாசங்கள் நிவர்த்தியாகும்.

ஹரீதக்யாதி குடிகைகள்:—கடுக்காய்தோல், நிரிகடுகு இலைகள் சமனடையாய்ச் சூரணித்து அத்துடன் வெல்லத்தைக் கலந்து சண்டையளவு மாத்திரைசெய்து சாப்பிட்டுவர காசங்கள் நிவர்த்தியாகும். அக்கினிதீபனம் உண்டாகும்.

திரிஜாதாதி மாத்திரைகள்:—இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய் இலைகள் வகைக்கு ½-தோலா, நிப்பிலி 2-தோலா கற்கண்டு, திராக்ஷை, அதிமதரம், கார்ஜாக்காய் இலைகள் வகைக்கு 4-தோலா இலைகள் யாலையும் மைபோல் சூரணித்து தேன்கலந்து மாத்திரை பதமாக்கி சிறுசெல்லிக்காயளவு மாத்திரைகள் செய்து கொடுத்தால் பித்தரத்தம், இருமல், இரைப்பு, அருசி, வாந்தி, மூர்ச்சை, விக்கல், மதப், பிரமை, சுவயங்கள், தொண்டைக் கம்மல், பிலீகம், காசம், ஆட்பவாதம், ரத்தவாந்தி, இருதயரோகம், பாரிசசூலை, தாகம், சுரம் இவை யாவும் குணமாகும்.

மரீச்யாதி மாத்திரைகள்:—மிளகு ¼-பலம், நிப்பிலி ¼-பலம், பொரித்த வெங்காரம் ½-பலம், மாதளம்பழதோல் ½-பலம் இவைகளைச் சூரணித்து அத்துடன் வெல்லம் 2-பலஞ் சேர்த்து 7-குன்றி எடை மாத்திரை செய்துச் சாப்பிட்டால் சகல காசங்கள் நிவர்த்தியாகும்.

இலவங்காதி மாத்திரைகள்:—இலவங்கம், மிளகு, தானிக்காய்தோல், பொரித்த வெங்காரம், சங்குபற்பம் இவைகளைச் சம எடையாய்ச் சேர்த்து இலவங்கத் தைலத்தால் அரைத்து குன்றியளவு மாத்திரைகள் செய்து வேளைக்கு 1-2 மாத்திரை தேனில் சாப்பிட்டால் ஒருமாதத்தில் காசரோகங்கள் நிவர்த்தியாகும்.

தனஞ்சய மாத்திரைகள்:—மருதமரப்பட்டை, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய், நிப்பிலிமூலம், நிரிகடுகு

இலைகளை சமனடையாய்ச் சூரணித்து இஞ்சிரசத்தால் மாத்திரை பக்குவமாகும் வரையிலும் அரைத்து சிறு சண்டையளவு மாத்திரைகள் செய்து சாப்பிட்டால் பிரபலமான காசங்கள் நிவர்த்தியாகும்.

கதிராதி மாத்திரைகள்:—கருங்காலி மரப்பட்டை, புஷ்க்கரமூலம், கடுக்காய்த்தோல், காயபலம், கண்டுபாரங்கிமூலம், கடுக்காய்த்தோல், இலவங்கம், நிரிகடுகு, அதிவிடயம், ஓமம், பூனைக்காஞ்சொரி, சித்தில்கொடி, கண்டங்கத்திரி, முள்ளங்கத்திரி, தானிக்காய்தோல் இலைகள் வகைக்கு ½-பலம் விகிதம் சேர்த்து மைபோல் சூரணித்து இதற்கு சமபாகம் கருங்காலிசக்கை சூரணத்தை கலந்து, மாதுளம் பழத்தோல், கண்டங்கத்திரிவேர், கருங்காலிபட்டை, இஞ்சி இலைகளின் சாறுகள், கருவேலன்பட்டை இலை இலைகளின் சாறுகள் ஆடாதோடை இலைசாறு இலைகளால் தனித்தனி ஏழுநாள் அரைத்து சண்டையளவு மாத்திரைகள் செய்து கொடுத்தால் காசசுவாசங்கள் வெகுகாலமாயிருந்தாலும் நிவர்த்தியாகும்.

வியோஷாதி மாத்திரைகள்:—நிரிகடுகு, சரக்கொன்றைப்புளி, செவ்வியம், தாளிசப்பத்திரி, சித்திரமூலம, சீரகம், புளித்தோல் இலைகள் வகைக்கு ½-பலம, இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி இலைகள் வகைக்கு ¼-பலம் எடை, வெல்லம் 20-தோலா இலைகள் யாலையும மாத்திரை பதமாய் அரைத்து ½-பலம் பிரமாண மாத்திரைகள்செய்து காலையில் சாப்பிட்டால் சகல காசங்கள், பீசம், இரைப்பு, அருசி, தொண்டைக்கமமல் இலைகள் நிவர்த்தியாகும்.

பிப்பில்யாதி மாத்திரைகள்:—நிப்பிலி, புஷ்க்கரமூலம், கடுக்காய்தோல், சுக்கு, கிச்சிலிக்கிழங்கு, கோரைகிழங்கு இலைகள் சமனடையாய்ச் சூரணித்து வெல்லத்தைக் கலந்து சண்டையளவு மாத்திரைகள்செய்து சாப்பிட்டால் வெகுகாலாக விருத்தியடைந்த சுவாசகாசங்கள் நிவர்த்தியாகும்.

கபாக்கினி மாத்திரைகள்:—பச்சைகர்ப்பூரம் ¼-பலம், கஸ்தூரி ¼-பலம், இலவங்கம் ½-பலம், மிளகு, நிப்பிலி, தானிக்காய்தோல், கோரோசனம் இலைகள் வகைக்கு ½-தோலா, மாதளம்பழத்தோல் 1-தோலா இலைகள் யாவுக்கும் சமம் கருங்காலிவேர்ப்பட்டைச் சூரணத்தைச் சேர்த்து அரைத்து உளுந்தளவு மாத்திரைசெய்து சாப்பிட்டால் காசங்கள் நிவர்த்தியாகும்.

இருமலுக்கு தசமூலாதி கிருதம்:—தசமூலகியாழும், கண்டுபாரங்கி கல்கம், 10-காடைபக்ஷிகளின் மாமிசகியாழும், இலைகளுடன் செய்யைகலந்து கிருதபக்குவமாக காய்ச்சி கொடுத்தால் வாதகாசங்கள் நிவர்த்தியாகும்.

வியோஷாதி கிருதம்:—நிரிகடுகு, ஓமம், சித்திரமூலம், சுக்கம், வசம்பு, செவ்வியம் இவைகளை சமனடையாக கல்க்கஞ்செய்து ஆடாதோடை இரசமும் தேனுங்கலந்து, நெய்யார்த்து கிருதபக்குவமாகச் சமைத்து கொடுத்தால் கபசம்பந்தமான காசசுவாசங்கள் நிவர்த்தியாகும்.

பிப்பல்யாதி கிருதம்:—திப்பிலி, வெல்லம், ஆட்டுப்பால் இவைகளுடன் நெய்யும் கலந்து கிருத பக்குவமாக காய்ச்சி கொடுத்தால் சுஷ்யகாசங்கள் நிவர்த்தியாகும்.

நிர்குண்டீ கிருதம்:—நொச்சிலி இலைரசம் 1-பங்கிற்கு 4-பாகம், அதிகமாக நெய்யைச் சேர்த்து கிருதபக்குவமாகும் வரையிலும் காய்ச்சி, அதில் செவ்வியம், சித்திரமூலம், வாய்விளங்கம், இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி, நாககேசரம், கடுகு ரோகணி, கோஷ்டம் இவைகள் சமனடையாகச் சூரணித்து நெய்யின் எடையில் எட்டிலொரு பாகஞ் சேர்த்துக் கிருதமாகக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும். உச்சிக்காண்டி விதம் கொடுத்தால் காச சுவாசங்கள் நிவர்த்தியாகும்.

வியாக்ரியாதி கிருதம்:—கண்டங்கத்திரி ரசத்தில், சிற்றாத்தை, காயபலம், நெரிஞ்சல், நிரிகடுகு நெய் இவைகளைக் கலந்து கிருத பக்குவமாக காய்ச்சிக் கொடுத்தால் ஐந்துவித காசங்கள் நிவர்த்தியாகும்.

குடூச்யாதி கிருதம்:—சிற்றில்கொடி, ஆடாதோடை, கண்டங்கத்திரி, இவைகளின் இயாழத்திலாவது, அல்லது கல்கத்திலாவது நெய் கலந்து காய்ச்சிய கிருதத்தை கொடுத்தால், புராணசுரம், காசம், சுவாசம், அக்கினி மந்தம், இவைகள் நிவர்த்தியாகும்.

திரியூஷணாதி கிருதம்:—நிரிகடுகு, நிரிபலை, நிராசுகி, பூனிநி, ஆடாதோடை, சுக்கு, வட்டத்திருப்பி, தேவதாரு, கோரைக் கிழங்கு, சதகுப்பை, சித்திரமூலம், கிச்சிலிக்கிழங்கு, கண்டங்கத்திரி, புங்கன், மணத்தக்காளி, தண்ணீர்விட்டான் கிழங்கு, நெரிஞ்சல், நிலப்பூனிநி, இவைகள் வகைக்கு 1-தோலா விகிதஞ் சேர்த்து அரைத்த 64-தோலா பசும் நெய்யில் கலந்து நெய்க்கு சமுபாகம் அதிகமாகபால்கலந்த கிருதபக்குவமாக காய்ச்சிக் கொடுத்தால், காசங்கள், சுரங்கள், குண்மம், அருசி, பிலீகை, நலீ, இருதயம் பக்கங்கள் இவைகளில் நோய், காமாலை, மூலம், வாய்வு, சுஷ்யங்கள் இவைகள் நிவர்த்தியாகும்.

கண்டகாரீ கிருதம்:—கண்டங்கத்திரி சமூலமாக பிடித்து பிழிஞ்சரசம் 64-பலம், நெய் 16-பலம், சிற்றமுட்டி, நிரிகடுகு, வாய்விளங்கம், கிச்சிலிக்கிழங்கு, மாதளம்பட்டை, சவ்வர்ச்சலவணம், யவக்ஷாரம், சுக்கு, நெல்லிக்காய்த்தோல், கோஷ்டம், செப்பு

சாரணை, கண்டங்கத்திரி, கடுக்காய், ஓமம், சித்திரமூலம், நிராசுகி, செவ்வியம், வெள்ளைச்சாரணை, பூனைகாஞ்சொரி, சுரக்கொண்ணைப்புளி, கடுக்காய்பூ, இலவங்கப்பத்திரி, கண்டுபாரங்கி, சித்தரத்தை, நெரிஞ்சில், இவைகளின் இயாழம் அல்லது, கல்கம்சேர்த்து கிருதபக்குவமாக காய்ச்சி சாப்பிட்டால், சகலகாசங்கள், சுவாசங்கள், விக்கல், ஐந்துவித இருமல் இவைகள் நீங்கும்.

கண்டங்கத்திரி லேகியம்:—கண்டங்கத்திரி சாறு பலம்-1½, துளசிச்சாறு, பலம்-2½, ஆடாதோடை இலைச்சாறு பலம் 3¾, நல்ல தேன் பலம் 7½, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஏலம், அதிமதுரம், இலவங்கம், இலவங்கப்பட்டை, சிற்றரத்தை, பேரரத்தை, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, தாளிசபத்திரி, வகைக்கு வராகனெடை-½.

மேற்கூறப்பட்ட பதினைந்துவித கடைச் சரக்குகளை இடித்துச் சூரணம் செய்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொள்க. பிறகு இத்துடன் மூலிகைச்சாறு தேன் முதலியவைகளை ஒன்று சேர்த்து ஓர் புது சட்டியிலிட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து துழவிக் கொடுத்துக் கொண்டே வரவும், விரலூற்றும் பாகுபதத்தில் கீழிறக்கி பதனஞ் செய்க. இதில் வேளைக்கு சுண்டக்காய் பிரமாணம் தினம் மூன்று வேளை அருந்திவர இருமல், சளி, சுவாசம், காசம், கபக்கட்டு முதலியன குணமாகும். குழந்தைகட்கு இதில் சிறிதளவு விரலால் தொட்டு அடிக்கடி காயில் தடவி வரக்குவரப் பிருமல், கபக்கட்டு முதலியன குணமாகும்.

தூதுவளைக் கிருதம்:—தூதுவளை பலம்-20, கண்டங்கத்திரி, சிறுகாஞ்சொரி, ஆடாதோடை, மிளகு, கடுக்காய், திப்பிலி வகைக்குப் பலம்-4. இவைகளை இடித்து இரு தூணி நீரில் போட்டு பதினாலொன்றாகக் குடிநீரிட்டு, அதில் ஆவின் பால், நெய் வகைக்குப் படி-2 கூட்டி, அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், தாளிசபத்திரி, கோஷ்டம், அக்காரம், வாய்விளங்கம், கருஞ்சீரகம், வால்மிளகு, சித்தரத்தை, பேரரத்தை, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி வகைக்குக் கழஞ்சு-3 விதம் இடித்துச் சூரணித்து ஆவின்பால் விட்டு அரைத்துக் கலந்து அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து கிருதபதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 1-2 தேக்கரண்டி வீதம் தினம் இருவேளை சிறிது சர்க்கரை சேர்த்து அரை அல்லது ஒரு மண்டலம் சாப்பிட காசம் முதலிய கபரோகங்கள் யாவும் குணமாகும்.

ஆடாதோடைக் குடிநீர்:—ஆடாதோடை, துளசி, கண்டங்கத்திரி, வகைக்கு பலம்-1, இவைகளை ½-படி நீரிலிட்டு வீசம்படியாகச் சண்டக் காயமிட்டு வடிகட்டி இருவேளையாகப் பங்கிட்டு

காலமாகி இருவேளை ஒரு சிட்டிக்கை நிப்பிலிச்சூரணம் சேர்த்து அருந்திவர இருமல் பேக்கட்டு முதலியன குணமாகும்.

தாளிசாதிச் சூரணம்:—தாளிசபத்திரி பலம்-10, சுக்கு, பலம், 2, திப்பிலி பலம்-2, கூகைநீறு பலம்-3, மிளகு பலம்-1½, ஏலம் பலம்-½, இலவங்கப்பட்டை பலம்-½, சினி பலம்-20, இவற்றுள் சர்க்கரை தவிர மற்றவைகளை இடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து பிறகு சர்க்கரையைக் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு நிரி கடிப்பிரமாணம் தினம் இருவேளையாக அருந்திவர, ரட்பட்ட இருமல், சுவை, காசம், முதலிய கபரோகங்களும், பிரமேகம், அஜீரணம் முதலிவைகளும் குணமாகும்.

பலா பற்பம்:—சுத்திசெய்த இரண்டு பலம் நற்பலாழத்தைப் பொடித்துக் கல்வத்திலிட்டு ஒரு முயலின் ரத்தத்தை விட்டு அரைத்து உலர்த்தவும். பிறகு அம் முயலின் மயிர, மலத்து, கால் எலும்பு களை மாமிசமில்லாமல் சிறி எடுத்து சுத்திசெய்து உலர்த்தி இடித்து தூள்செய்து, முன் அரைத்த பலாத்துடன் சேர்த்துக் கல்வத்திலிட்டு குமிச்சாறவிட்டு இரண்டு ஜாமம் நன்கு அரைத்து மெழுகு பதத்தில் வில்லை செய்துலர்த்தவும். பிறகு தாதுவளை, கண்டங்கத்திரி இவ்விரண்டு இலைகளையும் அரைத்து ஒரு ஜாண் அகலமுள்ள வரட்டிகளைப்போல இரண்டு செய்து, இலைகளுக்கு இடையில் மருந்து வில்லையை வைத்து அழுத்தி, ஓய்களை பொருத்தம்படி கவனித்து இதன் மீது 10, 15, மிலமண் வலுவாகச் செய்து, ஈரம் வரள சாம்பலில் புறட்டி 60-எருவில் புடமிடவும். ஆறினபின் மருந்து வில்லையை அரைத்து வைத்துக்கொள்க, இதில் வேளைக்கு குன்றினடை வீதம் தினம் இருவேளை செய் அல்லது தக்க அனுபானங்களில் கொடுத்துவர இருமல், சுவை, காசம் முதலியன நீரும்.

பாவன நிப்பிலி:—ஒரு பலம் நிப்பிலியை, ஆடாதோடைசாறு, துளசிச்சாறு, கண்டங்கத்திரிச்சாறு, கரிசாலைச்சாறு, இஞ்சிச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, நாயுருவி சாறு, ஆகிய இலைகள் ஒவ்வொன்றிலும் மும்மூன்று நாள் ஊறவைத்து ரவியில் வைத்துலர்த்து, கடைசியில் இத்துடன் ஒருபலம் எலுமிச்சம் பழச்சாறும், ½-பலம் இந்துப்பும் சேர்த்துக் கினரி ரவியில் வைத்து முற்றும் உலர்ந்த பின்பு எடுத்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு ஒரு நிப்பிலி வீதம் தினம் 1-அல்லது 2-வேளை வீதம் அருந்திவர இருமல், சுவை, சுவாச காசம் முதலியன குணமாகி பலி தீபனமும் ஏற்படும்.

கரிசாலைத் தைலம்:—கரிசாலைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்குச் சமன் எடையாக ஓர் தலை பாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து பதமுறக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் தினம் ஒரு வேளையாக ஒரு மண்டலம் அருந்த காச நோய் நீரும்.

தாளிசபத்திரி சூரணம்:—தாளிசபத்திரி பலம்-10, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்குப் பலம்-2, கூகைநீறு பலம்-3, ஏலம், இலவங்கப்பட்டை வகைக்குப் பலம்-½ இவைகளை இளவறுப்பாய் வறுத்திடித்துச் சூரணித்து சமன் சர்க்கரை கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு ½-வராகனெடை வீதம் தினம் இருவேளையாக உண்டுவர இருமல், சுவை, காசம் முதலியன குணமாகும்.

திப்பிலிச் சூரணம்:—சுக்கு வராகனெடை-8, திப்பிலி வராகனெடை-4, மிளகு வராகனெடை-2, ஏலம் வராகனெடை-1, கிராம்பு வராகனெடை-½, சிறுநாகப்பூ வராகனெடை-½ இவைகளை பொன் மேனியாக வறுத்திடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து, இத்துடன் சமனெடை பாலில் பிட்டவியலாக வேகவைத்து உலர்த்தி இடித்து சூரணித்து வஸ்திரகாயஞ் செய்த அமுக்கிராக்கிழங்கு சூரணம் சேர்த்து இவைகளின் மொத்த எடைக்குச் சமன் சினி கூட்டிக் கலந்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு ½-வராகனெடைவீதம் தினமிரு வேளையாக தேனிலாவது, நெய்யிலாவது, பாலிலாவது அருந்திவர காசரோகங்கள் யாவும் குணமாகும்.

தாளிசாதிச் சூரணம்:—தாளிசபத்திரி பலம்-5, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, வால்மிளகு, வாய்விளங்கம், இலவங்கப்பட்டை, சேகம், திப்பிலி, சொத்தமல்லிவிதை, கோஷ்டம், அக்காரம், கடுக்காய், செல்லிவற்றல், தான்றிக்காய், சோம்பு, சடாமாஞ்சில் வகைக்கு பலம்-½ இவைகளை இளவறுப்பாய்வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்து அத்துடன் சமன் சர்க்கரைகலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு ½-வராகனெடை வீதம் தினமிருவேளையாக தேன், நெய், பால் முதலிய அனுபானங்களி லேதேனுமொன்றில் அருந்திவர இருமல், சுவாசம், காசம், சுவை, சூலியம், அஸ்திசுரம், தாகம், பித்தாதிக்கம், கிரஹணி முதலியன குணமாகும்.

தாதுவளைச் சூரணம்:—தாதுவளைப்பழம், சிவகரந்தைப்பழம், கண்டங்கத்திரிப்பழம் வகைக்குப் பலம்-5 இவைகளை நன்கு உலர்த்தி இடித்துச் சூரணித்து வைத்துக்கொள்வும். பிறகு இத்துடன் மிளகு, திப்பிலி, சிற்றரத்தை வகைக்குப் பலம்-1, தாளிசபத்திரி பலம்-3, அதிமதுரம் பலம்-3 இவைகளை பொன்மேனியாக வறுத்திடித்துச் சூரணித்துச் சேர்த்து கலந்து வைத்துக்கொண்டு இதில் வேளைக்கு நிரிகடிப்பிரமாணம் தினமிருவேளையாக சமன் சர்க்கரை கலந்து நெய் அல்லது பாலில் அருந்திவர கபரோகங்கள் யாவும் குணமாகும்.

அமுர்தாதி லேகியம்:—ஆறுபடி ஆவின்பாலில் அரை வீசை சீகைக்காயைப் பொடித்துப் போட்டுக் காய்த்து அடுப்பிலேற்றிக் காய்ச்சி பாகுபதம் வரும்போது அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், செல்லிக்காய், தான்றிக்காய், ஏலம், அதிமதுரம், கோஷ்டம், இலவங்கம், சேகம், சிறுநாகப்பூ, சிறுதேக்கு, நன்னாரிவேர்ப்

பட்டை, தாதுவஸ்ரீ, சடாமாஞ்சி, சாதிக்காய், சாதிப்பத்திரி, தாளிச பத்திரி வகைக்கு கழஞ்சு-5 இவைகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணத்துடன் சித்திரச்சக்கரை பலம்-10 சேர்த்துக் கலந்து தூவி நெய் படி-1 கூட்டிக் கிளரி லேகியபதமாய்ச் செய்து கீழிறக்கி ஆறினபின்பு தேன் உழக்கு சேர்த்துக் கலந்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு கொல்லிக்காயளவு வீதம் தினம் இருவேளையாக தனி யாகவாவது அல்லது இத்துடன் பவளபற்பம், முத்துச்சிப்பிபற்பம், தாளகபற்பம், வெள்ளிபற்பம், பூரணச்சந்திரோதயம், அபகர்த்தச் செந்தூரம்போன்ற மருந்துகளில் ஏதேனுமொன்றைக் கூட்டியாவது அருந்திவர சுபரோகங்கள் யாவும் குணமாகும்.

நெல்லிக்காய் லேகியம்:—நெல்லிவற்றல் பலம்-100, இதை இடித்து தூளி சீலிட்டு எட்டொன்றாக கண்டக்காய்ச்சி வடிகட்டி அதில் சர்க்கரை அல்லது வெல்லம் பலம்-10 கரைத்து வடிகட்டி கடாயிலிட்டு அடுப்பிலேற்றி எரித்து பாகுபதத்தில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், ஓமம், அதிமதுரம், கிராம்பு, சித்திரமூலம், குங்கிலி யம், கஸ்தூரி வகைக்கு பலம்-1 பொடித்துத் தூவி நெய் படி-½, தேன் படி-½ கூட்டி லேகியபதமாகச்செய்து வேளைக்கு கொட்டைப் பாக்களவு வீதம் தினமிருவேளைபாக ஒரு மண்டலம் அருந்திவர சுப ரோகங்கள் குணமாகும்.

அரத்தையாதி லேகியம்:—சிற்றரத்தை, திப்பிலி, தாளிசபத்திரி, அக்காரகாரம் வகைக்குப் பலம்-2, கண்டங்கத்திரி வேர் பலம்-8 இவைகளை இளவறுப்பாய் வறுத்திடித்துச் சூரணித்து வைத்துக் கொள்க. பிறகு உழக்கு பசும்பாலில் 15-பலம் சர்க்கரையைக் கரைத்து ஓர் கடாயிலிட்டு அடுப்பிலேற்றி எரித்து பாகுபதம் வரும் போது முன் சித்தப்படுத்தி வைத்துள்ள சூரணத்தைக் கொட்டிக் கிளரி, நெய் ஆழாக்குவிட்டு லேகியபதமாய்க் கிண்டி ஆறினபின்பு தேன் உழக்குவிட்டு பிசைந்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு பாக்களவு வீதம் தினமிருவேளைபாக அருந்திவர சுரம், இருமல், காசம் முதலிய சுபரோகங்கள் யாவும் குணமாகும்.

திப்பிலியாதி ரசாயனம்:—திப்பிலி பலம்-10, சுக்கு பலம்-10, மிளகு பலம்-5, சீரகம், சோபு, சுரோசாணியோமம், சிற் றரத்தை, பேரரத்தை, தாளிசப்பத்திரி, இலவங்கம், இலவங்கப் பட்டை, ஏலம், இலவங்கப்பத்திரி, கடுக்காய், நெல்லிக்காய், தான் றிக்காய், சித்திரமூலவேர்ப்பட்டை வகைக்குப் பலம்-2 இவைகளை இளவறுப்பாய் வறுத்திடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்த சமன் சர்க்கரை சேர்த்து தேன்விட்டுப் பிசைந்த மெழுகுபதத்தில் குச் செய்து ஜாடியில் பத்திரப்படுத்தவும். இதில் வேளைக்கு சிற கொட்டைப்பாக்களவு தினமிருவேளையாய் அரை முதல் ஒரு மண்டலம் அருந்திவர சிலேஷ்ம சுரோகங்கள் யாவும் குணமாகும்.

காட்பட்ட இருமல், சுவாசகாசம் இவைகட்கு மிக்க பயனைத் தரும்.

தாதுவஸ்ரீக் கிருதம்:—தாதுவஸ்ரீச் சமூலம் பலம்-100, கண் டங்கத்திரிச் சமூலம், கறிமுள்ளிசமூலம் வகைக்கு பலம்-50 இவை களை சமைத்த ஓர் பாண்டத்திலிட்டு, 80-படி ஜலம்விட்டு அடுப்பி லேற்றி எரித்து எட்டிலொன்றுப்ச் சண்டக் காய்ச்சி வடிகட்டி அதில் பசுநெய், பசும்பால் வகைக்குப் படி-5, இஞ்சிச்சாறு படி-1½ சேர்த்துக் கலக்கி சிறுசாகப்பூ, சன்னிவேர், சித்திரமூலவேர், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கோஷ்டம், தாளிசபத்திரி வகைக்கு வராகனெடை-5 செவ்வல்லிக் கொடி, சடாமாஞ்சில், சிறுகாஞ்சொரிவேர், ஆடாதோடைவேர், அதிமதுரம், சீரகம், தேற்றான்கொட்டை வகைக்குப் பலம்-1½, கண் டங்கத்திரிவேர், முசுமுக்கைவேர் வகைக்குப் பலம்-2½ இவை களைச் சூரணித்து பால்விட்டரைத்துக் கலக்கி தைலபாண்டத்தி லிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாயெரித்த வண்டல் மெழுகுபதம் வருஞ்சமயத்தில் இருதபக்குவம் பார்த்து கீழிறக்கி வடித்த ஆறின பின்பு அதில் நல்ல தேன் படி-½, கற்கண்டுத்தூள் பலம்-5 சேர்த்துக் கலந்து வைத்துக்கொள்ளவும்.

இதில் வேளைக்கு 1-2 தேக்கரண்டி வீதம் தினம் இருவேளை யாய் அருந்திவர இருமல், சுரம், சுவாசம், காசம் முதலிய சுபரோகங் கள் யாவும் குணமாகும்.

வேறு முறை:—ஆவின்நெய், ஆவின்பால் வகைக்குப் படி-1, தாதளம்பழச்சாறு, நருள்ளிச்சாறு வகைக்குப் படி-½ இவைகளை ஓர் பாண்டத்திலிட்டு அதில் தாதுவஸ்ரீ இலை, தாதுவஸ்ரீவேர், கண் டங்கத்திரிவேர், கண்டங்கத்திரி இலை, முடக்கத்தானிலை, முசுமுசுக் கையிலை, சிறுவழுதுணைவேர், ஆவரைவேர்ப்பட்டை வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் பிரமாணம், மிளகு, திப்பிலி, சீரகம், அதிமது ரம், கோஷ்டம், கஸ்தூரிமஞ்சள், வாய்விளங்கம், கொத்தமல்லி விதை, ஏலம், தாளிசபத்திரி வகைக்கு வராகனெடை-5, சிற்றரத்தை வராகனெடை-8, இலவங்கப்பட்டை பலம்-1, சாதிக்காய், கிராம்பு வராகனெடை-3, சாதிபத்திரி வராகனெடை-2, சீனி வகைக்கு வராகனெடை-3, சாதிபத்திரி வராகனெடை-2, சீனி பலம்-3 இவைகளை யாவும் இடித்துச் சூரணித்து பால்விட்டரைத்து கலக்கி இருதபக்குவமாய்க் காய்ச்சி வடித்துவைத்துக் கொள்ளவும். இதில் வேளைக்கு 1-2 தேக்கரண்டிவீதம் தினம் இருவேளையாய் உண்டுவர சுரம், காசம் முதலிய சிலேத்தும சுரோகங்கள் நீரும். புளிநீக்கி இச்சாபத்தியமாக இருத்தல் நன்று.

வேறு முறை:—தாதுவஸ்ரீ, கண்டங்கத்திரி, ஆடாதோடை, முசுமுக்கை, இம்பூரல் வகைக்குப் பலம்-25, மிளகு, திப்பிலி, சிற் றரத்தை, அதிமதுரம், தாளிசபத்திரி, கடுக்காய்த்தோல் வகைக்குப்

பலம்-1 இலைகளை சுத்தம் செய்து 16-படி நீரிலிட்டு இரண்டுபடியளவிற்கு சுண்டக் காய்ச்சி வடித்து அத்துடன் ஆவின்பால் படி-2, ஆவின் நெய் படி-2 கூட்டி நிரகுது, நிரபலி, தானிசபத்திரி, கோஷ்டம், அக்காரகாரம், வாய்விளங்கம், சீரகம், ஓமம், நிற்றாத்தை, பேராத்தை, வால்மிளகு, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி வகைக்கு கழஞ்சு-1 ஆவின்பாலாலரைத்துப் போட்டுக் காய்ச்சி நிருதபதத்தில் வடித்து வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு தண்டி வீதம் நன்மிருவேளையாக அருந்திவர காசசோய்கள் குணமாகும்.

செம்முள்ளித் தைலம்:—செம்முள்ளிச் சமூலம் பலம்-100 இதைச் சுத்தம் செய்து ஓர் பாண்டத்திலிட்டு 4-மரக்கால் ஜலம்விட்டி அடுப்பிலேற்றி எரித்த எட்டிலொன்றுப்ச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி அதில் நல்லெண்ணெய் படி-½ விட்டு கருஞ்சீரகம், கோஷ்டம், கற்றுழைவேர், தக்கோலம் வகைக்குப் பலம்-1 வீதம் நீர்விட்டரைத்த கற்கத்தையும் கலந்து ஓர் தைலபாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயா லெரித்து தைலபதமாய்க் காய்ச்சி வடிக்கவும். இதை முடித்தலமாய் உபயோகித்துவர சுவாசகாசம், காசம் முதலிய கப சம்பந்தமான பிணிகள் குணமாகும்.

காசத் தைலம்:—நல்லெண்ணெய், பசும்பால் வகைக்குப் படி-1, இஞ்சி மிளகு, சீரகம், அதிமதுரம் வகைக்குப் பலம்-1, சண்பகமொட்டு பலம்-½ இலைகளை பால்விட்டரைத்துச் சேர்த்து தைலபாண்டத்திலிட்டு தைலபாகமாய்க் காய்ச்சி வடித்துவைத்துக் கொண்டு அப்பியங்கன ஸ்நானஞ் செய்துவர இருமல், சளி, காசம் முதலியன குணமாகும்.

காகமாசித் தைலம்:—சிகப்பு மணத்தக்காளி இலைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்குப் படி-½, இஞ்சி மிளகு, சுக்கு, திப்பிலி வகைக்குப் பலம்-½ வீதம் சூரணித்துச் சேர்த்து தைலபதமாய்க் காய்ச்சி வடித்துவைத்துக்கொண்டு இதில் வேளைக்கு 1-2 தேக்கரண்டி வீதம் தினமிருவேளையாக ஒரு மண்டலம் அருந்திவர சுவாச காசம், காசம் முதலியன குணமாகும்.

தாளக பற்பம்:—வெடியுப்பு, சோதுகொட்டை நீக்கிய பழம் புளி இலையிரண்டும் வகைக்குப் பலம் 10-வீதம் எடுத்து கல்லுரலிலிட்டு இடிக்க மொழுகுபோலாகும். இதைச் சிறு வில்லைகளாய்த் தட்டி வெய்யலில் நன்றாயுலர்த்தி, ஓர் இருப்பு சட்டியை அடுப்பிலேற்றி எரித்து நன்கு சூடானபிறகு மேற்படி வில்லைகளை ஒவ்வொன்றாய்க் கொளுத்தி சட்டியில் போடவும் வில்லைகள் எல்லாம் மத்தாப்பு போல் நன்கு பற்றி எரிந்து கரியாகும். (அப்போது அதினின்று எழும்பும் புகை முகத்தில் தாக்காமல் சற்று தூரமாயிருந்து செய்ய வேண்டும்.) பிறகு எல்லாம் எரிந்து கரியானதை வெண்ணெய் சேர்த்து மறித்துவர சாம்பல்போல் வெளுத்துவரும். பிறகு இத்தூள்

காளில் ஒரு பங்கு சுட்டு சுவர்ச்சாரம் தூள்செய்துப் பிசரி பிங்கான் தட்டிலிட்டு பனியில் வைக்க ஜெயநீர் கிடைக்கும். இதற்கு வெடியுப்பு ஜெயநீர் என்று பெயர். இப்படி தினந்தோறும் பனியில் வைத்து கிடைக்கும் ஜெயநீரை சேகரப்படுத்தவும்.

பிறகு சுண்ணும்புக்கற்களின் இடையில் வைத்து பனங்கள் விட்டு மூன்றுமுறை தாளித்து சுத்திசெய்து எடுத்த ஒரு பலம் தாளக் கட்டியை ஓர் மண்ணோட்டில் வைத்து அடுப்பிலேற்றிச் சிறு தீயில் எரித்து மூன் முடித்து வைத்துள்ள வெடியுப்பு ஜெயநீரில் பாதி பாகத்தைச் சிறுகுசிறிதாக சருக்குக் கொடுத்து எடுக்க தாளகமானது சிவந்த நிறத்துடன் ஒருவகையான கட்டாகும். பிறகு இதைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மிகுதியுள்ள வெடியுப்பு ஜெயநீரில் சிறிதுவிட்டு அரைத்து ஒரே வில்லையாகச் செய்து நன்கு உலர்த்தி ஓர் மண்ணோட்டில் கற்சுண்ணும்பைக் கொட்டி அழுத்தி அதன்மீது தாளக வில்லையை வைத்து மேலும் கற்சுண்ணும்பைக் கொட்டி நன்கு அழுத்தி மேலகல் மூடி வலுவாய்ச் சீலைமண்செய்து 5-முதல் 10-வரட்டிக்குள் சிறுபுடமாய்ப் போடவும். ஆறினபின்பு பிரித்து வில்லையைப் பார்க்க மஞ்சள்நிறம் சிறிது மாறி வெளுத்து வருவதுபோல் தோன்றும். பிறகு இதை மீண்டும் கல்வத்திலிட்டு முன்போல் வெடியுப்பு ஜெயநீர் விட்டு அரைத்து வில்லை செய்து உலர்த்தி கற்சுண்ணத்தினிடையில் வைத்து வலுவாய் சீலைசெய்து முன்போல் 10-15 விரட்டியில் புடமிடவும். இப்படி வெளுக்கும் வரையில் அதாவது இரண்டு மூன்று புடத்திற்குள் அவசியம் வெளுத்த நல்ல பற்பமாகும். அரைத்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு 2-3 அரிசி பிரமாணம் தினம் இரு வேளையாகதக்க அனுபானங்களில் கொடுத்துவர சூலை, சளி, காசம், சுவாசம், கபசுரம் முதலிய கபரோகங்கள் குணமாகும்.

காசங்களுக்கு பத்தியங்கள்:—அரிசிமாவு, கோதுமை, உளுந்து, பச்சைப்பயறு, கொள்ளு, ஆட்டுநெய், பால், கோவைப்பழம், கத்திரிக்காய், இளமுள்ளங்கி, பேயாவரைஇலை, பாலக்கீரை, சிறுகீரை, மாதுளம்பழம், திராக்ஷை, வெங்காயம், செல்பொரி, சுக்கு, திப்பிலி, மிளகு, வெந்நீர், தேன் இவைகள் காசரோகத்திற்குப் பத்தியங்கள்.

காசங்களுக்கு அபத்தியங்கள்:—மாதரின் புணர்ச்சி, கடின பதார்த்தங்கள், மதுரபதார்த்தங்கள், பகலில் தூக்கம், பால், தயிர், பழைய அன்னம், பாயசம் முதலியவைகள், தூபம் இவைகள் காசரோகத்திற்கு ஆகாது.

மூன்றும் பாகம் முற்றிற்று.

நான்காம் பாகம்

அனுபவ வைத்திய தேவ ரகசியம்

சிகிச்சா சாரம்

சுவாச சிகிச்சை

தசமூலாதி கியாழம்:—தசமூலத்தை கியாழம் வைத்து அதில் ஆமணக்குவேர் சூரணத்தை கலந்து சாப்பிட்டால் சுவாசம், காசம், பாரிசசூலை இவைகள் நீங்கும்.

சுண்டியாதி கியாழம்:—சுக்கு, கண்டுபாங்கி இவைகளை கியாழம்வைத்து சாப்பிட்டால் சுவாசரோகம் நீரும்.

திராக்ஷாதி கியாழம்:—திராக்ஷை, சிந்தில்கொடி, சுக்கு இவைகளை கியாழம்வைத்து அதில் திப்பிலிசூரணத்தை கலந்து சாப்பிட்டால் சுவாசம், காசம், சூலை, அக்கினிமந்தம், இருமல் இவைகள் நிவர்த்தியாகும்.

குளுத்தாதி கியாழம்:—கருங்கொள்ளு, சுக்கு, முள்ளங்கத்திரி வேர், ஆடாதோடை, ஆமணக்குவேர் இவைகளை கியாழம் வைத்து சாப்பிட்டால் சுவாசகாசங்கள் நிவர்த்தியாகும்.

தேவதார் வியாதி கியாழம்:—தேவதாரு, வசம்பு, கண்டங்கத்திரி, சுக்கு, காயபலம், புஷ்கரமூலம் இவைகளைச் சமனடையாய் கியாழம்வைத்து சாப்பிட்டால் சுவாசம், காசம் இவைகள் நீரும்.

சிம்ஹியாதி கியாழம்:—கண்டங்கத்திரி, மஞ்சள், ஆடாதோடை, சிந்தில்கொடி, சுக்கு, திப்பலி, கண்டுபாங்கி, கோரைக்கிழங்கு இவைகளை சமனடையாய் கியாழம்வைத்து அதில் திப்பிலி சூரணம், மிளகுசூரணம் கலந்து சாப்பிட்டால் சுவாசங்கள் நிவர்த்தியாகும்.

வாசாதி கியாழம்:—ஆடாதோடை, மஞ்சள், திப்பிலி, சிந்தில்கொடி, கண்டுபாங்கி, கோரைக்கிழங்கு, சுக்கு, கண்டங்கத்திரி

இலைகளை யொழமிட்டு அதில் நிப்பிலி, மிளகு இலைகளின் சூரணங்களைத் சாப்பிட்டால் சுவாசங்கள் நிவர்த்தியாகும்.

மரீச்யாதி தியாழம்:—மிளகு, கரிசாலை, சுக்கு, கருப்பு உப்பி வாங்கொடி, பேயவரை, ஆடாதோடை, சாரணிவேர், கண்டு பார்கி இலைகள் சமனடையாய் தியாழம்வைத்து அதில் நிப்பிலி சூரணங்களைத் சாப்பிட்டால் சுவாசங்கள், காசங்கள், சுரபங்கள் இலைகள் நீங்கும்.

சூரியாவர்த்த ரசம்:—பாதரசம் 1-பாகம், கெந்தி ½-பாகம் இலைகளை ஒருஜாமம் அரைத்த இலைகளைச்சமம் தாம்பரபஸ்பம் களைத்த உருண்டைசெய்த சேரைக்கிழங்கு அரைத்த மேலுக்கு லேபனஞ்செய்த வாலுகாயந்திரத்தில் வைத்த ஒருநாள் எரித்த ஆறியபிறகுஎடுத்த சத்திசெய்த கெந்தி, மிளகுசூரணம் இலைகளைக் களைத்த நெய் அனுபானத்துடன் சாப்பிட்டால் சுவாசங்கள் நீரும்.

அமிருதார்ணவ ரசம்:—சுத்திசெய்த பாதரசம், கெந்தி, லோக பற்பம், பொரித்த வெங்காரம், சிற்றரத்தை, வாய்விளங்கம், நிரபிலை, தேவதாரு, நிரிகடுகு, செந்தில்கொடி, தாமரைதண்டு, காபி, இலை களை சமனடையாய்ச் சூரணித்த 2-குன்றிமடை தேனில் கொடுத்தால் காசங்கள், சுவாசங்கள் நிவர்த்தியாகும்.

சுவாசகுடார ரசம்:—பாதரசம், கெந்தி, வசாபி, வெங்காரம், மனோசிலை இலைகள் சுத்திசெய்தது வகைக்கு ½-பலம், மிளகு 2-பலம், நிரிகடுகு 1½-பலம் இலைகள் யாவையும் சூரணித்த கல் வத்திலிட்டு ஒருஜாமம் கண்டு அரைத்த வைத்துக்கொள்க. இதை குன்றிமடை முதல் இரண்டு குன்றிவரையிலும் சாப்பிட்டால் ஐந்து விதசுவாசங்கள், காசங்கள், சுரபங்கள் இலைகள் சூரியகிரகண்ட இருமல்போல் நீங்கிவிடும்.

சுவாசகுடார ரசம்:—இரசம், கெந்தி, வசாபி, வெங்காரம், மனோசிலை இலைகள் சுத்திசெய்தது வகைக்கு 1-தோலை, மிளகு 8-தோலை நிரிகடுகு 6-தோலை இவை யாவையும் கல்வத்திலிட்டு கண்டு அரைத்த காடிகுப்பியில் வைத்துக்கொள்ள வேண்டியது. காலை மாலை குன்றிமடை வெற்றிலைச்சாற்றில் கொடுத்தால் சுவாசம், காசம், அக்கினிமந்தம், வாதசிலேஷ்மரோகம், சன்னிபாதம், மூர்ச்சை, அபஸ்மாரம் இலைகள் யாவும் நாசமாகும்.

சுவாசகுடார லேகியம்:—முன்னம்சுத்திரி ரசம் 256-பலம், காசனங்கண்ணி, உத்தாமணிவேர், ஆடாதோடை, கண்டங்கத்திரி, தாளிவேர், சதுரக்கள்ளி, இலைக்கள்ளி, கொடிக்கள்ளி இவை களின் ரசம் வகைக்கு 16-பலம் இலைகளைப் பாண்டத்தில்

போட்டு 102-பலம், வெல்லத்தை கலக்கி வடிகட்டி, பாகு பதமாக காய்ச்சி, அதில் கடுக்காய்த்தூள், நிரிகடுகு, செவ்வியம், மோடி, சித்திரமூலம், நிரபிலை, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி, நாககேசரம், தாளிசப்பத்திரி, சிறுமபு, இத்துப்பு, வசம்பு, ஓமம், சீரகம், கண்டுபாரங்கி, இலைகள்வகைக்கு 8-பலம், மைபோல் சூரணித்து வஸ்திராயஞ் செய்து, அதில் கலந்த தேன் 16-பலஞ் சேர்த்த இலேகியப் பதமாகக்கினறி இறக்கிவைத்துக் கொள்ளவும். இதை சாப்பிட்டால், காசம், சுவாசம், வாந்தி, விக்கல், பாண்டு, உதிரம், பகந்தரம், பிரசம், சுரம் இலைகள் யாவும் நிவர்த்தியாகும்.

பஞ்சபத்திர சார லேகியம்:—ஆடாதோடை காசனங்கண்ணி, சொச்சி, அழகிய, கண்டங்கத்திரி, இந்த நிறுகளின் இலை இரசத் தை பிரத்தியேகமாக பிழிந்தி அந்த ரசங்கள் சமனடையாக ஒன் றுக்குக் கலந்த அதில் நிப்பிலி சூரணத்தையும் சர்க்கரையும் கலந்த லேகியபாகமாக இளகி நெய் தேன்கலந்த சாப்பிட்டால் தீவிரமான சுவாசங்கள் நிவர்த்தியாகும்.

களிங்காதி லேகியம்:—வெட்பாலை பழரசம் 16-பலம், வெல்லம் 10-பலஞ்சேர்த்த காய்ச்சி பாகுபதம் வரும்போது, அதில் சுக்கு, நிப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், செல்லிவற்றல், இலைகள் வகைக்கு ½-பலம், பிரமாணஞ் சூரணித்த கலந்து, 4-பலம் தேன் கலந்த இளஞ்சூடான லேகிய பதமாகும். இதை காலையில் சுண்டக்கா யளவு சாப்பிட்டு வந்தால், சுவாசங்கள், காசங்கள், பாண்டுரோகம், குன்மம், உதிரரோகம், அஷ்டமலவாதம், சூலை, ஜீரணசுரம், விக்கம், சுவாசை இலைகள் நாசமாகும்.

இலகுவியாக்கிரஹி லேகியம்:—சண்டங்கத்திரிவேர் 100-பலம், கடுக்காய் 100-பலம், 800-பலம் ஜலத்தில்கொட்டி, சாலில் ஒரு பாகம் மீறும்படியாக தியாழம் சுண்டக்காய்ச்சி, அதை வடிகட்டி, கடுக்காய் விதையை பெடுத்துவிட்டு அந்ததியாழத்திலேயே போட்டு 100-பலம் வெல்லத்தைக்கலந்த காய்ச்சி பாகுபதம் வரும்போது அதில் அதிமதரம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய், நாககேசரம், சுக்கு நிப்பிலி, மிளகு இலைகள் வகைக்கு 3-பலம் விதஞ் சூரணித்துப்போட்டு, தேன் 6-பலங்கள் சேர்த்து இளறிஞல் லேகியம் தயாராகும். இதை சாப்பிட்டால், சுவாசங்கள், மார்பு சோய், அருசி, காசங்கள், சிரோரோகம், சிரருத்ரோகம் இலைகள் நாசமாகும்.

சுவாத்திராதி லேகியம்:—சண்டங்கத்திரி 100-பலம், இலை களை 256-பலஞ் ஜலத்தில் கொட்டி, சாலிலொன்றுக் தியாழஞ் சண்டக்காய்ச்சி, வடிகட்டி அதில் 100-பலம் வெல்லத்தை கலந்த அதில் பிருக்ஞ் கடுக்காய் விதையை பெடுத்த விட்டு அதை மறு படியும் தியாழத்திலேயே அரைத்த போட்டு லேகியபதமாக

சமைத்து ஆறியபிறகு 6-பலம் தேன் வார்த்து, நிரிகடுகு 3-பலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய், சாகசேசரம் இலைகள் வகைக்கு ½-பலஞ் சூரணித்து அத்துடன் கலந்து கொள்ளல் லேகியம் தயாராகும். இதை சாப்பிட்டால், கபவிசாரம், சுவாசங்கள், சோஷை, பஞ்சாசசங்கள், விக்கல், ஹிருதய ரோகங்கள், அபஸ்மாரம் இலைகள் நீங்கும். அக்கினி தீபனம் உண்டாகும்.

கண்டகாரியாதி லேகியம்:—கண்டங்கத்திரி 100-பலம், 256-பலஞ் சலத்தில் கொட்டி, சதவிகிதமொன்றுப் பொழுஞ் சண்டக் காய்ச்சி அதில் சித்திரமூலம், செவ்வியம், தெந்திரமூலம், சோனைக் கிழங்கு, கடுக்காய்ப்பூ, சுக்கு, திப்பிலி, மிளகு, பூனைக்காஞ்சொரி, கண்டுபாரங்கி, சிற்றரத்தை, இச்சிலிக்கிழங்கு இலைகள் வகைக்கு 1-பலம் விதஞ் சூரணித்தப்போட்டு சர்க்கரை 20-பலம், நெய், எண்ணெய் இலைகள் தனித்தனி 8-பலம் விதஞ் சேர்த்து லேகிய பதமாகக் கொதி ஆறியபிறகு தேன் 8-பலம், மூவிலுப்பு சூரணம் 4-பலம், திப்பிலி சூரணம் 4-பலம் இலைகள் யாவையும் ஒன்றுக் கலந்து நெய்பில் ஊறிய பாண்டத்தில் லேகியத்தை வைத்து தாளிய புடமிட வேண்டியது. பிறகு அந்த லேகியத்தை கடுக்காய் பிரமாணம் காலை மாலை கொடுத்தால் காசங்கள், சுவாசங்கள் இலைகள் நீங்கும்.

வாசாவ லேகியம்:—ஆடாதோடை 100-பலம், 800-பலம் சலத்தில் கொட்டி, சதவிகிதமொன்றுக் கொழமிட்டு அதில் கடுக்காய் சூரணம், கற்கண்டு இலைகள் வகைக்கு 64-பலம்கொட்டி லேகிய பக்குவமாகக் கொதி ஆறியபிறகு, மூவிலுப்பு சூரணம் 2-பலம், திப்பிலி ½-பலம், சாதிச் சாதம் வகைக்கு 1-பலம் இலைகளை சூரணித்துக் கலந்த தேன் 8-பலம், போட்டு கலக்கி தாளிய புடமிட வேண்டியது. பிறகு கொடுத்தால், சுவாசம், காசம், சூல ரோகம், ரத்தபித்தம், கபம், பீசரோகம், இருதயரோகம், தேக மெலிவு ரத்தவாந்தி, இலைகள் நிவர்த்தியாகும்.

திராக்ஷாதி லேகியம்:—திராக்ஷை, கடுக்காய், சோனைக்கிழங்கு, கடுக்காய்பூ, பூனைகாஞ்சொரி இலைகளைச் சூரணித்த நெய், தேன் கலந்து சாப்பிட்டால், கொடுமையான சுவாசரோகங்கள் நிவர்த்தியாகும்.

ஹரீதிராத்தியவ லேகியம்:—மஞ்சள், மிளகு, திராக்ஷை, திப்பிலி, சித்தரத்தை, சுக்கு, இலைகளைச் சூரணித்து அதில் வெல்லம், கலந்துக்கொடுத்தால் பிராணத்தை சங்கரிக்கும் சுவாசங்கள் நிவர்த்தியாகும்

கண்டுபாரங்கி லேகியம்,—கண்டுபாரங்கி, கடுக்காய், கடுகு ரோகணி, அதிமதுரம், சுக்கு, திப்பிலி, மிளகு, இலைகள் சமனடை

யாகச் சூரணித்து தேன் நெய் கலந்து கொடுத்தால் சுவாசரோகங்கள் நீங்கும்.

குடாத்தியவ லேகியம்:—வெல்லம், மாதுளம் பழத்தோல், திராக்ஷை, திப்பிலி, சுக்கு, இலைகளை சமனடையாகச் சூரணித்து கொடிமாதுளம்பழரசம், தேன்கலந்து கொடுத்தால் சுவாசங்கள் நீங்கும்.

விபீதக லேகியம்:—தான்றிக்காய் சோலை ஆட்டு மூத்திரத்தில் வேகவைத்து உலர்த்திச் சூரணித்து நிரிகடிபிரமாணம் தேனுடன் கலந்து சாப்பிட்டுவர சுவாசகாசங்கள் நீங்கும்.

சுருங்கியாதி சூரணம்:—கடுக்காய்ப்பூ, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், கொல்லிவற்றல், கண்டங்கத்திரி, கண்டுபாரங்கி, புஷ்கரமூலம், ஜடாமாஞ்சி, இந்துப்பு, சவ்வர்ச்சலவணம், பிடாலவணம், காசலவணம், பாதிரிலவணம், இலைகளை சமனடையாகச் சூரணித்து வெந்நீரில் சாப்பிட்டால், விக்கல், சுவாசங்கள், ஊர்த்துவவாய்வு, காசங்கள், அருசி, இலைகள் நீங்கும்.

சட்டியாதி சூரணம்:—இச்சிலிக்கிழங்கு, கண்டுபாரங்கி, வசம்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், பாதிரிலவணம், புஷ்கரமூலம், கடுக்காய்ப்பூ, இலைகளை சமனடையாகச் சூரணித்து தேன் கலந்து சாப்பிட்டால் சுவாசகாசங்கள் நீங்கும்.

பாரங்கியாதி சூரணம்:—கண்டுபாரங்கி, சுக்கு, இலைகளைச் சூரணித்து இஞ்சிரசத்தில் சாப்பிட்டால் சுவாசரோகம் நீங்கும்.

விடங்காதி சூரணம்:—வாய்விளங்கம், திப்பிலி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இலைகள் வகைக்கு ½-பலம், மிளகு, ½-பலம், சுக்கு 4-பலம், இலைகளைச் சூரணித்து சூரணத்திற்கு சமம் சர்க்கரைகலந்து ½-பலம், விதம் சாப்பிட்டால் சுவாசங்கள், காசங்கள், சுரம், பிளீஹம், பாண்டு, இலைகள் நீங்கும்.

தாடிம்பாதி சூரணம்:—மாதுளம் பழத்தோல், சுக்கு, பெருங்காயம், திப்பிலி, இந்துப்பு, இலைகளைச் சூரணித்து கொண்டைப் புளிரசத்துடன் கலந்து சாப்பிட்டால் சுவாசங்கள் ஹிருத்ரோகம் இலைகள் நீங்கும்.

கூஷ்மாண்டசிபா சூரணம்:—கலியாண பூசனிவேர் சூரணத்தை வெந்நீரில் சாப்பிட்டால் சுவாசங்கள் காசங்கள் இலைகள் நீங்கும்.

சுண்டியாதி சூரணம்:—சுக்கு, 6-பாகம், திப்பிலி, 5-பாகம், மிளகு, 4-பாகம், அதிமதுரம், 3-பாகம், லவங்கப்பட்டை, 2-பாகம், ஏலக்காய், 1-பாகம், இலைகள் யாவையுஞ் சூரணித்து

இந்த சூரணத்திற்கு சமனடை சர்க்கரை வைத்து சாப்பிட்டால், அக்கினிமந்தம், சுரம், சுவாசம், கண்டரோகம், இருதயரோகம், இவைகள் நிவர்த்தியாகும்.

மர்க்கடீ சூரணம்:—பூனைக்காஞ்சொரி விரைச்சூரணத்தை தேன், நெய், இவைகளுடன் வைத்து சாப்பிட்டால் சுவாசரோகம் நிவர்த்தியாகும்.

பாரதாதி மாத்திரைகள்:—பாதரசம், கெந்தி, ரசபற்பம், தாம்பிரபற்பம், சுக்கு, திப்பிலி, மிளகு, சித்திரமூலம், சர்ஜரசம், இவைகளை சமனடையாகச் சூரணித்து வெற்றிலை சாற்றினால் 10-நாள் அரைத்து இஞ்சிரசத்தினால் 10-நாள் அரைத்து மிளகு அளவு மாத்திரைகள் செய்து சாப்பிட்டால், மந்தாக்கினி பெரோகம், சுவாசங்கள், காசங்கள், இவைகள் தீரும்.

இலவங்காதி மாத்திரைகள்:—இலவங்கம், மிளகு, நிரிபலை இவைகளைச் சூரணித்து வேளைக்கை பொழுதினால் அரைத்து மாத்திரைகள் செய்து கொடுத்தால் சுவாசங்கள் காசங்கள் இவைகள் நிவர்த்தியாகும்.

வேறுவிதம்:—இலவங்கம், சுக்கு, திப்பிலி, மிளகு, ரசபற்பம், காசனிக்கண்ணி, கண்டங்கத்திரி, தாளிக்கீரை, இவைகளைச் சமனடையாகச் சூரணித்து கற்றுழை ரசத்தில் அரைத்து மாத்திரைகள் செய்து கொடுத்தால் சுவாசரோகம் நிவர்த்தியாகும்.

திரிகடுகு மாத்திரைகள்:—சுக்கு, திப்பிலி, மிளகு, பொரித்த வெங்காரம், இவைகளைச் சூரணித்து வெற்றிலை ரசத்தினால் அரைத்து மாத்திரைகள் செய்து சாப்பிட்டால் சுவாசங்கள் தீரும்.

சுவாசகுடோரி மாத்திரை:—வெள்ளெருக்கம் பூவுடன் சமனடை மிளகு சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைத்து மெழுகுபதத்தில் குன்றியளவு மாத்திரைகளாய்ச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு வேளைக்கு 1-மாத்திரை வீதம் நினம் இருவேளை ஆடாதோடை சாரம் இஞ்சிசாரம் இவைகளில் கொடுத்துவர முறையே சுவாசகாசம், முசுகாசம் முதலியன குணமாகும்.

அர்க்காதிக் கிருதம்:—எருக்கம்பூ சுமார் 15 அல்லது 20 பூக்கள், இலவங்கம், இலவங்கப்பத்திரி, திப்பிலி வகைக்கு வராகனெடை-½. இவைகளைப் பொடித்து பால்விட்டு அரைத்த கற்கமாகி, 5-பலம் பசு நெய்யுடன் சேர்த்த பதமுடன் காய்ச்சி கிருதபதத்தில் வடித்து வைத்துக்கொண்டு வேளைக்கு ½-தோலா வீதம் நினம் இருவேளைபோ அருந்திவர சுவாசகாசம், தீர்சனம் முதலியன குணமாகும்.

கஸ்தூரி மாத்திரை:—கஸ்தூரி வராகனெடை-1, சுக்கு வராகனெடை-4, சாதிக்காய் வராகனெடை-2, கோஷ்டம் வராகனெடை-2, குங்குமப்பூ வராகனெடை-3, இலவங்கம் வராகனெடை-2, அக்காரகாரம் வராகனெடை-2, திப்பிலி வராகனெடை-2 இவைகளைப் பொடித்து முறைப்படிக் கல்வத்திலிட்டு மூலிப்பால் அல்லது இலவங்கத் தியாழம்விட்டு ஒருஜாமம் அரைத்து சிறு குன்றியளவு மாத்திரைகளாய்ச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தேன் அல்லது தக்க அனுபானங்களில் கொடுத்துவர சுவாசகாசம், இருமல், கபக்கட்டு, தீர்சனம், கபகாசம் முதலியன குணமாகும். சிறுவர்கட்கு இம்மாத்திரையில் ½ அல்லது ¼ பாகமும் குழந்தைகட்கு ஆறில் ஒருபாகமும் தாய்ப்பாலில் உரைத்து கொடுத்துவர, சுரம், சன்னி, கபக்கட்டு, மாந்தம், இசிவு முதலியன குணமாகும்.

தாளக மாத்திரை:—கற்சுண்ணாம்பினிடையே வைத்து பணங்கள் விட்டுத் தாளித்த மூன்றுமுறை சுத்திசெய்த தாளகம் ஒரு தோலா எடைக்கு எடுத்த அதை ஓர் மண்ணோட்டில் வைத்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து, மூலிப்பால், இஞ்சிச்சாறு, தும்பை யிலைச்சாறு ஆகிய இவைகள் ஒவ்வொன்றிலும் தனித்தனி முறையே ஒவ்வொரு மணி நேரம் சுருக்குக் கொடுத்த இத்துடன் மொட்டு நீக்கிய நிரம்பு தோலா-1, உயர்ந்த பல்பெருங்காயம் தோலா-1 சேர்த்துக் கல்வத்திலிட்டு இஞ்சிச்சாறு விட்டு ஒரு ஜாமம் நன்கு அரைத்து மெழுகுபதத்தில் சிறுபயறு பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்தவும்.

இதில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் இருவேளை தாய்ப்பால் அல்லது கம்மாறு வெற்றிலைச்சாறு இவைகளில் அனுபானஞ் செய்து குழந்தைகட்குப் புகட்டிவர இருமல், கபக்கட்டு, கபமார்தம் முதலியன குணமாகும். பெரியவர்களுக்கு வேளைக்கு 2 முதல் 4-மாத்திரைகள் வீதம் தினம் இருவேளை கம்மாறு வெற்றிலையில் வைத்து மடித்து மென்று தின்னும்படிச் செய்யலாம். இதனால் இருமல், சுரம், சுவாசகாசம் முதலியன குணமாகும்.

திரிலோக சூடாமணி மாத்திரை:—சுத்திசெய்த லிங்கம், தாளகம், மனோசிலை, சாபி வகைக்குப் பழஞ்சு-1, சுக்கு, மிளகு, திப்பிலி, பொரித்த வெங்காரம் வகைக்குப் பலம்-2 இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டு இஞ்சிச்சாறு விட்டு நான்கு ஜாமம் நன்கு அரைத்து மெழுகுபதத்தில் குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்தவும். இதில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் இருவேளை இஞ்சி சாரம், ஆடாதோடை சாரம், துளசி சாரம், திற்றாத்தைக் குடிநீர் முதலிய அனுபானங்களில் ஏதேனும் ஒன்றில் கொடுத்துவர சுவாசம், காசம், சுரம், கபக்கட்டு, கபகாசம், முசுகாசம் முதலியன குணமாகும்.

திப்பிலி ரசாயணம்:—அரிசிதிப்பிலி பலம்-10, மிளகு பலம்-5, சுக்கு பலம்-5, சீரகம் பலம்-2, கருஞ்சீரகம் பலம்-2, ஓமம் பலம்-2, சித்திரத்தை பலம்-2, சித்திரமூலவேர்ப்பட்டை பலம்-1, தான்றி பத்திரி பலம்-1, இலவங்கப்பத்திரி பலம்-1, இலவங்கப்பட்டை பலம்-1, இலவங்கம பலம்-1, கடுக்காய்தோல் பலம்-1, செல்லிவற்றல் பலம்-1, தான்றிக்காய்தோல் பலம்-1, ஏலம் பலம்-1 இவைகளை இலவறுப்பாய் வறுத்திடித்துச் சூரணித்து சமன்சர்க்கரை சேர்த்துக் கலந்து தேன்விட்டுப் பிசைந்து இராபணமாய்ச் செய்து வைத்துக் கொள்ளவும். இதில் வேளைக்கு வெருகடிப்பிரமாணம் நினம் இரு வேளைபாக அருந்திவர இருமல், சுரம், சுவாசம், காசம் முதலிய கபரோகங்கள் யாவும் குணமாகும்.

திப்பிலியாதிச் சூரணம்:—திறுதிப்பிலி பலம்-1, திறுகருஞ்சீரகம் பலம்-2, சுக்கு பலம-2, கண்டங்கத்திரிவிதை பலம்-2, அதிமதுரம் பலம்-2, அதிமதுரப்பால் பலம்-2, சித்திரத்தை பலம்-2, அக்காரம் பலம்-2, ஊமத்தம்விதை தோலை-½, அபினி தோலை-½.

ஊமத்தம்விதையை எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்றுநாள் ஊறவைத்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும். பிறகு இத்துடன் அபினி நீங்கலாக மற்றச் சரக்குகளைச் சேர்த்து இடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துக் கல்வத்திலிட்டு அபினியைச் சிறிது வெந்நீரில் கரைத்த சூரணத்தில் தெளித்துப் பிசரி, ஒரு ஜாமம் கன்று களக்க அரைத்து உலர்த்தி பத்திரப்படுத்தவும். இதில் வேளைக்கு 5 முதல் 10 குன்றி எடை வீதம் நினம் இருவேளை தேனில் கொடுத்தால் இருமல், சுவாசகாசம் முதலியன குணமாகும்.

பஞ்சகார கிருதம்:—ஆடாதோடை, செந்தில்கொடி, காசநோய் கண்ணி, பேயாவரை, கண்டங்கத்திரி இவைகளின் ரசங்கள் 2-பாகம், நெய் 1-பாகம், இவைகளுக்கு சமமாக பால்கலந்து கிருதபக்குவமாக காய்ச்சி அதில் கண்டுபாரங்கி, வாய்விளங்கம், நிரிபலி, சித்தரத்தை, நிரிகடுகு, யவக்ஷாரம், கடுக்காய்பூ, இவைகளின் சூரணத்தை நெய்யிற்கு எட்டிலொருபாகம் கலக்கி கொடுத்தால், சுவாசங்கள், சூலைகள், ரக்தபித்தம், ஹிருத்ரோகம், விஷரோகம், பஞ்சகாசங்கள் இவைகள் நீங்கும்.

பாரங்கிகுட ரசாயனம்:—கண்டுபாரங்கி, தசமூலங்கள், கடுக்காய், இவைகள் வகைக்கு 100-பலம், 400-பலம், ஜலத்திற்போட்டு, சாலாவதுபாகம் மீறும்படியாக கண்டக்காய்ச்சி, வடிகட்டி அதில் 100-பலம், வெல்லம், விரையெடுத்த கடுக்காயைப்போட்டு மந்தாக்கினியால் லேகியபாகமாக சமைத்த அதில் சுக்கு, திப்பிலி, மிளகு, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய், இவைகள் வகைக்கு 1-பலம், யவக்ஷாரம் ½-பலம், இவைகளின் சூரணமும், தேன் 6-பலமும் விட்டு கலக்கி வைத்துக்கொள்ளவும். வேளைக்கு ஒரு கடுக்காய் அளவு லேகியம் சாப்பிட்டால், சுவாசங்கள் ஐந்துவித காசங்கள் மூலவியாதி, அரோசகம், குன்மம், சூலை, சூபம், இவைகள் நீங்கும். அக்கினிதீபனம்-பலம்-மேனி-இவைகளுண்டாக்கும்,

சுவாசரோகத்திற்கு பத்தியங்கள்:—பேதியாகும்படிசெய்தல், விரேசனவாங்கள், புகைகுடித்தல், வாந்தி செய்தல் பகல் நித்திரை, 60-சாளி, பயிராகும் பழயநெல்லரிசி, கோதுமை, பயறானியம், மூயல், மயில், காடை, இவைகளின் மாமிசங்கள், காட்டுமிருகங்கள், பக்ஷிகள் இவைகளின் மாமிசங்கள், பழைய நெய், ஆட்டுநெய் பால், தேன், புடலங்காய், கத்திரிக்காய், வெள்ளைப்பூண்டு, கோவைக்காய், எலுமிச்சன், நிராஸுரை, ஏலக்காய், புஷ்கரமூலம், வெந்நீர், நிரிகடுகு, கோமூத்திரம், இவைகள் சுவாசரோகத்திற்கு பத்தியங்களென்று அறியவேண்டியது.

அபத்தியங்கள்:—ரத்தம்வடிதல், கிழக்குகாற்று, வாயுபதார்த்தங்கள், செம்மரியாடு, பால், நெய், கெட்டசலம், மீன்கள், கந்தமூலங்கள், கடுகு, சூசுமம், சீனம், ஆகிய அன்னபானங்கள், மூத்திரம், சர்தி, நாகம், சுவாசம், இவைகளை அடக்குதல், கலியம், வஸ்திகர்மம், சிரமம், இவைகளை சுவாசரோகி கிவர்த்திக்க வேண்டியது.

விக்கல் ரோக சிகிச்சை

குளித்தாதி கியாழம்:—கொள்ளு, சுக்கு, கண்டங்கத்திரி, ஆடாதோடை இவைகளை கியாழம் வைத்து அதில் ஆமணக்கு வேர் சூரணத்தைப் போட்டு சாப்பிட்டால், விக்கல், மேல்மூச்சு இவைகள் நீங்கும்.

அபயாதி கல்கம்:—கடுக்காய், சுக்கு இவைகளை கல்கஞ்செய்து நாவது அல்லது புஷ்கரமூலம் யவரானல், மிளகு இவைகளை கல்கஞ் செய்தாவது வெந்நீரில் சாப்பிட்டால் சுவாசம், விக்கல் இவைகள் நீங்கும்.

சந்திரசூர கியாழம்:—கோரைக்கிழங்கு வீரை 1-பாகம், 8-பாகம் ஜலத்தில் கொட்டி வீரைகள் மிருது ஆகிறவரையிலும் கஷாயம் காய்ச்சி வடிகட்டி, ஒருபலம் விகிதம் அடிக்கடி குடித்து வந்தால் விக்கல் நீங்கும்.

குளித்தாதி கியாழம் (வேறு):—கொள்ளு, பயறானியம், இலந்தை, வெட்டிவேர், தசமூலங்கள், சிற்றமுட்டி இவைகளை கியாழம் வைத்து சாப்பிட்டால் காசங்கள், சுவாசங்கள், விக்கல் இவைகள் நீங்கும்.

தாத்திரியாதி தயாழம்:—செவ்விக்காய் தோல், நிப்பிலி, சுக்கு இவைகளின் பொழுத்தில் சர்க்கரை கலந்து சாப்பிட்டால் விக்கல் நீங்கும்.

தசமூலி தயாழம்:—தசமூல பொழுத்தில் தேன், சுக்த பஸ்பம், இவைகளைக் கலந்து சாப்பிட்டால் ஐந்துவித விக்கல்கள் நிவர்த்தி யாகும்.

சங்கதூள ரசம்:—பாதரசம், அப்பிரக பற்பம், வெள்ளை பற்பம் இவைகள் சமனளவு இவைகளுக்கு சமனளவு வைக்கிருந்த பற்பம். இவைகளுக்கு ஐந்து பாகங்கள் அதிகமாய் சங்கு பற்பத்தைக் கலந்து அரைத்து 4-குன்றிஎடை தேனுடன் சாப்பிட்டால் ஐந்து வித விக்கல்கள் நீங்கும்.

மேகடம்பா இரசம்:—சுத்திசெய்த பாதரசம், சுத்திசெய்த கெந்தி, சமனளவு இவைகளை தெளிவேர் ரசத்திலும் அரைத்து உருண்டை செய்து வஜ்ரமூசையில் வைத்து மணல் மறையில் புடமிட்டு ஆறியபிறகு எடுத்து மறுபடியும், அதை தசமூல பொழுத்தில் இரண்டு ஜாமம் அரைத்து குன்றிஎடை அனுபானத்துடன் கொடுத்தால் விக்கல், சுவாசம், சுரம் இவைகள் நீங்கும்.

ஹரித்திராதி லேகியம்:—மஞ்சள், மிளகு, நிராலசுத்தி, வெல்லம், சித்தரத்தை, நிப்பிலி, சிச்சிலிக்கிழங்கு, இவைகளைச் சூரணித்து எண்ணெயுடன் கலந்து சாப்பிட்டால் பிராணஹரமான விக்கல், சுவாசங்கள் நிவர்த்தியாகும்.

சிறி லேகியம்:—மயிலிறகு சுட்ட சாம்பல், நிப்பிலிசூரணம், இவைகளை நெனில் கலந்து, அடிக்கடி சாப்பிட்டால் பிரபலமான விக்கல், சுவாசங்கள், வாந்திகள் இவைகள் நீங்கும்.

பிப்பல்யாதி லேகியம்:—நிப்பிலிமூலம், அதிமதுரம், வெல்லம், கோமயம், குதிரை லத்தி இவைகளை தயாழம் வைத்து வடிகட்டி தேன், நெய் கலந்து சாப்பிட்டால் விக்கல் சுவாசம் இவைகள் நீங்கும்.

கோலமஞ்ஜாதி லேகியம்:—இலந்தை பழம் கொட்டை நீக்கியது, சருமாகல், பெரிமாவு, கடுரோகணி, சாகசேசம், சுக்கல் இவைகளை சூரணித்த நேனுடனாவது அல்லது நிப்பிலி, செவ்விக்காய் தோல், சர்க்கரை, சுக்கு, அன்னபேதி, தயிர் இவைகளைச் சூரணித்து தேன்கலந்தாவது சாப்பிட்டால் விக்கல் நீங்கும்.

யஷ்டியாதி சூரணம்:—அதிமதுரசூரணத்தை நேனுடன் கலந்து சாப்பிட்டாலும் அல்லது நிப்பிலி சூரணத்தை சர்க்கரை கலந்து சாப்பிட்டாலும் அல்லது கொஞ்சம் சூடாயிருக்கும் பால், நெய் கருப்புரம் இவைகளை கலந்து சாப்பிட்டாலும் ஐந்துவித விக்கல்கள் நீங்கும்.

விசுவா சூரணம்:—சுக்கு, கடுக்காய், நிப்பிலி இவைகளின் சூரணத்தில் சர்க்கரை தேன்கலந்து சாப்பிட்டாலும் அல்லது சிந்தில் கொடி சுக்கு இவைகளைச் சூரணித்து நெயெஞ்செய்தாலும் விக்கல் ரோகம் நிவர்த்தியாகும்.

கிருஷ்ண சூரணம்:—நிப்பிலி, செவ்விக்காய்தோல், சுக்கு இவைகளைச் சூரணித்து தேன் சர்க்கரை கலந்து அடிக்கடி சாப்பிட்டால் விக்கல் பெருமூச்சு இவைகள் நிவர்த்தியாகும்.

சுருங்கியாதி சூரணம்:—கடுக்காய்பூ, சுக்கு, நிப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், செல்லிவற்றல், கண்டங்கத்திரி, கண்டுபாரங்கி, புஷ்கரமூலம், ஜடாமாஞ்சி, இந்துப்பு இவைகளைச் சூரணித்து வெந்நீரில் கொடுத்தால் விக்கல், மேல்மூச்சு, ஊர்த்துவவாதம், காசம், அருசி, பினசம் இவைகள் நிவர்த்தியாகும்.

பாரங்கியாதி சூரணம்:—கண்டுபாரங்கி, சுக்கு இவைகளைச் சூரணித்து வெந்நீரில் கொடுத்தாலும் அல்லது சர்க்கரையுடன் கொடுத்தாலும் விக்கல், மேல்மூச்சு இவைகள் நீங்கும்.

தசமூலாதியவாகு:—தசமூலங்கள், சிச்சிலிக்கிழங்கு, சிற்றாத்தை, நிப்பிலி, சுக்கு, புஷ்கரமூலம், கடுக்காய்பூ, கீழாநெல்லி, கண்டுபாரங்கி, செந்தில்கொடி, கோரைக்கிழங்கு இவைகளின் சூரணத்தில் தேன்கலந்து சாப்பிட்டாலும் அல்லது இவைகளை தயாழம் போட்டு சாப்பிட்டாலும் மேல்மூச்சு, ஹிருதயரோகம், பார்சுசூலை, விக்கல் இவைகளை நிவர்த்திக்கச்செய்யும்.

பெருங்காயம், சவ்வர்ச்சலவணம், சீரகம், பிடாலலவணம், புஷ்கரமூலம், சித்திரமூலம், கடுக்காய்பூ இவைகளைக் தயாழமிட்டுக் குடித்தாலும் விக்கல், சுவாசரோகம் இவைகள் நீங்கும்.

சாகதுக்த யோகம்:—ஆட்டுப்பாலில் சுக்கு சூரணத்தைப் போட்டு பக்குவஞ்செய்து சாப்பிட்டாலும் கொண்டைப்புளி சாரத்தில் பொரிமாவு, இந்துப்பை கலந்து சாப்பட்டாலும் விக்கல் நிவர்த்தியாகும்.

கொடிமாதுளம்பழ ரசத்தில் தேன், சவ்வர்ச்சலவணம் கலந்து சாப்பிட்டாலும் அல்லது சுக்கு, செவ்விக்காய்த்தோல், நிப்பிலி இவைகளின் சூரணத்தில் தேன் கலந்து சாப்பிட்டாலும் விக்கல் நீங்கும்.

ரக்தசந்தன யோகம்:—ரக்தசந்தனத்தை முலைப்பாலில் கலந்து கொஞ்சம் அனல் காண்பித்து இந்துப்பைக் கலந்து சாப்பிட்டாலும் அல்லது இந்துப்பை சலத்தில் அரைத்து நெயெஞ் செய்தாலும் விக்கல் நீங்கும்.

விளாம்பழரசத்தினாலிலும் அல்லது நெல்லிக்காய் ரசத்தினாலது நிப்பிலிசூரணத்தை தேன் கலந்து சாப்பிட்டாலும் விக்கல், மேல் மூச்சு இவைகள் நீங்கும்.

மதுக ரசியம்:—அதிமதுரம், தேன், அல்லது நிப்பிலி, சர்க்கரை அல்லது சுக்கு, வெல்லம் இவைகளை பிரத்தியேகமாய் ரசியஞ் செய்தால் விக்கல் நீங்கும்.

மாக்ஷிகா ரசியம்:—ரசத்தை முகிழ்ப்பாலில் கலந்து ரசியஞ் செய்தாலும் அல்லது அரக்கு ஜலத்தில் அரைத்து ரசியஞ்செய்தாலும் அல்லது முகிழ்ப்பாலில் சந்தனத்தைக் கலந்து ரசியஞ் செய்தாலும் விக்கல் நீங்கும்.

மாஷாதி தூபம்:—உளுந்து, மஞ்சள் இவைகளைச் சூரணித்துக் கடலைபொட்டு கலந்த தூபமிட்டால் மேல்மூச்சு, ஊர்த்தவாதம், சுவாசம், ஹிருதயரோகம், விக்கல் இவைகளை நிவர்த்திக்கச் செய்யும்.

ஹிங்குவாதி தூபம்:—பெருங்காயம், உளுந்து இவைகளைச் சூரணித்த புகையிலைசாற்றை பெருப்பிபோட்டு அந்த புகையை குடித்தால் ஐந்துவித விக்கல்கள் நிற்கும்.

ஹேம மாத்திரைகள்:—சுவர்ணபற்பம், முத்துபற்பம், தாம்பிரபற்பம், கர்ப்பற்பம், இவைகளை பொன்றாகக் கலந்து உகுன்றி எடை கொடிமாதளம்பழ ரசத்தில் தேன், சுவர்ச்சலவணம் கலந்து சாப்பிட்டால் விக்கல் நீங்கும்.

பிப்பல்யாதி லோஹம்:—நிப்பிலி, செஞ்சிக்காய்தோல், நிராவாரி, இலந்தைக் கொட்டையின் பருப்பு, சர்க்கரை, வாய்விளங்கம், கோஷ்டம் இவைகளைச் சூரணித்த இந்த சூரணத்தில் கர்ப்பச் செந்தூரம் கூட்டித் தேன்கலந்து சாப்பிட்டால் அசாத்தியமான வாந்தி, விக்கல், தாகம், இவைகள் மூன்று காட்களில் நிவர்த்தியாகும்..

விக்கல்களில் பத்தியங்கள்:—கிச்சிலிக்கிழங்கு. புஷ்கரமூலம், நிரிகடுகு, கொடிமாதளம்பழம் 60-காட்களில் பயிராகும் நெல், பழய அரிசி, கோதுமை, யவதானியம், பச்சைப்பயறு, கொள்ளு, தூக்கம், இவைகள் விக்கல், இருமல், பெருமூச்சு, தாகம், இந்த ரோகங்களில் பத்தியமானவை.

விக்கலுக்கு அபத்தியங்கள்:—மலத்தை பந்திக்கும் நிலவர்க்கள், கள்ளு, மிளகு, முதலிய விதாஹாரவர்க்கங்கள், ருக்ஷகரமான, நிரியங்கள் சுகாநிரியங்கள் மொச்சை, உளுந்து, புண்ணாக்கு, சளத்தில் உண்டாகும நிரியங்கள், ஊற்றுமிமியில் உண்டான ஜந்துக்களின் மாமிசங்கள், பக்குவம் செய்யப்பட்ட நிரியங்கள், குச்சிபினல் பன்னக்கல், வன்னிருமம், மீன்கள், கடுகு, புளிப்பு, காய்கள்,

கிழங்குகள், எண்ணெயில் வறுக்கப்பட்ட பண்டங்கள், தினகரமான அன்னபானங்கள் இவைகளை விக்கல் உடையவர்கள் நிவர்த்திக்க வேண்டியது.

குரற்கம்மல் சிகிச்சை

யஷ்டிமதுக தியாழம்:—மிளகு சூரணத்தை நெய்யில் அருந்த வாத குறற்கம்மல் நீரும். அதிமதுர சூரணத்துடன் சர்க்கரை அல்லது கற்கண்டி சேர்த்து காய்ச்சிய பாலில் அருந்த பித்த குறற்கம்மல் நீரும். அரிசித் நிப்பிலிச் சூரணத்தை ஆடாதோடை சாறுடன் தேன் சேர்த்து அருந்த கப குறற்கம்மல் நீரும்.

கடுகாதி தியாழம்:—கடுகுரோகணி அதிவிடையம், வட்டத்திருப்பி, மரமஞ்சள், கோரைக்கிழங்கு, வெட்பாலை, இவைகளை கோமூத்திரத்தில் தியாழம்வைத்து சாப்பிட்டால் குறற்கம்மல் நீங்கும்.

பதரீ கல்கம்:—இலந்தை இலை கல்கமாவது அல்லது நெய்யில் வருத்த இலந்தை இலையுடன் இந்துப்பை கலந்தாகிலும் சாப்பிட்டால் குறற்கம்மல், காசங்கள் இவைகள் நீங்கும்.

மரீசிஸிருத பானம்:—அன்னம் புசித்தபிறகு மிளகு சூரணத்தை நெய்யுடன் கலந்து சாப்பிட்டால் வாயுவினால் உண்டாகிய குறற்கம்மல் நீங்கும்.

நெய் வெல்லம் இவைகளுடன் கலந்தன்னம் புசித்து வெந்நீர் குடித்தாலும் அல்லது காசனிக்கண்ணிசாற்றை நெய்யுடன் கலந்து பானஞ்செய்தாலும் அல்லது காசாளுக்கண்ணிசாற்றை நெய்யில்விட்டு இருபதமாகக் காய்ச்சிய இருதத்தை பானஞ்செய்தாலும் வாதகுறற்கமமல் நிவர்த்தியாகும்.

விரேசன சிகிச்சைபெற்று பிதுறமதா பதார்த்தத்துடன் பக்குவமான பாலையாவது, மதுவஸ்துக்களை சூரணித்து அதில் தேன் கலந்தாவது சாப்பிட்டால் பித்த குறற்கம்மல் நிவர்த்தியாகும்.

பயப்பானம்:—மதுரபதார்த்தங்கள் போட்டு காய்ச்சிய பாலை சர்க்கரை, தேனுடன் கலந்து சாப்பிட்டால் குரற்கம்மல் நீங்கும்.

பிப்பலீ யோகம்:—நிப்பிலி, நிப்பிலிமூலம், மிளகு, சுக்கு இவைகளைச் சூரணித்த கோமூத்திரத்தில் கலந்து சாப்பிட்டால் கப குறற்கம்மல் நிவர்த்தியாகும்.

காகஜங்காதி தாரியம்:—காகஜங்கா, உத்தாமணி, வசம்பு, கோஷ்டம், நிப்பிலி இவைகளைச் சூரணித்துத் தேன் கலந்து எழு இராத்திரிகள் வாயில் வைத்துக்கொண்டு அதின் ரசத்தை விழுங்கிக்

கொண்டிருந்தால் குரற்கம்மல் நீங்கி இன்னரிலைப்போல் கானம் செய்வான்.

நெல்லிக்காலை அரைத்து பாலுடன் கலந்து சாப்பிட்டால் குரற்கம்மல் நீங்கும்.

கதிரதாரியம்:—கதிரசாரம், திப்பிலி, கடுக்காய் இவைகளைச் சூரணித்து நெய்யில் கலந்து அல்லது சக்குடன் கலந்தாவது சாப்பிட்டால் ஸ்வரபேதம் நிவர்த்தியாகும்.

சதாவரீ சூரணம்:—தண்ணீர்விட்டான்கிழங்கு சூரணமாவது அல்லது சிற்றாமுட்டி சூரணமாவது, தண்ணீர்விட்டான்கிழங்கு சூரணம் நெற்பொரி சூரணமாவது தேன் சர்க்கரை கலந்து சாப்பிட்டால் குரற்கம்மல் நிவர்த்தியாகும்.

ஆமலவேத சூரணம்:—செவ்வியம், கொண்டைபுளி, சுக்கு, மிளகு, திப்பிலி, தானிசப்பத்திரி, ரோசம், தவசுரி, சித்திரமூலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய் இவைகளை சமனடையாய்ச் சூரணத்து வெல்லங்கலந்து சாப்பிட்டால் குரற்கம்மல், பினசம், கபம், அருசி இவை நிவர்த்தியாகும்.

அஜாமோதாதி சூரணம்:—ஓமம், மஞ்சள், செல்லிவற்றல், யவக்ஷாரம், சித்திரமூலம் இவைகளைச் சமனடையாய்ச் சூரணித்த தேன், நெய் கலந்துச் சாப்பிட்டால் நிரிதோஷ குரற்கம்மல் நீங்கும்.

பலத்திரிக சூரணம்:—கடுக்காய், தானிக்காய், செல்லிவற்றல், சுக்கு, திப்பிலி, மிளகு, யவக்ஷாரம் இவைகளைச் சூரணித்து சாப்பிட்டால் குரற்கம்மல் நீங்கும்.

பிராஹ்மாதி சூரணம்:—கண்டுபாரங்கி, சிவக்கந்தை, வசம்பு, சுக்கு, திப்பிலி இவைகளைச் சூரணித்து தேனுடன் ஏழாந்திரிகள் சாப்பிட்டால் சகலமான குரற்கம்மல்கள் நீங்கிவிடும்.

வசாதி சூரணம்:—கண்டுபாரங்கி, வசம்பு, கடுக்காய், ஆடாதோடை, திப்பிலி இவைகளைச் சூரணித்து தேனுடன் கலந்த சாப்பிட்டால் குரற்கம்மல் நிவர்த்தியாகும்.

நிதிக்திகாதி லேகியம்:—கண்டங்கத்திரி 100-பலம், திப்பிலிமூலம் 50-பலம், சித்திரமூலம் 25-பலம், தசமூலங்கள் 25-பலம் இவை யாவையும் 512-பலம் ஜலத்தில்போட்டு 64-பலம் மீறும்படியாய்ச் சுண்டக்காய்ச்சி, அதில் 32-பலம் பழைய வெல்லத்தைக் கலந்து மந்தாக்கினியால் பாகுபதமாய்ச் சமைத்து அதில் 8-பலம் திப்பிலிசூரணம், இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி, மிளகு இவைகள் வகைக்கு 1-பலம், இவை யாவையுஞ் சூரணித்த அந்தப் பாகில் சொட்டி அத்துடன் தேன் 8-பலம் கலந்து

தானியாசியில் புடமிட்டு சாப்பிட்டுவந்தால் குரற்கம்மல், பினசம், காசரோகம், மேல்மூச்சு, அக்கினிமந்தம், குன்மம், மேகம், மூத்திரகிருச்சிரம், இரத்தி இவைகள் நிவர்த்தியாகும்.

ஜாதிபலாதி லேகியம்:—சாதிக்காய், ஏலக்காய், கொடிமாதளம்பழம், இலவங்கப்பத்திரி, பொரி, திப்பிலி இவைகளைச் சமனடையாய்ச் சூரணித்தத் தேன் கலந்த லேகியம்போல் செய்து சாப்பிட்டால் கண்டகொனியானது வீணை கொனிக்குச் சமமாக இருக்கும்.

ஜாதிதசாதி லேகியம்:—ஜாபத்திரி, ஏலக்காய், திப்பிலி, வெட்டிவேர், கொடிமாதளம்பழம், இலவங்கப்பத்திரி, இவைகளைச் சூரணித்து, தேன்கலந்து லேகியபதமாக்கி சாப்பிட்டால் கண்டத்தில் வீணையைப்போல் மதுரமான குரலுண்டாகும்.

குடுச்யாதி லேகியம்:—சிந்தில்கொடி, ஈயுருவி, வாய்விளங்கம், சங்கினி, வசம்பு, சுக்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, இவைகளைச் சூரணித்த நெய்யுடன் கலந்த மூன்று நாள் சாப்பிட்டால் குரல் கம்மல் நீங்கி ஆயிரம் பாட்டுகளைப் பாடுவான்.

காசமர்த்த கிருதம்:—பேயாவரை இலைரசம், கண்டுபாரங்கி கல்கம், இவைகளால் தயார் செய்த கிருதத்தை குடித்தால் வாயுவினல் உண்டான குரல்கம்மல் நீங்கும்.

வியாக்ரீ கிருதம்:—கண்டங்கத்திரிரசம், சித்தாத்தை, சிற்றாமுட்டி, நெரிஞ்சல், இவைகள் கலந்து காய்ச்சிய நெய்யைக் குடித்தால், குரற்கம்மல், ஐந்துவித காசங்கள் இவைகள் நிவர்த்தியாகும்.

சுண்டீ கிருதம்:—சுக்கு, இலவங்கப்பட்டை, இவைகளின் சூரணம், ஆலன் முதலிய பால் உள்ள விருக்ஷங்களின் பாலில்வேகவைத்த சக்கரை கலந்து சாப்பிட்டாலும் அல்லது அநிமதாரத்தைச் சூரணித்து அத்துடன் நெய் சக்கரை கலந்த சாப்பிட்டாலும் பித்தத்தினல் உண்டாகிய குரற்கம்மல் நீங்கும்.

கோரக்ஷ வடுகங்கள்:—இரசபற்பம், தாம்பிரபற்பம், லோஹபற்பம் இவைகளை கண்டங்கத்திரி பழரசத்தினல் 21 நாள் அரைத்து உலர்த்து அளவு மாத்திரைகள் செய்து வாயில் வைத்துக்கொண்டு ரசத்தை விழுங்கிக் கொண்டிருந்தால் குரற்கம்மல் நிவர்த்தியாகும்.

சுண்டுஷம்:—இஞ்சிரசத்தில், இந்துப்பு, நிரிகடுகு, கொடிமாதளம்பழரசம், அரத்தைச் சூரணம் இவைகளைச் சேர்த்து கண்டூஷஞ் செய்து சாப்பிட்டால் குரற்கம்மல் நிவர்த்தியாகும்.

குரல்கம்மலுக்கு பத்தியங்கள்:—வியர்வை வாங்குதல், வஸ்தி கருமம், புகைகுடித்தல், விரேசனம், ஒளஷதங்களை வாயில் வைத்துக் கொண்டிருக்குதல், நசியம், தலையில் சிட்டிக்கை போடுதல், பல

தானியம், சிகப்பு செல்அன்னம், காட்டுகோழி, மயில் இவைகளின் மாமிசம், நெரிஞ்சல்இலை, ஆடாதோடைஇலை, மணத்தக்காளி, ஜீவந்திக்கீரை, பிஞ்சுமுள்ளங்கி, நிராகஷ, கடுக்காய், கொடி மாதளம்பழம், வெள்ளரிப்பூண்டு, உப்பு, இஞ்சி, தாம்பூலம், மிளகு, நெய் இவைகள் குறல்கம்மல் வியாதிக்கு பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—மாம்பழம், விளாம்பழம், எலுமிச்சன், குளிர்ந்த ஜலம், சீதள பொருள்கள் வாந்தி, நித்திரை, விசேஷமாகப் பேசுதல், விருத்த அன்னபானங்கள் இவைகள் அபத்தியங்கள்.

பிரமேக சிகிச்சை

கபத்தால் உண்டாகிய மேகங்களுக்கு லோத்திராதி கியாழம்:—கடுக்காய், காய்பலம், கோரைக்கிழங்கு இவைகளின் கியாழத்திலாவது, வாய்விளங்கம், வட்டத்திருப்பி, மருதம்பட்டை, பூனைக்காஞ்சொரிவேர் இவைகள் கியாழத்திலாவது, இலவங்கப்பட்டை, மருதம்பட்டை, ஓமம் இவைளின் கியாழத்திலாவது, வாய்விளங்கம், மரமஞ்சள், கோரைக்கிழங்கு, இலவம்பட்டை இவைகளின் கியாழத்திலாவது, தேன் கலந்து சாப்பிட்டால் கபபிரமேகங்கள் நீங்கும்.

வேறு முறை:—மரமஞ்சள், வாய்விளங்கம், கருங்காலி சக்கை, தவிருசூம் இவைகளின் கியாழத்திலாவது, தேவதாரு, கோஷ்டம், மருதம்பட்டை, சந்தனம் இவைகளின் கியாழத்திலாவது, மரமஞ்சள், கூரநெல்லிவேர், நிரிபலி, வட்டதிருப்பிவேர் இவைகளின் கியாழத்திலாவது, ஓமம், வெட்டிவேர், கடுக்காய், சிந்தில்கொடி இவைகளின் கியாழத்திலாவது, காவல்சக்கை, நெல்லி தோல், நித்திரமூலம், வாலழக்கிழங்கு இவைகளின் கியாழத்திலாவது தேன் கலந்து சாப்பிட்டால் க்ரமமாக கபத்தினால் உண்டான ஜலப்பிரமேகம், இக்ஷுமேகம், சாந்திரமேகம், சுராமேகம், பிஷ்ட மேகம், சுக்கிலமேகம், சிகதாமேகம், சீதமேகம், சனைர்மேகம், லாலாமேகம் இந்த பத்து மேகங்கள் நிவர்த்தியாகும்.

பித்தமேக சாமானிய கியாழம்:—வில்வவேர்பட்டை, மருதவேர் பட்டை, வெட்டிவேர், ரத்தசந்தனம் இவைகளின் கியாழத்திலாவது, வேப்பன்சர்க்கு, குறவேர், நெல்லிவற்றல், கடுக்காய் இவைகளின் கியாழத்திலாவது, நெல்லிவற்றல், மருதம்பட்டை, வேப்பன்சர்க்கு, வெட்பாலே இலைகளின் கியாழத்திலாவது, கரும் அல்லித்தண்டு, சீரகம், மஞ்சள், மருதம்வேர்ப்பட்டை இவைகளின் கியாழத்திலாவது தேன் கலந்து சாப்பிட்டால் பித்தமேகங்கள் நீங்கும்.

வேறு முறை:—வெட்டிவேர், லோத்திரம், சந்தனம் இவைளின் கியாழம், வெட்டிவேர், கோரைக்கிழங்கு, நெல்லிவற்றல், கடுக்காய் இவைகளின் கியாழம், பேய்ப்புடல், வேப்பன்சர்க்கு, நெல்லிவற்றல், சிந்தில்கொடி இவைகளின் கியாழம், கோரைக்கிழங்கு, கடுக்காய், ஆமணக்குவேர் இவைகளின் கியாழம், லோத்திரம், நறுவேர், மரமஞ்சள், காட்டாத்திப்பூ இவைகளின் கியாழம் மன்ஜிஷ்டமேகம், ஹரித்திராமேகம், நீலமேகம், க்ஷாரமேகம், காலமேகம், ரத்தமேகம் இந்த மேகரோகிகளுக்குக் கொடுத்தால் நிவர்த்தியாகும்.

சுபவாத மேகத்திற்கு கியாழம்:—கடுக்காய், தேவதாரு, சன்னரி, லோத்திரம், ரத்தசந்தனம், வெட்டிவேர் இவைகள் கியாழம் போட்டு அதில் தேன்அல்லது மஞ்சள் சூரணமாவது கலந்து சாப்பிட்டால் மேகங்கள் நிவர்த்தியாகும்.

பித்தவாத மேகத்திற்கு கியாழம்:—வாய்விளங்கம், மஞ்சள், மரமஞ்சள், கருங்காலிமரச்சக்கை, வெட்டிவேர், கொட்டைப்பாக்கு இவைகளின் கியாழத்தை காலியில் சாப்பிட்டுவந்தால் பித்தவாத மேகங்கள் நிவர்த்தியாகும்.

நிரிபலாதி கியாழம்:—நிரிபலி, மரமஞ்சள், கோரைக்கிழங்கு இவைகளின் கியாழத்துடன் தேன் கலந்தாவது அல்லது சிந்தில் கொடி சாரத்தில் தேன் கலந்தாவது சாப்பிட்டால் சகல மேகங்கள் நிவர்த்தியாகும்.

நிரிபலாதி கியாழம்:— நிரிபலி, தேவதாரு, மரமஞ்சள், பரப்பாரமுள்ளி, கோரைக்கிழங்கு இவைகளின் கியாழத்தில் மஞ்சள்தூள் தேன் கலந்து சாப்பிட்டால் சகல மேகங்கள் நிவர்த்தியாகும்.

பலாசபூ கியாழம்:—முறுக்கன் பூவை கியாழம் வைத்து சர்க்கரைக்கலந்து சாப்பிட்டால் சகல மேகங்கள் நிவர்த்தியாகும்.

விடங்காதி கியாழம்:—வாய்விளங்கம், மஞ்சள், அமுகரம் சக்கு, நெரிஞ்சல் இவைகள் சமனடை கியாழம்போட்டு தேன்கலந்துச் சாப்பிட்டால் கடினமான மேகங்கள் நாசமாகும்.

கபித்தநிர்யாச கியாழம்:—விளாம்பிசின், மராட்டிமொக்கு, கோரைக்கிழங்கு, பருத்திவிரை, குன்றிவேர், தேற்றான்கொட்டை, மரமஞ்சள், பரங்கிச்சக்கை, புளியாங்கொட்டை, இவைகள் சமனடை கியாழம்வைத்து அத்துடன் தேன்கலந்துச் சாப்பிட்டால் சகலமேகங்கள் நிவர்த்தியாகும்.

ஏலாதி சூரணம்:—ஏலக்காய், இலாஜித்து, திப்பிலி, பாஷாணபேதி, இவைகளைச் சூரணித்த கழுநீருடன் சாப்பிட்டால் பிரமேகங்கள் நிவர்த்தியாகும்.

சர்கட்யாதி சூரணம்:—வெள்ளரிக்காய்விரை, இத்துப்பு, நிரி பலி, இவைகளை சமனடையாகச் சூரணித்து, வெள்ளரிவில் கலந்துச் சாப்பிட்டால் மூத்திரரிரோதனம் நிவர்த்தியாகும்.

திரிபலாதி சூரணம்:—கடுக்காய் 1-பாகம், தானிக்காய் 2-பாகம், நெல்லிக்காய் 4-பாகம், இவைகளைச் சூரணித்து நெய், தேன் கலந்து சாப்பிட்டால் மேகம், வெள்ளை, வெட்டை, நேத்திரரோகம், இவைகள் நிவர்த்தியாகும். அக்கினிதீபனம் உண்டாகும்.

தலதோடக சூரணம்:—ஆவாரைசமூலம், நிழலிலுலர்த்திச் சூரணித்து, சூரணத்திற்கு பேர்பாதி பாகம் நெல்லிக்காய்ச் சூரணம், நெல்லிக்காய் சூரணத்திற்கு பேர்பாதிபாகம் மஞ்சள், மரமஞ்சள் இவைகள் சூரணம் இவைகள் எல்லாம் பொன்முகக் கலந்த தேனுடனாவது அல்லது மோருடனாவது சாப்பிட்டால் சகலமேகங்கள் நிவர்த்தியாகும்.

சிலாஜித்து சூரணம்:—எலக்காய், சுத்திசெய்த சிலாஜித்து, சுத்திசெய்த ஹேமமாக்ஷிகம், அமிதாரம், நிரிகடுகு, வாய்விளங்கம், நிரிபலி இவைகள் சமனடையாக யெடுத்துச் சூரணித்து அச்சூரணித்திற்குசமம் ஆவாரைகொட்டை சூரணத்தைக் கலந்து ½-பலம் விதம் தேனுடன் சாப்பிட்டால் சகலமேகங்கள் நிவர்த்தியாகும்.

வெகு மூத்திரத்திற்கு காலேசுவர ரசம்:—இரச பஸ்பம், வங்க பஸ்பம், லோஹபஸ்பம், அப்பிரகபஸ்பம் இவைகள் பாலையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு தேன்விட்டு அரைத்து 2-குன்றிஎடை மாத்திரைசெய்து, வைத்துக்கொள்ள வேண்டியது. இதில் ஒரு மாத்திரையை தேன் அனுபானத்துடன் சாப்பிட்டால் வெகு மூத்திரம் சமனமாகும்.

சகல மேகங்களுக்கு வங்கேசுர ரசம்:—சுத்தரசம்-1, சுத்த கெந்தி-1, வங்கபஸ்பம்-2 இவைகளை யொன்றாகச் சேர்த்தரைத்து 2-குன்றிஎடை தேன் சர்க்கரையுடன் சாப்பிடவும். பத்தியம், உப்பு, புளிப்பு முதலியவைகள் ஆகாது. கடும் பத்தியமாக யிருக்க வேண்டியது.

பிரமேஹ பத்த ரசம்:—ரசபற்பம், சுத்தபற்பம், லோஹபற்பம், சிலாஜித்துபற்பம், சுத்தபற்பம், ஹேமமாக்ஷிகபற்பம், மனோசிலை பற்பம், சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லிப்பருப்பு, விலாம், மஞ்சள் இவைகள் யாவையும் சமனடையாகச் சேர்த்துச் சூரணித்து காசனிக்கண்ணி சாற்றினால் 20-நாள் அரைத்து உலர்த்தி, தேன் அனுபானத்துடன் 2-3 குன்றிஎடை மருந்தைக் கொடுத்தால் சமஸ்த மேகங்கள் நிவர்த்தியாகும்.

மஹாரிம்ப பிஜங்கள்-6 சூரணித்து 1-பலம், அரிசி கழிநீரில் கலந்து ½-பலம் நெய் கலந்து சாப்பிட்டால் வெகு காலமாக பிருக்கும் மேஹங்கள் நிவர்த்தியாகும்.

ஹரிசங்கர ரசம்:—இரச பஸ்பம், அப்பிரக பஸ்பம் இவைகள் சமனடை நெல்லிக்காய் ரசத்தில் 7-நாள் அரைத்து சேவித்தால் சகல மேகங்கள் பறந்தோடும்.

மேகாரத ரசம்:—இரசபற்பம், காந்தபற்பம், கெந்தி, எழுகு பற்பம், ஹேமமாக்ஷிகபற்பம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிப்பருப்பு, சிலாஜித்து, மனோசிலை, மஞ்சள், விலாம், இவைகளை சமனடையாகச் சூரணித்து காசனிக்கண்ணி இரசத்தில் 21-நாள் அரைத்து 2, 3-குன்றிஎடை தேனுடன்கொடுத்தால் சகல மேஹங்கள் நிவர்த்தியாகும்.

இலகுசந்திரோதய ரசம்:—அப்பிரகபற்பம், கெந்தி, பாதரசம், வங்கபற்பம், எலக்காய், சிலாஜித்து இவைகளை சமனடையாகச் சூரணித்து வாழைக்கிழங்கு ரசத்தைவிட்டு இரண்டுநாள் (இரவும் பகலும்) அரைத்து வைத்துக்கொள்க. இதை அனுபான விசேஷமாக கொடுத்தால் 20 மேகரோகங்கள், காமாலை, பித்தம் இவைகள் சூரியனைக்கண்ட இருளைப்போல் மறைந்துவிடும். இதற்கு இலகு சந்திரோதய மென்றபெயர். இச்சாபத்தியம் எண்ணை கடுகு வாயு பண்டம் மீன் முதலியது ஆகாது.

வங்கேசுர ரசம்:—சுத்திசெய்த ரசம் 1, வங்கபற்பம் 3, சுத்தி செய்த கெந்தி 3, இவைகளைக் கல்வத்திலிட்டு கற்றுழை ரசத்தினால் ஒருநாள் அரைத்து மாத்திரைகள் செய்து காஞ்சுப்பியில் வைத்து சீலமண் செய்து வாலுகாயந்திரத்தில் காடாக்கினியால் ஒருநாள் எரித்து ஆறியபிறகு எடுத்து திப்பலி சூரணம், தேன், இந்த அனுபானத்துடன் சாப்பிட்டு பால்சாதம் சாப்பிட்டு உப்பில்லாத பத்தியத்துடனிருந்தால் சகல மேகங்களும் நிவர்த்தியாகும்.

மேஹகுஞ்சர கேசரிரசம்:—சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த கெந்தி, அப்பிரகபற்பம் லோஹபற்பம், நாகபற்பம், வங்கபற்பம், சுவர்ணபற்பம், வஜ்ரபற்பம், முத்துபற்பம், இவைகளை சமனடையாக கல்வத்திலிட்டு தண்ணீர்விட்டான்கிழங்கு ரசத்தினால் அரைத்து பில்லைசெய்து உலர்த்தி மடக்கில்வைத்து மேல் மடக்கு மூடி காட்டு விரட்டியால் காலுபுடமிட்டு, ஆறியபிறகு எடுத்து கல்வத்திலிட்டு அரைத்து குப்பியில்வைத்து 2, 3-குன்றிஎடை சாப்பிட்டு பிறகு குளிர்ந்த சலம் சாப்பிடவேண்டியது. இம்மாதிரியாக ஒரு மாதகாலம் சாப்பிட்டுவந்தால் 18 வித பிரமேஹங்கள் நீங்கும். வீரியம், பலம், காந்தி, மேனி, அக்கினிதீபனம இந்திரியவிருத்தி இவைகள் உண்டாகும்.

பஞ்சலோஹ ரசாயனம்:—அப்பிரகபற்பம், 1-பாகம், லோஹ பற்பம், 2-பாகம், ரசபற்பம் 3-பாகம், வங்கபற்பம் 4-பாகம், இவைகளை கல்வத்திலிட்டு ஆவாரைசமூலம், நிலப்பனை, தண்ணீர் விட்டான்கிழங்கு, சந்தனம், இவைகளின் இயாழங்களினல் தனித் தனி ஒவ்வொரு சாமம் அரைத்து கடலை அளவு மாத்திரைகள்செய்து காலையில் ஒரு மாத்திரையை வெண்ணெய்யுடன் அருந்தி வரஅரிசி, புடலங்காய், நிறகீரை, சக்கிரவர்த்திகீரை, பொன்னங்கண்ணிகீரை, பச்சைப்பயறு, வாழைக்கச்சல், இவைகளை சாப்பிட்டால், சகல மேகங்கள், மூலவியாதி, இரணரோகம், மூத்திரகிருச்சிரம், மூத்திர அடைப்பு, காமாலை, பாண்டு, சோபை, அபஸ்மாரம், சுக்கியம், சுக்கிரகாசம், இவைகள்யாவும் நிவர்த்தியாகும்.

மஹாவங்கேசர ரசம்:—வங்கபற்பம், கர்ப்பற்பம், அப்பிரகபற்பம், ஆவாரம்பூ, இவைகள் சமனடையாக சேர்த்து கற்றுழை ரசத்தினல் ஏழுநாள் அரைக்கவும், இதை சாப்பிட்டால், 20 மேகங்கள், மூத்திரகிருச்சிரம், சோமரோகங்கள், பாண்டுரோகம், அஸ்மரிரோகம் இவைகள் நிவர்த்தியாகும்.

வசந்தகுசுமாகர ரசம்:—சுவர்ணபற்பம் 2-பாகம், வெள்ளிபற்பம் 2-பாகம், வங்கபற்பம் 3-பாகம், ரசபற்பம் 3-பாகம், லோஹபற்பம் 3-பாகம், பாதரசபற்பம் 4-பாகம், அப்பிரகபற்பம் 4-பாகம், பவழபற்பம் 4-பாகம், முத்துபற்பம் 4-பாகம், இவைகள் யாவையும் கலந்து கல்வத்திலிட்டு பசும்பால், கரும்புரசம், ஆடாதோடை இலைரசம், சந்தனம், குருவேர், வெட்டிவேர், மஞ்சள், வாழைக்கிழங்கு, தனித்தனி இலைகளின் இயாழங்கள், தாமரைப்பூ ரசம், இவைகளால் ஏழுநாட்கள் அரைத்து பிறகு கஸ்தூரி 1-பாகம், கலந்து அரைத்து வைத்துக்கொள்க. இதை தேன் சர்க்கரை, நெய் இந்த அனுபானத்துடன் 2-குன்றிஎடை சாப்பிட்டால் சிழத்தனம், மேஹங்கள், சுக்கியங்கள், காசங்கள், தாகரோகம், உன்மாதரோகம், காசரோகம், மேல்மூச்சு, தஷ்டாக்தம், விஷம், பாண்டுரோகம், சூலைகள், மூத்திரகாதம், அஸ்மரிரோகம், இவைகளை நாசமாக்கும். சக்கரை, சந்தனம், இவைகளின் சூரணத்துடன் கொடுத்தால் ஆமிலபித்தம் நாசமாகும். மேலும் தேகவலிவு, காமம், சுகம், புஷ்டி, ஆயுசு, புத்தி, புருஷர்களுக்கு சந்தானத்தை உண்டாக்கும் சாமர்த்தியம், காந்தி, பலம், காமோத்தீபனம், இவைகளை யுண்டு பண்ணும். மேலும் இந்த ஔஷதத்தை சாப்பிட்டு தருந்தாற்போல் ஆகாரத்தை அருந்தி வந்தால் அனவுகடந்த தாதுவிருத்தியை உண்டாக்கும்.

ஜலஜாமிருத ரசம்:—தவகூரி, நில்லித்துபற்பம், வங்கபற்பம், சிந்தில்சர்க்கரை, ஆவாரைவிரை இவைகளைக் கல்வத்திலிட்டு வெள்ளை நிலப்பூனிக்கிழங்கு ரசம், பால்கீரை ரசம் இவைகளால் மூன்று

நாள் அரைத்து பணவெடைகற்கண்டுடன் சாப்பிட்டால் மேகநிருச்சிரங்கள் நிவர்த்தியாகும்.

மேஹாந்தக ரசம்:—ரசபற்பம் 3-பாகம், சுவர்ணபற்பம் 4-பாகம், வெள்ளிபற்பம், எழுகுபற்பம், தாம்பிரபற்பம், ரசகபற்பம், வைகிரந்தபற்பம், அப்பிரகபற்பம், நிலசத்துப்பம், கெந்திசூரணம் வகைக்கு 3-பாகம் இவைகளை எல்லாம் சமமுகூர்த்தத்தில் கல்வத்திலிட்டு நிசபனை இயாழத்தினல் அரைத்து மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி மூன்றுபுடமிட்டு ஆறியபிறகு எடுத்து வெட்டிவேர், சந்தனம் இவைகளின் இயாழத்தால் நான்கு ஜாமம் அரைத்து 4-குன்றிஎடை சர்க்கரை, தேன் இவைகளுடன் சாப்பிட்டால் மதுமேகம், இக்ஷுமேகம், தாகம், தாபம், உதகமேகம், சுக்கிலமேகம், லாலாமேகம், தந்திமேகம், சூயமேகம், வாதமேகம், காசங்கள், சுவாசங்கள், அங்காரகம், சிரோதாகம், காணித ரோகங்கள் நிவர்த்தியாகும். இதை மறி சாப்பிட்டால் புத்திரவதியாவாள். வீரியவிருத்தி, பலம், புஷ்டி, காந்தி இவைகளை யுண்டாக்கும்.

மேஹமிருகாங்க ரசம்:—சுத்திசெய்த பாதரசம், கெந்தி, வங்கபற்பம், கஸ்தூரி, லிங்கம், கொத்தமல்லி, குங்குமப்பூ, செல்லிவற்றல், ஏலக்காய், நிரிகடுகு, கோரைக்கிழங்கு, பச்சைகற்பூரம் இவைகளை சமனடையாய்ச் சேர்த்து சந்தனத்தின் இயாழத்தினல் இரண்டு ஜாமங்கள் அரைத்து 2-குன்றிஎடை அனுபானயுக்தமாக கொடுத்தால் இரத்தமூத்திரம், சர்வமேகங்கள் நிவர்த்தியாகும். சர்க்கரை, நெய் இந்த அனுபானத்துடன் கொடுத்தால் மஹாதாகரோகம் நிவர்த்தியாகும்.

மேஹகஜகேசரி ரசம்:—அப்பிரகபற்பம், கர்ப்பற்பம், எழுகுபற்பம், ரசபற்பம், இந்துப்பு, ரசகபற்பம், வங்கபற்பம், மண்டூரசெந்தூரம் இவை யாவும் சமனடைகள். இவைகள் யாவற்றிற்கும் சமனடை ஆவாரைவிரைச்சூரணம். இவைகளை யொன்றுக்குக் கலந்து கடுக்காய், தானிக்காய், நெல்லிபருப்பு, ஆவாரைசமூலம், தேத்தான் கொட்டை இவைகளை தனித்தனி இயாழம வைத்து இந்தக் இயாழங்களினல் ஒவ்வொருநாள் ஒவ்வொரு இயாழத்தினல் அரைத்து பசுமோரில் 3-குன்றிஎடை கொடுத்தால் இருபதுமேகங்கள், மூத்திரகாதம் இவையாவும் நாசமாகும்.

நாரிகேள ரசாயனம்:—தேங்காய்நீர், பசும்பால், பூனிக்காய் ரசம், தண்ணீர்விட்டான்கிழங்கு ரசம், பொன்னங்காணிஇலை ரசம், செல்லிக்காய்ரசம், கரும்வாழைரசம், நிலப்பனைரசம், வாழைப்பழரசம், அழவனைரசம், நெய் இவை வகைக்கு 16-பலம் எடையாய்ச் சேர்த்துக் காய்ச்சி அதில் மஞ்சிஷ்டி, கோஷ்டம், இரந்திதகரம், ஜாதிக்காய், குறுவேர், சந்தனம், ஏலக்காய், இலவங்கம், அதிமதுரம், தக்கோலம், இச்சிலிக்கிழங்கு, வெட்டிவேர், பற்பாடகம், கோரைக்

நெல்லி, தாமரைதண்டு, கன்னிவேர், குடசப்பாலை இலைகள் வகைக்கு 4-பலம் சூரணித்து 10-பலம் சர்க்கரை கலந்த ரசாயன பாகமாய் சமைத்து சாப்பிட்டால் சோமரோகம், பிரமேகம், மூத்திர இருச்சிரம், சரீரதாபம் இவைகள் நிவர்த்தியாகும். மெலிந்த மனிதன் புஷ்டியுள்ளவனுவான்.

சைலூலாதி ரசாயனம்:—வில்வவேர், அமிலதாரம், நிராசைஷ இலைகளை வகைக்கு 21-பலம் இடித்து இரண்டு மரக்கால் ஜலத்தில் கொட்டி எட்டில் ஒருபாகம் மீறும்படியாய்க் கியாழம் கண்டக் காய்ச்சி வடிகட்டி அதில் பசுநெய் 1-வீசை, கற்கண்டு 1-வீசை சேர்த்த மந்தாக்கினியால் பக்குவமாய் சமைத்த அதில் சந்தனம், ரக்தசந்தனம், கொத்தமல்லி, நிராம்பு, திராக்கப்பூ, ஏச்சிலிக்கிழங்கு, இலவங்கப்பத்திரி, அமிலதாரம், ஜாதிக்காய், நிரிகடுகு, நிராசைஷ, பேரீச்சம்பழம், தம்பாராஷ்டம், கண்டுபாரங்கி, மஞ்ஷிஷ்டி, கன்னிவேர்தோல், நிரிபலை, இலந்தன், தக்கோலம், குறுவேர், வெட்டிவேர் இலைகள் வகைக்கு 2-பலம் சூரணித்த வஸ்திரகாயஞ்செய்த அத்துடன் கலந்த ஆறியபிறகு 20-பலம் தேன்கலந்த கிளறி இரசாயணம்போல் செய்து வைத்துக்கொண்டு காலையில் கடுக்காயளவு சாப்பிட்டுவந்தால், ரக்தமேகம், சாராமேகம் முதலிய இருபது மேகங்கள், மேகத்தினால் உண்டாகிய தாபம், பெரும்பாடு, ரக்தபித்தம், ருதுசூலை, கைகால் எரிச்சல், விரணம், கிரந்தி, வாதமேகதாபம், தாகம, வாயுவால், மார்பில் எரிச்சல், பாதசோஷை, காசங்கள், சுவாசங்கள், மூர்ச்சை, விக்கிரதி, 20-க்ஷயரோகங்கள், வாய், நாக்கு, கண்டம் இவைகள் உலர்ந்து நிவர்த்தியாகும்.

மதுக்கனஹீ ரசாயனம்:—நிரிபலை, நிரிகடுகு, நிரிசாதம், ஓமம், க்ஷாரசாணிஓமம், சித்திரமூலம், சீரகம், தம்பாராஷ்டம், கண்டுபாரங்கி, திப்பிலி, செவ்வியம், கொத்தமல்லி, கடுகு, கருஞ்சீரகம், சடாமாஞ்சி, கோஷ்டம், வெட்டிவேர், கன்னிவேர்தோல், நிலப்பனைகிழங்கு, அமுக்கிரக்கிழங்கு, இலைகள் வகைக்கு ½-பலம் விகிதம் சேர்த்து சூரணித்து இலைகளுக்கு சமம் பரங்கிச் சக்கைச்சூரணம் சேர்த்து 50-பலம் சர்க்கரையை நீரில்கரைத்து கடாயிலிட்டு அடுப்பிலேற்றி எரித்து பாகுபதமாக காய்ச்சி அதில் மேல் சொல்லிய சூரணத்தைக் கலந்து பசும் நெய் சேர்த்து பக்குவமாக லேகியம்போல் சமைத்த அதில் 16-பலம் தேன் கலந்த சாப்பிட்டால், மேக பைத்தியவாதம், குஷ்டங்கள், சூன்மம், சூலை, இலைகளை நிவர்த்திக்கும். சப்தாதுவிருத்தி, நீபனம், காந்தி, சந்தோஷம் இலைகளை உண்டாக்கும்.

மேகத்திற்கு சிக்குருபுஷ்ப ரசாயனம்:—ஐந்துசேர் முருங்கப்பூ, 20-சேர், பசும் பாலிலபோட்டு நாலில் ஒருபாகம் மீறும்படியாக வண்டக் காய்ச்சி, அதில் நிலப்பூனிக்கிழங்கு ரசம், வாழைப்பழரசம், தேங்காய்சலம், நிலப்பனங்கிழங்குரசம், இலை

கள் வகைக்கு 16-பலம், 16-பலம், சர்க்கரை 12-பலம், பசும்நெய் கலந்த பக்குவமாக சமைத்த அதில் நிராசைஷ, கர்ஜூரக்காய், ஏலக்காய், இலவங்கம், கெஞ்சாஓமம், அபினி, போஸ்தக்காய், பூசக்கரைகிழங்கு, கசகசா, சக்கு, திப்பிலி, மிளகு, சாதிக்காய், சாதிபத்திரி, மதனகாமப்பூவிரைகள் அரசன்விரை, கீர்முள்ளிவிரை, முருங்கைவிரை, இலைகளை தனித்தனி 1-தோலா விகிதம் சூரணித்துப்போட்டு லேகியம் போலச்செய்து ஆறியபிறகு தேன் 12-பலம், கலந்த காலையில் கடுக்காயளவு சாப்பிட்டால் மேக ரோகங்கள் வெகுமூத்திரம், மூத்திர இருச்சிரம், பித்த மூத்திரம், இலைகள் நிவர்த்தியாகும். இந்திரிய தம்பனம், தேகபுஷ்டி, விரிய விருத்தி, இலைகளை உண்டாக்கும்.

மேகங்களுக்கு சனகயோகம்:—மஞ்சள், மரமஞ்சள், நிரிபலை, இலைகளை கல்கஞ்செய்த மண்பாண்டத்தில்போட்டு மூன்றுநாள் வெய்யிலில்வைத்த பிறகு அதில் ஒரு கவளம் கடலையை மூட்டை கட்டி தலையந்திரத்தில் ஒரு இராபகல் வைத்து எறித்த பிறகு அதை எடுத்த பிரதினமம் நிமிருத்தியாக சாப்பிட்டு வந்தால் அசாத்திய மேகங்கள் நிவர்த்தியாகும்.

அங்கோலியாதி யோகம்:—அழிஞ்சில் நெல்லிவற்றல், மஞ்சள், இலைகளைச் சூரணித்து தேனுடன் கலந்து சாப்பிட்டால் 20-மேகங்கள் நிவர்த்தியாகும்.

சிலாஜித்து யோகம்:—சிலாஜித்து பற்பத்தை சர்க்கரை பால் கலந்து காலையில் பிரதினமம் ஒருவேளை மாத்திரமாக 21-நாள் சாப்பிட்டால், சகல மேகரோகங்கள் நிவர்த்தியாகும்.

சுவர்ணமாக்ஷிக பஸ்பயோகம்:—பொன்னிமலை பற்பத்தில் தேன் கலந்து சாப்பிட்டால் மேகங்கள் நீங்கும். சிந்தில் சர்க்கரை கலந்து சாப்பிட்டால் பித்தமேகம் நிவர்த்தியாகும்.

திரிபலாதி யோகம்:—நிரிபலை, மூங்கில்இலை, கோரைக்கிழங்கு, வட்டத்திருப்பிவேர், இலைகளை நியாழமவைத்த அதில் தேன் கலந்த சாப்பிட்டால் வெகுமூத்திர வியாதி நிவர்த்தியாகும்.

சந்திரகளா வடுகங்கள்:—ஏலக்காய், பச்சைக் கர்ப்பூரம், இலவங்கத்தை, செல்லிவற்றல், ஜாதிக்காய், சிரிஞ்சல், இலவம்பிசின், சுத்திசெய்த ரசம், வங்கபற்பம், இரும்புபற்பம், இலைகளை சமஎடையாகச் சேர்த்து சிந்தில்கொடி, இலவமபட்டை இலைகளின் நியாழத்தால் அரைத்த 2-குன்றிஎடை பிரமாணம் மாத்திரைகள் செய்து தேனுடன் ஒவ்வொரு மாத்திரையாக சாப்பிட்டால் சகல மேகங்கள் நிவர்த்தியாகும்.

குக்குலு:—சக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், செல்லிபருப்பு, கோரைக்கிழங்கு, குங்கிலியம் இலைகள் சமஎடை

யாக, நெரிஞ்சல்வேர்சியாழுத்திலை அரைத்து மாத்திரைகள்செய்து தேகத்தையும், காலத்தையும், நோயின் பலாபலத்தையும் அறிந்து சாப்பிட்டால் மேகம், வாதரோகம், வாதசோணிதம், மூத்திர காதம், மூத்திரதோஷம், பெரும்பாடு இவைகள்யாவும் நிவர்த்தி யாகும். இதற்கு பத்தியம்—இச்சாபத்தியம்.

கோக்ஷுராதி குக்குலு:—நெரிஞ்சல்மூலம் 28-பலம், '164-பலம், ஜலத்தில்கொட்டி அரைபாகம் சுண்டும்படியாக காய்ச்சி வடிகட்டி அதில் 7-பலம், குங்கிலிய சூரணம்போட்டு குழம்பு பதம் வருகிறவரையிலும் காய்ச்சி அதில் நிரிகடுகு, திரிபலை, கோரைக்கிழங்கு, இவைகளை வகைக்கு 1-பலம் விகிதஞ் சூரணித் துப்போட்டு கலக்கி மாத்திரைகள்செய்து சாப்பிட்டால் பிரமேகம் மூத்திர கிருச்சிரம், பெரும்பாடு, வெள்ளை, வெட்டை. சக்கில தோஷம் அஸ்மரீரோகம் இவைகள் யாவும் நாசமாகும்.

சந்தனாதி தைலம்:—சந்தனத்தூள், சன்னிவேர், கோரைக் கிழங்கு, அதிமதரம், வெட்டிவேர், குறுவேர், பேராமுட்டி, நெல்லிவற்றல், தாழம்பூகொத்தாசம், சம்பங்கிமொக்கு, வாசனை புள், இவைகள்யாவும் சமனடையாகச் சேர்த்து செவ்வையாக இடித்து நான்கு மரக்கால் ஜலத்தில்கொட்டி எட்டில் ஒருபாகம் மீறும்படியாக சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதில், எலக்காய், இலவங்கப்பட்டை நாககேசரம், தக்கோலம், பெரிய ஏலக்காய், கிராம்பு தகரம், வெள்ளிரிவிதை, சித்தில்கொடி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமவாலைவேர், மாதுளம் விதை, தாமரைத்தண்டு, ரத்த சந்தனம், கோஷ்டம், புஷ்கரமூலம், தண்ணீர்விட்டான்கிழங்கு இவைகளை சமனடையாகச் சூரணித்துப் போட்டு கியாழத்திற்கு சமனடையாக பசும்பால், பால் எடைக்கு சமனடை நல்லெண்ணை கலக்கி காய்ச்சிய பிறகு கஸ்தூரி, ஜவ்வாது, குங்குமப்பூ, அகரு, பச்சைகர்ப்பூரம் இவைகளைச் சூரணித்து சிறுஅளவாக அதில் கலந்து பிறகு வாசனையுடைய நானுஷ்பங் களையுஞ் சேர்த்தால் தைலம் சித்தமாகும். இதை பானத் திற்கும் அப்பியங்கனத்திற்கும் லேபனத்திற்கு உபயோகித்து வந்தால் சன்னிபாதத்தினால் உண்டாகிய மேகரோகங்கள், உள் எரிச்சல், மேல் எரிச்சல், மூத்திரம், பிரவாஹிகை, அங்க வீரணங்கள், சக்கிலமேகம், மூத்திரகிருச்சிரம், கட்டிகள், ரத்த பித்தம், தலைவலி, பெரும்பாடு, சித்தப்பிரமை இவைகள்யாவும் நிவர்த்தியாகும்.

அசுவகந்தாதி பாக்கம்:—அமுக்கிராங்கிழங்கு சூரணம் 8-பலம், 6-சேர் பசும்பாலில் போட்டு மந்தாக்கினியால் பகுவமாகிறவரை யிலும் கிளரிக்கொண்டு சமைத்து அதில் இலவங்கப்பட்டை, ஏலக் காய், இலவங்கப்பத்திரி, நாககேசரம் இவைகள் வகைக்கு ½-பலம், ஜாதிக்காய், குங்குமப்பூ, மூங்கிலுப்பு, இலவம்பிசின், ஜடாமாஞ்சி

சந்தனம், ரத்தசந்தனம், ஜாதிபத்திரி, திப்பிலி, திப்பிலிமூலம், இலவங் கம், ஓமியன், நெரிஞ்சல், ரசிக்தூரம், நாகபஸ்பம், வங்கபஸ்பம், லோஹபற்பம், இவைகள் வகைக்கு ½-பலம் விகிதஞ் சூரணித்து அதில் கலக்கி மந்தாக்கினியால் பகுவமாக சமைத்து ஆறிபிறகு கொடுத்தால் சகலமேகங்கள் ஜீரணசுங்கள், குன்மங்கள், பைத்திய விகாரங்கள், வாதங்கள், இவைகளை நிவர்த்திக்கும், சக்கிலவிருத்தி, புஷ்டி அக்கினிதீபனம், காந்தி இவைகளை உண்டுபண்ணும்.

சால்மி பாகம்:—256-பலம் பசும்பாலில் 64-பலம் மருதம்பட்டை சூரணங்களைத்து அதில் 16-பலம் வெல்லத்தை கலக்கி மந்தாக்கினியால் சமைத்து, அதில் இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி, நாககேசரம், இலவங்கம், ஜாதிக்காய், கோரைக்கிழங்கு, தவகூரி, கொத்தமல்லி, சுக்கு, திப்பிலி, மிளகு, அமுக்கிராக்கிழங்கு, கடுக்காய்தோல் லோஹபற்பம், இவைகளை யாவும் சமனடையாகச் சூரணித்துப்போட்டு கலந்து சாப்பிட்டால் ஹிருத்ரோகம், க்ஷயங் கள், வாதரோகம், விக்கல், 20-மேகங்கள் இவைகள் யாவும் நிவர்த்தியாகும்.

நாராசூர பாகம்:—நாரசூர், பால், சர்க்கரை இவைகள் வகைக்கு 16-பலம் விகிதம் சேர்த்து பகுவமாக சமைத்து அதில் இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி, நாககேசரம், சுக்கு, திப்பிலி, மிளகு, கஸ்தூரி, லோஹபற்பம், அப்பிரகபற்பம், குங்குமப்பூ, ஜாதிபத்திரி, ஜாதிக்காய், பச்சை கற்பூரம், வெள்ளி பற்பம், கொத்தமல்லி, சந்தனம் இவைகளை தனித்தனி சூரணித்து ½-பலம் விகிதஞ்சேர்த்து செவ்வையாகக் கலந்து காலையில் ½-பலம் விகிதம் சாப்பிட்டால் மேகங்கள், பித்தரோகம், மூத்திரகாதம், மல பந்தம், மூத்திரகிருச்சரம், ரத்தபீடை, நேத்திரபீடை, மார்எரிச்சல், கால் எரிச்சல், கை எரிச்சல் இவைகளை நிவர்த்திக்கும். சக்கில விருத்தி உண்டாக்கும்.

வெள்ளை, வெட்டை, பிரமேகம் முதலியவைகட்கு சிகிச்சை:—சித்திரப்பாலடை என்னும் சிறு அம்மான் பச்சரிசி சமூலத்தை அரைத்து கழற்சியளவு கற்கமாக்கி பாலில் நினம் ஒரு வேளையாக காலையில் மூன்றுநாள் கொள்ள வெள்ளை, வெட்டை, பிரமேகம் முதலியன குணமாகும்.

வல்லாரை யிலையை ஓர்பிடி எடுத்து பால்விட்டரைத்து பாலி லேயே கலக்கி மூன்று நாள் அருந்த குணமாகும்.

ஓரிலைத்தாமரை சாற்றில் அல்லது பருத்தியிலைச்சாற்றில் தினி சேர்த்தருந்தலாம்.

ஆவாரை வேர்ப்பட்டையுடன் சமன் பிரமும் சர்க்கரையுடன் சேர்த்து எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து கற்பனம் எடைக்கு அருந்தி வரலாம்.

சந்தனக்கட்டை, மான்கொம்பு இவைகளை நீர்விட்டு அரைத்தெடுத்த விழுது வகைக்கு ஒரு கொட்டைப்பாக்களவு வீதம் எடுத்து தேன் விட்டுக் குழைத்து அருந்திவர குணமாகும்.

கற்றுழைச்சோற்றுடன் பசுவெண்ணெய் சேர்த்தரைத்த கற்கம் நிறை எலுமிச்சம்பழ அளவுக்கு எடுத்து அதில் பொரித்த படிகாரம் அல்லது பொரித்த வெங்காரம் ஐந்து குன்றிஎடை சேர்த்து அருந்திவரலாம்.

இரத்தனபுருஷ் சமூலத்துடன் சமன் பிரகம் சேர்த்தரைத்து கொட்டைப் பாக்களவு மூன்றாள் கொள்ளவும்.

செல்லிவற்றல், நேற்றுன்கொட்டை வகைக்கு வராகனெடை-1 இவைகளை இடித்து இளநீரில் ஓர்நாள் ஊறவைத்து, அரைத்து அத்துடன் கொட்டைப்பாக்களவு அரைத்த சந்தனத்தைச் சேர்த்து சர்க்கரை கலந்து அருந்தி வரலாம்.

படிகாரம், காவிக்கல் வகைக்குப் பலம் ஒன்றுபப் பொடித்துக் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு 8-குன்றி எடைவீதம் தினம் 2-3 வேளைபாக நீர் அல்லது வெண்ணெயில் அருந்திவர இரத்தப்பிரமேகம் முதலியன குணமாகும்.

படிகாரம், சீனைக்காரம், செல்லிவற்றல் இவைகளைச் சமஎடையாயெடுத்த தனித்தனியே சூரணித்து பிறகு ஒன்றுக்கூட்டிக் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு ¼-முதல் ½-வராகனெடை வீதம் தினமிருவேளை நீர், பால், வெண்ணெய் முதலிய அனுபானங்களில் அருந்திவர இரண்டு மூன்று நாட்களில் வெள்ளை, வெட்டை, சூலைமேகம், பிரமேகம் முதலியன குணமாகும்.

முற்றின வேப்பம்பட்டை, சங்கம்வேர்பட்டை, சிவனார்வேம்பு வேர்ப்பட்டை இவைகளைச் சமஎடையாய் நிறுத்தெடுத்து இடித்துச் சூரணஞ்செய்து வேளைக்கு நிசுகடிப்பிரமாணம் சமன் தினமிருவேளை வீதம் பாலில் அருந்திவர பிரமேகம் குணமாகும்.

ஒரு வராகனெடை வெந்தயத்தை ஓர் இரவு இளநீரில் ஊறவைத்து காலையில் அரைத்து கற்கமாக்கி ஆவின்மோரில் கலக்கிக் குடிக்கவும். இப்படி மூன்று நாட்கள் செய்ய வெட்டச்சூடு, சிறுப் பிரமேகம் முதலியன குணமாகும்.

அத்திப்பிஞ்சை தேங்காய்ப்பால்விட்டு இடித்துப் பிழிந்த சாற்றில் வேளைக்கு 2-3 அவுன்ஸ் வீதம் தினம் ஒருவேளை காலையில்

5 முதல் 10 குன்றிஎடை வெள்ளைக்குங்கிலியத்தூளைச் சேர்த்தருந்திவர பிரமேகங்கள் நீரும்.

வாழைப்பூவில் மோர் தெளித்து இடித்துப் பிழிந்த சாற்றில் வேளைக்கு ½ அல்லது ¼ ஆழாக்கு வீதம் பொரித்த படிகாரம் அல்லது வெங்காரம் சிறிது சேர்த்து கொடுத்துவர பிரமியங்கள் குணமாகும்.

பரங்கிச்சக்கை, சித்திரமூலவேர்ப்பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கப்பட்டை, நிறைகப்பூ இவைகளைச் சமஎடையாய் எடுத்துச் சூரணித்து சமன் தினைகூட்டிக் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்குத் நிசுகடிப்பிரமாணம் தினமிருவேளையாய் ஆவின்நெய்யில் அருந்திவர பிரமியங்கள் நீரும்.

செல்லிக்காய் கந்தகத்தை புளியின்பால், எலுமிச்சம்பழச்சாறு, கற்றுண்ணத்தெளிவுநீர் கற்றுழைச்சாறு இவைகள் ஒவ்வொன்றிலும் இரண்டுமூன்று முறை உருவிச் சாய்த்தக்கழுவி சுத்திசெய்து ஒரு பலம் எடைக்குத் தயார்செய்து இதனுடன் பரங்கிப்பட்டை, சிற்றில் சர்க்கரை வகைக்குப் பலம் ஒன்றுவீதம் கூட்டி இடித்துச் சூரணஞ் செய்து சமன் சர்க்கரை கலந்த வேளைக்கு நிசுகடிப்பிரமாணம் தினம் இருவேளைபாக வெந்நீரில் அருந்திவர சகல பிரமேகங்களும் குணமாகும்.

மேகராஜ சூரணம்:—வெட்டிவேர், சிரகம், இலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, கோஷ்டம், செல்லிவற்றல், நிலப்பனங்கிழங்கு, அமுக்கிரங்கிழங்கு, வால்மிளகு, நிறைகப்பூ, தாமரைகேசரம், பரங்கிச்சக்கை, சித்திரமூலவேர்ப்பட்டை, அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, வால்மிளகு, கற்கடகசிங்கி, தக்கோலம், நெற்பொரி, எலரிசி, சந்தனம், கூகைநீறு, சிற்றிற்சர்க்கரை, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், வகைக்குப் பலம்-½ இவைகளை முறைப்படி இடித்துச் சூரணித்த சமன் சர்க்கரைகலந்து வைத்துக்கொள்ளவும். இதில் வேளைக்கு நிசுகடிப்பிரமாணம் ஆவின்பால் அல்லது ஆவின் வெண்ணெயில் தினமிருவேளை வீதம் ஒரு மண்டலம் அருந்திவர கைகால் உடல் எரிச்சல், நீர்சுருக்கு, வெள்ளை, வெட்டை, நீர்தாரை எரிச்சல், சிற்பிரமேகம், தேகவாட்டி உட்சூடு, மேகக்கட்டை முதலியன குணமாகும்.

வல்லாரைச் சூரணம்:—வல்லாரை இலைகளை ஆவின்பாலில் பிட்டவியலாக அவித்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் பலம்-10, கடுக்காய்தோல், செல்லிவற்றல், தானிக்காய், தோல், எலரிசி, சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், தாளிசபத்திரி, இலவங்கம், பரங்கிச்சக்கை வகைக்குப் பலம்-1 இவைகளை இடித்து வறுப்பாய் வறுத்திடித்துச் சூரணித்து முன் முடிந்து வைத்துள்ள வல்லாரைச் சூரணத்துடன் கலந்து மொத்த எடைக்குச் சமன் சர்க்

கரை கலந்து வைத்துக்கொள்ளவும். இதில் வேளைக்கு நிரிகடிப் பிரமாணம் வெண்ணெய் அல்லது பாலில் தினமிருவேளை வீதம் ஒரு மண்டலம் அருந்திவர மேகரோகங்களை, வெள்ளை, வெட்டை, பிரமேகம் முதலியன குணமாகும்.

சந்தனச் சூரணம்:—சந்தனம், கோஷ்டம், கஸ்தூரிவேர், கடுகு ரோகணி, கற்பூரம், சீந்தில்சர்க்கரை, கோரைக்கிழங்கு, மஞ்சள், இலுப்பைப்பூ, அதிமதுரம், தாமரைக்கிழங்கு, நெய்தற்கிழங்கு, மரமஞ்சள், பூலாங்கிழங்கு, ஏலம், விலாமிச்சவேர், நெல்லிவற்றல், கீழ்காய்நெல்லிசமூலம் உலர்ந்தது வகைக்குப் பலம்-1. இவற்றுள் சீந்தில்சர்க்கரை நீங்கலாக மற்றச் சரக்குகளை நன்கு உலர்ந்தியர்வது அல்லது சிறிது வெதுப்பியாவது கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணித்துப் பிறகு சீந்தில்சர்க்கரையைச் சேர்த்துக் கலந்து மொத்த எடைக்குச் சமன் சர்க்கரை கலந்து வைத்துக்கொள்ளவும். இதில் வேளைக்கு நிரிகடிப்பிரமாணம் தினம் இருவேளை வீதம் ஆவின் பால், ஆவின் வெண்ணெய் முதலிய அனுபானங்களில் ஒரு மண்டலம் அருந்திவர இருபத்தொறுவகை மேகங்களும் குணமாகும்.

அமுர்தாதிச் சூரணம்:—சீந்தில்சர்க்கரை பலம்-1, சாதிக்காய், சாதிபத்திரி, வால்மிளகு, ஏலரிசி, இராம்பு, கசகசா, தாளிசபத்திரி, மாசிக்காய் வகைக்கு கழஞ்சு-1. இவற்றுள் சீந்தில்சர்க்கரை நீங்கலாக மற்றச் சரக்குகளை நன்கு இடித்துச் சூரணஞ்செய்து பிறகு அத்துடன் சீந்தில்சர்க்கரையைச் சேர்த்து மொத்த எடைக்குச் சமன் சர்க்கரை கலந்து வைத்துக்கொண்டு வேளைக்குத் நிரிகடிப்பிரமாணம் தினம் இருவேளை வீதம் தனியாகவாவது அல்லது இத்துடன் குன்றிஎடை அப்பிரகபற்பம், காந்தச்செந்தூரம், கருவங்கச்செந்தூரம முதலியவைகளைக் கூட்டியாவது நெய் அல்லது வெண்ணெயில் அரை அல்லது ஒரு மண்டலம் அருந்திவர மேகநீர், பிரமேகம், மதுமேகம், வெள்ளை, வெட்டை முதலியன குணமாகும்.

ஆவாரை நெய்:—ஆவாரைவேர்ப்பட்டை, தென்னங்குரும்பை வகைக்குப் பலம்-20, நாவல்பட்டை, அத்திப்பட்டை, நீர்ப்பூலாவேர் வகைக்குப் பலம்-10, இவைகளை இடித்து 20-படி நீரில் போட்டு எட்டொன்றாய்ச் சண்டக்காய்ச்சி வடிகட்டிய கியாழத்தில் ஆவின் நெய் படி-2, இஞ்சிச்சாறு படி-½, முசுமுசுக்கைச்சாறு படி-½ விட்டு, அதிமதுரம், சீரகம், மிளகு, தத்திவேர், பழம்பாசிவேர், நாகமல்லிவேர் வகைக்குப் பலம்-1, செங்கழுநீர்க்கிழங்கு, தாமரைக்கிழங்கு, இராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, சிறுகீரைவேர், பசலைக்கீரைவேர், நெல்லிவற்றல், ஏலம் வகைக்குப் பலம்-½, புளியங்கொட்டைத்தோல், ஆவாரையரிசி, வரட்பூலாகொழுந்து வகைக்குப் பலம்-2, கருவேலமரிசின், வெள்வேலமரிசின், விலாம்பிசின், வேப்பம்பிசின், மாம்பிசின், வெட்டிவேர், விலாமிச்சவேர், அருகன் கிழங்கு வகைக்குப் பலம்-½, இவைகளை அரைத்துக் கற்கமாக்கிக்

கரைத்து ஓர் தைலபாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாய் எரித்து இருதபக்குவமாய் காய்ச்சி வடித்து அதில் திப்பிலிச்சூரணம் பலம்-½, சர்க்கரை பலம்-2, தேன் படி-½ இவைகளைச் சேர்த்துக் கலந்துவைத்துக்கொள்ளவும். இதில் வேளைக்கு ஒரு கரண்டி வீதம் தினம் 1 அல்லது 2 வேளையாக ஒரு மண்டலம் அருந்திவர பிரமேகங்கள், சகலமேக ரோகங்கள், நீரிழிவு, மூத்திர கிருச்சரம், வெட்டைச்சூடு முதலியன குணமாகும்.

பொன்னங்காணி நெய்:—பொன்னங்காணி, மஞ்சள் கரிசலாங்கண்ணி இலைகளின் சாறு, ஆவின்பால், ஆவின்நெய், வகைக்குப் படி-1, எலுமிச்சம்பழச்சாறு படி-½ இவைகளை ஓர் பாண்டத்திலிட்டு அதில் 2-பலம் அதிமதுரத்தைப் பால்விட்டரைத்துக் கலக்கி அடுப்பிலேற்றி இருதபக்குவமாய் காய்ச்சி வடித்து அதில் கற்கண்டு, கோரோசனை, சாதிக்காய், சாதிபத்திரி வகைக்குக் கழஞ்சு-1 பொடித்துச் சேர்த்துக் கலக்கி வேளைக்கு ஒரு கரண்டி வீதம் அருந்திவர மேககாங்கை, மேகவாய்வு, பிரமேகங்கள் முதலியன குணமாகும்.

இளநீர் கிருதம்:—சிற்றாமணக்கெண்ணெய், ஆவின் நெய் வகைக்குப் படி-1, இளநீர், தென்னம்பூச்சாறு வகைக்குப் படி-2, துளசி, நெல்லி, முசுமுசுக்கை, சீந்தில், முடக்கத்தான், கற்றுழை, சதாவரி, கரிசாலை, பொற்றலைக்கையாந்தகரை, கற்பூரவள்ளி, சிறுகீரை இலைகளின் சாறு வகைக்குப் படி-½, இலைகளை ஒன்றுக்கலந்து ஓர் தைலபாண்டத்திலிட்டு அதில் நிலப்பனை, நன்னாரி, வெட்டிவேர், விலாமிச்சவேர், கோரைக்கிழங்கு, அசுவகந்தி, செவ்வல்லிக்கொடி, நெய்தற்கிழங்கு, கோஷ்டம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, தாமரைவகையம், சிற்றரத்தை, ஏலம், அதிமதுரம், சீரகம், கருஞ்சீரகம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, இலவங்கம், வெந்தயம், சீனகற்கண்டு வகைக்குக் கழஞ்சு-1 வீதம் அரைத்துச் சேர்த்துக் கலக்கி அடுப்பிலேற்றிச் சிறுதீயில் மூன்றாட்கள் வரையில் காய்ச்சி மூன்றாள் இருதபதத்தில் வடித்து ஒரு மண்டலம் நெற்புடத்தில் வைத்து எடுத்த வேளைக்கு ஒரு கரண்டி வீதம் தினமிருவேளையாக உண்டுவர பிரமியம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, மூத்திரகிருச்சரம், மேகங்களை முதலியன குணமாகும்.

தேத்தான்கொட்டை லேகியம்:—கார்படி தேற்றங்கொட்டையை நன்றாக நெய்த்தக் கழுவி சுத்தஞ்செய்து ஒன்றிரண்டாய்ப் பொடித்து ஆவின்பாலில் மூன்றாள் ஊறப்போடவும். தினந்தோறும் கழுவி எடுத்து புதிய பாலில் போடவும். இப்படி மூன்றாள் ஊறவைத்துப் பிறகு ஆட்டுக்கல்லிலிட்டு ஆட்டி வெண்ணெய் போல் ஆக்கி அதற்குச் சமன் ஆவின் வெண்ணெய் கூட்டிப் பிசைந்து இதற்குச் சமன் ஆவின்நெய் சேர்த்து கடாயிலிட்டு அடுப்பி

லேற்றி வேகவைத்து இளரிக் கொடுத்துக்கொண்டு வந்து பொன் நிறமாக வருஞ்சமயத்தில் ரோகம், எலரிசி வகைக்குக் கழஞ்சு-2, சாதிக்காய், சாதிபத்திரி, குங்குமப்பூ, இராம்பு, சிறுரோகப்பூ, தாளிச பத்திரி, அதிமதரம், கருஞ்சீரகம், இலவங்கப்பட்டை, சதகுப்பை, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு வராகனெடை-5, இடித்து வஸ்திர காயஞ்செய்த சூரணத்தையும், மூன்று பலம் கற்கண்டுத் தூளையும் தூவிக் கிண்டி லேகியமபோல் இளரி வைத்துக்கொண்டு வேளைக்கு கொட்டைப்பாக்களவு தினம் இருவேளை வீதம் அருந்திவர வெள்ளை, வெட்டை, பிரமேகம் முதலியன குணமாகும்.

மேகவூதி எண்ணெய்:—புங்கம்பட்டை, பிராயன்பட்டை, மாம்பட்டை, இலுப்பைப்பட்டை, அழிஞ்சில்பட்டை, எட்டிப் பட்டை, ஓதியம்பட்டை, குவளைப்பட்டை, புரசம்பட்டை, ஆழ ஆற்றிமரப்பட்டை, வேப்பமபட்டை, பூவரசம்பட்டை, நிலவிளாப் பட்டை, சிவனர்வேம்பு வேர்ப்பட்டை இவைகளை வகைக்குப் பலம்-10 வீதம் நிறுத்தெடுத்துச் சதைத்து ஓர் பெரிய மட்கடத்தி லிட்டு, 16-படி தண்ணீர்விட்டு அடுப்பிலேற்றிச் சிறுநீராயெரித்து எட்டிலொன்றுப்ச் சுண்டக் கியாழங் காய்ச்சி வடிகட்டி வைத் துக்கொள்ளவும்.

ஆடுதீண்டாப்பாளை, வெள்ளறுகு, கழற்சியிலை, சங்கங்குப்பி யிலை, செருப்படை, கொட்டைக்கரந்தையிலை, பொடுதலையிலை இவை களின் சாறு வகைக்குப் படி-½ வீதம் எடுத்துக் கலந்துவைத்துக் கொள்ளவும். பிறகு இத்துடன் முன் காய்ச்சி வைத்துள்ள பட்டை நிறுசுகளின குடிநீரைச் சேர்த்துக் கலக்கி ஓர் தைலபாண் டத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுநீராயெரித்த குழம்புபதமாய் வரும்போது அதில் நல்லெண்ணெய் படி-2, பரங்கிச்சக்கைச் சூரணம் பலம்-2 சேர்த்து தைலபதத்தில் காய்ச்சி வடித்து வைத் துக்கொள்ளவும்.

இதில் வேளைக்கு உச்சிக்கரண்டி வீதம் தினம் இருவேளையாக 10-நாள் சாப்பிடலாம். பிறகு ஸ்நாள் விட்டுவைத்து மீண்டும் முன்போல் 10-நாள் சாப்பிடலாம். இப்படி விட்டுவிட்டு இரண்டு மூன்று முறைகள் சாப்பிட்டுவர மேகரோகங்கள், பிரமேகம் முதலி யன யாவும் குணமாகும். இச்சாபத்தியம்.

குங்கிலிய பற்பம்:—தேவையான அளவு வெள்ளைக் குங்கிலி யத்தைப் பொடித்து ஓர் பாண்டத்திலிட்டு மூழ்க இளநீர் விட்டு அடுப்பிலேற்றி எரித்தவர குங்கிலியம் உருகி கட்டியாகி நிற்கும். இளநீரில் பாதிக்குமேல் சுண்டிவருஞ் சமயத்தில் வடித்து குங்கிலி யத்தை எடுத்துக்கொள்ளவும். இப்படி 2, 3 முறை செய்தெடுக்க குங்கிலியம் நல்ல சுத்தியாகும். பின்பு இதைக் கல்வத்திலிட்டு பொடித்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு 2 முதல் 5 குன்றி

எடைவீதம் ஆவின் வெண்ணெய் அல்லது பாலில் அருந்திவர வெள்ளை, வெட்டை, நீர்ருக்கு, மூத்திராள ரணம் முதலியன குணமாகும். இத்துடன் லாசத்துபற்பம் சமன் சேர்த்து வழங்க நல்ல பலனைத் தரும்.

குங்கிலிய வெண்ணெய்:—வெள்ளைக் குங்கிலியம் ஒரு பலம் பொடித்து ஓர் இரும்பு கரண்டியிலிட்டு அதில் பசு நெய் 2½-பலம் விட்டு கரிநெருப்பணலில் வைக்க குங்கிலியம் உருகி நெய்யுடன் உரவாகி நிற்கும். அத்தருணம் அதை இளநீரில் சாய்க்கவும். பின்பு இதை கையினல் கன்கு அடித்துக் கழுவியாவது அல்லது மத்திட்டுக் கடைந்தாவது வர வெண்ணெய்போல் திரண்டுவரும். இதை எடுத்து புதிய இளநீரிலிட்டு முன்போல் மீண்டும் கடைந்து கழுவிவரவும். இப்படி மூன்றுமுறை செய்தெடுக்க தூய வெண் ணெய்போல் கிடைக்கும். இதில் வேளைக்கு கொட்டைப் பாக் களவு வீதம் தினமிருவேளையாக அருந்திவர வெள்ளை, வெட்டை, நீர்ருக்கு, எரிச்சல், பிரமேகம் முதலியன குணமாகும்.

லாசத்து பற்பம்:—இளநீரில் போட்டு கொதிக்கவைத்து கழுவி சுத்தஞ் செய்த கற்பூர லாசத்து ஓர் பலம் எடுத்து அதற்கு கற்சுண்ணத்தைக் கவசஞ்செய்து ஓர் அகலிலடக்கி மேலகல் மூடிச் சீலைமண்செய்து 50 வாட்டியில் புடமிட லாசத்து வெளுத்து இருக்கும். இதைப் பொடித்துக் கல்வத்திலிட்டு கற்றுழைச் சாறு விட்டு ஒரு சமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலடக்கிச் சீலைமண் செய்து மீண்டும் முன்போல் ஒரு புடமிட நல்ல பற்ப மாகும். அரைத்து வைத்துக்கொள்க.

இதில் வேளைக்கு 2, 3 குன்றிஎடை வீதம் தினம் இருவேளை யாக நெய், வெண்ணெய், பால், இளநீர் முதலிய அனுபானங் களில் அருந்திவர வெள்ளை, வெட்டைச்சூடு, பிரமேகம் முதலியன குணமாகும். இச் லாசத்து பற்பத்துடன் சமன் சந்தில் சர்க் கரை, பொரித்த வெங்காரம் இவைகளைச் சேர்த்து அரைத்து வைத் துக்கொண்டு வேளைக்கு 5 முதல் 10 குன்றிஎடை வீதம் தினமிரு வேளையாக வெண்ணெயில் அருந்திவர முற்கூறிய நோய்களில் மிக்க நல்ல பலனைத் தரும்.

தங்க உரம்:—இரசம், கந்தகம், வெள்வங்கம், நவாச்சாரம் வகைக்குப் பலம்-1, முதலில் வங்கத்தை ஓர் இரும்புக் கரண்டியி லிட்டு உருக்கி, சூடாறுவதற்கு முன்பு இரசத்தை அதில் தொர் நித்து சாய்க்க வெட்டையாகும். இதைக் கல்வத்திலிட்டுப் பொடி த்து அத்துடன் கந்தகத்தை சேர்த்து ஒரு மணிநேரம் கன்கு அரைத்து கடைசியில் நவாச்சாரத்தைச் சேர்த்து வெடியுப்புத் நிராவகம்விட்டு இரண்டு ஜாமம் கன்கு அரைத்து உலர்த்தி குப்பியிலிட்டு சீலைமண் செய்து முறைப்படி வாலுகாயந்திரத்தில் வைத்து 4 ஜாமம் எரித்

தெடுக்கவும். ஆறினபின்பு குப்பியிலுள்ள மருந்தை அரைத்து வைத்துக்கொள்க. இது பார்வைக்கு தங்கப்பொடிபோல் காணும். இதுவே தங்க உமெனப்படும். இதில் வேளைக்கு ½ முதல் 1 குன்றி எடை வீதம் தினம் இருவேளையாக நெய் வெண்ணெய் முதலிய அனுபானங்களில் கொடுத்துவர வெள்ளை, வெட்டை, பிரமேகம், மேக நோய்கள், இரகணி, பெரும்பாடு முதலியன குணமாகும். இச்சா பத்தியமாக இருந்து வருதல் நன்று.

பாடிகார பற்பம்:—தேவையான அளவு படிகாரத்தைப் பொடித்துக் கல்வத்திலிட்டு ஆவின்பால் விட்டரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலடக்கிச் சீலைமண்செய்து 40, 50 விரட்டியில் புடமிடவும். இப்படி ஆவின்பால் விட்டரைத்து இரண்டு மூன்று புடங்களிட பற்பமாகும். பொடித்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு 1, 2 குன்றிஎடை வீதம் வெண்ணெயில் கொடுத்துவர வெள்ளை, வெட்டை, வயிற்றுவலி, பேதி முதலியன குணமாகும்.

வெங்கார பற்பம்:—தேவையான அளவு வெங்காரத்தைப் பொடித்துக் கல்வத்திலிட்டு கோழிமுட்டை வெண்கரு விட்டரைத்து வில்லை செய்துலர்த்தி 30, 40 விரட்டியில் புடமிடவும். இப்படி 4, 5 புடமிட நல்ல பற்பமாகும். அரைத்து வைத்துக் கொள்க. இதில் வேளைக்கு 2, 3 குன்றிஎடை வீதம் தினம் இரு வேளையாக, வெண்ணெய், நெய்முதலிய அனுபானங்களில் கொடுத்துவர வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, பிரமேகம் முதலியனகுணமாகும்.

கல்நார் பற்பம்:—கல்நாரை நீரில் நிலமணிசேரம் ஊறவைத்து கழுவி எடுத்து இளநீர்விட்டு கொதிக்க வைத்து கழுவியெடுக்க வேண்டியதாகும். பிறகு இதைப் பொடித்துக் கல்வத்திலிட்டு மூக்குத் திப்பூண்டுசாறு அல்லது முள்ளங்கிச் சிறுகுச்சாறு விட்டரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலடக்கிச் சீலைமண்செய்து புடமிட பற்பமாகும். இதில் வேளைக்கு 1, 2 குன்றிஎடை வீதம் நெய், வெண்ணெய், முதலிய அனுபானங்களில் கொடுத்துவர வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, பிரமியம் முதலியன குணமாகும்.

சிந்தில் சர்க்கரை செய்முறை:—சிந்தில் கொடியில், இழுகு டன் கூடிய முற்றிய கொடிகளாகப் பார்த்துக் கொண்டுவந்து அவைகளை நன்கு சுளைத்து தண்ணீரில் நிலமணி சேரம் ஊறவைத்து பிறகு நன்கு பிசைந்து நிப்பிகளை நீக்கிவிட்டு சிறிது நேரம் தெளிய விட்டு, தெளிவுநீரை வடித்துவிட்டு அடியில் நிற்கும் வண்டலில் மீண்டும் புதிய நீர்விட்டு ஊறவைத்து பின்பு பிசைந்த நிப்பியை நீக்கி, தெளியவிட்டு, நீரை வடித்துவிட்டு மீண்டும் புதியநீர் விடவும். இப்படியே மூன்றுமுறை செய்த பிறகு கடைசியில் மிடைந்தும் வண்டலை பீங்கான் தட்டுகளிலிட்டு வெய்யலில் உலர்த்தி பொடித்து வைத்துக்கொள்க. இது பார்வைக்கு கூகை நீறுபோல வெண்மை

நிறமுள்ள தாளாக இருக்கும். சில சமயம் சிறிது பழுப்பு நிறம் கலந்ததாகவும் காணும். இதுவே சிந்தில் சர்க்கரை அல்லது சிந்தில் சத்து எனப்படும். இதற்கு கைப்பு சுவையுண்டு. இதில் வேளைக்கு 5 முதல் 10 குன்றிஎடை வீதம் தக்க அனுபானங்களில் அருந்திவர சரத்திற்குப் பின் காணும் பலஈனம், அசதி, ஈட்டப்பட்ட சுரம், மண்ணீரல் விக்கம், காமாலை, பித்தாதிக்கம், இருமல், உட்சூரம், வெள்ளை, வெட்டை, பிரமேகம், மூத்திர நாளப் புண்கள், மதுமேகம் முதலியன குணமாகும். இதைப் பெரும்பாலும் சூரணம் லேகியம் முதலியவைகளில் சேர்த்து வழங்குவதுண்டு.

மேகரோகத்திற்கு பத்தியங்கள்:—பழைய அரிசி, கோதுமை, மாமிசரசம், புளிங்கூழ், மோர், வெண்ணெய், பச்சைபயறு, சிந்தில்கொடி, செவ்விக்காய், புடலங்காய், வெட்பாலைக்காய், அத்திக்காய், வாழைக்கச்சல், வாழைப்பூ, புளி, பாவல், கசப்புபதார்த்தங்கள், சஞ்சாரம், நீராடுதல் இவைகள் மேகரோகத்திற்கு பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—தயிர், கள்ளு, வெல்லம், நெய், பால், புளிப்பு, பெருங்காயம், உப்பு வெள்ளைப்பூண்டு, பகல்தூக்கம், மாதர்புணர்ச்சி, மீன், எள்ளு, கடுகு, சுக்கு தேங்காய் எண்ணெய் பதார்த்தங்கள், கத்திரிக்காய், பலாப்பழம், கருணைக்கிழங்கு இவைகள் மேகரோகங்களுக்கு அபத்தியங்கள்.

மூத்திர கிருச்சர சிகிச்சை

கியாழம்:—சிந்தில்கொடி, சுக்கு, செவ்விவற்றல், அழுக்கிருக்கிழங்கு, செரிஞ்சல் இவைகளை கியாழம்வைத்து சாப்பிட்டால் வாத மூத்திரகிருச்சிரம் நிவர்த்தியாகும்.

குசகாசாதி கியாழம்:—தருப்பைப்புல், குசதர்ப்பை, அறுகம்புல், கரும்பு இவைகளின் வேர்களை கியாழம்வைத்து சாப்பிட்டால் பித்தமூத்திர கிருச்சிரம் நிவர்த்தியாகும். இவைகளை பாலில்போட்டு காய்ச்சி அந்தப் பாலை குடித்தால் ஆண்குறியிலிருந்து ஒழுகும் கெட்ட ரத்தமானது நிவர்த்தியாகும்.

திரிகண்டகாதி கியாழம்:—செவ்விவற்றல், சிறுபீளை, கடுக்காய் தோல் இவைகளை கியாழமவைத்து அதில் தேன்கலந்து சாப்பிட்டால் அஸ்மரி, மூத்திரகிருச்சிரம் நிவர்த்தியாகும்.

சதாவரி கியாழம்:—தண்ணீர்விட்டான்கிழங்கு, குசதர்ப்பை, செரிஞ்சல், நிலப்பூசினி, கரும்பு, பேயாவரை இவைகளை கியாழம் வைத்து வடிகட்டி அதில் தேன் சர்க்கரை கலந்து சாப்பிட்டால் மூத்திரகிருச்சிரம் நிவர்த்தியாகும்.

டொஷாணபேதி தியாழம்:—சிறுபீளை, சீர்முள்ளி, கொண்டை, பூனைகாஞ்சொரி, கடுக்காய்பிஞ்சு, சொரிஞ்சல், இலைகளை தியாழம் வைத்து தேன் கலந்து குடித்தால் ஆண்குறியில் இருக்கும் எரிச்சல், பாதை இலைகளுடன்கூடிய மூத்திர அடைப்பு, சொட்டுமூத்திரம் நிவர்த்தியாகும்.

தோஷிராதி தியாழம்:—சொரிஞ்சல், சிறுபீளை யிலைகளின் சமூலங்களைக் தியாழம்வைத்து அதில் சர்க்கரை தேன் கலந்து சாப்பிட்டால் மூத்திர இருச்சரம் நிவர்த்தியாகும்.

ஹரீதக்யாதி தியாழம்:—கடுக்காய்பிஞ்சு, பூனைகாஞ்சொரி, சிறுபீளை, கொண்டைச்சதை, சொரிஞ்சல் இலைகளை தியாழம்போட்டு தேன்கலந்து சாப்பிட்டால் மலபந்தம், எரிச்சல், நோய் இலைகளுடன் கூடியிருக்கும் மூத்திரஇருச்சரம் நிவர்த்தியாகும்.

யவாதி தியாழம்:—யவதானியம், ஆமணக்குவேர், தருப்பைப்புல், ரானல், கரும்பு இலைகளின் வேர்கள், சிறுபீளை, தண்ணீர்விட்டான்கிழங்கு, கடுக்காய்தோல் இலைகளை தியாழம்வைத்து அத்துடன் வெல்லத்தைக் கலந்து சாப்பிட்டால் மூத்திரஇருச்சரம், குன்மம் இலைகள் நிவர்த்தியாகும்.

ஏலாதி சூரணம்:—எலக்காய் மிருதுவாய்ச் சூரணித்த மோர் அல்லது கள் அல்லது வாழைப்பழரசம் இலைகளுடன் கலந்து சாப்பிட்டால் மூத்திர இருச்சரம் நிவர்த்தியாகும்.

ஏலாதி சூரணம்:—எலக்காய், சிறுபீளை, கொரசத்து, சொரிஞ்சல், வெள்ளரிவிதை, இந்துப்பு, குங்குமப்பூ இலைகள் சமனடையாய்ச் சூரணித்து அரிசிகழுநீரில் கலந்து சாப்பிட்டால் மூத்திர இருச்சரம் சாந்தமாகும்.

வஸ்தியாமயாந்தக சூரணம்:—எலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, கோம்பு, சந்தனத்தூள், வெட்டிவேர், குறுவேர், பச்சைகற்பூரம், கொரசத்து, கற்பூரம், தேத்தான்கொட்டை, அல்லிகிழங்கு, பற்பாடகம், கருவாழைக்கிழங்கு, கொத்தமல்லி, சிந்தில்கொடி, சொரிஞ்சல்வேர், தாமரைதண்டி, தாமரைக்கிழங்கு தாமரை இதழ்கள், இலைகள் சமனடையாகச் சூரணித்து இதற்கு சமம் நிராகரு, நிரிபலை இலைகளின் சூரணம் அத்துடன் சமனடையாகச் சர்க்கரையை கலந்த தேன், நெய் இலைகளுடன் சாப்பிட்டால் சகலபிரமேகங்கள், மூத்திரரோகம், மூத்திரஇருச்சரம், சோமரோகங்கள் இலைகள் நீங்கும்.

நிரிபலாதி சூரணம்:—நிரிபலை, இந்துப்பு, சோஷ்டம், சந்தனத்தூள், தேவதாரு, கோரைக்கிழங்கு, பற்பாடகம், வெட்டிவேர், இலைகளை சமனடையாகச் சூரணித்து நெய்கலந்த மூன்றுநாள் சாப்பிட்டால் மூத்திரஇருச்சரம் நிவர்த்தியாகும்.

சர்ஜராதி சூரணம்:—சர்ஜரம், நெல்லிவற்றல், நிப்பிலி, கொரசத்து, எலக்காய், அமிதரம், சிறுபீளை, சந்தனம், வெள்ளரிவிதை, கொத்தமல்லி இலைகளைச் சூரணித்து சர்க்கரைகலந்த அதிமதுரியொழத்துடன் சாப்பிட்டால் தேகஎரிச்சல், ஆண்குறிஎரிச்சல், மூத்திரஎரிச்சல், தொடைசந்துகளில் எரிச்சல், இந்திரிய எரிச்சல், மூலம், மூத்திரஅடைப்பு, சூலை, இலைகள் நிவர்த்தியாகும். பலத்தை உண்டாக்கும்.

சந்திரகளா ரசம்:—இரசபற்பம், தாம்பிரபற்பம், அப்பிரகபற்பம் இலைகள் வகைக்கு ½-பலம், சுத்திசெய்தகெந்தி ½-பலம், இலைகளை பொன்முருக்கலந்த கல்வத்திலிட்டு கன்னு அரைத்து அதில் கோரைக்கிழங்கு, மாதளம்பூ, அருகன்வேர், தாழம்பூ, சகதேவி, கற்றுழை, பற்பாடகம், தண்ணீர்விட்டான் கிழங்கு, இலைகளின் சாறு அல்லது குடிநீரினல் ஒவ்வொன்றினல் ஒவ்வொருநாள் அரைத்து, கடுகுரோகணி, சிந்தில்சர்க்கரை, பற்பாடகம், வெட்டிவேர், குன்றிவேர், சந்தனத்தூள், கன்னரிவேர் இலைகளை சமவடையாகச் சூரணித்து மூன்று மருந்துக்குச் சமனுகச் சேர்த்து, நிராகரு தியொழத்தினல் 7-நாள் அரைத்து கடலை அளவு மாத்திரைகள் செய்து சாப்பிட்டால் சகலபித்தரோகங்கள் சகலவாதபித்தங்கள், உள்வெளி எரிச்சல்கள், தாபசுரம், பிரமை, மூர்ச்சை, மாதர்களுக்கு உண்டாகும் ரக்தஸ்ராவம், ஊர்த்துவ அதோ ரக்தபித்தம், இத்தனைவித சகல மூத்திரஇருச்சிரங்கள் இலைகள் நிவர்த்தியாகும்.

பிருஹதோகுரூராதி லேகியம்:—சொரிஞ்சல் 100-பலம், குசதற்பை வேர் 100-பலம், சிறுபீளை 8-பலம், சிந்தில்கொடி 5-பலம், ஆமணக்கு வேர் 8-பலம், தண்ணீர்விட்டான் கிழங்கு 10-பலம், தாமரைக்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு, இலைகள் வகைக்கு 20-பலம், இலைகளை பொன்முருக்கச் சேர்த்து இடித்து 256-பலம் ஜலத்தில் கொட்டி நாலில் ஒரு பாகம் மீறும்படியாக தியொழத்தை கண்டக்காய்ச்சி வடிகட்டி அதில் பசுநெய் 20-பலம், சொழித்த பற்பம் 16-பலம் இலைகளைச் சேர்த்து வேறிய பதமாகக் கிளறி நிலப்பனைக் கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, நிரிகடு, நிரிபலை, சிறிய ஏலக்காய், ஜடாமாஞ்சி, குறுவேர், நாககேசரம், தாமரைத்தண்டு, ஜாபத்திரி, இலவங்கப்பட்டை, அமிதரம், மூன்றிலுப்பு, ஜாதிக்காய், வெட்டிவேர், கிலாச, ரக்தசந்தனம், கொத்தமல்லி, கடுகுரோகணி, யவக்ஷாரம், வெங்காரம், நாகமல்லி, கடுக்காய்பூ, புஷ்கரமூலம், சிச்சிலிக்கிழங்கு, மாமஞ்சள் இலைகள் வகைக்கு 1-பலம் விதமஞ் சூரணித்து அத்துடன் நாகபற்பம், வங்கபற்பம், லோஹபற்பம் இலைகள் வகைக்கு 1-பலஞ் சேர்த்த லேகியபதத்தில் கிளறி பழைய பானையில் வைத்து வேளைக்கு 1-பலம் விதம் சாப்பிட்டால் அம்மரி, மூத்திரஇருச்சரம், மூத்திரநாதம், மூத்திரபந்தம், 20-மேகங்

கள், சுக்கில தோஷம், விரியாஷ்டம், ஆமவிர்த்தம், தாதுக்ஷயம், ஊஷ்ண வாதம் இவைகள் நீங்கும்.

நாரிகேள கிருதம்:—தேங்காய்நீர், பசும்பால், பூசனிபழ ரசம், தண்ணீர்விட்டான்கிழங்கு ரசம், இவைகள் வகைக்கு 64-பலம், நெய் 20-பலம், சின்னிவேர், அமிமதாரம், நிராகஷ, வெட்டிவேர், சர்க்கரை இவைகளை சமனடையாக அரைத்து கல்கஞ்செய்து நெய் எட்டிலொரு பாகஞ் சேர்த்து மிருது அக்கினியால் கிருத பக்குவமாக சமைத்து சாப்பிட்டால் எட்டுவித மூத்திரகிருச்சிரங்கள், தேக எரிச்சல், தலைஎரிச்சல், பித்தம், யோனிரோகம், சுக்கிரம் இவைகள் நாசமாகும்.

சதாவரியாதி கிருதம்:—நெய் 20-பலம், தண்ணீர்விட்டான் கிழங்கு ரசம் 32-பலம், ஆட்டுப்பால் 64-பலம், சிறுநெரிஞ்சல், யானைநெரிஞ்சல், சிந்தில்கொடி, பூனைகாஞ்சொரி, குசதர்பை, முள்ளங்கத்திரி இவைகளின் இரசங்கள் வகைக்கு 2-பலம் இவைகள் யாவையும் ஒன்றுக்கலந்த அதில் அமிமதாரம், நிரிகடுகு, நெரிஞ்சல்காய், சிறுபீளை, எலரசத்து, தால்சின்னி, எலக்காய், இலவங்கப்பத்திரி, இவைகளை வகைக்கு ½-பலம் விதந்ஞ் சூரணித்துப்போட்டு சர்க்கரை 2-பலஞ் சேர்த்து கிருதபக்குவமாக காய்ச்சி பிறகு தேன் கலந்து சாப்பிட்டால் மூத்திரகிருச்சிரம், மூத்திரதோஷம் இவைகள் நீங்கும்.

நிரிகண்ட காக்கிய குக்குலு:—எட்டொன்றுக்காய்ச்சிய நெரிஞ்சல் கியாழத்தில் குங்கிலிய சூரணத்தைக் கலந்த அதில் நிரிகடுகு, நிரிபலை, கோரைக்கிழங்கு இவைகளைச் சூரணித்து குங்கிலியத்திற்கு சமமாகச் சேர்த்த கலந்த லேகிய பக்குவமாக சமைத்து ஆறியபிறகு எடுத்த மாத்திரைகள் செய்து சாப்பிட்டால் பிரமேகம், மூத்திரகிருச்சிரம், மூத்திர அடைப்பு, சுக்கிலதோஷம், சகல வாதங்கள் இவைகள்யாவும் நிவர்த்தியாகும்.

தாடிமாதி ரசபானம்:—புளித்தமாதுளம் பழரசம், எலக்காய், சீரகம், இந்துப்பு, இவைகளின் சூரணத்தை கள்ளில்சேர்த்து கொடுத்தால் மூத்திரகிருச்சிரம் நிவர்த்தியாகும்.

யவக்ஷாரபானம்:—யவக்ஷாரத்தைச் சூரணித்து மோருடன் கலந்து சாப்பிட்டால் மூத்திரகிருச்சிரம் அஸ்மரி நிவர்த்தியாகும்.

1-பலம் கலியாண பூசனிக்காய் ரசத்தில் 7-குன்றிஎடை யவக்ஷாரம் ½-பலம் சர்க்கரை கலந்து சாப்பிட்டால் மூத்திரகிருச்சிரம் நிவர்த்தியாகும்.

எலக்காய், சிறுபீளை, சிலாஜித்து பற்பம், நிப்பிலி இவைகளைச் சூரணித்து அரிகெழுநீரில் கலக்கிகுடித்தாலும், அல்லது வெல்லத்துடன் கலந்து சாப்பிட்டாலும், மூத்திரகிருச்சிரம் நிவர்த்தியாகும்.

உசிராதி சூரணம்:—வெட்டிவேர், குறுவேர், இலவங்கப்பத்திரி, கோஷ்டம், செல்லிவற்றல், நிலப்பனக்கிழங்கு, எலக்காய், காட்டுமிளகு, நிராகஷ, குங்குமப்பூ, நாககேசரம், தாமரைப்பூ இதழ்கள், பச்சைக்கற்பூரம், சந்தனம், ரத்தசந்தனம், நிரிகடுகு, அமிமதாரம், செம்பொரி, அமுக்கிராக்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, நெரிஞ்சல், கடுக்காய்பூ, ஜாதிக்காய், இச்சிலிக்கிழங்கு இவைகளை சமனடையாக சூரணித்து இந்த சூரணத்திற்கு இரண்டு பாகம் அதிகமாய் சிந்தில் சர்க்கரை கலந்து, கற்கண்டு, தேன் இந்த அனுபானத்துடன் காலையில் சாப்பிட்டு வந்தால் சுக்கிலம், ரத்தபித்தம், உடல் எரிச்சல், மூத்திரகாதம், மூத்திரகிருச்சிரம், இரக்தஸ்ராவம்-84, வாதரோகம், மேகரோகம் இவைகள் யாவும் நிவர்த்தியாகும்.

கோக்ஷுராதி வடகம்:—நிரிகடுகு, நிரிபலை இவைகள் சமஎடை, இவைகளுக்கு சமம் குங்கிலியம் இவைகளை யொன்றுக்கலந்து நெரிஞ்சல் கியாழத்தினல் அரைத்து கண்டையளவு மாத்திரைகள் செய்து தேகதிடத்திற்கு தக்கபடி 1-2 மாத்திரை வீதம் கொடுத்துவர பிரமேகம், வாதரோகம், வாதரக்தம், மூத்திரகாதம், மூத்திரதோஷம், பெரும்பாடு, மூத்திரகிரிச்சிரம் இவைகள் நிவர்த்தியாகும். (இதற்கு இச்சாபத்தியம்)

மூத்திர கிருச்சிரத்திற்கு பத்தியங்கள்:—வாதமூத்திர கிருச்சிரத்தில் அப்பியங்கனம், ஒத்தடம் போடுதல், லொக்குவிதல், சுத்திரச்சேதம் இவைகளை செய்யவேண்டியது. பித்த மூத்திரகிருச்சத்தில் ஸ்நானம், சீதளபதார்த்தம் முதலியவைகளினல் வஸ்தி, விரேசனம் இவைகளை செய்யவேண்டியது. கபமூத்திர கிருச்சரத்தில் வியர்வை வாங்குதல், விரேசனம், யவக்ஷாரம், யவான்னம், நிக்ஷணலேபனம் இவைகளை செய்ய வேண்டியது. நிரிதோஷ மூத்திரகிரிச்சிரத்தில் மேற்கூறிய எல்லாவற்றையும் அந்தந்த தோஷ தொந்தத்திற்கேற்ற படி செய்யவேண்டியது. பழைய சிகப்பு அரிசி, பசுமோர், பசுநெய், பசும்பால், பச்சைபயறு, சர்க்கரை, கலியாண பூசினிக்காய், புடலங்காய், சுக்கு, நெரிஞ்சல், கற்முழை, முள்ளு வெள்ளரிக்காய், கர்ஜூரம், தேங்காய், துங்கு, தர்பூசனிப்பழம், எலக்காய், சீதளமான அன்னபானங்கள், ஆற்றலம், பச்சைகற்பூரம் இவைகள் மூத்திரகிருச்சித்திற்கு பத்தியங்கள்.

மூத்திர கிருச்சிரத்திற்கு அபத்தியங்கள்:—கள் குடித்தல், அதிக உழைப்பு, மாதரின் புணர்ச்சி, ஆசை, குதிரை இவைகளின் மீது சவாரி செய்தல், கிருத்தமான அன்னம், விஷமமான அன்னங்கள், தாம்பூலம், மீன், உப்பு, இஞ்சி, எண்ணையில் செய்த பக்ஷணங்கள், எள்ளு, கடுகு, மூத்திரத்தை அடக்குதல், உரத்து, அதிதீக்ஷ்ணம், ரூக்ஷம், புளிப்பு இவைகள் கலந்த பதார்த்தங்கள் இவைகள் யாவையும் மூத்திர கிருச்சிரோகி நிவர்த்திக்க வேண்டியது.

நீரடைப்பு சிகிச்சை

நீர்முள்ளி கியாழம்:—நீர்முள்ளி, நெருஞ்சில், சிறுபீளை, வாழைக் கொடி இவைகளைக் கியாழமிட்டு சாப்பிட்டாலும், அல்லது முருங்கன் வேர்கியாழம் கொஞ்சம் உஷ்ணமாக சாப்பிட்டாலும் மூத்திர ஆல்மரி கிவர்த்தியாகும்.

பித்தாஸ்மரீ பாஷாணபேதி கியாழம்:—கல்லுருவி கியாழத்தில் வெல்லத்து சூரணஞ் சர்க்கரை கலந்து சாப்பிட்டால் பித்தாஸ்மரீ கிவர்த்தியாகும்.

கபாஸ்மரிக்கு சிக்ரு கியாழம்:—முருங்கன்வேர்பட்டை, உலி மிடிவேர்பட்டை, இவைகளை கியாழம் வைத்த அதில் பலாக்ஷாரம் கலந்து சாப்பிட்டால் கபாஸ்மரி கிவர்த்தியாகும்.

நெரிஞ்சில் கியாழம்:—மாவிலிங்கப்பட்டை, சுக்கு, நெரிஞ்சல், இவைகளை கியாழம்வைத்த அதில் பலாக்ஷாரம், வெல்லம் கலந்து சாப்பிட்டால் சர்க்கரஸ்மரி மூத்திர கிருச்சிரம் இவைகள் நீங்கும்.

ஏலாதி கியாழம்:—ஏலக்காய் 1-பாகம், அதிமதுரம் 2-பாகம், நெரிஞ்சல் 3-பாகம், காட்டுமிளகு, 4-பாகம், ஆமணக்குவேர், 5-பாகம், ஆடாதோடை 6-பாகம், திப்பிலி 7-பாகம், சிறுபீளை 8-பாகம் இவைகளை கியாழம் வைத்த வெகுசத்த பற்பத்தை கலந்து சாப்பிட்டால் சர்க்காஸ்மரி கிவர்த்தியாகும்.

சுண்டியாதி கஷாயம்:—சுக்கு, செல்லி, காயுருவி, முருங்கை வேர்பட்டை, நெரிஞ்சல், கடுக்காய்தோல், கொண்டைசதை, இவைகளை சமனடையாக கியாழம்வைத்த அதில் பெருங்காயம், பலாக்ஷாரம், இந்துப்பு, இவைகளை கலந்துகொடுத்தால் அல்மரி, மூத்திர கிருச்சிரம் இவைகள் நாசமாகும். நீடனமுண்டாகும்.

பாஷாணபேதி கியாழம்:—சிறுபீளை நெரிஞ்சல், ஆமணக்குவேர், கண்டங்கத்திரிவேர், முள்ளங்கத்திரிவேர், ஆனைநெரிஞ்சல்வேர், இவைகளை கியாழம்வைத்த தயிர்கலந்து சாப்பிட்டால் மூத்திரகாதம், சுக்கிலதோஷம், பயங்கரமாகிய நீர் அடைப்பு, சர்க்கரஸ்மரி, இவைகள் கிவர்த்தியாகும்.

குலித்த கியாழம்:—2-பலம், கொள்ளு கியாழம் வைத்த அதில் சந்தனவணம், கொள்ளுக்காய் வேர்வேர்சூரணம் இவைகளை 14-குன்றிமடை கலக்கி குடித்தால் மூத்திர கிரிச்சரம், கல்லடைப்பு, சதைபடைப்பு இவைகள் நீங்கும்.

மஞ்சிஷ்ட்டாதி சூரணம்:—மஞ்சிஷ்டி, முள்ளுவெள்ளரிக் காய்விதை, சீகை, சதாப்பிலி, வெள்ளிவற்றல், இவைகளை பழ கண்ணாடிச்சதை, தித்திசெய்த வெடியுப்பு இவைகள் பாலையுஞ் சமனடை

யாகச் சூரணித்து மூன்று விரற்கடை பிரமாணம்நீரில் சாப்பிட்டால் அல்மரி கல்வெளியில் விழுத்திவிடும்.

திரிகண்டகாதி சூரணம்:—நெருஞ்சிமுள் சூரணத்தில் தேன் ஆட்டுப்பால் கலந்த 7-நாள் சாப்பிட்டால் கல்லடைப்பு நோய் கிவர்த்தியாகும்.

நீர்முள்ளி எண்ணெய்:—நீர்முள்ளி இலைச்சாறு ½-படி, சிற்ரு மணக்கெண்ணெய் ½-படி, காட்டுவாழைச்சாரம் 1-பலம். வாழைச்சாரத் தைப் பொடித்த நீர்முள்ளி இலைச்சாற்றில் கரைத்து சிற்றுமணக் கெண்ணெய் சேர்த்துக் கலந்து ஓர் தைலபாண்டத்திலிட்டு அடுப்பி லேற்றிச் சிறு தீயாயெரித்து பதமுறகாய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும்.

தேக நிடத்திற்கும் நோயின் வன்மைக்கும் தக்கபடி இதில் வேளைக்கு ½-முதல் 1 அவுன்சு வீதம் தினம் ஒரு வேளை காலையில் வெறும் வயிற்றில் கொடுக்க இரண்டு மூன்று முறை பேதியாகும். நீரும் சுன்ரு வெளிப்படும் இப்படி மூன்று நாள் கொடுக்கவும். இப்படி மாதத்திற்கு ஒரு முறையாக இரண்டொரு முறைகள் வழங்கலாம்.

இதனால் கைகால் பிடிப்பு, குன்மம், சூலை, கிருமி நோய், நீரடைப்பு, சதைபடைப்பு, கல்லடைப்பு, மூக்கட்டி, சோபை, மகோதரம், அஜீர்ணரோகம் முதலியன குணமாகும்.

வெடியுப்புச் சுண்ணம்:—வெடியுப்பு பலம்-5, ஆமைபோடு பலம்-10. ஆமை ஓட்டைப் பொடித்து பாதி பாகத்தை ஓர் மண் அகலில் போட்டு அதன்மீது வெடியுப்பை வைத்து, மேலும் ஆமை ஓடுத் தூளைப் போட்டு மேலகல் மூடிச் சீலைமண்செய்த 50-விராட்டி யில் புடமிட்டு ஆறினபின் பிரித்துப் பார்க்க வெடியுப்பு உருகி வெளுத்து இருக்கும். இதை மட்டும் எடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்து வைத்துக்கொள்ளவும்.

இதில் வேளைக்கு 1-2 குன்றிடை வீதம் தினம் இருவேளை பாய்ச் சோம்புக்குடிநீர், நீர்முள்ளிக்குடிநீர் முதலிய அனுபானங் களில் வழங்க நீரடைப்பு, கல்லடைப்பு, சோபை, மகோதரம் முதலி யன குணமாகும்.

நவாச்சாரப் பதங்கம்:—சுமார் இரண்டு மூன்று பலம் எடை யுள்ள வாழைச்சாரத்தைப் பொடித்துக் கல்வத்திலிட்டு குப்பைமேனி இலைச்சாறுவிட்டு அரைத்து வில்லைசெய்துலர்த்தி வைத்துக்கொள்ள வும். பிறகு வாய் பொருந்தமான இரண்டு மண்பானைகள் தயார் செய்து, ஒரு பானையின் உட்புறத்தில் குப்பைமேனிச்சாற்றை தடவி உலர்த்தவும். மூலிகைச்சாறு தடவாத பானையின் உட்புறத்தில் வாழைச்சார வில்லையை வைத்து, மூலிகைச்சாறு தடவிய பானையைக்

கொண்டு மூடி, வாய்க்கு மேமண்செய்து அடுப்பிலேற்றி ஒருஜாமம் எரித்து ஆறவிட்டு மறுநாள் பிரித்து மேற்பாகையின் உட்புறத்தில் பார்க்க பதங்கம் பற்றியிருக்கும். இதைச் சுரண்டி பத்திரப்படுத்தவும். இதில் வேளைக்கு குன்றிஎடை வீதம் தக்க அனுபானங்களில் கொடுத்துவர சீச்சுருக்கு, நீரடைப்பு, கல்லடைப்பு, சோபை, காமாலை, மகோதரம் முதலியன குணமாகும்.

அஸ்மரீரோக பத்தியம்:—கொள்ளு, பச்சைபயறு, கோதுமை, பழையஅரிசி, யவதானியம், சிறுகீரை, தூனிப்பழம், இஞ்சி, பலசுரம் இவைகள் அஸ்மரீரோகத்தில் பத்தியங்கள். மற்றும் விரேசன சிகிச்சை, வமனசிகிச்சை, இலங்கணம், விரல்வைவாங்கல், சலாகை விடல், பீச்சுதல், பற்று, ஒற்றடம் முதலியவைகளையும் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி செய்யலாம்.

அபத்தியங்கள்:—மூத்திரம், சுக்கிலம் இவைகளின் வேகத்தைத் தடுத்தல், மலத்தை பங்கிக்கும்படியான அன்னம், பழைய அன்னம், குளிர்ந்த அன்னம் இவைகள் யாவும் அபத்தியமென்று அறிய வேண்டியது.

சூலை சிகிச்சை

தசமூலாதி தியாழம்:—தசமூல தியாழத்தில் ஆமணக்கு எண்ணெய், பெருங்காயம், சவ்வர்ச்சலவணம், இவைகளைக் கலந்து சாப்பிட்டால் கோரமானசூலைகள் நிவர்த்தியாகும்.

விசுவாதி தியாழம்:—சுக்கு, ஆமணக்குவேர் இவைகளை தியாழம்வைத்து அதில் பெருங்காயம், சவ்வர்ச்சலவணம் கலந்து குடித்தால் சூலைகள் நிவர்த்தியாகும்.

பலாதி தியாழம்:—சிற்றாமுட்டி, வெள்ளைச்சாரணை வேர், ஆமணக்குவேர், முள்ளங்கத்திரி, கண்டங்கத்திரி, தெரிஞ்சல் இவைகளை தியாழம்வைத்து அதில் பெருங்காயம், உப்பு கலந்து சாப்பிட்டால் வாதசூலை நிவர்த்தியாகும்.

பித்தசூலைகளுக்கு சதாவரியாதி தியாழம்:—தண்ணீர்விட்டான் கிழங்கு, அதிமதுரம், சிற்றாமுட்டி, நருப்பைவேர், தெரிஞ்சல் இவைகளைக் தியாழம் வைத்து அதில் வெல்லம், தேன், சர்க்கரை கலந்து குடித்தால் பித்தரத்தம், எரிச்சல், சூலை இவைகள் நிவர்த்தியாகும்.

பிருஹத்யாதி தியாழம்:—கண்டங்கத்திரி வேர், தெரிஞ்சல், ஆமணக்குவேர், சுரசர்ப்பை, காசசர்ப்பை, கரும்பு இவைகளின் வேர்களை தியாழம்போட்டு சாப்பிட்டால் கொடூரமான பித்தசூலைகள் நிவர்த்தியாகும்.

திரிபலாதி தியாழம்:—கடுக்காய் 1-பாகம், தானிக்காய் 2-பாகம், நெல்லிவற்றல் 3-பாகம், சாக்கொன்றைப்பூவி 4-பாகம் இவைகளை தியாழம்வைத்து அதில் சர்க்கரை தேன் கலந்து சாப்பிட்டால் ரத்தபித்தம், எரிச்சல், பித்தசூலை இவைகள் நீங்கும்.

கபசூலைகளுக்கு ஏறண்டமூலாதி தியாழம்:—ஆமணக்குவேர் 2-பலம், 16-பலம், சலத்தில்கொட்டி தியாழங் காய்ச்சி அதில் யவக்ஷாரம் கலந்து சாப்பிட்டால் பாரிசத்திலிருக்கும் கபசூலைகள் நிவர்த்தியாகும்.

ஆமசூலைகளுக்கு சித்திரகாரி தியாழம்:—சித்திரமூலம், மோடி, ஆமணக்குவேர், சுக்கு, கொத்தமல்லி, இவைகளை தியாழம்வைத்து அதில் பெருங்காயம், இந்துப்பு, பிடாலவணம் கலந்துகொடுத்தால் ஆமசூலை நிவர்த்தியாகும்.

தொந்தசூலைகளுக்கு தியாழம்:—கண்டங்கத்திரி, முள்ளங்கத்திரி, சுரசர்ப்பை, காசசர்ப்பை, கரும்பு இவைகளின் வேர்கள், தெரிஞ்சல் ஆமணக்குவேர், இவைகளை தியாழம் வைத்து சர்க்கரை, தேன் கலந்து சாப்பிட்டால், பித்தவாதசூலை நிவர்த்தியாகும்.

பித்தசிலேஷ்ம சூலைகளுக்கு படோலாதி தியாழம்:—பேய்ப்புடல், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், வேப்பன்னர்க்குடல், இவைகளை தியாழம் வைத்து அதில் தேன் கலந்து சாப்பிட்டால், பித்தசிலேத்தமசூலை, வாந்தி, எரிச்சல், சூலை இவைகள் நிவர்த்தியாகும்.

நிராகஷாதி தியாழம்:—நிராகஷா, நிப்பிலி, ஆடாதோடைவேர்கு, இவைகளை தியாழம் வைத்து குடித்தால் சிலேஷ்மசூலை நிவர்த்தியாகும்.

விரேசனம், வமனம் முதலிய சிகிச்சைகளைச் செய்தால் பித்தசிலேஷ்ம சூலை நிவர்த்தியாகும்.

ஏரண்டமூலாதி தியாழம்:—ஆமணக்குகாய், ஆமணக்குவேர், கண்டங்கத்திரிவேர், முள்ளங்கத்திரிவேர், தெரிஞ்சில்வேர், நிலக்கடம்பை, சிற்றாமல்லி, பேராமுட்டி, சதகுப்பி ஆடாதோடை இவைகளை தியாழம் வைத்து அதில் சர்க்கரை, சுக்கு இவைகளை சமனளவாக தியாழம் வைத்து அதில் யவக்ஷாரம் கலந்து சாப்பிட்டால் தொந்த சூலைகள் நிவர்த்தியாகும்.

ஏலாதி தியாழம்:—ஏலக்காய், பெருங்காயம், யவக்ஷாரம், இந்துப்பு, இவைகளை தியாழம் வைத்த ஆமணக்கெண்ணெய் கலந்து சாப்பிட்டால், இருதயசூலை, குன்மசூலை முதலியன குணமாகும்.

மாதுலிங்காதி தியாழம்:—மாதளம் பழரசத்திலாவது அல்லது முருங்கைவேர் தியாழத்திலாவது யவக்ஷாரம்தேன் கலந்து சாப்

பிட்டால், பாரிசகூலை, இருதயகூலை, அடிவயிற்றில்நோய், இவைகள் நீங்கும்.

ஓமக் கியாழம்:—ஓமம், பெருங்காயம், பிடாலவணம், சுக்கு, சவ்வர்ச்சலவணம், திப்பிலி, கண்டங்கத்திரி, மாதுளம்பழவிரை, இவைகளை சமனடையாகச் சேர்த்த கியாழம் வைத்து சாப்பிட்டால் சகல சூலைகளும் நீங்கும்.

ஏரண்டாதி கியாழம்:—ஆமணக்குவேர், வில்வவேர், கண்டங்கத்திரிவேர், முள்ளங்கத்திரிவேர், மாதுளம்பழவேர், சிறுபிரை நிரி கடுகு, இவைகள் சமனடையாக கியாழம்வைத்த அதில் யவக்ஷாரம், பெருங்காயம், ஆமணக்கு எண்ணெய் கலந்து சாப்பிட்டால் இடுப்புசூலை, தொடைசூலை, இருதயசூலை, ஸ்தனியசூலை, இவைகள் நிவர்த்தியாகும்.

பரிணமசூலைக்கு நிரிபலாதி கியாழம்:—நிரிபலை, கொத்த புங்கன்பட்டை, இவைகள் சமனடையாக கியாழம் வைத்து அதில் தேன் சர்க்கரை கலந்த குடித்தால் தேகதாபம், ரத்தபித்தம், பித்த சூலை, பெரும்பாடு இவைகள் நிவர்த்தியாகும்.

பரிணமசூலைக்கு கல்கம்:—விஷ்ணுகிரந்திவேர் கல்கத்தில், சர்க்கரை தேன், நெய், இவைகளைச் சேர்த்து ஏழுநாள் சாப்பிட்டால் பரிணமசூலை நிவர்த்தியாகும்.

பரிணமசூலைக்குசுண்டி கல்கம்:—சுக்கு, எள்ளு, வெல்லம், இவைகளை கல்கஞ்செய்து பால்கலந்து சாப்பிட்டால் பரிமணசூலை, ஆமவாதம், இவைகள் மூன்று நாளைக்குள் நிவர்த்தியாகும்.

சகல சூலைகளுக்கு சூலகுடார ரசம்:—சுட்ட வெங்காரம், சுத்தி செய்த ரசம, சுத்திசெய்த கெந்தி, நிரிபலை, நிரிகடுகு, சுத்திசெய்த நாளகம், சுத்திசெய்தநாபி, தாம்பிரபஸ்பம், சுத்திசெய்த சேர்வாளம் இவைகளை சமனடையாய்க் கல்வத்திலிட்டு காசனிக்கண்ணிச் சாற்றினால் 1-நாள் அரைத்து 2-குன்றிஎடை மாத்திரைகள்செய்து அதில் ஒரு மாத்திரை, மிளகுசூரணம் அல்லது இஞ்சிரசம் இந்த அனுபானத்துடன் சாப்பிட்டால் சகலசூலைகள் நிவர்த்தியாகும்.

அக்கினிகுமார ரசம்:—சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த கெந்தி பொரித்த வெங்காரம் இவைகள் வகைக்கு 1-பாகம், சுத்திசெய்த வசநாபி 3-பாகம், பலகரை பஸ்பம் 2-பாகம், சங்குபற்பம் 2-பாகம், மிளகு 8-பாகம் இவை யாவையுஞ் சூரணித்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழரசத்தினால் அரைக்கவும். பிறகு அம்மருந்தை எடுத்துவைத்துக்கொள்ளவும். இதை 2-குன்றிஎடை தக்க அனுபானத்துடன் கொடுத்தால் நிரிதோஷசூலைகள் நிவர்த்தியாகும்.

சகல சூலைகளுக்கு தாம்பிரக்ஷார ரசம்:—தாம்பிரபஸ்பம் 1-பலம் கெந்தி 1-பலம், புளிக்ஷாரம் 2-பலம் இந்த மூன்றை பொன்னுரல்

கலந்து நன்கு அரைத்து வைத்துக்கொள்ளவும். இதை ½-முதல் 1-குன்றி வீதம் வெந்நீரில் சாப்பிட்டால் சகல சூலைகள் நிவர்த்தியாகும்.

பீடாரி ரசம்:—அப்பிரக பஸ்பம் 3-பலம், இரசபஸ்பம் 1-பலம், சுத்திசெய்த கெந்தி 1-பலம், சேர்வாளம் 2-பலம், பொரித்த வெங்காரம் 3-பலம் இவைகளை கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழரசத்தினால் 3-நாள் அரைத்து கடலை அளவு மாத்திரைசெய்து வெல்லத்தில் சாப்பிட்டால் ஆமசூலை, நிருமிசூலை இவைகள் நிவர்த்தியாகும். இதற்கு பத்தியம் மோர்ச்சாதம்.

சகல சூலைகளுக்கு சண்முக ரசம்:—சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த கெந்தி, தாம்பிரபஸ்பம், சவ்வர்ச்சலவணம் இவைகளை சமனடையாய்க் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழ சாற்றினால் 7-நாள் அரைத்து வெய்யலில் உலர்த்தி மடக்குகளில்வைத்த மூன்று வகுபுடமிட்டு ஆறியபிறகு எடுத்துச் சூரணித்து இதற்கு சமனடை நிரிகடுகு சூரணஞ் சேர்த்து 2-குன்றிஎடை கொடுத்தால் சகல சூலைகள் நிவர்த்தியாகும்.

மகாசூலஹர ரசம்:—சுத்திசெய்த ரசம், கெந்தி, வெங்காரம், வெள்ளைகாசுகட்டி, கற்பூரம், கோமான்கொம்பு பஸ்பம், தாம்பிர பஸ்பம், ஒதிய பலகரைபஸ்பம், பிடாலவணம், பெரிய பலகரை பஸ்பம், சிறிய பலகரைபஸ்பம், புள்ளிமான்கொம்பு பஸ்பம், சங்குபஸ்பம் இவைகள் சமனடையாய்க் கல்வத்திலிட்டு எருக்கன்பால், சதாரக்கள்ளிப்பால் இவைகளால் தனித்தனி ஒருநாள் அரைத்து உலர்த்தி பிறகு நிரிகடுகைச் சூரணித்து கலந்து 2-3 குன்றிஎடை மிளகு சூரணம் நெய் இவைகளுடன் கொடுத்தால் மஹாசூலைகள், சுரபங்கள், கிருணிகள், பாண்டுரோகங்கள், அக்கினிமந்தம் இவைகள் நிவர்த்தியாகும்.

சூலகஜகேசரி:—சுத்திசெய்த ரசம், கெந்தி, நாபி, பலகரை பற்பம, வெங்காரம், இந்துப்பு, சுக்கு, திப்பிலி இவைகள் சமனடை வெற்றிலைசாற்றினால் அரைத்து 2-குன்றிஎடை சாப்பிட்டால் சகல சூலைகள் நிவர்த்தியாகும்.

கஜகேசரி ரசம்:—பலகரை பற்பம், சுத்திசெய்த நாபி, இந்துப்பு, நிரிகடுகு இவைகள் சமனடை கல்வத்திலிட்டு வெற்றிலைச் சாற்றினால் அரைக்கவும். இதில் குன்றிஎடை கொடுத்தால், வாத சூலை, ஆமசூலை இவைகள் நீங்கும்.

பத்தியாதி ரசம்:—கடுக்காய்தோல், சுட்டவெங்காரம், சுக்கு, பெருங்காயம், மிளகு, சித்திரமூலவேர்பட்டை, பிடாலவணம், சுத்தி செய்த கெந்தி, இந்துப்பு இவைகள் சமனடை, இவைகளுக்கு சமனடை எட்டிக்கொட்டை சூரணம் கலந்து வெற்றிலை சாற்றினால் அரைத்து குன்றியளவு மாத்திரைகள் செய்து கொடுத்தால் சூலை,

வயிறுப்பல், மலபந்தம், குன்மம், இருமல், கபம், ஆமவாதம், அஜீரணம், உதரரோகம், அருசி இவைகள் தீர்ரும்.

ஹரீதக்யாதி சூரணம்:—கடுக்காய்தோல், அதிவிடயம், பெருங்காயம், சவ்வர்ச்சலவணம், வசம்பு, வெட்பாலைபட்டை இவைகளை சமனடையாகச் சூரணித்து ½-தோலா வெந்நீரில் சாப்பிட்டால் வாத சூலை நிவர்த்தியாகும்.

சவ்வர்ச்சலாதி சூரணம்:—சவ்வர்ச்சலவணம், சுக்கொன்றைப் புளி, பிடாலவணம், இந்துப்பு, அதிவிடயம், நிரிகடுகு இவைகளை சமனடையாய்ச் சூரணித்து மாதுளம்பழரசத்தில் சாப்பிட்டால் குன்மம் சூலை இவைகள் நிவர்த்தியாகும்.

உசீராதி சூரணம்:—வெட்டிவேர், இந்துப்பு, பெருங்காயம், ஆமணக்குவேர் இவைகளை சமனடையாய்ச் சூரணித்து வெந்நீருடன் சாப்பிட்டால் வாதசூலை நிவர்த்தியாகும்.

சுவேதஏரண்டாதி சூரணம்:—வெள்ளை ஆமணக்குவேர், பெருங்காயம், இந்துப்பு இவைகளை சமனடையாய்ச் சூரணித்து வெந்நீரில் சாப்பிட்டால் வாதசூலை நிவர்த்தியாகும்.

மந்தார மூலிகாதி சூரணம்:—மந்தாரவேர் சூரணம், பாலில் கலந்து சாப்பிட்டாலும் சகதேவிவேர் அல்லது பெருங்குரும்பைவேர் இலைகளின் சூரணத்தை பாலுடன் கலந்து சாப்பிட்டாலும் வாத சூலை நிவர்த்தியாகும்.

வாதசூலைக்கு சூரணம்:—ஓமம், இந்துப்பு, பெருங்காயம், சுக்கு, சவ்வர்ச்சலவணம், கடுக்காய்தோல் இவைகள் சமனடையாய்ச் சூரணித்து வெந்நீரில் சாப்பிட்டால் வாதசூலை நிவர்த்தியாகும்.

கரஞ்ஜாதி சூரணம்:—புங்கம்பட்டை, சவ்வர்ச்சலவணம், சுக்கு, பெருங்காயம இவைகளை சமனடையாய்ச் சூரணித்து கொஞ்சம் உஷ்ணமான வெந்நீரில் கலந்து சாப்பிட்டால் வாதசூலை அப்பொழுதே நிவர்த்தியாகும்.

ஹிருதயசூலைகளுக்கு உசீராதி சூரணம்:—வெட்டிவேர், மோடி இவைகளை சமனடையாய்ச் சூரணித்து பசும்நெய்யில் கலந்து சாப்பிட்டால் இருதயசூலை நிவர்த்தியாகும்.

பித்தசூலைக்கு சூரணம்:—நெல்லிவற்றல் சூரணத்துடன் தேன் கலந்து அல்லது கடுக்காய்தோல் சூரணத்தில் வெல்லம், நெய் கலந்து சாப்பிட்டால் பித்தசூலை நிவர்த்தியாகும்.

கபசூலைக்கு சூரணம்:—காயம், கோஷ்டம், கடுக்காய்ப்பூ, கோரைக்கிழங்கு, நிரிகடுகு, சிச்சிலிக்கிழங்கு இவைகள் சமனடை

சூரணம்செய்து இஞ்சி ரசம், தேன் இவைகளுடன் சாப்பிட்டால் கபசூலை தீர்ரும்.

பிருஹத்கட்பலாதி சூரணம்:—காயம், புஷ்கரமூலம், திப்பிலி, கடுக்காய்ப்பூ இவைகளைச் சூரணித்து தேன் கலந்து சாப்பிட்டால் இருமல், பெருமூச்சு, சுரம், கபம், சூலை இவைகள் தீர்ரும்.

திரிபலாதி சூரணம்:—எழுகுபற்பம், திரிபலைசூரணம் இவைகளை ஒன்றுக்கு கலந்து தேன் நெய் இவைகளுடன் சாப்பிட்டால் சகல சூலைகள் நிவர்த்தியாகும்.

மந்தாக்கினி சூலைக்கு திப்பிலியாதி சூரணம்:—திப்பிலி, ஓமம், இந்துப்பு, கடுக்காய்தோல், சுக்கு இவைகள் வகைக்கு 4-தோலா சூரணித்து இதில் ½-தோலாவிதம் சாப்பிட்டால் சூலை, மந்தாக்கினி இவைகள் தீர்ரும்.

பில்வமூலாதி சூரணம்:—வில்வவேர், ஆமணக்குவேர், சித்திரமூலம், சுக்கு, பெருங்காயம், இந்துப்பு இவைகளைச் சூரணித்து ½-தோலா விதம் கொடுத்தால் சூலை அந்தஷணமே நிவர்த்தியாகும்.

குபேராதி சூரணம்:—தானிக்காய்தோல் 1, சுக்கு 1, பெருங்காயம் 1, கடுக்காய்தோல் 1, கழற்சிக்காய் பருப்பு 3, இவைகளைச் சூரணித்து வெருகடியளவு கொடுத்தால் சகல சூலைகள் நிவர்த்தியாகும்.

ஆத்மானசூலைக்கு ஹிங்குவாதி சூரணம்:—பெருங்காயம், கொடிமாதுளை நிரிலவணம், வசம்பு, நிரிகடுகு திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், சிச்சிலிக்கிழங்கு, ஓமம், கங்கோலம், வட்டத்திருப்பி, சீரகம், அமுக்கிரங்கிழங்கு, சிவகரந்தை, யவக்ஷாரம், வெண்காரம், மாதுளம பழத்தோல், கடுக்காய்த்தோல், இவைகளை சமனடையாகச் சூரணித்து ½ - ½ தோலா விதம் சாப்பிட்டால் விக்கல், வயிறுப்பல், மலபந்தம், இருமல், மேல்மூச்சு, அக்கினிமந்தம், அருசி, பிலீகை, மூலம், சகல சூலைகள், குன்மம், இருதயரோகம், மூத்திர அடைப்பு, பாண்டு இவைகள் தீர்ரும்.

பரிணமசூலைக்கு சாமுத்திராதி சூரணம்:—உப்பு, இந்துப்பு, யவக்ஷாரம், வெண்காரம, சவ்வர்ச்சலவணம், சவுட்டு உப்பு, பிடாலவணம், லோஹபற்பம், மண்டூரபற்பம். சிவதைவேர், கருணைக்கிழங்கு, இவைகள் சமனடையாகச் சூரணித்து கோமூத்திரம் பால் இவைகளால் மந்தாக்கினியால் பாகமாக சமைத்து தனது சக்திஅளவு வெந்நீரில் சாப்பிட்டு அரைநாழிகைநேரத்தில் நெய்யில் சமைத்த மாமிசத்தையும், பால், தயிர், நெய், முதலியவைகளையும் சாப்பிட்டால், சாபிசூலை, இருதயசூலை, குன்மம், பிலீகசூலை, வித்திருதி, கபசூலை, வாதசூலை, அன்னநிவசூலை, அசீரணம், கிருணி,

முதலிய சகல சூலைகள் நிவர்த்தியாகும். முக்கியமாக பரிணமசூலை நிவர்த்தியாகும்.

குடாதி சூரணம்:—வெல்லம், இஞ்சி, எள்ளு, இவைகளை அரைத்து சர்பத்தபோல் செய்து சாப்பிட்டாலும் அல்லது பெருங்காயம் கடுக்காய்தோல், வாய்விளங்கம் இவைகளின் சூரணத்தை வெந்நீரில் சாப்பிட்டாலும் அரகசூலை, இருதயரோகம், பேதி, குன்மம், வாதம், இவைகள் நிவர்த்தியாகும்.

மிருத்யுசூலைகளுக்கு இந்திரவாருணியாதி சூரணம்:—பெரிய பாப்பரமூள்ளிவேர், நிரிகடுகு, இவைகளை சமனடையாகச் சூரணித்து வெந்நீரில் சாப்பிட்டால் மிருத்யுசூலை நிவர்த்தியாகும்.

வாதசூலைக்கு கோமாக்ஷினி மாத்திரைகள்:—பஞ்சலவணத்தை இஞ்சிரசத்தில் 15 நாள் பாவனைசெய்து கடலை அளவு மாத்திரைகள் செய்து சாப்பிட்டால் வாதசூலை குன்மசூலை முதலியன நிவர்த்தியாகும்.

சகலசூலைகளுக்கு சங்கு வடுகங்கள்:—புளிச்சாரம் 5-பலம், உப்பு 1-பலம், இந்துப்பு 1-பலம், வகையலுப்பு 1-பலம், பிடாலவணம் 1-பலம், வெண்காரம் 1-பலம், இவைகளை சூரணித்து 32-பலம், எலுமிச்சம்பழச் சாற்றில்போட்டு 10 சங்குகளை கட்டு அந்த ரசத்தில் ஏழுமுறை தோய்த்த பிறகு சகலமும் சேகமாக உலர்த்தி சூரணஞ்செய்து அதில் பெருங்காயம், சுக்கு, மிளகு, இவைகள் வகைக்கு 1-பலம், கெந்தி 1-பலம், பாதரசம் ½-பலம், சுத்தாபி ½-பலம், இவைகளைச் சூரணித்து சேர்த்துப் பழச்சாற்றினால் 3-நாள் நன்கு அரைத்து சிற இலந்தைபழஅளவு மாத்திரைகள்செய்து காலையில் 1 மாத்திரை சாப்பிட்டு பிறகு வெந்நீரை குடித்தால் சகல சூலைகள் குன்மம் அசீரணம், பரிணமசூலை, அதிசாரம், கிருணி, இவைகள் நிவர்த்தியாகும்.

எட்டுவிதசூலைகளுக்கு சூரியபிரபாவ வடுகங்கள்:—நிரிகடுகு, மோடி, வசம்பு, பெருங்காயம, சேகம், கருஞ்சீரகம், தாபி, இவைகளை சமனடையாக கல்வத்திலிட்டு எலுமிச்சம பழரசம், இஞ்சிரசம் இவைகளால் பிரத்தியேகமாக அரைத்து மிளகு அளவு மாத்திரைகள் செய்து அதில் ஒரு மாத்திரை காலையில் வெந்நீரில் சாப்பிட்டால் எட்டுவித சூலைகள் நிவர்த்தியாகும்.

சித்திரகாதி வடுகங்கள்:—சித்திரமூலம், உப்பு, வட்டநிருப்பி, நிரிகடுகு, பஞ்சலவணங்கள், சேகம, கொத்தமல்லி, ஜடாமாஞ்சி, ஓமம், மோடி, இவைகளை சமனடையாகச் சூரணித்து எலுமிச்சம் பழச்சாற்றினால் அரைத்த சிறசண்டையளவு மாத்திரைகள் செய்து சாப்பிட்டால் இருதயசூலை, பார்சுசூலை, ஆமசூலை, அருசி 80 வாத ரோகங்கள் இவைகள் நிவர்த்தியாகும்.

ஹரீதக்கியாதி வடுகங்கள்:—கடுக்காய்தோல், நிரிகடுகு, எட்டிக்கொட்டை, கெந்தி, பெருங்காயம், இந்துப்பு இவைகள் சமனடையாக அரைத்த கடலையளவு மாத்திரைகள் செய்த அதில் 1-மாத்திரை காலையில் சாப்பிட்டுவந்தால் ஜன்மசூலை நிவர்த்தியாகும். கிருணி, அதிசாரம், மந்தாக்கினி இவைகள் நிவர்த்தியாகும்.

வசாதி வடுகங்கள்:—வசம்பு, சுக்கு, சேகம், மிளகு, பெருங்காயம், சித்திரமூலம், இலவங்கப்பட்டை இவைகள் சமனடையாகச் சூரணித்து கரிசாலை சாற்றினால் அரைத்து கடலை அளவு மாத்திரைகள் செய்து கொடுத்தால் சூலை, வாய்வு, அக்கினிமந்தம் இவைகள் நிவர்த்தியாகும்.

கரளாதி வடுகங்கள்:—தாபி, சித்திரமூலம், சுக்கு, சேகம், வசம்பு, மிளகு, பெருங்காயம், இவைகளைச் சமனடையாக எடுத்துக்கொண்டு காசனுங்கண்ணி சாற்றினால் அரைத்து மாத்திரைகள் செய்து கொடுத்தால் சூலை, மூடவாதம், அக்கினிமந்தம், இவைகள் நிவர்த்தியாகும்.

பரிணமசூலைக்கு சம்புகாதி மாத்திரைகள்:—சங்குப்போலிருக்கும் சிறிய பலகரை பஸ்பம், மிளகு, பஞ்சலவணம் இவைகள் சமனடை பழச்சாற்றில் அரைத்த கடலையளவு மாத்திரைகள் செய்து காலையிலாவது போஜன காலத்திலாவது பலத்தை அனுசரித்து சாப்பிட்டால் பரிணமசூலை நிவர்த்தியாகும்.

நிலாதி வடுகங்கள்:—எள்ளு, சுக்கு, கடுக்காய்தோல், சங்கு பற்பம் இவைகள் வகைக்கு 1-பாகம், வெல்லம் 2-பாகம் இவைகளை யொன்றாக அரைத்து இலந்தக்காய் அளவு மாத்திரைகள் செய்து குளிர்ந்த ஜலத்தினால் காலையில் சாப்பிட்டு பால்சாதம் சாப்பிட்டு மாலையில் இதேமாதிரியாக செய்தால் வெகுநாளாக பாதிக்கும் பரிணமசூலை நிவர்த்தியாகும்.

கூஷ்மாண்ட க்ஷாரம்:—கலியாணபூசினிக்காயை சிறிய துண்டுக்களாக்கி உலர்த்தி ஒரு பாண்டத்தில் வைத்து மேல்மூடியை மூடி அடுப்பேற்றி காடாக்கினியால் நெருப்புப்போல் ஜ்வலிக்கையில் வருத்து பிறகு தூற்றி சூரணம்செய்து அந்த சூரணத்தை 14-குன்றி எடையை சுக்கு சூரணத்தில் கலந்து வெந்நீரில் சாப்பிட்டால் மஹாசூலை, அசாத்தியசூலை இவைகள் நிவர்த்தியாகும்.

நிரிதோஷசூலைகளுக்கு கோமூத்திர மண்டூரம்:—கோமூத்திரத்தில் சுத்தமான மண்டூரத்தில் நிரிபலை சூரணத்தைக் கலந்து தேன், நெய் இவைகளுடன் சாப்பிட்டால் நிரிதோஷசூலை இவைகள் நீங்கும்.

பரிணம சூலைக்கு தாரமண்டூரம்:—வாய்விளங்கம், சித்திரமூலம், செவ்வியம், நிரிபலை, நிரிகடுகு இவைகள் சமனடை இவை

களுக்கு சமனடையாக லோஹபிட்ட சூரணம், இவைகளுக்கு மூன்று பாகம் அதிகமாக கோமூத்திரம், கோமூத்திரத்திற்கு இரண்டு பாகம் அதிகமாக வெல்லம் இவைகள் பாலையும் மந்தாக்கினி பால் கெட்டியாகும் வரையிலும் சமைத்த நெய்யில் ஊரிய பாகையில் வைத்து க்டுக்காயளவு சாப்பிடப்போகிறபோதாவது அல்லது சாப்பிடும் போது பேர்பாதியிலாவது அல்லது சாப்பிட்ட பிறகாவது மருந்தைச் சாப்பிட்டால் கொடுமான சூலை, காமாலை, பாண்டு, வீக்கம், மேதோ ரோகம், மூலரோகம் இவைகள் நீங்கும்.

பீம மண்டூரம்:—யவக்ஷாரம், நிப்பிலி, சுக்கு, மிளகு, மோடி, சித்திரமூலம் இவைகள் வகைக்கு 1-பலம், மண்டூரபஸ்பம் 16-பலம் இவைகளை இரும்பு பாண்டத்தில் வைத்து இதற்கு எட்டுபாகம் அதிகமாக கோமூத்திரம் கொட்டி கலந்த இவைகள் கட்டிபோல் ஆகிற வரையிலும் கிளறிக்கொண்டு சமைத்த இறக்கி பிறகு கடுக்காய் அளவு சாப்பிடுகிறதற்கு முன்பாவது சாப்பிடும்போதாவது ஏழு நாள் சாப்பிட்டால் பரிணமசூலை நிவர்த்தியாகும்.

அன்னதிரவ சூலைக்கு குடமண்டூரம்:—வெல்லம், நெல்லிவற்றல், கடுக்காய்தோல் இவைகள் வகைக்கு 1-பலஞ் சூரணித்து 3-பலம் லோஹபிட்ட சூரணத்தைக் கலந்து சகலமும் சேரும்படியாக அரைத்து சண்டக்காய் அளவு தேன், நெய் இவைகளுடன் கலந்து போஜனத்திற்கு முன்பாவது சாப்பிடும் மத்தியிலாவது சாப்பிட்ட பிறகாவது மருந்தை சாப்பிட்டால் அன்னதிரவசூலை, ஆமலபித்தம், ஒரு வருஷத்திற்குள்ளாக யிருக்கும் பரிணமசூலை இவைகள் யாவும் நீங்கும்.

சதாவரீ மண்டூரம்:—மண்டூர பற்பம் 8-பலம், தண்ணீர்விட்டான்கிழங்கு ரசம் 8-பலம், தயிர் 8-பலம், பால் 8-பலம், பசும் நெய் 40-பலம் இவைகள் யாவும் ஒன்றுகக் கலந்து கெட்டியாகிற வரையிலும் சமைத்த கடுக்காய் அளவு சாப்பிடுறதற்கு மூன்றியாவது அல்லது பின்றியாவது சாப்பிட்டால் வாதபரிணமசூலை பித்தபரிண்மசூலை இவைகள் நீங்கும்.

சகலசூலைகளுக்கு சப்தவிம்சதிகுக்கலு:—யவக்ஷாரம், வெங்காரம், நிரிகடுகு, நிரிபலை, மஞ்சள், ருத்ராக்ஷம், கோரைக்கிழங்கு, இந்துப்பு, பிடாலவணம், காசிலவணம், மோடி, சோம்கொட்டை, சிறிய ஏலக்காய், சித்திரமூலம், செவ்வியம், கோஷ்டம், மாஷிக பற்பம். புஷ்கரமூலம், வாய்விளங்கம், அதிவிடையம், ஆனைத்திப்பிலி, இவைகளை சமனடையாகச் சூரணித்து இவைகளுக்கு சமனடை சுங்கியம், நெய்கலந்த சண்டையளவு மாத்திரைகள் செய்து 1, 2 மாத்திரை வீதம் பால், சலம், கஞ்சி, இந்த அனுபானங்களில் கொடுத்தால் இருதயம், முதுகு, தொடை, வயிறு, இடுப்பு, அக்குள், முடிச்சு, இவைகளில், உண்டாகிய சூலைகள், குஷ்டம்,

பாண்டு, சூபயங்கள், அபஸ்மாரம், ஊர்த்துவவாதம், உன்மாதம், ஆமவாதம், வீக்கம், பிரமேகம், இவைகள்யாவும் நிவர்த்தியாகும்.

ஹிருதயசூலைக்கு பீஜபூரஸ்வ ரசம்:—பழுத்தமாதுளம் பழரசத்தில் இந்துப்புச் சேர்த்து சாப்பிட்டு பத்தியமாயிருந்தால் இருதயசூலை நிவர்த்தியாகும்.

பித்தசூலைக்கு சதாவரீஸ்வ ரசம்:—தண்ணீர்விட்டான்கிழங்கு, பெரழத்தில், பால், தேன் கலந்து காலையில் சாப்பிட்டால், எரிச்சல், சூலை, பித்தசூலை இவைகள் நிவர்த்தியாகும்.

வேறு முறை:—நெல்லிக்காய் இரசத்திலாவது நிலப்பூசினி இரசத்திலாவது, கொத்துபுங்கன் ரசத்திலாவது, நிராகூஷ ரசத்திலாவது, சர்க்கரை கலந்து சாப்பிட்டால் பித்தசூலை நிவர்த்தியாகும்.

நிரிதோஷசூலைக்கு விதாரீசுர ரசம்:—நிலப்பூசினிக்கிழங்கு ரசத்திலாவது, மாதுளம்பழ ரசத்திலாவது சுக்கு, நிப்பிலி, மிளகு, உப்பு, இவைகளின் சூரணத்தைகலந்த தேன்விட்டு சாப்பிட்டால் நிரிதோஷ சூலைகள் நிவர்த்தியாகும்.

சிருங்கி பற்பயோகம்:—கலிமான்கொம்பை நெருப்பில்வைத்து செவ்வையாக பற்பித்த அந்த பற்பத்தை ½-வராகனெடை நெய்யில் கலந்து சாப்பிட்டாலும் அல்லது முன்னே சூரணத்தை வெல்லத்துடன் கலந்து சாப்பிட்டாலும் வாதசூலை நிவர்த்தியாகும்.

சகல சூலைகளுக்கு லோஹபற்பம்:—கடுக்காயை கோமூத்திரத்தில் வேகவைத்து உலர்த்தி சூரணித்து லோகபற்பத்தைக் கலந்து வெல்லத்துடன் சாப்பிட்டால் சகல சூலைகள் நீங்கும்.

பரிணமசூலைக்கு ஏரண்டாதி பற்பம்:—ஆமணக்குவேர், சித்திரமூலம், சங்கு, வெள்ளைசாரணை, நெரிஞ்சல், இவைகளை சமனடை பாண்டத்தில்போட்டு பல்பித்து வெல்லத்துடன் சாப்பிட்டால் சூலை நிவர்த்தியாகும்.

சகல சூலைகளுக்கு கெந்தகரசாயனம்:—நிரிபலை சூரணம் 1-பலம், கெந்தசூரணம் ½-பலம், லோகபற்பம் ½-பலம், இவைகள் யாவையும் கலக்கி ½-பலம், எடை தேன், நெய் கலந்து வைத்துக் கொண்டு அளவாக மூன்று மாதங்கள் சாப்பிட்டால் சகல சூலைகள் வாதவிஸ்போடகம் இவைகள் நிவர்த்தியாகும். விழுந்துபோன மயிர்களும் மருபடியும் உண்டாகும்.

பங்க்தசூலைகளுக்கு கண்டாமலகர சாயனம்:—செவ்வையாக ரசத்தைபிழிந்த நெய்யில் வருத்த கலியாணபூசினி கண்டுகள் 50-பலம், 8-பலம், நெல்லிக்காய்ரசம் 16-பலம், கற்கண்டு, 8-பலம், இவைகள் யாவையும் ஒரு பாண்டத்திலிட்டு

அடுப்பிலேற்றி எரித்து காண்டியால் கிளரிக்கொண்டு அதில் நிப்பிலி, சீரகம், சுக்கு, இலவகள் வகைக்கு 2-பலம், மிளகு 1-பலம், தாளிசப்பத்திரி, கொத்தமல்லி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய், நாககேசரம், கோரைக்கிழங்கு, இலவகள் வகைக்கு ½-பலம், இலவகளைச் சூரணித்து வெ ரசாயனத்தில் போட்டுவெளரி 8-பலம், தேன் கலந்து ஆறியபிறகு நெய்யில் ஊறிய பாண்டத்தில் வைத்து ½-பலம் விதம் சாப்பிட்டால் நிரிதோஷத்தினால் உண்டாகும் சூலை, வாந்தி, ஆமலபித்தம், மூர்ச்சை, காசங்கள், வயிரசங்கள் அருசி, ஹிருதயசூலை, ரக்தபித்தம், பிருஷ்டசூலை இவைகள் விவர்த்தியாகும்.

சூலைக்கு லேபனம்:—கடுகு, முருங்கைவேர்ப்பட்டை, இலவகளை பசுமோரில் அரைத்து தொப்புளுக்கு லேபனஞ் செய்தால் சாபி சூலை விவர்த்தியாகும்.

குபேராக்ஷ யோகம்:—கழற்சிக்காய்பருப்பு, வெள்ளைப்பூண்டு, இந்துப்பு, பெருங்காயம் இவைகளை சமனெடையாக அரைத்து இலந்தைபழமளவு சாப்பிட்டால் சகல சூலைகளும் குணமாகும்.

சூலைகளுக்கு கண்டதிப்பிலி:—நிப்பிலிசூரணம் 16-பலம், செய் 6-பலம், கற்கண்டு 16-பலம், தண்ணீர்விட்டான்கிழங்கு 8-பலம், பால் 80-பலம் இவைகளை ஒன்றுச் சேர்த்து லேகியபக்குவமாய்ச் சமைத்து அதில் இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி, கோரைக்கிழங்கு, கொத்தமல்லி, சுக்கு, ஜடாமாஞ்சி, சீரகம், கருஞ்சீரகம், கடுக்காய்தோல், நெல்லிவற்றல் இவைகள் வகைக்கு 3-பலம், மிளகு, கருங்காலிமரப்பட்டை இவைகள் வகைக்கு 1½-பலம் இவைகளைச் சூரணித்து கலந்த 3-பலம் தேன் கலந்த அக்கினிபலத்தை அறிந்து சாப்பிட்டால் சூலை, அருசி, வாந்தி, ஆமலபித்தம் இவைகள் விவர்த்தியாகும். அக்கினிதீபனம் உண்டாகும.

சூலரோகத்திற்கு பத்தியங்கள்:—வாந்தி, வியர்வை, லங்கனம், வஸ்திகர்மம், இரவில் பேதிக்குக் கொள்ளல், பாசனம், பழைய அரிசி, பால், புடலங்காய், முருங்கைக்காய், பாவற்காய், சக்கரைவர்த்தி கீரை, சுரார்கள், உப்பு, சூரத்த கருப்புப்பு, பெருங்காயம், சுக்கு, வாய்விளங்கம், சோம்பு, வெள்ளைப்பூண்டு, இலவங்கம், ஆமணக்கெண்ணெய், கோமூத்திரம், வெட்டிவேர், எலுமிச்சம்பழரசம், கோஷ்டம், இலகுவான அன்னங்கள், சுகரமான ரசங்கள் இவைகள் சூலரோகிகளுக்கு பத்தியங்கள்.

சூலரோகத்திற்கு அபத்தியங்கள்:—விருத்தமான அன்னபானாதிகள், இரவு விழித்தல், விஷமஅன்னம், சூக்ஷமான அன்னம், கசப்பு, துவர்ப்பு, தினம், கடினத்துவம் உடைய பதார்த்தங்களைச் சாப்பிடுதல், புணர்ச்சி, கள்ளு, பருப்புவகைகள், காரமான பதார்த்தங்கள், மலமூத்திர விரோதம், துக்கம், குரோதம் இவைகளை சூலரோகிகள் விவர்த்திக்கவேண்டியது.

அநாஹரோக சிகிச்சை

அதோவாதஜன்னிய உதாவர்த்த சிகிச்சை:—கஷாயங்கள் சாப்பிடுதல், வியர்வை வரங்கல், அனுலோமகர ஔஷதங்கள் முதலியவற்றால் அதோவாதசன்னிய உதாவர்த்தம் தீரும்.

மலநிரோதஜன்னிய உதாவர்த்த சிகிச்சை:—பேதியை உண்டாக்கும் அன்னம், ஔஷதம், வர்த்தி, அப்பியங்கனம், சீராடுதல், வியர்வை வரங்கல், வஸ்திசோதனம் இவைகளை செய்தால் மலநிரோதன உதாவர்த்தம் விவர்த்தியாகும்.

மூத்திரநிரோதஜன்னிய உதாவர்த்த சிகிச்சை:—பால் சுமம் இவைகளை கலந்து குடித்தாலும் அல்லது கண்டங்கத்திரிவேர் சாசத்தையாவது அல்லது மருதம்பட்டை கியாழத்தையாவது குடித்தால் மூத்திரநிரோத உதாவர்த்தம் விவர்த்தியாகும்.

ஜிரும்பாநிரோத ஜோதாவர்த்த சிகிச்சை:—சிரேகம், வியர்வை வரங்குதல் இவைகளை செய்தால் கோட்டுவாயை அடக்குவதினால் உண்டான உதாவர்த்தம் விவர்த்தியாகும். இன்னும் இதமான வாதஹர உபசாரஞ் செய்வதால் தீரும்.

பாஷ்பாவரோதஜஷுதிரோஜ் உதாவர்த்த சிகிச்சை:—கண்ணீரைத் தடுப்பதினால் உண்டான உதாவர்த்தத்தில் கண்களின் ஜலத்தைவிடவேண்டியது, சுகமாய் தூங்கிக்கொண்டிருப்பவன் எதிரில் சுபமான கதைகளை சொல்லவேண்டியது, தும்மல நிரோதித்ததினால் உண்டான உதாவர்த்தத்தில் நிசுஷ்ணமான பதார்த்தங்களை முகறுதல் அல்லது நஸ்யம்செய்தல், சூரியனை பார்க்குதல் முதலிய உபாயங்களினால் தும்பல் வரச்செய்து வியர்வை வரச்செய்யவேண்டியது.

உத்காரசர்திநிரோத ஜோதாவர்த்த சிகிச்சை:—ஏப்பத்தை நிரோதிப்பதினால் உண்டான உதாவர்த்தத்திற்கு சிக்த பதார்த்தங்களை நெருப்புமீது வைத்து புகைகுடிக்க வேண்டியது. வாந்தி நிரோதத்தினால் உண்டான உதாவர்த்தத்தில் வாந்திசெய்தல், விரேசனம், லங்கனம், தலாப்பியங்கனம், வஸ்தி, சுத்திகரங்களான ஔஷதிகளின் கியாழத்தில் காலவதுபாகம் பால்கலந்த கொடுக்கவேண்டியது.

சர்தியாகாத ஜோதாவர்த்த சிகிச்சை:—வாந்தியை நிரோதிப்பதினால் உண்டான உதாவர்த்தத்தில் நஸ்யம் சிரோவரம் முதலியவைகளை செய்யவேண்டியது. போஜனம் செய்தபிறகு வாந்தியை செய்விக்கவேண்டியது. தூமபானம், லங்கனம், ரத்தம் வரங்குதல் முதலியவைகளை செய்யவேண்டியது.

க்ஷுதாதுஷ்ணேத்த உதாவர்த்த சிகிச்சை:—சிக்த பதார்த்தங்கள், உஷ்ண பதார்த்தங்கள், லகுபதார்த்தங்கள், ருசி பதார்த்தங்கள், ஹிதகரபதார்த்தங்கள், சுகந்த யுக்தமான புஷ்பங்கள் இவைகளை உபயோகித்தால் பசியை அடக்குவதினால் உண்டாகிய உதாவர்த்தம் நீங்கும். சோதோபசாரங்கள், குளிர்ச்சியாயும் இலகுவாயுமிருக்கும் ஜலத்தை குடித்தால் தாகத்தை அடக்குவதினால் உண்டாகிய உதாவர்த்தம் நிவர்த்தியாகும்.

அலுப்பு, நித்திரை இவைகளினால் உண்டாகிய உதாவர்த்த சிகிச்சை:—சுகமாய் உட்கார்ந்திருத்தல், ரசயுக்தமான அன்னத்தை சாப்பிடுதல், இவைகளினால் அலுப்பினால் உண்டாகிய உதாவர்த்தம் நீங்கும். சர்க்கரை கலந்த பால்குடித்தல், தேகம் பிடித்துக்கொள்ளல், சுகமான படுக்கையில் தூங்குதல், பிரியமான கோஷ்டி, இவைகளினால் நித்திரை அடக்குவதினால் உண்டாகும் உதாவர்த்தம் நீங்கும்.

நாராச சூரணம்:—கற்கண்டு 1-பலம், வெதைவேர் ½-பலம், திப்பிலி ½-பலம் இவைகளைச் சூரணித்து தேனுடன் 1-தோலா சாப்பிடுவதற்கு முன்பாக அருந்தினால் மலபந்தம், உதாவர்த்தம் இவைகள் நிவர்த்தியாகும்.

ஹரீதக்யாதி சூரணம்:—கடுக்காய்தோல், யவக்ஷாரம், காளான் வெதைவேர் இவைகளை சமனளவாய்ச் சூரணித்து நெய்யில் கலந்து சாப்பிட்டால் உதாவர்த்தம் நிவர்த்தியாகும்.

ஹிங்குவாதி சூரணம்:—பெருங்காயம் 1-பாகம், வசம்பு 3-பாகம், கோஷ்டம் 5-பாகம், சித்திரமூலம் 7-பாகம், வாய்விளங்கம் 9-பாகம் இவைகளைச் சூரணித்து வெந்நீருடன் சாப்பிட்டால் அரோசகரோகம், பேதி, ஹிருதயரோகம், குன்மம், அர்தாங்கவாதம் இவைகள் நீங்கும்.

பல சூரணம்:—வெதை, விளாவரை, சுக்கு, கழற்சி, பெருங்காயம், எருக்கன்வேர், தசமூலங்கள், நிரிபலி, கள்ளி, சித்திரமூலம், வெள்ளைச்சாரணை இவைகள் சமனளவு, இவைகளுக்கு சமனளவு பஞ்சலவணங்கள் இவை யாவையுஞ் சூரணித்து சல்லிவைத்து அதின் வாய்க்கு உப்பு, செல்பொரி இவைகளை நெய்யில் அரைத்து லேபனஞ்செய்து புடமிட்டு ஆறியபிறகு எடுத்து கல்வத்திலிட்டுச் சூரணித்து சாப்பாட்டுடனாவது அல்லது ஜலத்துடனாவது சாப்பிட்டால் அரோசகரோகம் நிவர்த்தியாகும்.

தும்புரு சூரணம்:—கொத்தமல்லி, கடுக்காய்தோல், பெருங்காயம், புஷ்கரமூலம், பஞ்சலவணம், ஓமம், யவக்ஷாரம், வாய்விளங்கம் இவைகள் சமனளவு வெதை 3-பாகம் இவை யாவையுஞ்

சூரணித்து வெந்நீரில் சாப்பிட்டால் அரோசகம், அஷ்டோதரரோகம், மலபந்தம் இவைகள் நிவர்த்தியாகும்.

வசாதி சூரணம்:—வசம்பு, கடுக்காய்தோல், சித்திரமூலம், யவக்ஷாரம், நிப்பிலி, அதிவிடயம், கோஷ்டம், இவைகளைச் சூரணித்து வெந்நீரில் கொடுத்து தண்ணீர்சாதம் சாப்பிடச் செய்தால் அரோசகம், மூடவாதம் இவைகள் நிவர்த்தியாகும்.

உதாவர்த்தத்திற்கு பத்தியம்:—பாசனம், லகுபோஜனம் இவைகளைச் செய்தால் ஹிதமாயிருக்கும்.

அபத்தியங்கள்:—உதாவர்த்தத்தில் மலபந்த பதார்த்தங்கள், விருத்தமான பதார்த்தங்கள், துவர்ப்பான பதார்த்தங்கள், கடினமான பதார்த்தங்களை இவைகளை விடவேண்டியது.

குன்மரோக சிகிச்சை

வாத குன்மத்திற்கு விடங்க கற்கம்:—வாய்விளங்கம், மாதுளம்பழத்தோல், பெருங்காயம், இந்துப்பு, ஏலக்காய், சவ்வர்ச்சலவணம் இவைகள் யாவையும் கொடிமாதுளம்பழ ரசத்தில் அரைத்து கற்கஞ்செய்து சாப்பிட்டால வாதகுன்மம் நிவர்த்தியாகும்.

தொந்த குன்மத்திற்கு திராக்ஷாதி கற்கம்:—திராக்ஷை, சந்தனம், அதிமதுரம், தாமரைத்தண்டு, நிலப்பூசினிக்கிழங்கு இவைகளை அரிசி கழுநீரினால் அரைத்து கற்கஞ்செய்து அதில் தேன்கலந்து சாப்பிட்டு சுயமாக்கினி செந்தூரத்தை சேவித்தால் கபவாத குன்மம் நிவர்த்தியாகும்.

சந்நிபாத குன்மத்திற்கு வருணாதி கியாழம்:—வருணாதிகியாழத்தை சாப்பிட்டால் சந்நிபாதகுன்மம், இருதயசூலை பாரிசசூலை, புஜசூலை இவைகள் நிவர்த்தியாகும்.

வருணாதி கியாழம்:—வருணவில்வம், காயுருவி, சித்திரமூலம், அருகெல்லி, பெரியகெல்லி, முருங்கப்பட்டை, முள்ளங்கத்திரி, கண்டங்கத்திரி, வெள்ளை அழவினை, கருப்பு அழவினை, பச்சை அழவினை, பெருங்குரும்பைவேர், கடுக்காய்பூ, சிமைலவேம்பு, கற்கடகசிங்கி, கசப்பு கோவைவேர், புங்கன், தண்ணீர்விட்டான்கிழங்கு இவைகளை கியாழம் வைத்து சாப்பிட்டால் கபமேதோரோகம், மந்தசூலை, குன்மம் இவைகள் நீங்கும்.

ரக்த குன்மத்திற்கு நில கியாழம்:—சுக்கு, திப்பிலி, மிளகு, கண்டுபாரங்கி இவைகளை சூரணித்து எள்ளு கியாழத்தில் கலந்து நெய் வெல்லம் சேர்த்து சாப்பிட ரத்தகுன்மம் நிவர்த்தியாகும்.

சதாவரியாதி கல்கம்:—தண்ணீர்விட்டான்கிழங்கு, புங்கம்பட்டை, மரமஞ்சள், கண்டுபாரங்கி, நிப்பிலி, எள்ளு இவைகளை அரைத்து கல்கம்செய்து சாப்பிட்டால் ரத்தகுன்மம் நீங்கும்.

சித்திரகாதி கியாழம்:—சித்திரமூலம், நிப்பிலிமூலம், ஆமணக்கு வேர், சுக்கு இவைகளை கியாழம் வைத்து அதில் பெருங்காயம், பிடாலவணம், இந்துப்பு, இவைகளை கலந்து சாப்பிட்டால் மலபந்தம் இவைகள் நீங்கும்.

வாதகுன்மத்திற்கு சிகிபாடவ ரசம்:—ரசபஸ்பம், தாம்பிர பஸ்பம், அப்பிரக பஸ்பம், சுத்திசெய்த கெந்தி, சுவர்ணமாக்ஷிக பற்பம், யவக்ஷாரம் இவைகள் யாவையும் சமனடை கல்வத்திலிட்டு சித்திரமூல ரசத்தினால் ஒருநாள் அரைத்து 1-2 குன்றிஎடை வெற்றிலை ரசத்தில் சாப்பிட்டால் வாதகுன்மம் நிவர்த்தியாகும்.

பித்தகுன்மத்திற்கு தண்டாமல ரசம்:—சுத்தி செய்தரசம், கெந்தி, தாமபிரபஸ்பம, இவைகளை சமனடை கல்வத்திலிட்டு பூனினி, தேக்கு இலைகள் சமூலரசத்தினால் மூன்றுநாள் அரைத்து பிறகு உத்தாமணி ரசத்தினால் ஒருநாள் அரைத்து பூசாயத்திரத்தில் ஒருநாள் லகுபுடமிடவேண்டியது. இந்தப்பிரகாரம் 5-தடவை லகுபுடமிட்டு மறுபடியுஞ் சூரணித்து சூரணத்திற்கு சமம் சுத்திசெய்த சேர்வாள விதைகள் சேர்த்து அரைத்து குன்றிஎடை நெய்யுடனாவது நிராகஷ்கடுக்காய்பிஞ்சு இலைகளின் கியாழத்துடனாவது சாப்பிட்டால் பித்தகுன்மம் நிவர்த்தியாகும்.

சிலேஷ்ம குன்மத்திற்கு வித்தியாதர ரசம்:—சுத்தி செய்த ரசம், கெந்தி, தாளகபற்பம், தாம்பிர பற்பம், சுவர்ணமாக்ஷிக பற்பம், தத்தபற்பம் இவைகள் சமனடை கல்வத்திலிட்டு நிப்பிலி கியாழம், சதுரக்கள்ளிப்பால், ஆட்டுமூத்திரம் இவைகளினால் தனித்தனியாக அரைத்து 2-குன்றிஎடை தேனுடன் சாப்பிட்டு யுக்தமான பத்தியமாயிருந்தால் சிலேஷ்ம குன்மம் நிவர்த்தியாகும்.

குல்மோதரகஜாராதி ரசம்:—சுத்திசெய்த ரசம், கெந்தி, நிப்பிலி, கடுக்காய்தோல், தந்தம், கொண்டைச்சரை, இவைகள் சமஎடை கல்வத்திலிட்டு சதுரக்கள்ளி பாலினால் ஒருநாள் அரைத்து 2-குன்றிஎடை சாப்பிட்டால், குன்மம், உதரரோகம் மாதருக்கு உண்டாகும் ஜலோதரம் இவைகள் நிவர்த்தியாகும். இதற்கு பத்தியம் சம்பா அரிசிசாதம் தயிர், சாப்பிட்டபிறகு புளிரசம சாப்பிடவேண்டியது.

பித்தகுன்மத்திற்கு உத்தாமாக்கிய ரசம்:—சுத்திசெய்த ரசம் ½-பலம், கல்வத்திலிட்டு சங்கபுஷ்பி, ரகசகண்ணி இவைகளின் ரசத்தினால் ஒருநாள் அரைத்து ரசத்திற்கு சமபாகம் சுத்திசெய்த நேர்வாள சூரணத்தைச் சேர்த்து பூ புடமிட்டு ஆறியபிறகு எடுத்து மறுபடியும் மேற்கூறியபடி அரைத்து புடமிடவேண்டியது. இம்மாதிரி ஐந்து புடமிட்டு அரைத்து வைத்துக்கொள்ளவேண்டியது. இதில் குன்றிஎடை நெய் அல்லது நிராகஷ் கடுக்காய், இவைகளின் கியாழத்தினாவது கலந்து சாப்பிட்டு பித்தகாரி, உஷ்ணகாரி,

யாகிய பதார்த்தங்கள் முதலியவைகளை நிவர்த்திசெய்தால் பித்தகுன்மம் நிவர்த்தியாகும்.

குல்மாவர ரசம்:—சுத்திசெய்த ரசம், கெந்தி, சேர்வாளம், சுக்கு, நிப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், சமனடையாகக் கல்வத்திலிட்டு தேன்விட்டு அரைத்து குன்றியளவு மாத்திரைகளாகச் செய்து சாப்பிட்டு வெந்நீர் குடித்தால் குன்மரோகம் நிவர்த்தியாகும்.

குல்மகுடாரம்:—வெங்காரம், சுத்திசெய்த பாதரசம் சுத்திசெய்த கெந்தி, நிரிபலி நிரிகடுகு, சுத்திசெய்த தாளகம், சுத்திசெய்த ரசபஸ்பம், தாம்பிரபஸ்பம், இவைகள் சமனடை இந்த நிலைகள் எடை மொத்தத்தில் பேர்பாதி பாகம் சேர்வாளம், இவைகள் யாவையும் கல்வத்திலிட்டு கரசலுங்கண்ணி சாற்றினால் அரைத்து மிழிதியில் வைத்துக்கொள்ளவும். கடலை அளவு அனுபானத்தில் கொடுத்தால் சகலவித குன்மங்கள் நிவர்த்தியாகும்.

வாதகுன்மத்திற்கு ஹிங்குவாதி சூரணம்:—பெருங்காயம், இந்துப்பு, ஓமம், கடுகு, சுக்கு இவைகள் சமனடையாகச் சூரணித்து சாப்பிட்டால் வாதகுன்மம் நிவர்த்தியாகும்.

பித்தகுன்மத்திற்கு த்ராக்ஷாதி சூரணம்:—நிருலைஷ், கடுக்காய்தோல், இவைகளின் ரசத்தில், வெல்லத்தைக் கலந்து சாப்பிட்டாலும், நிரிபலாதி சூரணத்தில் சர்க்கரைக் கலந்து சாப்பிட்டாலும் பித்தகுன்மம் நிவர்த்தியாகும்.

சிலேஷ்மகுன்மத்திற்குயவானீ சூரணம்:—ஓமம், பிடாலவணம், இவைகளைச் சூரணித்து மோரில்கலந்து சாப்பிட்டால் சிலேஷ்ம குன்மம் நிவர்த்தியாகும். மலமூத்திரங்களையுந் தள்ளும்.

மஹாஹிங்குவாதி சூரணம்:—பெருங்காயம், நிப்பிலிமூலம், கொத்தமல்லி, சீரகம், வசமபு, செவ்வியம், சித்திரமூலம், வட்டத்திருப்பி, கிச்சிலிக்கிழங்கு, நெல்லிவற்றல், மூன்றுவித உப்புகள், நிருகடுகு, யவக்ஷாரம், வெங்காரம், மாதளமதோல், கடுக்காய் பிஞ்சு, புஷ்கரமூலம், புளிவஞ்சி, சிவகரந்தை, கருஞ்சீரகம், இவைகள் சமனடையாகச் சூரணித்து இஞ்சிரசம், கொடிமாதளம் பழரசம் இவைகளால் பாவனைசெய்து வெந்நீரில் சாப்பிட்டால் குன்மம், மூலவியாதி, கிருணி, உதாவர்த்தம், உதரம், அஸ்மரீ தணி, பிரதணி, அருசி, ஊருதம்பவரதம், மனோவிப்பிரமம், செவிடு, அஷ்டில், பிரதிஅஷ்டில், இருதயசூலை, குகிருசூலை, சர்த்துக்களில் இருக்கும் சூலைகள் இடிப்புசூலை, ஜடரசூலை, வஸ்திசூலை, ஸ்தனசூலை, அம்சசூலை, பாரிசசூலை, வாதபலாசம், இவைகள்யாவும் நிவர்த்தியாகும்.

ரத்தகுன்மத்திற்கு பரங்கியாதி சூரணம்:—கண்டுபார்ங்கி, நிப்பிலி, புங்கம்பட்டை, திப்பிலிமூலம், தேவதாரு, இவைகளை சமனெடையாகச் சூரணித்து எள்ளுநெய்பழத்தில் கலந்து சாப்பிட்டால் ரத்தகுன்மம் நிவர்த்தியாகும்.

திலமூலாதி சூரணம்:—எள்ளுவேர், முருங்கன்வேர், பிரமதண்டிவேர், அமுமதரம் நிரிகடுகு இவைகளைச் சூரணித்து சாப்பிட்டால் வாதகுன்மம் இவைகள் நிவர்த்தியாகும்.

அக்கினிமுக சூரணம்:—பெருங்காயம் 1, வசம்பு 2, திப்பிலி 3, சுக்கு 4, ஓமம் 5, கடுக்காய்த்தோல் 6, சித்திரமூலம் 7, கோஷ்டம் 8, இவைகள் பாலையுஞ் சூரணித்து மோர் வெந்நீர் இவைகளில் எத்தடனாவது சாப்பிட்டால் உதாவர்த்தம், அசீரணம், பிலீகை விஷபக்ஷணங்களினால் உண்டாகிய தோஷங்கள், மூலவியாதி, சூலை, குன்மம், இருமல், மேல்மூச்சு, இவைகள் நிவர்த்தியாகும். தீபனம் உண்டாகும்.

சித்திரகாதி சூரணம்:—சித்திரமூலம், சுக்கு, பெருங்காயம், திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம் ஓமம், மிளகு, இவைகள் வகைக்கு ½-பலம், கல்லுப்பு, வடியலுப்பு, இந்துப்பு, சவ்வர்ச்சலவணம், பிடாலவணம் சோற்றுப்பு, கற்பூரப்பு, பூரீ இவைகள் தனித்தனி 4 வராகனெடை இவைகளைபாலையுஞ் சூரணித்து கொடிமாதுளம்பழ ரசத்தில் பாவனைசெய்து, உலர்த்தி சாப்பிட்டால் குன்மம், கிருணிஷமரோகம், கபரோகம், இவைகளை நிவர்த்தியாக்கும், அக்கினி, தீபனம், ருசி, இவைகளை உண்டாக்கும்.

பூதிகாதி சூரணம்:—புங்கன்இலை, செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, திப்பிலி, மிளகு, உப்பு இவைகள் சமனடையாய்ச் சூரணித்து தயிர், தயிர்மீத நேட்டை இவைகளுடன் சாப்பிட்டால் குன்மம், உதிரம், விக்கம், பாண்டு முதலியன நிவர்த்தியாகும்.

யஷ்டிமதுகாதி சூரணம்:—பிரமதண்டிவேர், யஷ்டிமதுகம், நிரிகடுகு இவைகளைச் சூரணித்த எள்ளுவேர் பொழுத்தில் கொடுத்தால் குணமம நிவர்த்தியாகும்.

க்ஷாராதி சூரணம்:—வெங்காரம், யவக்ஷாரம், சித்திரமூலம், சுக்கு, திப்பிலி, மிளகு, அயிரிவேர், பஞ்சலவணங்கள் இவைகள் பாலையுஞ் சூரணித்த நெய் அனுபானத்தில் சாப்பிட்டால் சகல குன்மரோகங்கள் நிவர்த்தியாகும்.

சட்டியாதிகங்காயண குடிகைகள்:—சிச்சிலிக்கிழங்கு, புஷ்கரமூலம், சேர்வாளம், சித்திரமூலம் இவைகள் வகைக்கு 64-பலம், சுக்கு, வசம்பு, வெதைவேர் இவைகள் வகைக்கு 1-பலம், லிங்கம் 3-தோலா, யவக்ஷாரம், கொண்டைப்புளி இவைகள்வகைக்கு 2-பலம் ஓமம், சீரகம், மிளகு, கொத்தமல்லி இவைகள் வகைக்கு ½-பலம்,

திப்பிலிசூரணம், குரோசாணியோமச் சூரணம் இவைகள் வகைக்கு 8-பலம் இவை பாலையும் கொடிமாதுளம்பழ ரசத்திலை அரைத்து மாத்திரைகள்செய்த அதில் ஒரு மாத்திரை அல்லது இரண்டு மாத்திரை தேகபலானுசாரியாக இன்னும் அதிகமாவாவது வெந்நீரில் அல்லது செல்லிபழத்திலாவது கள்ளுடனாவது நெய், பால் இவைகளுடனாவது சாப்பிட்டால் குன்மங்கள் நிவர்த்தியாகும்.

யவணியாதி குடிகைகள்:—ஓமம், சீரகம், கொத்தமல்லி, மிளகு வெள்ளைக்காக்கட்டான், குரோசாணியோமம், சிறிய ஏலக்காய், இவைகள் வகைக்கு ½-பலம், பெருங்காயம் ¼-பலம், பஞ்சலவணங்கள் வகைக்கு ¼-பலம், வெள்ளைவிலைதேவர் 1-பலம், சேர்வாளம், சிச்சிலிக்கிழங்கு, புஷ்கரமூலம், வாய்விளங்கம், மாதுளம்பழத்தோல், நெல்லிவற்றல், திப்பிலி, கொண்டைப்புளி, சுக்கு இவைகள் வகைக்கு பலம்-2 இவை பாலையும் ஒன்றுக்கலந்து சூரணித்து கொடிமாதுளம்பழ ரசத்திலை அரைத்த மாத்திரைகள்செய்த அதில் ஒரு மாத்திரையை நெய், பால், வெந்நீர், நெல்லிரசம் இவைகளில் எத்தடனாவது சாப்பிட்டால் குன்மங்கள் நிவர்த்தியாகும். கள்ளுடன் சாப்பிட்டால் வாதகுன்மம் நீங்கும். நெரிஞ்சல்வேர் பொழுத்துடன் சாப்பிட்டால் பித்தகுன்மம், கோமூத்திரத்துடன் சாப்பிட்டால் கபகுன்மம், தசமூலபொழுத்துடன் சாப்பிட்டால் சன்னிபாதகுன்மம், ஒட்டகப்பாலுடன் சாப்பிட்டால் மாதரின் ரத்தகுன்மம், விருத்தரோகம், சிருணி, சூலை, கிரிமி, மூலவியாதி இவைகள் நிவர்த்தியாகும்.

நாகாதி மாத்திரைகள்:—ரசபற்பம், வங்கபற்பம், அப்பிரபற்பம், தாம்பிரபற்பம் இவைகள் வகைக்கு பலம்-1, தாம்பிரபற்பம் 4-பலம். இவைகளைகல்வத்திலிட்டு எலுமிச்சம்பழசாற்றிலை அரைத்து குன்றிமடை அளவு மாத்திரைகள் செய்துகொள்ளவும். அதில் ஒரு மாத்திரையை வெங்காரம், யவக்ஷாரம் இவைகளை சூரணித்து இஞ்சிரசம், தேன் கலந்து சாப்பிட்டுவந்தால் அஜீரணம், ஆலபித்தம், இருதயசூலை, பாரிசசூலை, உதரசூலை, சகல குன்மங்கள் இவையாவும் நிவர்த்தியாகும்.

சின்சாசங்கு மாத்திரைகள்:—புளியன்கொட்டைக்ஷாரம், சதாகள்ளிக்ஷாரம், எருக்கன்க்ஷாரம் இவைகள் வகைக்கு பலம்-1, சங்கு பஸ்பம் 2-பலம், பெருங்காயம் ½-பலம், பஞ்சலவணங்கள் வகைக்கு 1-பலம், யவக்ஷாரம், சஜ்ஜிக்ஷாரம் இவைகள் வகைக்கு ½-பலம், இவைகளைக் கல்வத்திலிட்டு சூரணித்த எலுமிச்சம்பழ ரசத்திலை அரைத்து பிறகு சித்திரமூல பொழுத்திலை மூன்று நாள் அரைத்து காசனிக்கள்ளை, சொச்சி, நிலப்பனங்கிழங்கு, இஞ்சி இவைகளின் ரசத்திலை பித்தியேகம் ஒவ்வொருநாள் அரைத்து இவர்கள் தம்பழத்தனவு மாத்திரைகள் செய்த ஒவ்வொரு மாத்திரை வீதம் காலையில் சாப்பிட்டால் ஐந்துவித குன்மங்கள், சகலசூலையாதிகள்,

அஜீரணம், பேதி, மந்தாக்கினி, இரணி இவைகள் நிவர்த்தியாகும். இதற்கு பத்தியம் எண்ணெய், புளிப்பு, கடுகு முதலியவைகளை நிவர்த்திக்கவேண்டியது.

சங்கு நிராவகம்:—படிகை 1-பலம், இத்தப்பு 1-பலம், பவக்ஷாரம் 2-பலம், லவாக்ஷாரம் 2-பலம், சாரகாரம் 4-பலம், அன்னபேதி ½-பலம் இவைகளை நீர்ப் யந்திரத்தில்போட்டு அடுப்பேற்றி இவற்றை கொம்புகளினால் எரியவிட்டு பக்குவமாக நிராவகத்தை இரக்கிக்கொண்டு 5-தினம் நீரில் வைத்து சாப்பிட்டால் குன்மம் முதலிய சகல ரோகங்கள் நிவர்த்தியாகும்.

வேறு விதம்:—இத்தப்பு, பவக்ஷாரம், லவாக்ஷாரம் இவைகள் வகைக்கு 2-பலம், சாரகாரம் 4-பலம், படிகாரம் 1-பலம், அன்னபேதி ½-பலம் இவைகளை யொன்றுசேர்த்து நீர் கருவியில் வைத்து அடுப்பேற்றி கருங்காலி விறகுகளினால் எரித்து நிராவகம் இறக்கிக் கொள்ளவும். இது ஜலத்தைப்போலிருக்கும். இது சகல தாது வர்க்கங்களையும் பலவகை முதலியவர்களையும் நிலைக்கச் செய்யும். இதில் வேளைக்கு 2-3 துளிவீதம் சங்கவடி ஜலத்தில் கலந்து சாப்பிட்டு வர குன்மோதரம் நிவர்த்தியாகும்.

வாதகுன்மத்திற்கு ஹடியாதி கிருதம்:—வெடிஉப்பை, ரேகம், ஓமக்காய், மோடி, சித்திரமூலம், இவைகளின் யெழும், பாலை, இலந்தைஇலை, இவைகளின் இரசங்கள், நெய், இவைகளைக் கூட்டி கிருதபக்குவமாக சமைத்த உபயோகித்தால், வாதகுன்மம், அருசி, மேல்மூச்சு, சூலை, அரோசகம், சுரம், மூலவியாதி, கிருணி, பாண்டு தோஷம் இவைகள் யாவும் நிவர்த்தியாகும்.

ஹிங்குவாதி கிருதம்:—பெருங்காயம், சவ்வர்ச்சலவணம், சுக்கு, திப்பிலி, மிளகு, இத்தப்பு, மாதளம்பழவிதை, புஷ்கரமூலம், ரேகம், கொத்தமல்லி, கொண்டைப்பூளி, சித்திரமூலம், அமுக்கிராங்கிழங்கு, வசம்பு, கொச்சி, கோலைக்கிழங்கு இவைகள் யாவும் பிரத்தியேகம் கால் பலம், சூரணித்து 16-பலம் நெய்யில் போட்டு நெய்ப்பதமாகச் சமைத்து, ½-பலம் விதம் சாப்பிட்டால், வாதகுன்மம், சூலை இவைகள் தீரும்.

பித்தகுன்மத்திற்கு நிராகூதி கிருதம்:—நிராகூடி, அதிமதுரம், கர்ஜூரம், விலப்பூனி, தண்ணீர்விட்டான் கிழங்கு, நிரிபலை இவைகள் யாவையும் தனித்தனி 1-பலம், விதம் 64-பலம் பிரமாணம் ஜலத்தில்போட்டு, காலில் ஒருபாகம் மீதம்படியாக யெழுத்தைச் சண்டக்காய்ச்சி, அதில், நெல்லிக்காய் பழரசம், நெய், கரும்புரசம், பால், கடுக்காய்கல்கம், சர்க்கரை இவைகளை மேல் கூறிய யெழுத்திற்கு காலில் ஒருபாகஞ் சேர்த்திருதபக்குவமாக சமைத்து இதற்கு காலாவது பாகம் தேன்கலந்து சாப்பிட்டால், பித்தகுன்மம், சகல குன்மங்கள் நிவர்த்தியாகும்.

நிராமய கிருதம்:—கொத்துபுல்லன் 4-பலம், 40-பலம், ஜலத்தில்போட்டு, ¼-தில் ஒரு பாகம், மீறும்படியாக யெழுஞ் சண்டக் காய்ச்சி, வடிகட்டி, அதில், கடுக்காய்பிஞ்சு, கடுகு ரோகணி, கோலைக்கிழங்கு, கொத்துபுல்லன், பூனைகாஞ்சொரி, நிராகூடி, கோழிகொல்லி, கற்றுழை, சித்திரமூலம், சந்தனம், அல்லிக் கிழங்கு இவைகள் வகைக்கு 1-தோலா விதஞ் சேர்த்து கல்கஞ் செய்து, இஞ்சிரசம், நெய் பால் இவைகள் வகைக்கு 8-பலஞ் சேர்த்து கிருதபக்குவமாக காய்ச்சவும். இதை ½-பலம் விதஞ் சாப்பிட்டால் பித்தகுன்மம், ரக்தகுன்மம், விசர்பி, பித்தசாரம், ஹிருத்ரோகம், காமாலை இவைகள்யாவும் நிவர்த்தியாகும்.

கபகுல்மத்திற்கு பிப்பலி கிருதம்:—திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, இவைகள் வகைக்கு பலம் 1 எட்டில் ஒருபாகமாக யெழுஞ் சண்டக் காய்ச்சி, அதில் நெய், பவக்ஷாரம், பால், இவைகள் வகைக்கு 16-பலம் கலந்த நெய் பதமாகக் காய்ச்சி கொடுத்தால், கபகுன்மம், கிருணி, பாண்டுரோகம், பிலீகை, காசங்கள், சுரங்கள், இவைகள் தீரும்.

குன்மோதரத்திற்கு ஷட்பல கிருதம்:—திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சுக்கு, சித்திரமூலம், பவக்ஷாரம், இவைகள் பிரத்தியேகம் 1-பலம் விதஞ் சேர்த்த கல்கஞ்செய்து இந்த கல்கத்துடன் நெய் 16-பலம், தசமூலங்கள், ஆமணக்குவேர், கண்டுபாரங்கி, இவைகளின் யெழும், பால், தயிர், இவைகள் வகைக்கு 5-பலம், இவைகள் யாவையும் ஒன்றுகக் கலந்து கிருதபக்குவமாக காய்ச்சி கொடுத்தால் குன்மம் அருசி, அக்கினிமந்தம், இருமல், சுரம், தலை நோய், பவரதத்தினால் உண்டாகிய வியாதிகள் இவைகள் நிவர்த்தியாகும்.

தசமூலாதி தைலம்:—தசமூலங்கள், திப்பிலி, நிராகூடி, கடுக்காய், நெல்லிவற்றல், இவைகள் வகைக்கு 1 பலஞ் சேர்த்து யெழும் காய்ச்சி, அதில் ஆமணக்கு எண்ணெய் 16-பலம், பசும் பால் 96-பலஞ் சேர்த்த தைலபக்குவமாக காய்ச்சி சாப்பிட்டால் கபகுன்மம் நிவர்த்தியாகும்.

உள்ளிச் கிருதம்:—20-பலம் வெள்ளைப்பூண்டை தோலுரித்து அரைத்து ஜலத்தில் நடவி நெருப்பனலில் வாட்டிப் பிழிந்தெடுத்த சாற்றுடன் இஞ்சிச்சாறு, உத்தாமணி இலைச்சாறு, பசும்பால் வகைக்குப் படி-½ கூட்டி அடுப்பிலேற்றி ஒருபடியாய்ச் சண்டக் காய்ச்சி அதில் ஆவின் நெய் படி-1, திப்பிலி, இலவங்கம், இலவங்கப்பட்டை, ஏலரிசி, சிறுநாகப்பூ, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கோஷ்டம், கொத்தமல்லிவிதை, ரேகம் வகைக்குப் பலம்-1 வீதம் பால்விட்டரைத்துக் கலக்கி கிருதபக்குவமாய்க் காய்ச்சி வடித்துவைத்துக்

கொள்ளவும். இதில் வேளைக்கு ஒரு கரண்டிவீதம் அருந்திவர குன்ம ரோகங்கள் யாவும் குணமாகும்.

ஓமச் சூரணம்:—ஓமம், இந்துப்பு வகைக்குப் பலம்-2, பெருங் காயம் பலம்-½, நிப்பிலி பலம்-¼ இவைகளைப் பொடித்து ஓர் பாண் டத்திலிட்டு அதில் உத்தாமணி இலைச்சாறு உழக்கு, இஞ்சிச்சாறு உழக்கு விட்டு அடுப்பிலேற்றிச் சிறிது காய்ச்சி பாதி பாகத்திற்கு சண்டினதும் எடுத்து பேரினிம்போட்டு வெய்யிலில் சன்குலர்த்தி இடித்துச் சூரணித்து லவத்துக்கொண்டு நிரிகடிப்பிரமாணம் அந்தி சந்தி வெந்நீரில் அருந்திவர குன்மம் நீரும்.

இஞ்சி ரசாயணம்:—தோல்சிய இஞ்சி பலம்-10, சுகம் பலம்-5, சர்க்கரை பலம்-15. இவற்றுள் இஞ்சியை மெல்லிய தண்டுகளாய் நறுக்கி சிறிது நெய் சேர்த்து வறுத்து ஆறின பின்பு, இத்துடன் சுகத்தைச் சேர்த்து இடித்துச் சூரணித்து பின்பு சர்க் கரையைக் கலந்து லவத்துக்கொள்ளவும். இதில் வேளைக்கு நிரிகடிப் பிரமாணம் அந்தி சந்தி அருந்திவர மந்தம் அசீரணம், பசியின்மை, வயிற்றுவலி, வயிற்றுப்புசம் முதலியன குணமாகும்.

இஞ்சிச் சூரணம்:—இஞ்சி, மிளகு, நிப்பிலி வகைக்கு பலம்-3, சித்திரமூலம், ஏலம், சுக்கு, சுகம், சாதிக்காய், சடாமாஞ்சி, கருஞ் சுகம், கோஷ்டம், சிறாகப்பூ, இலவங்கப்பத்திரி, வெட்டிவேர், கிராம்பு, சாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி வகைக்குப் பலம்-1, சர்க்கரை பலம்-10. இஞ்சியை மேல்தோல் சிவி மெல்லிய சிறு தண்டுகளாய் நறுக்கி சிறிது நெய்விட்டு வறுத்து மற்றச் சரக்கு களுடன் கூட்டி இளவறுப்பாய் வறுத்திடித்துச் சூரணித்து கடைசி யில் சர்க்கரையைக் கலந்து லவத்துக்கொள்ளவும். இதில் வேளைக்கு ½-முதல் 1-வராகனெடை வீதம் தினமிருவேளையாக நீருடன் அருந்தி வர அரோசகம், அன்னத்துவேஷம், வாந்தி, அசீரணம், வயிற்றுவலி வயிற்றுப்புசம், குன்மம், சூலை முதலியன குணமாகும்.

கொடிவேலிச் சூரணம்:—கொடிவேலிவேர்ப்பட்டை பலம்-1, சுக்கு, மிளகு, நிப்பிலி, ஓமம், சிறுதேக்கு, யாகூத்திப்பிலி, கோஷ் டம், கடுகு வகைக்குப் பலம்-½, பொரித்த பெருங்காயம், சுட்ட வசம்பு வகைக்குப் பலம்-¼, இவைகளை இளவறுப்பாய் வறுத்திடித் துச் சூரணித்து லவத்துக்கொள்ளவும். இதில்வேளைக்குத் நிரிகடிப் பிரமாணம் தினமிருவேளையாய் வெந்நீருடன் அருந்திவர மூலவாயு, உதரவாயு, குன்மம, சூலை, கிரஹணி முதலியன குணமாகும்.

பெருங்காயச் சூரணம்:—பொரித்த காயம், சுக்கு, மிளகு, நிப்பிலி, சுகம், கருஞ்சுகம், இந்துப்பு, ஓமம் வகைக்கு பலம்-1 இவைகளை இளவறுப்பாய் வறுத்திடித்துச் சூரணித்து லவத்துக் கொள்ளவும். இதில் வேளைக்கு நிரிகடிப்பிரமாணம் தினம் இரு

வேளையாக வெந்நீருடன் அருந்திவர மந்தம், அசீரணம், வயிற்றுப்பு சம், வயிற்றுவலி, குன்மம், சூலை, முதலியன குணமாகும்.

ஆற்றுத்தும்மட்டிக்காய் சூரணம்:—ஆற்றுத்தும்மட்டிக்காய் கள் இருபது கொண்டுவந்து மேல்தோலையும் உள்ளிருக்கும் விதை யையும் நீக்கி நிழலில் நன்கு உலர்த்தி எடுத்த சதையுடன், வசம்பு துப்பு பலம்-5, பூநீறு பலம்-1½, சோற்றுப்பு படி-1 சேர்த்திடித்து ஓர் பாண்டத்திலிட்டு அதில் பசும்பால் படி-1 ஊற்றி அடுப்பிலேற்றி வேகவைத்து சண்டி குழம்பு பதமானதும் கீழிறக்கி கடைத்து இரண்டு மூன்று சாட்கள் வெய்யலில் லவத்து நன்கு உலர்த்தி பின்பு ஓர் சட்டியிலிட்டு மேல்மூடிச் சீலைசெய்து 40-நாள் வரையில் பூமி யில் புதைத்து லவத்து எடுத்து அரைத்து லவத்துக்கொள்ளவும். இதில் வேளைக்கு ½-முதல் 1-வராகனெடை வீதம் தேகதிடத்திற்கும் சோயின் வன்மைக்கும் தக்கபடி தினம் ஒருவேளையாய்க் காலையில் மட்டும் கொடுத்துவர குன்மம், சூலை, வயிற்றுவலி முதலியன குண மாகும்.

பிரண்டை வடகம்:—பிரண்டையை தோல் சிவி கணுக்களை நீக்கி சிறு துண்டுகளாக நறுக்கியது பலம்-6, சுக்கு, மிளகு, சுகம், சோற்றுப்பு, ஓமம், கடுக்காய்தோல் வகைக்குப் பலம்-1 பிரண்டையை நெய்விட்டு வறுத்து வதக்கி எடுத்து மற்ற சரக்குகளை இடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணத்துடன் கூட்டி, தயிரை வடி கட்டி எடுத்த நீர்விட்டு அரைத்து ½-தோலர எடையுள்ள உருண்டை களாய்ச் செய்து நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தவும். இதில் வேளைக்கு ஒரு உருண்டை வீதம் தினமிருவேளையாக உண்டுவர வாதகுன்மம், சூலை, பரிமர்தம், மலக்கிருமி முதலியன யாவும் குணமாகும்.

இஞ்சி வடகம்:—தோல் சிவி சிறு தண்டுகளாய் நறுக்கிய இஞ்சி பலம்-5, சுக்கு, மிளகு, நிப்பிலி, சுகம், ஓமம், இலவங்கம், கொத்தமல்லிவிதை, கடுக்காய்தோல், பொரித்த காயம், சோற்றுப்பு வகைக்குப் பலம்-½, இவற்றுள் இஞ்சியை நெய்விட்டு வறுத் தெடுத்து பிறகு மற்றச் சரக்குகளுடன் சேர்த்திடித்து தயிர்நீர் விட்டரைத்து ½-¾ தோலர எடையுள்ள மாத்திரைகளாய் உருட்டி நிழலிலுலர்த்தவும். இதில் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் இருவேளையாக அருந்திவர குன்மம், வயிற்றுவலி, சூலை, மந்தம், அசீரணம் முதலியன குணமாகும்.

ஹரிதக்யாதி வடகம்:—வரிகடுக்காய் 50 காய்கள் சேகரித்து விதையைநீக்கி அரைபடி யளவு ஆமணக்கெண்ணெயில் ஓர் நாள் ஊறவைத்து எடுத்து உலர்த்தி எடுக்கவும். இம்மாதிரியே இதை இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, புளித்தமோர் முதலியவை களிலும் தனித்தனியே ஊறவைத்து உலர்த்தி எடுத்து லவத்துக்

மாகக் கினறி வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு பாக்களவு விதம் தினம் இருவேளையாக உண்டுவர குன்மம், சூலை, மந்தம், அசீரணம், அரோசகம், அன்னத்துவேஷம், அசீரணபேதி முதலியன குண மாகும்.

இலவணச் செந்தூரம்:—சுத்திசெய்த சோற்றுப்பைக் கல் வத்திலிட்டு ஆகாச தாமரைக்கிழங்கு சாறு விட்டரைத்து வில்லை செய்து அகலிலடக்கிச் சீலைமண் செய்து புடமிடவும். பிறகு மீண்டும் அதை ஆகாசதாமரை கிழங்குசாறு விட்டரைத்து புடமிடவும். இப்படி 10 புடமிட கல்ப செந்தூரமாகும். அரைத்து வைத்துக் கொள்க. இதில் வேளைக்கு 1, 2 குன்றிசடை விதம் தேன் நெய் அல்லது தக்க அனுபானங்களில் கொடுத்துவர குன்மம், வயிற்று வலி முதலியன குணமாகும்.

சுயமாக்கினிச் செந்தூரம்:—சுத்திசெய்த பாதரசம் பலம்-1, சுத்திசெய்த கந்தகம் பலம்-2, சுத்திசெய்த அயப்பொடி பலம்-4, இவைகளை முறைப்படிக் கல்வத்திலிட்டு குமரிச்சாறுவிட்டு நான்கு ஜாமம் நன்கு அரைத்து உருட்டி எருக்கன் இலையால் சுற்றிக் கட்டி ஓர் பாண்டத்தில் வைத்து ஓர் பசுஞ்சம் அப்படியே வைத்து பிறகு இதைத் தாம்பளத்தட்டிலிட்டு கடும்வெயிலில் ஒருவாரம் வைத்தெடுத்து அரைத்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு ½-முதல் 1 பண வெடை விதம் தேன், நெய், நிரிகடுகுச் சூரணம் முதலிய அனுபானங்களுடன் தினமிரு வேளையாகக் கொடுத்துவர குன்மம், சூலை, பிலீகம், சுரம், பாண்டு முதலியன குணமாகும். இச்சாபத்தியம்.

குன்மரோகத்திற்கு பத்தியங்கள்:—ஒத்தடமிடுதல், விரேசனம், வஸ்திகருமம், லங்கணம், குதவர்த்தி, அப்பியங்கனம், நிரேகபானம், பகலுவமான பிறகு சஸ்திரகருமம் செய்தல், ஒருவருஷம் சென்ற சிகப்பு அரிசி சாப்பாடு, கற்கண்டு, கொள்ளுகட்டு, காட்டுமிருக மாமிசரசம், கள்ளு, பசும்பால், ஆட்டுப்பால், நிரணஞ்சி, எலுமிச்சம்பழம், கார்ஜூரங்கள், மாதளம் பழம், தெல்லிவற்றல், சுக்கு, கொண்டைப்புளி, மோர், ஆமணக் கெண்ணெய், வெண்பூசணி, இளமுள்ளங்கி, முருங்கக்காய், பவாசுஷாரம், கடுக்காய், பெருங்காயம், கொடிமாதளம்பழம், நிரி கடுகு, கோமூத்திரம், சிகித்தம், உஷ்ணம், லகு, தீபனம் இந்த குணங்களுடைய அன்னங்கள், இவைகள் குன்மரோகத்திற்கு பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—வாய்வு சம்பந்தமான சகல பதார்த்தங்கள், விருத்தமான அன்னபானதிகள், உலர்ந்த மாமிசங்கள், முள்ளங்கி, மீனகள், நித்திப்பான பண்டங்கள், புதிய தானியங்கள், மல மூத்திரம், கண்ணீர் இவைகளை தடுத்தல் வாந்திசெய்தல், வாயு, மலம், மூத்திரம், கண்ணீர் இவைகளை தடுத்தல் வாந்திசெய்தல், மிகவும் சலம் அருந்தல் இவைகளை குன்மரோகி விடவேண்டியது.

கொள்க. பின்பு இத்துடன் பாலில் பிட்டவியலாக வேகவைத்து கடோரம்பு நீக்கி சுத்திசெய்த எடுத்த வெதைவேர் பலம்-1, சுக்கு, மிளகு, திப்பிலி, ரோகம், ஏலரிசி, இத்துப்பு, சோற்றுப்பு, உமை லுப்பு, சவுட்டுப்பு, கல்லுப்பு, கடுகுரோகணி வகைக்குப் பலம்-1, சேர்த்து இடித்து இஞ்சிச் சாறுவிட்டு இரண்டு ஜாமமும் பழச் சாறுவிட்டு இரண்டு ஜாமமும் அரைத்து சிறு கழற்சிக்காய் பி மாணம் மாத்திரைகளாக உருட்டி நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்துக. இதில் வேளைக்கு ஒரு மாத்திரை விதம் தினம 1 அல்லது 2 வேளை பாக நோயின் வண்மைக்குத் தக்கபடி அருந்திவர பித்தகுன்மம, எரிகுன்மம், வாயுகுன்மம, சூலை, மலச்சிக்கல் முதலியன குண மாகும்.

குன்ம குடோரி:—சோற்றுப்பு, கல்லுப்பு, இத்துப்பு, பூரீ, உமையலுப்பு, சுவர்ச்சாரம், பொரித்த வெங்காரம், அப்பிரகாரம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், திப்பிலிமூலம், செவ்வியம், வட்டத் திருப்பி, கண்டுபாங்கி வகைக்குப் பலம்-1, சித்திரமூல வேர்ப் பட்டை பலம்-2, ரோகம் பலம்-2, இவற்றுள் உப்பு நிலைகள் நீங்க லாக மற்றச் சரக்குகளை இளவறுப்பாய் வறுத்திடித்துச் சூரணித்து அத்துடன உப்பு நிலைகளைப் பொடித்துக் கலந்து ஓர் பிங்கான் பேசினிலிட்டு, அதில் சுமார் 20-25 எலுமிச்சம் பழத்தின் சாற்றை விட்டுப் பிசரி வெய்யிலில் காலைந்து காட்கள் வைத்து எடுத்து வைத் துக்கொள்க. இதில் வேளைக்கு 1-3 சுண்டக்காயளவு விதம் தினம் இருவேளையாக அருந்திவர குணம், சூலை முதலியன குணமாகும்.

இஞ்சி லேகியம்:—இஞ்சிச்சாறு படி-1, கண்டங்கத்திரிச்சாறு படி-1, நெருஞ்சில்சாறுபடி-1, முள்ளங்கிச்சாறுபடி-1, எலுமிச்சம் பழச்சாறுபடி-1, பசும்பால்படி-2, இவைகளை ஓர் பாண்டத்திலிட்டு அதில் பனைவெல்லம் பலம்-10, சேர்த்துக் கரைத்து வடிகட்டி அடுப்பி லேற்றி எரித்து பாகுபதம் வரும்போது அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, ரோகம, ஏலம, வாயிலங்கம, கிராம்பு, தாளிசபத்திரி வகைக்குப் பலம்-1, சூரணிதத்தைச் சேர்த்து ஆவின் நெய் படி-½, தேன் படி-½ கூட்டி லேகிய பதமாகக் கினறி வைத்துக்கொள்க.

இதில் வேளைக்கு பாக்களவு தினமிருவேளையாக அருந்திவர வயிற்றுவலி, வாந்தி, அரோசகம், குன்மம், சூலை, அசீரண முதலி யன குணமாகும்.

பஞ்சதீபாக்கினி லேகியம்:—சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், ரோகம், வகைக்கு பலம-1, பசுவினபால் படி-2, பனைவெல்லம் பலம்-8, தேன் படி-½, நெய் படி-½, இவற்றுள் பசும்பாலில் வெல் லத்தைக் கரைத்து வடிகட்டி அடுப்பிலேற்றி எரித்து பாகுபதமான தும் பஞ்ச தீபாக்கினிச் சரக்குகளை இளவறுப்பாய் வறுத்திடித்துச் சூரணித்ததைத் தூவிக் கிண்டி நெய் தேன் சேர்த்து லேகிய பத

இருத்ரோக சிகிச்சை

பௌஷ்க்கராதி கியாழம் :—புஷ்க்கரமூலம், கொடிமாதளம் பழவேர், முருக்கன்வேர், ஓமம், கிச்சிலிக்கிழங்கு, தேவதாரு, சுக்கு, சீரகம், வசம்பு இவைகள் சமனடையாக கியாழம்வைத்து அதில் யவக்ஷாரம், சதிக்ஷாரம், இந்துப்பு, சவ்வர்ச்சலவணம் இவைகளை கலந்துச் சாப்பிட்டால் ஹிருதயரோகம் கிவர்த்தியாகும்.

தசமூலாதி கியாழம்:—தசமூலத்தை கியாழம்வைத்து அதில் யவக்ஷாரம், இந்துப்பு கலந்து சாப்பிட்டால், ஹிருத்ரோகம், குன்மம், சூலை, காசரோகம், சுவாசரோகம் இவைகள் கிவர்த்தியாகும்.

ஏரண்டாதி கியாழம்:—ஆமணக்குவேர் 2-பலம், 16-பலம், ஜலத்தில்போட்டு கியாழம் காய்ச்சி அதில் யவக்ஷாரம்போட்டு சாப்பிட்டால், ஹிருதயசூலை, பார்சுசூலை, இவைகள் கிவர்த்தியாகும்.

பாம்ஹிலீகாதி கியாழம்:—பெருங்காயம், சுக்கு, செந்திரமூலம், யவக்ஷாரம, கடுக்காய்தோல், கோஷ்டம், பிடாலவணம், நிப்பிலி, பாதிரிலவணம், புஷ்க்கரமூலம், இவைகளை சமனடையாக கியாழம் போட்டு சாப்பிட்டால் ஹிருத்ரோகம், அக்னிமாந்தம், மலபந்தம், இவைகள் கிவர்த்தியாகும்.

நாகராதி கியாழம்:—சுக்குகியாழம்போட்டு கொஞ்சம் உஷ்ணமாக சாப்பிட்டால், அக்னிதீபனம் உண்டாகும். காசரோகம், சுவாசரோகம், வாதரோகம், சூலை, இருத்ரோகம் இவைகள் கிவர்த்தியாகும்.

வாதஹிருத்ரோகத்திற்கு பிப்பல்யாதி சூரணம்:—நிப்பிலி, ஏலக்காய், வசம்பு, பெருங்காயம், யவக்ஷாரம், இந்துப்பு, சவ்வர்ச்சலவணம், சுக்கு, ஓமம், இவைகளை சமனடையாகச் சூரணித்து இதில் மூன்று பிராகனெடை, செல்லிவேற்றல் அல்லது விளாம்பழ கியாழம அல்லது தயிர் அல்லது கள்ளு அல்லது மாமிசரசம் இவைகளில் எதிலாகிலும் வாங்கியாகவும் பேதியாகவும் மருந்து கொடுத்தபின்பு கொடுத்துவர ஹிருதயரோகம் கிவர்த்தியாகும.

திரிவிருதாதி சூரணம்:—ஏலவேர், கோரைக்கிழங்கு, சிற்றாமுட்டிவேர், சிற்றரத்தை, சுக்கு, கடுக்காய்த்தோல், கோஷ்டம் இவைகளைச் சூரணித்தாவது அல்லது கியாழம்வைத்தாவது கோமூத்திரத்தைச் சேர்த்து சாப்பிட்டால் ஹிருதயரோகம் கிவர்த்தியாகும்.

சுக்ஷ்மைலா சூரணம்:—சிறிய ஏலக்காய், மோடி இவைகளைச் சூரணித்து நெய்யுடன் கலந்து சாப்பிட்டால். உபத்திரவத்துடன் கூடிய சகலஹிருதயரோகம் கிவர்த்தியாகும்.

ஹிங்குபஞ்சக சூரணம்:—சுக்கு, சவ்வர்ச்சலவணம், மாதளம் பழத்தோல், கொண்டைப்புளி, சுட்டபெருங்காயம் இவைகள் சமனடையாய்ச் சூரணித்து உட்கொண்டால் ஹிருதயரோகம் கிவர்த்தியாகும்.

ஹிங்குவாதி சூரணம்:—பெருங்காயம், வசம்பு, பிடாலவணம், சுக்கு, நிப்பிலி, கோஷ்டம், கடுக்காய்த்தோல், செந்திரமூலம், யவக்ஷாரம், சவ்வர்ச்சலவணம், புஷ்க்கரமூலம் இவைகளை சூரணித்து யவதானிய கியாழத்தில் சேர்த்து சாப்பிட்டால் சூலை, ஹிருதயரோகம் இவைகள் நீங்கும்.

பாடாதி சூரணம்:—வட்டத்திருப்பிவேர், வசம்பு, யவக்ஷாரம், கடுக்காய்த்தோல், கொண்டைப்புளி, பூனைகாஞ்சொரிவேர், சிற்றாமூலம், நிரிகடுகு, நிரிபலை, புஷ்க்கரமூலம், புளியங்காய்த்தோல், மாதளம்பழத்தோல், கொடிமாதளம்வேர் இவைகள் சமனடையாய்மைபோல் சூரணித்து வெல்லீர், சாராயம், கள் இத்துடன் கொடுத்தால் மூலவியாதி, சூலை, ஹிருதயரோகம், குன்மம் இவைகள் கிவர்த்தியாகும்.

ஹிருதயாரணவ ரசம்:—சுத்திசெய்த ரசம், தாம்பிரபஸ்பம், சுத்திசெய்த கெந்தி இவைகளை சமனடையாய்க் கல்வத்திலிட்டு நிரிசுத்திசெய்த கெந்தி இவைகளை சமனடையாய்க் கல்வத்திலிட்டு நிரிபலை கியாழத்தினால் ஒருநாள் அரைத்த மறுபடியும் அம்மருந்தை மணித்தக்காளிஇலை ரசத்தினால் ஒருநாள் அரைத்து கடலையளவு மாத்திரைகள்செய்து அதில் ஒரு மாத்திரைவிதம் சாப்பிட்டால் ஹிருதயரோகம் கிவர்த்தியாகும்.

ரசாயனம் :—சுத்திசெய்த ரசம், கெந்தி, அப்பிரகபற்பம் இவைகளைச் சமனடையாய்க் கல்வத்திலிட்டு மருகம்பட்டை இரசத்தினால் 21-நாட்கள் அரைத்து 3-குன்றிஎடை தேனுடன் கலந்து சாப்பிட்டால் நிரிதோஷ ஹிருதயரோகம் கிவர்த்தியாகும்.

வல்லபக் கிருதம்:—விதைகளை நீக்கிய 50-கடுக்காய், 2-பலம் சவ்வர்ச்சலவண சூரணம், 16-பலம் நெய், 64-பலம் பால் இவைகளை ஒன்றுப்ச்சேர்த்து கிருதபக்குவமாய்ச் சமைத்த பலானுசாரியாக சாப்பிட்டால் ஹிருதயரோகம் கிவர்த்தியாகும்.

யஷ்டியாதி கிருதம் :—அதிமதரம், நாகமல்லி, வெட்டிவேர், மருதம்பட்டை இவைகளைச் சேர்த்து காய்ச்சிய நெய்யை சாப்பிட்டால் ஹிருதயரோகம், சூலையரோகம், பித்தரத்தம், சுவாசம், காசம், சுரம், பிடை இவைகள் கிவர்த்தியாகும்.

புனர்ணவாதி தைலம்:—வெள்ளைச்சாரணை, மாமஞ்சள், பஞ்சமூலங்கள், சிற்றரத்தை, யவதானியம், இலந்தைவேர், விளாம்வேர், வில்வபழம் இவைகளின் கியாழத்தில் செய்யப்பட்ட தைலபக்குவமாய்

காய்ச்சி அப்பியங்கனம், பானம் இவைகளைச் செய்தால் வாதஹிரு தயரோகம் நிவர்த்தியாகும்.

கோமூத்திர பானம்:—வாய்விளங்கம், கோஷ்டம் இவைகளைச் சூரணித்த கோமூத்திரத்தில் கலந்து சாப்பிட்டால் ஹிருதயத்திலிருக்கும் அசாத்தியமான கிருமிகள் போம்.

துக்தபானம்:—பசும்பால் 24-பலம் மந்தாக்கினியால் பேர் பாதி மீரும்படியாய்ச் சண்டக்காய்ச்சி ஆறியபிறகு அதில் சர்க்கரை தேன், நெய் இவைகளை வகைக்கு ½-பலம் விதம் சேர்த்த நிப்பிலிசூரணம் ½-பலம் சேர்த்துச் சாப்பிட்டால் சகல தோஷங்களினால் உண்டான ஹிருதயரோகம், சுரம், காசங்கள், சுவாசங்கள் இவைகள் சூரியனைக்கண்ட இருளைப்போல் நிவர்த்தியாகும்.

நாகபலாதி துக்தபானம்:—சிற்றமுட்டி மூலத்தை பசும்பாலில் போட்டு காய்ச்சி சாப்பிட்டால் ஹிருத்ரோகம், சுவாசம், காசம், இவைகள் நீங்கும். இலவன்பட்டையை பாலில் போட்டு காய்ச்சி குடித்தால் மிகவும் பலத்தை விருத்தியாக்குவதுடன் வாதத்தை சாசஞ்செய்யும். இதை ஒருவருஷம் சாப்பிட்டால் 100-வருஷங்கள் உயிரோடன் வியாதிகளற்ற இருப்பான்.

ஹரிணசுருங்க பற்பம்:—மான்கொம்பு பல்பத்தை பசும்நெய்யுடன் சாப்பிட்டால் ஹிருதயசூலை நிவர்த்தியாகும்.

ஹிருத்துரோக பத்தியங்கள்:—வியர்வை வாங்குதல், பேதியாகும்படிக்கு மருந்துகொள்ளல், வாந்தியாவதற்கு மருந்துகொள்ளல், லங்கனம்செய்தல், வஸ்தி, லேபனம்செய்தல், பழயநெய்பு அரிசி, காட்டில்வாழும் ஜந்துக்கள், பக்ஷிகள் இவைகள் மாமிசசங்கள், பச்சைப்பயறு, கொள்ளு, இவைகளின் கட்டு, புடலங்காய், வாழைகச்சல், மாங்காய், மாதளம், எண்ணெய், மழைஜலம், இஞ்துப்பு, ஆடு, செம்மரிஆடு இவைகளின் மோர், பழையவெல்லம், சுக்கு, ஓமம், வெள்ளைப்பூண்டு, கடுக்காய், கோஷ்டம், கொத்தமல்லி, மிளகு, இஞ்சி, கஞ்சி, தேன், கள் அல்லது சாராயம், கல்தூரி, சந்தனம், தாம்பூலம் இவைகள் ஹிருத்ரோகிகளுக்கு பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—தாகம், வாந்தி, மூத்திரம், வாய்வு, பொடி இருமல், அலுப்பு, மேல்மூச்சு, மலம், கண்ணீர் இவைகளின் வேகத்தைத் தடுத்தல், சிற்றாசை, இயமமை, விந்தியமலை இவைகளின் ஆறுகளிலுள்ள சலம், ஆட்டுப்பால், கெட்டநீர், மயிர்ப்பு, புளிப்பு, அதிமதரம், பல்குச்சி, ரத்தம் வாங்குதல் இவைகளை ஹிருத்ரோகி நிவர்த்திக்க வேண்டியது.

மகோதர சிகிச்சை

வாதோ தரத்திற்கு சூரண கியாழம்:—தசமூல சூரணத்தை ஆமணக்கெண்ணெயில் கலந்தாவது நிரபஹ சூரணத்தை கோமூத்திரத்துடன் சேர்த்தாவது தசமூல கியாழத்தில் கோமூத்திரம் கலந்தாவது குடித்தால் வாதமகோதரம் சூலை இவைகள் நிவர்த்தியாகும்.

பிலீஹோதரத்திற்கு சரபுங்கா கல்கம்:—கொள்ளுக்காய்வேளை வேர கற்கஞ்செய்த மோரில் கலந்து குடிக்கச்செய்தால் வெகு காலாக பிருக்கும் பிலீகோதரம் நிவர்த்தியாகும்.

வேறுவிதம்:—கோங்கிலவ மரப்பட்டை, கடுக்காய் இவைகளை கற்கஞ்செய்த கோமூத்திரத்துடன் கலந்து பானஞ்செய்தால் சகல உதர ரோகங்கள், பிலீஹை, மேகம், மூலவியாதி, கிருமி, குன்மம் இவைகள் நீங்கும்.

பிப்பல்யாதி கியாழம்:—முருக்கன்வேர்ப்பட்டை, நிப்பிலி, மிளகு, சரக்கொன்றைப்புளி இவைகளை கியாழம் வைத்த அதில் இந்துப்பு கலந்து கொடுக்க, வீக்கம், பிலீகோதரம் இவைகள் நிவர்த்தியாகும்.

யக்ருதால் யுதரத்திற்கு பிப்பலீ கல்கம்:—நிப்பிலியை கல்கஞ் செய்து அதற்கு சரண்டு பாகம் அதிகமாக நெய் பால் கலந்து காய்ச்சி ஆறவைத்து பானஞ் செய்தால் யக்ருதால் யுதரம் நிவர்த்தியாகும். அக்னி தீபனம் உண்டாகும்.

சோபோதரத்திற்கு ஹரீதக்யாதி கியாழம்:—கடுக்காய்த்தோல், சுக்கு, தேவதாருசக்கை, வெள்ளைச்சாரணைவேர், சிற்றில்கொடி, இவைகளை கியாழம்வைத்த அதில் குங்கிலியச் சூரணத்தைப் போட்டு கோமூத்திரத்தில் கலக்கி கொடுத்தால சோபை மகோதரம் நிவர்த்தியாகும்.

புனர்ணவாதி கியாழம்:—வெள்ளைச்சாரணைவேர், வேப்பன்நார்க்கு, பேய்ப்புடல், சுக்கு, சீமைஇலவம்பு, சிற்றில்கொடி, மாமஞ்சள், கடுக்காய் இவைகளை கியாழம் வைத்துக் குடித்தால் சகல அவயவங்களிலிருக்கும் வீக்கம், இருமல், சூலை, பாண்டு இவைகள் நிவர்த்தியாகும்.

வாதோதரத்திற்கு சாமூத்திராதி சூரணம்:—கடல் உப்பு, சவ்வர்ச்சலவணம், இந்துப்பு, யவக்ஷாரம், ஓமம், நிப்பிலி, சித்திரமூலம், சுக்கு, பெருங்காயம், வாய்விளங்கம் இவைகள் சமடையாகச் சூரணித்து சாப்பிடும்போது அன்னத்துடன் கலந்து செய்விட்டு முதற்வேளம் சாப்பிட்டால் மகோதரம், குன்மம், அஜீரணம், வாத பிரகோபம், கொடூரமான சிரமி, மூலவியாதிகள், பாண்டுரோகம், பகந்தரம் இவைகள் நிவர்த்தியாகும்.

பிலீஹோதரத்திற்கு விடங்காதி சூரணம்:—வாய்விளங்கம், ஓமம், சித்திரமூலம் இவைகள் வகைக்கு பலம்-1, தேவதாரு, சுக்கு, வெள் ளோச்சாரணை இவைகள் வகைக்கு 2-பலம், சுத்திசெய்த வெள்ளை வேர் 4-பலம் இவைகள் யாவையும் இடித்துச் சூரணித்து கொஞ்சம் உஷ்ணமாயிருக்கும் பாலுடனாவது வெந்நீருடனாவது பானஞ் செய் தாலும் அல்லது இவைகளைச் சூரணித்து ஆட்டுமூத்திரத்தில் கலந்து குடித்தாலும், உதாரரோகம், பிலீகம் இவைகள் நீங்கும்.

ஹடபுஷாதி சூரணம்:—வெகாரந்தை, நிரிபலை, கொத்துபுல்கன், நிப்பிலி, கோஷ்டம், சிவதை, கடுரோகணி, வசம்பு, அதிவேர், இந் துப்பு, திப்பிலி, சவ்வர்ச்சலவணம் இவைகளை சூரணித்து வெந்நீருட னாவது கோமூத்திரத்துடனாவது அல்லது மாதளம்பழ ரசத்துடனா வது, நிரிபலை கஷாயத்துடனாவது மாமிசரசத்துடனாவது தகுந்த அளவு சாப்பிட்டால் அஜீரணம், பிலீஹை, குன்மம், யீக்கம், மூல வியாதி, விஷமாக்கினி, சூலை, காமாலை, பாண்டு, குஷ்டரோ கம், அக்கினிமந்தம், உதாரரோகம் இவையாவும் நீங்கும்.

பிலீஹகுல்மோதரத்திற்கு உதராவர்த்த ரசம்:—இரசபற்பம், வங்கபற்பம், தாம்பிரபற்பம், சுத்திசெய்த கெந்தி, இவைகள் வகைக்கு 1-பலம், இவைகள் யாவையும் கல்வத்திலிட்டு, எருக்கன் பாலுடன் ஒருநாள் அரைத்த உருண்டைசெய்து மடக்கில்வைத்து, மேன்மடக்குமூடி, சீலைமண்கொடுத்து பூசாபுடமிட்டு, ஆறியபிறகு எடுத்த 2-குன்றிஎடை வெய்யுடனாகிலும், வெள்ளைச்சாரணைவேர் சூரணத்துடனாவது சாப்பிட்டால், பிலீஹை, குன்மோதரம் இவை கள் நீங்கும்.

ஜலோதரத்திற்கு த்ரைலோக்கியடம்பர ரசம்:—சுத்திசெய்த இரசம், கெந்தி, தாம்பிரபற்பம், லோஹபற்பம், அப்ரக பற்பம், சுத்திசெய்தாரம், வெங்காரம், சர்ஜகாரம், லிங்கம், பலகறைபற்பம், இவைகளை சமனளவாக கல்வத்திலிட்டு, எருக்கன்பால், சதுர்க் கள்ளிப்பால், சொச்சிரசம், கரசலுங்கண்ணி இவைரசம், இஞ்சிரசம் இவைகளினால் பிரத்தியேகமாக ஒவ்வொருநாள் அரைத்த 4-குன்றி எடை யுக்தானுபானத்துடன் 21-நாள் சாப்பிட்டால் குன்மம், ஜலோதரம், யீக்கம், பாண்டு, சூலை, சூலை, பேதி இவைகள் நிவர்த்தியாகும்.

ஜலோதர விரேசன ரசம்:—வெங்காரம், மிளகு, சுத்திசெய்த ரசம் இவைகள் வகைக்கு 1-பலம், சுத்திசெய்த கெந்தி 2-பலம், திப் பிலி 2-பலம், சுக்கு 2-பலம் இவைகளைச் சூரணித்து இதற்கு சம எடை சுத்திசெய்த நேர்வாளம சேர்த்து ஒன்று அரைத்து குன்றி எடை கொடுத்தால் பேதி ஆவதுடன் உதாரோகத்தையும் குண மாக்கும்.

இச்சாபேதி ரசம்:—சுக்கு, மிளகு, சுத்திசெய்த ரசம், சுத்தி செய்த கெந்தி, பொரித்த வெங்காரம் இவைகள் வகைக்குப் பலம்-1, சுத்திசெய்த நேர்வாளம் 3-பலம் சேர்த்து இடித்து ஒன்று அரைத்து வைத்துக்கொள்ளவும். இதில் தேகதிடத்திற்குத் தக்கபடி ஒன்று அல்லது இரண்டு குன்றிஎடை சர்க்கரையுடன் கலந்து சாப்பிட்டு சிறிது சலம் சாப்பிட பேதியாகும். பத்தியம் மோர் சாதம்.

வாதோதர கிருதம்:—தசமூலங்கள், சிற்றரத்தை, சுக்கு, தேவ தாரு, வெள்ளைச்சாரணை, சிகப்புச்சாரணை இவைகளின் கியாழத் துடன் செய்கலந்த கிருதபக்குவமாய் காய்ச்சிய கிருதத்தை பானஞ் செய்தால் வாதோதரம் நிவர்த்தியாகும்.

ரோஹிதக கிருதம்:—கொக்குமரம் 100-பலம், இலந்தை 64-பலம். இவைகளை இடித்த 256-பலம் சலத்தில் போட்டு நாலில் ஒரு பாகம் மீறும்படியாய்க் கண்டக் கியாழம் காய்ச்சி வடிகட்டி அதில் நெய் 20-பலம், 80-பலம் ஆட்டுப்பால், நிரிகடுகு, நிரிபலை, பெருங்காயம், ஓமம், கொத்தமல்லி, பிடாலவணம், வாய்விளங்கம், சித்திரமூலம், வெகாரந்தை, செவ்வியம், வசம்பு, சீரகம், கருப்புப்பு, மாதளம்பழத்தோல், தேவதாரு, வெள்ளைச்சாரணை, பாபரவேர், யவக்ஷாரம், புஷ்கரமூலம் இவைகள் வகைக்கு ½-பலம் எடை சூர ணம் சேர்த்து கிருதபக்குவமாய்க் காய்ச்சி 1-பலம் எடை குடித் தால் சகல உதாரரோகங்கள், சூலை, அக்கினிமந்தம், குஷ்சூலை, பரிச சூலை, கடிசூலை, அருசி, விபந்தசூலை, பாண்டுரோகம், காமாலை, வாந்தி, அதிசாரம், கமை, சுரம், பிலீஹோதரம் இவைகள் நிவர்த்தி யாகும்.

சித்திரகாதி கிருதம்:—சித்திரமூலம் 100-பலம் போட்டு கியாழ மிட்டு வடிகட்டி அதில் 20-பலம் நெய், காஞ்சிகம் 32-பலம், தயிர் சலம் 64-பலம், பஞ்சகோலங்கள் அதாவது (சுக்கு-திப்பிலி-திப்பிலி மூலம்-செவ்வியம்-சித்திரமூலம்) தாளிசபத்திரி, யவக்ஷாரம், வெங்கா ரம், பஞ்சலவணங்கள், ஓமம், குரோசானிஓமம், சீரகம், கருஞ்சீரகம், மிளகு இவை யாவையும் வகைக்கு ½-பலம் சூரணித்து கலந்து நெய் பதமாய்ச் சமைத்து காலையில் சரீரத்திற்கு தகுந்தபடி சாப்பிட்டால் பிலீஹை, சோபோதரம், மூலவியாதி இவைகள் நிவர்த்தியாவதுடன் அக்கினிதீபனம் உண்டாகும்.

க்ஷாராதி யோகம்:—புங்கன்க்ஷாரத்தில் பிடாலவணம், திப்பிலி சூரணங்களை சலத்தோடு அதிகாலையில் பானுசாரமாய்ச் சாப் பிட்டால் யக்ருத்பிலீஹோதரம் நிவர்த்தியாகும்.

அக்கினிமுக லவணங்கள்:—சித்திரமூலம், சிவதைவேர், தர்பி பீஜங்கள், நிரிபலை, சவ்வர்ச்சலவணம் இவைகள் சமனளவாய்ச் சூரணித்து இதற்கு சமம் இந்துப்பைக் கலந்து சதுரக்கள்ளிபாலினால் அரைத்து உருண்டைசெய்து சதுரக்கள்ளி மரத்தில் தங்கசெய்து

அதில் வைத்து மேல்மூடி சீலைசெய்து நெருப்பில்வைத்து சுட்டு செவ் வையாக எரிந்தபிறகு பக்குவமாய் எடுத்துச் சூரணித்து அந்தச் சூர ணத்தை தேகபலத்தை அறிந்து மோரில் கலந்து சாப்பிட்டால் பக்கிருத்பிலீஹோதரம் நீங்கும். அக்கினிதீபனம் உண்டாகும். இதற்கு அக்கினிமுக லவணமென்று பெயர்.

வர்த்தமான பிப்பலி:—திப்பிலிகளை 3-5-7-10 இம்மாதிரி ளாலுக்குரான் அதிகமாய்ச் சாப்பிட்டுக்கொண்டு வருபவனுக்கு சுவாசரோகம், காசரோகம், சுரரோகம், உதரரோகம், ரக்தமூலம், வாதரக்தம், க்ஷயங்கள், இந்த ரோகங்கள் அருகில் நெருங்காது. இதற்கு வர்த்தமான பிப்பலி என்று பெயர்.

சோபோதரத்திற்கு புனர்ணவாதி யோகம்:—வெள்ளைச்சாரணை வேர், தேவதாரு, சுக்கு இவைகளை கோமூத்திரத்தில் கலந்து காய்ச்சி பானஞ்செய்தால் விக்கம் நீங்கும்.

திப்பிலி, சுக்கு இவைகளைச் சூரணித்து வெல்லத்தைக் கலந்து சாப்பிட்டால் சோலை, ஆமசூலை, அஜீரணம் இவைகள் நீங்கும்.

திரிபலைசூரணத்தை பசும்பாலில் கலந்து சாப்பிட்டால் சோபோ தரம் நிவர்த்தியாகும்.

கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல் இவைகளின் சூரணத்தை ஆட்டுப்பாலுடனாவது அல்லது எருமைப்பாலுடனாவது கலந்து குடித் தால் சோபோதரங்கள் நிவர்த்தியாகும்.

உதரரோகத்திற்கு பத்தியங்கள்:—விரேசன சிகிச்சை, புளிக் காமலிருக்குதல், வருஷங்கழித்த கொள்ளு, பச்சைப்பயறு, நெய்ப்பு நெல், யவதானியம், காட்டுமிருகங்கள், காட்டுபக்ஷிகள் இவைகளின் மாமிசம், தேன், இந்துப்பு, பிடாலவணம், மோர், வெங்காயம், ஆமணக்கெண்ணெய், இஞ்சி, இலைகள், புடலங்காய், பாவற்காய், வெள்ளைச்சாரணைஇலை, முருங்கக்காய், கடுக்காய், தாம்பூலம், எலக் காய், யவக்ஷாரம், லோஹம், ஆடு, பசு, ஒட்டகம், எருமை இவை களின் பால்கள், மூத்திரங்கள், இலகுபதார்த்தங்கள், காரமான பதார்த்தங்கள், அக்கினிதீபன பதார்த்தங்கள் இவைகள் உதரரோக முடையவர்களுக்கு பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—ஸ்நேஹம், புகைபிடித்தல், மிகுசலத்தை அருந் தல், வாந்தி, நிரிதல், பகல்நித்திரை, மாப்பண்டங்கள், சலத்திலிருக் கும் மீன்கள் முதலிய சந்துக்கள், காய்கரிகள், எள்ளு, உஷ்ணமான அன்னங்கள், உப்புடன் கலந்த அன்னம், விருத்த அன்னம், கடின மான உணவு, மலபந்த உணவு, வியர்வை அடக்குதல், மலபந்தனம் இவைகளை உதரரோகி நிவர்த்திக்க வேண்டியது.

அண்டரோக சிகிச்சை

பித்த அண்டவிருத்திக்கு பஞ்சவல்கலாதி கல்கம்:—ஆல், அரசு, அத்தி, இத்தி, ஆல், இவைகளின்பட்டை, கொண்டைப்புளி, இவைகளை கல்கஞ்செய்து நெய் கலந்து அண்டத்தின்மீது தடவினால் அண்டவிருத்தி நிவர்த்தியாகும்.

மேற்படி சரக்குகளைக் கியாழம்வைத்துக் குடித்தாலும், பித்தத் தினால் உண்டாகிய அண்டவிருத்தி நிவர்த்தியாகும்.

கபஅண்டவிருத்திக்கு திரிகட்வாதி கியாழம்:—திரிகடுகு, திரி பலை, இவைகளை கியாழம்வைத்து அதில் யவக்ஷாரம் இத்துப்பு, இவைகளை கலந்துபானஞ் செய்தால் கபவாத அண்டவிருத்தி பேதி யாவதால் குறைந்துவிடும்.

ரக்த அண்டவிருத்திக்கு திரிவிருத்தாதி கியாழம்:—சிவதை வேர் கியாழத்தில் சர்க்கரை, தேன் கலந்து அடிக்கடி குடித்து வந்தால் ரக்த அண்டவிருத்தி நிவர்த்தியாகும்.

ஆமம், நிரந்தி, இவைகளினால் உண்டான அண்டவிருத்திக்கு பித்த அண்டவிருத்திக்கு செய்யும் உபசாரங்களை செய்யவேண் டியது.

ராஸ்னாதி கியாழம்:—தெந்தாரத்தை, அதிமதுரம், சிந்தில்கொடி, ஆமணக்குவேர், பேய்ப்புடல், காட்டுமிளகு, சிற்றாமுட்டி, ஆட தோடை, இவைகளை கியாழம்வைத்து அதில் எண்ணெய் கலந்து சாப்பிட்டால் அண்டவிருத்தி நிவர்த்தியாகும்.

வாதசிலேஷ்ம அண்டவிருத்திக்கு திரிபலாதி கியாழம்:—திரி பலை கோமூத்திரத்தில் சுறுக்கிப்போட்டு கியாழம் காய்ச்சி சாப்பிட்டால் வாதசிலேஷ்மத்தால் உண்டாகிய அண்டவீக்கம் நிவர்த்தியாகும்.

ஆந்திரவிருத்திக்கு ராஸ்னாதி கியாழம்:—சிற்றரத்தை, சிந்தில் கொடி, சிற்றாமுட்டி, அதிமதுரம் நெரிஞ்சல் ஆமணக்குவேர், இவைகள் சமனளவாக கியாழம் வைத்து அதில் ஆமணக்கெண்ணை யைக் கலந்து குடித்தால் குடலண்டவிருத்தி நிவர்த்தியாகும்.

வர்த்மரோகத்திற்கு கல்கம்:—கடுக்காய் சூரணம், திப்பிலி சூரணம், இந்துப்பு இவைகளை ஆமணக்கெண்ணெயில் போட்டு வைத்து சாப்பிட்டால் வர்த்த அண்டவிருத்தி நிவர்த்தியாகும்.

குரண்டரோகத்திற்குஹரீதகீ சூரணம்:—கடுக்காயை கோமூத்தி ரத்தில் வேகவைத்து உலர்த்தி பிறகு ஆமணக்கெண்ணெயில் வறுத்து சூரணித்து இந்துப்பு சேர்த்து வெந்நீருடன் உட்கொண்டால் நிவர்த்தியாகும்.

வர்த்தமரோகத்திற்கு பில்வாதி சூரணம்:—வில்வமூலம், வினாம் வேர், பெருவாகைவேர், செந்திரமூலம், முள்ளங்கத்திரிவேர், கண்டங்கத்திரிவேர், வெறைவேர், செருப்படைவேர், முருங்கன் வேர், சுக்கு, கரும்சோளங்கொட்டைவேர், திப்பிலி, மோடி, மிளகு, பஞ்சலவணங்கள், யவக்ஷாரம், குரோசானியோமம், இச்சிலிக் கிழங்கு, இவைகளை சமனடையாக சூரணித்து அல்லது வெள்ளீர் இலைகளுடன் சாப்பிட்டால் வர்த்தமரோகம் நீங்கும்.

சுவதம்ஷ்ட்டிராதி சூரணம்:—நெரிஞ்சல், இந்துப்பு, சுக்கு, கோரைக்கிழங்கு, தேவதாரு, வாய்விளங்கம், பாஷாணபேதி, லோஹபற்பம், இவைகள் சமனடையாகச் சூரணித்து நெய்யுடன் கலந்து சாப்பிட்டால் வாதவர்த்தமரோகம் நிவர்த்தியாகும்.

விருத்திராசன ரசம்:—சுத்திசெய்த இரசம், கெந்தி, இவைகள் வகைக்கு பலம்-1, இவைகளுக்கு சமனடை சுத்திசெய்த ஹேம மாக்ஷிகம். இவைகளைக் கல்வத்திலிட்டு கடுக்காய் பொழுதினுள் மூன்று நாள் அரைத்த பிறகு ஆமணக்கெண்ணெயினுள் ஒரு நாள் அரைத்து அளவாக கொடுத்தால் அண்டவிருத்தி நிவர்த்தியாகும்.

பித்த அண்டவிருத்திக்கு சந்தனாதி லேபனம்:—சந்தனம், அதி மதுரம், தாமரைவங்கம், வெட்டிவேர், கரும்அல்லி, இவைகளை பாலால் அரைத்து லேபனஞ்செய்தால் பித்தஅண்டவிருத்தி நிவர்த்தி யாகும்.

வசாதி லேபனம்:—வசம்பு, கடுகு இவைகளை அரைத்து கல்கஞ் செய்து தடவினால் அண்டசோபை நிவர்த்தியாகும்.

அஜாஜியாதி லேபனம்:—ரசகம், வெகாரை அல்லது சோம்பு, கோஷ்டம், கோமலம், இலந்தைவேர் இவைகளை நீர்விட்டரைத்து லேபனஞ்செய்தால் வர்த்தமரோகம் நிவர்த்தியாகும்.

லாக்ஷாதி லேபனம்:—அரக்கு, புங்கன்கொட்டை, சுக்கு, தேவ தாரு, காவிக்கல் இவைகள் சமனடை நீர்விட்டரைத்து லேபனஞ் செய்தால் அண்டவீக்கம் நிவர்த்தியாகும்,

பிப்பல்யாதி லேபனம்:—திப்பிலி, ரசகம், கோஷ்டம், இலந்தை கொட்டைபருப்பு, உலர்ந்த கோமலம் இவைகளை நீர்விட்டரைத்து லேபனஞ்செய்தால் ஆந்திரவிருத்தி நிவர்த்தியாகும்.

ஆந்திரவிருத்திக்கு தேவதாரிவாதி லேபனம்:—தேவதாரு, ஆடா தோடை, இந்துப்பு இவைகளை தேனுடன் அரைத்து அண்டத்தின் மீது தடவினால் வீக்கம் நிவர்த்தியாகும்.

லேபனம்:—இந்துப்பு சூரணத்தை பசுநெய்யில் கலந்து உள் ளுக்கு சாப்பிட்டு இதையே சிறிது வெதுப்பி அண்டத்திற்கும் தடவி னால் குடலண்டம் நிவர்த்தியாகும்.

கோயமத்தை சண்டக்காய்ச்சி அதில் கோஷ்டம், இலந்தை கொட்டைப்பருப்பு இவைகளை அரைத்து பற்றிட அண்டவீக்கம் குணமாகும்.

கழற்சிபருப்பை சூரணித்து வெள்ளரில் அரைத்து கழற்சிபருப்பை நீர்விட்டு அரைத்த அண்டத்திற்கும் பூசிவர அண்டவீக்கம் குண மாகும்.

ஏரண்டாதைல யோகம்:—பால், விளக்கெண்ணெய் இவைகளை சமத்தி ஒரு மாதம் சாப்பிட்டாலும், குங்கிலியசூரணம் ஆமணக் கெண்ணெய் இவைகளை கோமூத்திரத்தில் கலந்து சாப்பிட்டா லும் வெகுநாளாயிருக்கும் வாதவிருத்தி, குடலண்டம் நிவர்த்தி யாகும்.

சாமானிய சிகிச்சை:—உஷ்ணவீரியங்களான ஔஷதங்களை கோமூத்திரத்தில் அரைத்து லேபனஞ்செய்தாலும் அல்லது மாமஞ் சள் பொழுதில் கோமூத்திரத்தை கலந்து குடித்தாலும் சுபஅண்ட விருத்தி நிவர்த்தியாகும்.

சிராவேதை:—கழுத்து பக்கங்களிலாவது, காதமூலங்களிலும் சேவகமென்கிற நாடியைவிட்டு விதிபோலாய் கழுத்தை ஒடித் தால் ஆந்திரவிருத்தி நிவர்த்தியாகும்.

கர்ண சிராவேதை:—கர்ண மத்தியில் இருக்கும் ரத்தமூல நரம்பை தவாரம்செய்தால் அண்டவிருத்தி நிவர்த்தியாகி சுகமா பிருப்பான்.

கோமூத்திர யோகம்:—குங்கிலியம் அல்லது ஆமணக்கெண் ணெய் கோமூத்திரத்தில் கலந்து குடித்தால் கொஞ்சகாலமாயிருக் கும் அண்டவிருத்தி நிவர்த்தியாகும்.

நாராயண தைலம்:—ஆமணக்கெண்ணெயில் பாலைக் கலந் தாவது அல்லது ஆமணக்குவிரையிலுள்ள பருப்பை அரைத்து கலந் தாவது ஒருமாத காலம் குடித்தாலும் அல்லது தலைக்கு தேய்த்துக் கொண்டு குளித்தாலும் வஸ்திகர்மத்தை செய்தாலும் அண்டவிருத்தி நிவர்த்தியாகும்.

அங்குஷ்டாவர யோகம்:— பாதங்களிலிருக்கும் அங்குஷ்ட மத்தியத்தில் உள்ள நரம்பைகட்டால் அண்டவிருத்தி நிவர்த்தியாகும்.

அண்டரோக சிகிச்சை:—பெருங்காயம் கழற்சி பருப்பு, கொள்ளு, வெள்ளைப்பூண்டு, இவைகளை சமனடையாகக் கியாழம் காய்ச்சி, அதில் நெய் கலந்து சாப்பிட்டுவர அண்டவிருத்திகள் நிவர்த்தியாகும்.

முடக்கற்றான் எண்ணெய்:—முடக்கற்றான் சாறு படி-½, கள்ளியை நெருப்பனலில் வாட்டிப் பிழிந்த சாறு படி-½, நெற்றுமணக் கெண்ணெய் படி-1. இவைகளைக் கலந்து ஓர் நல்ல பாண்டத்தி லிட்டு, அதில் நித்திரமூல வேர்ப்பட்டை, வெண்கள்ளக்கட்டான் வேர், நெற்றாத்தை, இந்துப்பு, பெருங்காயம் கழற்சி வேர்ப்பட்டை, கழற்சி பருப்பு, வகைக்கு பலம்-½. சோறுசித்த வெண்பூசணி பலம் 1½ வீதம் எடுத்து அரைத்த சேர்த்துக் கலந்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து பதமுற காய்ச்சி வடித்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு ½-முதல் ½-அவுன்ஸ் வீதம் நோகிடத்திற்கும் சோயின் வன்மைக்கும் தக்கபடி அறிந்து தினம் ஒரு வேளை காலையில் மட்டும் கொடுக்கவேண்டும். இதனால் பேதியாகும். பேதி அதிகமானால் மறுமுறை அளவைச் சிறிது குறைத்துக்கொள்க. சரியாய் பேதியாகாவிடில் சிறிது அளவை அதிகப்படுத்திக்கொள்க. இப்படி 2-3, நாள் கடும்பத்தியத்துடன் கொடுத்து வருதல் நன்று. இதனால் அண்டவாதம், குடல்வாதம், வாதகுல்ம முதலியன குணமாகும்.

கழற்சி சூரணம்:—கழற்சி பருப்பு, சுக்கு, நித்திரமூல வேர் பட்டை வகைக்குப் பலம் ஒன்றாக நிறுத்துப் பொடித்துச் சூர ணித்து இதில் வேளைக்கு ½-வராகனெடை வீதம் தினம் இருவேளை யாய் வெந்நீரில் அருந்திவர குமுறலண்டம், அண்டத்தில் வீக்கம், வலி முதலியன குணமாகும்.

அண்டநோய்க்கு புற சிகிச்சைகள்:—கழற்பருப்பை மூட்டை வெண்கரு, விட்டாளத்து சோயுள்ள அண்டத்தின்மீது பற்றிட்டு வரலாம்.

கழற்சி இலையை அரைத்த விளக்கெண்ணெய் விட்டு வதக்கி தாளக்கூடிய சூட்டில் ஒற்றடமிட்டு அதையே அண்டத்தின்மீது வைத்துக் கட்டி வரலாம்.

நித்திரமணக்கிலையை நித்திரமணக்கெண்ணெய் தடவி வதக்கி நிழத்தின் மீது வைத்துக்கட்டலாம்.

தேவேல இலையையும், மணத்தக்காளி இலையையும் ஒன்று சேர்த்து வதக்கி நிழத்தின்மீது வைத்துக் கட்டலாம்

இத்தகைய சிகிச்சைகளினால் அண்டத்தில், ஏற்பட்ட வீக்கம், வலி குத்தல் முதலியன குணமாகும்.

கழற்சித் தைலம்:—கழற்கொடிவேர்ப்பட்டை பலம்-20 இடித்து ஓர் பாண்டத்திலிட்டு 6-படி நீர்விட்டு 1-படியாய்க் கஷ் டக்காய்ச்சி அதில் கழற்கொடியின் கொழுந்து பலம்-5, கழற்சி பருப்பு பலம்-2 அரைத்த சேர்த்த நித்திரமணக்கு நெய் விசை-1 கூட்டி ஏலம், பாஷிச்சக்கை, வால்மிளகு, சன்னவலங்கப்பட்டை வகைக்கு பலம்-½ வீதம் இவைதுப்பாய் வதக்கிடித்த வஸ்திராவஞ் செய்துப் போட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாயெரித்து தைலபதத்தில் வடித்துவைத்துக்கொள்க. பின்பு சுத்திசெய்த பூரம், சுத்திசெய்த சேர்வாளபருப்பு வகைக்குப் பலம்-½ வீதம் தனித்தனியே கல்வத்தி லிட்டு நன்கு அரைத்த பிறகு ஒன்றுகூட்டி அதில் காய்ச்சிவைத் துள்ள தைலத்தில் சிறிது விட்டு நன்கு அரைத்து மிருதுயுள்ள தைலத் தில் கலக்கி வைத்துக்கொள்ளவும்.

இதில் வேளைக்கு ½-முதல் ½-பலம் வீதம் தினம் ஒருவேளையாக காலையில்மட்டும் நோகிடத்தையும் சோயின் வன்மையையும் கண்டு கொடுத்துவரவும். இதனால் காலைக்கழுவுறை பேதியாகும். இப்படி 3-முதல் 5-நாள் வரையில் கொடுக்கலாம். தேவையான்போல் விட்டு வைத்து மீண்டும் முன்போல் ஒருமுறை கொடுக்கலாம். இப்படி விட்டுவிட்டு மூன்றுமுறைகள் கொடுப்பதற்குள் அண்டரோ கங்கள் யாவும் குணமாகும். இதனால் அடிவயிற்றில் சஞ்சரிக்கின்ற வாயு, பீஹவாயு, பீஹவிக்கம், சப்த தாதுக்களைப்பற்றி யெழுகின்ற வியாதிகள், வாதரோகங்கள் முதலியன யாவும் குணமாகும். மருந்து சாப்பிடும்போதுமட்டும் இச்சாபத்தியமாக இருத்தலுமாகும் நன்று.

அண்டவிருத்திக்கு பத்தியங்கள்:—விரேசன சிகிச்சை, வமன சிகிச்சை, வஸ்திகருமம, பற்று, ஒற்றடம், பூச்சு, இரத்தம்வாங்குதல், சிரை வாங்குதல், கார் அரிசி, விளக்கெண்ணெய் கோமூத்திரம், முருங்கைக்காய், புடலங்காய், சாரணை, நெருஞ்சில், நெல்லிக்காய் தாம்பூலம், கடுக்காய். சித்தாத்தை, வெண்பூசணி, இவைகளை சாப்பிடுதல், தேன், நெய், இளநீர், மோர், சூடுப்போடுதல் இவை கள் பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—ஜலமுள்ள பிரதேசங்களின் ஜலமாமிசம், தயிர், உளுந்து, விருத்த அன்னம், துஷ்ட அன்னம், கடின பதார்த் தங்கள் சாப்பிடுதல், சுக்கிலத்தை தடுத்தல், மூத்திரவேகத்தை தடுத் தல், குதிரை முதலியவைகளின்மீது சவாரிசெய்தல், அதிக அலுப்பு, அதிக புணர்ச்சி, அதிகநின்டி, நடை, உபவாசம், இவை கள் அபத்தியங்கள்.

மேதோரோக சிகிச்சை

மேதோரோகத்திற்கு சவ்விபாதி சூரணம்:—செவ்வியம், சி கம், சுக்கு, நிப்பிலி, மிளகு, பெருங்காயம், சவ்வர்ச்சலவணம, நித்திரமூலம, இவைகளைச் சூரணித்து தேனுடன் கலந்து சாப்பிட் டால் மேதோரோகம் நிவர்த்தியாகும்.

பலநிராதி சூரணம்:—நிரிபலை, நிரிகடுகு, இந்துப்பு, இவை களைச் சூரணித்து கலந்து ஆறுமாதஞ் சாப்பிட்டால் பலமேதோ ரோகங்கள், வாதம், இவைகள் நிவர்த்தியாகும்.

திரிகடுகாதி சூரணம்:—திரிகடுகு, கடுரோகணி, முன்னாள் கத்திரி, கண்டங்கத்திரி. நெற்றமல்லி, பேராமல்லி, வெட்பாலை நெல்லி, சவ்வர்ச்சலவணம், மஞ்சள், மரமஞ்சள், அதிவிடயம், பெருங்காயம், வெட்பாலை, சீரகம், கருஞ்சீரகம், வாய்விளங்கம், வெகாரந்தை, கொத்தமல்லி, இவைகள் சமனடையாகச் சூரணித்து இதற்கு சமனடை சோறுபற்பம் வைத்து தேனுடன் சாப்பிட்டால் மேதோரோகத்தினால் உண்டான குணங்கள் விலகிபோகும்.

ஸ்தூலகந்தக ரசம்:—தானகபஸ்பம், தாம்பிரபஸ்பம் இவை களைச் சமனடையாகக் கல்வத்திலிட்டு முடக்கொற்றான் இலைசாறில் 3 நாள் அரைத்து குன்றி அளவு தேனுடன் வைத்துச் சாப்பிட்ட பிறகு உப்பு நீர்ச்சாப்பிட்டால் மேதோரோகம் விலகிபோகும்.

திரிமூர்த்தி ரசம்:—சுத்திசெய்த ரசம், கெந்தி, அபரசெந்தூரம் இவைகள் சமனடையாகக் கல்வத்திலிட்டு சொரிமுள்ளி ரசம், விஷ்ணுகிரந்தி ரசம், இவைகளால் அரைத்த 2 குன்றிடை மருந்தை தேனில் வைத்து சாப்பிட்டு, சுக்கு, திப்பிலி, மிளகு, மோடி, செவ்வியம், சித்திரமூலம், கடுக்காய், தானிக்காய், கொல்லிவற்றல், பஞ்சலவணங்கள், கார்போக அரிசி, இவைகளைச் சூரணித்து இதில் நிரடிப் பிரமாணம் வீதம் அருந்திவர மேதோரோகம், அக்கினிமந்தம், ஆமவாதம், சிலேஷ்மரோகம் இவைகள் விலகிபோகும்.

திரிஷணாதி லோஹம்:—திரிகடுகு, திரிபலை, செவ்வியம், சித்திரமூலம், பிடாலவணம், சவுட்டு உப்பு, கார்போகஅரிசி, இந்துப்பு, சவ்வர்ச்சலவணம், அபரசெந்தூரம், இவைகளைச் சமனடையாகச் சூரணித்து 2 குன்றிடை மருந்தை நெய் தேன் இவைகளுடன் சாப்பிட்டால் அதிஸ்தூலரோகம், மேதை, மேகரோஷ்டம், சிலேஷ்மனியாதி, இவைகள் விலகிபோகும். அக்கினி தீபனம் உண்டாகும். பத்தியம் இச்சாபத்தியம்.

ரசபஸ்ப யோகம்:—இரசபஸ்பம், குன்றி எடை தேனுடன் வைத்துச் சாப்பிட்டு பிறகு கொஞ்சம் உஷ்ணமாயிருக்கும். சமத்தில் தேன் வைத்து சாப்பிட்டால் மேதையால் உண்டாயிய ஸ்தௌல்யம் விலகிபோகும்.

தாம்பிரபஸ்ப யோகம்:—தாமபரபற்பத்தை நிப்பிலிச் சூரணத்துடன் கூட்டித் தேனுடன் வைத்துச் சாப்பிட்டால் ஸ்தௌல்ய ரோகம் விலகிபோகும்.

கந்தக யோகம்:—சுத்திசெய்த கெந்தியை இலுப்ப எண்ணெய் பால் அரைத்து முறைப்படி அளவாக சாப்பிட்டால் மேதோரோகம் வாதபரோகம் இவைகள் விலகிபோகும்.

திரிபலாதி தைலம்:—திரிபலை, அதிவிடயம், பெருங்குரும்பை, வெகாரை, சித்திரமூலம், கூடாதோடை, வேப்பன், கொன்னை,

வாசம்பு, வாலழக்கிழங்கு, மரமஞ்சள், சித்திரல்கொடி, வெட்பாலை, நிப்பிலி, கோஷ்டம், கடுகு, சுக்கு, இவைகளை கற்கமாக்கி எண்ணெயில் வைத்து சொச்சிச் சாறும் கூட்டி எரித்து தைலபதத்தில் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு உள்ளுக்கு அருந்துவதுடன் தலைக்கு தேய்த்துக் கொள்ளுதல் கண்டூஷதம் நெய் வஸ்திகர்மம் இவைகளையுஞ் செய்தால் தூலத்துவம், கண்டு கபரோகம் இவைகள் நீங்கும்.

மேதோரோகத்திற்கு பத்தியங்கள்:—நித்தை, அதிகவேலை செய்வதால் உண்டான அலுப்பு, ஜாகரணை, மாதர்புணர்ச்சி, கலவி வைத்துக்கொள்ளல், லங்கணம், வெய்யில், ஆவி, குதிரை இவைகளின்மீது சவாரிசெய்தல், விரேசனம், வாந்தி, தற்பணம், பழைய மூங்கில் அரிசி, வருகு அரிசி, சோளம், பவதானியம், கொள்ளு, கடலை, தொடலை, பச்சைப்பயறு, துவரை, தேன், பொரி, காரம், கசப்பு துவர்ப்பு இவைகளுடைய ரசங்கள், மோர், மீன்கள், வருத்த கத்திரிக்காய், நிரபலை, குங்கிலியம், பாபரசம், திரிகடுகு, வெள்ளை கடுகு எண்ணெய், எலக்காய், சாலசூரார்கள், செச்சக்கர எண்ணெய், கார், இலைகறிகள், அதில் சக்கனம் முதலிய வாசனைப்பொருட்களை நடவிக்கொள்ளுதல், ஓமம், வெள்ளீர், வெளசத்து இவைகளை உபயோகிப்பதினால் மேதோரோகம் விலகிபோகும்.

அபத்தியங்கள்:—குளித்தல், ரசாயனம், அரிசி, கோதுமை, பால், கருமபினால் ஆகும் பதார்த்தங்கள், உளுந்து, நிருப்திகரமான பக்ஷணங்கள், விபரவை வாய்கல், மச்சங்கள், மாமிசங்கள், பகல் நித்திரை, சுகத்த பதார்த்தங்கள், மதுரமான அன்னம், பழைய அன்னம், வாந்தி இவைகள் மேதோரோகத்திற்கு அபத்தியங்கள்.

வாதரத்த சிகிச்சை

வாதரத்த ரோகத்தில் உக்கிரமான குத்தல் உண்டானால் அட்டையை ஒட்டி ரத்தத்தை வெளிப்படுத்தவேண்டியது.

சமை, குத்தல் சேர்புடன் வைத்திருந்தால் ஊசிகள் அலகு முதலியவைகளினால ரத்தத்தை வெடுக்கவேண்டியது.

அப்படி ரத்தத்தை வெளியில் எடுக்காமற்போனால் குற்றமாகிய சாம்புவராங்களின் வழியாக இரத்தமானது அங்கங்கு உட்புறமாக நிரிந்துகொண்டிருக்கும்.

பித்தாதி வாதரத்தத்தில் விரேசனங்கள் கொடுக்கவேண்டியது.

பாதிய வாதரத்தத்தில் லேபனம் அப்பியங்கம், தண்ணீர்வார்த்தல், பிடித்தல் இந்த உபசாரங்கள் செய்யவேண்டியது.

கம்பீரவாதத்தில் விரேசனம், நிருஹவஸ்தி, சிரோபரணம் இந்த உபசாரங்களை செய்தல்வேண்டும்.

வாசாதி கியாழம் :—ஆடாதோடைசர்க்கு, சித்திரமூலம், சக்கொன்றைப்புளி இவைகளை கியாழம் வைத்து அதில் ஆமணக்கெண்ணெய் கலந்து சாப்பிட்டால் சீதத்தில் உற்பவாதத்தினால் உண்டாகிய விகாரங்கள் யாவும் நிவர்த்தியாகும்.

மஞ்சிஷ்டாதி கியாழம்:—மஞ்சிஷ்டி, வெட்பாலை, சித்திரமூலம், கோலக்கிழங்கு, வசம்பு, சக்கு, மஞ்சள், மரமஞ்சள், ஆடாதோடைசர்க்கு, பற்பாடகம், கனகரிவேர், அதிவிடயம், பூனைக்காஞ்சொரி, பாற்பாலுன்னிவேர், வெட்டிவேர், கண்டங்கத்திரி, வேப்பன்சர்க்கு, பேய்ப்புடல், கோஷ்டம், கடுகுரோகணி, கண்டுபாரங்கி, வாய்விளங்கம், சித்திரமூலம், பெருங்குரும்பை, தேவதாரு, வெட்பாலை, காசளங்கண்ணி, நற்பிலி, கொத்துபுங்கன், வட்டத்திருப்பி, தண்ணீர்விட்டான்கிழங்கு, கருங்காலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், பெரியமரச்சக்கை, கொண்டை, கருஞ்வேளை, கார்போக அரிசி, சந்தனம், உலர்த்திபட்டை, புங்கன் இலைகளைச் சமனளவாய் கியாழம் போட்டு குடித்தால் சருமத்தின் நோய்கள், பதினெட்டுவித குஷ்டரோகங்கள், வாதரத்தம், பித்தரத்தங்கள் விசர்ப்பி, வித்திரதிக் கட்டிகள், சகலமான ரத்தநோய்கள் இவை யாவும் நிவர்த்தியாகும்.

லகுமஞ்சிஷ்டாதி கியாழம்:—மஞ்சிஷ்டி, கடுக்காய், தானிக்காய், நெல்லிபருப்பு, கடுகுரோகணி, வசம்பு, மரமஞ்சள், சித்திரமூலம், வேப்பனசர்க்கு இவை யாவையுஞ் சமனளவாய் கியாழம் வைத்துக் குடித்தால் வாதரத்தம், சிங்கு, கபாலகுஷ்டம், ரத்தமண்டலங்கள் இவைகள் நிவர்த்தியாகும்.

படோலாதி கியாழம் :—பேய்ப்புடல், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், கடுகுரோகணி, சித்திரமூலம், தண்ணீர்விட்டான்கிழங்கு இவையாவையுஞ் சமனளவாய் கியாழம்வைத்துக் குடித்தால் தாகத்துடன்கூடிய வாதரத்தம் நிவர்த்தியாகும்.

தாரிணியாதி கியாழம் :—மரமஞ்சள், சித்திரமூலம், கடுகுரோகணி, வசம்பு, மஞ்சிஷ்டி, வேப்பனசர்க்கு, நிரிபலி இவை யாவையுஞ் சமனளவாய் கியாழம் வைத்து சாப்பிட்டால் வாதரத்தம் சகலகுஷ்டங்கள் இவை யாவும் நிவர்த்தியாகும்.

குடூச்யாதி கியாழம்:—சித்திரமூலம், கொத்துபுங்கன், தகரை, வேப்பனசர்க்கு, கடுக்காய், மஞ்சள், நெல்லிவற்றல், ஆடாதோடை, தண்ணீர்விட்டான்கிழங்கு, வெட்டிவேர், சாகமுட்டி, அதிமதுரம், பேய்ப்புடல், குறிவேர், மஞ்சிஷ்டி, ரத்தசந்தனம் இவை யாவையுஞ் சமனளவாய்க் கியாழம்வைத்து சாப்பிட்டால் வாதரத்தங்கள், சகல வாதவிகாரங்கள் இவை யாவும் நிவர்த்தியாகும்.

ஆடாதோடை, சக்கொன்றைப்புளி, சித்திரமூலம் இவை யாவையுஞ் சமனளவாய் கியாழம்வைத்து அதில் ஆமணக்கெண்ணெய் கலந்து சாப்பிட்டால் சகல அவயவங்களில் வீக்கத்துடன் எரிவத்தம் கொடுக்கும் ரத்தவாதம் நிவர்த்தியாகும்.

லாங்கலியாதி சூரணம் :—நிப்பிலி, கும்பாரஷ்டம், நிரிகடுகு, லவணம் இவை யாவையுஞ் சமனளவாய்ச் சூரணித்து பசும்பெய்யுடனாவது அல்லது தேனுடனாவது ½-தோலா எடை சூரணத்தைக் கலந்து சாப்பிட்டால் சகல ரத்தவிகாரங்கள், பாதரோஷங்கள், பாதப்பிளப்பு, சந்துகளில் நோய், குஷ்டவாதரத்தங்கள், குஷ்டரோகம் இவை யாவும் நிவர்த்தியாகும்.

பஞ்சாமிருத ரசம்:—சுத்திசெய்த ரசம், கெந்தி வகைக்கு 1-பலம் அப்பிரகபற்பம் 2-பலம், குங்கிலியம் 4-பலம், சித்திரமூலச்சாரை 4-பலம். இவை யாவையும் கல்வத்திலிட்டு நொச்சிவேர், நெருஞ்சில், சித்திரமூலம், நிலாவரைவேர் இவைகளின் ரசங்களினால் தனித்தனி 7-நாள் அரைத்த 4-குன்றிமணி ஓளஷதத்தை இலாவரைவேர் ரசம் அனுபானத்தில் கொடுத்தால் வாதரத்தம் நிவர்த்தியாகும்.

தாளகேசர ரசம்:—சுத்திசெய்த தாளகம், சுத்திசெய்த அப்பிரகம் இவைகளை சமனளவாய்ச் சேர்த்து வெண்ணெய்சாரணை ரசத்தினால் ஒருநாள் அரைத்து பிண்டிசெய்து வெய்யிலில் உலர்த்தி பிறகு வெண்ணெய்சாரணை சமூலம் சுட்டு அதின் சுவாரத்தை பெறுத்து அதை மூசையின் மூழ்குவரைக்கும் நிறப்பி, அதின்மீது பிண்டியை வைத்து மேன்மூடி சீலைமண்செய்து வெய்யிலில் உலர்த்தி அடுப்பேற்றி மந்தாக்கினியால் இரவும் பகலும் விடாமல் 5-நாள் மணல்மறையில் வாலுகாயந்திரத்தில் எரித்து ஆறியபிறகு எடுத்துக்கொள்ளவும். இதை தாளகேசர ரசமென்பார்கள்.

இந்த மருந்தில் குன்றிஎடை சித்திரமூலம் முதலியவைகளின் கியாழ அனுபானத்தினால் சாப்பிட்டால் நோயுடன்கூடிய வாதரத்தங்கள், 18-விதக் குஷ்டரோகங்கள், உபதம்சரோகங்கள், விசர்ப்பிகள், மண்டலங்கள், சமை, சிங்கு, விஸ்போடகம், வாதரத்தத்தினால் உண்டாகிய இதர ரோகங்கள் இவை யாவும் கருடனைக்கண்ட சர்ப்பங்களைப்போல் மறைந்துவிடும்.

இதைச் சாப்பிடும்போது உப்பு, புளிப்பு, காரம், நெருப்பு, அனல், வெய்யில் இவை ஆகாது. உப்பை விடுவதற்கு அசக்தனாயிருந்தால் இந்துப்பைக் கலந்த மதுரமான ஆகாரங்களைச் சாப்பிடவேண்டியது.

அர்க்கேசர ரசம்:—சுத்திசெய்த ரசம் 4-தோலா, சுத்தகெந்தி 12-பலம், கல்வத்திலிட்டு நன்கு அரைத்த பின்பு அத்துடன் ஒரு தோலா தாம்பிரசேகுவை சேர்த்து நிறை அரைத்து அந்த சேகு

கிய மடக்கில் வைத்த மேல் ஒரு மடக்குமூடி சீலைமண்செய்த ஒரு பாகியில் சம்பிலை பிறப்பி அதில் இந்த மடக்கை வைத்த அடுப் பேற்றி 2 ஜாமங்கள்வரித்த ஆவிபிறகு எடுத்துபோடித்தருக்கள் பாலினுல் அரைத்த புடமிடவேண்டியது. இம்மாதிரி 12 புடமிட வேண்டியது. பிறகு நிரிபலை சித்திரமூலம், கடுக்காய்ப்பு, இலை களின் ரசத்தினுல் 3 நாள் அரைத்து வைத்துக்கொள்ளவேண்டியது.

இதில் 1, 2 குன்றிஎடை பிரதம் அருந்திவர வாதரத்தம் மண்ட லங்கள், இலைகள் நிவர்த்தியாகும். உப்பு, புளிப்பு, முதலியவை கள் ஆகாது.

யோகசார மிருதரசம்:—தண்ணீர்விட்டான் கிழங்கு, ரச முட்டி, குன்றிவேர், சிருத்த தேவதாரு, வெண்கச்சாரணை, செந்தி கொடி, நிப்பிலி, அமுக்கிராக்கிழங்கு, சிறுஞ்சல் இலைகள்வகைக்கு 10-பலம், சேர்த்து எலுமிச்சம்பழச்சாறுவிட்டு அரைத்து அந்த சாறுமத்திற்கு சமம சர்க்கரை கலந்து அரைத்து பாண்டத்தில்வைத்த தேன் 32-பலம், நெய் 20-பலம், கலந்த அதில் எலக்காய் இலவங்கம், இலவங்கப்புத் திரி இவைகளை வகைக்கு 1-பலஞ் சூரணித்த கலந்து வைத்துக் கொள்ளவும்.

இதை அநுபானத்துடன் சாப்பிட்டால், கஷ்டேந்திரியம், மி லேந்திரியம், வாதரத்தம், சூலைகள், குஷ்டங்கள், பித்தம், பித்த ரக்த பிரகோபமாகிய வாதரத்தங்கள், வாதபித்தகபத்தினுல் உண் டாகும் இதரரோகங்கள், இவைகள் நிவர்த்தியாகும்.

சகலமான ரோகங்களை நிவர்த்திசெய்ய தேகத்திற்கு காந்தி, மேனி முதலியது உண்டாக்கும்.

குடூச்சியாதி தைலம்:—100-பலஞ் செந்திக்கொடியை இடித்து, 1024-பலம் ஜலத்தில் போட்டு அதில் சாலில் ஒருபாகம் மீதம்படி யாய் பொழம் எண்டக்காய்ச்சி, வடிகட்டி, அதில் 256-பலம் பசும் பால், 64-பலம் எண்ணெய்களைந்த மந்தாக்கினியால் பெரித்தக் கொண்டு அதில் மஞ்சிஷ்டி, அமுகாம், கோஷ்டம், ஜீவநீயகணத் தில் சொல்லிய மூலிகைகள், எலக்காய், நிராகஷ, ஜடாமாஞ்சி, சதாக்கள்ளி, சுகமென்கிற வாசனைத்திரியம், காட்டுமிளகு, சிவ கரந்தை, நிரிகடுகு, கீழாநெல்லி, கடுக்காய்ப்பு, நிப்பிலி, தண்ணீர் விட்டான்கிழங்கு, விஷ்ணுகிரந்தி, இலவங்கப்பத்திரி, சிறாகப்பு, வெட்டிவேர், இலவங்கப்பட்டை, நாமாரத்தண்டு, அல்லிக்கிழங்கு, சந்தனம் இவைகளை வகைக்கு ஒரு பலம்வீதஞ் சூரணித்துப் போட்டு மந்தாக்கினியால் தைலபக்குவமாக காய்ச்சிவைத்துக் கொள்ளவேண்டியது.

இதை பானங்களுக்கும், தலைக்குதேய்த்தக்கொண்டு குளிப்ப தற்கும், உள்புறமாக சாப்பிட்டுவர்தி முதலியவைகள் பிரயோகிப்ப

தற்கும், உபயோகித்துவர்தால் வாதரத்தம், ரத்தகெடுதியினுல் உண் டாகும் இதர நோய்கள், வாதபைத்தியங்கள், விபர்வை, சுரம், குத்தல், தலைடுக்கல், அர்த்தவாதம், விரணதோஷங்கள், இவை கள் நிவர்த்தியாகும். மாதர்கள் இந்த தைலத்தை குடித்தால் சுகர நோய் நீங்கி கர்ப்பவதிகளாவார்கள்.

நாகபலா தைலம்:—நாகமுட்டி 100-பலம் இடித்து 256-படி ஜலத்தில் கொட்டி, நாலில் ஒருபாகம் மீதம்படியாய் பொழம் எண் டக்காய்ச்சி, அதற்கு சமமாக ஆட்டுப்பாலைச்சேர்த்து எரித்துக் கொண்டு அதில் வெட்டிவேர், அமுகாம் இவைகளின் கல்கத்தை 5-பலஞ் சேர்த்துக் காய்ச்சி தைலபக்குவமாக இறக்கிக்கொள்ள வேண்டியது.

இந்த தைலத்தை குடித்தாலுமாகவும், முடித்தாலுமாகவும் வழங்கி வருவதுடன் வஸ்திபிரயோகமுஞ் செய்துவர்தால் வாதரத் தங்கள் நிவர்த்தியாகும்.

சதாவரி கிருதம்:—தண்ணீர்விட்டான் கிழங்கு கல்கம், பால், இதற்குசமம் நெய், இவைகளுக்கு சாலுபாகம் அதிகமாக தண்ணீர் விட்டான்கிழங்கு ரசம், இவைகளை யொன்றுகக் கலந்து கிருதபக் குவமாகக் காய்ச்சி சாப்பிட்டால் வாதரத்தம் நிவர்த்தியாகும்.

அமிருதாதி கிருதம்:—செந்திக்கொடி, அமுகாம், நிராகஷ, நிரிபலை, சுக்கு, சிற்றமுட்டி, ஆடாதோடை, கொண்டை, வெண்டை சாரணை, தேவதாரு, சிறுஞ்சல், கடுகுரோணி, நிப்பிலி, சிவப்பூசினி, சிற்றரத்தை, ஆனைசிறுஞ்சல், ஆமணக்குவேர், மரமஞ்சள், அல்லிக் கிழங்கு இவைகளை சமனளவாக இடித்துக் கல்கஞ்செய்த 20-பலம் நெய், நெல்லிக்காய்ரசம் 16-பலம், பால் 64-பலம் கலந்து நெய்பத மாகக் காய்ச்சி வடித்துக்கொள்ள வேண்டியது.

இந்த நெய்பை போஜனத்திலும், காய் கறிகுழம்பு முதலியவை களிலுஞ் சேர்த்து உபயோகித்துக்கொண்டு வர்தால் மிகவும் சலம் வெகு தோஷங்களினுல் பிறந்த வாதரத்தத்தினுல் உண்டாகிய உத் நாளவாயு, கம்பிவாதம், பிண்புரம், தொடை, புட்டம், கண்டச் சதை முதலிய இடங்களிலுள்ள வாதங்கள், மஹாரூஜை, ஆமவாதம், மூத்திரகிருச்சிரம், பிரமேகங்கள், விஷரோகம், வாதபித்த பைத்தியம் உண்டான சகல ரோகங்கள் இவைகள் பாவும் நிவர்த்தியாகும். சாதாரணமாக இதை சாப்பிட்டுக்கொண்டிருர்தால் ஆயுசு, பலம், விரியம், தேகபுஷ்டி இவைகள் உண்டாகுமென்பதற்கு சந்தேக மில்லை.

வாதரத்தத்திற்கு பத்தியங்கள்:—உத்தான வாதரத்தத்திற்கு, அப்பியங்கனம், ஒத்தடம், லேபனம் இவைகளை செய்யவேண்டியது.

கம்பிரவாத ரத்தத்திற்கு பானம், வன்கர்மம், விரேசனம், ஊசென், அட்டடென், அதை முதலியவைகளினால் இரத்தத்தை வெளிப்படுத்த வேண்டியது.

தாதகதி ஜலத்தில் கழுவிய செப்பினால் அப்பிபன்னனஞ் செய்தல், ஆட்டுப்பாலை அருத்தல், பவதாவியம், பழையசம்பா அரிசி, கோதுமை, கடலை, துவரை, காட்டுப்பயறு, ஆடு, செம்மரிஆடு, எருமை, பச இலைகளாதபால், மணத்தக்காளிகீரை, பாவற்காய், தினை, புடலங்காய், வெள்ளிக்காய், இஞ்சி, கருணை, முருங்கை, சர்க்கரை, நிரசுகை, கலியாணபூசனிக்காய், வெண்ணெய், நெய், காடை, வதாரி, ஊக்குருவி, கோழி, உள்ளான், சிச்சோழி, வினி, வான்கோழி, புரு முதலிய பக்ஷிகளின் மாமிசங்கள், பச்சைகற்பூரம், அகரு, தேவதாரு, சாலதேவதாரு, இலைகளின் குணத்தை தலங்களில் வைத்த தேகத்திற்கு நடவுதல் இலைகள் பாவும் வாத ரத்தத்திற்கு பத்தியங்களென்ற அறிவேண்டியது.

அபத்தியங்கள்:—பகல்நித்திரை, அக்கினி, வெய்யில், புணர்ச்சி, உளுந்து, கொள்ளு, மொச்சை, பட்டாணி, சுதாரங்கள், இதாபதி களின் மாமிசங்கள், விருத்மானபோஜனம், தயிர், கரும்பு, முள்ளங்கி, கள், சாராயம், எள்ளு, காரம், உஷ்ணம், இண்ணியில் சாப்பிடுதல், குருத்வம் விதெளிப்பு, நித்திப்பு இவைகளுள்ள பதார்த்தங்கள், மாவுபண்டங்கள் இவைகள் அபத்தியங்கள்.

ஊருஸ்தம்பவாத சிகிச்சை

புனர்னவாதி கியாழம்:—வெள்ளைச்சாரணைவேர், சுக்கு, தேவதாரு, கடுக்காய்தோல், செந்திலொடி, தசமூலங்கள், இவைகள் சமனடையாகவியாழம் வைத்துக் குடித்தாலும் அல்லது கோமூத்திரத்தை வைத்து குடித்தாலும் ஊருஸ்தம்பவாதம் விலர்த்தியாகும்.

சேபாலிகாதி கியாழம்:—சொச்சியிலை கியாழம்வைத்த அத்துடன் நிப்பிலிச் சூரணத்தைக் வைத்து குடித்த பத்தை ரசமாக்கும் படியான உபசாரங்களைச் செய்தால் ஊருஸ்தம்பவாதம் விலர்த்தியாகும்.

வசாதி கியாழம்:—வசம்பு, அதிவிடயம், கோஷ்டம், சித்திரமூலம், தேவதாரு, வட்டத்திருப்பி, வாதநாசினி அரிசி, கோலைக்கிழங்கு, கோஷ்டம், கண்டங்கத்திரி, வெட்பாலை, கொண்டை, கடுகுரோகணி, முன்னை, செப்பு ஆமணக்குவேர், காளான், வேப்பன், சிற்றாமுட்டி, வேங்கைமரம், வாழைக்கிழங்கு, நிரிபலை, மிளகு, இலைகளைச் சமனடையாகக் கியாழம்வைத்த அத்துடன் தேன் வைத்து குடித்தாலும் அல்லது இலைகளைச் சூரணித்து தேன் வைத்து சாப்பிட்டாலும் அல்லது இந்த கியாழத்தில் அரிசியை வேகவைத்து அதைச் சாப்பிட்டாலும் ஊருஸ்தம்பவாதம் விலர்த்தியாகும்.

நிரிபலாதி சூரணம்:—நிரிபலை, செவ்வியம், கடுகுரோகணி, மோடி, இலைகளை சமனடையாகச் சூரணித்து தேன் வைத்துச் சாப்பிட்டாலும் அல்லது குங்கிலியச் சூரணத்தை கோமூத்திரத்துடன் வைத்துச் சாப்பிட்டாலும் ஊருஸ்தம்பவாதம் விலர்த்தியாகும்.

வேறுவிதம்:—கடுக்காய், தானிக்காய், செல்லிவற்றல், நிப்பிலி மூலம், சுக்கு, நிப்பிலி, மிளகு, இலைகளைச் சமனடையாகச் சூரணித்த தேன்வைத்த சாப்பிட்டாலும் அல்லது குங்கிலிய சூரணத்தை கோமூத்திரத்தில் வைத்து சாப்பிட்டாலும் ஊருஸ்தம்பவாதம் விலர்த்தியாகும்.

நிரிபலாதி குக்குலு:—நிரிபலை, வெறை சர்க்கரை, சேர்வானம், பெரிய அவரி, கொண்டைச்சாதை, இலைகளை வகைக்கு 25-பலம் இடித்து 1011-பலம், ஜலத்தில் கொட்டி 256-பலம் மீறும்படியாக பொழுங்காய்ச்சி, வடிகட்டி அதில் 50-பலம், குங்கிலியத்தைச் சேர்த்து மறுபடியும் கெட்டியாகிற வரையிலும் காய்ச்சி பிறகு இலவங்கப்பட்டை, ஏலக்காய், சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, நிப்பிலி, கடுக்காய், தானிக்காய், செல்லிவற்றல், இலவங்கப்பத்திரி, ஓமம், சீரகம், தூனிநிப்பிலி, சித்திரமூலம், சோம்பு, கருஞ்சீரகம், சீரகம், குரோசாணியோமம், புளியன்தோல், புளிவஞ்சி, சவ்வர்ச்சலவணம், இலைகள் வகைக்கு 1-பலம், விதைஞ் சூரணித்து அதில் வைத்து சித்தியம் ½-பலம் விதம் சாப்பிட்டால் ஊருஸ்தம்பம், சிரசூல, கண்டமாலை, உதாரோகங்கள் இலைகள் பாவும் விலர்த்தியாகும்.

இதேபிரகாரம் பொழித்தையும் செய்து சாப்பிட்டால் மேல் கூறிய ரோகங்கள் விலர்த்தியாகும்.

லகுன யோகம், வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், சீரகம், இந்துப்பு, சவ்வர்ச்சலவணம் சுக்கு, நிப்பிலி, மிளகு, இலைகள் வகைக்கு 1-பலம் விதைஞ் சூரணித்த ஆமணக் கெண்ணையைச் சேர்த்து அக்கினிபலத்தை அறிந்துகொடுத்த பிறகு ஆமணக்குவேர் பொழும் ஒருமாதம் வரையிலும் கொடுத்தால் சகலவாத ரோகங்கள் சகலவாதம், ஊருஸ்தம்பம், சுக்குவாயிருமல், எலும்பு சந்துக்கள் இடுப்பு இலைகளில் பிருக்கும் அர்திவாதம், தாதுகதசுரம், ஜீரணசுரம், சதாபிருக்கும் சபாதசினம் இலைகள் விலர்த்தியாகும்.

ஊருஸ்தம்பவாதத்திற்கு லேபனம்:—தேன், பசும்பால், புற்றுமண், இலைகளை அரைத்த இலேசாக லேபனஞ் செய்தால் ஊருஸ்தம்பம் விலர்த்தியாகும்.

வேறுவிதம்:—அமுக்கிரங்கிழங்கு, அல்லது எருக்கன்வேர், அல்லது வேப்பன்வேர் அல்லது தேவதாரு, தேன், கடுகு, புற்றுமண், இலைகளை மைபோல் அரைத்த வேகவைத்த கொஞ்சம்

உஷ்ணமாய் பிருக்கும்போதே மேலுக்கு தடவினால் ஊருன்தம்பம் விலர்த்தியாகும்.

திலாதித்து யோகம்:—வெள்ளித்து, குங்கிலியம், நிப்பிலி, சுக்கு, இவைகளின் எடைபாவதை சூரணித்து இதை கோமூத்திரத்தில் கலந்தாவது அல்லது தசமூலபொழுதை கோமூத்திரத்தில் கலந்தாவது குடித்தால் பயங்கரமான ஊருன்தம்பம், விலர்த்தியாகும்.

ஊருஸ்தம்பத்திற்கு பத்தியங்கள்:—சலவித உஷ்ண உபசாரங்கள், விபரீத வாய்வுகள், கெப்புசெல், பவதானியம், கொள்ளு, சாமை அரிசி, முருங்கைகாய், பாவல்காய், புடலங்காய் மணத்தக்காளி, வெள்ளீர், செய் இல்லாமல் சமைத்தாட்டு மிருகமாமிசங்கள், பக்ஷிமாமிசங்கள், உப்பில்லாமல் சமைத்த பதார்த்தங்கள் இவைகள் பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—கடினமானதும், தினமாயும், நிவருபமாயும், சிக்தமாயும், விருத்தமாயும் உள்ளபதார்த்தங்கள், தனக்கு ஆரதபதார்த்தங்கள், விரேசனம், குளிர்ந்தபானம், வாந்தி, சக்திபித்தம் விபரீதவாய்வுகள், வன்கர்மம், இவைகள் ஆகாது.

ஆமவாத சிகிச்சை

ராஸ்நாதி கியாழம்:—சிற்றாத்தை, தேவதாரு, சுக்கொன்றைப்புளி, சுக்கு, நிப்பிலி, மிளகு, ஆமணக்குவேர், வெண்சீச்சாகீ, சித்தில்கொடி இவைகளை சமனடையாய் பொழம்வைத்த அதில் சுக்கு கற்கத்தைக் கலந்து குடித்தால் ஆமவாதம் விலர்த்தியாகும்.

வேறுவிதம்:—சிற்றாத்தை, சித்தில்கொடி, சுக்கு, ஆமணக்குவேர், மரமஞ்சள் இவைகள் சமனடையாய் பொழம்வைத்த அதில் ஆமணக்கெண்ணெயை கலந்த அருந்தச் செய்தால் ஆமவாதம் விலர்த்தியாகும்.

மஹாவஷாதி கியாழம்:—சுக்கு, சித்தில்கொடி இவைகளைச் சமனடையாய் பொழம்வைத்த குடித்தால் அற்ப ஆமவாதம் விலர்த்தியாகும்.

மஹாராஸ்நாதி கியாழம்:—தம்பாரஷ்டம் 3-பாகம், ஆமணக்குவேர், ஆடாதோடைவேர்க்கு, பூனைகாஞ்சொரிவேர், சிச்சிலிக்கிழங்கு, மரமஞ்சள், நெற்முட்டிவேர், கோரைக்கிழங்கு, சுக்கு, அதிவிடயம், கடுக்காய்த்தோல், சிரிஞ்சில், கொண்டைவேர், பெரிய சோம்பு, கொத்தமல்லி, வெள்ளைச்சாகீ, அமுக்கிரகிழங்கு, சித்தில்கொடி, நிப்பிலி, விருத்த தேவதாரு, தண்ணீர்விட்டான்கிழங்கு, வசம்பு, அழகீ, செவ்வியம், கண்டங்கத்திரி, முள்ளங்கத்திரி இவைகள் வகைக்கு 1-பாகம், இவை யாவையும் தகுந்த ஒன்றுப்பாகம்]

போட்டு பொழம் காய்ச்சி வடிகட்டி அதில் சுக்கு சூரணத்தைக் கலந்த தோஷபலத்தை அறிந்து குடித்தால் சகலவாத ரோகங்கள், ஆமவாதம், பக்ஷாகாதம், அர்திதம், கம்பவாதம், சர்விகதவாதம், ஜானுவாதம், சங்கூவாதம், அன்னிவாதம், கர்கடகவலி, ஊருஸ்தம்பவாதம், ஊருஸ்தம்பவாதம், வாதரத்தம், விஸ்வாசிவாதம், கோஷ்டிசிஷ்ட வாதம், ஹிருதயரோகம், மூலவியாதி, யோனிரோகம், சுக்கில ரோகம், மேட்ரத்தவாதம், வர்திரோகம் இவை யாவும் விலர்த்தியாகும்.

ராஸ்நாதி கியாழம்:—பேராத்தை, சுக்கொன்றைப்புளி, தேவதாரு, வெண்சீச்சாகீ, சித்தில்கொடி, சிரிஞ்சில், ஆமணக்குவேர் இவைகளை சமனடையாய் பொழம் வைத்த அதில் சுக்குசூரணத்தைக் கலந்து குடித்தால் மூட்டுகளில் பாலதை உண்டுபண்ணும் ஆமவாதம் விலர்த்தியாகும்.

ராஸ்நாதுவாதக கியாழம்:—பேராத்தை, தண்ணீர்விட்டான் கிழங்கு, ஆடாதோடை சுக்கு, சித்தில்கொடி, அதிவிடயம், கடுக்காய்த்தோல், சுக்கு, பூனைகாஞ்சொரிவேர், ஆமணக்குவேர், தேவதாரு, வசம்பு, கோரைக்கிழங்கு இவைகளை சமனடையாய் பொழம் வைத்து குடித்தால் இடுப்பு, தொடை, புட்டம், பாதம், கண்டச்சதை, மண்டை, முழங்கால் முதலிய விடங்களிலிருக்கும் ஆமவாதம் விலர்த்தியாகும்.

சுண்டியாதி கியாழம்:—சுக்கு, சிரிஞ்சில் இவைகளை கியாழம் வைத்து அதிகாலையில் பிரிதினமும் குடித்துவந்தால் ஆமவாதம், இடுப்புசோய் இவைகள்நீங்கி ஜீரணத்தை யுண்டாக்கும்.

சட்யாதி கியாழம்:—சிச்சிலிக்கிழங்கு, சுக்கு, கடுக்காய்தோல், வசம்பு, தேவதாரு, அதிவிடயம், சித்தில்கொடி இவைகளை கியாழம் போட்டு குடித்து உஷ்ணபதார்த்தங்களை சாப்பிட்டால் ஆமவாதம் விலர்த்தியாகும். பல நிவணம் உண்டாகும்.

தசமூலாதி கியாழம்:—தசமூல கியாழத்திலாவது சுக்கு கியாழத்திலாவது, ஆமணக்கெண்ணெயை கலந்து குடித்துவந்தால் இடுப்பு சூலை, அடிவயிறுசூலை இவை விலர்த்தியாகும்.

ஓமாதி சூரணம்:—ஓமம், வாய்விளங்கம், இந்துப்பு, தேவதாரு, சித்திரமூலம், மோடி, சோம்பு, நிப்பிலி, மிளகு இவைகள் வகைக்கு 1½-பலம், கடுக்காய்பிஞ்சு 1½-பலம், பெரியசுக்கை 1½-பலம், சுக்கு 2½-பலம். இவைகள் யாவையும் சூரணித்து கொஞ்சம் உஷ்ணமான வெள்ளீர் அனுபானத்துடன் சாப்பிட்டால் விக்கம, ஆமவாதம், சன்னிசூலை, சர்வைவலி, இடுப்புசூலை, பிருஷ்டவாதம், குதவாதம், கண்டச்சதையிலுள்ள குத்தல், கபவாதம் இவைகள் விலர்த்தியாகும்.

பஞ்சம குரணம் :—சுக்கு, கடுக்காய்பிஞ்சு, நிப்பிலி, வெதை வேர், சவ்வர்ச்சலவணம் இவைகளை சமனடையாய்ச் சூரணித்துச் சாப்பிட்டால், சூலை, வயிறுப்பல், உதிரரோகம், மூலவியாதி, ஆம வாதம் இவைகள் நிவர்த்தியாகும்.

திரிபலாதி சூரணம்:—கடுக்காய், தானிக்காய், நெல்லிப்பருப்பு, சுக்கு இவைகளைச் சூரணித்து நீர் அல்லது மோரில் சாப்பிட்டால் ஆமவாதம், சந்துகளிலிருக்கும் வீக்கம் இவைகள் நிவர்த்தியாகும்.

புனர்னவாதி சூரணம் :—வெள்ளைச்சாரணை, சிந்தில்கொடி, தண்ணீர்விட்டான்கிழங்கு, சிவகரந்தை, கிச்சிலிக்கிழங்கு, தேவதாரு, சுக்கு இவைகளைச் சூரணித்து சாப்பிட்டால் கொடூரமான ஆமவாதம், கொஞ்சகாலமாயிருக்கும் காக்கைவலி இவைகள் நீங்கும்.

வைஸ்வாநர சூரணம் :—இந்துப்பு 2-பாகம், யவசூரம் 2-பாகம், சுக்கு 5-பாகம், ஓமம் 2-பாகம், கடுக்காய் 10-பாகம் இவைகளை சூரணித்து மோர், கோமூத்திரம், வெந்நீர் இவைகளில் எத்துடனாவது சாப்பிட்டால் ஆமவாதம், குன்மம், இருதயரோகம், அடிவயிற்றுவலி, பிலீகை, சூலை, வயிறுப்பல், மூலவியாதி இவைகள் நிவர்த்தியாகும். வாதத்தை சமனம்செய்யும்.

சித்திரகாதி சூரணம் :—சித்திரமூலம், கடுகுரோகணி, வட்டத் திருப்பி, வெட்பாலை, அதிவிடையம், சிந்தில்கொடி, தேவதாரு, வசம்பு, கோரைக்கிழங்கு, சுக்கு, கடுக்காய்தோல் இவைகளை சம எடையாய்ச் சூரணித்து வெந்நீருடன் சாப்பிட்டால் ஆமவாதம் நிவர்த்தியாகும்.

ஆமவாதாரி துவம்ச ரசம்:—சுத்திசெய்த ரசம் 1-பாகம், சுத்தி செய்த கெந்தி 1-பாகம் இவைகளுக்கு பதினாறில் ஒரு பங்கு சுத்தி செய்த காபி. இவைகளை கல்வத்திலிட்டு சித்திரமூல நியாழத்தால் அரைத்து குன்றிஎடை சாப்பிட்டால் வாதங்கள், அபஸ்மாரங்கள், உன்மாதம், சர்வாங்கவாதை, ஏகாங்கவாதம், ஆமவாதம், ஹரஸ் தம்பம், சேதனம் இவை யாவும் நிவர்த்தியாகும்.

உதயபாஸ்கர ரசம்:—சுத்திசெய்த ரசம், கெந்தி, சுக்கு, நிப்பிலி, மிளகு, யவசூரம், சர்ஜசூரம், பஞ்சலவணங்கள், சுட்டவெங்காரம் இவைகள் சமனடை, இவைகள் யாவுக்கும் சமனடை சேர்வாளம் சேர்த்த கல்வத்திலிட்டு கொடிமாதளம்பழ ரசத்தில் அரைத்து பாவனைசெய்து பிறகு உலர்த்திச் சூரணித்து அதில் இரண்டு குன்றி யளவு சாப்பிட்டால் ஆமவாதம் நிவர்த்தியாகும். பத்தியம பசும் பால், பச்சைபயறு இதுதான் கலந்த அன்னத்தைச் சாப்பிடும்படி செய்யவேண்டியது.

அபயாதி மாத்திரைகள்:—கடுக்காய்தோல், இந்துப்பு, கொண்டைச்சாதை, பாபரமூள்ளிவேர், சுக்கு இவைகளைச் சமனடையாக அரைத்து லோஹபாண்டத்தில் போட்டு அடுப்பேற்றி மந்தாக்கினியால் சமைத்து இலந்தைப்பழம் அளவு மாத்திரைகள்செய்து தோஷ பலானுசாரமாய் வெந்நீரில் சாப்பிட்டால் ஆமரோகம் நிவர்த்தியாகும். பத்தியம் தயிர்சாதம்.

ஏரண்டாதி மாத்திரைகள் :—ஆமணக்கு பருப்பு, சுக்கு சூரணம், சர்க்கரை இவைகளை சமனடையாய் அரைத்து மாத்திரைகள் செய்து அதிகாலையில் சாப்பிட்டால் ஆமவாதம் நிவர்த்தியாகும்.

ஹரீதகீ குக்குலு:—கடுக்காய்த்தோல், சுக்கு, பெரியமரம்சக்கை, இவைகள் சமனடை, இவைகளுக்கு இரண்டு பங்கு அதிகம் குங்கிலியம், இவைகள் யாவையுஞ் சூரணித்து ஆமணக்கெண்ணையில் ஒருநாள் அரைத்து சாப்பிட்டால் ஆமவாதம் நீங்கும்.

யோகராஜகுக்குலு:—சித்திரமூலம், திப்பிலிமூலம், ஓமம், சோம்பு, துப்பு, கோஷ்டம், சித்தாத்தை, கொஞ்சில், கொத்தமல்லி, நிரிபலி, கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கப்பட்டை, வெட்டிவேர், பவசூரம் தாளிசப்பத்திரி, இலவங்கப்பத்திரி, இவைகளை சமனடையாகச் சூரணித்து இந்த சூரணத்திற்கு சமன் குங்கிலியச் சூரணம் கலந்து நெய்விட்டு ஒருநாள் அரைத்து நெய்யில் ஊறிய பாகையில்வைத்து பிறகு ½-பலம் வீதம் சாப்பிட்டு தனக்கு வேண்டுமளவு ஆகாரத்தைச் சாப்பிட்டுவர பிலீகை, குன்மம் சூலை, மகோதரம், ஆமவாதம், இவைகள் சூரியனைக்கண்ட பனிப்போல் நிவர்த்தியாகும். அக்கினிதீபனம், தேஜசு, பலம் இவைகள் உண்டாகும்.

பிருஹத்சந்தவாதி தயிலம்:—இந்துப்பு, கடுக்காய்தோல், சித்தாத்தை, பெரிய சதாப்பிலை, ஓமம், சர்ஜசூரம், மிளகு, கோஷ்டம், சுக்கு, சவ்வர்ச்சலவணம், பிடாலவணம், வசம்பு, குரோசாணியோமம், சோகம், புஷ்கரமூலம், அதிமதுரம், திப்பிலி, இவைகள் வகைக்கு பலம்-½, சூரணித்த ஆமணக்கெண்ணெய் 16-பலம், பெரிய சதாப்பிலைசம் 16-பலம், காடி 32-பலம், தயிர்மீததேட்டை 64-பலம், இவைகளை எல்லாம் ஒன்றுக்கலந்து மந்தாக்கினியால் வேகவைத்து தைலபக்குவமான பிறகு இறக்கிக் கொள்ளவும்.

பிறகு இவை பானம், அப்பியங்கனம், வஸ்திகர்மம், இவைகளில் மேல்கூறிய மருந்தை உபயோகித்தால் ஆமவாதம், வாதசூலை, சந்துக்களிலுள்ளபாதை, முட்டிகள், இடுப்பு, இவைகளில் உள்ள நோய், முழங்காலில் உள்ளசுருக்கல், தொடைகளில் உள்ளசுருக்கல், சந்திசூலை, ஹிருதயசூலை, பார்சுசூலை, கபரோகம், இதாவாத

ரோகங்கள், இவைகள்யாவும் நிவர்த்தியாகும். அக்கினிதீபனம் உண்டாகும்.

ஆமவாதத்திற்கு மேதீபாகம்:—வெள்ளியம் 8-பலம், சுக்கு 8-பலம், இவைகளைச் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து அந்த சூரணத்தை 64-பலம் பாலில்கொட்டி, பிறகு 8-பலம் நெய் கலந்து, கட்டியாகிற வரையிலும் வேகவைத்து அதில் 64-பலஞ் சர்க்கரை கலந்து மறுபடியும் பக்குவமாக மந்தாக்கினியால் சமைத்து பாகத்தை அறிந்து இறக்கிக்கொண்டு அதில், மிளகு, திப்பிலி, சுக்கு, திப்பிலி மூலம், சித்திரமூலம், ஓமம், ஜீரகம், கொத்தமல்லி, கருஞ்ஜீரகம், பெரியசோம்பு, ஜாதிக்காய், சிச்சிலிக்கிழங்கு, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, கோரைக்கிழங்கு, இவைகள் வகைக்கு 1-பலம், சுக்கு 1½-பலம், மிளகு 1½-பலம், இவைகள் யாவையுஞ் சூரணித்து அதில்கொட்டி செவ்வையாகக்கிளறி வைத்துக் கொள்ளவும்.

இதை தேகதத்துவத்தையும் அக்கினிபலத்தையும் அறிந்து வேளைக்கு ஒருபலம் விதம் சாப்பிட்டுவந்தால் ஆமவாதம், சகல வாதனியாதிகள், விஷமசுரம், பாண்டுரோகங்கள், காமாலை, உன்மாதம், அபஸ்மாரம், பிரமேகம், வாதரக்தம், ஆமலபித்தம், தலைவலி, சாசரோகம், நேத்திரரோகம், பெரும்பாடு, சூதிகாரோகம், இவைகள் நிவர்த்தியாகும். சரீரத்திற்கு புஷ்டி, பலம், கிரியவிருத்தி இவைகளை உண்டாக்கும்.

சவுபாக்கிய சுண்டீபாகம்:—தோல்சீவிய சுக்குச் சூரணம் 8-பலம், நெய் 20-பலம், பசும்பால் 32-பலம், சர்க்கரை 50-பலம், சுக்கு, திப்பிலி, மிளகு, இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி, இவைகளின் சூரணம் வகைக்கு 1-பலம், இவைகளை ஒன்றாக கலந்து பாகமாக காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். இதைகொடுத்தால், ஆமவாதம், நிவர்த்தியாகும்.

சதபுஷ்பாதிலேபனம்:—சதாப்பிலை, வசம்பு, சுக்கு, சிரிஞ்சல், உலிமிடிபட்டை, வெள்ளைச்சாரணை, தேவதாரு, சிச்சிலிக்கிழங்கு, சிவக்காரத்தை, முதியார்கூந்தல்வேர், முன்னை, ஊமத்தன்காய், இவைகளை நீர்விட்டு அரைத்து கொஞ்சம் உஷ்ணம்செய்து லேபனஞ் செய்தால், ஆமவாதம் நிவர்த்தியாகும்.

ஆமவாதத்திற்கு பத்தியங்கள்:—ரூக்ஷை, இலங்கனம், சுவேதம், சிரோவிரேசனம், வஸ்திகர்மம், லேபனம், சேசனம் முதலிவர்த்தி, ஒருவருஷஞ்சென்ற செவ்அரிசி, கொள்ளு, வாதநிலேத்தும ஹரங்களான பதார்த்தங்கள், மோர் வெள்ளைச்சாரணை, ஆமணக்கெண்ணெய், வெள்ளைப்பூண்டு, பேய்ப்புடல், பொடுதலை, பாவல்காய், கத்திரிக்காய், முருங்கைக்காய், வெள்ளரி, மந்தாரம், சிரிஞ்சல், விருத்ததேவதாரு, சோனைகொட்டை, கோமூத்திரம், இஞ்சி,

காரம் துவர்ப்புடைய பதார்த்தங்கள் இவைகள் ஆமவாதத்திற்கு ஹிதகாரங்கள்.

அபத்தியங்கள்:—தயிர், மீன், வெல்லம், பசலிகீரை, உளுந்து மாவு, கெட்டசலம், கீழ்காற்று, விருத்தமான அன்னங்கள், தனக்கு ஒப்பிடியாத பதார்த்தங்கள், மலமூத்திரவிரோதனம், இவைகளை ஆமவாதரோகிகள் விடவேண்டியது.

சீதபித்த சிகிச்சை

கும்பாரிபல கல்க்கம்:—பூனைப்பழத்தை உலர்த்தி கல்கஞ் செய்து பசும்பாலில் கலந்து குடித்து பத்தியமாக சாப்பிட்டால் சீதபித்தம் நிவர்த்தியாகும்.

யஷ்டியாதி கியாழம்:—அதிமதுரம், இலுப்பைப்பூ, சித்தரத்தை, சந்தனம், ரக்தசந்தனம், நெல்லி, திப்பிலி, இவைகளை கியாழம் வைத்து சாப்பிட்டால் சீதபித்தம் நிவர்த்தியாகும்.

அமிருதாதி கியாழம்:—சிந்தில்கொடி, மஞ்சள், வேப்பன், கொத்தமல்லி, பூனைக்காஞ்சொரி, இவைகளிலேதேனுமொன்றை கியாழம் காய்ச்சி, சாப்பிட்டால், சீதபித்தம் நிவர்த்தியாகும்.

சீதாரி ரசம்:—சுத்திசெய்த ரசம் 1-பாகம், சுத்திசெய்த கெந்தி 2-பாகம், இவைகளை கல்வத்திலிட்டு வெள்ளைச்சாரணை, சித்திரமூலம், இவைகளின் ரசத்தினால் அரைத்து இதற்கு எட்டுபாகம் அதிகமாக பழுத்த எருக்கன்இலை ரசத்தினால் சமைத்து பாதாசத்தில் பேர்பாதி சுத்திசெய்த நாபியைக்கலந்து அரைத்து மறுபடியும், சித்திரமூல ரசத்தினால் கொஞ்சநேரம் அரைத்து குன்றி எடையாவது 1½-குன்றி எடையாவது இஞ்சிரசம் அல்லது மிளகு சூரணம், நெய் இந்த அனுபானத்துடனாவது ஒருமாதஞ் சாப்பிட்டால் சீதபித்தம் நிவர்த்தியாகி சவுக்கியங் கொடுக்கும். பத்தியத்தில் நெய்யை கலக்கவேண்டியது.

சாமானிய சிகிச்சா கிரமம்:—சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளின் சூரணத்தை பாலுடன் கலந்து சர்க்கரை சேர்த்து அல்லது வர்த்தமான நிப்பிலியையாகிலும் அல்லது வெள்ளைப்பூண்டையாகிலும் சாப்பிட்டால் சீதபித்தம் நிவர்த்தியாகும்.

சீதபித்தம், உதர்த்தம், கோஷம் இவைகளில் கிருமி, கணமச்சல், கண்டுப் போக்கும் உபசாரங்களை செய்யவேண்டியது.

சீதபித்தத்தில் கடுகு தைலத்தினால் அப்பியங்கனம், வெந்நீரில் விபர்வை பிடித்தல், பேய்ப்புடல், வேப்பன், ஆடாதோடை இவைகளின் கியாழத்தினால் வாந்தி இவைகளை செய்விக்க வேண்டியது.

திரிபலாதி ரேசனம்:— திரிபலை, சுக்கிலியம், திப்பிலி இவைகளினால் பேதிக்கு கொடுத்த பிறகு மிகவும் காரமான

(மதுரரசித்த) இருதத்தை பானஞ்செய்வித்து ரத்தமோக்ஷணம் செய்ய சீதபித்தம் குணமாகும்.

குடாதி யோகம்:—வெல்லம், ஓமம் இவைகளை நன்ற பத்தியத் துடன் ஆகாரத்தைச் சாப்பிட்டால், தேகம் முழுமையிலும் உண் டாகிய உதர்த்தம் எழுசாக்குள் நிவர்த்தியாகும்.

அக்கினிமந்த மூலயோகம்:—கூரசெல்லிவேரை அரைத்து, நெய் யுடன் கலந்து எழுசான் சாப்பிட்டால் சீதபித்தம், உதர்த்தம், கோஷ் டம் இவைகள் நிவர்த்தியாகும்.

நிம்பபத்தீர யோகம்:—வேப்பன் இலையை அரைத்து நெய் யுடன் கலந்தாவது அல்லது செல்லிவற்றல் சூரணத்தைக் கலந்தா வது சாப்பிட்டால், விஷபோடகம், கோஷ்டம், சூதம், சீதபித்தம், கமைச்சல், ரத்தபித்தம் இவைகள் நிவர்த்தியாகும்.

சைந்தவாதி லேபனம்:—இந்துப்பைச் சூரணித்து நெய்புடன் கலந்து கொஞ்சம் சூடுசெய்து லேபனஞ் செய்தாலும் அல்லது தளசி இலைரசத்தை லேபனஞ் செய்தாலும் சீதபித்தம் நிவர்த்தி யாகும்.

வெள்ளைக்கடுகு, மஞ்சள், கோஷ்டம், தகரைவிரை, என்னு இவைகளைச் சூரணித்து கடுகு தைலத்தில் கலந்து லேபனஞ் செய் தால் ஹிதகரமாகயிருக்கும்.

சீதபித்தத்திற்கு பத்தியங்கள்:—சம்பா அரிசி, பச்சைப்பயறு, கொள்ளு, பாவற்காய், மூங்கில்முசை, வெள்ளரி, பித்தசிலேஷ்ம ஹரங்களான பதார்த்தங்கள் இவைகள் சீதபித்த ரோகிகளுக்கு ஹிதகரங்கள்.

அபத்தியங்கள்:—கோடுதல், வெய்யிலில் இருக்குதல் புளிப்பு, குருகரமான அன்னங்கள் இவைகளை சீதபித்த ரோகி விடவேண் டியது.

ஆமலபித்த சிகிச்சை

சித்தில்கொடி, சித்திரமூலம், வேப்பன்னர்க்கு, பேய்ப்புடல் இவைகளைச் சமனடையாய் கியாழம்வைத்து அதில் தேன் கலந்து குடித்தால் பித்த ஆமலத்தினால் உண்டாகிய வாந்தி நிவர்த்தி யாகும்.

ஆமலபித்தத்திற்கு முதலில் வாந்திக்கு கொடுத்தபிறகு இரண்டு முறை பேதியாகும்படிக்கு விரேசனம் கொடுக்கவேண்டியது.

கொஞ்சனாளாயிருக்கும் ஆமலபித்தத்திற்கு நிருஹவஸ்தி கருமத் தைச் செய்து தோஷத்தின பலாபலத்தை அறிந்து ஔஷதம் ஆகாரம் முதலியவைகளைச் செய்தல்வேண்டும்.

ஊர்த்துவாங்கத்தில் இருக்கும் ஆமலபித்தத்தை வாந்திகளினா லும் அதோபாகத்திலிருக்கும் ஆமலபித்தத்தை விரேசனங்களினாலும் சமனஞ்செய்து துவர்ப்பாயிருக்கும் மருந்துகளைக் கொடுக்கவேண்டி யது. பத்தியமும் அப்படியே செய்யவேண்டியது.

ஆமலபித்தத்தில் கபபித்த நிவர்த்தகரமான கிரியைகளை செய்ய வேண்டியது.

ஆமலபித்தமானது வமனவிரேசனாதிகளால் சமனமாகாவிட் டால், ரத்தத்தை வெளியாக்கவேண்டும். பிறகு சீதளமான மருந் துகளினால் லேபனஞ்செய்து ஆமலபித்தரோகங்களான பக்ஷண பதார்த் தங்கள் அன்னம் முதலியவைகளினால் திருப்திசெய்தல்வேண்டும்.

படோலாதி கியாழம்:—பேய்ப்புடல், கடுக்காய், தானிக்காய், செல்லிவற்றல், வேப்பன்னர்க்கு இவைகளை சமனடையாய் கியாழம் வைத்து தேன்கலந்து குடித்தால் ஆமலபித்தம், சுரம், வாந்தி, தாபம், சூலை, கபம் இவைகள் நிவர்த்தியாகும்.

பாடாதி கியாழம்:—வட்டத்திருப்பி, வேப்பன்னர்க்கு, பேய்ப் புடல், நிரிபலி, வேங்கைப்பட்டை, பூனைகாஞ்சொரி இவைகள் சமனடையாய்க் கியாழம் போட்டு அதில் குங்கிலிய சூரணங் களை கலந்த பானஞ்செய்தால் அதிக கபத்துடன் கலந்த ஆமலபித்தம் சமனமாகும்.

ஹிம்சிராதி கியாழம்:—ஜடாமாஞ்சி, சித்தில்கொடி, பெரிய முள்ளங்கத்திரி இவைகளை கியாழம் வைத்து அதில் தேன்கலந்து சாப்பிட்டால் கொடுமையான ஆமலபித்தம், மேல்மூச்சு, இருமல், சுரம் வாந்தி இவைகள் நிவர்த்தியாகும்.

யவாதி கியாழம்:—பொட்டு கீக்கிய யவதானியம், ஆடா தோடை, செல்லிவற்றல், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, எலக்காய் இவைகளை கியாழம்போட்டு அதில் தேன்கலந்து சாப்பிட் டால் ஆமலபித்தம் நிவர்த்தியாகும். மேலும் கஞ்சி சாப்பிடும்படி செய்யவேண்டியது.

பூநிம்பாதி கியாழம்:—சிமைலிவேம்பு, வேப்பன்னர்க்கு, நிரி பலி, பேய்ப்புடல், ஆடாதோடை, சித்தில்கொடி, பற்பாடகம், கரிசாலை இவைகளைச் சமனடையாய் கியாழம்வைத்து அதில் தேன் கலந்து கொடுத்துவர ஆமலபித்தத்தை நிவர்த்தியாக்கும்.

கண்டகாரியாதி கியாழம்:—கண்டங்கத்திரி, சித்தில்கொடி, ஆடா தோடை இவைகளை சமனடையாய் கியாழம்வைத்து அதில் தேன் கலந்து சாப்பிட்டால் ஆமலபித்தம், மேல்மூச்சு, காசம், வாந்தி, சுரம் இவைகள் நிவர்த்தியாகும்,

சித்திரகாதி கியாழம்:—சித்திரமூலம், ஆமணக்குவேர், பல தானியம், பூனைகாஞ்சொரி, இவைகளைச் சமனடையாய் கியாழம் வைத்து குடித்தால் கோஷ்டதாகத்துடன் கூடிய ஆமவாதம் நிவர்த்தியாகும்.

அவிபத்தியக சூரணம்:—சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், ஏலக்காய், இவைகளைப்பத்திரி இவைகள் சமனடையாகவும், இவைகளின் மொத்த எடைக்கு இரம்பும், இரம்பின் எடைக்கு சன்குபஸ்பு சத்திசெய்த பிஷ்டையையும்கூட்டி இடித்து சூரணித்து இந்த சூரணத் நிற்குச் சமமாக சர்க்கரை கலந்து பாண்டத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது.

இந்த சூரணத்தை ½-பலம் வீதம் குளிர்ந்த ஜலத்திலாவது அல்லது தேங்காய் ஜலத்திலாவது சாப்பிட்டு இச்சாபத்தியமாய், பால் சாதம் சாப்பிட்டால் ஆமவாதம், சூலை, இருபது மேகங்கள், மூத்திரகிரிச்சரம் இவைகள் சமனமாகும்.

ஏலாதி சூரணம்:—ஏலக்காய், மூங்கில்உப்பு, இலவங்கப் பட்டை, நெல்லிவற்றல், கடுக்காய், தாளிசப்பத்திரி, மோடி, சந்தனம், கொத்தமல்லி, இவைகளை சமனடையாய்ச் சூரணித்து இந்த சூரணத்திற்கு சமனடை சர்க்கரைகலந்து சாப்பிட்டால் ஆமவாதம் நிவர்த்தியாகும்.

அதோகர ஆமவாதத்தித்கு திரிகடுகு சூரணம்:—திரிகடுகு, கண்டங்கத்திரி, பற்பாடகம், வெட்டிவேர், வெட்பாலிலரை, போரத்தை, பேய்ப்புடல், கொத்துபுங்கன், தேவதாரு, கடுரோகணி, தாமரைதண்டு, சந்தனதூள், வெட்பாலை, ஏலக்காய், சீமைஇலவம்பு, வசம்பு, அதிவிடயம், நிறாரதப்பூ, ஓமம், அதிமதுரம், முருங்கன்னிலை இவை பாலையுஞ் சமனடையாய்ச் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து காலையில் குளிர்ந்த ஜலம் சம்பிரபானகம் இவைகளில் சாப்பிட்டாலும் அல்லது தேன் அனுபானத்துடன் சாப்பிட்டாலும் அதோபித்தம் சமனமாகும். சகலவித ஆமவாதங்கள் நிவர்த்தியாகும்.

ஜம்பீராதி ரசாயனம்:—எலுமிச்சம்பழச்சாறு 16-பலம், நிலப்பனங்கிழங்குரசம், தண்ணீர்விட்டான்கிழங்குரசம், முதிர்ந்தபுளி இலைரசம், இஞ்சிரசம், கலியாணபூசினிக்காய்ரசம், தேங்காஜலம், ஆடாதோடை இலைரசம், நெல்லிக்காய்ரசம், வாழைப்பழரசம், கத்தரசம், கொடிமாதளம்பழரசம் இவைகள் வகைக்கு 8-பலம், சர்க்கரை 1-சேர, பசும்நெய் 20-பலம், இவைகள் பாலையும் ஒன்றுக்கு கலந்த ரசாயனபாகமாய் காய்ச்சி, அதில் இரம்பு, சுக்கு, கன்னிவேர், கடுக்காய், சீரகம், கருஞ்சீரகம், ஏலக்காய், அதிமதுரம், தாளிசபத்திரி, மோடி, திப்பிலி, போரத்தை, வாய்விளங்கம், பேரீச்சம்பழம், நிறாரகப்பூ, வெட்டிவேர், அல்லிக்கிழங்கு, நிராலைசு, சந்தனம், இலவங்கம் இவைகள்யாவும் வகைக்கு ஒரு பலம் விதஞ் சூரணித்துகலந்து அதில்கொட்டி ரசாயனபாகமாகச் செய்து 16-பலம், தேன்கலந்து வைத்துக்கொண்டு சாப்பிட்டுவர பித்தஉன்மாதம், ரக்தபித்தம், இளைத்தல், சுஷயங்கள், அபஸ்மாரம், பாண்டுரோகம், பித்தாதிக்கம், காமாலை, நேத்திரரோகம், மேஹவியாதி, ஆமவாதம், இவைகள் நிவர்த்தியாகும், மூலை, புத்தி, சக்திலம், இவைகளை விருத்திசெய்யும்.

மஹாசுண்டார்த் திரசும்:—தோல்நீக்கிய இஞ்சி 100-பலம், பசும்நெய், 40-பலம், இவைகளை ஒருபாண்டத்தில்போட்டு, பொன்னிறம் ஆகிற வரையிலும் வருத்து பிறகு கற்கண்டு அல்லது பழுப்பு வெல்லம், அல்லது சர்க்கரை, இம்மூன்றில் யேதாவது 70-பலம், அதில்போட்டு, அத்துடன், அதிமதுரம், திப்பிலி, மோடி, மிளகு, இவைகள் வகைக்கு 5-பலம், மூங்கில் உப்பு, தாளிசப்பத்திரி, கொத்தமல்லி, சீரகம், இவைகள் வகைக்கு பலம்-4, இலவங்கம் இலவங்கப்பத்திரி, நிறாரகப்பூ, ஜாதிக்காய், இவைகள் தனித்தனி 5-பலம், ஏலக்காய், சுக்கு, ஜடாமாஞ்சி, கருங்காலிவேர், இவைகள் வகைக்கு பலம்-2 சந்தனத்தூள், நித்திரமூலம், வெட்டிவேர், நெல்லிவற்றல், இவைகள் வகைக்கு பலம்-1 இவைகள்யாவையும் சூரணித்துப்போட்டு கலந்து இரசாயனமாக செய்துக் கொள்ளவும்.

இது நெய்யுடன் கலந்த சூரணரூபமாக தோணும். இதை காலை மாலை 1-தோலை பிரமாணம் பிரயோகித்தால், ஆமம், பாண்டு, சூலை, சுரம், விக்கம், காமாலை, இருமல், உப்பல், பீனசம், குன்மம், பித்தங்கள், இவைகள் நிவர்த்தியாகும். அக்கினி தீபனத்தை, உண்டுப் பண்ணும்.

கண்டபிப்பலிகாதி லேகியம்:—திப்பிலி சூரணம் 4-பலம், நெய் 5-பலம், கற்கண்டு 16-பலம், தண்ணீர்விட்டான் கிழங்கு சூரணம் 8-பலம், நெல்லிக்காய்ரசம் 16-பலம், பசும்பால் 40-பலம், இவைகள் யாவையும் ஒன்றுசேர்த்து லேகிய பக்குவமாக இளறி, அதில் இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி, கடுக்காய், சீரகம், கொத்தமல்லி, கோரைக்கிழங்கு, நெல்லிவற்றல், மூங்கில் உப்பு, இவைகள் வகைக்கு பலம்-½ கருஞ்சீரகம், சுக்கு, நிறாரகப்பூ, ஜாதிக்காய், மிளகு, கர்ப்பூரம், இவைகள் வகைக்கு ½-பலம், இவைகள்யாவையும் சூரணித்து அதில்போட்டு சகலமும் ஒன்றும் படியாக இளறி தேன் 4-பலம், கலந்து வலிவான பாண்டத்தில் வைத்து காலை மாத்திரம் தேகபலத்தை அனுசரித்து உபயோகிக்கவும். ஆமவாதம், அருசி, வாந்தி, தாகம், இவைகள் நீங்கும்.

தீராக்ஷாதி மாத்திரைகள்:—திராக்ஷை, கடுக்காய், இலைகள் சமனடை. இலைகளுக்கு சமனடையாக சர்க்கரைக்கலந்து அரைத்து ½-பலம், விதம் மாத்திரைகள் செய்து அதில் ஒரு மாத்திரை விதம் உபயோகித்தால், ஆமலபித்தம், ஹிருதயம், கண்டம், இலைகளில் எரிச்சல், தாகம், மூர்ச்சை, பிரமை, மந்தாக்கினி, ஆமலவாதம் இலைகள் நிவர்த்தியாகும்.

சதாவரீ கிருதம்:—தண்ணீர்விட்டான் கிழங்கு கற்கம் 16-பலம், பசும் நெய் 16-பலம், பசும்பால் 64-பலம், இலைகளை ஒன்றுக்க கலந்து நெய்ப்பதமாகக் காய்ச்சி, காலையில் சாப்பிட்டால், ஆமலபித்தம், வாதபித்த ரோகங்கள் ரக்தபித்தம், தாகம், மூர்ச்சை, சுவாசம், இலைகள் நிவர்த்தியாகும்.

திராக்ஷாதி கிருதம்:—திராக்ஷை, கடுக்காய், வெட்பாலை, பேய்புடல், வெட்டிவேர், நெல்லிவற்றல், யவதானியம், சந்தனம், கொத்துபுங்கன், தாமரைத்தண்டு, சீமைஇலவம்பு, கொத்தமல்லி இலைகளை கல்கஞ்செய்து அதில் நெய் கலந்து கிருதபக்குவமாகக் காய்ச்சி, போஜனகால மத்தியில் சாப்பிட்டால் அதிருத்துவியமாக இருப்பதுடன் ஆமலபித்தம் நிவர்த்தியாகும்.

ஆமலபித்த பத்தியங்கள்:—யவதானியம், கோதுமை, பச்சைப்பயறு, பழைய சிகப்புநெல் அரிசி, காய்ச்சி ஆறவைத்த ஜலம், சர்க்கரை, தேன், பொரிமாவு, வெள்ளரிக்காய், பரவற்காய், வாழைப்பூ, காய்கரி பேதங்கள், மூங்கில்முளை, புடலங்காய், கலியாணபூசினிக்காய், மாதளம்பழம, கபபித்தத்தை நிவர்த்திக்கின்ற அன்னபானாதிகள் இலைகள் ஆமலபித்த ரோகத்திற்கு பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—வாந்தி வேகமாக வருதல், எள்ளு, புளிப்பு, கொள்ளு, ஆட்டுப்பால், தானியாம்மலம், உப்பு, புளிப்புச்சாரம், கடினமான அன்னம், தயிர் இலைகள் ஆமலபித்தத்திற்கு ஆகாது.

அஜீரண சிகிச்சை

இலகுசித்திரக சூரணம்:—சித்திரமூலம், ஓமம், இந்துப்பு, சுக்கு, மிளகு இலைகளை சமனடையாகச் சூரணித்து புளித்த மோரில் 7-நாள் சாப்பிட்டால் அக்கினி தீபனத்தை யுண்டாக்கி மூலவியாதியை நிவர்த்தியாக்கும்.

ஜ்வாலமுக சூரணம்:—பெருங்காயம், சரக்கொன்றைப்புளி, திரிகடுகு, சித்திரமூலம், யவக்ஷாரம் இலைகள் வகைக்கு ½-பலம் விதஞ் சூரணித்த அதில் ஒருபலம் வெல்லம் கலந்து சாப்பிட்டுவர அக்கினி தீபனம் உண்டாகும். அஜீரணத்தை நிவர்த்தியாக்கும்.

வியோஷாதி சூரணம்:—சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலக்காய், பெருங்காயம், கண்டுபாரங்கி, பிடாலவணம், யவக்ஷாரம், சுக்கு,

ஓமம், புளியங்கொட்டைத் தோல், செவ்வியம், சித்திரமூலம், ஆனைதிப்பிலி, இலவங்கப்பட்டை, உப்பு, மோடி, ரகம் இலைகள் யாவுஞ் சமனடையாகச் சூரணித்த நெய் கலந்து மூன்றுநாள் சாப்பிட்டால் அஜீரண ரோகங்கள் நாசமாகும். அக்கினி தீபனம் உண்டாகும்.

சுணதி சூரணம்:—திப்பிலி, இந்துப்பு, கடுக்காய், சித்திரமூலம் இலைகள் யாவையுஞ் சமனடையாய் சூரணித்து, இந்த சூரணத்தை வெந்நீரில் அதிகாலையில் சாப்பிட்டால் பசியையுண்டாக்கி அக்கினி விருத்தியையும் உண்டுபண்ணும்.

பஞ்சாக்கினி சூரணம்:—கொண்ணைப்புளி, மருதம்பட்டை, கொடிக்கள்ளி, பெரும்கடம்பை, கருணைக்கிழங்கு இந்த ஐந்து இலைகளையுஞ் சமனடையாய்ச் சூரணித்து மோருடன் சாப்பிட்டால் அக்கினிவிருத்தியாகும்.

பிடாலவணாதி சூரணம்:—பிடாலவணம், சித்திரமூலம், சீரகம், கருஞ்சீரகம், ஓமம், கடுக்காய், திப்பிலி, மிளகு, கொத்தமல்லி, சல்வர்ச்சலவணம், இலவங்கப்பட்டை, புளிபழந்தோல், குடசாணியோமம், கொண்ணைப்புளி, வாய்விளங்கம, இலையாவையுஞ் சமனடையாகச் சூரணித்த சாப்பிட்டால், சகலவியாதிகளை நிவர்த்திப்பதுடன் அஜீரணத்தையும் போக்கும்.

சித்திரகாதி சூரணம்:—சித்திரமூலம், செவ்வியம், மிளகு, திப்பிலி, பெருங்காயம, ஆனைதிப்பிலி, கிச்சிலிக்கிழங்கு, ஓமம், சுக்கு, யவக்ஷாரம், பஞ்சலவணங்கள், இலையாவுஞ் சமனடையாய்ச் சூரணித்து கொடிமாதளம்பழ ரசத்திலாவது அல்லது மாதளம்பழ ரசத்திலாவது பாவனைசெய்து சாப்பிட்டால் ஆமரோகம், கிராணி, வாய்வு, கபம், அக்கினிமந்தம் இலைகள் நிவர்த்தியாகும்.

விடங்காதி சூரணம்:—வாய்விளங்கம், நன்கு சுத்திசெய்து பழைய சேராங்கொட்டை, சித்திமூலம், கடுக்காய், சுக்கு இலையாவுஞ் சமனடையாய்ச் சூரணித்து இந்த சூரணத்துக்கு சமம் வெல்லம், நெய்கலந்து, சாப்பிட்டால் மந்தாக்கினி யுடையவர்கள் ஜடராக்கினியை அடைவார்கள்.

சஞ்சீவனி குடிகங்கள்:—வாய்விளங்கம், சுக்கு, திப்பிலி, கடுக்காய், சித்திரமூலம், தானிக்காய்தோல், வசம்பு, சிந்தில்கொடி, நன்குசுத்திசெய்து பழைய சேராங்கொட்டை, அதிவிடையம் இலையாவுஞ் சமனடையாய் கோமூத்திரத்தில் அரைத்து, குன்றிஅளவு மாத்திரைகள் செய்து ஒருமாத்திரையைப் இஞ்சிரசத்தில் கொடுத்தால் அஜீரண வியாதி, இரண்டுமாத்திரைகள் கொடுத்தால் அஜீரணபேதி, மூன்று மாத்திரைகள் கொடுத்தால் பாம்புமுதலிய துஷ்ட

ஜெந்துக்களின் விஷம், சான்கு மாத்திரைகள் கொடுத்தால் சன்னி பாதம் இவை யாவும் நிவர்த்தியாகும்.

தனஞ்செய வடுகங்கள்:—சீரகம், சித்திரமூலம், செவ்வியம், சூரத்து கரும் உப்பு, வசம்பு இலவங்கப்பட்டை, வலக்காய், பச்சை கற்பூரம், செருப்படை, குரோசாணியோமம், சிறுநாகப்பூ இவைகள் வகைக்கு கால் பலம், ஓமம், திப்பிலிமூலம், சர்ஜகூரம், கடுக்காய்த்தோல் இவைகள் வகைக்கு 1-தோலா, ஜாதிக்காய், கிராம்பு இவைகள் வகைக்கு ½-பலம், கொத்தமல்லி, இலவங்கப்பத்திரி இவைகள் வகைக்கு ¾-பலம், திப்பிலி, சவுட்டுஉப்பு இவைகள் பலம்-1, மிளகு பலம்-¾, வெள்ளெருக்கவேர் 2-பலம், கடல்உப்பு 2½-பலம், இந்துப்பு, சுக்கு இவைகள் வகைக்கு பலம்-2½, சுக்காங்கீரை 7½-பலம், புளியங்காய் 4-பலம் இவைகள் யாவையும் அரைத்து மாத்திரைகள் செய்து உபயோகித்தால் அக்கினிதீபனம் உண்டாகும். அஜீரணம், சூலை, கிராணி இவைகள் நிவர்த்தியாகும். ருசியை உண்டுபண்ணும்.

சங்கு வடகங்கள்:—புளி, அரசன், கள்ளி, காயுருவி, எருக்கன் வகைகளின் சூரணங்கள், பஞ்சலவணங்கள் இவைகள் வகைக்கு நம்-2, சங்குபற்பம் ½-பலம், திரிபலை ½-பலம், கிராம்பு ½-பலம் இவை யாவையும் மைபோல் சூரணித்து எலுமிச்சம்பழச்சாற்றினால் ஏழு நாள் அரைத்துலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

ஒரு குன்றிஎடை சாப்பிட்டால் தீபனம், ஜீரணசக்தியுண்டாகும். சகல ரோகங்கள், அஜீரணவாதத்தினால் உண்டான ரோகங்கள் பித்த நிலைத்தமத்தினால் உண்டான ரோகங்கள், பேதி, சூலை, அரோசகம் இவைகள் நிவர்த்தியாகும்.

இலவங்காமிருத வடுகங்கள்:—மிளகு, திப்பிலி இவைகள் வகைக்கு ¾-பலம், ஓமம், சித்திரமூலம் இவைகள் வகைக்கு 2-பலம், சோற்றுப்பு 1-பலம், திப்பிலிமூலம் 1¾-பலம், சுக்கு, கடுக்காய்த்தோல் 2½-பலம், தானிக்காய்தோல், நெல்லிபருப்பு, சோங்கொட்டை, சீரகம், செவ்வியம் இவைகள் வகைக்கு பலம்-1½, வெட்பாலை 5-பலம் இவை யாவையுஞ் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து இந்த சூரணத்திற்கு சமனடை கிராம்பு சூரணத்தைக் கலந்து இஞ்சி ரசத்தினால் மூன்று நாளும் சுக்காங்கீரை ரசத்தினால் மூன்று நாளும் அரைத்து 8-குன்றிஎடை மாத்திரைகள் செய்து உபயோகித்தால் அக்கினிதீபனம், புஷ்டி, சம்பூரணரசம் உண்டாகும். அஜீரணத்தை நிவர்த்திக்கும்.

க்ஷாராசாகர வடுகங்கள்:—சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், ஐந்துவித உப்புகள், மூன்றுவித க்ஷாரங்கள், பாதரசம், கெந்தி இவைகள் வகைக்கு 1-பலம், சாபி 2-பலம், இவைகளை இஞ்சி ரசத்தினால் அரைத்து குன்றியளவு மாத்திரைகள் செய்து அஜீரண ரோகத்திற்கு 2-மாத்திரைகள் 5-இலவங்கத்

தோடும் அல்லது 7-இலவங்கத்தோடும் சாப்பிட்டால் அஜீரணம் நிவர்த்தியாகும்.

அக்கினிதுண்ட வடுகங்கள்:—சுத்திசெய்தரசம், வசுரபி, கெந்தி, ஓமம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், சர்ஜகூரம், யவகூரம், சித்திரமூலம், இந்துப்பு, சீரகம், சவ்வர்ச்சலவணம், வாய்விளங்கம், கடல்உப்பு, சுக்கு, திப்பிலி, மிளகு இவைகள் சமனடை, சன்கு சுத்திசெய்த எட்டிவிரை இவைகள் யாவற்றிற்கும் சமமாக சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றினால் அரைத்து மிளகு அளவு மாத்திரைகள் செய்து கடுக்காய், சுக்கு, வெல்லம் இவைகளை அரைத்து இதில் ½-பலம் சூரணத்தில் ஒரு மாத்திரையை பிரயோகித்தால் அக்கினி மந்தம் நிவர்த்தியாகும்.

தகஹரீதகி யோகம்:—100-கடுக்காயை மோரில் வேகவைத்து அந்த கடுக்காயில் இருக்கும் விதைகளை எடுத்துவிட்டு திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, மிளகு, ஐந்துவித உப்புகள், பெருங்காயம், யவகூரம், சீரகம், குரோசாணியோமம் இவைகள் வகைக்கு ½-பலம், வெள்ளெருக்கவேர் ½-பலம் இவைகளை சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து புளிவஞ்சிரசத்தினால் அரைத்து இவைகளை அந்த கடுக்காயில் வைத்து வெய்யிலில் வைத்து உலர்த்தி ஒரு கடுக்காய் விகிதம் சாப்பிட்டால் அஜீரணம், மந்தாக்கினி, ஜடாரோகங்கள், மூலரோகம், சூலை, கிருணி, குதஸ்தானத்தில் மூலைகள், மலபந்தம், அரோசகம், ஆமவாதம் இவைகள் யாவுஞ் சுலபமாகும்.

க்ஷாரயோகம்:—சர்ஜகூரம், யவாகூரம், வங்காரம், ரசம், இலவங்கங்கள், இந்துப்பு, பிடாலலவணம், சவ்வர்ச்சலவணம், திப்பிலி, கெந்தி, சுக்கு, மிளகு இவைகள் வகைக்கு 1-பலம், சாபி ½-பலம் சேர்த்து சூரணித்து எருக்கன்பாலினால் ஏழுநாள் அரைத்து அந்த மூசையில் வைத்து கஜபுடமிட்டு ஆறியபிறகு எடுத்து பிறகு இலவங்கம், மிளகு, படிகாரம் இவைகள் வகைக்கு பலம்-1 சேர்த்து செவ்வையாக அரைத்து பாண்டத்தில் வைத்து 2-குன்றிஎடை சாப்பிட்டால் சாப்பிடும்படியான பதார்த்தங்களை சுகஜீரணத்திற்குள்ளாக்கி ஜீரணிக்கச்செய்யும். பசிதீபனம் உண்டாக்கும்.

அஜீரணத்திற்கு பஞ்சமூலாதி கிருதம்:—பஞ்சமூலங்கள், கடுக்காய்தோல், திரிகடுகு, திப்பிலிமூலம், இந்துப்பு, சிற்றரத்தை, சர்ஜகூரம், யவகூரம், சீரகம், வாய்விளங்கம், சித்திரிக்கிழங்கு இவைகளை சமனடையாய் நிறைந்த காய்ச்சி அதில் நெய், கொடிமாதளம்பழரசம், இஞ்சிரசம், மோர், கள், எடு, கழுதீர், கஞ்சிநீர், இவைகளை சேர்த்து பக்குவமாய் காய்ச்சி சாப்பிட்டால் அக்கினி தீபனத்தை உண்டாக்கும். குன்மம், சூலை, உதரரோகம், மேல்

மூச்சு, இருமல், வாதங்கள், கபரோகங்கள் இவைகள் நிவர்த்தியாகும்.

பில்வாதி கியாழம்:—வில்வபழம், சுக்கு, இவைகளை சமனடையாக கியாழம்வைத்து கொடுக்க வாந்தி, பேதி இவைகள் நிவர்த்தியாகும்.

வில்வபழம், சுக்கு, காயம் இவைகளை சமனடையாக கியாழம் வைத்து குடித்தால் வாந்தி, பேதி இவைகள் நிவர்த்தியாகும்.

விஷூசிக்கு இலங்காதி சூரணம்:—இலவங்கங்கள் ½-பலம், ஏலக்காய், ஜாதிக்காய், இவைகள் வகைக்கு, ½-பலம், அபினி 7-குன்றினடை, இவைகளைச் சூரணித்து 4-குன்றினடை சூரணத்தை வெந்நீருடன் சாப்பிட்டால் விஷூசி, சூலை, அதிசாரம், வாந்தி, இவைகள் நிவர்த்தியாகும்.

பத்தியாதி சூரணம்:—கடுக்காய், வசம்பு, பெருங்காயம், வெட்பாலைப்பட்டை, கரிசாலை சவ்வர்ச்சலவணம், அதிவிடையம், இவைகளைச் சமனடையாகச் சூரணித்து வெந்நீரில் கொடுத்தால் அசீரணம், சூலை, விஷூசி, இருமல் இவைகள் நிவர்த்தியாகும்.

கடுதிரிய ரசம்:—சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், பெருங்காயம், இந்துப்பு, வங்காயம், சுத்திசெய்த கெந்தி, இவைகளை சமனடையாக கல்வத்திலிட்டு வேப்பிலை சாற்றினால் அரைத்து இலந்தை விதை பிரமாணம் கொடுத்தால் பேதி, துஷ்டமான கிருணி வாந்தி இவைகள் நிவர்த்தியாகும்.

அஜீரணங்களுக்கு பத்தியங்கள்:—மந்தாக்கினி, அசீரணம், பேதி, இவைகள் விலேஷமத்தினால் உண்டாயிருந்தால் முதலில் வாந்தியாகும்படிச் செய்யவேண்டியது.

பித்தத்தினால் உண்டாகியிருந்தால் சுகபேதிக்கு கொடுக்க வேண்டியது.

வாதத்தினால் உண்டானதாக இருந்தால் வியர்வைவரும்படி செய்விக்கவேண்டியது.

துவர்ப்பு, கைப்பு பொருள்கள் இலகு போஜனம், கஞ்சிகள் பழைய அரிசி, பச்சைப்பயறு, மாமிசரசம், வாழைக்கச்சல், முள்ளங்கி, கத்திரிப்பிஞ்சு, முருங்கைக்காய், பாவல்காய், காகப்பழம், இஞ்சி, சுக்காங்கீரை, நெல்லிக்காய், சுக்கு, மாதளம்பழம், யவதானியம், பற்பாடகம், எலுமிச்சம்பழம், கொடிமாதளம்பழம், தேன், வெண்ணை, நெய், மோர், இலந்தைப்பழம், காடி, புளித்த நீர், பெருங்காயம், உப்பு, ஓமம், மிளகு, வெந்தியம், கொத்தமல்லி, சீரகம், தாம்பூலம், வெந்நீர், கசப்பு, துவர்ப்பு, இவைகள்

உடையபதார்த்தங்கள் அசீரணவியாதிக்கு பத்தியங்களென்று அறிய வேண்டியது.

அபத்தியங்கள்:—பேதியாகுதல், மலம், மூத்திரம், அபானம், அடிக்கடி சீக்கிரமாக வருதல், சாப்பிட்ட பிறகு மறுபடியும் சாப்பிடுதல், இரவுவிழித்தல், இரத்தம் வாங்குதல், மீன்கள், மாமிசம், அதிகமாக தண்ணீர் அருந்தல், மலபத்தகரமான பதார்த்தங்கள், பாலில் வேகவைத்த பதார்த்தங்கள், பால், கோவா, சாறைப் பருப்பு, வெட்டிவேர், தினமான பதார்த்தங்கள், கெட்டஜலம் விருத்தமான அன்னம், தன்தேகத்திற்கு பிடிக்காத அன்னபானங்கள், ஜடபதார்த்தங்கள் இவைகள் அபத்தியங்கள்.

மூலரோக சிகிச்சை

சிகிச்சை விதி:—மூலவியாதி, உண்டாயிருந்தால் அதை நிவர்த்தி செய்ய ஔஷதம், க்ஷாரம், சஸ்திரம், அக்கினி என்று மூன்றுவித சிகிச்சைகள் உண்டு. இவைகளில் தேகத்தில் பலாபலத்தை அறிந்து தேகத்திற்கு தக்கவாறு ஏதாகிலும் ஒன்றை செய்துக்கொள்ளவேண்டியது.

ஆனால் மூலவியாதிக்கு ஔஷதசிகிச்சைதான் மேலானதென்று பூர்வாசிரியர் தங்கள் சாஸ்திரங்களில் புகட்டி இருக்கின்றார்கள்.

வாதத்தினால் உண்டாகும் மூலவியாதிக்கு சிநேஹகிரியை, ஸ்வேதகிரியை முதலியது செய்யலாம்.

பித்தத்தினால் உண்டாகும் மூலவியாதிக்கு விரேசன சிகிச்சைகள் முதலியது செய்யலாம்.

கபத்தினால் உண்டாகும் மூலவியாதிக்கு வமனம் முதலிய கிரியைகள் செய்யலாம்.

தொந்த, சன்னிபாதம், இவைகளினால் உண்டாகும் மூலவியாதிக்கு சகல கிரியைகளையும் அந்தந்த வியாதியின் நிலைமைக்கு தக்கவாறு செய்யவேண்டியது.

ரத்த-சன்னிபாத மூலவியாதிகளில் ரேசனகிரியைகள் செய்யலாம்.

மரீசாதி சூரணம்:—மிளகு, திப்பிலி, கோஷ்டம், இந்துப்பு, சீரகம், சுக்கு, வசம்பு, பெருங்காயம், வாய்விளங்கம், கடுக்காய், சித்திரமூலம், ஓமம் இவைகளை சமனடையாய் சூரணித்து இதற்கு இரண்டுபாகம் அதிகமாக வெல்லத்தை கலந்து வேளைக்கு ½-முதல் 1-தோலா விகிதம் சாப்பிட்டு வெந்நீர் சாப்பிடவும். சகல மூலரோகங்கள் நிவர்த்தியாகும். வாதமூலத்திற்குச் சிறந்தது.

பித்தமூலத்திற்கு துத்தூராதி சூரணம்:—பழச்சாற்றில் ஊற லவத்து கழுவியுலர்த்தி சுத்திசெய்த ஊமத்தன்விதை ஒரு பங்கு, திப்பிலி, சுக்கு, கடுக்காய், வெட்டிவேர் இலைகள் வகைக்கு இரண்டு பங்கு, இலைகளை சூரணித்து 8 குன்றிளடை சூரணத்தை 1-தோலா நெய், சர்க்கரை, தேன் இலைகளில் கலந்து இரவில் சாப்பிட்டால் பித்தமூலம் நிவர்த்தியாகும்.

அபமார்க்காதி சூரணம்:—நாயுருவிவிரை, சித்திரமூலம், சுக்கு, கடுக்காய், கோரைக்கிழங்கு, சீமைநிலவேம்பு இலைகள் சமனடையாய்ச் சூரணித்து இதற்குசமம் வெல்லத்தைக் கலந்து வேளைக்கு ½ அல்லது 1 தோலா விதம் சாப்பிட்டு ஔஷதம் ஜீரணித்தபிறகு மோர்சாதத்தை சாப்பிட வேண்டியது. மூலவியாதிகள் நிவர்த்தியாகும்.

வியோஷாதி சூரணம்:—சுக்கு, மிளகு, திப்பிலி, நன்கு சுத்தி செய்த சோங்கொட்டை, வாய்விளங்கம், எள்ளு, கடுக்காய் இவைகளை சமனடையாய் சூரணித்து சர்க்கரை கலந்து நிசுகடிப்பிரமாணம் சாப்பிட்டால் மூலம், வீக்கம், குஷ்டரோகம், அக்கினிமந்தம், கிருமி, பாண்டுரோகம் இவைகள் நீங்கும்.

விஜயா சூரணம்:—கடுக்காய், தானிக்காய், நெல்லிபருப்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, வசம்பு, பெருங்காயம், யவக்ஷாரம், சவக்ஷாரம், மூஞ்சள், மரமஞ்சள், செவ்வியம், கடுகுரோகணி, வெட்பாலிவிதை, தண்ணீர்விட்டான்கிழங்கு, பஞ்சலவணம், மோடி, வில்வபழம், சுரோசாணி யோமம் இந்த 28-சரக்குகளை சமனடையாய் சூரணித்து ½-பலம் சூரணத்தை வெந்நீரிலாவது ஆமணக்கெண்ணெயில் கலந்தாவது குடித்தால் மூலரோகம், மேல்மூச்சு, சோலை, பகந்தரம், ஹிருதயசூலை, பாரிசசூலை, வாதகுன்மம், உதரம், விக்கல், பிரமேகம், பாண்டுரோகம், காமாலை, ஆமவாதம், உதாவர்த்தம், அண்டவாதம், கிருமி, கிருணி இவையாவும் நிவர்த்தியாகும்.

சித்தரசம்:—நெய் 28-தோலா, ஆட்டுப்பால், தயிர், ஆட்டு இரைச்சிரசம், மாதுளம்பழரசம் இவைகள் வகைக்கு 128-தோலா, காளான், சுக்கு, மிளகு, திப்பிலி, கோரைக்கிழங்கு, வில்வபழம், விளாம்பழம், புளி, காட்டாத்திப்பூ, ரத்தசந்தனம், வெட்டிவேர், குறுவேர், லோத்திரம், குங்கிலியம், தாமரைஇதழ், மஞ்சிஷ்டி, இலந்தை, செவ்வியம், இலவங்கப்பட்டை, எலக்காய், தாமரைதண்டு, சிற்றாமூட்டி, அதிமதரம், இலவமபிசின் வகைக்கு 1-தோலா. இவையாவையும் நெய்யில்கொட்டி கிருதபக்குவமாக சமைத்து அந்த நெய்யைக் குடித்தால் மூலவியாதி, கிருணி, மூத்திரகிருச்சரம், பாண்டுரோகம், சுரம், அதிசாரம், இடுப்புநோய், பித்தமூலம இவையாவும் நிவர்த்தியாகும்.

சூரண மோதகம்:—கருணைக்கிழங்குரசத்தில், மிளகு, திப்பிலி, சுக்கு, சித்திரமூலம், சோகம், பெருங்காயம், ஓமம், சுரோசாணி ஓமம் இவைகள் சமனடையாக சூரணித்து கலந்து இந்த சூரணத்திற்கு காலில் ஒரு பாகம் இந்துப்பு போட்டு பிறகு எலுமிச்சம்பழரசத்தினால் ஒருநாள் அரைத்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதை அருந்திவர சூலை, கிரகணி, அதிசாரம், குன்மம், மூலவியாதி, வாயுபிரகோபம் இவைகள் நீங்கும். அக்கினிதீபனம், பலம் இவைகள் உண்டாகும். இந்த சூரணத்தை ரத்தபித்தரோகிக்கும் கர்ப்பிணிக்கும் கொடுக்கக்கூடாது.

பத்தியாதி மோதகம்:—கடுக்காய், சுக்கு, திப்பிலி, சித்திரமூலம் இலைகள் வகைக்கு பலம்-1, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, எலக்காய் இலைகள் வகைக்கு தோலா-1, இவைகளைச் சூரணித்து 40-தோலா வெல்லத்தை கலந்து ½-பலம் விதம் கொடுத்தால் மூலவியாதி நிவர்த்தியாகும்.

சூரண மோதகங்கள்:—சித்திரமூலம் 4-தோலா, கருணைக்கிழங்கு 8-தோலா, சுக்கு 2-தோலா, மிளகு ½-தோலா, சோங்கொட்டை, மோடி, வாய்விளங்கம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், திப்பிலி, தானிசப்பத்திரி இலைகள் வகைக்கு 1-தோலா, பெரியமரச்சக்கை 8-தோலா, பனங்கிழங்கு 1-தோலா, இலவங்கப்பட்டை, எலக்காய் இலைகள் வகைக்கு ½-தோலா இலைகளைச் சூரணித்து, சூரணத்திற்கு இரண்டு பங்கு அதிகமாக வெல்லத்தை கலந்து ½-முதல் 1-தோலா எடையுள்ள உருண்டைகள் செய்து சாப்பிட்டால் அப்பொழுதே மூலவியாதி நாசமாகும். அக்கினிதீபனம் உண்டாகும்.

சந்திரபிரபாவ வடுகங்கள்:—அயச்செந்தூரம் 8-தோலா, சுத்த சுங்கிலியம் 8-தோலா, சர்க்கரை 16-தோலா, கிலாசத்து பற்பம் 32-தோலா, மூங்கிலுப்பு 4-தோலா, வாய்விளங்கம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், சுக்கு, மிளகு, திப்பிலி, சீமைநிலவேம்பு, ஆனைத்திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள், திப்பிலிமூலம், தேவதாரு, சவ்வர்ச்சலவணம், இந்துப்பு, கொத்தமல்லி, சுவர்ணமாக்ஷிகம், கிச்சிலிக்கிழங்கு, அதிவிடயம, பொன்சேக்கு, சர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், வசம்பு, கோரைக்கிழங்கு, இலவங்கப்பத்திரி, எலக்காய் இலைகளை வகைக்கு ஒரு தோலா வீதஞ் சூரணித்து தேன் சேர்த்து கலந்து வேளைக்கு ½-½ தோலா எடை சாப்பிட்டால் சகல மூலவியாதிகள், பாண்டுரோகம், பகந்தரம், மூத்திரகிருச்சரம், பிரமேகம் இவைகள் நிவர்த்தியாகும்.

திரிபலாதி மாத்திரைகள்:—திரிபலை, பஞ்சலவணங்கள், கோஷ்டம், தேவதாரு, வாய்விளங்கம், வேப்பன்பழம், போரமுட்டி, சிற்றாமுட்டி, மஞ்சள், மரமஞ்சள், சர்ஜக்ஷாரம் இவை யாவை

யும் சமனடையாக ஒன்றுய் கலந்து புங்கன்பட்டை ரசத்திலுல் அரைத்து இலந்தவிதை அளவு மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு மாத்திரையை மோருடன் சாப்பிட்டால் மூலரோகம், எலுமிச்சம்பழச்சாற்றில் சாப்பிட்டால் குன்மம், வெந்நீரில் சாப்பிட்டால் அக்கினிமந்தம், வாய்விளங்கம் யோழுத்தில் சாப்பிட்டால் இருமிரோகம், கருங்காலி யோழுத்துடன் சாப்பிட்டால் சர்ம தோஷம், நீருடன் சாப்பிட்டால் மூத்திரகிருச்சிரம், கல்லெண் ணெயுடன் சாப்பிட்டால் இருத்ரோகம், வெட்பாலே சாரத்துடன் சாப்பிட்டால் சகல சாங்கள், கொடிமாதளம்பழ ரசத்துடன் சாப்பிட்டால் சூலைகள், நிப்பிலி கஷாயத்துடன் சாப்பிட்டால் ஜலோதரம் மற்றும் அனுபான பேதத்தினுல் சகல ரோகங்கள் நிவர்த்தியாகும்.

யோகராஜ குக்குலு:—நிப்பிலி, ஆனைநிப்பிலி, சித்திரமூலம், வாய்விளங்கம், வெட்பாலே, தூனைகாஞ்சொரி, கடுகுரோகணி, கண்டு பாரங்கி, வட்டத்திருப்பிவேர், ஓமம், பெருங்கடம்பைவேர், சுக்கு, பெருங்காயம், செவ்வியம் இவைகள் சமனடை. இவைகளுக்குச் சமனடை குங்கிலியம் சேர்த்து சூரணித்து தேன் விட்டளைந்து மெழுகுபதத்தில் எடுத்து வைத்துகொண்டு. இதில் வேளைக்கு ½-1 தோலா எடை தேனுடன் உட்கொண்டால் ரக்தமூலம், வாதமூலம், குன்மம், ஐராணி இவைகள் யாவும் நிவர்த்தியாகும்.

ரஜனீ சூரண யோகம்:—மஞ்சள் சூரணத்தை சதாரக்கள்ளிப் பாலினுல் அடிக்கடி பாவனைசெய்து கயிருக்கு தடவி உலர்த்தி மூல வியாதி முளைக்குகட்டினுல் முளைகள் அழுந்து விழுந்துவிடும். பகந்தர வியாதிக்கும் இம்மாதிரி செய்தால் நிவர்த்தியாகும்.

சவீரியாதி கிருதம்:—செவ்வியம், சுக்கு, திப்பிலி, மிளகு, வட்டத்திருப்பி, சகலகஷாரங்கள், கொத்தமல்லி, ஓமம், நிப்பிலிமூலம், பிடாலவணம், இந்துப்பு, சித்திரமூலம், வில்வபழம் கடுக்காய் இவை களை சமனடையாய்ச்சேர்த்து அரைத்து கல்கஞ் செய்து, நெய் கலந்த கிருதபக்குவமாக சமைத்து குடித்தால் வாதரத்தத்தை குறைக்கும்.

கல்கத்திற்கு நாலுபாகம் அதிகமாக தயிரைக்கலந்து நெய்ப்பத மாக சமைத்துகொடுத்தால் பிரவாஹிகை, குதபிரம்சம், மூத்திரகிருச் சிரம், குதசிராவம், குஷ்தானம், தொடைகள் சந்துகள் இவை களின் சூலைகள் நிவர்த்தியாகும்.

கருணைக்கிழங்கு லேகியம்:—காராக்கருணை, காட்டுக்கருணை, விஸ்ணுகரணை, புளியாரணை, மருட்கிழங்கு, கோலாக்கிழங்கு, குமரி வேர், மாங்கொட்டைபருப்பு, சித்திரமூலம், சுக்கு, கடுக்காய்தோல்

சாக்கொன்றைப்புளி, பிரண்டை, நெல்லிவற்றல் சரகம், வகைக் குப் பலம்-½, இவைகளைத்தனித்தனி உலர்த்தி வெதுப்பி இடித்து சூரணித்து பின்பு ஒன்றுகக்கலத்து வைத்துக்கொள்க. பிறகு 7½-பலம் பசுவெல்லத்தை, நீர்விட்டுகரைத்து வடிகட்டி கடாயிலிட்டு அடுப்பிலேற்றி எரித்து பாகுபதம் வரும்போது முன்செய்து வைத் துள்ள சூரணத்தைக் கொட்டிக் கிளரி நெய் தேன் சேர்த்துக் கலந்து வைத்துக்கொள்க. இதில் வேளைக்கு கழற்சிக்காயளவு தின மிருவேளையாக அருந்திவர மூலரோய்கள் யாவும் குணமாகும்.

நாக பற்பம்:—இலுப்பை எண்ணெயில் 21-முறை உருக்கிச் சாய்த்து சுத்திசெய்தெடுத்த நிறுகண் நாகத்தைக் கடாயிலிட்டு அடுப்பிலேற்றி நன்கு எரித்து உருகி வரும்போது சிற்றாமணக்கிலைச் சாறு சிறிது விடவும். பிறகு நன்கு சூடாகும்படி எரித்து மீண்டும் சிறிது சிற்றாமணக்கு இலைச்சாற்றை விடவும். இப்படி இரண்டு மூன்று முறை செய்து பிறகு சிற்றாமணக்கு வேர்களை கத்தையாகக் கட்டிக்கொண்டு அதைக் கொண்டு தேய்த்து வரும்போது நன்குஎரித்து வர நாகமானது மடிந்து பூர்த்தி வெளுத்துவரும். முற்றும் பூர்த்தி விட்டதெனத் தெரிந்ததும் கீழிறக்கி ஆறவிட்டு வஸ்திரகாயஞ் செய்து நிப்பியை நீக்கிவிட்டு மெல்லிய தூள்களை கல்வத்திலிட்டு தூற்றி இலைச்சாறு விட்டு இரண்டு ஜாமம் நன்கு அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலடக்கிச் சீலைமண் செய்து புடமிடவும். இப்படி இரண்டொரு புடமிட நல்ல பற்பமாகும். அரைத்து வைத்துக் கொள்க. இதில் வேளைக்கு குன்றிஎடை வீதம் தினமிரு வேளையாக நெய், வெண்ணெய் முதலிய அனுபானங்களில் உண்டு, கருணைக் கிழங்கு லேகியம் முதலியவைகளையும் அருந்திவர மூலரோகங்கள் யாவும் குணமாகும்.

மூலரோக பத்தியங்கள்:—கருணைக்கிழங்கு, புடலங்காய், சார ணை, பசும்மோர், பசும்நெய், பசும்வெண்ணை, பெருங்காயம், மிளகு, தேவதாரு, இந்துப்பு, முள்ளங்கத்திரி, பாலை, வசம்பு, கடுக்காய், ஆமணக்கு நெய், வெந்தயக்கீரை, முளைக்கீரை, தூதிக்கீரை, மணத் தக்காளிக்கீரை, அரைக்கீரை, சிறுகீரை, மாங்காய்பிஞ்சு இவைகள் மூலவியாதிக்கு பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—காராக்கருணை, உளுந்து, இலுப்பைபிண்ணாக்கு, தயிர், மீன், உஷ்ணமானதும் காரமுள்ளதுமான பதார்த்தங்கள், மொச்சை, கத்திரிக்காய், வில்வம், பருப்பு தினுசுகள், மாமிசம், வடிணமான பதார்த்தங்கள், குதிரை, ஒட்டகம், யானை இவைகளின் மீது சவாரி செய்தல், நீராடுதல், அதிக உழைப்பு, சதாசிந்தனை செய் தல், அதிக நேரம் உட்கார்ந்திருத்தல், மலச்சிக்கல், மிகுபுணர்ச்சி இவைகள் மூலவியாதிக்கு அபத்தியங்கள்.

கிருமிரோக சிகிச்சை

தாடியாதி சியாழம்:—மாதுளம்பட்டை சியாழத்தில் எண்ணெயைக் கலந்து மூன்றுநாள் சாப்பிட்டால் வயிற்றிலிருக்கும் கிருமிகள் விழுந்துவிடும்.

நியமநாதி சியாழம்:—வேப்பன்னர்க்கு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், வெட்பாலைபட்டை, வசம்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, கருங்காலி, வெள்ளைசிவதை இவைகளை கோமூத்திரத்துடன் சியாழங்காய்ச்சி 7-நாள் குடித்தால் கிருமிகள் நாசமாகும்.

விடங்காதி சியாழம்:—வாய்விளங்கம் சியாழம்வைத்து அதில் வாய்விளங்குந் தூணத்தைக்கலந்து குடித்தால் சகல கிருமிகள் நாசமாகும்.

முஸ்தாதி சியாழம்:—கோரைக்கிழங்கு, எலிக்காதஇலை, வெட்பாலைவிதை, தேவதாரு, முருங்கன்வேர்ப்பட்டை இவைகளை சியாழம் வைத்து அதில் திப்பிலி, வாய்விளங்கம் இவைகளின் சூரணத்தைக் கலந்து குடித்தால் கிருமி ரோகங்கள் நாசமாகும்.

கதிராதி சியாழம்:—கருங்காலிபட்டை, வெட்பாலை, வேப்பன்னர்க்கு, வசம்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, திரிபலை, வெண்தேவேர் இவைகளை சமனடையாய்ச் சூணித்து கோமூத்திரத்துடன் ஏழுநாள் சாப்பிட்டாலும் அல்லது சியாழம் வைத்து குடித்தாலும் கிருமி கூட்டங்கள் கும்பல்கும்பலாக வெளிப்படும்.

கிருமிமுத்தர ரசம்:—பாதரசம்-1, கெந்தி-2, ஓமம்-3, வாய்விளங்கம்-4, சுத்திசெய்த எட்டிவிதை-5, பலாசவித்து-6, பாகங்களாகச் சேர்த்தரைத்துச் சூணித்து 5-குன்றிஎடை தேனில் கலந்து சாப்பிட்டு பிறகு கோரைக்கிழங்கு சியாழத்தை குடித்தால் கிருமிகள் நாசமாகி வெளியில் விழுந்துவிடும்.

விடங்காதி சூரணம்:—வாய்விளங்கம், இந்துப்பு, பெருங்காயம், கடுக்காய், பலாசவித்து, சவ்வர்ச்சலவணம், திப்பிலி இவைகளை சமனடையாகச் சூணித்து கொஞ்சம் உஷ்ணமாயிருக்கும் சலத்துடன் சாப்பிட்டால் கிருமிகள் நிவர்த்தியாகும்

ஆகுபரிணியாதி சூரணம்:—எலிக்காது இலையை அரைத்து உருண்டைசெய்து அதை சாப்பிட்டு பிறகு புளித்தநீர் குடித்தால் கிருமிகள் நிவர்த்தியாகும்.

சுவர்ச்சகாதி சூரணம்:—சர்ஜகஷாரம், பெருங்காயம், ஜாபத்திரி, வாய்விளங்கம், குங்குமப்பூ, திப்பிலி, சித்திரமூலம், சுக்கு, ஓமம், திப்பிலிமூலம், கோரைக்கிழங்கு இவைகளை சமனடையாகச் சூணித்து மோருடன் சாப்பிட்டால் கிருமிகள் நிவர்த்தியாகும்.

நிம்பாதி சூரணம்:—வேப்பன், வெட்பாலை, வாய்விளங்கம், பெருங்காயம், இவைகளை சமனடையாகச் சூரணித்து தேனுடன் கலந்து சாப்பிட்டாலும், அல்லது வேப்பன்இலை, ஓமம், இவைகளை சூரணித்து, தேனுடன் கலந்து சாப்பிட்டாலும், கிருமிரோகம் நிவர்த்தியாகும்.

ஹரீதகி சூரணம்:—கடுக்காய்த்தோல், மஞ்சள், சவ்வர்ச்சலவணம், இவைகளை சமனடையாகச் சூரணித்து பாபரமுள்ளிவேர் சியாழத்தினால் பாவனைசெய்து சாப்பிட்டால் கிருமிகள் நாசமாகும்.

சாவித்திரி வடுகங்கள்:—முருக்கன்விரை 2-பலம், லோஹபற்பம் 2-பலம், கடுக்காய், சீந்தில்கொடி. தானிக்காய், நெல்லிவற்றல், இவைகள் வகைக்கு பலம்-1. புங்கன், செவ்வியம், சுக்கு, திப்பிலி, மிளகு, சித்திரமூலம், ஓமம், வாய்விளங்கம் இவைகள் வகைக்கு ½-பலம். எள்ளெண்ணெய் 2-பலம், திரிபலைசியாழம் 16-பலம், கற்கண்டு 32-பலம், இவைகள் யாவையும் ஒன்றாக சேர்த்து அடுப்பு மீது ஏற்றி, ஜலங்கள், ரசங்கள் சுண்டுகிற வரையிலும் வேகவைத்து இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, எலக்காய், சிறுநாகப்பூ, இவைகளைச் சூரணித்துப்போட்டு சகலமும் ஒன்றாகும்படி கிளறி கழற்சிக்காய் அளவு மாத்திரைகள் செய்து உலர்த்தி அக்கினி பலத்தை அறிந்து சாப்பிட்டால், கிருமிகள், கோஷ்டம், அக்கினிமந்தம், விக்கம், குன்மம், உதரம், விரணம், காமாலை, பாண்டுரோகம், மூலவியாதி, பகந்தரம், இவைகள் நீங்கும்.

விடங்க கிருதம்:—கடுக்காய் 48-பலம், வாய்விளங்கம் 16-பலம், தசமூலங்கள் வகைக்கு 2½-பலம் விதம் சேகரித்து இடித்து 256-பலம், சலத்தில்கொட்டி, 64-பலம், சியாழம் மீறும்வரையிலும் சுண்டக்காய்ச்சி, வடிகட்டி, அதில் 16-பலம், நெய், இந்துப்பு சிறிது சேர்த்து நெய்பதத்திற்கு சுண்டக்காய்ச்சவும். இத்துடன் சர்க்கரை கலந்து குடித்தால் சகலமான கிருமிரோகங்கள் நீங்கும்.

விடங்காதி யோகம்:—வாய்விளங்க சூரணமாவது வேப்பன் கொழுந்து சூரணமாவது, முருக்கன்விரை சூரணமாவது, அல்லது வேப்பன்இலை, பெருங்காயம் இரண்டும் அரைத்து தேனுடன் கலந்தாவது சாப்பிட்டால் கிருமிரோகம் நிவர்த்தியாகும்.

கிருமிரோகிக்கு பத்தியங்கள்:—பலாசவித்து, குப்பைமேனிகீரை, புகைப்போடுதல், கபாசகரபதார்த்தங்கள், சரீரத்தை சோதித்தல், பழயமூங்கில் அரிசி, பழயநெல்அரிசி, பேய்ப்புடல், வெள்ளைப்பூண்டு, சித்திரமூலம், மந்தாரஇலை, கடுகு, திக்தபதார்த்தங்கள், தண்டுள்ள செடிகளின் எலிக்காதஇலை, உளுந்து, வாய்விளங்கம், வேப்பன்இலை, எள்ளெண்ணெய், கடுகுஎண்ணெய், தேன், கோமூத்திரம், தாம்பூலம், கள்ளு, கஸ்தூரி, ஒட்டகத்தின்மூத்திரம், நெய், பால், பெருங்காயக்ஷாரம், ஓமம், கறுங்காலி, வெட்பாலை,

னலுமிச்சம்பழரசம், கருஞ்சீரகம், குரோசாணியோமம், தேவதாரு, அசோகு, கசப்பு, துவர்ப்பு, காரம், இந்தரசங்கள் இவைகள் கிருமி ரோக மூடையவர்களுக்கு பத்தியங்களென்று அரியவேண்டியது.

அபத்தியங்கள்:—வாந்திசெய்தல், வாந்தியின்வேகத்தை தடுத்தல், விருத்தமான அன்னபானங்கள், பகல் நித்திரை, நிஷபதார்த்தங்கள், கருகருத்த அன்னம், அசீரணமானபோஜனம், நெய், உளுந்து, தயிர், இலேகரிபதார்த்தங்கள், மாமிசம், பால், புளிப்பு, மதுரசம் இவைகளே கிருமிரோகிகள் விடவேண்டியது.

தாகரோக சிகிச்சை

பில்வாதி கியாழம்:—வில்வப்பழம், துவரை, காட்டாத்திப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, செவ்வியம், சித்திரமூலம், தர்ப்பவேர் அல்லது எள்ளுத்தண்டு இவைகளே கியாழம்வைத்து குடித்தாலும் அல்லது வாந்தி செய்வித்தாலும் பத்தினால் உண்டாகிய தாகம் நிவர்த்தியாகும்.

ஆமிராதி கியாழம்:— மா, நாவல் இலைகளின் பட்டையை சமனடையாய் கியாழம்வைத்து தேன்கலந்து குடித்தால் வாந்தி, தாகம் இலைகள் நிவர்த்தியாகும்.

கசேர்வாதி கியாழம்:— இச்சிலிக்கிழங்கு, நெல்லிவற்றல், தாமரை விதைகள், தாமரைதண்டு, கருப்பு இலைகளே சமனடையாய் கியாழம்வைத்து அதில் கற்கண்டைப் போட்டு குடித்தால் பித்தத்தினால் உண்டான தாகம் நீங்கும்.

காஸ்மரியாதி கியாழம்:—நிலப்பூசினி, கற்கண்டு, சந்தனம், வெட்டிவேர், தாமரைதண்டு, திராக்ஷை, அதிமதுரம் இலைகளே சமடையாய் கியாழம்வைத்து குடித்தால் பித்தத்தினால் உண்டான தாகம் நிவர்த்தியாகும்.

குஷ்டாதி சூரணம்:—கோஷ்டம், காசதர்ப்பைவேர், அதிமதுரம் இலைகளைச் சூரணித்து சலத்துடன் கலந்து குடித்தால் கொஞ்ச காலமாயிருக்கும் தாகரோகம் நிவர்த்தியாகும்.

கண்டூஷம்:—சந்தனம், தாமரைத்தண்டு கோரைக்கிழங்கு, கொத்தமல்லி, வேப்பன்பட்டை, கலியாணபூசினி, கருங்காலி பட்டை, வெள்ளைச்சாரணை, வெள்ளைஉமத்தன் இலைகளே சமனடையாய் கியாழம்வைத்து எட்டில் ஒரு பாகம் மீறும்படியாய் சண்டக் காய்ச்சி கண்டூஷம் செய்தால் தாகம் நிவர்த்தியாகும்.

வடுகங்கள்:— கருப்பு அல்லி, தேன், நெற்பொரி, ஆலன் விழுதுமுனைகள், கோஷ்டம் இலைகளே சமனடையாய் அரைத்து மாத்திரைகள்செய்து சாப்பிட்டால் தாகநோய் தீரும்.

கர்ஜூரம், திராக்ஷை, அதிமதுரம், கற்கண்டு இலைகள்வகைக்கு 4-தோலா, திப்பலி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய் இலைகள் வகைக்கு 2-தோலா. இவை யாவையும் தேன்கூட்டி மாத்திரைகள்செய்து சாப்பிட்டால் தாகம், ரத்தபித்தம் இலைகள் நிவர்த்தியாகும்.

கருப்பு அல்லி, கோரைக்கிழங்கு, நெற்பொரி, ஆலம்விழுது முனைகள் இவை யாவையுஞ் சமனடையாய் சூரணித்து தேன்கலந்து மாத்திரைகள் செய்து அருந்த தாகரோகை சமனஞ்செய்யும்.

உபசர்க்க சாமானியவிதி:—அதிக தாகத்தினால் சலத்தைகுடித்து வயிறு நிரம்பியிருந்தால் திப்பிலி கியாழத்தினால் வாந்தி செய்விக்க வேண்டியது. வாதானுலோம சஞ்சாரத்திற்கு மாதளம்பழம், காசினிக்கீரை, கொடிமாதளம்பழம், இலைகள் கலந்த ஔஷதத்தை கொடுக்கவேண்டியது.

பாதாத்யயஜதிருஷ்ண சிகிச்சை:—ஆட்டு இரைச்சிரசம், நெய், சர்க்கரை, தேன், இலைகளே கலந்து குடித்தால், கஷ்டமான தாகரோகம், மூர்ச்சை, வாந்தி, மதாத்தியம், இலைகள் நிவர்த்தியாகும்.

தாகரோகத்திற்கு பத்தியங்கள்:—வாந்தி, நித்திரை, நீராடுதல், கவளதாரணம், நெல், கஞ்சி, பொரிமாவு, நீர்க்கஞ்சி, நிர்ஜல தேசத்தின் மிருகபக்ஷி, மாமிசரசங்கள், சர்க்கரை, தேன், நித்திப்பான தயிர், வருத்தப்பச்சைப்பயறு, சிறிய கடலை, கடலை இலைகளின் ரசங்கள், வாழைப்பூ, பர்ப்பாடகம், மோர், திராக்ஷை, வெட்டிவேர், விளாம்பழம், இலந்தை, கலியாணபூசினிக்காய், பேரீச்சம்பழம், மாதளம்பழம், நெல்லிக்காய், வெள்ளரிக்காய், ஒடும்நீர், எலுமிச்சம்பழம், கரிவேப்பிலை, கொடிமாதளம்பழம், பசும்பால், இலுப்பைப்பூ, குறுவேர், கசப்பு, மதுரம் இந்த ரசங்கள், நுங்கின்ஜலம், குளிர்ந்தஜலம், பால், பானகம், தேன், குளத்தின் ஜலம், தண்ணீர்விட்டான்கிழங்கு, சிறுநாகப்பூ, ஏலக்காய், ஜாதிக்காய், கடுக்காய், கொத்தமல்லி, ரக்தசந்தனம், பச்சைக் கற்பூரம், இச்சிலிக்கிழங்கு, நிலா, குளிர்ந்தகாற்று, சந்தனம் பூசிக்கொண்ட மாதரை ஆலிங்கனம்செய்தல், முத்துமாலைகள் அணிந்துகொள்ளல், ஆற்றில் நீராடுதல், லேபனம், இலைகள் தாகரோகிக்கு பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—ஸ்நேஹம், அஞ்சனம், வியர்வைவாங்கல், புகைகுடித்தல், நசியஞ்செய்தல், வெய்யில், குச்சியால் பல்துலக்கல், பழய அன்னம், புளிப்பு, காரம், உப்பு, கெட்டஜலம், காரமுள்ள பதார்த்தங்கள், இலைகள் தாகரோகிக்கு ஆகாது.

வெட்டைக்கு சிகிச்சை

சந்தனாதி கியாழம்:—சந்தனம், பற்பாடகம், தற்பைவேர், வெட்டிவேர், கோரைக்கிழங்கு, தாமரைப்பூ, தாமரைத்தண்டு, சோம்பு, தனியா, தாமரையிர்க்கு, செல்லிவற்றல், இவைகளை சமஎடையாகச் சேர்த்து கியாழம் காய்ச்சி அதில் சர்க்கரை கலந்து குளிர்ச்சியா யிருக்கும்போது தேன் கலந்து குடித்தால், தேகஅனல் அல்லது தேக எரிச்சல் நிவர்த்தியாகும்.

லாஜாதி கியாழம்:—குருவேர், ரக்தசந்தனம், வெட்டிவேர், இவைகளைச் சமனடையாகக் கியாழம் வைத்து அதில் சர்க்கரை கலந்து குடித்தால், தேக அனல், தேக எரிச்சல், பித்தசுரம் இவைகள் நிவர்த்தியாகும்.

தசசார சூரணம்:—அதிமதுரம், செல்லிக்காய்வற்றல், திராக்ஷை, ஏலக்காய், சந்தனம், வெட்டிவேர், இலுப்பைப்பூ, பேரீச்சம்பழம், மாதுளம்பழத்தோல், இவைகளைச் சமனடையாகச் சூரணித்து இந்தச் சூரணத்திற்கு சமமாக, சர்க்கரை கலந்து ½-பலம விகிதம் சாப்பிட்டால் சகலபித்த விகாரங்கள் தேக அனல் முதலியன நிவர்த்தியாகும்.

கர்ஜூராதி சூரணம்:—கர்ஜூரம், செல்லிவற்றல், திப்பிலி, சிலாஜித்துபற்பம், ஏலக்காய், அதிமதுரம், கல்லுருவிவேர், சந்தனம், வெள்ளரிவிதை, கொத்தமல்லி, கற்கண்டு இவைகளை சமனடையாகச் சூரணித்து அதிமதுர கியாழத்துடன் கலந்து சாப்பிட்டால், சரீரம், விக்கம், குதம், இந்த இடங்களில் யிருக்கும் அனல், சுக்கில சுஷ்யத்தினால் உண்டாகும் தாபம், சர்க்காஸ்மரீ, சூலை, மூத்திரரோகம், சுக்கிலதோஷத்தினால் உண்டாகிய ரோகங்கள், இவைகள் நிவர்த்தியாகும். விரியவிருத்தி, பலம், இவைகளை உண்டாக்கும்.

சந்தனாதி சூரணம்:—சந்தனம், வெட்டிவேர், கோஷ்டம், கோரைக்கிழங்கு, செல்லிவற்றல் கிச்சிலிக்கிழங்கு, அல்லிக்கிழங்கு, அதிமதுரம், இலுப்பைப்பூ, திராக்ஷை, பேரீச்சம்பழம், இவைகளை சமனடையாகச் சூரணித்து சூரணத்திற்கு சமம், சர்க்கரை கலந்து காலையில் சாப்பிட்டு குளிர்ந்தசலம் சாப்பிட்டால், ரக்தபித்தம், சுவாசம், பித்தசூன்மம், தேககார்க்ஷை, காமாலை, பிரமேகம், பித்தசுரம், இவைகளியாவும் நிவர்த்தியாகும்.

தில தைலம்:—எள்ளெண்ணெய் 16-பலம், காஞ்சிகம், 256-பலம், தைலமாகச்செய்து லேபனங்கள் செய்தால், தேகஅனல், சுரம் இவைகள் நிவர்த்தியாகும்.

புனரணவாதி தைலம்:—வெள்ளைச்சாரணைவேர், 100-பலம், காராம்பசு நெய், 64-பலம், பால் 64-பலம், மேல்கூறியவேளை,

பால்விட்டு அரைத்த எண்ணெய் 100-பலம், தூபம் 14-பலம், மினகு, இலவங்கச்சக்கை 2-பலம், கிச்சிலிக்கிழங்கு, வெட்டிவேர், குறுவேர், மஞ்சிஷ்டி, காசுகட்டி சந்தனம், ரக்தசந்தனம், திருஷ்ணாகரு, ருத்திராக்ஷம், இவைகள் வகைக்கு 1-பலம், விதிதஞ் சூரணித்து அதில் சேர்த்த ஆவாரை விரகுகளினால் மந்தாக்கினியால் தைலபக்குவமாக காய்ச்சி இறக்கிக் கொள்ளவும்.

இந்த தைலத்தை இராத்திரி காலங்களில் தேகத்திற்கு வெய்யவையாக தடவி குளித்தால், அங்கசூலை, அங்கதாகம், நேத்திரரோகம், பீநசம், பாண்டுரோகம், காமாலை, உஷ்ணம், கர்ப்பரோகம், சன்னிபாதங்கள், கைகால் எரிச்சல் கமைச்சல், கடிவாதம், க்ஷயங்கள், திருச்சிரரோகம், கஜகர்ணம் சிரோரோகம், பிரமை, பித்தம், திருஷ்டிரோகம், ஜீரணசுரம், அஸ்திசுரம் மேஹரசுரம், இவைகள் நிவர்த்தியாகும்.

தாஹரோகம் தேகம் அனல் எரிச்சல் இந்த ரோகத்திற்கு பத்தியங்கள்:—பழயசிகப்பு, செல்தானியம், பச்சைப்பயறு, சிறியகடலை, கடலை, யவதானியம், மேட்டுப்பூமியில் இருக்கும் ஜந்து மாமிசரசம், பொரிமாவு, கற்கண்டு, பால், வெண்ணெய், கலியாணபூசினிக்காய், வெள்ளரிக்காய், வாழைப்பழம், தித்திப்பு மாதுளம்பழம், புடலங்காய் பற்பாடகம், திராக்ஷைப்பழம், செல்லிவற்றல், பெரியபீச்சம்பழம், கோவைப்பழம், மொச்சை, இஞ்சி, பேரீச்சம்பழம், கொத்தமல்லி, இளநுங்கு, சாரைப்பருப்பு, கிச்சிலிக்கிழங்கு, இலுப்பைப்பூ, வெட்டிவேர், கடுக்காய், கசப்புபதார்த்தங்கள், சீதபதார்த்தங்களின் லேபனம், குளிர்ந்தஜலம் தேகத்தின்மீது தெளித்தல், அப்பியங்கனம் தாமரைபுஷ்பங்களின்மீது படுக்கை, குளிர்ந்த வனத்தில் சஞ்சரித்தல், சித்திரகதைகள், சங்கீதம், வாத்தியங்கள் மூதலியவைகள் சிரவணசுகமாக கேழ்க்கல், கல்லவார்த்தைகளை கேழ்க்குதல், வெட்டிவேர் விசிரியின் காற்றைவாங்குதல், சந்தனத்தை தேகத்திற்கு தடவிக்கொள்ளல், நிலா, குளிர்ந்தகாற்று, மாதருடன் ஆலிங்கனம், ஆற்றுவோரத்தில் சஞ்சரித்தல், பச்சைகற்பூரம், சந்திரகிரணங்கள், சீரோடுதல், இரத்தினபரணங்கள் தரித்தல், தித்திப்புரசம், பித்தத்தை நசிக்கும் கிரியங்கள் இவைகள் தேக அனல் ரோகத்தில் பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—பால்குடித்தல், மீன்களைச்சாப்பிடல், விருத்த அன்னபானங்கள் செய்தல், கோபம், மலமூத்திரங்களை தடுத்தல், அலுப்பு, புணர்ச்சி, வயிறுப்பலான க்ஷாரங்கள், பதார்த்தங்கள், வெய்யல், மோர், தாம்பூலம், தேன், பெருங்காயம், காரம், கசப்பு, வெப்பம் இவைகள் கூடாது.

மூர்ச்சைரோக சிகிச்சை

சிகிச்சா கிரமம்:—சரீரத்தில் சலத்தைதெளித்தல், தீராடுதல், இரத்தினபரணதாரணம், குளிர்ந்தலேபனம், விசிறிகளின் காற்று, சுகந்தத்துடன்கூடிய குளிர்ந்தபானங்கள், இந்த உபசாரங்களோ சகலமான மூர்ச்சைகளிலும் செய்தல்வேண்டும்.

துராலபாதி கியாழம்:—பேயாவரை கியாழத்தில் நெய்கலந்து குடித்தால், மூர்ச்சை ரோகங்கள் நிவர்த்தியாகும்.

பஞ்சமூலாதி கியாழம்:—பஞ்சமூலகியாழத்தில் தேன் சர்க்கரை கலந்து குடித்தாலும், அல்லது சுரத்தைப்போக்கும் கியாழங்களோ தோஷங்களறிந்து குடித்தாலும் மூர்ச்சைகள் நிவர்த்தியாகும்.

க்ஷத்திராதி கியாழம்:—முள்ளங்கத்திரி வேர், சிந்தில்கொடி, மோடி, சுக்கு, வாய்விளங்கம் இவைகளோச் சமனடையாய்க் கியாழம்வைத்துக் குடித்தால் மூர்ச்சைகள் நிவர்த்தியாகும்.

திராக்ஷாதி கியாழம்:—திராக்ஷை, சர்க்கரை, மாதுளம்பழம், சிகப்புதாமரை, கருப்புதாமரை இவைகளோச் சமனடையாய்க் கியாழம் வைத்து குடித்தாலும் அல்லது பித்தசர கியாழத்தையாகிலும் குடித்தாலும் மூர்ச்சைகள் நிவர்த்தியாகும்.

தாம்பிராதி சூரணம்:—ரத்தசந்தனம், வெட்டிவேர், சிறுநாகப்பூ இவைகளோ சமனடையாய்ச் சூரணித்து ஜலத்துடன் குடித்தால் மூர்ச்சை நிவர்த்தியாகும்.

மூர்ச்சை ரோகத்திற்கு பத்தியங்கள்:—புகை குடித்தல், அஞ்சனமிடல், நசியம், ரத்தத்தை வாங்குதல், சூடுபோடுதல், வாந்தி, லங்கணம் இவைகளோ செய்வதுமுண்டு.

அபத்தியங்கள்:—தாம்பூலங்கள், லேகைகள், பற்கடித்தல், வெய்யில், விருத்தமான அன்னபானம், புணர்ச்சி, வியர்வை வாங்குதல், காரமான பதார்த்தங்கள், மலமூத்திரங்களோ தடுத்தல், மோர் இவைகள் மூர்ச்சைரோகத்திற்கு அபத்தியங்கள்.

மதாத்தியரோக சிகிச்சை

விஷம் அருந்துவதினால் உண்டாகும் பத்துவித குணங்கள் சாராயம், கள் இவைகளோ குடிப்பதினாலும் தடையில்லாமல் உண்டாகும். ஆகையால் அளவுக்கு அதிகமாக குடிப்பதினால் தனது நினைவு மறந்து மரம்போல் சாய்ந்துவிடுகிறான். மூர்ச்சைரோகத்தைப்போல் தேக அசைவற்று இருக்கிறான். இந்த ரோகத்திற்கு மதாத்தியரோக மென்ற பெயர்.

விக்கல், காய்ச்சல், வாந்தி, நடுக்கல், பக்கசோய், விலாஎலும்பு சோய், இருமல், பிரமை முதலிய உபத்திரவங்களான சோய்கள் மூழு

குடியர்களுக்கு உண்டானால் அதிசிக்கிரத்தில் அவனை எமனுக்காரனாக்கிவிடும் என்று அறியவும்.

வாதமதாத்தியத்திற்கு சவ்வரிச்சலாதி சிகிச்சை:—கள், இஞ்சுப்பு, நிரிகடுகு இவைகளோ சமனடையாக ஒன்றாய் கலந்து அதில் கொஞ்சஞ் சலத்தை கலந்து கள் அல்லது சாராயத்தைக் குடித்து ஜீரணம் ஆனபிறகு குடித்தால் வாதமதாத்தியம் நிவர்த்தியாகும்.

சுக்குதிருங்கியாதி சிகிச்சை:—காஞ்சிரம், இந்துப்பு, கடுக்காய்பூ நிரிகடுகு, இஞ்சி, சித்திரமூலம் இவைகளோ சமனடையாய் சூரணித்து அதற்கு சமமாக கள் கலந்து குடித்தால் பயங்கரமான வாதமதாத்தியம் நிவர்த்தியாகும்.

பித்தமதாத்திய சிகிச்சை:—ஆலம்விழுதுகளோ குளிர்ந்த ஜலத்தில் அரைத்து சர்க்கரை கலந்து குடித்தாலும் அல்லது கள்ளுடன் சலத்தைக் கலந்து சாப்பிட்டாலும் பித்தமதாத்தியம் நிவர்த்தியாகும்.

க்ஷத்திராமலகாதி பானம்:—கீழாநெல்லி, கர்ஜூரம், பச்சை கற்பூரம், கற்கண்டு இவைகளோ சமனடையாக ஒன்றாய் கள்ளுடன் கலந்து குடித்தாலும் பித்தமதாத்தியம் நிவர்த்தியாகும்.

கபமதாத்தியத்திற்கு அஷ்டாங்க லவணம்:—சவ்வர்ச்சலவணம், சீரகம், நெல்லிவற்றல், கொண்டைப்புளி, இலவங்கப்பட்டை, ஏலக்காய், மிளகு இவைகளோ சமனடையாய் சூரணித்து இரண்டு பாகம் அதிகமாக அத்துடன் சர்க்கரைகலந்து சாப்பிட்டால் அக்கினி தீபனம் உண்டாகும். கபமதாத்தியரோகம் நிவர்த்தியாகும்.

ஜாதிக்கா மதத்திற்கு சிகிச்சை:—ஜாதிக்காய் மதத்திற்கு வெண்ணெய், சர்க்கரை இவைகளுடன் ஜாபத்திரியை சாப்பிட்டால் அல்லது வெண்ணெய், சந்தனத்தூள், சர்க்கரை இவைகளோ சாப்பிட்டாலும், கள்ளினால் உண்டாகும் மயக்கத்திற்கு வாழைப்பழரசம் சாப்பிட்டாலும், விஷமுஷ்டிவினை மயக்கத்திற்கு பசும்பால் நெய் இவைகள் கலந்து சாப்பிட்டாலும் நிவர்த்தியாகும்.

கடுக்காய் அல்லது குளிர்ந்தஜல ஸ்நானமாவது சர்க்கரை, தயிராவது இவைகள் குடித்தால் ஜாதிக்காயினல் உண்டாகும் விஷம் நீங்கும்.

பசும்தயிர், எண்ணெய் இவைகளோ ஒன்றாய் சேர்த்து கடைந்து அதில் கர்ப்பூரத்தை கலக்கி நசியஞ் செய்தால் மதாத்தியரோகம் நிவர்த்தியாகும்.

கள் குடித்தவன் கற்கண்டு நெய் இவைகளோ ஒன்றாய் கலக்கி சாப்பிட்டால் அவ்வெறியானது அடங்கும்.

மதாத்திய பத்தியங்கள்:—விரேசனம், தூக்கம், லங்கணம், சஞ்சாரம், பழய அரிசி, யவதானியம், பச்சைப்பயறு, உளுந்து, கோதுமை, பக்ஷமாமிசங்கள், கவுதாரி, காடை முதலியவைகளின் மாமிசம், பொங்கல், தித்திப்புகள், பால், கற்கண்டு, நெறுநீர், புடலங்காய், கொடிமாதளம்பழம், பலாப்பழம், கஜ்ஜூரங்கள், மாதளம்பழம், நெல்லிக்காய், தேங்காய், திராக்ஷை, பழயநெய், கர்ப்பூரம், ஆற்றுவோரம், குளிர்ந்தகாற்று, ஜலத்தில் மந்திரம், சந்திரனதிரணங்கள், முத்துஹாரங்கள், ஸினேஹிதனைப் பார்த்தல், பட்டுவஸ்திரங்கள், மாதர்புணர்ச்சி, சங்கீதம், வாத்தியங்கள், குளிர்ந்தஜலம், சந்தனம் இவைகள் மதாத்தியரோக பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—மியர்வை வாங்குதல், கலிக்கமிடல், புகை குடித்தல், நசியமிடல், பல்துலக்கல் இவை ஆகாது.

உன்மாதரோக சிகிச்சை

நிசாதி கிருதம்:—மாமஞ்சள், மஞ்சள், நிரிபலி, நன்னரிவேர், வசம்பு, வெள்ளைக்கடுகு, பெருங்காயம், காட்டுவாழைப்பட்டை, வாதுளுவை அரிசி, சுவேதகாஞ்சனம், மஞ்ஷிஷ்டி, நிரிகடுகு, தேவதாரு இவைகளை சமனடையாய் கோமூத்திரத்தில் போட்டு அதற்கு சமம் நெய்கலந்து கிருதபக்குவமாய் காய்ச்சி குடித்தால் உன்மாதரோகம் நிவர்த்தியாகும்.

பூதோன்மாதத்திற்கு பிராம்ஹீ கிருதம்:—முருக்கன்பட்டை ரசம் 64-பலம், நெய் 32-பலம், சுத்திசெய்த சிவதைவேர், வெள்ளை காகதந்தி, நிரிகடுகு, கொண்ணைப்பட்டை, வாய்விளங்கம் இவை வகைக்கு ¼-பலம் விதஞ் சூரணித்து நெய்யில்கலந்து 1-பலம் முதல் 2-பலம் வரையிலும் நோயின் வன்மைக்குத் தக்கபடி பிரதிதினம் பானஞ்செய்தால் பூதோன்மாதம் அபஸ்மாரம் இவைகள் நிவர்த்தியாகும்.

ஹிங்குவாதி கிருதம்:—பெருங்காயம், சவ்வர்ச்சலவணம், நிரிகடுகு இவைகளை வகைக்கு 5-பலம் விதம் இடித்துச் சூரணித்து நெய் 64-பலம் கூட்டி நெய்யின் எடைக்கு நான்குபாகம் அதிகமாய் கோமூத்திரத்தை கலந்து கிருதபக்குவமாய்க் காய்ச்சி சாப்பிட்டால் பூதோன்மாதம், அபஸ்மாரம், பிரம்மராக்ஷஸ இவைகள் நிவர்த்தியாகும்.

சாரஸ்வத கிருதம்:—நிரிபலி, வெள்ளைகண்டங்கத்திரி, பேயாவரை, மஞ்ஷிஷ்டி, நன்னரிவேர், வசம்பு, முருக்கன்வேர், வட்டத்திருப்பி, முள்ளங்கத்திரி, சிற்றாமல்லி, நிலக்கடம்பை, வெள்ளைச் சாரணை, சகதேவி, சூரியகாந்தி, நெல்லிவற்றல் இவைகளை வகைக்கு 1-பலம் விதம் நான்குபடி நீர்விட்டு நாலில் ஒரு பங்கு மீறும்படியாய் கியாழஞ் சண்டக்காய்ச்சி வடிகட்டி அதில் கிருதகரு

காட்டுமிளகு, வசம்பு, கோஷ்டம், நிப்பிலி, இந்துப்பு இவைகளை சூரணித்துப்போட்டு நோயில்லாத கன்றுடன் இருக்கும் பசும் பாலை ஒருபடியளவிற்குச் சேர்த்து அதில் 64-பலம் நெய் கலந்து பூச நக்ஷத்திரத்தில் காய்ச்சி மண்பாத்திரத்தில் வைத்து உபயோகித்து வந்தால் மேதை, ஆயுஸ, புஷ்டி இவைகள் விருத்தியாகும். ராக்ஷஸ பீடை, விஷம், உன்மாதம் இவைகள் நிவர்த்தியாகும்.

லசுண கிருதம்:—தோல்நீக்கிய வெள்ளைப்பூண்டு 50-பலம், தசமூலம் 25-பலம், இவைகளை 64-பலம் ஜலத்தில் கலந்து கழலில் ஒரு பங்கு மீறும்படியாய்ச் சண்டக் கியாழம்காய்ச்சி அதில் 16-பலம் நெய், வெள்ளைப்பூண்டுரசம் 16-பலம், இலந்தை, நெல்லிக்காய், கொடிமாதளம்பழம், இஞ்சி இவைகளின் ரசங்கள், மாதுளம், கள், தயிர்மீதுதேட்டை, காஞ்சிகம் இவை யாவையும் 8-பலம் விதம் சேர்த்து கிருதபக்குவமாய் காய்ச்சி அதில் நிரிபலி, தேவதாரு, லவணம், மிளகு, ஓமம், குரோசானிஓமம், செவ்வியம், பெருங்காயம், கொண்ணைப்புளி இவைகளில் கற்கத்தை தனித்தனி ½-பலம் விதம்சேர்த்து காய்ச்சி சாப்பிட்டால், சூலை, குன்மம், மூலவியாதி, காய்ச்சல், விரணம், பாண்டு, பிளீஹை, யோனிதோஷம், கிருமி, வாதஸ்லேஷ்மரோகம், உன்மாதம் இவை யாவும் நிவர்த்தியாகும்.

பூதோன்மாதத்திற்கு விஜயகிருதம்:—பொட்டு எடுத்த ஓமம், பேய்ப்புடல், பற்பாடகம், நிப்பிலி, இஞ்சி இவைகள்வகைக்கு பலம்-5 சூரணித்து அதில் முருக்கன்ரசம் 8 பலம், நெய் 16-பலம், நிரிபலி, நிரிகடுகு, வெட்டிவேர், வெள்ளைப்பூண்டு, பஞ்சகோலங்கள், இவைகளின் சூரணம் வகைக்கு ½-பலம், கலந்து கிருதபக்குவமாக காய்ச்சி அக்கினிபலத்திற்கு தக்கபடி சாப்பிட்டால் பூதோன்மாதம், அபஸ்மாரம், வாதபித்த கபதொந்த சன்னிபாத விஷமசுரங்கள் இவைகள் யாவும் நிவர்த்தியாகும்.

உன்மத்தாதி நசியம்:—வேங்கைமரவிரை, கார்போக அரிசி, வெள்ளைகாக்காட்டான்வேர், சொச்சி சர்க்கு, இவைகளில் எதை யாகிலும் அரைத்து காதில் வைத்துக்கொண்டால் அபஸ்மாரம் நிவர்த்தியாகும்.

உன்மாதரோகிக்கு பாதம்முதல் சிரசுவரையில் வேப்பஎண்ணெயை நடவவேண்டியது. ஜடான்னம், பாயசம் இதுகளை புசிக்கும்படி செய்யவேண்டியது. உலர்ந்த காய்கரிகளை கொடுக்கக்கூடாது உன்மாதரோகம் நிவர்த்தியாகுமளவு மிகவும் சாக்கிறதையாக பாதுகாக்கவேண்டியது. இரவில் மதுரசாதுபம் போட வேண்டியது.

பிரஹ்மியாதி நசியம்:—பிரம்மதண்டி, சக்கு, வசம்பு, கோஷ்டம், கரும்அல்லி, இந்துப்பு, நிப்பிலி, இவைகளை சமனடையாகச் சூரணித்து முருக்கன் ரசத்தினால் ஏழுநாள் அரைத்து வெண்ணெ

பில் கலந்து இருநபக்குவமாகக் காய்ச்சி நசியஞ்செய்தால் உன்மாதம், அபஸ்மார்ரம் இவைகள் நிவர்த்தியாகும்.

உன்மாதரோகத்திற்கு பத்தியங்கள்:—கோதுமை, பச்சைப்பயறு, பழையசிகப்பு நெல், நூறுமுறை கழுவிய நெய், பழைய நெய் ஆமைமாமிசரசம், பேய்ப்புடல், வல்லாரை, பிரமிவவழுக்கை, சிறுகீரை, நிரசைஷ், விளாம்பழம், பலாப்பழம், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய் இவைகள் உன்மாதரோகிக்கு பத்தியங்கள்.

அபயத்தியங்கள்:—கள், விருத்த அன்னம், உஷ்ணபதார்த்த பக்ஷிணம், நித்திரை, பகி, தாகம், தும்பல், இவைகள் வேகத்தை அடக்கல், கசப்பான பதார்த்தங்கள், காரமான பதார்த்தங்கள் இவைகளை உன்மாதரோகி நிவர்த்திக்கவேண்டியது.

குஷ்டரோக சிகிச்சை

மஞ்சிஷ்டாதி கியாழம்:—மஞ்சிஷ்டி, வேப்பன்னர்க்கு, ரக்த சந்தனம், கோரைக்கிழங்கு, சிந்தில்கொடி, தும்மட்டி, ஆடாதோடை, கொத்துபுங்கன், சிவதை, தண்டிகம், மஞ்சள், மரமஞ்சள், நிலவேம்பு, வட்டத்திருப்பி, அதிவிடையம், கருங்காலி நிரபலி, பேய்ப்புடல், கடுகுரோகணி, வாய்விளங்கம், பற்பாடகம், வசம்பு, கார்போகஅரிசி, வெட்பாலை இவைகளை சமனடையாக கியாழம்வைத்து குடித்தால் நமைச்சல், மண்டல குஷ்டம், புண்டரீகம், கிடிபகுஷ்டம், பாமாகுஷ்டம், விசர்சினைகுஷ்டம், விரணம், சித்மகுஷ்டம், சிவித்ரகுஷ்டம், கிலாசம், கத்தாருவு, அலசகுஷ்டம், சப்ததாதுகதகுஷ்டம், இதரமான கிருமிகளினல் வியாப்தமான மூக்கு, கை, கால்கள், இவைகளில் உண்டாகும் ரோகங்கள் யாவும நிவர்த்தியாகும். இந்த கியாழத்தை குடித்தால் சகல ரோகங்கள் நாசமாகி மன்மதனைப்போலிருப்பான்.

இலகுமஞ்சிஷ்டாதி கியாழம்:—மஞ்சிஷ்டி, வெட்பாலை, சிந்தில் கொடி, கோரைக்கிழங்கு, வசம்பு, சுக்கு, மஞ்சள், மரமஞ்சள், கண்டங்கத்திரி, வேம்பு, பேய்ப்புடல், கடுகுரோகணி, கண்டுபாரங்கி, வாய்விளங்கம், பெருங்கடம்பை, தேவதாரு, வெட்பாலை பட்டை, காசனிக்கண்ணி, திப்பிலி, கொத்துபுங்கன், வட்டத்திருப்பி, தண்ணீர்விட்டான்கிழங்கு, கருங்காலி, நிரபலி, நிலவேம்பு, மலைவேப்பம்பட்டை, வேங்கை, கொண்ணை, சாரணை, கார்போக அரிசி, ரக்தசந்தனம், புங்கன், ஆடாதோடை, பற்பாடகம், வெள்ளைச்சாரணை, அதிவிடையம், பூனைகாஞ்சொரி, தும்மட்டி, வெட்டிவேர், இவைகளை சமனடையாகக் கியாழம்வைத்து குடித்தால், சருமதோஷம், பதினெட்டுவித குஷ்டவியாதிகள்யாவும் நிவர்த்தியாகும்.

சுண்டியாதி கியாழம்:—சுக்கு, வேம்பு, நிலவேம்பு, திப்பிலி, பட்டத்திருப்பி, மஞ்சள், மரமஞ்சள், கொத்துபுங்கன், நிரபலி, சிந்தில்கொடி, கோரைக்கிழங்கு, கடுகுரோகணி, ஆடாதோடை, வசம்பு, கண்டங்கத்திரி, மஞ்சிஷ்டி, அதிவிடையம், பூனைகாஞ்சொரி, மலைவேப்பிலை, சித்திரமூலம், மோடி, கொண்ணை, வெட்பாலை, கண்டுபாரங்கி, யவதானியம், பெருங்கடம்பை, பேய்ப்புடல், நிலவங்கப்பத்திரி, ரக்தசந்தனம், கடுக்காய், பற்பாடகம், கள்ளிவேர், வாய்விளங்கம், கருங்காலி, இவைகளை சமனடையாக கோமூத்திரத்தில்போட்டு கியாழம் காய்ச்சி காலையில் குடித்தால் 18 வித குஷ்டரோகங்கள் நிவர்த்தியாகும்.

கபபித்தகுஷ்டத்திற்கு நிரபலாதிகியாழம்:—நிரபலி, வேப்பன், பேய்ப்புடல், மஞ்சிஷ்டி, கடுகுரோகணி, வசம்பு, மஞ்சள், இவை சமனடையாக கியாழம்வைத்து சாப்பிட்டால் கபபித்தகுஷ்டம் நிவர்த்தியாகும்.

காதிராரிஷ்ட கியாழம்:—கருங்காலி, கடுக்காய், தானிக்காய், வில்வவற்றல், வேப்பம் பேய்ப்புடல், சிந்தில்கொடி, ஆடாதோடை, இவை சமனடையாக கியாழம்போட்டு குடித்தால் குஷ்டங்கள், பாடகம், முதலியவை நிவர்த்தியாகும்.

துடிச்சியாதி கியாழம்:—சிந்தில்கொடி, நிரபலி, மரமஞ்சள், இவைகளை சமனடையாக கியாழம்போட்டு அதில் குங்கிலிய சூரணத்தை கலந்து ஒருமாதம் சாப்பிட்டால் சருமதோஷம், விரணம், சிலை குஷ்டம் இவைகள் நீங்கும்.

கபாலகுஷ்டத்திற்கு சோமேசுர ரசம்:—சுத்திசெய்தரசம், அப்ரகபற்பம், சுத்திசெய்தகெந்தி, இவைகளை சமனடையாக கல்வத்தில் போட்டு சொச்சி இலைரசத்தினல் ஒருநாள் அரைத்து மூசையில்வைத்து புடம்வாயைமூடி, பூதரபுடமிட்டு ஆறியபிறகு எடுத்து கார்போக அரிசி தைலத்திலாவது அல்லது கியாழத்திலாவது ஒருநாள் வெய்யிலில்வைத்து பாவனைசெய்து 2 குன்றிஎடை ஔஷதத்தை கார்போக அரிசி, மணத்தக்காளிகீரை, நிரபலி இவைகளை சமனடையாக சூரணித்து உபயோகம், சூரணித்தில் தேன் நெய் கலந்து இந்த அனுபானத்தில் புசித்தால் கபாலகுஷ்டம் விஷகுஷ்டம் இவைகள் நிவர்த்தியாகும்.

கந்தக ரசாயனம்:—நெல்லிக்காய் நெல்லைத்தை ஆட்டுப்பாலில் நல்ல பாசனயந்திரத்தில் சுத்திசெய்து சூரணித்து உலர்த்தி கருப்பு சிந்தில்கொடி இவைகளின் ரசத்திலும் மேல்கூறிய பிரகாரம் சுத்திசெய்து சூரணித்து உலர்த்தி பிறகு ஒருநாள் நெய்யில் ஊறவைத்து உலர்த்தி பிறகு, நெரிஞ்சில், நிலப்பனங்கிழங்கு, இவைகளின் ரசம், அதிமதுரம், கோஷ்டம், இவைகளின் கியாழம், கரிசாலை இலைரசம், கடம்புசக்கைரசம், தாழம்பூரசம் இவைகளில்

தனித்தனியே சுத்திசெய்தபிறகு, திப்பிலி, மோடி, இலவங்கம், சிறு நாகப்பூ, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், நிரிகடுகு, வாய் விளங்கம் இலையாலையும் சமனடையாய்ச்சேர்த்து சூரணித்து கந்தகசூரணத்திற்கு சமனடை இந்த சூரணத்தைகலந்து சர்க்கரை, அல்லது வெல்லம் கெந்தகத்திற்கு சமனடையாய்ச்சேர்த்து, பிறகு பசும்நெய் அல்லது தேனுவது கலந்து, ரசாயனபாகமாகச் செய்து ½-½, தோலாவீதம் காலைமாலை ஒருமண்டலம் சாப்பிட்டால் வாதத்தி னால் உண்டான இரந்தி, சூலை, 18-வித குஷ்டங்கள் சருமரோகங்கள் 84-வாதங்கள், 20-பிரமேகங்கள், 16-மூத்திரகிருச்சிரங்கள், ராஜவிர ணம், கண்டமாலை, மூலவியாதி, பகந்தரம், கபாலவிரணம், காது களில் விரணம், லிங்கவிரணம், யோனி விரணம், திமிர் குஷ்டம், ரத்தஸ்ராவம், சீழ்ஸ்ராவம், ஜலஸ்ராவம் முதலியலைகள் நிவர்த்தி யாகும்.

வேறு முறை:—பசும்பாலினால் சுத்திசெய்யப்பட்ட கெந்த கத்தை இலவங்கம், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, ஏலக் காய், சீந்தில்கொடி, கடுக்காய்த்தோல், கழற்சிபருப்பு, நெல்லி பருப்பு, சுக்கு, கரிசாலை, இஞ்சி இலைகளின் ரசத்தினால் ஒவ்வொ றிலும் 8-முறை பாவனைகள்செய்து பிறகு கெந்திக்கு சம சர்க்கரை கலந்து வைத்துக்கொள்க.

இதில் [½-1 வராகனெடை வீதம் இருவேளையாக அரு தாதுஷயம், சகல மேகம், சூலை, 18-குஷ்டம் இலைகள் நிவ யாகும்.

சுத்திசெய்த கெந்தகம் 2-பலம், சுத்திசெய்த ரசம் 1-பலம் இலைகள் இரண்டையும் அரைத்து குப்பியிலிட்டு வாலுகாயந்திரத் தில் வைத்து எரித்து செந்தூரித்து சுன்றினடை தேன், நெய் இலை களுடன் சாப்பிட்டால் கொடூரமான குஷ்டவியாதிகள் நீங்கும்.

வராதி சூரணம்:—திரிபலை, வாய்விளங்கம், திப்பிலி இலைகளை சமனடையாய்ச் சூரணித்து தேனில்கலந்து சாப்பிட்டால் குஷ்டங் கள், கிருமிகள், மேகங்கள், ராஜபிரணம் பகந்தரம் இலைகள் நிவர்த்தியாகும்.

பஞ்சநிம்பாதி சூரணம்:—வேப்பன் பழம், பூ, பட்டை, இலை, வேர் இவ்வைந்துஞ் சமனடையாய்ச்சேர்த்து மைபோல்சூரணித்து இந்த சூரணம், கருங்காலி, வேங்கை, இலைகளை எட்டொன்றாக கியாழம் வைத்து அந்த கியாழத்தில் பாவனைசெய்து அதில் சித்திர மூலம், வாய்விளங்கம், கொண்டை, சர்க்கரை, சோன்கொட்டை கடுக்காய்தோல், சுக்கு, நெல்லிவற்றல், நெரிஞ்சல், தகரை, கண்ட கத்திரி, திப்பிலி, மிளகு, மஞ்சள் இலைகளின் சூரணம் காந்த செ தூரம் இலைகளை சமனடையாக எடுத்து கரிசாலை ரசத்தினால் பாவனைசெய்து உலர்த்தி நிம்பசூரணத்திற்கு சமனடையாகச் சேர்

த்து நிரிகடிப்பிரமாணம் நெய்புடலைவது அல்லது பசும்பாலிலாவது அல்லது கருங்காலி, வேங்கை இலைகளின் கியாழத்திலாவது காலை யில் மாத்திரம் மூன்று மாதங்கள் சாப்பிட்டால் சருமதோஷம், கரு மேகம், மினுமினுப்பு 18-வித குஷ்டம், க்ஷயம் இலைகள் யாவும் குணமாகும்.

இது அசுவனி தேவரால் சொல்லிய முறை. மிகவும் மேலானது.

விடங்காதி சூரணம்:—வாய்விளங்கம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், திப்பிலி இலைகள் சமனடையாகச் சூரணித்து தேனுடன் கலந்து சாப்பிட்டால், குஷ்டம், கிருமி, மேகம், ராஜ விரணம், பகந்தரம் இலைகள் நிவர்த்தியாகும்.

குஞ்சாபலாதி சூரணம்:—குன்றிவிரை, சித்திரமூலம் இலை களை சூரணித்து தேகத்திற்கு தடவினால் வெள்ளை குட்டம் நீங்கும்.

சிலாசத்து நாயுருவிவேர் இலைகளை நீர்விட்டரைத்து தடவினால் வெள்ளை குஷ்டரோகம் நீங்கும்.

புடபத்திராதி சூரணம்:—புடபத்திரிவேர் 32-பலம், வட்டத் திருப்பிவேர், நன்னரிவேர், சுரமூலிவேர் இலைகள் வகைக்கு பலம்-6, கருங்காலிமரப்பட்டை 3-பலம், சிரகம் 6-பலம், கருஞ் சிரகம் 3-பலம், பறங்கிச்சக்கை 5-பலம், சித்திரமூலம் 3½-பலம், நிலஆவாரைவேர் 3½-பலம், கண்டுபாரங்கி, சுக்கு, திப்பிலி, மிளகு, குரோசாணியோமம், ஓமம், இலவங்கம் இலைகள் வகைக்கு 2-தோலா, ரேவல்சின்னி 3-பலம், மரமஞ்சள் 3-தோலா, மாசிக் காய் 6-பலம். இவை யாவையுஞ் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து சமன் பனவெலலத்தை கலந்து கழற்சியளவு காலைமாலை சாப்பிட்டு வந்தால் ருவி இரத்தத்தை லேபனஞ்செய்தால் மண்டலகுஷ்டம், அவு தும்பரகுஷ்டம், புண்டரீகம், மண்டலாகாரகுஷ்டம், இந்திரலுப்தம், சுவேதகுஷ்டம், மேஹமண்டலம் இலைகள் நிவர்த்தியாகும்.

பத்தியம், பழயஅரிசி சாதம், மோர், பச்சைப்பயறுகட்டு, பசும்நெய், பெரிய சோளம், பால் சாதம் இலைகளைப் புசிக்க வேண்டியது.

சுவேதகுஷ்டத்திற்கு புடபத்திராதி சூரணம்:—புடபத்திர சமூ லம், மிளகு, சிரகம், மரமஞ்சள் இலைகளை சமனடையாய்ச் சூர ணித்து பசும்நெய்யில் சமமத்து ஒரு தோலா எடை விதம் காலை மாலை சாப்பிட்டால் சுவேதகுஷ்டம், அவதும்பரம், மண்டலம், புண்ட ரீகம் முதலிய சகல குஷ்டரோகங்கள் நிவர்த்தியாகும்.

பத்தியம், பெரியசோளம், அன்னம், பச்சைப்பயறு குழம்பு, பசும் நெய், பசும் மோர், பால் சாதம் இவைகளைப் புசிக்க வேண்டியது.

ஷட்பல கெந்தக சூரணம்:—சுத்திசெய்த கெந்தி 6-பலம், திரிபலை, வாய்விளங்கம், திரிகடுகு, திரிசாதம், கடலை, நன்கு சுத்தி செய்த சேராங்கொட்டை, சீரகம், சித்திரமூலவேர்ப்பட்டை, பறங்கிச்சக்கை இவை யாவையும் வகைக்குப் பலம்-1 வீதம் சேர்த்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து சமன் சர்க்கரை கலந்து தேன், வெண்ணெய், வெந்நீர், வாழைப்பழரசம், சர்க்கரை, நெய் இவைகளில் ஏதேனுமொன்றில் தேகதிடத்திற்கு தக்கபடி ½-முதல் 2-வராகனெடை வீதம் சாப்பிட்டுவந்தால் 18-வித குஷ்டரோகங்கள், 4-வித கிரஹணிரோகம், மந்தாக்கினி, துர்பலம், 5-வித குன்மரோகம் முதலியன நீங்கிவிடும்.

மஹாதிக்த கிருதம்:—வாழைக்கிழங்கு, அதிவிடயம், கொண்ணெ கடுகுரோகணி, வட்டத்திருப்பி, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், திரிபலை, பேய்ப்புடல், வேப்பன், பற்பாடகம், கொத்தமல்லி, பூனைக்காஞ்சொரி, சந்தனம், திப்பிலி, தாமரைக்கிழங்கு, மஞ்சள், மாமஞ்சள், திப்பிலிமூலம், தும்மட்டி, தண்ணீர்விட்டான்கிழங்கு, நன்னரிவேர், பாலை, வெட்பாலைவிரை, ஆடாதோடை, பெருங்கடமபைகிழங்கு, சீந்தில்கொடி, ஜைமதிலவேம்பு, அதிமதுரம், புங்கன் இலைகளை சமனடையாய்ச் சேர்த்து இடித்து கற்கம அல்லது கியாழமிட்டு அதற்கு நாலுபங்கு அதிகமாய் ஜலம், நெல்லிக்காய் ரசம், எட்டுபங்கு அதிகமாய் நெய் இவைகளைச் சேர்த்து இரண்டு பங்கு மீரும்படி நெய்பதமாய் காய்ச்சி காலைவேளையில் சாப்பிட்டால் குஷ்டரோகம், ரத்தபித்தம், மூலவியாதி, விசர்ப்பி, ஆமலபித்தம், வாதரத்தம், பாண்டுரோகம், விஸ்போடகம், பாமா, உன்மாதம், காமாலை, சுரம், கண்டுரோகம், ஹிருதயரோகம், குன்மம், பருவுகள், பகந்தரம், கண்டமாலை முதலிய பல வியாதிகள் நிவர்த்தியாகும்.

பஞ்சதிக்தக கிருதம்:—வேப்பன், பேய்ப்புடல், கண்டங்கத்திரி, சீந்தில்கொடி, ஆடாதோடை, இவைகளை வகைக்கு 10-பலம் விகிதம் இடித்து 256-பலம், சலத்தில்கொட்டி நாலில் ஒருபாகமாகக் கியாழத்தைச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதில் 20-பலம், நெய்கலந்து நெய்ப்பதமாக காய்ச்சி காலைவேளை சாப்பிட்டால் குஷ்டரோகங்கள், 84 வாதரோகங்கள், 24 பித்தரோகங்கள், 20 சிலேஷ்மரோகங்கள், துஷ்டமான விரணங்கள், கிருமிகள், மூலரோகம், ஐந்துவிதகாசங்கள், இவைகள்யாவும் நிவர்த்தியாகும்.

மஹாகதிராதி கிருதம்:—கருங்காலிமரப்பட்டை, 500-பலம், அசோகப்பட்டை, வேங்கைப்பட்டை, இவைகள் வகைக்கு 100-பலம், புங்கன், வேப்பன், புளிவஞ்சி, பற்பாடகம், வெட்பாலை

ஆடாதோடை, வாய்விளங்கம், மஞ்சள், மாமஞ்சள், கொண்ணெ, சீந்தில்கொடி, திரிபலை, சிவதை, வாழைக்கிழங்கு, இவைகள் வகைக்கு பலம்-50, இவைகள்யாவும் இடித்து 2560-பலம், ஜலத்தில் போட்டு எட்டில் ஒருபாகம் மீறும்படியாக கியாழம் சுண்டக்காய்ச்சி, அந்த கியாழத்திற்கு சமனடை நெல்லிக்காய் ரசம், 64-பலம் நெய், கலந்து கிருதபக்குவமாக காய்ச்சி ஒருபல பிரமாணம் பானத்திற்கும் அப்பியங்கஸ் நானத்திற்கும் உபயோகித்துவந்தால் சகல குஷ்டரோகங்கள், நிவர்த்தியாகும்.

திக்தஷட்பல கிருதம்:—வேப்பன், பேய்ப்புடல், மரமஞ்சள், பூனைகாஞ்சொரி, கடுகுரோகணி, நிலவேம்பு, திரிபலை, பற்பாடகம், கொத்துபுங்கன், இவைகளை வகைக்கு ½-பலம், விகிதம் இடித்து 64-பலம், ஜலத்தில்கொட்டி எட்டில் ஒருபாகம் கியாழம் காய்ச்சி வடிகட்டி அதில் சந்தனம், சீமைநிலவேம்பு, திப்பிலி, புங்கன், கோரைக்கிழங்கு, வெட்பாலைவிரை, இவைகளை வகைக்கு ½-பலம், விகிதம் சூரணித்து கலந்து அத்துடன் நெய் 10-பலம் விட்டு நெய் பதமாக காய்ச்சி குடித்துவர குஷ்டரோகம், சுரம், குன்மம், மூலவியாதி, கிரணி, பாண்டு விசர்ப்பிகை, பருவுகள், கண்டு, கண்டமாலை இவைகள் நிவர்த்தியாகும்.

கபாலகுஷ்டத்திற்கு வேல்வாதிலேபனம்:—வாய்விளங்கம், சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், கோரைக்கிழங்கு, சித்திரமூலம், காபி, வசம்பு, வெல்லம் இவைகளை சமனடையாக அரைத்து மூன்றுதடவை லேபனஞ் செய்தால் கபாலகுஷ்டம் நிவர்த்தியாகும்.

மண்டலகுஷ்டத்திற்கு சித்திரகாதிலேபனம்:—சித்திரமூலத்தை அரைத்து லேபனஞ்செய்தாலும் அல்லது நொச்சிவிரையை அரைத்து லேபனஞ்செய்தாலும் மண்டலகுஷ்டம், நீங்கும்.

புண்டரீகத்திற்கு பிருங்கராஜாதிலேபனம் :—காசனிக்கண்ணிவேர், கடுக்காய்வேர், இவைகளை சட்டியில் வைத்து வருத்து காடிநீரில் லேபனஞ்செய்தால் வெள்ளைகுஷ்டம் நீங்கும்.

சித்மகுஷ்டத்திற்கு லாக்ஷாதிலேபனம்:—அரக்கு, தேவதாரு, பிசினில்செய்த தூபதிரவியங்கள், கோஷ்டம், மஞ்சள், வெள்ளைக்கடுகு, சுக்கு மிளகு, திப்பிலி, முள்ளங்கிவிதை, தகரம்விரை, இவைகளை சமனடையாக சூரணித்து லேபனஞ்செய்தால், சித்ம, கடிப, தத்துரு, இவைகள் நிவர்த்தியாகும்.

பாதரசம், வெங்காரம், கெந்தி, இவைகள் சமனடையாக கல்வத்திலிட்டு மூள்ளங்கி, இஞ்சி இவைகள் ரசத்திலில் ஒருநாள் அரைத்து லேபனஞ்செய்தால் மஹாற்புதமான சித்மகுஷ்டம் நிவர்த்தியாகும்.

தாளகம் 1-பாகம், கெந்தி 2-பாகம், கார்போகஅரிசி 3-பாகம், இவைகளை கோமூத்திரத்தில் அரைத்து ஒருமாதம் லேபனஞ்செய்தால் சித்மகுஷ்டம் நிவர்த்தியாகும்.

கஜசர்ம குஷ்டத்திற்கு லேபனம்:— குன்றி, சித்திரமூலம், சங்குபஸ்பம், மஞ்சள், அறுகம்புல், கடுக்காய், பொடுதலை, கள்ளி, இந்துப்பு, கற்றுழை, கோரைக்கிழங்கு, எருக்கன், கெந்தி, பாதரசம், கார்போகஅரிசி, நகரவிரை, வாய்விளங்கம், மிளகு இவைகள் சமஎடையாய் தேன்விட்டு அரைத்து லேபனஞ்செய்தால் கஜசர்மம், தத்ரு, கண்டு முதலியன குணமாகும்.

கிடிபகுஷ்டத்திற்கு பிப்பிலியாதி லேபனம்:—நிப்பிலி, புங்கன், துளசி, கோஷ்டம், காட்டுச்சீரகம், சித்திரமூலம் இவைகளை சமஎடை அரைத்து லேபனஞ் செய்தால் கிடிபகுஷ்டம் நீங்கும்.

தத்ரு மண்டல குஷ்டத்திற்கு மூலிகைபீஜாதி லேபனம்:—முள்ளங்கிவிதை, வெள்ளாகடுகு, அரக்கு, மஞ்சள், மரமஞ்சள், நகரவிதை, சாலதேவதாரு, அக்கு, நிப்பிலி, மிளகு, வாய்விளங்கம் இவைகளை சமஎடையாய் ஆட்டுமூத்திரத்திலுல் அரைத்து லேபனஞ் செய்தால் தத்ரு, சித்ம, கிடிப குஷ்டங்கள், பாமைகுஷ்டம், விஷமான கபாலகுஷ்டம் முதலியன குணமாகும்.

சர்மதள குஷ்டத்திற்கு ராஜிகாதி லேபனம்:—கடுகு, வெல்லம் இந்துப்பு இவைகளை சமஎடையாய்ச் சூரணித்து லேபனமசெய்தால் சர்மதளகுஷ்டம் நிவர்த்தியாகும்.

தத்ருகுஷ்டத்திற்கு தரதாதி லேபனம்:—லிங்கம், கெந்தி, ரசம், நிப்பிலி, நாபி, வாய்விளங்கம், மஞ்சள், சித்திரமூலம், மிளகு, கடுக்காய், அக்கு, கோரைக்கிழங்கு, கார்போகஅரிசி, கடுகுரோகிணி, கொண்டை, நகரவிதை இவை யாவையுஞ் சமஎடையாய் எலுமிச்சம்பழரசத்திலுல் அரைத்து லேபனஞ் செய்தால் தத்ரு, கண்டு, விசர்ப்பம், பகந்தரம், மண்டலம் முதலியன குணமாகும்.

பாமாகுஷ்டத்திற்கு லேபனம்:—கார்போக அரிசி தயிலத்தை யாவது, சரக்கொன்றை தயிலத்தையாவது, புத்திராஜீவி தயிலத்தை யாவது லேபனஞ் செய்தால் பாமாகுஷ்டம் நிவர்த்தியாகும்.

சுச்சுருகுஷ்டத்திற்கு சிந்தூராதி லேபனம்:—இரசசெந்தூரம், ரசகம், கருஞ்சீரகம், மஞ்சள், மரமஞ்சள், மனோசிலை, மிளகு, கெந்தி, ரசம் இவைகள் சமஎடையாய் செய்யில் அரைத்து லேபனம் செய்தால் சுச்சுருகுஷ்டம் நிவர்த்தியாகும்.

சதாருகுஷ்டத்திற்கு சிம்ஹாஸ்யாதி லேபனம்:— நாடாதோடைக்கொழுந்து, மஞ்சள், இவைகளை கோமூத்திரத்தில் அரைத்து

லேபனஞ் செய்தால் சதாரு குஷ்டம் 3-தினத்திற்குள் நிவர்த்தியாகும்.

விசர்ச்சிகா குஷ்டத்திற்கு அவல்குஜாதி லேபனம்:—கார்போக அரிசி, பேயாவரை, நகரவிதை, மஞ்சள், இந்துப்பு இவைகள் சமஎடையாய்க் காடியில் அரைத்து லேபனம் செய்தால் கண்டு, கச்சு இவைகள் சிக்கிரம் குணமாகும். இது சித்தயோகம்.

சிவித்திரகுஷ்டத்திற்கு திரிபலாதி லேபனம்:—நிரிபலை, அவுரி இலை, லோஹசூரணம், ரசாஞ்சனம், வெள்ளாகுன்றி, ஆனைகொம்பு பற்பம், லவங்கத்தகம், காசனுங்கண்ணி இவைகளை ஆட்டுப்பாலுடன் அரைத்து சரீரத்திற்கு லேபனம் செய்தால் சிவித்தகுஷ்டம் நிவர்த்தியாகும்.

தாளகாதி லேபனம்:—தாளகம் 28-குன்றிஎடை, கார்போக அரிசி 112-குன்றி, இவைகளை கோமூத்திரத்தில் அரைத்து லேபனம் செய்தால் சிவித்திரகுஷ்டம் குணமாகும்.

அயோரஜாதி லேபனம்:—இரும்புபற்பம், கரும்எள்ளு, ரசாஞ்சனம், கார்போகஅரிசி, செல்லிவற்றல் இவைகளை காசனுங்கண்ணி சாற்றினுல் அரைத்து காளுக்கு ஒருமுறை லேபனம்செய்தால் கிலாசகுஷ்டம் குணமாகும்.

குஷ்டரோக பத்தியங்கள்:—15-காளுக்கு ஒருமுறை வாந்தி செய்வித்தல், மாதம் ஒருமுறை விரேசனத்திற்கு கொடுத்தல், மூன்று காளைக்கு ஒருமுறை நசியஞ் செய்வித்தல், ஆறுமாதத்திற்கு ஒரு முறை குருதிவாங்கல் மேலும் கிருதம், லேபனம், பழய யவதானியம், கோதுமை, பச்சைப்பயறு, சம்பாஅரிசி, துவரை, சிறுகடலை, தேன், பேய்ப்புடல், கண்டங்கத்திரிப்பழம், மணத்தக்காளி, வேப்பன்இலை, வெள்ளைப்பூண்டு, வெள்ளைச்சாரணை, கடுக்காய்பூ, நாஇலை, சோனாசொட்டைபழம், பனப்பழம், கருங்காலி, சித்திரமூலம், நிரிபலை, ஜாதிக்காய், சிறுநாகப்பூ, குங்குமப்பூ, பழயநெய், பீர்க்கங்காய், அரிசி, வெள்ளாகடுகு, வேப்பன், இலுகுவான அன்னம், சாலதேவதாரு, அசோகம், அகரு இலைகளின் தயிலங்கள், பசு, கழுதை, ஒட்டகம், ஆடு, செம்மறியாடு இலைகளது மூத்திரம். கஸ்தூரி, சந்தனம், கசப்பு பதார்த்தங்கள், சூரணங்கள் இவைகள் யாவும் தோஷத்தின் பலாபலங்களை அறிந்து குஷ்டரோகத்திற்கு பத்தியமிட வேண்டியது.

அபத்தியம்:—புளிப்பு, உப்பு, காரங்கள் இலைகளுடன்கூடிய அன்னபானங்கள், தயிர், பால், வெல்லம், எள்ளு, உளுந்து, மியர் அவரைக்குதல், மாதர்புணர்ச்சி, வாந்தி வேகத்தை தடுத்தல், கரும்பு ரசம், ஜலத்திலிருக்கும் ஜந்துமாமிசம், தயிர், பால், கள், வெல்லம் இவைகளை குஷ்டரோகிகள் விடவேண்டியது.

விசர்பத்துக்கு சிகிச்சை

பேய்ப்புடல், ஆடாதோடைவேர்க்கு, சீமைநிலவேம்பு, வேப்பன், கடுகுரோகிணி, தானிக்காய், கடுக்காய், செல்லிவற்றல் இவைகளைச் சமனடையாய்க் கியாழமிட்டு அதில் குங்கிலியசூரணத்தைக் கலந்து சாப்பிட்டால் சகல தோஷத்தினால் உண்டான அக்கினி விசர்ப்பி, வாந்தி, அனல், தாகம், பிரமை இவைகள் நீங்கும்.

குடுச்யாதி கியாழம்:—சிந்தில்கொடி, ஆடாதோடை, பேய்ப்புடல், வேப்பன்பட்டை, நிரிபலி, கருங்காலிவேர், கொண்டை இவைகள் சமனடை கியாழம்செய்த அதில் குங்கிலியசூரணம் கலந்து சாப்பிட்டால் விசர்ப்பி, குஷ்டம் இவை சாந்திப்படும்.

படோலாதி கியாழம்:—பேய்ப்புடல், வேப்பன், மாமஞ்சள், கடுகுரோகிணி, அதிமதுரம், கொத்துபுங்கள் இவை சமனடையாய்க் கியாழம்வைத்து குடித்தால் விசர்ப்பி நீங்கும்.

துராலாபாதி கியாழம்:—பூனைக்காஞ்சொரிவேர், பற்பாடகம், சிந்தில்கொடி, சுக்கு இவைகள் சமனடை இடித்து இரவில் ஜலத்தில் ஊறவைத்து காலையில் கியாழம் காய்ச்சி குடித்தால் தாகம், விசர்ப்பி இவை நீங்கும்.

முஸ்தாதி கியாழம்:—கோரைக்கிழங்கு, பேய்ப்புடல், வேப்பன் இவைகளது கியாழமாவது அல்லது கீழாநெல்லிவேர், பேய்ப்புடல், பச்சைப்பயறு இவைகளை கியாழம்வைத்து அதில் நெய் கலந்தாவது சாப்பிட்டால் விசர்ப்பி நீங்கும்.

பூநிம்பாதி கியாழம்:—சீமைநிலவேம்பு, ஆடாதோடை, கடுகுரோகிணி, பேய்ப்புடல், நிரிபலி, சந்தனம், வேப்பன் இவைகளைச் சமனடையாய்க் கியாழம் வைத்துக் குடித்தால் விசர்ப்பி, தேகஎரிச்சல், சுரம், வீக்கம், நமை, விஸ்போடம், தாகம், வாந்தி இவை நீங்கும்.

விசர்ப்பிகளுக்கு கௌராதி கிருதம்:—மஞ்சள், மரமஞ்சள், முக்காவேளை, பெருங்கடம்பை, சந்தனம், ரக்தசந்தனம், அதிமதுரம், அவுரி, தாமரைத்தண்டு, தாமரைப்பூ இதழ், வெட்டிவேர், அல்லிக்கிழங்கு, நிரிபலி, பஞ்சவல்கங்கள் இவைகளை வகைக்கு ¼-பலம் வீதஞ் சேர்த்து கல்கஞ்செய்து அதில் நெய் 16-பலஞ் சேர்த்து நெய் பதமாகக் காய்ச்சி குடித்தால் விசர்ப்பி, விஸ்போடகம், கீடலூதவிரணம், சிலேஷ்ம ரோகம் இவைகள் யாவும் நிவர்த்தியாகும்.

விருஷாதி கிருதம்:—ஆடாதோடை, கருங்காலி, பேய்ப்புடல், வேப்பன் இவைகளின் இலை அல்லது பட்டை, சிந்தில்கொடி, செல்லிவற்றல் இவைகளின் கியாழமாவது கல்கமாவது கலந்து

அதில் நெய் சேர்த்து நெய் பதமாக காய்ச்சி சாப்பிட்டால் ரத்த விசர்ப்பி, குஷ்டம், குன்மம் இவைகள் நிவர்த்தியாகும்.

தூர்வாதி கிருதம்:—அறுகம்புல், ஆல், அத்தி, ஈரவல், மருத மரம், சிற்றாமல்லி, அரசன் இவைகளின் பட்டைகளை கியாழமாவது கல்கமாவது செய்து அதில் நெய் கலந்து நெய் பதமாகக் காய்ச்சி குடித்தால் விசர்ப்பி, சுரம், அனல், எரிச்சல், கட்டி இவைகள் நிவர்த்தியாகும்.

வாதவிசர்ப்பிக்கு ராஸ்னாதி லேபனம்:—சிற்றாத்தை, கரும்அல்லிக்கிழங்கு, தேவதாரு, சந்தனம், அதிமதுரம், சிற்றாமுட்டி இவைகளை பாலால் அரைத்து நெய்யில் கலந்து லேபனஞ்செய்தால் வாத விசர்ப்பி நிவர்த்தியாகும்.

பித்தவிசர்ப்பிக்கு பிரவுண்டரீகா திதைலம்:—பிரபொண்டரீகம் மஞ்சிஷ்டி, தாமரைப்பூ, சந்தனம், அதிமதுரம், அல்லிக்கிழங்கு இவைகளை பாலில் அரைத்து லேபனஞ்செய்தால், பித்தவிசர்ப்பி நிவர்த்தியாகும்.

கபவிசர்ப்பிக்கு காயத்தியாதிலேபனம்:—கருங்காலிபட்டை, சித்தாமல்லிபட்டை, கோரைக்கிழங்கு, ஆடாதோடை, கொண்டைச் சடை, தேவதாரு, பெருவாலகப்பட்டை, இவைகளை அரைத்து லேபனஞ்செய்தால் சிலேஷ்மவிசர்ப்பி நிவர்த்தியாகும்.

சந்நிபாதவிசர்ப்பத்துக்கு தசாங்கலேபனம்:—காட்டுவாலை, அதிமதுரம், கிரந்திதகரம், சந்தனம், எலக்காய், ஜடாமாஞ்சி, மஞ்சள், மரமஞ்சள், கோஷ்டம், வெட்டிவேர், இந்தபத்து இனுசுகளை சமனடையாககொண்டு கல்கஞ்செய்து நெய்யுடன்கலந்து லேபனஞ் செய்தால் சன்னிபாதவிசர்பம், விரணம், வீக்கம் இவைகள் நீங்கும்.

அக்கினிவிசர்ப்பிக்கு மாமிசாதிலேபனம்:—ஜடாமாஞ்சி, சர்ஜரசம், லோத்திரம், அதிமதுரம், காட்டுமிளகு, பெருங்கடம்பை, கருப்பு அல்லிக்கிழங்கு, தாமரைத்தண்டு. காட்டுவாலைப்பூ, இவைகளை அரைத்து லேபனஞ்செய்தால் அக்கினிவிசர்ப்பி நிவர்த்தியாகும்.

கிரந்திவிசர்ப்பிக்கு ஞாகோரோதாதி லேபனம்:—ஆலம்விழுது, ஞன்றி, வாழைக்கிழங்கு, இவைகளை அரைத்து நெய்யில் அரைத்து லேபனஞ்செய்தால் கிரந்தி, அக்கினி விசர்ப்பி நிவர்த்தியாகும்.

சகலவிசர்ப்பிகளுக்கு ஹரீதகியோகம்:—மஞ்சிஷ்டி, வெட்பாலை பட்டை, கோரைக்கிழங்கு, சிந்தில்கொடி, மஞ்சள், மரமஞ்சள், கண்டங்கத்திரி, வசம்பு, சுக்கு, கோஷ்டம், வேப்பன் பேய்ப்புடல், சாதிக்காய், வாய்விளங்கம், மணத்தக்காளி, பெருங்கடம்பை, இத்தி, தேவதாரு, வெட்பாலை, காசனிக்கண்ணி, கொத்துபுங்கள், வட்டத்திருப்பி, பூனை, கெந்தகம், கருங்காலி, நிரிபலி, கடுகு

தோகணி, நன்னரி, புங்கன், ஆடாதோடை, வெட்டிவேர், பெரிய மரம், கார்போகஅரிசி, ஞாழல், சந்தனம், பற்பாடகம், பூனைகாஞ் சொரி, தும்மட்டி, சிவதை,குறுவேர், சுக்கு, திப்பிலி, மிளகு, குரா சானி ஓமம், இவைகள் வகைக்கு 1-பலம், கடுக்காய் 22-பலம், இவைகளை 256-பலம், ஜலத்தில்போட்டு எட்டில் ஒருபாகம் மீறும் படியாக கியாழஞ் சுண்டக்காய்ச்சி வடிகட்டி இரும்பு லொக்கினல் ஒவ்வொரு கடுக்காயை தனிசெய்து தேனில்போட்டு 21-நாள் வரை யில்வைத்து அதில் தேன் உள்ளே இல்லாததை யெடுத்துவிட்டு மறுபடியும் தேனில்போட்டு பிறகு தேனில் கன்றுப் ஊறிய கடுக் காயை காலையில் ஒவ்வொன்றாக சாப்பிட்டுவந்தால் விசர்ப்பங்கள் 18 வித குஷ்டரோகங்கள் பாமா, கண்டு, விஸ்போடகம், தத்ரு, வித்திரிதி, முதலிய சகல சரும தோஷங்கள் ரத்தரோகங்கள் இவை கள் நிவர்த்தியாகும்.

விசர்ப்பிக்கு உபசாரங்கள்:—சகல விசர்ப்பிகளில், வமனம், விரேசனம், குருதிவாங்கல், இவைகளை செய்தல் நலம். மேலும் சித்தாமல்லி, மேல்மல்லி, காட்டுப்பயறு, காட்டு உளுந்து இவைகளை சமனடையாகச் சேர்த்து கியாழங்காய்ச்சி அதில் பசு நெய் கலந்து கொடுத்தாலும் அல்லது சித்தாமுட்டி, பேராமுட்டி, சாகமுட்டி, இந்த மூன்றை கலந்து பசுநெய்யுடனுவது வமனத்திற்கு கொடுத் தால் சகல விசர்ப்பிகள் நிவர்த்தியாகும்.

விசர்ப்பிகள் பக்குவமாகில் வைத்தியன் விரணசிகிச்சை செய் தல்வேண்டும்.

விசர்ப்பிரோக பத்தியங்கள்:—பழய யவதானியம், கோதுமை வரகு அரிசி, பழயசெல்அரிசி, பச்சைப்பயறு, சிறுபடலை, கடலை, துவரை, மாமிசம், வெண்ணெய், நெய், நிராசைஷி, மாதுளம்பழம், பாவக்காய், நெல்லிக்காய், கருங்காலி, காட்டுவாழை, கற்பூரம், சந்தனம், எள்ளு, இவைகளின் லேபனமும் தோஷத்தின் பல பலத்தை அறிந்து பத்தியமும் செய்யவேண்டியது.

அபத்தியங்கள்:—சஞ்சாரம், பகல்தூக்கம், மாதர் புணர்ச்சி, காற்று, கோபம், தூக்கம், வாந்தி, மலம், மூத்திரம், இவைகளை அடக்குதல், தில்லிட்டசாதம், குளிர்ந்த சலபானம், வெள்ளைப் பூண்டு, கொள்ளு, உளுந்து, எள்ளு, காட்டிலுள்ள ஐந்து மாமிசங் கள், வியர்வைவாங்கல், உப்பு, புளிப்பு, காரம், கள்ளு, வெய்யில், இவைகளை விசர்ப்பிரோகிகள் விடவேண்டியது.

அபஸ்மார ரோக சிகிச்சை

அபஸ்மார ரோகமென்றால் கண்களுக்கு இருள் கம்மியதுபோல் தோணுதல், விகாரமாக கண்களை உருட்டிக்கொண்டு கைகால்களை நெட்டு ஒடித்தல், தோஷம் அதிகரிப்பதினல் அறிவில்லாமல் போகு

தல் இக்குணங்களை யுடையது. மற்றும் இதில் மயக்கம், மூர்ச்சை, ல்வர்க்கையற்றிருத்தல், இவை முதலிய குணங்களும் ஏற்படும்.

அபஸ்மாரத்திற்கு பிரமதண்டு கிருதம்:—பிரமதண்டி, சிவ கரந்தை, வசம்பு, கோஷ்டம், கருமஅல்லிக்கிழங்கு, திப்பிலி, இந் துப்பு இவைகளை சமனடையாய் சூரணித்து பிரமதண்டி ரசத்தினல் 21 முறை அரைத்த உருண்டைகள் செய்து அதற்கு நான்கு பங்கு நெய், நெய்க்கு நான்கு பங்கு பிரமதண்டிரசத்தை கலந்து கிருதபத மாய் காய்ச்சி கொடுத்தால் அபஸ்மாரம் உன்மாதம் முதலிய சகல ரோகமும் சீக்கிரமாய் நிவர்த்தியாகும்.

பித்த அபஸ்மாரத்திற்கு மதுக்கிருதம்:—அதிமதுர சூரணம் 2-பலம், 256-பலம் நெல்லிக்காய் ரசத்தில்கொட்டி, நெய் 32-பலம் கலந்து நெய்பதமாய் காய்ச்சி கொடுத்தால் பித்தத்தினல் உண்டாகிய அபஸ்மாரரோகம் நிவர்த்தியாகும்.

வாதபித்த அபஸ்மாரங்களுக்கு காசகிருதம்:—காசதருப்பை, கரும்பு இவைகளின் இரசங்களுக்கு எட்டுபங்கு அதிகமாய் நிலப் பூசினி ரசத்தை கலந்து அதில் 32-பலம் நெய், வாசனை திரவி யங்கள் வகைக்கு ½-பலம் விதிதஞ் சூரணித்து சேர்த்து நெய்ப் பதமாய் காய்ச்சி கொடுத்தால் வாதபித்த அபஸ்மார ரோகங்கள் நீங்கும்.

கபாஸ்மாரத்திற்கு வாசாதி கிருதம்:—வசம்பு, கொண்டை, கரி வேப்பிலை, செல்லிவற்றல், பெருங்காயம், கோஷ்டம், நெரிஞ்சல் இவைகளின் கற்கத்திற்கு சமம் நெய் கலந்து நெய்ப் பதமாய் காய்ச்சி கொடுத்தால் வாதசிலேத்தும அபஸ்மாரங்கள் நிவர்த்தி யாகும்.

கல்யாண சூரணம்:—சுக்கு, திப்பிலி, மிளகு, செவ்வியம், சித் திரமூலம், நிரிபலை, பிடாலவணம், இந்துப்பு, வாய்விளங்கம், புங் கன், ஓமம், கொத்தமல்லி, சேகம் இவைகளை சமனடையாய் சேர்த் துச் சூரணித்து நிரிகடிப்பிரமாணம் வெந்நீருடன் சாப்பிட்டால் வாதசிலேஷ்மரோகம், அபஸ்மாரம், உன்மாதம் இவைகள் நிவர்த்தி யாகும். அக்கினிதீபனம் உண்டாகும்.

அபஸ்மாரத்திற்கு நசியங்கள்:—நிரிகடுகு, சித்திரமூலம், கார்த் திகை கிழங்கு, தும்மட்டிவேர், வசம்பு, இலுப்பவிரை, வட்டத் திருப்பி, சதகுப்பை செய்த தாளகம், காபி, அழிஞ்சல், சர்ஜக்ஷாரம், பல க்ஷாரம் இந்த பதினைந்து தினுசுகளை சமனடையாய் சூரணித்து கல்வத்திலிட்டு கொச்சிஇலைரசம், புளிஇலைரசம், இஞ்சிரசம் இவை களுடனுவது அல்லது எருக்கன்வேர் ரசத்தினுலாவது அரைத்து தலை தொங்கும்படியாய் கட்டிலின்மீது படுக்கப்போட்டு 4-நாள் இதை நசியஞ்செய்தால் அபஸ்மாரம், ஹிருதயரோகம், வாதரோகம்

தனுர்வாதம், கிரஹணிதோஷம், உன்மாதம், சந்நிபாதம், காக்கை வலி, முயல்வலி முதலிய நோய்கள் நீரும்.

தும்மட்டிவேரை காடியால் அரைத்து நசியஞ்செய்தால் அபஸ்மாரம், உன்மாதம், பூதபிரேதங்கள் நிவர்த்தியாகும்.

இந்த நசியத்தை ஆறுதடவை போடவேண்டியது. அபஸ்மாரம், உன்மாதம் இவைகளின் சாத்தியம் அசாத்தியத்தை அறிந்து சாத்தியமானதற்கு சிகிச்சை செய்யவேண்டியது.

மேற்கூறிய அவுஷதங்கள் கஷ்டசாத்தியமான அபஸ்மார உன்மாத ரோகங்களையும் நிவர்த்தியாக்கும்.

அபஸ்மாரம், உன்மாதம் இவைகள் நிவர்த்திக்காக பஞ்சகவியம் கல்யாணகிருதம் இவைகளை கொடுக்கவேண்டியது.

புத்திசாலியாகிய வைத்தியன் அபஸ்மார ரோகிக்கு வாந்தி பாகும்படியான சிகிச்சை முதலில்செய்து பிறகு வாதமாயின் வஸ்தி ஈருமம்முதலியதும், பித்தமாகில் விரேசனங்களையும், கபமாகில் வமனம் முதலியவைகளையும் செய்யவேண்டியது.

அபஸ்மார பத்தியங்கள்:—பழய சிவப்புநெல் அரிசி, பச்சைப் பயறு, கோதுமை, பழயநெய், ஆமைகரி, பேயரவரைரசம், பால், பிரமதண்டி, குறவேர், வசம்பு, பேய்ப்புடல், கலியாணபூசினிக்காய், திப்பிப்பு மாதுளம், முருங்கக்காய், திராக்ஷை, நெல்லிவற்றல் இவைகள் பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—நித்தை, சோகம், பயம், குரோதம், கள், மீன், விருத்த அன்னம், காரம், உஷ்ணம், ஜடம இந்த பதார்த்தங்கள் சாப்பிடுதல், அதிமைதுனம், ஆயாசம், சகல ஈரைகள், கோலைப்பழம், உளுந்து, துவரை, தாகம், தூக்கம், பசி இவைகளின் வேகத்தை அடக்கல் இவைகள் அபஸ்மாரரோகிக்கு அபத்தியங்கள்.

விஸ்போடக சிகிச்சை

வாதவிஸ்போடகத்திற்கு தசமூல கியாழம்:—தசமூலங்கள், சிற்றரத்தை, மரமஞ்சள், வெட்டிவேர், பூனைகாஞ்சொரி, சிந்தில் கொடி, கொத்தமல்லி, கோரைக்கிழங்கு இவைகளைச் சமனடையாய்க் கியாழம் வைத்துக் குடித்தால் வாதவிஸ்போடகம் நிவர்த்தியாகும்.

பித்தவிஸ்போடகத்திற்கு திராக்ஷாதி கியாழம்:— திராக்ஷை, பூசினி, பேரீச்சம்பழம், பேய்ப்புடல், வேப்பன், ஆடாதோடை, பொரி, நெல்லிவற்றல், பூனைகாஞ்சொரிவேர் இவைகளைச் சமனடையாய்க் கியாழம் காய்ச்சி அதில் சர்க்கரை கலந்து சாப்பிட்டால் நோயுடன் கூடியிருக்கும் பித்தவிஸ்போடகம் நிவர்த்தியாகும்.

கபவிஸ்போடகத்திற்கு பூநிம்பாதி கியாழம்:—சிறுகிலவேம்பு வேப்பன், பூனைகாஞ்சொரி, நிரிபலி, வெட்பாலைவிரை, ஆடாதோடை, பேய்ப்புடல் இவைகளைக் கியாழம்வைத்து சர்க்கரை கலந்து சாப்பிட்டால் கபத்தினால் உண்டாகும் விஸ்போடகம் நிவர்த்தியாகும்.

கபபித்த விஸ்போடகத்திற்கு துவாதசாங்க கியாழம்:—நிலவேம்பு, வேப்பன், அதிமதுரம், கோரைக்கிழங்கு, பற்பாடகம், பேய்ப்புடல், ஆடாதோடை, வெட்டிவேர், நிரிபலி, வெட்பாலை விரை இவைகளை கியாழம்வைத்து சாப்பிட்டால் விஸ்போடகங்கள் தொந்தம் நிரிதோஷம் ரத்ததோஷம் இவைகளினால் உண்டான விஸ்போடகங்கள் நிவர்த்தியாகும். மேலும் இலகுர பதார்த்தங்கள் பத்தியம் செய்யவேண்டியது.

வாதவிஸ்போடகத்திற்கு அமிருதாதி கியாழம்:—சிந்தில்கொடி, ஆடாதோடை, பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, ஏழிலைவாழை, கருங்காலி, மூங்கில்இலை, வேப்பன்இலை, மஞ்சள், மரமஞ்சள் இவைகளைக் கியாழம்வைத்து சர்க்கரைகலந்து சாப்பிட்டால் சகல விசர்ப்பிகள், குஷ்டங்கள், விஸ்போடகம், கண்டு, மகூரி, சிதபித்தசுரம் இவைகள் நீங்கும்.

விஸ்போடக சுரத்திற்கு படோலாதி கியாழம்:—பேய்ப்புடல், சிந்தில்கொடி, நிலவேம்பு, ஆடாதோடை, வேப்பன், பற்பாடகம், கருங்காலி, நிரிபலி இவைகள் சமனடையாய்க் கியாழம் வைத்துக் குடித்தால் விஸ்போடகசுரம் நிவர்த்தியாகும்.

நிம்பாதி கியாழம்:—வேப்பன்பட்டை, கதிரசாரம், சிந்தில் கொடி, வெட்பாலை இவைகள் சமனடையாய்க் கியாழம்வைத்து அத்துடன் தேன் கலந்து சாப்பிட்டால் விஸ்போடகசுரம் நிவர்த்தியாகும்.

பத்மகாதி கிருதம்:—தாமரைதண்டு, அதிமதுரம், லோத்திரம், சிறுநாகப்பூ, மஞ்சள், மரமஞ்சள், வாய்விளங்கம், சிறியஏலக்காய், கிராம்பு, கோஷ்டம், அரக்கு, இலவங்கப்பத்திரி, மயில்துத்தம், கருவிலிப்பட்டை, காட்டுவாழைப்பட்டை, விளாம்பழம் இவைகளை சமனடையாய்ச் சூரணித்து ஜலம்கொட்டி அதில் நெய் 16-பலம் சேர்த்து நெய் மீறும்படி நெய்ப் பதமாய்க் காய்ச்சி குடித்தால் சகல கீடக தோஷங்கள், எலிகடிதோஷம், காடவிரணம் குஷ்ட விசர்ப்பி, சகல விஸ்போடகங்கள், வாதவிரணம், மூத்திரகிருச்சிரம், உடைந்த கண்டமாலைகள் இவை யாவும் நிவர்த்தியாகும்.

விஸ்போடக பத்தியங்கள்:— யவதானியம், பச்சைப்பயறு, துவரை, சிறுகடலை, சிறுகீரை, பாவற்காய், தண்ணீர்விட்டான் கிழங்கு, பற்பாடகம், கசப்பான பானகம் இவைகள் விஸ்போடகத்தில் பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—எள்ளு, உளுந்து, கொள்ளு, உப்பு, புளிப்பு, காரம், உஷ்ணமுள்ள பதார்த்தங்கள் இவைகளை விலக்கிவிடவேண்டியது.

மகூரிகை ரோக சிகிச்சை

(மகூரிகை—அம்மை.)

வாத மகூரிகா ரோகத்திற்கு கியாழம்:—பேய்ப்புடல், கண்ணரி, கோரைக்கிழங்கு, வட்டத்திருப்பி, கடுகுரோகணி, கருங்காலி, வேப்பன், சிற்றாமுட்டி, நெல்லிவற்றல், ஏலம் இவைகள் சமனளவாக கியாழம் வைத்து குடித்தால் வாத மகூரிகா ரோகம் நிவர்த்தியாகும்.

தசமூலங்கள், சிற்றாத்தை, நிலாவெல்லி, வெட்டிவேர், பூனைகாஞ்சொரி, சிந்தில்கொடி, கொத்தமல்லி, கோரைக்கிழங்கு இவைகளை கியாழம் வைத்து குடித்தால் வாதமகூரிகை நிவர்த்தியாகும்

பித்த மகூரிகாரோகத்திற்கு கியாழம்:—வேப்பன், பற்பாடகம், வட்டத்திருப்பி, பேய்ப்புடல், சந்தனம், ரத்தசந்தனம், ஆடாதோடை, பூனைகாஞ்சொரி, நிலாவெல்லி, வெட்டிவேர், கடுகுரோகணி இவைகள் சமனளவாக கியாழம் வைத்து இத்துடன் சர்க்கரை கலந்து சாப்பிட்டால் பித்தமகூரிகை, ரக்தாதிமகூரிகை இவைகள் நிவர்த்தியாகும்.

நிராகை, பூசினி, கர்ஜூரம், பேய்ப்புடல், வேப்பன், ஆடாதோடை, பொரி, நெல்லிவற்றல், பூனைகாஞ்சொரி, இவைகளை சமனளவாய் கியாழம் வைத்து அதில் சர்க்கரைகலந்து சாப்பிட்டால், பித்தமகூரிகை, ரத்தமகூரிகை இவைகள் நிவர்த்தியாகும்.

கபமகூரிகா ரோகத்திற்கு கியாழம்:—கண்டங்கத்திரி, முள்ளங்கத்திரி, சாரிஸைதாமரை, மூன்றிலைத்தாமரை, நெரிஞ்சல், ஆடாதோடை இவைகளை கியாழம் வைத்து குடித்தால் கபமகூரிகா ரோகம் நிவர்த்தியாகும்.

பூனைகாஞ்சொரி, பற்பாடகம், பேய்ப்புடல், கடுகுரோகணி இவைகளை கியாழம்வைத்து சாப்பிட்டால் கபமகூரிகா ரோகம் நீங்கும்.

வாதபித்த மகூரிகா ரோகத்திற்கு குடூச்சியாதி கியாழம்:—சிந்தில்கொடி, பற்பாடகம், பூனைகாஞ்சொரி, கடுகுரோகணி இவைகளை கியாழம் வைத்து குடித்தால், வாதபித்த மகூரிகா ரோகம் நீங்கும்.

வாதசிலேஷ்மத்திற்கு நாகாதி கியாழம்:—சுக்கு, கோரைக்கிழங்கு, சிந்தில்கொடி, கொத்தமல்லி, கண்டுபாங்கி, ஆடாதோடை இவைகளை கியாழம் வைத்துக்குடித்தால் வாதசிலேஷ்ம மகூரிகா ரோகம் நிவர்த்தியாகும்.

சகலமகூரிகா ரோகத்திற்கும் கியாழம்:—மஞ்சள், மரமஞ்சள், வெட்டிவேர், காட்டுவாழை, கோரைக்கிழங்கு, லோத்திரம், சந்தனம், சிறுநாகப்பூ, பேய்ப்புடல், புஷ்கரமூலம், குறுவேர் இவைகளை கியாழம் வைத்து அதில் மஞ்சள், நெல்லிவற்றல் இவைகளை சூரணித்து கலந்துசாப்பிட்டால் மகூரி, விஸ்போடகம், விசர்ப்பி, புழுவெட்டு, சுரம், இவைகள் நிவர்த்தியாகும்.

வேப்பன், பற்பாடகம், வட்டத்திருப்பி, பேய்ப்புடல், கடுகுரோகணி, ஆடாதோடை, பூனைகாஞ்சொரி, நிலாவெல்லி, வெட்டிவேர், சந்தனம், ரத்தசந்தனம், இவைகளை கியாழம் வைத்து சர்க்கரை கலந்து சாப்பிட்டால் சகலமகூரிகா ரோகங்கள், சுரம், விசர்ப்பம் இவைகள் நிவர்த்தியாகும்.

பேய்ப்புடல், சிந்தில்கொடி, கோரைக்கிழங்கு, ஆடாதோடை, பூனைகாஞ்சொரி, சிலாஜதுவேம்பு, வேப்பன், கடுகுரோகணி, பற்பாடகம், இவைகளை கியாழம் வைத்து குடித்தால் மகூரிகாரோகம் யாவும் நிவர்த்தியாகும்.

ஆரணம்நீங்கி பக்குவாசயத்திற்குவரும். இந்தகியாழம் தேகஅனல், சுரம், விசர்ப்பம், விரணம், பித்தரக்தம் இவைகளை சமனிக்கச் செய்யும்.

மகூரிகா சிகிச்சை:—மகூரிகாரோகத்திற்கு குஷ்டரோகத்திற்கு சொல்லிய லேபனாதிகளை செய்தால் நன்மையாயிருக்கும். பித்த சிலேத்தும விசர்ப்ப ரோகத்திற்கு சொல்லிய கிரியைகளும் இதற்கு ஹிதகரமாகயிருக்கும்.

சகல மகூரிகா ரோகத்திலும் முதலில் வாந்திக்கு கொடுக்க வேண்டியது. பிறகு பேய்ப்புடல், வேப்பன், ஆடாதோடை இவைகளை கியாழமாவது அல்லது வசம்பு, வெட்பாலை, அதிமதுரம் இவைகளை கற்கஞ்செய்து அதில் தேன் கலந்தாவது அல்லது வல்லாரைச்சாறு இவைகளுடன் தேன் கலந்தாவது சாப்பிட்டால் வாந்தியாகும்.

பிருஹதிமகூரி ரோமசாரம்:—மகூரிகா ரோகத்திற்கு காட்டு மூட்டை பல்பத்தினால் தேகமுழுதும் நடவவேண்டியது. வேப்பன் கொத்துகளினால் உரும்பு முதலியவைகளை ஓட்டவேண்டியது. குளிர்ந்தஜலத்தை குடிக்கக் கொடுக்கவேண்டியது.

இரக்ஷ பிரகாரம்:—மகூரிகா ரோகமுடையவனை ரம்மியமாயும் தனியாயும் சுத்தியாயு மிருக்கும் இடத்தில் வைக்கவேண்டியது. பரிசுத்தமில்லாதவர்கள் அருகில் போகக்கூடாது.

குடுச்சியாதி சூரணம்:—சிந்தில்கொடி, அதிமதுரம், நிராசைஷ, பெருங்கடம்பை, மாதுளம் இவைகளை சமனடையாய்ச் சூரணித்து வெல்லத்தைக் கலந்து அம்மை வந்த ஏழாள் ஞனபிறகு பாக காலத்தை அறிந்து சாப்பிட்டால் மசூரிகாரோகம் சமனமாகும்.

சிஞ்சாபீஜ சூரணம்:—புளியாங்கொட்டை, மஞ்சள் இவைகளைச் சூரணித்து குளிர்ந்தஜலத்தில் கலந்து சாப்பிட்டால் சகல சம் பந்தமான விகாரங்கள் நிவர்த்தியாகும்.

நியாகுரோதாதி லேபனம்:—ஆல், அத்தி, இத்தி, மஞ்சிஷ்டி, காட்டிவாழை இவைகளின் பட்டைகளை அரைத்து நெய்யில் கலந்து தடவினால் வாதமசூரிகாரோகம் நிவர்த்தியாகும்.

காதிராதி லேபனம்:—கருங்காலி, வேப்பிலை, காட்டிவாழை, அத்தி இவைகளின் பட்டைகளை அரைத்து லேபனம் செய்தால் கப மசூரிகாரோகம் நிவர்த்தியாகும்.

மதுகாதி லேபனம்:—அதிமதுரம், நிரிபலை, பெருங்கடம்பை, மாமஞ்சள், இலவங்கப்பட்டை, கரும்அல்லி, வெட்டிவேர், லோத் திரம், மஞ்சிஷ்டி இவைகளை அரைத்து லேபனஞ்செய்தாலும் அல் லது இவைகளை நியாழம்வைத்துக் கழுவினாலும் மசூரிகைக்கு ஹிதகா மாயிருக்கும்.

வாசாசுவ ரசம்:—ஆடாதோடைஇலை சுரசத்தில் தேன்கலந்து குடித்தால் கபத்தினாலுண்டாகி கடினமாயிருக்கும் மசூரிகாரோகம் நிவர்த்தியாகும்.

மோசாறசாதி பானம்:—இலவம்பட்டை இரசம், சந்தனம் இவைகளையாவது ஆடாதோடைஇலைரசம் அதிமதுரமாவது அல்லது அதிமதுரமாவது சாப்பிட்டால் மசூரிகா அம்மைவிகாரம் நிவர்த்தி யாகும்.

வேணுபத்திர தூபம்:—மூங்கில்இலை, குளஞ்சி, அக்கு, ப்ருக்தி விரை, சிறுகடலை, யவதானியம், அதிவிடயம், நெய், வசம்பு, வல் லாரை, சவ்வர்ச்சலவணம் இவைகளை தூபம்போட்டால் மசூரிகா ரோகம் நிவர்த்தியாகும்.

மசூரிகாரோக பத்தியங்கள்:—பழயகெப்புநெல், சம்பாஅரிசி, கடலை, பச்சைப்பயறு, சிறுகடலை, யவதானியம், புழு, குருவி, வரங் கோழி, அதிமதுரம், வெள்ளரிக்காய், வாழைக்காய், முருங்கக்காய், பேய்ப்புடல், நிராசைஷ, மாதுளம்பழம், புஷ்டிகாமான அன்ன பானங்கள், இலந்தை, ஜந்துமாமிசம், அரிசிசாதம், காய்கரிகள், நெய், புகை, கோமயபஸ்மலேபனம், விரணத்தை உலர்த்தும் சிகிச் சைகள், அம்மை அதிகமாய்ப் பூரித்து இருந்தாலும் மேற்கூறியவை களைப் பத்தியமிடவேண்டியது.

அபத்தியங்கள்:—காற்று, வியர்வை, உஷ்ணம், தயிலம், குருத் துவமான அன்னம், கோபம், வெய்யில், காரம், புளிப்பு, மலமூத்திர ரோதனம் இவைகளை மசூரிகா ரோகி விடவேண்டியது.

களகண்டரோக சிகிச்சை

(களகண்டம் என்றால் புஜக்குழி)

வாதகளகண்டத்திற்கு தாமரைத்தண்டு முதலிய சாக்குகளையா வது அல்லது வாதத்தை ஹரிக்கும் செடிகளுடைய இலைகளை யாவது அரைத்து கற்கஞ்செய்து கட்டவேண்டியது.

வாதகளகண்ட சிகிச்சை:—மாவேர், முருங்கைவேர், தசமூலம் இவைகளை அரைத்துச் சிறிது சூடாக்கி லேபனஞ் செய்தால் வாத களகண்டம் நிவர்த்தியாகும்.

கபகளகண்ட சிகிச்சை:—கபகளகண்டத்தில் வியர்வையை வாங்குதல், அதை அறுத்தல், கபரோகத்தை ஹரிக்கும் பதார்த்தம் சாப்பிடுதல் முதலியவைகளை செய்தல்வேண்டும்.

மேதகளகண்ட சிகிச்சை:—சாஸ்திரப் பிரகாரம், சிரோவிரே சனம் செய்தாலும் அல்லது சிரோவேதஞ்செய்து திப்பிலி, சுண்ணாம்பு, லோஹசிட்டம், சேர்வாளம், ரசாஞ்சனம் இவைகளை அரைத்து லேபனம் செய்தாலும் மேதகளகண்டத்திற்கு ஹிதகரமா யிருக்கும்.

சர்ஷபாதி லேபனம்:—வெள்ளைகடுகு, முருங்கைவிரை, சணப்பு விரை, அகத்திவிரை, யவதானியம், முள்ளங்கிவிரை இவைகளைப் புளித்தமோரினால் அரைத்து லேபனம்செய்தால் களகண்டம், கிரந்தி, கண்டமாலை இவை நீங்கும்.

பலாசமூல லேபனம்:—அலரிவேரை கஞ்சிஜலத்தினால் அரைத்து காதுகளில் லேபனம்செய்தால் களகண்டம் நீங்கும்.

சூரியாவர்த்த லேபனம்:—சூரியாவர்த்தம், வெள்ளைப்பூண்டு இவைகளை அரைத்து உருண்டைசெய்து அதின்மீது வைத்து கட்டு கட்டினால் கொப்புளம் இரத்தம் சிழ்வடிதல் முதலியவைகளுடன் கூடிய களகண்டம் நிவர்த்தியாகும்.

தேவதாரியாதி லேபனம்:—தேவதாரு, தும்மட்டி இவைகளை அரைத்து லேபனம்செய்தால் சகல களகண்டங்களிலும் ஹிதகரமா யிருக்கும்.

அமிருதாதி தைலம்:—சிந்தில்கொடி, வேப்பன், பெருங் காயம், கடுக்காய்ப்பிஞ்சு, நெல்லிக்காய், திப்பிலி, போரமுட்டி, சிற்றமுட்டி, தேவதாரு இவைகளின் கற்கத்தைச் சேர்த்துத்

தயார்செய்த தயிலத்தைப் பானம் செய்தால் களகண்டம் நிவர்த்தியாகும்.

தும்பீ தைலம்:—வாய்விளங்கம், பலசுஷ்காரம், இந்துப்பு, வசம்பு சிற்றாத்தை, சித்திரமூலம், நிரிகடுகு, தேவதாரு இலைகளின் நியாழும், பேய்ச்சுரைரசம், வெள்ளாகடுகு எண்ணெய் இலைகளை கலந்து தயிலபக்குவமாய்க் காய்ச்சி நசியம்செய்தால் கொஞ்சகாலமாயிருக்கும் களகண்டம் நிவர்த்தியாகும்.

தும்பியாதி தைலம்:—பேய்ச்சுரைக்காய்ரசம் 4-பாகம், நிப்பிலி கற்கம் 1-பாகம் இலைகளுக்குச் சமம் எள்ளெண்ணெய் கலந்து தயிலபக்குவமாய்க் காய்ச்சி லேபனம்செய்தால் கண்டமாலை, களகண்டம் இலை நிவர்த்தியாகும்.

வியோஷாதி தைலம்:—சுக்கு, நிப்பிலி, மிளகு, வாய்விளங்கம், அதிமதுரம், இந்துப்பு, தேவதாரு இலைகளின் கற்கத்தினால் தயார் செய்த தயிலத்தினால் லேபனம்செய்ய கண்டமாலை, களகண்டம் இலை நீங்கும்.

சந்தனாதி தைலம்:—சந்தனம், கடுக்காய்பிஞ்சு, அரக்கு, வசம்பு, கடுகுரோகணி இலைகளினால் தயார்செய்த தைலத்தை பானஞ் செய்தால் அபஸ்மாரோகம் நிவர்த்தியாகும்.

மண்டூர லோஹம்:—இரும்புசிட்டத்தை பாகியில்போட்டு ஆட்டுமூத்திரம்விட்டு ஒருமாதம் வரையிலும் ஊறவைத்து பிறகு அதை அரைத்து கஜபுடமிட்டு ஊறியபிறகு எடுத்துச் சூரணித்து தேனுடன் சாப்பிட்டால் களகண்டம் நிவர்த்தியாகும்.

அலாபுஜல பானம்:—பழுத்த பேய்ச்சுரையில் ஜலம்வார்த்து ஏழுநாள் வைத்து பிறகு அந்த சலத்தை குடித்து பத்தியமாக சாப்பிட்டால் களகண்டம் நிவர்த்தியாகும்.

ஜீரணகர்க்காருக யோகம்:—பழுத்த பூசணிக்காய் ரசத்துடன், பிடாலவணம், இந்துப்பு இலைகளை கலந்து நசியஞ்செய்தால் களகண்டரோகம் நீங்கும்.

கண்டமாலை சிகிச்சை

கண்டமாலை கியாழம்:—கொள்ளு, மிளகு, பெருங்காயம், இலைகளை கியாழம்வைத்து சாப்பிட்டால் கண்டமாலை நிவர்த்தியாகும்.

முண்டமூல லேபனம்:—சிவகரந்தைவேரை அதின் சாற்றினால் அரைத்து லேபனஞ் செய்தால் கண்டமாலை நிவர்த்தியாகும்.

சிவகரந்தைரசத்தை ஒருபலம் விதம் பிரதினம் குடித்தால் கண்டமாலை நிவர்த்தியாகும்.

கண்டமாலைக்கு வியோஷாதி குக்குலு:—நிருகடுகுசூரணம் 6-பலம், நிரிபலசூரணம் 3-பலம், தேவதாருஞ்சனமபட்டை சூரணம் 12-பலம், இலைகளின் மொத்த வடைக்கு சுத்திசெய்த குங்கிலிய சூரணம் சேர்த்துக் கலந்து 100-பலம், தேனில் போட்டு கலக்கி 1 முதல் ½-பலம் விதம் சாப்பிட்டால் கண்டமாலை கிரந்தி முதலியன நிவர்த்தியாகும்.

அஜமோதாதி தைலம்:—ஓமம், இசசெத்தூரம், நாளகம், மஞ்சள், மாமஞ்சள், பலாசுஷாரம், சர்ஜசுஷாரம், கடல்நுரை, தவனம், சாம்பிராணி, குங்கிலியம், தும்மட்டி, நாயுருவிவிரை, வாழைக்கிழங்கு, இலைகளை சமனடையாக எடுத்து கடுகு எண்ணெயில்போட்டு அதில் ஆட்டு மூத்திரம், கள்ளிப்பால், எருக்கன்பால், இலைகளை கலந்து மந்தாக்கினியால் காய்ச்சிமேலுக்கு உபயோகித்தால்கண்டமாலைகள் நிவர்த்தியாகும்.

அபக்குவமாயிருந்தால் அதாவது பழுக்காமல் பிருந்தால் மாலை வெளி கட்டினால் பக்குவமாகும். பிறகு அதை அறுத்து இந்த தைலத்தை லேபனஞ்செய்தால் மிருதுவத்துவம் உண்டாகும்.

நீர்குண்டி தைலம்:—நொச்சி, பொடுதலை, இலைகளது, கல்கத்தில் தைலத்தை தயார்செய்து அந்த தைலத்தை நசியஞ்செய்தால் கண்டமாலைகள் நிவர்த்தியாகும்.

குஞ்சாதி தைலம்:—குன்றிவேர், குன்றிவிரை, இலைகளை இரண்டுபாகம் அதிகமான சலத்தில் கல்கஞ்செய்து அத்துடன் ஒருபாகம் எள்ளெண்ணெய் கலந்து தைலபதமாக காய்ச்சி அப்பியங்கனஞ் செய்தால் கண்டமாலைகள் நிவர்த்தியாகும்.

கிரந்திரோக சிகிச்சை

வாதகிரந்திக்கு சிகிச்சை:—ஜடாமாஞ்சி, ரத்தபோளம், சித்திரில்கொடி, கண்டுபாரங்கி, பெருவாலைப்பட்டை, வில்வபழம், அருகு, முருங்கன், எலிக்காதஇலை, இலைகளை கோமூத்திரத்தினால், அரைத்து லேபனஞ் செய்தால் வாதகிரந்தி நிவர்த்தியாகும்.

பித்தகிரந்திக்கு சிகிச்சை:—பித்தகிரந்திக்கு முதலில் அட்டையை விட்டு பிறகு பால், ஜலம், இலைகளினால் கழுவவேண்டியது பிறகு கடுக்காய் சூரணம் நிராலசுஷ் ரசத்துடனாவது அல்லது கரும்பு ரசத்துடனாவது சாப்பிடவேண்டியது.

கபகிரந்திக்கு சிகிச்சை:—இலுப்பை, காவல், மருதம், இலைகள் பட்டைகளை அரைத்து லேபனஞ் செய்தால் சகல தோஷங்கள் சமமாகி சிலேஷ்ம தோஷங்கள் நிவர்த்தியாகும்.

மேதஜகிரந்திக்கு சிகிச்சை:—மேதஜகிரந்திக்கு வாய்விளங்கம், சுக்கு, மஞ்சள், இலைகளினால் காய்ச்சிய தைலத்தினால் தடவவேண்

டியது. அல்லது பாலினுல் எள்ளை அரைத்து கல்கஞ்செய்து அதன் மீது லைத்து தணியை சுற்றவேண்டியது.

சாமானிய உபசாரங்கள்:—பக்குவமான கிரந்தியை மிருதுவாக கீறிவிரணத்தை ஹிதமாயிருக்குங் கியாழத்தினுல் கழுவவேண்டியது. மேலும் க்ஷாரம், தேன், நெய், கலந்து கழுவவேண்டியது.

மேகனுதி எண்ணெய்:—கோலைச் சாறு, வல்லாரைச் சாறு, சிறுசெருப்படைச் சாறு, பொன்னுங்காணிச் சாறு, ஆனைநெருஞ் சிச்சாறு, சிந்திற்தண்டுச்சாறு, அரசம்பட்டைச் சாறு, வகைக்குப் படி-½, சிற்றாமணக்கெண்ணெய் படி-¾, நல்லெண்ணெய் படி-¼, இவைகளை ஓர் தைல பாண்டத்திலிட்டு, அதில் சாதிக்காய், சாதி பத்திரி, மாசிக்காய், கற்கடகசிங்கி, சண்பகப்பூ, காட்டாத்திப்பூ, சிறுநாகப்பூ, ஏலம், குரோசானியோமம், வகைக்குக் கழஞ்சு இரண்டு வீதம் இடித்துச் சூரணித்து பசுவின்பால் விட்டரைத்த கற்கத்தைச் சேர்த்துக் கலந்து, பிறகு சித்திரமூல வேர்ப்பட்டை ஒரு பலத்தை பால்விட்டரைத்து அதையும் சேர்த்துக்கலந்து அடுப்பி லேற்றிச் சிறுதீயாக எரித்து தைல பதமாகக் காய்ச்சி வடித்து அதில் இரண்டு பலம் கற்கண்டைத் தூள்செய்துப் போட்டுக் கலக்கி லைத்துக்கொள்க. இதில் வேளைக்கு ½-அவுன்ஸ் வீதம் தினம் ஒருவேளை காலையில் கொள்ள இரண்டு மூன்று முறை பேதி யாகும். இப்படி இரண்டு மூன்றுநாள் கொடுத்து, அதன்பிறகு வேளைக்கு 1-2, தேக்கரண்டிவீதம் தினம் ஒரு வேளையாக காலை சோற்றில் ½-அல்லது 1-மண்டலம் அருந்திவர, மேகரோய்கள் யாவும் நீங்கும். கிரந்தி, சீழ்த்தப் பிரமேகங்கள், வெடிசூலை, மேகரணம், லிங்கப்புத்து, யோனிப்புற்று, அரிகிரந்தி, மேகப்படை கள் முதலியன யாவுங் குணமாகும்.

கருடன் கிழங்கு எண்ணெய்:—கருடன் கிழங்கு பலம்-12, வாய்விளங்கம், வாலுளுவையரிசி, கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு பலம்-1, இவைகளை இடித்து 4-படி சுத்த ஜலத்தி லிட்டு ½-படியாய்ச் சுண்டக்காய்ச்சி வடிகட்டிய கியாழத்துடன் 1-படி சிற்றாமணக்கெண்ணெயையும், சிறு துண்டுகளாக அரிந்த 12-பலம் வெள்காயத்தையும் சேர்த்துக் கலந்து ஓர் தைலபாண்டத்தி லிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாய் எரித்து, வெள்காயம் வெந்து மிதந்து தைல பதம் வரும்போது வடித்து பத்திரப்படுத்துக. இதில் வேளைக்கு ½-முதல் 1-அவுன்ஸ் வீதம் தேகதிடத்திற்கும், நோயின் வன்மைக்கும் ஏற்றவாறு தினம் 1-வேளை வீதம் காலையில் கொடுக்க வும். இப்படி இரண்டு மூன்றுமுறை கொடுத்துவர வெள்ளை, அரை யாப்பு, குஷ்டம் கொருக்கு, கிரந்தி, மேகரணம் முதலியன குணமாகும்.

சித்திரமூல நெய்:—சித்திரமூல வேர்ப்பட்டை பலம்-2, ஆவின் நெய் படி-1, நல்லெண்ணெய் படி-1, சித்திரமூல வேர்ப்பட்டையை பசும்பால் விட்டரைத்து எண்ணெய், நெய் முதலியவற்றுடன் கலந்து பதமுறக் காய்ச்சி வடித்து லைத்துக்கொள்க. இதில் வேளைக்கு 1-2, தேக்கரண்டி வீதம் தினம் 1-வேளை காலையில் அருந்தவும். இப்படி ½-முதல் 1-மண்டலம் அருந்த கிரந்தி, மேக ரணம், வெடிப்புள்ள ரணங்கள், மேகசூலை, கொருக்கு உள்ளழலை முதலியன குணமாகும்.

இடிவல்லாதகி லேகியம்:—சுத்திசெய்த கந்தகம், சுங்கிலியம், பறங்கிப்பட்டை, வாய்விளங்கம், சீரடிமுத்து பருப்பு வகைக்கு பலம்-1, மூக்கைவெட்டி முறைப்படி நன்கு சுத்திசெய்த சோரன் கொட்டை பலம்-5, கந்தகத்தை கல்வத்திலிட்டு சன்னமாக அரைத்து லைத்துக்கொள்க. பிறகு மற்றச் சரக்குகளை இடித்து சூரணித்து, அத்துடன் கந்தகத்தூளையுஞ் சேர்த்து இடித்து கல்வத்தி லிட்டு 4-ஜாமம் நன்கு அரைத்து, பிறகு தேன்விட்டு 2-ஜாமம் அரைத்து மெழுகு பதத்தில் பத்திரப்படுத்துக. இதில் வேளைக்கு சுண்டக்காய் அளவு தினம் இருவேளையாக ஒரு மண்டலம் உட் கொள்ள மேகரோய்கள், கிரந்தி, கட்டி, ரணம் முதலியன குணமாகும். இச்சாபத்தியம்.

கந்தகத் தைலம்:—சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் பலம்-2½, பூவரசம் வித்து பலம்-1½, பிரமதண்டு விதை பலம்-7½, இவை களைப் பொடித்து குமரிச்சாறு விட்டு அரைத்து நெல்லிக்காயளவு மாத்திரைகளாக உருட்டி ஓர்கால் நிழலில் ஆறப்போட்டு, இதனைக் குழித்தைலக் கருவியிலிட்டு முறைப்படி குழித்தைலம் வாங்கி, அதற்குச் சமன் சிற்றாமணக்கெண்ணெய் விட்டு அரைத்து புட்டி யில் பத்திரப்படுத்துக. இதில் வேளைக்கு 5-முதல் 10-துளி வீதம் சர்க்கரையில் விட்டு தினம் 1-2, வேளையாக 5-நாள் கொடுக்கவும். இச்சாபத்தியம். இப்படி விட்டு விட்டு சில முறைகள் கொடுக்க சொரி, சிரங்கு, படைகள், மேகவாய்வு, ரணம் முதலியன குணமாகும்.

பறங்கிச் சூரணம்:—பறங்கிப்பட்டையை சிறு துண்டுகளாக நறுக்கி கருந்தளசிச் சாற்றில் பாவனைசெய்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்து வேளைக்கு நிரிகடிப்பிரமாணம் சாப்பிட்டு வர சொரி, சிரங்கு, படைகள், மேகரணம் முதலியன குணமாகும்.

இரசத் தைலம்:—நன்கு சுத்திசெய்த பாதரசம் பலம்-½, கம் மாறு வெற்றிலை பலம்-5, கோலையிலை பலம்-5, பாவட்டையிலை பலம்-5, சிற்றாமணக்கு நெய் பலம்-10, இவற்றுள் எண்ணெய் நீங் களாக மற்ற சரக்குகளை கல்லுரலிலிட்டு தூணில்லாத உலக்கையால் நன்கு இடித்து கல்வத்திலிட்டு இரசம் உரு தெரியாமல் நன்கு

மடித்து இலைகளின் கற்கம் வெண்ணெய்போல் மசியும் வரையில் நன்கு அரைத்து பிறகு சிற்றாமணக்கு நெய்யில் சேர்த்து மர அகப் பையால் கலக்கி ஜாடிகளில் அல்லது பிங்கான் பாத்திரங்களிலிட்டு வெய்யலில் சூரியபுடமாக வைத்து எடுத்து வைத்துக் கொள்க. வேண்டும்போது மர அகப்பையால் நன்கு கலக்கி இதில் வேளைக்கு ஒரு உச்சிக்கரண்டி அல்லது ½-பலம் வீதம் நெய் ஒரு வேளையாக காலையில் அருந்தவேண்டும். இப்படி மூன்று நாட்கள் கடும்பத்தியம் அல்லது உப்பில்லா பத்தியத்துடன் அருந்தவும். தேவை யாயின் சிலநாட்கள் விட்டுவைத்து பிறகு மீண்டும் மூன்போல் ஓர் முறை அருந்தலாம். இப்படி இரண்டு மூன்று முறை அருந்த கருங் காலிச்சாந்து, செங்காலிச்சாந்து, நுணுக்காய்ச்சாந்து, முதலிய சகல இரத்த, ரோகங்கள், ஆறாத மேகவிரணங்கள், விஷப்புற்று, யோனிப்புற்று, கண்டமாலை, முதலிய மேகரோய்கள் யாவும் குணமாகும்.

அற்புதரோக சிகிச்சை

கட்டிகள்

அற்புதத்திற்கு ரௌத்திரரசம்:—சுத்திசெய்தரசம், சுத்திசெய்த கெந்தி, இவைகளை சமனடையாக கல்வத்திலிட்டு ¼-சாமங்கள் மிருதுவாக அரைத்து சமன் நிப்பிலிச் சூரணத்தைக்கலந்து வெற்றிலை காம்புரசம், சிற்றாமுட்டிரசம், நிலாவரைரசம், வெள்ளைச்சாட்டாரை ரசம், கோமூத்திரம் இவைகளினால் ¼-ஜாமங்கள் அரைத்து அகலி லடக்கி மணல் மறைவில் இலகுபுடமிட்டு சுன்றினடையிதம் தேனு டன் காலைமாலை சாப்பிட்டு வருவதுடன் பாரிஜாதஇலை கோரைக் கிழங்கு பேயாலரைஇலை, வேப்பன்இலை, இவைகளை அரைத்து மேலுக்கு போட்டுவர கட்டிகள் விரைவில் குணமாகும்.

யவக்ஷாராதி லேபனம்:—யவசஷாரம், வாய்விளங்கம் இவை களை கல்வத்திலிட்டு வெண்ணையுடன் அரைத்து ஒளவ் ரத்தத்துடன் கலந்த தடவினால் அற்புதம் அதிசீக்கிரமாக கிவர்த்தியாகும்.

கெந்தகாதி லேபனம்:—கெந்தி, மஞ்சிகை, சுக்கு, வாய்விளங் கம், காகபற்பம், இவைகளை சமனடையாக சூரணித்துக் கலந்த சிறிது எடுத்து ஒளவ் ரத்தத்துடன் கலந்து லேபனஞ் செய்தால் அற்புதரோகம் கிவர்த்தியாகும்.

ஹரித்திராதி லேபனம்:—மஞ்சள், சோத்திரம், ரசகற்பூரம், வெல்லம், சாம்பிராணி, மஞ்சிகை இவைகளை சமனடையாக கல் வத்திலிட்டு சூரணித்து நெய்யுடன் கலந்த லேபனஞ்செய்தால் அற்புதரோகங்கள் கிவர்த்தியாகும். இந்தமுறை சகலமான அற் புதங்களுக்கும் தடவ உதவும்.

களகண்டம், கண்டமாலை, அபஸ்மாரம், அற்புதம் இவை களுக்கு பத்தியங்கள்:—பழைய நெய்யை குடித்தல், பழைய நெய்பு

நெல்லரிசி, யவதானியம், பச்சைப்பயறு, புடலங்காய், பாவக்காய், பொன்னாங்கண்ணிகீரைகள், சுரூபதார்த்தங்கள், காரபதார்த்தங் கள், தீபன பதார்த்தங்கள், சுக்கிலியம், விளாத்து இவைகள் பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—பால், கரும்புரசம், சர்க்கரை, வெல்லம், ஐந்து மாமிசங்கள், பழுபசாதம் புளிப்பு, நித்தீப்பு, குருபதார்த்தங் கள், இவைகள் ஆகாது.

சிலீபத சிகிச்சை

(ஆனைக்கால்)

சித்திரகாதி கல்கம்:—சித்திரமூலம், தேவதாரு, வெள்ளைகடுகு, முருங்கைப்பட்டை இவைகளைக் கற்கஞ்செய்து கோமூத்திரத்துடன் கலந்து சிறிது வெதுப்பி லேபனம் செய்தால் ஆனைக்கால் நிவர்த்தி யாகும்.

ஹரீதகி கல்கம்:—கடுக்காய்தோலை அரைத்து கற்கஞ்செய்து கோமூத்திரத்திலாவது அல்லது வெந்நீரிலாவது கலந்து குடித்தால் ஆனைக்கால் நீங்கும்.

விருத்ததாரு சூரணம்:—விருக்கதாரு சூரணத்தை கோமூத் திரத்திலாவது அல்லது காடியிலாவது கலந்து சாப்பிட்டால் ஒரு வருஷமாயிருக்கும் ஆனைக்கால் குணமாகும்.

பிப்பலியாதி சூரணம்:—திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், செல்லிவற்றல், மாமஞ்சள், சுக்கு, வெள்ளைச்சாரணை இவைகள் வகைக்கு பலம்-1 இவைகள் யாவற்றிற்கும் சமனடை தேவதாரு இவைகளைச் சூரணித்து ½-முதல் ¾-தோலா வீதம் காடியில் சாப் பிட்டு சீரணித்தபிறகு அன்னத்தை புசித்தால் ஆனைக்கால், வாத ரோகம், பிலீஹை, சூன்மம் முதலியன நிவர்த்தியாவதுடன் அக்னி தீபனம் உண்டாகும்.

குடூச்சியாதி லேபனம்:—சிற்றில்கொடி, கடுரோகிணி, சுக்கு, தேவதாரு, வாய்விளங்கம் இவைகளை கோமூத்திரத்தில் அரைத்து லேபனம் செய்தால் ஆனைக்கால் குணமாகும்.

அபயாதி லேபனம்:—கடுக்காய், வெள்ளைகடுகு, சுக்கு, பெருங் காயம், வசம்பு, முருங்கைவேர், எருக்கன்வேர் இவைகளைச் சம னடையாய் எருக்கன்பாலினால் அரைத்து லேபனம்செய்தால் ஆனைக் கால் நிவர்த்தியாகும்.

பித்தசிலீபத லேபனம்:—மஞ்சிஷ்டி, அதிமதுரம், சிற்ற ரத்தை, ஜடாமாஞ்சி, வெள்ளைச்சாரணைவேர் இவைகளை சமனட

காடிவிட்டு அரைத்து லேபனம் செய்தால் பித்தசிரோதம் நிவர்த்தி யாகும்.

தத்தூராதி லேபனம்:—ஊமத்தன், ஆமணக்குவேர், நொச்சி, வெள்ளைச்சாரணைவேர், முருங்கைவேர், வெள்ளாகடுகு இவைகளை சமனடையாய் அரைத்து தடவினால் கொஞ்சகாலமாயிருக்கும் சிரோத ரோகம் நிவர்த்தியாகும்.

சித்தாதி லேபனம்:—வெள்ளாகடுகு, முருங்கைவேர்ப்பட்டை, தேவதாரு, சுக்கு இவைகளை கோமூத்திரத்தில் அரைத்து லேபனம் செய்தாலும் அல்லது வெள்ளாகடுகு, வெள்ளைச்சாரணை இவைகளை கற்கஞ்செய்து காடியினால் அரைத்து லேபனம் செய்தாலும் ஆணிக் கால் குணமாகும்.

சவுரேசுர கிருதம்:—நொச்சி, தேவதாரு, நிரிபலை, நிரிகடுகு, யானைத்திப்பிலி, பஞ்சலவணம், வாய்விளங்கம, சித்திரமூலம், செல்வியம், மோடி, குங்கிலியம், இலக்காந்தை, வசம்பு, யவசூரம், வட்டத்திருப்பி, முத்தக்காசு, ஏலக்காய், விருந்ததாரு இவைகளை வகைக்கு 1-தோலா விதம் கற்கம்செய்து அதில் நெய், தசமூல கியாழம், தானிய கியாழம், தயிர்மீததேட்டை இவை யாவும் வகைக்கு 20-பலம் சேர்த்து கிருதபக்குவமாய்க் காய்ச்சி ½-பலம் விதம் குடித்தால் கபவாதத்தினால் உண்டான ஆணிக்கால், மாமிச ரசத்துடன்கூடிய ஆணிக்கால், மேதோபிரதமான ஆணிக்கால், அபஸ்மி, களகண்டம், ஆந்திரவிருத்தி, அற்புதரோகம், இரஹணி தோஷம், விக்கம், மூலவியாதி, கோஷ்டகிருமிரோகம் இவை யாவும் நிவர்த்தியாவதுடன் அக்கினிதீபனம் உண்டாகும்.

விடங்காதி தைலம்:—வாய்விளங்கம், கன்னிவேர், எருக்கன் வேர், சுக்கு, சித்திரமூலம், தேவதாரு, ஏலக்காய், பஞ்சலவணம் இவைகள் சமனடையாய்ச் சேர்த்து தயிலத்தில் கலந்து தயிலபதமாய்க் காய்ச்சி குடித்தால் ஆணிக்கால் குணமாகும்.

ஆணிக்காலுக்கு பத்தியங்கள்:—பழயநெற்பு செல், சம்பா அரிசி, கொள்ளு, வெங்காயம், புடலங்காய், கத்திரிக்காய், முருங்கைக்காய், பாவக்காய், வெள்ளைச்சாரணைவேர், ஆமணக்கு எண்ணெய் கோமூத்திரம், காரம், துவர்ப்பு, நீணமான பதார்த்தங்கள் இவை பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—பழய சாப்பாடு, பாலினால் செய்யப்படும் பதார்த்தங்கள், வெல்லம், நீர் ஜந்துமாமிசம், நித்திப்பான பதார்த்தங்கள், புளிப்பு, விந்தியபருவத சார்பிலுள்ள ஆற்றாலைகள், பசபசப்புள்ள பதார்த்தங்கள் குருபதார்த்தங்கள் இவைகள் ஆகாது.

அந்தரவித்ரதி சிகிச்சை

(பெரிய கட்டிகள்)

வித்திரதிக்கு வருணாதி கியாழம்:—அன்னபேதி, இந்துப்பு, கிலாசத்து, பெருங்காயம், இவைகளைச் சூரணித்து உலிமிடிபட்டை கியாழத்தில் போட்டு சாப்பிட்டால் உள்ளிருந்து பக்குவமாகாமல் மிகவும் சிக்கமுள்ளதாயும் பயங்காமானதுமான வித்ரதி நிவர்த்தியாகும்.

சிக்விராதி கியாழம்:—முருங்கைவேர்ப்பட்டை, ஓமம், உலிமிடிபட்டை, மஞ்சள், மரமஞ்சள், அரசன்பட்டை இவைகளைச் சமனடையாய்க் கியாழம்வைத்து அதுபோலவே சூரணமும் செய்து இரண்டுங் கூட்டி சாப்பிட்டால் உள்புறமாயுள்ள வித்ரதி நிவர்த்தியாகும்.

புனர்ணவாதி கியாழம்:—வெள்ளைச்சாரணைவேர், உலிமிடிவேர் இவைகளை கியாழம்வைத்து கொடுத்தால் பக்குவமாயிருக்கும் வித்ரதி குணமாகும்.

தசமூலாதி கியாழம்:—தசமூலம், சித்தில்கொடி, கடுக்காய்த்தோல், தேவதாரு, வெள்ளைச்சாரணை, முருங்கைவேர், சுக்கு இவைகளைக் கியாழம் வைத்துக் குடித்தால் சூரம், வித்திரதி லீக்கம் முதலியன குணமாகும்.

வாதவித்திரதிக்கு கியாழம்:—வெள்ளைச்சாரணைவேர், மரமஞ்சள், சுக்கு, தசமூலம் இவைகளை சமனடையாய் கியாழம்வைத்து அதில் குங்கிலியசூரணம் அல்லது ஆமணக்கு எண்ணெய் கலந்து சாப்பிட்டால் வாதவித்திரதி குணமாகும்.

கபவித்திரதிக்கு கியாழம்:—நிரிபலை, முருங்கைவேர்பட்டை, உலிமிடிபட்டை, தசமூலம இவைகளைக் கியாழம்வைத்து அதில் குங்கிலியசூரணம், கோமூத்திரம் இவைகளை கலந்து சாப்பிட்டால் கபவித்திரதி குணமாகும்.

வித்ரதி லேபனம்:—யவதானியம், கோதுமை, பச்சைப்பயிர், இவைகளை மிருதுவாக அரைத்து லேபனஞ்செய்தால் பக்குவமாகிய வித்திரதி உடைந்து குணமாகும்.

வாதவித்திரதி லேபனம்:—சிகப்பு ஆமணக்குவேரை கல்கஞ் செய்து மாமிசரசம், நெய், எண்ணெய் இவைகளைச் சேர்த்து கொஞ்சம் சூடாக்கி தட்டமாக லேபனஞ் செய்தால் வாதவித்திரதி நிவர்த்தியாகும்.

நிரிபலாதி குக்குலு:—கடுக்காய், தானிக்காய், செல்லிவற்றல், இலைகள் வகைக்கு பலம்-1, திப்பிலி 2-பலம், குங்கிலியம் 5-பலம்,

இலைகள் பாலையும் சமனடையாகச் சூரணித்து ½ வராகனெடை வீதம் உட்கொண்டுவர அந்தர வித்திரதி நிவர்த்தியாகும்.

கஞ்ஜலி யோகம்:—வருணதி கியாழத்துடன், ரசம், கெந்தி, இலைகளை சூழும்புபோல் அரைத்து 2 குன்றிஎடை சாப்பிட்டால் வெளிவித்திரதி அந்தரவித்திரதி இலைகள் நிவர்த்தியாகும்.

அதுபக்குவமாகாமல் இருந்தால் இதைதான் செய்யவேண்டியது. பக்குவமான பிறகு விரணசிகிச்சைகளை செய்தல்வேண்டும்.

ஜலவுகா பாதனம்:—சகலவித்திரதிகளிலும் அட்டையகடிக்க விட்டு இரத்தத்தை வாங்கி பிறகு விரேசனம், வியர்வைவாங்குதல் முதலிய வித்திரதி சிகிச்சைகளை செய்யவேண்டியது.

திரிபலா யோகம்:—பக்குவமான வித்திரதிகளிலும், இரத்தம், சீழ்வொழுகும் வித்திரதிகளிலும், காடி விரணங்களிலும் பகந்தரத்திலும் கண்டமாலைகளிலும் திரிபலாதி குக்குலு சிறந்தது.

சௌபாஞ்சன நிர்யாசரோகம்:—மூருங்கைபிசின், பெருங்காயம், இந்துப்பு, இலைகளைச் சேர்த்து சூரணித்து காஜியில் சாப்பிட்டால் வித்திரதி நிவர்த்தியாகும்.

வித்திரதிக்கு பத்தியங்கள்:—வித்திரதி அபக்குவமாக யிருந்தால், விரேசனம், பழுக்கவைக்கும் லேபனம், வியர்வை, வாங்கல் முதலிய சிகிச்சைகளைச்செய்தல் வேண்டும். வித்திரதி பக்குவமாயிருந்தால் சஸ்திரசிகிச்சை, உடைப்பதற்கு லேபனம் விரணத்தை ஆற்றும் மருந்துகள் முதலியவைகளைப் பயன்படுத்தவேண்டும்.

விரணரோக சிகிச்சை

நிம்பலாதி கல்கம்:—வேப்பன்இலை, மரமஞ்சள், அதிமதுரம், இலைகளை தேன், நெய் கலந்து அரைத்து வஸ்திரத்திற்கு லேபனஞ் செய்து வத்தி செய்தாவது அல்லது எள்ளு கல்கத்திலாவது விரண சோதனம் செய்யவேண்டியது.

புங்கன், வேப்பன் கொச்சி இலைகளின் சாறுகளினால் புண்களைக் கழுவுதல் லேபனஞ்செய்தல் முதலியவைகளைச்செய்தால் விரணங்களிலுள்ள கிருமிகள் நாசமாகும்.

திரிபலாதி கியாழம்:—நிரிபலை கியாழத்தில் குங்கிலிய சூரணத்தைக் கலந்து சாப்பிட்டுவர சூத்தல், இரத்தம், சீழ்வடிதல், துர்கந்தம் இவைகளுடன் கூடிய விரண வியாதிகள் நிவர்த்தியாகும்.

ஹஸ்திதந்தாதி லேபனம்:—யானைகொம்பை ஜலத்தில் அரைத்து லேபனஞ் செய்தால் மிகவும் கெட்டியாயிருக்கும் விரணங்கள் உடைந்துவிடும்.

துஷ்டவிரண லேபனம்:—வேப்பன்இலை, எள்ளு, சிவதை, இந்துப்பு, இலைகளை மைப்போல் அரைத்து தேனுடன் கலந்து லேபனஞ்செய்தால் துஷ்டவிரணங்கள் நிவர்த்தியாகும்.

அபோரஜாதி லேபனம்:—அன்னபேதி, நிரிபலை, இலவங்கம், மரமஞ்சள், இலைகளை சமனடையாக அரைத்து லேபனஞ் செய்தால் விரணங்கள் ஆறி புதியதோல் உண்டாகும்.

விரணசோபைக்கு லேபனம்:—அசுவகந்தி, கடுக்காய்த்தோல், தேவதாரு, சுக்கு, சிற்றரத்தை, இலைகளை சமனடையாக அரைத்து விரணத்திற்கு லேபனஞ் செய்தால் விரணசோபை நிவர்த்தியாகும்.

ஜாத்தியாதி கிருதம்:—ஜாதிபத்திரி, பேய்ப்புடல், வேப்பம்பட்டை, கடுரோகணி, மரமஞ்சள், கன்னரிவேர், மஞ்சிஷ்டி, வெட்டிவேர், மயில்துத்தம், அதிமதுரம், புங்கன்விளை இலைகளை சமனடையாகச் சேர்த்து கியாழம் வைத்து அதில் நெய் கலந்து கிருதபக்குவமாகக் காய்ச்சி மேலுக்குப்போட சூக்ஷ்ம முகத்தோடு மருமத்தைச் சேர்ந்து ஒழிவிக்கொண்டு கம்பீரமான நோய்களையுடைய விரணங்கள் சுத்தமாகி நிவர்த்தியாகும்.

பாரதாதி மலஹர கிருதம்:—ரசம், கெந்தி இலைகளை சமனடையாக கல்வத்திலிட்டு மைப்போல் அரைத்து அதற்கு சமமாக கிருதார்கிங்கியைக் கலந்து அரைத்து இலைகள் யாவற்றிற்கும் சமம் கடுக்காய் காசிக்கட்டி சேர்த்த சூரணத்தைக் கலந்து செவ்வையாக அரைத்து இந்த எடைக்கு நான்குபாகம் அதிகமாக நெய்யைக் கலந்து அதில் வத்திலை நனைத்து விரணத்தின்மீது போட்டால் துஷ்டமான விரணம் சுத்தமாவதுடன் காடவிரணம் சகல விரணங்கள் இலைகள் நிவர்த்தியாகும்.

அமருதாதி குக்குலு:—சிந்தில்கொடி, பேய்ப்புடல், சுக்கு, திப்பிலி, மிளகு, நிரிபலை, வாய்விளங்கம் இலைகளை சமனடையாகச் சேர்த்து சூரணித்து இந்த சூரணத்திற்கு சமனடை குங்கிலிய சூரணத்தைக் கலந்து பிரதினம் ½-முதல் ½-பலம் விதம் சாப்பிட்டுக் கொண்டுவர விரணங்கள், வாதரத்தம், குன்மம், உதரரோகம், பாண்டுரோகம், விக்கம் இலைகள் யாவும் நிவர்த்தியாகும்.

குக்குலு வடுகங்கள்:—நிரிபலை சூரணத்துடன் குங்கிலியஞ் சேர்த்து மாத்திரைகள் செய்து சாப்பிட்டால் மலபந்தம் நிவர்த்தியாகி விரணங்கள் ஆறும்.

விடங்காதி குக்குலு வடுகங்கள்:—வாய்விளங்கம், நிரிபலை, நிரிகடுரு இலைகளைச் சூரணித்து இந்த சூரணத்திற்கு சமனடை குங்கிலிய சூரணம் சேர்த்து நெய்விட்டு அரைத்து மாத்திரைகள்

செய்து சாப்பிட்டு பத்தியத்துடனிருந்தால் துஷ்டவிரணங்கள், அபசி, மேகம், குஷ்டம், நாடீவிரணம் இவைகள் சுத்தமாகும்.

விரணசோதன ரோபனவிதி:—எள்ளு, இந்துப்பு, அதிமதுரம், வேப்பிலை, மஞ்சள், மரமஞ்சள், சிவதைவேர் இவைகளை சூரணித்து தேனுடன் அரைத்து லேபனஞ் செய்தால் துஷ்டமானவிரணஞ் சுத்தமாகும்.

பிரக்ஷாளனம்:—வேப்பன்இலை கஷாயத்தினால் விரணங்களை கழுவவேண்டியது. மற்றும் ஆல், அத்தி, ஒதியன் முதலிய பட்டைகளின் கியாழம், கடுக்காய் கியாழம் முதலியவற்றினும் விரணங்களைக் கழுவலாம்.

தாதகீ சூரணம்:—காட்டாத்திப்பூவை சூரணித்து வெள்ளை அகத்திவிரை தயிலத்தில் கலந்து சாப்பிட்டால் அக்னிஜக்தவிரணம், விசர்ப்பி, கிடவிரணம், ஜாதவிரணம், வெகுகாலமாயிருக்கும் துஷ்டவிரணம், நாடீமர்மம் இவைகளை அனுசரித்துள்ள ரணங்கள் இவை கிவர்த்தியாகும்.

திரிபலா சூரணம்:—திரிபலை சூரணத்தை தேங்காயெண்ணெயுடன் கலந்து லேபனம்செய்தால் அக்னிதக்தவிரணம் கிவர்த்தியாகும்.

மதூசிஷ்டாதி தைலம்:—மொழுக்கு, அதிமதுரம், லோத்திரம், குங்கிலியம், பெருங்கடம்பை, சந்தனம், மஞ்சிஷ்டி இவைகளை கற்கஞ்செய்து அதில் நெய்விட்டு காய்ச்சி லேபனம்செய்தால் அக்னிதக்த விரணம் பக்குகட்டி கிவர்த்தியாகும்.

ஆகந்துக விரண சிகிச்சை:—ஆகந்துக விரணத்தில் அதிமதுர சூரணத்தை நெய்யுடன்கலந்து காய்ச்சி சிறிது உஷ்ணமாயிருக்கும் போது லேபனம் செய்யவேண்டியது.

பித்தகரமான பதார்த்தங்கள் ரக்தசோதனகரங்களான பதார்த்தங்கள் உஷ்ணகரபதார்த்தங்கள் இவைகளை சக்தியளவு தேன் நெய் இவைகளுடன் கலந்து ராத்திரிகாலத்தில் உபயோகித்தால் ஆகந்துக விரணங்கள் நீங்கும்.

மருத்துவன் ஆகந்துக விரணத்தை செவ்வையாயறிந்து ரக்த பித்த உஷ்ணகாசனகர சீதகரங்களான கிரியைகளை நெய் தேன் இவைகளுடன் கலந்து சிகிச்சை செய்யவேண்டியது. ஆகந்துக விரணம் அதிகமாயிருக்கும்பொழுது ரோகியின் பலாபலத்தையறிந்து வமனம், விரேசனம், லங்கணம், போஜனம், குருவிலாங்கல் இவைகளைச் செய்யவேண்டியது.

ஓமம், உப்பு இவைகளை ஸமபோலனரத்து லோஹபாத்திரத்தில் வைத்து வேகவைத்து அடிக்கடி லேபனம்செய்து கெட்ட ரத்தத்தை

கொம்பு, ஊசி, அலகு, நொக்கு முதலியவைகளினால் விமோசனம் செய்யவேண்டியது.

சத்யோவிரண சிகிச்சை:—பக்குடன் கூடியிருக்கும் சத்யோ ஷார விரணங்களுக்கு அதிமதுர சூரணத்தை நெய்யில்போட்டு காய்ச்சி ஆற்றி, ஏழுநாள் லேபனம்செய்து பிறகு துவர்ப்பு, மதுரம், தேனம் ஆகிய சகல சிகிச்சைகளைச் செய்தால் சாமானியவிரணம் கிவர்த்தியாகும்.

சர்வ விரணங்களுக்கு பத்தியம்:—யவதானியம், 60-நாளில் பயிராகும் அரிசி, கோதுமை, பழயவெல்லம், பழயவெண்ணெய், அரிசி, சிறுகடலை, துவரை, பச்சைப்பயறு இவைகளது கட்டு, கஞ்சி, ரசம், தேன், பொரிகஞ்சி, காட்டுஜந்து பஷி மாமிசம், நெய், எண்ணெய், புடலங்காய், இளமுள்ளங்கி, கத்திரிக்காய், பாவக்காய், முள்ளுவெள்ளரிக்காய், சிறுகீரை இவை யாவும் பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—புணர்ச்சி, ஆயாசம், அதிகமாய்ப் பேசுதல், பகல் நித்திரை, எப்பொழுதும் பெண்களையே பார்க்குதல், இரவில் விழித்திருக்குதல், அதிக சஞ்சாரம், சோகம், விருத்த போஜனம், சலபானம், தாம்பூலம், கீரைகள், மீன்வகையாக்கள், தேகத்திற்கு பிடிக்காத அன்னம் இவை யாவும் அபத்தியங்கள்.

நாடீவிரண சிகிச்சை

வாதநாடீவிரணத்தை கத்தியினல்கீறி, வெள்ளை காயுரிவிதை, எள்ளு இவைகளை சமனளவாக அரைத்து லேபனஞ் செய்ய வேண்டியது.

பித்தநாடி விரணத்திற்கு எள்ளு, மஞ்சிஷ்டி, நாகதந்தி, மஞ்சள் இவைகளை சமனளவாக அரைத்து லேபனஞ் செய்யவேண்டியது.

கபநாடீ விரணத்தில், எள்ளு, அதிமதுரம், நாகதந்தி, வேப்பன், இந்துப்பு, இவைகளை அரைத்து லேபனஞ் செய்யவேண்டியது.

நாடீவிரண சாமானிய சிகிச்சை:—வைத்தியர், நாடீஸ்தானத்தை அறிந்து சன்னிதானத்தினல் அதைச் சேதித்து சகல விரணங்களில் செய்யும் சிகிச்சைகளை செய்யவேண்டியது.

மெலிந்திருத்தல், தர்பலம், பயம், இவைகளை யுடையவர்களுக்கு உண்டான நாடீவிரணங்களையும் மர்மதலங்களை சேர்ந்திருக்கும நாடீவிரணங்களையும் அறுக்காமல் ஷாரத்தினல் குடவேண்டும நாடீவிரணங்களையும் அறுக்கக் கூடாதென்று அறியவேண்டியது. கத்திகளினல் என்றைக்கும் அறுக்கக் கூடாதென்று அறியவேண்டியது.

நாடீவிரண சிகிச்சை:—விழுதல், வெட்டுதல், சேதித்தல் முத லியவைகளினால் எலும்பு உடைந்திருந்தால் முதலில் குளிர்ந்த ஜலம் போட்டு பிறகு சுத்திகளினால் சிறிய நரம்புகள், ஆமல் படிக்கு அறுத்து சரீரத்தில் பொத்தியிருக்கும் எலும்புகளை யெடுத்துவிட்டு அதின்மீது சிகப்பு மண்ணை தடவி மூங்கில்பத்தையைவைத்து கட்டு கட்டி பிறகு மஞ்சிஷ்டி அதிமதுரம் இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றினால் அரைத்து லேபனஞ்செய்து நெய்யில் அரிசிமாவை கொட்டி லேபனஞ் செய்யவேண்டியது.

விட்ங்காதி குக்குலு:—வாய்விளங்கம், கடுக்காய், தானிக் காய், நெல்லிவற்றல், சுக்கு, திப்பிலி, மிளகு, இவைகளை சமனடை யாகச் சூரணித்து இந்த சூரணத்திற்கு சமம் குங்கிலிய சூரணத் தைக் கலந்து நெய்விட்டு அரைத்து மாத்திரைகள் செய்து சாப்பிட்டு ஹிதமானபோசனம் செய்தால் துஷ்ட விரணங்கள், அபசி, மேகம், குஷ்டம், நாடீவிரணம் இவைகள் குணமாகும்.

நரஅஸ்தி தைலம்:—மனிதர்களின் எலும்புகளிலிருந்து எடுக் கப்படும் தைலத்தை லேபனஞ் செய்தால் அது உடைந்த பக்கு கட்டி காய்ந்துவிடும்.

நிர்குண்டி தைலம்:—நொச்சிசெடி சமூலமாக இடித்தி ரசத்தையெடுத்து அத்துடன் எண்ணெயைச் சேர்த்து காய்ச்சி லேப னஞ்செய்தால் துஷ்ட விரணங்கள் ஆறும்.

அரக்வதாரு வர்த்தி:—கொன்னை, மஞ்சள், இலந்தங்காய் இவைகளை சூரணித்து அத்துடன் நெய், தேன் கலந்து நூலினால் வர்த்திசெய்து அதில் நனைத்து விரணங்களின்மீது போட்டால் வி ரணம் சுத்தமாகும்.

குக்குலு லேபனம்:—சுத்திசெய்த மைசாகி குங்கிலியம் திரிபலை, திரிகடுகு, இவைகளை சமனடையாக நெய்விட்டு அரைத்த லேபனஞ்செய்தால் துஷ்ட நாடீவிரணங்கள் பகந்தரம் இவைகள் குணமாகும்.

பகந்தர சிகிச்சை

பகந்தரத்திற்கு கதிராதி தயாழம்:—கருங்காலிவேர், திரிபலை இவைகளைச் சமனடையாய்க் தியாழம்வைத்து அதில் பசும்நெய் வாய்விளங்கச் சூரணஞ் சேர்த்து சாப்பிட்டால் பகந்தரம் நிவர்த் தியாகும்.

ரசாஞ்சனாதி சுற்கம்:—கஸ்தூரிமஞ்சள், மஞ்சள், மரமஞ்சள் மஞ்சிஷ்டி, வேப்பன்இலை, வெதை இவைகளை கற்கஞ்செய்து குடி தால் நாடீவிரணம், பகந்தரம் முதலியன நிவர்த்தியாகும்.

ரவிதாண்டவ ரசம்:—சுத்திசெய்த ரசம் 1-பாகம், சுத்திசெய்த கெந்தி 2-பாகம் இவைகளை கல்வத்திலிட்டு கற்றுழைச்சாற்றினால் 3-நாள் அரைத்து உருண்டைசெய்து மேற்கூறிய ரசகெந்திகளுக்கு சமனடையாய்ச் செம்பை சேகரித்து டப்பிசெய்து அதில் அந்த உருண்டையை வைத்து சந்தகை லேபனம்செய்து வாலுகாயந்திரத் தில் வைத்து அது நிறைய சாம்பல்போட்டு அடுப்பிலேற்றி நிவி மான அக்கினியால் 3-ஜாமங்கள் எரித்து ஆறியபிறகு எடுத்து கல்வத்திலிட்டு சூரணித்து எலுமிச்சம்பழச் சாற்றினால் 7-முறை அரைத்து எழுமுறை புடமிட்டு அதில் ஒரு குன்றிஎடை தேனுடனு வது அல்லது நெய்யுடனுவது அல்லது நிலப்பனக்கிழங்கு வெள்ளைப் பூண்டு இவைகளை காடியினால் அரைத்து இந்த அனுபானத்துடனுவது கொடுத்துவர பகந்தம் குணமாகும்.

இந்த ரசம் சாப்பிடும்போது மதுரமான ஆகாரங்கள் சாப்பிட வேண்டியது. பகல்நித்திரை, புணர்ச்சி, சீதளஆகாரம் இவைகளை விடவேண்டியது.

பிடால அஸ்தி லேபனம்:—திரிபலை தியாழத்தினால் காட்டு பூனை எலும்பை அரைத்து தடவினால் துஷ்டவிரணங்கள் பகந்தரம் குணமாகும்.

குஷ்டாதி லேபனம்:—கோஷ்டம், சிவதை, எள்ளு, தந்தி முலம், திப்பிலி, இந்துப்பு, தேன், மஞ்சள், திரிபலை, தந்தம் இவை மனடையாய் அரைத்து தடவினால் பகந்தரம் குணமாகும்.

திலாதி லேபனம்:—எள்ளு, சிவதைவேர், நாகதந்தி, மஞ் சிஷ்டி, இந்துப்பு இவைகளைச் சமனடையாய்ச் சூரணித்து நெய், தேன் இவைகளைவிட்டு அரைத்து லேபனம் செய்தால் பகந்தரம் குணமாகும்.

வடபத்திராதி லேபனம்:—ஆலிலை, செங்கல், சுக்கு, சிந்தில் கொடி, வெள்ளைச்சாரணைவேர், இவைகளை சமனடையாய் மைபோல் அரைத்து லேபனம்செய்தால் பகந்தரம் குணமாகும்.

திலாதி லேபனம்:—எள்ளு, கடுக்காய், லோத்திரம், வேப்பன் இலை, மஞ்சள், வசம்பு, கோஷ்டம், இவைகளை சமனடையாயரைத்து லேபனம் செய்தால் பகந்தரம், நாடீவிரணம், உபதம்சம், துஷ்டவிர ணம் முதலியன குணமாகும்.

யஷ்டியாதி லேபனம்:—அதிமதுரம், சிந்தில்கொடி, சுக்கு, ஆலிலை, வெள்ளைச்சாரணைவேர் இவைகளை சமனடையாய்த் தண்ணீர் விட்டு அரைத்த தடவினால் பித்தபகந்தரம் குணமாகும்.

சிலேஷ்ம பகந்தரத்திற்கு கான்சன்யாதி லேபனம்:—தேவதாரு னம், மஞ்சள், மரமஞ்சள், சிவகாந்தை, மஞ்சிஷ்டி, தண்ணீர்விட்

டான்கிழங்கு, கெந்தி, காட்டாத்திப்பூ, பஞ்சலவணம் இவைகளை சமனடையாய்க் கல்வத்திலிட்டு கற்றுழைசாற்றினால் அரைத்து தடவி னால் சிலேஷ்ம பகந்தரம் குணமாகும்.

இருமியுக்த பகந்தரத்திற்கு விடங்காதி லேபனம்:—வாய்விளங் கம், திரிபலை, திப்பிலி, இவைகளை சமனடையாய்ச் சூரணித்து தேன் எண்ணெய் கலந்து லேபனம் செய்தால் இருமியுடன் நீர் ஒழுகிக் கொண்டிருக்கும் பகந்தரம் குணமாகும்.

அபக்குவ பகந்தர சிகிச்சை:—அபக்குவமான பகந்தர விரணங் களை புலைகள், சுரசுக்கள், சுதாரங்கள் முதலியவைகளினாலும் அட்டைகளினாலும் ரத்தத்தை எடுத்து கார்த்திகைகிழங்கு கரும் ஜீமத்தை, விஷமுஷ்டி இவைகளை அரைத்து அல்லது எருக்கன்வேரை நொச்சிஇலை சாற்றினால் அரைத்து தடவவேண்டியது.

வாதபகந்தர விரணங்களுக்கு விடங்காதி வடுகங்கள்:—வாய் விளங்கம், வெட்பாலை, திப்பிலி இவைகளை சமனடையாக சூர ணித்து இந்த சூரணத்திற்கு இரண்டுபாகம் அதிகமாக குங்கிலிய சூரணம் இதற்கு சமனடை திரிபலை சூரணஞ்சேர்த்து நெய்யுடன் அரைத்து ½-பலம் விதம் தேனுடன் சாப்பிட்டால் வாதபகந்தரம் குணமாகும்.

பகந்தரத்திற்கு யோகராஜ குக்குலு:—திப்பிலி, மோடி, செவ் வியம், சித்திரமூலம், சுக்கு, வட்டத்திருப்பி, வாய்விளங்கம், வெட் பாலை, பெருங்காயம், கண்டுபாரங்கி, வசம்பு, வெள்ளை கடுகு, அதி விடையம், ஜாதிக்காய், சேகம், காட்டுமிளகு, ஓமதிப்பிலி, ஓமம், கடுகுரோகணி, பெருங்கடம்பைவேர், இவைகளை சமனடையாகச் சூரணித்து இந்த சூரணத்திற்கு இரண்டுபாகம் அதிகமாக திரிபலை சூரணம் இவைகள் பாவற்றிற்கும் சமம் சுத்திசெய்த குங்கிலியம் கலந்து நெய்யுடன் அரைத்து தானிக்காய் அளவு மாத்திரைகள் செய்து காலுமண்டலங்கள் காலை மாலை சாப்பிட்டு வந்தால் மூலம், வாதகுன்மம், பாண்டுரோகம், விக்கம், அருசி, சாபிசூலை, உதாவர்த் தம், பிரமேகம், ரத்தவாதம், குஷ்டம், சூலியம், அபஸ்மாரம், இருத் ரோகம், கிராணி, அக்கினிமாந்தம், சுவாசம், இருமல், பகந்தரம், கிழத்தனம், சுக்கிலதோஷம், யோனிதோஷம், சகல தோஷம் இவை கள் யாவும் நிவர்த்தியாகும்.

நிஷா தயிலம்:—மஞ்சள், எருக்கன்பால், இந்துப்பு, சித்திர மூலம், கொள்ளுக்கர்வேரை, மஞ்சிஷ்டி, வெட்பாலை இவைகளினால் தயார்செய்த தைலத்தை லேபனஞ் செய்தால் பகந்தரம் குணமாகும்.

தார்விக வர்த்தி:—சதாரக்கள்ளி, எருக்கன்பால், இவைகளால் மரமஞ்சளை அரைத்து வஸ்திரத்திற்கு தடவி வர்த்திசெய்து பகந்தரம்,

காடிவிரணங்களில் வைத்தால் காடிவிரணம் பகந்தரம் இவைகள் குணமாகும்.

நிசா வர்த்தி:—மஞ்சள், இந்துப்பு, கடுகு, குங்கிலியம் இவை களை தேனுடன் அரைத்து வஸ்திரத்திற்குதடவி காடிவிரணம் பகந் தரத்தில் வைத்தால் காடிவிரணம், பகந்தரம் இவைகள் நிவர்த்தி யாகும்.

பகந்தரத்திற்கு புகை:—கரிமலத்தைப் பொடித்துக் கரிநெருப்பி லிட்டு அதினின்று எழும் புகையை பகந்தர விரணங்களில் தாக்கும் படிச் செய்து வர பகந்தர விரணம் விரைவில் ஆறும்.

பகந்தர விரணத்திற்கு பத்தியம்:—பகந்தரம், பக்குவமாகாம லிருந்தால், சோதனம், லேபனம், லங்கனம், ரத்தமோக்ஷம் இவை களைச் செய்யவேண்டியது.

பக்குவமான விரணத்தில் சன்னிதகருமம், க்ஷாராக்கினி கருமம் களை செய்யவேண்டியது.

மேலும் அரிசி, பச்சைப்பயிறு கட்டு, கஞ்சி, மாமிசரசம், புட லங்காய், முருங்கக்காய், பொடுதலை, இளமுள்ளங்கி, எள்ளெண் ணெய், கடுகு எண்ணெய், துவர்ப்பான பதார்த்தங்கள், நெய், தேன் இவைகள் ஆகும்.

அபத்தியங்கள்:—புணர்ச்சி, சண்டை, ஆனைஏற்றம், குதிரை ஏற்றம், குருத்துவமான பதார்த்தங்கள் இவைகளை பகந்தரரோகி நிவர்த்திக்க வேண்டியது.

உபதம்ச சிகிச்சை

(கொருக்கு ரோகம்)

பித்த உபதம்சத்திற்கு கைரிகாதி தயாரும்:—காவிக்கல், கல் தூரி மஞ்சள், மஞ்சிஷ்டி, அதிமதுரம், வெட்டிவேர், தாமரைதண்டு, சந்தனம், கரும்அல்லிக்கிழங்கு இவைகளை சமனடையாக தயாரும் வைத்து குடித்தால் பித்த உபதம்சம் நிவர்த்தியாகும்.

பித்த ரக்தோபதம்சத்திற்கு நிம்பாதி தயாரும்:—வேப்பன் சர்க் கு, மருதம்பட்டை, அரசம்பட்டை, கடம்புபட்டை, வேப்பன் பட்டை, காவல்பட்டை, ஆலன்பட்டை, அத்திபட்டை, வஞ்சி இவைகளை சமனடையாக தயாரும் காய்ச்சி, இதினால் விரணத்தை கழுவினாலும் அல்லது லேபனஞ் செய்தாலும் இந்த நிறுகளுடன் நெய் சேர்த்து, கிருதம் தயார்செய்து சாப்பிட்டாலும் அல்லது மேல்படி நிறுகளை சமனடையாய் சூரணித்து சாப்பிட்டாலும், பித்தோபதம்சம் நிவர்த்தியாகும்.

சகலஉபதம்ச ரோகத்திற்கு படோலாதி கியாழம்:—பேய்ப் புடல், வேப்பன்னர்க்கு, கடுக்காய், தானிக்காய், செல்லிவற்றல், நிலவேம்பு, இவைகள் சமனடையா கியாழம் வைத்து குடித்தாலும் அல்லது கருங்காலி, வேங்கை, இவைகள் கியாழத்தில் குங்கிலிய சூரணத்தைக்கலந்து குடித்தாலும் அல்லது திரிபலை சூரணத்தை கலந்து குடித்தாலும் சகல உபதம்ச ரோகங்களும் நிவர்த்தியாகும்.

ஆமிரதுவக்சுவ ரசபானம்:—மாம்பட்டையை இடித்து ஒரு பலம் இரசத்தை எடுத்து அதில் நாலு பலம் பால் கலந்து ஏழுநாள் காலையில் சாப்பிட்டு வந்தால் உபதம்சரோகம் நிவர்த்தியாகும்.

சூரணம்:—வேலன் இலை சூரணத்தையாவது, மாதளம்பட்டை சூரணத்தையாவது அரைத்து லேபனம் செய்தால் உபதம்சரோகம் நிவர்த்தியாகும்.

ஜந்துவித உபதம்சத்திற்கு சகல வியாதி ஹரண ரசம்:—உலாந்தா லிங்கத்தில் எடுத்த ரசம் 1-பாகம், சுத்திசெய்த ரசகர்ப் பூரம் 2-பாகம், சுத்திசெய்த கெந்தகம் 1-பாகம் இவைகளை கல்வத்தி லிட்டு மூன்றுநாள் அரைத்து அதை கோழிமுட்டையில் வைத்து அதற்கு 5-சீலைமண் கொடுத்து ஒருநாள் வாலுகா யந்திரத்தில் மூன்றுவித அக்கினியால் எரித்து ஆறியபிறகு எடுத்து ½-1 குன்றி எடை வரையிலும் நோய்க்குத் தக்கபடி தேனில் உள்ளுக்குக் கொடுத்தால் இருதயசூலை, கபவாதம், உபதம்சம் இவைகள் நிவர்த்தி யாகும்.

ரசாஞ்சனாதி லேபனம்:—கஸ்தூரிமஞ்சள், காட்டுவாழைப் பட்டை, கடுக்காய், இவைகளைச் சூரணித்து தேனில்கலந்து லேப னஞ்செய்தால் கொருக்கு விரணம் விரைவில் பக்குவட்டி ஆறும்.

பாரதாதி லேபனம்:—இரசம், கெந்தி, தாளகம், லிங்கம், மனோசிலை, இவைகள் வகைக்கு பலம் ¼, முருதார்சிங்கு, சிலைகல் நார், இவைகள் வகைக்கு பலம் ½, இவைகளை கல்வத்திலிட்டு மைபோல் இடித்து தளசிஇலை ரசத்தினால் அரைத்து கிழலிலுலர்த்தி பிறகு ஊமத்தன் இலைரசத்தினால் அரைத்து மாத்திரைகள் செய்து பசும் நெய்யில் பயாளவு இழைத்து நடவினால் கொருக்குவியாதி நிவர்த்தியாகி விரணமும் பக்குவட்டி ஆறும்,

வடப்ரரோஹாதி லேபனம்:—ஆலம்விழுது, மருதம்பட்டை, நாவல்பட்டை, கடுக்காய், லோத்திரம மஞ்சள், இவைகள் யாவை யும் அரைத்து பாலில் கலந்து லேபனஞ்செய்தால் உபதம்ச ரோகம் நிவர்த்தியாகும்.

திரிபலாதி லேபனம்:—திரிபலையை சுட்டுகரியாக்கி தேனுடன் கலந்து லேபனஞ்செய்தால் உபதம்சரோகம் நிவர்த்தியாகும்.

லிங்கரோகஹர லேபனம்:—பெரிய சங்கை தண்ணீர்விட்டு அரைத்து லிங்கத்திற்கு லேபனஞ்செய்தால் உபதம்சரோகம் நிவர்த்தி யாகும்.

கோஷ்டம், பச்சைப்பாக்கு, வசம்பு, இவைகளாவது காசிக் கட்டியையாவது தண்ணீர்விட்டு அரைத்து தடவினாலும் அல்லது வீக்கம் பக்குவமானபொழுது திரிபலாகியாழயத்தினால் ஆண்குறியை பலதடவை கழுவினாலும், ஆண்குறியின் வீக்கம் குணமாகும்.

பூநிம்ப கிருதம்:—நிலவேம்பு, வேப்பன், திரிபலை, பேய்ப்புடல், புங்கன், கருங்காலி, வேங்கை, இவைகளின் பட்டைகள் சமனடை யாக எடுத்துக்கொண்டு கற்கஞ்செய்து அதில் நெய்கலந்து கிருதபத மாக காய்ச்சி குடித்தால் சகலமான கொருக்கு வியாதிகள் நீங்கும்.

கரஞ்சாதி கிருதம்:—புங்கன்விரை, மருதம்பட்டை, வேப்பன் பட்டை, நாவல்பட்டை, ஆலன்பட்டை இவைகளை சமனடையாக கற்கஞ்செய்து அதில் நெய் கலந்து நெய் காய்ச்சிபதமாக லேபனஞ் செய்தால் எரிச்சல் விரணம் நீர்வடிதல் சிகப்பு இவைகளுடன்கூடிய கொருக்கு வியாதி நிவர்த்தியாகும்.

திரிபலாதி பிரக்ஷாளனம்:—திரிபலை கஷாயத்தில் விரணத்தை கழுவிக்கொண்டுவந்தால் கொருக்கு நிவர்த்தியாகும்.

அசுவத்தாதி பிரக்ஷாளனம்:—அரசன்பட்டை, அத்திப்பட்டை, இத்திப்பட்டை, ஆலன்பட்டை, இவைகள் சமனடையாக கியாழம் வைத்து இரணத்தை கழுவிவந்தால் விரணத்திலுள்ளீக்கம், கொருக்கு இவைகள் குணமாகும்.

உபதம்சரோகத்திற்கு பத்தியங்கள்:—ஆட்டுப்பால், கோதுமை சாதம் இவைகள் பத்தியம.

அபத்தியங்கள்:—பகல்நித்திரை, மூத்திரவேகத்தை தடுத்தல், குருகரமான அன்னம், மாதர் புணர்ச்சி, வெல்லம், ஆயாசம், புளிப்பு, மோர், இவைகள் ஆகாது.

உதடுரோக சிகிச்சை

எண்ணெய், நெய், குங்கிலியம், தேன்மெழுகு, சித்தரத்தை, வெல்லம், இந்துப்பு, காவிக்கல், இவைகளை சமனடையாகச் சூர ணித்து காய்ச்சி உதடுகளின்மீது தடவினால் உதடுபிளப்பு நீங்கும்.

குங்கிலியம், வெல்லம், மெழுகு இவைகள் மூன்றும் சமனடை யாக எடுத்து நெய்யைவிட்டாவது அல்லது எண்ணெயைவிட்டா வது காய்ச்சி தடவிவந்தால் சருமவிரணம், குத்தல், சீழ், இரத்தம் வடிதல், இவைகள் நிவர்த்தியாகும்.

பித்தவிகாரங்களுடைய உதடுவியாதிகளில் தலைவலி, வாந்தி, பேதி, காரமான இரசத்தை குடித்தல், இரசத்துடன்கூடிய போஜனம், சீதகரமான லேபனம், பித்தசமனங்களான வியாழங்களை அருந்தல் முதலிய உபசாரங்களை செய்யவேண்டியது.

உதடுபிளப்பு வியாதிகளுக்கு அந்தந்த தோஷங்களுக்கு தகுந்த சிகிச்சைகளை செய்யவேண்டியது.

விரணமாயிருந்தால் விரணசிகிச்சை செய்யவேண்டியது.

தந்தரோக சிகிச்சை

தந்தரோகத்தில் இரத்தத்தை முதலில் வடியும்படிசெய்து திரிபலை வியாழத்தில் வாய் கொப்பளிக்கும்படி செய்யவேண்டியது.

ஆல், அத்தி, அரசு, வேல், இத்தி இவைகளை சமனடையாகச் சூரணித்து இத்துடன் தேன், நெய் கலந்து கண்டூஷஞ் செய்தால் தந்தரோகம் நிவர்த்தியாகும்.

ஜீரகாதி சூரணம்:—சீரகம், உப்பு, கடுக்காய், இலவன்முற்கள், இவைகளை சமனடையாகச் சூரணித்து இந்த சூரணத்தில் பிரதினம் பற்களை தேய்த்து வந்தால் தந்தவிரணம், ஈறுகட்டி, பல்குத்தல், இரத்தம் வடிதல், தந்த அசைவு, விக்கம் இவைகள் நிவர்த்தியாகும்.

கணிதி சூரணம்:—திப்பிலி, இந்துப்பு, சீரகம், இவைகளை சமனடையாகச் சூரணித்து பல்துலக்கிவந்தால் பல்ஆட்டம், குத்தல் விக்கம், இரத்தம் வடிதல் இவைகள் நிவர்த்தியாகும்.

பத்திரமுஸ்தாதி வடுகங்கள்:—கோரைக்கிழங்கு, கடுக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, வாய்விளங்கம், வேப்பன்இலை, இவைகளை சமனடையாக கோமூத்திரத்தில் அரைத்து சுண்டையளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி இம்மாத்திரையிலொன்றை வாயில் போட்டு அடக்கி வைத்துவர பற்கள் கெட்டியாகும் பல்லாட்டம் நீங்கும்.

தந்தமூல ரோக சிகிச்சை

தந்தமூலரோகத்தை கத்தியினால் கீறி ரத்தத்தை வெளியாக்குவதுடன் க்ஷாரங்கள் லேபனங்கள் செய்யவேண்டியது.

அதிமாமிச சிகிச்சை:—அதிமாமிசமென்கிற தந்தமூலரோகத்தை அறுத்து அதின்மீது வசம்பு, வட்டத்திருப்பி, யவக்ஷாரம் இவைகளின் கற்கத்தில் தேன் கலந்து அல்லது நிப்பிலிசூரணத்தில் தேன் கலந்து வாயில் வைத்துக்கொள்ள வேண்டியது.

பேய்ப்புடல், வேப்பன், திரிபலை இவைகளின் வியாழத்தினால் அதிமாமிசத்தை கழுவவேண்டியது.

தந்த வித்ரதிக்கு சாமானிய சிகிச்சை:—தந்தவித்ரதிக்கு வித்ரதிக்கு சொல்லிய சாமானிய சிகிச்சைகளை செய்யவேண்டியதல்லது அருக்கக் கூடாது.

கிருமிதந்த சிகிச்சை:—அயரி, உத்தாமணி, பேய்ச்சுரை இவைகளின் வேர்களை பிரத்தியேகமாக சூரணித்து பற்களில் வைத்தால் பற்களிலிருக்கும் பூச்சிகள் நாசமாகும்.

சாரிடாபர்ண தாரணம்:—வெள்ளைசன்னரி இலையை அரைத்து பற்களில் வைத்துக்கொண்டால் பற்களிலிருக்கும் புழுக்கள் விழுந்து தந்தங்கள் கெட்டியாகும்.

காசீசாதி குடிகைகள்:—அன்னபேதி, பெருங்காயம், துவர்மண், தேவதாரு இவைகளை சமனடையாய் நீரில் அரைத்து மாத்திரைகள் செய்து தந்தத்தின்மீது வைத்தால் கிருமிதந்தங்களை நிவர்த்தியாகும்.

சர்க்கரா சிகிச்சை:—தந்தமூலங்களில் நோய் உண்டாகாமலிருக்கும்படிக்கு அதின்மீதுள்ள அழுக்கு அல்லது காரையை எடுத்து அரக்குசூரணத்தை தேனில் கலந்து மிருதுவாக தேய்க்க வேண்டியது.

கபாலிகா சிகிச்சை:—தந்தசர்க்கரை ரோகத்திலும், கபாலிகா என்கிற தந்த ரோகத்திலும் சொல்லிய சிகிச்சைகளைச் செய்ய வேண்டியது.

நாடீவிரண சிகிச்சை:—நாடீவிரணத்தில் சுற்றிலும் மாமிசமிருந்தால் சஸ்திரத்தினால் சேதித்து க்ஷாரத்தினாலாவது அல்லது அக்கினியினாலாவது சுடவேண்டியது.

தந்தரோகத்திற்கு லாக்ஷாதி தைலம்:—எண்ணெய், அரக்கு ரசம், பால் இவைகள் வகைக்கு 16-பலம், அதில் லோத்திரம், பூநெனி, தேக்கு, மஞ்சிஷ்டி, தாமரைதண்டு, சந்தனம், கரும்அல்லிக்கிழங்கு, அதிமதுரம் இவைகளின் வியாழத்தை எண்ணெய்க்கு நாலுபாகம் அதிகமாய்க் கலந்து தயிலபதமாய்க் காய்ச்சி வாயிலிட்டு சிறிதுநேரம் வைத்திருந்து வாய்கொப்பளித்துவர பற்கள் உடைதல், பற்கள் அசைவு, அகாலத்தில் பற்கள் விழுதல், பல்லில் சீழ் ரத்தம் வடிதல், பல்வலி முதலிய பல தந்தரோய்கள் நிவர்த்தியாகும். தந்தமானது கெட்டிப்படும்.

குஷ்டாதி சூரணம்:—கோஷ்டம், மாமஞ்சள், லோத்திரம் கோரைக்கிழங்கு, மஞ்சிஷ்டி, சுக்கு, கடுகுரோகணி, பெருங்கடம்பை, மஞ்சள் இவைகளின் சூரணத்தினால் பற்களைத் தேய்த்துவர ரத்தஸ்ராவம், கமை, குத்தல் இவை நீங்கும்.

ஜாதிபத்திராதி சூரணம்:—சாரணை, சுக்கிரப்பிலி, கோஷ்டம், வசம்பு, சுக்கு, ஓமம், கடுக்காய், எள்ளு இவைகளை சமனளவாய்ச் சூரணித்து வாயில் வைத்துக்கொண்டால் தந்தசூலை, பல் அசைவு, தந்தவிரணம், விக்கம், குத்தல், சலை, பூச்சிகள் இவை யாவும் நிவர்த்தியாகும்.

தந்தரோகத்தில் பத்தியங்கள்:—புளிப்பான பழங்கள், குளிர்ந்த ஜலம், சூடான உணவு, கடினபதார்த்தங்கள் சாப்பிடுதல் இவைகளை தந்தரோகிகள் விடவேண்டியது.

ஜிம்ம ரோக சிகிச்சை

உபஜிம்மைக்கு வியோஷாதி சூரணம்:—நிரிகடுகு, யவகூரம், கடுக்காய் இவைகளின் சூரணத்தினால் பற்களை துலக்கினாலும் இவைகளையே குடிநீரிட்டு வாய் கொப்பளிக்கச் செய்தாலும் மேலும் அதில் தேன், இந்துப்பு, இவைகளை அரைத்து கையினால் தடவினாலும் உபஜிம்மரோகம் சாந்தியாகும்.

சுண்டசுண்டியாதி சிகிச்சை:—துண்டிகேரி, திருமம், கூர்மம், சங்காதம், தாலுபுப்புடம் இவைகளில் சஸ்திரகர்மம் செய்யும்போது அடியில் சொல்லிய சிகிச்சைகளை செய்யவேண்டியது.

தாலுசோஷ தாலுபாக சிகிச்சை:—தாலுசோஷத்தில் வியர்வையும் சிலேஷ்மத்தையும் வாதநாசகமான அவுஷத சேவைகளையும் செய்யவேண்டியது.

தாலுபாகத்தில் பித்தநாசக சிகிச்சைகளை செய்யவேண்டியது.

களசுண்டி சேதனவிதி:—நாக்குமீது இருக்கும் முள்ளை அங்குஷ்டத்தினால் பிடித்து இழுத்து அறுக்கவேண்டியது.

நிப்பிலி, அதிவிடயம், கோஷ்டம், வசம்பு, மிளகு, சுக்கு இவைகளைச் சூரணித்து தேன், உப்பு கலந்த விரலினால் தேய்த்தால் நாக்கு முள்ளு நிவர்த்தியாகும்.

ரோகணீ சாமானிய சிகிச்சை:—பஞ்சரோகிணிகளில் சாத்திய மானவைகளிலிருந்து ரத்தத்தை வெளியாக்கி வமனம், தூமபானம், கண்டூஷம், சலியகருமம் இவைகளை செய்யவேண்டியது.

வாதரோகணீ சிகிச்சை:—ரத்தத்தை வெளியாக்கி உப்பினால் தேய்க்கவேண்டியது.

சுக உஷ்ணமான சினேஹ கண்டூஷங்களை அடிக்கடி வைக்க வேண்டியது.

பித்தரோகணீ சிகிச்சை:—இந்த ரோகத்தில் ரத்தத்தை வெளியாக்கி சர்க்கரை தேன் இவைகளுடன் ஞாழல்பூ சூரணத்தை

கலந்து தேய்த்து நிராசைஷ கார்ஜூக்காய் இவைகளின் கியாழத்தை வாயில் வைத்திருக்கவேண்டியது.

ரக்தரோகணீ சிகிச்சை:—இந்த ரோகத்தில் பித்தரோகிணீ சிகிச்சைகளை செய்யவேண்டியது.

கண்டசாலுக சிகிச்சை:—ரத்தத்தை வெளிப்படுத்தி துண்டகேரி மாதிரி சிகிச்சைகளை செய்யவேண்டியது.

இதில் நெய்யில் சமைத்த யவதானிய அன்னத்தை ஒருவேளை சாப்பிடவேண்டியது.

கபோரோகணீ சிகிச்சை:—கபரோகிணி ரோகத்தில் கருணபத்தை காரமாயுள்ள ஔஷதங்களுடன் சேர்த்து தேய்க்கவேண்டியது.

வெள்ளைத்துளசி, வாய்விளங்கம், தந்திவேர் இவைகளுடன் தயிலத்தை காய்ச்சி அதில் இந்துப்பை கலந்து கியமும் வாயில் வைத்துக்கொள்ளவும் செய்யவேண்டியது.

அதிஜிம்மரோகத்தில் உபஜிம்மரோக சிகிச்சைகளை செய்ய வேண்டியது.

ஏகபிருந்த ரோகத்தில் ரத்தத்தை வெளியாக்கி பிறகு சோதனை விதிகளை செய்யவேண்டியது.

பிருந்தரோகத்தில் ஏகபிருந்த சிகிச்சைகளை செய்யவேண்டியது.

கிளாயுவரோகத்தில் சஸ்திரசிகிச்சையை செய்யவேண்டியது.

கனஸந்திரிக்கு மர்மாஹித்தளங்களில் உண்டாகி பழுத்தவை களை சேதிக்கவேண்டியது.

சர்வசா சாமானிய சிகிச்சை:—வாதஜ சர்வசரமென்றும் வாதஜ முகபாகத்தில் அதை உப்பினால் தேய்த்து வாதநாசக அவுஷதங்களினால் தயார்செய்த தயிலத்தினால் கண்டூஷம் கியம் இவைகளை செய்ய வேண்டியது.

பித்தஜ சர்வசரத்தில் முதலில் பேதியாகும்படிசெய்து பிறகு பித்த நிவர்த்தகங்களான சலை மதுர சீதள சிகிச்சைகளைச் செய்ய வேண்டியது.

கபஜசர்வசரத்தில் பிரதிசாரண, கண்டூஷ, தூம, பானசோதனங்களை சலகபஹர சிகிச்சைகளை செய்யவேண்டியது.

களரோக சிகிச்சை:—களரோகத்தில் ரத்தத்தை வெளியாக்கி சேஷனகரமான ஔஷதங்களைகொடுத்து கியோதி கருமங்களை செய்யவேண்டியது.

மிருத்விகாதி சூரணம்:—நிராசையு, கடுகுரோகணி, நிரிகடுகு, மாமஞ்சள், இலவங்கப்பட்டை, நிரிபலை, கோரைக்கிழங்கு, வட்டத்திருப்பி, ரசாஞ்சனம், அறுகம்புல், வாலுழுவைகொடி, இவைகள் சூரணத்தில் தேன் கலந்து களத்தில் லேபனஞ் செய்ய வேண்டியது,

முகபாகசாமானிய சிகிச்சை:—சகல முகபாகத்தில், சிராவேதனம், சிரோ விரோசனம், இவைகளை செய்து தேன், கோமூத்திரம், நெய், பால், சீதகரபதார்த்தங்கள் இவைகள் கல்கத்தை முகத்தின்மீது தடவவேண்டியது.

பஞ்சவல்கலகியாழத்திலாவது நிரிபலகியாழத்திலாவது தேன் கலந்து வாயில்போட்டி கொப்பளித்தால் முகபாகம் ஹரிக்கும்.

யஷ்டிமதவாதி தைலம்:—அதிமதுரம் 1-பலம், கரும் அல்லிக் கிழங்கு 30-பலம், எண்ணெய் 16-பலம், பால் 40-பலம், இவைகள் யாவையும் ஒன்றாக கலந்து மந்தாக்கினியால் தைலபதமாக காய்ச்சி இராத்திரி காலங்களில் நசியம் செய்வித்தால், முகசிராவரோகம், தேகத்தில் தடவினால் சாரைதோஷம் நிவர்த்தியாகி பொன்போல் தேககாந்தி யுண்டாகும்.

சுதிராதி குடிகைகள்:—100-பலம், கருங்காலி பட்டையை இடித்து 256-பலம், ஜலம்கொட்டி, எட்டில் ஒருபாகம் மீறும்படியாக கியாழம் வண்டக்காய்ச்சி வடிகட்டி ஜாபத்திரி, பச்சைகர்ப்பூரம், பாக்கு, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, கஸ்தூரி, இவைகளைக் சூரணித்துவகைக்கு பலம்-½, விதமாக கல்வத்திலிட்டு மேற்படி கியாழம விட்டரைத்து கடலை அளவு மாத்திரைகள்செய்து, வாயில் வைத்துக்கொண்டு அதின் ரசத்தை விழுங்கிக் கொண்டிருந்தால் சகலமான முகரோகங்கள், ஜிம்மரோகங்கள், உதடுரோகங்கள், தந்தரோகங்கள், உள்நாடைரோகங்கள் இவைகள்யாவும் நிவர்த்தியாகும்.

முகரோகத்தில் பத்தியங்கள்:—வியர்வை வாங்குதல், விரேசனம், வமனம், கொப்பளித்தல், பிரதிசாரணம், கபலதாரணம், ரக்தமோக்ஷணம், நசியம், தூமபானம், சன்னிதருமம், அக்கினிகருமம், மூங்கில்அரிசி, யவதானியம், பச்சைப்பயறு, கொள்ளு, ஐந்து மாமிசங்கள், கீழாநெல்லி, பாவக்காய், தண்ணீர்விட்டான்கிழங்கு, பேய்ப்புடல், இளமுள்ளங்கி, பச்சைகர்ப்பூரம், வெந்நீர், தாம்பூலம், கருவேலன்கியாழம, காரம், கசப்பான ரசங்கள் இவைகள் முகரோகத்தில் பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—பல்லி குச்சியினால் தலைக்கல், தீராடல், புளிப்பு, மீன், தயிர்பால், வெல்லம், உளுந்து, சுரூரான்னம், ஜடான்னம், பசுஷணங்கள், பகல் நித்திரை, இவைகள் ஆகாது.

கர்ணரோக சிகிச்சை

கர்ணசூலக்கு சிருங்கபேராதி தைலம்:—இஞ்சிரசம் தேன், இந்துப்பு, வெள்ளாகடுகு முதலியவைகளை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி கொஞ்சம் சூடாயிருக்கும்போதே காதில் துளிக்க கர்ணசூலை நிவர்த்தியாகும்.

லசுனாதி ரசம்:—வெள்ளைப்பூண்டு, இஞ்சி, முருங்கைவேர் பட்டை, முள்ளங்கி, வாழை இவைகளின் இரசத்தை பிழிந்து எண்ணெயில்போட்டு காய்ச்சி கொஞ்சம் உஷ்ணமாகவே காதில் விட கர்ணசூலைகள் நிவர்த்தியாகும்.

அர்க்கபத்திர ரசம்:—பழுத்த எருக்கன் இலைக்கு நெய்யை தடவி நெருப்பனலில் வாட்டி காதில்கொஞ்சம் உஷ்ணமாக பிழிந்தால் கர்ணசூலை நிவர்த்தியாகும்.

சுயோனாகு தைலம்:—பெரும்வாகைவேர் கற்கத்தில் எண்ணெயைக் கலந்து மந்தாக்கினியால் பக்குவமாக காய்ச்சி காதில் துளிக்க நிரிதோஷத்தினால் உண்டான காதகுத்தல் நிவர்த்தியாகும்.

ஹிங்குவாதி தைலம்:—பெருங்காயம், இந்துப்பு, சுக்கு, இவைகளின் கற்கத்தில் நல்லெண்ணெய் அல்லது கடுகு எண்ணெய்யை சேர்த்துக் காய்ச்சி கொஞ்சம்சூடாக காதில்விட காதகுத்தல் குணமாகும்.

நாகராதி தைலம்:—சுக்கு, இந்துப்பு, கோரைக்கிழங்கு, திப்பிலி, பெருங்காயம், வசம்பு, வெள்ளைப்பூண்டு, இவைகளின் கற்கம், எள்ளெண்ணெய், பழுத்த எறுக்கன் இலைரசம், முருங்கைரசம், இவைகளைக் கலந்து தைலம் காய்ச்சி காதில் விட்டுவர காதகுத்தல், செவிடு இவைகள் நிவர்த்தியாகும்.

கர்ணநாத பாதைகளுக்கு அபாமார்க்க தைலம்:—நாயுருவி உப்பின்று சனித்த ஜெயநீர், நாயுருவிகற்கம், இவைகளுடன் நல்லெண்ணெய் கூட்டித் தைலமாக காய்ச்சி காதில் விட்டுவர கர்ணநாதம் செவிடு குணமாகும்.

வில்வ தைலம்:—வில்வபழத்தை கோமூத்திரத்தில் அரைத்து அதில் சலம் ஆட்டுப்பால் நல்லெண்ணெய் இவைகளை கலந்து காய்ச்சி காதில் துளிக்க காதசெவிடு நீங்கும்.

பீஜபூர ரசம்:—கொடிமாதளம்பழம் ரசத்தில் சர்ஜகூரம் கலந்து காதில் வார்த்தால், சீழ்வடிதல், சலம் வடிதல், குத்தல் இவைகள் நீங்கும்.

சமுத்திரபேன சூரணம்:—கடல்நுரை, சூரணத்தை காதில் தினவு காதிலிருக்கும் சீழ், ஜலம், மலினம் முதலியவைகள் நிவர்த்தியாகும்.

கர்ணசிராவ சிகிச்சை:—பழுத்தராவல் இலை, மாதுலை இலை களை சமனடையாகச் சூரணித்து அதில் இளவிளாங்காய் ரசத்தை யும், பருத்திக்காய் ரசதையும், தேனையும் கலந்து காதில் வார்த்தா லும் அல்லது மேல்கூறிய நிறுவுடன், வேப்பன், புங்கன் இலை களை சேர்த்து அத்துடன் கடுகு எண்ணெயைகலந்து காய்ச்சி காதில் விட்டுவந்தாலும் கர்ணசிராவம் நிவர்த்தியாகும்.

கர்ணரோகத்திற்கு ராஷ்ணாதி சூரணம்:—சித்தரத்தை, சிந்தில் கொடி, ஆமணக்குவேர், தேவதாரு, சுக்கு இவைகளைச் சூரணித்து சமனடையாக சேர்த்து சேவித்தால், வாதரோகம், கர்ணரோகம், சிரோரோகம், ரத்தவிரணம், பகந்தரம் இவைகள் நிவர்த்தியாகும்.

கிருமிகர்ண சிகிச்சை:—கார்த்திகை கிழங்கு, கரிசாலை, நிரி கடிகு இவைகளை அரைத்து துணியில் கட்டி காதில் பிழிந்தால் கர்ணத்திலிருக்கும் கிருமிகள், எறும்புகள், தலையிலிருக்கும் பூச்சி கள் இவைகளனைவும் விழுந்துவிடும்.

ஆம்பிராதி தயிலம்:—மா, ராவல், இலுப்பன், ஆலன் இவை களின் துளிர்களை, கற்கஞ்செய்து அத்துடன் நல்லெண்ணெய் கலந்துகாய்ச்சி, காதில்விட்டால் சீழ்வடிதல் நிற்கும்.

சதாவரீ தயிலம்:—தண்ணீர்விட்டான் கிழங்கு, அமுக்கிரங் கிழங்கு, ஆமணக்கு விரை இவைகளை மோரில் அரைத்து கற்கஞ் செய்து அத்துடன் எண்ணெய், பால் கலந்து காய்ச்சி காதுக்கு வெளிப்புறங்களில் லேபனஞ்செய்தால் காதுநோய் வீக்கம் முதலி யவை நிவர்த்தியாகும்.

வில்வத் தயிலம்:—ஒரு வில்வப்பழத்திலுள்ள சதையை பால் விட்டரைத்து கற்கஞ்செய்து ஐந்துபலம் நல்லெண்ணெயுடன் சேர்த்து தைலபதமாக காய்ச்சி வடித்து வைத்துகொண்டு இத் தைலத்தை காதில்விட்டுவருவதுடன் சிறிதளவு சிரசிலும் நினைத் தேறும் தேய்த்துவர நெடுநாளாக காதில் சீழ்வடிதல் காது ரணம் முதலியன குணமாகும்.

கர்ணரோக பத்தியங்கள்:—கோதுமை அரிசி, பச்சைபயிறு, யவதானியம், நெய், கவுதாரி, மயில், மான், காடை, காட்டுகோழி, புடலங்காய், முருங்கக்காய், கத்திரிக்காய், பாவல்காரை, சகல ரச சயனம், பிரம்மசரியம், பேசாமலிருக்குதல் இவைகள் பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—பல்கொம்பு, தலைஸ்நானம், நிரிதல், கபகர அன்னம், ஜடான்னம், சொரிதல், பனி, தென்காற்று இவைகள் ஆகாது.

நாசிரோக சிகிச்சை

பீனச ரோகத்தில் முதலில் காற்றில்லாத வீட்டில் இருத்தல், இலகுவான உணவு, உஷ்ண பதார்த்தங்கள், ரசியம், வமனம், வியர்வை வரச்செய்தல், சிறிதளு தயிலப் பிரயோகங்கள் முதலிய சிகிச்சைகளை செய்தல்வேண்டும்.

சகல பீனச ரோகத்திற்கு சிகிச்சைகள்:—சகலமான பீனச ரோகத்தில் தயிரில் மிளகுபொடி, வெல்லத்தைக் கலந்து எப்பொழு தும் கொடுத்துக்கொண்டிருந்தால் சகல பீனசரோகம் நிவர்த்தியாகி சுகமாயிருக்கும்.

குடாதி யோகம்:—வெல்லம், மிளகுசூரணம் ஒன்றுசேர்த்து தயிரில் கலந்து சாப்பிட்டு வந்தால் தீர்சாற்றமுள்ள பீனசம் நிவர்த் தியாகும்.

பீநசஹர நசியங்கள்:—நிப்பிலி, சுக்கு, மிளகு இவைகளை வெந் நீரில் அரைத்து நசியஞ் செய்தாலும், தேவதாருபழம், இஞ்சி இவைகளைக் குளிர்ந்த ஜலத்தில் அரைத்து குன்றிஎடை பிரமாணம் 7-நாள் நசியஞ் செய்தாலும் பீனசம், நாசிரோகம் முதலியன நிவர்த்தியாகும்.

நிராக்ஷாதி தைலம்:—நிராலசுண்டி, சுக்கு, வாய்விளங்கம், நிப் பிலி, கோஷ்டம் இவைகளை சமனடையாய்ச் சூரணித்து சூரணத் திற்கு பத்து பங்கு அதிகமாய் ஜலத்தை வார்த்து காலிலொன்றாய்க் கியாழம் காய்ச்சி அதில் மேல் சூரணத்திற்கு சமனடையாய்ச் சூடான நெய்யையாவது அல்லது எண்ணெயையாவது வார்த்து தயிலபதமாய்க் காய்ச்சி நசியஞ் செய்தால் நாசிரோகம் நிவர்த்தி யாகும்.

கணுதி நசியம்:—நிப்பிலி, இந்துப்பு இவைகளை வெந்நீரில் அரைத்து நசியஞ்செய்தால் நாசிவாதம், கர்ணவாதம், கண்டவாதம் முதலியன நிவர்த்தியாகும்.

கருஞ்சீரகத்தை துணியில்சுற்றி முகர்ந்துவந்தால் பீனசரோகம் நிவர்த்தியாகும்.

மஞ்சளை சுட்டு புகையை பிடித்துவந்தாலும் காசரோகம், நாசி யடைப்பு, தும்மல், பீனசம் முதலியன தீரும்.

கொச்சி இரசாசம் 16-பலம், எண்ணெய் 16-பலம் கலந்து இவைகளுடன் நிரிபலி, நிரிகடுகு, சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, வெள்ளைச்சாரணைவேர் இவைகளின் கற்கமும், ½-சேர் ஆட்டுப்பாலை யும் கலந்து தயிலபதமாய்க் காய்ச்சி நசியஞ் செய்தால் நாசாரோகம் நிவர்த்தியாகும்.

பூதிநாசா ரோகத்திற்கு வியாக்கீர் தைலம்:—கண்டங்கத்திரி, தந்திவேர், வசமபு, முருங்கன், சிற்றரத்தை, சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு இலைகளின் கற்கத்தோடாவது அல்லது கியாழத்தோடாவது தயிலத்தை தயார்செய்து நசியஞ் செய்தால் பூதிநாசாரோகம் நிவர்த்தியாகும்.

சிக்குரு தைலம்:—முருங்கள், கண்டங்கத்திரிவிரை, நாகதந்தி விரை, சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு, வில்வ இலைரசம் இலைகளின் கற்கத்தினால் தயார்செய்த தயிலத்தை நசியஞ்செய்தால் பூதிநாசாரோகம் நிவர்த்தியாகும்.

வியோஷாதி குடிகைகள்:—சுக்கு, திப்பிலி, மிளகு, சித்திரமூலம், தாளிகபத்திரி, புளி, புளிவஞ்சி, செவ்வியம், சீரகம் இலை வகைக்கு 1-பலம், ஏலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி இலை வகைக்கு ½-பலம் இலை யாவையுஞ் சூரணித்த பழய வெல்லத்தை கலந்து மாத்திரைசெய்து சாப்பிட்டால் பீனசம், சுவாசம், இருமல் முதலியன நிவர்த்தியாகும்.

பூயரக்த சிகிச்சைகள்:—சீழ், ரத்தம் ஒழுகும் நாசிரோகத்தில் ரத்தபித்தஹர கியாழங்கள் நசியங்கள் முதலியவைகளுடன் சிகிச்சைகளை செய்யவேண்டியது.

ஷட்பிந்து கிருதம்:—கரிசாலை, இலவங்கம், அதிமதுரம், கோஷ்டம், சுக்கு இலைகளின் கியாழத்தில் பசும்நெய் சமனடை சேர்த்து பக்குவமாய் காய்ச்சி நசியஞ் செய்துவந்தால் மூக்கில் உண்டான பீனச நோய்கள், சிரோரோகம் முதலிய சகல ரோகங்கள் நிவர்த்தியாகும்.

க்ஷவதரோகத்திற்கு சுண்டியாதி கிருதம்:—சுக்கு, கோஷ்டம், திப்பிலி, வில்வபழம், நாரைசூ இலைகளின் கற்கத்திலாவது அல்லது கியாழத்திலாவது நெய் கலந்து நெய்ப் பதமாய்ச் சமைத்து நசியம்செய்தால் க்ஷவதரோகம் நிவர்த்தியாகும்.

நெய், குங்கிலியம், மெழுகு இலைகளை ஒன்றுச்சேர்த்து புகை போட்டால் க்ஷவது, பிரம்சத இலை நிவர்த்தியாகும்.

நாசாசிராவ சிகிச்சைகள்:—நாசாசிராவ ரோகத்தில் கடுக்காய் சூரணத்தை குழைகளினால் உள்ளே பிரவேசிச்சச் செய்தல், அதிபீடனம், தேவதாரு, சித்திரமூலம் முதலியவைகளின் தீக்ஷண கரங்களான புகைகள் இலைகளினால் உபசாரங்கள் செய்ய வேண்டியது. இந்த ரோகத்தில் ஆட்டின் இரைச்சியைச் சாப்பிட வேண்டியது.

பிரதிசியாய சிகிச்சைகள்:—சகல பிரதிசியாய ரோகங்களில் வாதஹிதமான இடங்களில் இருத்தல், தளமாயும், உஷ்ணமாயும்

இருக்கும் வஸ்திரத்தை தலைக்கு சுற்றிக்கொள்ளுதல் இவைகள் ஹித கரங்களாயிருக்கும்.

பாலமூலகஞ்சூஷம்:—பிரதிசியாய ரோகத்தில் இளமுள்ளங்கி, கொள்ளு இலைகளின் ரசம், வியர்வை வரங்குதல், உஷ்ணமான போஜனம், சிதோதகம் இவைகளை செய்வதினால் பிரதிசியாயரோகம் பக்குவமாகும்

பிப்பல்யாதி நசியம்:—கபம் பக்குவமானபிறகு சீர்ஷவிரேசனம் செய்வித்து கபத்தை வெடுத்துவிடவேண்டியது.

திப்பிலி, முருங்கைவிரை, வாய்விளங்கம், மிளகு இவைகளை நசியம் செய்விக்க வேண்டியது. இம்மாதிரி செய்தால் பிரதிசியாயம் நிவாரணமாகும்.

வாதபிரதிசியாய சிகிச்சைகள்:—பஞ்சலவணங்கள் அல்லது பஞ்சமூலங்கள் இலைகளுடன் சித்தமான கிருதபானம் செய்ய வேண்டியது.

பித்தபிரதிசியாய சிகிச்சைகள்:— பித்த பிரதிசியாயத்தில் நெய்யில் கரிசாலை கற்கம் இஞ்சிரசம் இலைகளில் ஒன்றுவது அல்லது பால், இஞ்சிரசம் இவை கலந்தாவது பானம் செய்ய வேண்டியது.

கபபிரதிசியாய சிகிச்சைகள்:—கபநாசாரோகத்தில் கிருதத்தினால் சினிக்தம் செய்த பிறகு எள்ளு உளுந்து இலைகளினால் தயார் செய்யப்பட்ட யுவாகை குடித்து கபநிவாரணமான அவுஷதங்களை சாப்பிடவேண்டியது.

தாத்ரீ லேபனம்:—நெய்யினால் நெல்லிவற்றலை அரைத்து தலைக்கு தடவிக்கொண்டால் மூக்கிலிருந்து ரக்தம்வடிதல் நிவர்த்தியாகும்.

பிரதிசியாய சாமானிய சிகிச்சைகள்:—வசம்பு, பொறிமாவு இலைகளின் புகைகளை பிடித்து பிறகு வாய்விளங்கம், இந்துப்பு சுங்கிலியம், மனோசிலை, இலைகளின் சூரணத்தை மூட்டைகட்டி மோர்த்துக்கொண்டிருந்தால் பிரதிசியாயம் நிவர்த்தியாகும்.

சக்துத தூமம்:—நெய், எண்ணெய் இலைகளுடன் பொறிமாவை கலந்து அதின் புகையை மோர்த்துகொண்டு இருந்தால், ஜலுப்பு, இருமல், விக்கல் இலைகள் நிவர்த்தியாகும்.

நவசாகர யோகம்:—தலைநோயுடன் கூடியிருக்கும் தீர் பீனசத்திற்கு நவசாரம், சண்ணாம்பு, இலைகள் இரண்டும் சமனடையாக கல்வத்திலிட்டு அரைத்த குன்றிஎடை, எடுத்த முகர்ந்தவர, தலைநோய் தீர்பீனசம், ஜலுப்பு, தும்மல் இலைகள் நிவர்த்தியாகும்.

பிரதிசியாயஹர நியம்:—வசம்பைபயாவது அல்லது ஓமத்தை யாவது சூரணித்து வஸ்திரத்தில் மூட்டைகட்டி மோர்ந்து வந்தால் ஜலுப்பு நிவர்த்தியாகும்.

சட்டியாதி சூரணம்:—சிச்சிலிக்கிழங்கு, நெல்லிவற்றல், சுக்கு, திப்பிலி, மிளகு, இலைகளின் சூரணத்தில் நெய், வெல்லம் கலந்து சாப்பிட்டால், மிகவும் பயங்கரமான ஜலுப்பு, பக்கசூலை, மார்புநோய், இலைகள் நிவர்த்தியாகும்.

கிரிமிநாசா சிகிச்சைகள்:—கிருமிரோகத்தில் சொல்லிய ஔஷதத்தினாலும் கிருமிநாசக ஔஷதங்களினாலும் கிருமிநாசரோகம் நிவர்த்தியாகும்.

கிருமிஹர சிகிச்சை:—சிகப்பு காசினிகீரை சாரத்தை, வடிகட்டி, மோரில் கலந்து நசியஞ்செய்த பிறகு சிகப்புகாசினி கீரையை அரைத்து நாசிகையின் துவாரத்தில் வைத்து மூன்றுநாள் கட்டினால் அப்பொழுதே, புழுக்கள், ஜலுப்பு இலைகள் நிவர்த்தி யாகும்.

ஆயில்பட்டைத் தைலம்:—ஆயில்பட்டை பலம்-10, சதைத்து ஓர் பாண்டத்திலிட்டு 2-படி நீர்விட்டு எட்டிலொன்றுகிய ½-படி பளவிற்குச் சண்டக் காய்ச்சி வடிகட்டி அதில் பசும்பால், நல் லெண்ணெய் வகைக்குப் படி-½ வீதஞ் சேர்த்து, கோஷ்டம், சிற்ரு முட்டிவேர், சன்னிவேர், கஸ்தூரிமஞ்சள், அதிமதுரம், பெருங் காயம், வெள்ளைப்பூண்டு, தேவதாரு, கல்மதம், சடாமாஞ்சில், கடுக்காய், வாய்விளங்கம், சந்தனம், மிளகு வகைக்குக் கழஞ்சு-½ வீதம் ஆவின்பால் விட்டரைத்துச் சேர்த்துக் கலக்கி ஓர் தைல பாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயா எரித்து தைலபதத்தில் காய்ச்சி வடித்து வைத்துக்கொள்க. இதைக்கொண்டு முறைப்படி ஸ்நானஞ் செய்துவர பீநசரோகங்கள் யாவும் குணமாகும்.

நாசிரோகத் தைலம்:—இளநீர், ஆவின்பால், நல்லெண்ணெய் வகைக்குப் படி-½ இலைகளை ஓர் தைலபாண்டத்திலிட்டு அதில் வெட்டிவேர், விலாமிச்சவேர், மஞ்சிஷ்டிவேர், அதிமதுரம், கோரைக்கிழங்கு, பூலாங்கிழங்கு, செங்கழுநீர்கிழங்கு, தாமரை வீயம், சீரகம், ஏலம், சந்தனம், வாசனைப்பச்சிலை, தேற்றுங் கொட்டை, தண்ணீர்விட்டான்கிழங்கு, கஸ்தூரிமஞ்சள், குங்கு மப்பூ, சண்பகமொட்டு, புனுகுச்சட்டம வகைக்கு வராகனெடை-½ வீதம மைபோல் சூரணித்துப்போட்டு பதமுறத் தைலங்காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு முறைப்படி ஸ்நானஞ்செய்துவர சகல நாசி ரோகங்களும் பீனச நோய்களும் விரைவில் குணமாகும்.

பீநசத் தைலம்:—நொச்சியிலைச்சாறு, கரிசலாங்கண்ணிச்சாறு, நல்லெண்ணெய் வகைக்குப் படி-1, இலைகளை ஓர் தைலபாண்

டத்திலிட்டு அதில் திப்பிலி, சிற்றாத்தை, ஆமணக்குவேர், பாலைவேர், இரண்டிகரம், கோஷ்டம், சுக்கு, தேற்றுங்கொட்டை, அதிமதுரம், வாய்விளங்கம், சதபுட்பி, இந்துப்பு வகைக்குப் பலம்-½ வீதம் வெள்ளாட்டுப்பால் விட்டரைத்துச் சேர்த்து பதமுறக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு வாரத்திற்கொருமுறையிதம் ஸ்நானமும் வார மிரு முறையிதம் நசியமுஞ் செய்துவர பீநச ரோகங்கள் யாவும் குணமாகும்.

பீநசக் கிருதம்:—ஆவின் நெய் படி-1, குங்குமப்பூ, கோரோசனம், அதிமதுரம், கோஷ்டம், கோரைக்கிழங்கு வகைக்குக் கழஞ்சு-1, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம் வகைக்கு பனவெடை-1, இவற்றுள் சாக்குகளை கண்டு இடித்துச் சூரணஞ்செய்து வைத்துக்கொண்டு நெய்யை உருக்கி காய்ந்த பதத்தில் கீழிறக்கி அதில் சரக்குகளின் சூரணத்தை தூவி இலைகளின் சத்தானது எண்ணெயில் உறவானதும் வடித்து வைத்துக்கொள்க. இதை முறைப்படி நசியஞ் செய்துவர பினசரோகங்கள் யாவும் குண மாகும்.

நாசிகாரோகத்திற்கு பத்தியங்கள்:—வியர்வைவரங்கல், அப்பியங்கனம், பழய யவதானியம், அரிசி, கொள்ளு, பச்சைப்பயறு இலைகள்கட்டு, கிராமிய மாமிசரசம், கத்திரிக்காய், பேய்ப்புடல், முருங்கக்காய், வில்வபழம், இளமுள்ளங்கி, வெள்ளைப்பூண்டு, உஷ்ணோதகம், நிரிகடுகு, காரம், புளிப்பு, உப்பு பதார்த்தங்கள், உஷ்ணம், இலகுகரமான போஜனம் இலைகளை நாசாரோகமுடையவர் கள் பத்தியங்கள் செய்தல்வேண்டியது.

அபத்தியங்கள்:—குளிர்ந்த ஜலம், பனிக்காற்று, தூங்குதல், கோபம், மலம், மூத்திரம், வாயுவேகத்தை தடுத்தல், சோகம், நிரவ பதார்த்தங்கள், நிலத்தில்தூங்குதல் இலைகளை நாசாரோகம் உடைய வர்கள் பிரயத்தினபூர்வமாக விடவேண்டியது.

சிரோரோக சிகிச்சை

வாதசிரோரோக சிகிச்சை:—வாதசிரோரோக சிகிச்சையில் வாதரோக சிகிச்சையை செய்தல்வேண்டும். இரவில் தலைக்கு நெய்யை தடவி பாலை குடிக்கவேண்டும்.

பித்தசிரோரோக சிகிச்சை:—பித்தசிரோரோகத்தில், நாரைகூ நிரிபலை, கரும்பு இலைகளின் ரசங்கள், பால், நெய் இலைகளினால் விரேசனம் செய்விக்கவேண்டியது.

கபசிரோரோக சிகிச்சை:—கபசிரோ ரோகத்தில், சந்தனம், ரூஷகர நிரவியங்கள் இலைகளை சிரசுக்கு தடவுதல் புகைபோடுதல் முதலிய கருமங்களை செய்தல்வேண்டும்.

சந்நிபாத சிரோரோக சிகிச்சை:—சன்னிபாத சிரோரோகத்தில் நெய் எண்ணெய் இலைகளினால் தலைக்கு புகை கொடுப்பதன்றி நாசி கத்தினுல் புகையை முகர்தல், நெற்றியில் வியர்வை வரும்படி செய் தல், தலைக்கு பற்றுபோடுதல் புகைபோடுதல் முதலியவைகளைச் செய்யவேண்டியது.

நெய் கோதுமை இலைகளையாவது நொச்சியையாவது நெரழும் காய்ச்சி அதனல் வியர்வை பிடித்தலும் நன்மை தரும்.

ரத்தசிரோரோக சிகிச்சை:—ரத்தசிரோரோகத்தில் சர்வபித்த நாசஹர போஜனங்கள், லேபனங்கள், சிதோஷ்ண பதார்த்தங்களை யவைகளை செய்தல்வேண்டும்.

கிருமிசிரோரோக சிகிச்சை:—நிரகடுகு, புங்கன்பட்டை, முருங் கைப்பட்டை இலைகளை ஆட்டுமூத்திரம்விட்டு அரைத்த நெயம் செய்தால் கிருமிகள் நாசமாகும்.

சூரியவர்த்த சிகிச்சை:—நெய்யில் வெல்லத்தைக் கலந்து குடித் தாலும் அல்லது எள்ளை பால்விட்டு அரைத்த லேபனம் செய்தாலும் சூரியாவர்த்தம் மூன்றுநாளில் நிவர்த்தியாகும்.

சூரியவர்த்த சிரோரோக சிகிச்சை:—நெல்லிற்கு வேது பிடிப்ப தடன் பால் நெய் இரண்டையும் கலந்து நெயம்செய்து உள்ளுக்கும் மருந்தருந்தல் நன்று. விரேசனமும் செய்யவேண்டும். இப்படி செய்வதினல் சூரியவர்த்த சிரோரோகம் நிவர்த்தியாகும்.

அனந்தவாத சிரோரோக சிகிச்சை:—மேற்கூறிய சிகிச்சைகளை செய்து சிரோவேதனம் செய்தால் அனந்தவாதம் நிவர்த்தியாகும்.

வாதசிரோரோகத்திற்கு ஏரண்டாதி லேபனம்:—ஆமணக்கு விரை, தகரைவிரை இலைகளை புளித்த கழுநீரால் அரைத்து நெற்றி யில் தடவ வாதத்தினல் உண்டான தலைநோய் நீங்கும்.

கோஷ்டம், ஆமணக்குவேர், சுக்கு இலைகளை மோரினல் அரைத்து வேகவைத்து இளஞ்சூட்டில் நெற்றியில் தடவவாத தலைவலி நீங்கும்.

கோஷ்டம், ஆமணக்குவேர் இலைகளை காடியில் அரைத்துத் தடவினல் வாதசிரோரோகம் நிவர்த்தியாகும்.

பித்தசிரோரோகத்திற்கு சந்தனாதி லேபனம்:—சந்தனம், வெட்டி வேர், அதிமதுரம், சிற்றரத்தை, புளிநகம், கரும் அல்லிக்கிழங்கு இலைகளைப் பாலில் அரைத்து நெற்றிக்கு தடவினலும் அல்லது இதையே தலைக்கு தடவிக்கொண்டு குளித்தாலும் பித்தத்தினல் உண் டான தலைவலி நீங்கும்.

நெல்லிவற்றல், நிச்சிலிக்கிழங்கு, கரும்அல்லிக்கிழங்கு, தாமரை வகையம், சந்தனம், அருகம்புல், வெட்டிவேர், நகம் இலைகளை அரைத்து தடவினல் பித்தத்தினல் உண்டான தலைவலி, ரத்தபித்த ஜனிதமான தலைவலி நீங்கும்.

கபசிரோரோகத்திற்கு ஹரேணியாதி லேபனம்:—காட்டுமிளகு, சிரந்திநகம், சிலாசத்து கோரைக்கிழங்கு, ஏலக்காய், சிரிஷ்ணகரு, தேவதாரு, ஜடாமாஞ்சி, சிற்றரத்தை, ஆமணக்குவேர் இலைகளை அரைத்து வேகவைத்து கொஞ்சம் சூடாயிருக்கும்போது தலைக்கு தடவினல் கபதலைவலி நிவர்த்தியாகும்.

பிரபுன்னாடாதி லேபனம்:—சுக்கு, கோஷ்டம், தகரைவிரை, தேவதாரு, சுங்கிலியம் இலைகளை கோமூத்திரத்தில் அரைத்து வேகவைத்து சிறிது தலைக்கு தடவினல் சிலேஷ்மத்தினல் உண்டான தலைநோய், வலி, குத்தல் நிவர்த்தியாகும்.

ரத்தசிரோரோகத்திற்கு கிருஷ்ணாதி லேபனம்:— திப்பிலி, வெட்டிவேர், சுக்கு, அதிமதுரம், தணீர்விட்டான்கிழங்கு, கரும் அல்லி, குறுவேர் இலைகளை சலத்தினல் அரைத்து தலைக்கு தடவிக் கொண்டால் அப்பொழுதே குத்தல் நிவர்த்தியாகும்.

சூரியவர்த்தத்திற்கு சாரியாதி லேபனம்:—சன்னிவேர், கரும் அல்லிக்கிழங்கு, கோஷ்டம், அதிமதுரம் இவைகளைப் புளித்த நிரவி யங்களினல் அரைத்து அத்துடன் நெய், எண்ணெய் கலந்து தலைக்கு லேபனம் செய்தால் சூரியாவர்த்தம், ஒருபக்க தலைவலி குணமாகும்.

பாதிதலைவலிக்கு மரீசாதி லேபனம்:—மிளகு அல்லது மிளகு அரிசி இலைகளை கரிசாலைசாறுவிட்டு அரைத்து லேபனம்செய்தா லும் அல்லது சுக்கை ஜலம்விட்டு அரைத்து தடவினலும் ஒற்றைத் தலைவலி குணமாகும்.

சாரியாதி லேபனம்:—சன்னிவேர், கோஷ்டம், அதிமதுரம், வசம்பு, திப்பிலி, கரும்அல்லி, இலைகளை காடிவிட்டு அரைத்து தடவினல் அல்லது நெய்புடனாவது லேபனஞ் செய்தாலும், சூரியா வர்த்தம், அர்த்தபேதம் இலைகள் நிவர்த்தியாகும்.

சங்கத்திற்கு தாருவாதி லேபனம்:—மரமஞ்சள், மஞ்சள், மஞ் சிஷ்டி, வேப்பன்வேர், வெட்டிவேர், தாமரைவகையம் இலைகளை அரைத்து தடவினல் சிரோரோகம் நிவர்த்தியாகும்.

பேராமுட்டி, கரும்அல்லி, அருகம்புல், கரும்எள்ளு, வெள் ளைச்சாரணை, இலைகளை அரைத்து தடவினல் சங்கம், அனந்தவாதம், சகலமான தலைவலி இலைகள் சுவஸ்தமாகும்.

தலைவலிக்கு அமிருதாமலக தைலம்:—சிந்தில்கொடி, நெல்லிக்காய், முசுமுசுக்கை, கரிசாலைஇலை, தாழம்பூ கொத்து, கற்றுழை, இவைகளின் சாறுகள் வகைக்கு 16-பலம், எண்ணெய் 16-பலம், பால் 20-பலம், இவைகள்பாலையும் ஒன்றுகச் சேர்த்து அதில் அதிமதுரம், எலக்காய் இலவங்கம் இலவங்கப்பத்திரி, கோஷ்டம், சாதிக்காய், திராக்ஷைபழம், சதாப்பிலை, சந்தனத்தூள், வெட்டிவேர், குறுவேர், தானிக்காய்விரை, இவைகள் சூரணம் வகைக்கு 1-தோலா கலந்த தைலபதமாய் காய்ச்சி தலைக்கு தடவிக்கொண்டு குளித்துவந்தால், நடுக்கல், தலைநோய், கண்நோய், ஒற்றைதலைவலி, சுபாலநோய், இவைகள் நிவர்த்தியாகும்.

பிருங்காமலக தைலம்:—கரிசாலைச்சாறு, நெல்லிக்காய்சாறு, நல்லெண்ணெய், இவைகள் வகைக்கு 64-பலம், பால் 256-பலம், இவைகளை ஒன்றுகச் சேர்த்து காய்ச்சி அதில் அதிமதுரம், சந்தனம், கோஷ்டம், பேராத்தை, வெட்டிவேர், சிற்றமுட்டி, பேராமுட்டி, நாகமுட்டி, இவைகளின் வேர்கள், கிச்சிலிக்கிழங்கு, மஞ்சள், அக்கரா, இலவங்கப்பட்டை, எலக்காய், இலவங்கப்பத்திரி, கொத்தமல்லி, சதாப்பிலை, குருவேர், இவைகளை சூரணித்து வகைக்கு 1-தோலா விகிதம் அத்துடன் சேர்த்து தைலபதமாக காய்ச்சி வஸ்திரகாளனம் செய்து, சிரசிற்குத் தேய்த்துவர, தலைநோய், பல்நோய், காதுநோய், விஷமசுரம், சூலையங்கள், அபஸ்மாரம், வாதம், குஷ்டம், இவைகள் நிவர்த்தியாகும்.

நீலோத்பலாதி தைலம்:—கரும்அல்லிக்கிழங்கு, திப்பிலி, அதிமதுரம், சந்தனம், வெள்ளைத்தாமரைப்பூ, இவைகள் வகைக்கு பலம்-½, நல்லெண்ணெய் 16-பலம், செல்லிக்காய்ரசம் 64-பலம்இவைகள்பாலையும் ஒன்றுகக் கலந்து தைலபக்குவமாக காய்ச்சி ரசியமாவது அப்யங்கனமாவது செய்தால் தலைவலி, நிவர்த்தியாகும்.

நாகராதி ரசியம்:—சுக்கு கல்கத்தில் பாலைகலந்து ரசியஞ்செய்தால், சர்ஜ்வித தோஷங்களினல் உண்டான சிரோரோகம் நிவர்த்தியாகும்.

சொச்சி இலையை அரைத்து லேபனஞ்செய்தால் தலைவலி நிவர்த்தியாகும்.

பிப்பல்யாதி ரசியம்:—திப்பிலி, இந்துப்பு இவைகளைச் சூரணித்து எண்ணெயுடனாவது அல்லது நெய்யுடனாவது கலந்து காய்ச்சி ரசியம்செய்தால் தலைவலிகள் பாலையும் நிவர்த்தியாகும்.

சூரியவர்த்தத்திற்கு தசமூலாதி ரசியம்:—தசமூல கஷாயத்தில் நெய், இந்துப்பு கலந்து ரசியஞ்செய்தால், ஒற்றை தலைநோய், சூரியாவர்த்தம் இவைகள் நிவர்த்தியாகும்.

பிருங்கராஜாதி ரசியம்:—கரிசாலை சாற்றுக்கு சமமாக ஆட்டுப்பால்கலந்து சூரிய புடமிட்டு ரசியஞ்செய்தால், சூரியவர்த்தரோகம் நிவர்த்தியாகும்.

துவரியாதி ரசியம்:—துவரைஇலை, அருகம்புல், இவைகள் ரசத்தை ரசியஞ் செய்தால் ஒற்றைத் தலைநோய் நிவர்த்தியாகும்.

விடங்காதி ரசியம்:—வாய்விளங்கம், கருஞ்சீரகம் இவைகளை சமஎடையாக அரைத்துதீவி ரசியஞ்செய்தால் ஒற்றை தலைநோய் நிவர்த்தியாகும்.

கிரகரணாதி ரசியம்:—வெள்ளை காக்கட்டான் விரையையாவது அல்லது அதின் வேரையாவது தண்ணீர்விட்டு அரைத்து ரசியஞ் செய்தாலும் அல்லது அதின் வேரை காதுக்கு கட்டிக்கொண்டாலும் ஒற்றைத் தலைவலி நிவர்த்தியாகும்.

குடாதி ரசியம்:—வெல்லம், இஞ்சிரசம், திப்பிலி, இந்துப்பு இவைகளை ஜலம்விட்டு அரைத்து ரசியஞ்செய்தால் சகலமான சிரோரோகங்கள் நிவர்த்தியாகும்.

சர்க்கராதி ரசியம்:—நெய்யில்வருத்த குங்குமப்பூவுடன் கற்கண்டு சேர்த்தரைத்து ரசியஞ்செய்தால் வாதரத்தத்தினல் கண்புருவம், கண்கள், செவி, கர்ணமூலம் இவைகளில் உண்டான சூத்தல், ஒற்றைத்தலைநோய், சூரியவர்த்தம் இவைகள் குணமாகும்.

தாடிம்பாதி யோகம்:—மாதளம்பூ, அருகம்புல் இவைகள் ரசத்தையாவது கர்ப்பூரம், தேன், பால் இவைகளையாவது தலைக்குதடவினலும், ரசியம், பானம் இவைகள் செய்தாலும் தலைவலியினல் உண்டான ரத்தநிராவம் நிவர்த்தியாகும். இதை குடிக்கும்போது கற்கண்டு, பால் இதனை சேர்க்கவேண்டியது.

உதும்பர யோகம்:—பழுத்த அத்திப்பழத்தில் நெய், கற்கண்டு கலந்து பாகம் செய்து எலக்காய், மிளகு இவைகள் சூரணத்தை கலந்து சாப்பிட்டால் சகிகாரத்த சிராவம நிவர்த்தியாகும்.

கண்டங்கத்திரிக்காய் ரசத்தை தலைக்கு தடவினல் தலைவலி நிவர்த்தியாகும்.

சுக்குத் தைலம்:—தோல்சீவிய சுக்கு பலம்-80, எடுத்து சலசத்து ஓர் பாண்டத்திலிட்டு 8-மரக்கால் சலம்விட்டு எட்டொன்றுக காய்ச்சி வடித்து இத்துடன் நல்லெண்ணெய் படி-2, பசுவின் பால் படி-2, சிற்றரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி, கோலைக் கிழங்கு, மஞ்சிஷ்டி, கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய், அகில், தண்ணீர்விட்டான் கிழங்கு, எருக்கன் வேர்பட்டை, கடுரோகணி, கோஷ்டம், சித்திரமூலவேர்பட்டை, தேவ

தாரு, சந்தனம், குங்கிலியம், செவ்வியம், ஆமணக்கு வேர், வெள்ளிலோத்திரப் பட்டை, பேரீச்சங்காய், கொடி முந்திரிப் பழம், இந்துப்பு வகைக்கு ½-பலம் வீதம் சூரணித்துச் சேர்த்து பதமுறக் காய்ச்சி, வடிகடத்தில் கஸ்தூரி, குங்கு மப்பூ வகைக்கு வராகனெடை ½-வீதம், அரைத்துப் போட்டு அதில் காய்ச்சிய தைலத்தை வடித்து ஆறினபின்பு நன்கு கலக்கி வைத்துக்கொள்க. இதை ஒருமாதம் நெற்குவியலில் வைத்தெடுத்து பயன்படுத்த வேண்டும். இதை மேலுக்கு தேய்த்துப் பிடிக்க ஆவர்த்த வாதம் முதல் சகல வாதரோகங்கள் குணமாகும். சிரசிற் கிட்டுவர சிரோரோகங்கள் யாவும் தீரும். காதில் விடுக்க கர்ண சூலை தீரும் நசியம் செய்ய நாசிரோகங்களும், பீனச நோயும், தலைவலியும் கபால சூலையும் தீரும்.

கருஞ்செம்பைத் தைலம்:—கருஞ்செம்பைஇலை, வெள்ளருள்ளி, காரெள்ளு இவைகளின் ரசம் சமனளவாக எடுத்து பதமுறக் காய்ச்சி வடித்து முறைப்படி அப்பியங்கன ஸ்நானஞ் செய்துவர கபாலசூலை, நெற்றி புருவம் நேத்திரம் இவ்விடங்களைப்பற்றிய வலி முதலியன குணமாகும்.

நொச்சித் தைலம்:—கருநொச்சியிலைச்சாறு படி-1, நல்லெண் ணெய் படி-1 இவைகளை ஓர் தைல பாண்டத்திலிட்டு அதில் சுக்கு, மிளகு, கோஷ்டம், சடாமாஞ்சில் வகைக்கு பலம்-½, வீதம் பால் விட்டரைத்துச் சேர்த்து தைலபதமாய்க் காய்ச்சி வடித்து ஸ்நானஞ் செய்துவர சிரோரோகங்கள் தலைவலி முதலியன யாவும் குணமாகும்.

சிரோரோக பத்தியங்கள்:—வேதுபிடித்தல், வியர்வைவார்கல், நசியம், தூமபானம், விரேசனம், லேபனம், சேசனம், லங்கனம், சிரோவஸ்தி, இரத்தசிராவம், ரக்ஷாபந்தனம் செய்தல், கட்டுகட்டல், பழையநெய், பழைய தானியம், பால், காட்டுமிருக மாமிசம், புட லங்காய், முருங்கக்காய், திராக்ஷைபழம், சக்கரைவர்த்திகீரை, பாவக்காய், நெல்லிக்காய், மாதுளம்காய், கொடி மாதுளங்காய், எண்ணெய், மோர், புளித்தநீர், தேங்காய், கடுக்காய், கோஷ்டம், காசனிக்கண்ணி கற்றுழை, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், அமுக் கிரங்கிழங்கு, சந்தனம், கற்பூரம், இவைகள் சிரோரோகத்தில் பத்தியங்கள்.

அபத்தியங்கள்:—தும்மல், கோட்டுவாய், மூத்திரம், கண்ணீர், தூக்கம், மலம், இவைகள் வேகத்தை தடுத்தல், அஞ்சனம், பால், கெட்டஜலத்தில் குளித்தல், பல்துச்சி, பகல்நித்திரை இவைகள் சிரோரோகத்திற்கு அபத்தியங்கள்.

நேத்திர ரோகங்கள் (வேறு)

நேத்திர நோய்கட்கு காரணம்:—வெய்யிலில் உட்கார்ந்திருந்து பிறகு சலத்தில் உடனே குளித்தல், அதிமதுரமாயிருக்கும் பொருள் களை உற்றுப்பார்க்குதல், பகலில் நித்திரைசெய்தல், இரவில் விழித் துக்கொண்டு இருக்குதல், கண்களுக்கு நெருப்பு அனல்வீசும்படி செய்துகொள்ளுதல், கண்ணில் தூசு முதலியவைகள் விழுந்து அப் படியே படர்ந்திருக்குதல், புகை பிடித்தல், வாந்தியின் வேகத்தை தடுக்குதல், அதிகமாய் வாந்தியாகுதல், கஞ்சிமுதலிய நிரவரூபமான அன்னபானாதிகளை சதா சாப்பிடுதல், மலம், மூத்திரம், அபானவாயு இவைகளின் வேகத்தை தடுக்குதல், சதா கண்ணீர் வடியும்படிச் செய்தல், தூக்கித்தல், கோபித்துக்கொள்ளுதல், சிரசின்மீது அதிக மாய் அடிப்படுதல், அதிகமாய் லாகிரி வஸ்துக்களை குடித்தல், சீதள காலத்தில் வெப்பமும், வெப்பகாலத்தில் சீதளமும் உண்டாகுதல், மனோதுக்கத்தையும் காமாதிதுக்கத்தையும் அதிகமாய் சம்பவித்தல், அதிக புணர்ச்சி செய்தல், கண்ணீரின் வேகத்தை தடுத்தல், அதி சூக்ஷ்ம பொருள்களை சதா உற்றுப்பார்க்குதல், வெகுதூரம் நடத்தல், மிகுசலம் யெடுத்தல் முதலிய காரணங்களினால் வாதாதி தோஷங்கள் பிரகோபித்து நேத்திரரோகங்களை உண்டாக்குகின்றன.

அர்மரோக பேதம்:—இந்தரோகம் ஐந்து வகைப்படும்.

கண்களின் வெண்நிறத்தின்மீது சேசையும் படர்ந்தாற்போலும் கருநிறமாயும் சிகப்புநிறமாயும் மாமிசம் உண்டானால் அதற்கு பிரஸ் தாரிகமென்று பெயர்.

வெண்நிறமாயும் மிருதுவாயும் மாமிசம் உண்டாகி வரவர பெருகி வந்தால் சுக்கிலார்மமென்று பெயர்.

தாம்பிரத்தைப்போல் சிகப்பாயும் மிருதுவாயும் மாமிசம் பெருகி னால் ரக்தார்மமென்று பெயர்.

முழுதும் பரவினாற்போலும் மிருதுவாயும் இருதயம்போல ஸ்தூலமாயும் கருப்புநிறமாயும் மாமிசம் விருத்தியானால் அதிமாமி சார்மமென்று பெயர்.

கடினமாயும் பரவுநிறதாயும் இரத்த வொழுக்களில்லாமலும் மாமிசம் உண்டானால் சிரையர்மமென்று பெயர். (அர்மமென்றால் துர்மாமிசம்.)

சுக்திரோக லக்ஷணம்:—கண்களின் வெள்ளை அண்டத்தின் மீது கருப்பாயும் மாமிசப் பரவலிப்போலும் முத்துசிப்பியின் நிறத் தோடும் நிற்துக்கள் உண்டானால் அவைகளுக்கு சுக்திரோகம் என்று பெயர்.

அர்ஜுன லக்ஷணம்:—கண்களின் வெள்ளை அண்டத்தின்மீது முயல் இரத்தத்தைப்போல் சிகப்பு நிறமான பிந்துக்கள் ஜனித்தால் அவைகளுக்கு அர்ஜுனரோகமென்று பெயர்.

பிஷ்டக லக்ஷணம்:—கபமும் வாதமும் அதிகரிப்பதினால் கண்களின் வெள்ளை அண்டத்தின்மீது மாவைப்போல் வெளுத்தநிறமான மாமிசம் விருத்தியானால் இதற்கு பிஷ்டகமென்று பெயர். இது மலத்துடன் கூடியதாய் கண்ணீடிபோல் பிரகாசிக்கும்.

சிராஜால லக்ஷணம்:—கண்களின் வெள்ளை அண்டத்தின்மீது கடினமாயும் சிகப்புநிறமாயும், பெரியதாயுமுள்ள ரம்புகள் பாசி பின்னல்போல் தோணும். இதற்கு சிராஜாலமென்று பெயர்.

சிராஜபிடிக லக்ஷணம்:—கண்களின் வெள்ளை அண்டத்தின் மீதுள்ள கருப்புமிழியைச் சேர்ந்தாற்போல் ரம்புகள் வியாபித்து வெளுத்த நிறத்துடன் சிறியகட்டிகள் உண்டாகும். இதற்கு சிராஜ பிடிகை என்று மெயர்.

பலாச லக்ஷணம்:—கண்களின் கருப்புமிழிகளில் வெல்லத்தைப்போல் பிரகாசமாயும் கடினமாயும் அல்லது சலபிந்துகளுக்கு சமானமாயும் சந்தி உண்டாகி சிறிது பெருத்து வட்டமாயிருந்தால் இதற்கு பலாசமென்று பெயர்.

இம்மாதிரியாய்க் கண்களின் வெள்ளை அண்டத்தின்மீதும் உண்டாகும். அதற்கும் பலாசமென்றுதான் சொல்லுவார்கள்.

பூயாலச லக்ஷணம்:—கண்களின் சந்துகளில் விக்கம் உண்டாகி ஊசிகளால் குத்துவதுப்போல் வேதனையுடன் துர்நாற்றமான சீழ் வடிந்துகொண்டிருந்தால் அதற்கு பூயாலசமென்று பெயர்.

உபநாஹ லக்ஷணம்:—நேத்திரசந்துகளில் பெருத்தும் பக்குவத்திற்கு வந்ததாகவும் அதிக கனமையுடன் வேதனையற்றதுமான சந்தி உண்டானால் அதற்கு உபநாஹமென்று பெயர்.

நேத்திர நாடி லக்ஷணம்:—வாதாதி தோஷங்கள் ரம்புகளின் மார்க்கத்தினால் நேத்திரசந்திகளுக்கு பிரவேசித்து தோஷங்களின் பிரகோபத்தின்படி ரத்தம் அல்லது சீழை வடியச்செய்தால் நேத்திர நாடிரோகமென்று பெயர். இது நான்கு வகைப்படும்.

(1) நேத்திரசந்துகளில் விக்கம் உண்டாகி பழுத்து சீழ் வடிந்துக்கொண்டு சன்னிபாத லக்ஷணத்துடன் கூடியிருந்தால் பூயநிராவ மென்று பெயர்.

(2) வெண்மையாயும் கடினமாயும் தெம்போலும் சீழ்வடிந்துகொண்டிருந்தால் சிலேஷ்ம நிராவமென்று பெயர்.

(3) இரத்தபிரகோபத்தினால் அதிகமாயும் உஷ்ணமாயும் இரத்தம் வடிந்துகொண்டிருந்தால் இரத்தநிராவமென்று பெயர்.

(4) நேத்திர சந்துகளில் மஞ்சள் நிறமாயும் உஷ்ணமாயும் நீர் வடிந்துகொண்டிருந்தால் அதற்கு பித்தநிராவமென்று பெயர்.

சர்வணீ அலஜீ லக்ஷணம்:—கண்களின் வெண்நிறமான சந்தியின்மீதாவது அல்லது கருப்புநிறமான சந்தியின்மீதாவது சிவப்பாயும் சிதாயும் வட்டமாயும் கட்டிகள் உண்டாகி அதி தாபத்துடன் பழுத்தால் அதற்கு சர்வணீயென்று பெயர்.

அந்த இடத்திலேயே பிரமேகக் கட்டிகளைப்போல் இலக்ஷணங்களுடன் மிகவும் சிதாய்க் கட்டிகள் உண்டானால் அலஜீ என்று பெயர்.

கிருமிகிரந்தி லக்ஷணம்:—நேத்திர ரப்பைகளிலும், ரப்பை மயிர்களின் சந்துக்களிலும் நாளிதங்களான கிருமிகளினால் அதிக கனமச்சல் உண்டானால் அதற்கு கிருமிகிரந்தி என்று பெயர்.

மேலும் அது நேத்திரத்தின் வெண்மைநிறமான பாகத்தின் சந்துகளில் வியாபித்து கண்களின் உள்பாகத்தை கெடுத்து உள்புறமாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தால் அதற்கும் கிருமிகிரந்தி என்று பெயர்.

வர்த்தரோகம் உத்சங்க பீடிகா லக்ஷணம்:—நேத்திரங்களின் உள்பாகத்தில் முகத்துடன்கூடிய கட்டிகள் உண்டாகி சிவப்பு நிறத்துடன் கடினமாய் கண் ரப்பைகளின் வெளி மத்திய பாகத்தில் பருத்தியிருந்தால் அதற்கு உத்சங்க பீடிகைகள் என்று பெயர். இது திரிதோஷத்தினால் உண்டாகும்.

கும்பிகா லக்ஷணம்:—நேத்திரத்தின் ஒரு பாரிசத்தில் மாதுளம் பழவிதைப்போல் ஒரு சிறுகு உண்டாகி பெருகி பழுத்து உடைந்து கருப்புநிறமாக சீழ் ஒழுகல் இருந்தால் இதற்கு கும்பிகையென்று சொல்லுவார்கள். இது திரிதோஷத்தினால் உண்டாகும்.

போதகீ லக்ஷணம்:—கண் ரப்பைகளின் உள்பாகத்தில் செந்நிறமான கட்டியுண்டாகி இரத்தம் வடிந்துக்கொண்டு கனமையுடன் கூடி மிகவும் வேதனையுடன் கூடியிருந்தால் அதற்குப் போதகீ என்று பெயர்.

வர்த்தமசர்க்கார லக்ஷணம்:— நேத்திரங்களில் கடினமாயும் பெருத்தும் கட்டியுண்டாகி அதைச் சுற்றி சிறிய சிறுகுகளினால் சூழப்பட்டிருந்தால் இதற்கு வர்த்மசர்க்கார என்று பெயர். இந்த நோய் கண் ரப்பைகளை கெடுத்துவிடும்.

அர்சோவர்த்ம ரோகலக்ஷணம்:—கண்ரப்பைகளில் வெள்ளரி விதையைப்போன்ற சிறுகுகள் உண்டாகி நிறுவேதனை, கடினம், மழுமழுப்பு உடையதாயிருந்தால் அர்சோவர்த்மமென்றுபெயர்.

சுஷ்கார்சோ லக்ஷணம்:—கண்களுக்குள் உயரமாயும், கரகரப்புடனும், கடினமாயும், வேதனையுடன் கூடினதாயுமுள்ள மாமிச மூலைகள் உண்டானால் அதற்கு சுஷ்க்ரசமென்று பெயர்.

அஞ்சன லக்ஷணம்:—கண் ரப்பைகளில், தாபம், வேதனை இவைகளுடன்கூடி சிகப்பாயும் மிருதுவாயும் சிறிதாயும் கொஞ்சம் வேதனையுடன் கூடிய கட்டிகள் உண்டானால் அவைகளுக்கு அஞ்சனமென்ற பெயர். இது நிரிதோஷத்தினால் உண்டாகும்.

பஹ்ளவர்த்தும லக்ஷணம்:—கண் ரப்பைகளின் உள்புறமெல்லாம் சருமத்திற்கு சமானமாயும், கடினமாயு மிருக்கும். சிறுகுகள் உண்டாகி பருத்தியிருந்தால் இதற்கு பஹ்ளவர்த்மமென்ற பெயர். இது நிரிதோஷத்தினால் உண்டாகும்.

வர்த்மபந்த லக்ஷணம்:—கண் ரப்பைகள் மிகுதி, நமை, வேதனை இவைகளுடன் கூடியிருத்தல் மூடமுடியாமற் போகும். இதற்கு வர்த்மபந்தரோகமென்ற பெயர். இது நிரிதோஷத்தினால் உண்டாகும்.

கிலிஷ்டவர்த்ம ரோகம்:—கண்களின்கீழ் மேல் ரப்பைகள் ஒரேகாலத்தில் மிருதுவாய், சிறுவேதனையுடன்கூடி, அதிக சிகப்பு நிறமாக யிருந்தால் அதற்கு கிலிஷ்டவர்த்ம ரோகமென்ற பெயர். இது கப இரத்தத்தினால் உண்டாகும்.

வர்த்மகர்த்ம லக்ஷணம்:—பித்தயுக்தமான ரத்தமானது வடிக்கொண்டிருப்பதினால் அது சேறுக்கொப்பாயிருக்கும். இதற்கு வர்த்மகர்த்ம மென்ற பெயர். இது பித்தாதிக்க சன்னிபாதத்தினால் உண்டாகும்.

சியாமவர்த்ம லக்ஷணம்:—கண் ரப்பைகளின் மேல்கீழ் பாகங்கள் கருநிறத்துடன் மிகுதி வேதனையுடன் கூடியிருந்தால் சியாமவர்த்ம மென்ற பெயர். இது வாதாதிக்க நிரிதோஷத்தினால் உண்டாகும்.

பிரக்லின்னவர்த்ம லக்ஷணம்:—கண் ரப்பைக்குட்புறம் வேதனையும் வெளிப்புறம் வீக்கமும் உண்டாகி சந்துக்களில் மினுமினுப்புடன், கூடியிருந்தால் பிரக்லின்ன வர்த்மரோக மென்ற பெயர்.

அக்லின்ன வர்த்த லக்ஷணம்:—கண் ரப்பைகளை கழுவினலும் கழுவாவிட்டாலும், பிசினைப்போல் பசைடலை ஒட்டிக்

கொண்டு உள்புறமாக பழுக்காமல் சிற்தோன்றுமல் இருந்தால் அக்லின்ன வர்த்தமென்று பெயர்.

வாதஹதவர்த்தம லக்ஷணம்:—கண் ரப்பைகளின் சந்துக்கள் நிறத்துக்கொள்வதினல் கண்கள் நிறப்பதற்கும் மூடுவதற்கும் முடியாமல் சிறிதாய் மூட முடியாமல் இருந்தால் வாதஹதவர்த்தம ரோகமென்று பெயர்.

அர்ப்புத லக்ஷணம்:—கண் ரப்பைகளின் உள்பாகத்தில், மந்தமான வேதனையும், சிகப்பு நிறமும், சீக்கிரமாக விருத்தியாகுந் தன்மையும் விஷத்திற் கொப்பாயும், ஒரு கிரந்தி யுண்டாகில் அதற்கு அர்புதமென்று பெயர். இது நிரிதோஷத்தினல் பிறக்கும்.

நிமேஷ லக்ஷணம்:—கண் ரப்பைகளை அனுசரித்திருக்கும் வாயுவானது அதை அசையச் செய்யும் நரம்புகளைச் சேர்ந்து ரப்பைகளை சதா அடிக்கும்படிச் செய்தால் அதற்கு நிமேஷமென்று பெயர்.

சோணிதாரசோ லக்ஷணம்:—இரத்த சம்பந்தத்தினல் ரப்பைகளின் உள்பாகத்தில் சிகப்பு நிறத்துடன் மிருதுவான முளைகள் உண்டானல் இதற்கு சோணிதா ரசமென்று பெயர். இதை அடிக்கடி சஸ்திரத்தினல் சேதித்தாலும் வளர்ந்துகொண்டே வரும்.

லகண லக்ஷணம்:—கண்ரப்பைகளில் இலந்தக்காயைப்போல் கடினமாயும், தூலமாயும், நமையுடன் கூடினவைகளாயும், பிசுபிசுப்பாயு மிருக்கும். கிரந்திகள் உண்டானல் இதற்கு லகண மென்று பெயர். இதுகபாதிக்கத்தினல் உற்பவிக்கும். இதில் குத்தல், பாக்கம், அதாவது பழுத்தல் முதலியவை இல்லாமலிருக்கும்.

பிசவர்த்தம லக்ஷணம்:—நிரிதோஷ பிரகோபத்தினல் ரெப்பைகளின் மேல்பாகம் மூடிக்கொண்டு நானவிதமாக தாமரைத்தண்டைப்போன்று நீர்வடிந்துக் கொண்டிருந்தால் இதற்கு பிசவர்த்ம மென்றுபெயர்.

குன்சன லக்ஷணம்:—வாதாதிதோஷங்கள் பிரகோபித்து ரப்பைகளை சிறியதாக்கி கண்கள் நிரப்பதற்கு முடியாமலிருந்தால் இதற்கு குன்சனமென்றும் இருச்சிரோன் மீலனமென்றுபெயர்.

பக்ஷ்மகோப லக்ஷணம்:—வாதத்தினல் கண்ரெப்பைகளை அசையச் செய்வதினல் ரப்பைமயிர்கள் கண்களில் பிரவேசித்து அடிக்கடி கண்வெள்ளை அண்டத்திலும் கருப்பு விழியிலும் உராய்ந்து கொள்வதினல் வீக்கமுண்டாகி கண்ரெப்பைமயிர்கள் உதிரும். இதற்கு பக்ஷ்ம கோபமென்றுபெயர். இதனை உபபக்ஷ்மென்றுஞ் சொல்லுவார்கள். இது மிகவும் பயங்கரமானது.

பக்ஷ்மசாத லக்ஷணம்:—ரப்பைகள், ரப்பைமயிர்கள், இவைகளின் மூலத்திலிருக்கும் பித்தமானது பிரகோபிப்பதனல் மயிர்கள்

உதிர்ந்து ரப்பைகளில் கமை, தாபம் இவைகளை உண்டாக்கினால் இதற்கு பக்ஷ்மசாதமென்றுபெயர்.

நேத்திரரோக சிகிச்சை

திலபுஷ்ப் பாஞ்சனம்:—மிளகு 2-பாகம், சுத்திசெய்த பலகறை 4-பாகம், எள்ளுப்பூ 8-பாகம், இவைகள்யாவையும் ஒன்றாக கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழரசத்தினால் அரைத்து மாத்திரைகள் செய்து சலம்விட்டு அரைத்து கண்களுக்கு களிக்கமிட, திமிரங்கள், கண்புரை, கமைச்சல், அர்ப்புதரோகம், தர்மாமிசம், கண்சிகப்பு, முதலியன நிவர்த்தியாகும்.

மரீசாஞ் சனம்:—மிளகு 1-பாகம், நெல்லிவற்றல், 2-பாகம், புங்கன்விரை 3-பாகம், இவைகளை கல்வத்திலிட்டு காசனிக்கண்ணி சாற்றினால் அரைத்து மாத்திரைகள் செய்து கண்களுக்கு களிக்க மிட்டுக்கொண்டால் பார்வை இல்லாத கண்கள், புரைகள், காசம், இவைகள் சுவஸ்தமாகும்.

தார்வியாத் யஞ்சனம்:—ரசாஞ்சனம் கண்களுக்கு களிக்கமிட்டால் கண்புரை, காசம், கண்மலம, சிகப்பு, அர்ப்புதம், சலம்வடிதல், அர்மரோகம், மாலிக்கண், கமைச்சல், கண்கள் ஒட்டிக்கொள்ளுதல், இவைகள் நிவர்த்தியாகும்.

காட்டுமல்லி அரைத்த கண்களுக்கு களிக்கமிட்டால் கண்நோய், வர்த்தமரோகம், கண்பூ இவைகள் நிவர்த்தியாகும்.

கிரிகர்ணிகாத் யஞ்சனம்:—வெள்ளை கக்காட்டான்வேர், அதின் விரைகள், பூக்கள், சுட்டசங்கு, மஞ்சள், கடுக்காய், சக்கு, இவைகளை சமனடையாகச் சேர்த்து கக்கட்டான்வேர் ரசத்தினால் அரைத்து கண்களுக்கு களிக்கமிட்டால் பார்வை அற்றுப்போன கண்களுக்கு மறுபடியும் பார்வையுண்டாகும்.

நாரிகேளாஞ்சனம்:—மரமஞ்சள், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், அதிமதரம், இவைகள் வகைக்கு ஒருபலம் விதஞ் சேர்த்து, இடித்து ஒருபடி தேங்காய் சலத்தில்போட்டு, எட்டில் ஒருபாகம் மீறும்படி நெய்யும் காய்ச்சி, மற்றொரு பாகையில் வார்த்து மந்தாக்கினியால் ஒரு ஆழாக்கு மீறும்படியாக காய்ச்சி ஆறவைத்து அதில் ½-ரூபாய் எடை பச்சைகற்பூரம், 1-ரூபாஎடை இந்துப்பு 15-குன்றிஎடை தேன்விட்டரைத்து கண்களுக்கு களிக்கமிட சகலமான கண்நோய்கள் சுவஸ்தமாகும்.

மகாநாரிகேளாஞ்சனம்:—அதிமதரம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், மரமஞ்சள், இவைகள் வகைக்கு ஒருபலம் விதஞ் சேர்த்து இடித்து 16-பலம், இனரீர்விட்டு எட்டில் ஒருபாகம் மீறும்படியாக நெய்யுஞ் சண்டக் காய்ச்சி மற்றொரு பாகையில் வைத்த

மந்தாக்கினியில் மறுபடியும் காய்ச்சி ரீ-பலமாக சண்டக்காய்ச்சி இறக்கிக்கொண்டு ஆறவைத்து பிறகு அதில் சுத்திசெய்த மயில்துத்தம், பச்சைகற்பூரம், கடல்நுரை, காவிக்கல், இந்துப்பு, ரசாஞ்சனம், மிளகு, இவைகள் சூரணத்தை வகைக்கு ½-பலம், விதிதங் கலந்து தேன் 1½-தோலா கலந்து கண்களுக்குபோட்டால் 96 நேத்திரரோகம் நிவர்த்தியாகும்.

